

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JAN 1918
MADRAS.

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கசு.] பிங்களஹூ கார்த்திகைமீ [பகுதி-க.
Vol. XVI. November—December, 1917. No. 1.

ஸ்ரீ:

## வஞ்சிமா நகராராய்ச்சி.

( 15 - ம் தொகுதியின் 632 - ம் பக்கத்தொடர்ச்சி )

### 3. கொங்கு குடபுலமாகுமா ?

இனி, கொங்கு குடபுலம் என்பதற்கு வஞ்சிமாநகருடையார் காட்டிய பிரமாணங்களையும் விசாரிப்பாம்:—

வஞ்சிமாநகரென்னும் கட்டுரையில் வாதககூியார் சொல்லக்கருதியுள்ள விஷயங்களை வெவ்வேறுகப்பகுத்துத்தொகுத்துத் தலைப்பெயர் கொடுத்து வேறுபடவெழுதாது, எல்லாவிஷயங்களும் எங்கும்விரவி வரவெழுதிச்சென்றிருப்பதால் அவற்றைத் தனித்தனிதொகுத்துக் கொண்டாராய்தல் மிகவும் அரிதாயிருக்கிறது. ஆயினும், அவற்றுள் ஒவ்வொருவிஷயத்துக்குமுரிய பிரமாணங்களை இயன்றவளவு ஆங்காங்குநின்று மொருகளப்படுத்திக்கொண்டே ஆராய்வோம்.

கொங்கு குடபுலம் என்பதற்கு அவர்காட்டும் முக்கியமான பிரமாணங்களாவன:—

(1) கொங்குநாட்டைப் பலவிடத்தும் குடகொங்கென வழங்குதலாம்; அதற்கு உதாரணம் கலிகன்றியாழ்வார் சோழன் செங்கணானை அவன் வென்றுகொண்டநாடுகளானே "தென்னுடன் குடகொங்கன் சோழன்" என வழங்கியிருப்பது. (வஞ்சிமாநகர் - பக்கம் 6.)

(2) சேக்கிழார் வெள்ளானைச்சருக்கத்தில் கொங்குநாட்டையடைந்து எனக்கூறவேண்டுமிடத்து, 'குடகொங்கிலணைந்து' என்று கூறியிருப்பது. (வஞ்சிமாநகர்- பக்கம் 6.)

*

161215



(3) கொங்குநாட்டை, "குடகொங்குநாடு" என வில்லிபுத்தூரார் கூறியிருப்பது. (வஞ்சிமாநகர்-பக்கம் 118.)

(4) கொங்கரைக் "குடகக்கொங்கர்" என்று சிலப்பதிகாரத்திற் கூறியிருப்பது. (வஞ்சி - ர். பக்கம் 8.)

(5) கொங்குநாட்டுப்பேரூரைக் "குடசிதம்பரம்"எனப்பேரூர்ப் புராணங்கூறியது. (வஞ்சி - ர். பக். 8.)

(6) கொங்குநாட்டுச்சிவஸ்தலங்களைக்குறித்துப்பெரியபுராணத்துள், "சென்றசென்ற குடபுலத்துச் சிவனடியார்பதிகள்" என்புழிக் கொங்குநாடு குடபுலம் என விளக்கமாய்ச்சொல்லப்பட்டிருப்பது. (வஞ்சி - ர். பக். 20.)

(7) கொங்குநாட்டை அருணகிரியார் குடபுலத்தரசராகிய சேரர்க்குரியதென்பது தோன்றச் "சேரர்கொங்கு" என்று விளங்கச்சொல்லியிருப்பது. (வஞ்சி - ர். பக். 20.)

(8) சங்கநூல்களிற் பலவிடத்தும் குடபுலத்தரசனாகிய சேரனைக் "கொங்கர்கோ"என வழங்கியிருப்பது (வஞ்-ர்.பக்.6.)

(9) சிலப்பதிகார அபிதானவிளக்கத்தில், "கொங்கு - கொங்கு மண்டலம்; குடநாடு" என்று பிர்ம்மஸ்ரீ, மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் உரையெழுதியிருப்பது. (வஞ்சி - ர். பக்கம். 6-ல் கீழ்க்குறிப்பு.)

(10) "செங்கதிர்மணிமுடிச்சேரலன்றிகழ், கொங்குநன்னாடு" எனப்பழனிப்புராணங்கூறியது. (வஞ்சி - ர். பக். 42.)

(11) "கொடித்தடஞ்சிலைக் கோதைநாட்டினிலெழுபதியும்"எனக் கொங்குநாட்டுத்திருப்பதிகளைக் கோதைநாட்டுள்ளனவாகப் பழனிப்புராணங் கூறியது. (வஞ்சி - ர். பக். 42.)

(12) "வெங்கைக்களவழிப்பாடலுக்குவில்லவனைக், கொங்கைத் தளைகளைந்தகோமான்" என்ற சங்கரசோழனுலா.(வஞ்சி-ர். பக்கம். 113.)



இதனை, "இன்னதிதுவெனவரூஉமியற்கை" * என இருபெயரொட்டுப்பண்புத்தொகையிலக்கணத்தில் 'இன்னது' (இத்தன்மையுடையது) என நிலைமொழியை விசேடணமாகவும், 'இது' என வருமொழியைச் சுட்டளவில் விசேடியமாகவும்வைத்துத் தொல்காப்பியனார் சூத்திரஞ்செய்தமையாலும், அக்கருத்தை உரைகாரரறிந்துரைத்தலையாலுமறிக.

இதனாற் 'குடகொங்கு' என்ற கவிப்பிரயோகங்களுள் ஒன்றற்கேனும் குடபுலமாகிய கொங்கு என்று பொருள்கொள்ளற்கிலக்கணநூலிடங்கொடாமையால், அங்ஙனஞ்சொல்லுதல் தவறென்றும்,வேறுபொருளேகொள்ளவேண்டுமென்றும் நிரூபிக்கப்பட்டது.

ஆதலால், (கொங்குங்குடபுலமும் ஒன்றென்று நாட்டவேண்டி) கொங்குநாட்டைப்பலவிடத்தும் குடகொங்கென வழங்குதலை, வஞ்சிமாநகருடையார் தம் கக்ஷிக்கு முதல் ஆதரவாகக்காட்டியது சிறிதும் சாதகமில்லதாயிற்று; பாதகமாயுமிருக்கிறது.

இனிக் "குடகோங்கு" என்பதற்குக் குடபுலமாகிய கோங்கு என அல்வழியிற்பொருள்கொள்வதைவிட்டு, குடபுலத்துள்ள கோங்கு என வேற்றுமைவழியிற் பொருள்சொல்லவருவாராயின், அதற்கும் இடமில்லாதிருக்கும்படி குடபுலத்துட் கொங்குமண்டலமில்லையென்று முன்னரே நிரூபிக்கப்பட்டுவிட்டமையாலதுவும்பொருந்துவதாயில்லை. ஆனால் வாதகக்ஷியார்கருத்துப்படி (வழக்குவிட்டுக்கொடுத்து)கொங்குமண்டலம் குடபுலத்துள்ளதாகவே வைத்துக்கொண்டு பார்க்கவேண்டுமானாலும்பார்ப்போம். அதனாலும், அவர்க்கிஷ்டசித்தியுண்டாகவில்லை.

எப்படியென்றால், "தென்னாடன் குடகொங்கன்" † என்றதில் குடகொங்கன் என்பதற்கு அவர் குடபுலத்துள்ளகொங்குநாட்டை வென்றுகொண்டவன் என்றுதானே பொருள்சொல்லவேண்டும்? இப்பொருள் சோழன் செங்கணானைத் தமிழுலகுமுழுதுக்கும்

---

* தொல்காப்பியச் சொல்லதிகாரத்துள் "வண்ணத்தின் வடிவின்" என்ற முதற்குறிப்புடையது.

† தென்னாடன் குடகொங்கன் என்றது முதலாவது சான்றாக எடுத்துக்காட்டிய கலிகன்றியாழ்வார்பிரயோகம். வஞ்சிமாநகர்- பக்கம் 6

நியாமகன் எனச் சிறப்பிக்குங்கருத்தால், தென்னாடன் என்றதனாற் பாண்டிமண்டலத்துக்கு நியாமகனென்றும், சோழன் என்றதனாற் றெண்டைமண்டலமகப்படச் சோழமண்டலத்துக்கு நியாமகனென்றும், கூறியமுறையே கூறாது, அது பிறழும்படி குடபுலத்துள் ஏகதேசமாகிய கொங்குநாட்டுக்குமட்டும் நியாமகன் என்று கூறுதல் பொருந்துவதாகுமா? குடபுலத்துள்ள கொங்குநாட்டுக்கு நியாமகன் எனக் குடபுலத்தையெடுத்துக்கழித்தால், கொங்குநாடொழிந்த குடபுலத்துக்கு நியாமகனில்லையென்பது குறிப்பாற்பெறப்பட்டுப் புகழ்பொருளுக்கிழுக்குண்டாக்குமாதலா லது கவியிதயத்தொடு பொருந்தியபொருளாகாதென்வறிக. ஆயின், தமிழ்நாடொழிந்த ஏனைநாடுகளுக்கும்நியாமகனென்றுகூறாமை யிழுக்கன்றோவெனில்? இங்கு குடபுலத்துள்என்று எடுத்துக்கழித்ததுபோல, ஏனைநாடுகளையும் எடுத்துக்கழித்திருந்தால் இழுக்குண்டாக்குவதாம்; அங்ஙனமெடுத்துக் கழியாமையால் இழுக்கன்றெனவறிக.

அன்றியும், சோழன் செங்கணான் குடபுலமாகிய சேரமண்டலத்துக்கு நியாமகனாகாதிருந்தாலும், அவனைச்சிறப்பிப்பார் உள்ளதையுள்ளபடியுரைக்குங்கருத்துடையரா யிருப்பினும் தென்னாடன் கொங்கர்பிரான் சோழன் எனப் புகழ்பொருளுக்கிழுக்குத்தோன்றாது செவ்வனே கூறுதலே கவிமரபாயிருக்கிறது. வஞ்சிமாநகரார் கருத்துப்படி கொங்கு குடபுலத்தின் ஏகதேசமாதலால், பாண்டிநாட்டின் ஏகதேசத்திலுரிமையுடைய குறுநிலமன்னனைப் பாண்டியன் என வழங்குதல் போல, குடபுலத்தினேகதேசமான கொங்கிலுரிமையுடையவச்சோழனையும் "தென்னாடன் குடபுலக்கோன் சோழன்" என்று சிறப்பித்துக் கூறுதல குற்றமாகாதன்றோ? அங்ஙனம் [illegible] குடகொங்கனென்றேகூறினமையால் இங்குக் குடகொங்கென்பதற்குக் குடபுலத்துள்ள கொங்கென்று பொருள்கொள்ளுதல் பொருந்தாததாயிற்று. ஆகவே "குடகொங்கன்" என்றதற்குக் குடபுலத்தையும், கொங்குமண்டலத்தையுமிரண்டையுமொருங்குடையான்: என்றே பொருள்கொள்ள வேண்டுமெனவறிக.

அன்றியும், சோழன் செங்கணான் "வெங்கைக்களவழிப்பாடலுக்குவில்லவனைக், கோங்கைத்தளைகளைந்தகோமான்" என்று புலவர்



பாடும்படி சேரனையுங் கொங்கரையும் சேரவொருகளத்துவென்று சிறையிட்டமைதெரிந்து அவரை மீட்கவேண்டி அவனைப்பொய்கையார்பாடிப் பிரசித்திபெற்ற களவழிப்பாடலைக்கசடறக்கற்று அதனின்றும், "வஞ்சிக்கோவட்டகளத்து" "கொங்கரையட்டகளத்து" என்று மேற்கோள்காட்டிய வஞ்சிமாநகருடையார், கோச்செங்கணான்வஞ்சிக்கோவாகிய குடபுலத்தரசனையும், கொங்குநாட்டரசராகிய குறுநிலமன்னரையும் வென்றவனென்பதை நன்றுதெரிந்தவராதலால், அவனைக் குடகொங்கன் என்றதற்குக் குடபுலத்துக்கும் கொங்குமண்டலத்துக்கும் நியாமகன் என்று பொருள்கொள்ளக்கூடாதென ஆக்ஷேபிக்க மாட்டாதவராயுமிருக்கிறார்.

ஆதலால் இங்கு "குடகொங்கு" என்றது குடபுலமும் கொங்கும் என்னும் உம்மைத்தொகைநிலைத்தொடராகவேநின்று, குடபுலத்துள்ளகொங்கு எனக் குடபுலத்துக்கும் கொங்குக்கும் ஏகதேச ஒற்றுமையும் சொல்லுதற்கு இடமில்லாமல், கொங்குவேறு குடபுலம்வேறு எனத்தெள்ளிவுபடுத்தி, வாதகக்ஷிக்குப்பாதகமாகியும், எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாகியும் உண்மையை நன்கு நிரூபித்துவிட்டது.

இனி இரண்டாவது சான்றான "குடகோங்கிலணைந்து" * என்ற பெரியபுராணவாக்கியத்தையும் விசாரிப்போம்.

இதிலுள்ள குடகொங்கென்னும் தொடர்மொழிக்கும் அல்வழியிற் பொருள்சொல்லற்கிடமில்லாமையால் வேற்றுமைவழியாகவே பொருள்சொல்லவேண்டுமென்பது உபயகக்ஷியார்க்கும் ஒப்பமுடிந்ததே.

ஆனால் வாதகக்ஷியார் கொங்கு குடபுலத்துள்ளது என நாட்டவேண்டியவராதலால் அவர் குடபுலத்துள்ளகொங்கு என்றே பொருள் சொல்லவருவர். இதிலுள்ள குடசத்தத்துக்கு, முக்கியார்த்தமாகிய திசைப்பொருள்கொள்ளப் பொருத்தமிருக்குமிடத்திற் குடபுலம் என்று லக்ஷ்யார்த்தம் சொல்வது தவறாகுமென முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

* வஞ்சிமாநகர்-பக்கம் 6.

ஆதலால், முக்கியார்த்தமாகிய குடதிசையானது கொங்குநாட்டில் எங்குமில்லையென்று வாதகக்ஷியார் நிரூபித்துவிடுவாரானால்,இங்கு குடசத்தத்துக்குக் குடபுலம் என்னும் லக்ஷ்யார்த்தமே கொள்ள வேண்டுமென்பதில் யாதொருதடையுமில்லை.

அப்படி நிரூபிக்குமளவும் "வடகொங்கு" என்பதற்கு, வடபுலத்துள்ளகொங்கென்று பொருள்கொள்ளாது, கொங்கின் வடபகுதியென்றே உபயகக்ஷியினும் பொருள்சொல்வதுபோல, குடகொங்கு என்பதற்கும், கொங்கின் குடபகுதியென்றே பொருள்சொல்லல் அமைவுடையதாயிருக்கிறது. ஆதலால் "குடகொங்கிலணைந்து"என்ற பெரியபுராணவாக்கியத்துக்கு மேல்கொங்குநாட்டையடைந்து என்றே பொருள்கூறவேண்டும். அடையப்படுமிடமும் சரித்திரத்திலதுவேயாயிருத்தலால், ஆசிரியர் கருத்தும் அதுவேயாமென்பதிலையமின்றாயிற்று. ஆகையாலிதுவும் வாதகக்ஷிக்குச்சாதகமில்லதாயிற்று.

இனி வில்லிபுத்தூரர் "குடகோங்"கென்ற மூன்றாவது சான்றினையும் விசாரிப்பாம்.

பாண்டவரிராசசூயஞ்செய்யும்பொருட்டுத் திக்குவிசயஞ்செய்துபோந்தசேனைத்தலைவர்சென்று தமிழ்நாட்டுவேந்தரிடந்திறைகொண்ட செய்தி கூறியவிடத்து, "சென்னிநாடு குடகொங்குநாடு திறைகொண்டு தென்னனுறைசெந்தமிழ்க், கன்னிநாடுறவுடன்புகுந்துமணிநித்திலக் குவைகள்கைக்கொளா" * என்று சொல்லியிருக்கிறார். இங்கு, குடகொங்குநாடு என்பதற்குக் குடபுலமாகிய கொங்குநாடென இருபெயரொட்டுப்பண்புத்தொகைப்பொருளுரைப்பதிசையாதென்று முன்னமே சொல்லப்பட்டது. அதனையொழித்து, குடபுலத்துள்ள கொங்குநாடென்று பொருள்சொல்வதானால், அது குடபுலத்தின் ஏகதேசமாகிய கொங்குநாட்டில்மட்டும் திறைகொண்டு என்ற பொருள்பட்டு, குடபுலமாகிய சேரமண்டலத்தில் திறைகொள்ளவில்லையென்பதையும் குறிப்பாலுணர்த்திப் புகழ்பொருளுக்கு இழுக்குண்டாக்குவதல்லது வேறு பயனில்லாமையால் அது பொருந்தாதெனவறிக.

* வஞ்சிமாநகர்-பக்கம் 118.



மற்றென்னைபொருளுணர்த்துமெனின், "தென்னுடன்குடகொங்கன்சோழன்" என்ற ஆழ்வார்திவ்யசூக்தியுட்போலவே இங்கும் குடகொங்கு என்பதற்கு, குடபுலமும், கொங்கும் என்னும் பொருளில், குடகொங்கு என உம்மைத்தொகைநிலைத்தொடராய், அது நாடென்பதுடன்கூடி,"குணகுடகடல்" * என்பதுபோல,குடகொங்கு நாடென இருபெயரொட்டுப்பண்புத்தொகையாய், முன்மொழியிரண்டும் நாடென்பதுடன் தனித்தனியியைந்து, குடநாடு, கொங்கு நாடு எனப்பிரிவுபட்டு அவ்விரண்டுநாட்டையும் வெவ்வேறுயுணர்த்துமென்க. இதற்குப்பிரமாணம் "[illegible]" ‡ என்பது. (அதாவது, உம்மைத்தொகையடுத்தமொழி பிரிந்து ஒவ்வோரடையொடு மியைந்துபொருள்படும். என்றபடி.) இங்ஙனம் பொருள்கொள்ளுதலே புகழ்பொருளைச் சிறப்பிக்குமாசிரியர்கருத்துக்குமொத்ததாமாதலால், இதுவும் வாதகக்ஷிக்குப்பாதகமாய் எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிருக்கிறது.

ஆதலாற் கவிகாவியப்பிரயோகங்களிலிருக்கிற குடகொங்கு என்ற சொற்றொடரைக்கொண்டு கொங்குமண்டலம் குடபுலமாகிய சேரமண்டலத்துள்ளதென்று சாதிப்பதானது, "தென்திருவரங்கம்" † என்ற திவ்யசூக்தியைக்கொண்டு திருவரங்கமென்னுந்திருப்பதியானது தென்புலமாகிய பாண்டியமண்டலத்துள்ளதெனத் துணிவது போலும் அசதனுமானமாய் அப்பிரமாணமாமெனவறிக.

இனிக் கொங்கரைக் "குடகக்கோங்கா" ¶ எனச்சிலப்பதிகாரங் கூறியதாகக்காட்டிய நான்காவது சான்றினையும் விசாரிப்போம்.

குடகக்கொங்கு என்பது குடகம், கொங்கு என்னும் இரண்டு மொழிகளாலாகிய ஒருதொடர்மொழியாயிருக்கிறது. அவற்றுள் நிலைமொழியாகிய குடகம் என்னும் சொல்லுக்குப் பொருள்யாதெனின்,

* புறம் செய்-17.

‡ இது வ்யாகரணத்தில் "[illegible]" என்ற ஸூத்ர வ்யாக்யானத்துள்ளது.

† திருவாய்மொழி ஏழாம்பத்துள், இரண்டாந்திருவாய்மொழி ஒன்பதாம்பாசுரம்.

¶ வஞ்சிமாநகர்-பக்கம் 8.

குடதிசைக்கண்ணுள்ளது என்பது பொருளாம். இங்குக் குடதிசையென்பதற்கு இன்ன இடத்திலிருந்து என்னும் புறப்பாட்டெல்லை பெறப்படாமையாலும், அத்திசைப்பொருட்பெயரடுத்த கொங்கு என்னும் சொற்பொருள் புலப்பட்டுநிற்றலாலும், புலப்பட்டதனையொழித்துப் பிறிதோரெல்லைதேடநியாயமில்லாமையாலும், அக்கொங்கினுள் என்னும் அகப்பாட்டெல்லை குறிப்பாற்கொள்ளக்கிடக்கிறது. இதனாற் கொங்கினுட்குடக்குள்ளது 'குடகக்கொங்கு', அதனையுடையார் குடகக்கொங்கர் என்றே பொருள்கொள்ளவேண்டும்.

இவ்வாறன்றிக் குடகக்கொங்கர் என்பதற்குக் குடபுலமாகிய கொங்குநாட்டுள்ளவரென்றாயினும், குடபுலத்துள்ள கொங்குநாட்டிலுள்ளவரென்றாயினும் பொருள்கூறுவதுபொருந்தாதென்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும், அப்பொருள்கொள்ளுதலிற் கொங்கர் என்ற துணையேபொருளுணர்த்திக் குடகம் என்னும் அடைமொழி வாதகக்ஷியிற்பயனற்றதாய்விடுகிறது. எதிர்வாதகக்ஷிக்கு அது குணசக்கொங்கரைவிலக்கிப் பயனுடையதாகிறது. பயனில்லதும், பயனுடையதுமாகிய இரண்டனுட் பயனுடையதேசிறந்ததாமாதலால் அவ்வடைமொழி வாதகக்ஷிக்குச்சாதகமாகாது எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிருக்கிறது.

அன்றியும், "குடகக்கோங்கரும், மாளவவேந்தனும், கடல்சூழிலங்கைக்கயவாகுவேந்தனும்" என உடனெண்ணப்பட்ட இருவரும் குடபுலத்தின் வேறான பிறமண்டலத்தரசராயிருப்பதுபோல, குடகக்கொங்கரும் குடபுலத்தின்வேறான கொங்குமண்டலத்தரசராயிருக்கவேண்டுமென்பது சாகசரியநியாயத்தாற்சித்தித்திருக்கிறது. ஆதலாற் குடகக்கொங்கரென்ற சிலப்பதிகாரப்பிரயோகமான நான்காவதுசான்றும் வாதகக்ஷிக்குப்பாதகமாயும், எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயும் குடபுலத்துட்கொங்குநாடில்லையென்று வெளியிடுகிறது.

இனி ஐந்தாவது சான்றாக, கொங்குநாட்டுப்பேரூரைக் குடசிதம்பரம் என்று பேரூர்ப்புராணம் கூறியிருப்பதையும் விசாரிப்பாம்.

கொங்குநாட்டுப்பேரூர்க்குக் குடசிதம்பரம் என்ற பெயரிருப்பதால், அப்பெயர்க்குக் குடபுலத்துள்ள சிதம்பரம் என்று பொருள்கொண்டு, அப்பேரூருள்ள கொங்குநாடு குடபுலமாகிய சேரமண்டல



மாகுமென்று சாதிக்கவேண்டி, தில்லைச்சிதம்பரத்தைக் குணசிதம்பரம் என்றதற்கும் குணபுலமாகிய சோழமண்டலத்துள்ள சிதம்பரம் என்ற பொருளுடையதென்று அதனைத்திருஷ்டாந்தமாகக்காட்டுகிறார். * இச்சிதம்பரங்களுக்கடைமொழிகளான குட, குணசத்தங்களுக்கு, முறையே முக்கியார்த்தங்களான மேற்கு, கிழக்கு என்னும் திசைப்பொருள்கொள்ளப் பொருத்தமில்லாதிருந்தாலல்லது, அவற்றிற்கு முறையே குடபுலம், குணபுலம் என்னும் லக்ஷ்யார்த்தங் கொள்ளத்தகாதென்பது முன்னமே முடிவுபெற்றிருக்கிறது.

இங்குக்காட்டப்பட்ட சிதம்பரமிரண்டனுள் இடைநின்றுநோக்குவார்க்கு ஒன்று கிழக்கிலும், மற்றொன்று மேற்கிலுமிருப்பதுபற்றி, அவை முறையே குணசிதம்பரம், குடசிதம்பரம் என்று திசைப்பெயரடையால் விசேடிக்கப்பட்டிருப்பதால் அவற்றிற்கு அடைவே கீழைச்சிதம்பரம் மேலைச்சிதம்பரம் என்று செம்பொருள்கொள்வதே பொருத்தமாயிருக்கவும், இதனைத்தெரிந்துகொண்டே குடசிதம்பரம் என்பதற்குக் குடபுலத்துள்ள சிதம்பரம் என வலிந்துபொருள்கொண்டு, அவ்வூரிருக்கும் கொங்குநாடு குடபுலமாகுமென்று சாதிப்பதானது, தென்னாற்காடு என்னும்பெயர், திசைப்பெயரடையால் விசேடிக்கப்பட்டிருப்பதைத்தெரிந்துகொண்டே அவ்வடைமொழிக்குத் தென்புலம் என வலிந்துபொருள்கொண்டு, தென்னாற்காடானது தென்புலமாகிய பாண்டிநாட்டிலுள்ளது; தென்காசிபோல; எனச் சாதிப்பதுபோலும் அநுமானாபாசமாய் அப்பிரமாணமாமெனவறிக. ஆதலாற் குடசிதம்பரமென்ற பேரூர்ப்புராணப்பிரயோகமும் வாதகக்ஷிக்குச் சிறிதும் சாதகமாகாதிருக்கிறது.

இனி ஆறாவதுசான்றாக, "சென்றசென்ற குடபுலத்து" † எனச்சேக்கிழார்வாக்கினாற் கொங்குநாடு குடபுலமென்று விளக்கமாகச் சொல்லப்பட்டிருப்பதாய் வாதகக்ஷியார் ஆதரவுகாட்டக்கூடும்; அதனையும் விசாரிப்பாம்.

---

* வஞ்சிமாநகர்-பக்கம் 8.

† வஞ்சிமாநகர்-பக்கம்-20.

குடபுலம் என்றசொல் சேரமண்டலத்தையே யுணர்த்தவேண்டு மென்னும் நியமமின்றி, ஒரு குறித்த இடத்தினின்றும் மேற்றிசையி லுள்ளநிலத்தையுணர்த்தும் சாதாரணதிசையடுத்தபெயராயும் வழங் கப்படுவதாகும்.

இதனைக் 'கடல்சேர்கானற்குடபுலம்'*என்ற பதிற்றுப்பத்தினுரை யை மேற்கோள்காட்டி, வஞ்சிமாநகருடையாரே நிரூபித்திருக்கிறார். ஆதலால் குடபுலம் என்றசொல்லுக்குச் சேரமண்டலமேயன்றி, ஒரு குறித்த இடத்திலிருந்து மேற்றிசையிலுள்ளபூமியும் பொருளாமென் பதில் வாதகக்ஷியாருக்காக்ஷேபமில்லையென்பது வெளியாயிற்று. இவ் விருவகைப்பொருள்களுள், "சென்றசென்றகுடபுலத்துச் சிவனாரடி யார்பதிதொறும்" என்ற பெரியபுராணத்துட்கண்ட குடபுலம் என்றசொல்லுக்குப்பொருள் யாதாயிருக்குமெனவாராய்வாம்.

வஞ்சிமாநகருடையார் கருத்துப்படி சேரமண்டலம் என்று பொருள்கொள்வதாயிருந்தால் அக் குடபுலமாகிய சேரமண்டலம் "சென்ற சென்ற" என்ற அடுக்குக்கியையப் பலவாயிருக்கவேண்டும். அது பலவாகாமையாற் பொருந்தாதிருக்கிறது. ஆதலால் அவர் அப்பொருளைப் பொருத்தமுடையதாக்கவேண்டி "குடபுலத்துச் சென்ற சென்ற சிவனாரடியார்பதிதொறும்" என மாற்றிக்கூட்டி, குடபுலத்துப்பதிகள் எனத் தூராந்நுவயமாக்கிப் பொருளுரைக்க வேண்டும். ஆற்றொழுக்கானபொருள் கிட்டாவிட்டால்மட்டும் மாற் றிக்கூட்டலும், தூராந்நுவயமும் கொள்ளத்தகுமாதலால், ஆற்றொழுக் காகப்பொருள்கொள்ளத்தகுமிடத்து அவை கொள்ளத்தகாவென வறிக.

" சென்றசென்றகுடபுலத்துச் சிவனாரடியார்பதிதொறும் " என்பதற்கு, (சோணாடுகடந்து மலைநாடுநோக்கி) போந்த போந்த பச்சிமபூமிகளிலுள்ள சிவனார்பதிகளிலும் அடியார்பதிகளிலுந் தவறாது ஆற்றொழுக்காகப் பொருள்கொள்ளக்கிடத்தலால் இங்குக் 'குட புலம்' என்ற சொல்லுக்குப் பச்சிமபூமி யென்று பொருள்கொள்வதே நேர்மையுடையதாயிருக்கிறது. இதுவே பெரியபுராணமுடையார்

* வஞ்சிமாநகர்-பக்கம் 69.



கருத்தாமென்பதை, அவரே பிறிதோரிடத்தில், "கொங்கிற்குடபுலம் சென்றணைந்தார் கோதின்மெய்ஞ்ஞானக் கொழுந்தனையார்"என்றதில், கொங்குநாட்டை வியாபகமாகிய இடமாகவும், குடபுலத்தை அக் கொங்கின் ஏகதேசமாகிய பச்சிமபூமியாகவுங்கொண்டு கொங்கின்கண் என நன்குணரும்படி கொங்கிற்குடபுலம் எனக் கூறியவாற்றானறிக.

ஆதலாற் "சென்ற சென்ற குடபுலத்து" என்ற பெரியபுராணத் துட் சொல்லப்பட்ட குடபுலம் என்பதற்கு, சேரமண்டலம் என்று பொருள்கொள்வது நேர்மையில்லதாயும், ஆசிரியர்கருத்தொடுபொருந் தாததாயும், அசம்பாவிதமாயுமிருப்பதால் அதனையொழித்து நேர்மை யுடையதும், ஆசிரியர்கருத்தொடுபொருந்துவதும், சம்பாவிதமா யுள்ளதுமான பச்சிமபூமி யென்பதே பொருளாமாதலா லிதுவும் வாத கக்ஷிக்குச்சாதகமாகாது, எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிருக்கிறது.

இங்ஙனமாகவே, "குடபுலங்காவலர்மருமான்" * என்பதிற் குட புலம் என்பது சேரமண்டலவாசகமாயிருப்பதுகண்டு, சென்றசென்ற குடபுலத்தென்ற சேக்கிழார்வாக்கைக்கொண்டு, கொங்கு சேரமண் டலமாகுமென்று துணிதல், " தென்புலங்காவலர்மருமான் " ‡ என்பதிற் றென்புலமென்பது பாண்டியமண்டலவாசகமாயிருப்பது கண்டு, "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொனென்றாங், கைம் புலத்தாறோம்பறலை" † என்ற தேவர்வாக்கைக்கொண்டு, பாண்டிய மண்டலத்தாரைத் தெய்வத்தினுமுற்படவோம்புதலே தலையினுந்தலை யாய வில்லறமென்று துணிவதுபோலும்அநுமானாபாசமாய் அப்பிர மாணமாமெனவறிக.

இனி, ஏழாவது சான்றாக, கொங்குநாட்டை அருணகிரியார் சேரர்கோங்கு என்று விளங்கச்சொல்லியிருப்பதையும் விசாரிப்போம்.

அருணகிரியார்வாக்கினில், வைகாவூர் உள்ளநாடு சேரர்கொங்கு என்று கொங்குநாடு விசேடிக்கப்பட்டிருத்தலால், அது சேரர்க்கே யுரியதாகவேண்டுமென்றும், சேரர் குடபுலமன்னராதலாற் கொங்குங் குடபுலமாகவேண்டுமென்றும் வஞ்சிமாநகருடையார் கருதுகிறார்.

* சிறுபாணாற்றுப்படை-அடி ௪௭.

‡ சிறுபாணாற்றுப்படை-அடி ௬௫.

† திருக்குறள்-5-ஆவது அதிகாரம் இல்வாழ்க்கை செய் 3.

இங்கு, வைகாவூருள்ளநாடு "சேரர்கோங்கு" * என்றதனால் கொங்குமண்டலமுழுதும் சேரர்க்கேயுரியதாகும் என்பது சித்திக்கிறதாவென்று பார்ப்போம். சேரர்கொங்கு என்பதில்,சேரர் என்பது இங்கு அடைமொழியாய்க் கொங்கிற்கு விசேடணமாயிருக்கிறது; கொங்கு விசேடியமாயிருக்கிறது. விசேடணங்களெல்லாம் பெரும்பாலும் விசேடியப்பொருளைப் பிரிவுபடுத்தித் தம் சம்பந்தமுள்ளதொரு பகுதியைமட்டுமே தந்தொடர்மொழிக்குரியபொருளாகக்காட்டி, விசேடியத்தின்மற்றைப்பகுதியை விலக்குவனவாயுள்ளன. உதாரணமாக: சேரர்பூமியிற்குட்டநாடுள்ளது என்றால், பூதலத்துள் ஒருபகுதியே சேரர்க்குரியதென்றும், அதிற்குட்டநாடுள்ளதென்றும் பொருள்படுவதல்லது, பூமண்டலமுழுதும் சேரர்க்குரியதென்று சித்திக்கிறதில்லை. அதுபோலச் சேரர்கோங்கில் வைகாவூர் உள்ளது என்றால், அவ்வைகாவூர் உள்ளகொங்கின் ஒருபகுதியே சேரர்க்குரியதென்று பொருள்படுவதல்லது கொங்குமண்டலமுழுதும் சேரர்க்கேயுரியதெனச் சித்திக்கமாட்டாது. ஆதலாற் கொங்குமண்டலத்தின் மற்றொருபகுதி, அடுத்துள்ள சோழர்க்குரியதாமென்பது சொல்லாமலேபெறப்படுகிறது. இதுவே கருவூர்ச்சிலாசாசனத்துட்சொல்லிய "கோனேரின்மைகொண்டான்கொங்கு" என்று சோழன்பெயரால் வழங்கப்பட்டிருக்கிறது.

சோழனுக்கு அப்பெயருண்டென்பதை "செந்தமிழ்"த்தொகுதி பதினைந்தின்பக்கம் ௬௦௭ல்,வஞ்சிமாநகருடையாராலேயே வெளியிடப்பட்ட கருவூர்ச்சிலாசாசனத்தில், "ஸ்வஸ்திஶ்ரீ திரிபுவனசக்கரவர்த்தி கோனேரின்மைகொண்டான் குலோத்துங்கசோழதேவர்"எனச்சோழனுக்குப்பெயரடையாக வரையப்பட்டமையாலறியலாம்.

இது, குணபுலத்தரசரதாகலாற் குடகொங்கு என்ற தொடர்மொழியடையாற் பிரிக்கப்பட்டதுமாகிறது. ஆகவே குடகொங்கென்பது கொங்கின்குடபகுதியாய் அப்பகுதியையடுத்த குடபுலத்தரசராகிய சேரர்க்குரியதாகி,அதுவே சேரர்கொங்கு என வழங்கப்பட்டதென்று தெளியக்கிடக்கிறது. இதனால் கொங்குமுழுதுங் குடபுலத்தரசராகிய சேரர்க்குரியதாகாமையாலும், உரிமையாயிருக்கும்

---

* [illegible] 115



பாகம் ஒரு தனிமண்டலமாகாது பிறிதொரு முழுமண்டலத்தின் பகுதியாயிருப்பதாலும்,குடபுலம் பிறிதொருகொங்குமண்டலத்தினுட்பகுதியாகாது ஒரு தனி முழுமண்டலமாயிருக்கவேண்டுமாதலாலும், சேரர்கொங்கினும் வேறாகவேயுள்ளது குடபுலமென்பதுபெறப்பட்டது. ஆதலாலிது வாதகக்ஷிக்கே விருத்தமாயிற்று.

இனிச் சேரர்கொங்கென்றது இனம்விலக்காது வெண்டிங்களென்பதுபோலத் தன்னோடியையின்மைநீக்கிய விசேடணத்தால் விசேடிக்கப்பட்ட தொடர்மொழியெனச்சொல்லவருவாராயினும், தமக்கிஷ்டசித்தியாகிறதில்லை. எப்படியென்றால்? அவ்விசேடணம் தன்னோடியையின்மை நீக்கலாவது, விசேடியத்துக்குத் தன்சம்பந்தமில்லையென்பதில்லையென்றதனையேயுணர்த்துவதல்லது, பிறிதின்சம்பந்தமொருசிறிதுமில்லையென்றுசொல்லு மாற்றலில்லாமையாற் பிறிதின்சம்பந்தமிருந்தாலுமிருக்கலாம்; இல்லாதுமிருக்கலாம்; என்பது படப் பிறிதின் சம்பந்தத்துக்குத்தடையாகாமலே வருமொழியை விசேடிக்கிறது.

இதனை, எடுத்துக்கொண்ட வெண்டிங்கள் என்னு முதாரணத்துள்ளே பார்க்கலாம். இங்கு, திங்களுக்கு வெண்மைநிறமானது தன்னோடியையின்மைநீக்கியவிசேடணமாயிருக்கிறது. அதாவது திங்களிலேகதேசத்திலுள்ள கருநிறமாகிய மறுவை விலக்காமலே, அதுவும் அத்திங்களிலிருக்கும்படி சகித்துக்கொண்டு, வெண்ணிறமாகிய விசேடணமானது, தன்னியையு அத்திங்களுக்கு இல்லையென்பதொன்றையே சகியாததாய், தன்னியையின்மையைமட்டும்விலக்கித் திங்களுக்கு வெண்ணிறத்தினியையில்லையென்பதில்லை (அதாவது திங்களுக்கு வெண்ணிறமுண்டு) என்ற துணையே அதனை விசேடிக்கும் என்பதாம்.

ஆகவே சேரர்கொங்கு என்பதனை, தன்னோடியையின்மை நீக்கியவிசேடணத்தால் விசேடிக்கப்பட்ட தொடர்மொழியெனக்கொள்ளினும், அது அக்கொங்கிற் சோழர்க்குரிய வுரிமையை விலக்காதிருக்கும்படி சகித்துக்கொண்டே, அக்கொங்கிற்குச் சேரர்சம்பந்தமில்லையென்பதில்லை (அதாவது முழுதுஞ் சோழர்க்குரியதன்று சேரர்க்கும் உரியது) என்று பொருள்கொள்ளற்கிடங்கொடுப்பது காண்க.

இதனை, வெண்டிங்கள் எனக்காட்டிய உதாரணத்துள் திங்கள் முழுதுங் கருநிறத்தால் வியாபிக்கப்பட்டதன்று; வெண்ணிறத்தாலும் ஒருபுடை வியாபிக்கப்பட்டது; என்னும் பொருளே தெளியக்கிடப்பது கொண்டறிக.

இனி, சோழர்கொங்கு, குணகொங்கு என்னும் வழக்கு, சேரர் கொங்கு குடகொங்கு என்பதுபோலக் கவிப்பிரயோகங்களிற் காணப் படாமையால் அப்படியொருபகுதியே கொங்குமண்டலத்தில் இல்லை யென்பாராயின், தென்கொங்கு, வடபாண்டிஎன்பனவும் கவிப்பிரயோ கங்களிற்காணப்படாமையால் வடகொங்கு, தென்பாண்டி என்னும் தொடர்மொழியடைகளும் இனம்விலக்காதனவாகவேண்டும்; அன்றி யும் கருந்திங்களென்னும் வழக்கில்லாமையானும்,வெண்டிங்களென்னும் வழக்கே யுடைமையானும் திங்களிடத்து மறுவேயில்லையாகவேண்டும்; அங்ஙனமின்மையாலது கடாவன்றென மறுக்க. திங்களிற்சிறந்த பகுதியால் வெண்டிங்களென்றதுபோலக் கொங்கினும் சிறந்தபகுதியாற் சேரர்கொங்கென்றாரெனத் தன்னுடையையின்மைநீக்கியவிடத்தும் பொருள்கொள்ளக்கிடத்தல்காண்க.

ஆகவே "சேரர் கோங்கு" என்றதனால் எவ்வாற்றானும் கொங்கு சோழர்க்குச்சிறிதுமுரியதில்லையென்று சொல்லவொண்ணாமையாலே கொங்குகுடபுலமென்றுசாதிக்கவந்த வஞ்சிமாநகருடையார்க்கு இஷ்ட வித்தியாகாமையால் இவ்வருணகிரியார் பிரயோகமும் வாதகக்ஷிக்குப் பாதகமாயும் எதிர்வாத கக்ஷிக்குக்குச் சாதகமாயுமிருக்கிறது.

ஆதலால் கொங்கினைச் சேரர்கொங்கென்ற அருணகிரியார்பிர யோகத்தைக்கொண்டு கொங்கு குணபுலத்திற்சாராது சேரர்க்குரிய குடபுலமென்று சாதிப்பதானது "வெண்டிங்களுள்வெயில்வேண்டினு" * மென்ற கவிப்பிரயோகத்தைக்கொண்டு, திங்களிற்பிறிதொரு நிறமுஞ்சிறிதுமின்றி முழுதும்வெண்ணிறமேயுள்ளதென்று சாதிப்பது போலும் பிரத்தியக்ஷவிருத்தமாமெனவறிக.

* புறம்-செய் 38.

உ

# சிறியார் அறியாச் செந்தமிழ்ச் சிறப்பு.

## முகவுரை.

செந்தமிழ் பரவுதூஉம் செந்தமிழ் பரவுதூஉம்
தந்தி முகனிரு தாண்மலர் புனைந்தே.

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழியின் அருமை பெருமையினை இக்காலத்தில் நம்மவர் பலரும் அறிந்திலராய் அம்மொழியினைப் பயி லாதிகழ்ந்து பழிப்பாருமாயினர். என்னை? "பொருள்வருவாய்க்குரிய கல்விகள் இத் தமிழ்மொழிக்கணன்றி ஆங்கிலமொழிக்கண்ணே உள வாயினமையானும்", (செந்தமிழ் I-ம் தொகுதி) இராஜபாஷையாகச் சிறந்து விளங்கும் அவ்வாங்கிலமே வருவாயும், நன்மதிப்பும், உயர் பதவியும் அளித்தற்கின்றியமையாக் கருவியாதலானுமே. இதுகார ணம்பற்றியே ஆங்கிலமொழி நந்தமிழ்நாட்டின்மட்டுமன்றி, நமது இந்தியநாடெங்கணும் பரவி, ஆடவரால் அவாவப்பெறு மேம்பா டுடைத்தாய், பெண்டிரும் தமதாடவர்மாட்டன்பும் பெருமையும் பா ராட்டுதற் கேதுவாகிய கல்விச்செல்வம் பொதிந்துளதாய், யாவராலும் போற்றப்பெற்றுலவுகின்றது. மேலும், ஆங்கிலப்பயிற்சி ஓங்கியும் தமிழ்ப்பயிற்சி குன்றியும் வரும் இக்காலத்தில், பெரும்பான்மை ஆங் கிலத்தையும் சிறுபான்மை தேசபாஷைகளையும் இதுகாறும் பரிபா லித்துவந்த நம் சென்னைச் சர்வகலாசங்கம், தேசபாஷைப்பயிற்சியை நாளடைவிற் புறக்கணித்துவருகிறது. இவ்வாறு நமதருமைத் தமிழ் மொழி பலவாற்றானும் ஒளி குன்றித் தளர்வுற்றுத் தத்தளிக்கும் நிலை எய்தியதை நோக்குமிடத்து, அதற்கு நம் தமிழ்மக்களின் அபிமா னக்குறைவே முக்கிய காரணமாக விளங்குகிறது.

2. இம்மட்டேயோ! நமது பாதகண்டத்தில் வழங்கிவரும் பன்மொழிகளுள், தொன்றுதொட்டிலங்கும் தூய்மைதோன்ற, இலக் கியம் இலக்கணம் தெள்ளுரை முதலாப் பன்னலமன்னும்பாங்குடைத்

தாகி, ஆன்றோரது நுண்ணறிவு சொற்பொலிவு நூற்பொருட்செறிவு கூரிய ஆராய்ச்சிமுதலியதுலங்கும் மொழிநலம் பலவும் மொய்க்கப்பெற்றே, "குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனு நான்கெல்லை" வரம்பு கடந்து இலங்கை பீனங் சிங்கப்பூர் நேட்டால் முதலிய குடியேற்ற நாடுகளிலும்பரவிச் சற்றேறக்குறைய இரண்டரைக்கோடி என்று கணக்கிடப்பெறும் தமிழ் மக்களால் தம் தாய்மொழியாக் கொண்டாடப்பெற்ற பெருமைவாய்ந்து, தெய்வத்தன்மைபொருந்தி விளங்கும் நம் தமிழ்மொழியின் மேம்பாட்டினைச் சென்னைச் சர்வகலாசங்கத்தின் அவயவிகளாய் அமரும் நம்மவரே, வாய்க்கும் சமயங்களில் எடுத்துக்கூறாமலும், வேண்டுங்கால் இடித்துக்கூறாமலும், அச்சங்கத்தார் நியமித்துவரும் பாடமுறைகளில் தமிழ்மொழிக்கட் பரக்கக்கிடக்கும் இலக்கிய இலக்கண நூல்களினின்றும் சிற்சில பகுதிகளைக் குறித்துத் தொகுத்து அவற்றினைக் கட்டாயப்பாடமாக அமைக்க முயலாமலும், தங்கடமையைக் கைசோரவிட்டதே நம் தமிழ்மொழி வளர்ச்சிக்கோரிடையூறாய் நின்றது.

3. ஆகவே,

"பொருப்பிலேபிறந்துதென்னன்புகழிலேகிடந்துசங்கத்
திருப்பிலேயிருந்துவைகையேட்டிலேதவழ்ந்தபேதை
நெருப்பிலேநின்றுகற்றோர்நினைவிலேநடந்தோரேன
மருப்பிலேபயின்றபாவைமருங்கிலேவளருகின்றாள்."

(வில்லிபாரதம்-சிறப்புப்பாயிரம்.)

என, நல்லிசைப்புலவராற் பாடப்பெற்ற நம் தமிழ் அணங்கு தற்காலத்தில் தான் பிறந்தநாட்டின்கண்ணே மதிப்பிழந்தும், தன் மக்களாலே புறக்கணிக்கப்பட்டும், உருக்குலைந்து, உரமழிந்து, உளங்லிந்து வருந்துகின்றது. காலகதியை விலக்க வல்லார் யாவர்.

4. ஆதலின்,



உலகமெலாம் ஒருமுகமாய் ஒருமொழியே
வழங்குதல்சால் புடைத்தாம் என்னின்
பலகலையும் தன்மாட்டுப் பரந்துளதாற்
பன்னாட்டிற் பரவு மாற்றால்
இலைகனிகாய் எண்ணரிதாய் இருங்கிளைசார்ந்
திருநிழலார்ந் தெழில்வீ ழேந்தித்
தலைபரவுந் தனித்தருப்போன் றாங்கிலமே
தலைமைபெறத் தகுமென் பாமே.

அவையகத்துக் குரியமொழி ஆடவருக்
கரியநிதி அளவில் செல்வக்
குவையுகக்கும் யாவர்க்கும் கொண்டாடும்
குலதெய்வம் கோல வாழ்வின்
சுவைபயக்கும் தூயமுதம் துன்னலருக்
கரிமுழக்கம் சுருங்கச் சொல்லின்
கவர்பகுக்கும் ஆயிரநாக் கலைஞனுக்கும்
ஆங்கிலச்சீர் கழறொ ணாதே.

தும்பியுறு மலர்தோறும் தொனிநீட்டித்
தூய்நறுந்தேன் தொகுக்கு மாபோற்
கம்பீரத் தொனிகாட்டிக் கவின்பெறுபன்
மொழிவழிபாய் கலைத்தேன் கூட்டித்
தன்பெருமை தவநாட்டும் தாட்டிக
ஆங்கிலமே தழைக்கும் நாளில்
நம்பிரம குலமொழியும் நலமிகுநம்
தமிழ்மொழியும் நயப்பார் யாரே.

5. இது நிற்க, ஐரோப்பாகண்டத்தில் வழங்கும் பல தேசபாஷைக்ட்குத் தாய்மொழியாய் விளங்கும் கிரீக், லத்தீன் பாஷைகளும், நம் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவரும் வங்காளம், ஹிந்தி, மகாராட்டிரமுதலிய தேச பாஷைகட்கெல்லாம் தாய்மொழியாகவிளங்கித் தற்காலத்தில் ஆங்காங்குச் சிலபண்டிதர்களான்மட்டுமே பயிலப்பெற்று, ஏட்டுவழக்குமட்டில் உள்ளடங்கி நாட்டுவழக்கிற் பரவா

தொடங்கிய ஸம்ஸ்கிருதபாஷையுமே, என்றுங்குன்றாமேம்பாடுடைய "உயர்தனிச்செம்மொழி" (Classical Language செந்-பகுதி I)யாகச் சர்வகலாசங்கத்தாரால் மதிக்கப்பெற்றன. நமது தமிழ்மொழியோ அத்துணை சிறப்புவாய்ந்த உயர்தனிச்செம்மொழிகளுட் சேர்க்கப் பெறாது, 'உள்நாட்டுப் பாஷைகளுள்" (Vernacular Languages. செந்—பகுதி I) ஒன்றாகவே கருதப்பெற்று, சர்வகலாசங்கத்தாரால் நடத்தப்பெறும் யோக்கியதாபட்டப்பரீக்ஷைகட்கு நியமிக்கப்படும் கட்டாயப்பாடங்களிலொன்றாக அமைக்கப்பெறாமல் அதுகாரணம்பற்றியே நம் நாட்டு உயர்தர, நடுத்தரக்கல்லூரிகளில் ஆர்வமுடன் ஆங்கிலம் பயின்றுவருமாணவர்களாற் புறக்கணிக்கப்படுகின்றது.

6. ஆகவே, நம் தமிழ்மொழி மாட்சிகுன்றினமைக்குப் பல காரணங்கள் உள. அவற்றினை விரித்துரைக்கப்புகுவோர் "தம் குடியைத் தாம்பழித்தல் தாழ்ந்தோர் நெறியாகும்" (It is an ill bird that fouls its own nest) என்னும் முதுமொழிப் பிரமாணத்திற்குத்தக்க இலக்காவர். ஆதலின்,இவ்விஷயத்தை மேன்மேலும் விரித்து விளம்பாது விடுத்தனம்.

7. "சாலவே ஈனநிலை சாருங்கால் எப்பொருளு, மேலாம் நிலை விரைவின் மேவுமே" (When things are at the worst, they must mend) என்பது அனுபவசித்தமாய் ஆன்றோராற்றெளியப் பெற்ற துணிபாம். இத்துணிபுரையையும், தற்காலத்தில் நமது தாய்மொழி தளர்ந்து தத்தளிக்கும் பரிதாபமான நிலையையும் ஒத்துநோக்குமிடத்து, நம் அருமைத்தமிழ்மொழியும் கூடியவிரைவில் முன்னேற்றமெய்தி, வெவ்வரவின்வாய்நின்றுவிலகி விளங்கு முழுமதி போல் நிறைகலைநிரம்பி, நம் தமிழகத்தை முன்போல் விளங்குறச் செய்புமென்பது திண்ணம். இதற்கியையவே, பல நற்குறிகள் நம் தமிழ்மொழியின் முன்னேற்றத்தைச் சுட்டிநிற்கின்றன. அவையாவன: முச்சங்கம் நாட்டி முத்தமிழ்வளர்த்தமூதூராம் மதுரைமாநகர்க்கண் நிறுவப்பெற்றதும் முத்திராசாலை, புத்தகசாலை, செந்தமிழ்ப் பத்திரிகை, ஏட்டுப்பரிசீலனை, ஏட்டுப்பரிபாலனம், ஆங்கிலத்தமிழ்ப் பரீக்ஷை, தனித்தமிழ்ப்பரீக்ஷை முதலிய அவயவங்களைத் தன்மாட்டமைக்கப்பெற்று விளங்குவதுமான மதுரைத்தமிழ்ச்சங்கமும்,இயன்ற



மட்டில் அதனைப்பின்பற்றித் தனவைசிய சிகாமணிகளால் நமது தமிழ் நாட்டில் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பெற்றுப் பரிபாலனஞ்செய்யப்பெற்று நடைபெறும் பல தமிழ்க்கல்லூரிகளுமே. இதுவேயன்றி, தத்தம் தாய்மொழியை மாணவர்கள் செவ்வனேபயின்று அதனைப் பிழையறத் திருத்திப் பொலிவுறப்பேசுவதானும் எழுதுவதானும் அதன் முன்னேற்றத்தை நாடுவதே ஏற்புடைத்தாம் என்று சின்னாளாக நந்நாட்டில் அறிவாளர் பலரும் ஒருமித்து வற்புறுத்திவருவாராயினர். மேலும், ஆங்கிலக்கல்லூரிகளிற்கல்விபயின்றுவரும் நம்மாணவர்கட்குச் சரித்திரம் சாத்திரம் சம்பந்தமாய் ஆங்கில நூற்கண்விளங்கும் கருத்துக்களைத் தேசபாஷைகள் மூலமாகவே புகட்டுதல் நலமென்று தேசாபிமானச் செல்வர்கள் நாட்டின்கணெங்கும் ஊக்கமும், மனக்கிளர்ச்சியும் உதிக்குமாறு பத்திரிகைவாயிலாகவும், பிரசங்கவாயிலாகவும் நீளுரைபொழிந்து முழங்குவாராயினர். கருணைபொருந்திய நமது துரைத்தனத்தாருக்கும் இது உடன்பாடாகும். இந்நல்லெண்ணம் நிறைவேறுதற்கு, ஆங்கிலக்கலைகளிற்றேர்ந்து பட்டம்பெற்றுக் கலை மணங்கமழ உயர்பதவியிலமர்ந்து விளங்கும் தமிழ்நாட்டுக்கனவான்களும், இராஜாக்கள், ஜமீந்தார்கள் முதலிய பரம்பரைப்பிரபுக்களும், வியாபாரமுதலிய பல தொழிற்றுறைகளிற்புகுந்து பொருளீட்டிவரும் தனவைசியர் முதலிய வணிககுலச்செல்வர்களும், தத்தங்கடமையென வுணர்ந்து முன்னின்று முயன்று செய்யவேண்டு முக்கியமான கைங்கரியம் ஒன்றுளது. அஃது யாதெனின், பொருட்சேகரம், நாகரிகமுன்னேற்றம், பொதுஜனநலம், நாட்டின் பாதுகாப்பு முதலிய முன்னேற்றங்கள் சித்திபெறுவதற் கின்றியமையாதனவாய் ஆங்கிலமுதலிய மேற்றிசைமொழிக்கட்பரந்து செறிந்து பண்புற்றோங்கும், பூதபௌதிகசாத்திரம், ரசாயனசாத்திரம் முதலாய பற்பல சாத்திரங்களிற்றுலங்கும் உண்மைத் துணிபுகளைக் கற்றுத்தேர்ந்த கலைஞர்களைக் கொண்டு நம்தமிழில் மொழிபெயர்க்கச்செய்து நமது நாட்டார் யாவர்க்கும் புலப்படுமாறு வெளிப்படுத்துவதற்குவேண்டும் இடம் பொருள் ஏவல் முதலியசாதனங்களைத் தேடிக்கொடுத்துதவிபுரிவதேயாம்.

8. இத்தகைய பொதுநலங்களை நம்மவர் எய்தி நயம்படவாழ்தலே தன்முன்னேற்றமாகக் கொண்டிலங்கும் தமிழ்ச்சங்கமொன்றினை

இற்றைக்குப் பதினாறு ஆண்டுகளின் முன்னர் சிவநேசச்செல்வராய், செந்தமிழ் வளர்ச்சிக்கட்கண்ணும் கருத்தும் உடையராய், பரம்பரைப் பிரபுசிகாமணியாய், ஒல்காப்புகழ்பெற்றுலகினமர்ந்து, சின்னாள் முன்னம் சிவனடி மரீஇய, பாண்டித்துரை எனும் பார்புகழ்வள்ளல் மதுரை மாநகர்க்கண் நிறுவியதும், மேற்கூறியவண்ணம் அது பல்வகைத்தாய அவயவங்கள்கொண்டமைந்து தமிழ்மொழி வளர்த்துவருவதும் இந் நாட்டில் யாவரும் தெரிந்தவிஷயமே.

9. இவ்வாறு, மதுரையிற் றமிழ்ச்சங்கம் ஸ்தாபிக்கப்பெற்ற சமயத்தில், நமது இந்தியா தேசத்தின் ராஜப்பிரதிநிதியாய் விளங்கிய லார்ட் கர்ஸான் (Lord Curzon) என்னும் பிரபு சிரேஷ்டரால் "சர்வ கலாசங்கச் சீர்திருத்தங்கருதும் மந்திராலோசனைச்சபை" (Universities' Commission) ஒன்று நியமிக்கப்பெறவே, அச்சபையின் அங்கத்தினர் காலதேச வர்த்தமானங்கட்கியையச் சீர்திருத்தஞ்செய்ய வேண்டுமுறையினைநாடி, இந்தியாவிலுள்ள பிரதானநகரங்களிற் சென்று ஆங்குறையும் பிரபுக்களிடத்தும், கலைஞர்களிடத்தும் விசாரணைவாயிலாக அபிப்பிராயங்கலந்து, அதுகாறும் சர்வகலாசங்கங்களில் நடந்தேறிவந்த ஆட்சிமுறை, பாடமுறை, பரீக்ஷைமுறை முதலியனவற்றைப் பரிசீலனைசெய்து வந்தனர். மேற்கூறியவகையால் விஷயங்களை ஆராய்ந்துவந்த அச்சபையோர்கள்முன்னிலையில், நம் தமிழ்மொழிக்கண்,

ஆழ்ந்து தெளிவுற் றருங்கலை மணங்கமழ்ந்
தான்றோர் வாக்கும் அரும்பொலி வும்பொதிந்
தாய்வோர்க் கறிவெனும் அமுதூட் டுவிக்கும்
அரிய பெரியநூல் அமைந்தில; ஆதலின்,

சர்வகலாசங்கத்தாரால் நடத்தப்பெறும் யோக்கியதா பட்டப்பரீக்ஷைகட்கு தமிழ்நூல்களைக் கட்டாயப்பாடமாக நியமித்தல் வேண்டாம் என்ற பொது அபிப்பிராயமே மேலிட்டது.

அந்தோ! நந்தமிழ்மொழியின் அருமை பெருமையையும், தொன்மையையும், அதன்கண் ஆழ்ந்து பரந்துகிடக்கும் பன்னூற் பெருக்கத்தையும், சுவையையும் அச்சபையோர்முன் எடுத்துக்காட்டு



தற்கு ஆற்றலும், ஆர்வமும் வாய்ந்த ஆன்றோர்கள் அச்சமயத்து முன்வந்தாரிலர். ஆதலால், அம்மொழி தாயற்றசேய்போற் றக்கோர் முன் தத்தளித்தது. இந் நிகழ்ச்சியைக்கேட்டறிந்த தமிழறிவாளருளத்து வெறுப்பும், வியப்பும், விசனமும் ஒருங்கே மூண்டன. இந்நிலையில், எவ்வாற்றானும் ஆற்றலிலேனாகிய யான், நம்மருமைத் தமிழ்மொழிக்கண் ஆர்வமும் அன்புமே தூண்டப்பெற்று, கட்டளைக் கலித்துறையிற் பத்துப்பாக்களியற்றி அவற்றினைத் தமிழ்வள்ளலும் பிரபு சிரேஷ்டருமாய் விளங்கிய ஸ்ரீமான், பாண்டித்துரைத்தேவரவர்களும், அவர்கள் பக்கத்தில் அமர்ந்து விளங்கிய கல்விகேள்விகளிற் சிறந்த சில புலவர்களும் குழுமிய அவைக்கட் படித்துக்காட்டினேன். காலம் இடம் கருதி இயற்றப்பெற்ற பொருத்தமுடையன என்று இப்பாக்களை அப்பெரியோர் நன்கு மதித்தனர். இது நிகழ்ந்து சில ஆண்டுகள் கழிந்த பின்னர்,

செந்தமிழ் வளர்க்கும் சேது பதியாய்
எனதிடர் தீர்த்த இன்கொடை வள்ளலாய்
பண்டைத் தமிழ்கமழ் பரம்பரை வேந்தாய்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியாய் விளங்கும் Honourable ஸ்ரீமான் இராஜராஜேஸ்வர சேதுபதி மன்னரவர்கள் இப்பாக்களைச் செவியுறக்கேட்டு அகமகிழ்ந்து பாராட்டினர். ஆகவே, இப்பாக்கள் தமிழகத்தாலும் பாராட்டற்பாலனவாம் என ஒருவாறு துணிந்து அவற்றினைச் "செந்தமிழ்"ப்பத்திரிகைவாயிலாக வெளியிடலானேன்.

கோது நீக்கிக் குணமே நாடித்
தமிழ்மணம் விழையுந் தக்கோர் யாவரும்
தமிழ்மொழி வளர்ச்சி தனையே நாடிப்
பாக்களி லைந்தையும் பாராட் டுவரே.

---

# சிறியார் அறியாச் செந்தமிழ்ச் சிறப்பு.

## விநாயகர் துதி.

சொந்தத் தமிழின் சுவையறியா மாந்தர்செவிக்
கிந்தக் கவியேற் றிடச்செய்வான்—விந்தைச்
சிலையேட்டிற் கோட்டுநுதி சேர்த்தைந்தாம் வேதக்
கலைதீட் டியவைங் கரன்.

## கட்டளைக் கலித்துறை.

கண்டுங் கனிவகை தேனுங் கலந்த கவிச்சுவைசேர்
வண்டமிழ் மீதுநம் பெண்டிர் தமக்கு மதிப்பில்லைவந்
தண்டுங் குடதிசை ஆங்கில மெங்கு மளாவியதால்
ஒண்டும் பிடாரிமுன் உள்ளூர்ப் பிடாரி ஒடுங்கியதே. (1)

வெடிப்பாகச் செந்தமிழ் ஓதினென் வீணென்பர் மேதினியிற்
படிப்பாரு மில்லை படியா விடினும் பரிவுளர்போல்
நடிப்பாரு மில்லை நமது தமிழ்க்கொரு நாதனற்றிங்
கடிப்பாரு மில்லை அணைப்பாரு மில்லையென் றுப்விட்டதே. (2)

சீயித் தமிழ்மொழி புன்மொழி காண்சில நாளிலது
மாயத் தகுமென மார்தட்டிப் பேசி மனங்களிப்பர்
வாயைத் திறந்திடின் ஆங்கிலச் சொல்லே வழங்குவராற்
றாயைப் பழித்தவன் கோதானம் செய்திடும் தன்மையொத்தே. (3)

உடுப்பாடை ஆங்கிலம் செந்தமிழ் மெய்யென் றுணர்ந்திலிராய்க்
கடுப்பாகத் தென்மொழி தன்னைப் பழித்துக் கடிந்துரைப்பீர்
தொடுப்பாக வந்தவள் அங்கிமுன் வேட்டமெய்த் தோகையினைக்
கடுப்பா ளெனக்கொளல் நல்லற மோவுண்மை காணுமினே (4)



ஆயிரங் கோளகல் வானிற் செலினும் அவைநமக்கு
ஞாயிறு போல நலந்தரு மோதமிழ் நாட்டினிற்பல்
லாயிரத் தாண்டாகச் செந்தமிழ் மாந்தும் அருஞ்செவிக்குப்
பாயிரங் கூர்பல நூல்பெறு மாங்கிலம் பண்ணிலதே. (5)

மெய்ப்பொருள் பற்பல வற்றினை ஒளவை விழுமியதன்
திப்பியச் சிற்சில நற்சொலின் வற்புறுத் திட்டதமிழ்
ஒப்பரு விற்பனர் முக்கழ கத்திடை ஓங்குதமிழ்
செப்பரு நற்புகழ் பெற்றுர வோர்மகிழ் செந்தமிழே. (6)

வள்ளுவர் கம்பர் முதற்கவி வாணர் வளர்த்ததமிழ்
தெள்ளமு தோருருக் கொண்டதிங் கென்னச் சிறந்ததமிழ்
உள்ளுரு கிப்பல தொண்டராழ் வாரிவர் ஓதுதமிழ்
பிள்ளைம திச்சடை யான்மகிழ்ந் தேற்கும் பெருந்தமிழே. (7)

தள்ளருங் காப்பியத் துள்ளுறு மின்சுவை தந்துதவும்
தெள்ளுரை பற்பல வுள்ளநற் றென்னூல் செறிந்ததமிழ்
எள்ளரும் பஞ்ச விலக்கண நூல்பல வேற்றதமிழ்
புள்ளிறை வாகனன் பள்ளிவிட் டேதொடர் பூந்தமிழே. (8)

மின்னுமை தன்னிட மன்னிறை இன்னருள் மேவியதொன்
மன்னவர் தென்னவர் முன்னரிந் நாட்டில் வளர்த்ததமிழ்
இன்னுமித் தொன்னகர்க் கூடலிற் சங்கத் திலங்கவெனப்
பன்னருஞ் சீர்பெறு பாண்டித் துரைமகிழ் பைந்தமிழே. (9)

வேற்கர வேள்குறு மாமுனிக் கந்நாள் விரித்ததமிழ்
பாற்கடல் போற்பல நூற்சுவை பாய்ந்தே பரந்ததமிழ்
சேற்கணி அம்பிகை யின்னருள் துன்னுநம் சீர்முகவைப்
பாற்கர சேது பதிக்கமு தாய்வளர் பைந்தமிழே. (10)

N. V. SUNDARARAJA AIYAR. B.A., L.T.,

மதுரை.
1902ம்-௵
மே௴

# சேரர் தலைநகர்.

---

முசிரிப்பட்டணமென்பது பண்டைக்காலத்தில் கொடுங்கோளூருக்கே பெயராய் வழங்கியதென்றும் பிறகு, நாளடைவில் அது முரலாவெனும் மாற்றுப்பெயர் பூண்டதென்றும் பெரியோர்கள் மொழிவது காளிதாச மகாகவியின் கேரளதேச வர்ணனைக்கு அநுகூலமாதலின் கொடுங்கோளூரே சேரரது தலைநகரெனச் சாதித்தல் தகும். பெருங்கவியரசனாகிய காளிதாசன் கேரளதேசத்தை வர்ணிக்கும்பொழுதுள்ள "𑌮𑍁𑌰𑌲𑌾𑌮𑌾𑌰𑍁𑌤𑍋𑌦𑍍𑌧𑍂𑌤𑌮𑌗𑌮𑌤𑍍𑌕𑍈𑌤𑌕𑌂 𑌰𑌜𑌃" இந்தச்சுலோகத்தில் முரலாவென்னும் பதத்திற்கு "𑌮𑍁𑌰𑌲𑌾 𑌨𑌾𑌮 𑌕𑌾𑌚𑌿𑌨𑍍𑌨𑌦𑍀 𑌕𑍇𑌰𑌲𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌵𑌹𑌤𑌿 𑌤𑌾𑌂 𑌮𑍁𑌰𑌲𑍀𑌤𑌿 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿।" என்று மல்லிநாதரது உரை காணப்படுகின்றது. இதனால் முரலியென்னுஞ் சொல் ஆற்றிற்குப்பெயராவது உணரப்படும். இப்பெயரே அவ்வூர்க்கும் (கொடுங்கோளூர்) வழங்கிவரலாயிற்றென்பதற்கு யான் மேற்கொடுக்குங் குறிப்பானது சான்றாகும். ஆயின், ஆப்டிமகாசயனின் சப்த நிகண்டில்,

𑌮𑍁𑌰𑌲𑌾 = Name of a country.

𑌮𑍁𑌰𑌲𑌾𑌃 = Name of the Muralas.

𑌮𑍁𑌰𑌲𑍀 = Name of a river mentioced with Thamasa flowing in Kerala.

முரலாவென்னும் பதம் கேரளதேசத்திற்குப்பெயராயிருந்தது வெளிப்படையாகும்.

ஆனால் நூல்களில் பற்பலவிடங்களில் வஞ்சியையொட்டிக் கருவூரெனக்காண்பது கொடுங்கோளூரையடுத்திருக்கும் திருக்கரியூரென்னுமிடத்தையாகும். இக்கரியூரே கருவூரெனமாறிவிளங்கி நம்மை வழக்கில் நுழைத்ததுபோலும். இவ்வூரும் கொடுங்கோளூரைப் போலவே சேரவரசர்களுக்குப் பிரதான இடமாயிருந்துகொண்டிருந்தது. இவ்வூரிலே பொன்மாடமொன்றிருந்தது. ஓர் ஏட்டுப்பிரதியில்—"திருநாவாயும் திருக்கரியூரும் * திருக்கண்ணபுரத்தும் திருவஞ்சைக்களத்தும்" "திருக்கரியூர் பொன்மாடத்தில்..........." "திருக்கரியூர் க்ஷேத்திரத்தில் பிராமணரும்கூடி யோகம் திகஞ்ஞு" என்றும் காணுதல்பற்றி (கருவூர்—கரியூர்) என்பது திரிச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சார்ந்த கருவூரல்லவென்றுணர்க.



இன்னும் கொடுங்கோளூர் சேரவரசர்களுக்குத் தலைநகராய் விளங்கிற்றென்பதை "ஸ்ரீ பரசுராமன் படைக்கப்பட்டோரு கேரளத்தில் 17-நாடுண்டு. அதில் இராஜதானிகள், இடமாடம், கோவிலகம், கொட்ட, கொட்டாரம், என்னிங்ஙனே அவர்க்கு அதததுபேருண்டு. கோகர்ணம், கன்னியாகுமாரிக்கு இடசேரமான் நாடு 16 காதம் ஆகுன்னு" "வையநாடும் கொடுங்ஙல்லூரும்..........." இச் சரித நூல்வாக்கியங்கள் பிரதிபாதிக்கின்றன.

---

செங்குட்டுவனென்னும் சேரவரசன் சதுரங்கபலமுடையவனாய் வஞ்சிமுற்றத்தை நீங்கிச்சென்று பெரியமலைகளுக்கிடையே ஊடறுத்துச்செல்லும் பேர்யாற்றின்கரையின் மணற்றிட்டிற்றங்கலானான் என்று சிலப்பதிகாரக் காட்சிக்காதையாற் றெரியக்கிடக்கின்றது. இச்செங்குட்டுவனது இருப்பிடமாகிய வஞ்சிநாடோ, ஆன்பொருநைநதிக்கரைக்கட்கட்டப்பட்ட கோட்டையினையுடையதென்று புறப்பாட்டடிகள் கூறுகின்றன. இம்மேற்கோளால், செங்குட்டுவன் ஆன்பொருநைக்கரையிலுள்ள வஞ்சியை நீங்கிச் சென்று பேர்யாற்றின்கரையிலெல்லாருடனும் தங்கியிருந்தானென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். பேர்யாற்றின் கரையிலே வஞ்சியுளதென்று நூல்கள் கூறுவிடினும் ஆன்பொருநைக்கரையிலே கருவூர்வஞ்சியெனக் கூறியிருத்தல் கொண்டு வெவ்வேறு இடங்களென்றும் துணிகிறார்கள். இத்துணிபு சிறிது ஆலோசனைக் கிடங்கொடுக்கின்றது. ஏனெனில், ஆன்பொருநைக்கரைகொண்ட வஞ்சியே அஞ்சைக்களமெனத்துணியலாம்.

---

* "குணவாயிற்கோட்டத்தரசுதுறந்திருந்த, குடக்கோச்சேரலிளங்கோவடிகட்கு" என்னும் பாட்டடியில் கூறியிருக்கும் குணவாயிற் கோட்டம் இத் திருக்கண்ணபுரமே யென்றறிக. இதை, 'திருக்குணமதிலகம்' எனக் கூறுவாருமுளர்.

'பொருந்தம்' என்னும் பதத்தின் திரிபு 'பொருநை' என்று கூறுதலினும் பூர்ண (வ-ஞு-ா) வென்னும் வடமொழிப்பெயரே ஆசிரியர், மாணாக்கன் முதலியவைபோல, பாலிபாஷைவழியாய் 'பொருநை' என வடிவம் கொண்டு தமிழிற்புகுதலாயிற்று என்ப தொக்கும். ஏனெனில் பூர்ணவென்னும் நதி சங்கராசார்யரது பிறவி யிடமாகிய காலடியிலும் திருவஞ்சிக்களம், ஆலுவா முதலிய இடங் களிலும் ஒழுகி வருதலால் [அவ்வாற்றின் பெயர் இப்பொழுது பிர சித்தமாய் வழங்கிவரும் பெரியாறு என்றானதாலும்] பூர்ணநதியும் பொருநையும் பெரியாறும் ஓரே நதியின் பலபெயர்கள் எனக் கொள் ளல்வேண்டும். இப்பெரியாறு ஆலுவாதேசத்திலிருந்து சிறிதுதூரத் திற்கப்பாற்சென்று பலபிரிவுகளாய்த்திரிந்து காலடி அஞ்சைக் களம் முதலியவிடங்களுக்குச் செல்லுகிறது. இவ்வாற்றைப்பற்றி ஸ்ரீ வித்தியாரண்யசுவாமிகளது சங்கரவிஜயத்தில் '* வ-ஞு-ா நதீ வ-ண ைகடே' என்றெல்லாம் பற்பலவிடங்களிற் காணப்படு கின்றது. இதற்கு உரையாசிரியர் 'கௌஜைஷ-ா வ-ஞு-ா-நாஜ காவிஷீவ வஹதி' என்றெல்லாம் ஸ்பஷ்டமாய் அர்த்தம் எழுதி யுள்ளமையும் காணற்பாலது.

ஆகையால் செங்குட்டுவன் கருவூர்வஞ்சியைவிட்டுப் பேர்யாற் றின்கரையில் ஓரிடத்திற் றங்கினான் என்று துணியில், கருவூர்வஞ்சி பேர்யாறுசுற்றிய அஞ்சைக்களத்தினின்றும் வேறென்று கூறுதல் பிடிவாதத்தினிலக்கியமாகும். " வாடாவஞ்சிமாநகர்புக்கபின் " என் பதற்கும், பேர்யாற்றின்கரையினின்றும் தன் தலையிடம் புக்கபின் என்றே அடியார்க்குநல்லாருரைக்கும் அர்த்தமானதால் 'ஈண்டும் பேர்யாற்றின்கரையினின்று நீங்கி ஆன்பொருநைக்கரையிலுள்ள தன்னூர்புக்கபின் என்றுகொள்ளுதற்கே எல்லாநூல்களும் துணை யாவன' என்பது மேற்கூறிய மேற்கோளுக்கு விருத்தமாய்க்காணப் படுகின்றது.

சில சமஸ்தான திராவிடவித்வான்கள் பொருநை என்பது பூர்ண பதத்தின் திரிபு அல்லவென்றும், பெரியாறு என்பதையே வடமொழி

* சங்கரவிஜயத்தில் இரண்டாம் சர்க்கத்தில் இரண்டாவது சுலோகம் நோக்குக.



யில் பூர்ணநதி என்றழைக்கப்படுவதாகவும் மொழிகின்றார்கள். இது எவ்வாறு ஒக்குமோ ? ஏனென்றால் "பெரிய" என்னும் பதத்திற்கு, பூர்ணவென்னும் அர்த்தம் யாதொரு நிகண்டுவிலிருந்தும் படித்திருப் பதில்லை. அநுபவத்திலும் கேள்வியுற்றதில்லை. அவ்விதம் பெரியா றென்பதின் தாத்பர்யார்த்தமாகப் பூர்ணநதியென்றழைக்கப்படுகிறது. என்றாலும், பூர்ண என்னும் தீர்க்கத்திற்கு இடமில்லை. ஆனதால் அவ்விதம் அர்த்தம் கூறுவதற்கிடமில்லை. ஆயின், பொருநை என்பது பூர்ண என்பதின் திரிபு என்றே ஒப்புக்கொள்ளவேண்டும். தவிரவும் இவ்வாற்றுக்குப் பேர்யாறென்று பண்டைக்காலத்தில் பெயர் வழங்கி யிருந்தாலன்றோ பொருநை பேர்யாறு என இரண்டியாற்றுப்பெய ரும் ஓர் யாற்றின் பெயரோவென ஐயுறுதற்கு நூலாதாரவேனும் உரையாதாரவேனும் உண்டாகும். அப்பெயர் வழங்கியதற்கு இதுகா றும் யாதொரு லக்ஷியமும் காணப்படவில்லை. ஆனால் பொருநை என்னும் பூர்ணபதத்தின் திரிபே அக்காலத்தில் வழங்கிவந்ததென் பதற்கு எல்லாநூல்களும் துணையாவன என்றுணர்க. இதனால் வஞ்சியைக்கூறிய பல்லிடத்தும் ஆன்பொருநை அதைச்சூழ்வதாகக் கூறியிருத்தல் மிகப்பொருந்துமெனக்கொள்க. சிலப்பதிகாரக் காண் டாவசானக் கட்டுரைகளிற் சோழ பாண்டியரைப்போலச் சேரரைப் பெருங்கவியரசர் சிறப்பித்தாரில்லையென்பதினால் "பேர்யாறு அரசர் தலைநகரைத் தன்றுறைக்கணுடைத்தாகாமைபற்றி என்று நன்கு புலப் படும்" என்று முடிவுகூறுவது ஒருவிதமாய்க் காணப்படுகின்றது. ஏனென்றால் பேர்யாறு, அரசர் தலைநகரைத்தன்றுறைக்கணுடைய தாயிருந்தது என்பதற்குப் பல லக்ஷியங்களும் காணப்படுகின்றன. இன்னும் சில லக்ஷியங்களை இக்கொடுங்கோளூரில் பார்க்கலாம். இதை, யாம் மேற்குறிக்கும் குறிப்பில் நோக்கிக்கொள்க. இனியும், மற்றிரு வரைச் சிறப்பிக்கும் நூல்கள் யாதேனும் சேரவரசரைக் குறித்துப் பிரஸ்தாபிப்பதில்லை. ஆதலின் சேரவரசர் எக்குலத்தைச் சார்ந்தவர் என்றே தெரியாமற் போயிற்று. மற்றிருவரைக்குறிக்கும் சமாசாரம் இவரைக் குறிக்காது. இதோர் வழக்கமாயிற்றாதலால் காண்டாவசா னக்கட்டுரைகளிற் சேரரைச் சிறப்பிக்காதகாரணம்பற்றிப் பேர்யாற் றின்கரையில் தலைநகரிருக்கவில்லையென்றனுமானித்தல் வியபிசாரம் பெற்றிருக்கின்றது. இனியும் சங்கநூல்களில் கூறியிருக்கும் பொருநை நதி அலைகளெல்லாம் வஞ்சிப்புறக்கோட்டைமீது அடிக்கின்றன என்ற

விஷயங்களெல்லாம் இவ்வஞ்சிக்களத்திலே பொருந்துகின்றன. ஏனெனில் இக்கொடுங்கோளூரைப் பெரியகோட்டையொன்று சுற்றியிருந்ததாகவும், அக்கோட்டையினைப் பொருநை சுற்றியிருந்ததாகவும் மொழிவதற்கு இடமுண்டு. இன்னும் இவ்வூரில் சிற்சிலவிடங்களில் கோட்டையது அஸ்திவாரங்கள் காணப்படுகின்றன. கேரள மஹாத்மியத்திலுள்ளவர்ணனைப்படிக்கு இவ்வூரை நோக்குமிடத்தும் இதோர் சக்கரவர்த்தியின் ராஜதானியாயிருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. இக்கோட்டையானது அவ்வாற்றின்கரையிலிருத்தல்பற்றி ஆற்றின் அலைகள் கோட்டை மதிலில் அடித்ததென்பது அதிசயோக்தியன்று. ஆயின் சுபாவோக்தியேயாகும். அதிக எடுத்துக்காட்டலேன்? திரிச்சிராப்பள்ளி ஜில்லாவைச்சார்ந்த கருவூர் சேராது தலைநகரென்றாலும் சங்கநூற் செய்யுள்களுக்கு அவ்விதமாகவே அர்த்தம் கற்பிக்கலாம். கொடுங்கோளூரே சேராது தலைநகரெனக் கொண்டாலும் சங்கநூல்கள் அக்கொள்கைக் கிசைந்தவாறிருக்கின்றன. இவ்விரண்டு பக்ஷங்களிலும் வைத்து மேற்கூறியபடி பூர்ணாநதியே பொருநை என்ற விஷயத்தை ஒப்புக்கொண்டு சங்கச் செய்யுள்களை நோக்குவோமாயின் அவைகள் யாவும் அதற்கே இசைகின்றன. அவ்விதமில்லாவிடினும் ஒவ்வொருவரும் தனது புத்திசாமர்த்தியத்திற்கொப்பத் தன் அபிப்பிராயத்திற் கியன்றவாறு அர்த்தத்தைப் பலாத்காரம்பண்ணி வருத்திக்கொள்ளுகிறார்கள். இதுகொண்டே பன்னூல்களும் சேரனைப் பொருநைத்துறைவன் என்றழைக்கின்றன. இதனால் ஆன்பொருநைக் கரையில் கருவூர்வஞ்சிஅஞ்சைக்களம் உள்ளமையும், காவிரியுடன் கலக்கும் ஆன்பொருந்தம் வேறென்றும் கூறப்பட்டது.

பழைய காலத்தில் உறையூர் என்னும் பெயர்வாய்ந்த திரிச்சிராப்பள்ளியானது காளிதாசனது காலத்தில் பாண்டியர்களுக்கும், மற்றும் சில காலங்களில் புராதன சோழ சக்கரவர்த்திகளுக்கும் தலைநகராயிருக்க, அத்திரிச்சிராப்பள்ளியை யடுத்திருக்கும் கருவூர் சேரவரசர்களுக்குத் தலைநகராயிருப்பது எவ்வாறு ஒக்கும். அடிக்கடி போர் புரியும் மன்னரின் தலைநகர்கள் இங்ஙனம் அடுத்திருப்பது அவர்களின் ரக்ஷைக்குக் குறைவன்றோ. தவிரவும் கொடுங்கோளூரென்னும் அவ்விடம் ராஜதானியாயிருந்ததைக் குறிக்கின்றது.



சங்கராசிரியர் சன்னியாசங்கொள்ள விருப்பங்கொண்டிருக்கும் பொழுது அவரது தாயாரதற்கு உடன்படாமல் இருந்ததாகவும் ஒரு நாள் அவர் இப்பூர்ணாநதியில் [பொருநை அல்லது பெரியாறு] ஸ்நானம் செய்ய இறங்கியபோது ஓர்முதலை அவரது காலைக் கௌவிக்கொண்டதாகவும் உடனவர் தன் மாதாவினிடம் "சன்னியாசம் கொள்ளுவதை நீ சம்மதிப்பாயாகில் இம்முதலை காலைவிட்டுவிடும்" என்று தன் தாயை வேண்டிக்கொண்டதாகவும் அவர் அதற்கு உடன்பட்டதாகவும் சங்கரவிஜயத்தால் அறியப்படுகிறது.

சிலர் சேரர்பேரூர் திரிச்சிராப்பள்ளிஜில்லாவைச்சார்ந்ததென்ற யுக்தியற்ற தீர்மானத்தை மனதில் இறுகக்கொண்டு சேரநாட்டினெல்லையை "சேரநாடென்பது கருவூர்ப்பிரதேசமுள்படக் கோயம்புத்தூர் சேலம் நீலகிரி ஜில்லாக்களும் மைசூர்நாட்டின் தென்பகுதியும் மேற்குத் தொடர்ச்சிமலை நெடுகவுள்ள கடற்கரைப் பக்கங்களுமாம்" எனக்கூறி முடித்துவிடுகிறார்கள். ஓர் கேரளதேசத்துப் பழஞ்சரிதநூலில் நாடுகளினெல்லையைக்குறித்து "சேரமான்பெருமாள் மலைநாட்டிலே ராஜாவாகுன்னு. சோழமண்டலத்திலே சோழப்பெருமாள். பாண்டிமண்டலத்திலே பாண்டிப்பெருமாள். இங்ஙனமே பேரும் அவர்கட்கு ஆகுன்னு. மலைநாடுகொண்ட நாலுகண்டம் கோகர்ணத்திங்கல் நின்னு துளுநாட்டில் பெரும்புழயோளம், துளுராஜ்ஜியம் துளுநாட்டில் பெரும் புழயிங்கல் புதுப்பட்டணத்தோளம், துளுராஜ்ஜியம் புதுப்பட்டணத்தில் நின்னு கன்னற்றியோளம், கேரள ராஜ்ஜியம் கன்னற்றியிங்கல் நின்னு கன்னியாகுமாரியோளம் கூபராஜ்ஜியம்" எனக் கூறப்பட்டுள்ளது.

இன்னும் கொடுங்களூரே சேரவரசர்களுக்குத் தலைநகராய் விளங்கியதென்பதற்குச் சில குறிப்புகளை இங்கு எடுத்துக்காட்டுவேன்.

## குறிப்பு

ஹிப்பாலோஸ் என்னுமோர் கிரீக் தேசத்தவன் கி. பி. முதல் நூற்றாண்டில் தென்மேற்காயடிக்கும் காற்றின் சகாயத்தால் அரபிக் கடலின்று நடுவழியாய்க் கப்பலோட்டிக்கொண்டு மிகவும் தைரியம் கொண்டு அக்காலத்தில் இந்தியாவில் மிகச்சிறப்புற்றுவிளங்கிய முஸிரீஸ் (முசிரி) அல்லது கொடுங்கோளூர் என்னும் துறைமுகத்தில் வந்

தனன். கி. பி. 77-ம் ஆண்டில் ப்லினி என்னுமோர் ரோமாக்காரன் இம்முசிரிப்பட்டணத்தில் கேலபோத்திரன் ( கேரளபுத்திரன் ) அரசாட்சி செய்துவந்ததாகக்குறித்திருக்கின்றனன். முதல் நூற்றாண்டிலே எழுதப்பட்டுள்ள பெரிப்லெஸ்ஸமாரிஸ் ஏரித்ரே என்னுமோர் கிரந்தத்தில் தமிழாது ராஜ்ஜியத்தைக்குறித்துக் கீழ்ச்சொல்லும்பிரகாரம் எழுதியுள்ளது.

முஸிரீஸ் என்பது ஓர் ராஜ்ஜியபரண ஸ்தானமாகும். கடலின் ஓரத்தில் ஸ்திதி செய்யும் திண்டிஸ் என்பது ஓர் பிரதானப்பட்ட கிராமம். இது 'கேலபோத்திரன்' துளுராஜ்ஜியத்தினை அடங்கியதாகும். முஸிரிஸ் என்பது நீர்வளம் நிலவளம் செழித்த ஓர் ராஜ்ஜியம். கிரீக் தேசத்தினின்றும் அநேகம் கப்பல்வியாபாரிகள் இவ்விடத்தில் வந்து நிறைந்திருக்கிறார்கள். இந்நகரம் ஓர் புழையின் வக்கில் ஸ்திதி செய்கின்றது. இப்புழையினது அழிமுகத்து நின்றும் இத்தலைநகர் 2 ஸ்டிடியா தூரமிருக்கின்றது. (ஒரு ஸ்டிடியா—606 கஜமும் 6 அங்குலமும் கொண்டது.) திண்டிஸ்பட்டணத்திற்கும் முசிரிப்பட்டணத்திற்கும் 600 ஸ்டிடியா தூரமுண்டு. திண்டிஸைத் தொண்டி என்பாருமுளர்......................முசிரி கேலபோத்திரனது ராஜ்ஜியத்திலென்றும், அரசனது தாமத இடமும் தலைத்தானமுமாயிருந்ததென்றும் தெரிகிறது. கேலபோத்திரன் என்பது கேரள புத்திரன் என்பதின் லாடின்காரின் உச்சரிப்பாகும்.

சேரமான்பெருமாள்களுடைய வாசமும் தலைநகரும் கொடுங்கோளூரிலும் அதனையடுத்திருக்கும் திருவஞ்சிக்களத்திலுமாயிருந்தது. இவ்விடத்திலுள்ள அழிமுகத்திற்கு, திருவஞ்சாழிமுகம் என்று பெயரிருந்தது. குலசேகரப்பெருமாள் ஜனித்தஇடம் இதுவே. இவ்விடத்தில் ஓர் சேரவரசனுடையவும் சுந்தரமூர்த்தி நாயனாருடையவும் ஓட்டுருவமொன்று க்ஷேத்திரத்தில் வைத்து,பூஜிக்கப்பட்டுவருகின்றது. இக்கோவிலினின்று கால்நாழிகை தென்மேற்காய்ச்சென்றால் 'சேரமான் கோவிலகம்' என்றோர் இடமிருக்கின்றது. இவ்விடத்தில் வலிய கட்டிடங்களுடையவும் தேவாலயங்களுடையவும் அஸ்திவாரங்களைப் பார்த்திருப்பதாகச் சொல்லியிருப்பதைக் கேட்டிருக்கிறோம். அதிற்

‡ கொச்சிராஜ்ய சரித்திரத்தில் 6-வது அத்யாயம் நோக்குக.



சில இன்னும் காணப்படுகின்றன. சேரமான்பெருமாளுடைய பசுக்களும் புல்லூர் குதிரைகளும் கட்டிவைத்திருந்த இடமும் காணப்படுகின்றது.

இச்சேரநாட்டில் ஐந்து பிரதான நாடுகள் உண்டு. அதில் நாலும் அரபிக்கடலினது ஓரத்தில் இருந்தன. இதில் வடக்கு அற்றத்தில் உள்ளது பூழி நாடாகும். இது அகலப்புழைமுதல் தெற்கு பாரதப்புழை சமுத்திரத்தோடு சங்கமமாகும் இடம் வரையிலுமுளது. இதனடுத்தது குடநாடு. இது பாரதப்புழை சமுத்திரத்தோடு சங்கமமாகும் இடம் முதல் பேர்யாற்றினது தெற்குக்கைவழி சமுத்திரத்தோடு கலக்கும் இடம் வரையிலுமுளது. மூன்றாவது குட்டநாடாகும். இது கோட்டயம் அம்பலப்புழைமுதலாய்க் கொல்லம்வரையிலும் நீண்டுகிடக்கின்றது. நாலாவதாகியவேணாடு தென் திருவிதாங்கூரென்று யாவரும் அறிந்ததே.

மேற் கூறிய சேரராஜ்ஜியத்தினது தலையிடம் பச்சிம கட்டத்தின் அடிவாரத்தில் பேர்யாற்றின் கரையில் ஸ்திதி செய்யும் வஞ்சி அல்லது திருக்கரூர் ஆயிருந்தது. இவ்விடத்தில் ஜீர்ணப்பட்ட ஓர் தேவாலயமும் பழைய கட்டிடங்களுடைய அடிவாரமும் இன்னும் காணப்படுகின்றன..............................................................

---

• இத் திருவஞ்சிக்களத்திற்கு மகோதை—கொடுங்கோளூர்- வஞ்சி- முசிரி—என்றெல்லாம் அநேகம் பெயர்கள் இருப்பினும் ஒருபெயரே பொதுப்பெயராகவும் மற்றப்பெயரெல்லாம் அவயவப்பெயராகவும் இருந்ததெனத்தோன்றுகிறது. பிறகு அவயவப்பெயரும் பொதுப்பெயராய் வழங்கத்தொடங்கிற்று. இக்கொடுங்கோளூருக்கு மகோதையென்னும் பெயர் மகோதயம் என்னும் ஓர் விசேஷம் அவ்விடத்தில் நடைபெற்றுவந்தகாரணம்பற்றியாகும். ஸ்ரீமான், இராகவையங்காரவர்கள் செந்தமிழில் இத்தேசத்தையாண்ட குலசேகரநம்பியது சாஸனத்தை "பர்மாதேசத்திற்கண்ட சாஸனம்" என்ற தலைவாசகத்தில் வெளியிட்டிருக்கின்றார். அதில் மகோதை தனது இடமாகச் சொல்லியிருக்கின்றது. இதனால் அச்சமயத்தில் கொடுங்கோளூரே. சேரரது தலைநகராய் இருந்ததென்பது தெளியும்பொழுது அவர்கள் மலைநாட்டிற்கு வெளிநாடாகிய கருவூரைத் தலைநகரெனஸ்தாபிக்க என்னஉத்தேசம்கொண்டார்களோ தெரியவில்லை.

வி. வெங்கடராம சர்மா,
ஸம்ஸ்கிருத காலேஜ்,
திருவனந்தபுரம்.

# மனுமுனிவர்காலத்துச்சலப்பிரளயம்.

"செந்தமிழ்" (தொகுதி கரு - பகுதி ருல்)

உசு௦ம்—பக்கத் தொடர்ச்சி.

---

பூசரயார் எழுதிவைத்த வரலாற்றின் உண்மை சில்லாண்டு களுக்குமுன் பாபிலோனியாவில் கண்டெடுக்கப்பட்ட சலப்பிரளயப் பலகைகளென்று அழைக்கப்படுங் களிமண் பலகைச் சாசனங்களால் உறுதிப்படுகின்றது. இப் பிரளயத்தைப்பற்றிய * பாபிலோனிய கதை பின்வருமாறு:

† "கில்காமெஸ்" எனும் பாபிலோனிய வீரனுக்குப் பிரளயத்தில் தப்பிச் சாகாவரம் பெற்ற ‡ "உம்நப்பிஸ்திம்" என்போன் இக் கதையைச்சொன்னதாகச் சாசனங் கூறுகின்றது. ஐபிராத்துநதியோரத்திலிருந்த × "சுரிப்பக்" என்ற நகரத்துள்ளிருந்த தெய்வங்கள் ஓர் பிரளயத்தை உண்டாக்கத் தீர்மானித்தனராக அத்தீர்மானத்தைக் கடற்றெய்வமாகிய § "ஏயா" பூமிக்குப் பின்வருமாறு விளம்பினது:

* Vide "The historical Dehege" by Sir, J. William Dawson C. M. G., L. L. D., F. R. S Etc. appendix pp. 51—56.

† Gilgames—இவனுக்கு Gisdubar என்ற பெயருண்டு. ஆதியாகமத்திலே சொல்லப்பட்ட நிம்ரேத் (Nimrod) என்ற போர்வீரனே இவ்விரண்டு பெயர்களினாலும் அழைக்கப்பட்டவனென்பது சிலருடைய கருத்தாகும். இவன்கல்தேய இராஜவம்சத்துக்குக் குலமுதல்வனானவன்.

‡ Um-napistim—இவனுக்கு அத்திரகாசிஸ் (Atrakasis) என்ற வேறோர் பெயருமுண்டு. ஆசிரியருக்குள் வழங்கிவந்த "அசிசத்திர" (Hasisadra) என்னும் பெயரும் "அத்திரகாசிஸ்" என்ற கல்தேயநாமத்தின் திரிபேயாம். அத்திரகாசிஸ்—காசிஸ்அத்திர—அசிசத்திர.

× Suripak—Sippara இவை ஒரே நகரத்தின்பெயர்கள்போலும். இந் நகரத்திலே சூரிய பகவானுக்குப் பெரியகோவிலொன்று கட்டப்பட்டிருந்தது.

§ ஏயா, ஏய், ஒஅனேஸ்—இவைகள் கல்தேயருடைய கடற்றெய்வத்தின் நாமங்களாம். இத்தெய்வத்துக்கு ஏயாகன் (Ea-khan) என்னும் பெயருண்டு.



"நிலமே! நிலமே! வயலே! வயலே! ஓ நிலமே கேள்! வயலே உணர்ந்துகொள்! "உம்பரதுது" வின் மகனாகிய சுரிப்பாக்கியனே! உனது வீட்டையழித்து ஒரு கப்பலைக்கட்டி ஜீவவித்தெல்லாவற்றையும் அதற்குட் பிரவேசிக்கச் செய். நான் அனுப்பப்போகிற பிரளயம் வரும்பொழுது அதின் கதவையடைத்துக் கொள்வாயாக. அதின் நடுவிலே உன்னுடைய தானியம், தட்டுமுட்டுகள், பணம் வேலைக்காரர்கள்,பெண்ணடிமைகள், வாலிபர் இவைகளெல்லாம் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். வெளியின்மிருகங்களையும், எல்லாச் சீவபிராணிகளையும் நான் கூட்டிச்சேர்த்து உன்னிடத்துக் கனுப்புவேன். அவைகளையும் கப்பலுள்ளேவிட்டுக் கதவை அடைக்கக் கடவையென்று "ஏயா" சொல்லிற்று. கப்பலினுடைய உட்பக்கத்தை நான் எட்டாம்முறைசோதித்துத் தண்ணீர்உட்செல்லாதபடி பலகைகளைப் பொருத்தி நான் கண்ட வெடிப்புகளை அடைத்து இல்லாத பாகங்களையும் நான் ஏற்றினேன். உள்ளும் புறம்பும் ஆறுபடி கீலையூற்றினேன். எனக்குளதாயிருந்த வெள்ளி பொன் வித்துகள் முதலான என் பொருள்கள் யாவையும் என்னுடைய வேலைக்காரர் வேலைக்காரிகளையும் வயலின் பிராணிகளையும் எனக்குரியவர்களுடைய ஆண்மக்களையும் கப்பலுக்குள் நான் ஏற்றினேன். பின்னர் இரவிலே "சமாஸ்" (சூரியபகவான்) * என்னுடன் பேசி நான் மிகவும் கடுமையாய் மழைபெய்யும்படி செய்வேன் நீ கப்பலுட் பிரவேசித்து அதின் கதவைச் சாத்திக்கொள் என்றார். நாலுநாட்களாய் நான் அப்பகவானுடைய பிரதிமையை அவர் குறித்தநேரந்தவறிப்போகாதபடி உற்று நோக்கிக்கொண்டிருந்தேன். நான் பயத்தினால் கப்பலின் நடுப்பகுதிக்குட்போய்க் கதவைச் சாத்திக்கொண்டு அதையும் அதற்குள்ளிருந்த பொருள்களையும் "பூசுர் கூர்தல்" + என்ற தண்டயனிடம் ஒப்புவித்தேன். சூரியபகவான்சொன்னபடியே பிரளயம் நேரிட்டது. விடியற்புறம் அடிவானத்திலிருந்து ஓர் கார்மேகம் எழும்பினது. அதின் நடுவிலிருந்து "ஆதாத்" † (இந்திரன்) முழங்கினான்.

* Samas—ஆதித்தியன். இத்தெய்வத்துக்கு ஏ (a) என்று பெயருமுண்டு.

+ Buzur—Kurgal.

† Hadad—இடிமுழக்கம் மின்னல் முதலியவற்றின் தெய்வம் எமோரியர் சீரியர், பாபிலோனியர்முதலியசாதிகள் இத்தெய்வத்தைவணங்கிவந்தனர்.

அதற்கு முன்னாக * "நேபோ", "சாறு" ¶ வென்ற தெய்வங்கள் போனார்கள். இவர்களுடைய சிங்காசனங்களைச்சுமக்கிறவர்கள் அவைகளை மலைகளுக்கும் வெளிகளுக்கும் மேலாகக் கொண்டுபோனார்கள். புயல் மோதினது. பூமிக்குள் இருந்ததெய்வங்கள் தங்கள் தீவர்த்திகளையுயர்த்தி அவர்களுடையபிரகாசத்தினால் வெளிச்சஞ்செய்தார்கள். அப்பொழுது "ஆதாத்"துடைய சீற்றங்கொண்ட சலங்கள் வானம்வரைக்கும் எழும்பின. விளக்கமான ஒவ்வொரு பொருளும் இருண்டுபோயிற்று. அப்பிரளயம் நிலமுகத்துக்கு மேலாக வாரிச்சென்று, பூமுகத்திலுலாவினசீவராசிகள்யாவையுமழித்தது. சகோதரன் சகோதரனைக்காணவில்லை. அப்பிரளயம் சனங்களில் ஒருவனையுந்தப்பவிடவில்லை. அவர்கள் ஒருவரையொருவர் காணவுமில்லை. வானலோகத்தாரும் ஒருவரையொருவர் மட்டுக்கட்டக்கூடாமற்போயிற்று. தேவுக்களும் அப்புயலுக்குப்பயந்து "அனு"வுடைய † லோகத்துக்கேறினார்கள். ஆறுநாள் இரவும் பகலும் காற்றும் வெள்ளப்பெருக்கும் சண்டமாருதமும் அழிவைச் செய்தன. ஏழாம் நாளில் அமைதலுண்டாகிக் கடலமர்ந்து புயலும் சலப்பிரவாகமும் ஓய்ந்தன. நான் ஆர்ப்பரிப்போடு பேரலைகளைப் பார்த்தேன். மனுக்குலமுழுவதும் களிமண்ணாயின. அலைகள் பொங்கி உத்திரங்களைப்போல ஓடிவந்தன. நான் பலகணியைத் திறந்தேன். என்முகத்தில்விழுந்த வெளிச்சத்தினால் என் கண்கள் கூசவே நான் பின்னிட்டு இருந்து அழுதேன். கண்ணீரினால் என் முகம் நனைந்தது. நான் கடலின்கரையைக்கண்டேன். தேசம் பன்னிரண்டு அளவைக்கு மேலெழும்பினது. கப்பல் $ "நிசிர்" தேசத்துக்கு வந்துவிட்டது. "நிசிர்"மலை அதைத் தடுத்ததினால் அது அசையாமல் நின்றது. ஆறு நாள் கப்பல் "நிசிர்"மலையிலே கிடந்தது.

*. Nebo—(Nabu) இப்பெயர் "தீர்க்கதரிசி" யென்று பொருள்படும். அரபியருக்குள் வழங்கும் "நபி" என்ற பதம் "நேபோ" என்பதின் திரிபாம். இந்த "நேபோ" பிற்காலத்தில் "மெரொதாக்" (Merodach) என்ற ஆசீரிய தேவனது மந்திரியாக எண்ணப்பட்டது.

¶ Sarru—என்றது "மெரொதாக்" தேவனை

† அனுலோகம்—"அனு"தேவனுடைய லோகம், ஆகாயமண்டலத்துக்கு மேலேயுள்ளது.

$ Nizir—ஆசீரியர் ஆர்மீனியாதேசத்தை "நிசி"ரென்று அழைத்தனராம்.



ஏழாம் நாளிலே நான் ஓர் புறாவைப் பறக்கவிட்டேன். அது அங்குமிங்கும் பறந்துதிரிந்து தரிக்க இடமின்மையின் என்னிடத்திற்கே திரும்பி வந்தது. பின்பு அடைக்கலான்குருவியொன்றை வெளியே விட்டேன். அதுவும் அவ்வாறே திரும்பி வந்தது. பிற்பாடு ஓர் காகத்தை விட்டேன். அது பறந்துபோய்த்திரும்பிவரவில்லை. பின்னர் அவைகளை நாலுதிக்குகளுக்கும்பறக்கவிட்டேன். நான் ஒரு பலியைச்செலுத்தி மலைமுடியின்மேல் நைவேத்தியத்தை ஊற்றினேன். நைவேத்தியக்கும்பங்களை ஏழேழாகவைத்து அவைகளுக்குக்கீழே கரும்பு தேவதாரு முதலியன தூவினேன். தேவர்கள் சுகந்தவாசனையை மோந்து ஈக்களைப்போலப் பலியைச்சுற்றி மொய்த்தார்கள். பின்பு * "பேல்" (Bel) வந்து கப்பலையும் தேவர்களையுங்கண்டு சினங்கொண்டு "தப்பினவர்கள் யார் ஒரு மனுஷனும் நாசத்துக்குத் தப்பப்படாது" என்று கோபத்தோடு பேச "நிநிப்" தன் வாயைத்திறந்து "ஓஅனேஸ்" (ஏயா) தான் இப்படிச் செய்தது "அவருக்கே எல்லாந்தெரியு"மென்று சொல்ல, அவர் பேலைநோக்கிப் "போர்வீரனே" தேவர்களுக்குள் ஞானமுள்ளவரே! நீர் ஆலோசனையின்றி ஓர் சலப்பிரவாகத்தை யுண்டாக்கினீர். பாவிதன் பாவத்தைச்செய்தான். தீச்செய்கைக்காரன் தன் தீச்செய்கையைச் செய்தான். இவனை அழியாதேயும். நீர் ஏன் ஓர் சலப்பிரளயத்தை வரச்செய்தீர். சனங்களை அழிக்கும்படி ஒரு சிங்கம் அல்லது சிவிங்கி வந்திருக்கலாமே. அல்லது பஞ்சத்தினால் தேசத்தைப் பாழாக்கலாமே. அல்லது கொள்ளைநோயினால் சனங்களை அழிக்கலாமே. நானோர் கனவிலே "அத்திரகாசி"சுக்கு (உம்நப்பிஸ்திம்) தேவர்களுடைய யோசனையை அறிவித்தேன்" என்றார். அப்போது "பேல்" கப்பலின் நடுவுக்கேறி என்னுடைய கையைப்பிடித்து என்னை மேலேகொண்டுவந்து என்மனைவியையும் என்பக்கத்துக்குக்கொணர்ந்து எங்களை ஒருவர்க்கொருவர் எதிராக நிற்கச்செய்து எங்களுக்குநடுவே தானும்நின்று இதுகாறும் "உம்நப்பிஸ்திம்" ஓர் நரனாயிருந்தான். இது துவக்கம் அவனும் அவன்மனைவியும் எங்களைப்போலத் தேவர்களாக எண்ணப்படக்கடவர். அவன் தூரத்திலே ஆற்றுமுகத்திலே சீவிக்கக்கடவன் என்றனர். அவர்கள் என்னைக்கூட்டிக் கொண்டுவந்து ஆற்றுமுகத்தை வாசக்கிருப்பிடமாக்கினார்கள்.

* பேல்—இது கல்தேயருடையபிரதானதெய்வங்களுளொன்று. இத்தெய்வமே வானத்துக்கதிகாரியென்று அவர்கள் நினைத்தார்கள். ஏயா, பேல், அனு என்ற தெய்வங்கள் கல்தேயருடைய திரிமூர்த்திகளாம்.

ஓர் சலப்பிரளயத்தைப்பற்றிப் பூர்வகாலத்துப்பாபிலோனியருக்குள் பரம்பரையாய்வந்த மேற்கூறியவரலாற்றுக்கும் இந்தியபுராணேதிகாசங்களில் அதைப்பற்றிக்கண்ட வரலாற்றுக்கும் உள்ள ஒற்றுமைகள் பலவாகும். சலப்பிரவாகமொன்றினால் மனுக்குலம் ஓர் முறை அழிவுக்குட்பட்டதென்பதும், அவ்வழிவுக்கு அவர்களுடைய தீச்செய்கைகளே காரணமாயிருந்தனவென்பதும்;* அதற்குத் தப்பினோர்க்குத் தலைவர் ஓர் புண்ணியவானென்பதும், தப்பினோர் கப்பலொன்றிலேறித் தப்பினார்களென்பதும், சலப்பிரவாகமொன்று உண்டாகுமென்றும், அது நிகழுங்காலமின்னதென்றும், அழிவுக்குட்படாதபடி தப்பிக்கொள்வதற்கு ஓர் கப்பல்செய்துகொள்ள வேண்டுமென்று ஓர் ¶ "நாராயணத் தெய்வம்" எச்சரித்தனரென்பதும், அங்ஙனமே அப்புருஷோத்தமன் கப்பலொன்றைச்செய்து தனக்குரியோர் தமக்குரியன வெல்லாவற்றோடும் அதற்குள்ளே ஏறிக்கொண்டனரென்பதும், பின்பு பிரளயம்வந்து மனுக்குலத்தார் யாவரையும் அழித்ததென்பதும், ஈற்றில் நாவாய் ஓர் மலையின்மேல் படிந்ததென்பதும், பிற்பாடு அவர் அம்மலையிலேயிறங்கிப் பலி செலுத்தினாரென்பதும் நாம் இலேசில் கண்டுகொள்ளக்கூடிய வொற்றுமைகளாம். மேலும் மேற்சொன்ன ஏயா அல்லது ஓ அனேஸ் என்னும் தெய்வத்தைப்பற்றிச் சில நூதனமானகதைகள் பூர்வ கல்தேயருக்குள் பரம்பியிருந்தன. அத்தெய்வம் பாரசீகக்குடாக்கடலிலிருந்த மனுஷவிவேகமுள்ள ஓர் பிராணியென்றும், அதுவே கல்தேயருக்குச் சகலஎழுத்துக்களையும் கலைகளையும் படிப்பித்ததென்றும், அதனுடைய தலையுமுடலும் மீனுடைய தலையும் உடலும் போன்றும், மீன் தலைக்குக்கீழே ஒரு மானுடத்தலையையும் அதன்வாலுக்குக் கீழே பெண்களுடையகால்களைப்போன்ற கால்களையுமுடையதாயிருந்ததென்றும் அறியப்படுகின்றது. அப்பிராணி பகல்முழுவதும் படிப்பித்தற்றொழில்செய்து இரவிலே கடற்குள்மூழ்கினதாம். "ஆசீரியர்" சாதியார் இதைப் பிற்காலத்திலே ஓர் மீன் தெய்வ (நாராயணக்கடவுள்) மாக்கினார்கள். "லேயார்ட்" (Layard) என்பவர்

¶ நாராயணன்—மீன். ஆகவே நாராயணன், மீனவன், என்னும் பதங்கள் ஒரு பொருளுடையனவாம்.

* Vide—"The Aryan Witness"—Chapter on "The Dehege of Noah" by Rev: Dr. K. M. Bannerjea



இம்மீனக்கடவுளினது உருவம் இடுப்புவரைக்கும் மனுஷ உடலைப் போன்றும், இடுப்புக்குக்கீழே மீனுடையவாலைப்போன்றுமிருந்ததென்று எழுதுகின்றார். இதுவே மச்சாவதார உருவமாக வடஇந்தியாவிலே இன்றுவரைக்கும் ஆண்டாண்டுதோறும் காட்டப்பட்டு வருகின்றமை அறிஞர்களால் உய்த்துணரற்பாலது. ஆசீரியருடைய வரலாறுகளின்படியும் பிரளயத்தைப்பற்றி "அசிசத்தர" என்றோனை எச்சரித்தது "ஓஅனேஸ்" என்ற அவர்களுடைய கடற்றெய்வமே. இந்திய புராணேதிகாசங்களிலும் ஓர் "நாராயணமே" மனு முனிவருக்கு, சலப்பிரவாகத்தைப்பற்றி அறிவித்ததென்றுசொல்லப்பட்டிருக்கின்றமை விசேஷகவனிப்புக்குரியது.

இனி, பூர்வ எபிரேயநூலாகிய ஆதியாகமத்திலே + வரையப்பட்டுள்ள பிரளயச்சரிதையைச் சற்றே ஆராய்வாம். "எபிரேயர்" கி. மு. 2000 வருஷங்களுக்கு முன் "கல்தேய" தேசத்திலே குடியிருந்தவோர் சாதியாராவர். "ஆதியாகம" மென்னுநூல் கி. மு. 17-ம் நூற்றாண்டில் "மோசே" யென்னும் எபிரேய மகாவித்துவானால் பழைய செங்கற்சாசனங்களிலிருந்து சேர்க்கப்பட்ட அதிபூர்வ இதிகாச உண்மைகளடங்கிய ஓர் பிரபந்தமென்று ஊகிக்கப்படுகின்றது. பண்டைக்காலத்திலே மனிதர் பல்கிப்பெருகி உண்டும் குடித்தும் பெண்கொண்டும் பெண்கொடுத்தும் கடவுளரை மதியாதவராய்த் துன்னெறியில் ஒழுகினராகச் சுயம்புவாகிய சிருஷ்டிகர்த்தாவானவர் பூமியில் மனிதரின்றீங்கு மிகுந்திருந்ததென்றும், அவர்கள் உள்ளத்தில் தோன்றுஞ் சிந்தனைகளெல்லாம் எப்பொழுதுங் கேடாயிருந்தனவென்றும் கண்டு, தமது திருவுள்ளத்தில் விசனமடைந்து தாம் உண்டாக்கினமனிதரோடு ஜீவவர்க்கங்களையும் பூமியின்முகத்தினின்றும் துடைப்பதற்குச்சித்தங்கொண்டார். அக்காலத்தார்க்குள்ளே 'நோவா' வென்ற ஒருவர் நீதிமானாயிருந்தமையின் சுயம்புகர்த்தாவின்கடாட்சத்தைப் பெற்றுக்கொண்டனர். இந்த நோவாவுக்கு "சேம்", "காம்", "யாபேத்" என்னும் மூன்று புத்திரரிருந்தார்கள். மேற்கூறியபடி நோவா நீதிமானும் சற்குணனும் தேவனோடு ஒத்துநடந்துகொண்டவனுமாயிருந்தான். பூலோகமோ கடவுளருக்குமுன்பாகக் கேட்டின

+ ஆதியாகமம் அதி 6, 7, 8 பக்கங்கள் பார்க்க.

லும் கொடுமையினாலும் நிறைந்திருந்தது. மனிதரெல்லோரும் தங்கள் நெறியைக்கெடுத்துக்கொண்டார்கள். இதினிமித்தம் கடவுளர் தாம் மனுக்குலத்தை யழிப்பதற்கெண்ணியிருப்பதைப் புண்ணியவானாகிய நோவாவுக்கு அறிவித்ததுமன்றி அவனும் அவன்குடும்பத்தாரும் பிழைத்துக்கொள்வதற்கு ஒரு பேழையைச்செய்யும்படி கற்பித்தார். "நீ + கொப்பேர்மரத்தினால் ஒரு பேழையைச்செய்து அதில் அறைகளை வகுத்து உள்ளும் புறம்பும் கிசில் பூசுவாய். அப்பேழையின் நீளம் அகலமுயரம் முறையே முழம் முந்நூறு, ஐம்பது, முப்பதாகச்செய்வாய். பேழையின் மேற்புறத்திலே ஒரு முழத்துக்குக் கீழாக ஒரு பலகணியையும், பேழையின்பக்கத்திலே ஒரு கதவையுஞ்செய்து பேழைக்குள் மூன்று நிலைகளை வகுப்பாய். நானே சீவராசிகள் யாவையுஞ் சங்கரிக்கும்படி பூமியின்மேல்-சலப்பிரளயம் வரப்பண்ணுவேன். நீயும் உன் மனைவியும் உன் புத்திரரும் அவர்களுடைய மனைவிகளும் பேழையில் பிரவேசியுங்கள். சீவரட்சையின் பொருட்டு, சகலவிதசீவசெந்துக்களிலும் சோடுசோடாக உன்னுடனே பேழைக்குட்படுத்திக்கொள். அவைகளெல்லாம் உன்னிடத்தில் வரும். உனக்கும் அவைகளுக்கும் வேண்டிய போசனபதார்த்தங்களையும் சேர்த்து உன்னிடத்தில் வைத்துக்கொள் என்று கடவுளர் சொன்னார். நோவா தனக்குக் கடவுளர் விதித்தபடி சகலத்தையும் நிறைவேற்றினான். நூற்றிருபதுஅப்தங்கள்கழிந்தபின் சுயம்புப்பெருமான் நோவாவைநோக்கி இக்காலத்துமானிடர்க்குள் என் முன்னே யுன்னை நீதிமானென்று கண்டேன். ஆகையால் நீயும் உன் குடும்பத்தாரும் பேழையில் பிரவேசியுங்கள். ஏழுநாட்சென்றபின் சலத்தினாலே சீவராசிகளனைத்தையும் பூமியின்முகத்தினின்றும் துடைப்பேனென்றார்." இப்போது நோவாவுக்கு வயது அறுநூறாயிருந்தது. நோவாவுக்குக் கடவுளர்விதித்தபடி மிருகங்களிலும், பறவைகளிலும், ஊர்வனவெல்லாவற்றிலும் ஆணும் பெண்ணும் சோடுசோடாக நோவாவிடத்திற் பேழையிற் புகுந்தன. ஏழுநாட்சென்றபின்பு பூமியிலே சலப்பிரளயம் ஆரம்பித்தது. நோவாவுக்கு அறுநூறும் வயதாகும் வருஷத்தின் இரண்டாம் மாதம் பதினேழாந்தினத்தில் கடலின்ஊற்றுக்கண் எல்லாம் பிளக்கப்பட்டன.மேகத்துவாரங்கள்

+ Gopher—Cypress



திறக்கப்பட்டன. நாற்பதுநாள் இராவும்பகலும் பூமியின்மேற் பெருமழையுண்டாயிற்று. அன்றைத்தினமே நோவா, தன் குடும்பத்தாரோடும் பேழையிற் பிரவேசித்தான். பின்பு சுயம்புப்பெருமான் பேழையின்கதவையடைத்தார். பூமியின்மேல் நாற்பதுநாள் சலப்பிரளயம்பிரவாகித்தது. சலம்பெருகிப் பேழையைமிதக்கச்செய்ய அது பூமியைவிட்டு மேலேமிதந்தது. சலம் பெருவெள்ளமாகிப் பூமியின்மேல் மிகவும் பெருகிற்று. பேழை சலமுகத்தின்மேல்மிதந்து சென்றுகொண்டிருந்தது. வானத்தின்கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன. மூடப்பட்ட மலைகளுக்கு மேலாய்ப் பதினைந்து முழ உயரத்திற்குச் சலம் பெருகிற்று. அதினாலே மாமிச செந்துக்கள் யாவும் அழிந்து பூமியில் நின்று துடைக்கப்பட்டன. சலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாளளவும் மிகவும் பிரவாகித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது தேவன் பூமியின்மேல் காற்றுவீசப்பண்ண, சலம் வடிந்தது. கடலின் ஊற்றுக்கண்களும் மேகத்துவாரங்களும் அடைபட்டன. வானத்துமழையும் நின்றது. இடைவிடாமல் சலம் பூமியைவிட்டு மீண்டேகி நூற்றைம்பதுநாளளவிற் குறைந்தது. ஏழாம் மாதம் பதினேழாம்தேதியிற் பேழை அராராத் என்னும் மலைகளின்மேலே தங்கிற்று. பத்தாம்மாதம் வரைக்கும் சலம் குறைந்து குறைந்து வந்தது. அந்தப் பத்தாம்மாதம் முதல்தினத்திலே மலைச்சிகரங்கள் தோன்றின. நாற்பதுநாட்சென்ற பின்பு பேழையின் பலகணியைத் திறந்து ஒரு காகத்தை வெளியேவிட்டான். அது புறப்பட்டு சலம் வற்றுமளவும் அங்குமிங்குமாகத் திரிந்தது. சலம் வற்றிப் போயிற்றோவென்று அறியும் பொருட்டு ஒரு புறாவையும் வெளியேவிட்டான். அது இளைப்பாறுமிடத்தைக்காணாமல் திரும்பி அவனிடத்தில் சேர்ந்தது. பின்னும் ஏழுநாட்பொறுத்து மறுபடியும் அப்புறாவை வெளியே விட்டான். சாயங்காலத்தில் அப்புறா அவனிடத்தில்வந்துசேர்ந்தது. அதின் வாயிலே சீதவிருட்சத்திற் கொய்யப்பட்டவொரு இலையிருந்ததினால் பூமியின்மேல் சலம் குறைந்துபோயிற்றென்று நோவா அறிந்தான். அவன் பின்னும் ஏழுநாட்பொறுத்து அப்புறாவை வெளியேவிட்டான். அது அவனிடத்திற்குத் திரும்பி வரவில்லை. பூமியின்மேலிருந்த சலம் வற்றிப்போயிற்று. அப்போது நோவாவுக்கு அறுநூற்றொருவயதாகும். வருஷத்தின்

முதல் மாதம் முதற்றினமாயிருந்தது. நோவா பேழையின் மேற்றட்டை யெடுத்துப் பார்த்துப் பூமி உலர்ந்திருக்கிறதைக் கண்டான். இரண்டாம் மாதம் இருபத்தேழாம் தினத்தில் பூமி உலர்ந்துபோயிற்று. அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி, நீயும் உன் குடும்பத்தாரும் பேழையைவிட்டுப்புறப்பட்டுப் பேழைக்குள் இருக்கிற சகலவித ஜீவவர்க்கங்களையும் வெளியே புறப்படுத்துங்கள் என்றார். அவர்கள் அப்படியே செய்தார்கள். பின்பு நோவா சுயம்புவாகியகடவுளுக்கு ஒரு வேதிகையையுண்டாக்கி அதின்மேற் பலி செலுத்தினான். சுயம்பு வானவர் சுகந்தத்தை மோந்து நோவாவையும் அவன் புத்திரரையும் ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப்பெருகிப் பூமியைநிரப்புங்களென்றார்.

பாபிலோனியர் செங்கல்லிற்றீட்டிவைத்த பிரளயவரலாற்றிற்கும் மேற்காட்டிய எபிரேயவரலாற்றிற்கும் உள்ள ஒற்றுமைகள் சொல்லாமலே விளங்கும். இருவரலாற்றிலும் மானிடரது பொல்லா நெறியே கடவுளரது கொடியகோபத்துக்குக் காரணமாயிருந்ததென்று குறிக்கப்பட்டுள்ளது. கடவுளர் இரட்சிக்கச்சித்தங்கொண்டது ஓர் புண்ணியவானையும் அவன் குடும்பத்தாரையும் மாத்திரமே என்றதிலும், அவர்கள் தப்பிக்கொண்டது ஓர் கப்பலுக்குள் அல்லது பேழைக்குள் பிரவேசஞ் செய்தே யென்றதிலும் அப்பேழை, அல்லது கப்பல் கடவுளர்கொடுத்தவிவரணத்தின்படி கட்டப்பட்டதென்றதிலும், கீல் அல்லது சிலாசத்தே அதற்கு மேற்பூச்சாயிருந்ததென்றதிலும், மனிதரோடு மிருகங்களும் காப்பாற்றப்பட்டனவென்றதிலும் அப்பிரளயம் பீதிகரமான சண்டமாருதத்தோடுகூடிய மழையினாலுண்டானதென்றதிலும், அக்கப்பல் அல்லது பேழை ஓர் மலையின்மேல் தங்கினதென்றதிலும், அப்பேழை அல்லது கப்பலிலிருந்து இறங்குமுன்னர் சலம் வற்றிப்போயிற்றோவென்றறிவதற்குப் பட்சிகளை வெளியே விட்டனரென்றதிலும், கப்பல் அல்லது பேழையிலிருந்திறங்கினவுடன் பலி செலுத்தினர் என்றதிலும் விசேஷஒற்றுமைகள் காணப்படுகின்றனவன்றோ?

எபிரேய வரலாற்றின்படி நோவாவின் பேழை * மிகநீண்டதும் நாலு மூலைப்பட்டதுமானவோர் பெட்டகம்போன்றதாயிருந்தது.

* நோவாவினதுபேழை ஒரு தெப்பத்தின்மேற்கட்டப்பட்ட ஓர் மச்சுவீட்டைப்போலிருந்ததெனக் கல்விமான்கள்பலர் உரைக்கின்றனர். Vide G. C. Clayton's Tamil Bible Dictionary Part IV p. 670 ஒருமுழம் ஒன்றரை அடிக்குச்சரியென்றால் நோவாவினதுபேழை 43413 தொன் பாரமுள்ளதாகும். இப்பாரம் நான்குயாண்டுகளுக்கு முன் ஆழ்வாய்ப்பட்ட "Titanic" என்ற கப்பலின் பாரத்துக்கு ஏறக்குறையச் சரியாம்.



அவ்வரலாற்றிலே கடலைப்பற்றியாவது கடலோட்டைப்பற்றியாவது மாலுமியைப்பற்றியாவது ஒரு குறிப்புமில்லை. அப்பேழை தண்ணீர்மேற் செலுத்தப்படவுமில்லை. இவ்வகைப்பிரளயத்தில் தப்பிப்பிழைப்பதற்குப் பெட்டகம்போன்றவோர் கலமே ஏற்ற உபாயமென்பது தெளிவாம். சாதாரணகப்பலைப்போன்ற ஓர் மரக்கலத்திலேறித் தப்பிக்கொள்ளல் சற்றேனும் சாத்தியமன்று. மேலும் எபிரேயர், கானான் எகிப்து முதலிய தேசங்களில் குடியிருந்தகாலத்தில் * பினீசியருடையகப்பல்களைக்கண்டிருந்தனராகவும் பிரளயத்திலே தன் உயிர்தப்புதற்கு நோவாசெய்துகொண்டகலம் ஒரு பெட்டகத்தையேபோன்றதென்று தந்நூலில்வற்புறுத்தியமை, அவ்வுண்மை அவர்களுக்குள் தொன்றுதொட்டுக்கர்னபரம்பரையாய் வந்திருந்தவோர் பழஞ்சரிதைக்குரியதொன்றென்று அநுமித்தல் தகவுடைத்து. இன்னும் எபிரேயவரலாறு உண்ணாட்டுவாசிகளான ஓர் சாதியாருக்குள் எழுந்த ஓர் சரிதையென்றும், பாபிலோனிய வரலாறு கடற்கரையடுத்தநாடுகளிற்குடியிருந்த ஓர் சாதியாருக்குள் எழுந்த சரிதையென்றும் தோன்றுகின்றது. பிந்தியதிற் சொல்லியுள்ள சங்கதிகள் $ பாரசீகக்குடாக்கடற்பக்கத்தேவசித்தோருடைய பழக்கவழக்கங்களை விளக்கிக்காட்டுகின்றன. அசிசத்திர கப்பலின்மேலேறினதையும், அக்கப்பலுடைய பெயரின்னதென்பதையும், அது கடலின்மேல் பரீட்சைப்பிரயாணம் செய்ததென்பதையும், அதினுடைய பொருத்துகளெல்லாம் கிசிலினால் அடைக்கப்பட்டனவென்பதையும், அது ஒரு மாலுமியின் கையில் கொடுக்கப்பட்டுக் கடலிலே ஓட்டப்பட்டதென்பதையும் கல்தேயவரலாறு மிகவுந்தெளிவாகக்காட்டுகின்றதென்று + "லெனோமென்ட்" சாஸ்திரியார் கூறுகின்றனர். ஆகையினால் இவ்வரலாறு ஐபிராத்துநதியிலும் பாரசீகக்குடாக்கடலிலும் வர்த்தகமும் கப்பலோட்டும் அதிகரித்திருந்த காலத்திலேதான் எழுந்ததென்று அநுமிக்கற்பாலதாகும். ஆகவே

* Phaenicians—இவர்களை "பன்" (Pun) என்றுஞ் சொல்வர். இவர்களே பூர்வகாலத்தில் பேர்போனவியாபாரிகளும் கப்பலோட்டிகளுமாயிருந்தவர்கள்.

$. . Persian Gulf.

\+ Lenoment-இதிகாசத்தினது துவக்கங்கள் (Beginnings of History) என்ற நூலையெழுதின பிராஞ்சிய பண்டிதன்.

எபிரேய வரலாறு பாபிலோனியவரலாற்றுக்கு மிகவும் முந்தின தென்று புலப்படுகின்றது. நோவாவின் பேழை ஒரு பெட்டகம்போ லிருந்ததால் அது நீரின்மேல் கெதியாய் ஓடுவதற்கல்ல, பெருந்தொகை யான சாமான்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றதாயிருந்தது. அதி னுட்பாகம் மூன்றுதட்டுகளினாலும் பலகுறுக்கறைகளினாலும் பலப் படுத்தப்பட்டதுமன்றி அதின் வெளிப்பக்கம் பசைப்பிடிப்பான நிலக் கிசிலினால் மெழுகப்பட்டு இறுகியிருந்தது. அது செய்யப்பட்ட கொப்பேர்மரம் பாரமற்றதும் நெடுங்காலத்துக்கு உக்காது இருப்பது மான இயல்புடைத்து. அப்பேழைக்கு அதன் மேற்புறத்திலே ஒரு பலகணியும் அதன் பக்கத்திலே யோர் கதவுமாக இரண்டு துவாரங்க ளிருந்தனவென்று குறிக்கப்பட்டுள்ளது. பாய்மரங்கள் பாய்கள் கயிறுகளாவது சுக்கான் தண்டுகளாவது அதற்கிருந்தனவென்று சொல்லப்படவில்லை. நோவாவும் அவன் குடும்பத்தாரான எழுவரும் அதற்குட் பிரவேசித்தது சொல்லப்பட்டது. இக்குறிப்பு எட்டுப்பேர் மாத்திரம் தப்பினார்களென்று இந்திய புராணேதிகாசங்கள் சொல்வ தோடு ஒத்திருத்தல் நமது கவனிப்புக்குரியது. மேலும் பட்சிகளும் ஆடுமாடுகளும் மற்றும் சிறியவகை நாற்கால்மிருகங்களுமே * நோவாவுடன் பேழைக்குட்பிரவேசித்தனவாகும். பிரளயமுண்டாவ தற்கு ஏழுநாட்களுக்குமுன்னர் பேழைக்குள் ஏற்றுமதிதொடங்கிப் பிரளயந்துவங்கின அத்தினத்திலேயே அது முடிந்தது. உடனே சுயம்புவானவர் பேழையின்கதவை அடைத்தனர். சலப்பிரளயம் துவங்கினது. ஆழிபெருக்கெடுத்தது. விடாமழை நாற்பதுநாள் இரவும்பகலும் சோனாமாரியாய்ப் பொழிந்தது. இந்நிகழ்ச்சிகள் பேழைக்குள்ளிருந்தோர் இலேசில் காணக்கூடியவைகளாம். இனி வெள்ளப்பெருக்குத்துவங்கி நாற்பதாம்நாளிலேயே பேழை தண் ணீரின்மேல் மிதந்ததென்றதினால் அது ஒரு திட்டைநிலத்திலே நிறுத்தல்பெற்றதென்று ஊகிக்கலாம். அது ஒரு சமபூமியிலாவது

* Uph, Bemah, Remesh என்ற எபிரேய பதங்களே இத்தொடர்பிலே வழங்கியுள்ளன. இப்பதங்கள் பட்சிகளையும் ஆடுமாடுகளையும் சிறியவகை நாற்கால்மிருகங்களையும் குறிக்கும். சிங்கம், யானை, காண்டாமிருகம் முதலிய மிருகவகைகளைக்குறியா. பேழைக்குள் ஏற்றப்பட்ட ஜீவபிராணி கள் இம்மூன்றுபதங்களாலுந்தான் எபிரேயவரலாற்றின் பிற்பாகத்திலே குறிக்கப்பட்டுள்ளன.



பள்ளத்தாக்கிலாவது நின்றதேயாயின் அதை மிதக்கப்பண்ண அத் தனைநாள் வெள்ளப்பெருக்கம் ஆவசியகமன்று. மேற்காட்டியபடி பிர ளயம் அற்பகெதியோடு நடந்தேறினதொன்றன்று. ஆதலால் அப் பேழை திடல்நிலத்திலே கட்டப்பட்டு அவ்விடத்திலேயே நிலைபெற் றிருந்ததென்றெண்ணல் தகவாம். அவ்வித நிலத்திலேயே அது செய் தற்குரிய மரங்களுமிருந்தனவாகலாம். மலைக்கோடுகளின்மேல் பூர்வ காலத்தாரால் தோண்டப்பட்டவள்ளங்களைத் தற்காலத்துப் பூர்வசரித் திரவாராய்ச்சிக்காரர் கண்டிருக்கின்றனர். பெருமரக்குற்றிகளைக் கடற் கரைக்கிழுப்பதிலும் செய்துமுடித்த சிற்றோடத்தை அங்கு சுமந்து போதல் எளிது. நோவாவும் தனக்கு வேண்டிய மரங்களிருந்தவிடத் திலேயே பேழையைக் கட்டியிருப்பான். நாற்பதாம் நாள் பேழை நிலத்தைவிட்டெழும்பித் தண்ணீரின்மேல்மிதந்து அசையத்தொடங் கினதுமன்றி அது ஓர் திசையைநோக்கிச்சென்றதைப் பேழைக்குள் ளிருந்தோர் கவனித்தனர். அது போனதிசை எதுவென்று சொல்லப் படவில்லை. ஆயினும் நோவாவும் அவன் சனத்தவரும் பாரசீகக்குடாக் கடலையடுத்ததேயத்தவரென்பதும், பேழை அர்மேனியாமலைகளிலே தடக்கிற்றென்பதும், அது உள்நாட்டுத்திசைநோக்கி வடபாற்சென்றது என்பதைத் தெள்ளிதின் உணர்த்தும். இவ்வுண்மையினால் தென்கட லாகிய இந்துசமுத்திரம் பெருக்கெடுத்து ஆசியாக்கண்டத்தின் நடுப் பாகத்திலுள்ள தாழ்ந்த சமபூமியைநோக்கிச்சென்றதென்றும், இழு பட்டுப்போன பேழை வழியிலே அராரத்துமலையொன்றின்மேல் தடங் கிக்கொண்டதென்றும் விளங்குகின்றது. மலைகளுக்குமேலாகப் பதினைந்துமுழத்துச்சலம் எழுந்ததென்றுசொல்லியிருப்பது இங்கு ஆராயத்தக்கது. மலைகளெல்லாம் ஓர்தரவுயரமுள்ளனவல்லவென்பது எவர்க்கும் தெரியும். உயரத்தில் ஒன்றற்கொன்று வித்தியாசமுள்ள பலமலைகளின்மேலேநின்ற சலத்தின் ஆழத்தை ஓரெண்ணினால் குறித்தல்கூடாது. பேழைக்குள் ஏராளமானஜீவவர்க்கங்களும் அவைகளுக்குவேண்டிய உணவுப்பொருள்களுமிருந்தனவாக அத னடிப்பாகம் நீர்க்குள் இறங்கியிருந்தது என்று அநுமித்தல் கிஞ்சித்தே னும் பிழையன்று. அவ்விறக்கந்தான் பதினைந்து முழமென்று வரலாற் றில் குறிக்கப்பட்டதுபோலும். பேழையின் உயரம் முப்பதுமுழமாகப் பதினைந்து முழம் அதன் அரைவாசியாகும். பேழை பாரத்தினால்

பதினைந்துமுழம் நீரின்கீழிறங்கினது. அது சலத்தின்மேல் மிதந்து அசைந்து பெருந்திரைகளினால் மோதுண்டு எழும்பி விழுந்துகொண்டிருந்ததைக்கண்ட பேழைவாசிகள் அது கற்பாறையிற்பட்டு உடைந்துபோகுமேயென்று பயந்தனரென்பதற்கையமில்லை. அடிவானத்தின்கண் கூட்டங்கூட்டமாய்க்கிடந்த மலைகளின்சிகரங்கள் சலத்துக்குமேலே தெரிந்ததையும் அவைகளுக்குநேரே பேழையானது மெல்லமெல்ல ஓடிக்கொண்டிருந்ததையும் நாட் செல்லச்செல்ல அம்மலைகளின் நுனிகளும் ஒன்றன்பின்ஒன்றாய்ச் சலத்தினால் மூடப்பட்டுப்போனதையும் அப்பேழைவாசிகள் கவனித்தனர்.

இப்படிப் பன்னாட்கள்கழிந்தபின்னர் ஒரு காற்றுவீசத்துவங்கினதாக, கடல்நீர்ப்பெருக்கும் விடாமழையும் நின்றுபோனதைப் பேழைக்குள்ளிருந்தோர் குறித்தனர். அக்காற்று மெதுவாயடித்ததோ உரமாயடித்ததோ என்று சொல்லப்படவில்லை. அது அடித்துழி மழைநின்றுபோனதென்றதினால் அது ஒரு கொடுங்காற்றென எண்ணலாம். ஏனெனின் ஐந்துமாசங்களுக்குக் கலைந்தோடாமல் ஆகாயமண்டலத்தைத் தடிப்பாய்மூடிக்கொண்டிருந்த முகிற்கணங்கள் இக்காற்றினாற்சிதறுண்டு ஓடிப்போயினவென்றால் அது கொடுங்காற்றேயெனத்துணிதல் இழுக்கன்று. இத்துவக்கம் வெள்ளம் வற்றிக்கொண்டுபோனதாகக்காணப்பட்டது. சின்னாட்பொறுத்துப் பேழையானது ஒருநாள் யாதோவொன்றின்மேல் தடங்கிக்கொண்டதை அதற்குளிருந்தோர் உணர்ந்தனர். அவர்களுக்கு நிலமொன்றும் காணப்பட்டதாகச்சொல்லப்படாமையின் பேழை தடங்கலுற்றநேரத்தில் தேயமுழுவதும் கடும் பனியினால்மூடப்பட்டிருந்ததுபோலும். அல்லது நிலமெல்லாம் தண்ணீரின்கீழேதான் இன்னுமிருந்ததென்றெண்ணலாம். சலம் படிப்படியாய் வடிந்துபோனதாகத் தமது பேழை தங்கியிருந்தது ஒரு மலைமுடியின்மேல் என்று கண்டனர். இரண்டு மாசங்களுக்குப்பிற்பாடுதான் பக்கத்திலிருந்தமலைகளின் நுனிகளைக் கண்டனர். இக்காரணத்தினாலேதான் பேழை இழுபட்டுப்போன பாதையிலிருந்த மலைகளின்நுனிகளெல்லாவற்றுக்கும் மேலாய்ப் பதினைந்துமுழ உயரத்துக்குக்குறையாமல் சலம்பெருகிற்றென்று நோவாவும் அவனோடிருந்தவர்களும் நினைத்தனர். ஒன்றரைமாசம்பின்



னிட்டு வெள்ளம்வற்றிப்போயிற்றோவென்றறியும்பொருட்டுப் பட்சிசாதிகளிற்சிலவற்றைவெளியேவிட்டுச் சோதித்தல் நன்றென்றெண்ணிக் காகமொன்றை வெளியேவிட்டனர். சலப்பிரவாகத்தினால்மூடப்பட்டிருந்தநிலத்தின்மேல் ஆகாயமெங்கும் கனத்த பனிப்படலங்கள் தூரத்திலிருந்தபொருள்கள்தெரியாதவண்ணம் மறைத்திருக்குமன்றோ? ஆகவே ஒரு காகத்தைப் பலகணியைத்திறந்து வெளியே விட்டனர். வாயசம் இயல்பாய்த்தூரப்பார்வையும் நெடுவழிபறக்கும் வலியும் ஓரிடத்தில்நிற்றலின்றி அங்குமிங்குமலைந்துதிரியும் குணமுமுள்ளதுமான ஓர் பட்சியாதலின் அது பேழைவாசிகளினது நோக்கத்துக்கேற்புடைத்தாயிருந்தமை புலப்படும். அது அங்குமிங்கும் பறந்துகொண்டிருந்ததினால் அதுபோய்த்தங்கற்கேற்ற நிலமொன்றுமில்லாதிருந்தமையை நோவா எளிதின் உணர்ந்தனனவன். பின்பு ஒரு புறாவை வெளியே விட்டனன். இப்பட்சி அழுக்குண்ணாததும் தன் கூட்டுக்குத்திரும்பிவரும்இயல்புள்ளதுமானதினால் தாபரங்களுள்ளநிலத்தைக் கண்டாலன்றி வெளியே பறந்துபோகாதகுணமுடையது. அது பறந்துதிரிந்து திரும்பிப்பேழைக்குள் வந்துவிட்டமை பூமியின்மேல் சலம் முற்றிலும்வற்றிப்போகவில்லையென்பதை அவர்களுக்கு நிரூபித்தது. ஒரு கிழமை பொறுத்து அப்புறாவையே திரும்பவும் வெளியே விட்டனர். சாயங்காலம் அப்புறா ஒரு மரத்தின் இலையொன்றைத் தன்வாயிலே கௌவிக்கொண்டு பேழைக்குள் திரும்பவும் வந்தது. மரங்களுக்குக்கீழாய்ச் சலம் இறங்கிவிட்டதை இது நிரூபித்தது.பின்னுமொருகிழமைபொறுத்து அப்புறாவை வெளியே விட்டனராக அது திரும்பி அவர்களிடத்திற்கு வந்திலது. புறா திரும்பிவாராததினாலே நிலத்தின்மேலிருந்தசலம் வடிந்துபோயிற்றென்றுநினைத்து நோவா பேழையின்மேற்றட்டைநீக்கி நாலுபக்கமும்பார்த்துச் சலம்வற்றிப்போயிற்றென்று கண்டான். ஆயின் நிலம் ஈரப்பிடிப்பாயிருந்ததினால் அது நன்றாய் உலர்ந்துபோகப் பின்னுமிரண்டுமாசஞ்சென்றது. ஏறக்குறைய ஒரு முழுவருஷம் சலத்தின்கீழிருந்த நிலம் நன்றாய் உலர்ந்துபோக இரண்டு மாசஞ்சென்றதென்றது அசம்பாவிதமன்று. எல்லாம்வல்லோருடைய கட்டளைப்படி பேழைக்குள்ஏறின அந்தநீதிமான் அவரது நேர் ஆஞ்ஞையின்றி அதைவிட்டிறங்கப் பயந்தனன்.

இனிப் பிரளயத்தின் துவக்கத்திற்கும் முடிவுக்குமிடையில் சென்றகாலம் எவ்வளவென்பதை ஆராய்வாம். வரலாற்றின்படி சலம் பூமியின்மேல் நூற்றைம்பதுநாளளவும்பிரவாகித்துக்கொண்டிருந்து பின்பு இடைவிடாமல் பூமியிலிருந்துதிரும்பிப்போய் நூற்றைம்பது நாட்களில் குறைந்தது. வருஷத்தின் இரண்டாம் மாதம் பதினேழாம் தினத்திலே அது தொடங்கி அடுத்தவருஷத்தின் முதல்மாதம் முதற்றினத்திலே வற்றிப்போய்விட்டது. பேழை நாற்பதாம் நாள் பூமியைவிட்டு சலத்தின்மேலேமிதந்து ஏழாமாதம் பதினேழாந்தேதியில் மலைமுடியின்மேலே தங்கிற்று. பத்தாம் மாதம்வரைக்கும் சலம் குறைந்துகொண்டேபோனது. அதேமாதம் முதற்றினத்திலே மலைச்சிகரங்கள் கண்ணுக்குப்புலப்பட்டன.

நூற்றைம்பது நாளளவும் வெள்ளம் பிரவாகித்ததென்றும், பிறகு அது குறைந்துகொண்டுவந்ததென்றும் பேழைக்குளிருந்தோர் எப்படி அறிந்தனரென்ற வினா இங்ஙனம் நிகழ்வதாகும். வரலாற்றின்படி மலைநுனிகளெல்லாம் பிரவாகத்தினால்மூடப்பட்டனவாக நிலக்குறிப்புகள்யாதொன்றுமின்றிப் பேழைக்குளிருந்தோர் இத்தனையாம்நாள் துவக்கம் சலம் குறையத்தொடங்கினதென்றறிதல் கூடியகாரியமல்லவே? உதாரணமாக, பெருங்கடலின் நடுவில் ஓடிக்கொண்டிருக்கும் ஓர் கப்பலின் மேற்றட்டிலுள்ளோர் அக்கடற்றண்ணீரது ஏற்றத்தையாவது வற்றத்தையாவது மட்டிடுதல் சற்றேனும் கூடியகாரியமன்று. ஆகவே நோவாவும் அவனோடிருந்தவர்களும் நூற்றைம்பதாம் நாள் முடிலே சலம் குறையத்தொடங்கினதென்றறிந்தது எவ்வாறென்ற வினா நமக்குள் இயல்பாய் எழும்பத்தக்கதே. வரலாற்றின்படி பிரளயந்துவங்கினது இரண்டாம்மாதம் பதினேழாந்தினத்திலே. ஏழாம் மாதம் பதினேழாந்தேதியில் பேழை மலையின்மேலே தங்கிற்று. ஆகவே பிரளயந்துவங்கினதேதிக்கும் பேழை மலையின்மேலே படிந்த தேதிக்குமிடையே ஐந்துமாதங்கள் சென்றனவாகும். அல்லது மாசத்துக்கு முப்பதுநாளாக நூற்றைம்பதுநாட்கள் சென்றனவாகும். பேழையானது மலையின்மேலேதங்கினநாள்தொடக்கம் சலம் குறைந்துவந்ததென்பதைக்குறித்தற்பொருட்டே பேழைக்குளிருந்தோர் நூற்றைம்பதாம்நாளின்பின் சலம் குறையத்தொடங்கினதென்றனர்.



பேழைதங்கினமலையின்மேலே பேழையினது நீர்க்கீழிறக்கத்தளவு சலம் மாத்திரம் நின்றதென்பது எவர்க்கும்சம்மதமாகும். இனி, பேழை பொறுத்தபின்னர் எழும்பாது அவ்விடத்திலேயே கிடந்துவிட்டதினால் சலப்பெருக்கு அம்மட்டோடே நின்றுவிட்டதென்று அவர்கள் அனுமித்தனர். மேலும் பேழையைச்சுற்றிநின்ற சலம் நாளுக்குநாள் குறைந்துபோனதும் பத்தாம்மாதம் முதல்தினத்தில் அதுகாறும் மூடப்பட்டிருந்த மலைச்சிகரங்கள் சலத்துக்குமேலாய்த் தோன்றினதும் பேழை மலையின்மேலே பொறுத்தகாலந்துவக்கம் மலைச்சிகரங்கள் தோன்றினகாலம்வரைக்கும் சலம் வற்றிக்கொண்டேபோயிற்றென்றவுண்மையைப் பேழைவாசிகளுக்குத் தெற்றெனவிளக்கியிருக்கும். வருஷத்தின் இரண்டாம்மாதம் பதினேழாந்தினந்துவக்கம் மறுவருஷத்தின் இரண்டாம்மாதம் இருபத்தேழாந்தினம்வரைக்கும் நோவா பேழைக்குளிருந்தனன் என்றதினால் பிரளயம் ஒரு வருஷகாலத்துக்கு நிலைபெற்றிருந்ததென்று சொல்லலாம். பாபிலோனிய வரலாற்றிலே ஏழுநாட்களுக்குள் பூமி முழுவதையும் பிரளயம் மூடிப்போட்டதென்று சொல்லப்பட்டுள்ளது. இருவரலாற்றுக்குமிடையில் சில வேற்றுமைகளுள்ளனவெனினும் இரண்டும் ஓரே சம்பவத்தையே குறிக்கின்றதை எளிதிற்காணலாம். எபிரேயவரலாற்றை நுணுகி நோக்குங்கால் அது ஒரு கண்கண்டசாட்சியினதுவாய்மொழியையே ஆதாரமாகவுடையதென்பது தெற்றெனப்புலப்படும். பாபிலோனிய வரலாறும் அத்தன்மைத்தான ஓர் பழஞ்சரிதையையேயடியாகக்கொண்டதாகும்.

இப்பிரளயம் உலகம் முழுவதையும் மூடினதானவொன்றோ, அல்லது ஆற்றுநீரும் மழைவெள்ளமும் சேர்ந்து மேற்காசியாவின் ஓர் பகுதியை மாத்திரம் தாக்கினதுமானவோர் சிறு பிரவாகமோ என்ற வினாக்கள் பிறக்கின்றன. முதல்வினாவுக்கேற்றவிடை வரலாற்றிலில்லையென்றே சொல்லல்வேண்டும். பேழைக்குளிருந்தோரது சாட்சி அவர்களது கண்கள்சண்டதற்கு இயைபுடையதாயிருக்குமேயன்றிப் பிரளயம் உலகத்தினது எந்தெந்தப்பாகங்களை அழித்ததென்பதைப் பற்றிச் சிற்றளவுக்காகிலும் எடுக்கற்பாலதன்று. அவர்களுடைய திருட்டிக்கு, சர்வபூலோகமும் தண்ணீரால்மூடப்பட்டுப்போனதுபோலவே

யிருந்தது. இவ்விதசம்பவம் நிலப்பரப்புமுழுவதும் பதிந்துபோவதினால் அல்லது கடலினது அடித்தளம் உயர்ந்ததினால் நிகழ்ச்சிபெறக்கூடியதே. ஆயினும் அக்காலத்திலிருந்த மானிடர்களது இருப்பிடங்களானபாகங்களையே அப்பிரளயம் தாக்கிற்றென்று கொள்ளல் அதிலும் ஏற்புடைத்து. கொடிய பூகம்பங்களினால் பூமியின் மேற்பரப்பில் இவ்வித பயங்கர மாறுதல்கள் உண்டாகக்கூடியனவே. மேற்குறித்த பிரளயத்திலே இவ்வித குழப்பங்கள் நிகழ்ந்தனவென்றெண்ணுதற்கு எபிரேய பாபிலோனிய வரலாறுகளில் சில குறிப்புகளைக் காணலாம். வானத்தின் பலகணிகளென்று எபிரேய வரலாற்றிலும் பூமிக்குளிருக்கும் ஆவிகளுடைய தீவர்த்திகளென்று பாபிலோனிய வரலாற்றிலும் சொல்லப்பட்டன, எரிமலைகளின் வாய்களேயென்று அறிஞர்கள் பலர் உரைக்கின்றனர். ஆர்மேனிய மலைகள் சமீபகாலத்திலே எரிமலைகளாயிருந்தனவென்பது பேர்பெற்ற சில பூகர்ப்பபண்டிதர்களுடைய கோட்பாடாகும். மேலும் இப்பிரளயம் பெருமழைகாரணமாகநிகழ்ந்த ஒரு அற்புதமான ஆற்றுநீர்ப்பெருக்கினால் உண்டான பிரவாகமேயன்றி ஆழிபொங்கி நிலத்தின்கண்பாய்ந்த ஓர் பிரவாகமன்றென்றுசாதித்தற்கு இதைப்பற்றி இதுகாறுங் கூறியவரலாறுகளில் அற்ப இடமேனுமில்லையென்பது எவர்க்கும் சொல்லாமலே விளங்கும். பிரளயத்தில் கடல்நீர் முதன்முதல் நிலத்தின்மேல் பாயத்தொடங்கினபோழ்து ஐபிராத்துஆற்றினது வாய்க்கால்வழியேதான் பாய்ந்திருக்குமென்பது தெளிவாம். சாகாவரம் பெற்ற உம்நப்பிஸ்தீமை ஐபிராத்துநதியின் வாய்ப்புறத்தைக்காவல் செய்யும்படி தேவர்கள் நியமித்து அவருடைய இருப்பிடத்தையும் அத்திக்கிலேயே ஏற்படுத்தினரென்ற பாபிலோனியகதை பிரளயமுண்டானபோது அவ்வாற்றினது முகத்தின்வழியாய்த்தான் தென்கடலானது நிலத்தைத்தாக்கினதென்று பூர்வகல்தேயர் எண்ணியிருந்தனரென்ற உண்மையைக் குறிப்பாய் உணர்த்துகின்றதன்றோ.

மேலைத்தேசத்து மேதாவியர் பலருடைய கொள்கையின்படி ஆரியர் பாதபூமிக்கு வருமுன்னர் மேதியாதேசத்திலிருந்தபடியினால் வடமலையென்று அவர்கள் குறித்தது ஆர்மேனிய மலைகளையே என்று அனுமித்தல் நமது யுக்திக்கு அதிலியைபுடைத்தாம். மேலும் மனுவிறக்கமென்றபெயரையுடையமலை இமயத்திலுள்ளதாக எவருஞ்



சொல்லக்கேட்டிலேம். ஈராயிரம் வருஷங்களுக்குமுன்னிருந்தவரான யோசீபஸ் என்பவருடையகாலத்திலே நோவா பேழையைவிட்டிறங்கினவிடம் அச்சம்பவத்தைக்குறித்தவோர் பெயரினால் அறியப்பட்டிருந்ததென விளங்குகின்றது. அம்மலை அரக்கேஸ்ஆற்றின்கரையிலுள்ள நச்சேவானென்ற மலைதானென்று வித்துவான்கள் பலர் நினைக்கின்றனர். நச்சேவான் என்றதற்கு முதற்றங்கல் என்ற பொருள்படும். பாரசீகர் குபினு (Kuhinuh) அதாவது நோவாவுடையமலையென்றும் துருக்கர் செங்குத்துமலையென்றும் அழைக்கிறவேறொரு மலையே அராராத்துமலையென்று ஐரோப்பிய பண்டிதர்கள் அநேகர் எண்ணுகின்றனர். தற்காலத்து ஆர்மேனியர்களோ நோவாவோடு சம்பந்தப்பட்ட யாவற்றையும் நச்சேவான் மலையினருகிலேதான் குறிக்கின்றனர்.

எபிரேய நூலாகிய ஆதியாகமத்திலே தற்காலத்திலே பூலோகமெங்கும் வியாபித்திருக்கிற மானிடகணங்களெல்லாம் இந்த நோவாவின்சந்ததியாரென்று கூறப்பட்டுள்ளன. இஃதுண்மையாயின் இக்காலத்துள்ள காமிய, சேமிய, ஆரிய, துரானிய சாதிகளினது மூலஸ்தானம் ஆர்மேனியாவும் அதையடுத்த மற்றைய தேசங்களுமேயென்பது புலப்படும்.

(தொடரும்.)

வே. ஜோ. தம்பிப்பிள்ளை. M. R. A. S.

---

# பதார்த்ததீபிகை.

"செந்தமிழ்" (தொகுதி-கருல்) ௫௱௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.

## தேயுவிடயம்.

வன்னி முதலிய பாரி லிருப்பன வானினுள்ள
மின்னன் முதலிய நீரை விராயென மேவுவநீர்
அன்னஞ் சமைக்கு மனல்வயிற் றெய்துவ தாகாசம்
பொன்னை முதலிய நாற்றீ விடயங்கள் போந்தனவே.

(இ-ள்) பாரில் இருப்பன வன்னி முதலிய— முன் சொல்லப்பட்ட தேயுவிடயங்கள் நான்கனுள்ளே மண்ணிலுள்ளன வன்னி முதலியன வாகும். வானில் உள்ள மின்னல் முதலிய—விண்ணிலுள்ளன மின்னல் முதலியன. நீரை விராய் என மேவுவ—அவை நீரை விறகாகப் பொருந்துவன. வயிற்று எய்துவது நீர் அன்னம் சமைக்கும் அனல்—வயிற்றிற் பொருந்தியிருப்பது நீரையும் அன்னத்தையுஞ் சமிப்பிக்குஞ் சாடராக்கினி. ஆகரசம் பொன்னை முதலிய—ஆகரத்திலுள்ளன பொன்னை முதலாகவுடையன. நால் தீ விடயங்கள் போந்தன—தேயுவிடயங்கள் நான்கும் இங்கே சொல்லப்பட்டுப் புகுந்தனவாம் என்க.

வன்னி என்றது விறகிலெழுநெருப்பினை. சமைத்தல்—ஒழித்தல். ஆகரசம்—ஆகரத்திற் பிறந்தது. ஆகரம்—பொன் முதலியன பிறக்குமிடம். சம்—பிறந்தது. விடயம்—பொறிகளுக்குப் புலப்படுவது.

வடநூலார் மண்ணிலுள்ளதைப் பௌமம் என்றும், விண்ணிலுள்ளதைத் திவ்வியம் என்றும், வயிற்றிலுள்ளதைச் சாடரம் என்றும், ஆகரத்திலுள்ளதை ஆகரசம் என்றுங் கூறுவர். வன்னி முதலிய என்றதனால் மின் மினி முதலியவும், மின்னல் முதலிய என்றதனாற் சூரியன், சந்திரன் முதலியவையும், பொன்னை முதலிய என்றதனால் வெள்ளி, செம்பு முதலியனவுங் கொள்ளப்படுவனவாம்.

## பிராணவாயு.

உள்ளுடல் வாயுப் பிராணனென் றும துபாதியினாற்
றள்ளும் பிராண னபானாதி பேர்பெறுந் தன்னுருவின்
றுள்ளும் பரிசத் ததுகா லெரிவெம்மை யூற்றதுநீர்
சில்லென் றூடற்றுப் பிருதுவி நாற்றஞ்செய் சீரியதே.

(இ-ள்) உடலுள் வாயு பிராணன் என்று ஆம்-உடம்பினுள்ளேயுள்ள வாயுப் பிராணன் என்று சொல்லப்படும். அது உபாதியினால் தள்ளும் பிராணன் அபானன் ஆதி பேர் பெறும்—அந்தப் பிராணன் ஒன்றே உபாதியினாலே உயிர்ப்பை வெளிவிடுகின்ற பிராணன், அபானன் முதலிய பெயர்களைப் பெறும். கால் தன்னுரு இன்று உள்ளும் பரிசத்தது—அந்த வாயு தனக்கு ஒரு வடிவமில்லதாய்க் குறித்தறியப்படும் பரிசமுடையது. எரி வெம்மையூற்றது—தேயு வெம்மைப் பரிசமுடையது. நீர் சில் லென் தொடற்று—அப்புச் சில்லென்னும் குளிர்ந்த பரிசமுடையது. பிருதுவி நாற்றம் செய் சீரியது—பூமி நாற்றஞ் செய்யுந் தன்மையுடையது என்க.

உபாதி—செயல். பிராணன், அபானன் ஆதிபெயர்—பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்பன. பிராணன் இருதயத்திலிருக்கும் வாயு. அது நாசிவழியாக நிச் சுவாசம் முதலியவைகளைச் செய்வது. அபானன் குதத்திலிருப்பது; அது மலமோசனாதிகளைச் செய்வது. வியானன் சரீரம் எங்கும் இருப்பது; அஃது அன்னரசத்தைப் பரவச் செய்வது. உதானன் கண்டத்திலிருப்பது; அஃது உள்ளே செலுத்துவது. சமானன்—நாபியில் இருப்பது; உதராக்கினியை வளர்ப்பது.

பிருதுவிமுதலியநான்கின் இலக்கண விசேடங்கள் முன்னர்க் கூறினும். ஆண்டுக்காண்க.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப் பிள்ளை.

---

௨

## திசைச்சொல்.

---

திசைச்சொல் என்று தமிழாசிரியராற் கிளந்து சொல்லப்படுவது பலதிசைகளிலுமிருந்து செந்தமிழ் நாட்டில் வந்து வழங்கும் வேறு நாட்டுச் சொல்லேயாம். இது வேறுநாட்டுச் சம்பந்தமுடைமை பற்றித் தேசிகம் எனவும் படும். தேசிகம்—தேச சம்பந்தமுடையது. தேசம்—நாடு. "தேசிகந்திசைச்சொல்" என்பது திவாகரம்.

சீவகசிந்தாமணி என்னுஞ் செந்தமிழ்க் காப்பியத்திலுந் திசைச் சொற்கள் பலவந்து வழங்கின. இவை இவை என்று நச்சினார்க்கினிய

ரும் அவைகளை ஆங்காங்குக் கூறிச் செல்வர். "தேங்காத மள்ளர் திரடோளிணை சிக்கயாத்த" (நாமகள். கக.) என்புழி "சிக்க—அகப் படக்கோல. திசைச்சொல்" என்பர். "கொன்னெழுகும் வேலி யவதத்தன் குளிர்தூங்கும்" (காந்தருவ) என்புழிக் "குளிர் திசைச் சொல்; குளிரும் என்னும் வினைச்சொல் குளிர் எனத்தொழின்மே னின்றது. இருப்பு என்றவாறு" என்பர். இவையிரண்டையும் வேறு சிலர் கருநடச்சொற்கள் என்பர். இவைகளாலுந் தேசாந்தரங்களி லிருந்து தமிழ்நாட்டுவந்து வழங்குஞ்சொல்லே நமக்குத்திசைச்சொல் என்பது பெறப்படுகின்றது. நன்னூலுரைகாரரும் "அத்திசைகளி னின்றுஞ் செந்தமிழ்நிலத்து வந்து வழங்குவன" என்றார்.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் "செந்தமிழ்சேர்ந்த" என் னுந்தொல்காப்பியச்சூத்திரவுரையிலே கூறியவைகளும் இக்கருத் துடையனவேயாம். அவர்கள் கூறிய "இயற்சொற்போல எந்நிலத் துந் தம்பொருள்விளக்கா" என்பதற்கு இயற்சொற்போல வழக்கு நெறியுடையதாய் வெளிப்படையாக எவ்விடத்துந் தம்பொருள்விளக் கா என்பது கருத்து எனக்கொள்க. இளம்பூரணர் "தங்குறிப்பினையே இலக்கணமாகவுடைய" எனக் குறிப்பு என்பதை வெளிப்படுத்தினார்.

இனிப் பன்னிருநிலத்துளும் ஒன்றினின்று ஒன்றிற்புகுந்தசொல் அதற்குத்திசைச்சொல்லாய்க் கவிஞர் குறிப்புடையதாய் வருதல்பற் றிக்கூறினார் என்பாருமுளர். இக்காலத்திலும் பலசொற்கள் திசைச் சொல் எனக்கொள்ளுமாறு தமிழ்நாட்டிலே வழங்குவனவாயின. அவை கமம், துரை முதலியனபோலும்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

ஸ்ரீ:

# புத்தகமதிப்புரை.

---

1\. நளன் சரிதம்:—இது டி. பி. நாராயணசாமிப்பிள்ளையவர் களால் படிப்பதற்கு விருப்புண்டாகும்படி இனிய தமிழ்நடையில் நன்றாயெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ. 1—4—0. வேண்டு வோர் இதன் ஆக்கியோராகிய உரத்தநாடுசத்திரம் கலாசாலையுதவி யுபாத்தியாயர் டி. பி. நாராயணசாமிப்பிள்ளையவர்கட்கெழுதிப் பெறலாம்.

---

2\. கோபாலகிருஷ்ணகோகலே:-இது உறையூர் வே. கோவிந்த சாமிராஜு அவர்களால் ஆங்கிலத்தினின்றும் தமிழில் வசனரூபமாக மொழிபெயர்க்கப்பெற்றிருக்கிறது. இதிற் றன்னயங்கருதாது இந் திய ஜனசமூகநன்மையைக்கருதிப் பாடுபடும் தேசோபகாரிகளுளொரு வராயிருந்த கெண்யமுள்ள கோபாலகிருஷ்ணகோகலே என்பவ ருடைய ஜீவிய சரித்திரமும், இந்தியர்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய அரசியன் முறைநெறிகளும் அறியக்கிடக்கின்றன. இத் தகைய புத்தகங்கள் தமிழில் வெளிவருவது தமிழ் நாட்டுள்ளார் உல கியனெறியறிந்து முன்னேற்றமடைதற்குபகாரமாகுமென்று நம்பத் தக்கது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

---

3\. அரிச்சந்திரன்:—இது கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் உதவித் தமிழ்ப்பண்டிதர் ஊ. சா. வேங்கடராமையரவர்களால் யாரும் விரும்பிப் படிக்கும்படி இனிய தமிழ்நடையில் நன்றாயெழுதப் பட்டிருக்கிறது. இதன் விலை அணா 10. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப்பெறலாம்.

---

4\. பெற்றமனம் பித்து:— இது ஒரு இனிய தமிழ்நாவல். இதன்விலை அணா 2. இதுவும் மேலேகண்ட விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

5. ஹாஸ்யமஞ்சரி:—இதில் சில வேடிக்கைக்கதைகளும்,விநோத சம்பாஷணங்களும், நகைச்சுவைபயப்பிப்பனவாகத் தமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளன. மகிழ்ச்சியுண்டாகப்படிக்க விரும்புமவர்க்குப் பயன்படத்தக்கது. இதன்விலை அணா 6. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்தியராமன் அண்ட் கம்பெனி, ஹைகோர்ட்டுக்கெதிரில், 3 - 4, கொண்டிசெட்டித்தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ் என்ற விலாசத்துக் கெழுதிப்பெறலாம்.

---

6. தமிழ்மகவு:—இது புதுவைத்தமிழ்ச்சங்கத்தினின்றும் தமிழ் மொழிவளர்ச்சியைநாடி மாதந்தோறும் வெளியிட்டுவரத்தொடங்கிய முதற்பகுதி, 12-பக்கமுள்ளது. இதில் தமிழ்மகவு, பத்துப்பாட்டு, அக்குரோணி, வசனக்குறிகள், கம்பர்சரித்திரமென்னுங் கட்டுரைக ளடங்கியுள்ளன. இதன் வருஷச்சந்தா உள்ளூர்க்கு அணா 8. வெளி யூர்க்கு அணா 12. வெளிநாட்டுக்கு ரூ. 1. தனிப்பிரதி அணா 1. வேண்டுவோர் (இதன் பத்திராசிரியர்)துரைசாமிமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டுகல்விச்சாலைத்தமிழ்ப்பண்டிதர், முதலியார்பேட்டை, புதுவை என்ற விலாசத்துக்கெழுதிப்பெறலாம்.

---

7. போசிரியன்:—இது சற்குரு என்னும் பெயருடன் உபாத் தியாயர்கட்கெனவே உலவிவந்த மாதப்பத்திரிகை,இப்பொழுது போா சிரியன்என்னும்பெயர்பூண்டு நான்காந்தொகுதியின் முதலிரண்டுபகுதி கள் சேர்ந்தொன்றாக வெளிவந்திருக்கிறது. இதில் உபாத்தியாயர்கள் தெரிதற்குரிய பல விஷயங்கள் வெளிவருவதாற் கல்விவளர்ச்சிக்குச் சாதகமாகும். வேண்டுவோர் இதன் பத்திராதிபரான சே. சோமசுந் தரம் பிள்ளை, நெ-1, வாலீசுரர் தெரு, மைலாப்பூர் என்ற விலாசத் துக்கெழுதிப்பெறலாம்.

---

## திருத்தம்.

"செந்தமிழ்" தொகுதி கரு-ல் சுஉகூ-ஆம் பக்கம் கீழ்க்குறிப்பு வரி கஉ-ல், அபார்த்தமாகுமென்று என்பதை அபார்த்தகமாகு மென்றும்;

இப்பகுதி பக்கம் ச, வரி உ-ல், இருக்கிறது என்பதை உள் ளன என்றும்; பக்கம் கசு, வரி உஉ-ல் கக்ஷிக்குக்குச் என்பதை, கக்ஷிக்குச் என்றும் திருத்திக்கொள்க.

உ

கடவுள்துணை.

THE REGISTRAR
4 - FEB 1918

# செந்தமிழ்

தொகுதி-கசு.] பிங்களஹு மார்கழிமீ [பகுதி-உ.
Vol. XVI. December,—January. 1918. No. 2.

ஸ்ரீ:

## வஞ்சிமா நகராராய்ச்சி.

"செந்தமிழ்" (தொகுதி கசு - பகுதி க-ல்)

(கசும்—பக்கத் தொடர்ச்சி.)

---

இனி எட்டாவது சான்றாக, சங்கநூல்கள் சேரரைக்கொங்கர் கோவென்று கூறியிருப்பதையும் விசாரிப்போம்.

சேரரைப்பற்றிப்பாடிய எத்துணையோ சங்கச்செய்யுள்களுள் ஒரு சில பாடல்களில்மட்டும் கொங்கர்கோவென்ற பிரயோகங்காணப் படுகிறது.

பிரகிருதவாதத்துக்கெல்லாம் பிரதானமான சேரன்செங்குட்டு வனையாவது, மற்றுமுள்ள பல சேரர்களையாவது சங்கநூல்கள் எங் கேனும் கொங்கர்கோவென்று கூறியதாகக்காணப்படவில்லை. சேரன் செங்குட்டுவனை நாடுங்குடியும்பற்றிச் சிறப்பிக்குமிடத்து "குடவர் கோமான் என்றும், குட்டுவர்பெருந்தகை என்றும் 'சேரன்', 'பொ றையன்', 'மலையன்' என்றுமிவ்வாறாகச் சொல்லியிருப்பதல்லது கொங் கர்கோனென்றெங்குஞ்சொல்லவேயில்லை. இங்கு "மலையன்" என்றது கொங்குமண்டலத்தின் வேறாயெண்ணப்பட்ட மலைமண்டலமுடையா னென்றேபொருள்படுகிறது. அன்றியும், "கடலொடுழந்தபனித்துறைப் பரதவன்" எனக் கொங்கின்சம்பந்தமேயில்லாத நெய்தனிலமே அவ னது வாசஸ்தானமென்றும், சமுத்திரசஞ்சாரமே அவனுடைய விருத்தியென்றும் வற்புறுத்திச்சொல்லப்பட்டிருக்கிறது.

பதிற்றுப்பத்திற்சொல்லப்பட்ட "நாரறிநறவிற்கொங்கர்கோவே" "கட்டிப்புழுக்கிற்கொங்கர்கோவே" என்ற இரண்டுபிரயோகங்களும் இளஞ்சேரலிரும்பொறை என்னும் ஒரு சேரனையே குறித்துள்ளன. அவையும் தென்னாடன் குடகொங்கன் என ஆழ்வார் சோழனை வழங்கியதுபோல இளஞ்சேரலிரும்பொறை கொங்குநாட்டைவென்று கொண்டதுபற்றி அந்நாட்டானே அவனைக் கொங்கர்கோவெனப் பெருங்குன்றூர்கிழார்பாடினரெனக்கொள்வது பொருத்தமுடையதாயிருக்கிறது. அல்லது கொங்கிளங்கோசர் சேரமண்டலத்தரசர்க்கடங்கிய சிற்றரசராதலால் அங்ஙனங்கூறினரெனினுமமையும். அல்லாக்கால் "காவிரிமண்டிய........புகார்ச்செல்வ" என்றதுபற்றிச் சோழமண்டலமும் சேரர்க்குரியதென்றுசொல்வாரை மறுக்க வழியின்றாம்.

அன்றியும், கொங்கர்கோவென்பதில் கொங்கர் என்பதற்கு, கொங்குநாட்டுள்ள குடிகளும் கொங்குநாட்டரசரும் பொருளாமாயினும் 'குடகக்கொங்கர்' 'கொங்கரையட்டகளத்து' 'கொங்கிளங்கோசர்' என்புழியெல்லாம் 'கொங்கர்' என்பது கொங்குநாட்டரசரையேகுறிப்பதால், இங்கும் புகழ்பொருளாகிய சேரனை ராஜாதிராஜனென்று சிறப்பிக்குங்கருத்துடைய புலவர்கூற்றிலுள்ள கொங்கர்கோவென்றதற்குக் கொங்குநாட்டரசர்க்கரசாகியகோவென்றே பொருள்கொள்ளவேண்டும். கொள்ளவே கொங்குநாடு சேரமண்டலத்தினின்றும் வேறென்றும், அதனையாளுமரசர் வெவ்வேறு பலருளரென்றும், அவர்க்கெல்லாம் சேரன் பேரரசனென்றும் தெளிவாகின்றது. இதனாற் சேரர்க்குத் திறையிடுதற்குரிய சிற்றரசராட்சிக்குட்பட்ட கொங்குநாடானது, திறைகொள்ளும் பேரரசராகிய சேரரது பிரதானராஜதானிநகரமுள்ள குடபுலமாகமாட்டாதென்பது நன்கு தெளியத்தகும்.

ஆதலாற் சேரரிலிரண்டொருவரைக் கொங்கர்கோவென்று சங்கநூல் கூறியதுகொண்டு அவரைக்கொங்குநாட்டுள்ளவரென்று சொல்வதானது "குடகொங்கன் சோழன்" என்ற திவ்யசூக்தியைக்கொண்டு சோழன் குடகொங்குநாட்டுள்ளவனென்று சொல்லுவதுபோலும் அநுமானப்போலியாமெனவறிக. ஆகவே சிலசேரரைச் சங்கநூல்கள் கொங்கர்கோவென்றுகூறிய பிரயோகமும் வாதகக்ஷிக்குச்சாதகமாகாது எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிருக்கிறது.

இனி ஒன்பதாவது சான்றான சிலப்பதிகார அபிதானவிளக்கத்தையும் விசாரிப்பாம். அங்குள்ளவாக்கியம், 'கொங்கு=கொங்குமண்டலம்-



குடநாடு." என்று எழுதப்பட்டிருக்கிறது. இதில் குடநாடென்றது சேரமண்டலவாசகமாகுமென்றும், அதனால் அக்கொங்கு குடபுலமாகிய சேரமண்டலமென்று சித்திக்கிறதென்றும் வஞ்சிமாநகருடையார் கருதுகிறார். இங்குப்பொருளுரைத்தற் கெடுத்துக்கொண்டபெயர் சிலப்பதிகாரத்து வழங்கும் மண்டலவாசகமாகிய கொங்கு என்னும் பெயராம். அதற்கு, கொங்குமண்டலம்—குடநாடு. என இரண்டு சொற்களாற் பொருளெழுதப்பட்டிருக்கிறது. இவ்விரண்டுசொற்களும் வெவ்வேறு இரண்டுபொருளைக் குறித்தனவா? அல்லது ஒரே பொருள் குறித்துள்ளனவா? என்றகேள்விக்கு வஞ்சிமாநகருடையார் விடைகூறவேண்டும். வெவ்வேறுபொருள் குறித்தனவென்பாராயின், கொங்குமண்டலம் வேறு; தாம் குடபுலமென நினைத்த குடநாடுவேறு என்பதே பெறப்பட்டுத் தமக்கிஷ்டசித்தியில்லாமல் அநிஷ்டசித்தியேயுண்டாவதாயிருக்கிறது. ஆகையால் அவ்விரண்டும் வெவ்வேறென்று கொள்ளாது ஒன்றென்றே அவர்கொண்டுதீரவேண்டும். கொள்ளவே, ஒருபொருளுக்கு இரண்டுசொல்லெழுதவேண்டுவதெதற்கென்று யோசிக்கவேண்டும். விளங்குதற்பொருட்டு வெளிப்படையான சொல்லாலும் பொருளெழுதப்பட்டதென்பாராயின், அச்சொல் முன்னுள்ள கொங்குமண்டலமா? பின்னுள்ள குடநாடா?. கொங்குமண்டலமாயின் அதனையிறுதியிலெழுதியிருக்கவேண்டுமே? அங்ஙனமில்லாமையாலது பொருந்தாது. குடநாடென்பதோ கொங்குமண்டலமென்பதைக்காட்டிலும் வெளிப்படையன்றென்பதிலக்கணநூல் வல்லாரெல்லாருமறிவர். ஆதலால் குடநாடென்று வெளிப்படைச்சொல்லாற் பொருள்விளக்கப்பட்டதென்று கொள்ளுதல் பொருந்தாதிருக்கிறது.

அன்றியும் அது வெளிப்படைச்சொல்லென்பது கருத்தாயின் கொங்குமண்டலமென்பது கூறாமலே கொங்கு - குடநாடு என்று எளிதில் விளங்குமாறு பொருளெழுதியிருக்கலாமே? அவ்வாறெழுதாது இடையே கொங்குமண்டலமும் எழுதப்பட்டிருத்தலால், ஸ்ரீ. மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கட்குக் கொங்குகுடபுலமாமென்பது கருத்தன்றென்றுணர்க. பின்னையாதெனின்? கொங்கு என்ற சொல்லுக்குப்பொருள் கொங்குமண்டலமேயாம்; ஆயினும், சிலப்பதிகாரத்துட் சொல்லிய கொங்கிளங்கோசர் குடகக்கொங்கராதலால் அவர்க்குரிய நாடு அக்கொங்குமண்டலத்தின் குடநாடேயாம் என்னுங்கருத்தை

வெளியிடவேண்டி, கொங்கு=கொங்குமண்டலம்-என்று சொற்பொருளெழுதி இங்கு அதன் குடநாடே பொருளாகக்கொள்க என்னுங் குறிப்பால் அதனையடுத்துக் குடநாடு என்றெழுதியுள்ளார்கள். இஃது என்போலவெனில்? 'பொருப்பிலேபிறந்து' என்ற தமிழ்மொழி வாழ்த்துச்செய்யுளிற் பொருப்பு என்றதன் குறிப்பெழுதுமொருவர் பொருப்பு=மலை-பொதியில். என்றெழுதுவதுபோலுமெனவறிக. இதனுள் பொருப்பு என்பதற்கு மலை என்பதே நேர்பொருளாயினும் அது இங்கு அம்மலைகளுட்பொதியின்மலையையே குறிக்கும் எனக் கொள்வதுபோல, கொங்கு என்பதற்கு, கொங்குமண்டலம் என்பதே நேர்பொருளாயினும் அது இங்கு அக்கொங்கினுட்குடநாட்டையே குறிக்கும் எனக் கொள்வதற்கே செவ்வேயியைந்து பிறிதோராற்றானும் பொருள்கொள்ளற்கிலைசயாதிருத்தல்காண்க.

ஆதலாற் "கொங்கு=கொங்குமண்டலம்-குடநாடு" என்ற சிலப்பதிகாரவபிதானவிளக்கமும் வாதகக்ஷிக்குச்சாதகமாகாது எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிற்று.

இனிப் பத்தாவது சான்றாக, "செங்கதிர்மணிமுடிச்சேரலன்றிகழ், கொங்குநன்னாடு" என்ற பழனிப்புராணப்பிரயோகத்தையும் விசாரிப்போம்.

இதுவும், "சேரர்கொங்கின்வைகாவூர்நன்னாடு" என்ற அருணகிரியார்வாக்குப்போலக் குடகொங்கினையே சேரர்க்குரியதாகக்காட்டுவதல்லது பிரகிருதவாதத்துக்கு முக்கியமாயுள்ள கருவூர்ப்பகுதியைச் சேரர்க்குரியதாகக்காட்டமாட்டாததாயிருக்கிறது.

அன்றியும் சேரர்க்குக் கொங்குநாடுள்ளது என்று பேசுவதற்கெல்லாம் மூலகாரணமாகக் "கொங்கனெனவிள்ளுங் கோதைநனியாண்ட" தெனப் பேரூர்ப்புராணஞ்சொல்லியதும் அப்பேரூர்ப்பாகமுள்ள குடகொங்கேயாயிருக்கிறது. இக்குடகொங்கு சேரகுலத்தினராகிய சிற்றரசராலாளப்பட்டுவந்த குடியேற்றநாடென்பதில் எதிர்வாதகக்ஷிக்கு ஆக்ஷேபமில்லாமையானும், கருவூர்ப்பக்கத்தைச் சேரராண்டதாக இப்பிரமாணங்காட்டமாட்டாமையாலும் இதுவும் வாதகக்ஷிக்குச்சாதகமாகாதிருக்கிறது. இவ்வாறே, "சேரர்திருநாட்டோர்களின்



முன்சிறந்தமூதூர்செங்குன்றூர்" என்ற பெரியபுராணவாக்கியமும் ஆராயத்தக்கது. இங்கு கொங்கிற்செங்குன்றூருள்ளபாகம் குடகொங்காதலால் அது தொன்றுதொட்டுச் சேரர்குலத்துச் சிற்றரசராகிய குடகக்கொங்கராலாளப்பட்டதென்பது எதிர்வாதகக்ஷியாரா லங்கீகரிக்கப்பட்டமையா லிது அவர்க்கு விரோதமில்லதாயிற்று. ஆகவே இது குடகொங்கிற் சரிதார்த்தமுடையதாய், சாவகாசமாயிருப்பதால் வாதகக்ஷிக்குக் கருவூருள்ளகொங்கின்பாகத்தைச் சேரனுடையதென்று காட்டமாட்டாமையானும், அச்சேக்கிழார்வாக்கினாலேயே "மன்னியவனபாயன்சீர்மரபின்மாநகரமாகுந், தொன்னெடுங்கருவூரென்னுஞ் சுடர்மணிவீதிமூதூர்" என்று வியக்தமாய்க்கருவூர் சோழர்க்குரியதென்று சொல்லியிருக்கும் நிரவகாசவாக்கியத்தாற் பாதிக்கப்படுவதனாலும் இது வாதகக்ஷிக்குச் சாதகமின்றியும் எதிர்வாதகக்ஷிக்குப் பாதகமின்றியும் உதாசீனமாயிருக்கிறது.

ஆனால் கருவூரைச்சோழர்க்குரியதாகச் சேக்கிழார் கூறியிருப்பதற்கு அர்த்தாந்தரகற்பனத்தால் அசித்திசொல்லவருகிறார். அது பொருந்தாதென்பதைப் பின்பு எதிர்வாதகக்ஷியில் அப்பாட்டுக்குப் பொருளாராய்வுழிக்காட்டப்படும்.

இனிப் பதினோராவதுசான்றாக, "கொடித்தடஞ்சிலைக் கோதைநாட்டினிலெழுபதியும்" என்ற பழனிப்புராணவாக்கியத்தையும் விசாரிப்பாம்.

இதிற் கொடித்தடஞ்சிலைக்கோதைநாட்டினிலெழுபதியும் என்பதிற் கருவூருஞ்சேர்ந்ததுதானென்பது வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. அது சேரர்க்குரியதென்பது குறிப்பாற்கொள்ளவேண்டியிருக்கிறது. கருவூர் சோழர்க்குரியதென்பது 'தங்கள்குலமரபின்முதற்றனிநகராங்கருவூர்' என்றும், 'மன்னியவனபாயன்சீர்மரபின்மாநகரமாகுந், தொன்னெடுங்கருவூர்' என்றும் பெரியபுராணத்துட்டெளிவாகச்சொல்லப்பட்டிருப்பதுகொண்டு எதிர்வாதகக்ஷியால் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வெளிப்படையுங்குறிப்புமாகியவிரண்டுபொருள் கண்மாறுபட்டால் வெளிப்படைப்பொருளே வெற்றியடையும் என்ற நியாயத்தால் எழுபதியும் என்றதனுட் கருவூர் ஒன்றென்றுகொள்ளற்கிடமில்லாமையால் அவை கருவூரொழிந்த வேறேழுபதிகளாயிருக்க வேண்டுமென்பதே பெறப்படுகிறது.

அவ்வேழுபதிகளுட் கருவூர் ஒன்றென்று நிரூபிக்கப்பட்டாலும் அது வாதகக்ஷியார்க்குச் சாதகமாகிறதில்லை. ஏனென்றால், அது சோழ ரதுநகரமென்று பெரியபுராணத்தாலுங் கருவூர்ப்புராணத்தாலும் கருவூர்ச்சிலாசாசனங்களாலும் சித்தித்திருப்பதற்கு விரோதமில்லாமலே கோதைநாட்டுப் பதிகளுளொன்றாகக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. குடகொங்குநாடே சேரர்கொங்கு எனப் பேரூர்ப்புராணமுதலியவற்றாற் சித்தித்திருக்கிறது. அதனையாளும் சேரர்குலச்சிற்றரசர்களாகிய கொங்கர்கள் ராஜ்யகாரியசௌகரியார்த்தம் சேரவரசர்மூலமாகச் சோழர்கொங்கினையும் வருடவாரித்திறைப்பொருள்கொடுத்து வருவதாகச்சேர்த்துக்கொண்டு ஒரு தனிமண்டலமாக்கிக்கொண்டு ஆண்டுவந்தமையால் அச்சோழர்க்குரிய கருவூர்ப்பாகமும் கோங்குநாடென்று பெயர்பெற்றதாயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இதனை, "கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர்திறைகொணர" என்ற. பாட்டின் குறிப்பாலும், கருவூர்ச்சிலாசாசனக்குறிப்புகளாலும், பின்பு காட்டுதலாலறியலாம்.

ஆகவே கொங்குமண்டலம் மலைமண்டலக்கோமன்னர் மேற்பார்வையிற் கொங்கரென்னுஞ் சேரவகுப்பினராகிய சிற்றரசராற் பிற்காலத்திலாளப்பட்டுவந்ததுபற்றியே, கோதைநாட்டினிலெழுபதியும் என்று கருவூரையுமகப்படப் பிற்காலத்தலபுராணமுதலியவற்றிற் கூறியதாகக் கொள்ளவேண்டுமேயல்லது சோழர்க்குரியதாகாத கோதைநாட்டுள்ளதாகக்கொள்ளற்கிடமில்லாமையாலிது வாதகக்ஷிக்குச் சாதகமில்லாததாகவும் எதிர்வாதகக்ஷிக்குப் பாதகமில்லாததாகவுமிருக்கிறது. "சேரர் திருநாட்டூர்களின்முன்சிறந்தமூதூர்செங்குன்றூர்" என்றபெரியபுராணவாக்கியத்துக்கும், கருவூர்ப்புராணம் எறிபத்தச்சருக்கத்துள் வஞ்சுளாடவி சேரனாட்டுள்ளதெனக்கூறியிருப்பதற்கும் இதுவே சமாதானமாமெனவறிக.

இனி, பன்னிரண்டாவதுசான்றாக "வெங்கைக்களவழிப்பாடலுக்காவில்லவனைக்கோங்கைத் தளைகளைந்தகோமானும்" என்ற சங்கர சோழனுலாவாக்கியத்தையுமாராய்வாம்.

இதன்கண் வில்லவனைக்கொங்கைத்தளைகளைந்தகோமான் என்பதற்கு வில்லவனானசேரனைச் சோழன்தளைகளைந்தது அவனுடைய



கொங்குநாட்டைத்தளைகளைந்ததென்பதே கருத்தாகுமென்கிறார். இது பொருந்துவதாயில்லை. ஏனெனில் இத்தளைகளையப்பாடிய களவழிப் பாட்டில் "வஞ்சிக்கோவட்டகளத்து" "கொங்கரையட்டகளத்து" என வில்லவனும், கொங்கருமாகிய இருவேறுவேந்தரையும் சோழன் போரில்வென்றானென்று கூறியிருப்பதாலங்ஙனம்வென்று தளையிடப்பட்டவில்லவனையுங் கொங்கரையும் தளைகளைந்தகோமான் எனச் சோழனைச்சொல்வது சரித்திரத்தோடு பொருத்தமுடையதாயிருக்கிறது. கொங்குநாடு ஒருவாற்றானும் சோழனாற்றளையிடுதற்குரியதாகாமையானும், அவனாற்றளையிடப்பட்ட கொங்குநாட்டரசரே தளைகளைதற்குரியராதலாலும் வில்லவனைத்தளைகளைந்தது கொங்குநாட்டைத்தளைகளைந்ததாகக் கூறுவது பொருளாகாதெனவறிக.

ஆகவே வில்லவனைக்கொங்கைத்தளைகளைந்தகோமான் என்றதில் வில்லவன் குடபுலத்தரசனும், கொங்கர் அவனுக்குத்துணைப்படையான கொங்குமண்டலத்தரசருமாகிய வேறுபாட்டையேகாட்டுதலால் இதுவும் கொங்கு குடபுலமாகாதென்பதற்கேயாதரவாகி வாதகக்ஷிக்குப்பாதகமாயும் எதிர்வாதகக்ஷிக்குச்சாதகமாயும் உண்மையை வெளியிடுவதாயிருக்கிறது.

இனி, பதின்மூன்றாவதுசான்றான "கொங்கைக்கமராவதியளித்தகோ" என்ற தனிச்செய்யுட்பிரயோகத்தையும் விசாரிப்பாம்.

இதில் "கொங்கைக்கமராவதியளித்தகோ" என்பதற்குக்கொங்குதேசத்தரசனாகியசேரனைப் போரிற்கொன்றவன் சோழன், என்பதே பொருளெனக்கொண்டு குடபுலமன்னனாகிய சேரனுக்கு உரியதாகக் கொங்குநாடு கூறப்பட்டதனால் அது குடபுலமாகவேண்டுமென்று கருதுகிறார்;

இங்கு சோழனாற்கொல்லப்பட்டவன் குடபுலத்தரசனாகிய சேரன் என்று விளக்கமாகச்சொல்லப்படாமையாலும், சிலப்பதிகாரகாலத்துக்கு மிகப்பிற்பட்டவிருத்தாந்தத்தைத் துதிமுகமாகக்கூறுதலாலும் "கொங்கர்க்கமராவதியளித்தகோ" வென்றும் வேறு பாடபேதமிருப்பதாலும், கொங்கை யென்பதற்குச் சேரன் என்றே பொருள் சொல்லவேண்டுமென்ற நியமமில்லாமையாலும், கொங்கர் என்ப

தற்குக் கொங்குநாட்டுக்குறுநிலமன்னர் என்ற பொருள் பலவிடத்துங் கொள்ளப்பட்டிருத்தலாலும், கலிங்கரைவென்றான் என்பதுபோலக் கொங்கரைவென்றான் என்பதும் சம்பாவிதமாகையாலும் இது வாதகக்ஷிக்குச்சாதகமாகவாவது, எதிர்வாதகக்ஷிக்குப் பாதகமாகவாவது காணப்படாமையா லுதாசீனிக்கத்தக்கதே.

இனி, பதினான்காவது சான்றாக "மாந்தரக்கொங்கேனாதி" என இலக்கணநூல்களில் உதாரணமாகக்காட்டும் தொடர்மொழிப்பிரயோகத்தைத் தமக்காதரவாகக்காட்டுகிறார். அதனையும் ஆராய்வாம்.

இதில் மாந்தரன் என்ற பெயர் குடபுலமன்னனாகிய சேரனுக்குரியதென்றும், அப்பெயரிற் கொங்கின்சம்பந்தமிருப்பதால் கொங்கு குடபுலமாகுமென்றும் வஞ்சிமாநகருடையார் கருதுகிறார். இதனாற் கொங்குநாடு சேரமண்டலமென்று சாதிப்பதானது "மலையமான் சோழியவேனாதிதிருக்கண்ணன்"என்பதில் * மலையமானென்ற சேரர்க்குரியபெயரிற் சோழசம்பந்தமிருப்பதாற் சோழநாடு மலைமண்டலமாகுமென்று சாதிப்பதுபோலும் அநுமானப்போலியாமெனவறிக.

இனிப் பதினைந்தாவது சான்றாக, "வஞ்சிகுடக்கினிற்கோதையுமாங்கே" என்ற அழகர்கலம்பக வாக்கியக்குறிப்புமுதலிய சில குறிப்புக்களைத் தமக்காதரவாகக்காட்டுகிறார், அவற்றையும் விசாரிப்பாம்.

இவ்வழகர்கலம்பகத்திற்சொல்லிய வஞ்சியுங்குடக்கும் முறையே கொங்கிற்கருவூரையும்கொங்குமண்டலத்தையுமேயுணர்த்துஞ்சொற்களென்று தெளிவுபிறந்தாலல்லது இவ்வாக்கியம் வாதகக்ஷிக்காதரவாகமாட்டாது. ஏனெனில், வஞ்சி என்னும் சேரராஜதானிநகரம் மலைமண்டலத்துள்ளதோ? கொங்குமண்டலத்துள்ளதோ? என்று விசாரித்துக்கொண்டிருக்குந்நிலையில் அதுவே சந்தேகத்துக்கிடமாயிருப்பது முதலாவதுதோஷம். குடக்கு என்ற சொல்லுக்கு முக்கியார்த்தம் மேற்றிசையாதலால் அதனையொழித்துக் குடபுலமென்றலக்ஷியார்த்தங்கொள்வது இரண்டாவதுதோஷம். அது சேரமண்டலவாசகமாக வழங்கப்படாமை மூன்றாவதுதோஷம். இம்மூன்றுதோஷங்களானும் முறையே இது அசித்தியுடையதாகுமெனவறிக.

---

* புறநானூற்றின் 174-ம் பாட்டாற்பாடப்பெற்றவன்.



அன்றியும், இவ்வாக்கியம் மகண்மறுத்தலென்னும் மறக்காஞ்சித்துறையில் அழகர்மலையிலுள்ள மறவர்கூற்றாகக்கூறினமையால், அவ்வஞ்சி அழகர்மலையிலிருந்துசொல்வார்க்குக் குடக்கு என்னும் சொல்லுக்கு நேர்பொருளாகிய மேற்றிசைநோக்கி "வையையொருவழிக்கொண்டு மாமலைமிசையேறிச்" செல்லற்குரிய வஞ்சியென்று பொருள்படுமேயல்லது, அவர்க்கு வடதிசைக்கண்ணுள்ள கொங்குவஞ்சி என்று பொருளாகாதெனவறிக. கொங்குவஞ்சியைக்கருதி, அழகர்மலையிலிருந்து கூறுங்குறவர்கூற்றின் அநுகாரமாகக்கூறியிருந்தால் அது, வஞ்சிவடக்கினிற்கோதையுமாங்கே, என மோனைத்தொடைநயமுமுடையதாய்க்கூறப்படுமெனவறிக. அங்ஙனங்கூறாமையாலிங்குக்கூறியவஞ்சி கொங்குவஞ்சியாகாதெனத்தெளியத்தக்கதாயிருக்கிறது. ஆதலால் இதுவும் வாதகக்ஷிக்குப்பாதகமாகி எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிற்று.

இனி "குடகிற்கருவூர்" என்ற அருணகிரியார்வாக்கைத் தமக்காதாரமாகக்காட்டுகிறார். இதில், குடகென்றது குடபுலம் என்ற சேரமண்டலப்பொருள்கருதி வழங்கியிருப்பதாக வஞ்சிமாநகருடையார் கருதுகிறார். குடகு என்பதற்கு, சேரமண்டலமே பொருளாக வேண்டுமென்றாவது அல்லது கருவூர்க்குப்பொருத்தமான பிறிதொரு பொருளுமில்லையென்றாவது அவர் காட்டவேண்டும். அங்ஙனமன்றி, குடகு என்றசொல்லுக்குச் சேரமண்டலமென்று பொருள்சொல்லிவிடுவது சாத்தியமாகாதிருக்கிறது. ஏனெனில், சேரனைக்குடபுலமுடையானென்று கூறுமிடத்தெல்லாம் குடக்கோ, குடவர்கோ, குடவர்கோமான் எனவே கூறியிருப்பதல்லது குடகுக்கோவென்றேனும், குடகர்கோவென்றேனும், குடகர்கோமானென்றேனும், குடகென்னும் குற்றியலுகரவீற்றுத் திசைப்பெயரடியாகக்கூறும் வழக்கில்லாமையானும் குடகக்கொங்கர் எனச் சாதாரணத்திசைப்பொருளேபற்றிவழங்கும் வழக்கேயுண்மையானும், குடசத்தமொழிந்த குடகு குடகமென்னுந்திசைப் பெயர்கள் சேரமண்டலவாசகமாகாவெனவுணர்க. குடகென்பதற்கு,மேல்பால் என்பதே செம்பொருளாயிருப்பதால்"குடகிற்கருவூரழகப்பெருமாள்"என்பதற்கு, கருவூரின்மேல்திசையிலிருந்தருள்புரியுமுருகப்பெருமாள் என்று பொருள்சொல்லுதலே பொருத்த

முடையதாயிருக்கிறது. அவ்வூரில் அவர் எழுந்தருளியிருக்குமிடமு மதுவேயாம். ஆதலால் இதுவும் வாதகக்ஷிக்குச்சாதகமாகாதாயிற்று. இனி நைடதத்து,

“மாழைமென்னோக்கியீங்குவைகியமானவேலான்
றாழைமுப்புடைக்காய்வீழ்ந்துதாற்றிளங்கமுகுசெற்று
வீழ்சுளைவருக்கைபோழ்ந்துவெம்புலியடியபைங்காய்க்
கோழரையரம்பைசாய்க்குங்குடகநாடாளும்வேந்தே”.

என்ற பாட்டிலும், அரிச்சந்திரசரிதையில்,

“அதிபாரதனபாரவதிரூபமலர்மானையனையாயிவ
ணதிபாயவுயர்போதினறைபாயநிறைபாயசிறைவாவியின்
மதியாமல்வல்லைபீறிவெடிபோனபருவாளைவனைபூகமேற்
குதிபாயமடல்கீறிவிழுதேறல்கரைசாடுகுடநாடனே”.

என்றபாட்டிலும், சேரர்க்குரிய மண்டலவாசகமாகச்சொல்லப்பட்டுள்ள குடகநாடு குடநாடு என்பன கொங்குநாட்டையேகுறிக்குமென்றும், அதற்கு இப்பாடல்களில் மருதவருணனையே கூறியிருப்பது சான்றென்றுங்கூறுகிறார். மலைநாடு பெரும்பாகம் குறிஞ்சிநிலமும், சிறுபாகம் மருதநிலமுமுள்ளதென்பதும், கொங்குநாடு பெரும்பாகம் முல்லைநிலமும், சிறுபாகம் மருதநிலமும் உடையதென்பதும் யாருமறிவர். அங்ஙனமாகவும் கொங்குநாட்டின் பெரும்பான்மையான முல்லைநிலவளங்கொண்டு அதனை விசேடியாது சிறுபான்மையான மருதநிலவளங்கொண்டு விசேடித்திருப்பது பொருந்துமாயின், அவ்வாறே மலைமண்டலத்துள்ள பெரும்பான்மையான குறிஞ்சிநிலவளங் கொண்டு விசேடியாது மருதநிலவளங்கொண்டு விசேடித்திருப்பதும் பொருந்துமெனவறிக.

அன்றியும், “குடகநாடாளும்வேந்தன்” “குடநாடன்” என்ற பிரயோகங்கள் மலைமண்டலமுங்கூடிய கொங்குமண்டலத்தையுடையானைக்குறித்தனவாகவே வஞ்சிமாநகருடையார்கொள்ளவேண்டுமாதலால் அவ்விரண்டுமண்டலத்தும் மிக்குள்ளனவாகத்தாமொப்புக்கொண்டிருக்கும் குறிஞ்சிநிலவளம்பற்றிக் குடநாட்டை விசேடியாதகுற்றம் வாதகக்ஷிக்கும் ஒத்ததாயிருப்பதால் அவர்க்கவை சாதகமாகாவாயின.



அன்றியும், காவியப்பிரயோகங்களெல்லாம் சந்தர்ப்பானுகுணமாகச் சுவைநலந்தோன்றச்சொல்லுவதேமரபாயிருக்கிறது. மேற்காட்டிய செய்யுளிரண்டும் கொங்குமண்டலத்தரசரைக்குறியாது மலைமண்டலத்தரசரையே குறிக்குமிடத்தும் சுயம்வரமண்டபத்திடைவந்துள்ள மணவாளரை வாசயோக்கியமான அவர்க்குரிய நிலவளமுடைய மருதம்பற்றி விசேடியாது, கல்லுங்கரடும், முள்ளும்முரடும், முழையும், விடரும், அரவும், புலியும், களிறும் பலவுமுடைய குறிஞ்சிநிலம்பற்றிவிசேடிப்பது மணமக்களைநோக்கி இன்பச்சுவைதோன்றக் கூறும் மகளிர்கூற்றுக்குச் சிறவாதாதலாலும், நீர்வளமிக்க மலைமண்டலத்துள் மருதநிலமில்லையென்று சொல்லவொண்ணாதாதலாலும், நைடதத்தும், அரிச்சந்திரசரிதையினுங்கூறிய குடகநாடு, குடநாடு என்ற பிரயோகங்கள் மலைமண்டலத்துக்குப் பொருந்தாதென்பது தவறுமெனவறிக.

இனிப் பதினாறாவதுசான்றாக, சேரநாட்டுள்ளனவென நூல்களிற் சொல்லப்பட்ட ஊர்ப்பெயர்முதலியன கொங்குநாட்டுள்ளனவாக வழக்குப்பற்றிக்காட்டும் சில குறிப்புக்களையும் விசாரிப்பாம்.

1. சேரகுலத்தவனான அதிகனுக்கும், சேரர்க்கும் பகைமையுண்டென்றும், ஆமூரிலிருந்த கொடுமுடியென்பவன் அதியமானெடுமானஞ்சியுடன்சேர்ந்து சேரரை விரோதித்தவனென்றும், ஆமூர் இப்பொழுது கொங்குநாட்டுள்ளதாதலால் சேரரிருந்தது கொங்குநாடாகுமென்றுஞ்சொல்லுகிறார். (வஞ்சிமாநகர்- பக்கம். 150.)

இதனுட்சொல்லும் அதிகன் சிற்றரசனும், சேரர் பேரரசருமாயிருத்தலால் பேரரசரைப்பகைக்கும் ஒரு சிற்றரசன் அப்பேரரசரது நாட்டுளிருத்தற்கியலாது புறநாட்டிலிருந்து விரோதிக்கவேண்டுமென்பதே யுக்திக்குப்பொருந்துவதாலும், அவ்வதிகனுக்குக் கிழக்கேயுள்ள ஆமூரிலிருந்து கொடுமுடி துணைச்செய்ததாகச்சொல்லுவதால், அவ்விருவரும் தமக்கு மேற்கே குடபுலத்துள்ள சேரரைப்பகைத்தாரென்று கருதுதற்கிடங்கொடுப்பதாலும் இதுவும் அசித்தியுடையதாயிருக்கிறது.

2. இனிச் சங்கச்செய்யுளொன்றில் வண்டன் என்னுமொருவன் சேரனுக்கு உவமிக்கப்பட்டுள்ளான் என்றும், அவன்பெயருடைய

வண்டமலை கொங்குநாட்டுள்ளதென்றும், அதனால் அக்கொங்குநாடு சேரர்குடபுலமாகவேண்டுமென்றுங்கருதுகிறார். (வஞ்சி-ர். பக். 151.)

இதனாற் கொங்கு குடபுலமாகுமென்று சாதிப்பதானது, குருகுலத்தரசருளொருவன் அத்தியென்னும்பெயருடையவனாயிருந்தமையால் தொண்டைநாட்டுள் அத்திகிரி என்னும் க்ஷேத்திரமிருப்பதால் அத்தொண்டைநாடு குருகுலத்தரசர்க்குரிய குருக்ஷேத்திரமாகும் என்று சாதிப்பதுபோலும் அநுமானப்போலியாமெனவறிக.

3. வஞ்சியிலிருந்த சிக்கற்பள்ளித்துஞ்சியசெல்வக்கடுங்கோ கோதானஞ்செய்தவனென்பது, 387-ம் புறப்பாட்டால் அறியப்படுகிறதென்றும், கொங்குநாட்டிற் பசுமிகுதியாதலா லவனங்கிருந்து தானஞ்செய்திருக்கவேண்டுமென்றும், ஆதலாலது குடபுலமாயிருக்கவேண்டுமென்றும் கருதுகிறார். (வஞ்சி-ர். பக். 152.)

இது, கொங்குநாட்டைக்காட்டிலும் பசுமிகுதி கோவர்த்தனத்திலிருந்ததாக அறியப்படுதலா லவனங்கிருந்து கோதானஞ்செய்திருக்கலாமென்றும், அதனாற் கோவர்த்தனகிரியே குடபுலமாகுமென்றும் துணிவதுபோலும் என்க. அன்றியும், செங்குட்டுவன் வடநாட்டிலிருந்து தன்னாட்டுக்கு "இன்பலருவிக்கங்கைமண்ணி, யினந்தெரி பல்லான்கன்றொடுகொண்டு" வந்தவனென்றுசொல்லப்பட்டமையால், பசுமிகுதியுள்ள கொங்குநாட்டுள்ளவனல்லனென்று விளங்குதலாலும் கொங்குகுடபுலமாகாதெனவறிக.

4. உதியஞ்சேரல் குழுமூரிலிருந்து பெருஞ்சோறுபயந்தவனென்று சொல்லப்படுதலா லக்குழுமூர் கொங்குநாட்டிலுள்ள குழுமம் என்னும் ஊராயிருக்கலாமென்றும், அதனாற் கொங்கு குடபுலமாகலாமென்றும் சொல்லுகிறார். (வஞ்சி-ர். பக். 151.)

இது தஞ்சைவாணன்கோவைப்பாட்டுடைத்தலைவனது மாறனாட்டூர் தஞ்சையென்றுசொல்லப்பட்டமையால் தஞ்சாவூருள்ள சோழநாடே மாறனாடாகுமென்றுசொல்வதுபோலுமென்க.

5. ஆதன் என்னும்பெயர் சேரர்க்கு உள்ளது; ஆதனூரென்பது கொங்குநாட்டுள்ளது. ஆதலாற் கொங்கு சேரராஜதானிநகர



மூள்ள குடபுலமாகுமென்கிறார். இது சோழர் என்றபெயர் குணபுலத்தரசர்க்குரியது; சோழபுரம் என்னும் ஊர் ஒன்று பாண்டிநாட்டிலிருக்கிறது; அவ்வூருள்ள பாண்டிநாடு சோழமண்டலமாகுமென்று துணிவதுபோலும் என்க.

இனி, இப்பெயர்களேயன்றி இவ்விவசாரங்களுக்கெல்லாம் காரணமாய்க் குடபுலத்துப்பிரஸித்திபெற்றுள்ள இடப்பெயர்ப்பொருளுடைமையைக்கொண்டு கொங்குகுடபுலமாகுமென்று சாதிக்கவும்வரலாம். அதாவது கருவூர், வஞ்சி, பொருநை, கொல்லி என்னும் ஊரும் நதியும் மலையுமிருப்பதனாற் கொங்கு குடபுலமாகுமென்று துணியவரலாமென்பதாம். இங்கு அப்பெயர்களையுடைய இடவிசேடங்களே இவ்வழக்கிற்குக்காரணமாயிருத்தலா லவற்றுளாயினும் கொங்கு குடபுலமாகுமாவென்று விசாரிப்போம்.

அவற்றுள், "திருமாவியனகர்க்கருவூர்" என்று கருவூர் சேரர்க்குரியதாகச்சொல்லப்பட்டிருப்பதால் கருவூருள்ளகொங்குகுடநாடாகுமெனில் அது, "மதுரைப்பிறந்தமாமாயன்" என மதுரையில் திருமாலவதரித்தான் என்று சொல்லப்பட்டிருப்பதால், மதுரையென்னும் பெயரையுடையதிருநகரம் பாண்டிநாட்டிலிருப்பதால் அப்பாண்டிய ராஜதானிநகரமாகிய மதுரையுள்ளவிடமே திருமாலவதரித்த யமுனாதீரமாகுமெனத்துணிதல்போ லநுமானப்போலியாமெனவறிக.

இவ்வாறே வஞ்சி, பொருநை, கொல்லி என்பனவும் தனித்தனி கொங்குநாட்டைக்குடபுலமென்று காட்டமாட்டாவெனவறிக.

இனிக் கருவூர், வஞ்சி என்னுமிரண்டுபெயர்களும் சேர்ந்திருப்பது கொண்டு இரண்டேதுக்கூட்டத்தாலது சேரரூருள்ள குடபுலமென்று துணியலாமெனின், அதுவும் பிறழ்ச்சியுடையதேயாம். எப்படியென்றால் கரும்பறியாதானொருவன் அதற்கு வேழம், கழை என்னும் பெயர்களுண்டென்று தெரிந்துகொண்டு வேழம்பர் கழைக்கூத்தாடுமிடஞ்சென்று அவர் கழையிலேறிக்கூத்தாடுவதையும், அதனால் அவர்க்கு வேழம்பர் என்ற பெயர்வந்திருப்பதையுங்கொண்டு வேழம் கழையென்னுமிரண்டுபெயரும் ஒருங்கு மூங்கிற்கு வழங்கப்படுவது

கண்டு, அக்கழைக்கூத்தாடுமூங்கிலைக் கரும்பாகுமென்றுதுணிதல்போலும் அனுமானப்போலியாமெனவறிக.

இனி "தண்பொருநைப்புனல்பாயும் விண்பொருபுகழ்விறல்வஞ்சி" எனப்பொருநையாறுடைமையும் வஞ்சியென்னும்பெயருடைமையுமாகிய இவ்விரண்டையுங்கொண்டு இவ்விரண்டையுமுடையநாடு குடபுலமென்று துணியலாமெனின், அதுவும் பிறழ்ச்சியுடையதேயாம். எப்படியென்றால், யானை என்னும் விலங்குக்கு வேழமென்னும்பெயருடைமையும் நீண்டதொருபுழைக்கையுடைமையுமாகிய இவ்விரண்டுமொருங்கிருப்பதுகொண்டு "தூம்புடைநெடுங்கைவேழந்துற்றியவெள்ளிலேபோல்" என்ற சிந்தாமணியில் வெள்ளிலை (விளங்கனியை) யுண்டதாகச்சொல்லப்பட்டது யானையென்னும் விலங்கேயாமென்று துணிதல்போலும் அநுமானப்போலியாமெனவறிக.

இனி, பொருநையாறுடைமையும் வஞ்சியென்னும்பெயருடைமையும் கருவூரென்னும்பெயருடைமையும் ஆகிய மூன்றேதுக்கூட்டமுடைமையால் அவையுள்ளகொங்கு குடபுலமாகுமென்று துணியலாமெனின் அதுவும் பிறழ்ச்சியுடையதாம். எப்படியெனில் தூம்புடைநெடுங்கைவேழமென்றமையால் நீண்டபுழைக்கையும், வேழம் என்னும்பெயருடைமையும், "காட்டானையுண்டகனி" என்றமையால் ஆனையென்னும் பெயருடைமையுமாகிய மூன்றேதுக்கூட்டமுடைமையால், வெள்ளிலை (விளங்கனியை) யுண்டதாகச்சொல்லும் நோய்விசேடத்தை யானையென்னும் விலங்கேயாம் என்று துணிவதுபோலும் அநுமானப்போலியாமெனவறிக.

இனி இவற்றுடன் சேரர்மலைப்பெயரையுடைய கொல்லிமலை அடுத்திருப்பதுபற்றி நான்கேதுக்கூட்டத்தால் அவையுள்ள கொங்குநாட்டைக்குடபுலமென்று துணிவோமெனில், சேரரூர்ப்பெயருடையதாகிய கீழ்கடற்றொண்டியையும் சேர்த்துக்கொண்டால் ஐந்தேதுக்கூட்டத்தால் மிகவும் வலியுடையதாகிக் கீழ்கடலளவுங்குடபுலமென்று துணிதலாம்போலுமென்னும் விதண்டாவாதத்தெதிருரையால் நிரசிக்கப்படுமாதலால் அதுவும் சாதகமாகாதெனவறிக.

இனி "குடகொல்லி" "கொல்லிக் குடவரை" என்று சொல்லப்பட்டிருப்பதால் கொல்லிமலையுடைமைபற்றிக் குடபுலமென்றுதுணியலாகாதோவெனின், அக்கொல்லிக்குடவரை கொங்கின்புறத்துள்ளது என்று நிச்சயிக்கப்பட்டாலன்றிச் சமுசயமாயிருக்குமளவும் அதனாலும் அஃதுள்ளவிடம் குடபுலமென்று துணியப்படாதெனவறிக. அக்கொல்லி சேரர்க்குரிய கொல்லிக்குடவரையாகாதென்பது பின்பு "சேரர்கொல்லிமலை யாது" என்னும் ஆராய்ச்சியாலறிக.



ஆதலால், சேரர்க்குரியதோ? அன்றோ? வென்னும் ஐயநிலைக்களமாகிய வஞ்சி, கருவூர், பொருநை, கொல்லி முதலிய பெயர்ப்பொருள்களைக்கொண்டு, அவையுள்ள கொங்கு குடபுலமென்றுதுணிவது தவறுமெனவறிக. இதுகாறும் கொங்கு குடபுலமாமென்பதற்கு வாதகக்ஷியிற்சொல்லுஞ்சாதனங்களை ஆராய்ந்தமட்டில் ஒன்றேனும் வாதகக்ஷிக்குச் சாதகமாகாமலும்; பெரும்பாலும் எதிர்வாதகக்ஷிக்கே சாதகங்களாகியும், வாதகக்ஷிக்குப்பாதகங்களாகியுமிருப்பதால் இவற்றாற் கொங்கு குடபுலமென்று துணியப்படாததாயிற்று.

---

## 4. கொங்கு குடபுலமாகாதா ?

---

இனி எதிர்வாதகக்ஷியிற் கொங்கு குடபுலமாகாதென்று தெளிதற்கும் பல சான்றுகளுள்ளன. அவற்றையும் வேண்டுமானால் விசாரிப்போம்.

அவையாவெனின்:—

1. கொங்குநாடு, நடுநாடாயிருக்கிறதன்சொரூபத்தால், புடைநாடாகிய குடபுலமாகமாட்டாதென்பதைத் தானேகாட்டுவது.
2. "கொங்கிளங்கோசர்தங்கள்நாட்டகத்து,நங்கைக்குவிழவொடு சாந்திசெய்ய, மழைதொழிலென்றுமாறாதாயிற்று" எனச் சிலப்பதிகாரத்துள் மலைமண்டலத்தின் வேறாகச்சொல்லியிருப்பது.

(சிலப்பதிகாரம், உரைபெறுகட்டுரை - 2.)

3. குடகக்கொங்கருமாளுவவேந்தருங், கடல்சூழிலங்கைக் கயவாகுவேந்தனு, மெந்நாட்டாங்கண்...............வந்தீ கென்று” வரம்வேண்டியது.

(சிலப்பதிகாரம், வரந்தருகாதை - 159 முதல் 163 வரை அடிகள்.)

4. “இவளோ, கொங்கச்செல்விகுடமலையாட்டி, தென்றமிழ்ப் பாவைசெய்ததவக்கொழுந்து” எனக் கண்ணகிக்குப் பின்னிகழுஞ்சிறப்புத்தோன்றத் தெய்வங்கூறியது.

(சிலப்பதிகாரம், வேட்டுவவரி - 47, 48 அடிகள்.)

5. “மைந்தராடியமயங்குபெருந்தானைக், கொங்குபுறம்பெற்ற கொற்றவேந்தே.......................வஞ்சிமுற்றம்வயக்களனாக, அஞ்சாமறவராட்போர்பழித்துக், கொண்டனைபெருமகுடபுலத்ததரி” என்ற 373-ம் புறப்பாட்டு.

6. “வில்லவன்கோதைவேந்தற்குரைக்கும், நும்போல்வேந்தர் நும்மோடிகலிக், கொங்கர்செங்களத்துக்கொடுவரிக்கயற் கொடி, பகைப்புறத்துத்தந்தன ராயினுமாங்கவை, திசைமுகவேழத்தின்செவியகம்புக்கன. (சிலப்பதிகாரம், காட்சிக் காதை - 151 முதல் 155 வரை அடிகள்.)

7. “மாகெழுகொங்கர்நாடகப்படுத்த,வேல்கெழுதானைவெருவரு தோன்றல்” என்ற பதிற்றுப்பத்- 22-ம்பாட்டின் 15-16-ம் அடிகள்.

8. ‘கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர்திறைகொணர, என்ற பெரியபுராணவாக்கியம்.

(புகழ்ச்சோழநாயனார்புராணம், செய்யுள் - 11.)

9. ‘குடிசூழ்கொங்கர்குடபுலத்தார் கொணருந்திறைகண்டிடல் வேண்டி, என்ற கருவூர்ப்புராணவாக்கியம். ( எறிபத்தச் சருக்கம். செய்யுள். 5.)

10. சேயகொங்கர்நாடணைந்தார் திருவாரூரார்சேரருடன், என்ற பெரியபுராணவாக்கியம். (கழறிற் - பு. செய்யுள். 139.)

11. “கொங்கர்நாடுகடந்துபோய்க் குலவுமலைநாட்டெல்லையுற” என்ற பெரியபுராணவாக்கியம். (கழறிற்-பு. செய். 40.)

~~(தொடரும்)~~

ப—ர்.

ஸ்ரீ:

# ஒருவிஞ்ஞாபனம்

செந்தமிழ்ப்பத்திராசிரியர்க்கு:

ஐயா! தாங்கள்ஸேதுஸமஸ்தானவித்வான் ப்ரஹ்மஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள்எழுதிய “வஞ்சிமாநகர்” என்னும்வியாஸத்திற் கண்டவிஷயங்களைமறுத்துச் செந்தமிழில் “வஞ்சிமாநகராராய்ச்சி” “வாதமுடிவுரையாராய்வு” என்பனவாகச் சிலதலைப்பின்கீழ் எழுதிவருவனவற்றைக்கண்ணுற்றேன். அதனின்றும் தங்களதுசாசனபரிசயமும், சங்கநூற்றேர்ச்சியும், வடமொழியறிவும் இவ்வளவேயாமெனச் செவ்வனே விளங்குவதால், அதனை ஈண்டுக்காட்டி எழுதலானேன்.

“கோனேரின்மைகொண்டான்: கொங்கானவீரகேரளசோழமண்டலம்...........”என்று சாசனந்தொடங்கியதும், கோனேரின்மைகொண்டானுடையகொங்குஎன்று ஆறும்வேற்றுமைத்தொகையாகப் பொருள்கொண்டுவிட்டீர்களே! அந்தோ! அத்தொடர்க்குஅதுபொருளன்றே! கோனேரின்மைகொண்டான் அச்சாசனம் இடுகின்றானென்றுவது அவன்காலத்துஅச்சாசனம் இடப்பெற்றதென்றுவதுபொருள்கொள்ளப்படுமேயன்றி வேறன்றே! யான்கூறுவதேபொருளாதல் “கோனேரின்மைகொண்டான்: பாண்டியமண்டலம்.........”எனவும் “கோனேரின்மைகொண்டான்: திருக்குருகூர்தாஸர்..................” எனவும் வரும்சாசனங்களால்அறிக.

வஞ்சிமாநகர்என்பது கொங்கிற்கருவூருக்குப்பெயரென்பதைத் தாங்கள்ஒப்புக்கொண்டு அவ்வூர் சோழருர்என்றுதுணிந்துகூறத்தலைப்பட்டீர்கள். தாங்கள்கண்டசங்கநூல்களுள் வஞ்சியைச்சோழர்க்குப் பகைப்புலமாகவன்றி உரிமையுடையதூராக எங்கேனும்பிரஸ்தாபித்துள்ளதோ? “குடையொடு, கழுமலந்தந்தநற்றேர்ச்செம்பியன்பங்குனி விழவின்வஞ்சி” என்று இறையனார்களவியல் மேற்கோளில்வருதல்கொண்டு செம்பியனுக்கு (சோழனுக்கு) வஞ்சிஉரியதென்பீராயின்,

அது பொருளன்று * சேரனதான கழுமலத்தைச்செம்பியன்றந்தமை
காரணமாக வஞ்சி அவனுக்குப்பங்குனிவிழவயரும்படி ஒருகாலத்து
வசப்பட்டதுஎன்பதே அதன்பொருளென்றுஅறிமின். அன்றாயின் அக்
களவியல்மேற்கோளில் "வரோதயன்வஞ்சியன்னாய்" என்றுவருதற்குப்
பாண்டியனுக்கும்வஞ்சிஉரியதாகின்றது. ஆகச் சோழன்வஞ்சிஒன்று,
பாண்டியன்வஞ்சிஒன்று, 'கோதைஓம்பிக்காக்கும்வஞ்சி' (அகம்-263)
என்றமையால் சேரன்வஞ்சிஒன்று என மூன்றுவஞ்சியாகின்றது.
இப்படி வஞ்சியை மூன்றென்றுகொள்வதினும் சேரனதுவஞ்சியைப்
பாண்டியனும்சோழனும்கைப்பற்றிய ஓர்ஏகதேசகாலத்து அச்சிறப்பு
நோக்கி அவ்வூர்அவ்வவ்வரசரதாக உபசரித்துவழங்கப்பட்டதென்று
கொள்வதேநேர். அப்படியன்றித் தாங்கள்கருதியபடியாயின், சோழர்க்
குரியபுகாரானது "புகார்ச்செல்வ" (பதிற்.)எனச் சேரனுக்கும் "அரி
கேசரிஅந்தண்புகார்" (இறை.களவி)எனப் பாண்டியனுக்கும் கூறுவது-
கொண்டு மூன்றுபுகார் அன்றோகூறவேண்டும். இவ்வாறெல்லாம்
பொருளல்லவென்பது சங்கநூல்களைப்பல்காலும்படித்து நுணுகி
ஆராய்ந்தாற்றான்புலனாகும். அந்நூல்களிற் பயிற்சி தங்களுக்குச்சிறிது
மில்லையென்பதற்கும் பின்னுஞ்சிலகாட்டுவேன். புறப்பாட்டு 13-ம்
செய்யுளை எடுத்துக்கொண்டு "விழுநீர்வேலிநாடுகிழவோன் எனச்
சேரனைக் கூறினமையால் குடபுலமாகியசேரமண்டலம் வேலிபோ
லரணுபமைந்தகுடகடலால்வரையப்பட்டதெனஒருபுறத்தின்எல்லையும்
நிராக்ஷேபமாயறியப்பட்டது" என்று துணிந்துஎழுதிவிட்டீர்கள். இவ்
வடியிற்குறிப்பிட்டநாடுகிழவோன் யாவனென்பதையும் நாடு யாதென்
பதையும் நீர்வேலியின்னதென்பதையும் தாங்கள்அறிந்துகொள்ளாமை
பற்றித் தமிழறிஞர்பலரும் பெருவியப்பும் துக்கமுமுறுகின்றனர்.

பள்ளிச்சிறாரும்எளிதிலுணருமாறு புறப்பாட்டுரையாசிரியர்
அப்பாட்டிற்கு அந்வயங்கூறி முடிபுகாட்டித்துறைவிளக்கமுஞ்செய்
திருக்க அதையுணராது மனம்போனபடிஎழுதினீர்கள். ஈண்டு
நீங்கள்தாம் ஆ குதிரைஎன்று அநந்நுவயப்படக்கூறினீர்கள். இப்
போதாவது அப்புறப்பாட்டைச் செவ்வனே ஒருமுறையாவதுபடித்
துப்பாருங்கள். இனி மேற்படி17-ம்பாட்டில், "குலையிறைஞ்சிய

* கழுமலம்—சேரநாட்டு ஓர் ஊர் "குட்டுவன் கழுமலத்தன்ன" எனக் காண்க. இது நடுநாட்டிலுள்ளது (அகம்-270).



கோட்டாழை, அகல்வயல்மலைவேலி, நிலவுமணல்வியன்கானல்......
......வரையாவீகைக்குடவர்கோவே" என்றதனால் கடல்வேலிஒருபுற
மிருப்பதைத்தழுவிக்கொண்டே மற்றொருபுறம் மலைவேலியுமுடைய
தாகக் குடவர்கோவுக்குரிய தொண்டிராஜ்யமாகிய குடபுலத்தைவிசே
டித்தமையால் மலையுங்கடலும் வேலியாகவரைந்துகொள்ளப்பட்ட
மலைமண்டிலமேகுடவர்கோவுக்குரியகுடபுலம் என்பதுபெறப்படுகிறது'
என்றுவரைந்து, கீழ்க்குறிப்பின்கண் யானைக்கட்சேய்மாந்தரன் குட
வர்கோஎன்றமையால் பேரரசன்என்றும் கூறினீர்கள். இவ்விஷயத்
தில் தாங்கள்பலவகையில் தவறினீர்கள். அதைவிளக்குகிறேன்.
தொண்டிநாடும் அதனைச்சார்ந்த பிரதேசமுந்தாம் தாங்கள்கூறுமாறு
கடன்மலையிடைப்பட்ட தொண்டிராஜ்யமாகும். தொண்டிராஜ்யம்
குடபுலத்தில் ஒருசிறுபகுதியேயென்று தாங்கள்அறியாதுபோனீர்கள்.
தொண்டிராஜ்யம் கூறவே குடபுலம்அடங்குமென்பதுஅறியாமையாய்
முடியும்.

தாங்கள்குறிப்பிட்டபுறப்பாட்டு கோச்சேரமான் யானைக்கட்
சேய்மாந்தரன்சேரலிரும்பொறையைப் புகழ்ந்துபாடியசெய்யுளாகும்.
இச்சேய்மாந்தரன் குடவர்கோக்களுள் குறுநிலமன்னனாவான். பேரர
சனேயல்லன். அவனோடுசமகாலத்துக் குடபுலத்தில் தகடூரெறிந்த
பெருஞ்சேரலிரும்பொறையும் களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரலும்,
சேரர்பரம்பரையைச்சார்ந்தானான அஞ்சிஅதிகமானும் அரசாண்
டனர். இந்நால்வருள் நம்சேய்மாந்தரன் தொண்டிராஜ்யத்தையும்
விளங்கிலையும் கொல்லியையும்ஆண்டுவந்தான். அவற்றுள் கொல்லி
அவன்கையினின்றும் பறிக்கப்பெற்றுத் தகடூரெறிந்தபெருஞ்சேர
லிரும்பொறைக்குக் காரியால்அளிக்கப்பெற்றது. பின்பு விளங்கிலும்
அவன்கையைவிட்டுப்போகும்படிநேர்வதாயிருக்கையில், அவன்அரிது
முயன்று அதனைக்காத்துக்கொண்டான். இவ்விளங்கில் மேல்கடலருகி
லுள்ளது. ஆகவே இச்சேய்மாந்தரனுக்குத் தொண்டிராஜ்யமும்
விளங்கில்நகருமே எஞ்சியன. அவற்றின் எல்லைகள் கடலும்மலையு
மாகும்.

தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறை கருவூரிடையிருந்து
அரசுசெய்தவன். அவன் கொங்குமுழுமையும்ஆண்டவன். களங்

காய்க்கண்ணிநார்முடிச்சேரல் தொண்டிராஜ்யத்திற்கு வடபாலுள்ளதும் மேல்கடலோரமாயுள்ளதுமான சிறியகுறுகிநீண்டராஜ்யத்தை ஆண்டவன். அஞ்சிஅதிகமான் சேரமான்களுக்குஉறவினனாதலால் கொல்லிக்கூற்றத்தின்கண்ணுள்ள தகடூரிலிருந்துஅரசுசெய்தவன். இந் நால்வரும்ஆண்டபெரும்பிரதேசம் ஒருசேரக்குடபுலமாகுமன்றித் தொண்டிராஜ்யம்மாத்திரம்குடபுலமாகாது. மேல்கடலோரத்தில் இத் தொண்டியைப்போலவே மாந்தையும் இராஜதானிநகராய்ப்பெருஞ் சேரலாதனால்ஆளப்பெற்றுவந்தது. இப்பெருஞ்சேரலாதன்காலத்து நெடுஞ்சேரலாதனும் குடபுலத்துஅரசாண்டவன். இந்நெடுஞ்சேரலாதனும்குடக்கோஎனப்படுவான். இதனைக்கொண்டு இவன்குடபுல முழுவதும்ஆண்டவகசக்ராதிபதிஎனல் பொருந்தாது. சேரவரசர்கள் குடபுலத்தைச் சிறியபகுதிகளாய்ப் பிரித்துப் பலராக ஆண்டுவந்ததாகவே தெரிகிறது.

மற்றுச் சேய்மாந்தரன்காலத்திருந்த சோழனும் பாண்டியனும் இராஜசூயம்வேட்டபெருநற்கிள்ளியும், தலையாலங்கானத்துச்செருவென்றநெடுஞ்செழியனுமாவர். அவ்விருவரசராலும் நம்மாந்தரன் தோற்றுவருந்தினான். (புறம் 17&125.) அக்காலத்துச்சேரரில் பேரரசன் தகடூர்எறிந்தபெருஞ்சேரலிரும்பொறையே. அவனே பதிற்றுப் பத்து எட்டாம்பத்துக்கொண்டவன். நம்மாந்தரன் புலவர்களைப் பேணியபுகழும் தன்னாட்டைச் செவ்விபெறஆண்டபெருமையுமேயுடையான். கூடலூர்கிழாரைக்கொண்டு ஐங்குறுநூறுதொகுப்பித்த பேருபகாரியாவான்.

இனித் தங்களதுவடநூலாராய்ச்சியைச்சோதிப்பேன். ஸஹ்யபர்வதமும் மலையபர்வதமும் ஒன்றென்று வான்மீகர்இராமாயணச் சுலோகம்எடுத்து மேற்கோள்காட்டினீர்கள். மகாநுபாவர்கோவிந்தராஜர் அயோமுகமாகியஸஹ்யபர்வதம் மலையபர்வதத்தின்வேறென உணர்த்தவேண்டி "தஸ்ய" என்பதற்குப் "ப்ரஸித்தஸ்ய" என்று விளக்கியருளினார். இதனால் தஸ்யஎன்பது முன்னையதைச்சுட்டாது "அப் பூதலமென்னுநங்கைதன்னையேநோக்கிப்புக்கான்" என்புழிப் போல உலகறிபொருளையுணர்த்துவதென்பதே கோவிந்தராஜர் கருத்தென்பதும் தாங்கள்கருதியபடிகொள்ளுதல் அவ்வுரையாளர்க்கும் முன்னூல்வழக்குக்கும் முற்றும்விரோதமென்பதும் தெரிந்துகொண்மின். மகாகவிகாளிதாஸர்க்கும் ஸஹ்யமும்மலையமும்வேறுவேறென்பதேகருத்தாதலை இரகுவம்சம்நோக்கி அறியலாம்.



இனித் தாங்கள் சங்கநூல், சாசஸனம்முதலியவற்றைக்குறித்து எழுதப்புகுமுன் அவற்றிற் சிறிதுபரிசயம்செய்துகொண்டபிறகு எழுதத்தலைப்படுதல் லோகோபகாரமாகவிருக்கும். 'கல்லாதமேற்கொண்டொழுகல்' யாதுவிளைக்குமென்பதையும் தாங்கள்அறிவீர்கள். இம்மட்டோடுநிறுத்துகிறேன். பிறபின்.

இங்ஙனம்

கம்பர் விலாஸம்,
மைலாப்பூர். } வெ. இராஜகோபாலன்,

15—12—17

---

ஶ்ரீ:

# பிரதிவிஞ்ஞாபனம்,

---

ஶ்ரீமத், வெ. இராஜகோபாலையங்காரவர்களுக்கு:—

ஐயா, தாங்களெழுதிய "ஒரு விஞ்ஞாபநம்"என்னும் லிகிதம் இதன் முன் வைக்கப்பட்டுள்ளது. அதில் தாங்கள் எழுதியபடி வஞ்சிமாநகர் என்ற வியாசத்திற்சொல்லும்விஷயங்களை நான் மறுக்கவரவில்லை; அவற்றின் உண்மையறியுமவாவுடையவனாகவே நின்று எனக்குத் தோன்றும் ஆக்ஷேபங்களை வெளியிட்டுவருகிறேன்.

எனக்குச் சிலாசாசனங்களிலும், சங்கநூல்களிலும், சம்ஸ்கிருதத்திலும் சிறிதும் பயிற்சியில்லையென்பது எனக்கும், என்னையறிந்த பலர்க்கும் நன்குதெரியும்; பிறர்க்கும் தெரியும்படி நானேதெரிவித்துக்கொள்கிறேன்; அதற்காகத் தாங்கள் வீணான சிரமத்தை எடுத்துக் கொள்ளவேண்டாமே.

சங்கநூன்முதலியவற்றைச் சங்கையறப்பயிற்றுவிக்கும் தங்கள் போல்வார் இங்கில்லாமையால் அவற்றைப்பயிலவியலாதிருக்கிறேன்; இனிச்சிறிதுசிறிதாகத் தங்களைக்கேட்டே நன்குதெரிந்துகொள்வேன்.

உண்மையறியுமவாவுடையோன் எல்லாம்வல்லனாயிருக்கமாட்டானாகையால் அவனறியவேண்டும் விஷயங்களை ஆக்ஷேபிக்கவேகூடாதென்றுசொல்லற்கிடமில்லையென்பதும் தாங்கள் அறிந்ததே. எனது ஆக்ஷேபம் எவ்வளவு பிழைபடுமோ அவ்வளவும் வாதகக்ஷியின் விஷயங்களை மயக்கறத்தெளிதற்குபகாரமாயிருக்குமாதலால் அவற்றைத் தாங்கள் நன்கறிந்து வெளியிட்டுவரவேண்டுமென்று நானே கேட்டுக்கொள்கிறேன்.

சங்கநூற்பயிற்சிமுதலியவற்றிற்றலைசிறந்த தாங்களெழுதுவனவற்றைச் சீர்தூக்கியாராயுந்திறமெனக்குச்சிறிதுமில்லாமையாலவற்றை விடுத்துப் பள்ளிச்சிறாருந்தெள்ளிதினறியும் பதின்மூன்றாம்புறப்பாட்டின்பொருளைத்தங்களிடமே முதலிற்கேட்டறியவிரும்பிக் கீழேகாட்டியிருக்கும்வினாக்களுக்கு விடையளித்தருளவேண்டுகிறேன். அவ்விடைவருந்திறங்கொண்டு தாங்கள்சொல்லும் மற்றவற்றையும் அறிஞர் சீர்தூக்கியறிவாராக.

1. இவன்யாரென்குவையாயின் என்னும் புறப்பாட்டு யாரை நோக்கிப்பாடியது ?
2. யார்பொருட்டாகப்பாடியது ?
3. என்னபயன் கருதிப்பாடியது ?
4. இங்குப்பயனளிக்கக்கடவனானவுதாரன் யார் ?
5. அப்பயனைப்பெறவேண்டிநிற்கும் தீனன் யார் ?
6. இவ்விருவருள்ளும் இப்பாட்டினீற்றடிநான்காலும் பெருமைதோன்ற விசேடித்து மண்டலாதிபதியென்று துதித்தற்குரியவன் பயனளித்தற்குரிய பிரஸன்னனானவுதாரனா? பயன்கொள்ளற்குநிற்கும் அப்பிரஸன்னனான தீனனா ?
7. "விழுநீர்" என்பது யாது ?
8. 'வேலி' யாவது யாது ?
9. விழுநீர்வேலி யார்நாட்டுக்கு மிக்குள்ளது ?



10. விளைந்தகள்ளும் மஞ்ஞையும் எந்நிலத்துக்குரியன ? அவை யார்நாட்டுக்கு மிகப்பொருத்தமுள்ளன ? மயிற்பீலியை நெற்போர்போலத் தொகுத்துவைத்துவிற்கும் வழக்கம் யார்நாட்டுள்ளது ?
11. "விழுநீர்வேலிநாடுகிழவோன்"என்பதற்குச்சோழன் என்று பொருள்கொள்வதிலுள்ள குணமென்ன ?
12. அதற்கு, சேரன் என்று பொருள்கொள்வதிலுள்ள குற்றம் என்ன ?
13. இப்பாட்டின் முதலிலுள்ள "இவன்" என்னும் சுட்டுக்குப் பிரகாரமாயிருப்பது யாது ?
14. "யார்" என்னும்வினா நிகழ்தற்குரிய ஐயப்பாட்டின் ஆகாரமும் அதன் நிரூபகமும் என்ன ? (அதாவது ஐயத்தின் இருதலைவடிவும் காரணத்துடன் தெரிவிக்கவேண்டுமென்பதே.)
15. அவ்வையத்திற்றெளிவுண்டாகிய ஒருதலை யாது ? அதற்கு நிரூபகமென்ன ?
16. 'என்குவையாயின்' என்னும் எச்சச்சொல்லுக்கு முடிபு யாது ?
17. தாங்கள்கருதியபடியே உரையெழுதப்பட்டிருப்பதாகவைத்துக்கொள்வோம்; பாட்டு, உரை இவ்விரண்டனுட் பிரதானம் யாது ? அப்பிரதானம் யாது ?
18. பிரதானத்தை அப்பிரதானம் பின்பற்றியிருக்கவேண்டியது முறையா ? அப்பிரதானத்தையே பிரதானம் பின்பற்றியிருக்கவேண்டுமென்பது முறையா ?
19. பாட்டு, பொருள் இவ்விரண்டனுட் பிரதானம் யாது? அப்பிரதானம் யாது? பொருளைவைத்துப் பாட்டுப்பாடப்பட்டதா? பாட்டைப்பாடிக்கொண்டு அதற்குப்பொருள்தேடிக் கொணரப்பட்டதா ?
20. இப்பாட்டுக்கேட்டோன் யார்க்கு என்னசெய்திருக்கவேண்டும் ? அதற்குப்பிரதியாக யார் யாருக்கு என்னசெய்திருக்கவேண்டும் ?

21. இப்புறப்பாட்டின் பொருளாராய்ச்சியால் அறியக்கிடக்கும் சரித்திரத்தை ஆதியோடந்தமாக யாருமறியத்தெரிவிக்க.

இவற்றிற்கு விடைவந்தவுடனே இன்னும் நான் தெளியவேண்டுமெளியனவற்றைச்சிறிதுசிறிதாகத்தெரிவித்துத்தெரியத்தெரியக்கடினமுள்ளவற்றையும் மெல்லமெல்லத் தங்களிடமேகற்றுக்கொள்ளச்சன்னத்தனாயிருக்கிறேன்.

"இனித் தாங்கள் சங்கநூல் சாசனம் முதலியவற்றைக்குறித்து எழுதப்புகுமுன் அவற்றிற்சிறிது பரிசயம் செய்துகொண்டே பிறகு எழுதத்தலைப்படுதல் லோகோபகாரமாகவிருக்கும்" என்று எனக்குப்புத்திசொல்வதைப்பற்றி மிகவும் நன்றிபாராட்டுகிறேன். இப்படிப் புத்திசொல்லும் ஆப்தரான தங்களிடமே அவற்றைத்தெரிந்துகொள்ளப் பலருமறிய நான்முயன்றுவிட்டேனாகையால் தெரிவிக்கவேண்டிய தலைப்பொறுப்புத் தங்களுடையதாயிருக்கிறது. ஆகையால் இனி அவற்றிற்பரிசயமில்லாத குற்றம் என்னுடையதாகமாட்டாது.

"கல்லாதமேற்கொண்டொழுகல் யாதுவிளைக்குமென்பதையும் தாங்கள் அறிவீர்கள்" என்று எனக்குப்புத்திசொல்லுகிறீர்கள். யான் இதுவரை அதனையறிந்தேனில்லை; இப்பொழுதுதான் தங்களையாசிரியராக வரித்ததிலிருந்தும் அறிந்துகொண்டேன். ஆயினும் தாங்கள் என்னை நன்றாயறிந்துகொள்ளாமையால் அவ்வருமைத்திருக்குறளைக் கசடறவல்லதொருசிறிதுமில்லாத என்விஷயத்திற்றவறாயுபயோகித்து வீணாக்கிவிட்டீர்களேயென்று வியசனிக்கிறேன். உண்மையாகவே கசடறவல்லதொன்றுமென்னிடமில்லாமையால் ஐயத்தால்வரக்கிடக்குமேதமொன்றுமின்றென்பதை யானுணர்ந்துள்ளேனாதலாலும், நான் கற்றது மற்றொன்றுமில்லாமையாலும் மற்று யான் எதனைமேற்கொண்டொழுகுவேனென்பதைத் தாங்களே அறிந்துரைப்பீராக.

தாங்கள் "ஒரு விஞ்ஞாபநத்"திற் சங்கநூலாராய்ச்சிவிஷயமாகச் சில கதையெழுதியிருக்கிறீர்கள்; அவற்றையெல்லாம் தங்கள்போல்வார்பலருஞ்சீர்தூக்கித் தாமுமறிந்து பிறர்க்குமறிவிப்பார்களென்று எண்ணுகிறேன்.

தாங்கள் இச்செந்தமிழ்ப்பகுதியில் வெளியிடுவிப்பித்த "ஒருவிஞ்ஞாபனம்" என்னும் விஷயத்தை மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் கவனித்து அதற்குச் செய்யவேண்டியதெதுவோ அதைத் தவறாதுசெய்வார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,
செந்தமிழ்ப்பத்திராசிரியர்.

---

உ

# * கபிலர்கவித்திறம்.

சங்கப் புலவர்தம் பங்கயச் சீரடி
தங்குக என்னுளம் துங்கமுறற் பொருட்டே.

செந்தமிழ்வளஞ்சுரத்தலில் வற்றாவூற்றாகும் சங்கம்மருவியநூல்கள் பண்டைத்தமிழ்ப்பெருமையை விளக்குதற்குத் தக்க சாதனங்களாமென்பது தமிழறிஞர்க்கெல்லாம் ஒப்பமுடிந்ததாம். அத்தகைப்பெருநூல்களையாத்த பண்டைப்புலவர்களில் கபிலர் என்னும் கவிவாணர் அறிவு ஒழுக்கம் இவற்றால் மிகச்சிறந்து, அப்புலவர்பெருமக்கள் முன்னணியில் முதன்மைபெற விளங்குபவராவர்.

கபிலர் என்னும் ஒரேபெயருடைப்புலவர்கள் தமிழிற் சிலருளர். தொல்கபிலர் என ஒருகபிலரும், ஔவை திருவள்ளுவர் முதலியவர்க்குச் சகோதரராக ஒருகபிலரும், சைவத்திருமுறைகளில் 11-ஆம் திருமுறையிற் பிரபந்தங்கள் அருளிய 'கபிலதேவநாயனார்' என ஒரு கபிலரும், 'கபிலரகவல்' என்பதிற் கேட்கப்படுபவராகிய ஒரு கபிலரும், 'கபிலபரணர்' என்னுந்தொடரில் வழக்காறுபெற்ற ஒருகபிலரும், "தமிழெனும் அளப்பருஞ் சலதியில்"† ஆங்காங்கு சம்பந்தப்பட்டுள்ளார்கள். இவர்களுடைய சரித்திரவிவரம்பலவும் நமக்கு உள்ளன உள்ளவாறு முழுதும் தெள்ளிதிற் புலப்படவில்லை. இவர்களுள் "கபிலபரணர்" என்பதிற் சுட்டப்படுபவரும், கடைச்சங்கநூல்கள் பலவற்றுள்ளும் பற்பல அருங்கவிகளை ஆக்கியோருமாகிய கபிலரே நாம் ஈண்டுத்தலையங்கத்துக் குறித்துள நல்லிசைப்புலவர். இவரே கவித்துவப்பெருமையால் இது 'கபிலரது பாட்டு' என ஆங்காங்கு உரை

---

*மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 15-ஆம் வருஷோத்ஸவக்கொண்டாட்டக் கூட்டத்தின்கண் பாலக்காட்டு ஸ்ரீமான், ராவ்பகதூர் சின்னசாமிப்பிள்ளையவர்கள் அக்ராஸநம் வகிக்க, இவ்விஷயம் பருப்பொருளாகப் பிரசங்கிக்கப் பெற்றது.

† சலதி—சமுத்திரம்.

யாசிரியச்சான்றோர்கள் மதித்துக்கூறும் பாராட்டுக்கு இலக்காய் இலங்குபவர். இப்புலவர்பெருமானியற்றியருளிய செய்யுட்களின் சிறப்பைச் சிறிதுவிரித்துரைப்பான்விழைகின்றேம்.

"அமிழ்திற்சிறந்த தமிழ்மொழியதனை, ஒன்பான் சுவைபுணர்த் தன்பால் வளர்த்தருள் நச்சும்பெருமை முச்சங்கத்துள்", கடைச்சங் கத்தார் அருளித்தொகுத்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் முத்தொகைநூல்களிலும் [எட்டுத்தொகையிற் பல இடங்களிலும்;* பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு; பதினெண்கீழ்க்கணக்கில் இன்னாநாற்பது] அத்தொகைநூல்கள் திரட்டிய உபகாரசீலர்களால் நம் கபிலருடைய பாடல்களும் நூல்களும் சேர்க்கப்பெற்றிருப்பது இவருடைய புலமை எத்துணை உயர்வாகக்கடைச் சங்ககாலத்துச்சான்றோரால் நன்குமதிக்கப்பெற்றதென்பதை நன்கு விளக்கும்.

அன்றியும் இக்கவிஞரைக்குறித்துப் பண்டைப்புலவர்கள் பாராட்டுமிடத்து, —ஒருபுலவர் தம்பாடலில் பிறபுலவர்களைச் சுட்டிப்பாடுதல் தமிழில் மிகவும் அரியவழக்கே—

"..............................வயங்குசெந் நாவின்
(1)உவலை கூராக் கவலையில் நெஞ்சில்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன்" எனப்

பதிற்றுப்பத்தில் (85) பெருங்குன்றூர் கிழாரும்,

"....................................தாழாது
செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" எனவும்,
"நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்" எனவும்,

*எட்டுத்தொகையில் இதுகாறுந்தெரிந்தவரை கபிலர் பாடல் நற்றிணையில் 20; குறுந்தொகையில் 29; ஐங்குறுநூற்றில் 100; பதிற்றுப்பத்தில் 10; அகநானூற்றில் 16; புறநானூற்றில் 30; கலித்தொகையில் 29; பரிபாடலில் குறைப்பிரதிகளிற் கபிலர்பாடல் காணப்படவில்லை; நிறைப்பிரதியோ யாண்டும் கிடைத்திலது. (1) பொய்.



"பொய்யா நாவிற் கபிலன்" எனவும்,

புறநானூற்றில் முறையே பொருந்திலிளங்கீரனாரும் (53) மாறோக்கத்து நப்பசலையாரும்¶ (126—174) இவருடைய புலமைமாட்சியேயன்றி வாய்மையாதிய நற்குணமாட்சியையும் வாயாரப்புகழ்ந்திருப்பதை நோக்குங்கால், இப்புலவர்பெருந்தகையாருடைய அருமை பெருமைகள் "வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்த" தன்மையனவாகுமென்பது வெளிப்படை.

இனி, இவருடைய செய்யுட்களின் சிறப்பைப்பற்றி ஆராயப் புகுவாம். இவருடைய செய்யுட்களிற்பல குறிஞ்சி (மலையும் மலைசார்ந்த இடமும்) வளத்தைச் செவ்வனே விளக்குவனவாகும். பத்துப்பாட்டில் இவர் பாடியது குறிஞ்சிப்பாட்டு; ஐங்குறுநூற்றிற் குறிஞ்சிக்குறுநூறு; புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை முதலிய நூல்களில் தனிப்பாக்களாகப்பாடியவற்றுள்ளும் பெரும்பாலன குறிஞ்சித்திணைப்பாக்களே. கலித்தொகையிலுள்ள ஐந்திணைப்பகுதிகளையும் ஐந்து தனிப்புலவர்கள் செய்தனரென்றும், அவற்றை நெய்தற்பகுதிக்காசிரியராகிய நல்லந்துவனார் ஒன்றுசேர்த்துத் தொகைநூலாக்கினரென்றும் சின்னாட்குமுன்னர் ஸேதுசமஸ்தானமஹாவித்வானும் செந்தமிழாராய்ச்சியில் நுண்மாணுழைபுலமுடையாருமான ப்ரஹ்மஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்கார் அவர்கள் தமக்குத் திருநெல்வேலியில் அரிதிற்கிடைத்த ஓரொற்றையேட்டுத் தனிச்செய்யுளால்* ஓர் பிரசங்கவாயிலாக விளக்கினார்கள். இதனால் கலித்தொகையில் குறிஞ்சிக்கலி பாடியதும் கபிலரேயெனத் தெரிகிறது. இவராற் பாடப்பெற்ற பிரமுகர்களில் வேள் பாரி, சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் மலையமான் திருமுடிக்காரி முதலியவர்கள் மலையரசர்களேயாதலும் நோக்கற்பாலது. மலையென்றால் அளவு, பெருமை, காட்சிநலம்

¶இதுபோல "வாய்மொழிக்கபிலன்" என அகநானூற்றிலும் (16) வந்துளது.

*பெருங்கடுங்கோ பாலை; குறிஞ்சி கபிலன்;
மருதனிள நாகன் மருதம்; —அருஞ்சோழன்
நல்லுத் திரன்முல்லை; நல்லந் துவர்நெய்தல்;
கல்விவலார் கண்ட கலி.

முதலியவற்றால் காண்பாரை மலைக்கச்செய்வதன்றோ? மலைக்காட்சியின் நயம்பற்றியன்றே தமிழ்த்தேவாகும் முருகக்கடவுள் குறிஞ்சிக்குத்தெய்வமாய்க் குன்றுதோறும் ஆடலுகந்தது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மலைவளங்களை நம் புலவர்பெருமான் வருணித்துப்பாடுமாறு இரண்டோரிடங்காட்டி விளக்குவாம்.

"அளிதோ (1) தானே பாரியது பறம்பே;
.............................................
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே;
ஒன்றே, சிறியிலை (2) வெதிரின் (3) நெல்விளை யும்மே;
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் (4) கும்மே;
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே;
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே.
வான்க ணற்றவன் மலையே; வானத்து
மீன்க ணற்றவன் சுனையே..............." (புறநானூறு. 109.)

என்பதில் மலைவிளைபொருள்களை நலம்பெறக்கூறும் வளமும்,

"கன்றாற்றுப் படுத்த புன்றலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி
ஏறா திட்ட ஏமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பும்
குன்றம்.............................."(குறுந்தொகை. 241.)

என, மாடுமேய்க்கும் சிறுவர் வேங்கைமலரும்காட்சிகண்டு முழக்கிய ஆரவாரம் மலைமுழைக்கண் எதிரொலிசெய்தலை எடுத்துக்காட்டும் இயற்கையழகும்,

"குரங்கின் தலைவன் குருமயிர்க் கடுவன்
(5) சூரலஞ் சிறுகோல் கொண்டு...........
மாரி மொக்குள் புடைக்கும் நாடன்" (ஐங்குறுநூறு. 275.)

(1) இரங்கத்தக்கதோ? வியப்பின்கண் வந்தது. (2) சிறிய இலை. (3) மூங்கிலினது. (4) முதிரும்; உதிருமென்பதுமாம். (5) பிரம்பு.



என்பதில் குரங்கின் சேஷ்டையை, அது மழைபொழியும்போது நீர்க்கொப்புளங்களைச் சிறுபிரம்புகொண்டு உடைத்தழிக்குஞ்செயலால் விளக்கும் எழிலும் எத்துணைச்சிறப்புள்ளன? இவைபோல்வன பலவுள. இவற்றாலும், குறிஞ்சிப்பாட்டில் ஒரேதொடையில் 100க்குக்குறையாத பல்வேறுமலர்களைச் சேர்த்துக்கூறுவதுடன் அவற்றுட்சிலவற்றுக்கு "வான்பூங்குடசம்," "பல்லிணர்க்குரவம்," "விரிபூங்கோங்கம்," "பல்பூம்பிண்டி," "சுடர்ப்பூந்தோன்றி," என ஏற்புள அடைமொழிகளை வழங்குவதனாலும், மலைபடுவளமெலாம் உற்றுநோக்கி உள்ளன உள்ளவாறே தெள்ளிதின்விளக்கிப்பாடும் நம் கவிஞர்திறம் நன்கறியலாகும்.

இஃதன்றியும், குறிஞ்சிபாடுதலில் இப்புலவர்பிரான்றிருவாக்கிற் பிறிதொருசிறப்பும் காணக்கிடக்கின்றது. அஃதாவது,—குன்று,மலை, இவைசார்நாடு முதலியவற்றைப் பாடும்போது அவற்றைச் சேதனப்பொருளாகச்செய்து, தம்மொடு ஒத்த உணர்வுடையனவாகப்பாவித்து, அவற்றின் துன்புக்கும் பிரிவுக்கும் துயருற்றிரங்கும் இவர்தம் மன இளக்கம் கவித்வமஹிமையில் முதற்றரமாண்புடையதாகும். இவற்றுக்குதாரணமாக,

"பெட்டாங் (1) கீயும் பெருவளம் பழுனி (2)
நட்டனை மன்னோ முன்னே; இனியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச் (3)
சேறும்(4);வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே"(புறம்-113.)
"ஈண்டுநின் றோர்க்குந் தோன்றும் சிறுவரை;
சென்றுநின் றோர்க்குந் தோன்றும் மன்ற." (5)(புறம்-114.)
"மென்றினை யாணர்த்து (6) நந்துங் கொல்லோ (7)
.............................................
இரவலர்க் கீயும் வள்ளியோ னாடே?" (புறம்-119.)

எனக் கையறுநிலையிற் பாடியுள்ள செய்யுட்களை நோக்கலாம். இவற்றால் மலையுறுவளத்தினை அழகுற விரித்துப்பாடுவதுடன், நம்கவிஞர்

(1) விரும்பியபடி. (2) முதிர்ந்து. (3) வாழ்த்தி. (4) செல்லுவோம். (5) நிச்சயமாக. (6) புதுவருவாயுடையது. (7) கெடுமோ.

பெருமான் ஈசுவரசிருஷ்டியில் உயிர்படைத்திராத இயற்கைப்பொருள்கட்கும் ஆங்காங்கு அமயம்நேர்வுழி, தமது கவீச்வரசிருஷ்டியில் உயிரும் உணர்வும் ஒருங்குவழங்கி, அவற்றோடு தாம் உறவுகலந்து, தமது உள்ளக்கருத்தை உலகுய்ய உதவும் பெருஞ்சிறப்புடையார் என்பது போதரும்.

இனிக் கபிலர்கவித்திறத்தை அவர் மாந்தரைப்பாடும் நிலையில் வைத்து நோக்குமிடத்து அவருடைய செய்யுட்களில் பலவிடங்களில் மெய்ந்நட்பின்சிறப்பு, செய்ந்நன்றிபோற்றல், மகளிர்மெலிவுக்கிரங்கல், உண்மைதுணிந்துரைத்தல் முதலிய உயர்தர ஒழுக்கநெறிகள் மிக்க ஈடுபாட்டுடன் செவ்விதின் விளக்கப்பட்டிருத்தல் காணலாம்.

புறநானூற்றில் வேள்பாரிக்கும் நம் கவிஞர்கோமானுக்குமுள்ள நட்பின் ஒட்பதிட்பங்களை விளக்கும்பாடல்கள் பலவுள. மேலே பாரி நாடு பாரிபுறம்பு இவைமாட்டிரக்கம்பூண்டு இவர் பாடிய செய்யுட்களைப் பிறிதொருபயன்கருதி, ஆண்டு எடுத்துக்காட்டியுள்ளேமெனினும், அவற்றுட்டோன்றும் அநுதாபமனைத்திற்கும் நம் பாவலர் பாரியிடம்வைத்திருந்த பற்றுதலே முதற்காரணமாகும். பாரிபட்டபின்னர், தாமும் உயிர்நீத்துத் தம் நட்புக்கடன்கழிக்கக்கருதிய நம் புலவர்பிரான், அப்பாரிமகளிரைத் தம்முடனிட்டுக்கொண்டு விச்சிக்கோன் இருங்கோவேள் என்னும் இரு சிற்றரசர்களிடம் சென்று,

> இவரே..................................
> பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்" (புறம்-200.)
> .................................. "யானே
> தந்தை தோழன்; இவர் என் மகளிர்;
> அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே.
> நீயே...............................
> யான்தர இவரைக் கொள்." (புறம்-201.)

என இரந்துவேண்டுவதை நோக்குங்கால், இவர் தமதுநட்பாளர் இறந்தபின்னரும் அவருக்குகந்தவைசெய்தலினும், ஏழையராய் ஏதுமின்றியிருந்த அந்நட்பாளர்மகளிரை "இவர்என்மகளிர்" எனக்கூறி அவர்பொருட்டிரங்குதலினும் காட்டியுள்ள மனநெகிழ்ச்சி சாலவும் வியக்கற்பாலதே.



அச்சிற்றரசர்கள் அம்மங்கையரை வேண்டாராக, பின்னர் அம்மகளிரைக் கபிலர் பார்ப்பார்ப்படுத்துத் தாம் முன்துணிந்தவாறே வடக்கிருக்கும்போது பாடியது.

> "மலைகெழு நாட! மாவண் பாரி!!
> கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
> புலந்தனை யாகுவை புரந்த யாண்டே;
> பெருந்தகு சிறப்பின் நட்பிற் கொல்லாது
> ஒருங்கு வரல்விடாஅ தொழிகெனக் கூறி
> இனையை யாதலின் நினக்கு மற்றியான்
> மேயினே னன்மை யானே, ஆயினும்
> இம்மை போலக் காட்டி யும்மை (1)
> யிடையில் காட்சி நின்னோடு
> உடனுறை வாக்குக உயர்ந்த பாலே" (2) (புறம்-236.)

இதன்கண் தாம்சிறிதளவு காலம்தாழ்த்ததும் பாரிமகளிர்தம் நன்மை கருதியேயெனினும், அதுதானும் தமக்குக்குறையெனவே தம்மனமுளையக்கருதி, மறுமையினும் அப்பாரியோடு உடனுறைவேவேண்டியஅருமை அறிஞர்களால் மதிக்கப்படுவதொன்றன்றி, இவ்வளவிற்றென்று எடுத்துரைக்குந் தன்மையதன்று.

மேலேகுறித்தாங்கு பாரிமகளிர்பக்கல் இவர்பாராட்டியகருணை ஒருபுறமிருக்க, "கொடைமடம்படுதலல்லது, படைமடம்படா"னாகிய வையாவிக்கோப்பெரும்பேகன் என்னும் வள்ளல்ஒருவனால் துறக்கப்பட்ட அவன்மனைவிகண்ணகியென்பாள்காரணமாக அவ்வேள்பேகனை, நம் புலவர்,

> "யார்கொல் அளியள் (3) தானே? நெருநல் (4)
> ..........................................
> நின்னும்நின் மலையும் பாட இன்னாது
> இகுத்த (5) கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
> முலையகம் நனைப்ப விம்மிக்
> குழலினை (6) வதுபோல் அழுதனள் பெரிதே." (புறம்-143.)

---

(1) மறுபிறப்பு. (2) விதி.
(3) இரங்கத்தக்காள். (4) நேற்று. (5) சொரிந்த. (6) இரங்கியழுவது.

என்றுபாடியிருப்பதைநோக்க, ஏழையர்க்கிரங்கும் இவர்தம் மனக்குழைவு முன்னிலும் மாண்புசிறக்கின்றது. இங்ஙனம் அபலைகளுக் காற்றும் அறச்செயலைச்சுட்டியன்றோ, ஸ்ரீராமபிரானும், வாலிவதத்திற்கு நியாயங்கூறுங்கால்,

*"ஈர மாவதும், இற்பிறப் பாவதும்,
வீர மாவதும், கல்வியின் மெய்ந்நெறி
வார மாவதும், மற்றொரு வன்புணர்
தார மாவது தாங்குந் தருக்கரோ"

எனத் திருவாய்மலர்ந்தருளினர்.

இனி, நம்புலவர்பிரான் தம் பாட்டுடைத்தலைவர்முன்னே, அவர்கட்கு நல்லறிவுண்டாகும்வண்ணம் உறுதியுரைகூறியுள்ளவற்றை எடுத்துக்காட்டுவோம். மலையமான்திருமுடிக்காரியென்போன் தன்னிடம்வரும் புலவர்களுக்கு அவரவர்கள்தரமறியாது, தனக்குப் புகழொன்றேகருதி ஈந்துவந்தானாக, அவனைநோக்கி நம் புலவர்,

"வரிசை யறிதலோ அரிதே; பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்!
அதுநன் கறிந்தனை யாயின்,
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே"(புறம்-121.)

என்னும்கட்டுரை இடித்துக்கூறியுள்ளார்.

செல்வக்கடுங்கோவாழியாதன் என்னும் சேர அரசனைப் பதிற்றுப்பத்துப்பாடிச்சென்று கண்ட நம்புலவர், அப்பாடலின் முதற்கண் பாட்டுடைத்தலைவன்புகழைச் சிறிதும் கூறாது, தம்முயிர்த்தோழனாகிய பாரிபுகழைப் பலபடப்பாராட்டி $"அப்பாரிகுணங்கள் நின்பாலும் உளவாக உலகம்சொல்லும்நின்புகழை நின்பாலேதரவந்தேன்" "இரக்கென்றுவந்து சிலபுகழ்ந்துசொல்லுகின்றேனுமல்லேன்; அஃதன்றி உண்மையொழியப் புகழ்ந்துசொல்லுகின்றேனுமல்லேன்" என்னும்பொருளடங்க,

* கிஷ்கிந்தாகாண்டம், வாலிவதைப்படலம். 99.

$ பதிற்றுப்பத்தின் உரை.



"புலர்ந்த சாந்திற் புலரா ஈகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி
...... ..............இரவல ரினைய
வாராச் சேட்புலம் படர்ந்தோன்; அளிக்கென
இரக்கு வாரேன்; எஞ்சிக் கூறேன்;
ஈத்த திரங்கான்; ஈத்தொறு மகிழான்
ஈத்தொறு மாவள் ளியனென நுவலுநின்;
நல்லிசை தரவந் திசினே. *........"

(பதிற்றுப்பத்து-61.)

எனப் பாடியிருக்கும் மனஉறுதியைநோக்க இப்புலவர்பிரான் முகமனியம்புதற்கண்ணும், புனைந்துரை சிறிதும் கூறார் என்பது தெளியப்பெறும்.

குறுந்தொகையில் (259) தலைவி தோழியைநோக்கிக்கூறும்கூற்றாக,

"ஒல்லை யாயினும் கொல்லை யாயினும்
நீயளந் தறிவை........வாய் போலப்
பொய்ம்மொழி கூறல்அஃ தெவனோ?
நெஞ்சம் நன்றே நின்வயி னானே.

எனத் தாய்க்கு அறத்தொடுநிற்கக் கருதிய தோழியின் உண்மையை ஒளியாத்தன்மையை நயந்து பாராட்டுவதும் இதனைவற்புறுத்தி, இக் கவிஞர்கோமான் "எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப், பொய்யா விளக்கே விளக்கு" என்னும் பொய்யாமொழிக்கெடுத்துக்காட்டாய், உண்மையே யாண்டும் துணிந்துகூறும் உயர்வுடையாரென்பதை மலையிலக்காக்குகின்றது. இவற்றானன்றோ "பொய்யாநாவிற் கபிலன்," "வாய்மொழிக்கபிலன்," "புலனழுக்கற்ற வந்தணாளன்," "வயங்கு செந்நாவின் ...கபிலன்" என, யாம் முன்னர் வேறிடத்துக் காட்டியாங்கு, அக்காலத்தான்றோரால் இவர் வாய்மைத்திறம்பற்றி மாண்புற மதிக்கப்பெற்றனர்?

இதுகாறும் கபிலர்கவித்திறம் கூறுமுகத்தால், குணமாட்சியும் உடன்கூறவேண்டியதாகவே, அவையிரண்டினையும் இயைத்தியைத்துக்

* வந்தேன்.

கூறிப்போந்தோம். இனிச் சிறப்பாகச் செய்யுணயங்கள் சிலவற்றை மாத்திரம் சுட்டி விளக்குவான் முயல்கின்றாம்.

உவமைநயம்.

உண்மைநவிற்சியொன்றேயன்றிப் பிறஅணிகளைப் பொருட்படுத்தாத இப்புலவர்வாக்கில் சில இடங்களில் ஆங்காங்கு மிகவும் அருமையான உவமைகள் காணப்படுகின்றன. அவ்வுவமைகள் மிகப்பொருத்தமாகஇருத்தலோடு, திருத்தமான நயங்கள் வாய்க்கும்படி செஞ்சொற்களில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் ஆளப்பட்டிருக்கின்றன. குறுந்தொகையில் தோழிகூற்றாகும்,—

¶வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை யாகுமதி;
யாரஃ தறிந்திசி னோரே; சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கு
இவளுயிர் *தவச்சிறிது; காமமோ பெரிதே."—(18)

என்னும் பாட்டில் தலைவியின் மென்மைத்தன்மைக்குப் பலாவின்சிறு காம்பையும், அவள்கொண்டுள்ள காதற்பெருக்கிற்குப் பெரிய பலாப் பழத்தையும் உவமித்திருப்பதை நுணுகிநோக்குங்கால், இவ்வரியஉவமைவாயிலாகத் தலைவியின் மென்மைப்பாடும், அவள்மனத்துள்ள மையலின் வளர்ச்சியும், அம்மையலைத் தாங்கலாற்றாது அவளடையும்தளர்ச்சியும் எவ்வளவு அழகுபெற விளக்கப்பட்டிருக்கின்றன! இவ்வுவமை நயத்தோடொட்டிப் பாட்டுடைத்தலைவனுக்கு வழங்கியுள்ள அடைமொழிகளின் ஆற்றலை உற்றுநோக்குவாம். தலைவன் எத்தகையநாட்டுக் கதிபன்? மூங்கில்வேலியோடுகூடிய (வேரிற்பழுக்கும்) வேர்ப்பலாக்களையுடைய மலைச்சாரல்நாட்டுக்குத் தலைவன். அத்தகையநாடுடையானுக்கன்றோ சிறுகோட்டிற் பெரும்பழந்தொங்கும்செய்தி நன்கு தெரிந்துளதாகும். ஆதலின் அவனைமுன்னிலைப்படுத்திஅவ்வுவமையை உபயோகித்ததன் பயனும் நயனும் சாலவும் சிறப்புறுகின்றன என்பதுவெளிப்படை. இவளுடல் என்னாது 'இவளுயிர' என்பதும், சிறிது என்பதோடமையாது 'தவச்சிறிது' என்பதும், 'உயிரோசிறிது,

¶ மூங்கில். * மிகவும்.



காமமோபெரிது' என்றுகூறியதோழி, தலைவனை 'இதை நீ அறியவில்லையே' என்று நோதற்குப்பதிலாக, 'யார் அஃதறிந்தவர் ? என்று அலக்ஷியமாகக் கூறுவதுபோலத் தைக்கச்சொல்லும் தகவுடைமையும், நீ க்ஷேமமாயிரு (செவ்வியையாகுமதி) என்று முடிக்கும் அழகும் நம் புலவர்பெருமானுடைய சொற்றொடைநயங்களைத் தெற்றெனவிளக்குவனவாகும்.

குறிஞ்சிப்பாட்டில் கற்பாறைமீது ஒரு சுனையில் தேங்கிய மா, பலாமுதலியவற்றின் தேறலைமாந்தித் தள்ளாடித்தள்ளாடியாடும் மயிலுக்கு, (திருவிழாக்காலத்தில்) ஓர் அகன்றஇடத்தில் கழாய்க்கயிற்றிலேறி, ( பக்கவாத்தியங்களுக்கேற்ப ) ஆடுதலால் தளர்ச்சியடையும் கழைக்கூத்தியை உவமைகூறுதல் மிகவும் அழகாகவும் அமைவுடைத்தாகவும் காணப்படுகிறதன்றோ ?

சிற்சில இடங்களில் உவமங்கூறுவதுபோல் தொடங்கி, உவமத்தின்இழிவைச் சுட்டிக்காட்டி, அதனால் பொருளின்உயர்வைச்சிறப்பித்தல் நம்கவிஞருடைய கவிமாட்சிகளுள் ஒன்றாகும். உதாரணமாக, சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதனைப்பாடிய புறப்பாட்டில்,

"…………… …………சேரலாதனை
யாங்கனம் ஒத்தியோ? வீங்குசெலல் மண்டிலம்!
பொழுதென வரைதி; புறக்கொடுத் திருத்தி;
மாறி வருதி; மலைமறைந் தொளித்தி;
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியால் பல்கதிர் விரித்தே." (புறம் - 8.)

எனச் சூரியமண்டலத்திற்குப் பகலென்னும்வரையறை, சந்திரனுக்கிரவிற்புறங்கொடுத்தல், மாறிமாறிவருதல், மேருவிற்குப்பின்னொளித்தல், ஆகாயத்திலும் பலகதிர்பரப்பியும் பகலொன்றையேவிளக்குதல் இக் குறைகள் இருத்தலால், அது சேரலாதனை எவ்வாறு நிகர்க்கும்? ஒருவாற்றானும் நிகராதென இழித்துக்கூறி, அச்சேரன்புகழைச் சிறப்பித்ததின்செவ்வி மிகப்பாராட்டற்பாலது.

அன்றியும், குறிஞ்சிக்கலியில், தலைவி தோழிக்குத்தலைவன்தன்னிடம்,

"......................................வந்து
நுதலும் முகமும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ,
ஐதேய்ந் தன்று பிறையு மன்று;
மைதீர்ந் தன்று மதியு மன்று;
வேயமன் றன்று; மலையு மன்று;
பூவமன் றன்று; சுனையு மன்று;
மெல்ல இயலும் மயிலு மன்று;
சொல்லத் தளரும் கிளியு மன்று;
எனவாங்கு
அனையன பலபா ராட்டி..................." (குறிஞ்சிக்கலி-19.)

நின்றதைக் கூறுமிடத்து, அவன் தன்தலைவியின் *"நுதலையும் முகத்தையும் தோளையும் கண்ணையும் சாயலையும் சொல்லையும் நோக்கா நின்று, உவமையைக்கூறநினைந்து, நுதல் வியப்புடைத்தாய்த் தேய்ந்ததாயினும் பிறையுமன்று; முகம் மறுவற்றதாயினும் மதியுமன்று; தோள் வேயின்தன்மைநெருங்கிற்று; அதுபிறக்குமிடமன்று; கண் பூவின்தன்மைநெருங்கிற்று, அதுபிறக்குமிடமன்று; சாயலிருந்தபடி மெத்தெனநடக்கும் மயிலுமன்று; சொல்லுச் சொல்லத்தளரும் கிளியுமன்று" என அவ்வப்பொருளின் அழகுக்கேற்ப உவமைகள் அமையாததன்மையைச்சுட்டி, அதனால் அவ்வுறுப்புக்களின் திறப்பாடு புலப்படுத்துவதும் அத்தன்மையதேயாம். இஃதன்றியும் ஈண்டு அடுக்குத்தொடைகளின் ஆற்றலும் அழகும் பாராட்டற்குரியனவாம்.

இவையன்றி, இப்புலவர்பெருந்தகையார் எடுத்தாளும் உவமைக்கண்ணும், தொடுத்தாளும் அடைமொழிக்கண்ணும் அகப்பொருட்டுறைக்குப் பொருந்துவனவாய உள்ளுறையுவமம் பற்பலஇடங்களிற் பொதிந்துள. இச்சிறப்பு நச்சினார்க்கினியர்போன்ற உரையாசிரியர்களால் விரித்துக்காட்டப்பட்டுள்ளது. இதற்கோர் எடுத்துக்காட்டாக, மேலே குறிஞ்சிப்பாட்டில் மயிலுக்குக் கழைக்கூத்தியைநேருரைத்த அவ்வுவமையில், பாறையைவீடாகவும், சுனையைத்தலைவன்குடியாகவும், தேறலைத்தலைவனாகவும், அதனைஉண்டமயிலை அவனோடு இன்

* கலித்தொகையுரை.



பம்நுகர்ந்த தலைவியாகவும், மயிலின் ஆடலாற்றாத்தன்மையைத் தலைவி மெலிவுற்றதன்மையாகவும் உள்ளுறையுவமம் கொள்ளக்கிடக்கின்றது. ஏனையபலஇடங்களிலும் பற்பல உள்ளுறையுவமங்கள் சான்றோருரைகொண்டு நுண்ணிதின் ஆய்ந்தறியற்பாலனவாம்.

இவ்வுவமநயத்தினை இம்மட்டோடு நிறுத்தி எஞ்சியநயங்களைச் சிறிதுஆராய்வோம். தொகைநூல்களிற்சேர்ந்துளபாக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நயம் வாய்ந்ததே. அதிலும், கபிலரோமிகச்சிறந்த கவிசிரேஷ்டர்; அகம்புறமென்னும் இருபொருளிலும் ஏற்றபெற்றி எழிலுறப்பாடும் ஏற்றம்வாய்ந்தவர். இத்தகைய கவிஞர்கோமான் கவித்திறத்தைத் தனித்தனிபாராட்ட யாம்தரமுடையேமல்லேம். தரமுடையேமெனினும், அம்முயற்சி மிகவிரிந்து, அளவிற்பெருகுவதாகும். ஆதலின் இதுகாறும் இயம்பியனபோக, எஞ்சியவற்றைப் பொதுப்பட இரண்டோரினத்திற்சேர்த்துவிளக்கி இவ்வியாசத்தைப் பூர்த்திசெய்யமுயல்வோம்.

தலைவிநயம் குறித்தல்.

தலைவியின்நிலைமைக்குத்தக்கபடி ஆங்காங்கு அவள் உள்ளக்கருத்தை நம்புலவர்பிரான் மிகச்சுருக்கமாகவெளிப்படுத்தி, அதன்கண் அதிநுட்பமானபொருளைஉணர்தொறும்உணர்தொறும் உணர்வோருள்ளந்தெவிட்டாது கவிச்சுவை நுகரும்படி பாடும் அற்புதஆற்றலுடையவர்.

"...............பெருங்கல்நாடன்
இனிய னாகலின் இனத் தியன்ற
இன்னா மையினு மினிதோ
இனிதெனப் படூஉம் புத்தே ளாடே." (குறுந்தொகை-288.)

இதில் தனக்கினியகாதலன்காரணமாக உண்டாயநோயாதலின், அந்நோயைவிட யாரும்இனிதெனக்கூறும் தேவருலகு இனிதாகுமா? என்றுகேட்பதில் அமைந்துள்ள ரஸமும்,

"........................சாரலவர் நாட்டுக்
குன்றம் நோக்கினேன் தோழி
பண்டை யற்றோ?கண்டிசின் நுதலே," (குறுந்தொகை-249.)

என்பதில் தலைவனதுமலையைநோக்கியதக்ஷணமே தனதுநெற்றியின் (முகத்தின்என்றபடி) நிறம் வேறுபாடுற்றதோ என்று உசாவியதிற் பொதிந்துள்ள நுண்மையும்,

> "யாமெங் காமந் தாங்கவும் தாம்தம்
> கெழுதகை மையின் அழுதன தோழி
> ........................................
>
> குன்ற நாடற் கண்டஎங் கண்ணே." (குறுந்தொகை-241.)

எனுங்கவியில், தானடக்கினும், தன்னிற் "சிறந்தஉறுப்பில்லை" எனத் தகும் கண்கள், நோக்கின்பம்பெற்றனவாதலின், தலைவன் பிரிவுத் துன்பத்துக்காற்றாது, அழுதலைச்செய்தன என்பதிலுள்ள நயமும், ஆகிய இத்தகைய பொருளினிமைகளோடு, அவ்வத்தொடர்மொழி களிலுள்ள செஞ்சொற்புணர்த்தல், சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் முதலிய சொல்லினிமைகளுஞ்சேர்ந்து "ஆயுந்தொறுந்தொறும்" மிக வுயர்ந்த கல்வியின்பம்பயக்குந் தன்மையனவன்றோ?

இனித் தலைவன் செயல்இயலாதியவற்றைப் பாராட்டுமிடத்தும் இன்னோரன்ன உயர்நயம்பலவும் இப்புலவர்பெருமான் செய்யுட்களிற் பரக்கக்காணலாம்.

தலைவன் சிறப் புரைத்தல் — ஐங்குறுநூற்றில், தன்கண்ணைப்பொத்திய காத லியைநோக்கிக் காதலன்,

> "சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை யன்ன
> நலம்பெறு கையின்என் கண்புதைத் தோயே!
> .........................பணைத்தோள்
> தோகை மாட்சிய மடந்தை!
> நீயல துளரோஎன் னெஞ்சமர்ந் தோரே." (293)

என்று கூறுவதில் தன்னன்பைப் புலப்படுத்திய அழகும், கலித்தொகையில்,

> "ஒன்று, இரப்பான்போல் எளிவந்துஞ் சொல்லும்; உலகம்
> புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்;
> வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போல்
> நல்லார்கட் டோன்றும் அடக்கமு முடையன்;



> இல்லோர் புன்கண் ஈகையில் தணிக்க
> வல்லான் போல்வதோர் வண்மையு முடையன்;
> அன்னா னொருவன்தன் ஆண்டகைவிட் டென்னைச்
> சொல்லுஞ்சொற் கேட்டீ" (குறிஞ்சிக்கலி-11.)

எனத் தோழியிடம் தலைவி தனதன்பன்மாட்டுக்காணப்படும் முரண் பாட்டுநலத்தை வருணித்துள்ளது எத்துணைச்சிறப்புடையது? உலகம் புரக்கும் பெருமையுடையனும்; இவளிடம் எளிவந்துஇரக்கும் சொல் லுமுடையனும். நல்லவர்களிடத்து ஆசிரியரிடம்போன்று அடக்க முடையனும்; இல்லாதவரிடத்து அவர் நல்குரவை வாட்டியோட்டும் வலிமையுடையனும். அத்தகையாளன் தனதுஆளுந்தன்மையைவிட்டு இவளிடம் சிலகேட்கின்றானும். இவையனைத்தும் எவ்வளவுஉண்மை யாகவும், விளக்கமாகவும் தலைவன்தலைவியர் மனநிலையை விரித்துக் காட்டுகின்றன! இதுவன்றோ உத்தமகவிகளின் சிறப்பு?

அகப்பொருட்சார்பாகக்கூறியவை நிற்க. இனிச் சமயோசித மாய்அமைந்துள்ள சிலபாக்களுட் பொதிதருநயங்களில் ஒருசிறிது பாராட்டி இவ்வாராய்ச்சியைப் பூர்த்திசெய்வோம்.

சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன் ஒருகால் கபிலர்கை களைப்பற்றி, "நுங்கை மெல்லியவாம்" என்றபோது, அவர் அச்சேரன் கை வலியவாதற்கும் தம்மைப்போன்றுஅவனைப்பாடுவோர்கை மெலிய வாதற்கும் காரணங்கூறுகிறார்:—

> "கடுங்கண்ண கொல்களிற்றால்
> ................................
> முன்புதுரந்து சமந்தாங்கவும்,
> ................................
> நிமிர்பரிய மாதாங்கவும்,
> ..........................
> சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
> பரிசிலர்க் கருங்கலம் நல்கவும் குரிசில்!
> வலிய வாகும்நின் தாள்தோய் தடக்கை
> ......................................
> கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது

பிறிதுதொழி லறியா வாகலி னன்று
மெல்லிய .....................
.....................நிற்பாடுநர்கையே." (புறம்-14.)

இதில் "ஒன்னார்த்தெறலும் உவந்தாரையாக்கலும்" பன்முறையும் பயின்றுபயின்று அரசன் கை வன்மைகொண்டானென்றும், அவனைப் பாடுபவர், நன்காதரிக்கப்படுதலின் இன்னுணவு உண்டுஉண்டு வேறு செயலறியாராய்த் தம்கை மென்மையேறப்பெற்றார் என்றும் பாடியதி லுள்ளபொருணயமும் " உண்டுவருந்துதொழிலல்லது " என்பதில் வருந்து என்னும் சொற்பயனும், 'நுங்கைமெல்லிய' என்றானுக்கு 'நிற் பாடுநர்கை'என மாற்றுரைகூறியதில் தோற்றும் ஆற்றலும் உய்த்துண ரற்பாலன.

மற்றும் மலையமான்திருமுடிக்காரியைப் பாடியபோது 'நினது நாடு பார்ப்பாருடையது; பொருள்........பரிசிலருடையது நினக்கு நின்மனைவி தோள்மாத்திரையல்லது உரியதொன்றுமில்லை. இங்ஙனமாகவும் நீ செருக்குறல் என்னே! என்றுபொருள்பட,

"நின்னாடே
அழல்புறந் தரூஉம் அந்தண ரதுவே;
......................கூழே* நுங்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவல ரதுவே;
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதென இலைநீ பெருமிதத் தையே." (புறம்-122.)

என்றுபாடியதில் பழிப்பதுபோற்புகழ்கூறிய நன்னயமும், இவ்வாறே 'பாரியின் புகழைப் பாவாணர் பாராட்டல் எற்றுக்கு? உலகம்புரத் தற்குப் பாரியன்றியேயும் மாரியுமுண்டன்றோ? என்னுங் கருத்துற,

"பாரி பாரி யென்று பலவேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்;
பாரி யொருவனு மல்லன்;
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே." (புறம்-107.)

* பொருள்.



என்னும் இப்பாடலில்,மாரியின்புகழ்கூறுவதுபோலப் பாரியின்ஒப்புயர்வற்ற வள்ளன்மையைப்பாராட்டும் இன்னயமும், இவைபோன்ற பொருணயம், தொடைநயம், சொன்னயம் முதலிய பன்னயமும் கபிலர்கவிகளில் மல்கிவிளங்குதல் கற்றறிந்தோரால் உற்றுநோக்கிக்கொள்ளற்பாலனவாமாதலால் அவற்றை ஈண்டு விரித்துக்கொண்டேபோந்தால் மிகப்பெருகுமென்றஞ்சி இம்மட்டோடு நிறுத்துகின்றோம்.

இதுகாறுங் கூறியவாற்றால், கபிலர் ஒரு சிறந்தபுலவர்கோமான் என்பதும்,இவர் நூலினடையானன்றியும் சீலநடையாலும் பெருஞ்சுட்டுக்குரியவரென்பதும், இவர்தம்கவிகளில், குறிஞ்சிவளம்பல கூர்ந்து விளக்கலும், இயற்கைப்பொருள்களோடு அநுதாபம் காட்டலும், நட்பாட்சி, நன்றியறிதல், மகளிர்க்கிரங்கல், வாய்மைமதித்தல் முதலிய அறச்செயல்களைத் தம்மனுபவத்தோடொட்டி மிக அழகாகப்பாடுதலும், உவமங்கூறலிற் பற்பலநயங்கள் அமைத்தலும், தலைவன் தலைவியர் உள்ளத்துணர்வினை நுண்பொருளவாகச் சிலசொல்லிப் பலவிளங்க வைத்தலும், சமயோசிதமாகப் பாட்டுடைத்தலைவர்புகழைச் சொற்பொருணயம்படச் சுட்டியுரைத்தலும், ஏனையபிறநலங்களும் செறியப் பாடும் பெருமையுடையாரென்பதும், ஒருவாறு தொகுத்துரைக்கப் பட்டன.

இவர் பத்துப்பாட்டிற் குறிஞ்சிப்பாட்டை, ஆரியஅரசன் பிரகதத்தன் என்பானுக்குத் தமிழறிவுறுத்தற்கென்றே பாடினாராதலின், இப்பெருந்தகையாளர் தமது அரும்புலமைக்கேற்பப் பெரும்பாஷாபிமானமுங்கொண்ட புண்ணியசீலரென்பதும் போதரும். இப்புலவர்பிரான்புகழ் "குன்றிற்கார்த்திகைவிளக்கிட்டன்ன" பிறக்கமுடையதாகும். தமிழ்மக்கள் இவ்வுத்தமகவியின்செய்யுட்களிற்காணப்படும் சொற்பொருணயங்களைச்சுவைத்துச்சுவைத்து நற்பயனெய்துவாராக.

வே. முத்துஸாமி ஐயன்,
எம். ஏ., எல். டி.,
மதுரை.

# உரை நுட்பம்.

நச்சினார்க்கினியர், பேராசிரியர், இளம்பூரணர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் நமக்குச்செய்துவைத்திருக்கும் உதவிகள் அளவிடற்பாலவல்ல. அன்னாருரைகளிருந்திலவாயின் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, திருக்குறள் முதலியவற்றின் நுண்பொருள்களை நம்மனோர் அறிந்து அநுபவித்தல் எளிதன்று. பண்டைச்செந்தமிழ் நூல்கள்பலவற்றைக் காலவயத்தாலிழந்து நம்பூர்வீகநிலைமையை முற்றும் விளக்கமுற அறியமுடியாமலிருக்கிற நாம் தொல்காப்பியம் முதலிய மணிவிளக்குக்களையும் இழந்துமுழு இருளிற்கிடந்துதடுமாறுவண்ணம் அவைபிற்றைப்போற்றியளித்த பெருவண்மையுடையோர் அவ்வுரையாளர்களேஎன்பதி லையமின்று. எனினும் உரையாளர்களெல்லாம் நூலாசிரியர்கள் காலத்திற்கு மிகப்பிற்பட்டகாலத்தவரேயாகலின் நூலாசிரியரின்கருத்துக்களை ஓரோவழி அறியமுடியாதுமயங்குதலும், தம் காலத்துவழக்குக்களை நூலியற்றியகாலத்துவழக்காகத் துணிந்தேற்றிக்கூறுதலும் நிகழக்கூடியவே. ஒவ்வொருநூலுக்குப் பலப்பலவுரைகள் ஏற்படக்காரணமும் அதுவே. ஆயின், அவ்வுரைகள் மிக்கதிட்பநுட்பமமைந்தனவாய் அறிதற்கரியனவாயுள்ளனவென்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்திற்கொள்ளவேண்டும். அவை அங்ஙனம் அறிதற்கரியவாயிருத்தல்பற்றியே அவ்வுரைக்குப் பொருள்காணமாட்டாத பலர் உரைப்பாடத்தையும் பலபடியாகத்திரித்திருக்கின்றனர். சிலர் பழையவுரைகளைச்சோதித்து அவற்றின்பொருளைத்திரிபுடவுணர்ந்து உரையாளர்மேற்பழிசுமத்தி நிந்தித்தெழுதியுமிருக்கின்றனர். அவற்றிற் கொவ்வோருதாரணம் ஈண்டுக்காட்டுதும். அது, பதிப்பித்தவர்களையாவது ஆராய்ச்சிசெய்தவர்களையாவது சிறிதேனுங்குறைகூறுங் கருத்தினாலும், அவர்கள்பால்மதிப்பின்மையாலுமன்று. அவர்கள்பால் எமக்குப்பெருமதிப்புண்டு. அவர்கள்செய்திருக்கும்உதவிகளைப்பாராட்டுதல் எமக்கு முதற்கடமையன்றோ ? பழையவுரைகளைக்கற்போர் அவற்றை நுணுகியாராய்ந்து அவற்றின் பொருள்காணவேண்டுமென்பது புலப்படுத்தற்கே இஃதெழுதுகின்றேம்.

திருக்குறள், காமத்துப்பால், பொழுதுகண்டிரங்கல் என்னும் அதிகாரத்தில் ஒன்பதாம்பாட்டு,



"பதிமருண்டுபைதலுழக்குமதிமருண்டு
மாலைபடர்தரும்போழ்து,"—என்பது.

இது தலைவிகூற்று. இப்பாட்டினை, 'மதிமருண்டுமாலைபடர்தரும் போழ்து பதிமருண்டுபைதலுழக்கும்'- என்று அந்நுவயித்துக்கொண்டும், 'மதிமருண்டு' என்பதனை 'மதிமருள' எனத்திரித்துக்கொண்டும் பரிமேலழகர் பொருள்கூறுகின்றார். அவர்கூறும்பொருள்,—"இதற்கு முன்னெல்லாம் யானேமயங்கிநோயுழந்தேன். இனிக் கண்டாரும்மதி மருளும்வகை மாலைவரும்பொழுது இப்பதியெல்லாம் மயங்கிநோயுழக்கும்"—என்பது. இங்கு 'பதி' என்பதற்கு அவர்கருதியபொருள் 'ஊரிலுள்ளார்' என்பதாகும். இனி, அவ்வுரையாளர் பிறர்கொள்கையாக எடுத்துக்காட்டியவுரையொன்றுண்டு. அவ்வுரை, யாம் பார்த்த புத்தகங்களில் பின்வருமாறு பலபடியாகத்திரிந்துளது.—

1. மாலைமயங்கிவரும்போழ்தெனமதிநிலைகலங்கிநோயுழக்குமென்றுரைப்பாருமுளர்" திருக்குறள் நாவலர்பதிப்பில் 4, 7 - ஆம் பதிப்புக்கள்.
2. "மாலைமயங்கிவரும் போழ்து என்பதி நிலைகலங்கி..........." நாவலர் - 8 - ஆம் பதிப்பு.
3. "மாலைமயங்கிவரும்போழ்து என்பதி மதிநிலைகலங்கி........" மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் அச்சான கையடக்கப்புத்தகம்.
4. "......போழ்தெனமதி நிலை கலங்கி" கோ. வடிவேலுசெட்டியார்பதிப்பு.
5. "......பொழுது பதிமதிநிலைகலங்கி......" ஷையார் தெளிபொருள்விளக்கவுரை.

இங்கெடுத்துக்காட்டிய இத்தனை பதிப்புக்களிலும் உண்மைப்பாடம் வெளிவராதிருப்பதே நமக்கு வியப்பைத்தருகின்றது.

நாவலர் 4, 7-ஆம்பதிப்புக்களில் உள்ளபாடத்தில் 'போழ்தென' என்றிருப்பதை 'போழ்தென்' என்று திருத்திக்கொண்டால் பொருள் பொருத்தமுறுகின்றது. அதுவே உண்மைப்பாடமும் ஆம். ஓர் புள்ளியில்லாதகுறையால் புலவர்பலரும் இங்ஙனம் மயங்குவாராயி

னர். ஏனைப்பாடங்களின்பொருத்தமின்மையை யீண்டுவிளக்கலுறின் விரியுமென்றுகருதி விடுக்கின்றாம். "மதி பதிமருண்டு" எனப் பொருள் கூறுக. 'பதி' என்பது இப்பொருள்பயத்தலை, "மதியுமடந்தைமுகனு மறியா—பதியிற்கலங்கியமீன்" (திருக்குறள்-112-ஆம் அதிகாரம்-6.) என்பதானும் அறிக.

இனி, "தாழ்காவி, னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு, மாவுதி நறும்புகை முனைஇக் குயிறம், மாயிரும் பெடையோ டிரியல் போகிப், பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த், தூதுணம் புறவொடு துச்சிற் சேக் கும்" என்னும் பட்டினப்பாலை (53-58)அடிகட்கு ஆசிரியர் நச்சினார்க் கினியரெழுதியபொருள் பின்வருமாறு:—

"விளங்குகின்ற சடையினையுடைய இருடிகள் தீயின்கண்ணே வேட்டலைச்செய்யும் நெய்முதலியவற்றின் நறியபுகையை வெறுத்துக் குயில்கள் தம்முடைய கருமையையும்பெருமையையுமுடையபேடைக ளுடனே கெடுதலையுடையவாய்நீங்கிப்போய், பூதங்கள் வாசலிலே காத்திருக்கும் புகற்கரிய அச்சத்தையுடைய காளிகோட்டத்திடத்திற் கல்லைத்தின்னும் அழகியபுறவுகளுடனே குடியிருப்பாகத்தங்கும் இள மரக்காவினையும்" "முனிவரைத்தன்னிடத்தேகொண்டிருத்தலிற் காக் காரணமாயிற்று" 'துச்சிற்சேக்கும்தாழ்காவின்' என்று அந்நுவயிக்க. சோலையின்கணிருந்தகுயில்கள் அங்குள்ளமுனிவர் வேட்கும் வேள்விப் புகையை வெறுத்தலால் அதினீங்கிப்போய்க் காளிகோட்டத்திடத்திற் புறாக்களுடனே தங்கியிருக்கும்: என்பதே அவருரையின்பொருளா கும். 'தங்கும் இளமரக்கா' என்றிருத்தலால், புறாக்கள் காவின்கட் டங்கும்' என்றுகொண்டு பிறர் மயங்குவரோ என்று கருதியே அங் ஙனம் மயங்காமைப்பொருட்டு "முனிவரைத்தன்னிடத்தேகொண் டிருத்தலிற் காக்காரணமாயிற்று என்று விளக்கமும் எழுதினார். எனவே "தங்கும்கா = தங்குதற்குக்காரணமானகா" என்று பொருள் வெளிப்படையாயிற்று.பெயரெச்சம்காரணப்பெயர்கொண்டுமுடிந்தது. ஆசிரியர் தாம்கருதியபொருளை இங்ஙனம் நன்கு விளக்கியிருப்பவும், பிறர் அதனுண்மைகாணாது மயங்குவாராயினர்.

பட்டினப்பாலையாராய்ச்சி என்னும் புத்தகத்து 70-ஆம் பக்கத் தில் பின்வருமாறு வரையப்பட்டுள்ளது:—



"(53-58) 'முனிவர்வேட்கும்புகையைவெறுத்தலாற் குயில்கள் சோலையைவிட்டுக் காளிகோட்டத்திற்போய்த் தூதுணம்புறாக்களோ டும் ஒருபுறத்தேதங்கும்' என நேரே பொருள்படுதலை விடுத்து நச்சி னார்க்கினியர் காளிகோட்டத்தைப் புறாக்களுக்குவிசேடணமாக்கிப் பின் அப்புறாக்களோடுங்குயில்கள் காவிலேசென்றிருக்குமெனக் காவுட னேசேர்த்துப் பொருளுரைக்கின்றார். அங்ஙனம் பொருளுரைப்பின் முனிவர்வேள்விவேட்குமிடம் இதுவென்பது பெறப்படாமையானும், குயில்கள் எவ்விடத்தைவிட்டு எங்குபோயிருந்தனவென்று வினவு வார்க்கு இறுக்கலாகாமையானும் அஃதுரையன்றெனமறுக்க. தவப் பள்ளிகளுள்ளகாவிலே முனிவர் வேட்கின்றாரென்றும், அங்கெழும் புகையைவெறுத்து அச்சோலையைநீங்கிப்போய்க் குயில்கள் காளி கோட்டத்திற்றங்குகின்றனவென்றும் பொருள்கூறுதலே பொருத்த முடைத்தாதல்காண்க."

இவ்விரண்டுரையையுங்காண்பவர்கள், ஆராய்ச்சியுரையாளர் மூல பாடத்திற்குப்பொருள் நன்கு அறிந்துகொண்டுளார்: எனினும் அப் பொருள்படவேயெழுதியுள்ள நச்சினார்க்கினியரின் உரைநுட்பத்தை யறியமாட்டாது இடர்ப்பட்டு மறுத்தலை மேற்கொண்டனர்: என்று உணர்வார்களாக. இங்ஙனம் ஓரோவழிமறுப்படவெழுதியிருப்பினும் ஆராய்ச்சியுரையாற் பெரிதும்பயனுண்டென்பதே எமது கருத்து.

பழைய நூலுரைகளின் பொருளையறியமாட்டாது பின்னுளோர் வழூப்பட எழுதியும், பாடந்திரித்துமுள்ளன எண்ணிறந்தன. சான்று மாத்திரையாக ஈண்டு இரண்டுகாட்டப்பட்டன. நுண்மாணுழைபுலம் உடையோர் ஆராய்ந்து கற்றுப்பயனுறுக.

மு. வேங்கடசாமி நாட்டார்.

161295
600 008.

ஸ்ரீ:

# வஞ்சிமா நகர்ப் பெயர்க்காரணம்.

---

தமிழிற்குத் திலகம்போலவிளங்கும் இச்செந்தமிழ் வாயிலாக வஞ்சிமாநகர் என்பதைப்பற்றி நீண்ட ஆராய்ச்சிகள் நிகழ்ப்பெற்று வருகின்றனஎன்பது செந்தமிழபிமானிகள் யாவர்க்கும்புலனாம். அவ்வாராய்ச்சிகளுள் வஞ்சிஎன்று சேரநகர்க்குப்பெயர்வந்ததைப்பற்றிய ஆராய்ச்சியும் ஒன்றாம்.

இப்பெருவிஷயத்தைப்பற்றியாராய்ச்சிசெய்யும் அறிவின்மிக்க ஆன்றோர்கள் வஞ்சிஎன்பதற்கு அநேகம்காரணங்களை முன்னூற்பிரமாணங்கள்கொண்டுகாட்டினர். அதாவது, வஞ்சுளாரணியம் என்னும் வடமொழிப்பெயர் தமிழில் வஞ்சிஎன்றுவந்ததாகக்கூறுவர். வஞ்சுளம் என்னும்சொல் ஓர்வகைமரத்திற்கும் கொடிக்கும்பெயராம்; எனவே அவைமிகுதியாகக்காணப்படும்காடு வஞ்சுளாரணியம்என்பதாம் என்றும், வஞ்சுளாரணியம்என்பதை வஞ்சுளாஎன ஆகாராந்தப்பதமாகப் பிரித்து அப்பதம், மிகுதியாகப்பால்கறக்கும்பசுவைக்குறிக்கும் என்று கொண்டு அப்பசுக்கள்நிறைந்த காடுஎன்றும் கூறுவர். ஓர்ஊருக்குப் பலகாரணங்கள் இருப்பதுஇயல்பே. அதற்கொப்ப வஞ்சி என்பதற்கு மேலே பலகாரணங்கள் கூறப்பட்டன. மேலேகூறப்பட்ட காரணங்களன்றியும் இன்னும் ஒருசிறந்தகாரணம் கூறலாம் என்று எளியேன் புன்மதிக்குப்புலனாகின்றது. அது:—

கொங்கநாடு மலையமாநாடு காகந்தி என்று நாடும் ஊரும் தம்மை யாள்வோராலும் ஹஸ்தினாபுரிஎன்று நிருமித்தோராலும்பெயர்பெற்று நிற்பதுகண்கூடே. அவைபோலவே வஞ்சன்என்னும் அரசனால் சிறப்பாகஆளப்பட்டது அல்லது காணப்பட்டது வஞ்சிஎன்னும்நகராம் என்றுகொள்வதே தகுதி, என்பதாம்.

மேலேகூறியவாறு வஞ்சன்என்பவன் நகரம் வஞ்சிஎன்று கொள்ளுமிடத்து அவ்வரசன்யாவன்? அவன்பண்டைநூல்களால் அறியப்பட்டவனா? என்னும்வினாக்கள் நிகழலாம். அவற்றையாராய்வாம். அவ்வரசன் சேரர்மரபில்உதித்தவருள்ஒருவன். அவன் புலவர் 
பாடும் புகழுடையோன். மிக்கவீரம்பொருந்தியவன். பரிசிலர்க்குக் கொடுக்கும்கொடையுமுடையோன். அவ்வரசனைத் திருத்தாமனார்என்னும்புலவர் பெருந்தகை,

“மதிநிலாக் கரப்ப வெள்ளி யோர்தர
வகைமா ணல்விற..................
பொறிமயிர் வாரணம் பொழுதறிந் தியம்பப்
பொய்கைப் பூமுகை மலரப் பாணர்
கைவல் சீறியாழ் கடனறிந் தியக்க
விரவுப் புறம்பெற்ற வேம வைகறைப்
பரிசிலர் வினையே......... .....
வரிசையி னிறுத்த வாய்மொழி வஞ்ச
னைசவர் குறுகி னல்லது பகைவர்க்குப்
புலியின மடிந்த கல்லளை போலத்
துன்னல் போகிய பெரும்பெயர் மூதூர்
மதியத் தன்னவென்...............றுகுடாரி
யிரவுரை நெடுவா ரிப்ப வட்டித்
துள்ளி வருநர் கொள்கல நிறைப்போய்
தள்ளா நிலையை யாகிய ரெமக்கென
வென்வர வரீஇய சிறிதிற்குப் பெரிதுவந்து
விரும்பிய முகத்த னாகி யென்னரைத்
துரும்புபடு சிதாஅர் நீக்கித் தன்னரைப்
புகைவிரிந் தன்ன பொங்கு துகிலுடீஇ
யழல்கான் றன்ன வரும்பெறன் மண்டை
நிழல்காண் டேற னிறைய வாக்கி
யானுண வருள லன்றியுந் தானுண்
மண்டை யகண்ட மான்வறைக் கருனைக்
கொக்குகிர் நிமிர லொக்க லார
வரையுறழ் மார்பின் வையகம் விளக்கும்
விரவுமணி யொளிர்வரு மழாஅற ழாரமொடு
புரையோன் மேனிப் பூத்தசல...............
முரைசெல வருளி யோனே
...................அருவிப் பாயற்கோவே.

(398) என்னும் புறப்பாட்டால் அவனதுவீரம் கொடைத்திறம் முதலியன நன்குவிளங்குமாறு பாடியிருப்பதால் அவ்வஞ்சன் என்னும் சேரன் தன்மையினை நன்கு தெரிந்துகொள்ளலாம். மேலேகூறிய புறப் பாட்டின்அடிகளிற் சிலசிதைந்திருப்பதால் பாடலின்பொருள்முழுதும் நமக்குநன்குபுலப்படவில்லை. ஆயினும் எடுத்துக்கொண்டபொருளுக்கு அப்பாடலின் சிலவடிகள் பெருஞ்சாதகமாயிருப்பதை ஆன்றோர்கள் அறிந்துகொள்வாராக.

எனவே சேரமான் வஞ்சன் என்னும்அரசன் இந்நகரை முதன் முதல் சேரநாட்டிற்குத்தலைநகராகக்கொண்டு ஆண்டிருத்தல்வேண்டும் என்று ஊகித்தறியலாம். அக்காரணத்தால் அந்நகரம் வஞ்சியென்று பெயர்பெற்றதுபோலும்.

சு. ஸ்ரீநிவாசையங்கார்

---

## வினாத்தொடர்.

---

செந்தமிழ்ப் புலமைதிகழும் சீரியர்களே!

நமது தாய்மொழிப்பயிற்சியிற் பேரவாவுடைய எனக்குத் தக்க ஆசிரியருதவி வாய்க்கும்பேறின்மையால் ஆங்காங்குச்சிற்சில ஐயம் அறியாமைகள் தோன்றுகின்றன. அவை எல்லாவற்றையும் இச்செந் தமிழ்வாயிலாக வெளியிட்டு இதன் இடச்சிறப்பையும் உங்கள் காலச் சிறப்பையும் குறைப்பது தகுதியாகாமை அறிவேன். ஆயினும் இன்றி யமையாச்சிலவற்றையாவது இங்கே வெளியிட்டு உண்மையறிந்து கொள்ளும்படி அருள்புரிய நமது செந்தமிழ்ப்பத்திராதிபர் அவர்களை யுள்ளிட்ட உங்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

### க. இலக்கணம்.

#### நன்னூல்.

க. ஆசிரியவசனம் மேற்கோள் என்பனவற்றொடுபொருளொக்கும் சொற்றொடர் பழஞ்சூத்திரத்தின் கோள் என்பதா? பழஞ்சூத் திரம் என்பதா ? இரண்டுமா ?



உ. ஆரியப்படலம், சாதவாகனம், கலைக்கோட்டுத்தண்டு என் னும் நூல்களின் விபரம் எம்மட்டில்அறியப்படுகின்றது. கலைக் கோட்டுத்தண்டு என்னும்பெயர் எக்காரணமும்பற்றியதன்றெ னற்கு வேறு எவ்வகையாதரவாவதுண்டா ?

ங. அங்காத்தல்செய்வது (அங்காப்பது) அண்ணம் எனப்படும் மேல்வாயின்றொழிலா ? அன்றிக் கீழ்வாயின்றொழிலா?

ச. உயிர்மெய் மயக்கள வின்றே. உயிர், மெய்ம்மயக்களவின்றே. என்ற பாடங்களுள் பொருந்துவதெது ? அதன்பொருள் என்னை ?

ரு. எழுத்து என்ன ஆகுபெயர் ?

சா. குரங்குமனம் அல்லது குரக்குமனம் என்னதொடர் ? கடிக் கமலம், கடிகமலம். என்னதொடர் ?

எ. ‘அல்வழி இ ஐம்முன்னராயின்’ — என்னும் சூத்திரத்துள் அஃறிணைப்பெயர்க்குமாத்திரம் விதியமைந்துகிடக்கின்றதா? அன்றி இருதிணைவினைக்கும் விதியமைந்துகிடக்கின்றதா ?

(தொடரும்.)

R. வேங்கடாசலம்பிள்ளை,

மோகனூர்.

---

அருண்மயம்.

தொல்காப்பியன்றுணை.

( செந்தமிழ்ப்பத்திரிகைக்கு எழுதியது. )

## ஐயவினா ?

---

‘இன்னிலை’ என்ற நீதிநூல் ஒன்று பார்வையிட்டேன். அதில்வரும் 31-ம் பாட்டு “அளகு மனைகாகைப்பேண வணியா” என்ற அடியை முதலாக உடைய ஒருவெண்பாவாகும். அந்நூல் உரைகாரர் ஸ்ரீ. வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் ‘அளகு’ என்றதற்குச் சேவல் என உரை கூறியுள்ளார்கள். தொல்காப்பியமரபியல் 55-ம் சூத்திரத்தில் ‘அளகு’- என்னும் சொல், பெண்பாற்பெயராக எடுத்துரைக்கப்பட் டிருக்கின்றது. ‘சேவல்’-ஆண்பாற்பெயரன்றோ ? ஆகவே ‘அளகு’ என்றற்குச் ‘சேவல்’ என்று கூறும்வழக்கம் உண்டா என்பது ஐயம். சொற்பொருள் உணர்ந்தபெரியார் இவ்வையங்களையுமாறு வேண்டு கின்றேன்.

தமிழ்மாணவன்.

ஸ்ரீ:

அருள்மயம்

தோல்காப்பியன் துணை.

# பெருவல்லம் ஓர் நூற்பெயராமா?

‘எழுதினுன் ஓலைபழுது’ என்றற்குத் தெளிவுரைகண்டுஉணர்த்திய பெரியார்செந்தமிழ்க்குப் பொருளுரையெழுதவேண்டியதற்காக இஃதொன்று எழுதப்பட்டது. ஊக்கல் ஏனைய பத்திரிகையொப்ப உண்டெனின்இளம்பூரணபேராசிரியநச்சினர்க்கினியர்-கந்தி-ஆராய்ச்சிகள் தொடர்ந்துவரும்.

முன்னுரை. திருவருளைமுன்னிட்டு இவ்வுலகில்வழங்கிவரும் மொழிகள்பல. மொழி—பாஷை. அவற்றுள் பிறமொழியின் துணையின்றித் தாமே தம்மாற்றலால் விளக்கமுற்றுநின்று நிலவும்மொழிகள் சில. அவற்றுள்ளே தமிழ்மொழியும் ஒன்று. இம்மொழி வேங்கடமுதலாகக் குமரியீறாக வழங்கிவருவது. ‘வடவேங்கடந்தென்குமரியாயிடைத் தமிழ்கூறுநல்லுலகம்’ என்பது பனம்பாரனர்கூற்று. இத் தமிழ்மொழியுடன் ஏனைப்பலமொழிகளையும் நன்கறிந்தபண்டிதர் ஒருவர் ‘மொழிகள் நின்றுநிலவற்கு எழுத்துகள்இன்றியமையாதன’ என்கின்றார். எழுத்து ஏற்படாது வழங்கிவந்த சிலமொழிகள் நாளடைவே மறைந்தமை உண்மையான் அவர்கூற்றுப் பெரிதும் ஒக்கும்.

சோல்:—எழுத்தான் ஆக்கப்பட்டதுசொல். சொல்லால் உணரப்படுவது பொருள். பொருட்கு உறைவிடம் சொல் என்க. அச்சொல்லாவது கேட்போன் ஒருபொருளைத் தன் உள்ளத்தேநினைத்து உணரும்படி தெரிவிக்கும் ஆற்றல்வாய்ந்த எழுத்தோலியே. அவ்வாற்றல் பொருளுக்கும் சொல்லாகியதனக்கும் உள்ள தொடர்பு. ‘இச்சொற்கொண்டு இப்பொருள் அறிக’ என்னும் இறைவன்கட்டளையே ஆற்றல் எனக்கூறுவாரும் உண்டு. கட்டளை-நியமம். “சொல்என்பது எழுத்தொடுபுணர்ந்து பொருள்அறிவுறுக்கும் ஓசை” என்கின்றனர் தொன்னூலுரையாசிரியர் ஒருவர். எழுத்தொலிகள் சொல்லை ஆக்கிப் பொருளறிவுறுத்தற்கு உதாரணம்:



‘தோல்காப்பியம் என்ற ஏழெழுத்துச்சொல்லைக்கூறுங்கால் ‘தோ’ என்ற முதலெழுத்தொலி முன்னர்க் கேட்போன் உள்ளத்தே சேற, ல் என்ற அடுத்த எழுத்தொலியும் பின்னர்க்,-கா-ப்-பி-ய-ம்- என்ற எழுத்தொலிகளும் முறையே ஒவ்வொன்றாகக் கூறுவோன் வாயிலாக மற்றவன்உள்ளத்தேசென்று பதியக் கேட்போன்கருத்தில் அவ்வேழும் ஓர்தொடராய்நிலைபெற்றுக் குறித்திடுஞ்சொல்லை ஆக்கிப் பொருளை அறிவுறுத்தியது என்பது.

இனிக், குறித்தபொருளை உள்ளவாறு தெரிவிப்பன ஆற்றல் வாய்ந்த சொற்களே. தமிழ்மொழியிலே அத்தகையசொற்கள் நிரம்பியுள்ளன. ‘எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே’ என்பது ஓர் பெரியார்கட்டுரையாகலான் அவையாவும் பொருள்குறித்து எழுந்தனவே. அங்ஙனம் பொருள்குறிப்புழி அவை குறிப்பாகக்காட்டுவனவும் வெளிப்படையாகக்காட்டுவனவும் என இருதிறத்தனவாகி அமையும். (முன்னூலார் “தெரிபுவேறுநிலையல்” என்றதைப் பின்னூலார் “வெளிப்படை” என்று கூறிவிளக்கினர்.) அவ்விரண்டனுள் குறிப்பாகப்பொருள் உணர்த்தும் சொற்கள் கற்றுணர்ந்த பெரியோராலேயே எடுத்தாளப்படும். வெளிப்படைச்சொற்கள்யாவர்க்கும்பொது. ‘ஆறுமுகம்’ என்ற சொல்லை ஓர் அறிஞர்—

‘ஐந்தின்முன் ஆவதென்ன ஆனனத்தின்பேர்என்ன’ என்று ஓர் வெண்பாவின் முதலடியில் குறிப்பிடுகின்றார். இவ்வடியிற்கண்டவை,

‘ஐந்தின்முன் ஆவதுஎன்ன’?—ஆறு:

‘ஆனனத்தின் பேர் என்ன’?—முகம்:

என்பன. ஆக, ஆறுமுகம் என்பது தோன்றியவாறு காண்க. ஆனனம்—வடசொல்.

இவ்வாறு அமைந்த சொற்கள் குறிப்பின்பாற்படும். இனி இக்குறிப்புச்சொற்கள் பொருள்தெரிக்கும் இயல் பல்வேறுதிறத்தனவாகும். எத்திறமாயினும் இச்சொல்லைப்பெய்து இயற்றும் பாட்டுகளில் ஆக்கியோன் உட்கிடை அறிய ஆறு உண்டு. ஆறு அறிந்தார் அறிஞர் என்ப. அவ்வாறும் அப்பாட்டிற் கிடப்பதே.

எழுவாயில் ஆசிரியர் இளம்பூரணவடிகள் தொல்காப்பியச் செய்யுளியல் 118-ம் சூத்திர-(‘நெடுவெண்பாட்டே குறுவெண்பாட்டே’)

உரைமேற்கோளாகக் குறிப்புச் சொற்களால் பொருளறியக்கிடக்குமாறுள்ள பாட்டொன்றினைக்காட்டியுள்ளார். அடுத்து அப்பாட்டினையே யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியரும் யாப்பருங்கலச்செய்யுளியல் 9-ம் சூத்திர ('பாதம் பலவரிற்பஃறொடை') உரைமேற்கோளாகஎடுத்தாண்டிருக்கின்றனர். பிறிதோரிடத்தும் அப்பாட்டுவருவது உண்டு. [அப்பாட்டினைப்பற்றிச் சிலநண்பர்க்கும் சமஸ்தான வித்வானாகியுள்ளார்ஒருவர்க்கும் எழுதியதில் ஒருபோக்காக எழுதிஅனுப்பிய முறையில் திருப்பி வந்தனத்துடன் அனுப்பினர்.]

அப்பாட்டினுக்கு நான் கண்டபொருள் பின்னே குறிக்கப்பட்டுளது. இறைவன் ஒழிந்த ஏனையர் முற்றறிவுபெற்றிலர் என்பது இப்பொருளுரை நோக்குவார்க்கும் கொள்கையாயிருப்பின் அது சால்புடைத்தாகும். நிற்க.

அப்பாட்டு வருமாறு:—

சிற்றியாறு பாய்ந்தாடுஞ் சேயரி யுண்கண்ணாய்
வற்றா வளவயலும் வாய்மாண்ட வேரியும்
பற்றார்ப் பிணிக்கும் மதிலும் படுகிடங்கு
மொப்ப வுடைத்தா யொளியோவா நீர்ப்புட்க
டத்தி யிரைதேடுந் தையலாய் நின்னூர்ப்-பே
ரொத்துணரும் வண்ண முரைத்தி யெனக்கூறக்
கட்டலர் தாமரையு ளேழுங் கலிமான்றேர்க்
கத்திருவ ரைவருங் காயா மரமொன்றும்
p. பெற்றவழி தேர்ந்துண்ணும் பேயி னிருதலையும்
வித்தாத நெல்லி னிறுதியும் பெற்றக்கா
லொத்தியைந்த தெம்மூர்ப் பெயரென்றாள் வான-வன்கை
விற்பொறித்த வேற்புருவத் தாள்.

p. - 'பெற்றவள்தேர்ந்துண்ணுதபேயினி'-(யா-வி-பாடம்) என்பது. இது பன்னிரண்டடியான்வந்த இன்னிசைப் பஃறொடைவெண்பாவாதல் யாவரும் அறிந்தபடியே.

மாட்டு:-சேயரியுண்கண்ணாய், தையலாய், நின்னூர்ப்பேர்உரைத்தி எனக்கூற, ஏழும், ஐவரும், ஒன்றும், இருதலையும், இறுதியும், பெற்றக்கால் இயைந்தது, என்றாள் புருவத்தாள், எனக்கூட்டி முடித்துக் கொள்க.



பொருள்:—ஏழு—பகரத்தில் ஏழாவதுஎழுத்து—பே
ஐவர்—ரகரத்தில் ஐந்தாவது————ரு
ஒன்று—வகரத்தில் முதலாவது————வ
இருதலை:—லகரத்தில்ஒருதலை— } —ல்
ஷை மற்றோர்தலை— } —ல
இறுதி—மகரத்தில் இறுதி— ———ம்
ஒத்துஇயைந்தவாறு:—'பெருவல்லம்'—என்பது.

ஆக ஷை பாட்டிற்கண்ட பெயர் 'பெருவல்லம்' என்னும் ஓர் ஊரைப்பற்றியது ஆகும். இவ்வூர் தஞ்சைநகரத்தை அடுத்துள்ளது.

இவ்வூரையே யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியர் எடுத்துக் காட்டி—"இதுபன்னீரடியாற் பெருவல்லத்தைச்சொன்ன பஃறொடைவெண்பா"—என்றனர். ஆகவே இப்பெருவல்லம்-ஓர் நூலின்பெயராகக்கொள்வது எப்படி? நூற்பெயரெனக்கொண்டு குறித்திருக்கின்றவர் இருவர். ஒருவர் காலஞ்சென்ற சேஷகிரி சாஸ்திரியார். மற்றவர் தற்காலத்துள்ள ஓர் அறிஞர்.

(Vide-Page-116-L-Report on a Search for Sanskrit and Tamil M. S. S. No-2. & யாப்பருங்கலவிருத்தி முதற்பாகம்-பதிப்புரையினை அடுத்த ஆராய்ச்சியுரையுள். 9 (IX)-ம்பக்கம்.)

தச்சநல்லூர் }
6—1—18 }

பெயர்விழையான்.

## * மதுரைத்தமிழ்ச்சங்கவாழ்த்து.

:o:

பூவாரம் புலர்ந்திடுமால் பொன்ஆர
மோதிருட்டுப் போமால், ஏனை
மாவாரங் களுக்குமொவ்வோர் மாசேனும்
உண்மையினால் மருமிக் கார்ந்த
தேவாரந் திகழ்மொழியில் மாவாரத்
துடனாங்கு சேர்ந்தோர் யார்க்கும்
பாவாரம் புனைகின்றேன் பழுதேதும்
இதற்கிலையாம் பான்மை ஓர்ந்தே.

* இவை திருநெல்வேலியிற்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 16-வது வருஷ மகோத்ஸவகாலத்திற் கூறியவை.

## அக்கிராஸநர்வாழ்த்து.

"நீயேஇங் (கு)உறுக" என ராஜரா
ஜேச்வரனே நிகழ்த்தி னால்
போயேசேர் வோமென்னச் சர்வகலா
சபைத்தலைமை பூண்ட நல்லோய்!
தாயேபோல் தமிழ்தாங்கும் ஆன்ரபிள் ஸர்
பி. எஸ். சிவ சாமி ஐயர்
பீ.யே.பி. எல்.கே.ஸி. எஸ்.ஐ.
இங்குற்றாய் பிறங்கி வாழி!

மகத்துவமே மிகுத்ததமிழ் வளர்த்துலகு
தழைத்திலக மறையோ னும்ஓர்
அகத்தியன்அன் றொருபழமா நேரியினில்
உரைதெளித்தான் அல்லன். என்னே!
மகத்துவமே மிகுத்ததமிழ் வளர்த்துலகு
தழைத்திலக மறையோ னும்இவ்
* அகத்தியன்இன் றொருபழமா நேரியினில்
உரைதெளித்த தருமை யன்றோ?

சந்திரசே கரப்பெருமான் இறையவனு
முன்காத்த சங்கம் போன்றிங் (கு)
இந்திரனேர் திருவுடைநம் இராஜரா
ஜேச்வரப்பேர் இறைவன் காக்கும்
செந்தமிழ்நற் சங்கத்தின் ஈரெட்டாண்
டுத்ஸவத்தைச் செகத்தோர் போற்றும்
சுந்தரஞ்சேர் நெல்வேலித் தலமதனில்
இயற்றுவித்த தூயோ ராகும்,

மன்னுபுகழ் என்.ஏ.வி சோமசுந்
தரம் எஸ்.பால் வண்ணன் சீர்சால்
நன்னயனும் எஸ்.சோம சுந்தரபா
ரதியாதி நல்லோர் யாரும்
பன்னருஞ்சீ ரொடுதழைக்க, நெல்வேலிப்
பதிதழைக்க; பாரோர் போற்றும்
தன்னிகரில் நம்மதுரைத் தமிழ்ச்சங்கம்
தழைக்க; முகில் தழைக்க மாதோ.

ம. கோபாலகிருஷ்ணையர்,

மதுரை மாணவர்செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராஸநாதிபதி.

---

* அகத்தியன் = இன்றியமையாதவன்.

## புத்தகமதிப்புரை.

---

1. மனோரஞ்சனி:—இது மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற்பகுதி வெளிவந்திருக்கிறது. அதிற் கடவுள்வாழ்த்து, மனோரஞ்சனி, செந்தமிழ்ப்பாஷையுந் தேவ பாஷையே, மனோசக்தி, பெற்றோரைப்பேணல், மாணவர் ஸ்திரீகள் பக்கம், சுகாங்கி என்னும் விஷயங்கள்வந்துள்ளன. இதன் வருடச் சந்தா ரூ 2. வெளிநாடுகளுக்கு ரூ 2—8—0. தனிப்பிரதி அணா 3. வேண்டுவோர் மனோரஞ்சனி ஆபீஸ், காரைக்குடி என்ற விலாசத் துக்கெழுதிப்பெறலாம்.

---

2. தமிழர்நேசன்:— இது சென்னையினின்றும் வெளிவரத்தொடங்கிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதன் முதற்பகுதி வந்துள்ளது. இதிற் பொதுவாக அறிவுவளர்ச்சிக்குரிய பல விஷயங்களும் வெளியிடப்பெறுமென்று தோன்றுகிறது. இதன் வருடச்சந்தா ரூ 3. தனிப்பிரதி அணா 8. வேண்டுவோர் சென்னை எறபாலுசெட்டித்தெரு, நெ-23-கட்டிடத்தில் தமிழர் கல்விச்சங்கத்தின் காரியதரிசி என்ற விலாசத்துக்கெழுதிப்பெறலாம்.

---

3. கம்பராமாயணம் (சுருக்கம்) பாலகாண்டம்:—இது, புதுச்சேரி ஸ்ரீமான், வ. வெ. ஸுப்ரம்ஹண்ய அய்யர் அவர்களால் பாலகாண்டத்துள் ஆராய்ந்தெடுத்த 545-செய்யுளால் தொகுக்கப்பெற்றிருக்கிறது. இதில் சென்னை பெரியநியாயஸ்தலநியாயாதிபதி கனம் ஸ்ரீ. தி. வெ. சேஷகிரி அய்யரவர்கள் ஆங்கிலத்தில்எழுதிய முன்னுரையும், அதற்குத்தமிழ்மொழிபெயர்ப்பும், ஸ்ரீ, வ. வெ. ஸுப்ரம்ஹண்ய அய்யரவர்கள் எழுதிய விரிவானமுகவுரையும், பாடபேதங்கள், அரும்பொருள்விளக்கம், சில இலக்கணக்குறிப்புகள், பதப்பிரிவினை விளக்கம், அருஞ்சொல் அகராதி என்னுமிவைகளும் முன்னும்பின்னும் சேர்க்கப்பட்டுள்ளன. இதன்விலை ரூபா 2. துணிக்கட்டடம் ரூபா 2—6—0. வேண்டுவோர் வ. வெ. ஸுப்ரம்ஹண்யஅய்யர், கம்பநிலயம், புதுச்சேரி; என்ற விலாசத்துக்கெழுதிப்பெறலாம்.

---

ப—ர்.

உ

நாட்டரசங்கோட்டை.

வித்தியாபரிபாலனசங்கம்.

## உபந்யாஸம் நெ. 7.

பிங்கள௵ ஐப்பசி௴ 30௳ (15-11-17.) மாலை 5-மணிக்கு சிவகங்கை வக்கீல் பிர்ம்மஸ்ரீ P. S. இராம்ஸாமி ஐயரவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். சிவகங்கை ஸாமவேதம் பிர்ம்மஸ்ரீ சுந்தர சாஸ்திரிகள் “ தர்மம் ” என்ற விஷயத்தை உபந்நியாஸித்தார்கள். பிறகு ப. ஸ்ரீ. உ. வே. இராமையங்காரவர்கள் ஸ்ரீமான், உ. வே. சீதாராமையங்காரவர்கள், ஸ்ரீமான் சுப. வெள்ளைவாரணம்பிள்ளையவர்கள் மேற்கண்ட உபந்நியாஸத்தையனுசரித்தே உபந்நியாஸித்தார்கள். பிறகு “ஆறுவதுசினம்” என்ற விஷயத்தை சிவி. லெ. சிவசுப்பிரமணியன் சிவி. பெரி. ராமஸாமி என்ற மாணவர்கள் நன்கு உபந்நியாஸித்தார்கள். பிறகு அக்கிராஸனாதிபதியவர்கள் உபந்நியஸித்தவிஷயத்தையும், உபந்நியாஸகர்களையும் புகழ்ந்தும்,மாணவர்கள் இம்மாதிரி உபந்நியஸிப்பது வித்தை முன்னேற்றமடையும்வழியென்றும் தமது நல்லபிப்பிராயத்தை வெளிக்காட்டிப்பேசினார்கள். இரவு 9-மணியோடு சங்கம் சிறப்பாய் நிகழ்ந்தது.

ஸ்ரீ. இராமையங்கார்.

---

உ

கடவுள்துணை.


# செந்தமிழ்

தொகுதி-௧௬.] பிங்கள௵ தை௴ [பகுதி-௩.

Vol. XVI. January,—February. 1918. No. 3.



...ISTRAR... 2-MAR 1918


ஸ்ரீ:

## * பண்டைத்தமிழரசர்கள்.

முன்னாள்முதல் தென்னாடாண்ட முடியுடைவேந்தர் மூவரும், குறுநிலமன்னர்பலரும், தண்டத்தலைவரும், வேளிரும் தமதுகொடைவன்மையாலும் படைமேன்மையாலும் மனத்தூய்மையாலும் மேம்படவாழ்ந்து உலகையின்புறுத்தித் தத்தம்புகழை இவ்வுலகில் அழிவுறாது நிறுவிப்போயினர். அன்னோரது திருவோலக்கத்தை நேரிற்கண்டுகளித்தும், அவரதுகொடையையேற்றுண்டு அவருடன் உறவாடிப்பொழுதுபோக்கியும்வந்தபுலவர்பலர், அம்மன்னரது வரையாத வள்ளன்மையையும், குறையாத செல்வத்தையும், அளத்தற்கரிய அறிவையும், அன்பையும், கண்ணோட்டத்தையும் தமது வடித்தநாவால் வாயாரப்பலபடப்புகழ்ந்துபாடிய பாக்கள் எண்ணிறந்தனவாகும். அவற்றுட்சிலவற்றைச் சங்கச்செய்யுளாகிய புறநானூறுமுதலிய தொகைநூல்களிற் பரக்கக்காணலாம். அந்நூல்களைப்படிப்போரை அப்பெருந்தகையாளரின் சீருஞ்சிறப்பும் காந்தம்போற்கவராதிரா. அவரது அருமைக்குணங்களையெல்லாம் செவ்வனே ஒருவரால் ஓர்ந்தறிவதொண்ணாது. அதனானன்றே புலவர் பலரும் தாந்தாம்நேரிற்கண்டவாறு அவரதுகுணங்களைப் பலவாறு

* இது திருநெல்வேலியில்நடைபெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினாறும்வருஷக்கூட்டத்திற்படிக்கும்படி, மதனப்பள்ளிக்காலேஜ் புரொபசர் ஸ்ரீமத், ஆர். ரெங்காச்சாரியர் எம். ஏ., எல். டி., அவர்களால் எழுதியனுப்பப்பெற்றது.

பாவியுள்ளார். அடக்கமென்பது அரசரது இயற்குணமன்றோ? அவ்வண்ணம் அடங்கியொழுகியோரை உண்மையிற்கண்டறியவேண்டின், அது அவரது அருஞ்செயல்கள்மூலம் சாத்தியமாகுமேதவிர வேறு வழிகளாலறிதல் அரிதினுமரிதாகும். இன்னணம் பல்வேறுபுலவர்களால் பல்வேறுசமயங்களிற்கண்டறிந்த அவரது அருமைக்குணங்கள் புறநானூற்றிற் பலவிடங்களிற்காணப்படுகின்றன. அவைகளைத்திரட்டி எழுதினால் தமிழ்வேந்தரது உத்தமகுணங்கள் பச்சைமரத்தாணி போல் படிப்போர்மனதிற்பதியுமென்றெண்ணி ஈண்டு அவற்றைத் தொகுத்துக்கூற அவாவினேன்.

நந்தமிழ்நாட்டின்சிறப்பு, தமிழ்மக்களின்சிறப்பும் தமிழ்வேந்தரின் சிறப்புங்கூடியதோர்தொகுதியன்றோ? அச்சிறப்புக்களினியல்பையும் மேன்மையையும் அறியாவிடின், நாம் தமிழ்நாட்டின்பூர்வநிலையையும் நாகரிகத்தையும் நன்கனமறிந்தவராவேமோ? ஆதலின் நாமினி வரும் முன்னோக்கிச்சீர்திருத்தஞ்செய்து நாட்டை மேனிலையடையச் செய்யக்கருதினால், நாட்டின் முன்னிலையையறிதல் அவசியம். அந்நன்னிலையைநாட்டியவர் அவ்வரசர்பெருமக்களன்றோ? அன்னோரது குணதிசயங்களைப் புறநானூற்றுக்கண்ணாடியாற் கண்டறியமுயலுவோம்.

தொல்காப்பியர்காலத்தில் தண்டமிழ்நாடு ஒன்றும், கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டுமென வரையறுக்கப்பட்டது தமிழ்வல்லோர் அறிந்ததே. ஆயினும் தென்னாட்டில் நீண்டகாலமாக 13 நாடுகளே நிலை பெற்றுவந்தனவென்று சொல்வதற்கிடமில்லை.

"வையங்காவலர்வழிமொழிந்தொழுகப்
போகம்வேண்டிப்பொதுச்சொற்பொறாஅ
திடஞ்சிறிதென்னுமூக்கந்துரப்ப
வொடுங்காவுள்ளத்தோடு." (புறம்-8.)

ஓயாது வேந்தரும் குறுநிலமன்னரும் தம்முண்மாறுபட்டுப் பொருதுவந்தனர். அதனால் நாடுகளின் நான்கெல்லைகளும் எண்களும் மாறிக்கொண்டேவந்தன. சிற்றரசர்பலர் அரண்கள்பலசமைத்துக் கொண்டு வேற்றரசரைவென்று மூவேந்தரையுமதியாது அரசு



நடாத்தி அரும்பொருள்குவித்துப்பாவலர்க்கூட்டிப்புகழொடுபோற்றி வந்தனர். ஆதலின் சங்ககாலத்திலும் அதற்குச்சற்றுப்பிறகும் ஆண்டு வந்தமன்னர் பலராவர். தமிழ்நாடுகளும் பலவாகும்.

நாடுகளெல்லாம் தேசமென்றும் மண்டலமென்றும் பின்னர் வழங்கப்பெற்றன. ஒவ்வொருமண்டலமும் பலகூற்றங்களாகவும், ஒவ்வொருகூற்றமும் பலவூர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. கூற்றத் தன்னகடும்போர்புரிந்து கடிதின்வெற்றிபெறவல்லவேளிர்களும் தண்டத்தலைவர்களும் அக்கூற்றங்கட்குத்தலைவராக அமர்ந்தனர். ஐவகை நிலனும் அந்நாடுகளில் அடங்கியிருந்தமையின், பட்டினமும் பாக்கமும், சீறூர்பேரூர்களும், பாடி, பள்ளி சேரிகளும், குறிச்சிகளும் மிகப்பலவாகவிருந்தன.

நாடுகள் அரசாட்சியில்வருவதற்குமுன் அந்நாட்டுமக்கள் முதலில் நாகரிகமற்ற அறிவிலாமாக்களாய் ஆடையின்றித்தழைகளையுடுத்துப் பச்சூன்தின்றுபசியாறி இருக்க இல்லற்று உழன்றுவந்தனரெனவும், பின்னர் அவர் சிறிது அறிவுபெற்றுக் கன்றுகாலிகளையே தமது பெருஞ்செல்வமாகப்பாராட்டிப் பல்லிடமும் புற்றரையைத்தேடிச் சென்று நிலைத்திருக்கவூரின்றி எங்குமுலாவித்திரிந்துவந்தனரெனவும், அதன்பின்னர் இந்நிலையிலுள்ள பலகூட்டத்தார்க்குள் சண்டை நிகழ்ந்து ஒவ்வொருவகுப்பினரும் ஒவ்வொரிடத்தைத்தமதாக்கிக் காடுகெடுத்து நாடாக்கி வளம்பலபெருக்கி வாழ்ந்துவந்தனரெனவும், அறிவுமுதிர்ந்த இன்னோரே நாகரிகத்திற்கு அடிப்படைபோலநின்று பிறரால் மேம்படக்கருதப்பட்டுப் பலகுடிகளுக்கும் தலைமைபூண்டு தொழில்நடத்திவந்ததால் கடைசியில் இவரே அரசாட்சியைக்கைப்பற்றி நாட்டையாண்டுவந்தனரெனவும் அறிஞர்கூறுவர். அவ்வாறு நந்தமிழ்வேந்தர்மூவர்குடிகளும் எவ்வெக்காலங்களில் எவ்வெவ்விதமாகவிருந்தனவென்பதை அளந்தறிவது இக்காலமரிதாகிவிட்டது. உண்ணாடுபிறநாடுகளின் சரித்திரம், கர்ணபரம்பரைச்செய்திகள், வடதென்மொழிநூல்கள்முதலாகியதீவர்த்திகளால் அவ்வந்தகாரகாலத்தை எவ்வளவுதூரம் முன்னோக்கித்துருவிப்பார்த்தாலும் தென்றிசைக்கண் தமிழ்க்குடிகளேசிறப்புடன்வாழ்ந்துவந்தனரென்பது தெளிவாகின்றது. இதனாற்றான் பரிமேலழகரும் 955 - ம் குறளுரையில்

"பழங்குடி தொன்றுதொட்டுவருகின்றகுடியின்கட்பிறந்தார்; தொன்று தொட்டுவருதல் சேரசோழபாண்டியரென்றாற்போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டுவருதல்" எனக் கூறிப்போந்தார்போலும்.

இனி, தற்கால ஆங்கிலதமிழ்விற்பன்னர் சிலர் மொழிநூல்மூலமாக இவ்விஷயத்தைச் செவ்வனே ஆராய்ந்து தமிழ் ஆதிஎழுத்துக்களாகிய வட்டெழுத்துக்களின் வரிவடிவுகள் அக்கேடியாபாஷைகளின் (Accadian) வரிவடிவுகளின் திரிபுகளெனவும், தமிழ்ச்சொற்களின் போக்கிற்கும் இலக்கணவமைதிக்கும் அவ்வக்கேடியாபாஷைகள் ஒத்தேயுள்ளனவெனவும், தற்காலம் பெலூசிஸ்தானத்தில் (Beluchistan) வழங்கிவரும் ஒருஜாதியாரின் (Brahni) பாஷைக்கும் தமிழ்க்கும் வேற்றுமை பெரிதுமில்லையெனவும் கண்டுபிடித்து இவைகளை ஆதாரமாகக்கொண்டு, பழந்தமிழர் பூர்வம் ஆசியாமைனர் (Asia Minor) வாசிகளெனவும், பின்னர் ஏதோ பலகாரணங்களால் தம்நாட்டைத் துறந்து பாரசீகந்தங்கி (Persia) ஆப்கானிஸ்தானம் பெலூசிஸ்தானம் வழியாகக் கணவாய்களைக்கடந்து, வடஇந்தியாவிற்குடியேறிக் கடைசியாகத்தென்னாட்டையேபொன்னாடெனப்பேணிக் கைப்பற்றி வாழ்ந்துவந்தனரெனவும் கூறுவர். இது எவ்வாறாயினும், கிருஸ்தாப்தத்திற்குப் பன்னூற்றாண்டுகட்கு முன்னரே தமிழர் தென்னாட்டில் நிலைத்து வாழ்ந்துவந்தனரென்பதும், சரித்திரவாயிலாக அவரதுபழஞ்செய்திகள் காணப்படுங்காலத்தில் தமிழ்ப்பாஷை எழுத்துவழக்கேறி இலக்கியங்கள் நிரம்பி இலக்கணவரம்புகளுளடங்கிவிட்டதென்பதும் வெளியாவதோடு தென்னாடெங்கும் தமிழரசர் திறப்பட அறத்திகிரியுருட்டி மேற்றிசைநாடுகளுடனும் உறவுபூண்டு வாணிகத்துறைகளில் தேர்ந்து மிக்கசெல்வர்களாய் வாழ்ந்துவந்தனரென்பதும் உறுதிபெறுகின்றன. அம்மன்னரைப்பற்றிச்சிறிது இனிப்புகல்வோம்.

தமிழ்வேந்தர் சுத்தத்தமிழரே. அவருள் முடியுடைவேந்தர் மூவரே. அவர்க்கடங்கியேனும் தனியாகவேனும் குறுமுடிதரித்த குறுநிலமன்னரும் சிற்றரசரும் பலராவர். அன்னோரில் வேளிரென்னும் கூட்டத்தார் மண்டிலமாக்களும் தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப்பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் நாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ்சிக்கலும் வல்லமும் கிழாரும் முதலியபதியிற்றோன்றி வேள்



எனவும் அரசு எனவும் உரிமையெய்தி, பாண்டியநாட்டில் காவிதிப் பட்டமுமெய்தி, குறுமுடிகுடிப்பிறந்து முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக்குரியவராய் மானமும் அறனும் மறனும் ஒருங்கேயமையப்பெற்று மூவேந்தருடன் ஒருங்கே எண்ணப்படும் சீர்வேந்தரெனக் கருதப்பட்டுவந்தனர். இந்த அரசுஎன்றபட்டத்தை அவ்வேளிரின் வழியினராகிய மைசூர்வேந்தர்மரபினர் இன்றும்தரித்துவருகின்றனர். இதனால் சங்ககாலத்திலும் அதற்குச்சற்றுமுன்பும் தெற்கின்கண் சுயாதிபத்தியத்தமிழ்நாடுகள் பலவிருந்தனவென்பது வெள்ளிடைமலை.

புறநானூற்றுச்செய்யுள்கள்பலவும் வேறு சங்கப்பாக்களும் அச்சுயாதிபத்தியம்பெற்றநாட்டின்வேந்தரையும், அவர் குடைக்கீழ்ப் பொலிவுபெற்றுவாழும் குடிகளையும்பற்றிப் பெரிதும்முழங்காநிற்கும். அம்மன்னருட் பெரும்பான்மையோர் மதியும் யூகமும் மாண்புடன் படைத்துக் கோல்கோடாது தம்பான்மையிற்றிரியாது மன்னுயிரைத் தம்முயிர்போற்காத்துவந்தனர். அதுகண்டு அவரதுகுடிகள் தம்மன்னரைத் தந்தையெனச்சிந்தித்துப் பக்திவிசுவாசத்துடன் அவரைப்போற்றித் தம்முயிரையும் அவர்க்காகவும் தம்நாட்டிற்காகவும் சமயநேர்ந்துழிப் போர்க்களத்தில் தியாகஞ்செய்து தமது கடனைக்கழித்துவந்தார்கள். இவ்வாறன்றிச் சிலமன்னர்கள் கோல்கோடிக் குடிகளைவருத்தி இறைகொண்டு தாம் போனபோக்கேநற்போக்காகக்கருதிக் குடிகளின் பக்திவிசுவாசங்களையிழந்து இடர்ப்படுவாராயினர். ஆயினும் பெருமைவாய்ந்த அவர்பழங்குடிகள் அவர்முன்னோர்செய்த நற்செயல்களுக்கு நன்றிபாராட்டி அன்னோர்செய்கைகளை ஒருவாறுபொறுத்து ஆற்றியிருந்து அமயம்நோக்கி இடித்துரையாலவரை நல்வழிப்படுத்தமுயற்சித்தனர்.

இவ்வாறு நிலைதிரிந்தொழுகும் மன்னரைத்திருத்தவும், நிலையில் நின்று கோல்கோடாது அரசுபுரியும் வள்ளல்களதுநாடும் வளனும் விறலும் திறனும் படையும் நட்பும் பாங்குறச்செழித்தோங்குதற்கு வழிகள்தேடவும், உபாயங்கள்கூறவும் மந்திரசபையாரிருந்தனர். அவர் ஐம்பெருங்குழுவிலடங்குவர். அவர் அமைச்சரும் புரோகிதரும் சேனாபதியரும் தூதுவரும் சாரணருமாவர். இதன்றி இவர்க்குக் கரணத்

தியலவர், கருமவிதிகள், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், தண்டத்தலைவர், யானைவீரர், இவுளிமறவர் என ஆயத்தார் எண்மருமுண்டு. இவருள் மந்தணத்திற்குரியோர் முக்கியமாக அவ்வைம்பெருங்குழுவினரே. இவருடன் ஆலோசிக்காமல் அரசன் ஒருகாரியமும் செய்யத்துணியான். ஆதலின் முன்னாளில் தமிழரசர் தமதிஷ்டம்போல் ஒன்றும்செய்வதொல்லாது. அவ்வாறு செய்யப்புகின், மந்திரிச்சுற்றம் மன்னரைத்தடுத்து இடித்துரைத்துப் புத்திபுகட்டும். ஒருவேளை அதையும்மீறி வரம்புகடந்து காரியங்களைச்செய்யின், உயிர்போலப் பிரியாதுஉடனிருந்து அரசர்க்குவேண்டியவுதவிகளைச் செய்துவரும் பெரும்புலவர்கள் செவிகைப்பச்சொற்பொறுக்கும் தம் அரசரைக்கண்டித்து அவர்க்கறிவுறுத்தி யாதோரூனமும்வாராமல் அவரைக்காத்து மானவழிகளிற்செல்லுமாறு வற்புறுத்துவர்.

மந்தணசபை எப்போதும் மறைவாகவேநடக்கும். இரவேயதற்குரியகாலம். தற்கால ஆங்கிலமந்தணசபைபோல (Cabinet) அது அந்தரங்கசபையாதலின், அச்சபைக்குவந்து தம்மதிநுட்பத்தால் ஆலோசனைகூறுமமைச்சர்முதலியோர் நடக்கும்விஷயங்களை வெளியிடார். சிலசமயங்களில் தமதுகருத்துக்கள் மாறுபடினும் பெரும்பாலாரது அபிப்பிராயத்தையேதழுவிக் கருமங்கள்நடத்தப்படுதலின் அவரும் அதற்குடன்பட்டுக் காரியங்களைத் தீர்மானப்படிசரிவரநடத்துவதில் பின்வாங்கமாட்டார். அரசியற்றுறைகள் பல கூறுபடுதலின் ஒவ்வொருவரும் ஒருகூற்றில் தலைமைவகித்துநின்று திறப்படவினைபுரிவர்.

"பால்புளிப்பினும்பகலிருளினும்
நால்வேதநெறிதிரியினும்"

அன்னோர் தம்நிலையில் மறந்துந்திரியார். "விரிசீர்த்தெரிகோன்ஞமன் போல" ஒருபுறம்கோடாதுநிற்பர். அரசர்க்குப்பிழையிழையார். அவரிடம்பொய்கூறார். குணமாண்பும், வினைத்திட்பமும், வினைத்தூய்மையும், சொல்வன்மையும், கேட்டார்ப்பிணிக்குந்தகைமையும், குறிப்பறிந்தொழுகும் திறமையும் முற்றி, மாண்டகல்வியும் மானமும், நிரம்பியவராதலின் அரசன் அறிகொன்றறியானெனினும் அமைச்சர் ஒருதலையாகத் தாம் துணிந்தபொருள்களை அரசர்க்கு எடுத்துக்காட்டி உறுதிகூறிவந்தனர்.



அரசர் வாழையடிவாழைபோல் வழிவழியாகவாண்டுவந்தனர். தமதுமுப்பில் மூத்தபிள்ளைக்கே அவர் இளவரசுப்பட்டம் கட்டுவது வழக்கம். "பனிக்கயம்மண்ணி" மாலைசூடி, "தெண்கிணைமுன்னர்க் களிற்றினியலி"க்கன்னிப்போரில் தமது ஆண்மையையும் அஞ்சாமையையும் யாவரும் வியப்பக்காட்டிய அரசிளங்குமரர்களைக் குடிகள் இவரே எமக்கு அரசராவதற்குரியரெனத்தேர்ந்தெடுத்துச் சிற்றரசுப்பட்டமும் வரிசைகளும் அவர்க்களிப்பதுமுண்டு.

பகைவராற்சூழப்பட்டும் ஒற்றர்களாற்றுருவப்பட்டும் அகப்பகைபுறப்பகைநிரம்பியவக்காலத்தில், அரசர் திடீரென்றெழும்போர்க்குத் தயாராகவிருக்கவேண்டியவராவர். ஆதலின் அவர்மெய்வலியும், அடியாரையும் படியாரையும் வயப்படுத்தும்பொலிவும், கல்வியும் நிரம்பிக் குற்றம்நீங்கிச்சுற்றந்தாங்கி, குடிகளஞ்சும்வினைகளைந்து படிகாவல் செய்துவந்தனர். பகைநிகழின்,

"காலமறிந்தாங்கிடமறிந்துசெய்வினையின்
மூலமறிந்துவிளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வனசூழ்ந்துதுணைமைவலிதெரிந்
தாள்வினையாளப்படும்." (நீதிநெ-ம்.)

என்றபடியே, காலம்வாய்த்துழி அவரைவாளமரின்கட்புறமிடத்தாக்கியும் நிர்மூலமாக்கியும் விடுவர். அத்தெவ்வர் தணிந்துபணிந்துவிட்டால் அவர்க்கருள்புரிவர். இதை மனதிற்கொண்டே முடிநாகராயரும்,

"போற்றார்ப்பொறுத்தலும்சூழ்ச்சியதகலமும்
வலியும்தெறலுமளியுமுடையோய்."

என உதியன்சேரலாதனைவிளித்தனர்.

அறுவகைப்பட்ட அரசர்பக்கமென அறுதொழில் அரசர்க்கு வகுத்தனர், அவையாவன:—வேதம், அறநூல், நீதிநூல் முதலியவை ஓதலும், இராஜசூயம், துரங்கவேள்வி, களவேள்விமுதலிய வேட்டலும், வரையாதின்முகத்தோடீதலும், தன்மண்ணைப்பகைவருண்ணாதுகாத்தலும், ஆவுமானியற்பார்ப்பனமாக்களும் பெண்டிரும் தம் பழங்குடிகளும் துயருறுவண்ணங்காத்தளித்தலும், பிழைத்தோரைப் பொறுத்தலுமுதலியன. இத்துடன் படைக்கலம்பயிறலையும் சிலர் கூட்டுவர்.

இனி அரசர்கருமங்களையெல்லாம் அறம்பொருளின்பமென்ற முக்கூற்றிலுமடக்குவர். அம்மன்னர்,

......"ஊற்றம்பிறரறியாது
பிறர்கூறியமொழிதெரியா
ஞாயிற்றெல்லையாள்வினைக்குதவி
யிரவினெல்லைவருவதுநாடி." (புற-366.)

வினைபுரிவர். இதனால் பகலெல்லாம் அறத்திலும் பொருளீட்டுதலிலும் அப்பொருளை அனுபவிப்பதிலும் அரசர்க்குக்கழியுமென்பதும், இரவில் மறைவாக ஐம்பெருங்குழூஉக்களோடமைவுற யாவற்றையும் அரசர் நாடுவரென்பதும் விளங்கலாகும். பகலில் முதற்பத்துநாழிகை அவர்மனது அறத்தின்வழிப்பட்டுநிற்கும். அதிகாலையில் சங்கத்தொனி முழங்கும். அதைக்கேட்டு அரசர்துயிலெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்து யாவருங் கண்டுகளிகூறவும், அந்தணர்வாழ்த்தவும், சூதர் மாகதர் ஏத்தவும், புலவர்பாடவும் (மிகவும் கம்பீரமாக வெண்கொற்றக்குடைநிழற்கீழ்) கழலும் முடியும் மாலையும் ஆபரணங்களுந்தரித்து, சாமரைமுதலிய பலவகை அரசசின்னங்கள்புடைசூழ அரியாதனத்தில் அமர்ந்திருப்பர். அப்போது அவரது நாளோலக்கம் வெகுசிறப்பாகவிருக்கும். நியாயமுரசும் தியாகமுரசும் உரியகாலங்களில் இழுமெனமுழங்கும். பரிசிலர்யாவரும் இடையின்றிக்குறுகி அண்ணாந்துசெல்வர். அரசரிடம்குறையிரப்போரும் முறையிடுவோரும் அங்குத் தடையின்றி உய்க்கப்படுவர். அரசர் அவரதுகுறைகளையும் விருப்பங்களையும், பருகுவதன்ன ஆர்வத்துடன்கேட்டு வேண்டியவாறு அவரைத்திருப்திப்படுத்துவர். கொடியோரைத்தண்டிப்பர். நலிந்தோர்க்கின்னருள் சுரந்து தண்ணளிசெய்வர். "ஏற்றப்பார்ப்பார்க்கீர்ங்கைநிறையப்,பூவும் பொன்னும்புனல்படச்சொரி"வர். (புற-367.) பாவலர்க்கும், பாணர்க்கும், கூத்தர் விறலியர்க்கும் முகமன்கூறி அவரவர்பசிப்பிணிதொலையுமாறு, துகிரும்முத்தும் மணியுங்கலனும்"ஆடுநடைப்புரவியும் களிறுந் தேரும் வாடாயாணர்நாடுமூரும்" (புறம்-240.) உலகமுவப்பஅளிப்பர். பாணத்தலைவர்க்கு,



"அழல் புரிந்த வடர் தாமரை
யைத டர்ந்த நூற் பெய்து
புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல்
பாறுமயி ரிருந்தலை பொலியச்" சூட்டுவர். (புறம்-29.)

இன்னணமளித்தபிறகு இடைப்பத்துநாழிகைகளையும் தமது சுற்றத்துடனும் உரிமைமகளிருடனும் இனிதாகக்கழிப்பர். அந்நாளில் அரசியர்வதியும்வரைப்புள் ஆடவர்குறுகலாகாதென்னும்விதி இருந்த போதிலும், கண்டிப்பாய் அவர் வெளியேறியுலாவுவதுகூடாதென்ற நியதி இருந்ததாகப் புலப்படவில்லை. கடைப்பத்துநாழிகைகளில் பொருள்வருவாய்களை உற்றுநோக்கியும், தமதுதலைவாயிலில் திரண்டு அளந்துகடையறியாவருங்கலவெறுக்கைசுமந்துவந்தோரிடந் திறைகொண்டும் இவ்வாறு ஈட்டியபொருளை அறம்பொருளின்பவழிகளிற் செலவிட்டும் காலம்போக்குவர். இவ்வண்ணம் அரசர்,

"நமரெனக்கோல்கோடாது
பிறரெனக்குணங்கொல்லாது
ஞாயிற்றன்னவெந்திறலாண்மையும்
திங்களன்னதண்பெருஞ்சாயலும்
வானத்தன்னவண்மையுமூன்றும்." (புற-55.)

ஒருவடிவெடுத்தாற்போல விளங்குவர்.

"வரிசையறியாக்கல்லென்சுற்றமொடு
பரிவுதபவெடுக்கும்பிண்டம்." (புற-184.)

ஒருபோதும் நச்சார்.

"மன்னனுயிர்த்தேமலர்தலையுலகம்." (புற-186.)

என்பதனைத்திடமாகக்கைப்பற்றி ஒழுகிவருவர். மன்னவர் உலகினுயிராயின், மலர்தலையுலகத்துள்ள அவரதுகுடிகள் உடலாவரன்றே? ஆகலின் தம்முடலாகியகுடிகட்குச் சிறிதும் ஏதம்வாராமற்காத்துத் தம் நாடு,

"பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும்வளனுஞ்சுரக்க." (மணிமே.)

வேண்டியவினைகளை வாய்ந்துதொடங்கி மெய்வருத்தம்பாராது அவற்றைச் செவ்வனே நடாத்திவருவர். தம் நல்லொழுக்கங்களைப் பிறருமறிந்துகைக்கொள்ளுமாறு அரசர்நடத்திக்காட்டவேண்டியவராதலின்,

"..................மெலிவிலுள்ளத்
தானுடையாளர்கேண்மையோடியைந்து." (புற-190.)

"மாரிபொய்ப்பினும்வாரிகுன்றினும்
இயற்கையல்லனசெயற்கையிற்றோன்றினுங்
காவலர்ப்பழிக்குமிக்கண்ணகன்ஞாலம்." (புற-35)

என்பதை நன்கறிந்து,

"நொதுமலாளர்பொதுமொழிகொள்ளாது
பகடுபுறந்தருநர்பாரமோம்பிக்
குடிபுறந்"தந்து. (புற-35.)

மானத்தின்மிக்க அறனும்பொருளுமின்பமும் தமக்கில்லையென மனத்தில்திடமாக இருத்தி, நியாயமாக எவ்வளவு தமக்குச்சேரவேண்டுமோ அவ்வளவே (அதாவது ஆறிலொருகடமை) குடிகளிடங்கொள்ளுவரேல், அவர்நாடுதழைத்தோங்கும். அவர்குடிகளும் செல்வர்களாகி அரசர்க்குறுதுணையாவர். அவ்வாறுசெய்யாது அறிவைத்திரித்து இருமையுங்கெடுக்கும் விடரும் தூர்த்தரும் நடருமுள்ளிட்ட குழூஉக்களைத் தம்பக்கத்திருத்தி அவர்பால் நேயம்வைத்துக் குடிகளை வருத்தித் தம்வயிறருத்துந்தகையிலாவரசர் விரைவில் துன்புறுவர். அவர்நாடு செல்வமும்வளனும்சேரக்குன்றிச் சீர்கெட்டுப் பாழாகும். உட்பகைகள்நிரம்பி அவை புறப்பகைகளுக்குத்துணையாகி அரசர்க்குத்தீராப்போரும் ஆராத்துயரமும் விளைவிக்கும்.

அரசர் தமதுகொற்றவெண்குடை காய்சினக்கதிரவன்கிரணம் தம்மேற்படாமல் மறைத்தற்காக எடுத்துப்பிடிக்கப்பட்டதெனவெண்ணுதல் தவறு. தமதுகோலின்கீழ்வாழும் குடிகளை வருந்தவிடாது தம் நிழற்கீழிட்டுக்காப்பதற்கே எடுத்துப்பிடித்ததென அவர் அறிதல் வேண்டும். அவ்விதமறிந்து குடிபுறந்தரின், அக்குடிகள் செய்ந்நன்றிகொல்லாச்செல்வர்களாகி, அரசரிடம் பக்தியும் விசுவாசமும் வைத்துப் போரிலவர்க்குப்பெருந்துணைவராகி,



"எஃகுளங்கிழியவிருநிலமருங்கி
னருங்கடனிறுத்தபெருஞ்செயாள"ராவர். (புற-282.)

அப்போது, "வருபடைதாங்கிப்பெயர்புறத்தார்த்துப்
பொருபடைதரூஉங்கொற்றமுமுழுபடை
யூன்றுசான்மருங்கினின்றதன்பயனே." (புற-35.)

என்பது தெள்ளிதிற்புலனாகும். "The battle of Waterloo was fought on the foot-ball filed of Eton" என்று ஆங்கிலர் தற்காலம் பெருமையாகப்புகல்வதும் இக்கருத்தைப்பற்றியன்றோ? இனி அரசரது போர்த்திறத்தைப்பற்றிச் சிறிதுபுகல்வோம்.

தற்காலத்தில் அரசர்கள் பெரும்பாலும் போர்க்களஞ்செல்வதில்லை. முற்காலத்திலோ அரசர் தாமேபடைவகுத்துச்செல்வர். அரசரெப்படியோ அவ்வாறே அவர்வீரருமிருப்பாராதலின், தமதுவீரர்க்கு உற்சாகமுமூக்கமும் அளிப்பதற்கும், தமதுபெருமையையும் வீரத்தையும் வெளிப்படுத்துவதற்கும், அஞ்சாநெஞ்சராய் அமர்க்களம்புகுவர். வாளே உழுபடையாக வரும்படையேவுழுநிலமாகச்செற்றத்தைவித்தி வெற்றிப்புகழைவிளைவிக்குமந்நாளில், ஓ ய் வி ன் றி ப் போ ர் விளைந்துகொண்டேயிருந்தது. ஒவ்வொருநாளும் அரசரும் வீரரும் புதிதுபுதிதாகப் புகழைப்படைத்துக்கொண்டேவந்தனர். விழுப்புண்படாத நாளெல்லாம் வீணாளெனக்கருதினர். இவ்வாறு தறுகணாண்மையையும் தளராவுள்ளத்தையும் தரித்த வீரரும் அவர்தலைவரும் போரென்றாற் பெருமகிழ்ச்சிகொள்வர். போர்க்கெடுத்தபறையறை கேட்டால் அவர் உள்ளம்பூரித்து உவப்பர்.

"உட்பகையொருதிறம்பட்டெனப்புட்பகைக்
கேவானாகலிற்சாவேம்யாமென," (அவாது)
"நீங்காமறவர்வீங்குதோள்புடைப்பர்."

எதிர்ப்போரில்ராயின் வீரசுவர்க்கம்பெற மலையுச்சியேறி வரைபாய்ந்து உயிரிழப்பர். இத்தகைய,

"எறிகோலஞ்சாவரவினன்ன
சிறுவன்மள்ளரும்..............

பொதுவிற்றூங்கும்விசியுறுதண்ணுமை
வளிபொருதெண்கண்கேட்பின்
அதுபோரென்னும்." (புற-89.)

அரசரும் அக்காலத்து மிகப்பலராவர்.

போர்மூண்டபோது வெட்சிமிலைந்து ஆநிரைகவர்ந்தே எதிரியின்வன்மையைச்சோதிப்பர். அவர் நிரையைமீட்டிக்கொண்டால் வஞ்சிசூடிவஞ்சினங்கூறிப்பகைநாட்டின்மேற்படையெடுத்துச்செல்வர். இதுகண்ட பகைப்புலவரசர் நற்படையுடன் காற்றெனக்கடுகவேகி மாற்றலரைத்தாக்குவர். இவ்வாறு அரசர்கள் தம்படையாளமாலையுடன் புறத்திணைமாலையையுஞ்சூடிப்பொருவது அக்காலத்தில் பெருவழக்காகவிருந்தது. இருபடையும் கைகலந்தபோது வீரர் வெகு ஆவேசத்துடன் போர்புரிவர். பகைவருட் சிறந்தபோர்வீரர்களைத் தெரிந்தெடுத்து அவருடன் தன்னந்தனியே மல்யுத்தஞ்செய்து அவரை வீழ்த்துவதில் அவ்வீரர்க்குப் பிரியமுண்டு. படைவகுத்ததண்டத்தலைவனுக்குத் தாமே முன்வந்து அரசர் ஊக்கமும் உற்சாகமுமளிப்பர். பின்னிட்டசேனையை எதிர்ப்பதற்கு அவர்முன்னிடார். போரிற்பணிந்தோர்க்கும் தம் நாடிழந்துவருந்தி அடைக்கலமாகவந்தோர்க்கும் அபயமளித்து அவர்க்கு உறுசெல்சார்பாகித் தண்ணளி செய்வர்.

இனி, முடிமன்னர் பகைமேற்சேரின் ஊர்வலமாகச்செல்வதுண்டு. இதுதான் அக்காலமுறை. படையெழுச்சிக்குமுன்பு, நன்முகூர்த்தத்தில் குடையையும் வாளையும் புறவீடுவிடுவர். இந்நாவலந்தீவை வலமாகத்தானையுடன்கடந்துதிக்குவிஜயஞ்செய்துதுரங்கவேள்வியும் இராஜசூயமும் வேட்டோரில் தமிழ்மன்னருமுள்ளார். அவர் படையுடன்சென்று பாசறையில் இருக்கும்போது தம்வீரர்களைப் போலத் தாமும் சுகானுபவங்களைவிட்டுப் படைவீட்டின்பரிபவங்களை அனுபவிப்பர். புண்பட்டவீரரை நேரிற்சென்றுகண்டு அவர்திறத்தை மெச்சி இனியவைகூறி அவருள்ளங்குளிரச்செய்வர். மானத்தையணிகலமாகக்கொண்டமன்னர் போரிற்புறங்கொடார். உயிரினும் மானமே சிறந்ததெனமதிப்பர். புறப்புண்ணுணிவடக்கிருத்தற்குத்துணிபவரைப் போரிற்புறங்காண்டலெங்ஙனங்கூடும்? வீரசுவர்க்கமே



தமக்குமேலானகதியெனப்பாவிக்கும் அவர் இறத்தற்கஞ்சுவரோ? இங்ஙனமஞ்சாதுபொருது பலபோரிலும்வெற்றிபெற்ற அவரது உடல் பலவாறுவடுப்பட்டிருக்கும்.

"வாஅள்வாய்த்தவடுவாழ்யாக்கையொடு
கேள்விக்கினியைகட்கின்னாயே." (புற-167.)

என்றபடி அக்காலவீரர்களதுமேனியின் இயற்கையழகு காயவடுக்களாற் குன்றியிருக்கும்; காண்பதற்குக் கண்களிகூராது. அவரது இன்புகழைக்கேட்பதற்கோ மிகுதியாகச்செவிதாழும். செருப்புலத்தில்வீழாது நோயானிறந்தமன்னரை அந்தணர் தருப்பையிற்கிடத்தி வீரசுவர்க்கம் புகுகவென வாளோக்கியடக்குவர்.

பகைவேந்தரைப்பொருதுவென்ற மன்னர், அவரை முரசமோடொருங்ககப்படுத்தமுயல்வர். பகைவேந்தன் இறந்துவிட்டால் அவனதுபொன்முடியைக்கவர்ந்து வீரக்கழலாகச்செய்து தம்காலிலணிந்துகொள்வர்.

"ஒன்னார்யானையோடைப்பொன்கொண்டு
பாணர்சென்னிபொலியத்தைஇ
வாடாத்தாமரை"யுஞ்சூட்டுவர்.

அவரது காவன்மரத்தைவெட்டிக்கொணர்ந்து தம்யானைகட்டுந்தறிகளாக அதைமாற்றிநாட்டுவர். வைரம்பாய்ந்தபகையாயின் அவரது குளங்களில் தம் யானையைப்படிவித்து, புலங்களில் குதிரையைச் செலுத்தி அவற்றின் குளம்புகளால் அவைகளையழித்துக் கோட்டைகளைத்தகர்த்து,

"உருகெழுமன்னராரெயில்கடந்த
நிணம்படுகுருதிப்பெரும்பாட்டீரத்
தணங்குடைமரபினிருங்களந்தோறும்
வெள்ளைவரகுங்கொள்ளும்வித்தி." (புற-392.)

"கோடுயர்மாடஞ்சுரையொடுபேய்ப்பீர்க்குச்" சுமக்கவும் (புறப்-வெ-மா-வஞ்சி-25.) குயில்கள்பாடச் சுரும்புகளிடைவிடாது நாட்காலத்தே இன்னிசையெழுப்பச் செறிந்தசோலைகள் சீர்குலையவும், மன்றங்கள்

பாழ்படவும், இவ்வாறாக நாடுகெடுத்துக் காடாகும்வண்ணஞ்செய்து கொற்றவைக்குக் களப்பலியுமூட்டுவர். பகையரசரது செல்வங்களைக் கொள்ளைகொண்டு பரிசிலர்க்களித்துப் பெருமிதங்கொள்வர்.

இங்ஙனம், தம்வீரத்தாலும், தியாகத்தாலும், நியாயத்தாலும் உலகில் தம் புகழைநிறுவியமன்னரை ஆன்றோர் பலபடப்போற்றி வந்தனர். அம்மன்னர் தம்பின்னோரை நல்வழிப்படுத்தும் நன்மணிகளெனக் கருதப்பட்டனர்.

> "தோன்றிற்புகழொடுதோன்றுக அஃதிலார்
> தோன்றலிற்றோன்றாமைநன்று."

என்ற வள்ளுவனார்வாக்குக்கு இலக்காகி முன்னாள்தொடங்கிநெடிதே வந்தவர் நம் தமிழரசரே. அவர்குணாதிசயங்களைக் கண்டும் கேட்டும் வியந்தவர்க்குப் பின்வரும்புறப்பாட்டு உயர்வுநவிற்சியாகாது இயற்கைநவிற்சியெனவே புலனாகும். இப்பாட்டில் நாமிதுகாறும் தமிழரசரைப்பற்றிக்கூறியவைகளையெல்லாம் ஒருவாறு சுருக்கிக்கூறியுள்ளதைக்காணலாம்.

> "தொடியுடையதோண்மணந்தனன்
> கடிகாவிற்பூச்சூடினன்
> தண்கமழுஞ்சாந்துநீவினன்
> செற்றோரைவழிதபுத்தனன்
> நட்டோரையுயர்புகூறினன்
> வலியரெனவழிமொழியலன்
> மெலியரெனமீக்கூறலன்
> பிறரைத்தானிரப்பறியலன்
> இரந்தோர்க்குமறுப்பறியலன்
> வேந்துடையவையத்தோங்குபுகழ்தோற்றினன்
> வருபடையெதிர்தாங்கினன்
> பெயர்படைபுறங்கண்டனன்
> கடும்பரியமாக்கடவினன்
> நெடுந்தெருவிற்றேர்வழங்கினன்
> ஓங்கியல்களிறூர்ந்தனன்



> தீஞ்செறிதசும்புதொலைச்சினன்
> பாணுவப்பப்பசிதீர்த்தனன்
> மயக்குடையமொழிவிடுத்தனன், ஆங்குச்
> செய்பவெல்லாஞ்செய்தனனாகலின்
> இடுகவொன்றோசுடுகவொன்றோ
> படுவழிப்படுகவிப்புகழ்வெய்யோன்றலையே. (புற-239.)

இன்னணம் தமது சிறந்தசெயல்களாலும் குணங்களாலும் மேம்பட்டு விளங்கிய தமிழரசரிற்சிலரும் தமிழ்வீரரும் மறவேள்வியை முற்ற முடித்தபின்னர் தம்நரைகண்டஞ்சி வீணில் நாள்கழிந்தனவேயென்றிரங்கி ஐந்தடக்கி உலகுதுறந்து காடுஅடைந்து புரிசடைபுறந்தாழ,

> "கானயானைதந்தவிறகிற்
> கடுந்தெறற்செந்தீவேட்டு." (புற-251.)

அறவேள்வியில்முயன்று முத்திபெறுதலையும் நாடுவர். இத்துணையும் கூறியவாற்றால் தமிழ்க்குடிகளின் புராதனநிலையும், தமிழ்வேந்தரது பெருமையும், வீரமும், வண்மையும், ஆட்சிமுறையும், போர்செய்யும்விதமும், பொருளீட்டும்வழிகளும், அவற்றை வகுக்குந்துறைகளும், தமிழ்வீரரதுமேம்பாடும் விளங்கலாகும். புறநானூற்றால் அறியப்படும் இவ்விஷயங்களெல்லாம் திருக்குறளிலும், சாணக்கியம் சாமந்தகமுதலிய நீதிநூல்களிலும் பரக்கக்கூறப்பட்டுள்ளனவென்பர். இவற்றுள் எந்நூல் முந்தியது; எது வழிநூல் என்பது அறிஞர் ஆராயத்தக்கது. ஈண்டு அவ்வாராய்ச்சிக்கு இடமும் காலமுமில்லை.

நந்தமிழ்நாட்டை முற்காலத்தில் உன்னதநிலையில் உய்த்தது, பெருந்தகையாளரான தமிழ்வேந்தரது அரும்பெருஞ்செயலன்றோ? அன்னோர்பெருமைகளைச் சிந்தித்துக்களிப்போர்க்கு இந்நாள்வரை அவ்வரியகுணங்கள் தமிழரசரிடமும் பிரபுக்களிடமுங்காணப்படுவது ஒருவியப்பாகாது. தமக்கெனவாழாதுபிறர்க்குரியாளராய், பொருளைப் பிறர்பொருட்டே ஈட்டியும் காத்தும் வகுத்தும்வந்த வள்ளல்களின்மரபினர்க்கு இயற்கையாகவே அப்பெரியோரின்குணங்கள் அமையுமன்றோ? பிதிரார்ச்சிதமாகப்பெற்ற பெருஞ்செல்வத்தை அவர், பெரும்பாலும் நல்வழிகளிலே வாரியிறைத்துவந்துள்ளார்.

'தனித்தமிழ்வேந்தையும்', சேதுமன்னர்களையும், பிறஜமீந்தார்களையும், பிரபுக்களையும் அண்டி அவரால் நன்குமதிக்கப்பட்டு வரிசைகளும் வளமும்பெற்றோர் இன்றும்பலராவர். காலாந்தரத்தில் வீரப்பகுதியும் நியாயப்பகுதியும் அவருட்பலரிடங்குன்றிப்போயினும் ஒருசிறிது அவையும் அவரிடம்சோபிக்காமற்போகவில்லை. தற்சேர்ந்தோர்க்குத்தண்ணளிசெய்கின்றனர். பல்லுயிரையும்பரிந்துகாக்கின்றனர். காலத்தையொட்டி மெய்வலியும்படைத்துள்ளார். ஆங்கிலவாட்சியில் பகைத்திறஞ்செறுதலும் படைக்கலம்பயிறலும் அவர்க்கு ஒரு நூற்றாண்டாக அவசியமில்லாதுபோயினும், தற்போது நடைபெறும் இம்மகாயுத்தத்தில் வடவரசர்கள்போலத் தமிழ்வேந்தரும், அவர்வழித்தோன்றியோரும் தமது வீரத்தைக்காண்பிப்பதற்குத்தருணம் இப்போதுவாய்த்துள்ளது. அதைத்தவறவிடாது கடைப்பிடித்து நம் தமிழ்மக்களும் ஆங்கிலப்படையுள் தண்டத்தலைவர்களாகித் தெவ்வரைப்புறங்கண்டு தமிழ்நாட்டிற்கு எல்லையற்றபுகழ்விளைப்பாரெனத் தமிழ்நாடு எதிர்நோக்குகின்றது. சமீபகாலம்வரைத் தமிழரசரது மறப்படை தம்வீரத்தைவெளிப்படுத்தியதன்றோ? மறவரின்மறம் தேயுறாதமணியுளொளிபோலஉடன்பிறந்துவளர்ந்தேவருகின்றது. அது மாயாவண்ணம் அவரது தொழில்கள் இதுகாறும் காத்துவந்துள்ளன. அம்மறம் பின்னும் வளர்வதற்குக் காலமும் அது விளங்குவதற்கிடமும் இப்போது நேர்ந்துள்ளதால், மறவர்தலைவரும், மறக்குடிவேளாண்மாக்களும், பண்டையரசர் ஐம்பெருங்குழுஎண்பேராய வழிவழி வந்தோரும், முன்வந்து தத்தம் குலப்பெருமையைக்காட்டுவாராயின், தமிழ்வேந்தரது வீரமுரசின்முழக்கம் தமிழ்நாடெங்கும் திரும்பவும் அதிரும். தமிழ்மக்கள் வீரர்க்குள்வீரராய் உலகமீக்கூறப் பொலிவுடன்வாழ்வரென்பதற்கும் ஐயமின்று.

மலர்தலையுலகமகிழவேயுதித்து
அலகிலாவின்பம்அமைவுறவளித்துத்
தென்னாடெங்குந்தெள்ளியோர்புகழத்
துன்பந்துடைத்துத்துயர்பலதீர்த்து
ஆக்கமுமறமுமருங்குணத்தொகுதியும்
தூக்கமின்மையுந்தூய்மையுமாண்மையும்



செப்பமுநாணமுஞ்செங்கோன்முறைமையும்
ஒப்பில்கல்வியுமோதுநல்லறிவும்
அறநூற்காட்சியுமறுவகைக்குணமும்
மறநூற்குரியமாத்தொழிலைந்தும்
நால்வகையுபாயமுநாடியுணர்ந்து
பால்வகைதெரிந்தபண்புடையாளர்
நட்பினின்றுநல்லுயிரோம்பிப்
பெட்புடனாண்டபேரிசைவேந்தர்
குடிப்பிறந்தோருமக்குடிவழிநின்று
படிப்புறந்தந்தபண்பெறுகுழுவின்
வழிவழிவந்தவளக்குடியோரும்
பழியும்பகையும்பாவமும்படிறும்
எளிதிற்றுறந்தவெண்பேராயக்
கிளைவழித்தோன்றியகீர்த்தியோரும்
விளைநிலமாண்டவிழுப்பெருஞ்செல்வரும்
பாவலர்வழிநரும்பாணர்வழிநரும்
பூவுலகுய்யப்புகலருநற்றவம்
அருமையிற்படைத்தவந்தணர்வழிநரும்
பொருநர்ப்பொருதவர்ப்போர்ப்புறங்கண்டு
செருக்களந்தன்னிற்செருக்குடனாடியும்
வருபடைதாங்கிவார்ப்புண்பட்டும்
எஃகுளங்கிழிதரஎல்கடனிறுத்தும்
பஃறேர்மறவர்பரிகரிவீரரின்
மறக்குடிப்பிறந்தமாண்புடையோரும்
சிறப்புடன்குழுமியசீர்பெறுசபையில்
நற்றமிழ்த்தலமேநாடிச்செய்த
குற்றமில்தவத்தின்குறைவறுபயனாய்
நாவலந்தீவின்நயம்படுதெற்கட்
பாவலர்பரிந்துபோற்றுதற்கிடனாய்
முன்னர்ப்பிறந்துமொய்ம்புடனாண்டு
பின்னர்த்தம்புகழ்பீடுகெழுநிறுவிச்
செங்கோல்கோடாச்செந்நெறிவழுவா

எங்கோனிவனெனயாவருமேத்த
வாடாச்செவ்விவளம்பெறவளர்த்த
ஓடாத்தானைஉறுபெருவேந்தரி
னிலக்கணமெல்லாமியன்றவளவாத்
துலக்கமுயன்றனன்றுறைபலநாடிப்
புறநானூறேபுனிதநூலாகத்
திறமுங்கல்வியுந்தேறேனுதலின்
கண்டுதேன்பாகுங்கைப்பெனக்கொண்டு
தண்டமிழ்பயின்றுதமிழ்க்கடல்கண்ட
பெருந்தமிழ்ப்புலவீர்பேரிசைவல்லீர்
திருந்தியமொழியீர்தேராவென்றன்
குற்றங்களைந்துகுறைபும்பெய்து
அற்றமறைத்துஆர்வத்தீராய்ச்
செந்தமிழ்க்கல்விசெம்மையிற்றேர்ந்து
பந்துவாயெமக்குப்பான்மையிலாகெனக்
கருணைகூர்ந்துகழறுநுந்
தருணநோக்கித்தாழ்ந்துளன்யானே".

---

௳

சிவமயம்.

## செந்தமிழ்ப்பத்திராதிபர் அவர்கட்கு வணங்குமொழி விண்ணப்பம்.

---

நுணங்குமொழிப்புலவரும் எனதாசிரியருமாகிய ஸ்ரீமத் செந்தமிழ்ப்பத்திராதிபரவர்கட்கு அநேகவந்தனம்.

இவனியா ரென்குவை யாயி னிவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
வெய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்



பன்மீ னாப்பட் டிங்கள் போலவுஞ்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதி லம்ம
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழ்னி யுழவர் சூட்டொடு தொகுக்குங்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே.

திணை—பாடாண்டிணை; துறை—வாழ்த்தியல்.

சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி கருவூரிடஞ்செல்வானைக் கண்டு சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையொடு வேண்மாடத்துமேலிருந்து உறையூர்ஏணிச்சேரிமுடமோசியார்பாடியது.

சுவாமிகளே இதன்கண் சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியென்பதுமுதல் முடமோசியார்பாடியதுஎன்பதிறுதியாகவுள்ள வரலாறு, இப்புறநானூறுதொகுக்கப்பட்டகாலத்தே தொகுத்தபெரியார், பாடுவோர் பாடப்பட்டோர், காலம் களன் காரணம் முதலியவெல்லாம் பின்னுள்ளாரும் எளிதினுணர்ந்து பாட்டின் உண்மைப்பொருள் இஃதென்று துணியுமாறுகருதி யெழுதிநிறுவப்பட்டதாகும். இப்புறநானூற்றின்கண் ஒவ்வொருபாட்டின்மேலுமுள்ள இதுமுதலியவரலாறுகள்பலவற்றை, பெருநூல்கட்குரையிட்டருளியநல்லாசிரியர்பல்லோரும் தம்முரை நூல்களுள் ஆங்காங்கெடுத்தாண்டு பாட்டின் பொருள்விளக்கிச்செல்லுதலானே இவற்றின்உண்மையும் பழமையும், நிகழ்ந்தவாறுகுறிக்கும்வன்மையும் தமிழ்மக்கள்அனைவருக்கும் ஒப்பமுடிந்தவாகும். இக்காலத்தும் முற்காலத்தும் தமிழ்நாட்டுச்சரித்திரவுணர்ச்சிக்குஇன்றியமையாது, ஒவ்வொருபாடலாகியமலையின்மேலும் இட்ட விளக்குப்போலநின்றுவிளங்குவன இவையென்பதும் பலருமறிவர்.

இங்ஙனம் உண்மையானும் பழமையானும் சிறந்துவிளங்கும் மேற்காட்டியவரலாற்றால், சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியென்பான், கருவூரிடஞ்செல்வானைச் சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையொடு உறையூர்ஏணிச்சேரிமுடமோசியார் என்னும்புலவர்

வேண்மாடமென்னும் மாடத்துமேலிருந்துகண்டுபாடியபாடலிஃ தென்றுயாருமறிவர். பன்னூற்றுறையுமுற்றியநல்லறிவாளரென்று தமிழுலகுபுகழுந் தொல்லாசிரியராகிய புறப்பாட்டுரைகண்டபெருந் தகையாரும், இவ்வரலாற்றையேகொண்டு இப்பாட்டிற்கு உரையிட்டருளினர். பெருநிதிபோன்ற அவ்வரியபெரியஇனியஉரைக்கண், "களிற்றுமிசையோனாகியஇவன்யாரென்குவையாயின் நாடுகிழவோன், இவன்களிறுமதம்பட்டது, அதனால்இவன்நோயின்றிப்பெயர்க என்க் கூட்டி வினைமுடிபுசெய்க" எனவும், "பெருநற்கிள்ளிகளிறுகையிகந்து பகையகத்துப்புகுந்தமையால் அவற்குத் தீங்குறுமென்றஞ்சிவாழ்த்தினமையால் இதுவாழ்த்தியலாயிற்று" எனவும், என்போன்றசிற்றறிவினரும் எளிதினுணர்ந்துகொள்ளுமாறு நன்குவிளக்கியருளினார். இவ்விளக்கவுரையால் சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியைச் சேரன் களிற்றுமிசையோனாகவேகண்டு இவன்யாரென்றான்என்றும், அதற்குப்புலவர் களிற்றுமிசையோனாகியஇவன்யாரென்குவையாயின் இவனே நாடுகிழவோன். இவன்களிறுமதம்பட்டுக் கையிகந்து பகையகத்துப்புக்கது. அதனால் இவன்நோயின்றிப்பெயர்க எனச்சோழனைப் புலவர்வாழ்த்தினார்என்றும் நன்கறியலாகும். பெருநற்கிள்ளிகளிறு என்றதனால் களிறுசோழனுடையதென்றும், களிற்றுமிசையோன் சோழன்என்றும், களிறுகையிகந்து பகையகத்துப்புகுந்தமையான் என்றதனால் இவன்களிறுசென்றகருவூர் சோழற்குப்பகையகமென்றும், களிறுமதம்பட்டதுஎன்றதனால் சோழன்நினைந்துந்தாமலே களிறுதானாகவேகருவூர்செல்லப்புக்கதுஎன்றும் அறியலாம். களிற்றுமிசையோனைப் பல்ரசூழத் தன்னூர்க்கட்செல்லுமொருவனைத் தன்னூர்க்குமிகவும் அண்மையிற்கண்டு களிற்றுமிசையோனைப் வாள்மறவர்சூழ எதிர்பாராமற் புகும் இவன்யார்எனச் சேரன்வினவ, புலவர் இவன்விழுநீர்வேலிநாடுகிழவோன்என்றுவிடையிறுத்து, நோயிலனாகிப்பெயர்கஎன்று சேரன்பெருவலிகுறிப்பான் உணரவைத்து வாழ்த்தினார்என்று கற்றோரெல்லாம் பல்காலுந்தெளிவிக்கக்கேட்டிருக்கின்றேன். இங்ஙனமே தேவரீரும் யான்பாடங்கேட்டகாலத்து விளக்கியது என்னெஞ்சமகலாதுநிலவுகின்றது. ஸ்ரீ, சேதுசமஸ்தான வித்துவான் பிரம்மஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்கார்சுவாமிஅவர்களும் வஞ்சிமாநகர்என்றபுத்தகத்து இக்கருத்தொடுபொருந்தவேவைத்து



இனிதுவிளக்கியுள்ளார்கள். இஞ்ஞான்று தேவரீர்எழுதிவரும் வஞ்சிமாநகர்ஆராய்ச்சியில் இப்பாட்டின்கண் விழுநீர்வேலிநாடுகிழவோன் எனச் சேரனைக்கூறிற்றுஎன்று எழுதிவெளியிட்டுள்ளீர்கள். இப்புறப்பாட்டுரையாசிரியர்விளக்கிய நாடுகிழவோனாகியசோழன் இஞ்ஞான்று சேரனாகமாறுதற்குக்காரணம் இனிதுவிளங்கவில்லை. என்சிற்றறிவைக்கொண்டு ஆராய்ந்தமட்டில் சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையென்பவன் கருவூரிடஞ்செல்வானாகிய சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியை வேண்மாடத்துமேலிருந்துகாணும்பொழுதே வாண்மறவர்புடைசூழக் களிற்றுமிசையோனாகவேகாண்டலால் இவன் களிற்றுமிசையோனா? அல்லனா? எனநினைந்து இவற்றுள்ஒன்றையறிய வினாவினானென்றுகூறுதல் சிறிதும்பொருந்தாதாதலால், இவன் களிற்றுமிசையோன்என்றுமுடிப்பது கற்றோர்க்குஉடன்பாடாகாதென்றும், இதுபற்றியே நல்லுரைகாரர் களிற்றுமிசையோனாகியஇவன் யார்என்குவையாயின், • நாடுகிழவோன்.........................என வினைமுடிபுசெய்க. எனக் காட்டினாரென்றும், களிற்றுமிசையோனாகியஇவன்யார்என்றுவினாவினான்எனக்கொண்டு அதற்குவிடையாக இவன்நோயிலனாகிப்பெயர்க. என்பதுமட்டுமே புலவர்கூறினாராயின் கருவூர்க்குவழியாதென்றுவினாவினார்க்குப் பருநூல்பன்னிருதொடி என்றாங்கு செப்புவழுவாய்முடியுமென்றும் எளியேன்கருதுகின்றேன்.

இனி விழுநீர்வேலிநாடுகிழவோனே எனச் சேரனைவிளித்ததாகக்கொள்ளலாகுமெனின், அது வெளிவந்தசங்கநூல்களுள் நாடுகிழவோனேஎன்பது படர்க்கைக்கண்வருதல்அல்லது வேறுவகையாகயாண்டும்பயின்றுவந்ததாக என்சிற்றறிவிற்குப்புலப்படவில்லை. "நாடுகிழவோயே" என 202ம் புறப்பாட்டில்வருதலையும்அறியலாம். விழுநீர்வேலிநாடு சேரனுக்கேசிறந்ததாகஉரைத்தற்கு உரியபிரமாணமும் காண்டற்குஅரிதாகின்றது. தமிழ்வேந்தர்மூவரும் கடல்எல்லையாகவுடையநாடுடையார்என்பது பலரும்அறிவர். என்போன்றதமிழறியார்பலர்க்குத் தமிழறிவுறுத்தியதேவரீர் எங்கட்குஉபதேசித்த முறையினின்றுமாறி, உண்மையாகவே ஈண்டு நாடுகிழவோன்என்பது சேரனைக்கூறிற்றுஎனக்கொள்ளத்துணியீர்களென்றும், சோணாட்டையடுத்துச் சேரர்கருவூர்இருத்தலை இப்புறப்பாட்டுத் தெளிவாய்விளக்குதலைத்தெரிந்துகொண்டே ஏதோ வாதத்திற்காகச்சொல்

லத்தலைப்பட்டார்களென்றும், அன்றி ஒருக்கால் சோழனைக்கூறிற்று என்றெழுதவேண்டுவது கைத்தவறாகவோ அச்சுப்பிழையாகவோ சோழனைக்கூறிற்றுஎன்றுவீழ்ந்தது என்றும் நினைக்கின்றேன். இத் துணையும் யான்நினைப்பது தேவரீர் எளியேற்கு இப்பாட்டுரைகூறிய தற்கு மாறாகஎழுதிவெளியிட்டதினாலே என்று விஞ்ஞாபிக்கின் றேன். இதன்கண் என்னையும் என்னொத்தபிறரையும் தெளிவித்த பின்னர், தேவரீர்எழுதியுள்ள வஞ்சிமாநகர்ஆராய்ச்சிக்கண் எனக் குண்டாம்ஆசங்கைகளைத் தெளிந்துகொள்ளச்சித்தனாயுள்ளேன்.

கந்தசாமியார்.

தலைமையுபாத்தியாயர்,

கணேசசெந்தமிழ்க்கலாசாலை,

சன்மார்க்கசபை.

21—1—18. மேலைச்சிவபுரி.

---

# சிலாசாசனவாராய்ச்சி.

---

நாட்டுப்பாஷைகளிற்சிறிதுபழக்கமும், ஸம்ஸ்கிருதத்திற்கொஞ்சம் பரிசயமும்கொண்டு பழஞ்சாஸனங்களைச் சுலபமாய்ப்பதிப்பித்துவிட லாமென்று இன்னமும் அனேகர்நினைக்கிறார்கள். ஆயின், இக்காரி யம்செய்ய நினைப்பவர்கள் தகுந்தபாஷாஞானமுடையராயிருக்கவேண் டியதுமன்றி, ஐரோப்பியர்களுடைய ஆராய்ச்சிசெய்புமுறையும் நன்கு கற்றுணர்ந்தவராயிருக்கவேண்டும்” என்று தென்னிந்தியாச்சாஸனங் களிற் சிலவற்றை அச்சிட்ட ஹுல்ட்ஷ்துரையவர்கள் செவ்வையாய் எழுதியிருக்கிறார்கள். இவர்குறித்துள்ள இரண்டுமேயன்றி, சாஸனம் பதிப்பிக்கும்உத்தேசமுடையவொருவன், அச்சாசனங்கள்எழுதிய காலத்தார் நடவடிக்கைகளையும், அவர்களுடைய ஆசாரம், கொள் கை, பேசும்பேச்சு முதலாயவற்றையும் ஐயமின்றியறிந்து சாஸனத் தைப்பொருள்படுத்தற்குவேண்டிய்அளவு அக்காலத்தார்எழுதிய காவி யங்கள், கத்தியங்கள் முதலியவற்றைத் தீரவாசித்தவனாயிருக்கவேண்டு மென்பது மிகவும் அவசியமாகும் என ஒன்றிரண்டு உதாரணங்களைக்



கொண்டு நன்குவிளக்குவாம். வேளைக்காரர்,மணிக்கிராமத்தார் என்னு மிரண்டுவார்த்தைகளைச் சாஸனபரிசோதகர்கள் எவ்வாறெல்லாம் வியாக்கியானித்திருக்கிறார்களென்பதைக்கவனிப்போம்.

வேளைக்காரர் என்னும்பதம் தென்னிந்தியசாஸனங்களில் வெகு வாய்க்காணப்படுவதுந்தவிர, இலங்கைச்சரித்திரமாகிய மகாவம்சத் திலும்உபயோகிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர்ப்பிரகதீசுவரன்கோயிற் சாஸனங்களிலும் மற்றையவிடங்களிற்கண்ட கல்வெட்டுகளிலும் பெருந்தனத்துவலங்கைவேளைக்காரர், சிறுதனத்துவலங்கைவேளைக் காரர், அழகியசோழத்தெரிந்தவலங்கைவேளைக்காரர், வேளத்துப் பெண்டாட்டி, ஆனைமேற்றுஞ்சினார்வேளம், அபிமானபூஷணத்தெரிந்த திருவந்திக்காப்புவேளம் என்றும் வீரகங்கன் வேளைக்காரனேன்... இவற்கு பின்பு சாவாதே இருந்தேனாகில் ஓடிப்போம்வேளைக்காறற்கு என் மிணாட்டியைக்குடுத்தேனாவேன், என்றும்,

ஶூதன் பதிஶக்தி ஸமன்-
வீதன் ஬ல்லாளஶ-ூமிபாலங்ஶே ஜமத்
பூத சரித்ரம் கொட்டம்
வீதஸயம் ஶாஷெயம் வ்ருதாபவிஶாதம்.
தொடரம் ஢ேவிஶே காலோள்இக்கி பலெதர்த்தம்
ஶிவஶம் போகதந்தொ-
டலம் ஶசுஷிஶி நம்பிஶாள்தன்எடரொள்மத்தொ
ந்து ஸந்தானமம்
பிடிவுத்தியோகதின் இப்பாமாத்யர் எணயே ஬ல்
லாள஢ேவங்கே ஸங்-
கடவென்தப்பெடயல்லியம் குவரலக்ஷ்மம் தானே
தாத்பர்யதிம்

அதாவது,

“குவரலக்ஷ்மனென்னும் சாமந்தன் பல்லாளபூபாலனுகு பயத்தி னின்றும்விலச்குவேன் என்று வாக்களித்தான். காலில்தொடரை(வீர சங்கிலியை) ஒரு ஆபரணமாசப்பாவித்துக்கட்டிக்கொண்டும், தாம்

படைத்ததனத்தை களைந்துபோகாவண்ணம் வெகு சாக்கிரதையாய்ப் பாதுகாத்தும், தம்சரீரங்கட்கு ஒரு தீங்கும்வாராவண்ணம் ரக்ஷித்தும், தம் எஜமானர்க்கு இடர்உற்றுழி, வேற்றொருவரைத்தலைவனாக நாடும்மதியற்றஅமைச்சர்க்கோ இணையாவாணிக்குவரலக்ஷ்ம”னென்றும்,

> வெரெ ஸஹஹடோத்தமர்க்குவரலக்ஷ்மவழ்புதிகித்து
> ஹாஷெயம்
> யசெ பொகழ்வன்னெமம் நெறபுவழுதவீரர் அதொரந
> ஸாஸிரம்
>
> தொறெது ஆள்தனொடனே சாயதே
> பெறகு உளிதம் தொறெது சத்தவனவேளெதலா-
> வறிவேவதன் எம்பகண்டா
> தொறெதர்க்கலிகுவரலக்ஷமனொடன் ஆதிஸஹடர்

அதாவது,

“குவரலக்ஷமனுக்கு வேளைக்காரராயிசைந்தவர் ஆயிரம்வீரர்கள், தம்மையாண்டவர்களைத்துறந்து அவர்களுடனிறவாது ஓடிப்பிழைத்தவர்களை யாமறிவோமேயன்றி இங்ஙனம் இவனுடன் உடன் உயிர் நீத்த இவ்வளவு ஆட்களைப்போ லெங்குங்கண்டிலோம்” என்றும், வேளைக்காரரைக்குறித்துப் பிரசம்சிக்கப்பட்டிருக்கிறது.

இன்னம், சென்னைராஜதானிச் சாஸனபரிசோதகர் தம்முடைய 1912-ம்வருஷத்திய ரிப்போர்ட்டில் அடியில்வருமாறு எழுதியுள்ளார். “திருவாரூர்க்கூற்றத்துக்ஷத்திரியசிகாமணிவள...டுத்திருவாரூர் கங்கைகொண்டசோழனான உத்தமசோழமாராயனென்பவன், தனக்காகக் குத்திக்கொண்டிறந்த கணவதிஇடும்பனானதன்னைமுனிவார்பெண்டிர் கண்ட விசையரையன்பொருட்டு நிசதம் ஒருநந்தாவிளக்கெரிப்பதற்கு 95 ஆடுகளைக்கொடுத்தான்” என்று எழுதியிருக்கிறார்.

வேளைக்காரரென்றவாக்கை, மகாவம்சமென்னும் இலங்கைச் சரித்திரத்தைப்பதிப்பித்த முதலியார் விஜயஸிம்ஹர்என்பவர் அற்றைக்கூலிப்படைக்காரர் என்று பொருள்படுத்தியிருக்கிறார். மகாவம்சத்திலேயே மற்றோரிடத்தில்,இரண்டரசர்கட்குள் விவாதம்நேர்ந்த



போது, ஒருவன் மற்றொருவனுடைய வேளைக்காரரைத் தன்வயப்படுத்த ஒற்றரையேவினான் என்று சொல்லியிருக்கிறது. அற்றைக் கூலிக்குச்சேவிக்கும்சேவகர்களைத் தன்வசப்படுத்த ஒற்றர்முதலியோரை அனுப்பவேண்டுவதில்லையே. அதிகச்சம்பளம்கொடுப்போமென்றால் தன்பக்கல்திரும்பிவிடுவார்களே. மற்றைப்படையாளர்கள் மனதைக்கெடுக்கஉத்தேசியாது வேளைக்காரப்படைகளிலார்மனதைக் கவர ஆட்களை ஏவியது கவனிக்கத்தக்கவிஷயமன்றோ?

பின்னையும், சிங்களத்தில்பொலந்நாருவாவென்னும்பழம்பட்டினத்துச்சாஸனம் ஒன்றில் அடியில் வரைந்துள்ளவிஷயம்காணப்படுகிறதென்று மதராஸ் சாஸனபரிசோதகர் எழுதியிருக்கிறார். ஸ்ரீஸங்கபோதியென்னும் மறுபெயர்பூண்ட முதல்விஜயபாஹுவென்னுமரசன் காலத்தில் புலஸ்திஎன்னும் நகரத்தில் புத்தபகவான்பல்லை க்ஷேமித்துவைத்து ஆராதனைமுதலியவைநடத்த ஓர் தாதுபவனம்கட்டப்பட்டதென்றும், இவ்வாலயத்தைக்காக்கப் பலவேளைக்காரர்ஏற்பட்டார்களென்றும், அவர்கள்தாம் பள்ளியுடையநிலங்களையும் அதன்வேலைக்காரர்களையும் மற்றுமுள்ளசொத்துக்களையும் அபயம்புக்காரையும் பாதுகாப்பார்களென்றும், அங்ஙனம்செய்யத்தவிர்ந்தால் உயிரையிழப்போமென்று உறுதிமொழிகொடுத்தார்களென்றும், இவர்கட்கு ஜீவிதமாக ஆளொன்றுக்கு ஒருவேலிநிலமும்கொடுக்கப்பட்டதென்றும் வரைந்துள்ளது. இவ்வேளைக்காரர்கள் வலங்கையாரும், இடங்கையாரும் சிறுதனத்தாரும் என்று பலதரக்காரராய், வடுகர், மலையாளர் முதலிய பலசாதியாருமாயிருந்தார்களென்றும் தெரியவருகிறது.

இங்ஙனம் பற்பலவிடங்களிலும் பிரயோகித்துள்ள வேளைக்காரர் என்னும்பதம் எவ்வாறு பொருள்கொள்ளப்பட்டதென்னும்விஷயத்தை உற்றுநோக்குவோம். தென்னிந்தியசாஸனம் என்னும்புத்தகத்துஇரண்டாம்தொகுதியில் சாஸனபரிசோதகர் “பெருந்தனத்துவலங்கை வேளைக்காரப்படைகள்” என்று வந்தவிடத்தில், பெரியதோர்பொக்குஷத்தைக்காக்கும் வலங்கைக்காரவேலையாட்கள்என்று, பெருந்தனம் என்னும்பதத்துக்குப் பெரியபொக்குஷம் என்றும், வேளைக்காரர்என்னும்பதத்தை வேலைக்காரர்என்றுதிரித்தும், பொருள்செய்துள்ளார்.

மற்றும், "அவன்மடக்கொடியை வேளம்ஏற்றி" என்னுமிடத்து அவன் மனைவியைத் தன்னந்தப்புரத்தில் சேர்த்துக்கொண்டு என்று அர்த்தமெழுதி, அதனடியில், வேளைக்காரன்என்னும்பதத்தை வேலைக்காரனென்றுமாற்றவேண்டுமென்றும், வேளம் என்னும்வாக்கு வேள் என்னும் பகுதியடியாகத்தோன்றியிருக்கலாமென்றும், இப்பகுதிக்கு அகராதியிற்கண்ட காமன், விரும்பு, ஆசைப்படு என்னும் அர்த்தங்களையும் அடக்கி ஒருகுறிப்பும் எழுதியிருக்கிறார்.

நாமெடுத்தாண்ட மேற்கோள்களால். வேளைக்காரரென்பவர்கள் "இவ்வாறுசெய்வேன் செய்யாதொழிவேனாகில் இன்னகேடுயானுறுவேன்" என்று தானே சபதங்கூறிக்கொண்டு, அதன்படி நடக்கும் ஆப்தர்கள் என்பது நன்குவிளங்கும். அரசர்கட்காட்பட்டவேளைக்காரர் அவர்கட்குக்கேடுவாராமேகாப்பாரென்பதும் அங்ஙனம் செய்யத்தவறினும், ஏலாதுபோயினும், அவர்களுக்குச்சாவுநேர்ந்துழித் தாமும் இறப்பார்களென்பதும் அடியில்வரும் ஸ்ரீரங்கத்துச்சாஸனங்களால் விசதமாகும்.

"வீற்றிருந்தான்சேமனான அகளங்கநாடாழ்வாற்குத்திருவரங்கத்துக்கைக்கோளரில் நாயனான அழியமணவாளமாராயனேன் இவற்கு உடன்வேளையாகச் சாவக்கடவேனாகவும். இவற்கு பின்பு சாவாதே இருந்தேனாகில் என்மிணாட்டியைப் பறையற்குக்குடுத்து எங்களமைக்கு நானேமிணாளனாவேன்" என்றும் இதுபோலவே மற்றுமிருவர்கள் சபதம்செய்துகொண்டதும் நோக்கின் வேளைக்காரர்என்னும் வகையாரியல்பு தெற்றெனவிளங்கும். வேளைக்காரர் தம்மிடதுகாலில் ஒரு வீரசங்கிலியைத் தரித்திருப்பதுவழக்கம் என்பது மேற்காட்டிய கன்னடசாஸனத்தால் விளங்குகிறது. வேளத்துப்பெண்டாட்டி என்னும்தொடரால் வேளைக்காரராவதற்கு இருபாலருமாகலாமென்பதும்திண்ணம். இவர் பின்னும் எச்சாதியராயினுமாமென்பதும், "வடுகர்,மலையாளர் முதலியோர்" என்று முற்கூறியதாலும் விளங்கும்.

வேளைக்காரரென்னும்பதத்துக்குக் கடைசியாய்ப்பொருள்படுத்தியது, தென்னிந்தியாசாஸனங்களென்னும் புத்தகத்து இரண்டாம் தொகுதியின் ஐந்தாம்பகுதியிலாகும். அதில் ஸ்ரீமான் காலஞ்சென்ற வெங்கையரவர்கள் அடியில்வருமாறு எழுதியுள்ளார்:—வேளைக்கார



ரென்னும் அரியபதத்துக் கின்னம்பொருள்கண்டுபிடிக்கப்படவில்லை; பின்னே ஏற்படக்கூடும். வேளைக்காரப்படைகளிலார் என்று மகாவம்சத்தில் பலகாலும் காணப்படுகிறது. விஜயசிம்மமுதலியார் இதற்கு அற்றைக்கூலிக்காரராகிய படையாட்களென்று பொருள்கொண்டிருக்கிறார்....11-ம் நூற்றாண்டுக்குமுன் வேளைக்காரர்கள் சோழநாட்டில் அற்றைக்கூலிக்காரராக இருந்தவரல்லர். நிலைப்படையாட்களாகவே கருதவேண்டும். இப்பதத்திற்கோர் அர்த்தம் ஊகிக்கக்கூடுமேல், பல ஆட்கள் வேண்டிவரும்சமயங்களில் (அதாவது வேளைகளில்)நியமிக்கப்படும் சேவகர்களென்னலாம். சோழநாட்டில் இவர்கள்உதவி யவசியமில்லாதுபோன பிற்காலத்தில் இவர்கள் ஜீவனத்தின்பொருட்டு சிங்களத்துக்குப்போயிருக்கலாம். அங்கே காலாந்தரத்தில் அற்றைக்கூலிக்காரப்படையாளர்களாய் மாறிவிட்டனர் என்று கருதலாம்" என்றெழுதியிருக்கிறார். இக்கூற்றுக்களைத்தழுவி அவர் ஸ்தானத்தைப் பெற்றுள்ள ஸ்ரீமான், கிருஷ்ணசாஸ்திரிகள் வேளைக்காரர்கள் என்பவர் ஒருகூட்டத்தாரென்றும் (Community), அவர்கள் வலங்கை, இடங்கை, மூன்றுகை, மலையாளர், வடுகர்முதலிய ஜாதியைச்சேர்ந்தவரென்றும், அவர்கள் இந்தியாவிலிருந்து சிங்களத்துக்குவந்தவர்களென்றும் தீர்மானித்துவிட்டார்.

ஆனால் வேளைக்காரரில்க்காரர் எல்லாரும் ஒரேமாதிரியாய்த்தங்களுடைய சபதங்களை நிறைவேற்றினாரென்ன இடமில்லை. அவர்களிற் சிலர் தங்களுடைய பிரதிக்ஞையை அலக்ஷியஞ்செய்து மானங்கெட்டு வாழ்ந்தார்களென்னும்விஷயம்"ஓடிப்போகும்வேளைக்காரர்கள்" என்று தமிழ்ச்சாஸனத்திலும் கன்னடசாஸனத்திலும் காண்பதனால் தெரியவருகிறது. கன்னடபாஷையில் "வேளையாளு"வென்றால் "காவல்காரன்" என்னுமர்த்தமுண்டென்று கிட்டெல்துரையும் தம் கன்னட அகராதியில் எழுதியிருக்கிறார். ஆனாலும் இத்துரையும் இவ்வாக்கு வேலையாள் என்பதின் திரிபாயிருக்கலாம் என்று நினைக்கிறார்.

ஆனால், வேளைக்காரர் என்னும்பதத்தின்பொருள்தான் என்னென்று தீர்மானப்படுத்துவதென்றால், தக்க மேற்கோளின்றி ஊகத்தாலேயேபொருள்படுத்தல் அவ்வளவு வலியுடைத்தன்று. பண்டையிலக்கியங்களிற்காணாவிடின் அக்காலத்தார் இப்பதத்துக்கு என்ன பொருள்கொண்டார்கள் என்று எங்ஙனம் நிர்ணயிக்கலாம்? சந்தர்ப்

பங்கொண்டு நிச்சயிக்கும் அர்த்தம் தவறாகவும் முடியலாமன்றோ? நம்மாழ்வார்திருவாய்மொழிக்குப் பெரியவாச்சான்பிள்ளையியற்றிய இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானத்தில்,

> [illegible]நமேயாகிலும் பூவேளைக்காரரைப்போலே ஆழ்வார்களையொழியக்காணமாட்டார்,

என்று ஆழ்வார்கள்விஷயத்தில் பரமபதநாதன் வேளைக்காரரைப்போல நடிப்பானென்னும் வைபவத்தைக்கூறுகிறார்.

> இவ்விஷயத்தையே வடக்குத்திருவீதிப்பிள்ளையும்
> இவர்தாம்பூவேளைக்காரரைப்போலே, இவைகாணாத
> போது கையேலேமுடிவாரொருவரிறே

யென்று எழுதியிருக்கிறார்.

தாம் அருளிய அடையவளைந்தான் அரும்பதத்தில் ஆத்தான் ஜீயர் "பூவேளைக்காரர்" என்னும்பதத்தை அடியில்வருமாறு வியாக்கியானிக்கிறார்:—

> பூவேளைக்காரராவது ராஜாக்கள் பிராப்தகாலங்களிலே
> பூச்சூடக்காணாவிட்டால் தங்களைக்குத்திக்கொண்டழி
> யும்படி பாவராயிருக்குமவர்கள்.

இதன்மேல், குணகரம்பாக்கம் இராமானுஜஜீயர்

> பூவேளைக்காரராவது, ராஜாக்களுக்கு தத்தத்காலங்
> களிலேபூவிடாவிடில் குத்திக்கொண்டுமுடியும-
> வர்கள்.

என்றுபொருள்செய்திருக்கிறார். மேற்கூறியவற்றால் பூவேளைக்காரர் என்பவர் யாம் அரசர்க்குப்பிராப்தகாலங்களில்புஷ்பங்களைமாலையாய்த் தொடுத்திடக்கடவோம். அங்ஙனம் செய்யாதுபோனோமாகில் எம்மைக் குத்திக்கொண்டிறப்போம் என்று பிரதிக்கினைசெய்துகொடுத்த நற்சேவகர்களென்று நன்குவிளங்குகின்றது.

பின்னையும், வேளைக்காரர் என்னும்பதத்துக்கு "ராஜதுரோகம் பண்ணினாரைநலியும்சேவகர்கள்" என்று ஸ்ரீவசனபூஷணத்தின்வியாக்கியானத்திலும் காணப்படுகிறது.



இங்ஙனம் வேளைக்காரராயமர்ந்திருப்பது பண்டைக்காலத்தில் மாத்திரமன்று, இற்றைக்கு நூறுவருடங்கள்வரையிலும் நம்நாட்டின் பகுதியாகிய மலைநாட்டின்வழக்காயிருந்தது. வேளைக்காரரை இந்நாட்டில் சாவார் என்பர். வள்ளுவநாட்டரசனைவென்று திருநாவாயைத் தன்கைவசப்படுத்தி அந்தத்திவ்யதேசத்தின் உற்சவங்களைத் தானே நடத்திவந்த சாமூதிரியின்செயலைப்பொறாத வள்ளுவநாட்டரசன் வேளைக்காரர்பலர் உற்சவம்நடக்குந்தோறும் பலகாலும் அவனைக்குத்திக்கொல்லப் பற்பலபிரயத்தனங்களும்செய்து முடியாவிட்டால் தம் முயிரையும்நீத்துவந்தவிஷயத்தை லோகன்துரையவர்கள் எழுதியிருப்பதை அவருடைய Malabar Manual-ல் காணலாம்.

இத்துரையே தம்புத்தகத்தில், பர்சசாஸ் என்பவர் கி. பி. 1...யில் கொச்சிராஜ்யத்தைப்பற்றிஎழுதியதின்பகுதியை அடியில்வருமாறு எடுத்தாண்டுள்ளார். "கொச்சிராஜாவை அடுத்துள்ள பலகனவான்களை அவ்வரசன் அமோசசி அதாவது அமைச்சு, என்னும்பெயரால்அழைப்பர்; சிலர் நாயர்என்று பெயர்படுவார்கள். இவ்விருதிறத்தாரும் தம் உயிர்களைத்தம்மரசர்க்கன்றி வேறுகாரியங்களுக்கர்ப்பிக்கவில்லை. சாவு அவர்கட்கு இலட்சியமில்லை".

எஜமானர் விஷயமாக வேளைக்காரரைப்போன்ற வைராக்கியம் படைத்தவர்கள் ஜப்பானிலுமுளர். இவர் தம்மரசரேனும் மற்றெவ்வித எஜமானர்களேனும் மிறந்தால் தாமும் அவர்களுடன் மாய்வது வழக்கம். இவ்வழக்கத்தை அந்நாட்டார் ஹரிகிரி என்கிறார்கள்.

சொற்பகாலத்துக்குமுந்தி (அதாவது 2 or 3 வருடங்கட்குமுன்னர்) இறந்த மஹாராஜாவின்மரணம் நிகழ்ந்தவுடன் ஹரிகிரிரீதியாய்த் தன்னுயிரையிழந்தார் ஓயாமாப்பிரபு.

இலங்கைச்சரித்திரமாகிய மகாவம்சத்தில் மஹேந்து என்னும் இராஜகுமாரன் போரில் தோல்வியடைந்ததும், பகைவர்கையிற்பட்டு மாய்வதிலும் தன்னைத்தானே கொன்றுகொண்டுவிடுவது நலமென்று, தன்கழுத்தையறுத்துக்கொண்டுமாண்டானென்றும், இதைக்கண்ட அவன் வேளைக்காரப்படைகளிலாரில் ஒரு ஆயிரவர் தம்கழுத்தையுமறுத்துக்கொண்டுமடிந்தார்களென்றும்காண்கிறோம். எனவே வேளைக்

காரர்என்பவர் இராஜபக்தியுடையவர்; அரசர்க்குக்கேடுற்றுழி,தாமும் அவரோடு இறத்தற்கு ஒருப்பட்டவர்கள் என்பது விசதம்.

தென்னாட்டார் வலிமிக்கவரும் பராக்கிரமசாலிகளுமான ஜாதியார். யுத்தத்தில் மகிழ்பவர்கள். இவர்கட்குப்பிராணனிலபிமானம் கொஞ்சமேனுமில்லை. "அம்மே! நம்மரசனுக்கு வெற்றியைத்தருவாயாக. அரசன் வெற்றிபெறின் யான் என்னங்கங்களைவெட்டிக் குருதிப்பலிநினக்கிடுவேன்" என்றும் "என்றலையைவெட்டி உயிர்ப் பலியிடுவே" னென்றும், கொற்றவை, காடுகிழாள் என்று மறவரால் பெயர்வழங்கப்படும் வனதுர்க்கையை வேண்டிக்கொள்வர். இங்ஙனம் இவர்கள்செய்யும் பிரதிக்ஞையைத் தமிழில்வஞ்சினமென்ப. இதனைத் தொல்காப்பியப்பொருளதிகாரத்தின் உரையாசிரியர் அடியில்வருமாறு விளக்கியிருக்கிறார். "இன்னதுபிழைப்பின் இதுவாகியரென இத்தன்மையதொன்றினைச்செய்தலாற்றேனாயின் இன்னவாறு ஆகக்கடவேனெனக்கூறிய வஞ்சினக்காஞ்சியானும் அது, தான்செய்யக்கருதியது பொய்த்துத் தனக்குவருங்குற்றத்தால் உயிர்முதலியன துறப்பனென்றல்."

இவ்வஞ்சினத்தைப் புறப்பொருள்வெண்பாமாலைக்காரர்,

வெஞ்சினவேந்தன்வேற்றவர்ப்பணிப்ப
வஞ்சினங்கூறியவாகைமொழிந்தன்று

என்று விதந்துகூறி, அதற்கு

இன்றுபகலோனிறவாமுன்னென்னுரை
வென்றுகளங்கொள்ளாவேலுயிர்ப்பி—னென்று
மரணவியப்பாயுமடையார்முனிற்பேன்
முரணவியமுன்முன்மொழிந்து

என்னும் வெண்பாவை உதகரிக்கின்றார். இவ்வஞ்சினமே வேளைக்காரர் சபதமும் என்பது வெளிப்படை.

வேளைக்காரர் உயிர்நீக்கிக்கொள்வதைச்சித்திரித்திருப்பதைச் சிற்சில சிலாசாஸனங்களிற்காணலாம். Ep. In. Vol. VI ல், 41-ம் பக்கத்தெதிரில்கொடுத்திருக்கும்படம், நீதிமார்க்கனென்னும் அரசனிறக்கிற அவசரத்தைக்காட்டுகிறது. இவ்வரசன் ஒருகட்டிலின்மேல் அந்திம



தசையிற்கிடக்கிறான். இவன் மனைவி இவன்கால்களைத் தன்மடியில் தாங்கிக்கொண்டும் ஸதியாய்த்தன்பர்த்தாவுடன் உடனுயிர்நீக்கச்சித்தமாயிருக்கிறாள் என்பதைச்சூசித்துக்கையைப்பதாகாஹஸ்தமாய்வைத்துக்கொண்டுகட்டிலின்மேலிருக்கிறாள். இராஜசின்னமாகக் கட்டிலின் மேற்புறத்தில் மூன்றுகுடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அரசன் தலைப்புறத்தில் அவன் மனைமகத்தின்என்னுமுத்தியோகம்படைத்த அகரய்யன்என்னுமோர்மனிதன் உறுவினகத்தியைக்கையிற்பிடித்து, அரசனிறப்பதைச் சாக்கிரதையாய்ப்பார்த்துக்கொண்டுநிற்கிறான். அரசன் இறந்தக்ஷணமே தன்வயிற்றைக்கீறிக்கொண்டுமடியத் தயாராயிருக்கிறானிவன் என்பது படத்தில் நன்றாய்க்காட்டியிருக்கிறது.

மேற்கூறியவாறு படையாளர்கள் அரசனுக்கு வெற்றிமுதலிய கொடுக்கும்படிவேண்டிக்கொள்வதற்குச் சௌகரியமாயிருக்கவேண்டுமென்றுஉத்தேசித்துச் சேனாமுகமுதலியகோட்டைகளின்வாசல்களில் துர்க்கையார்கோயில்கள் காண்பது சகஜம். பல்லாளராஜாக்களென்று பெயர்பட்ட பொய்சளசக்ரவர்த்திகளின் இராஜதானியாகிய துவாரசமுத்திரத்தின் கோட்டைவாசலில் ஓர் துர்க்கைகோயிலும், அதன் வாசலில் தன்தலையைவெட்டித்தேவிமுன்னர் இட்டுத் தான் தண்டவத்பிரணாமம்செய்து, கைகளை அஞ்சலித்துக்கிடக்கும் ஓர்வீரன் உடலையும் கல்லில் சித்திரித்துவைத்திருப்பதையானேகண்டுள்ளேன். மகாபலிபுரம் முதலியவிடங்களில் கல்லிற்குடைந்திருக்கும் கோயில்களில் துர்க்காதேவியின் உருவம் சாதாரணமாய்க்காணப்படுகிறது. இத்தேவியின் முன்னிலையில் இருவீரர் தம்முடியை ஒருகையாற்பற்றி மற்றொருகையால் ஊட்டியையறுப்பதற்குக் கழுத்திற்கத்திவைத்திருப்பதாகச்சிற்பித்திருப்பதைக்காணலாம். வஞ்சினவிஷயமறியா ஐரோப்பியருள்ளும், இந்தியருள்ளும், பிறருள்ளும் சில பண்டிதர்கள் இச்சிற்பங்களிற்காணும்வீரர்கள் தம்தலைமுடியை அறுத்துத் தேவிக்குஅற்பிக்கிறார்களென்றுகொண்டுவிட்டார்கள்.

மேற்கூறியவாற்றால், பண்டைய இலக்கிய இலக்கணங்களைப்படியாதார் அவ்வக்காலங்களிற்பொறிக்கப்பட்ட சாஸனங்களையும் அவைகளிலெழுதியவிஷயங்களை விளக்கிச் செவ்வனே அச்சிடவியலாதாராவர்என்பது நன்குவிளங்கும். பொருள்விளங்காவார்த்தைகட்கு இலக்கியங்கள்கொண்டேபொருள்படுத்தவேண்டுமென்றி, தேசபாஷாஞானமில்லாதபிறநாட்டுப்பண்டிதர்களாலியற்றப்பட்ட அகராதிகளின்றுணையால் பொருள்படுப்பது ஒருக்காலுமுடியாது என்பது திண்ணம்.

து. அ. கோபிநாதராவ், எம். ஏ.

---

# இந்துதேசசரித்திரகாலக்குறிப்புகள்.

## (Chronological Notes of Indian History.)

(தொகுதி கரு - பகுதி ௩-ல் கசஉ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

---

கி. பி.

510—540 மிஹிர்குலன். தொரமாணன் மகன். ஹிந்துஸ்தான் அரசன். பிறகு காச்மீர அரசனுமானான்.

515 (சகம் 437) விக்ரமன்பட்டாபிஷேகம்.

(அக்னிபுராணம்)

525 மாத்ரிகுப்தன். (இரண்டாந்தரம் அரசுக்குவந்த கோணர்த்தவம்ச 5-ம் அரசன்) பட்டத்தை வெறுத்துச் சென்றான். பிறகு மாளவராஜனான (மஹாரி?) விக்ரமாதித்யன் இவ்வரசைக்கைக்கொண்டான்.

528 மிஹிர்குலன், மகதமன்னன் நரசிம்மகுப்தனாலும் மத்யஇந்தியா அரசன் யசோதர்மனாலும் தோல்வியடைந்து காச்மீரத்துக்குப் போய்விட்டான்.

530 குமாரகுப்தன் II.

530 அஜந்தாகுகையில் கோணர்த்தவம்சத்தரசனால் நவக்ரஹாலயம் நிர்மிக்கப்பட்டது.

531—579 நௌஷர்வன். பாரஸீகமன்னன்.

விஷ்ணுசர்மா இயற்றிய பஞ்சதந்திரம் அடியிற்கண்டவாறு வேறுபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

| காலம். | பாஷை. | மொழிபெயர்த்தவர். |
|---|---|---|
| நௌஷர்மன் காலம் | பாரஸீக பாஷை | பர்ஸாய் |
| ............ | அரபி | ............ |
| 1050 | க்ரீக் | ஸிமியான் |
| | லத்தீன் | போஸிமஸ் |
| 1215 | ஸ்பெயின் | |
| 1250 | ஹீப்ரு | ரபிஜோவல் |



| | |
|---|---|
| 15-ம் நூற்றாண்டு | ஜெர்மன். |

533 (விக். 589) விக்ரமன் உயிருடனிருந்தான்.

(மந்தஸோரஸ் சிலைலிபி)

535—720 மகததேசத்திலாண்ட மற்றொரு குப்தர் வம்சம்.

544 மாத்ரிகுப்தன். காச்மீர அரசன். மேண்டன் இவனுடைய ஸம்ஸ்தான வித்வான். (430ஐயும் பார்க்க.)

544 கரூர்ச் சண்டை. விக்ரமசகாப்தாரம்பமாகிய கி. மு. 56க்கு 600 வருஷங்களுக்குப்பின் நடந்ததாய் ஸித்தஸேண ஸூரியால் கணிக்கப்பட்டிருக்கின்றது.

550 புலிகேசி I. சாளுக்ய அரசன்.

சாளுக்ய வம்சாவளி.

ஜயஸிம்மன்.

|

இராஜ ஸிம்மன்

|

(1) புலிகேசி (550.)

- 2. கீர்த்திவர்மன் I (567—597)
  - 4. புலிகேசி II 610—644
    - (ஆதித்யன்)
    - (சந்திராதித்யன்)
    - 5. விக்ரமாதித்யன் I (655-680)
      - 6. வினயாதித்யன் (680—696)
        - 7. விஜயாதித்யன் (696—733)
          - 8. விக்ரமாதித்யன் II (733-746)
            - 9. கீர்த்திவர்மன் II (746-757)
  - குப்ஜவிஷ்ணு வர்த்தனன். கிழக்கு சாளுக்யவம்ச ஸ்தாபகன்.
- 3. மங்களேசன். (597—609)

552 குமாரதாஸன். இலங்கை, அநுராதாபுரத்திலாண்ட அரசன். இவனண்பன் காளிதாஸன் அங்கநர்த்தாவியாற்
(?) கொலையுண்டான். குமாரதாஸன் சோகம்பொறுக்கமாட்டாமலிறந்தான்.

{ சிங்கள சரித்திரம் 2 வித்யாபாநு 345 }

ஜாநகீஹரணம், குமாரதாஸனுல் இயற்றப்பட்டது.

557—589 ஈசுவரகிருஷ்ணர்இயற்றிய ஸாங்கியகாரிகை சீனபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது.

கோவிந்தபாதர் (சங்கராசாரியார்) குருவாகிய கௌடபாதர், ஷை காரிகைக்கு உரை எழுதியிருக்கிருர்.

— [ஸுபாஷிதாவளி].

561—66. அமரகோசம் சீனபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது.

567—97. கீர்த்திவர்மன். 2ம் சாளுக்கிய ராஜன்.

570 ஆகஸ்ட். 29 திங்கட்கிழமை மெக்காவில் மஹமத் அவதாரம்.

587 (சகம் 509). வராஹமிஹிரர் (வான நூலாசிரியர்) மரணம். ரோமகசித்தாந்தம் என்ற நூலில் ஆரிய பட்டரைப் பற்றி யிவர்கூறியிருக்கிருர். 628ல் ப்ரம்மகுப்தரால் இயற்றப்பட்ட காண்டாத்யாய உரையில்,

நவாதிகபஞ்சசதஸங்க்யசகே
வராஹமிஹிராசார்யோ திவங்கத:॥

என்று கூறப்பட்டிருக்கின்றது.

594 துர்லபன். காச்மீரமன்னன்.

முக்தாபீடன். துர்லபன்புதல்வன்.

597—609 மங்களேசன் (ரணவிக்ரமன்). சாளுக்ய 3ம் அரசன்.

598 ப்ரம்மகுப்தன் ஜனனம். வானநூலாசிரியர். ஜிஷ்ணு என்பவரின் புதல்வர்.



628ல் ஸ்புடஸித்தாந்தம் இயற்றினுர்.

605 ப்ரபாகரவர்த்தனன் மரணம். இவர் ஹுணரைஜ் ஜயித்து ஸ்தானேசுவரம் (Thaneswar) என்னுமிடத்தில் தன் ராஜவம்சத்தைஸ்தாபித்தவர். ஹர்ஷ சக்ரவர்த்தியின் பிதா.

606 (-648). ஹர்ஷன் தனது 16ம் ஆண்டில் கான்யகுப்ஜ (கானேஜ்) இராஜ்யத்துக்கரசனுனன்.

ஹர்ஷன் வம்சாவளி.

ப்ரபாகரவர்த்தனன்

| இராஜ்யவர்த்தனன். (போரில் மடிந்தான்) | ஹர்ஷவர்த்தனன். (606—648) |
|---|---|

ஹர்ஷன்காலத்தவர்கள்—

1. மயூரன். சூரியசதகம் இயற்றியவர்.
2. மாதங்கர்.
3. திவாகரர்.
4. வாக்பதி. இராஜகவி. ஹர்ஷன்புதல்வன். யசோவர்மனுல் சிறையிலடைக்கப்பட்டான். கௌடவதம் என்னும் காவியத்தைச் சிறையிலிருக்கும்போதே இயற்றினுர்.
5. தண்டி. தசகுமார சரித்திரம் இயற்றியவர்
6. பாணன். ஹர்ஷசரிதம், காதம்பரி இயற்றியவர்.
7. ஸுபந்து. வாஸவதத்தம் இயற்றியவர்.

— [Dutt's Hindu civilization]

8. ப்ரம்மகுப்தர். வானநூலாசாரியார்

[illegible]
[illegible]

— [ஸாரங்கபத்ததி.]

610—642 புலிகேசி II. (ஸத்யாச்ரயன்). கல்யாணியில் ஆண்ட சாளுக்யவம்சத்தரசன். இவன்காலத்தில் ஹிந்துமதம்

தழைத்தோங்கியது. 615ல் கஞ்சிப்பல்லவராஜனான மஹேந்திரவர்ம (I) பல்லவனை ஜயித்து, அவனிடமிருந்து வெங்கிநாட்டையபகரித்து அதற்குத் தன்தம்பியான குப்ஜ விஷ்ணுவர்த்தனனை அரசனாக்கினான். 620ல் ஹர்ஷனைத் தோற்கடித்து, அவன் நர்மதைக்குத்தெற்கேவராது தடுத்தான்.

கங்கவம்சத்தரசனைஜ்ஜயித்து மைசூரில் தனது இராஜ்யத்தை ஸ்தாபித்தான். இவன்காலத்தில் சாளுக்ய ராஜ்யமானது நர்மதைமுதல் பாலாறுவரை பரவியிருந்தது. இவன் சாளுக்யவம்சத்தில் சிறந்த அரசன்.

615 (—632). குப்ஜ விஷ்ணுவர்த்தனன். வெங்கிநாட்டில் கிழக்குச்சாளுக்யவம்ச அரசைஸ்தாபித்தான்.

வெங்கிநாடு. கோதாவரி, கிருஷ்ணா நதிகளுக்கிடையே யுள்ளது. 615 வரை காஞ்சிப்பல்லவர்ஆட்சிக்குட்பட்டிருந்தது. 615க்குப்பிறகு கல்யாணியிலாண்டவர்க்கு மேற்குச்சாளுக்யர் என்றும், வெங்கியிலாண்டவர்க்குக் கிழக்குச்சாளுக்கியர் என்றும் பெயர். 1064ல் கிழக்குச் சாளுக்யவம்சமும், 1189ல் மேற்குச்சாளுக்ய வம்சமும் அற்றுப்போயின.

615–1064 கிழக்குச்சாளுக்யவம்சத்தரசர் வெங்கியிலாண்டார்கள்.

கிழக்குச்சாளுக்ய வம்சாவளி.

கீர்த்திவர்மன். 567—597

ஸத்யாச்ரய புலிகேசி II (610—644)

1. குப்ஜவிஷ்ணுவர்த்தனன் (கிழக்குச்சாளுக்கிய வம்சஸ்தாபகன்) (615-632)

2. ஜயஸிம்ம (I) வல்லன் (632—655)

3. இந்திரபட்டாரகன்.



4. விஷ்ணுவர்த்தனன் II (655—664)

5. மங்கியுவராஜன். (664—689)

6. ஜயஸிம்மன் II (689—702)

8. விஷ்ணுவர்த்தனன் III (704—740)

7. கொக்கிலி 703.

9. விஜயாதித்ய (I) பட்டாரகன். (740—758)

10. விஷ்ணுவர்த்தனன் (௪) (758—794)

11. விஜயாதித்ய (II) நரேந்திரமிருகராஜன் (794—842)

12. கலி விஷ்ணுவர்த்தனன் (௫) (842—843)

13. குணகன் 843—887

(யுவராஜ விக்ரமாதித்யன்)

(யுத்தமல்லன்)

18. தைலப்பன். 925

14. சாளுக்ய பீமன் I த்ரோகார்ஜுனன் (887—917)

21 யுத்தமல்லன். (926—933)

15. விஜயாதித்ய (௪) 918

19. விக்ரமாதித்யன் (925—926)

16. அம்ம I (விஷ்ணுவர்த்தன ௬)

22. சாளுக்யபீமன் II (விஷ்ணுவர்த்தனன் ௭)

(918—925)　　　　(933—945)

17. விஜயாதித்யன்　20 பீமன் (926)

23. அம்ம-II-(விஜயாதித்ய ௫)
945—970

24. தனார்ணவன்
976—973

25. சக்திவர்மன்
1003—1015

26. விக்ரமாதித்யன்
1015—1022

27. இராஜராஜன் I
(விஷ்ணுவர்த்தனன். அ)
1022—1063

28. விஜயாதித்ய-௬
1063—1078

(விக்ரமசோழன்)
1112—1127

(குலோத்துங்கன்)

29. இராஜராஜ II
1078—1079

30. வீரசோழன்
விஷ்ணுவர்த்தனன்-௯
(1079—1100.)

620　சாளுக்யவேந்தனை 2ம் புலிகேசி ஹர்ஷனைத்தோற் கடித்து நர்மதைநதிவரை தன்ராஜ்பத்தைப்பரவச்செய்து கொண்டான்.

622　ஜகந்நாதம்புவனேசுவராலயம் கோனார்த்தவம்சத்தர சனுல் நிர்மாணம் செய்யப்பட்டது.

622　ஹிஜிராசகாப்தம். மஹமது யத்ரீப்என்னுமிடத் திக்கு ஓடினார்.

627　மெடினவை மஹமது முற்றுகைபோட்டார்.

628　ப்ரம்மகுப்தர். வானநூலாசிரியர். ஸ்புடசித்தாந்தம் இயற்றினர்.

[1906 I R 282].

630　இலளிதாதித்யன் (முக்தாபீடன்). காச்மீர மன்னன்.

632　(ஹிஜிரா-11-ஜுன் 8. திங்கட்கிழமை நடுப்பகல்) மஹமது மரணம்.



632—655　ஜயஸிம்ம (I) பல்லவன். கிழக்குச்சாளுக்ய 2ம் அரசன்.

634　பாரவிச்சிலலிபி. 2ம் புலிகேசியால் அமைக்கப்பட்டது. இதில் குறிக்கப்பட்டவர்கள்.

பாரவி. கிராதார் ஜுனீயம் எழுதியவர்.

காளிதாஸன்.

இவர் இயற்றியநாடகங்கள்—சாகுந்தலம்
விக்ரமோர்வசீயம்
மாலவிகாக்னிமித்ரம்

காவியங்கள்—இரகுவம்சம்
குமாரசம்பவம்
மேகதூதம்
ரிதுஸம்ஹாரம்

யேனாயோஜி........................
ந்வேச்மஸ்திரமர்த்தவிதௌ விவேகினாஜிநவேச்ம
ஸவிஜயதாம் ரவிகீர்த்தி:
கவிதாச்ரித காளிதாஸ பாரவிகீர்த்தி: ॥

634　ஆர்யபுர (அயஹோல) சிலலிபி.

த்ரிம்சத்ஸு த்ரிஸஹஸ்ரேஷு பாரதாதாஹவாதித:।
ஸப்தாப்தசதயுக்தேஷு சதேஷ்வப்தேஷு பஞ்சஸு॥
பஞ்சாசத்ஸு கலௌ காலே ஷட்ஸு பஞ்சசதாஸு ச।
ஸமாஸு ஸமதீதாஸு சகாநாமபி பூபுஜாம்॥

கலி. 30+3000+700+5=3735
சாலிவாஹனம். 56+500=556

இந்தக்காலத்தில், இந்த ஜினேந்திராலயம் இரவிகீர்த்தியால் கட்டப்பட்டது. அயபுரம் காலட்கிஜில்லாவில் இருக்கின்றது. இக்குறிப்படங்கிய கற்பலகைமேற்கூறிய தேவாலயத்திலிருக்கின்றது.

[Ex. Gr. India VI ஜனவரி 1900]

இரவிகீர்த்தி. ஸத்யாச்ரய (2-ம்) புலிகேசியின் சிற்றரசன்.

640 மஹேந்திரவர்மபல்லவராஜன். கஞ்சியிலாண்டவன். நரசிம்மவர்மபல்லவன். ஷை புதல்வன். இவன் 2-ம் புலிகேசியை வாதாபி என்னுமிடத்தில் முறியடித்து வாதாபிகோண்ட நரசிம்மன் என்ற பெயரும் பெற்றான். பல்லவராஜ்யம் திருச்சிராப்பள்ளிவரை பரவிற்று. திருச்சிராப்பள்ளிஉச்சிப்பிள்ளையார்கோவிலுள்பட நான்குமலைக் கோட்டைகள் மஹேந்திரவர்மனால் கட்டப்பட்டதாய்ச் சொல்லப்படுகிறது.

மஹேந்திரவர்மன் மஹாமல்லன் என்ற பட்டமும் பெற்றான்.

[2. செந்தமிழ் 173].

பல்லவ அரசர்கள்.

1. உக்ரதண்டன்.
2. இராஜசிங்கன் (சிங்கவிஷ்ணு.)
3. குணபாரன் (மஹேந்திரவர்மன்)-640.
4. வாதாபிகொண்ட நரசிம்மன்.
5. மஹேந்திரவர்மன்.
6. பரமேசுவரன். (கி. பி. 690.)
7. நரசிம்மவர்மன்.

திருமழிசையாழ்வாரைக்கஞ்சியிலிருந்துநீக்கினான். அவர் திருக்குடந்தை (கும்பகோணம்) வந்துசேர்ந்தார்.

8. பரமேசுவரன்.
9. நந்திவர்மன்-(710-760)
10. நந்திவர்மபல்லவமல்லன்.

மஹேந்திரவர்மன் காலத்தவர்—

சிறுத்தொண்ட நாயனார். வாதாபியில் பல்லவர்பக்கம் போர்புரிந்தார்.

நரசிம்மவர்மன் காலத்தவர்.

1. நாதமுனி. (Vaishnavite Reformers)
2. அப்பர். (திருநாவுக்கரசு) (கிர் 5) மஹேந்திர வர்மனைச் சைவமதத்தைத்தழுவச்செய்தார்.



3. சம்பந்தர். அப்பருக்கிளையவர். கூன்பாண்டியனைச் சைவனாக்கினவர்.

644 ப்ரயாகையில் ஹர்ஷ ராஜன் நடத்திய 75 நாள்த் திருநாள். ஹையூன்ஸங் கூட இருந்தார்.

648 ஹர்ஷன் மரணம்.

650 பர்த்ருஹரி மரணம். ஸம்ஸ்கிருத கவி.

இவர் இயற்றிய நூல்கள்—

1. நீதிசதகம்.
2. ஸ்ருங்காரசதகம்.
3. வைராக்யசதகம்.

[இட்ஸிங்-சீனயாத்ரி]

650 ஜயந்தன். பாண்டியராஜன். மாரவர்மன் அவனிசூளாமணியின்புதல்வன்.

இவர் காலத்தவர்.—

சூளாமணிஎழுதிய தோலாமொழித்தேவர். க்ஷமணர்.

—[Tamil Studies].

655—680 விக்ரமாதித்யன் I. மேற்குச்சாளுக்ய 5-ம் அரசன்.

655—664 விஷ்ணுவர்த்தனன் II. கிழக்குச்சாளுக்ய 4-ம் அரசன். ஷை 3-ம் அரசனான இந்திரபட்டாரகன் மகன்.

664—689 மஞ்சியுவராஜன். கிழக்குச்சாளுக்ய 5-ம் அரசன்.

670 மேற்குச்சாளுக்ய விக்ரமாதித்யன் (I) காலத்தில் ஸ்ரீ சங்கராசாரியார் இருந்ததாய்க் 'கொங்குதேசராஜாக்கள்' என்பதில் சொல்லப்படுகிறது.

673 இட்ஸிங். சீனயாத்ரி இந்தியாவில் ஸஞ்சரித்தார். இவர் எழுதிய குறிப்புகள் இந்துதேச சரித்திர நிர்ணயத்துக்குச்சாதனமாயிருக்கின்றன.

—[Indian Shipping-171]

680—696 வினயாதித்யன். மேற்குச்சாளுக்ய 6-ம் அரசன்.

689—702 ஜயஸிம்மன். கிழக்குச்சாளுக்ய 6-ம் அரசன். ஷை 5-ம் அரசன் புதல்வன்.

690 (விஜயஹெவு சகம் 611) வினயாதித்யனுலளிக்கப் பட்ட 3 தாம்ர சாஸனங்கள். நந்தியால் ஜில்லாக்கோர்ட்டில் இருக்கின்றன. அவைகளிற்காணப்படும் மேற்குச் சாளுக்யவம்சாவளி.

1. புலிகேசி.
2. கீர்த்திவர்மன்.
3. .........வல்லபர்.
4. .....................
5. விக்ரமாதித்யன்.
6. வினயாதித்யன்.

696—733 விஜயாதித்யன். மேற்குச்சாளுக்ய 7-ம் அரசன்.

697—733 இலளிதாதித்யன். காச்மீரமன்னன். கான்யகுப்ஜ (கானோஜ்) மன்னனுன யசோவர்மனைத் தோற்கடித்தான்.

703 கோக்கிலி. கிழக்குச்சாளுக்ய 7-ம் அரசன். ஷை 6-ம் அரசன் தம்பி.

704—740 விஷ்ணுவர்த்தனன் III கிழக்குச்சாளுக்ய 8-ம் அரசன். 7-ம் அரசன் தமையன்.

710—760 நந்திபோதவர்ம பல்லவன்.
இவன் காலத்தவர்—
1. நெடுமாறபாண்டியன்.
2. திருஞான சம்பந்தர். நெடுமாறன் காலத்தவர். சைவமுனி.

[III செந்-406

3. தண்டிவர்மன். ராஷ்ரகூட அரசன். நந்திபோத வர்மனைத்தோற்கடித்தான்.

4. திருமங்கையாழ்வார். இவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்.



720 யசோவர்மன். கானோஜிலாண்ட ராஜகவி. காச்மீர மன்னனுன இலளிதாதித்யனுல் தோல்வியடைந்தான். இத்துடன் கானோஜின் பெருமையும் போய்விட்டது.
இவர் இயற்றிய நூல்—
இராமாப்யுதய நாடகம்.
இவர் ஸம்ஸ்தானவித்வான்கள்:—
1. வாக்பதி.
2. ராஜஸ்ரீ
3. பவபூதி (ஸ்ரீகண்டர்). நீலகண்டர், ஜதுகர்ணி, இவர்கள் புதல்வர்.
பட்டகோபாலர் பௌத்திரன்.
விதர்ப்பதேசத்தில் பத்மநகரத்திற் பிறந்தவர்.
பவபூதி இயற்றிய நாடகங்கள்:—
1. மஹாவீரசரிதம்,
2. உத்தரராமசரிதம்,
3. மாளவிகா,
4. மாலதீமாதவம். (இதற்கு ஜகத்தாரும் ராஜ தீரரும் உரை எழுதியிருக்கிறார்கள்).

கவிவாக்பதி ராஜஸ்ரீ ஹவஹூ-ஹத்யாதி ஸெவிதஃ।
ஜிதொயயௌயமௌவர்மா தத்-குணஸ்துதி-வந்திதா।
—[ராஜதரங்கிணி-ச-149

733—746 விக்ரமாதித்யன் II. மேற்குச்சாளுக்ய 8-ம் அரசன்.

736 அனங்கபாலன். தோமரவம்சமுதல்அரசன். டில்லி நகரை ஸ்தாபித்தான்.

740—758 விஜயாதித்ய(I) பட்டாரகன். கிழக்குச்சாளுக்ய 9-ம் அரசன். ஷை 8-ம் அரசன் புதல்வன்.

740 (கஞ்சி) நந்திவர்மபல்லவன் விக்ரமாதித்யனுல் தோல்வியடைந்தான். அதுமுதல் பல்லவராஜ்யம் பல ஹீனமாய் வந்தது. சோழராஜ்யம் பலப்படத்தொடங்கிற்று.

745 ஜயாபீடன். காச்மீர அரசன்.

இவர் காலத்தவர்—

வாமனர். இவர் இயற்றிய நூல்கள்—

1. காசிகாவிருத்தி.
2. காவ்யாலங்கார ஸூத்ரவிருத்தி.

746—757 கீர்த்திவர்மன் II. மேற்குச்சாளுக்ய 9-ம் அரசன்.

747 இராஷ்ட்ரகூடர்களால் புதிதாய்ஸ்தாபனமான சாளுக்யராஜ்யம்பலஹீனமடைந்தது.

இராஷ்ட்ரகூடர் அதுமுதல் 200 வருஷகாலம் உயர் நிலைமையிலிருந்து அரசாண்டார்கள். மறுபடி சாளுக்ய ராஜ்யம் நல்லநிலைமையில் ப்ரபலமாயிற்று.

750 இராஷ்ட்ரகூடவம்சத்தரசர் புலிகேசிவம்சத்தரசரைவென்று அவ்வரசையும் தம்ஆதீனப்படுத்திக்கொண்டார்கள்.

750 ஜயஸிம்மன். காச்மீரமன்னன். இவருடைய குரு—

க்ஷீரஸ்வாமி. அமரகோசத்துக்கு உரை எழுதியவர். இராஜசேகரர் இயற்றிய வித்தஸாலபஞ்ஜிகையினின்றும் மேற்கோள் கூறியிருக்கிறார்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர்

பி. ஏ., பி. எல்.



திருச்சிற்றம்பலம்.

# ஞூப ணியன்வதைப்பரணி.

"சேந்தமிழ்" ( தொகுதி - கரு - பகுதி - ரு-ல் )
உகூகூ - ஆம் பக்கத்தொடர்ச்சி.

விடல்கெழுபரசுவமுழுகலப்பையும்
    வியல்விடுகுலிசமும்விசிறுபட்டமு
முடல்வகிரிடுவனதிகிரியுக்கிர
    முடையனவிடையனசிலவுரக்கையே. (499)

பரிகமொடெழுவனபலகைபற்றின
    பலகொலையறிவனபடவடிப்பன
தெரிகணைதெரிவனசிலைவளைப்பன
    செருமுனைபுகுவனசிலதிருக்கையே. (500)

துளவணிதொடையனதொடிசெறிப்பன
    தொடுகழல்புனைவனதொழிபரப்பன
விளைவணியிடுவனமுற்பட
    வெறிபடையெறிவனசிலதிருக்கையே. (501)

ஒளிநிலவுறுவனவுயிர்குடிப்பன
    வுயர்பெருவரையொடுமெயிர்பிளப்பன
தெளியினமரிவகிர்வடிவமொப்பன
    திருமனமுடையனசிலதிருக்கையே. (502)

வெருவருவிழியனவிழிபுறப்பட
    வெடிபடுநகையொடுவெயில்விழித்தெதி
ரொருவன்முனொருதிருமுகம்வெளிப்பட
    வுரமுடையவுணரையுறநெருக்கியே. (503)

வேறு.

வெறிசினத்தவர்விடுபடைக்கலமெரியெழச்சிதறித்
தெறிவரக்கடல்திடர்மடுப்பனசிலதிருக்கரமே. (504)

வெருவியுற்றவருடல்பிடித்திடைவிரலிடைப்பலரைத்
திருவுகிர்ப்புடையறவுறைப்பனசிலதிருக்கரமே (505)

தசையுகைத்தெழுதிருவுகிர்ப்புரையிடையொழித்தவரைத்
திசைபுகப்புகமிசைநெரிப்பனசிலதிருக்கரமே. (506)

உருமிடிப்பனவுயிர்குடிப்பனவுடல்துடித்துவிழச்
சிரமிடிப்பனகரமொடிப்பனசிலதிருக்கரமே. (507)

முனைமுகத்தெழுபடையெதிர்ப்பவர்முடிகளைச்சிதறிச்
சினமிகுத்தெழுசெருவிளைப்பனசிலதிருக்கரமே. (508)

அலர்முடித்தனவெனநகைத்தெழுமறுகுறைத்தலையிற்
சிலமுடித்தலைதிருகிவைப்பனசிலதிருக்கரமே. (509)

செருவரைக்களநிறைவிளக்குவைசிறையறுத்தகலப்
பருவரைக்கெதிரெதிர்குவிப்பனபலதிருக்கரமே. (510)

உயிர்மடுத்திடைவளைபடுத்துயிரறவொழித்துடலைப்
பகிர்படுத்தெழுகழுகழைப்பனபலதிருக்கரமே. (511)

உடன்வரக்கடைவிழிகொதித்தெழவுருகளிற்றணியைப்
படவடித்தெதிர்பரிபிளப்பனபலதிருக்கரமே. (512)

முறுவலிப்பொடுமுரணுடற்பொறைமுறியவெற்றியெறீஇப்
பருவெலும்பலகிடைபறிப்பனபலதிருக்கரமே. (513)

அடுகளத்திடையமர்விடற்குயிரடைவுகெட்டவரைப்
படுகொலைக்கரமுடுகிநிற்பனபலதிருக்கரமே. (514)

சிலவரைக்குடலுருவிவிட்டுடல்சிலவரைச்சிதறிப்
பலவிதத்தடுகொலைபடுப்பனபலதிருக்கரமே. (515)

வேறு.

எயிற்றிடைப்பலரகப்படச்சிலர்புறப்படப்பிடியா
வயிற்றிடைக்கனன்மடுத்தெரிப்பனவலத்திருக்கைபலவே. (516)

அலத்தகத்தகமலத்தையொப்பினுமமர்க்களத்தவுணர்
மலைத்தடத்தவர்வரப்புடைப்பனவலத்திருக்கைபலவே. (517)



இளைத்துளைத்தவர்படப்படச்சிலவிடத்திருக்கைபுடைபோய்
வளைத்துவைத்தவர்தமைப்புடைப்பனவலத்திருக்கைபலவே. (518)

சிரித்தெரித்தெழுசினக்கனற்படர்செருக்களத்திலொருபால்
வரித்தகொற்றவைமலர்க்கைபற்றினவலத்திருக்கைபலவே. (519)

அடர்க்களித்தவுணர்விட்டகைப்படைவளைத்துமொக்கவருபோர்
செலக்களிற்றிடைவிலக்கிநிற்பனவிடத்திருக்கைபலவே. (520)

துருத்தியொத்துடலடர்க்கழுத்தொடுசுரக்கவெற்றிவிசைதோ
லிருத்திவைத்துகிர்மடுத்துரிப்பனவிடத்திருக்கைபலவே. (521)

தசைத்தடித்திடைசினத்தைவைத்துடல்சிரித்தழைத்தகுடலா
லிசைத்தலத்தொடைதொடுத்தெடுப்பனவிடத்திருக்கைபலவே. (522)

வேறு.

அத்திருக்கைகளிலப்பொழுதுதப்புமவரைச்
செத்திருக்கும்வகைபார்த்தெதிர்சிரித்தருளியே. (523)

மிக்கதாளவுணர்தானையைவிடாதுகழலா
லொக்கவார்குருதிவேலையின்மசித்தலறியே. (524)

நின்றுசோணிதநிறைந்தவுணர்நீடியபதிக்
கன்றுசோணிதபுரப்பெயரளித்தருளியே. (525)

எக்கர்வார்குருதியேலிருநிலத்தெரிவையைச்
செக்கராடைபுனைதந்தருள்சிறப்பருளியே. (526)

வாரியிற்பெரியசெங்குருதிமாகடலெலா
மோருயிர்ப்பொடுபுலர்ந்திடவுயிர்த்தருளியே. (527)

ஆனைபட்டிவுளிபட்டிரதமற்றெறிபடச்
சேனைபட்டபடிகண்டெதிர்சினந்திருகியே. (528)

மெய்புடன்பொருதுபொய்யெனவெருண்டுவிழியா
வையர்பின்பவுணர்வந்தமர்பொர்க்கருதியே. (529)

நின்றுசிங்கநகைசெய்யநிலைகண்டுமறுகிச்
சென்றுசம்பரனெதிர்ந்தெதிர்சினந்திருகியே. (530)

வந்திரைத்துடனடந்தெதிர்மலைந்துமுடுகத்
தந்திரத்தலைமைவீரர்சதகோடியுளவே. (531)

அலையெறிந்தகடல்பொங்குவதுபோலுமவன்மேல்
மலையெறிந்துமலைபின்றுடரவந்தடையவே. (532)

பேருயிர்ப்பொடுமுடித்தலைபிடித்தொருகையா
லோருயிர்ப்பொறைதறைப்படவடித்தருளியே. (533)

கழுகுசம்பரன்விழிக்கடைகளைக்கவரவிட்
டொழுகுசெம்புனல்பிடித்துளைவிரித்துலறியே. (534)

சம்பரன்படைதறைப்படவிடத்தடவியே
வந்தெதிர்ந்தவரகப்படவளைத்தசனியே. (535)

வேறு.

ஒருவருடறலைகுலையவொருவரைமலைத்தே
யருவரையைநிகருமவருடல்வலிதொலைத்தே. (536)

இலகுபடுமசுரருடலிடையிடைகிழித்தே
யுலகுபடுமுறுதுயரமிடைசிறிதொழித்தே. (537)

அடவிபடுநெடுமுகடுமலைபொடிபடுத்தே
விடமருடன்முதுகுபொறையிறையிறைகெடுத்தே. (538)

சிகரமணிமுடியவுணர்சிலவரையெடுத்தே
மகரமெறிதிரையுவரிவடவையின்மடுத்தே (539)

பிலவரைகளதுறுழையுமவர்பிடர்பிடித்தே
குலவரைகளதிரவெதிர்குவடிறவளைத்தே. (540)

தருமவுணர்பொழியுமவர்தலைமலைமிதித்தே
வருமவுணர்படையடையவானிலெழவிட்டே. (541)

பிணமலையின்முகடுகொடுபெருவெளிமறைத்தே
நிணமலையவருகுருதிநிலமிசைநிறைத்தே. (542)

தொழுதுபடுமசுரருயிர்சுரருலகில்விட்டே
பழுதுபடுமசுரருயிர்படுநரகில்விட்டே. (543)

அறிவுடையவசுரர்பதியடையவழுவித்தே
யுறவுடையவமரர்பதியுவகையெழுவித்தே. (544)



வேறு.

சம்பரனுமவன்முதல்வன்றலைமைக்கேற்ற
சதகோடிதானவருந்தாமேநிற்ப
வம்பமரர்தலைகரந்துபரந்தவெள்ள
மாயிரகோடியுந்திருக்கையழிவுக்கிட்டே. (545)

அரவுருமென்றலைகிளரக்கிளர்செஞ்சோரி
யலைகடலிலவுணர்பிணக்குன்றமேறி
யிரவுநிணக்குடர்களுடன்குரவைகோத்து
வேதாளம்வித்தாரத்தாடவிட்டே. (546)

வருகின்றநரசிங்கவடிவைநோக்கி
வாளொடுகேடகஞ்சுழலவடபானின்ற
வொருகுன்றமிருதிங்கடழுவியோட்ட
வுருத்தெழுவதெனக்கனகனுடன்றெழுந்தே. (547)

எயிறெரியநகைபுகையநயனச்செந்தீ
யெண்டிசையும்பரந்தெரியக்கண்டுவானோர்
வயிறெரியவருமளவிலெதிரேசென்று
மைந்தனவன்கனைகழற்கீழ்வந்துநின்று. (548)

இவ்வுருவங்கண்டிறையென்றின்னுந்தேறு
மெண்ணிறைந்தபடையிறந்ததேதும்பாராய்
வெவ்வுருவங்கண்டெந்தைவெருளாநின்றாய்
விதிவலியேவலிதென்றால்விலக்கலாமோ. (549)

இறையவனீதான்பிழைத்ததெல்லாநிற்க
வித்தையொழித்தொருகாலஞ்சலித்துநீயின்
றிறையவனீயென்னுயிர்தன்னுடையதென்னி
லின்னமுநின்பிழைபொறுக்குமென்னக்கேட்டே. (550)

பகிரண்டமதிரநகைபலவுந்தோன்றப்
பவனத்தீயொடுமுடுகியிவனதாகம்
வகிரண்டுமடங்கலுடன்மலைப்பதென்று
மதலையெதிர்வாள்விதிர்த்துமறுக்கங்கொண்டே. (551)

பரியகுலவரைகள்நிலைகுலையப்பாய்ந்தும்
பார்த்திடுகண்ணிமைப்பளவிலார்த்தெழுந்த
வரியுருவமிடர்வெருவப்புகுந்ததூணி
லடித்தகையுமயில்வாளும்பிடித்துக்கொண்டே. (552)

வேறு.

ஒருகைவலியொடுதிருகவொருகையடுபடைகவா
விருகைபிடிபடவொருகைபோ
யொருகைதழுவிடவயலதொருகையவன்மணிமுடியி
லிடிவிழுவதெனவெறியவே. (553)

வேறு.

முடியிலிடிபடுமளவின்முறுகுசினமிகமறுகிமுடுகியே
வடவையனல்பொடியவெழுமடியுரறியிரணியனுமலையவே. (554)

வேறு.

பொருகனகனவனுமறைபுகழ்கையுருவரியுமெதி
ரெதிர்பொருதபொலிவுசலியா
வொருகனகநெடுவரையுமுயர்கயிலைவடமலையு
முடன்மலையுமுவமைபெறவே. (555)

அடிபொருதவிசையிலெழுபடிபெயரவுடல்விசையி
லருகுதிசைபெயரவொருகால்
முடிபொருதவிசையிலிடுகுலகிரைகளுதிரமிசை
முடியமுகின்முகடிடியவே. (556)

நகையிலெழுபுகைநிமிரநயனவெரிதிசைகொழுவ
நடலையடலமரிடைவிடா
துகமுடிவில்வடவனலுமுறுவளியுமெனவுலகை
யொருநொடியில்வலம்வருவரே. (557)

அருவரையுமலைகடலுமகலிடமுநிலைகுலைய
வவரிருவரமர்பொருதபோ
திருவரையுமொருவரிவணிறைவனிவனசுரனென
விமையவருமறிவரியரே. (558)



கலகமுடனெதிர்பொருதகனகனகவலிவெருவி
நமனுமுடல்குலைகுலையவே
றுலகதலமுழுதுமுயிரழுதலறியழியவரு
மொரு..........திமிலமிடவே. (559)

முனையிலொருவரையொருவர்முடுகிவிடுகிலருலக
முடியுமினிமுடியுமெனவே
யனையசெருவினைபொழுதிலசுரர்பதிகெடவமளி
யரவணையிலரிதுடரவே. (560)

அரிதுடரநிலைதளருமசுரர்குலபதிபுவன
மதனிலொருபுகலடிபெறா
தெரிதுடருமிரவியெழுபுரவிபுகுமளவில்வட
விமயமலையிடைமறையவே. (561)

வேறு.

அப்புறத்துமறைந்தவனையகல்பகுவாய்நரசிங்க
மம்பொற்குன்றி
னிப்புறத்துநின்றுபிடித்தெரியனையசுரிகுஞ்சி
பற்றியீர்த்தே. (562)

தாளிரண்டும்பிடித்தெடுத்துத்தலையண்டநெடுமுகடு
குலையத்தாக்கத்
தோளிரண்டுந்திசைநெருங்கச்சுடரிரண்டுமுடன்சுழலச்
சுற்றச்சோர்ந்தே. (563)

காதிரண்டுங்கழன்றுவிழுங்கனமகரகுண்டலங்கள்
காணவின்றும்
போதிரண்டுமெழுந்துவிழும்பொருப்பிரண்டுகடந்ததினிப்
புகல்வதென்னே. (564)

அன்றவனையரிசுழற்றச்சுழன்றவிசைமாறாமை
யாதல்வேண்டு
மின்றுவரையொருவரைசூழ்ந்திருவர்திரிந்
திளைப்பதுமற்றேறதுவென்னே. (565)

பொங்குருவிலரிசுழற்றப்பொருகனகனுடலாழிப்
பொற்பிற்றேய்ந்து
செங்குருதிநனைந்தவொளிசெக்கரெனநினைந்துலகந்
தெளியாதென்னே. (566)

அவ்வகைநின் றரியுருவமகல்விசும்பிற்றடக்கைநிமிர்ந்
தாயிரக்கால்
வெவ்வகையதிறலவுணன்விசையடங்கும்படிசுழற்றி
விழுந்தபின்னே. (567)

வாய்வழிசெங்குருதியுகமலக்கியவ............வலியை
நினையுந்தோறுந்
தீயுமிழும்படிவிழித்துத்திசைகழியும்படியதிரச்
சிரியாநின்றே. (568)

கோயிலுடைநகரிடையிற்குஞ்சிபிடித்தீர்த்தலறக்
கொண்டுபோந்து
வாயிலிடைநெடுங்கடையின்மணிப்படிமேலிருந்தவனை
மடிமேலிட்டே. (569)

கொண்டவரமறையனைத்துங்கொடுத்தநிலைகுலையாமற்
குறித்துநோக்கிக்
கண்டகனையுயிர்பருகக்கருதிவருபரிதிபுகு
காலம்பார்த்தே. (570)

செம்பொறியுங்கரும்புகையுஞ்சிதறியுயிர்நிலைபதறத்
தீயோன்சிந்தை
யைம்பொறியுநிலைகலங்கவடித்துடலம்பேராமற்
பிடித்துவைத்தே. (571)

மேருகிரிதுளைத்துருவிமுளைத்தசிலவெண்பிறைபோல்
விளங்கும்வீரக்
கூருகிரினுதிகனகன்கொடிய...தி...ல...நெஞ்சங்
குளிக்கவிட்டே. (572)

வேறு.

குளித்தநகக்குலைபடையிற்கொதித்துடலைச்சிதைத்தே
களித்தவரைச்செருக்கடையக்கழுத்திடையிற்கழித்தே. (573)



களித்தவுடற்பொறைச்சிறையைக்கெடுத்துயிர்புக்கெடுத்தே
யழித்தமரிற்றிளைத்தகளத்தழைத்தெமனுக்களித்தே. (574)

உதித்தெழுசெக்கரொக்கவுரத்திரத்தமுகத்தெனவே
கொதித்தெதிர்கொப்பளித்ததனைக்குடித்தலையக்குளித்தே. (575)

திளைத்தெழுபச்சிரத்தமிகத்தெறித்தநெறித்தடத்தே
முளைத்திடையிற்றிளைத்தவரைப்பிடித்துமுறித்தடித்தே. (576)

தொடுத்திருமுப்புரிக்குடரைத்துலக்கியெழப்பறித்தே
யெடுத்திருபொற்புயத்துளவத்தொடைக்கிடையுட்டுவைத்தே. (577)

வெடித்தனவிப்படித்தலம்வெற்பனைத்துமெனப்புனற்கா
ரிடித்ததெனப்பிடித்துடலமெலுப்பலகைப்பறித்தே. (578)

கொழுத்தவுடற்கைத்தடியைக்குறைத்துயரக்குவித்தே
பழித்தகனற்சிறைக்குழிகட்பசிக்கழுகுக்களித்தே. (579)

புவித்தலமுற்றளித்தபுரைப்புழைக்கைமதப்புகர்க்கார்
செவித்துளைகட்டுயர்த்தலறத்திகைத்திரியச்சிரித்தே. (580)

வேறு.

அவ்வகையவுணனுகம்பிளந்தளைந்தார்த்தசிங்க
மெவ்வகைபுலகுமஞ்சவெழுந்துமேனிமிர்ந்துநின்றே. (581)

குலவரையிடங்கடோறுங்குரைகடற்குழிகடோறுஞ்
சிலவரைத்துடர்ந்துபோனதிருக்கையின்வரவுபார்த்தே. (582)

அப்பினையுருவியிப்பாலண்டங்கடோறும்புக்குத்
தப்பினசிலரைத்தேடுந்தடக்கையின்வரவுபார்த்தே. (583)

தன்புலம்புகாதுபோனதானவர்சிலரைத்தேடி
வன்பிலம்பிளந்துபுக்கமலர்க்கையின்வரவும்பார்த்தே. (584)

தந்தையையெதிரேகொல்லக்கண்டிறைதளர்வுறாத
சிந்தையுந்தானுநின்றதிருமகன்றெளிவுபார்த்தே. (585)

அன்னையிச்சீற்றநீயேமாற்றுகென்றமுதில்வந்த
பொன்னையுங்கொண்டணைந்துபூமகன்றனிமைபார்த்தே. (586)

போற்றிநின்கழல்கள்போற்றிபுராதனாபோற்றியென்றென்
றூற்றினரமரரெல்லாமார்த்தெழுந்தன்மைபார்த்தே. (587)

கழிந்ததென்றுயரமென்னாக்கற்பகநாடன்கையாற்
பொழிந்தபூவழிந்தவெள்ளப்பூதவண்டிசைகள்பார்த்தே. (588)

இத்தனைமுனியவுண்டோவிலக்கெனவிலக்குஞ்செய்யான்
முத்தெனவிளங்குஞ்சோதிமுறுவலான்முனிவர்சூழ்ந்தே. (589)

கனகனைநோக்கிநோக்கிக்கனன்றகண்காதல்செய்த
வனகனைநோக்கிநோக்கியரவிந்தமலர்களாயே. (590)

வருகவென்றணைவனிங்கேவருகவென்றருளிவள்ள
லொருகைகொண்டணைத்துப்பின்னையுச்சிமேலொருகைவைத்தே. ()

தாதையைநீயுங்காணச்சலத்தினாற்றவறுசெய்த
பேதைமைநம்பாவுண்டிப்பிழையைநீபொறுத்தியென்றே. (592)

இன்றிவைபொறுத்துநின்றாயினிப்பிழைசெய்தாரேனுங்
கொன்றுயிர்களைகிலோநின்குலத்துளார்தம்மையென்றே. (593)

அளவிலாவின்பமெய்தியன்பநீயெம்மைப்போல
வுலகெலாமுய்யும்வண்ணமூழிநாள்வாழியென்றே. (594)

எம்மையாதரிக்குமாபோலிம்பருமும்பர்தாமு
மெய்ம்மையாலுன்னையேத்திவீடுபெற்றிருக்கவென்றே. (595)

என்னதேயுன்னதாவியாமுமெம்மூருமெல்லா
நின்னதேயென்னாநின்றநீர்மையானினைப்பிலிட்டே. (596)

வேறு.

பூமகனையவன்மகனைச்சதுமுகனைமுகநோக்கிப்
புவனங்காக்குங்
கோமகனையமரர்கரங்குவிக்கும்வகையபிடேகங்
குவிக்கவென்றே. (597)

நாற்றிசையும்பரந்திமையோர்நல்லமறைமொழிமுதலாற்
பல்லாண்டென்று
போற்றிசெயமிசையெழுந்துபுரந்தரன்றன்பொன்னகரம்
புக்கிருந்தே. (598)



இந்திரனின்றுரிமைசெயவிளமதலையாசனத்தி
லினிதிருக்கச்
சந்திரன்வெண்குடைநிழற்றத்தழல்வேள்விச்சடங்கயனார்
சமைத்தபின்னே. (599)

நம்முடையகுலமதலைநற்றவத்தைத்தவிளம்புவதெ
னாயனார்தாங்
தம்முடையகரதலத்தாற்றடமகுடந்தாங்கியவன்
றலைமேல்வைத்தே. (600)

தானவர்க்குந்தலைவனெனுந்தரமல்லன்கனகாதி
......................
வானவர்க்குத்தலைவனெனமதலையவன்றடந்தோளில்
மாலையிட்டே. (601)

மாகனகமுடிபுனைந்தமதலையைநீநோக்குகென
வள்ளல்சொல்லக்
கோகனகமலர்மடந்தைகுழைதுடர்ந்தமதர்விழியாற்
குளிரப்பார்த்தே. (602)

அறந்திருந்திமறைதழைக்கவமரரெல்லாங்களிகூர
வநேகங்கால
மறந்திருந்தவாய்மைநெறிவழுவாமன்மனுநெறியால்
வாழவென்றே. (603)

வரங்கொடுத்துவலிகொடுத்துவானாடர்சூழ்ந்திறைஞ்ச
வாழ்ந்திருக்குந்
தரங்கொடுத்துநான்முகற்குஞ்சதமகற்குந்தனித்தனிதண்
ணளிகொடுத்தே. (604)

மைந்தனையங்கரசிருத்திவாசவனையுடனிருத்தி
வானோரெல்லாஞ்
சிந்தனைதீர்ந்தகமகிழ்ந்திசைமுகனாருலகளவுஞ்
சேணிற்சென்றே. (605)

தாயனையநரசிங்கந்தாயரிமேன்மடந்தையொடுந்
தாங்கள்வீட்டிற்
போயினபினுன்னடியென்பொன்னுலகத்திடையின்றும்
போங்...தென்னே. (606)

ஆனபடியிதுகொடியோனழிந்தபடியிதுநெடியோ
னரசிருத்திப்
போனபடியிதுகளப்போர்புகுந்தபடியிதுவென்று
புகலக்கேட்டே. (607)

வேறு.

அன்னையுமருகிருந்தவலகைபின்பெருங்குழாமு
முன்னையிலெண்மடங்குமுகமலர்ந்தகமலர்ந்தே. (608)

இன்னவாசகத்தையாவர்க்கியம்பலாமிதனைப்பேய்
சொன்னவாறெனவணங்குசுடர்முடிதுளக்கஞ்செய்தே. (609)

சந்தவாக்குடையசெஞ்சொற்றலைமையினுகந்தவர்க்கு
மிந்தவாக்கில்லைப்பேய்வாக்கிருந்தவாறெனவியந்தே. (610)

வாசிகையிதழித்தாருமணமலிநிணப்பூம்பட்டும்
பேசியவரிசைக்கேற்பப்பெறும்படிகொடுக்கவென்றே. (611)

அடும்படையவுணர்வெள்ளமாயிரங்கோடிபட்ட
படுங்களங்கடிதிற்சென்றுபார்த்துமென்றூர்த்தெழுந்தே. (612)

ஓடியகணங்களெல்லாமொருவரையொருவர்முற்பட்
டாடியுமெழுந்துஞ்செல்வமர்க்களமதனைக்கண்டே. (613)

பிணங்கண்மிக்குயர்ந்தகுன்றிற்பெரியதோர்குன்றிலேறிக்
கணங்களுக்கணங்குநின்றுகளத்தினைக்காட்டலுற்றே. (614)

வேறு.

வச்சிரத்தான்மலைந்தமலைக்குலங்களென்ன
மாருதத்தான்மடிந்தமழைக்குழாங்களென்னப்
பச்சிரத்தநெடுங்கடலினடுவேதோன்றும்
பாவடியின்பிணக்குவைகள்பாரீர்பாரீர். (615)

அந்தமிலாமலைமருப்புமருப்பின்மேல்வீ
ழரசர்நெடுங்கொடைவனப்புமந்திவானில்
வந்தபிறைமதியுநிறைமதியுஞ்சேர
வைத்தவிசும்பொத்திருந்தவண்மைபாரீர். (616)

(தொடரும்.)

சு. நல்லசிவன்பிள்ளை.

---

உ

கடவுள்துணை.

# செந்தமிழ்

தொகுதி-கசு.] பிங்களஹூ மாசிமீ [பகுதி - ச.
Vol. XVI. February,—March. 1918. No. 4.

உ

## ஐயவினாவுக்குவிடை.

அளகு என்பது கோழி, கூகைஎன்னும் பறவைகளின் பெண்பாலை உணர்த்துமொரு மரபுப்பெயர். அஃது "அயர்வுறுகோழிகூகையல்லாப்பெண்ணளகென்றோதார்" என்னும் சூடாமணிநிகண்டினாற் பெறப்படும். இவைகளையன்றி மயிற்பேடையையும் உணர்த்தும் என்று தொல்காப்பியர்கூறுவர். "மனையுறையளகின்வாட்டொடும் பெறுகுவிர்" (பெரும்பா) என்பதைக் கோழிப்பேடைக்கும், "அளகு சேவலொடி" (சிந்தா) என்பதைக்கூகைப்பேடைக்கும் இலக்கியமாகக் கொள்க. மயிற்பேடைக்கு இலக்கியங்கண்டிலம்.

இந்நியமந்தவறி இரகுவமிசகாரர் அன்னப்பேடைக்கும் வழங்குவர். "ஆதகா வெண்ண வன்ன மயல்செல வளகு மாடே" என்பது இரகுவமிசம், கந்தபுராணகாரர் பறவைப்பேடைகட்குப் பொதுவாகவும்வழங்குவர். "அளகைநேடிப்பார்வல்வந்தணையுமாபோல்" என்பது கந்தபுராணம். திருவிளையாடற்புராணகாரர் சேவற்கோழிக்கும் வழங்குவர். "அளகைப்பொறித்தகொடியிளையோன்" என்பது திருவிளையாடற்புராணம். விதியிருத்தல்வேண்டும் என்பது அநுமானிக்கப்படும்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப் பிள்ளை.

உ

# ஜைன நூல்களின் கவிமேன்மையும் காலநிர்ணயமும்.

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு".

"என்றும் கிழியாதென்பாட்டு."

( தமிழின்பிறப்பும் தோன்மையும். ) உலகெலாம்உணர்ந்தோதற் கரியவன்பயந்ததாம் அமிழ்தினுமினியதமிழ்மொழியை ஆதிகாலத்தில் ஓம்பி நிலைநிறுத்தி இலக்கணம்வகுத்தவர் பௌவநீர்முழுவதையும் ஒருகரத்திலடக்கியவராகிய குடமுனியென்றுகூறுநிற்பர் பண்டைநூற் பாவலர்பலர். இது "ஆதியிற்றமிழ்நூலகத்தியற்குணர்த்திய மாதொரு பாகனைவழுத்துதும்," "தழற்புரைநிழற்கடவுள்தந்ததமிழ்" என்ற முந்தையோர்கூற்றினின்றும்போதரும். இனி மக்களாக்கப்பொருளாய் விளைந்தது தமிழ்மொழிஎன்பார்ஒருசாரார். "கருத்துக்கள்தன்முயற்சி யானெழூஉம் ஒலிகளின்சம்பந்தமாகவே வெளிப்படுகின்ற இயல்பி னின்றும் பாஷைகளுண்டாதலியலுமென்பது யாவரும்மறுக்கமுடியாத தோர்பாஷைநூலுண்மை." காட்சியளவில்நின்ற கைவாய்முதலிய உறுப்புக்களாற்செய்யப்பட்ட சைகைகளாலாகிய இயற்கைக்குறிப்பி னின்றும் தமிழ்மொழி "போறல்வகையானும் சுவைவகையானும் அறி குறிவகையானுமாகிய ஒலிகளும் ஒலிக்கூட்டங்களும்" கேள்வியளவிற் பரவாநின்றது. பரம்பரையாகமதிக்கப்பட்டுவரும் இத்தென்மொழி தேவபாஷையாயினுஞ்சரி, மக்களாக்கப்பொருளாய்விளைந்தபாஷையா யினுஞ்சரி, அதன்றொன்மை மறுக்கற்பாலதன்று. இத்தனையாண்டு கட்குமுன்னர் இது தோன்றித்திகழத்தொடங்கியதென்பது சுட்டிக் காட்டலானவரையறைஏற்குந்தன்மைத்தன்று. உச்சிமேற்கொண்டு யாவராலும்போற்றப்படுகிற புராதன இதிகாசங்களாம். இராமாயணத் திலும் மகாபாரதத்திலும் பாண்டியராண்டநாட்டின்வளமையும், வழங்



கிய தமிழ்மொழியும் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலின் அக்காலங்களுக்கு முன்னரே தமிழ்மொழி ஏற்பட்டிருக்கவேண்டும்.

( தமிழ்வளர்த்தவர்கள். ) இத்தொன்மொழியாம்தமிழ்மொழி மூவகைப்பட்டு ஐவகை இலக்கணங்களுடன் விரிந்த நூற்பரப்பை உடைத்து. மூன்றுசங்கம் நிறீஇ, தமிழாராய்வாரைப்பேணி, பாவல ரையோம்பி, இயலிசைநாடகநூல்களை அதிகப்படுத்தியவர் சேரசோழ பாண்டியவேந்தர்களும் அவர்களது சிற்றரசர்களுமே.

( முதற்சங்கம். ) "தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுர மெரித்தவிரிசடைக்கடவுளும், குன்றமெறிந்தகுமரவேளும், முரிஞ்சி யூர் முடிநாகராயரும் நிதியின்கிழவனுமென இத்தொடக்கத்தார் 549 பேர்களென்பது. அவருள்ளிட்டு 4449 பேர்கள் பாடினாரென்பது. அவர்களாற்பாடப்பட்டன எத்துணையோ "பரிபாடலும் முதுநாரை யும் முதுகுருகும் களரியாவிரையும்" என இத்தொடக்கத்தன. அவர் 4440 யாண்டு சங்கமிருந்தாரென்பது. அவர்களைச்சங்கம்இரீஇயினார் காய்சினவழுதிமுதலாகக்கடுங்கோனீறாக 89 பேர்களென்ப. அவருட் கவியரங்கேறினார் எழுவர்பாண்டியரென்ப. அவர்க்கு நூலகத்திய மென்ப" எனத் தலைச்சங்கத்தைப்பற்றியும்,

(இடைச்சங்கம்.) "இனிஇடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க்கருங்கோழிமோசியும்,வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன்மாறனும், துவரைக் கோமானும், கீரந்தையுமென இத்தொடக்கத்தார் 59 பேர்களென்ப. அவருள்ளிட்டு 3700பேர்கள் பாடினாரென்ப. அவர்களாற்பாடப்பட் டன 'கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலையகவலுமென இத் தொடக்கத்தனவென்ப. அவர்க்குநூல் "அகத்தியமும், தொல்காப்பிய மும், மாபுராணமும், இசைநுணுக்கமும், பூதபுராணமு"மென இவை. அவர் 3700 யாண்டு சங்கமிருந்தாரென்ப. அவருட்சங்கமிரீஇயினார் வெண்டேர்ச்செழியன்முதலாக முடத்திருமாறனீறாக 59 பேர்க ளென்ப. அவருட்கவியரங்கேறினார் ஐவர்பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்துதமிழாராய்ந்தது "கபாடபுர"த்தென்பது. அக்காலத்துப் போலும் பாண்டியநாட்டைக்கடல்கொண்டது" என இடைச்சங்கத் தைப்பற்றியும் இறையனாரகப்பொருளுரையிற்கூறப்பட்டிருக்கின்றன.

(கடைச்சங்கம்.) இனி "கடைச்சங்கமிருந்துதமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையானாரும், பெருங்குன்றூர்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர்நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார்மகனார் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் 49 பேர்கள் என்ப. அவர்களாற்பாடப்பட்டன நெடுந்தொகைநானூறும், குறுந்தொகைநானூறும், ஐங்குறுநூறும், நற்றிணைநானூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பதுகலியும், எழுபது பரிபாடலும், கூத்தும்வரியும், பேரிசையும், சிற்றிசையுமென இத் தொடக்கத்தன. அவர்க்குநூலகத்தியமும் தொல்காப்பியமுமென்ப. அவர் சங்கமிருந்துதமிழாராய்ந்தது 1850யாண்டென்ப. அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப்போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக 49 பேரென்ப. அவர்சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரையென்ப. அவருட்கவியரங்கேறினார் மூவர்பாண்டியரென்ப." எனச்சொல்லிப்போந்தார் நக்கீரனாரினின்றும் பத்தாந்தலைமுறையிற்றோன்றிய நீலகண்டனாரென்பவர்.

(தமிழ்நூற்சோதனை) நன்று, மேற்சொல்லியவண்ணம் பல்லாண்டு காலம் தமிழைவளர்த்தமன்னர்சரித்திரம் யாண்டு ஒளித்ததுகொல்? முதலிடைச்சங்கம் இரீஇயினார் இலக்கியங்களுள் ஒன்றும் நமக்குக் கிடைத்திலதே. அகத்தியத்திற்சிலசூத்திரங்களும் அழிவற்ற தொல்காப்பியமுமாகிய இலக்கணவகுப்பிற்சார்ந்தநூல்களே நம்மிடையூடு ஒளிராநிற்கின்றன. இனி மற்றநூல்கள் கடல்கொள்ளப்பட்டொழிந்தனவோ? அன்றேல் செல்லுக்கிரையாயினவோ? இல்லையேல் "தீத்திறத்தார்பக்கமேசேர்கென்று காய்த்தியபொற்றொடியேவப்புகையழன் மண்டி"னகாலத்துத் தீயிற்பட்டு இறந்தனவோ? அறிந்திலம். இஃது எவ்வகையாயேனுமிருக்க, தமிழ்மக்கள் மெல்லமெல்லப்புராதனமான வற்றைப்போற்றி அருமையுடைத்தென்று அசாவிடலின்றித் தங்களாலியன்றவளவு விடாமுயற்சியுடன் அன்னோரன்ன பழம்பெரும்பனுவல்களைத்தேடிப் பரிசோதித்து வெளியிட்டுவருகின்றார்களென்பது வெள்ளிடைவிலங்கலே.

(நூற்பரப்பு.) இனி சரித்திரகாலவரையறையில்வாராத ஆதிகாலத்துநூல்கள் இறந்தனவாக, இற்றைக்குச் சற்றேறக்குறைய 20 நூற்றாண்டுகட்குமுன்னர்விளங்கிய ஒரு சங்கத்தார்காலத்துயாக்கப்



பட்டநூல்களே (இயல்.) "எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், பதினெண்கீழ்க்கணக்குக"ளுமாம். இன்னும் சங்கப்புலவராய்த்திகழாமல் "நாவிலிழைநக்கி நூனெருடு"ந்தொழில்கொண்ட திருவள்ளுவனார் அரங்கேற்றியமுப்பானூலிக்காலத்ததுவே. பின்னர் இவையிற்றைத் தொடர்ந்தன காப்பியங்களீரைந்தும், அப்பாலடர்ந்தன இலக்கணநூல்களும், புராணங்களும், இதிகாசங்களும், நிகண்டுகளும், சமயச்சார்புச் சாத்திரங்களும், தேவாரதிருவாசகங்களும், நாலாயிரப்பிரபந்தங்களும், சொல்லணிபொதுளியமிறைக்கவிகளும், பொருள்நலங்கனியக் கற்பனைபொலிந்தநூல்களும், மற்றத்தனிப்பாடல்களும், தற்காலத்திய மொழிபெயர்ப்புப்புத்தகங்களும், நவீனங்களும், நாடகங்களுமே. ஈண்டுத்தொகுத்துக்காட்டியநூல்களெல்லாம் இயற்றமிழ்ப்பாற்படவே இசைநாடகத்தமிழ்நூல்களில்லையோவெனின், (இசை. நாடகம்.) அது மற்றோர்கதையாகும். அவை நிலைகுலைந்து தலையற்றுப்போனதற்குற்றகாரணமொன்றுண்டென்பாருமுளர். நவீனகாலத்தில் நாடகத் தமிழைப்போற்றுவார் அதிகப்பட, அதைப்பயிலுவார் பலராயினர். இசைத்தமிழுக்குவேண்டிய தெப்பம் இதுகாறும் ஏற்பட்டிலது. ஆதலின் இது ஒளிமழுங்கிக் காலக்கடலில்ஆழ்ந்திருக்கின்றது.

(தமிழ்நூலாசிரியர்கள்.) தமிழ்நூல்யாத்தவர் ஆதிகாலத்திற் பல வருணத்தவரும் பல மதத்தினருமாவர். நாகரிகமுதிர்ந்தஇக்காலத்திலும் அத்தன்மைமாறுபாடடையவில்லை.

அவர்களிற்பெரும்பான்மையர் மிடிக்கண்இடிபட்டவரே. "ஒருதிசையொருவனையுள்ளி நாற்றிசைப்பலரும்வருவா" ராதலின் "பொதுநோக்கொழிமதிபுலவர்மாட்டே" என்றகூற்றே இதைவலியுறுத்தும். கொற்கையாளிகுலசேகரனும் "வெற்றிவேற்கை"யன் வீரராமபாண்டியனைப்போல்பவர் சிலரேயாவர். இன்னும் அகத்தியரும் தொல்காப்பியரும் கபிலரும் கோதமனாரும் அந்தணர்கள்; நலங்கிள்ளி, தொண்டைமான்இளந்திரையன், நெடுஞ்செழியன் முதலியவர் அரசர்கள்; காரிக்கண்ணனார், சீத்தலைச்சாத்தனார் முதலியவர் வணிகர்கள்; இளங்கோவடிகள் ஓர்பாலியதுறவி; இன்னும் பாடியவர்களிற்பெண்பாலாருமுளர்—ஔவையார், பெருங்கோப்பெண்டுமுதலியவர்கள் பெண்மக்கட்பெருந்தகையார்.

(சமயவேறுபாடு) கடைசியாக, இந்தியதேசத்தார் எம்மதத்தைச்சார்ந்தவர்என்பது எவ்வாற்றானும் ஒருக்காலுமுரைக்க இயலாது. தென்னிந்தியபாகமும் அவ்வகைத்தே. முற்காலந்தொட்டுப் பலசமயவாதிகளும் இதிலினிதிருந்திருக்கின்றனர். அரசன்சைவனாயினுஞ்சரி சமணனாயினுஞ்சரி, எம்மதப்புலவரையுந்தமதுதண்கவிகைநீழலில் இருப்பச்செய்குவன். சமயம்மலிந்தநன்னாடாகிய இந்நாட்டில் சிற்சிலவமயங்களிற்சமயவாதிகள் சமயசாத்திரஞ்சாதிப்பவராய்ப் பலகொடுமைகளையியற்றியுளாரென்பது கர்ணபரம்பரை. இன்னும் கான்ஸ்டான்டின்பீஸ்சிஎன்ற வீரமாமுனிவர், ரெவரண்டுபோப்பையர் போன்ற ஐரோப்பியர்பலர் தமிழிற் பல பிரபந்தங்கள்இயற்றியிருக்கின்றனர்.

(வியாசப்பகுப்பு.) இம்மாதிரிநூல்செய்த பலமதத்தினர்களுள் சமணசமயத்தார் யாவரென்பதும் (1) அவர்களியற்றிய நூல்கள் யாவை என்பதும் (2) அந்நூல்கள் எவ்வகையினவென்பதும் (3) அவைகளின் காலவளவை ஓராற்றானிர்ணயிப்பதும் (4) அவைகளின் மாட்சிமை எத்துணைத்தென்பதும் (5) அவர்கள் தமிழுக்குச்செய்தஉதவி எத்தன்மைத்தென்பதும் (6) ஈண்டு ஆராய்ச்சிசெய்வதற்கெடுத்துக்கொண்டவிஷயங்களாகும். இவைகளை முறையே ஒன்றன்பின்னொன்றாய்ப்பரிச்சேதஞ்செய்துதுலங்கவைப்பதே இவ்வியாசத்தின் நோக்கமாகும்.

(ஜைனர்யாவர்?) முதலாவதாக இவர் யாவரென்பதை ஆராய்வாம். சற்றேறக்குறைய இருபத்தைந்துநூற்றாண்டுகட்குமுன்னர் அதாவது கி. மு. ஆறாவதுநூற்றாண்டில் வடஇந்தியாவில் இரண்டு மகாபுருஷர்கள் அவதரித்தனரென்று ஸ்ரீமான் கிருஷ்ணசாமிஐயங்காரவர்கள் தம்“புராதனஇந்தியா” என்ற புத்தகத்தில் வரைந்திருக்கின்றனர். அவர்களில்ஒருவர் சித்தார்த்தசித்தி என்ற கௌதமபுத்தர்; மற்றொருவர்மகாவீரவர்த்தமானர்என்பவர். இருவர்களும் (ஜைனரின் மூலபுருஷர்கள்.) ஆசாரியராகவருவோர்களுக்குரிய லக்ஷணங்களையெல்லாம் பொருந்தினவர்களாய், பாமரஜனங்களுக்கும் தர்மோபதேசஞ்செய்து, தயை, அன்பு, அறம், வாய்மை, ஜீவகாருண்யம் முதலியவற்றை எடுத்துரைப்பவர்களாய் அநித்தியமாகிய உலகவாழ்வில் அருவருப்புற்றுப் பிணி, மூப்பு, சாக்காடு இவைகளுக்குக்காரணமாகிய



பிறப்பினைஅகற்றி நல்வழியை அறிவிப்பவர்களாய், மறம்மல்கி அறம் அறுங்காலமாகிய அக்காலத்தில் ஹிந்துக்கள்மரபிலேபிறந்துவளர்ந்து வந்தார்கள். இவர்கள் முறையே பௌத்தமதம் ஜைனமதம் என்ற இருசமயங்களையுந்தாபித்து, எண்ணிறந்தசிஷ்யர்களையுமேற்கொண்டு பலசங்கங்களையும் மடாலயங்களையுமேற்படுத்தித்தங்கள் மதக்கொள்கைகளை ஐயமறத்தெள்ளிதிற்றெளிவித்துத் துறவறம்பூண்டு பல்லாண்டுயிர்த்திருந்து தம்வாணாளைக்கழித்துக்கடைசியில் நிர்வாணமெய்தினர்களாம்.இவர்கள்மதக்கொள்கைகளை அநுசரித்துவாழ்பவர்கள் முறையே பௌத்தர்களென்றும் ஜைனர்களென்றுமழைக்கப்படுவர்.

(மூலபுருஷர் ஹிந்துவா?) மேற்சொல்லிய மூலபுருஷர்கள் ஆரியகுலத்திற்பிறந்துவளர்ந்துவந்ததினாலே ஹிந்துமதக்கொள்கைகளை ஐயந்திரிபறக்கற்றுணர்ந்து, அவைகளிற்களைகளாய்த்தோன்றியவற்றைக்களைந்து எறிந்து, பிராமணசன்னியாசிகளுடையவழிகளை அநுசரித்துத் தங்கள்நியமங்களை உண்டாக்கிக்கொண்டார்களென்பதே மேற்புலவிஞ்ஞானிகளாகிய மாக்ஸ்மூலர், ஓல்டன்பர்க், ஹர்மன்ஜாகோபி, ரைஸ்டேவிட்ஸ் முதலியவர்கள் ஆராய்ந்தறிந்த சித்தாந்தமாகும். (ஆதிபாஷை)இனி ஜைனர்களின்ஆதிபாஷை சம்ஸ்கிருதந்தானென்று யுக்தி, பிரத்தியக்ஷ அநுமானங்களால், “செந்தமிழ்” தொகுதி பத்து, பகுதி ஒன்றில் 19-ஆம் பக்கந்தொடங்கி பிரம்மஸ்ரீ குப்புசாமிசாஸ்திரிகள் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். ஜைனர்கள்கொண்டாடும் தீர்த்தங்கரர்கள் முன்பு ஆரியக்ஷத்திரியர்களேயாவர். ஜைனமதத்தில் பிரபலமானநூலாயுள்ள தத்துவார்த்தசாஸ்திரத்துக்குகந்த ஹஸ்திமகாபாஷ்யஞ்செய்த பாடலிபுத்தரவாசியான சமந்தபத்திரர்தென்னாட்டிற்குப் போந்து திகம்பரஜைனர்களை ஆங்காங்கு நிலைநிறுத்தினவரென்றும்,

(காலம்.) இவரிருந்தகாலம் இரண்டாம்நூற்றாண்டென்றும் மேற்சொன்னபத்திரிகையில் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன. இஃதிப்படியாக் வில்சன்என்ற கீழ்த்திசை நூல்வல்லவரான ஒருவர், ஜைனர்கள் மற்றெல்லாச்சமயத்தாருக்கும் பின்வந்தவர்களென்றும், கி. பி. எட்டு ஒன்பதாவது நூற்றாண்டுகளில் பிரபல்மானார்களென்றும், பிராமணர்கள் இவர்கள்கொள்கைகளைப்பற்றி இக்காலவரையறைக்குமுன் ஒருவிதகண்டனமும்செய்யவில்லையென்றும், புத்தமதம் க்ஷீணதசையிலிருந்தகாலமாகிய ஒன்பதாவது பத்தாவதுநூற்றாண்டில்

தொண்டைமண்டலத்தில் அமரகோசன் என்ற மன்னவனரசாண்ட காலத்தில் ஜைனர்கள் தெற்கே சோழமண்டலத்திற்குடியேறினர்களென்றும், அதன்தெற்கே பாண்டியநாட்டிற்குயாண்டுப்போயினரென்பது துல்லியமாய்த்தெரியவில்லையென்றும், மதுரையில் பதினோராம் நூற்றூண்டில் அரசாண்ட கூன்பாண்டியன்காலத்தில் செல்வாக்குள்ளவர்களாயிருந்தாரென்றும், அதற்கடுத்த நூற்றூண்டிலும் உன்னதஸ்திதியிலிருந்து பின்னர் க்ஷீணமடைந்தனரென்றும், ஆறுமேழாம்நூற்றூண்டுக்கும் பன்னிரண்டாம்நூற்றூண்டுக்குமிடையிலுள்ளகாலத்தில் ஜைனர்கள் பிராமணர்களுடன் பல அம்சங்களில் உடன்படுபவர்களாகிப் புத்தசமயத்தை வேரறக்களைவதற்குக்காரணமாயிருந்தார்களென்றும் சொல்லுகிறூர். இன்னும் மைசூர், குஜராட், மகதம் முதலியபாகங்களிற்கிடைத்திருக்கின்ற ஜைனசிலாசாசனங்கள் கி. பி. ஒன்பதாவதுநூற்றூண்டுக்குமுற்பட்டனவாயுமில்லை; பதினோராவது நூற்றூண்டுக்குப்பிற்பட்டனவாகவுமில்லை. இவைகளை, சிரவணபெல்கோலா, மூதபித்திரையூர் முதலிய இடங்களிற்காணலாம். இக்கால வரையறையைப்பற்றிப்பின்னரும்ஆளுதலின் இத்துடன் இதைநிறுத்துவாம்.

(கோள்கைகள்.) இனி ஜைனசமயத்தார் ஆதிகாலத்தில் இந்த உலகத்தில் ஜைனசமயம் ஒன்றே அனுதியாயிருந்தசமயமென்றும், மற்றச்சமயங்களெல்லாமிதிலேயிருந்துஉண்டானவை என்றும், இச்சமயத்திற்றூனே நன்றுய்க்கற்றுணர்ந்தகல்விமான்கள் காலதோஷத்தினுலே அநேகசமயங்களை உண்டுபண்ணினுர்களென்றும், மோக்ஷசுகம் இச்சமயத்திலல்லாமல் மற்ற யாதொருசமயத்திலுங்கிடையாதென்றும், உண்மையானசமயம் இது ஒன்றேயென்றும், மற்றச்சமயங்களெல்லாம் பொய்யை மெய்யென்றுநம்பினசமயங்களென்றும் உண்மையாய்நம்பியிருக்கிறூர்களென்று 1841-ம் வருஷத்து "உவில்லியவேதாந்தமஞ்சரி" என்ற பத்திரிகையில் ஜைனப்புலவர் சாஸ்திரமையரென்பவர் எழுதியுள்ளார்.

(வழிபடுகடவுள்.) ஜைனர்களுடைய பிரதானமானகடவுள் அருகதேவர். இவருக்கு ஜினனென்றும் பிரசித்தமானபேருண்டு. இவர்காரணம்பற்றி இவரைவழிபடுபவர்களே ஜைனரெனப்படுவர்.



இவர் சர்வஞ்ஞர். இவர் எவ்வகைப்பட்ட ஜீவான்மாக்களுக்கும் மனமொழிமெய்களின்சம்பந்தமின்றிக் கருணையுடன் சுயப்பிரயோஜனத்தைக்கருதாமல், தர்மோபதேசஞ்செய்தருளும் வல்லமையுள்ளவர். ஜெனனமரணமில்லாதவர். ஆதியில் உலகினரின்புறுமாறு அனுதியானவேதங்கள்பன்னிரண்டையும் வெளியிட்டவர். மூன்றுகுடையினை உடையவர். பூமலியசோகின்புனைநிழலமர்ந்தருளும் நான்குதிருமுகங்களையுடையவர். மூன்றுதர்மசக்கரங்களையுடையவர்.

(கடவுள் திருவாக்கு.) இவர்உபதேசித்ததாவது:—"என்னையல்லாமல் வேறுதெய்வமில்லை. என்னைத்தொழுநூவணங்கினவர்களெல்லாரும் வீடுபேறடைவார்கள். எல்லாவுயிர்களும் தாம் செய்த இருவினைப்பயன்களைத்தாமேயனுபவிக்கும். பாவமிகுதியால் நரகம்புகும். புண்ணியமிகுதியால் தெய்வலோகம்புகும். புண்ணியபாவமிரண்டுங்கலந்தவிடத்து மனிதசென்மத்தையடையும். பாவத்தினுல் விலங்காய்ப்பிறக்கும். புண்ணியமும்பாவமுமிரண்டும் நாசமாய்ப்போனவிடத்து மோக்ஷமடையும். என்னைப்போலவே வேதமும் உலகமும் காலமும் உயிர்களும் கர்மமும் தர்மமும் என்றென்றைக்கும் அழியாமல் நித்தியமாயிருக்கும்பொருள்கள்" என்பதாம்.

(தீர்த்தங்கரர்கள்.) விருஷபதீர்த்தங்கரர்முதலாய இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களும் ஜினன்அல்லதுஅருகதேவரது அம்சமாய் அவதரித்தமகாபுருஷர்கள். குருபதேசமில்லாமலே சகலகலாவல்லமையுடையவர்கள். இவர்களில் முதற்றீர்த்தங்கரர்காலத்தில் சைவசமயமுண்டாயிற்றும். அக்காலத்திற்றூனே மரீசிகுமாரன் என்றுசொல்லப்பட்ட ஒருமகாபுருஷனுலே காலதோஷத்தாலே 96 பாஷண்ட மதங்களேற்பட்டனவாம். பதின்மூன்றுந்தீர்த்தங்கரராகிய விமலசுவாமி காலந்தொடங்கி வைணவசமயமுண்டாயிற்றும்; இருபத்துமூன்றுந் தீர்த்தங்கரராகிய பார்சுவநாதசுவாமிகாலத்தில் துலுக்கர்மதமுண்டாயிற்றும். இன்னும் இருபதாந்தீர்த்தங்கரர்காலத்தில் மகாகாளாசுரன் என்றுசொல்லப்பட்ட ஒருஅசுரனுலே காலதோஷத்தால் யாகங்கள் உண்டாக்கப்பட்டனவாம். இந்தயாகங்கள் உண்டானபிறகு சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் கோவில்களுண்டாயினவாம்.

(வகை.) ஜைனர்கள்இருபிரிவினர். ஒருவகையர் சுவேதாம்பரிகள். மற்றொருவகையினர் திகம்பரிகள். இவர்களுக்குவேதமொன்றே

யாயினும், விக்கிரகங்களுக்கு உடைதரிப்பித்தன்முதலிய சிலகாரியங்களில் வேறுபாடுகளுண்டு. இவ்வகையினருக்குள் உட்பிரிவுகளநேகமுள.

(இடம்.) இவர்கள்தற்காலம் பாண்டிநாட்டிற்காணப்படுபவரேயல்லர். சோழநாட்டில் ஏகதேசமாய் இவர்களைக்காணலாகும். முக்கியமாய் இவர்கள் தென்னார்க்காடு,வடஆற்காடு,தென்னார்க்காடுமுதலிய ஜில்லாக்களில் மிகுதியாகக்காணப்படுகின்றனர். இவர்களுடைய ஸ்தலங்கள் தெற்கே திருநறுங்கொண்டை, சித்தாமூர், பெருமண்டூர் முதலியவைகளும், மேற்கே காஞ்சீபுரத்தைச்சார்ந்த திருப்பருத்திக்குன்றம், பெளிகுளம், மூடபத்திரை, ஸ்ரீரங்கபட்டணம், கனககிரி, ரத்னகிரி முதலியனவும்,வடக்கே விபுலாசலம்,காசி,சம்பாபுரி,படானு, ஜெயபுரம், ஜோதிபுரம், டெல்லி, கொல்லாபுரம் முதலியவுமாகும். மைசூர்ப்பிராந்தியங்களிலும் பம்பாய்இராஜதானியிலும் இவர்கள் பிரபலமானசெல்வப்பெருக்குடையவர்களாய் வாழ்கின்றனர். "தென்னிந்தியாவில் ஜைனர்களும்ஜைனஸ்தாபனங்களுமிருக்கின்றன என்று படித்தவர்களிலுங்கூட அநேகமாக ஒருவருக்குந்தெரியாது. சென்னைராஜதானியில் ஒவ்வோர்இடங்களிலும் மிகப்பிரபலமாயிருந்த ஜைனவாதீனச்சுவடுகள் பலகாணப்படுகின்றன. பல பாதைகள்சாலைகளின் ஓரங்களில், நிற்கும், அல்லது சப்பளமிட்டிருக்கும் தீர்த்தங்கரர்களின் கல்உருவங்கள் சாதாரணமாய்க்காணப்படும் காட்சியாகும். இவ்வுருவங்களைப்பற்றியவிவரணம் நாடெங்கும் ஒரேமாதிரியாயிருக்கின்றது. உருவமிரண்டானால் ஒன்று கடன்கொடுத்தவன்; மற்றொன்று கடன்வாங்கினவன். இருவரும் தங்கள் கணக்குவழக்கைத்தீர்ப்பான் சந்தித்து வழியில் காத்துக்கொண்டிருக்கின்றனரென்பதாம். உருவம் ஒன்றேயானால் வாங்கினகடனைக் கணக்குத்தீர்த்துக்கொடுக்காததற்காகக்கஷ்டப்படுந்தன்மையைக் காட்டுவதா"மென்று ஸ்ரீமான், கோபிநாதராவவர்கள் மலபார்குவாடர்லி ரிவியுவில் எழுதியிருக்கின்றனர்.

(ஜனத்தொகை.) இச்சைனரின்தொகை முன்னாட்களில் எவ்வளவென்று அறிதற்குப் போதுமானகருவிகளில்லை. சென்னைராஜதானியில் 1891-ம் வருஷத்தில் 25716 ஜைனர்களும், 1901-ம் வருஷத்தில் 27431 ஜைனர்களும், 1911-ம் வருஷத்தில் 27005 ஜைனர்களுமிருந்தனரென்று தெரிகின்றது. இந்தியாதேசமுழுவதிலும் 1911-ஆம்



வருஷத்து ஜனசங்கியை அறிக்கைப்பத்திரப்படி 1248182 ஜைனர்களிருந்தனராம். பின்வருமட்டவணை மற்றமதத்தினரின் தொகையைக் காட்டி இவருடையதொகையுடன் ஒப்புநோக்கத்தக்கசான்றாகும்.

1911-ஞூ ஜனத்துச்சங்கியை.

| | |
|---|---|
| ஹிந்துக்கள்— | 217586892 |
| சிக்சமயத்தார்— | 3014466 |
| ஜைனர்கள்— | 1248182 |
| புத்தர்கள்— | 10721453 |
| பாரசீகர்கள்— | 100096 |
| முகமதியர்கள்— | 66647299 |
| கிறிஸ்தவர்கள்— | 3876203. |

இவர்களல்லாத மற்றப்பாஷாண்டிகர்களுமநேகருளர்.

(ஆசாரங்கள்.) இவர்கள் நடக்கைகளும் ஆசாரங்களும் பதினெண்ணாயிரம் சீலங்களுக்குள்ளடங்குமாம். எவ்வுயிர்களையும் கொல்லாமலிருப்பதே உயரியதர்மமென்பது இவர்களது உறுதியானகடப்பாடு. இன்னும் பொய்சொல்லாமையும், பிறர்பொருள்கள்ளாமையும், பிறனில்விழையாமையும், தனம், தான்யம், வீடு, தோட்டம், பூமி, வாகனம், உடுப்புமுதலானவஸ்துக்களில் மிதமான ஆசைவைத்திருப்பதும் கொல்லாமையைப்போன்ற உயரியவிரதங்களாகமதிக்கிறார்கள். இவையல்லாமலும் விளக்கிற் பூச்சிகள்விழுந்திறக்குமென்றெண்ணி இரவிலே சாப்பிடுகிறவழக்கம் இவர்களுக்குக்கிடையாது. ஜலத்தில் உயிர்ப்பிராணிகளிருக்குமென்றெண்ணித் தண்ணீரை வடிகட்டிச்சாப்பிடுவார்கள். இவையிரண்டும் மேலான தர்மங்களே. மேலும் எறும்பு முதலான ஜெந்துக்கள் இடைவிடாதிருக்குமென்றெண்ணி மயிலிறகினால் முன்னாற் கூட்டிக்கொண்டே பின்செல்வர். தலைமயிரிற் பேன் முதலான ஜெந்துக்கள் சேராவண்ணம் மயிரைமழித்துவிடுவார்கள். வேஷ்டியிற் சீலைப்பேன்பிடியாதபடி அவைகளைக் கடுக்காய்ஜலத்தில் துவைப்பர். மதுவிலக்கும் அவர்கள் கைக்கொண்டவழக்கமே. அத்தி, ஆல், இலந்தை, புடல், சுரை, கஞ்சா, அபினி, வெங்காயம், பெருங்காயம், பூண்டு, முள்ளங்கி, காளான்முதலானபொருள்களையும்,மற்றும் அதிகவிரையுள்ளபொருள்களையும் இறந்துபோகும்படியான இக்கட்

டடைந்தவிடத்திலும் சாப்பிடுவதற்கு மனதினாலேகூட நினைக்கமாட்டார்கள். யாதொருமாம்ஸத்தையும் மறந்தும் கையினாலேகூடத் தொடவுமாட்டார்கள்.

(ஜைனர் நூல்யாக்கும்வன்மை.) இன்னோரன்னதொன்மையையும் சீலங்களையும் கொள்கைகளையும் கடவுள்வழிபாட்டையுமுடைய ஜைனர்கள் முற்காலத்திலே எவ்விடஞ்சென்றாலும் அங்கங்கேயுள்ள மொழிகளையும் மொழிநூல்களையுங் கற்றுத்தேர்ந்து, தங்கள் ஆதிபாஷைக்கிரந்தங்களிலுள்ளசாராம்சங்களை மற்றவர்களுக்குத்தெரிவிப்பதிலதிதீவிரங்காட்டித் தேசபாஷைகளைச்செழிக்கச்செய்தவர்களென்பது இந்திய இலக்கியசரித்திர ஆராய்ச்சியில் உள்ளங்கைநெல்லிக்கனிபோலாகும். ஆகவே திராவிடதேசமடைந்தஜைனர்கள் தமிழிலும் நூல்கள்யாக்கப்புகுந்தனர்.

(தமிழில் ஜைனநூல்கள்.) மேற்கூறியபடி ஜைனர்கள் தமிழில் இயற்றினநூல்கள்பல. அவைகளிற் பல வெவ்வேறுகாரணங்களாலிருந்தவிடந்தெரியாமற்போக, எஞ்சினவற்றுள் இப்பொழுது அச்சேறியுமேறாமலும் விளங்காநிற்பன கீழ்ச்சொல்லப்பட்டவைகள்:—நாலடியார், திருக்குறள் (?) பழமொழி, அறநெறிச்சாரம், ஏலாதி, திணைமாலைநூற்றைம்பது, சிந்தாமணி, நரிவிருத்தம், சூளாமணி, யசோதரகாவியம், உதயணன்காதை, நாககுமாரகாவியம், மேருமந்தரபுராணம், திவாகரம், பிங்கலந்தை, அகப்பொருளிலக்கணம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நீலகேசித்திரட்டு, நன்னூல், நேமிநாதம், வச்சணந்திமாலை, சூடாமணிநிகண்டு, ஸ்ரீபுராணம், கத்தியசிந்தாமணி முதலியன.

(நூல்களின்வகை.) ஜைனநூல்கள் பத்தியத்திலும் கத்தியத்திலுமுள்ளன. ஆனால் பெரும்பாலும் முன்வகையிலேயே இயற்றப்பட்டுள்ளன. ஸ்ரீபுராணம், கத்தியச்சிந்தாமணிபோன்ற ஒருசிலவே கத்தியநடையினையனுசரித்தன. இன்னுமவைகளை இலக்கணஇலக்கியவகையாகப்பிரித்து முறையேவைத்தலும் ஒரு முறைமையாகும். அது இழுக்கின்பாற்படவும்படாது. ஒருசில பலபொருள்குறிக்குஞ்சொற்றொகுதியையுடைய நிகண்டுகளாம். மற்றுஞ்சில சிந்தாமணி, சூளாமணிபோன்றகாவியங்களின்பாற்படும். இன்னுஞ்சில சமயச்சார்பையுடையனவாய் ஜைனர்களின்கொள்கைகளை வெளியிடும். வேறுசில, நாலடியார்போன்ற சர்வசமயசமரசமானபொதுநூல்களாகிய நீதிநூல்களாகும். ஓரிரண்டுபுராணங்களாகவுமிருக்கின்றன.



( நூல்கூறியபொருள். ) இனித் தொகுத்தும்வகுத்துங்காட்டிய மேற்சொன்னநூல்களை ஒன்றன்பின்னொன்றாய்க் காலவகையினாலும் கவிச்சிறப்புவகையினாலுமாராயப்புகுவாம். இவைகளெல்லாம் "ஜைனர்யாவர்" என்றதலைப்பின்கீழ், மேலேஎழுதிப்போந்தகொள்கைகளையும் கடவுள்வழிபாட்டையும்,வாய்மை சீலங்களையும் ஆசாரவனுஷ்டானங்களையுமே செவ்வியநடையின் இசைச்செவ்விபொருந்தியனவாய், பலவணிகளின்மேலனவாய், படித்தோர் கேட்டோர் காமுறும் வண்ணம் பற்பலகதைகளின் மூலமாய் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன.

(நூல்களின்காலம்.) முன்னர் முச்சங்கங்கள் இருந்தனவெனவும் அவைகள் முறையே 4440, 3700, 1850வருடங்கள் உயிர்த்திருந்தனவெனவும் உரைக்கப்பட்டது. அவைகளில் முதலிருசங்கங்களைப் பற்றி யாதொன்றுந்தெரிந்திலது. மூன்றாஞ்சங்கத்தைப்பற்றிப் பற்பலர் ஆராய்ந்திருக்கின்றனர். இச்சங்ககாலத்தை ஒருவாறுவரையறுத்தல் பொதுவாக ஜைனநூல்களின்காலத்தைமதிப்பதற்கு ஒரு கருவியாயிருக்குமாதலின் அதைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

(கடைச்சங்கம் இன்ஸ்துரைஅபிப்பிராயம்.) 1902-ம் வருஷத்து ஏப்பிரல்மாதத்து "ஏஷியாடிக், குவாடர்லி, ரிவியு"வில் "மாணிக்கவாசகர்காலம்" என்றதலைப்பின்கீழ் மிஸ்டர் எல். வி. இன்ஸ்துரை "சங்கமிருந்ததுவாஸ்தவமானால் இராமாயணம்பாடிய கம்பர்காலத்திலோ அல்லது சற்றுமுந்தியகாலத்திலோ ஏற்பட்டிருக்கவேண்டும். இது, கி. மு. 1100ம் வருஷத்தை ஒட்டிய"தென்று சிலகாரணங்களைக் காட்டிச்சித்தாந்தப்படுத்தியிருக்கின்றார். இம்மாதிரியாகவே பர்னல், ரோஸ்ட்முதலியவித்வான்களும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

(மேலபிப்பிராயமறுத்தல்.) "இது முற்றுந்தவறு"என்று ஸ்ரீமான். S. கிருஷ்ணசாமிஐயங்காரவர்கள், தேசசரித்திரம், இலக்கியசரித்திரம், சிலாசாசனமுதலான துணைக்கருவிகளுடன் தமது "புராதனவிந்தியா"வில் 50, 60 பக்கங்களில் விரிவாயெடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

சேரன்செங்குட்டுவனுக்கு இளையராகிய இளங்கோவடிகளருளிய சிலப்பதிகாரமும், அவருடன்கூடவிருந்த சீத்தலைச்சாத்தனாரெழுதிய மணிமேகலையும், இவ்விரண்டுஆசிரியர்களும் எடுத்தாண்ட திருவள்ளுவரெழுதினதிருக்குறளும்,சங்கப்புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், தொண்டைமானிளந்திரையனைப்பாடிய பெரும்பாணாற்றுப்படையும், சோழன் கரிகாற்பெருவளத்தானைப்பாடிய பட்டினப்பாலையும் சங்கம் மருவியகாலத்தனவென்பது தமிழறிஞர்எல்லாரும் ஒப்பமுடிந்ததுணிபு. சிலப்பதிகாரஞ்செய்யப்பட்டகாலத்திற் கரிகாற்சோழன் புகார்நகரில் அரசாண்டானென்றும், மதுரையிற் பாண்டியன் நெடுஞ்செழியனாண்டானென்றும், இலங்காபுரியில் கயவாகுஅரசனிருந்தனனென்றும் தெரியவருகிறது. இன்னும் சேரன்செங்குட்டுவன் அரண்மனையிற் கனகவிசயரென்ற வடதேசத்து ஆரியமன்னர்களுமிருந்தனர்.

(கயவாகு.) இவர்களிற் கயவாகுவென்பான் இலங்கைமன்னன். பழம்பகைமைகொண்டு சோழன்றேசத்தின்மேற் படையெடுத்தனனாம். பழம்பகைமையாவது சோழன் இலங்கைமேற்படையெடுத்து அதைத்தன்வயமாக்கியகாரணத்தாலேற்பட்டது. இனி இது பாண்டியர்கள் பிரபலமான வல்லரசாயிருந்தகாலம்வரை முடியாதகாரியமென்று இன்ஸ்துரை அபிப்பிராயப்படுகிறார். யாராவது வலியபகைவர் பக்கத்திலிருந்தால், வேறுநாடுசென்று யுத்தம்செய்வார்களா? பாண்டியனைத்தன்கீழாக்கியகாலத்தின்பின்னரே சோழனிலங்கைக்குச்சென்றிருத்தல்கூடும். அப்படிப்பாண்டியரைக்கீழ்ப்படுத்தியகாலம் கி. பி. 1070ல் பட்டத்துக்குவந்த முதலாவதுகுலோத்துங்கசோழன் காலமே. ஆதலின் இதற்குப்பிறகே இலங்கை சோழராற்கவரப்பட்டது. இதுநிமித்தமாகவே பின்ஒரு கயவாகு பழிக்குப்பழியாகச் சோழராஜதானிமேற்படையெடுத்திருக்கவேண்டும். இவையெல்லாம் மிஸ்டர் இன்ஸ்துரையின்கூற்று. இது எளிதிலிடிபடக்கூடிய கொள்கையே. ஏனெனில் குலோத்துங்கசோழன்காலத்திற்குமுந்திய ராஜேந்திரசோழன் (கி. பி. 1001—1042) கடற்சண்டைசெய்து கடாரம்முதலிய இடங்களைச்சேர்த்துக்கொண்ட விவரம் பழைய சாசனங்களால் வெளியாகிறது.. அவன் தந்தை ராஜராஜசோழன் காண்டளூர்என்னுமிடத்தில் சேரர்களைக் கடற்படைகொண்டுதோற்கடித்தான். இவன்காலம் கி. பி. 984—1016. இன்னும் இக்காலங்களில்



சோழர்கள் தொலையிலுள்ள துங்கபத்திராநதிக்கரையிலுள்ள கலிங்கநாட்டிலும் சேரநாட்டிலும் போர்புரிந்துள்ளார். ஆகையால் லங்காபுரி அரசபரம்பரைப்பழஞ்சரித்திரத்தைஉரைத்திடும் மஹாவம்சத்திற் சொல்லப்பட்டிருக்கிறபடி கி. மு. முதல்நூற்றாண்டின்பக்கம் இலங்கை வேற்றரசர்வசமிருந்ததென்பது ஓராற்றானும் இழுக்காது. மகாவம்சம் கி. பி. 5 - வதுநூற்றாண்டிற்றானிருந்ததுஎன்றால், மேல்விஷயம் கி. பி. முதல்நூற்றாண்டாயிருக்கலாம். இன்னும் அம்மகாவம்சத்தில் கயவாகுஎன்ற பெயருடைய இருவரிருந்தனரென்றும் அவரில் முதல்வர் கி. மு. 133ல் இருந்தாரென்றும் இரண்டாமவர் கி. பி. 1142ல் இருந்தாரென்றும் தெரிகின்றது. ஆகவேமுதற்கயவாகுவே சோழனை எதிர்த்தவனாவன். கி. பி. 1142-ல் இரண்டாம்ராஜராஜசோழனரசாண்டனன். வெளிவந்தசாசனங்களிலிருந்து அவன்காலத்திலாவது அல்லது அவனுக்குப்பின்னாவது எவரும் இலங்கையிலிருந்து படையெடுத்துவந்ததாகத் தெரிந்திலது. மூன்றாங்குலோத்துங்கன் மதுரையையும் இலங்கையையும் தன்னடிப்படுத்தினனாம். ஆனாலவன்காலம் கி. பி. 1178—1216.

(சோழன்கரிகாலன்.) இனிக்கரிகாற்சோழனென்று நால்வரிருந்தனர். சிலப்பதிகாரத்திற்சொல்லிய கரிகாற்சோழன் முதலாமவனாய்த்தானிருக்கவேண்டுமென்பது நியாயமல்லவென்று இன்ஸ்துரை சொல்லுகிறார். உண்மை முதலாமவனோ இடையாமவனோ கடையாமவனோ என்பது தக்கபிரமாணங்களாலேயே நிச்சயிக்கப்படல்வேண்டும். சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை இவைகளிற்சொல்லியகரிகாலன்ஒருவன். மற்றொருவன் கி. பி. 984–1016ல் ஆண்ட இரண்டாமாதித்ய கரிகாலன். மூன்றாமவன் ராஜேந்திரமன்னரின் இளையவனான உறையூர்ச்சிற்றரசன். நான்காமவன் குலோத்துங்க சோழன் முதலாமவன். சங்ககாலத்திருந்த சேரன்செங்குட்டுவன் காலத்திருந்த கரிகாலன் இந்நால்வரில் ஒருவனாயிருத்தல்வேண்டும். இன்ஸ்துரை நான்காவதுசொல்லப்பட்டவனே சங்ககாலத்திய கரிகாற்சோழனென்பார். வைணவசமயாசாரியரான ஸ்ரீ ராமானுஜர் ஒருகரிகாற்சோழனாற்றுரத்தப்பட்டு மகிஷாபுரஞ்சென்று ஜைன அரசனாகிய பித்திதேவனைத்தன்மதத்தினனாக்கி விஷ்ணுவர்த்தனனெனப்பேரிட்டுப் பின்னும் சிறிதுகாலத்திற்குப்பின்பு மேலைக்கோட்டை என்னும்திருப்

பதியில் ஒரு கோவில்கட்டிவைத்தனர். இவ்வைணவர்கொண்டாடும் குருபரம்பரையில் சகாப்தம் 1021-ம் வருஷத்தில் இக்கோவில்கட்டப்பட்டது என்று வரைந்திருக்கிறது. (அதாவது கி. பி. 1099ல்) இன்னும் அதேநூலில் தொண்டைமான்மன்னனைக்குறிக்கின்றது. இவன் சயங்கொண்டான்கலிங்கத்துப்பரணியிற்கூறப்பட்டுள்ள கருணாகரத்தொண்டைமானென்பர். ஆகவே உறந்தைநகரிலிருந்த ராஜேந்திரனோ அல்லது முதலாவதுகுலோத்துங்கசோழனோ ஒருவன் இராமானுஜரைக்கடிந்தகரிகாற்சோழனவன். ஆகவே இக்கரிகாற்சோழனும், கருணாகரத்தொண்டைமானும் இராமானுஜர்காலத்தவராவர். இவர்கள் இன்ஸ்துரை எழுதியபடி உருத்திரங்கண்ணனார்பாடிய பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலைத்தலைவர்களுடையகாலத்தவரென்பது சாலவுமிழுக்காகும். பெரும்பாணாற்றுப்படைத்தொண்டைமான்வேறே. அவன் நாகவரசியைமணந்த சோழன்கோக்கிள்ளியின்மகனவன். இப்படியிருக்க இவரிருவரையும் ஒருகாலத்தவரென்பது முடியாதகாரியம். சங்கப்பாட்டுகளிற்சொல்லப்பட்ட கரிகாலன்றலைநகர் புகாரென்ற காவிரிப்பூம்பட்டினமாகும். வெளிவந்த சாசனபத்திரங்களிலும் கல்வெட்டுக்களிலும் புகாரைப்பற்றியசொல்லேயில்லை.

(பாண்டியனெடுஞ்செழியன்.) சிலப்பதிகாரக்கதைநிகழுங்காலையிருந்தபாண்டிமன்னவன் நெடுஞ்செழியனும் கொற்கைநகர் இளஞ்செழியனுமாவர். ஆனால் கி. பி. 1100—1200ல் இருந்தமன்னவர்கள் பட்டப்பெயர் குலசேகரர் அல்லது சுந்தரரென்பதே. 1175-ம் வருஷத்துக்குமுன்னிருந்தபாண்டியர் அடிக்கடி இடைவிடாது சோழர்களாற்றாக்கப்பட்டுத் துன்பஞ்செய்யப்பட்டனர். ஆதலின் அவருக்குச் சங்கம் நிகழ்த்துவதில் அப்பொழுதுமனமுஞ்சென்றிராது, சாவகாசமுமிருந்திராது. இக்காலத்தினிறுதியிலேதான் குலோத்துங்க சோழனால் முற்றும் தோற்கடிக்கப்பட்டனர். பாண்டிநாட்டில்விளங்கியசங்கம் இக்காலத்தது அன்று. இன்ஸ்துரைகூற்றும் வலியற்றதாயிற்று.

(தொடரும்.)

கே. ஜி. வீரராகவையர்.

---

ஸ்ரீ:

# அரியவினாக்கட்கு உரியவிடை.

---

ஸ்ரீ. உ. வே. செந்தமிழ்ப்பத்திராதிபரவர்கட்கு:—

ஐயா! தாங்கள் எனது "ஒருவிஞ்ஞாபன"த்தை முன் இரண்டாம் சஞ்சிகையிலேயே வெளியிட்டருளிய பேரன்பிற்கு மிகவும்நன்றி பாராட்டுகிறேன். அதனுடன்கூடப் பிரதிவிஞ்ஞாபனம் ஒன்று சேர்த்திருப்பதைநோக்கிப் பெரிதும் ஆனந்தமுற்றேன். தாங்கள் அதன்கண் எழுப்பியுள்ள அரியவினாக்கள் இருபத்தொன்றற்குந் தெரிந்தவளவில் விடையிறுக்குமுன் சில தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இத்தமிழ்ச்சங்கம் தமிழபிமானிகளாயுள்ள பன்னூறுபெரியார்களுக்கும் பொதுவானதொரு பெருநிதியாகுமென்பதையும், அந்நிதி அவ்வபிமானிகளது அறிவுமுதிர்ச்சிக்கு ஒத்தவாறு விநியோகிக்கப்படவேண்டுமென்பதையும் சிறிது ஞாபகம்வைத்திருந்தால், பத்திராசிரியராக உத்தியோகம்செய்யும் தாங்கள்:

"எனக்குச்...சங்கநூல்களிலும்...சிறிதும்பயிற்சியில்லையென்பது ...பலர்க்குத்தெரியும், பிறர்க்குந்தெரியும்படி நானேதெரிவித்துக்கொள்ளுகிறேன்; அதற்காகத்தாங்கள் வீணாசிரமத்தை எடுத்துக்கொள்ளவேண்டாமே" என்று கூறிப்போயிருக்கமாட்டீர்கள். வென்றிப்பொருட்டால் மெய்கொள்ளாது தாங்கள் எது எழுதினாலும் செந்தமிழ்ப்பத்திரிகைபடிப்பவர்கள் வாய்பேசாது தலைதாழ்த்திருக்கவேண்டுவதுதானோ?

சங்கநூல்களில் தங்களுக்குப்பரிசயமில்லாக்குற்றம்தங்களுடையதாக ஆகமாட்டாதென்றும், தங்களுக்குப்பரிசயம்செய்துவைக்கும் பெரும்பாரம் என்தலைமேல் இறங்கிவிட்டதென்றும் சமத்காரமாகக் கூறிவிட்டீர்கள். அப்பாரந்தாங்கும் உரிமை எனக்குமாத்திரமின்றி இத்தமிழ்நாட்டிலுள்ளபலர்க்கும் உண்டென்பதையும், அவர்களும் சிறிதுசிறிது வகிப்பார்களென்பதையும் ஈண்டுத்தெரிவித்துக்கொள்கிறேன்.

செந்தமிழ்ப்பத்திராதிபராகத்தாங்கள் இருந்துவருவதும்,தாங்கள் எழுதிவரும் சங்கநூல்கள்விஷயங்கள் மயக்கக்கொள்கைகளாயிருப்பதும் பிரத்தியக்ஷமாதலால், "கசடறவல்லது" ஏதோஉண்டென்று அருத்தாபத்தி நியாயத்தாற்கொண்டேன்.

தாங்கள் உண்மையையே அறியும் அவாவுடையவர்களாகவும், உண்மையையே எழுதிவரவேண்டுமென்னும் ஸங்கற்பமுடையவர்களாகவுமிருத்தலால், "உண்மையாகவே கசடறவல்லதொன்று"ம் தங்களிடமில்லையென்று தாங்கள்கூறியமொழியை நான் உண்மையென்றே கொண்டு "மற்றுயான் எதனைமேற்கொண்டொழுகுவேன்?" என்னுந் தங்கள்கேள்விக்கு விடையை இப்போதேஅறிந்துகூறச்சக்தியில்லாமையால்,கொஞ்சம் தாழ்த்துவிடைகூறும்படி அனுமதியளிக்கவேண்டுகிறேன். ஆயினும் "சங்கமிருந்ததமிழையெலாம்உண்டுதிகழ் சிங்க"ங்களிரண்டிருந்தசெழுந்தவிசில் கழாக்காலைத் தாங்கள்வைத்துவிட்டீர்களென்று வியசனிக்கிறேன்.

பலபல விஷயங்கள் தங்களுக்கு எழுதவேண்டுமென்று ஆவல் மிகினும், அதனைஒருவாறு அடக்கிக்கொண்டு, செந்தமிழ்க்கலாசாலையிற் பல்லாண்டுகளாய் உபாத்தியாயராகவிருந்து பரீக்ஷைவினாக்கள் பொறுக்கிப்பழகிய தங்களது அம்மூவேழிருபத்தொருகேள்விப்படைகட்கும் புறப்பாட்டுரையாளர், உச்சிமேற்புலவர்கொள்நச்சினார்க்கினியர், இலக்கணவிளக்கமுடையார் என்ற இவர்களது அடிதாங்கும் வன்மையால் உடைந்தோடாமல் விடைகூறுகின்றேன்.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் "செய்புண்மருங்கினும்வழக்கியன்மருங்கினும்..." என்னும் 463-ஆம் சூத்திரஉரையில் "இவன்யாரென்குவை யாயி னிவனே என்னும் புறப்பாட்டினுட் சேரனை முன்னிலையாக்கி முடமோசியார் கூறுகின்றகாலத்து இவனென்பது முன்னிலைப்படர்க்கையாய்நின்றது." என்று கூறிப்போனார். இலக்கணவிளக்கமுடையாரும் "சொற்றொறு" என்னும் 372 - ஆம் சூத்திர உரையில் அவ்வாறே கூறினார். இவ்வாக்கியம் தங்கள்வினாக்களுள் 1, 2, 11, 13, 16 களுக்குத் தக்கவிடையை அழகாக அளித்தன காண்மின்.



புறப்பாட்டுரைகாரர் தமது விசேடவுரையினால் தங்களது 3, 4, 5, 6, 7; 8-ஆம் கேள்விகட்கு விடையை முன்னதாகவே வரைந்துவிட்டார்.

வினா 9-ம் 10-ம் பிரகிருதவாதத்திற்கு வேண்டப்படாதனவாதலால், ஈண்டு ஆராய்ச்சிக்குரியவல்ல, ஆயினும் இவ்வினாவில் ஒரு சந்தேகத்தைவிளக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். "மயிற்பீலியை நெற்போர்போலத்தொகுத்துவைத்துவிற்கும்வழக்கம் யார்நாட்டுள்ளது?" என்று வினாவினீர்கள். அப்புறப்பாட்டினுள் நெற்போரைக் குறிப்பிடும்வாசகம் எங்குளது ? பீலிவிற்கும்செய்தி யாண்டுக்குறித்துளது? நெற்சூட்டோடு மயிற்பீலியை உடன்சேரத்திரட்டுஞ்செய்தியன்றி வேறு எனக்கு அவ்வடிகளிற்புலப்படவில்லையே !

வினா 6, வினாவழு. ஏனெனில், கொடுக்குமுதாரனும் பெறநிற்கும் தீனனுமின்றி மூன்றுமவனொருவனே ஈற்றடிநான்கினாலும் விசேடிக்கப்பட்டவன். இவ்வழுவினாவைத் தாங்கள்அறியாமற்கேட்டிருந்தால் தமிழ்ச்சங்கமும் தமிழுலகமும் பெரிதும்வியசனிக்கும். வஞ்சிக்கக்கேட்டிருந்தால் ஆ! ஆ! என்று மிகுதியும் அஞ்சும்.

14, 15, 16, 20, 21-ம் கேள்விகளுக்கு விளக்கமானவிடையை எனது "கதைக்கொத்"தின் ஐந்தாம் மலரில் 14-ஆம் கதையிற்காணலாம். (அப்புத்தகம் சென்னை, சின்னத்தம்பித்தெரு, 35 - ஆம் நிர். வீட்டில் வி. குமாரஸாமிநாயுடு & ஸன்ஸ் அவர்களிடம் விலை அணா 6-க்குக்கிடைக்கும்.)

வினா 17ல் தாங்கள் எனக்குப்பெருந்தயைகாட்டி என்கருத்துக்கு ஒருபுடை ஒத்துவந்தவிஷயத்தில் மிக்க நன்றிபாராட்டுகின்றேன். அதன்கண் பிற்பகுதியாயுள்ளவினாவும் 18, 19 - ஆம் வினாக்களும் மிகையாம். ஏனெனில் மேலிற்கூறிய விடைகளினின்றும் இவ்வினாக்களுக்கு விடைகள் பெறப்பட்டன.

இவ்விடைகளைப்பெறவே, 12 - ஆம்கேள்விக்குச்சமாதானமும் தாங்களே அறிவீர்கள்.

ஏதோ முன்னோர்சென்றவழியைப்பற்றித் தங்களது அரியவினாப் பெருங்கடலைக்கடந்ததாகக்கருதுகிறேன். ஆயினும் தாங்கள் இனி அம்மூன்று ஆசிரியர்களது கருத்துக்குமாறாகவும்,சரித்திரஉண்மைக்கு விரோதமாகவும் “விழுநீர்வேலிநாடுகிழவோனே” என்னுந்தொடர் சேரனையேசுட்டும் என்று சாதித்து அப்புறப்பாட்டிற்குச் சுவைமிக்க அபிநவவியாக்கியானம் பிரஸாதித்தருள்வீர்களானால், தங்கள் திருவடிகளையே என்றும்நினைந்த பேரன்புடையனாய்,அவ்வுரையாளர்களைக் கனவிலும்கருதேன். நான் ஒருவனாகவே இருந்து ஆனந்திப்பதினும் இத்தமிழுலகம் முழுவதுங்கண்டு ஆனந்திக்குமாறு செந்தமிழின் அடுத்தபகுதியிலேயே தங்களது அவ்வியாக்கியான அமிழ்தத்தைப் பொழியுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அஃதோடன்றி அவ்விருபத்தொருவினாக்கட்கும் தாங்கள்கருதியவாறே ஒரு விடைச்சுருக்கமும் கூறுமாறு பல்காலும் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,

தாஸன்

வெ. இராஜகோபாலன்.

கம்பர்விலாஸம்.
மயிலாப்பூர்
18—2—18.

---

# கரந்தைத்தமிழ்ச்சங்கம் தஞ்சை.

---

கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் ஆறாவதாண்டுத்திருவிழா இவ்வாண்டு ஆனிமீ 10உ (23—6—17) சென்னைப்பச்சையப்பர்கல்லூரித்தமிழ்ப்பேராசிரியர் திருமகன் தி. செல்வகேசவராயமுதலியார் M. A., அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடந்தேறியது. தமிழன்பர்கள் உள்ளூரிலிருந்தும் வெளியிற் பற்பலவிடங்களிலிருந்தும் நூற்றுக்கணக்காகக்கூடியிருந்தனர். கடவுள்வாழ்த்தும் தமிழ்த்தெய்வவணக்கமும் ஆயபின்பு சங்கத்தலைவர் ஸ்ரீமான், த. வே. உமாமகேசுவரம்பிள்ளை B. A., B. L., அவர்களால் வரவேற்கப்பட்ட அக்கிராசனாதிபதியவர்கள் தம் முகவுரைப்பிரசங்கத்தைச்செய்தார்கள். அதன் சுருக்கம் வருமாறு.—



செந்தமிழ்ச்செல்வர்காள் !

தாய்மொழிப்பயிற்சிகுன்றிப் பிறமொழிப்பயிற்சியாற் களைத்ததே களைக்குங்கிள்ளையெனக் கல்வியிலுமிளைஞர்களின் மன உழைப்பால் உடலிளைத்து ஊக்கங்குன்றுவதைப்பற்றிப் பம்பாய்ச்சட்டசபை கனம் அப்துல்ரஹிம் அவர்கள் பேசி மேல்வகுப்புகளிலேயே ஆங்கிலப்பயிற்சி அதிகமாகக்கற்கவேண்டுமெனத்தெரிவித்தது யாவருக்கும் தெரிந்ததே. தகுந்த கல்விப்பயிற்சியில்லாது தமிழை இகழ்வாரது அறிவின்மையை என்னென்று கூறுவது. நம் அருமைத்தமிழின் பண்டைய நூல்களெல்லாங்கடல்கொள்ள அவற்றின்பொருளை ஆய்ந்து நூல் தொகுத்துச் சங்கம் நிறுவியோர் அகத்தியர்முதலினோர். அவர் நூலும் அழிவனவாகத் தற்காலம் நமக்கு முன்னையநூலின் சாரமாயுள்ளது தொல்காப்பியப்பொருளதிகாரமே. அதுதானும் அகம்புறமென முறையே தலைவன் தலைவியிடத்தே நிகழ்பவையையும் அது அல்லாத மற்றவையையும் விளக்குவனவாம். நாம் நம்மவர் பண்டையமாண்பு இத்துணைத்தென்பது அறியாதிருத்தல் வியப்பே. தற்காலம் மேனாட்டுக்கல்விப்பெரியோர் புதிதாகக்கண்டுபிடிக்கும் கல்விஇலக்கணமெல்லாம் நம்மவர் முன்னரே ஆராய்ந்தவரே. கல்வியின்பத்தைப் பேரின்பத்திலும் பெரிதெனக்கூறுவர் தமிழ்ப்புலவர். செகப்பிரியர் (Shakespeare) முதலியோர் நூல்களகப்படுவதும் அதன் பாடபேதங்களும் ஆங்கிலமுணர்ந்தாரியாவருமுணர்ந்ததே. பொருள்பொதிந்த நூல்கள் என்றுமழியாது என்னும் தத்துவத்தை நம்மூதாட்டி “என்றுங்கிழியாதென்பாட்டு” என விளக்கியதும் அதற்கிலக்கியமாய் நம்தேவாரம் நாலாயிரம், தொல்காப்பியம், திருக்குறள் எத்துணையோகாலத்திற்கு முன்னையதாகவிருப்பினும் மணங்குன்றாதுநின்றுலவுவதே தக்கசான்றாம். ஔவையார் அதிகமானிறந்தகாலைகூறியதும் அவனால் தொண்டைமானிடம் தூதுசென்றகாலை அவன் இம்மூதாட்டி அஞ்சக்காட்டிய ஆயுதச்சாலையைக்கண்ணுற்றகாலை அவனைப்புகழ்வாள்போன்று “உனது ஆயுதங்களெல்லாம் அழகாயும் பளபளவென்றும் இருக்கின்றன. எம்மரசன் ஆயுதங்களோ ஒடிந்தும் மழுங்கியும் கருமானது கொல்லுலைக்கூடத்திற்கிடக்கின்றன.” என இகழ்ந்தமையின் கல்வித்திறமை எளிதோ. மற்றொருபுலவர் ஒருவீரனைப்பார்த்து இகழ்வார்போன்று “நீ காணுதற்கின்னாய் கேட்டற்கினியாய் நின்பகைவரோ

இதற்கு மறுதலையர்” எனக்கூறிப்புகழ்ந்ததின் றிறமென்னே! கோப்பெருஞ்சோழனது நடுகற்கண்டு உறையூர்கண்ட பொத்தியார்பாடிய “பாடுநர்க்கீத்தபல்புகழன்னே” என்னும் தொடக்கத்த கையறுநிலைச் செய்யுளின் செவ்வியை என்னென்று கூறுவேன். பண்டைய தமிழ் வள்ளலாரது கொடைமடம் மகிழ்தற்பாற்றே. ஆங்கிலங்கற்றோர் சுயநலம்பாராட்டக்கூடாதெனக்கூறும்நன்னெறியை இரண்டாயிரமாண்டுகளுக்குமுன்னரே நம்மருமைத்தமிழ்நூலாம் மணிமேகலை “தனக்கெனவாழான்பிறர்க்குரியாளன்” எனக்கூறுவது வியக்கற்பாற்றே. பத்திச்சுவைநனிசொட்டக்கவிபாடிய சேக்கிழாரது நூலும், ஆங்கிலகதாமஞ்சரிகளும் சீர்தூக்கின் மோக்ஷசாதனமானது எது? நமது செய்யுள் நூல்கள் எவ்வாற்றானும் தாழ்ந்தனவல்ல. எம்மொழியினும் உரைநூல்கள் பிற்காலத்தனவேயாம். தற்காலம் வசனநூல்கள் ஆங்கிலப்பள்ளிகளின்மூலமாக வருவனவாயின. ஆங்கிலேயர் பலமொழிகளிலிருந்தும் மொழிபெயர்த்துத் தம்மொழியைப்பெருக்கியவாறே நாமும் செய்தல் கடமையே. வசனநூல்கள் எளியநடையில் எழுதல்வேண்டும். (கை தட்டல்.)

அக்கிராசனர் முகவுரைப்பிரசங்கம் முடிந்தபின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் யாவராலும் ஒருமித்துச்செய்யப்பட்டன.

(1) தஞ்சாவூர் கருந்தட்டாங்குடி கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் ஆறுவதாண்டு திருவிழாத்திருநாளிற் கூடிய உன்னதப்பழங்குடிவழிவந்த தமிழரெல்லாம் சன்மானியர் முதலிய எதிரிகள் அருள் சிறிதுமில்லாது சுயநலமேகருதிக் கொடியயுத்தந்தொடங்கிக் கருணைத்திறத்தின்மேம்பட்ட மகா மாக்ஷிமைதங்கிய ஜார்ஜ்மன்னர்மன்னவர்முதலிய நேசக்கட்சியாருடன் செய்துவரும்போரில், நேசக்கட்சியார் அதிசீக்கிரத்தில் சிறந்தவெற்றிபெற்று உலகம் சுகம்பெறவேண்டுமென்று, பரமகருணையாளனாகிய எல்லாம்வல்ல இறைவன் திருவருட்பெருக்கைச்சிந்தித்து அவர்தம்திருவடிக்கமலங்களைவந்தித்து வாழ்த்தி வணங்குவோமாக. இது அக்கிராசனர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டது.

(2) பழமைபெருமைகளிற்சிறந்த நம் தமிழ்மொழி வழங்கும் தமிழகத்தில் இத்தஞ்சைமன்னரால் அறத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கும் பொருளின்பயனைக் கல்விநெறியால் தமிழர்கள்அடையுமாறு இளைஞர்களின் கல்விப்பயிற்சிக்கு வேண்டியாங்குதவவும், திருவையாறு வடமொழிக்கலாசாலையில் தமிழையும் முதன்மைப்பாடமாக வைத்து நடத்தவும், தஞ்சாவூர்ஜில்லா கலெக்டரவர்களையும் ஜில்லா சபையார் அவர்களையும் விண்ணப்பம்செய்துகொள்ளுகிறதென்று தீர்மானிக்கப்பட்டது. (இது ஸ்ரீமான், த. வே. உமாமகேசுவரம்பிள்ளை B. A., B. L., அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான், த. பீ. சோமநாதராவ் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.)



(3) தமிழ்நாட்டு மடாதிபதிகள் தங்கள் கடமையாகிய தமிழ் வளர்ச்சியில்மிகுந்த எண்ணங்கொண்டனராகி, தமிழ்ச்சங்கங்களுக்குப் பொருள்முதலியஉதவிகளைப்புரிந்து தமிழைவளர்த்துவருமாறு அவர்களைக்கேட்டுக்கொள்ளவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

(இது ஸ்ரீமான், வா. கோபாலசாமிரெகுநாதராஜாளியார் F. T. S. O. S. E. அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான், ஐ. குமரசாமிப்பிள்ளை B. A. அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.)

(4) தமிழ்ப்பெரும்புலவர்களின் திருநாட்களை அவர்கள் பெருமையை நினைவுகூர்ந்து பாராட்டிப்பயன்பெறுதற்பொருட்டு தமிழ்ச்சங்கங்கள் ஆண்டுதோறும் கொண்டாடிவரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

(இது ஸ்ரீமான், M. S. கல்யாணசுந்தரமய்யர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான், வேங்கடராம அய்யங்காரவர்களால் ஆமோதிக்கப்பட்டது.)

அதன்பிறகு ஸ்ரீலஸ்ரீ. சுவாமி சகசானந்தர் அவர்கள் கல்வியும் அதன்பயனும் என்னும் தலைப்பின்கீழ் எவ்வகைநூல்களைக்கற்றல் வேண்டும்? கற்றற்கும் கற்பித்தற்கும் உரியார் யார்? அதன் பயன் யாது என விவகரித்து மனோசாந்திக்கு ஏதுவானநூல்களையே கற்றல்வேண்டும். எக்குலத்தாராயினும் பெரிதுங்கற்றோரே கற்பித்தற்குரியார். அக்கல்விதானும் இளமையிலேதொடங்கிச் சாந்துணையும் கற்றலே சாலநன்று எனவும், சென்றவிடத்தாற் செலவிடாதொரீஇ நன்றின்பால் உய்ப்பதே அறிவு எனவும், கற்றோர்சென்றவிடமெல்லாம்

சிறப்புறுவர் என்றும் பாண்டியன்மாட்டுக் களவாடச்சென்றகல்விமான் சிறப்புற்றாரென்றும் கல்வியே மக்கட்குக்கண்ணென்றும் வடமொழிதென்மொழிமேற்கோளால் கல்விமணங்கமழ,பிரசங்கித்தார்கள்.

பின்னர் சலகண்டபுரம் ஸ்ரீமான், அ. வரதநஞ்சையபிள்ளையவர்கள் "தமிழ்மொழியின் முற்காலதற்காலநிலைமை" என்னும் தலைப்பின்கீழ், புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய பண்டையநூல்களின் துணைகொண்டு நம்மொழியின் முற்கால உயர்வையும் கண்ணுதற்பெருங்கடவுளே எண்ணிலாத்தொண்டுபுரிந்தமையையும் அரசற்குத் தமிழ்ப்புலவர்கள் அருந்துணையாயிருந்தமையையும் மற்றும் பலவிஷயங்களையும் அருமையாய் ஆராய்ந்துரைத்துத் தற்காலநிலைமையையும் எடுத்துக்கூறிக் கேட்டார்மனங்கரையப் பிரசங்கித்தார்கள். அவர்களது அவையடக்கமே அன்னோர்சிறப்பை முன்னமே விளக்குவதாயிற்று.

மறுபடியும் அடுத்தநாள் சபைகூடிற்று. அப்போது ஸ்ரீமான், M. S. கல்யாணசுந்தரமய்யர் அவர்கள் "முற்கால இந்துப்பெண்களின் நிலைமை'' என்னும் தலைப்பின்கீழ் முற்காலத்தில் பெண்கள் கல்வியிலும், அறிவிலும், ஒழுக்கத்திலும், மனநிலையிலும் சிறந்திருந்தார்களென்றும், தற்காலத்திலும் மிக்க உன்னதநிலையிற் கருதப்பட்டார்களென்றும், இத்தமிழகம் நல்லிசைப்புலமை மெல்லியலார்களாற் பீடுபெற்று உயர்ந்திருந்ததென்றும் கோப்பற்று, வீரம் முதலியசெயல்களிலும் எத்தகைய நாகரிகநாட்டினரினும் மேலாகவே இருந்தனரென்றும் இன்னும் பல அரியவிஷயங்களையும் பல உதாரணங்களுடன் விளக்கினார்கள்.

பிறகு ஸ்ரீமான், வேங்கடராமையங்காரவர்கள் தமிழ்மொழிபரிபாலிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி நன்கெடுத்துரைத்தார்கள்.

பின்னர் ஸ்ரீமான், K. சுப்பிரமண்யபிள்ளை M.A., M.L.,அவர்கள் "தமிழ் ஓர் உயர்தனிச்செம்மொழியே" என்றவிஷயமாகத் தமிழ் ஓர் உயர்மொழி என்னில், தமிழ்மொழி முதல்தரமானமொழிகளுள் ஒன்றென்றும், தனிமொழிஎன்னில் பிறமொழிகலவாதேபுலவும் ஆற்றலுடையதென்றும், செம்மொழி என்னில் உயர்ந்தகருத்துள்ளநூல்களடங்கியமொழியென்றும் பொருள்படும்.கிளாசிகல் லாங்வேஜ்(Classical Language) என்னும் ஆங்கிலத்தொடரும் இத்தகைய



இலக்கணமுள்ளமொழியையே குறிக்கும். தமிழின் பழமையைப்பற்றி முன்னர் சென்னைக்கவர்னராகவிருந்த கிராண்டப் (Grant Duff) துரையவர்கள் "ஆரியர் நாகரிகத்தைத் தமிழர்நாகரிகத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால் சற்று முன்வந்த ராய்ட்டர் (Rauter) தந்தியை ஒக்கும்" எனக்கூறியதே தக்கசான்றாம். "செந்திறத்ததமிழோசைவடசொல்லாகி", என்னும் திருவாய்மொழியையும் இங்குக்கருதவேண்டியதே. திருமந்திரமும் "சதாசிவந்தத்துவம் முத்தமிழ்வேதம்" எனக்கூறும். இன்னும் தமிழ்மொழியை ஆராய்ந்துநோக்குவோமாயின் பற்பலஉண்மைகளும் வெளிப்படுகின்றன. இதன்உயர்வை கால்டுவெல் முதலிய ஆங்கிலகலைஞர்கள் புகழ்வது தாங்கள் யாவரும் உணர்ந்ததே. இன்னும் வெளிவராத பலநூல்களை வெளியிடுவதும், இதன் உயர்வுக்காக நம்மாலியன்ற உதவிபுரிவதும் தமிழ்மக்களாகிய நமக்கெல்லாம் இன்றியமையாக்கடனும். பரமனருள்கூடுக" என்ற பலதிறப்பட்ட தலைப்புகளின்படி விளக்கினார்கள்.

அதன்பின்னர் திருக்கோவலூர் ம. ரா. குமாரசாமிப்பிள்ளையவர்கள் "தமிழ்த்தொண்டர்" என்றதொடரைப்பொருளாகக்கொண்டு "தமிழ்த்தொண்டர் என்பார் யாவர்? எனும்விஷயத்தை ஆராயப்புகுமுன் தொண்டுசெய்தற்குரியார் யாவர் ? அதனைப்பெறுதற்குரியார் யாவர் ? என்ன ஆலோசித்தல் முதன்மையாகும். அவ்வாராயுங்கால் எங்கும் நிறைந்த இறைவன் தனக்குத்தக்காருமிக்காருமில்லாதவனாகையால் தொண்டுசெய்யவேண்டிய அவசியமில்லையாம். கடையாயபடைப்புகளும் பகுத்தறிவின்மையால் தொண்டுசெய்தற்குரியனவல்லவாம். இடைப்படநின்ற நாமே தொண்டுசெய்தலவசியமாகும். அதுதானும், அன்னை, பிதா, ஆசிரியன், அடியார், கடவுள் இவர்களிடத்துப்படிப்படிசெல்வதாகும். அறிவுமுற்றாதவரும், அன்னையிடத்தன்புசெலுத்துவர். பின்னர் அறிவு வளரவளர மறந்தேய்ந்து படிப்படியாகப்பரமனிடத்துப் பற்றுச்செல்வதாகும்.

அன்னையின்செயல் பாதுகாப்பாதலால் தமிழ்மொழியும் நம்மைப் பாதுகாத்துவளர்த்தலால் தமிழ் அன்னையாகும். ஆங்கிலங்கற்றுத் தமிழை இகழும் அறிஞர்காள்! நீவிர் மழலைச்சொற்பேசி நும்பெற்றோரை யாழினும் குழலினும் இனியதாய் மகிழ்வித்தது நும்

அன்னைத்தமிழே என்பதைமறந்தீரோ?தந்தைமகற்காற்றுநன்றிஅவையத்து, முந்தியிருப்பச்செயல்" ஆகலால் தமிழும் தன்னைக்கற்றோரை அவையத்து முந்தியிருப்பச்செய்தலால் தந்தையாகின்றது. நீதிநூல்கள்பலவும்பொருந்திக் கற்போரைநல்வழிப்படுத்தலால் தமிழ்ஆசிரியனுமாகும். கடவுள் இத்தன்மையன்; அவனையடையும்வழி இன்னது; எனக்காண்பித்தலால் அடியாராகும். சைவ வைணவ அடியார்களாக இன்றும்நின்றுலாவுவது அப்பெரியோர்களருளிய தேவாரமும் நாலாயிரமுமாகிய தமிழ்மொழிப்பாடல்களேயல்லவா ? சம்பந்தமூர்த்தி சுவாமிகள் "தோடுடையசெவியன்" என்று தன் தந்தைக்குக் கடவுளைச் சுட்டிக்காட்டியது தமிழேயாகும். சம்பந்தமூர்த்தி பிராமணவகுப்பைச்சேர்ந்தவர். அப்பிராமணரேயாகிய மாணிக்கவாசகப்பெருமான் திருவாசகத்தைப்படிப்பதின் பேரின்பத்தை இராமலிங்கசுவாமிகள் புகழ்வதையும் மாணிக்கவாசகர் தமிழின் உயர்வைக்கூறுவதையும் மோட்சமூலர் (Max Muller) முதலிய ஐரோப்பியபண்டிதரும் தமிழைப்புகழ்வதையும் கற்றுணர்ந்து கடவுளியல்புணர்ந்தோர் தமிழ் கடவுளேஎன்பதை மறுக்கார்.

"இனித் தமிழ்மொழிக்குத்தொண்டுசெய்தவர்யாவர்? என்று ஆராயுங்கால் முன்னர் நமது ஆராய்ச்சியில் தொண்டுசெய்யவேண்டிய அவசியமில்லாதவனென்றுகூறிய இறைவனும் ஒருவனென்னில் மற்றவர்தொண்டு கூறுமலேயமையும். எங்கும் நிறைந்த இறைவனும் பலபலதோற்றங்களில் தமிழுக்குத்தொண்டுசெய்திருக்கிறார். பாரிமகளிர் மணத்திற்காகஔவையார்தமிழ்ப்பாடலுக்குவந்துகணேசப்பெருமான் ஓலையெழுதினார். கந்தப்பிரான் நற்கீரர்திருமுருகாற்றுப்படைக்குவந்து பூதத்தைவென்று சிறைமீட்டார். நாரணனே கணிகண்ணன் கச்சிநகர்விட்டுப்புறப்பட்டபோது தானும் புறப்பட்டு ஓரிரவு வேறோரிடத்திலும் தங்கியிருந்தார். அவ்விடத்திற்கு இன்றும் "ஓரிரவிருக்கை" எனப் பெயர்வழங்குகின்றது. சிவபெருமானே, சுந்தரமூர்த்திசுவாமிகளுக்காகக் கச்சூரில் பிச்சையெடுத்தார். திருப்புக்கொளியூர் என்னும் புண்ணியவிடத்தில் "பிள்ளைதரச்சொலுகாலனையே" என்று கட்டளையிட உடனே குழந்தையை உயிர்ப்பித்தார். நெற்கொண்டு சேர்த்தார். இன்னும் எத்தனையோவேலைகள் செய்தார். இவையெல்லாம் தமிழுக்கேயல்லவா? ஆகையாலதனையே வணங்குதும். என்னாசிரியர்



ஸ்ரீலஸ்ரீ, சிவசண்முகமெய்ஞ்ஞானசிவாசாரியசுவாமிகளருளிய தமிழ்த்தோத்திரத்தை வாசிக்கின்றேன்.

படிப்போர்க்கினிமைதருஞ்செவ்விபரந்தமொழியிம்மொழிபோல
வெடிப்பில்மொழியெம்மொழியோநீர்விளம்புமென்றுகேட்கினவர்
விடுப்பஇலைறதான்முன்வருவர்விளங்குந்தெய்வத்தமிழேநின்
தொடுத்தசரணமிசைக்கொண்டுதொழுதேம்நினைத்தேம்வாழ்ந்தேமால்

ஓடிவிலன்பைவளர்ப்பதுவாய்ஓங்கும்பொருள்நிச்சயம்செய்யும்
மடிவில்வளஞ்சேர்ந்தழியாதுமாட்சியெய்தும்வனப்பினதாய்
அடியேம்பலர்க்கும்அருளமுதம்ஆர்த்தும்வளப்பம்நிறைந்துளதாய்
கெடலில்தமிழ்த்தெய்வத்தைநிதம்கிளந்துபணிந்துவாழ்ந்திடுவாம். 2.

இறையைநின்போல்தொண்டுசெய்யஇயற்றும்மொழிதான்எம்மொ
ழியோ, தறையில்சாந்தம்முதலியனசார்ந்தார்நின்னையடைந்தாரே
மிறைகள் முழுதும் அகற்றயெணின்விளங்குந்தெய்வத்தமிழேநின்
குறைவில்வளஞ்சேர்மலரடியைக்குறிகினேர்க்கேகூடிடுமால். 3.

பரனைத்துதிக்கும்பான்மையினில்பதிந்தவடியர்மேலோனும்
வரமார்இறையைக்காட்டுவதால்வள்ளற்குருவுண்மேலோனும்
திரமார்இறைமைஎய்தியதால்தெய்வக்குழுவுட்சிறந்தோனும்
புரைதீர்தெய்வத்தமிழேநீபுகலில்வேறுயாரேயோ. 4.

தானம்செய்யும்தலைமையரில்தமிழ்க்குத்தொண்டுசெய்வோரே
மானவுலகிற்பெரியரெனவானும்வணங்கவிருப்பரெனில்
தேனினினிமைமிகுந்ததமிழ்த்தெய்வசரணமடியேற்கு
கானமலர்மாலையெனக்கொண்டுகொடிதிற்பணிந்துவாழ்ந்திடுவாம். 5.

"பண்டையவழக்கே ஒவ்வொருநாட்டிலும்வழங்கச்செய்வதால் நம் தமிழ்நாட்டிலும் தமிழ் உன்னதநிலையையடைவதற்கு நமதுசக்கரவர்த்தி மாட்சிமைதங்கிய ஐந்தாம்ஜார்ஜ்மன்னவர் முக்கியகாரணமாவாராகையால் அம்மகிபரும் ஒருவாறு தமிழ்த்தொண்டரே.

"கனவான்களே! இத்தகைய தமிழைத் தற்காலம்இகழ்தல்தகுமா? அந்தோ! இதனைப்பேசுதற்குக் கூசுகின்றனமே. தமிழ்மொழி

யைச் சீர்ப்படுத்தத்தகுந்த முக்கியமானவர்கள் முற்படாமையும் தமிழரே அதனை இகழ்வதையும் நோக்கில் எனக்கு ஒன்றும்பேசமுடியவில்லையே! மனந்தளர்கின்றதே! ஓரெழுத்துச்சரிக்கவும் நாவெழவில்லையே! என்று யாவர்மனமுங்கரைந்துருகப்பேசினார்கள்.

இவருக்குப்பின் சிலப்பதிகாரவாராய்ச்சிவிஷயமாகப்பேசவேண்டியிருந்த ஸ்ரீமான் பண்டிதர் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் சபைக்கு வந்திருந்தும் எதிர்பாராது அவர்களுக்கு வயிற்றுநோயுண்டாகி யாவரும் ஏமாற அவர்களது அருமைப்பிரசங்கம் நிகழாமற்செய்தது. அவர்களுக்குப்பதிலாக ஸ்ரீமான், அ. வரதநஞ்சையபிள்ளையவர்கள் ஓர் கம்பராமாயணப்பிரசங்கஞ்செய்தார்கள். அதன்பின்னர் தலைவரவர்கள் தமிழின் அருமைபெருமைகளையும் அதனை ஆதரிக்கவேண்டிய அவசியத்தையும், ஆண்டுத்திருவிழாச்சிறப்பையும், மற்றும் பல அரியவிஷயங்களையும்பற்றிக் குறிப்புரைகூறிமுடிக்க சங்க ஆதரிப்பாளர் ஸ்ரீமான், வா. கோபாலசாமிரெகுநாதராசாளியார் அவர்கள் யாவருக்கும் வந்தனை கூறவும், சங்கத்தலைவரவர்கள் மாலையிட்டுபசரிக்கவும், ஸ்ரீமான் இராமசாமிவன்னியரவர்கள் அருமைத்தமிழ்த் தாய்க்கும் பெருமைச்சக்கரவர்த்தியாருக்கும் வாழ்த்தெடுக்கவும் மற்றப்பெரியாரெல்லாம் சங்கத்தைவாழ்த்தவும், சங்கீதமுழங்கவும் கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் ஆறுவதாண்டுத்திருவிழா இனிதாகநிறைவேறிற்று.

ஆ. ச. ஆறுமுகப்பிள்ளை
உதவிக்காரியதரிசி,
கரந்தைத்தமிழ்ச்சங்கம்,
தஞ்சை.

---

ஸ்ரீ:

## புத்தகமதிப்புரை.

1. சந்தானரத்தினம்:-இது பிரும்மஸ்ரீ சதானந்தஸ்வாமிகளால் மலையாளபாஷையிலியற்றிய தன்மொழிபெயர்ப்பாகக் காளையார்கோவில் ருக்வேதபாடசாலையுபாத்தியாயர் பிரும்மஸ்ரீ டி. கே. இராமபத்ரசர்மா அவர்களால் இனிய தமிழ்நடையில் மொழிபெயர்க்கப்பெற்றிருக்கிறது. இதில் நல்லசந்ததியைப்பெறவிரும்பும் குடிவாழ்க்கையிலுள்ள ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய கெர்ப்பப்பிரதிபந்தகங்களான ரோகாதிலக்ஷணங்களும், அவற்றிற்கு நிவர்த்தகங்களான ஔஷதசேவநாதிகளும், மந்த்ரயந்த்ரதந்த்ராதிசாந்திபரிகாரங்களும், யுக்தியுக்தமாகவும், சாஸ்திரப்பிரமாணமாகவும் நன்றெழுதப்பட்டுள்ளன. இதன்விலை அணா 14. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

2. 1 சோமசுந்தரமாலை, 2 (பெருந்தோட்டத்து) அத்தீச்சுரபுராணம், 3 வேதாந்தம், 4 ஆதிசைவகுலமான்மியம் என்னும் இப்புத்தகங்கள் காரைக்குடி வித்வான் ஸ்ரீமத் ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றுள்ளன. அவற்றால் அவர்களுடைய கல்விப்பெருமையும், செய்யுளியற்றுந்திறமையும், சமயசம்பிரதாயத்தெளிவும் நன்குவிளங்குகின்றன. அவர்கள் மேற்கண்ட புத்தகங்களை எனது தனதுபார்வைக்கனுப்பியதற்கு மிக்க நன்றிபாராட்டுதலுடன் அப்புத்தகங்கள் படிப்பவர்பலர்க்குமுபயோகமாகும்படி பாண்டியன்புத்தகசாலையிற் சேர்ப்பிக்கப்பெற்றன.

3. உவாக்கமாவேலவரூசல்:—இது, இராமசந்திரபுரம் ஸ்ரீமாந். மு. ராம. அ. நாராயணன்செட்டியாரவர்கள் விருப்பத்தின்படி சொக்கலிங்கம்புத்தூர் மாணிக்கவாசகவித்யாசாலைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந் ரே இராமமூர்த்தி ஐயரவர்களால் இயற்றப்பெற்றது. இதிலுள்ள பாட்டுகளெல்லாம் தெளிவும் செவ்வியுமுடையனவாய் நன்குசெய்யப்பெற்றுள்ளன. ஐயரவர்கள் இன்னும் வேண்டும் பிரபந்தங்களியற்றற்குரிய கவித்துவசக்தியுடையவரென்பதை யிதனாலறியலாம்.

4. ஸ்ரீ மூலந்திருநாள் சஷ்டிபூர்த்திச்சரிதம்:—இது, திருவநந்தபுரம் சென்றுஜோஸப்ஸ்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந். S. முத்துசுவாமி பிள்ளையவர்களாலியற்றப்பெற்றதொரு பிரபந்தம். இதில் திருவாங்கூர் மஹாராஜா ஸ்ரீ மூலந்திருநாள் அவர்கள் விஷயமாக அழகாகச்செய்யப்பட்ட அறுபது செய்யுள்களும் அவர்களது குணாதிசயங்களையும் பிரஜானுகூலமான செயல்களையும் யாருமறிந்து அவர்களிடம் அன்புபாராட்டும்படி பத்திச்சுவைதோன்றப்பாடப்பெற்றுள்ளன. இதனையியற்றிய பண்டிதரவர்களது கவித்வசக்தியும் ராஜபக்தியும் மிகவும் பாராட்டற்பாலன.

பத்திராதிபர்.

உ

சேரமான் பெருமான்

ஸ்ரீமூலபூபன்

# திருத்தசாங்கம்.

---

காப்பு.

அன்பருளம் தங்கியருள் ஆனைமுக வா! மூல
மன்புகழ்த சாங்கம் வழுத்தவே—இன்பம்
விளைக்கும் பொருளும் விரிதமிழும் வெண்பாத்
தளைக்குட் படுத்திநீ தா.

நாமம்.

(1) இன்னிசைகள் பாடும் இளங்கிள்ளாய்! எம்மிறைவன்
மன்னுதிரு நாமம் வகுத்துரையாய்—பன்னுமவன்
மாலுக் கடிமைசெயும் மாமூல மன்னவன்செங்
கோலுக் கொருமறுவாம் கோன்.

நாடு.

(2) பாலுண்ணும் செம்பவள வாயால் பசுங்கிளியே!
ஞாலம் புகழ்வேந்தன் நாடுரையாய்—சீலமிகு
மன்னாளும் அந்த வளநாடு மாவஞ்சி
நன்னாடாம் பொன்னாடும் நாடு.

பதி.

(3) குஞ்சுக் கிரைதேடிக் கொண்டுசெலும் அஞ்சுகமே!
வஞ்சிக் கிறையமர்ந்து வாழ்பதியென்—கெஞ்சி
அளகா புரிசலாம் செய்யும் அநந்தை
வளமார் திருநகர மாம்.

மலை.

(4) பிள்ளை யிளம்பேச்சுப் பேசுகிளிப் பிள்ளாய்! எம்
வள்ளல் பெருமான் மலைபகராய்—எள்ளலிலா
ஏலம் கமழுமலை எய்த்தவர்க்கு மேருமலை
சாலப் பெரியமலை தான்.



ஆறு.

(5) பச்சைப் பசுங்கிளியே! பாரிலெமை எந்நாளும்
அச்சமறுத் தாளுமவன் ஆறுரையாய்—மெச்சுமந்த
மன்னன் கருணையினால் வற்றாமல் ஓடாறு
பன்னலமார் கோட்டாறும் பார்.

கொடி.

(6) வண்டாடும் பூஞ்சோலை வாழ்கிள்ளாய்! வஞ்சிமகிழ்
கொண்டாடும் கோவின்கொடி கூறாய்—அண்டாரை
வாட்டிக் கலியை வனமோட்டி மாவிமயக்
கோட்டுயரும் வில்லே கொடி.

படை.

(7) ஆரம் அணிந்தமரும் அஞ்சுகமே! விஞ்சுபுகழ்
சேரன்கை யேந்துபடை செப்பிடுவாய்—பாரகத்துச்
சாதிமத பேதமிவை சற்றுமறி யாதநடு
நீதியவன் கைப்படையாம் நேர்.

பறை.

(8) சோலைக் குகந்த சுகமே! எமையென்றும்
பாலிக்கும் அண்ணல் பறைபகராய்—ஞாலத்தக்
காவலரைப் பாடிக் களித்துப் பரிசுபெறும்
பாவலர்தம் நாவே பறை.

தார்.

(9) மாங்கனியை மோது மரகதமே! வஞ்சிநிலம்
தாங்குமவன் மார்பணியும் தார்பகராய்—ஓங்குமணம்
வீசுந் தமிழ்மாலை வெற்றிப் புதுமாலை
ஆசில் மணிமாலை யாம்.

குதிரை.

(10) தேனூறு சொல்லாடு செல்வக் கிளியே! எம்
கோனேறிச் செல்லும் குதிரையெது—வானாடும்
ஈடிலா வஞ்சிக் கிறையிவரும் அக்குதிரை
கேடிலா நல்லறமாம் கேள்.

வாழ்த்து.

ஆல்போல் தழைத்திங் கறுகுபோல் வேரூன்றி
மால்போல் உலகளித்து வாழ்கவே!—பால்போலும்
செந்தமிழைக் கேட்டுவக்கும் சேரகுல சேகரனாய்
வந்தபுகழ் மாமூல மன்.

Pandit S. Muthuswami Pillai,
Editor "Tamilian" (Trivandrum.)

உ

சிவகுருமயம்.

# புறநானூறு வைப்புமுறை.

---

சங்கமருவிய எட்டுத்தொகையுள் ஒன்றாய புறநானூறு மற்றைய நற்றிணை, குறுந்தொகைகளைப்போலல்லாது வைக்கப்பட்டிருத்தல் பல்லோர் அறிந்துளாராயினும் ஒருசில்லோர் அறிந்திலரென்று பின்னர் அவரவர்கள் செய்யும் பல்வகையாராய்ச்சியான்வெளியாகின்றது. முதலில் சேரனும், பின்னர்பாண்டியனும் அதன்பின்னர் சோழனும் மாறிமாறி பாட்டுடைத்தலைவனாகக்காணப்படுகிறது. இவர்தாமென நிச்சயிக்கக்கூடியவர்கள் செய்யுள்களெல்லாம் முன்னும், குறித்துச் சொல்லக்கூடாதவைபின்னும் வைக்கப்பட்டிருத்தல் புறநூலையூன்றிப் பார்ப்பாருக்கு இனிதுவிளங்கும். இம்முறைவைப்பிலும் தலைச்சங்கப்புலவர்கள் பாடல்கிடைத்தவை கோவையாகவருகின்றன. பின்னரே கடைச் சங்கப்புலவர்பாடல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இதை விரித்துச்சொல்ல முதற்பாட்டு,கடவுள்வாழ்த்தாக இரண்டாம் பாட்டு,சேரன் உதியன்சேரல் ஆதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது வைக்கப்பட்டிருக்கின்றது. இவராற்பாடப்பட்டது இஃதொரு பாட்டே இப்பொழுது கிடைப்பது.

..............................மாடக்கூடலின்
முன்னர் கனமாப் பலகையிற்
றிரிபுர மெரித்த விரிசடைக்கடவுள்
மன்றன் மராத்தார்க் குன்றெறி யிளஞ்சேய்
திண்டிறற் புலமைக் குண்டிகைக் குறுமுனி
புவிபுகழ் மருதங் கவினிய முரிஞ்சிப்
பதிமுடி நாக னிதியின் கிழவன்.........

என்பதனாலே இச்செந்நாப்புலவர் முதற்சங்கமிரீஇயினரென்பதும், இவராற்பாடப்பட்ட சேரன் அக்காலத்தவனென்பதும் நூலால் அறிவது. புறவிஷயங்களாலறியக்கூடிய சாட்சி பாரதர்காலத்தான் என்பது இவன் அச்சேனைக்கு உணவளித்தகதையே இங்குக்கூறப்பட்ட



படியால் இது நன்குவிளங்கும். அடுத்தசெய்யுள் இரும்பிடர்த்தலையார் பாடியது. இவர் சோழன் கரிகாற்பெருவளத்தான் அம்மானுவாரென்று புறநானூறுபாடினோர்வரலாற்றில் காணப்படினும் வழுதியைநோக்குமிடத்து இப்பெயருடையார் முற்காலத்தவர் என்பது நன்குபுலப்படும். அன்றியும் சீரும் சிறப்போடும் வாழ்ந்த கரிகாற் பெருவளத்தானை அம்மானாயிருந்தபுலவராயின் பாடாது இருக்க நியாயமில்லை. பாட்டுமுறைவைப்பும் இதனைக்காட்டவில்லை. அன்றியும் இவர்பாடியது ஒருபாட்டே. இவராற்பாடப்பட்டவனும் இவர் பாட்டைத்தவிற வேறுபெற்றிலன். இவைகொண்டு பாடினோரும் பாடப்பட்டோரும் முற்காலத்தவர்களே என்று கொள்வதில் இழுக்கில்லை.

இனி சோழர்களிடத்தேவரும்போது ஆக்ஷேபங்கள் அநேகம் தோன்ற இடம் கொடுப்பது காணப்படினும் உண்மையில் அவை ஆக்ஷேபமாகாது என்பதைக் கீழேவரைகின்றேன். 4-வது செய்யுளிற்கூறப்படுபவன் சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி. இவன் கடைச்சங்ககாலத்தவன் என்பது யாவருமறிந்தவிஷயம். இவனைப்பாடியவரும் கபிலரோடுசேர்ந்த பரணரே. குறைகூறுவார் "எப்பொழுது கடைச்சங்கத்தவனான இளஞ்சேட்சென்னி கூறப்பட்டானோ அப்பொழுதே பாண்டிய, சேரவரசர்களும் இக்காலத்தவராகத்தான் இருக்கவேண்டும் என்பது துணிதல்வேண்டும்" என்பர். உண்மைதான். அடுத்த 5, 6, 8, 9, முதலிய செய்யுட்களை நோக்குங்கால் முன்னோர்செய்யுட்களைக் கிடைத்தவரைகாப்பாற்றும்எண்ணங்கொண்டே கோக்கப்பட்டிருக்கிறது புலனாகும். இதுகொண்டு பாண்டியர் என்றால் முதுகுடுமிப்பெருவழுதி, தலையாலங்கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியன், கானப்பேரெயில்கடந்த நெடுஞ்செழியன் முதலாயினோர் வரிசையாகவந்தவர் என்றுகொள்ளுதல் தவறாகும். இவ்வாறு எழுதியதுகொண்டு முன்னோரையும், கற்றறிந்தபெரியோரையும் குறைகூறவந்ததன்று. ஆங்கிலம்படித்த சிலர் கண்டவாறு ஆங்கிலத்தில் எழுதிவருவதால் அவற்றின்உண்மை யிவ்வாறாகுமெனக்காட்டற்கே எழுதியதென்றுகொண்டு பெரியோர் மன்னித்தருள்வார்களாக.

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்,
இலக்கணவிளக்கபரம்பரை.

---

5

ஸ்ரீ:

அருள்மயம்

தொல்காப்பியன் துணை.

# தொல்காப்பிய ஆராய்ச்சி.

[செந்தமிழ்ப்பத்திரிகைக்கு எழுதியது.]

(This copy-right is reserved to the author).

---

தோற்றுவாய். திருவருளைமுன்னிட்டு இந்நிலவுலகில் பிறமொழிகளின் துணையின்றித் தம்மாற்றலால் விளக்கமுற்றுநின்று நிலவிவரும் சிலமொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும். இம்மொழி வேங்கடமுதலாகக் குமரியீறாகவழங்கிவருவது. இதனை இயற்றமிழ்-இசைத்தமிழ்-நாடகத்தமிழ் என மூவகைப்படுத்தினர்சான்றோர். இங்ஙனம் பகுத்தவற்றுள் இயற்றமிழ் ஒருவர்க்கொருவர் உரையாடிமகிழ்வதற்கு இடனாகி ஏனைய இருவகைத்தமிழ்க்கும் அடிப்படையாகி உறைவதாகும். இத்தமிழ் உலகவழக்கு-செய்யுள்வழக்கு என்ற இருவகை வழக்கினும்பயில்வது. இதன் உண்மையானஇலக்கணங்களை வரையறைப்படுத்த ஆன்றோர்சிலர் பலநூல்களைஇயற்றியருளினர். காலப்பழமையினால் அந்நூல்களுள் இறந்தொழிந்தவைகழிய எஞ்சிய சில இலக்கணநூல்களே இக்காலம்கிடைப்பவாயின.

நூல்:—அத்தகையவாயினவற்றுள் இயற்றமிழ்மொழியின் ஏற்றமானநிலையைக் கண்கூடாக ஒருங்குகண்டுவியத்தற்கு ஒத்ததொன்னூல்-'தொல்காப்பிய'மேயாகும். இஃது ஒன்றே மொழித்திறத்து முட்டறுத்து இன்றியமையாப் பொருட்குவியலைத் தன்னிடங்கொண்டு இன்றளவும் நின்றுநிலவும் பெருநூல்: இஃது ஒன்றே எழுத்துச் சொற் பொருள் என்ற மூன்றனுக்கும் உரிய இலக்கணங்களை முறைபிறழாது வேண்டியவிதிகளுடன் கோவைபடத்தொகுத்துரைக்கும் தொன்னூல்; இஃதொன்றே பண்டைத்தமிழரின் உயரியநிலையினை உள்ளவாறு எடுத்தறிவுறுத்தும் நன்னூல்.

இது தலைச்சங்கத்தார்காலத்தே தோற்றமுற்று (இந்நூலாசிரியருடன்கற்ற ஒருசாலைமாணாக்கராகிய) அதங்கோட்டாசான் என்



பார்க்குத் தெரிந்தெடுத்துரைக்கப்பெற்று இடைச்சங்கம் கடைச்சங்கம் என்ற இரண்டினும் மேம்பாடெய்தியுள்ளதாகும். இந்நூல் நூற்பாயாப்பினால் இயற்றப்பெற்றது. நூற்பா—சூத்திரம்.

பழைய நிலை:— இத்தொன்னூல் ஆசிரியர்வழிவழியாகப் பன்னூற்றாண்டுகள் ஓதப்பெற்றுவந்தது. வரிவடிவில் பெயர்த்துச்சுவடிகள்வாயிலாக எழுதப்பெற்றபொழுது, இதனுழைப்பொலிந்த சிற்சில நூற்பாத்திரள்மணிகள் இடையிடை நழுவப்பட்டுமிருக்கலாம் என்று சில அறிஞர் எண்ணமிடுகின்றனர். இவ்வுண்மையினை இந்நூல் உரையாசிரியருள் தலைவர் எனப்பெறும் ஆசிரியர் இளம்பூரணவடிகளும் தம்முரையகத்து ஓரிடம் குறித்துள்ளார். அவர் கூற்று ஈண்டைக்கு வருமாறு:—

"எஞ்சி யோர்க்கு மெஞ்சுத லிலவே".—[அகத்தி-41.]

'பிரிவின்கண் கூறுதலுரியார் பலருள்ளும்-நற்றாயும்-' செவிலியும்-கண்டோரும் - தோழியும் - தலைமகனும் - கூறும்கூற்றுக்கூறினார்; இஃது, இனி அவரையொழிந்ததலைமகட்கும் - பாங்கற்கும் - பார்ப்பார்க்கும் - பாணர்க்கும்- கூத்தர்க்கும்- உழையோர்க்கும் கூற்றுநிகழுமாறு உணர்த்துதல்நுதலிற்று. "பாங்கர் முதலாயினோரை இச்சூத்திரத்தாற்கூறுவார் தலைமகள்கூற்றுத்தனித்துக்கூறல்வேண்டும், இவரொடு ஒருநிகரன்மையின்; எனின் ஒக்கும்; தலைமகள்கூற்று உணர்த்திய சூத்திரம் காலப்பழமையால் பெயர்த்துஎழுதுவார் விழவெழுதினார் போலும் என்க" என்பது. [ஷை-இளம்-உரை.]

நூற்பிரிவு:—இந்நூல் எழுத்ததிகாரம்–சொல்லதிகாரம்–பொருளதிகாரம் என மூன்றுபிரிவினையுடையது. 'எழுத்தோத்து—(விளிமரபு-26 - சேனா) - சொல்லோத்து -( மரபி - 110-உரை)-பொருளோத்து-என வழங்கினாரும் உண்டு. ஓத்து - ஓதப்படுவது என்றல் அவர்கருத்துப் போலும்? இனி உரையாசிரியர்பலருள் ஒருவர் எழுத்து - சொல் - பொருள் - யாப்பு என நான்கு அதிகாரமாகப்பிரித்தலும் உண்டு. இப்பிரிவினைப் பின்னுரையாசிரியருள் ஒருவர் தம்முரையகத்தே [செய்யு-பேரா.] எடுத்தோதிமறுத்துரைத்து மூன்றதிகாரமென்றே அறுதியிட்டார். நான்கு அதிகாரமாகப்பிரிக்கப்பெற்றுவழங்கிய உண்மை இறையனார்களவியல் (அச்சிடப்பெற்று இக்காலம்வழங்கும்) உரைபி

னாலும் ஊகிக்கஇடனுண்டு.-அவ்வுரை வருமாறு:-"தமிழ்தான்நான்கு வகைப்படும்-எழுத்தும்-சொல்லும்-பொருளும்-யாப்பும்-என"- என்பது. (இறை-௧ள-1-உரை.)

முறைவைப்பு-இயல். இந்நூலின் அதிகாரமுறைவைப்பு மேற்கண்டவாறே ஒவ்வொருஅதிகாரத்திற்கும் ஒன்பது ஒன்பது இயல், முறையே அமைந்துள்ளன. ஆக மூன்றதிகாரத்திற்கும் கூடிய இயல், எண்-27. (இயல்களின்பெயர் பின்னர்எழுதப்பெற்றுள்ளன.) இயல் முறைவைப்பினை மாற்றிவைத்தாண்டோரும் உண்டு. பொருள் அதிகாரத்துள் எட்டாவதாக அமைந்துள்ள 'செய்யுளியல்' என்பதை ஒன்பதாவதாகவைத்து உரைகண்டார் ஒருரையாசிரியர். அதனை மரபியல் 93ம் சூத்திரத்தினும் பிறிதோரிடத்தினும் பேராசிரியர் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அங்ஙனம் அமையுமெனின் மரபியல் முறைவைப்பு, செய்யுளியலின் முன்னாகக்கொண்டு கொளக்கப்பெறும். முன்—கால முன்.

(ஐந்தாவதாக அமைந்துள்ள) 'பொருளியல்' என்னும் பெயர்க்கு மாற்றாக ஒழிபியல் எனவழங்கிவந்தோரும் உண்டு. ஆசிரியர் இளம்பூரணவடிகளோ, "இதனை ஒழிபியல் எனினும் இழுக்காது" (பொருளி-1-இளம்.) எனத் தம்ஒப்பும் உரைத்துள்ளார்

இக்கூறிய மூன்றதிகாரத்துள் பொருளதிகாரம் சிறப்புடையது. என்னை?-எழுத்தால் ஆக்கப்பெற்ற சொல்லுள் பொருள் உறைவதாகலின் அப்பொருள் நுதலிவரும் அதிகாரம் ஏனையஎழுத்ததிகார-சொல்லதிகாரங்களைவிடச் சிறக்கப்பெற்றது என்க. அங்ஙனமெனின், முறைவைப்பில் முன்னாகவைத்தல் வேண்டுமன்றோ,பின்னாகவைத்ததுஎன்னையெனின், அங்ஙனம் கோடல் தொல்லாசிரியர்வழக்குஎன்க. இருவகை வழக்கினுள் செய்யுள்வழக்கத்தே "சிறப்புடைப்பொருளைப் பிற்படக்கிளத்தல்" என்ற ஆன்றோர் விதியும் உண்மையாதலின், தன்னை நோக்கச்சிறப்பில்லாத எழுத்தும் சொல்லும், முன்னாகப் (முன்-ஈண்டு கால முன்) பொருளதிகாரம் பின்னாக அமையப்பெற்றது. அங்ஙனமாயின் இங்ஙனம் அமைந்துள்ள பிறஎடுத்துக்காட்டு உண்டோஎனின் உண்டு. இதனை,



"நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே
குறுவெண் பாட்டி னளவெழு சீரே"

—[செய்யு-159.]

என்றதன்உரையுள் பேராசிரியர். "நெடுவெண்பாட்டுப்போலச் சிறப்பின்றாங் குறுவெண்பாட்டும்எனின், 'சிறப்புடைப்பொருளைப் பிற்படக்கிளத்தல்' என்பதனான் அவ்விரண்டினுள்ளும் அதனைப்பிற்கூறியது அச்சிறப்புநோக்கியன்றோ என்பது."—என்று தடைவிடைநிகழ்த்திக் கூறிய உரையாற்றெளிக. பிறகாரணமும் உண்டு.

இனி, சொல்லினைநோக்க எழுத்து அத்துணைச்சிறப்பு இன்மையின் சொல்நுதலும் அதிகாரத்தினை, எழுத்தின்பின்வைத்து, எழுத்தினை முன்அமைத்து முறையாக்கினார் ஆசிரியர்.

இவ்வாறே இயல்முறைவைப்பும் ஒவ்வோர்காரணம்பற்றிஅமையப்பெற்றுள்ளன. (விரியும் என்றஞ்சி விடப்பெற்றன.)

நூற்பா—எண். இனி இம்மூன்றதிகாரங்களுக்கும் உரியசூத்திரஎண், இயல் ஒன்றுக்கு இத்துணையென அடைவுகட்டி எண்ணி, வரையறுத்துரைத்தற்கு இயலவில்லை.ஆதிஉரையாசிரியர் இளம்பூரணவடிகள்கொண்ட, ஓர் அதிகாரத்திற்குரிய சூத்திரஎண் ஒன்று. மற்றோர் உரையாசிரியராகிய சேனாவரையர்கொண்ட, அவ்வதிகாரத்திற்கு உரியசூத்திரஎண் மற்றொன்று, அவ்வாறே பிறிதோர் உரையாசிரியர் கல்லாடர் அதற்கே உரித்தாகக்கொண்ட எண் முன்னைய இரண்டனுக்கும் வேறாயது. நச்சினார்க்கினியர் என்பார்—ஓர் உரையாசிரியர், அதற்கேகொண்டஎண், இம்மூவர்கொண்ட எண்ணிற்கும் முற்றிலும் மாறாயமற்றொன்று. அற்றேல் அஃதாக; இத்தகையமாறுபாட்டினால் நூற்பாக்கள் இடைநழுவப்பெற்றனவோ எனின், அற்றன்று. இந்நூற்கு உரையாசிரியராக அமைந்தார்பலரும் தத்தங்கொள்கைக்கு ஏற்பச் சூத்திரங்களுள், ஒன்றனைவிட்டு மற்றொன்றனைப் பிரித்தும் ஒன்றனைமற்றொன்றனுடன் இணைத்தும் உரைவகுத்து எண்ணீடு செய்தனர் என்க.

உதாரணமாக:—

சொல்லதிகாரத்துக்குரிய சூத்திரங்கள்—ஆசிரியர் இளம்பூரணவடிகள்கொண்டபடி, எண்—454.

| | | | |
|---|---|---|---|
| டிை | சேனாவரையர்— | டிை | 463 |
| டிை | கல்லாடர் | டிை | 455 |
| (ஏட்டின்படி)டிை | நச்சினார்க்கினியர்— | டிை | 464 |

டிை பேராசிரியர்—(ஆராய்ச்சி முடியவில்லை)

டிை தொல்காப்பிய மூலம் ஏட்டின்படி–464 463 என்பது.

தொடரும்.

தச்சநல்லூர் }
7—2—18. }

பெயர் விழையான்.

---

உ

## திருத்தணிகைப்புராண ஓர் அருஞ்செய்யுள்விளக்கம்.

[திருநாட்டுப்படலம் 145 - கவி.]

"கருவுயிர்ப்பனகங்குடிப்பன
மருவினத்தினைவாய்மடுப்பன
உருகுநோக்கினானுவப்பமீன்குலம்
உருவமாதிகள்உறழ்வகாட்டுமே."

(இ-ள்.) கருவுயிர்ப்பன-தம்மாலீனப்பட்டவை யின்னவையென்று தெரிந்துகொள்ளும்பொருட்டுத் தாமீன்றமுட்டைகளைச்சுவாசிப்பனவும், கம்குடிப்பனமருவுஇனத்தினைவாய்மடுப்பன - அங்ஙனஞ்சுவாசித்துத்தெரிந்துகொண்டபின்னர் அம்முட்டைகளையீன்றசோகந்தீர்தற்பொருட்டு நீரைக்குடிப்பனவும் (தம்மோடுடன்) பொருந்தும் (சிறுமீன்களாகிய) இனத்தினையுண்பனவும்,உருகும்நோக்கினால்உவப்பமீன்குலம்-(தாமீன்றமுட்டைகள்வெடிக்கப் பின் அவற்றினின்றுங்குஞ்சுகளுண்டாயுய்யும்பொருட்டு உள்) உருகுதற்கேதுவாகுங்கட்பார்வையால் (கண்டு) மகிழ்வனவும்(ஆகிய) மீன்கூட்டங்கள், உருவம்ஆதிகள்உறழ்வ இங்ஙடும்வ-ரூபரசகந்தங்கள்(கந்தரசரூபமாகத்தம்மிடத்துத்தலைகீழாய்) இதலைநிற்பனவற்றைக்காட்டாநிற்கும். (எ-று.)



ஏ- அசைநிலை. மீன்குலம்காட்டுவனஎனமுடிக்க.உருகும்என்பது காரியத்தின்கண்வந்தபெயரெச்சம். அஃது நோக்கென்னுங்காரணப் பெயர்கொண்டது.

பஞ்சபூதங்களில் ஆகாயமாகியமூலபூதத்தினின்றும்வாயுவும்,பின் அவ்வாயுவினின்றும்தேயுவும், அதன்பின் அத்தேயுவினின்றும் அப்புவும்,மற்றதன்பின் அவ்வப்புவினின்றும் பிருதிவியுமுண்டாகிப் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமெனச் சிருஷ்டிக்கிரமமாய்நிற்கும் ஐம்பூதங்களின் குணங்களையெடுத்துக் கிரமப்படுத்துங்காற், சிருஷ்டிக்கிரமமுறையொழித்துக் காரியத்தினுங்காரணம் சிறந்ததாகலிற் காரியத்திற்குமுன் காரணத்தைவைத்தலே மரபென்பதுகருதி, மூலபூதமாகிய ஆகாயமானது வாயுவாகிய காரியத்திற்குத் தான்காரணமாயிருத்தலின் அவ்வாகாயகுணமாகிய சத்தத்தைமுன்னும்,வாயுகுணமாகியபரிசகாரியத்தை அதன்பின்னும், வாயுவானது தேயுவாகியகாரியத்திற்குத்தான்காரணமாயிருத்தலின் அவ்வாயுகுணமாகிய பரிசகாரணத்தைத்தேயுகுணமாகிய ரூபகாரியத்திற்குமுன்னும், ரூபகாரியத்தையதன்பின்னும், தேயுவானது அப்புவாகிய காரியத்திற்குத் தான்காரணமாயிருத்தலின் அத்தேயுகுணமாகிய ரூபகாரணத்தை அப்பு குணமாகிய ரசகாரியத்திற்கு முன்னும், ரசகாரியத்தையதன்பின்னும், அப்புவானது பிருதிவியாகிய காரியத்திற்குத்தான் காரணமாயிருத்தலின் அவ்வப்புகுணமாகிய ரசகாரணத்தைப் பிருதிவிகுணமாகிய கந்தகாரியத்திற்குமுன்னும், கந்தகாரியத்தையதன்பின்னும் சங்காரக்கிரமமாய் முறைப்படவைத்துச் சத்தஸ்பரிசரூபரசகந்தங்களென ஆன்றோர்களெண்ணுவாராயினர். ஈண்டு இவ்வைங்குணங்களில் ரசகந்தகுணங்களிரண்டனிலும் ரூபகுணம்முற்பட்டு அந்தரூபகுணத்திற்கு ரசகுணம்பிற்பட்டுக் கந்தம் அந்த ரசகுணத்திற்கும்பிற்பட்டுநிற்றலால் ரூபரசகந்தமெனமுறைப்பட்டுநிற்பவைகள் மீன்குலங்களிடத்து முட்டைகளையீன்று அம்முட்டைகளைச்சுவாசித்தறியும் கந்தகுணம் முற்பட்டு அவ்விதகந்தகுணத்திற்குக் கம்குடித்தலும் இனத்தினைவாய்மடுத்தலுமாகிய ரசகுணம் முட்டைகளையீன்று சுவாசித்தறிந்தபின்னர் நிகழ்வதாகலின் அக்கந்தகுணத்திற்கு ரசகுணம்பிற்பட்டு அவ்விதரசகுணம்நிகழ்ந்ததன்பின்னர் முட்டைகளை நோக்கினாற்கண்டுவக்கும் ரூபகுணம் நிகழ்வதாகலின் அந்த ரசகுணத்திற்கும் ரூபகுணம் பிற்பட்டுநிற்றலான் இம்முறைக்

கியையக் கந்தரசரூபமெனமுறைப்பட்டுத் தலைகீழாய் மாறிநிற்குந் தன்மை காணக்கிடத்தலின் மீன்குலம் உருவமாதிகள்உறழ்வகாட்டுமே யென்றார்.

மீன்குலங்களிடத்தமைந்திருக்கும் இவ்வித ரூபரசகந்தங்கள் ஏனைய பிராணிகளிடத்தின்றி இம்மீன்குலங்களிடத்திலேயேயமைந்து அவற்றின்வேறுபட்டிருக்குந்தன்மையனவாதலால் மீன்குலம் உருவமாதிகள் உறழ்வகாட்டுமே யென்றாரெனினுமமையும்.

வேற்றுமீன்களின்றமுட்டைகளோடுகலக்கத் தாமீன்றமுட்டைகள் இன்னவையென்றறிந்துகொள்ளும்பொருட்டுத்தம்முட்டைகளைச்சுவாசத்தாலறியும் கந்தசக்தியும், தாம் வசித்தற்கிடனாய்முடியும் நீரையே குடித்து இனத்தையேயுண்ணும் ரசசக்தியும் முட்டைகள்வெடிக்க அவற்றினின்றும் குஞ்சுகளுண்டாய் உய்வதற்குக்காரணமாகப் பார்க்கும் ரூபசக்தியும் மீன்குலங்களுக்கேயமைந்துள்ளனவாய் ஏனையபிராணிகளுக்கிலவாதலறிக.

ரூபரசகந்தமெனச்சங்காரக்கிரமமாய்நிற்குங்குணமுறையும் அதற்கு மாறாய் உறழ்ந்து பிருதிவி அப்பு தேயுவெனச் சிருஷ்டிக்கிரமமாய் நிற்கும் இப்பூதமுறைக்குத்தக்க கந்தரசரூபமென ஈண்டுநிற்குங்குணமுறைமையும் முக்கியமாய் ஈண்டுக்கருதத்தக்கவை.

ஸ்ரீ. சதாசிவம்பிள்ளை.
நாகை நீலலோசனிப்பத்திராதிபர்.

---

இது, யாழ்ப்பாணம் மகாவித்வசிரோமணி ஸ்ரீமத் ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள் மாணாக்கரும், காரைக்குடி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரர்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமத், சு. பொன்னுத்துரையவர்களின் குறிப்பிலிருந்தெடுத்தெழுதியது.

ஸ்ரீ. ச. பிள்ளை.

உ

# இரணியன்வதைப்பரணி.

"செந்தமிழ்" ( தொகுதி - ௧௬ - பகுதி - [illegible]ல் )
௧௬௮ - ஆம் பக்கத்தொடர்ச்சி.

---

வெங்குதிரைப்பிணஞ்சுமந்துகுருதியாற்றின்
மிசையோடுங்கொடிநெடுந்தேரசையுங்காற்றிற்
பொங்குதிரைக்கடன்மேலாய்ப்பாய்புரிந்து
போனகலமெனத்தோன்றும்பொலிவைப்பாரீர் (617)

கொண்டோடுமேலாளுந்தானுங்காலாட்
குராதுரங்கம்பலதரங்கக்குருதிநீரிற்
பண்டோடும்பரிசயத்தாற்படர்வதென்னப்
பாந்தோடிவருந்துழனிபாரீர்பாரீர் (618)

வாரீர்நங்கணமிங்கேவாரீர்வாரீர்
மகிழ்நர்படுங்களந்தேடிவந்துமாதர்
பாரீரம்படுகுருதிச்சேற்றிலாழ்ந்து
படாதுபடும்பெருந்துயரம்பாரீர்பாரீர் (619)

புகநடந்துநெருங்கினரைத்திருக்கரங்கள்
பொருதுசெருத்தொழிலறியார்புணர்ந்தார்மார்பி
னகநடந்தவடுநோக்கிநகையாநின்றே
நயனவேன்முத்துதிர்ப்பார்நலமும்பாரீர். (620)

கோபுரமேதுடுப்பாகமதிலூடேற்ற
குருதிபலநீராகக்கொடியோன்வாழ்ந்த
மாபுரமேகயமாகப்பெருங்கூழாக்கி
வைத்தசெயலொத்திருந்தவண்ணம்பாரீர். (621)

அற்றகுறைத்தலைபாரீராடவாட
வலைகுருதிப்புனல்பாரீரவற்றின்றோற்றம்
பொற்றைவரைப்புதல்சுடுவார்சுட்டுப்போனாற்
புனத்தெரிகட்டைகள்போலும்பொலிவும்பாரீர். (622)

பாருடுநிழல்பாரீர்சுழலவோடும்
பசுங்குருதிக்கெதிர்களிற்றின்பலகரத்தா
லாருடும்படிவகுத்ததுறையைப்பாரீ
ரமர்க்களத்தவ்விடமிருந்தவழுரைப்பாரீர். (623)

என்றுசெருக்களங்காட்டியினிநாமிங்கே
யிருந்துகூழ்விருந்துண்பதென்னக்கேட்டு
நின்றுசெருக்கியகணங்களணங்கைவாழ்த்தி
நீந்தரியகுருதிநெடுங்கடலிற்பாய்ந்தே. (624)

வேறு.

முழுகாவெழுந்தொன்றின்மேலொன்றுவீழா
முகத்தேறவீசாமிகைத்தேறுசுழியோ
டொழுகாவழுந்தாமிதந்தோடிவாரா
வுவந்தோடிவிளையாடலொருகோடியுளவே. (625)

ஆர்காணவல்லாரிவ்வாழத்தையென்று
வலைத்தாடுசிலபேயினைத்தேறவயலே
நீர்காணுமிந்நீரினிலையென்னமூழ்கா
நெடும்பேய்களெல்லாமங்கிலைகண்டுநின்றே. (626)

திரைமண்டுசெஞ்சோரிநீரிற்குளித்துத்
திளைப்பேவிரும்புங்களப்பேய்களெல்லா
மிளைபண்டுகாணாதவாசத்திளைப்பா
விடைக்கேபிணக்குன்றிலேறிக்கிடந்தே. (627)

வழுக்குங்குழம்பானதருகென்றுநடுவே
வலித்தோடுபுனலாடவன்பேய்கண்முன்போ
யிழுக்கும்பெருஞ்சோரிவெள்ளத்தினுள்புக்
கியானைப்பிணத்தெப்பமேறிப்பிழைத்தே. (628)

வேறு.

கூளிகைத்தலைசரிந்தசோணிதகோலவீதி
மாளிகைச்செங்கல்வாங்கிவடிம்பொடுமுதுகுதேய்த்தே. (629)

வளவனைநகரவாயில்வருதிரைக்குருதியாற்றி
விளமணலெக்கல்வாரியெயிற்றுடன்பற்கடேய்த்தே. (630)



தேங்கிவர்குருதியாற்றிற்றெளிந்தநீர்தேடியோடி
யோங்கியபுரிசையேறியுடுத்தவையெடுத்தொலித்தே. (631)

ஆடினகுருதிநீரிலணங்கொடுகணங்களெல்லாங்
கூடினகரையிலேறிக்கூழடுமிடங்குறித்தே. (632)

ஆகவம்பொருதபோரிலறுகுறைக்கால்கணுட்டிக்
காகமும்பருந்துமிட்டகாவணநிழலிற்புக்கே. (633)

நிணத்துகில்விரித்துச்சாத்திநீண்டசெஞ்சடைமுடித்துப்
பிணத்தின்மேலமளியேறிப்பெண்ணணங்கிருந்தபின்னை. (634)

வேறு.

படைப்பேயின்முதன்மைப்பழம்பேயிலொருபேய்
மடைப்பேய்களெல்லாரும்வருகென்றழைத்தே. (635)

படைவாகையசுரேசர்பலமௌலிநிரையா
லடைவாகவொருபாலடுப்பாகவைத்தே. (636)

கம்பக்களிற்றின்கழுத்தற்றகூளி
கும்பப்பெரும்பானைகொண்டேறவைத்தே. (637)

கழுகும்பருந்துங்கவர்ந்துண்கவந்தத்
தொழுகும்பெருஞ்சோரியுலையாகவிட்டே. (638)

வெற்றித்தனித்தண்டுவெவ்வேறுகொண்டே
ஈற்றித்துழாவுந்துடுப்பாகவைத்தே. (639)

கொல்வீரர்பார்வைக்கொடுந்தீயையூதா
வில்வீரர்கணைமாரிவிறகிட்டெரித்தே. (640)

வேறு.

கொல்லுகிர்ப்படையடுங்கொடியதானவர்
பல்லுகுத்தனபழவரிசியாக்கியே. (641)

தூவடிவாளுகிர்றுணித்தடுக்கிய
பாவடியடியுரற்பலபரப்பியே. (642)

உலக்கையுமியானையினுயர்மருப்பையே
வலக்கையுமிடக்கையுமாறிவாங்கியே. (643)

யாலகத்திருந்தமைவையகத்தொரு
பாலகன்றெளிந்தமைபாடிப்பாடியே. (644)

வேறு.

சடங்குதருமுனிவேதம்தானவர்கோன்மகனோதத்
திடங்குதலுமுடிந்ததுகாண்சும்மேலோசும்முலக்காய். (645)

ஓதிமுடியம்மதலையோதிமுடிந்தமைபுணர்வார்
சோதிமுடிவானவர்காண்சும்மேலோசும்முலக்காய். (646)

என்னதுதானெனவினவியெரிந்தெழுதானவற்குமகன்
சொன்னதுகாண்மறைப்பொருள்காண்சும்மேலோசும்முலக்காய்.

பணிந்தவனைமுனிந்தவுணன்பாதகத்தாற்கொலைசூழ்ந்து
துணிந்தவனைத்துணிந்ததுகாண்சும்மேலோசும்முலக்காய். (648)

அஞ்சாதுதிருமேனியணுகினணாட்டாங்கனவை
துஞ்சாதுபிழைத்தனகாண்சும்மேலோசும்முலக்காய். (649)

சிற்றமுடன்பொரவந்ததிசையானையொருவனுக்குத்
தோற்றழிந்தமருப்பிவைகாண்சும்மேலோசும்முலக்காய். (650)

வாங்குதிரைமுன்னீரில்மதலையொடுமிதந்தமலை
தூங்கமளியானதுகாண்சும்மேலோசும்முலக்காய். (651)

முன்னடர்த்தவிரணியனீமொழிந்தவனெங்குளனென்னச்
சொன்னிடத்திலுளனென்னேசும்மேலோசும்முலக்காய். (652)

மூன்றுருவமொன்றானமுதலுருவமதலையெதிர்
தோன்றுவதுதூணிடைகாண்சும்மேலோசும்முலக்காய். (653)

விளைத்தபெருஞ்சினக்கனகமேருநெடுவரைநடுவு
துளைத்ததொருதிருவுகிர்காண்சும்மேலோசும்முலக்காய். (654)

எடுத்தகையோவரைமார்பமிடந்தகையோகுடர்மாலை
தொடுத்தகையோவழகியதுசும்மேலோசும்முலக்காய். (655)

கோண்மாலைவாளவுணர்குடர்மாலைகோளரிக்குத்
தோண்மாலையானதுகாண்சும்மேலோசும்முலக்காய். (656)



இல்லைவரமெனக்கனகனெனவூழிநாட்படைத்த
தொல்லைவரந்தொலைந்ததுகாண்சும்மேலோசும்முலக்காய். (657)

வீணாட்டந்தவிர்ந்தினிநாம்விளம்புவதுவெளிப்பட்ட
தூணாட்டுந்தச்சனைக்காண்சும்மேலோசும்முலக்காய். (658)

ஊணின்றுநாம்பெற்றதுடனின்றனம்பட்ட
தூணின்றநிலையன்றேசும்மேலோசும்முலக்காய். (659)

வேறு.

என்றென்றுபாடியிடித்ததுயானைச்செவிமுறத்தா
லொன்றொன்றுதெள்ளியமாவொன்பதுபேய்கொடுவரவே. (660)

அம்மாவிம்மாவளக்கென்றரைமாவுக்கேற்றமறைக்
கைமாயமறியாதகவற்பேய்களெடுத்திடவே, (661)

அடுப்பருகும்புடைப்பருகுமடுபடைப்பேய்பலநின்று
துடுப்பருகுஞ்சுழலவடிசுண்டாமற்றுழாவினவே. (662)

முடியநெடும்பொழுதெல்லாமுரணியபேரிரணியனூர்
கொடியமனமெனநின்றுகொதித்தனகூழ்குழிசியவே. (663)

பற்றிபிணிபிழிவயிரப்பதங்காணுமெனப்பழைய
கொற்றியினமியம்புதலுங்குறட்கள்பிடித்திறக்கினவே. (664)

வேறு.

முற்படவிழிந்தகூழுமுத்தவெண்குடைகளான
நற்பரிகலத்திலேற்றிநாயகிக்கெனவமைத்தே. (665)

களப்படுபடைச்சேகண்டிகாருகொலெற்றியாங்கோர்
குளப்படிபொரித்திட்டுக்குஞ்சரமதநெய்வார்த்தே. (666)

ஒத்தளவுடையவாகுவுயர்மணிக்கால்களாக
மத்தளங்கவித்துமென்மேல்வரிசையாய்வைத்துக்கொண்டே.

தினமணிக்கணியவானசிகரவான்கோபுரத்துக்
கனமணிக்குடங்கள்வாங்கிக்கரகமாமெனநிறைத்தே. (668)

ஓடியகுருதியாற்றிலொட்டகமுதுகின்வட்டச்
சாடியின்முகந்துமுன்னேசமைத்ததண்ணீரமைத்தே. (669)

சொன்னசாமந்தப்பேயைச்சூழ்ந்தவாயிழந்தவானைக்
கன்னசாமரங்கள்வாங்கிக்கரங்களாலசைப்பக்கண்டே. (670)

கோலவட்டப்பதாகைக்குழாங்கொடுகுறட்கனெல்லா
மாலவட்டங்கள்வீசவணங்கமுதமர்ந்தபின்னே. (671)

பரிகலம்பரித்தபல்பேய்பதறினபசிக்குத்தக்க
விரிகலந்தேடியோடிவீழ்ந்தபொற்கடகெடுத்தே. (672)

இருமொபந்தியென்னுவிடவிடவேறுகேளா
வொருமிடாவொருவாயாகவுண்டெனவுறிஞ்சக்கண்டே. (673)

வாயகலந்தப்பேயின்வயிற்றிடைமற்றோர்வன்பேய்
காயவெங்கூழிறைத்தகைவலிப்பாறிநின்றே. (674)

வயிற்றினைப்பார்த்துப்பார்த்துவார்த்தகூழ்மடுத்துவஞ்ச
ரெயிற்றிளவிஞ்சியைத்தின்றீர்ச்சுவிட்டீர்ச்சுவிட்டே. (675)

கொம்புவைப்பாரைப்போலக்குனித்தொருகொடிறுவீங்கச்
செம்புனற்பசுங்கூழ்கொட்டச்செவியெலாந்திறக்கவுண்டே. (676)

கோல்புரைவெளியுமின்றிக்குடர்முடங்கியபேய்கூழாற்
றோல்புரைவெளியடங்கத்துருத்திபோல்விம்மவுண்டே. (677)

மாயவெம்பகைஞர்புண்ணீர்வடித்ததண்ணீர்குடித்தே
தீயவன்பசிநோய்கெட்டுத்திடுக்கெனத்தேக்குமிட்டே. (678)

பேயெலாம்பூதமென்னப்பெருத்தனவெனிற்பருத்த
மாயவான்பூதமுண்டவடிவினையுரைக்கலாமோ. (679)

பேசலாம்பெருங்கூழுண்டபேயெலாங்குருதியாற்றிற்
பூசலாமெனவெழுந்தபூசலைப்புகலலாமோ. (680)

அவ்வகைபூசலேறியாறியகணங்களெல்லாஞ்
செய்வகையறிகிலாதுசெருக்கினைநெருக்கிநின்றே. (681)

இதையமாக்கமலமொட்டினின்பசும்பாக்கும்பாக்கை
திதையுமாங்குராதுரங்கச்செவிச்சுருளிலையுந்தின்றே. (682)

வேறு.

பகையொடுபட்டவசுரரெல்லாம்பைங்கட்சினவரிபொங்கழல்வாய்
நகையொடுபட்டமைபாடீரேநம்பசிகெட்டமைபாடீரே. (683)



பள்ளியில்வைத்ததைப்பாடீரேபாலனன்பானதைப்பாடீரே.
தெள்ளியசிந்தையைப்பாடீரேசெப்பினநாமமும்பாடீரே. (684)

சீறியதந்தையைப்பாடீரேசெய்தகொடுமையைப்பாடீரே
யாறியிருந்தமைபாடீரேயஞ்சாதநெஞ்சனைப்பாடீரே. (685)

காணொன்றுநின்றமைபாடீரேகாட்டென்றுவந்தமைபாடீரே
தூணின்றசோதியைப்பாடீரேதோற்றியசீற்றமும்பாடீரே. (686)

இடந்ததிருவுகிர்பாடீரேயெடுத்தகையென்றென்றுபாடீரே.
கிடந்ததிருமடிபாடீரேகேட்டார்திருவடிபாடீரே. (687)

என்றென்றுநின்றிசைபாடினவேயிரணியன்றோற்றமைபாடினவே
வென்றசெருக்களம்பாடினவேவீரத்திருப்புயம்பாடினவே. (688)

அந்தணர்தங்கள்மனத்தவத்தாலவ்வுலகத்திருந்திவ்வுலகம்
வந்ததிருவடிபாடினவேவடதிருக்கோபுரம்பாடினவே. (689)

சோலைபரங்கரைப்பாடினவேதுய்யமுறுவலைப்பாடினவே
சீலமகிழ்ந்திசைபாடினவேதிருவினுருவையும்பாடினவே. (690)

எண்பொருணாயகன்றன்னுடனேயேழுலகங்களுமீன்றெடுத்த
பெண்பெருமாளடிபாடினவேபெருமாளரங்கரைப்பாடினவே. (691)

அணங்குமகிழநின்றாடினவேயார்த்தெழுந்தார்த்தெழுந்தாடினவே
துணங்கையருநடமாடினவேசுருதிகள்பாடிநின்றாடினவே. (692)

தோகையசையநின்றாடினவேதும்பைபுனைந்துநின்றாடினவே
வாகையைச்சூடிநின்றாடினவேவானவர்ப்பாடிநின்றாடினவே. (693)

முற்றும்.

அகூஅ-ம் ஆண்டு நந்தன௵ கார்த்திகை௴ ருஉ புந்திவாரமும் அமரபக்ஷத்துத்திரிதிகையும் திருவாதிரைநக்ஷத்திரமும்பெற்றதினத்திலே திருநகரியிலிருக்கும் பெரியதிருவடி இரணியன்வதைப்பரணி எழுதிமுடிப்பித்தது. பெரியதிருவடிதிருமேனிகவிராயகுருவேநம:

அகூஅம்ஆண்டு நந்தன௵ புரட்டாசி௴ அஉ சோமவாரமும் அசுவதிநக்ஷத்திரமும் பூர்வபட்சத்துப்பஞ்சமியுமாக நாட்கொண்டது.

சு. நல்லசிவன்பிள்ளை.

# இந்துதேசசரித்திரகாலக்குறிப்புகள்.

## (Chronological Notes of Indian History.)

தொகுதி கசு-பகுதி ௬-ல் கருசு-ம் பக்கத்தொடர்ச்சி.

---

754. தந்திதுர்யன் (வைரமேகன்) ராஷ்ட்ரகூட அரசன்.

756. சிலப்பதிகாரம் இவ்வருஷத்துக்குப்பிறகுதான் இயற்றப்பட்டிருக்கவேண்டுமென்று மிஸ்டர் L. D. S. அபிப்பிராயப்படுகிறார். அதற்குக்காரணம் அந்நூலில் கண்டிருக்கும் அடியிற்கண்ட குறிப்பே.

ஆடித்திங்கள் பேரிருட்பக்கத்
தழல்சேர்...குட்டத்தட்டமிஞான்று
வெள்ளிவாரத்து.........

1. ஆடிமீ
2. கிருஷ்ண அஷ்டமி
3. கார்த்திகை நக்ஷத்ரம்
4. வெள்ளிக்கிழமை

இந்நான்கும் கி. பி. 1-முதல் 1912-க்குள் 756-ல்தான் அமைகின்றனவாம். தவிரவும் வாரம், 5-ம் நூற்றூண்டுக்கு முன் இந்தியாவில் வழக்கமில்லையாம்.

758-794. விஷ்ணுவர்த்தனன் 4. கிழக்குச்சாளுக்ய 10-ம் அரசன். ஷை 9-ம் அரசன் புதல்வன்.

760-770. கிருஷ்ணன் I. ராஷ்ட்ரகூடவம்ச 2-ம் அரசன். மேற்குச் சாளுக்ய வம்சப்பிரிவு.

760. வல்லபி. கூர்ஜரக்கடைசியான். தோல்வியடைந்தான். தலைநகர் நாசமாக்கப்பட்டது. மீவார் (உதயபுரி) ராஜவம்சத்தார் வல்லபிவம்சத்தவர் எனச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். வல்லபிக்குப்பிறகு கூர்ஜரம் ராஷ்ட்ரகூடர் வசமாயிற்று.



761. மஹேந்திரபாலன். அரசன்.
அவர் குரு—
ராஜசேகரர். இவர் இயற்றிய நூல்கள்.

1. வித்தஸாலபஞ்ஜிகை.
2. பாலபாரதம்.
3. பாலராமாயணம்.
4. கற்பூரமஞ்ஜரி.

} நாடகங்கள்.

770. (கலி. 3871.) யானைமலைச்சிலைலிபி. ஜடிலவர்மன் அல்லது பராந்தகபாண்டியன் காலம்.
மதுரகவி. அவர் மந்திரி.
யானைமலைக்கோயிலும் கட்டப்பட்டு அக்ரஹாரமும் தானம் செய்யப்பட்டது.

வம்சாவளி.

1. ஜயந்தவர்மன்.
2. மாரவர்மன் அரிகேசரி பராங்குசன்.
3. ஜடிலவர்மன் பராந்தகன் I. (770. கி. பி.)
4. ராஜசிம்மன். I.
5. வரகுணமஹாராஜன். (802. கி. பி.)
6. ஸ்ரீமார ஸ்ரீவல்லவ ஏகவீரன்.

வரகுணவர்மன் — 7. பராந்தகன் (வீரநாராயணன்)

ராஜசிம்மன் II

[Travancore Arch Series. I-2.]

775. ஸ்ரீகண்டர். ஸைவவிசிஷ்டாத்வைதி.

[ T. S. N. Sastri. ]

778. (சகம் - 700) கச்சியப்பசிவாசார்யார். கந்தபுராணம் இயற்றினார். இவர் காஞ்சி ஏகாம்பரர்கோவில் கைங்கர்யம். பிராம்மணன். [தமிழ் ப்ளூடார்க்.]

779-783. கோவிந்தன். II. ராஷ்ட்ரகூடவம்ச 3-ம் அரசன்.

779-813. ஜயாபீடன். காச்மீரமன்னன்.
இவர் ஸம்ஸ்தானவித்வான்.

உத்பட்டர். (பட்டோத்படர்.) அலங்காரசாஸ்த்ரம் இயற்றியவர். இதற்கு ப்ரதிஹாா இந்துராஜன் உரையெழுதியிருக்கிறார்.

— [ ராஜதரங்கிணி. ச. 494 ]

783. ஜைனஹரிவம்சம். இயற்றப்பட்டது.

788. அகளங்கன். ஜைனகுரு. காஞ்சியிலாண்ட ஹேமாவலிதலன் ஸதஸில் பௌத்தரை வாதத்தில்வென்றான். இதனால் பௌத்தர் தென்இந்தியாவினின்றும் விரட்டப்பட்டார்கள்.

788. சங்கராசாரியார் ஜனனம். 815 ல் மரணம்.

794-842. விஜயாதித்யன் II. (நரேந்திரமிருகராஜன். கிழக்குசாளுக்ய 11-ம் அரசன். ௸ 10 ம் அரசன் மகன்.)

794-814. கோவிந்தன் ௩. ராஷ்ட்ரகூட 5-ம் அரசன்.

795. (சகம் 717) உக்ரசேனசிங் லங்கைமீது படையெடுத்தான்.

800. பாண்டியராஜன் அகஸ்டஸ் என்ற ரோமசக்ரவர்த்தியின் நட்புக்கோரித் தூதுஅனுப்பினதாய் க்ரானக்ராபியா என்னும் நூலில் 185-வது ஒலிம்பியத் என்பதில் சொல்லப்பட்டிருக்கின்றது.

704. ப்ரசஸ்திச்சிலாலிபி. கங்காராஜில்லாவில் பைஜ்நாதத்திலிருப்பது. அதிற்கண்ட காலக்குறிப்புகள்.—
சகம் 726=3880. கலி.
=80 லௌகிகாப்தம்.

குறிப்பு:—லௌகிகாப்தம் குறிப்பிட்ட சிலாலிபிகளில் இதுதான் ஆதியாயுள்ளது.

— [ 1906. I. R. 201. ]

805. சங்கராசாரியார் ஜனனம். [ L. D. S. ]

813. அஜிதாபீடன். காச்மீரமன்னன்.
இவர் ஸமஸ்தானவித்வான்.—
சங்குகன். புவனாப்புதயம் எழுதியவர்.

— [ ராஜ. தர. ச. 703. ]



காவ்யப்ரகாசத்தில் இவரைப்பற்றிச்சொல்லியிருக்கிறது.

815-877. அமோகவர்ஷன். மேற்கு சாளுக்யரையாண்ட ராஷ்ட்ரகூட 6-ம் அரசன்.

826. ( பராபவ. சைத்ர. சுக்ல. ப்ரதமை. புதன். கார்த்திகை. ) புண்டரீகாக்ஷர் ஜனனம். ஸ்ரீரெங்கத்துக்கடுத்த திருவெள்ளறையில் சோழியர்குலத்திற் பிறந்தவர். நாதமுனிகளின் சிஷ்யர். குருபரம்பரையில் இவருக்குப்பின்வந்தவர். ராமமிச்ரர். வயது 105. [ தெ. கு. ப. ]

831. [ கலி. 3932. விரோதி. மாக. சுக். சதுர்த்தசி. திங்கள். ] ராமமிச்ரர் ஜனனம். புண்டரீகாக்ஷரின் சிஷ்யர். ஸ்ரீரெங்கத்துக்கடுத்த மணக்கால் இவர் பிறப்பிடம். 105ம்வயதில் ஸ்ரீரெங்கத்தில் மரணம். [தெ. கு. ப.]

840. பட்டநாராயணர். வேணீஸம்ஹார நாடகம் இயற்றியவர். 840-ம் வருஷத் தாம்ரசாஸனம்பெற்றவர்.

842-43. கலிவிஷ்ணுவர்த்தனன். கிழக்குச்சாளுக்ய 12 ம் அரசன். ௸ 11 ம் அரசன்மகன்.

843-887. குணகன். கிழக்குச்சாளுக்ய 13 ம் அரசன். ௸ 12 ம் அரசன் ஜேஷ்டபுத்ரன்.

844-49. அஜிதாபாதன் ஆட்சியில், பத்மநாபன் என்பவரால் காச்மீரத்தில் பாம்பூர்என்றநகரம் நிர்மிக்கப்பட்டது. ப்ரதீபம் என்ற (காவ்யப்ரகாச) உரையெழுதிய கய்யடர் பாம்பூர் நகரத்தில் வஸித்தவர்.

846-880. விஜயாலயசோழன்.

849-852. அனங்காபீடன். காச்மீரமன்னன்.

850. வரகுணபாண்டியன் } பல்லவர் ஸார்வபௌமத்தினின்
விஜயாலயசோழன் } றும்விலகி ஸ்வாதீனர் ஆனார்கள்.

இவர்காலத்தவர்:—

1. சுந்தரமூர்த்திநாயனார்.
2. சோமாசியார்.
3. விறன்மிண்டர்.

4. மானக்கஞ்சாரர்.
5. சடையனார்.
6. இசைஞானியார்.

—[கூ. செந். 321.]

852-855. உத்பலாபீடன். காச்மீரமன்னன்.

855-884. (?) அவந்திவர்மன், காச்மீரமன்னன்.

ஸுய்யன். ஷை மந்திரி. நீர்ப்பாசனத்துக்குவேண்டிய பலகால்கள்வெட்டி விவசாயத்தை விருத்திசெய்தான்.

அவந்திவர்மன் சமஸ்தானவித்வான்கள்:—

1. ஆனந்தவர்த்தனன். த்வன்யாலோகம், காவ்யாலோகம், (ஸஹ்ருதயாலோகம்) என்ற நூல்களையியற்றியவர்.

[ஸுபாஷிதாவளி; ராஜ. தர. ரு. 34.]

2. கல்லடர். ஸ்பந்தஸர்வஸ்வம் இயற்றியவர்.

—[ராஜ. தர. ரு. 51.]

3. ரத்னாகரர். அமிருதபாணன் புதல்வர். ஹரவிஜயம் இயற்றியவர்.

—[ராஜ. தர. ரு. 34.]

4. சிவஸ்வாமி.

855. அடக்கன். (ஸ்ரீவல்லபன்) அய(?)வம்சத்தரசன்.

| அயர். | | பாண்டியர். |
|---|---|---|
| 1. சடையன். | | |
| 2. கருநந்தன். | | மாறன்சடையன். |
| 3. அடக்கன். (ஸ்ரீவல்லபன்) | 855-கி. பி. | வரகுணபாண்டியன். [862-கி. பி.] |

[கழுகுமலை தாம்ரலிபி.]

[Tr. Arch. Series I. 5.]

862. வரகுணபாண்டியன். (மாறன்சடையன்மகன்) பட்டத்துக்கு வந்தான்.

[Tr. Arch. Series. T. S.]

ஸ்ரீபுரம்பியத்தில் அபராஜித (கங்கபல்லவ)னால் தோல்வியடைந்தான்.



864. பார்த்திவசேகரபுரம்கோயில். கோக்கருநந்தடக்கனால் கட்டப்பட்டது. இவன் வரகுணபாண்டியன்காலத்தவன்.

[Tr. Arch. Series. I.]

870. சத்யவாக்கியகோங்கணிவர்மபெருமானடி. மைசூர் கொங்குராஜன்.

திருத்தகைமுனிவர். இவன் காலத்தவர். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய ஜீவகசிந்தாமணி இயற்றினர். சிந்தாமணிமுனியால் சிந்தாமணி எனும் காவியம் எழுதப்பட்டதாய்ச்சிலைகளில் சொல்லப்பட்டிருப்பவர் இவர்தானென்று கோபிநாதராவ்அவர்களால் ஸம்ஸ்கிருத யசோதரகாவிய முகவுரையில் ஊஹிக்கப்பட்டிருக்கிறது.

குணபத்ராசாரியாரால் ஸம்ஸ்கிருத உத்தரபுராணத்திலும் வதீபசிம்மரால் ஸம்ஸ்கிருத கத்யசிந்தாமணியிலும் க்ஷத்ரசூடாமணியிலும் ஜீவந்தரகதை வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

ஐம்பெருங்காப்பியங்களாவன:—

1. சிலப்பதிகாரம் (இளங்கோவடிகள்.)
2. மணிமேகலை. (சீத்தலைச்சாத்தனார்.)
3. ஜீவகசிந்தாமணி. (திருத்தகைமுனிவர்.)
4. வளையாவதி.
5. குண்டலகேசி.

880-907. ஆதித்யசோழன். விஜயாலயன் மகன். அபராஜிதபல்லவனை ஜயித்தான். அதுமுதல் பல்லவராஜ்யம் க்ஷீணதசையை அடைந்தது.

884-913. கிருஷ்ணன். உ. (அகாலவர்ஷன்.) ராஷ்ட்ரகூட 7ம்அரசன்.

885. (சகம் 807.) கம்பன் ராமாயணம் இயற்றினர். எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின்மேல் [1118 - 1162 ஐயும் பார்க்க.]

887-917. சாளுக்யபீமன். I. (துரோகார்ஜுனன்.) கிழக்கு சாளுக்ய 14 ம் அரசன். ஷை 13 ம் அரசன் தம்பிமகன்.

888. விக்ரமாதித்யன். கிழக்குமைசூரிலாண்ட பாணவம்சத்து அரசன்.

894. ஆதித்யவர்மசோழன். சேர (கொங்கு) தேசத்தை ஜயித்தான். [சிலை லிபி.]

898. [சகம்-820.] குணபத்ராசாரியார்.

இவர் இயற்றிய காவியங்கள்.—

1. ஆத்மாநுசாஸனம்.
2. உத்தரபுராணம். (சகம் 820 ல் எழுதியதாய் அதன் முடிவுரையில் சொல்லப்பட்டிருக்கிறது.)

899. [கலி. 4000.] குலோத்துங்கசோழன் தானசாஸனம் (?)

907-949. பராந்தக I. சோழன். ஆதித்யன்புதல்வன். பல்லவர் க்ஷீணதசையடைந்தபிறகு இவர்தான் சோழராஜ்யத்தின் பெருமையை முதல்முதல் நிலைநாட்டினர். உறையூர் தலைநகர். பாண்டியனை வென்று விரட்டினான்.

909. விஜயாதித்யன். கிழக்குமைசூரில் ஆண்ட பாணவம்ச அரசன்.

915-17. இந்திரன் III. (கன்னடதேவன்.) மேற்குசாளுக்யராஷ்ட்ரகூட அரசன். இவன் சோழராஜனைத்தோற்கடித்து கஞ்சியையும் தஞ்சையையும் பிடித்துக்கொண்டான். காவேரி நதிக்கரைவரை இவன் ராஜ்யம் பரவியிருந்தது.

916. (கலி. 4017. தாது. ஆஷாட பௌர்ணமி. புதன்.)
யமுனாசாரியார். (ஆளவந்தார்.) ஜனனம். ஈசுவரமுனிகளின் புத்திரர். நாதமுனிகளின் பௌத்திரர். புண்டரீகாக்ஷரின் சிஷ்யரான ராமமிச்ரரின் சிஷ்யர்.

அக்காழ்வாரை சோழன்ஸபையில் யமுனாசாரியார் வாதத்தில் வென்று ஆளவந்தார் என்ற பெயரும் சோழமஹிஷியால் சூட்டப்பெற்றார்.

சோழன்மந்திரியாகச்சிலகாலம் இருந்தார். பிறகு தன்குரு, ராமமிச்ரரின் உபதேசத்தால் ஸந்யாஸியானார். ஸ்ரீரெங்கம் வந்து ஷை கோவில் கைங்கர்யத்தை ஏற்றுக்கொண்டார்.

यत्पदाम्भोरुहध्यानविध्वस्ताशेषकल्मषः ।
वस्तुतामुपयातोऽहं यामुनेयं नमामि तम् ॥



இவர் இயற்றிய நூல்கள்:—

1. ஸித்தித்திரயம் (ஸம்ஸ்) குமாரிலபட்டர்கொள்கையைக்கண்டித்திருக்கிறார். 88 சுலோகமடங்கியது.
2. ஆகமப்பிராமாண்யம். பாகவதம் அல்லது பாஞ்சராத்திரமதத்தையும், ஏகாயனசாகையினின்றும் அதுஉண்டான சம்பந்தத்தையும்பற்றிக்கூறுவது.
3. கீதார்த்த ஸங்க்ரஹம்.
4. மஹாபுருஷநிர்ணயம்.
5. ஸ்தோத்ரரத்னம். (75 ஸ்தோத்ரமடங்கியது.)
6. ஞானவாசிஷ்டம். தமிழில் 2055 செய்யுளாக மொழிபெயர்த்திருக்கிறார்.

அநேக திவ்யஸ்தலங்களைச்சேவித்தவர். 1040 ல் மரணம். (கவனிக்கத்தக்கது.)

ஸ்ரீசைலபூர்ணர். இவருடைய சிஷ்யர் ராமாநுஜாசாரியாரின் மாதாமஹர்.

918. விஜயாதித்யன் (ச) கிழக்கு சாளுக்ய 15 ம் அரசன். ஷை 14 ம் அரசன் ஜேஷ்டபுத்ரன்.

918-925. அம்ம I (விஷ்ணுவர்த்தனன் கூ.) கிழக்கு சாளுக்ய 16ம் அரசன். ஷை 15 ம் அரசன் புதல்வன்.

918-933. கோவிந்தன் (ச) ராஷ்ட்ரகூட 10 ம் அரசன்.

920. நாதமுனிகள். (கங்கைகொண்டசோழபுரத்தில்) மரணம்.

இவர் ஊர்—வீரநாராயணபுரம். (மன்னார்குடி.)
இவர் மனைவி—அரவிந்தப்பாவை.
இவர் புத்திரர்—ஈசுரமுனி.
இவர் பௌத்திரர்—யமுனாசாரியார்[916ஐ பார்க்க.]
இவர் குரு—நம்மாழ்வார். (சடகோபர்.)

இவர் சிஷ்யர்.—

1. புண்டரீகாக்ஷர்.
2. குருகைக்காவலப்பன்.
3. திருக்கண்ணமங்கையாண்டான்.

இவர் இயற்றிய நூல்கள்.—

1. நியாயதத்வம். இதனின்றும் குறிப்புகள் தேசிகரால் நியாயசித்தாந்தத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

2. யோகரகஸ்யம்.

3. நம்மாழ்வார், விஷ்ணுசித்தர், மதுரகவி— இவர்கள் நூல்களுக்குச்சாற்றுக்கவி பாடியிருக்கிறார்.

4. சடகோபர்திருவாய்மொழிகளைச் சேகரித்துக் கானத்துக்கிணைத்துக் கோவில் ஆராதனைகளில் தமிழ்வேதமாய் உபயோகித்துவரவேண்டிய ஏற்பாடுகள் செய்தார்.

ஸ்ரீரங்கத்தில் நாதமுனிகள் அக்ராஸனம்வகித்த சபையில் கம்பன் தன் ராமாயணத்தை அரங்கேற்றினார்.

921. வீரநாராயண ( பராந்தக I. ) சோழன் பாண அரசரைத் தோற்கடித்தான்.

925. தாளப்பன். கிழக்கு சாளுக்ய 18 ம் அரசன்.

925-26. விக்ரமாதித்யன். கிழக்கு சாளுக்ய 19ம் அரசன். ஷை 14ம் அரசனுடைய கனிஷ்டபுத்திரன்.

926-933. யுத்தமல்லன். கிழக்குசாளுக்ய 21 ம் அரசன். ஷை 18 ம் அரசரின் புதல்வன்.

931. ஹரிசேனர். ‘பிருஹத்கதாகோசம்’ இயற்றினார்.

933-945. சாளுக்யபீமன் II. (விஷ்ணுவர்த்தனன் எ.) கிழக்குசாளுக்கிய 22 ம் அரசன். ஷை 15 ம் அரசரின் கனிஷ்டபுத்ரன்.

937-939. அமோகவர்ஷன் (ங.) ராஷ்ட்ரகூட 11 ம் அரசன்.

939-968. கிருஷ்ணன் ௩. (அகாலவர்ஷன்.) ராஷ்ட்ரகூடவம்ச 12 ம் அரசன்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்
பி. ஏ., பி. எல்.

21 MAY 1918 MADRAS

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-௧௬.] பிங்கள ஹு பங்குனிமீ [பகுதி-ரு.
Vol. XVI. March,—April. 1918. No. 5.

உ

## ஜைன நூல்களின் கவிமேன்மையும் காலநிர்ணயமும்.

(தொகுதி ௧௬ - பகுதி ௪-ல் ௧௮௪-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

(கம்பர்.) இனிக் கம்பர் குலோத்துங்கசோழன்காலத்தில் ஒட்டக்கூத்தர், புகழேந்தியிவர்களுடன் ஒளிவீசினாரென்ற கர்ணபரம்பரையாலும் திருவள்ளுவரைப்போல் தன்கவியை அரங்கேற்ற நேரே சங்கத்துக்குச்செல்லாமல் ஊரூராய்ச்சென்றனரென்று வழங்குவதாலும் அவர்சங்ககாலத்தவரல்லரென்று விடுத்தனம்.

(சித்தாந்தம்.) ஆகவே கடைச்சங்கமானது கரிகாற்சோழன், பெருநற்கிள்ளி, நெடுநல்வாடை மதுரைக்காஞ்சித்தலைவனாகிய நெடுஞ்செழியன், வஞ்சிநகர்ச்செங்குட்டுவன், இலங்கைக்கயவாகு முதலியவர்கள் உயிர்த்திருந்தகாலத்தினதேயன்றி வேறில்லை. இது கி. பி. இரண்டாம்நூற்றாண்டின்பக்கமென்பது சித்தம். இது விஸ்தாரமாய்ப் “புராதனஇந்தியா”வில் 14-ஆம் அதிகாரத்தில் பல சாஸனசரித்திர ஆராய்ச்சியின்பலனாய்ச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

(ஜைனநூல்களின் காலவரையறை.) கி.பி. முதல் நூற்றாண்டிற்கு முன்னும்பின்னும் சங்கம்நிலைபெற்றுநடந்ததென்றும் சங்கத்தின் முற்பகுதியில் ‘எட்டுத்தொகை’யும் பத்துப்பாட்டும் பதினெண்கீழ்க்கணக்கும் முதலிய இயற்றப்பட்டனவென்றும், கி. பி. 100-600 ஆகிய ஜைனர் புத்தர்மலிந்த பிற்பகுதியில் பெருங்காப்பியமைந்தும் சிறுகாப்பிய

*

மைந்தும், மேருமந்தரபுராணமும், திவாகரமும், பிங்கலந்தையும் ஆகியவைகள் இயற்றப்பட்டனவென்றும், பின்னர்ச் சைவவைணவ மதக்கிளர்ச்சியுண்டானகாலமாகிய 1100—1400 நாற்கவிராஜநம்பி அகப்பொருள்விளக்கமும் குணசாகரரியற்றிய யாப்பருங்கலமும் காரிகையாக்கிக்கொடுத்த தபோதனராம் அமிர்தசாகரரியற்றிய யாப்பருங்கலக்காரிகையும் பவணந்தியின் நன்னூலும் குணவீரபண்டிதரின் நேமிநாதமும் வெளிவந்தன என்றும், பிற்காலங்களில் ஓரிரு நூல்கள் காணப்படுகின்றனவேயன்றி முன்போல மிகுதியாகக்கிடைக்காததற்கறிகுறியாகப் பதினைந்தாம்நூற்றாண்டில் மண்டலப்புருடர்செய்த சூடாமணிநிகண்டும் பதினேழாம்நூற்றாண்டில் உபேந்திராசிரியர் இயற்றிய ஜினேந்திரமாலையுமுளவென்றும் ஜைன நூல்களை ஒருவாறு காலவரையறைசெய்யலாகும். யாதுகாரணங்களினாலோ முன்புஇலக்கியக்கீர்த்திபெற்றஜைனர் பிற்காலத்தில் ஒருசிறிதும் தங்கள் வன்மையைக்காட்டாதொழிந்தனர். "சர்வமதத்தினரும் நமக்குச்சமம்" என்று பேணி வளர்த்த மஹாஉத்தமியாகிய விக்டோரியாமஹாராணியார்காலத்திலுங்கூட முன்வராதொழிந்தனர். ஆனாலிக்காலத்தில் சரஸ்வதி அவர்களைத் துறக்கவே இலட்சுமிவந்து அவர்களை அடைந்துகொண்டனள். அவர்கள் பிரபலசெல்வவான்களாக வடவிந்தியாவில் திகழ்கிறார்கள்.

(வசனநூல்கள்.) இனி ஜைனநூல்கள் கத்தியத்தில் உள்ளன சிலவே. ஸ்ரீபுராணம் கத்தியசிந்தாமணியென்பவைகளே. ஜைனர்கள் "மணிப்ரவாளம் என்றதோர் புதியபாஷைவகுத்துவிட்டனர். அஃதாவது தென்மொழியும் வடமொழியும் சரிக்குச்சரிகலந்தபாஷையாம். மணியும் பவளமும் கலந்துகோத்ததோர்மாலை காட்சிக்கின்பம்பயத்தல்போலத் தமிழும்ஸம்ஸ்கிருதமும்கலந்தபாஷை கேள்விக்கின்பம்பயக்கும் என்றபோலிஎண்ணமே இத்தகைய ஆபாசபாஷையொன்றை வகுக்குமாறு தூண்டிற்று. ஸ்ரீபுராணம் நீலகேசி சமயதிவாகரம் என்னும் ஜைனநூல்கள்முழுவதும் மணிப்ரவாளமென்னும் இவ்வாபாசநடையினியன்றதாமாறுகாண்க." ஆயினும் இவர்களே தமிழில் வசனநடைநூல்கள் முன்காலத்தில் எழுதிப்பயின்றுவந்தார்கள். மற்றவர்கள் இந்தப்பரிபாலனம்செய்தாரில்லையாம்.

(செய்யுள்.) மற்றநூல்களெல்லாம் செய்யுள்நடையிலேயுள்ளன. செய்யுளாவது:—



"பல்வகைத்தாதுவின்உயிர்க்குடல்போற்பல
சொல்லாற்பொருட்கிடனாகஉணர்வினின்
வல்லோரணிபெறச்செய்வனசெய்யுள்".

என்று விளக்கினர் பவணந்திமுனிவர். (இதிலுள்ள சீரியஉவமம் நன்குணரற்பாலது.) எழுத்து, சொல், பொருள், அணியென்னும் நான்கினாலுமாவதுசெய்யுள். பொருளாவது அறம் பொருளாகிய புறப்பொருளும் இன்பமாகிய அகப்பொருளுமாம். அணியாவது மடக்குமுதலியசொல்லணிகளும் உவமமுதலிய பொருளணிகளுமாம். இனி உயிரற்றதேகம்போன்றது பொருட்சுவையற்றகவிதை. உயிருள்ளதேகமாயினும் பணியிலாவனிதைபோன்றது அணியிலாக்கவிதை. ஆதலின் அணி, பொருள் செய்யுட்கு அத்தியாவசியமாயின. இவைகளைஉணர்ந்தே கம்பர் தமது இராமாயணத்தில்,

"புவியினுக்கணியாய்ஆன்றபொருள்தந்துபுலத்திற்றாகி
அவியகத்துறைகள்தாங்கிஐந்திணைநெறியளாவிச்
சவியுறத்தெளிந்துதண்ணென்றொழுக்கமுந்தழுவிச்சான்றோர்
கவியெனக்கிடந்தகோதாவரியினைவீரர்கண்டார்".

என்று கவிலக்ஷணத்தைஓராற்றாற்கூறினர். இன்னோரன்னகவிலக்ஷணங்களையுடைய சிலர் ஜைனர்களுள்ளுமிருந்தனர். இவர்களில் மிகஉயரியவராய் எண்ணப்படுபவர் பெருங்காப்பியமைந்தனுளொன்றாகிய ஜீவகசிந்தாமணி எழுதிய திருத்தக்கதேவராவர்.

இனி ஜைனநூல்களை ஒன்றன்பின் ஒன்றாக மேற்சொன்னவைகளுக்குதாரணமாக எடுத்துச்சிலகூறுவாம். பதினெண்கீழ்க்கணக்கில் மூன்றிலொருபாகம் ஜைனர்களெழுதினவே. அவைகளுள் நாலடியார் முதன்மையானது.

(நாலடியார்.) வெண்பாநாலடியாலாகியஓர்நீதிநூல். சிறப்புப்பற்றி ஆர் விகுதிகூட்டப்பட்டது. இதன்உயர்வு சாதாரணமாய் வழங்கும் "நாலுமிரண்டும்சொல்லுக்குறுதி, ஆலும்வேலும்பல்லுக்குறுதி" என்ற பழமொழியால் தெரியவரும். இது ஒருவரால் பாடப்பட்டதன்று. கொடியபஞ்சத்தால் எண்ணாயிரம் சமணர்கள் தம் நாடுவிட்டு, பாண்டியநாட்டில்வசித்துப் புலவர்களாய்ப் பாண்டியராசனதுசபையில்

வீற்றிருந்தனர். பஞ்சம் நீங்கியசெய்திதெரிந்தபின் தம் தேசம்போக விரும்பி, தமக்கு விடையளியாதபாண்டியனுக்குத்தெரியாவண்ணம் ஒவ்வொருவரும் ஒவ்வொருபாட்டெழுதித் தம்மாசனத்தில் வைத்து இரவிலே பாண்டியநாட்டைவிட்டுச்சென்றனர். கருத்திற் பொருத்தமில்லாமல் மாறுபட்டிருந்த அப்பாடல்களை வையையாற்றிலெறிய அவைகளுள் 400 - பாக்கள் ஆற்றுநீர்ப்போக்கையனுசரியாமலெதிரேறிச்சென்றன. இதைக்கண்டு வியந்தவரசன் இவைகளை நாலடி என்று ஓர் நூலாகக்கோத்தான். தற்காலமிருப்பதுபோன்று அவைகளை அதிகாரப்படுத்தி முறைசெய்தது பிற்காலத்துவந்த பதுமனாரென்பவர். இது பலருரைத்தநூலாதலின் இதனுட்சொல்லியபொருள்களே திரும்பத்திரும்பவந்திருக்கின்றன. சில விரோதமாகவும் கூறப்பட்டிருக்கின்றன. ஆயினும் "கூறியதுகூறல்" "மாறுபடக்கூற"லென்ற குற்றங்களின்கட்படா. இதன்கண் 'உவமை' ஏதுத்தற்குறிப்பேற்றவணி முதலியன விரவியிருக்கின்றன. "தொல்சிறப்பின், நாவின்கிழத்தி உறைதலாற்சேராளே, பூவின்கிழத்திபுலந்து" என்றதில் சாதாரணலோகானுபவமிருத்தல் வெகுசாதுரியம். இதன் அருமைபெருமைக்கு நச்சினார்க்கினியர் பரிமேலழகர் அடியார்க்குநல்லார்போன்ற சிறந்த உரையாசிரியர்கள் எடுத்தாண்டமையே நற்சான்றாகும். இது முந்நூல்கண்டு முறைப்படத்தொகுக்கப்பட்டதல்ல. ஆயினும் பலமொழிபெயர்ப்பாய் உள்ளன.

வெள்ளாண்மரபுக்குவேதமெனச்சான்றோ
ரெல்லாருங்கூடியெடுத்துரைத்த—சொல்வாய்ந்த
நாலடிநானூறுநன்கினிதாவென்மனத்தே
சீலமுடனிற்கதெளிந்து."

என்ற பாட்டு இதன்பெருமையை வலியுறுத்தும்.

இதன்காலம் கி.பி. இரண்டாம் மூன்றும்நூற்றாண்டாகியகடைச்சங்ககாலமே. ஆயினும் வேறுசிலவாராய்ச்சியால் ஸ்ரீமான், டி. எஸ். குப்புசாமிசாஸ்திரிகள் இதனை ஏழாவது எட்டாவது நூற்றாண்டின்காலத்துவைப்பர். நாலடியாரில் 200, 276 ம் பாக்களில் பெருமுத்தரையரென்றொருவர் சிறப்பித்துக்கூறப்படுகிறார். சாசனவாராய்ச்சியில் முத்தரையர் என்ற பாண்டியரிருந்தனரென்றும் சுவரன்மாறன் பெரும்பிடுகுமுத்தரையனின் சாசனவெழுத்துக்களைக்கொண்டு அவனதுகாலம் எட்டாம் நூற்றாண்டாகுமென்றும் வெளியாகிறது. மேலும் இன்னும் சில காரணங்களைக்கொண்டும் இதுவே வலியுறுத்தலாகுமென்று "செந்தமிழ்" பத்தாந்தொகுதியில் விரிவாய் ஸ்ரீமான். சாஸ்திரிகள் காட்டியிருக்கின்றனர்.



(திருக்குறள்.) "மலர்மிசையேகினான்" என்றதனாலும் அவிசொரிந்தாயிரம்வேட்டலினொன்ற னுயிர்செகுத்துண்ணாமைநன்று என்றதனாலும், ஆசிரியர் "தேவர்" என்று அழைக்கப்படுவதனாலும், தேவர் என்றபட்டம் ஜைனர்களே வைத்துள்ளாரதனாலும் இந்நூலையியற்றிய வள்ளுவரை ஜைனர்கள் தம்மவர் என்பர். சைவர், வைணவர், கிறிஸ்தவர்முதலியவர் தம்மவர் என்று கூறுநிற்பர். ஆதலினிதை ஜைன நூல் என்றுசொல்லவியலாது. இதன்பெருமை மேல்நாட்டார் தத்தம் பாஷைகளில் மொழிபெயர்த்திருப்பதினின்றும் விளங்கும். எத்தேசத்தவரும் எக்காலத்தவரும் எச்சமயத்தவரும் வேணவாஅடங்க அள்ளிக்குடிக்கும் ஊற்றுக்குழியாயிருப்பது இந்நூலே. இதன்காலம் கடைச்சங்கமுற்காலமென்பது பலவாராய்ச்சியான்வந்த பலர்துணிபு.

(பழமொழி.) ஜைனஅரசராயும் கவியாயும் விளங்கிய முன்றுறையரையனார் என்பவராலியற்றப்பெற்றது. இவர் அக்காலத்து வழங்கிய பல பழமொழிகளைத்தொகுத்து ஒவ்வோர்வெண்பாவில்வைத்து 400 வெண்பாக்களாகப்பாடினாரென்ப. வெண்பா ஈற்றடி பழமொழியைக்காட்டும்; முன்னடிகள் அதைவிளக்கும். "நாய்காணிற்கற்காணாவாறு" "நிறைகுடம்நீர்தளும்பலில்" "ஆயிரங்காக்கைக்கோர்கல்" "நுணலுந்தன்வாயாற்கெடு"மென்பன அக்காலத்தவரின் அறிவுமுதிர்ச்சியைவிளக்கும். இவையிற்றிற்சில சிந்தாமணியில் வந்திருக்கின்றன. "வண்ணப்பூந்தவிசுதன்னைஞமலிமேலிட்டதொக்கும்" "குன்றத்துச்சிச்சுடர்ப்பழிவிளக்கிட்டன்றே" "அம்மிமிதந்து ஆழ்ந்து சுரைவீழ்ந்தது" என்பன இதற்குத்திருட்டாந்தங்களாம். இதுவும் ஒரு சிறந்த நீதிநூலாகும். இதன்காலம் கடைச்சங்ககாலமென்பாருளர். ஏழாம் எட்டாம்நூற்றாண்டினதாகவுங்கூறுவர்.

(அறநெறிச்சாரம்.) தர்மவழிகளிற்சாரமாய்ச்சிறந்தவற்றைக்கூறும் நூல். இது 226 வெண்பாக்களை உடையது. ஜைனமதக்கொள்கைகளைத்தழுவி நீதிகளைப்போதிப்பது. "தாமரைப்பூவின்மேற்சென்

ரூன்புகழடியைநாவிற்றுதித்து" "சிவன்தானும்நின்றுகால்சீக்கும்நிழ றிகழும்பிண்டிக்கீழ்நின்றசீர்முக்குடையாள்வேந்து" என்ற வாக்கியங் களால் இந்நூலாசிரியர் ஜைனமதத்தினரென்பதுதேற்றம். இவர்பெயர் திருமூலைப்பாடியாரென்பர். பதினெண்கீழ்க்கணக்கு நீதிநூல்கள்போல இந்நூல் பேராசிரியர் நச்சினார்க்கினியர்முதலிய பழைய உரையாசிரி யர்களால் மேற்கோள்களாக எடுத்தாளப்படவில்லை. "நச்சினார்க்கினி யர்காலம் 14ம்நூற்றாண்டின்காலத்துக்குப்பிற்பட்டதென்று 'தமிழகம்' முதல்வால்யூமில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. 500 - வருடங் களுக்குமுன்னதாயிதுயிருக்கலாமென்று தோன்றுகிறது. ஆயினும் சமணரெண்ணாயிரவர் பாலேடுகளை வையையாற்றிற்போட்டகாலத்தி லெதிர்த்துச்சென்ற பாக்களே நாலடியாயும், பழமொழியாயும், அற நெறிச்சாரமாயும், கோக்கப்பட்டனவென்பது ஒருசாரார் துணிபு. யூகித்துப்பார்க்கில் வெவ்வேறுகாலங்களில் பற்பலரால் பாடப்பட்ட செய்யுட்கள் பின்பொருவரால் வகைப்படுத்தப்பட்டுத் தொகுத்தநூல் களாகுமிவையென்பது சாலப்பொருந்தும்.

( ஏலாதி. ) ஏலம், சூடம், சந்தனம், எரிகாசு, தேன் இவை யளாய்வந்ததொருநறியகுழம்பைப்போன்றது. இந்நூல் கடவுள்வணக்க முட்பட 81 வெண்பாக்களையுடையது. அதிமேதையாய்விளங்கின கணிமேதாவியாரருளிச்செய்தது. அவர் ஜைனரென்பதும் ஜைனக் கொள்கைகளையும் ஆசாரங்களையும் அருவருக்காது இடித்திடித்துக் கூறுவாரென்பதும் துறவறத்திலேயல்லது வேறெதிலுமோக்ஷமில்லை யென்பதே வெகுவாய் இதில் வருவதென்பதும் இந்நூலை ஒருமுறை படித்தார்க்கும் தெற்றெனவிளங்கும்.

விளையாமையுண்ணாமையாடாமையாற்ற
உளையாமையுட்குடைத்தாவென்று—களையாமை
நூற்பட்டார்பூங்கோதாய்நோக்கினிவ்வையாறும்
பாற்பட்டார்கொண்டொழுகும்பண்பு".

"பிணிபிறப்புமூப்பொடுசாக்காடுதுன்பம்
தணிவினிரப்பிவைதாழா—அணியின்
அரங்கின்மேலாடுநர்போலாகாமனன்றும்
நிரம்புமேல்வீட்டுநெறி" என்றிப்படிச்சொல்லியவர்,



"துறந்தார்கட்டுன்னித்துறவார்க்கிடுதல்
இறந்தார்க்கினியவிசைத்தல்—இறந்தார்
மறுதலைச்சுற்றமதித்தோம்புவானேல்
இறுதலில்வாழ்வேயினிது".

என்று இல்லறத்தைப்புகழ்ந்தது மெச்சற்பாலது. இந்நூலாசிரியர் தமிழ்ச்சங்கமாக்காயனார் மாணவரென்பர். இவர் கடைச்சங்ககாலத் தவரென்பது நனிபொருந்தும். இனி, "திணைமாலைநூற்றைம்பது" இவ ரால் எழுதப்பட்டதென்பர்.

( சிந்தாமணி. ) பெருங்காப்பியமைந்தனுளொன்று. திருத்தக்க தேவரென்னும் ஜைனமுனிவராற்செய்யப்பட்டது. 3145 பாக்களா லாகிய பதின்மூன்றிலம்பகங்களையுடையது. இது ஜீவகன்கதையைக் கூறுதலாதலின், இதை மற்றச்சிந்தாமணிகளினின்றும் வேறுபடுத்து மாறு "ஜீவகசிந்தாமணி"யென்றுஞ்சொல்வார்கள். இது நூற்பயனா கிய நாற்பொருளையும் நன்குவிளங்கக்கூறுவதால் இதை முடிபொருட் டொடர்நிலைச்செய்யுளென்பர். இந்நூல் பாலசன்னியாசியாகிய திருத் தக்கதேவரால் "ஜைனர்களுக்கும் இன்பச்சுவைபொருந்தப்பாடமுடி யும்" என்று காட்டற்பொருட்டு, தம்மாசிரியனருளால் எட்டுநாளில் நிறைவேற்றியதாம். இதை அவ்வாசிரியரின் கட்டளைப்படி சங்கத் தின்முன்னரங்கேற்றினர். அவர்கள் இதில் சொல்வளம், சந்தவின்பம் செய்யுணடைமுதிர்ச்சி, காமச்சுவைமுதலியனவும், பல அலங்காரங் களும், எவ்வெச்சாதியாருக்கும் காலம் இடம் முதலியவற்றிற்குத் தகுந்தவருணனைமுதலியனவுமிருத்தலைக்கண்டு வியப்புற்று "இங்ஙனம் பாடுதலரிதரிதென்று" சொல்லினராம். ஆங்கிலபாஷையில் தம்வாணாள் முழுவதும் பிர்ம்மசாரியராயிருந்த கோல்ட் ஸ்மித்கவிஞர் இல்லற வின்பச்சுவைகளையினிதினெடுத்தெழுதிக் கத்தியத்தில் "வேக்பீல்ட் புரோகிதர்" என்று ஒரு நூல்வெளியிட்டது அந்நாட்டினருக்கு இன் றளவும் வியப்பைக்கொடுப்பதுபோல நம்மவருக்கும் முற்றத்துறந்த முனிவரால் பலவகைச்சுவைகளுமமைந்து புலவர்சிந்தித்தவற்றையெல் லாம்தரும் சிந்தாமணி என்றும் வியப்பையேகொடுக்கும் இவருடைய கவிவண்மை எத்துணைத்தென்பது முன்னொருக்கால் அகளங்கமகாரா சன் இந்நூலைப்படித்தலினாலே தன் சமயம் மறந்து இதில் மூழ்கியிருந் தான் என்பதிலிருந்து தெரியவரும். கவித்துறவி தாம் சொல்லழகு பொருளழகு நவரசங்கள்முதலியனவமைத்துப்பாடும்பொழுதும் தமது தன்மையைமறவாது தமது சமயக்கொள்கைகளைப்பாயாரும் கற்றுண

ரும்வண்ணம் இனிய சிறுமாத்திரைகளாய்க்கொடுப்பரென்பது வெளியாகிறது. இந்நூற்கதாநாயகன் தான் எண்மரைமணந்தும் தனது நண்பன் பதுமுகனுக்குக்கோவிந்தையை மணஞ்செய்வித்தும் இன்னும் தான் நாமகள், பூமகள், மண்மகள், முக்திமகள் முதலியவரை மருவியுமிருத்தலின் இதை "மணநூ"லென்றுங்கூறுவர்.

(பாக்களின் தொகை.) இந்நூல் 3145 செய்யுட்கள்கொண்டன என்றேம். 1887 ம் வருடத்தில் வெளிவந்தமுதற்பதிப்பில் "திருத்தகுதேவரியற்றியசெய்யுள் 2700 என்று "முந்நீர்வலம்புரி" என்னும் செய்யுளுரையில் நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலால் மற்றவைகள் பிறராற்செய்யப்பட்டனவென்று தோன்றுகின்றன" என்று எழுதிய பண்டைத்தமிழ்நூல்களைத் திரும்பத்திரும்ப ஆராய்ச்சிசெய்வதே தம் வாணாள்முழுதும் பொழுதுபோக்காகக்கொண்ட எம்மாசிரியர்பெருமான் தாம் இருபதுவருடஞ்சென்று பதிப்பித்த இரண்டாம் பதிப்பில் "மற்றை 445 செய்யுட்களும் கந்தியாரால் இடையிடையே பாடிச்சேர்க்கப்பட்டனவென்று சிலர் கூறுகின்றனர்; அச்செய்யுட்கள் இன்னவையென்று புலப்படவில்லை" என்று எழுதியுள்ளார். சங்கமருவிய தமிழ்நூல்களையும் மற்றப்பின்வந்த இலக்கியங்களையும் அல்லும் பகலும் ஓதியுணரும் புலவர்பெருமான் இதை உய்த்துணரவல்லரல்லராயின், மற்றவர் என்செய்தல்கூடும்? பின்னர்ச்சொருகிய பாக்கள் முதற்பாக்களுடன் ஒப்பமுடிந்ததன்மையாயிருந்தாலன்றி இவையிற்றைத்தெரிந்துதெளிதல் அசாத்தியமாகாது. இதைப்பதினைந்தாம்நூற்றாண்டில் எண்பது நூல்களைத் தமதுஉரைகளில் மேற்கோள்களாகக் காட்டி உரைவகுத்த உச்சிமேற்புலவர்கொள் மதுரையாசிரியர் நச்சினார்க்கினியர் "தேவர்பாக்களும் சொருகுபாக்களும் உள"எனக்குறிப்பிட்டவர் அவைகளைச்சுட்டிக்காட்டாததென்னோ?

(பண்டைய வழக்கங்கள்.) இந்நாலில் பண்டைக்காலப்பழக்க வழக்கங்கள் பல பொதிந்துள. வீரர்கள் முழந்தாளளவும் உடுக்கும் உடை கோவிந்தையாரிலம்பகம் 60 ம் செய்யுளின் "வட்டுடைப்பொலிந்ததானைவள்ளலை" என்ற தொடரினாலும், காந்தருவதத்தையாரிலம்பகத்து 275 - ம் செய்யுளின் "வட்டுடைமருங்கில்சேர்த்திவாளொருபுடையும்வீக்கி"என்னும் தொடரினாலும்தெரியவருகிறது. அவ்வுடை இற்றைஞான்றும் சிப்பாய்களும் போலீஸ்ஜவான்களும்தரித்தல் நாம்



கண்கூடாப்பார்க்கின்றேம். (2)மகளிர்வெய்யிலில் உலர்த்தியவைகளைக் கோழிமுதலியவைகள் வந்துதீண்டாவண்ணம் பார்த்திருப்பதும் நெடுவீதியில் சிறார்கள் சிறுசக்கரமுள்ளவண்டிகளை இழுத்துவிளையாடுவதும் இன்றும் சகஜம். நகரின் வளமையைக்குறிக்கவந்த தேவனார்,

"பொற்சிறுதேர்மிசைப்பைம்பொற்போதக
நற்சிறாரூர்தலினங்கைமார்விரீஇ
யுற்றவர்கோழிமேலெறிந்தவொண்குழை
மற்றத்தேருருள்கொடாவளமைசான்றவே".

என்று இவ்விஷயத்தை வெகுசாதுரியமாய் விளங்கவைத்திருக்கின்றனர். இம்மாதிரி இவைகளை ஈண்டு எடுத்துரைத்தல் விரியுமென்றஞ்சி விடுத்தனம்.

(இயற்கைவனப்பு.) இனி இவர் இயற்கையிற்கண்டுகளித்தவிஷயத்தையும் உலகானுபவத்திற்கண்டவிஷயத்தையும் உவமைமுகமாகக் கூறலுமுண்டு. கேமசரியாரிலம்பகத்தில் நான்காம்செய்யுள் பாராட்டற்பாலது.

"பருகுவாரிற்புல்லிப்பயங்கண்மாறத்துறக்கு
முருகுவிம்முகுழலாள்போலமொய்கொடும்பி
யுருவப்பூங்கொம்பொசியப்புல்லித்தீந்தேன்பருகி
யருகுவாய்விட்டார்ப்பவண்ணன்மெல்லச்சென்றான்".

(கோட்டைவருணனை.) இவரது நாமகளிலம்பகத்து நகரவருணனை நாகரிகம்நன்குபெற்ற மேனாட்டார்தலைநகர்க்காகினும் ஓராற்றானுமிழுக்காகாது. கன்மதில்களும், அவற்றின் உட்புடைபுறப்புடைகளும், யானை குதிரைநிற்கும் கூடங்களும், கேடகத்தோடுவாட்டொழில்செய்யுமிடங்களும், யானைகுதிரையேறுமிடங்களும், விற்றொழில் செய்யுமிடமும், தந்தத்தையறுத்துச் செம்மைப்படுத்திப் பூண்பிடித்து வைரக்கல்நாட்டுமிடங்களும்,கவசம்செய்பட்டடைகளும் தற்காலத்து யுத்தகளங்களுக்கு வேண்டியவஸ்துக்களைத்தயாரிக்கும் சாலைகளை ஒருவாறு ஒவ்வாநிற்கும்.

அக்காலத்தில் திரவியந்தேடத்திரைகடலினுமோடினார்கள். காந்தருவதத்தையாரிலம்பகத்தின் பன்னிரண்டாம் செய்யுள்முதலாகிய

செய்யுட்கள் கடலில் மரக்கலம் புயலிடையூடாடியதை விளக்குகின்றன. அம்மரக்கலத்திலிருந்த ஸ்ரீதத்தாது ஆண்மை என்னே! என்னே! "காஸபியங்கா"விற்சிறந்தவானன்றே? "நனைமலர்ப்பிண்டிநாதனலங்கிளர் பாதமூலநினையுமினீவிரெல்லாம் நீங்குமின் அச்சமென்றான்" என்றதேற்றம் தற்காலநாவாய்லோட்டும் தலைவர்கூற்றாயின் சாலவமைந்ததேயாகும்.

(மகளிர்வழக்கம்.) இன்னும் புண்ணியன் "பொன்றினனேல்... வெள்வளைமுத்தநீக்கி நெறியினானேற்றலொன்றேநீளெரிபுகுதலொன்றே வறியலென்கொழுநன்மாய்ந்தாலணிசுமந்திருப்பதென்றான்" இப்பாவிற் சொல்லியவழக்கம் அக்காலத்திலிருந்ததுபோலும். பின்சொல்லியவழக்கம் சமீபத்திற்றான் சர்க்கார்ச்சட்டமேற்படத் தள்ளப்பட்டு வருகிறது. இன்னும் "ஐவிலினகலநின்றாங்கடிதொழுதிறைஞ்சலும்" "போந்திருக்கவென்னமூவிற்கணிறைஞ்சி" நிற்றலும் நல்லொழுக்கத்தைக்காட்டுகின்றன. இன்னும் நாமகளிலம்பகம் 207-210ம்- செய்யுட்களிற்சொல்லிய "விசையுடன்கண்டவர்மருளும்படி பொங்கிப்பறக்கும் மயிலன்னவிமானங்கள் கொன்னெறியிற்பெரியவனாயிருப்பவனால் நன்னெறிநூனயத்தாலியற்றப்பட்டன" வென்பது தெளிவாகின்றது. இது தற்கால ஆகாயவிமானவருணனையுமாகும்.

(சமயக்கோள்கை.) இனித் தேவர் தம்சமயக்கொள்கைகளையும் இடையிடைவிடாது புகட்டுவர். "பாடகம்போலச்சூழ்ந்தபழவினைப் பயத்தினென்றான்" என்றவிடத்து "வினையின்வந்ததுவினைக்குவிளைவாயது" என்பது உறுத்திச்சொல்லப்பட்டது. இன்னும் பல அரசநீதிகளும் இல்லறதர்மங்களும் தந்தைதாய்ப்பேணலும் எவ்வுயிரிடத்தும் ஜீவகாருண்யம்காட்டலும் நன்றிமறவாதிருத்தலுமாதிய பலதர்மங்கள் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

(விருத்தம்.) இனி இந்நூலே தமிழில் முதலில் விருத்தப்பாவினத்தில்யாக்கப்பட்டதென்பர். இதன்முன் வழங்கிவந்தனவெண்பாவும் ஆசிரியப்பாவும். இக்காப்பியமே பின்னாளில் கம்பருக்கு ராமாயணம் பாடுவதில் ஒரு வழிகாட்டியாயிருந்ததென்றும்சொல்வர். இந்நூல் முழுவதிலும் சந்தவின்பமும் பற்பலவணிகளும் பரக்கக்காணலாம். பிற்காலத்திய மிறைக்கவி ஒன்றும் அதில் வந்திலது.

(காலம்.) இதன்காலம் கி. பி. 900 அல்லது அதற்குப்பின்னிட்ட காலமென்று ஸ்ரீமான். கோபிநாதராவவர்களும் ஸ்ரீமான். குப்புசாமி சாஸ்திரியவர்களும் 'செந்தமிழி'லும் 'தமிழகத்தி'லும் காட்டியிருக்கின்றனர். இக்கூற்றையே ஸ்ரீமான். எம். ஸ்ரீநிவாஸையங்காரவர்களும் தமது "தமிழாராய்ச்சிகள்" என்றபுத்தகத்தில் வலியுறுத்தியிருக்கின்றனர்.



(சூளாமணி.) மேற்காட்டியநூலின்பாங்குகள் பல அமைந்ததாயுள்ள ஒரு சிறுகாப்பியமாகும் இது. இதனைச்செய்யுணைடையிலியற்றியவர் தோலாமொழித்தேவரென்ற ஜைனமுனிவர். சொற்பொலிவு, பொருளமைதி, கதைமுடிவு, சிறந்தநடைமுதலியனபெற்றுளது. சிந்தாமணியில் பிரதான அரசர்களை "சிந்தாமணி" என்றாற்போல இதிலும் பிரதானவரசர்களைச் "சூளாமணி" எனச்சொல்லியிருக்கிறது. பெரும்பாலும் சமயகாவ்யங்கள் துறவும் முத்தியுமுணர்த்திமுடியுமாறுபோல சுரமைநாட்டின்கண் போதனமாநகரத்திலிருந்து அரசுபுரிந்த பயாபதியரசன் தன்குமாரனைப்பூமியாளவைத்து, தான் துறந்து தன் தேவிமாருடன்முத்திபெற்ற கதையை இது எடுத்துச்சொல்லும். இதில் திவிட்டனைப்பெரும்பாலும் கண்ணனுக்கும், விசயனைப்பலராமனுக்கும் நிறம், குணம், செயல்களில் ஒப்பிட்டிருக்கிறது. இந்நூல் காப்பும் பாயிரமுந்தவிர நாட்டுச்சருக்கமுதல் முத்திச்சருக்கமீறாகப் பதின்மூன்று சருக்கங்களையும் 2131 பாக்களையுமுடையது. இதுஒரு சிறந்த ஜைனசமயபுராணவழிநூலெனத்தெரிகிறது. இதில் தற்காலத்து வழக்கில்லாப்பலசொற்களிருக்கின்றன. பண்டைக்காலத்தவர் நிமித்திகன்சொல்லும் சொற்களில் நம்பிக்கைவைத்தவரென்பதும், கன்னிகைகள் தாமாகவே கணவரைத்தேர்ந்தாரென்பதும், வீரர்கள் சௌரியங்களைக்காட்டித் தர்மயுத்தம் செய்தார்களென்பதும், ஆடவர் பல மனைவிகளைமணந்துவந்தார்கள் என்பதும் இன்னோரன்ன விஷயங்களும் இதினின்றும் தெரிகின்றன.

(யாப்பு.) இதில் ஒருபொருளைப்பற்றி, சிந்தாமணியிலுள்ளதுபோல் இரண்டுமூன்றடுக்கியபாடல்கள் வந்துள்ளன. இதைத் 'தேவபாணிகொச்சகம்' என்பார் நச்சினார்க்கினியர். இது இந்நூலில் இரதநூபுரச்சருக்கம் அருகனைப்பற்றிக்கூறிய பாக்களால்தெரியவரும். இன்னும் சொற்போக்குப்பொருட்போக்கை ஒத்திருப்பது பின்வருமடிகளாற்றெரியவரும்,

"துளைபடுகுழலிசை துடியொடுசிறுபறை
கிளையொடுபடலிகைகிளையொடுகிளர்தர
வளையொடுவயிரிசைமருவினமழையென"

இனிக்கீழ்வரும் பாவின் உவமையணி குறித்தற்பாலது:—

"தொக்கிளமலர் துதைவிலாதசோலையும்
புக்கிளந்தாமரைநகாதபொய்கையும்
மிக்கிளம்பிறைவிசும்பிலாதவந்தியும்
மக்களையிலாததோர்மனையுமொக்குமே".

இன்னும் பலபலவணிகள் நூலிடையே வருகின்றன.

(காலம்.) இது யாப்பருங்கலவிருத்தியிலும் யாப்பருங்கலக்காரிகைவிருத்தியுரையிலும் சிலப்பதிகாரத்து அடியார்க்குநல்லாருரையிலும் எடுத்தாளப்பட்டிருக்கிறது. ஆதலின் இது இவைகளுக்குள் முந்தியதென்றாகும். அரிய எண்பதுநூல்களைத் தன்னுரைக்குமேற்கோளாகஎடுத்துக்கொண்ட நச்சினார்க்கினியர் சூளாமணியைப்பற்றி ஒன்றும் எழுதாதிருந்தது வியப்பே! ஜீவகசிந்தாமணி ஆராய்ச்சிவிளக்கத்தில் சூளாமணியுடன்ஒற்றியிருந்தபகுதிகள் ஏழெண்ணிற்குட்பட்டதாகவிருக்கின்றன. ஜைனகாப்பியங்களாகிய இவ்விரண்டுக்கும் பொருத்தம் மிகுதியாகவிருத்தல்வேண்டும். இப்படியிருந்தும் மிகுதியாக முற்காலந்தொட்டே பழக்கத்தில் தமிழர்களாற்போற்றப்படவில்லையென்று ஊகித்தலாகும். சோழநாட்டில் கார்வெட்டிநகரத்திலிருந்து அரசுபுரிந்தவிசயவரசன்காலமே இச்சூளாமணியின்காலமென்பது நூற்சிறப்பில் "திக்கெட்டும்புகழ்படைத்ததிறல்விசயன்" என்றத் தொடக்கத்துச்செய்யுளால் அறியக்கிடத்தலாலும் கார்வெட்டிநகரின் காலம் உறந்தைக்கு முந்தியதாதலாலும் இந்நூலின்வயது 1500வருஷத்திற்குறையாது" என்பார் ஸ்ரீமான் தாமோதரம்பிள்ளையவர்கள். ஸ்ரீமான்- எம். ஸ்ரீநிவாசையங்கார் தமது "தமிழாராய்ச்சிகள்" என்ற நூலில் "தோலாமொழித்தேவர் அரசனாகிய சயந்தன் மாறவர்மன் ஆவணிசூளாமணியாகிய தந்தையின் ஞாபகார்த்தமாக, சூளாமணி என்னும் காப்பியத்தை இயற்றினா"ரென்றுசொல்லி மாறவர்மன் ஆவணி சூளாமணியின் காலம் கி. பி. 620 என்றும் சயந்தன்காலம் கி.பி. 650 என்றும் சுட்டிக்காட்டி, சூளாமணியின்காலம் கி. பி. 650 என்றும் வெளியிட்டிருக்கிறார்கள்.



(நீலகேசி.) சிறுகாப்பியமைந்தும் ஜைனநூல்களே. அவைகளில் முதலாவது சூளாமணியாகும். இனி நீலகேசித்திரட்டு என்பது ஜைன சமயநூலாகும். வியந்தரமங்கை நீலகேசியென்பாள் அர்க்க, புத்த, ஆஜீவக, சாங்கிய, வைசேஷிக, வேதாந்தமுலிய வாதங்கள்புரிகிறவர்களைக்கண்டித்து ஜைனமதத்தைநிலைநிறுத்தியதாக இயற்றப்பட்டிருக்கிறது. ஆதலின் நூலுக்கும் இதுவேபெயராயிற்று. இது பத்துச் சருக்கங்களையுடையது. இது நீலகேசி என்றும் பெயர்பெறும். இந்நூலைச்சிவஞானசித்தியார் பரபக்கத்துரையாசிரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ ஞானப்பிரகாசர் மிகவும் தம்முரையிலாண்டுவருகின்றனர். இதன் நூலாசிரியர் யாவர் என்பது விளங்கவில்லை. இவர்காலம் ஐந்தாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம்நூற்றாண்டிற்கும் இடைக்காலமென்ப. இந்நூலாசிரியர் பெருங்காப்பியமைந்தனுள் ஒன்றாகிய குண்டலகேசி நூலிலுள்ளவாதங்களைத் தம்நூலில் ஒரு சருக்கத்தில் கண்டிக்கிறார். இதற்குப்பைசாசபாஷையாம் மணிப்ரவாளநடையில்ஒருரையுமுண்டு.

(உதயணன்கதை.) இது பெருங்கதையென்றும் வழங்குகிறது. இது வத்ஸதேசத்தரசனாகிய உதயணன் சரித்திரத்தைச் செவ்வையாகக்கூறுவது. இது குணாட்டியர்செய்த பிருகத்கதையின்மொழிபெயர்ப்பு என்பார். 3700 புலவர் "தம்மாற்பாடப்பட்ட கலியும் குறுகும், வெண்டாளியுமுதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்துசெய்த உதயணன்கதை" என்று அடியார்க்குநல்லார் மிகமேலாகமதித்து இதை எடுத்தாண்டிருக்கின்றனர். இது ஐந்துகாண்டங்களாக வகுக்கப்பட்டு 131 ஆசிரியப்பாக்களையுடையது. சொற்சுவை பொருட்சுவைகளில் மிகச்சிறந்தது. குணாட்டியர் கி. பி. 113ல் இருந்த சாதவாகனஅரசன் காலத்தவராவரென்று டாக்டர் பூலர் எழுதியுள்ளார். ஆகவே இந்நூல் கி. பி. இரண்டாம்நூற்றாண்டிலாவதாகும். உதயகுமாரகாவியமென்ற தமிழ்நூல் வேறே.

இன்னும் பன்னிரண்டுசருக்கங்களையுடைய 1406 பாக்களாலானது மேருமந்தரபுராணம். இந்நூலாசிரியர் வாமனாசாரியர் என்பார். ஜைனமதக்கொள்கைகளோடு பலபொதுத்தர்மங்களையும் கூறுகின்றது. நாககுமாரகாவியமும் ஓர் புராணமே.

(இலக்கணங்கள்.) ஜைனர்கள் இவ்வண்ணம் இலக்கியமியற்றியதுந்தவிர, இலக்கியங்கண்டதற்கு இலக்கணமியம்பவேண்டியதாகலின்

பல இலக்கணங்களையும் இயற்றியுள்ளார். அவைகளில் நேமிநாதம், நன்னூல், அகப்பொருளிலக்கணம், யாப்பருங்கலம் முதலியவை மிகவாய் விளங்கலாயின.

( நேமிநாதம். ) களந்தையூர்க் குணவீரபண்டிதரால் தொல்காப்பியக்கடலின் சொற்றீபத்திற்கு ஓர் படகுபோன்ற சின்னூலாக 97 வெண்பாக்களில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னப்பட்ட ஐவகையிலக்கணங்களுள் முதலிரண்டனையும் தெளிவுறுத்துவதாய்ச்செய்யப்பட்டது. இது தொல்காப்பியநெறியினையேபற்றிச் செல்வது. இந்நூலாசிரியர் 800 வருடங்களுக்குமுன்னிருந்த திரிபுவனதேவன் எனப்பெயரிய குலோத்துங்கசோழன்காலத்திலிருந்தவர். இவரை இந்நூற் கடவுள்வாழ்த்தால் ஜைனரென்று அறியப்படும். தம்மாசிரியன்பெயர்வைத்து 'வச்சணந்திமாலை' என்ற ஒருநூலுஞ்செய்துளார்.

(நன்னூல்.) சனகாபுரத்தில் சன்மதிமுனிவர்புத்திரர் பவணந்திமுனிவரை சீயகங்கன் என்னும் மன்னன் "பேறறிவினரன்றி எளியோரும் ஓதி உணரும்வண்ணம் ஓரிலக்கணம்செய்பு"மென்று சொல்லப் பெரும்பயன்கருதி, தொல்காப்பியத்திலுள்ள எழுத்து, சொல் என்ற அதிகாரங்களைமாத்திரம் எல்லாருமொப்பத் தமதறிவினால் செவ்வனே செய்து நன்னூலெனப்பெயரிட்டு ராஜசபையிலரங்கேற்றினநூலாகும் இது. இவர்காலம் இற்றைக்கு 500 வருஷங்களுக்குமுந்தியது. இவர் ஜைனரென்பது "பூமலியசோகின்புனைநிழலமர்ந்தநான்முகற்றொழுது" என்பதனாலும், "முச்சகநிழற்றும்முழுமதிமுக்குடையச்சுதன்" என்பதனாலும் விளங்கும். இவர் வடநூல் பாணினியத்தையும் நன்கு கற்றுத் தம்நூலில் இயைத்துளர்.

( அகப்பொருளிலக்கணம். ) குலசேகரபாண்டியன்காலத்திருந்த நாற்கவிராஜநம்பி என்பவரால் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஒட்டி அகம், புறம், களவு, வரைவு, ஒழிபு என ஐவகையியலுடன் இயற்றப்பட்டது.

( யாப்பிலக்கணம். ) குணசாகரர் 95 சூத்திரங்களில் யாப்பிலக்கணத்தைக்கூறினார். இன்னும் அமிர்தசாகரமுனிவர் உருபு, செய்யுள், ஒழிபு என மூவகையியலுடன் யாப்பருங்கலக்காரிகை என்றுஓர் நூலியற்றினர்.



( நிகண்டுகள். ) இனி ஜைனர்கள் இலக்கிய உணர்ச்சிக்கு அவசியமான இலக்கணம் எளியநடையில் எழுதியபின் இலக்கியப்பொருள் இலகுவில் விளங்குவதற்கு அத்தியாவசியமான நிகண்டுகள் பலஇயற்றினர். அவற்றுள் திவாகரம், பிங்கலந்தை, சூடாமணிநிகண்டுமுதலியன சிறப்புற்றன.

( திவாகரம். ) அம்பர்நகரத்திருந்தவரும் ஒளவையாற்புகழப்பட்டவருமாகிய திவாகரமுனிவர் சேந்தன்வேண்டுகோளுக்கிணங்கி 2256 சூத்திரங்கள்கொண்ட தெய்வப்பெயர்த்தொகுதிமுதலிய பன்னிருதொகுதிகளுடன் இந்நூலை இயற்றினார். இது ஓர் நிகண்டு.

( பிங்கலம். ) திவாகரர் எழுதாதொழிந்த சிறந்த அரும்பதங்களுக்கு அவர்குமாரர் உரைகாட்டி ஓர்நிகண்டுசெய்து தன்பெயரிட்டு வழங்கினர். இவர் திவாகரருக்கு, செங்கதிரவன்வரத்தாற்றோன்றியவர். " பிங்கலமுதலாநல்லோருரிச்சொலினயந்தனர்கொளலே " என, பவணந்தியார் எழுதுவதினால் காலத்தால் இவருக்கு அவர்பிற்பட்டவரேயாவர்.

(சூடாமணிநிகண்டு.) முன்னிரண்டுநூல்களின் வழிநூலாயதிது. இது 1196 விருத்தங்களாலாகிய பன்னிரண்டுதொகுதிகளை உடையது. வீரைநகர் மண்டலபுருடராற்செய்யப்பட்டது. இவரிதைத்தம்மாசிரியர் குணபத்திரதேவர் வேண்டுகோளுக்கிணங்கி இயற்றினராம். "கெடிமன்னர்வணங்குந்தாளான்கிருட்டினராயன்கைபோல்" என்று சொல்வதனால் விஜயநகரகிருட்டினராயன்காலத்தவராவர். அவ்வரசர் சாலிவாகனசகாப்தம் 1250 ல் இருந்தவர். அதாவது கி. பி. 14 வது நூற்றாண்டாகும்.

இம்மாதிரி பதின்மூன்று பதினான்காம்நூற்றாண்டின்பின்னர் ஜைனர்கள் புலவர்ஒப்பும்நூல் ஒன்றும் இயற்றிலர். உபேந்திராசிரியர் "ஜினேந்திரமாலை" யென்று ஒருநூல் பதினேழாம்நூற்றாண்டிற்செய்துள்ளார். அவர்கள் யாதுகாரணங்கொண்டோ தமிழ்ப்பயிற்சிகுன்றி நூலியற்றும்வன்மையையும் கைநழுவவிட்டனர்.

(இசைநாடகம்.) முன்னரிசைத்தமிழும் நாடகத்தமிழும் குன்றியிருந்தழிந்தனவென்றெடுத்துரைத்தாம். அதற்குக்காரணமென்ன

வெனில், இடைக்காலத்திற்றமிழகத்திற்றோன்றிய ஜைனர்கள் முற்றத்துறந்தஞானிகளாய் மக்களுக்குள் ஒழுக்கச்சீர்திருத்தம் செய்யப்புகுந்து உலகவாழ்க்கைக்கு அறம்பொருளின்பமென்ற மூன்றுஞ்சிறந்தனவாமென்னுமுண்மையை நன்குணராது “அறமே யாவருக்கும் பின்பற்றுதற்குரியது; மற்றின்பம் கைவிடுதற்குரியது” என்று எடுத்தோதி இன்பத்தைக்கடியவேண்டுமென்று வற்புறுத்தியதே. அப்படிச்செய்ததின் பயனாக அநேகஇசை நூல்கள் அழிந்துபோயின. இதற்கு ஆரியரும் உதவிசெய்தனராம். இன்னும் “நாடகக்காக்ஷியாற் காமமே அறிவினும் மிகப்பெருகுகின்றது” என்ற போலிக்கொள்கையைக்கொண்டு ஜைனர்களும் ஆரியர்களும் நாடகத்தையும் கடியவேண்டுவனவற்றுள் சேர்த்துக்கூறினராம். இன்னும் அக்காலத்திய அரசர்களுக்கு இம்மாதிரிஎடுத்துரைத்துத் துர்ப்போதனைசெய்தகாரணம்பற்றி நாடகத்தமிழும் மடிந்தது. இம்மாதிரி பண்டிதர்களாலும் பாவலர்களாலும் கடியப்பட்டநாடகத்தமிழ் பாமரர்கையகப்பட்டு இழிவடைந்து தெருக்கூத்தளவிலேநின்றது.

(பிற்கூற்று.) நாம் இதுவரை கழிந்தபக்கங்களில் ஜைனர்கள் யாவரென்பதையும், அவர்களுடையகொள்கைகள் ஆசாரங்கள் முதலியவைகள் எவையென்பதையும், அவர்கள் தமிழகத்திற்குடியேறித் தமிழ்மக்களுடன் உசாவுவதாலேற்பட்ட இலக்கிய உணர்ச்சியையும், அவ்வுணர்ச்சியின்பயனாய் அவர் முதனூல்வழிநூல் பலயாத்தனரென்பதையும், அந்நூல்களில் பல காப்பியங்களும், புராணங்களும், நீதிசாஸ்திரங்களும், சமயசாஸ்திரங்களும், நிகண்டுகளுமாயிருப்பனவென்பதையும், அவர்கள் காலவரையறை எத்தன்மையவென்பதையும், அவர்கள்செய்த நூல்களின் அருமைபெருமையாவையென்பதையும், அவர்கள் சம்ஸ்கிருதத்திலிருந்து பலமொழிபெயர்ப்பு நூல்களியற்றினரென்பதையும் ஒருவாறுதெரிந்துகொண்டோம். அவர்கள் இசைத்தமிழ்நாடகத்தமிழிற்குக்கூற்றாயிருந்ததையுமறிந்தோம்.

(ஜைனர்களின் உதவி.) இன்னோரன்னஜைனர்கள் தமிழிற்கு என்ன உதவிசெய்துள்ளாரென்பதையும், தமிழ்க்கவிசரித்திரத்தில் அவர்கள் ஸ்தானம் எவ்வகைத்தென்பதையும் ஆராய்ந்து இவ்வியாசத்தைமுடிப்பாம். ஜைனர்கள் சம்ஸ்கிருதபிராகிருதபாஷைகளில் வல்லுநராய் வடஇந்தியாவினின்றும் தென்னாட்டிற்குக்குடியேறினர். தங்கள்



மதக்கொள்கைகளையும் நூல்களையும் நன்குகற்றவர். பிறிதோரிடம் சேரவே அவ்விடத்துள்ளாரைத்தம்வயமாக்கப்பெரிதும்முயற்சித்தனர். அதற்கு அந்நாட்டுப்பாஷையைக்கற்றல் இன்றியமையாததாயிற்று. ஆகவே தமிழில் நன்கு ஐயந்திரிபறக்கற்றுத் தம்மதக்கொள்கைகளையும் சாஸ்திரங்களையும் தமிழர்களுக்கு எளிதிற்றெரியும்வண்ணம் வெகு சாதுரியத்துடன் முதனூலாயும் வழிநூலாயும் பலவியற்றினர். அப்படியியற்றுங்காலத்தில் சம்ஸ்கிருதமொழிகள் பலவற்றைத் தமிழுடன் விரவவும், சம்ஸ்கிருதபாஷையைத்தழுவவும் நேரிட்டது. இரண்டாவது மணிப்ரவாளநடை என்ற கத்தியரூபத்தில் பலநூல்கள் இயற்றி வசனநூல்களுக்கு அடிகோலினார்கள். இலக்கியத்தால் மனிதர்ஒழுக்கம்மாறுபடுமாதலினாலே அவர்கள் நீதிநூல்களும் பலஇயற்றுவாராயினர். இவற்றோடுநில்லாது நவரசானுபவகாவியங்களும் பல இயற்றியுள்ளார். இன்னும் தமிழில் விருத்தத்தில் பாட்டுக்கள்செய்வதில் ஜைனர்களே முதல்வழிவைத்தவர்கள். இன்னோரன்னபெருதவிகள் அவர்களினின்றும் கிடைத்தன.

(சைனர்களின் தமிழ்க்கவிசரித்திரஸ்தானம்.) கடைச்சங்கம் கலைந்தபின் தமிழை ஓம்புவாரின்மையின் அதற்கு ஓர் அந்தகாரகாலமேற்பட்டது. இவ்விருளைநீக்கி ஒளிவீசும்படிசெய்தவர்களுள் ஜைனர்கள் முக்கியஸ்தர்கள் என்பது வெள்ளிடைவிலங்கலே. அவர்கள் இலக்கியங்கள் கற்பனைக்களஞ்சியம், சுவைச்சாகரம், அணிப்பேருற்றுக்குழி. இனி, பண்டைநாட்சுவையெல்லாம் வாரிக்கொணர்ந்து தமது நூலில் ஒருங்கே பொதிந்துவைத்த கவிச்சக்கரவர்த்திக்கும், சிறந்த தேம்பாவணிக்காப்பியமெழுதிய சமீபகாலத்திருந்த இட்டாலியபாதிரியாகிய பீஸ்சி என்ற வீரமாமுனிவருக்கும் எடுத்துக்காட்டியாயிருந்த ஜீவகசிந்தாமணி தமிழ்மொழிவழங்குமளவும் ஊழியூழியாய்விளங்குமென்பதற்குச்சந்தேகமேயில்லை. இரண்டாவதாக, பிறபாஷைகளினின்றும் பலவார்த்தைகளைத்தமிழிற்சேர்த்துத் தமிழ்மொழியின்மொழித்தொகையை அதிகரிக்கப்பண்ணினார்கள். மூன்றாவதாக ஆதிகாலத்திய விலக்கணங்கள் அருமையிற்பெரியவையாயிருந்தமையாலே தம்காலத்தவருக்கு எளிதிற் புலப்படும்படி நேமிநாதம், நன்னூல், அகப்பொருள் இலக்கணம் முதலிய பல இலக்கணங்களைத்தொகுத்துக்கொடுத்தனர். நான்காவதாக, தமிழ்மொழியில் வசனநடைக்கு வழிகாட்டிய

வர்களுமவரேயாவர். ஐந்தாவதாக, பலபொருள்கொண்ட ஒவ்வொரு மொழியையும் இலக்கியங்களை எளிதிலுணரும்பொருட்டு நிகண்டு வகையாய் வகுத்தவர் அவர்களே. இவ்வரும்பேருதவியைச்செய்தவர்கள் தமிழ்க்கவிசரிதத்தில் முக்கியமானஸ்தானங்களையடைகிறவர்களுள் ஒருவர் என்பதில் ஐயப்பாடு ஒன்றுமில்லை. இன்னும் இவர்கள் ஐந்தாறு நூற்றாண்டுகள் உன்னதஸ்திதியிலிருந்தார்களென்பது இவர்களுடைய நூல்களினின்றும் அடையும் தேற்றமாகும். புத்தர்கள், சைவர்கள், வைணவர்களாகிய புறமதத்தினர்பலருடன் இவர்கள் வாது புரிந்து தம்மதத்தைத்தாபித்திருக்கிறார்கள். கி.பி. 200க்குமேல்1200க்குள்ளாகியகாலத்தில் ஜைனர்கள் பற்பலவமயம் பிரபலமாயிருந்து தமிழையபிமானித்து வளர்த்துவந்தவர்களாவர். இனி மேன்மேல் வளர்ந்து முற்போக்கை ஏற்கும் தன்னுதரத்துதித்து எழுந்து ஒன்று பலவாயிடினும் ஆரியம்போல் உலகவழக்கொழிந்து சிதையாமல் சீரிளமையுடனிற்கும்எல்லாமதத்தினராலும்மதிக்கப்படும் தமிழணங்கு நீடூழிவாழ்க! தமிழ் இறையும் தமிழ்மக்களும் நீடூழிவாழ்க.

K. C. வீரராகவையர், M. A., F. C. S.
ஹிந்துகாலேஜ்,
திருநெல்வேலி.

---

The Powell and Morchead Vernacular Prize of the Presidency College was awarded to the auther of this essay in 1915—1916.

உ

## * சிற்பமுதலியவற்றாற்றெரியும்

# புத்தசரித்திரம்.

---

அக்கிராசனாதிபதிகளே !

கனவான்களே !! இப்பொழுது சொல்ல உத்தேசித்திருக்கும் விஷயமானது தமிழ்ப்பாஷைக்குச்சம்பந்தப்பட்டதில்லையெனினும், தமிழ்நாட்டுச்சரித்திரத்தின் ஒருகூறாகின்றபடியால் தமிழ்ப்பாஷையையேயன்றித் தமிழ்நாட்டுச்சரித்திரத்திலும் மிக்கநோக்கமுடையதமிழ்ச் சங்கத்தார்க்கு வெறுப்பைத்தராதென்னுந்துணிபுடன் சொல்லத் துணிந்தேன்.

இப்பரதகண்டத்திற்றோன்றி ஓங்கிவளர்ந்து நெடுங்காலம்வாழ்ந்து பின்பு பூடற்றுப்போகிய பௌத்தமதத்தின்சரித்திரம் மிக்கவியப்பைத் தரத்தக்கதே. திபெத்து, பர்மா, சீனம், ஜப்பான், சயாம், சிங்கள முதலியவிடங்களில் தழைத்திருப்பத் தன்ஜனனபூமியாகிப் பலநாட்டுக்கும் நடுப்பட்டிருக்கும் இப்பரதகண்டத்தில் எத்தனைகாலம்பகவான் புத்தருடைய தருமசக்கரம் நாட்டப்பெற்றதென்பதும், எவ்வெக்காரணங்களால் வலிகெட்டுச்சீர்குலைந்ததென்பதும், எக்காலத்து இந்தியாவினின்றும் விலகிற்றென்பதும், அம்மதத்தாருடையகோயில்களும் விக்கிரகங்களும் எங்குபோயொளித்தனவென்பதும், இம்மதத்தினரெவ்வாறானார்களென்பதும் முதலியவிஷயங்களைப்பற்றிச் சரித்திரத்திலபிமானமுடையார்கட்கு அறிய மிகவும்விருப்பமுண்டாகுமென்பதில் ஐயமில்லை. ஆதலால் எனக்குக்கிடைத்த ஆதாரங்களைக்கொண்டு தென்னிந்தியாவில் பௌத்தமதவிஷயமான சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லத்துணிகிறேன்.

---

* இது திருநெல்வேலியில் நடைபெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினாறாம்வருஷக்கூட்டத்தில் திருவனந்தபுரம் சிலாசாசனபரிசோதகர் து. அ. கோபிநாதராவ் எம். ஏ. அவர்களாற்படிக்கப்பெற்றது.

தென்னிந்தியாவில் பௌத்தமதத்தை முதன்முதற் பரவச்செய்தவர்கள் அசோகன்பந்துக்களாகிய மஹேந்துவும், சங்கமித்திரையும் என்பவர்கள். இவர்களால் நாட்டப்பெற்ற பௌத்தமதம் செழித்து வளர்ந்துவந்ததென்பதற்குப் பற்பல சான்றுகளுள.

மைசூரிலாகாவிற்கண்டுபிடிக்கப்பட்ட அசோகமகாராஜன் சாஸனத்தால் அவ்வரசனதிகாரம் தென்னாட்டின்கண் மைசூர் இராஜ்யத்தின் வடவெல்லைவரை செலுத்தப்பட்டுவந்ததென்பதும் அவன் நாடு முழுதிலும் பௌத்தமதம் பிரபலமாய்ப்பிரசாரத்திலிருந்ததென்பதும் நன்குவிளங்கும். பின்னர் ஐம்பெருங்காப்பியங்களுளொன்றாகிய மணிமேகலையில் மணிமேகலையென்னும் பிக்ஷுணிசிரோமணி காஞ்சிமாநகர் புக்ககாலையில் அவ்வூரிலாண்டுவந்த சோழவரசன் இவட்கு, சோழன் கிள்ளியாற்கட்டப்பட்ட பௌத்தசெயித்தியம் காட்டியதுமன்றி இவள் வேண்டுகோளுக்கிணங்கி இந்நகரில் அவ்வரசன் ஒரு உத்தியானமும், இதினிடையில் ஒரு புத்தபீடிகையும், தீவதிலகைகோயிலும், இதனருகில் ஒருவாவியும் மணிபல்லவமென்னுந்தீவிலிருப்பதுபோலச் சமைத்தானென்றுகூறப்பட்டுள்ளது. இக்காஞ்சீபுரம் தென்னாட்டின்கண்ணதோர் மிகப்பழையநகரமாயும், ஸ்மரணமாத்திரத்தால் முத்திதாயகமானஸ்தலங்களில் ஒன்றாயும், பல்வேறுமதத்தினருள் மேன்மைபடைத்தவல்லோர்கள் வசித்துவந்ததாயும், வெவ்வேறுமதத்தினர் கோவில் பள்ளிமுதலியனவுடையதாயும், கிருஸ்தவாப்தத்தின் முதனான்கு நூற்றாண்டுவரை சோழர்களுக்கு இராஜதானியாயும், பின்னர் பல்லவர்களினிராஜதானியாயுமிருந்தவிடம். பதஞ்சலிபகவான் தம்முடைய மகாபாஷ்யத்தில் காஞ்சியைக்குறித்தெழுதியிருக்கிறார். எனவே கிருஸ்தப்தத்தின்முன்னரே மிக்க பிரசித்திபெற்றநகரமென்பதிற்சம்சயமொன்றுமில்லை. பல்லவவரசர்கள் பழங்காலத்தியமற்றையவமிசத்தரசர்கள்போலப் பற்பலமதத்தையுஞ்சார்ந்து ஒழுகியவர்களென்பது அவர்கள்பெயர்களிற்சிலவாகிய புத்தவர்மன், ஸ்கந்தவர்மன், பரமேசுவரவர்மன், நரசிங்கவர்மன் என்பவைகளால் அறியலாகும். இவர்களிற்சிலர் பௌத்தர்களாயிருந்தார்களென்பது சாஸனங்களால் அறியக்கிடக்கின்றது. யுவங்சுவங் என்னும் சீனதேசத்துப்பௌத்தயாத்திரிகர் காஞ்சீபுரத்தைத் தாந்தரிசித்தஅந்நாள் அந்நகரில் 100 பௌத்தசெயித்தியங்களும் அவைகளில் 10000ஸ்தவிரஸங்கத்தவருமிருந்தார்க



ளென்று எழுதியிருக்கிறார். பின்னும் இவ்விடத்தில் ஜைனக்கோயில்களில் 80 உண்டென்றும், அவைகளிலநேகம் திகம்பரமதத்தாரதென்றும் அறிவிக்கிறார். இவ்வூரிற்பற்பலவிடங்களில் புத்தபகவான் தம்மதவிஷயமாய்ப் பிரசங்கித்ததாகவும் அவ்வாறுள்ளவிடங்கள்தோறும் அசோகமகாராஜன் ஸ்தூபங்களைக்கட்டிவைத்தானென்றும் இவர் எழுதியது உண்மையாயின் இந்தச்செயித்தியங்களிலும் ஸ்தூபங்களிலும் விக்கிரகங்களிலும் சிலவேனுங்காணப்படவேண்டுமே? அன்றியும் நாலந்தையின் சர்வகலாசாலையில் யுவாங்சுவங்காலத்தில் மகாபண்டிதஸ்தானத்தை வகித்தவர்களிலொருவராகிய தர்மபாலரென்பவர் பிறந்தவிடமும் இக்காஞ்சீபுரமாகும். தர்மபாலர்காஞ்சீபுரத்திற்பெரியதோருத்தியோகத்திலமர்ந்திருந்த ஹீனயானமதகாரராய ஒருவர்மகனாய்ப்பிறந்து, கல்விகேள்விகளாற்றம்மின்மிக்காரின்றி வடதேசத்தின்கண்சென்று மகாயானத்தைத்தழுவி நாலந்தலில் உபதேசகரானவர்.

பின்னும், காஞ்சீபுரத்தையாண்ட சிம்மவர்மனென்னுமரசன் புதல்வன் பரமேசுவரவர்மன்என்பவனியற்றிய மத்தவிலாசபிரகஸனம் என்னும் ஓர் சிறியநாடகத்தில் அந்நகரிலுள்ள பௌத்தபிக்ஷுக்களினுடையவும் காளாமுகசைவர்களுடையவும் துர்க்குணங்களை இவ்விருமதத்தினர் அக்காலத்திருந்த இயற்கைக்கு நன்கிணங்கவர்ணித்துள்ளார். இவர் ஆணையிற்பொறித்த ஓர் சாஸனத்திலும் இந்நாடகத்தைக்குறித்திருக்கிறபடியால் இது இவரேயியற்றியதென்பதிற்றடையொன்றுமில்லை. இவர்காலம் கி. பி. 7 ம் நூற்றாண்டு எனவே, இவர் காலத்துப்பௌத்தமதம் காஞ்சீபுரத்திலிருந்ததென்பது நிச்சயம்.

தேவாரம்பாடிய சைவநாயன்மார்கள்காலத்தும் காஞ்சீபுரத்தில் பௌத்தர்கள் ஏராளமாயிருந்தார்களென்பதை இந்நாயன்மார்கள் ஆங்காங்கு போதியார், பிண்டியார், தேரர் என்றுகுறித்து இவர்களை இழித்துக்கூறுவதனால் விளங்கும்.

கி. பி. 8ம் நூற்றாண்டினிறுதியிலும் 9ம் நூற்றாண்டின் ஆதியிலுமிருந்த சங்கரபகவத்பாதாசாரியர் காஞ்சியிலிருந்த பௌத்தாதிபாஹ்யமதங்களைவென்று அவர்களை அவ்விடத்தினின்றும் துரத்தினரென்று ஓர் ஐதிகமுண்டு. இந்நகரில் ஹிமசீதளன்என்னுமோரரசன் ஆண்டு

வந்தகாலத்தில் அகளங்கனென்னும் ஜைனபிக்ஷு ஒருவர், பௌத்தர்களை வலுவில் வாதுக்கழைத்து, அவர்களை வாதில்வென்று அவர்கள் வலி தொலைத்தாரென்றும் ஓர் ஐதிகமுண்டு.

இங்ஙனமாகப்பலபடியாற் பௌத்தமதநிறைந்த காஞ்சியென்று புகழ்படைத்தநகரத்தினின்று அம்மதம் தொலைந்தபின்னர், அம்மதத்தினர்கோயில்களேனும் விக்கிரகங்களேனும் காணப்படவேண்டுமல்லவோவெனின், பல விக்கிரகங்களவ்விடத்தில் நானே முதன்முதற் கண்டுபிடித்துள்ளேன். அவைகளில் 7 அடிநீளத்தில் நின்றதிருக்கோலமான புத்தவிக்கிரகமொன்று காமாக்ஷியம்மன் கர்ப்பக்கிருகத்துக்கடுத்த சுற்றுமண்டபத்தில் இன்றும் கிடக்கின்றது; மற்றொன்று இரண்டாம் பிராகாரத்தில் தலைமுறிந்துபோய் உட்கார்ந்திருக்கிறது. இன்னும் ஒன்று கோயிலின் தென்கிழக்கில் அடுத்துள்ள ஒரு தென்னந்தோட்டத்திலிருக்கின்றது. வேறு இரண்டுவிக்கிரகங்கள் கருக்கிலமர்ந்த அம்மன்கோயிலில் வைக்கப்பட்டிருக்கின்றன. பின்னும் ஏகாம்பரநாதஸ்வாமிகோயிலில்.........விக்கிரகங்களுள. ஆகவே காஞ்சீபுரத்தில் பௌத்தமதசம்பந்தமான சின்னங்கள் பலவுளவென்பதற்கு நாம் வைத்திருக்கும் படங்களே வலியசான்றாகும்.

நெல்லிக்குப்பத்தையடுத்து, திருச்சோபுரமென்று ஒருகுக்கிராமமுண்டு. அதிற் பாடல்பெற்றசைவாலயமொன்றுண்டு. அது மணலில் மூழ்கிக்கிடந்து சிலவருடங்கட்குமுன்பு கண்டுபிடிக்கப்பட்டு ஜீர்ணோத்தாரணம்செய்யப்பெற்று இப்பொழுது ஒருவித நல்லஸ்திதியிலிருக்கிறது. இக்கோயிலில் என்னாற்கண்டுபிடிக்கப்பட்ட ஒருகல்லில் பௌத்தசங்கத்தையும், சாரிபுத்திரனென்னுமொருவன் பெயரையும் குறிக்கும் ஒரு சாஸனம் ஜடிலவர்மசுந்தரபாண்டியன்காலத்திலெழுதப்பட்டிருக்கிறது. அதாவது கி. பி. 1......சாரிபுத்திரன் என்னும்பெயர் பௌத்தர்பெயர் என்னக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. சங்கத்தையுங்கூடக்கூறியிருப்பதனால் அது பௌத்தசங்கமே எனத்துணியலாம்.

நாகபட்டினத்தில் முதல்இராஜராஜன்காலத்தில் கடாரத்தரசனான......விஜயோத்துங்கவர்மனென்பான் தன் தந்தை சூடாமணிவர்மன்பெயரால் ஒரு விஹாரஞ்சமைத்து, அதற்குவேண்டுஞ்செலவுகட்காக ஆனைமங்கலமென்னுங்கிராமத்தை இராஜராஜனாற்கொடுக்கப்



பெற்று இக்கோயிலுக்களித்தான். இக்கோயிலைச்சிலகாலத்துக்கு முன்பு காதோலிக்கிறிஸ்தவப்பாதிரிகள் விலைக்குவாங்கி இதிலிருந்தபுது வெள்ளிக்கோபுரத்தையும், இதிற்கிடைத்த பல பௌத்தவிக்கிரகங்களையும் ஐரோப்பாவுக்கு அனுப்பிவிட்டார்கள். இதிலிப்பொழுது அக்காலத்திய பழைய ஒரு குளம் மட்டும் இன்றுங்காணலாம்.

திருவாங்கூர்ச்சமஸ்தானத்திற் பலவிடங்களிலும் பௌத்தவிக்ரகங்கள் காணப்படுகின்றன. இவை கிடைக்கும் ஊர்களெல்லாம் பள்ளிக்கல்லென்னும் பெயரைஉடையன. இவ்வார்த்தையின்பொருள் பள்ளியினருகேயிருக்கும் ஊர் என்பது.

சில வருடங்களுக்குமுன்னர் எனக்கோர் தாமிரசாஸனங்கிடைத்தது. அதில் தமிழில்எழுதியமுதற்பாகத்தில் ஒரு ஏடுதவிர மற்றவை காணப்படவில்லை. இரண்டாம்பாகத்தில் சமஸ்கிருதபாஷையில் விருஷ்ணி அல்லது ஆய்க்குலத்தினனாகிய விக்கிரமாதித்தியவரகுண மகாராஜா திருமூலவாதத்துப்பட்டாரகர்க்குச் சிலபூமிகளைக்கொடுத்ததாகச்சொல்லிக்கொள்ளுகிறான். சாஸனத்தின் ஆரம்பத்தில் சௌத்தோதனி (புத்தனை) யையும், தர்மத்தையும், ஸங்கத்தையும் புகழ்ந்துள்ளது. இச்சாஸனத்தைஅச்சிட்டகாலத்து அதிற்கூறப்பட்டகோயிலின்பெயர் அல்லது ஊரின்பெயர் திருமூலவாதமோ பாதமோவென்று சந்தேகப்படவேண்டியிருந்தது. பின்னர் மூஷகவம்சமென்று சமஸ்கிருதகாவியமொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதினின்றும் இவ்வூர்ப்பெயர் ஸ்ரீமூலவாசமென்று விளங்கிற்று. சோழவரசன் தன்மேல் படையெடுத்துவருகிறானென்றுதனக்குதவியாக மூஷகவரசனைக்கேரளராஜன்வேண்டினான். அவன் வேண்டுகோட்கிணங்கி மூஷகவரசன் தன் மருமகனாகிய வலபனென்பானை ஒருபெரியசேனையுடன் அனுப்பினான். பாதிவழிகடந்துபோனதும் ஒற்றர்வந்து மூஷகவரசனிறந்தானென்றும், அயல்நாட்டரசன் மூஷகராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டாளுகிறானென்றுந்தெரிவித்தார்கள். சங்கதிகளெல்லாம் செவிமடுத்த வலபன் வெகுண்டு தனக்குநேர்ந்தவிபத்தைக் கேரளராஜனுக்கு அறிவித்து, தான் தன் ராஜ்யத்தைநோக்கிச்சென்றான். செல்லும்மார்க்கத்தில் ஸ்ரீமூலவாசத்தில் புத்தபகவானைத்தரிசித்து அவ்விடத்திலுள்ள பௌத்தசான்றோரால் ஆசீர்வதிக்கப்பெற்று, சமுத்திரத்தாற்கபளீகரிக்கப்பட்டுக்கொண்டிருந்த ஸ்ரீமூலவாசத்தின்கரையைக் கல்முதலிய

வைகளால் கெட்டிப்படுத்திவிட்டு யாத்திரைபுறப்பட்டான் என்று சொல்லியிருக்கிறது. விக்கிரமாதித்தவரகுணன்காலம் கி. பி. 865. சோழர்கள் மேனாட்டுக்குப் படையெடுத்துச்சென்றது இராஜேந்திர சோழன்காலம்; அதாவது கி. பி. 12 ம் நூற்றாண்டின் கடைசிக்காலம். கி. பி. 865 ல் பிரபலமாயிருந்தகோயில் சுமார் 1100 கி. பியில் அழிந்திருக்கவேண்டும். அதாவது கீழ்சமுத்திரக்கரையில் நாகபட்டினத்துள் ஒரு பிரபல பௌத்தவிஹாரம் தோன்றியகாலத்தில் மேற்குச் சமுத்திரக்கரையில் நாகபட்டினத்துக்கு நேர்மேற்காயுள்ள மிக்க பிரசித்தியடைந்திருந்த ஸ்ரீமூலவாசம் சமுத்திரத்தால் நாசமடைந்தது. இம்மூலவாசம் வெகு புகழ்படைத்தவிடம்என்பது காந்தாரதேசத்துக் கண்டெடுத்த ஒரு பௌத்தலோகேசுவரவிக்கிரகத்தால் விளங்குகிறது. இதன்பீடத்தில் அதை,—
“ ஏகூிணாவயஉ-ஒவாவஸொகூநாய ” என்று வர்ணித்திருப்பதைக்கொண்டு வெகுதூரத்துள்ள காந்தாரநாட்டினும், ஸ்ரீமூலவாசத்துலோகேசுவரபிம்பத்தின் பிரதி ஒன்று வைக்கத்தோன்றிற்று என்று ஊகிக்கின், இவ்வூரின் பௌத்தாலயத்தின் பழமையும் பெருமையும் கூறவும்வேண்டுமோ ? இம்மூலவாசம் மலையாளத்தில் எவ்விடத்திலிருந்ததோ நிச்சயமாகக்கூறவியலாததாயிருக்கிறது. ஆனால் அம்பலப்புழைக்குப்பக்கத்திலிருக்கலாமென்று உத்தேசிக்கவிடமுண்டு.

அம்பலப்புழையையடுத்து, கருமாடி என்னும் ஒரு ஊர் உண்டு. அவ்வூரில் ஆற்றங்கரையோரத்தில் கருமாடிக்குட்டனென்று ஒரு சிலாபிம்பமுண்டு. அந்நாட்டார் அது ஒருபுலையனென்றும், அவன் ஒரு பிராமணன் இருக்குமிடத்திற்கருகேவந்தபோது, பிராமணனாற் கல்லாய்ப்போகவென்று சபிக்கப்பட்டானென்றும் ஒரு ஐதிகத்தைக் கூறுவர். என்கிலும், அவ்விக்கிரகத்தின் படத்தை உற்றுநோக்குவோர்க்கு அஃதோர் பௌத்தவிக்கிரகம் என்று விளங்காதிராது.

பின்னும் மாவேலிக்கரையென்னுமூரில் ஒரு பௌத்தவிக்கிரகமுண்டு. இவ்வூருக்கு 7 மைல்தூரத்திலுள்ள பள்ளிக்கல்லுக்கடுத்த பரணிக்காவு என்னும் ஊரில் ஒருபிம்பமுண்டு. மற்றும் ஆடூர் என்னும் ஊரையடுத்து இன்னமொரு பள்ளிக்கல் என்கிற ஊர் உண்டு. அதில் ஒரு தலையற்ற பௌத்தவிக்கிரகம் எனக்குக்கிடைத்தது. அதை



இப்பொழுது நான் திருவனந்தபுரத்துக்காட்சிச்சாலையில் வைப்பித்திருக்கிறேன். இன்னமும் கருநாகப்பள்ளியடுத்து ஓரிடத்தில் மற்றொரு விக்கிரகமிருப்பதாகக்கேள்வி.

ஆகவே மேற்கே மலைநாட்டில் வெகுகாலமாய்ப் பௌத்தமதம் வெகு பிரபலமாயிருந்ததென்றும், சுமார் 1100 கி. பி. க்குள் அழிந்ததென்றும்சொல்லலாம். தென்னிந்தியாவில் பௌத்தம் சுமார் கி. பி. 1300 வரையிருந்ததல்லாமல் அதற்குப்பிறகு இருந்ததாகத்தோன்றவில்லை.

பௌத்தமதம் என்னகாரணத்தால் இந்தியாவில் நிலைநிற்கவில்லையென்னும் பிரசினத்துக்குத்தரம் ஒருவாறு ஊகிக்கலாம். பசுவைக் கொன்று யாகஞ்செய்யவேண்டுமென்னும் வேதவாக்கியங்களை ஆத்மாவின் பாபத்தன்மையைக்கொன்று நிர்மலமாக்கி அதனைப்பகவானுக் கர்ப்பிக்கவேண்டுமென்பதோராது, பசுமுதலிய மிருகங்களை வீணே கொல்லுகிறார்களென்று பரமகாருணிகரான புத்தரும் அவர் ஞாதியான மகாவீரரும் அந்தணரொழுக்கத்தையிகழ்ந்து அஹிம்சையென்னும் தர்மத்தை வற்புறுத்திக்கூறலாயினர். அதிவர்ணாச்சிரமபதவியையடைந்த ஆசார்யபுத்தர் அம்பாலிவீட்டில் பன்றியிறைச்சிதின்றாரென்பதைமட்டுங்கவனித்து அவர்சிஷ்யர்கள் தாமும் மாம்ஸபக்ஷணஞ் செய்யத்தொடங்கினார்கள். அம்மகான் எதையும்புசிக்கலாம் எங்கேயும் ஏற்றுண்ணலாமென்பதையறியாது குயுக்தியெல்லாம்செய்து தமக்காகவென்று உயிர்க்கொலைசெய்யப்படாதுகிடைக்கும்மாம்ஸம் தமக்கென்றுகொன்றதாகத்தமக்குத்தெரியாதுகிடைத்தமாம்ஸம் என்று இங்ஙனம் ஐவகைமாம்ஸங்களைப்புசிக்கலாமென்றும்,இன்னன துராசாரங்களைக்கைப்பற்றிக்காலாந்தரத்தில்பதினாறுவகைச்சிறுபிரிவினராய்ப் பிரிந்து, வித்தையும் புத்தியுங்குன்றி இழிவடைந்தார்கள். இவ்வீனதசையடையும்வரை பதுக்கவளர்ச்சியடைந்துவந்த வைதிகமதம் பலமடைந்து வலியற்ற பௌத்தமதத்தை எளிதிற்றாக்கித்தோல்வியடைவிக்கும் ஸ்திதிக்குவந்திருந்தது. ஆசாரியர் குமாரிலபட்டர் முதன்முதல் பௌத்தர்களைத்தாக்கி முறியடித்தனர். பின்பு சைவநாயன்மார்களும்,சங்கரபகவத்பாதாசாரியரும் கங்கணங்கட்டிக்கொண்டு இம்மதத்தின்வலியை முற்றும்தொலைத்தனர். நாளடைவிலேயே இம்மதத்தார்

இந்துக்களில் ஒருஜாதி வைஷ்ணவர்களாய் மாறிவிட்டார்கள். ஜைனர்களும் இங்ஙனமே இந்துக்களாவதை இன்றைக்குங்காணலாம். ராமஸ்வாமிநாயனார்முதலிய பெயர்தரித்திருக்கும் ஜைனர்களை, தஞ்சாவூரின் ஓர்பாகமாகிய கருந்திட்டைகுடியிலும்,மன்னார்கோவில்முதலிய விடங்களிலுங்காணலாம். நாயன்மார்களும் ஆசாரியஸ்வாமிகளும் பௌத்தர்களையும் ஜைனர்களையும் கற்காணங்களிலிட்டு ஆட்டிக்கொன்றனர் என்பது உண்மையென்று கொஞ்சமேனுந்தோன்றவில்லை. பௌத்தமதப்பிரவீணரான கர்ன் என்ற துரையவர்களும் இந்துக்களால் இம்மதம் முடிவுஅடையவில்லை; மகம்மதியர்களாற்சீர்குலைக்கப் பெற்றதென்றும், மகம்மதியர் சல்லியத்துக்குப்பயந்து உத்கலம், தக்ஷிணாப்தம்முதலியதேசங்களுக்குப்பௌத்தர்கள் ஓடிப்பிழைத்தனரென்றும் அபிப்பிராயப்படுகிறார். ஸ்ரீமான் நாகேந்திரநாதவசுவென்பவர் தக்க ஆதாரங்களைக்கொண்டு உத்கலதேசத்தில் இவர்கள் வைஷ்ணவரானவாறும், பரப்பிரம்மத்தை இவர்கள் மஹாசூன்யமென்றும் சூன்யபுருஷனென்றும் பலவாறு பெயர்கொடுத்து, பழம்பௌத்தமதத்தைப் புதுவைஷ்ணவவடிவில் நிலைநிறுத்தியிருப்பதையும், இப்புதுப்பௌத்தம் இப்பொழுதும் உத்கலமுதலியதேசங்களில் நடைபெறுவதையும் பற்றித் தம்முடைய மயூரபஞ்ஜாஆர்கியாலாஜிகல்ஸர்வேயென்னும் புத்தகத்தில் செவ்வனே விளக்கியுள்ளார்.

பௌத்தர்கள் இங்ஙனம் ஹிந்துக்களானவுடனே அவர்களுடைய கோயில்களையும், ஜைனர்களுடையகோயில்களையும் தமதாக்கிக்கொண்டு அதிலிருந்த பௌத்த ஜைனவிக்கிரகங்களைப்பறித்தெடுத்து அக்கோயில்களின் பிராகாரங்களில்வைத்துவிட்டுத் தம்மதத்தின்தெய்வங்களாகிய விஷ்ணு, சிவன், தேவி முதலியவர்களின் விக்கிரகங்களை ஸ்தாபித்துக்கொண்டார்கள். ஆசாரியர் ராமாநுஜர் ஐந்துஜைனகோயில்களைப்பிடித்துக்கொண்டு கீர்த்திநாராயணன், சத்தியநாராயணன்முதலிய பஞ்சநாராயணரை ஸ்தாபித்தாரென்று, ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரைகளும், சிலாசாசனங்களும் கூறுகின்றன. சங்கரபகவத்பாதாசாரியாரும் ஒரு பௌத்தகோயிலைக் காமாக்ஷிதேவிகோயிலாக்கிக்கொண்டு அவ்விடத்தில் ஒரு ஸ்ரீசக்கரத்தையும் நாட்டியிருக்க வேண்டுமென்பதற்குத் தக்கசான்றுகளுள.

புத்தவிக்கிரகங்களைச்செய்வதற்கு லக்ஷணங்கள் மானசாரமென்னும் வாஸ்துசாஸ்திரத்திற்சொல்லியிருக்கிறது. இவ்விக்கிரகம் நின்ற



திருக்கோலத்துடனே ஸிம்ஹாஸனமுதலியவற்றின்புறத்திலிருந்த கோலத்துடனே இருக்கவேண்டும். புத்தர்விக்கிரகம் வெளுத்தவர்ணமுடையதாயும், விசாலமானமுகமும், தொங்குகிறகாதுகளும்,நீண்ட கண்களும், உயர்ந்தமூக்கும், சிரித்தமுகமும், நெடியகைகளும், அழகானமார்பும், சதைபிடித்துள்ள திவ்யாங்கங்களும், சற்றுச்சரிந்து தொங்கும் வயிறும், நிறைந்து பூர்ணமானசரீரமுமுடையதாயிருக்க வேண்டும். பாதங்களிரண்டையும் சமமாகவைத்துக்கொண்டுநிற்கும் நிலையும், தொங்கும் கைகளும், இரண்டுபுஜங்களும், இரண்டு கண்களும், தலையில் ஜ்வாலையோடுகூடிய உஷ்ணீஷமும் ஸ்தானமூர்த்தியான புத்தருக்குவேண்டியது. ஸ்தானத்திலும் ஆசனத்திலும் இம்மூர்த்தி பீதாம்பரத்தைத்தரித்திருக்கவேண்டும்.

ஆஸனமூர்த்தியாயின் பத்மாசனமாக இரண்டுகால்களையும் வைத்துக்கொண்டு சரீரத்தில் கோணலின்றியோ கோணலோடுகூடியோ யோகதத்பரமானமனதும், மேல்நோக்கி மடியில்வைக்கப்பட்ட வலக்கை இடக்கைகளுமுடையதுமாயிருக்கவேண்டும். ஸிம்ஹாஸனத்திற்கு மேலே ரிஷிகளும், தேவஸங்கங்களும், வித்தியாதரர்களும், திக்பாலர்களும் மற்றும்பலரும் ஆகாயத்தில் ஸ்தானமாயோ ஆஸனமாயோ இருந்துகொண்டு இவரைச்சேவிக்கவேண்டும். ஸிம்ஹாஸனத்தின் பின்வசம் ஸிம்ஹாஸனலக்ஷணத்திற்கூறியிருக்கும் கற்பகவிருக்ஷத்தோடு அசுவத்தவிருக்ஷமுமிருக்கவேண்டும்.

இவ்விக்கிரகம் மரத்திலோ, கல்லிலோ, அல்லது லோகத்திலோ, சித்திரமாயோ, சித்திரார்த்தமாயோ, அல்லது சித்திராபாசமாயோ பீடத்திலேனும்,அல்லது சுவரிலேனும் செய்யப்படலாம். புத்தருடைய விக்கிரகம் உத்தம தசகாலத்தில் சித்திரிக்கவேண்டும்.

சாதாரணமாய்ச் சாமானியஜனங்களுக்கு, பௌத்த ஜைனவிக்கிரகங்களுக்குள்ள வித்தியாசமறியமுடிகிறதில்லை. இவ்விருமதக்காரருடைய விக்கிரகங்களில் ஆஸனமூர்த்திகள் வெகுவாய் ஒத்திருக்கும். ஆனால் ஜைனவிக்கிரகமானது ஆடையாபரணங்களற்றிருக்கும். தலையின் உஷ்ணீஷத்தில் ஜ்வாலையற்றிருக்கும்; மார்பின் வலதுபக்கத்தில் ஸ்வர்ணவர்ணமுடைய ஸ்ரீவத்ஸலாஞ்சனம் காணப்படும். புத்தவிக்கிரகத்தில் உபவீதமாய்த்தரித்த உத்தரீயமும் தலையில் உஷ்ணீஷத்தின்பேரில் ஜ்வாலையும் காணப்படும். இவைகளே இவ்விருதிறத்தார் விக்கிரகங்களின் முக்கிய வித்தியாசங்கள்.

து. அ. கோபிநாதராவ், எம். ஏ.

ஸ்ரீ:

# 'இவனியா'ரென்னும்

# புறப்பாட்டாராய்ச்சி.

---

இப்புறப்பாட்டின் இறுதியிலுள்ள "விழுநீர்வேலிநாடுகிழவோன்" என்றது சோழன் முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியைக்குறித்த தென்று சிலரும், சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையைக்குறித்த தென்று செந்தமிழ்ப்பத்திராசிரியரும் வாதாடுவாராயினர். இவருள் செந்தமிழ்ப்பத்திராசிரியர்சொல்வது தவறென்றும், அதனாற்செந் தமிழ்ப்பத்திராசிரியர்க்குச் சங்கநூல்களிற் பயிற்சியில்லையென்றும், பலவாறு நிந்தனைபுரிந்தார் ஒருவிஞ்ஞாபனமுடையார். அதனையும் பத்திராசிரியர்பொறுத்துக்கொண்டு அப்பாட்டின்பொருள் இன்ன தெனப்பலருமுணரும்படி விடைபகருமாறு சில வினவினர். அதற்கு உரியவிடையென்னும்வியாசத்தில் ஒருவிஞ்ஞாபனமுடையார் பொரு ளில்சொல்லால் விடையுரைத்துள்ளார். இப்பாட்டின் பொருளைப் பள்ளிச்சிறாருமெளிதிலுணர்வரென அவருடன்பட்டிருத்தலால் அவர் கருத்துப்படி அப்பள்ளிச்சிறாரிலொருவனாகியநான் என்னறிவிற்கெட் டியமட்டில் அப்பாட்டின்பொருளை ஒருவாறுவிரித்துவிளக்குகின்றேன். இதனைக்கண்ணுற்ற புலவர்பெருமக்கள் பலரும் உண்மைப்பொருளிது வென்பதையுலகோரறியும்படி தமதபிப்பிராயத்தை வெளியிடவேண்டு மாறு கேட்டுக்கொள்கிறேன். அப்பாட்டும் உரையும் வருமாறு.—

(௧௩) "இவனியாரென்குவையாயினிவனே
புலிநிறக்கவசம்பூம்பொறிசிதைய
வெய்கணைகிழித்தபகட்டெழின்மார்பின்
மறலியன்னகளிற்றுமிசையோனே
களிறே,முந்நீர்வழங்குநாவாய்போலவும்
பன்மீனாப்பட்டிங்கள்போலவுஞ்
சுறவினத்தன்னவாளோர்மொய்ப்ப
மரீஇயோரறியாதுமைந்துபட்டன்றே
நோயிலனாகிப்பெயர்கதிலம்ம



பழனமஞ்ஞையுகுத்தபீலி
கழனியுழவர்சூட்டொடுதொகுக்குங்
கொழுமீன்விளைந்தகள்ளின்
விழுநீர்வேலிநாடுகிழவோனே".

"திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்தியல்.

சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளிகருவூரிடஞ்செல்வானைக் கண்டு சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையொடுவேண்மாடத்துமே லிருந்து உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார்பாடியது.

இ-ள். இவன்யாரென்று வினவுவாயாயின், இவன்றான் புலியி னதுதோலாற்செய்யப்பட்ட மெய்புகுகருவிபொலிந்த கொளுத்தற எய்த அம்புகள் போழப்பட்ட பரந்துயர்ந்தமார்பினையுடைய கூற்றம் போன்ற களிற்றின்மேலோன்; இக்களிறுதான் கடலின்கண்ணேஇயங் கும் மரக்கலத்தையொப்பவும் பல மீனினதுநடுவேசெல்லும் மதியத் தையொப்பவும் சுறவினினத்தையொத்தவாண்மறவர்சூழத் தன்னை மருவியபாகரையறியாது மதம்பட்டது; இவன்நோயின்றிப்பெயர்வா னாக; வயலிடத்து மயிலுதிர்த்தபீலியை ஆண்டுள்ள உழவர் நெற்சூட் டுடனேதிரட்டும் கொழுவியமீனையும் விளைந்தகள்ளையுமுடைய மிக்க நீராகியவேலியையுடைய நாட்டையுடையோன். எ-று.

களிற்றுமிசையோனாகிய இவன் யாரென்குவையாயின், நாடுகிழ வோன்! இவன் களிறுமதம்பட்டது; அதனால் இவன் நோயின்றிப் பெயர்கவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

களிற்றுக்கு நாவாயோடு உவமை எதிர்ப்படையைக்கிழித்தோட லும், திங்களோடு உவமை வாளோர்சூழத்தன் தலைமைதோன்றச்செல் லுதலுமாகக்கொள்க. தில் - விழைவின்கண்நின்றது.

பெருநற்கிள்ளிகளிறுகைமிகந்து பகையகத்துப்புகுந்தமையான் அவற்குத்தீங்குறுமென்று அஞ்சி வாழ்த்தினமையால் இது வாழ்த் தியலாயிற்று; இவற்குத்தீங்குறின் நமக்குத்தீங்குறுமென்னுங்கருத் தால் நோயிலனாகிப்பெயர்கவென்றாராயின், வாழ்த்தியலாகாது; துறை யுடையானது பாட்டெனவுணர்க". (௧௩)

என இவ்வாறு பாட்டுமுறையும் எழுதப்பட்டுள்ளன.

இங்ஙனமிருக்க, "விழுநீர்வேலிநாடுகிழவோன்" என்பதற்கு,* நீர்நாடுகிழவோன் என்று இரண்டுசொல்லொழியக்கூட்டிச்சோழனென்று பொருள்கொண்டுள்ளார் வஞ்சிமாநகருடையார். இதனுள் சுருங்கக்கூறுதல்பற்றி முதனின்ற உரிச்சொல்லையொழித்துக்கொண்டாலும், இடைநின்றவேலியெவ்வாறொழிக்கப்படும்? அதனையொழித்தே பலவிடத்தும் நீர்நாடுகிழவோன்என்று கூட்டியே சோழனென்றுபொருள் கூறிச்சென்றமையால், விழுநீர்வேலிநாடுகிழவோன் - சோழன். எனக்கொள்வதற்கு, வேலியிடையே தடையாயிருக்கிறதென்பது அவருமறிந்ததேயாம்.

இவ்வடியிற்குறிப்பிட்ட நாடுகிழவோன் யாவன் என்பதையும், நாடு யாதென்பதையும், நீர்வேலியின்னதென்பதையும் அறியாது செந்தமிழ்ப்பத்திராசிரியர் மயங்கினரென்றார் ஒருவிஞ்ஞாபனமுடையார். இதனால் அவற்றைத்தாமறிந்தவராகக்காட்டிக்கொள்ளும் அவர் பின்புதாமெழுதிய 'அரியவினாக்கட்கு உரியவிடை' யென்னும்வியாசத்திலாவது அவையின்னவெனக்காட்டியிருக்கவேண்டுமே. அங்ஙனங் காட்டமாட்டாமையாலவற்றை அவரேயறியவில்லையென்பது வெளியாகிறது.

நீர்நாடு, நீர்வேலிநாடு என்னுமிரண்டுக்கும் பொருள்வேறுபாடுண்டு. நீர்நாடென்பதற்கு நீர்வளமுள்ளநாடென்பதுபொருளாகும். நீர்வேலிநாடென்பதற்கு நீரரணுள்ளநாடென்பதுபொருளாகும் நீர்வளம்-நாட்டின் அகத்துள்ளது; நீர்வேலி-நாட்டின் புறத்துள்ளது. ஆதலால் நீர்நாடுவேறு, நீர்வேலிநாடுவேறெனவுணர்க. இதனை விழுநீர்வேலிநாடுகிழவோன் என்பதற்கு "மிக்கநீராகியவேலியையுடைய நாட்டையுடையோன்" என உரைகாரரெழுதியிருப்பதாலுமறியலாம். இவ்வுரையுள் நீராகியவேலியென்றதனால் நீரும்வேலியும் ஒன்றென்றே பொருள்படுகிறது. விழுநீர் என்பதற்கு மிக்கநீர் என்று உரையெழுதப்பட்டிருக்கிறது. இதன்கண் மிக்க என்பது மஹத்சப்தபரியாயமாகவும், நீர் என்பது உதகசப்தபரியாயமாகவுமிருப்பதால் மிக்கநீர் என்ற

* வஞ்சிமாநகர் பக்கம் 29. வரிகள் 9, 19.



தொடர்மொழிக்கு மஹோத(க)ம் என்னும் பெருங்கடலே பொருளாமெனவறிக. இதனை அப்பெருங்கடற்கரையிலுள்ளதொருபட்டினத்துக்கு மஹோதையென்னும் பெயர்வழக்குண்மையானறிக. உதசப்தமானது உதகசப்தபரியாயமென்பதை உதகும்பமென்பதனாலும், மஹோதைக்கே உதகையென்னும் பெயர்வழக்குண்மையாலும் அறிக. இங்ஙனம் மஹோதையை உதகையெனவழங்குவதானது சுருங்கக்கூறுமிடத்து "நாம ஏகதேசக்கிரஹணே நாமக்கிரஹணம்" என்னும் நெறிபற்றி மஹாமேருவை 'மேரு' எனவழங்குவதுபோலும் வழக்குவகையெனவறிக. இங்குக்கூறியவாற்றால் விழுநீர்வேலிநாடு என்பதற்கு மஹோதம் என்னும்பெருங்கடலை வேலியாகவுடையநாடு எனப்பொருள்படுகிறது. இது சேரநாடா? அல்லது சோழநாடா? என்பதையாராயின், சோழநாட்டுக்குரியது ரத்நாகரமென்னுங்குடாக்கடலேயாம்; மஹோததியன்று. சேரநாட்டுக்குரியகடல் மஹோததியாகிய பெருங்கடலேயாம். ஆகையால் விழுநீர்வேலிநாடு சேரநாடேயாமெனவறிக.

இனி, நாடுகிழவோன் என்றது படர்க்கைப்பெயரென்றும், அது முன்னிலையாகிய சேரனையுணர்த்தமாட்டாதென்றும், அது விளியேற்குமிடத்து நாடுகிழவோய்என்று யகரவீறாகவேண்டுமென்றும், சங்கநூல்களெங்கும் யகரவீறாகவே அவ்விளிப்பெயர்வழங்கப்பட்டுள்ளதென்றும், இங்கு யகரவீறுயில்லாமையாற் சேரனைக்குறித்ததன்றென்றும், படர்க்கைக்குரிய னகரவீறுயிருத்தலால் அது இங்கு அப்படர்க்கைக்குரிய சோழனையேயுணர்த்தவேண்டுமென்றும் வணங்குமொழிவிண்ணப்பமுடையார் கருதுகின்றனர். அதற்குச்சமாதானம் பின்வருவதாலறிக.

"அண்மைச்சொல்லேயியற்கையாகும்" என்றதொல்காப்பியச்சூத்திரத்தால் அண்மைவிளி இயல்பாகவும் வரக்கூடுமென்றுசொல்லப்பட்டிருக்கிறது. இவ்விலக்கணம், வணங்குமொழிவிண்ணப்பமுடையார் காட்டும் சங்கநூல்களுக்கெல்லாம் முற்பட்டதாய் அவற்றிற்குமுரித்தாமென்பது யாவருமறிந்ததே. இவ்விலக்கணத்துக்கிசையவே திருவாய்மொழியில் "மனஞ்செய்ஞானத்துன்பெருமை மாசூணாதோமாயோனே" எனவும், "அண்டாவண்ணம்மண்கரையநெய்யூண்மருந்தோமாயோனே" எனவும், மாயோன் என்னும் இயற்கைவிளி வழங்கப்

பட்டிருக்கிறது. கிழவன்கிழவோன் என்பதுபோலவே மாயன்மாயோன் என்னும்சொல்லொப்புமையும் இங்கு நோக்கத்தக்கது. அம்மாயோன் என்றவிளியே பிறிதோரிடத்து "வாழிவாழிமாயோய்வாழி" என விகாரப்பட்டும் வழங்கப்படுதல்காண்க. மாயோய்என்று வழங்கப்பட்டதுகொண்டு மாயோனென்பது விளிப்பெயரன்றென்றுசொல்லலொல்லுமா ? இவ்வாறே இயற்கையும் விகாரமுமாகிய இருவேறு விளிவழக்கும் திருவாசகமுதலிய சைவத்திருமுறைகளிலும் பல காணலாம். இவையேயுமன்றிச் சிலப்பதிகாரத்துள் "கடல்வண்ணன்பண்டொருநாள் கடல்வயிறுகலக்கினையே" என்ற ஆய்ச்சியர்குரவைப்பாட்டுரையுள்ளும் அறியலாம். அதற்கு உரையெழுதிய அடியார்க்குநல்லார் 'கடல்வண்ணன் அண்மைவிளி; "அண்மைச்சொல்லேயியற்கையாகும்" என்பதனால். இது மேலுங்கொள்க' எனத் தொல்காப்பியச் சூத்திரத்தை மேற்கோள்காட்டியிருப்பதாலும், இயற்கைவிளி சங்ககாலத்தும்வழங்கப்படுவதுண்டென்றறியலாம். பிற்காலத்தும் முருகன் முருகோன்; உரவன் உரவோன், எனவும் வழங்கும்வழக்குண்மையுமிதற்குச்சான்றாமெனவறிக. இங்கு அண்மைப்பொருள்பற்றிய சிறப்பிலக்கணமுடைய இயற்கைவிளியையொழித்துப் பொதுவிலக்கணமுடைய விகாரவிளியைப்பிரயோகிப்பது இடர்ப்பாடுடையதாதலால் அதனையொழித்தே, வேண்மாடத்துமீது சேரவிரும்பொறையுடனண்மைக்கணிருந்துகூறியமுடமோசியார் நாடுகிழவோனெனச் சேரனை அண்மைவிளியாலழைத்தாரெனவறிக.

ஆகையால் நாடுகிழவோயென்னாது நாடுகிழவோனென்றமையாற் சேரனையுணர்த்தாது சோழனையேயுணர்த்துமென்றுகொள்ளுதல் பொருந்தாதாயிற்று.

இனி "பழனமஞ்ஞையுகுத்தபீலி, கழனியுழவர்சூட்டொடுதொகுக்கும், கொழுமீன்விளைந்தகள்ளின் விழுநீர்வேலிநாடுகிழவோன்" என்பதிற்றோன்றும்சுவை மகிழ்ச்சியேயாம். இது இன்பவடிவாயுள்ளது. "நோயிலனாகிப்பெயர்கதில்லம்ம" என்பதிற்றோன்றும்சுவை அச்சமேயாம். இது துன்பவடிவாயுள்ளது. இங்ஙனம் மாறுபட்ட சுவைகளுக்கு ஏககாலத்தில் ஒருபொருள் நிமித்தமாகமாட்டாதாதலால் நாடுகிழவோன் என்றது இங்கு அஞ்சுதற்குநிமித்தமாகிய சோழனைக்குறி



யாது மகிழ்தற்கு நிமித்தமாகிய சேரனையேகுறிக்குமெனவறிக. அன்றியும், நாடுகிழவோன்என்றது துதிவாக்கியமாதலாலது தீதிலனாகிப் பெயரும் பயனடைதற்குரிய சோழனைக்குறியாது அப்பயனளித்தற்குரிய சேரனைக்குறிப்பதாயும் இருக்கிறது. இதுவுமல்லாமல், உரையில் வயலிடத்துமயிலுதிர்த்தபீலியை ஆண்டுள்ளஉழவர் நெற்சூட்டுடனே திரட்டும்(நாடு)என்றமையால் அந்நாடு மயிலினங்களையுடைய மலைகளையடுத்துள்ள மருதநிலமுடையதென்றும், அங்கு மயிலிறகுதொகுக்குந்தொழினிகழ்ச்சியுண்டென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்விலக்கணங்களையுடையது சோணாடாகாது சேரநாடேயாமாதலால் அந்நாடுகிழவோன் சேரனேயாவனெனவறிக. இங்கு நெற்சூட்டுடனேதிரட்டும் என்றது வயலிலுள்ள நெற்கதிரறுத்துச்சூடுதிரட்டிமுடியும்பொழுதே மயிற்பீலியுமொருபுடை திரட்டிமுடியும் என ஒருதொழிற்கிரு பயன்பெறுதல்கூறியவாறாயிற்று. எங்ஙனமெனில்,நெல்விளைந்தபழனங்களில்வந்து இரைதேருமயிற்கணங்களியல்பாயுகுத்தலாற்கிடக்கும்பீலிகளைக் கதிரறுத்துக்கட்டிவருமள்ளர் நெற்கதிரொடுவிரவாதவாறு தனியேதிரட்டிக்கட்டிக்கொணர்ந்து நெற்சூடுதொகுக்குமளவும் தொகுக்க அவை நெற்சூடுபோலப் பிறிதொருபீலிச்சூடாகக்குவியும் என்பதாம். இங்ஙனம் மயிற்பீலிதொகுக்குந்தொழினிகழ்ச்சியுடையநாடு மலைமண்டலமாகியசேரநாடேயாமென்பதை 'பீலிமஞ்ஞையுநாவியின்பிள்ளையும்' * என்னும் சிலப்பதிகாரவடியாலும், மயிற்பீலிகொள்ளும்வணிகர்செல்லுமிடமதுவேயாதலாலுமறியலாம். இங்ஙனமன்றிப்பீலியை நெற்சூட்டுடனேதிரட்டும் என்பதற்கு, பீலியையும்சேர்த்து ஒரு சூடாகத் திரட்டும் என்று பொருள்கருதுகிறார் உரியவிடையுடையார். அதனாலொருசிறப்புமின்றியொழிதலாலும், கதிரொடுதொகுக்குமென்னாது, சூட்டொடுதொகுக்குமென்றமையாலும் அது பொருளன்றென்றறிக.

இனி, 'இவன் யார்' என்ற வினாவுக்கு 'நாடுகிழவோன்' என்பதே விடையாகவேண்டுமென்றும், அதனால் நாடுகிழவோன் என்பது சோழனையேயுணர்த்துமென்றும் வனங்குமொழிவிண்ணப்பமுடையார்கருதுகிறார். இது பலருமங்கீகரிக்கும்படி தோன்றுதலாலிதனையிங்கு நன்கு ஆராயவேண்டும்.

---

* சிலப். காட்சிக். அடி. 53.

இங்கு, 'யார்' என்றது 'இவன்' என்னும் எழுவாய்க்குப்பயனிலையாயுள்ளது. அது பெயர்ச்சொல்லா? அல்லது வினைச்சொல்லா? என்று விசாரிப்போமாயின் வினைச்சொல்லெனவே பெறப்படும். எவ்வாறெனில், யாரென்னுஞ்சொல் பெயர்ச்சொல்லாங்கால் உயர்திணைப்பன்மையொருபாற்கேயுரியதாய் ஏனைய ஒருமை இருபாற்குமொன்றற்குமுரியதன்றாயிருக்கும். இதனை யார்வந்தார்? வந்தார்யார்? எனப் பலர்பாற்கேயுரியதாய்வருதலாலும், யார் வந்தான்? யார் வந்தாள்? என ஒருமைக்கண்வாராமையாலும் அறியலாம். இங்கு இவன்யார் என்பதிலுள்ள யாரென்பது பெயர்ச்சொல்லெனக்கொள்ளின் இவன் என்னும் ஒருமையோடியையாது பால்வழுவாமாதலால் அவ்வழுவாராமைப் பொருட்டு வினாவினைக்குறிப்பாகிய வினைச்சொல்லென்றேகொள்ள வேண்டும். கொள்ளவே "யாஅரென்னும்வினாவின்கிளவி, யத்திணைமருங்கின்முப்பாற்குமுரித்தே" என்பதனால் ஒருமைக்குமுரியதாமாதலால் இவன்யாரென்பது பால்வழுவாகாது இலக்கணமுடையதாயமையும்.

ஆதலால் யாரென்றது இங்கு வினைக்குறிப்புப்பற்றிவந்தவினாவென்பது வெளியாயிற்று. ஆகவே 'இவன்யார்' என்னும் வினைப்பயனிலைகொண்டதொடர்க்கு வினையே அறியலுறவாதலால் இவன்செயல்என்ன என்பதே போதமாமெனவறிக. பெயர்பற்றிவரும் வினாக்களுக்குவிடை பெயராலிறுப்பதுபோல வினைபற்றிவரும்வினாக்களுக்கு விடை வினையாலிறுக்கவேண்டுமென்பது நியதமாயிருக்கிறது. இதனை, அவன் சாத்தனோ? கொற்றனோ? எனப்பெயர்பற்றிவினாவியவழி சாத்தன்; அல்லது கொற்றன்; அல்லது மற்றொருவன் எனப்பெயரால் விடையிறுக்கப்படுவதல்லது உண்டான், அல்லது சென்றான் என வினையால் விடையிறுக்கப்படாமையாலும், இவன் உண்டானோ? உண்டிலனோ? என்று வினைபற்றிவினாவியவழி உண்டான்; அல்லது உண்டிலன்; என வினையால் விடையிறுக்கப்படுவதல்லது, சாத்தன்; அல்லது கொற்றன் எனப் பெயரால் விடையிறுக்கப்படாமையானுமறியலாம். ஆதலால் யார் என்ற வினாவினைக்கு நாடுகிழவோன் என்றபெயர் விடையாகமாட்டாதென்பதும், அதைவிடையாகக்கொள்ளின் அதுவே விடைவழுவாமென்பதும் நன்குதெளியத்தக்கன. பின்னையாதாயிருக்குமெனின் ஆராய்வாம். யார் என்றது இங்கு வினைக்குறிப்பாதலின்



இவன்யார் என்ற வினாவுக்கு இவன்செய்தி என்ன என அறியலுறவு செயலேயாமாதலால் நோயிலனாகிப்பெயர்தலாகியசெயலே விடைக்குரியதாமெனவறிக. இதனால் நோயிலனாகிப்பெயர்க என்பது விடைவழுவன்றென்றும், நாடுகிழவோன் என்பதே விடைவழுவாமென்றும் அறியத்தக்கன. மாணவர்களுக்குப்பாடஞ்சொல்லுங்காற் பத்திராசிரியரும் சோழனென்று கூறினாரெனின் நிரூபணமில்லாமலவர்கூறுவனவெல்லாம் வேதமொழியாகவேண்டுமோ? அவர்சொல்லுவதொன்றும் தவறக்கூடாதென்பது நியதியோ? நிரூபணமின்றி அவர்நெஞ்சிற்றோன்றியபடி கூறியதையோராதாரவாகக்காட்டுதல் பொருந்தாதிருக்கிறது. உரையிற்கூட்டிக்காட்டிய வினைமுடிபுவாக்கியங்களில் 'களிற்றுமிசையோனாகியவிவன்யா'ரென்பது ஒருவாக்கியமாய் முற்றிநின்று என்குவையாயின் என்னும் அனுகாரக்குறிப்புக்குரிய புரோவாதமாயிற்று. என்குவையாயின் என்பது, எனின் என்பதன் பரியாயமாகிய வினையெச்சமாதலால் அது நாடுகிழவோன்என்னும் பெயர்கொள்ளமாட்டாதென்பது நன்குணரத்தக்கது. அன்றியும் நாடுகிழவோன் என்பது முன்னும்பின்னுமியையாது தன்னந்தனியேயொரு தனிமொழியாயிருப்பதால் அது படர்க்கையோரைப்பாராமுகமொழிந்து தன்முகமாகவழைத்தற்பயத்ததாகிய விளிப்பெயரேயாகுமென அறியத்தக்கது. அதனை விளிப்பெயரெனக்கொள்ளாது வெறும்பெயரெனக்கொள்ளின்நின்றுவற்றுமாதலால் அதற்கு ஒருமுடிக்குஞ்சொற்காட்டியிருக்கவேண்டும். அஃதின்மையாலது சோழன்பெயரெனக்கொள்ளுதல் பொருந்தாதிருக்கிறது. இதனை வணங்குமொழிவிண்ணப்பமுடையாருமறிந்தே, இவன் நாடுகிழவோன் எனச்சுட்டுவருவித்துக் கூட்டியுரைக்கின்றார். இவன் என்னும் சுட்டுடன் உரைகாரர்கூட்டிக்காட்டாமையால் அதுவும் உரைகாரர் கருத்தொடுபொருந்தாதென்க.

அன்றியும் உரைகாரர்க்கு அது கருத்தாயின் நோயின்றிப்பெயர்கவென்புழி இவனென்னும் சுட்டுவருவித்து இவன் நோயின்றிப்பெயர்கவெனக்காட்டியதுபோல, ஈண்டும் இவன் நாடுகிழவோன் என இவன் என்னும் சுட்டுவருவித்துக்கூட்டியுரைத்திருக்கவேண்டும். அங்ஙனமில்லாமையாலு மதுபொருந்தாதெனவறிக. அன்றியும், நாடுகிழவோன் என்பது யார் என்பதற்கு விடையாய்ச் சோழனையுணர்த்துமென்றுகொண்டால், யார் என்ற வினாவுக்குச் சோழனோ? பாண்டியனோ?

என்பதுகருத்தாகவேண்டும். அது கருத்தாயின், யாவன்என்னும்பெயரால் வினவாது, யார் என்னும் வினையால் வினவுதலும் வழுவாமெனவறிக. அன்றியும் வருபவன் சோழனென்றுமோசியார்கூறக்கேட்டேயிரும்பொறை அறியவேண்டியவனாகவுமவனிருக்கவில்லை. இருவரும் வேண்மாடத்தொருங்கிருத்தலால் காட்சியில் இருவருமொருங்குணரல்கூடும்; குறிப்பாலும் ஒற்றாலும் இரும்பொறையே 'முடமோசியாரறிவதற்குமுன்பறியவுங்கூடு மாதலாலும் நாடுகிழவோனென்று சோழனைக்குறித்து இரும்பொறைக்கு மோசியார்தெரிவிக்கற்பாலரல்லரெனவறிக. அன்றியும், யார் என்றவினாவுக்கு நாடுகிழவோன் என்பதே பயனிலையாகிய விடையாயின் அதுகொண்டே முற்றிவிடுமாதலால் இவன் களிறுமதம்பட்டது அதனாலிவன் நோயின்றிப்பெயர்கவெனப் பின்னர்க்கூறியன வேண்டாதுகூறலாமெனவறிக.

அன்றியும், வருபவன் சோழன்என்று இரும்பொறைதெரிந்துகொண்டசெய்தியை, இரும்பொறைகூற்றின் அனுகாரமாகிய 'புலிநிறக்கவசம்பூம்பொறிசிதைய,வெய்கணைகிழித்தபகட்டெழின்மார்பின்' என்னும் குறிப்பால் மோசியாரேகாட்டியுள்ளார். இதனுள் எய்கணைகிழித்தபகட்டெழின்மார்பு எனச் சோழன்மார்பு வருணிக்கப்பட்டுள்ளது. இங்கு அவன் போர்செய்து புண்பட்டுவாராமையாலது முன்புபட்டபுண்ணைக்குறித்ததாகவேண்டும். எய்கணை என்றதில் எய்தற்றொழிற்கு வினைமுதல்கூறப்படாமையால் அது யானெய்கணையென்று கூறப்பெறிற்றற்புகழாமென்றுவிடுத்தற்குரிய இரும்பொறையேயாதல் வேண்டும்.

இதனாற்"புலிநிறக்கவசம்பூம்பொறிசிதைய,வெய்கணைகிழித்தபகட்டெழின்மார்பின், மறலியன்னகளிற்றுமிசையோனே"என்பதற்கு புலிநிறக்கவசம்........மிசையோனாய்ப்பண்டுமெதிர்ந்த பகைவனுமிவனே என்று தன்றுணிபுகூறியதாகவேகொள்ளப்படுமாறுகாண்க. இங்கு இவனேஎன்பதற்கு இங்குவருபவன்றான்என்றதுபொருளாகக்கொள்க. இவன்றான் களிற்றுமிசையோன் என்றது இவனவன் என்பதுபோலும் பிரத்தியபிஞ்ஞைவிடயமாமென்பது தெரிந்துகொள்க.

இவன்யார் என்பதிலுள்ள இவன் என்பதற்கு இங்ஙனம் பகைமைபூண்டொழுகு மவன்என்பதுபொருளாகக்கொள்க. இங்ஙனம்



பொருள்கொள்ளவேண்டுமென்பதுகருதியே உரைகாரர் வினைமுடிபு கூறுமிடத்துக் களிற்றுமிசையோனாகியவிவன் என்று இரண்டுவாக்கியத்தை ஒன்றுபடக்கூட்டியுரைத்தமைகாண்க. இதனாற்களிற்றுமிசையோன் என்றதிலுள்ளகளிறு முன்பு இரும்பொறையொடு இறப்பிற்போர்செய்த அக்களிற்றைச்சுட்டியதென்றும், களிறே என்றதிலுள்ள களிறு நிகழ்ச்சியில் மதம்பட்டதெனத்தெளியப்பட்ட அக்களிற்றைச்சுட்டியதென்றும் அறிக.

ஆதலால் இரும்பொறைகூற்றாகவே மோசியாரனுகரித்த"இவனே புலிநிறக்கவசம்பூம்பொறிசிதைய, வெய்கணைகிழித்தபகட்டெழின்மார்பின், மறலியன்னகளிற்றுமிசையோன்" என்பதற்கு, இங்குவருபவன் முன்பு என்னொடுபோரேற்றுவந்து விழுப்புண்பெற்றபகைமையுடையான் என்றபொருள்போந்தமையா லவன் சோழனென்பதும் இரும்பொறையறிந்தானாமாதலா லவனைச்சோழனோ? பாண்டியனோ? வெனஅவன் வினவவேண்டாமையால், இவன்யார் என்பதற்கு இத்தன்மையுடையான்வருஞ்செய்தியென்னென வினைபற்றிவினவினன் என்பதேபோதரும். அதாவது இவன் என்செய்யத்தக்கவன் அடற்பாலனோ? அல்லனோ? வென்பதே வினாப்பொருளாமெனவறிக. அதற்கு விடை, அடற்பாலனல்லன்என்பது போதரத் தீதிலனாகிப்பெயர்கவெனப்பட்டது. அடற்பாலனல்லன் என்பதற்கு ஏது; களிறுமதம்பட்டதென்பது. அதற்கு நிரூபணம், முந்நீர்வழங்குநாவாய்போலவும் பன்மீனாப்பட்டிங்கள்போலவும் சுறவினத்தன்னவாளோர்மொய்ப்பவருதல். இங்ஙனங்கூறியவாற்றாலிரும்பொறை களிற்றுமிசைவருவோனைத் தன்னோடு மாறுகொண்டுபொருது விழுப்புண்பட்டபகைவனாகிய சோழனென்று தானேதெரிந்துகொண்டதை மோசியாரறிந்துகொண்டுகூறுதலால் நாடுகிழவோன் என்று சோழனைச்சுட்டிக்கூறவேண்டாமையானும், கூறின், அதுநின்றுபயனின்மையென்னும் குற்றமுடையதாமாதலானும், சோழனுக்குரிய சிறப்பியல்பு ஒன்றுந்தோன்றாதுகூறியதனாலும், அங்ஙனங்கூறியதனால் அது சோழனையுணர்த்துமாற்றலிலதாமாதலானும், முன்னிலையான இரும்பொறையே இங்கு துதித்தற்குரியனாயிருத்தலானும், அத்துதிப்பொருள்தோன்ற ஈற்றடி நான்கானும் விசேடித்து அவனையே விளித்துக்கூறுவது பொருத்தமுடையதாயிருத்தலானும், நாடுகிழவோன் என்றது சேரலிரும்பொறையையே

குறித்த விளிப்பெயரென்றறிக. நாடுகிழவோன் என்றது விளிப்பெயராயின் அதனை இடையிட்டுக்கூட்டியதென்னையெனிற்கூறுவேன். இவனே "களிற்றுமிசையோன்; களிற்றுமிசையோனாகிய இவன்யார்" என்னும்சொற்கள் இரும்பொறைவார்த்தையி னனுகாரமாகையால் அதன்முன்பே நாடுகிழவோன் என இரும்பொறையை மோசியார் விளிப்பது பொருந்தாமையால் அது, களிற்றுமிசையோன் என்பதன் முன்வைக்கப்படாதாயிற்று. இவன் களிறுமதம்பட்டது என்று தொடங்கியவார்த்தைகளே மோசியாருடைய வார்த்தைகளாதலால் அவற்றைப்பராமுகமின்றிச்சாவதானமாகக்கேட்கும்படி கூறியதுபற்றி அவற்றிற்கு முன்னம் நாடுகிழவோன் என்ற விளிப்பெயர்கூட்டப்பட்டுள்ளது. ஆதலால் அவ்விளிப்பெயர்முதற்கட்கூட்டி வினைமுடிவுசெய்யாது இடைக்கட்கூட்டி வினைமுடிபுசெய்திருப்பதே நெறிப்பாடுடையதாயிற்று. இனி, இதன் சரித்திரத்தையர்ராய்வாம்.

கருவூரிடஞ்செல்வானைக்கண்டு என்றதிற் செல்கைத்தொழிலின் கருத்தாவாகியசோழன் கருத்துடைவினைமுதலா அல்லனா என்று விசாரிப்பாம். கருத்தாவெல்லாம் கருத்துடைவினைமுதலாதலால் கருத்திலனாயின் அதனைத் தெரித்துரைக்கவேண்டும். அங்ஙனமுரையாமையால் கருத்துடைவினைமுதலாகிய கருத்தாவேயாம் என்பது நன்குணரலாகும். இதனாற்சோழன் சுயேச்சையாய்க்கருவூரிடஞ்சென்றானென்பதே பெறப்படும். இவன் யானைமதம்பட்டதென்றது காட்சியிற்கண்டதுகொண்டே கவிகூறியதனாலும், அது ஒருகாரிய சாதக ஏதுவாய் நின்றமையாலும்,உறையூரினின்று மதம்பட்டுக்கருவூர்சென்றதென்று சொல்லவொண்ணாதாயிற்று. ஆகவே உறையூரினின்றும் சோழன் ஒரு காரியார்த்தமாகக் கருவூர்சென்றானென்பதும், சென்றவிடத்துத் தானிறங்குதற்குரிய இடநோக்கிச்செலுத்தச்செல்லாது தன்பகைவனிருக்குமிடம்நோக்கிக் களிறுசென்றது என்பதும்போதரும்.

அக்காரியந்தான் யாதெனவாராய்வாம். இப்பாட்டாலும் உரையாலும் பெருநற்கிள்ளிக்கும் இரும்பொறைக்கும் பகைமையுண்டென்று தோன்றுவதாலும், இப்பாட்டின்பயனாய் அப்பகைமை தீர்ந்திருக்க வேண்டுமாதலாலும், அப்பகைதீர்த்தலாகிய காரியார்த்தமாகவே பெருநற்கிள்ளி கருவூரிடஞ்சென்றானென்பது பெறப்படுகிறது.



இப்பாட்டின்பயனாய் அப்பகைமை எவ்வாறு தீர்ந்திருக்கவேண்டுமெனில்? அடற்பாலனா? அல்லனா? என்றாற்குக் களிறுமதம்பட்டது; அதனால் இவன் நோயின்றிப்பெயரவேண்டும் என்று மோசியார்கூறிய கூற்றின் குறிப்பால், சோழன் உனக்குப்பகைவனாயினும் மதகளிறு வயப்பட்டு வீறுபாட்டிலகப்பட்டுழல்பவனாதலால் அவ்வூறுபாடுநீக்கியுபகரிப்பதேயுனக்குப் போராண்மையாகும் என்பதுபெறப்பட்டமையால் "போராண்மையென்பதறுகணொன்றுற்றக்கால், ஊராண்மைமற்றதனெஃகு" என்னும் நீதிநூன்முறைமேற்கொண்டு சேரலிரும்பொறை தன் யானைகளையும் பாகரையும் விடுத்துத் தானுஞ்சென்று நின்று சோழன்மதகளிற்றைப்பிணித்துச் சோழனையுய்யக்கொள்ளக்கடவன்; அதற்குச்சோழன் பகைமைமறந்துபகரித்த பெருந்தன்மையைவியந்து இரும்பொறைக்கு நன்றிபாராட்டிப்பணிமொழிகூறக் கடவன்; அதனாலவ்விருவரும் பகைமையொழிந்து நட்பினராகக் கடவரென்பதே குறிப்பாற்கொள்ளத்தக்கது.

இன்னும், "பெருநற்கிள்ளிகளிறுகையிகந்து பகையகத்துப்புகுந்ததென்றமையால் பகையகம்புகுதற்குமுன்புமதம்பட்டதென்று விளங்குகின்றது. இங்கு பகையகமென்றது பகைப்புலத்தைக்குறியாது, பகைவனிருக்குமிடத்தையே குறித்ததாயிருக்கிறது. இதனாற்கருவூர் உறையூர்க்கணித்தாயிருக்கவேண்டுமென்னும் நியதியில்லையென்பதும் விழுநீர்வேலிநாடுகிழவோன் என மலைவேலிக்கெதிராயுள்ள மேல்கடல்வேலிநாடுகொண்டு விசேடித்தமையால் அச்சேரலிரும்பொறையிருந்த கருவூர் கடன்மலைநாட்டுள்ளதென்பதும் நன்கறியலாகும். இப்பாட்டினுள் நோயிலனாகிப்பெயர்கவென வாழ்த்துதற்குரியவிஷயம் சோழனாதலால் இஃது அவனையே பாடியதாம். ஆயினும் அவன்வாழ்விற்கு நிமித்தமாகிய சேரனைத்துதிப்பதானது, பிள்ளைத்தமிழின் காப்புப்பருவச்செய்யுட்களிற்பிள்ளையின்வாழ்விற்கு நிமித்தமாகிய கடவுளைத் துதிப்பதுபோலுமியையுடைத்தாமாதலாலது விரோதமாகாதென வுணர்க். இங்ஙனம் விஷயவிசாரம்செய்யுமருமையான செந்தமிழ்ப்

பத்திரிகையில் ‘சங்கமிருந்த தமிழையெல்லாம் உண்டுதிகழ் சிங்கங்க ளிரண்டிருந்த செழுந்தவிசில் கழாக்காலைவைத்துவிட்ட’ரென்று பத்தி ராசிரியரைத்தூஷிக்கிற ருரியவிடையுடையார். இதன்கருத்து சங்கத் தில் பத்திராசிரியரிருப்பதால் அது நாறுகிறதென்பதாம். இது, சங்கத்திற்றானே வலிந்துபுகுந்ததொருபேதைக்கியைந்ததல்லது சங்கத் தாராகிய சான்றோரால் வலிதிற்புகுவிக்கப்பெற்றிருக்கும் பத்திரா சிரியர்க்குச் சிறிதும்பொருந்தாதிருக்கிறது. விஷயத்தைவிட்டு விலகிப் பொருளொடுபொருந்தாதுபேசும் இன்னோரன்னவையே ஊத்தை வாயங்காந்தகூற்றாயிருத்தலால் அவையே நாற்றமுடையவாயிருக்கின் றன. இனியேனுமிதனையுணர்ந்து செந்தமிழ்க்குரிய விஷயங்களைமட்டு மாராய்ந்தெழுதிவந்தால் நலமாயிருக்குமென்பதை நேயரறிவீராக.

ஒரு மாணவன்.

உ

கணபதி துணை.

தென்றலவரையென்கின்ற மன்னார்குடியில், கோட்டூர் அரங்கசாமி முதலியாரவர்கள் சபையில், ஷையூர்ச்சடகோபமுதலியாரவர்கள் வேண்டுகோளின்படி, திருவாவடுதுறையாதீனவித்துவான் ஸே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் எடுத்துக்கூறிய இல்லறம் என்னும் விஷயப்பிரசங்கம்:—

# இல்லறம்.

உலகமெல்லாம் இறைவன்செயலான் நடைபெறும், ஆயினும், * “ஒன்றினைச்செய்கைசெய்யா தொழிகைவேறொன்றுசெய்கை-யென் றிவையுடையோனுதி யீறிலாப்பரமயோகி - நன்றுதீதிகழ்ச்சிவேட்கை நட்பிகல் விளைக்குமாயை-வென்றவன்செய்யுமாய விருத்தியாராளக்கவல் லார்” என்றபடி அவ்விறைவன்செயலையளவிடமுடியாது. அவ்வாறள விலாச்செய்கையையுடைய இறைவனே “போகியாயிருந்துயிர்க்குப் போகத்தைப்புரிதலோரார் - யோகியர்யோகமுத்தி யுதவுதலதுவுமோ ரார்” என்றதனால் இருவகையறங்களையு நடத்துகின்றான்.

அவற்றுள் இல்லறநடத்தலெவ்வாறென்னில்? “சத்தியுஞ்சிவமு மாய † தன்மையிவ்வுலகமெல்லா - மொத்தொவ்வாவாணும்பெண்ணு முயர்குணகுணியுமாகி - வைத்தனனவளால்வந்தவாக்கமிவ்வாழ்க்கை யெல்லா - மித்தையுமறியார்பீடலிங்கத்தினியல்புமோரார்” “இணை ரெரித்தேவுந்தானேயெரிவளர்ப்பவனுந்தானே - யுணவுகொள்பவனுந் தானேயாகியவொருவன்வையம் - புணர்வுறுபோகமூழ்கப்புருடனும்

* ஒன்றினைச்செய்கை - கர்த்தத்துவம்.
செய்யாதொழிகை - அகர்த்தத்துவம்.
வேறொன்றுசெய்கை - அந்நிதாகர்த்தத்துவம்.

† தன்மை - இருவேறுதன்மை. உலகம் இயங்கியற்பொருள், நிலையியற் பொருள். ஒத்தொவ்வாவாணும்பெண்ணும் - வடிவமெல்லாமொத்துக் குறிகுணங்களொவ்வாது இருவேறுவகைப்பட்ட ஆணும்பெண்ணு மென்க. வைத்தனன் - தம்முட்களித்துவாழவைத்தனனென்க. அவ ளால் - அவளை மணஞ்செய்தலாலென்க. வாழ்க்கையாவன-உலகமெல் லாம் அவனவளதுவென்னும்அவயவப்பகுப்புடையனவாதல்,முத்தொழி லுடையனவாதல், ஒரு கருத்தாவையுடையனவாதல் முதலாயின வென்க.

பெண்ணுமாகி- மணவினைமுடித்தானன்னான்புணர்ப்பையார் மதிக்கவல்லார்" என்றபடியே ஆணும்பெண்ணுமாகிச் சத்தியைமணந்திருந்ததனால் இல்லறநடைபெறுகின்றது.

அவ்வில்லறமே ஈண்டெடுத்துக்கூறத்தொடங்கியது.

அஃதாவது, இல்வாழ்க்கைநிலைக்குச்சொல்லுகின்றநெறியினின்று அதற்குத்துணையாகிய கற்புடைமனைவியுடன்செயப்படுகின்ற அறமாம்.

அறமாவது நூல்களிலேவிதித்தனவற்றைச்செய்தலும், விலக்கியவற்றையொழிதலுமாம்.

அறஞ்செய்தற்குரிய இருவகையுள் இவ்வில்லறமேமுதலதாதலால், இதனைத்திருக்குறளிலே முதலிலெடுத்து, இருபததிகாரமாகக் கூறினார். ஔவையாரும் "இல்லறமல்லது நல்லறமல்ல" என்றார். மாயூரப்புராணத்தில், "ஆவினுட்சுரரான்போலு மறத்துளில்லறமேபோலு - நாவினுண்மெய்நாப்போலு நாட்டினுட்சோழநாடு" என்றார். திருக்குறளில் "ஆற்றினொழுக்கியறனிழுக்கா வில்வாழ்க்கை - நோற்பாரினோன்மையுடைத்து" என்றும், "அறனெனப்பட்டதேயில்வாழ்க்கையஃதும்- பிறன்பழிப்பதில்லாயினன்று" என்றும் கூறி இவ்வில்லறநெறியில் அதற்குரியவியல்பொடுகூடிவாழ்பவனை 'முயல்வாருளெல்லாந்தலையென்றும்' "வானுறையுந்தெய்வத்துள்வைக்கப்படும்" என்றுங்கூறினார்.

இவ்வில்வாழ்வான் கற்புடையமனையாளுடன்கூடியில்லறநடத்துங்கால், பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி, ஆதாரமானவராலே நீக்கப்பட்டவர், வறுமையுற்றோர், அநாதராய்த்தன்பால்வந்திறந்தோர் யாவர்க்குந்துணையாகுதல், * "தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கலொன்றாங் - கைம்புலத்தாறோம்பறலை" என்றவாறு ஐந்திடத்தும் அறநெறியைவழுவாமற்செய்குதல், அன்புடைமை, இனியவைகூறல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, ஈகைமுதலியவற்றைக்கொண்டிருத்தலால் இங்ஙனங்கூறினாரெனக.

* தென்புலத்தார்-பிதிரர். அவர் அயனாற்படைக்கப்பட்டதொரு கடவுட்சாதியென்றார் பரிமேலழகர். "தென்புலத்தவர்தாமயன்றருமரீசிமுதலினோர்சிறுவரங்கவரு- ளின்புறுமரீசிவீராட்டுவைமுதலோரின்றவர்சுராசுரர்முதலோர்க்-கன்புடைப்பிதிரராகுவர்கவியோடங்கிராபுலத்தியன்வசிட்ட - னென்பவர்க்குதித்தோர்மறையவரரசர்வணிகர்வேளாளருக்கியைவர். எனக்காஞ்சிப்புராணத்திற் கூறியவாறு காண்க.



இனித் துறவறமெய்தி ஞானத்தாற்கதியடைதல் சிறந்ததெனில், அஃதங்ஙனமாகுக; பெரியபுராணமுதலிய நூல்களிலே அறுபத்துமும்மைநாயன்மார்முதலோர்களிலே பற்பலரும் இல்லறநெறியினின்றே சரியை, கிரியை, யோகம், ஞானங்களையியற்றிநின்று கதியடைந்தமை நன்கு கூறப்படுதலுங்கண்டுணர்க.

இவ்வில்வாழ்க்கைநிலைக்குரியனாவான் பிரமசரியநிலையைவிடுக்கவேண்டித் தன்னாசிரியனிடத்தறிவித்தருள்பெற்றுக்கொண்டு மனைவியாகவருபவளை நூல்களிற்கூறியமுறையே ஆராய்ந்துகொள்ளல்வேண்டும்; எவ்வாறெனில்? ஒருகோத்திரத்திற்பிறந்தவள், நோய்பழியியைந்தமரபில்வந்தவள், பெண்ணேபெறுகின்றமாதர்வயிற்றிற்பிறந்தவள், மலைபாம்பு நதி பறவைமுதலிய பெயருடையவள் விவாகத்திற்குரியவளாகாள். இனியசொல்லுடையவள், கணவன்வயதிற் குறைந்தவயதுடையவள், யாரிடத்திலுங்கோபமில்லாதவள், முகத்தெளிவுடையவள், பலருடன்பிறந்தவள் விவாகத்திற்குரியவளாவாள்.

இழிகுலத்துப்பெண்ணையாவது, நூல்களிற்சொல்லியவடிவங்கள் வேறுபாடுடையவளையாவது விவாகஞ்செய்தோன் அறிவழிந்து நரகத்தையடைவான் என்றார்.

இவ்வாறன்றி விவாகஞ்செய்தற்குரியவளுடைய பாதாதிகேசமீறாகவுள்ள இலக்கணங்களைக்காசிகாண்டத்தில், ௬௨ - செய்யுளாகக் கூறியிருக்கின்றார்; திருவிளையாடற்புராணத்திற் சுருக்கிப்பதினான்கு செய்யுளாகக்கூறியிருக்கின்றார்; அவற்றைப்புணர்ந்துகொள்ளல்வேண்டும். விரியுமாதலில் ஈண்டெடுத்துரைக்கவில்லை; இவ்வாறே மகளைக்கொடுப்போனும்மணமகனையும் "உன்னதமாறுநீண்டவுறுப்பைந்துருக்கந்தானு - மன்னதுகுறுக்கநான்காமகலுறுப்பிரண்டேழாகச் - சொன்னதுசிவப்புமூன்றுகம்பீரந்தொகுத்தவாறே - யின்னவைவிரிக்கிலெண்ணான்கிலக்கணவுறுப்பாமென்ப" எனக்கூறிய முப்பத்திரண்டுறுப்பிலக்கணங்களையும் ஆராய்ந்துகொள்ளல்வேண்டும்.

இவ்வாறன்றி, "பண்புடையகுடிப்பிறப்பும்பழிப்பில்லாப்பேரழகும் பாரந்தகேள்வி - நுண்பொருளைநீரொழியப்பாலுகருமன்னம்போனுக்கித்தீர்வு - மொண்பொருளுமிந்நான்குமுடையாரைக்கிடையாதிவ்வுலகந்தன்னிற் - பெண்பெறுகைபோலிந்தப்பிழையேதுங்கண்டிலனே பேசுங்காலே" "குலம்வேண்டுமென்றிருப்பார்குலத்துள்ளார்கல்வியினாற்

குறையாளனைப் - பலம்வேண்டுமென்றிருப்பர்தந்தைமார்பரந்தபெருஞ் செல்வமுள்ள - தலம்வேண்டுமென்றிருப்பர்தாய்மார்கள் யௌவனமு மழகுஞ்சார்ந்த - நலம்வேண்டுமென்றிருப்பர்நாறுகுழற்கன்னிமார்நலத் தின்மிக்கார்” எனக்கூறியவாறு இந்நான்குமுடையவனை நோக்கிக் கொள்ளல்வேண்டும்.

இங்ஙனம் விவாகத்திற்குரிய நாயகன்நாயகியினுடைய ஆயுளைச் சாதகங்களாற்றெரிந்துகொண்டு, ஆடவர்க்கு வலப்புறமும், மாதர்க் கிடப்புறமும் நல்லிலக்கணமிருப்பதையுநோக்கி, விரிச்சியுஞ்சகுனமு நன்மையாயிருத்தலறிந்து, பொருந்துமாயின் விவாகஞ்செய்தல்வேண் டும்.

உடன்பிறந்தவர்க்கு ஏககாலத்திலும் ஓராண்டுக்குள்ளும் விவா கஞ்செய்தல்கூடாது.

எட்டுவயதுடையவள் கௌரி, ஒன்பதுவயதுடையவள் உரோ கிணி, பத்துவயதுடையவள் கன்னி, பன்னிரண்டுவயதுடையவள் விடளி, என்று பெயர்பெறுவர்.

இவர்களுள்ளே கௌரியைத்தானஞ்செய்தோன் சுவர்க்கம்பெறு வன். உரோகிணியைத்தானஞ்செய்தோன் வைகுண்டத்திருப்பன். கன்னியைத்தானஞ்செய்தோன் பிரமபதத்திருப்பன். விடளியைத் தானஞ்செய்தோன் ரௌரவமென்னுநரகத்திருப்பன். பன்னிரண்டு வயதிற்குமேற்பட்டவளைத்தானஞ்செய்தவனுக் குவருங்கதியைச் சொல்லமுடியாது.

இனி “பூத்தவள்வதுவைமுற்றாதிருப்பிற் பூப்பவுங்கொடாது வைத்தவனைக் - காத்திருந்தவனீரியக்கரும்பிதிரர்கைக்கொண்டுநுகர்த லினங்கோ - மூத்தாறுகுலமுமழியுமாதலினான் மொய்த்தபூப்பினுக்குரித் தாய - யாத்தவாயுளின்முன்னாயுளுங்கதியுமீட்டுவோர்மன்றல்செய் தளிக்க” என்றதனால் ருதுவானவளை விவாகஞ்செய்துகொடுக்காது வைத்திருப்பவன் மலசலங்களைப்பிதிர்களுண்பார்களாதலால் அவன் குலமழிந்துவிடும்; ஆதலால் ஆயுளுங்கதியும்விரும்பினோன் ருதுவாவ தற்குமுன்னேவிவாகஞ்செய்துகொடுக்கவேண்டும். பூப்புநிகழ்ந்தமாதர் முதனாட்சண்டாளி, இரண்டாநாட்பிரமகத்திசெய்தவள், மூன்றாநாள் வண்ணாத்தியென் றுங்கூறப்படுவர்.



இனிப் பொருள்விரும்பிப் பெண்ணைவிவாகஞ்செய்துகொடுத் தோன்குலமழியும், அப்பெண்ணுந்தூயவளாகாள், புழுக்கையோடொப் பாள். வலிமையினாற்கவர்ந்துகொண்டுவந்தபெண்ணுங், கருப்பாதான முதலியன செய்யப்பெறாதபெண்ணும் விவாகஞ்செய்யினும் சுத்த முடையவளாகாள். புழுக்கையோடொப்பாள்.

இனி, மணமாவது எட்டுவகைப்படும். அவை “பிரமமேபிரசாபத் தியந்தெய்வம்பேணுமாரிடம்வளரசுரம் - பரவுகாந்தருவமிராக்கதம் பசாசமெனப்பகர்மன்றலோரெட்டாம். இவற்றுள் பிரமமணமாவது பிரமசரியவிரதநோற்றபிரமசாரிக்கு அக்கினிமுன் பெண்ணைத்தான மாகக்கொடுப்பது. பிரசாபத்தியமணமாவது பெண்ணைக்கொள்ளு தற்கு நாயகன்கொடுத்தபொருளுக்கிரண்டுமடங்கு ஆபரணம்பூட்டிப் பெண்ணை அக்கினிமுன்றானஞ்செய்வது. தெய்வமணமாவது யாகஞ் செய்தவருக்குப் பெண்ணைத்தட்சணையாகக்கொடுப்பது. ஆரிடமணமா வது இரண்டுபசுவையலங்கரித்து நிறுத்தி அவற்றிடையிலே பெண்ணை நிறுத்தி யுயர்ந்தோருக்குக்கொடுப்பது. அசுரமணமாவது பெண்ணைப் பெற்றவனுக்குவேண்டுவனகொடுத்துவாங்கிக்கொள்ளுதலுஞ் சுற்றத் தார்க்குப்பொன்கொடுத்து அவர்களாலே பெற்றோன்பெண்ணைக்கொ டுக்கக்கொள்ளுதலும் பிறவுமாம். காந்தருவமணமாவது நாயகனுநாய கியுந்தனியிடத்தெதிர்ப்பட்டுத் தெய்வங்கூட்டக்கூடுவது. இராக்கத மணமாவது பெற்றோன்வருந்தத்துன்பஞ்செய்து பெண்ணை வலியாற் கவர்ந்துகொள்வது. பசாசமணமாவது கள்ளுண்டுகளித்திருப்பவளை யும், நித்திரைசெய்பவளையும், மூத்தவளையுங் கள்ளத்தாற்கவர்ந்து சேருவது.

இவ்வெட்டுமணத்துள், முற்கூறியநான்குமணமும் அந்தணர்க் குச்சிறந்தன. அசுரமணம்நான்குவருணத்தார்க்குமாகும். சூத்திரர் முதலானவர்க்குக் கந்தருவமிராக்கதமாகிய இரண்டுமுரியன. பைசாச மணம் ஒருவருக்குங்கூடாது. இவ்வாறு சுப்பிரபேதவாகமத்திற்கூறிய தாகத் திருவானைக்காப்புராணத்திற் கூறியிருக்கின்றார்.

இனி மங்கிலியஞ்செய்யும்பொன் இரண்டு குஞ்சமுதல் முப்பது குஞ்சம்வரையுமாகும். குஞ்சம் - குன்றியிடை. சிவலிங்கம்போலவும், விநாயகரைப்போலவும், தாமரைப்பூப்போலவும் ஒன்றுசெய்து அதன்

பக்கத்து ஐந்தரும்பாகச்செய்யப்பட்ட இரண்டைச்சேர்த்து இரண்டு பொற்கயிறு கோத்தது திருமங்கிலியமாகும். பாணிக்கிரகணமே வேதத்தில் விதிக்கப்பட்டதென்பர்.

இனி மணமகனையுமணமகளையும் ஆபரணமுதலியவற்றால் அலங்காரஞ்செய்வித்து இருவர்கோத்திரமு நாமமுஞ்சொல்லி மணமகளைப் பெற்றவன் நீரோடுதானஞ்செய்தல்வேண்டும். பெற்றவனில்லையேல் அவனுடன்பிறந்தோனாயினும், பெண்ணின் மூத்தோர்களிலொருவனாயினுந்தத்தஞ்செய்யலாம்.

பிராமணர் நான்குவருணத்திலுஞ் சத்திரியர் மூன்றுவருணத்திலும் வைசியர் இரண்டுவருணத்திலுஞ் சூத்திரர் தமதுவருணத்திலும் விவாகஞ்செய்யலாம்.

இனி அக்கினிக்கு மேற்றிசையிலே ஆசனமிட்டு மணமகனையு மணமகளையும் வைத்து ஆகமமந்திரத்தால் மந்திரகோடிமாலைகொடுக்க அணிந்துகொண்டபின்பு, நாயகனுக்கிடப்புறமாக நாயகியைவைத்துப் பின் அபவிரதயமந்திரத்தால் நாயகியிருதயத்தைத்தொட்டு வாத்திய முழங்க நாயகன் மங்கிலியத்தையெடுத்து நாயகி கண்டத்திலணிய வேண்டும்; பின் ஓமமுதலிய கிரியைகளை முடித்தல்வேண்டும்; "கடவுளர்பிதிரர்தங்கடன்கணீக்குவான்- வடுவறுமிலக்கணமாண்டகற்பினின் மிடலுடைக்கிழத்தியைவிதியின்வேட்டபி - னெடுமனைவாழ்க்கையி னொழுகனீதியே" "தருமமாற்ற னன்னெறியிற்பொருள்களீட்டறம் மொழுக்கின் - மருவுகாமந்துய்த்தறம்மூர்வாழ்த்தவாழ்தலிகழ்வனகள்- புரிதல்செய்யாதுவப்பனவேபுரிதலுலகத்தொடுமொழுகல் - கருணையொடுமில்லறம்புரிவோர்கடனென்றெவருங்கட்டுரைத்தார்" என்றபடி இல்லறநடத்தத்தொடங்கல்வேண்டும்.

பின்பு ருதுசங்கமனமுதலியகிரியைகளைச்செய்தல்வேண்டும். நாயகனுநாயகியுங்கூடுந்தினம், "பூத்துநீராடியநாண்முதலாகப்பன்னிருநாட் பூவையார்க்கு-வாய்த்தகருவுறுங்காலமாதலினலந்நாளுண்மகமேமூலம். பாத்தசீர்விரததினந்தனக்காகாநாள்பஞ்சபருவமெல்லா - நீத்து நூல் விதித்ததினம்புணரானேற்கருவொன்றுநீக்கினனால்" எனத்திருவானைக் காப்புராணத்திற்கூறியவாறும், "பூவையேயனையார்தம்மிற்பூத்தநாண் முதனான்கின்- மேவிடார்புணர்ச்சிபின்னைவிரும்புநாள்பன்னிரண்டி-



லேவுறுகருப்பமுண்டாமிங்கிதிலிரட்டிநாளாண் - பாவினதொற்றைநாளேற்பெண்ணெனப்பகருவாரே" என உள்ளமுடையானிற்கூறிய வாறுந்தெரிந்துகூடல்வேண்டும்.

புத்திரனைப்பெற்றுவளர்த்தபின் ஐந்துவயதிலே "தந்தைமகற் காற்றுநன்றியவையத்து - முந்தியிருப்பச்செயல்" என்றபடி வித்தையாகியபொருளையீட்டிக்கொள்ளச்செய்து அதிற்சிறந்தவனாகச்செய்தல் வேண்டும். "வித்தை விரும்பு" "எண்ணுமெழுத்துங்கண்ணெனத்தகும்" "எண்ணென்பவேனையெழுத்தென்பவிவ்விரண்டுங்-கண்ணென்ப வாழுமுயிர்க்கு" "கைப்பொருள்கொடுத்துங்கற்றல் கற்றபின்கண்ணுமாகு - மெய்ப்பொருள்விளக்குநெஞ்சமெலிவிற்கோர்துணையுமாகும் - பொய்ப்பொருள்பிறகள்பொன்னும்புகழுமாந்துணையுமாகு - மிப்பொருளெய்திநின்றிரங்குவதென்னையென்றான்" என்பதனாற்செல்வப்பொருளினுங்கல்விப்பொருளின்பெருமையறிக. "இளமையிற்கல்" வளையிளமரந்தனைநிமிர்த்தல்வாய்க்கும்பொன்- னிளகியபொழுதணியியற்றலாகுநல் - வளமுறுகேள்விநூன்மாண்புநற்குண-மிளமையினன்றிமூப்பெய்தினெய்துமோ" என்பதனால் இளமையிலே கற்பிக்கவேண்டும். இவ்வாறாகிய கல்விப்பொருளிற்சிறந்தவனாகச்செய்யாவிடிற் புத்திரன்கெடுவதன்றிப் பிதாமாதா தாதை முதலோர்களெல்லாம் நற்கதியடையார்கள். புத்திரன் என்பதற்கு நரகத்தினின்று கரையேற்றுபவன் எனப் பொருள் கூறுதல்காண்க. "மனைக்குவிளக்கமடவாண்மடவா-டனக்குத்தகைசால்புதல்வர்-மனக்கினிய-காதற்புதல்வர்க்குக்கல்வியேகல்விக்கே-யோதிற் புகழ்சாலுணர்வு" என்பதனாலுங் கல்விகற்பிக்கவேண்டுவது சிறந்தபேறென்க.

கல்விகற்பியாது மூடனாகவைத்தால் ஒருமூடன் பிதாவுக்கு ஒட்டிற்கஞ்சிவார்த்தகதைபோலாகுமென்க.

இனி இங்ஙனமாக இல்லறநடத்தற்குரிய மனையாளும், "அன்னை தயையுமடியாள்பணிவிடையும் - பொன்னதழகும்புவிப்பொறையு-மன்னுகின்ற - வேசைதுயிலும்விறன்மந்திரிமதியும் - பேசிலிவையாறுடையாள்பெண்" என்றவாறுகுணங்களிற்சிறந்தவளாயிருத்தல்வேண்டும். "தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்- பெய்யெனப்பெய்யுமழை" என்றுங்கூறினர். கொழுநனைத்தெய்வமாகத்தொழுபவள் உமா

தேவியுடன்கூடியிருப்பாள் எனக் காசிகாண்டத்திற் கூறியிருக்கின்றார். இன்னும்,

"மிடியினர்குணமிலர்விருத்தர்நோயினர்
வடிவிலருருப்பிலர்வஞ்சர்மூடர்வெங்
கொடியவராயினுங்கொழுநர்தம்மிடை
மடியிலரன்புகற்புடையமாதரே.

கொழுநனுண்டபின்றானுகர்கொள்கையும்
விழிதுயின்றபின்றுஞ்சலுமென்றுயி
லெழுதன்முன்னமெழுதலுமேயன்றே
பழுதில்கற்புடைப்பாவையர்செய்கையே.

உரலிற்கம்மியரோங்குமுலக்கையிற்
பரவுவாசற்படியின்முரத்தினிற்
றிருவகன்றிடுமாலெனச்சேர்ந்திரார்
பொருவில்கற்புடைப்புண்ணியமாதரே.

எரிமணிப்பொலம்பூண்சுமந்தின்னுயிர்க்
குரியகேள்வருவப்பமுன்னெய்துவார்
பிரியுங்காலையிற்பெய்கலனியாவையு
மொருவிமாசுடலுண்டிடவைகுவார்.

திருந்துமாயுள்சிதையுமென்றெண்ணித்தம்
பொருந்துகாதலர்நாமம்புகன்றிடா
ரிருந்தபோதன்றித்தாமுன்னிருந்திடா
ரருந்துமிச்சிலமுதினுகர்வரால்.

ஆன்றகற்பினர்பூப்பினகன்றுறை
மூன்றுநாளுமுகமலர்நோக்கலார்
தோன்றயாதுஞ்சொல்லார்புனறோய்ந்தபின்
சான்றகாதலர்தம்முகநோக்குவார்.



என்றபடியிருக்குங்கற்புடையமாதர் தந்நாயகரோடுயிர் விடின், ஓர் மயிரொன்றினுக்கு ஆயிரங்கோடிகாலஞ் சுவர்க்கத்திலிருப்பார் என்றுங்கூறியிருக்கின்றார்.

இனி இருவருமொத்தேயில்லறநடத்தல்வேண்டும். இன்றேல்,

தருமமெனும்பண்டமிடுஞ்சகடமாமனைவாழ்க்கை
கருமநுகம்பிணித்துமனைக்காதலியுந்தானுமென
விருவராய்முறைசெலுத்தினைத்துணைத்தூரமுஞ்செல்லு
மொருவராய்ப்பூண்டிழுப்பினோரிறையுஞ்செல்லாதால்.

எனத் திருக்குற்றாலத்தலபுராணத்திற்கூறியவாறுமெனக. பாரதமுதலான நூல்களிலே மௌற்கல்லியமுனிவர்மனைவியாகிய நாளாயினிமுதலியோர்கதையாற் கணவன்குறிப்பின்படியொழுகிய நற்குணநற்செய்கைகளைத்தெரிந்திருக்கின்றோம். அவ்வாறு சிறப்புற்றிருக்கின்ற மனைவியே இல்லறத்திற்குரியசெல்வமாம் "மனைக்காக்கமாண்டமகளிர்" என்றதனாலுமறிக.

இனி நாயகனும், "தந்தைதாய்சோதரருற்றாரையெலாங்கைவிடுத்துத்தன்னைச்சார்ந்த, பைங்கொடியையனையவர்போலாதரிக்கைகணவனுக்கேபரமாம்" என்றபடி மனைவியையாதரிக்கவேண்டும்; அன்றியுஞ் சற்கருமங்களைப்போதித்து அவளையியற்றும்படி செய்யவேண்டும். அவ்வாறு செய்யாவழி "மண்டலத்தோர்கள்செய்தபாவமன்னவனைச்சாருந் - திண்டிறன்மன்னன்செய்ததீங்குமந்திரியைச்சாரும் - தொண்டுறுசீடன்செய்ததோடமுங்குருவைச்சாருங் - கண்டனுமொழியாள் செய்தகன்மமுங்கணவற்காமே" என்றபடி அவள்செய்த பாவமெல்லாங் கணவனைச்சாருமெனக.

நற்குணநற்செய்கைகளில்லாவழி, ஒருத்திவிளாங்காய்த்தோடுரைத்துக்கொடுத்ததுபோலவும், ஒருத்திகற்பிலக்கணங்கேட்டுவந்துரைத்தது போலவுஞ்செய்யவுஞ்சொல்லவுநேரிடும். ஒருவன்றருமஞ்செய்யவேண்டுமென்று பொருளைத்தொகுத்துக் கடைக்காலஞ்செய்வோமென்று முடிப்புக்கட்டித் தன்மனையாளிடங்கொடுத்துவைத்து இதனைத்தருமஞ் செய்யவேண்டும்; நான் மரணாந்தஞ்சமீபித்தகாலத்திற்கேட்டபோது கொண்டுவந்துகொடுவென்று சொல்லியிருந்தான். பின்பு மரணமாகுங்

காலம் வந்தவுடன் விக்கலுமேலிட்டுப்பேசமுடியாதபோது மனையாளை நோக்கி முன்கொடுத்தபொருளைக்கொண்டுவரச்சொல்லிக் கையைக் காட்டினான். அவள் 'அந்தப்பொருளைத் தனக்குவைத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்து ஒரு விளாங்காய்த்தோட்டையெடுத்துவந்து நீர்விட்டுரைத்துக்குடிக்கும்படிகொடுத்தாள். பக்கத்திலிருந்தவர்கள் உன்கணவரொருவிதமாகக்கையைக்காட்டினார்; நீயொருவிதஞ்செய்கிறதென்னவென்றுகேட்டார்கள்; அதற்கவள் என்னையகருக்குவிளாம்பழத்திலே பிரீதியுண்டு இப்போது அதுகிடையாதாதலாலே அத்தோட்டையுரைத்துக்கொடுத்தேனென்றாள். விக்கலுக்கு விளாங்காய் பகையானபடியினாலே யுடனே மரணமாயினான். இக்கதையைக்குறித்துத் தினகரவெண்பாவில்,'மாயுங்கால்கைகாட்டமங்கைவிளாங்காய்த்தோட்டைத், தேயவுரைத்தாடினகரா - வாயவே, நாச்செற்றுவிக்குண்மேல் வாராமுன்னல்வினை, மேற்சென்றுசெய்யப்படும்"எனக்கூறியிருத்தலுங் காண்க. ஒருவன்றன்னைநிந்தித்தொழுகு மனையாளைநோக்கிக் கற்புடை மாதரிலக்கணம் பிரசங்கஞ்செய்கிறார்கள், நீயுங்கேட்டுவாவென்றான். அதற்கவளிசைந்துபோய்க்கேட்டுவந்தாள். நாயகன் அவளைநோக்கி யெப்படிப்பிரசங்கஞ்செய்கின்றாரென்றான். அவள் எல்லாமுன்னிழவுக்கே செய்யும்படிசொல்லுகிறாரென்றாள் எனவுலகினர் கூறுங்கதையாலுங்காண்க.

"எறியென்றெதிர்நிற்பாள்கூற்றஞ்சிறுகாலை
யட்டில்புகாதாளரும்பிணி—யட்டதனை
யுண்டியுதவாதாளில்வாழ்பேயிம்மூன்றுங்
கொண்டானைக்கொல்லும்படை."

என்றபடி வேறுபட்டிருப்பாளாகில், "பத்தாவுக்கேற்றபதிவிரதையாயினா - லெத்தாலுங்கூடியிருக்கலாஞ் - சற்றேனு - மேறுமாறாகவிருப்பாளேயாமாகிற் - கூறாமற்சந்நியாசங்கொள்" என்றபடி அவளைவிட்டு நீங்கிவிடுதலே நலமாமென்க. மனைவியில்லாதவனுக்கொன்றுமேயில்லை; "தாயோடறுசுவைபோந் தந்தையொடுகல்விபோஞ் - சேயோடுதான் பெற்றசெல்வம்போ-மாயவாழ்-வுற்றாரொடுபோமுடன்பிறப்பாற்றோள் வலிபோம் - பொற்றாலியோடெவையும்போம்" என்றதனாற்காண்க.



இனி நன்மனைவியுடன்கூடி நல்வழியீட்டியபொருளால் இல்லற நடத்துவோன் முப்பத்திரண்டறமுஞ்செய்தல்வேண்டும். இவற்றைக் காஞ்சிப்புராணம் இரண்டாங்காண்டங்கழுவாய்ப்படலத்தில்"தூங்கிய" என்னுஞ்செய்யுண் முதலாகக்கூறியிருத்தல்காண்க.

இவற்றுள்ளே இல்வாழ்வானுக்கு விருந்தோம்பல் மிகச்சிறந்தது என்பது விளங்க, முன்னரில்வாழ்க்கையிலே "தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கறானென்றாங்- கைம்புலத்தாறோம்பறலை"எனக்கூறியதோடமையாது, விருந்தோம்பலெனவேறோரதிகாரமாகவெடுத்து, 'இருந்தோம்பியில்வாழ்வதெல்லாம்விருந்தோம்பி- வேளாண்மைசெய்தற்பொருட்டு' என்பது முதலாக விளங்கவெடுத்துரைத்தார். புராணங்களிலே நகரச்சிறப்புக்கூறுவோரெல்லாம் "அருந்தினாருந்திச்செல்லவருந்துகின்றாருமாங்கே - யிருந்தினிதருந்தாநிற்கவின்னமுதட்டுப்பின்னும் - விருந்தினர்வரவுநோக்கிவித்தெலாம்வயலில்வீசி - வருந்திவிண்ணோருக்குமோரேருழவர்போல்வாடிநிற்பார்." என்பதுமுதலாகக்கூறியிருக்கின்றார். இவ்வில்லறத்திற்குரியபொருளைப்பெற்றிருப்போன் அப்பொருளைப்புதைத்துப்பாதுகாத்துவைக்குமிடம்யாதெனில்? வறியராயினார்வருந்தும்பசியைத்தணித்தலாம். "அற்றாரழிபசிதீர்த்தலஃதொருவன்-பெற்றான்பொருள்வைப்புழி" "ஊருணிநீர்" என்றதனாற்காண்க.

இவ்வாறுசெய்யாவழி, "முன்பசிப்பிணியிலார்தங்கண்முன்புபோ-யென்பசிதணியெனவியம்பும்வாசக - நின்பதம்பெறுதியோவலதுநீயுந்தா - னென்பதம்பெறுதியோவென்றல்போலுமால்" என்றும் "மண்ணுஞ்சட்டிகரத்தேந்திமறநாய்கௌவுங்காலினரா- யண்ணாந்தோடியிரப்பாரையறிந்தோமறிந்தோமம்மம்மா - பண்ணார்மொழியார்பாலடிசில் பைம்பொற்கலத்திற்பரிந்தூட்ட - வுண்ணாநின்றேயொருவருக்கு முதவாமாந்தரிவரென்றே" என்றும், "இரத்தலினின்னாதுமன்றநிரப்பிய- தாமேதமியருணல்." என்றுங்கூறியபடி வறியவரேயாவாரென்க.

ஒருவன்றன்வீட்டில் விருந்தினன்வந்ததுதெரிந்து உள்ளேசென்று தன்மனைவியைநோக்கி நானுன்னையடிப்பதுபோலடிக்கின்றேன் நீயழுவதுபோலழுவாய் வந்தவிருந்தினன் சமயபேதமாயிருக்கிறதென்று போய்விடுவானென்றான்; அதற்கவளுடனேயிசைந்தாள். அவ்வாறே அவனடிப்பதுபோலடித்தான்; அவளுமழுவதுபோலழுதாள்; அது கேட்டவிருந்தினன் வந்தசமயஞ்சரியாகவில்லையென்றுபோய்விட்டான்.

பின்பு மனைவியைநோக்கி நானுமுன்னை நோகாமலடித்தேனேயென்றான்; அவளுமோயாமலழுதேனேயென்றாள்; போன விருந்தினனும் நானும் போகாமல் வந்தேனேயென்றான். இருவருக்குமானபங்கமாயினது. இவ்வாறு பல தந்திரஞ்செய்து வந்தவிருந்தினரைக்கடத்திவருகின்றவரும் பலருள்ளார்கள். இத்தீமைக்குணத்தைவிடுத்து, "நந்தெறும்பு தூக்கணம்புட்காக்கையென்றிவைபோற் - றங்கருமஞ்சாலக் கடைப்பிடித்து" என்றபடி நல்லனவாகிய காரியங்களைக்கைவிடாதுறுதியாகப்பிடித்து, "வித்துமிடல்வேண்டுங்கொல்லோவிருந்தோம்பி, மிச்சின்மிசைவான்புலம்" என்றதனால் விருந்தினர்க்கூட்டி "ஐயமிட்டுண்" "ஐயமிடுமினறநெறியைக்கைப்பிடிமின் - னிவ்வளவேனுமன்னமிட்டுண்மின் - றெய்வ - மொருவனேயென்றுமுணரவல்லீரே - லருவினைகளைந் தும்றும்" "யாவர்க்குமாமிறைவர்க்கொருபச்சிலை - யாவர்க்குமாம்பசுவிற்கொருவாயுறை - யாவர்க்குமாமுண்ணும்போதொருகைப்பிடி - யாவர்க்குமாம்பிறர்க்கின்னுரைதானே." எனக்கூறியபடி பிச்சையிட்டுத் தானுமுண்டுவாழ்ந்து, குருலிங்கசங்கமபத்திபிற்குறைவின்றி மியன்றமட்டுஞ்செய்துவரல்வேண்டும். தானுண்ணுவதுமெவ்வாறெனில், "கங்கைவார்சடிலக்கடவுளைநினைந்து கறிதயிர்நெய்புடனுவி - யங்கியையெழுப்பியாகுதிசெய்கையாகமுப்பதிற்றிருகவளம், பங்கமில்விதியாலுண்டு கைபூசிப்பாகடைதின்றதன்பின்னர்ப், பொங்குபேரன்பினெக்கலோடிருந்திப்புராணமேகேட்டிடல்வேண்டும்." என்றபடியுண்ணல்வேண்டும்; இவ்வாறொழுகுவோர் அறமுதலிய நால்வகைப்பயன்களையுமடைவார். இன்னும் விரித்துரைக்கிற்பெருகுமாதலின் இங்ஙனஞ்சுருக்கிக்கூறியதெனவறிக. சுபம்.

## கவி.

அனதானமுயர்வித்தியா தானஞ்சிறந்தனவென்றவைநடத்தக்
கனதானமாமனரும்புகழராங்கசாமிவைத்தகனகந்தன்னை
லெனதானத்தவருமெச்சவவன்பின்னோர்நடத்துகின்றாரினிமேலாகத்
தனதானத்தனவெனச்செய்குடச்கூத்தன்றிருவருளாற்றழைக்குந்
[தானே.



# மதுரைநகர்வாசியும் அருந்தமிழ்ப்புலவருமாகிய ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அவர்கள்மீது

# இரங்கற்பாக்கள்.

## கொச்சகக்கலிப்பா.

1. சந்தமொடு தென்றல் தவழ்ந்து மணங்கமழும்
சந்தமுறு நாடெங்குந் தண்டமிழ்ப்பா வின்நறிய
கந்தம் பரப்புசீர்க் கந்தசா மிப்புலவோய்!
வெந்தறிஞர் மனமாழ்க விடுத்தாய் தமிழகமே,
வெறும்புலவர் வீறுறவே விடுத்தாய் தமிழகமே.

2. முன்னூற் கலைவாழ் முகவூர் முதுகுடியில்
தன்னே ரிலிராம சாமிகவி ராயனருள்
சொன்னப் புலமைச் சுதர்மூவர் பாவலருள்
பின்னாகத் தோன்றியவா! முன்னைப் பிரிந்தனையே!!
பிறங்குசீர் முன்னவ! ஆ!! முன்னைப் பிரிந்தனையே!!

3. செந்தமிழ்ச்சீ ரெல்லாம் செழிக்கநீ செய்தளித்த
சந்தமிகு வண்மைக் குமண சரித்திரமும்
அந்தமில்சீர் அங்கயற்கண் ணம்மைகலிப் பாவுமுதல்
நந்தலிலா நூலிலகிங் நாடு துறத்தல்நன்றோ?
நாவல்லோர் ஏங்கவுமிங் நாடு துறத்தல்நன்றோ?

4. தமிழுலகம் போற்றிசெயச் சந்தநயஞ் சேர்ந்தொளிர்சொல்
அமிழ்தாம் திருப்புகழ்நூ லாய்ந்தச்சில் பதிப்பித்தாய்;
தமைநிகரில் ஆன்றோர் தனிச்செய்யுள் சேர்த்தவற்றை
அமைவுறச்சிந் தாமணியொன் றாக்கினாய் வாக்கினியாய்
அன்றியும் பன்னூலும் ஆக்கினாய் வாக்கினியாய்!

5. செய்யுட் பெருமையொன்றோ செப்புவதுன் செய்திறமா
ஐய! கம்ப ராமா யணத்தா ரணியகாண்ட
மையகலு முறைநூல் வகுத்தளித்தாய்; வியாசமுறு
செய்யதிரட் டாநூலும் செய்தளித்தாய், மெய்தெளித்தோய்!
செந்தமிழின் நற்பணியே செய்தளித்தாய் மெய்தெளித்தோய்!

6. உலகியலா ராய்வின் உறுபயனுச் சீராரும்
புலவரெலாம் பொது அறிவு பூண்டொளிர, வேண்டுமென்றே:
பலஆண்டு "விவேக பாநு" "வித்யா பாநு" வென
நிலவுமிரு பத்திரிகை நீநன்கு நடத்தினையே
நீணிலத்தார் பாராட்ட நீநன்கு நடத்தினையே.

7. பாண்டித் துரைமுதற்பல் பார்த்திபர்நற் சுட்டும்சீர்
ஈண்டுமஹா மஹோபாத்தி யாயர்முதல் நேயர்நட்பும்
மாண்டக்க சோதரர்நன் மைந்தருற வும்விடுத்து
யாண்டைக்கோ புக்கொளித்தாய் யாணர்ச்சீர்ப் பாவாண!
யாழிசையிற் பாப்புனையும் யாணர்ச்சீர்ப் பாவாண!!

8. நேய சதிபதிகள் நேருமுடல் வேறெனினும்
ஏயுமுயி ரொன்றுவ ரென்னுமிந்த வுண்மையெங்கும்
மாயநிறை வாழ்வுகக்கும் மன்பதையோர் தேருதற்கோ
நீயகன்றாய் தாழாது நின்றுணைவி சென்றாங்கே?
நிலவு புகழ்நிறுத்தி நின்றுணைவி சென்றாங்கே?

9. "முன்னவனே முன்னின்றா" லென்றும் முதிர்நட்பால்
சொன்ன "படி யேமுடிப்பன் துசக்கட்டி" யென்றும்நீ
என்னைப் புகழ்ந்துரக்கும் இன்னுரைகண் முன்னிற்க
உன்னுருவம் நீத்ததென்னே உரைசேர் கவியரசே!
உத்தம நட்பாளா! உரைசேர் கவியரசே!!



10. சேற்றூர்ச் சமஸ்தானச் சீரார் புலவனென
வீற்றிருந்தா னுந்தை; வியனுலகில் அவ்வூர்போல்
சாற்றூர் எனைத்திடத்தும் சமஸ்தான முற்றவற்கே
மேற்றாந் தரமுற்றாய்! விளங்குகநின் விரிபுகழே
மேதகுசீர்க் கவிராய! விளங்குகநின் விரிபுகழே.

நேரிசை வெண்பா.

நங்கந்த சாமிகவி ராயன் சிவனடிக்கண்
பிங்கள ஆண்டிற் பெயர்மீனத்—திங்கள்வெண்
பக்கத்து ஞாயிறுநாள் பஞ்சமியிற் கார்த்திகைமீன்
புக்கநாள் புக்கான் புரிந்து.

வே. முத்துஸ்வாமி ஐயன் எம். ஏ. எல். டி.,

மதுரை.

ஸ்ரீ:

# அநுதாபக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினருள் ஒருவராயிருந்த ஸ்ரீமு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் நீடித்தகாலமாகப் பீடித்துவந்தபிணி குணத்துக்குவராமையால் சென்ற பங்குனிமீ௨௨ (17-3-18) ஞாயிற்றுக்கிழமை காலை எ-மணிக்குத் தேகவியோகமெய்தியதுதெரிந்து வருந்துகிறோம். இவர் வித்வத்பரம்பரையிற் பிறந்தவர். கவிசெய்புந்திறமைவாய்ந்து திருப்பேரூர்த்திரிபந்தாதி, பவாநிவேதநாயகியம்மை பிள்ளைத்தமிழ், கருமலையாண்டவர் துதிமஞ்சரி, குமணசரித்திரம், அரிமழத்தலபுராணம் முதலிய பிரபந்தங்களியற்றியும், சிவஞானபாடியம், தனிச்செய்யுட்சிந்தாமணிமுதலிய சில அரியநூல்களை அச்சிட்டும், கம்பராமாயணம் ஆரணியகாண்டத்துக்கு உரையெழுதி அச்சிட்டும் தமிழுலகுக்குபகரித்தவர். விவேகபாநுவென்னும் அரியதமிழ்ப்பத்திரிகை நடத்திவந்தவர். தமிழபிவிருத்தியில் மிகஊக்கமுடையராய் நாட்டுக்கோட்டைநகரத்தாரூர்களிற் பல சங்கங்களும் கலாசாலைகளும் நிலைபெறும்படி பல பிரசங்கங்கள் செய்துவந்தவர். கற்றவரிடத்து மிக்கபரிவும் பணிவுமுடையவர். இவர் காலமெல்லாம் கல்விவிஷயத்தில் ஊக்கமுடையராயிருந்தவர். இவரையறியாத தமிழறிஞரொருவருமிலர். அவரெல்லாமிரங்குமாறு இவர் காலஞ்சென்றது தமிழ்மக்களால்மிகவும் வருந்தத்தக்கதே.

பத்திராதிபர்.

---

உ

கடவுள்துணை.

# செந்தமிழ்

தொகுதி-௧௬.] காலயுக்திஸ்ரீ சித்திரைமீ [பகுதி - ௬.

Vol. XVI. April,—May. 1918. No. 6.

## புதல்வரைப்பெறுதல்.

புதல்வரைப்பெறுதல் என்பது திருக்குறளிலே வரும் ஏழாம் அதிகாரத்தின் பெயர். இப்பெயருந் திருவள்ளுவர் இட்டது; உரைகூறிய பரிமேலழகரும் விரித்து விளக்கியது. பரிமேலழகருரையும் உமாபதிசிவாசாரியர், சிவஞானமுனிவர் முதலிய சிவாநுபூதிமான்கள் பாராட்டிக்கூறியது. இங்ஙனமாகவும் மகடூஉக்கட்கும் இயைய "மக்களைப்பெறுதல்" என உரைத்தலே பொருத்தம் எனவும், திருவள்ளுவரும் பொதுவாக "நன்மக்கள்" "பண்புடைமக்கள்" என்பன முதலாகக் கூறினர் எனவும், "புதல்வரைப்பெறுதல்" என்பது பொருந்தாது எனவும் சிலர் வாதிப்பாராயினர். மக்கள் என்பது இருபாற்கும் பொதுப்பெயராயினும், வள்ளுவர் மக்கள் என்றது புதல்வரையேயாம். அது "தந்தைமகற்கு" என்றதனானும், "அறிவறிந்தமக்கள்" "என்றொருவன்........கல்லாதவாறு" என்பன முதலியவற்றானும் பெறப்படும். புதல்வர்களே கல்விக்குரியர் என்றும், இல்லறத்தார்க்கு இனிமை பயப்பவர் என்றும் வடமொழி தென்மொழிகளிலுள்ள பலநூல்களுங்கூறுகின்றன.

வடமொழியிலுள்ள பர்த்ருகரிசதகம், இதோபதேசம், குணரத்தினம், நீதிரத்தினம் முதலிய நீதிநூல்களை நோக்குக. எங்கேயாவது மகடூஉக்களும் கல்விக்குரியர் என்றும், இருமுதுகுரவர்க்கும் உபகாரகர் என்றும் கூறியதுண்டா? குலத்தை விளக்குவோர்யாவர்!

*

ஆடூஉக்களா? மகடூஉக்களா? தென்மொழியிலுள்ள பாரதம் முதலிய நூல்களையும் நோக்குக. "மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்தர்–இல்லாதவர்க்கு மனைவாழ்வி னினிமை யென்னும்" (பாரதம்) "புத்திரனிலாதோரென்றும் பொறியிலார்" (காசிகண்) "தென்புலத் தார்கடனைமாற்றுவதுமகவானன்றியிலை" (காஞ்சிபு) மனைக்கு விளக்க மடவாண்மடவா—டனக்குத்தகைசால்புதல்வர்—மனக்கினிய—காதற்புதல்வர்க்குக்கல்வி" (நான்மணி) என்பன முதலாகப் பலபிரமாணங்களுள. மகடூஉக்களைப்பற்றி இங்ஙனம் கண்டிலம்.

ஔவையார், நக்கண்ணையார் முதலியோர் பாடசாலைகளிலே படித்துப் பயின்றவரல்லர்; அருட்புலமையாளர். ஔவையார் பட்டமரந்தழைத்தல், பெண்ணைநதி பாலும்நெய்யுமாகப்பெருகல் முதலிய அற்புதச்செயல்களைக் கவிகளாலே நிகழ்வித்தவர். இவரை மற்றையார்போலக் கல்விகற்றார் எனக்கொண்டு புதல்வரைப் பெறுதல் என்பது இயையாதென்றல் பொருந்தாது. அது பெரியோர்நூல்களுடன் பொருந்துமாயின்; கொள்ளற்பாலதாகும்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

ஸ்ரீ:.

# களவழியிற் குறித்த கழுமலம்.

சோழன் செங்கணானும், சேரமான் கணைக்காலிரும்பொறையும் பொருதுழிச் சேரமான்கணைக்காலிரும்பொறையைப்பற்றிக்கொண்டு சோழன் செங்கணான் குடவாயிற்கோட்டத்துச் சிறைவைத்ததும், அதனையறிந்த சேரமான்உயிர்நண்பராகியபொய்கையார் சோழனதுவெற்றியைச்சிறப்பித்துக் களவழிபாடி அவனவைக்களத்துப் பிரசங்கித்துச் சேரமானைச் சிறைவீடுசெய்ததுமாய வரலாற்றைத் தமிழறிஞரனைவரும் நன்கறிவர்.



இங்ஙனம் சேரமான்கணைக்காலிரும்பொறையோடு சோழன் பொருதுலைக்கொண்ட ஊர் 'கழுமலம்' என்பது களவழி நாற்பது, ௫௬-ம் செய்யுளால் நன்கறியப்படும். இக்கழுமலமென்பது யாண்டையது? யார்க்குரியது? என்பதைப்பற்றித்தான் ஈண்டாராயப் புகுந்தது.

சென்னைச் சருவகலாசங்கத்தார் 1917-ஆம்முதல் பலவருடங்கட்கு இன்டர்மீடியேட்வகுப்பில் தமிழ்பயிலுமாணவர்கட்குப் பாடமாக வெளியிடப்பட்டுள்ள செய்யுட்டிரட்டுப் புத்தகத்தில் (Intermediate Poetical Anthology Tamil Part I, University of Madras). களவழிக்கவிதைகளும் சேர்க்கப்பெற்றுள்ளன. அந்நூல் ௫௬-ம் செய்யுளடியாகிய 'காவிரிநாடன் கழுமலங்கொண்டநாள்' என்பதிற் 'கழுமலம்—சீகாழி' எனப்பொருளெழுதி வெளியிட்டுள்ளார்கள். 'சேரன் செங்குட்டுவன்' என்ற நூலாசிரியரும் களவழியிற்குறிக்கப்பட்டுள்ள கழுமலத்தைச் சீகாழியெனவே துணிந்துள்ளார்கள். இவர்களன்றிச் சோழநாட்டுச்சீகாழியைப்பற்றிச் சரித்திரக் குறிப்பெழுதியுள்ளவர்களும் களவழியிற்குறித்த கழுமலம் அஃதாமெனவே சுட்டியுள்ளார்கள்.

இங்ஙனம்இவர்களனைவரும்ஒருபடித்தாகவேகருதியது;

'பொன்னிவளந்தருநாடுபொலிவெய்தநிலவியதால்
கன்னிமதின்மருங்குமுகினெருங்குகழுமலமூதூர்.'

'பிரமபுரம்வேணுபுரம்பெரும்புகலிவெங்குருநீர்ப்
பொருவிறிருத்தோணிபுரம்பூந்தராய்சிரபுரமுன்
வருபுறவஞ்சண்பைநகர்வளர்காழிகொச்சைவயம்
பரவுதிருக்கழுமலமாம்பன்னிரண்டுதிருப்பெயர்த்தால்.

'கழுமலப்பதிக்கவுணியர்கற்பகக்கன்றை' என்பவைபோன்ற பெரியபுராணச்செய்யுள்களிலும்,

'கந்தத்தால் எண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார் பூவார் சீர்மேவுங் கழுமலவளநகரே.' என்பதுபோன்ற

தேவாரச்செய்யுள்களிலும் சீகாழிக்குக் கழுமலமெனப் பெயர்குறித்திருத்தலை நோக்கியேபோலும்.

இங்ஙனம் சீகாழிக்குங் கழுமலமென்னும்பெயருண்மையால் பெயரொற்றுமையொன்றுகொண்டே எத்துணையோவிஷயங்கட்கு முரணாகச் சோழநாட்டுச்சீகாழியே களவழியிற்குறித்தகழுமலமென எங்ஙனம் துணியலாம்? சீகாழிக்குக் கழுமலமென்னும் பெயர் அவ்வூர்க்குரிய பன்னிரண்டு பெயர்களுள் ஒன்றேயன்றி, பிரசித்தமாக வழங்கும் பெயருமன்றாம். அஃதன்றியும் ஒரு பெயரே பலவூர்கட்கும் பெயராகவழங்கப்படுவதை யாண்டுங் காணலாமன்றோ? களவழிச் செய்யுளையும் வேறு சான்றோர்செய்யுள்களையும் ஆராயுங்கால் இக்கொள்கை சிறிதும் பொருந்தாததாகவே தெரிகின்றது.

"ஔஉவமனுறழ்வின்றியொத்ததே, காவிரிநாடன் கழுமலங் கொண்டநாள்," என்ற களவழிச்செய்யுளில் கொண்டவென்றசொல், பிரயோகமாகியிருக்கும் போக்கை ஊன்றிநோக்குமிடத்து, செங்கணான் படையொடுசென்றுபொருது பகைப்புலத்தூரையே கைப்பற்றினானென்பது நன்கு விளக்கமாகின்றது. இங்ஙனம் செங்கணான் குடபுலத்துப்படையொடு சென்று, இக்கழுமலமாதிய பலவூரை வென்று கொண்டமைபற்றியே இவனைத் 'தென்னாடன் குடகொங்கன் சோழன்', எனக் கலிகன்றியாழ்வார் கூறுவாராயினர். இதிற்குறித்த கழுமலம் சீகாழியாயின் அது சோழர்க்குரியதன்றோ? அங்ஙனமாயின் சோழன் தனதூரையே தான் கைப்பற்றினதாமே. ஆகவே களவழி அங்ஙனங்குறிப்பதில் வியப்புத்தான் யாதுளது?

இனிப் பண்டைக்காலத்தில் சேரர்க்கும் கழுமலம் எனப்பெயரிய ஊர் ஒன்றுண்டென்பதும், சோழர்க்கும் சேரர்க்கும் இக்கழுமலத்தில் அடிக்கடி போர் நிகழ்ந்துவந்ததென்பதும், சோழர் சிற்சில காலங்களில் அதனைத்தம்மடிப்படுத்தியிருந்தனரென்பதும்,

* "சேயிருமுகந்த
நற்றோர்க்குட்டுவன்கழுமலத்தன்ன
வம்மாமேனித்தொன்னலஞ்சிதையத்
துஞ்சாக்கண்ணனலமருநீயே"

என்ற யாப்பருங்கலவிருத்தி உதாரணச் செய்யுளாலும்,

* தொடையோத்து செந்தொடையொவ்வா என்ற சூத்திரவுரை (50).



* "சான்றோர் வருந்திய வருத்தமும்—குடையொடு
கழுமலந்தந்த நற்றேர்ச்செம்பியன்"

என்ற களவியலுரை உதாரணச்செய்யுளாலும் நன்கு விளங்குகின்றது.

இஃதன்றிக் குடவாயிற்கீரத்தனார் என்ற தண்டமிழ்ப்புலவரும் சோழனொருவன் சேரநாட்டகத்துச்சென்று கழுமலமென்னும் நகரினை முற்றித் தன்படைத்தலைவனும் பேளர் என்னும் ஊரின் தலைவனுமாய பழையன் என்பானைப் பகைப்புலத்தார் சேனாபதி கணையன் என்பான்கொல்ல அதனைக்கண்டு பொருது அவனையும் அவ்வூரையும் கைப்பற்றின வரலாற்றை அகம் ௪௪-ம் செய்யுளிற்குறிப்பிடுகின்றார்.

"அண்ணாந்தேந்திய
இன்கடுங்கள்ளினிழையணி நெடுந்தேர்
கொற்றச்சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட்டியானைப் பேளர்கிழவன்
பழையன் வேல்வாய்த்தன்ன நின்
பிழையா நன்மொழி."

என்ற செய்யுளொன்று நற்றிணையில் ௧௦-ம் செய்யுளாகக் காணப்படுகின்றது. 'இனிய கடுப்பினையுடைய கள்ளுணவையும் இழையணிந்த நெடியதேர்களையுமுடைய வலிமிக்க சோழமன்னர் கொங்கரையடக்கும்பொருட்டு வெள்ளிய கோட்டினையுடைய யானைகளையுடைய பேளர் என்னும் ஊரின் தலைவனாகிய பழையன் என்னும் சேனாதிபதியிடத்துத் தப்பாதவேற்படையைப்பெற்றுவைத்திருந்தாற்போன்ற நினது பிழைபடாத நல்லமொழி' என்பது இதன்பொருளாகும்.

இது மேற்குறித்தபடி பழையன் 'கழுமல'த்திற்பொருது இறந்துபடுவதற்குமுன்னர்க் கழுமலத்தைச் சோழன் பழையன்என்பானைக்கொண்டு கைப்பற்ற ஆயத்தமாயிருந்தவரலாற்றினையே குறிப்பதுபோலும். இதிற்கொங்கர்ப்பணீஇயர் என்றமையானே சேரன்கழுமலம் அவன் நாட்டின்கண்ணதாய் அவன் மறவர்தோள்வலியானே காக்கப்பட்டுவந்ததென்பதும், அதுபற்றியே சோழர் சிற்சில வமயங்களிற் கொங்கரொடுபொருதுவந்தனரென்பதும் ஊகித்துணரக்கிடக்கின்றன.

* 28-வது தந்தைதன்னையர் என்ற சூத்திரவுரை.

இங்ஙனம் கழுமலம் கொங்குநாட்டுவீரராற்காக்கப்பட்டிருந்தமையாற்றான் கழுமல யுத்தங்கூறுங் களவழியில் "ஒண்செங்குருதியொழுகும் புனலுடன், கொங்கரையட்ட களத்து", எனக்கூறியதும்.

ஆகையால் இவற்றையெல்லாம் நோக்குமிடத்துக் களவழியிற் குறித்த கழுமலம் சேரநாட்டகத்துச் சேரர்க்குரியதாயிருந்த மூதூராமென்பதும், அதனையே செங்கணான் பொருதுபெற்றனனென்பதும், களவழியிற்குறித்த கழுமலம் சோழநாட்டுச் சீகாழியாங்கழுமலம் ஆகாதென்பதும் தெள்ளிதிற்புலனாகின்றது.

இவ்வுண்மை * அறிஞர் பலர்க்குத்தெரிந்ததேயாயினும், சர்வகலாசங்கத்தாரால் வெளியிடப்பெற்றிருக்கும் புத்தகத்துள் இதனைக் குறித்தெழுதியிருக்கும் குறிப்பைக்கற்றுப் பிறழ உணர்ந்த மாணவர் தெருளுதற்பொருட்டு ஈண்டிது எழுதப்பட்டதாகும்.

15—4—18, மதுரை.

ஆ. கார்மேகக்கோன்.

---

## அமைச்சரின் தன்மையும் ஒழுக்கமும்.

'மக்கட்கிறையென வைத்தெண்ணப்படும் மன்னவனுக்கு, அமைச்சர் நல்லாற்றினின்ற துணையாவர். தாமரையில்லாத்தடமும், மதியில்லாவானமும், கற்பில்லாக்காரிகையும், ஆண்டன்மையில்லாப்படையும் போல, அமைச்சரில்லாத அரசனது நாடும் பொலிவற்று மெலிவுற்று இழிவெய்தும் என்பது, சரித்திரவாசிரியர் பலருக்கும் ஒப்பமுடிந்ததொரு செய்தி.

அத்துணை இன்றியமையாத அமைச்சரது இலக்கணத்தை ஆசிரியர் வள்ளுவனார் பத்ததிகாரத்தாற் கூறத்தொடங்கி, முதற்கண் அவரது குணமும் செயலும்பற்றிக் கூறிப்போந்தனர்.

* மேற்குறித்தவாறே கருதுவர் சேது சமஸ்தான வித்துவான் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள். இவர்கள் எழுதிய 'வஞ்சிமாநகர்' பார்க்க.



நற்குடிப்பிறப்பும், கல்விஞானமும், ஊழையும் உப்பக்கம் காணலாகும் ஊக்கமும், வன்கண்மையும் ஆகிய குணங்களுடனே, தன்வலியும் தன்மாற்றார்வலியும் சீர்தூக்கி ஆராயுந்திறனும் உடையாரே, தம் மன்னர்க்கு நன்றிபயக்கவல்ல நல்லமைச்சராவர். மற்றும் சந்திவிக்கிரகங்கள்நேர்ந்துழி ஒருதலையாச்சொல்லவல்ல ஆற்றலும் அவர்க்கின்றியமையாதது. இவ்வுயரிய குணங்களெல்லாம் நூல்நுட்பமும், நுட்பமதியுமுடையார்க்குத் தாமேபொருந்துமென்பதை உரைத்தலும் வேண்டுமோ.

'மதிநுட்பநூலோடுடையார்க்கதிநுட்பம்
யாவுளமுன்னிற்பவை.'

எல்லா நலங்களிலும் மிக்கு மேம்பட்டோங்கும் நாநலம் என்னும் நலனுடைமை அமைச்சர்க்கின்றியமையாததென்பது தானே போதரும். கற்றதுணரவிரித்துரையாத அமைச்சர் நன்குமதிக்கப்படார் ஆகலின், சோர்விலாத சொல்வல்லராயுள்ள அமைச்சர்தாம் எண்ணிய காரியங்களை எண்ணியாங்கெய்துவர்.

மற்று, தீயவினைகளான் தம்மன்னர்க்கு நன்மைபயத்தல்கூடும் என்ற எண்ணத்தை அமைச்சர் அறவே ஒழிக்கற்பாலர். என்னெனின் அழக்கொண்டவெல்லாமிழப்பராகலானும், தீயவினையான் அரசர்க்கேமஞ்செய்தல் பசுமட்கலத்துள் நீர் பெய்துஇரீஇயற்று ஆகலானுமென்பது.

மேற்கூறிய குணங்களையுடைய அமைச்சர் வினைசெயற்கண் இயலுமிடத்தெல்லாம் தண்டத்தாலேயே மாற்றாரை அடக்கற்பாலர். ஏனெனின் அவர் அடங்குவது அஃது ஒன்றனுக்குமே. இயலாத காலத்து சாம, பேத, தானமாய மூவகை உபாயங்களுள் ஒன்றால், தம்மிடையூறு நீக்கற்பாலார். ஒரு வினை தொடங்குங்காலத்து, அதனால் ஏற்படக்கூடிய இடையூறுகளையும், இடையூறுகளைநீக்கவல்ல ஆறுகளையும், வினைமுடிந்தக்கண் எய்தும் பெரும்பயனையும், எண்ணி வினையைத்தொடங்குதல் நன்றாகும்.

இனி, வேற்று வேந்தரிடைச்செல்லும் இயல்புள்ள அமைச்சர், குறிப்பால் காரியங்களை உணரவல்ல ஆற்றலுடையராயிருத்தல்

வேண்டும். குறிப்பிற்குறிப்புணராதாயின், உறுப்பினுள் கண் பயனற்றதாகும். குறிப்பிற் குறிப்புணர்வாரைத் தெய்வத்தோடொப்ப உலகம் எண்ணும்.

மன்னரைச் சேர்ந்தொழுகற்பாலரான அமைச்சர் அவரைத் தீக்காய்வார்போல, மிக அணுகாதும், மிக நெருங்காதும் இருத்தல்வேண்டும். "அகலாதணுகாதுதீக்காய்வார்போல்க, இகல்வேந்தர்ச்சேர்ந்தொழுகுவார்" என்பது ஆன்றோர் கட்டளை.

இதுகாறும் கூறிப்போந்தவற்றுள், அமைச்சருக்கியல்பானேயும், பழக்கத்தானேயும் அமையவேண்டிய குணங்களையும், செய்கைகளையும்பற்றி விவகரித்தோம். இனி இத்துணைச் சிறப்பிற்கும் எடுத்துக் காட்டாகற்பாலரான சிலரைப்பற்றிக் குறிப்பிடுவோம்.

விக்ரமாதித்த அரசனுக்கு மந்திரியாயிருந்த பட்டியும், விக்டோரியா மகாராணி அம்மையார் ஆட்சியின்கீழ் அமைச்சுப்பூண்ட க்லாடுச்டன் (Gladstone) அவர்களும், இராயர் அப்பாஜியும், மொகலாய அரசனான அக்பரின் மந்திரியாகிய தோடர்மாலும், இன்னோரன்ன எண்ணில் சான்றோர்களும், வள்ளுவனார்கூறிய குணங்களுக்குத்தக்க சான்றாவார்கள் என்பதை எவர்தாம் மறுக்கவல்லார்.

மதிநுட்பமும், கல்விப்பயனும், தூயசிந்தையும், தறுகண்மையும், குறிப்பறிதலும் முதலாய குணங்கள் பொருந்திய அமைச்சர் தம்மரசருக்கு உறுதி எக்காலத்தும் கூறவேண்டும்.

அறிகொன்றறியான் எனினும், உறுதி உழையிருந்தான் கூறல் கடன். உறுதிகூறாக்கால் அரசனதிறுதிக்காரணத்தை உலகம் அமைச்சர்மேலேற்றுமென்பதை உரையாசிரியன்மாருள் உயர்ந்தவராகிய பரிமேலழகர் நன்குவிளக்கி உள்ளார்.

அமைச்சர் பல்வகையினர் என்பது சுக்ரநீதி, சாணக்யநீதி வல்லார்க்கு எளிதிற்றெரியவரும். பிராட்விவாகன், சுமந்திரன், தூதன் முதலாக, இப்பிரிவினரெல்லாம் வள்ளுவர்கூறிய பாகுபாட்டுள் அடங்குவாரென்பது; நுண்ணிதின் ஆராய்வார்க்குத் தெள்ளிதிற் புலப்படும்.

ஒரு மாணவன்.

---

# இந்துதேசசரித்திரகாலக்குறிப்புகள்.

## (Chronological Notes of Indian History.)

"செந்தமிழ்" தொகுதி கரு-பகுதி ச-ல் உ௨ச-ம் பக்கத்தொடர்ச்சி.

945-970. அம்ம II. (விஜயாதித்யன் ரு.) கிழக்குச்சாளுக்யவம்ச 23-ம் அரசன். ஷை 22-ம் அரசன் மகன்.

949. பராந்தகசோழன் (I) மரணம்.

949. ராஜாதித்யசோழன். பராந்தகன்புதல்வன். தக்கோலத்தில் கங்கவம்சத்தரசன் பூதுங்கனுடனும், ராஷ்ட்ரகூட அரசன் 3-ம் கிருஷ்ணனுடனும் போர்புரிந்து ரணக்களத்தில் மாண்டான். இவனுக்குப்பிறகு 5-சோழர்கள் ஆண்டார்கள். அவர்கள் பிரபலர் அல்லர்.

958. (விக்ர. 1014) கணாதர். ஷண்மதங்களில் ஒன்றாகிய வைசேஷிகமதத்தைஸ்தாபித்தார். அந்தரஞ்சிகையரசன் பலஸ்ரீ இவருடைய போஷகன்,

(ஆராய்ச்சிசெய்யத்தகுந்தது.)

959. (சகம் - 881) சோ. தேவஸூரி கூமணகவி. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தை யனுசரித்து யசஸ்திலக நீதிவாக்கியம் இயற்றினார்.

961. சம்பய்யன் கிழக்குமைசூரில்ஆண்ட பாணர்வம்சத்தரசன்.

968-971. கோட்டிகன் (நித்தியவர்ஷன்) ராஷ்ட்ரகூடர்வம்ச 13-ம் அரசன்.

970-973. தானார்ணவன். கிழக்குச் சாளுக்கிய 24-ம் அரசன் 23-ம் அரசன் தமையன்.

973. 3-ம் கக்கராஜன். கன்னடஜில்லாக்களில் ஆண்ட ராஷ்ட்ரகூடரின் கடைசியரசன். மேனாட்டுச் சாளுக்கியராஜன் 2-ம் தைலப்பனால் தோல்வியடைந்திறந்தான். இவனுடன் இவ் வம்சமும் முடிந்தது.

973-997. தைலப்பன். மேற்குச் சாளுக்கிய ராஜவம்சத்தை மறுபடி ஸ்தாபித்தவன்.

975-995. முஞ்சன். (வாக்பதி). மாளவ அரசன். போஜமஹாராஜனுடைய சிற்றப்பன். தைலப்பனோடு போர்புரிந்து தோல்வியடைந்து சிறைப்பட்டு, சிரச்சேதமும் செய்யப்பட்டான்.

977. (கலி - 4078) கையடர். சந்திராதித்யன் புதல்வர். வல்லபதேவரின் பௌத்ரர். பீமகுப்தன் காலத்தவர். ஆனந்தவர்த்தனர்இயற்றிய தேவீசதகத்துக்கு உரை எழுதியவர். (அவ்வுரையிலேயே இவ்விவரங்கள் காணப்படுகின்றன.)

வல்லபதேவர். ஸுபாஷிதாவளி இயற்றியவர்.

குறிப்பு:—இன்னொரு கையடர் உண்டு. இவர், பாஷ்ய ப்ரதீபம் எழுதிய ஜைபடரின் புதல்வர்.

984-1043. சாலன். (ஹொய்சாலன்) மைசூர் துவாரசமுத்ரத்திலாண்ட ஹொய்சாலவம்சஸ்தாபகன். இவர்கள் யாதவவம்சத்தரசர் (?)

985. அனந்தவர்மதேவன். களிங்கதேசத்தரசன்.

களிங்கதேசம் கோதாவரிக்குவடக்கே ஒரிஸாவரை கிழக்குச்சமுத்திரக் கரையோரமுள்ளது. இத் தேசச் சரித்திரக்குறிப்புகள் அசோகன்காலமுதல் காணப்படுகின்றன.

985-1012. ராஜராஜ I. (மும்முடி ராஜாச்ரய) சோழன். பல்லவ ராஜ்யத்தை ஜயித்தான். இவன்காலத்தில் சோழராஜ்யம் தற்காலச்சென்னைமாகாணம், மைசூரில் அநேகபாகம், களிங்கம், சிங்களம்--இவைகள் அடங்கியுள்ளது. வெங்கி நாட்டு அரசனுக்குத் தன் மகளை மணம்புரிவித்தான். தஞ்சாவூர்க் கோவிலைக்கட்டினான்.

994. பாண்டியராஜ்யம் சோழஅரசர் ஆதீனமாயிற்று.

997-1009. ஸத்யாச்ரயன். மேற்குச் சாளுக்கிய 2-ம் அரசன்.

1000 கி.பி. I-ம் ராஜராஜசோழன் கலிங்கதேசத்தை ஜயித்தான்.



1003-1015. சக்திவர்மன். கிழக்குச் சாளுக்கிய 25-ம் அரசன். ஷை 24-ம் அரசரின் ஜேஷ்டபுத்ரன்.

1004. ராஜ ராஜ சோழன் மகன் ராஜேந்திரன் கங்கவம்சத்தரசரைத்தோற்கடித்து, அவர்களின் தலைநகரான தலக்காடு நகரையும் பிடித்துக்கொண்டான். இத்துடன் கங்க அரசரின் அதிகாரமும் அற்றுப்போயிற்று.

1004. கங்கராஜ்யம் போனபிறகு, ஹொய்சாலர்கள் மைசூர் மேற்குமாகாணத்தில் பலவான்கள் ஆனார்கள்.

1008. ராஜ ராஜ சோழன் அரசாட்சியின் 23-ம் ஆண்டுச் சிலைலிபி. தனது ஜயங்களைப்பற்றி வர்ணித்திருக்கிறது.

1009-1018. விக்ரமன். (த்ரிபுவன மல்லன்) மேற்குச் சாளுக்கிய 3-ம் அரசன்.

1010-1053. போஜ மஹாராஜன். மாளவதேசத்தரசன். தாரா நகரில் அரசாண்டான்.

1010. ராஜராஜ சோழன் ஆட்சியின் 26-ம் வருஷம். இவர் கட்டிய தஞ்சாவூர்க் கோவிற் சுவரில் இவ்வருஷச் சிலைலிபி ஒன்று இருக்கிறது.

1011. நம்பியாண்டார் நம்பி. (ராஜராஜசோழன் முயற்சியால்) தேவார திருவாசகங்களைத் திருமுறைகளாகத் தொகுத்தார்.

1012-1035. 1-ம் ராஜேந்திரசோழன். (கங்கைகொண்டசோழன் ?).

1015-1040. காங்கேய தேவர். கோதாவரிக்கும் நர்மதைக்கும் நடுவேயுள்ள சேடிராஜ்யத்தையாண்ட காலசூரி அல்லது ஹைஹய அரசன்.

1015-1022. விக்கிரமாதித்யன். கிழக்குச் சாளுக்கிய 26-ம் அரசன் ஷை 25-ம் அரசன் தம்பி.

1017. ராமானுஜாசாரியர் ஜனனம். (கலி 4118=சாலிவாஹன சகம் 939=பிங்கள-ஸ்ரீ சைத்ர-சுக்லபக்ஷ-ஸப்தமி-வியாழன்-திருவாதிரை). இவர் பிதா-கேசவசோமயாஜி. இவர் தாயார்-திருப்பதித்தேவஸ்தான கைங்கர்யம் செய்துவந்த ஸ்ரீசைலபூர்ணர் புத்திரியான காந்திமதி.

கோத்திரம்—ஹரிதகோத்ரம்.
இவர் மனைவி—தங்கம் அம்மாள்.
பிறந்த இடம்—ஸ்ரீபெரும்பூதூர்.
இவர் குரு—யாதவப்பிரகாசர்.

கோவிந்தபட்டர். ராமாநுஜரின் சிற்றன்னையின் புத்ரர். இருவரும் கூடவாசித்தவர்கள். ராமாநுஜருக்குத்தன் குருவின் உபதேசம் த்ருப்திப்படவில்லை. தவிரவும் தன் குடும்பத்தில்நேர்ந்தமனஸ்தாபத்தால் சந்யாஸம்பெற்றார். ராமாநுஜர் விசிஷ்டாத்வைத மதத்தை ஸ்தாபித்தார்.

ராமாநுஜர்சிஷ்யர்கள்:—

(1) கோவிந்தயதி. ராமாநுஜரின் குருவாகிய யாதவப்ரகாசரே, ராமாநுஜமதத்துக்கிணங்கி, வைஷ்ணவமதத்தைத்தழுவிக் கோவிந்த யதிகள் என்ற பெயரையும் பெற்றார்.
யதிதர்ம ஸமுச்சயம். கோவிந்த யதிகள் இயற்றிய நூல்.

(2) ஸ்ரீசைலர். } வீரசைவராய் இருந்தவர்கள்.
(3) கோவிந்தபட்டர். } வைஷ்ணவர் ஆனார்கள்.

(4) கூறேசர். கூறம் என்ற ஊரைச்சேர்ந்த ஓர் ப்ராம்மணர். நல்ல பணக்காரர்.

(5) தாசரதி. ராமாநுஜரின் சகோதரியின் புத்ரன்.
ராமாநுஜ சிஷ்யர் மொத்தம் 74-பேர்கள்.

ராமாநுஜர் சோழராஜன் கொடுமை பொறுக்க மாட்டாமல், 70-வயதுக்குப்பிறகு ஸ்ரீரெங்கத்தை விட்டுப்புறப்பட்டுத்தேசஸஞ்சாரம்செய்து,கடைசியாய் த்வாரசமுத்ர (ஹலிபீட்) நகர் வந்துசேர்ந்தார். அப்போது அங்கே அரசுபுரிந்துகொண்டிருந்த க்ஷமணராஜனை பித்திதேவன் ராமாநுஜர் உபதேசம்பெற்று 1117-ல் வைஷ்ணவமதத்தைத் தழுவி, விஷ்ணுவர்த்தனன் என்றபெயரும் பெற்றான். திருநாராயணபுர (மேலக்கோட்டை)த்தில் ஓர் விஷ்ணு ஆலயமும் கட்டப்பட்டது.



ராமாநுஜர் ஸ்ரீரெங்கம் திரும்பிவந்தார்.

1137-ல் ஸ்ரீரெங்கத்தில் ராமாநுஜர் நிர்யாணம்.

ராமாநுஜர் இயற்றிய நூல்கள்.

(1) வேதார்த்த ஸங்க்ரஹம். உபநிஷத்துகளுக்கு விசிஷ்டாத்வைதபரமான வியாக்யானம்.

(2) ஸூத்ரபாஷ்யம். பாதராயணவிருத்தியைப்பெரும்பாலும் அநுசரித்தது.

(3) வேதாந்த ஸாரம்.

(4) வேதாந்த தீபம்.

(5) கீதாபாஷ்யம். தேசிகர்இதற்குத் தாத்பர்யசந்திரிகை என்னும் உரை எழுதியிருக்கிறார்.

(6) கத்ய த்ரயம்.

(7) நித்ய விதி.

ராமாநுஜர் வம்சாவளி.

ஸ்ரீசைலபூர்ணர்.

காந்திமதி (ஷை கணவன் ஆஸுரிகேசவ ஸோமயாஜி) — ராமாநுஜர்.

த்யாந்திமதி (ஷை கணவன் வேலாளமங்கலம் கமலாக்ஷபட்டர்) — கோவிந்தபட்டர்.

1018-1042. ஜயசிம்மன். (ஜகதேக மல்லன்). மேற்குச்சாளுக்ய 4-ம் அரசன்.

1018-1025. ராஜேந்திரசோழன் கடாரம் (பர்மாதேசம்) மீது படையெடுத்துச்சென்று வெற்றிபெற்றான்.

1022-1063. ராஜநரேந்திரன். (1-ம் ராஜராஜன். 8-ம் விஷ்ணுவர்த்தனன்.) கிழக்குச்சாளுக்கிய 27-ம் அரசன். ஷை 26-ம் அரசன் புதல்வன்.

1022-1027. ந்ருப் காமன். ஹய்சால ராஜவம்ச 2-ம் அரசன்.

1023-1064. ராஜராஜ சோழன் ராஜநரேந்திர சோழனுடைய சிற்றப்பன். (நன்னயபட்டகவியின் அபிப்ராயம்.)

1023. லங்கையில் மஹீந்திரன் அரசாக்ஷி. 1071-ல் மஹீந்திரன் மரணம்.

1023. கலிங்கதேசம் சோழராஜ்யத்துக்குட்பட்டு 1128-வரை அப்படியே இருந்தது.

1024. கத்திவாரினுள்ள சோமநாதர்கோவில், கஜனி மகமத் என்ற மஹமதியசேனுபதியால், கொள்ளையடிக்கப்பட்டு, நாசமாக்கவும் பட்டது.

1025. சிலைலிபி. ராஜேந்திர சோழன் ஆட்சியின் 12-ம் ஆண்டு. ராஜேந்திரசோழன், ஒரிஸா, வங்காளம், பிஹார்முதலான தேசங்களை ஜயித்து கங்கைநதிவரைசென்று கங்கைகொண்டசோழன் என்றபெயரும் பெற்றான்.

1028-1080. அநந்தமஹாராஜன். காச்மீரதேச மன்னன். ஷை ஸமஸ்தான வித்வான்கள்—

(1) க்ஷேமேந்திரன். குணாட்ய கவியால் பைசாசி என்னும் ப்ராக்ருதபாஷையில் இயற்றப்பட்ட ப்ருஹத்கதா என்றகாவியத்தை ஸம்ஸ்கிருதத்தில் க்ஷேமேந்திரன் மொழிபெயர்த்து அதற்கு ப்ருஹத்கதாமஞ்சரி என்ற பெயரும் இட்டார்.

(2) ஸோமதேவர். ராமபட்டருடைய புதல்வர். க்ஷேமேந்திரர் எழுதிய ப்ருஹத் கதாமஞ்சரியை விஸ்தரித்து எழுதி அதற்குக் கதா ஸரித் ஸாகரம் என்ற பெயரும் இட்டார்.

1031. மார்ச் 9-ம் தேதி=400 மஹமத் சகாப்தம்.

| | | | | |
|---|---|---|---|---|
| =1488 ஸ்ரீஹர்ஷ சகாப்தம் | (ஷை ஆரம்பம்) | | கி.மு. | 457. |
| =1088 விக்ரம | ,, | ,, | ,, | 57. |
| =953 சாலிவாஹன | ,, | ,, | கி. பி. | 78. |
| =4132 கலி | ,, | ,, | கி.மு. | 3101. |

என்று அல்பூரணி என்ற மஹமதிய சரித்திரக்காரர் எழுதியிருக்கிறார். அல்பூரணி (973—1048). இவர்



ஓர் முஸல்மான். இந்தியாவின் பூர்வசரித்திரத்தைப் பற்றி அவர் காலம்வரைக்கும் எழுதியிருக்கிறார். சாதாரண ஜனங்கள் வருஷங்களை ஒன்று முதல் நூறுவரை கணித்துப் பிறகு மறுபடிஒன்றுமுதல்தான் துவக்குகிறார்கள். 101, 102 என்று கணக்கிடுவதில்லை என்று கூறியிருக்கிறார்.

1033. ஷீ-லி-லா-சே-ந்-த-ல-சோ-ல (ஸ்ரீராஜேந்திரசோழன்?) சீனதேசத்துக்கு ஸ்தானுபதி அனுப்பினர். (ஸுங்ஷி=ஸுங்வம்ச சரித்திரம்)

1035-1052. (?): ராஜாதிராஜசோழன்.

1040-1070. கர்ணமஹாராஜன். காங்கேயதேவர் புதல்வன். கலசூரி அரசன். 1050-ம் ஆண்டில் மாளவதேசமன்னனை போஜராஜனைத் தொலைக்க முயற்சிசெய்தான். முடியவில்லை.

1042-1068. சோமேசுவர ஆஹவமல்லன். கல்யாணிநகரில் ஆண்ட மேற்குச்சாளுக்ய 5-ம் அரசன். யுத்தப்பிரியன். 1059-ம் ஆண்டில், ராஜாதிராஜசோழனை மைசூர் யுத்தத்தில் கொன்று காஞ்சீபுரம்வரை படையெடுத்துச்சென்று வென்றான். பிறகு தாராநகர்வரை சென்று சேடிராஜனை கர்ணனையும் ஜயித்தான்.

1042-1070. சோழராஜ்யம் பலஹீனமாய்க் குழப்பமடைந்திருந்தது. இந்த 28 வருஷகாலத்தில் 5 அரசர் ஆண்டார்கள்.

1047-1076. (சிலைலிபி.) விஜயாதித்யவல்லாளன். (1-ம் த்ரிபுவனமல்லன்.)

1050. க்ஷேமேந்திரன். காஸ்மீரதேச மன்னன், அநந்தராஜனுடைய ஸமஸ்தானவித்வான்.

இவர் இயற்றிய நூல்கள்:—

1. ஸமயமாத்ரிகா (1050-ல்)
2. ஔசித்யவிசாரசர்ச்சா.
3. பிருஹத்கதாமஞ்சரீ.

1051. (சகம் 973). பரஞ்சோதிமுனிவர். திருவிளையாடல் புராணம் இயற்றினர். [—வில்ஸன்.]

போற்றிக்கலிவெண்பா என்ற சிவஸ்துதியும் இவர் இயற்றினர்.

அதிவீரராமபாண்டியன் காலத்தவர். சைவத்தம்பிரான்.

1052. நிஜாம் ராஜ்யத்திலுள்ள குப்பம் என்ற இடத்தில் நடந்த சண்டை. ராஜாதிராஜன் சோமேசுவர ஆஹவமல்லனால் கொல்லப்பட்டான்.

1052. ராஜேந்திரதேவன். 13-ம் சோழராஜன். ராஜாதிராஜனுடைய சகோதரன்.

1059. ராஜராஜசோழன். இலங்கைமீது படையெடுத்துச் சென்று இலங்கையரசனை மஹீந்த்ரனைச்சிறைகொண்டு, இலங்கையில் தன் ப்ரதிநிதி ஒருவனையும் நியமித்தான்.

1061. (=சாலி. 983=கலி. 4163=சுபக்ருத்வருஷம்—வைசாகபௌர்ணமி, அநுஷம்.)

(பராசரபட்டர்) ஜனனம்.

இவர் பிதா—கூரத்தாழ்வார்.

இவர் குரு—ராமாநுஜர் சிஷ்யரான கோவிந்தர்.

இவர் இயற்றிய நூல்கள்:—

1. ஸ்ரீரெங்கராஜஸ்தவம்,
2. ஸ்ரீகுணரத்னகோசம்,
3. ஸஹஸ்ரநாமபாஷ்யம்,
4. க்ரியாதீபிகா,
5. அஷ்டஸ்லோகீ,
6. தனிஸ்லோகீ,
7. சதுஸ்லோகீ,
8. த்வயஸ்லோகீ.

இவருடைய சிஷ்யர்—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

நஞ்ஜீயர். ஒரு வேதாந்தியாயிருந்து உபதேசத்தால் வைஷ்ணவமதத்தைத் தழுவினர்.

பராசர பட்டர் நிர்யாணம்—ஜயஷு.



1062–3. கூடல் சங்கம யுத்தம். சாளுக்கியர் சோழர்களால் தோல்வியடைந்தார்கள்.

1063-1078. 4-ம்விஜயாதித்யன். கிழக்குச்சாளுக்ய 28-ம் அரசன். ஷை 27-ம் அரசனுடைய சகோதரன்.

1063. வீரராஜேந்திர (வீர) சோழன். சாளுக்யராஜ்யத்தைப் பற்றி 2-ம் சோமேசுவரனுக்கும், அவன் தம்பி விக்ரமாதித்தனுக்கும் சண்டை நேர்ந்தது. வீரராஜேந்திரன் விக்ரமன் கட்சியைச் சேர்ந்தான். விக்ரமன் ஜயித்தான். விக்ரமன் வீரராஜேந்திரன் புதல்வியை மணம்புரிந்தான்.

1064. குலோத்துங்க (கரிகால) சோழன், மதுரைப் பாண்டிய அரசனைத் தோற்கடித்து விரட்டிவிட்டு, தன் தம்பி கங்கைகொண்ட சோழனை மதுரை ராஜ்யாதிபதியாக்கினன். கங்கைகொண்டசோழனுக்குச் சுந்தரபாண்டிய சோழன் என்றபெயரும் வைக்கப்பட்டது.

நந்திவர்மன். பல்லவரின் கடைசி அரசன், தோல்வியடைந்தான். பல்லவராஜ்யம் சோழர்ஆட்சிக்குட்பட்டது.

பல்லவராஜ்யம். கி. பி. 4-ம் நூற்றாண்டுமுதல் சோழதேசத்துக்குவடக்கே கலிங்கதேசம்வரையுள்ளபூமியைப் பல்லவர் ஆண்டுவந்தார்கள்.

605-ல் பல்லவராஜ்யத்தின் வடபாகமாகிய வெங்கிநாடு சாளுக்கியர் வசப்பட்டு ஸ்வாதீனமாயிற்று.

காஞ்சீபுரம் பல்லவரின் தலைநகர். குலோத்துங்கன் மகன் ஆதோண்டன் என்பவனால் பல்லவர் தோல்வியடைந்தார்கள். குலோத்துங்கன்காலத்தில் சோழராஜ்யம் ஒரிஸாநாடுவரை இருந்ததாய்த் தெரியவருகின்றது.

1068-1076. 2-ம் சோமேசுவரன். (புவனைகமல்லன்)மேற்குச்சாளுக்ய 6-ம் அரசன்.

1070-1118. (?) குலோத்துங்கசோழன் I. (அபயன்,=அனபாயன்=ராஜேந்திரன் II). 1-ம் ராஜேந்திரசோழனுடைய

தௌஹித்ரன். 1064-முதல் கிழக்குச்சாளுக்ய ராஜனாக இருந்தான். 1070-ல் சோழராஜனானான்.

சேக்கிழார், திருத்தொண்டர்பெரியபுராணம் எழுதினர்.

1072. ஸ்ரீபதி. சைவ த்வைதமதஸ்தாபகர். (T. S. N. சாஸ்திரி)

1076-1126. 6-ம் விக்கிரமாதித்யன். சோமேச்வரன்புதல்வன். மேற்குச்சாளுக்ய மன்னன்.

1076-1147. சோரகங்கன். ஒரிஸாதேசமன்னன்.

1077. தி—வ—கா—ல (தேவகாலன் அல்லது திவாகரன் ?) சீனதேசத்தரசனோடு வியாபார உடன்படிக்கைசெய்தான். —[ஸாங்ஷி].

1078-79. 2-ம் ராஜராஜன். கிழக்குச்சாளுக்ய 29-ம் அரசன். ஷை 28-ம் அரசன் மகன்.

1079-1100. வீரசோழன். (8-ம் விஷ்ணுவர்த்தனன்). கிழக்குச்சாளுக்ய 30-ம் அரசன். ஷை 29-ம் அரசன்தம்பி.

1080. ஹொய்சாலவல்லாளர், கொங்குதேசத்தைஜயித்து, அதைத் தம் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டார்கள்.

1080-1088. கலசமஹாராஜன். காச்மீரதேசத்தரசன். அநந்தராஜனுடைய புத்ரன். ஹர்ஷராஜ (கவி)ன் பிதா. இவர் ஒரு ராஜகவி. [பில்ஹணர் இயற்றிய விக்ரமாங்கசரிதத்தில் இவரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.] —[ஸுபாஷிதாவளி.]

1085. பில்ஹணகவி. மேற்குச்சாளுக்ய அரசனான 6-ம் விக்ரமாதித்யன் ஸமஸ்தான வித்வான்.

இவர் இயற்றிய காவியங்கள்:—

(1) விக்ரமாங்க தேவசரிதம் (1085-ல்).

(2) சௌரபஞ்சாசிகா.

1086. 1-ம் குலோத்துங்கனால் ஸர்க்கார்வரிக்காக நிலம் அளவிடப்பட்டது.

1088-1172. (?) குமாரபாலன். கூர்ஜரராஜன்.

ஹேமசந்திராசாரியார். க்ஷமணகவி. குமாரபாலன் காலத்தவர். அபிதானசிந்தாமணி இயற்றியவர்.



1100-1106. 1-ம் வல்லாளமஹாராஜன். த்ரிபுவனமல்லனுடைய பேரன். —[சிலாலிபி]

1100. யாதவப்பிரகாசர். வைஜயந்தி என்ற நூல் இயற்றியவர்.

1104-1141. பித்திதேவர். 1-ம் வல்லாளருடைய சகோதரன் வினயாதித்யன் (2-ம் திரிபுவனமல்லன்) பேரன். ஸ்ரீரெங்கபட்டணத்துக்கடுத்த மேலக்கோட்டையில் ஆண்ட ஹொய்சால வல்லாளராஜன். [1117-ஐப்பார்க்கவும்]

1106. லக்ஷ்மணசேனன். வங்காளதேச அரசன்.

இவர்காலத்துக் கவிகள்:—

(1) கோவர்த்தனாசாரியர். கோவர்த்தனஸப்தசதிஇயற்றியவர்.

(2) ஜயதேவர். கீதகோவிந்தம் இயற்றியவர்.

(3) உமாபதி. (மந்திரி).

கோவர்த்தனஶ் ச ஶரணோ ஜயதேவ உமாபதி: ।
கவிராஜஶ் ச ரத்நாநி ஸமிதௌ லக்ஷ்மணஸ்ய ச ॥

[லக்ஷ்மணசேனன் அரண்மனையில் கீதகோவிந்தத்தைப் பற்றிய சிலாலிபியில் இது வரையப்பட்டிருக்கிறது.]

1107. ஒரிஸாவில் கொடிய பஞ்சம்.—[Orissa Legends]

1112-1127. விக்ரமசோழன். கிழக்குச்சாளுக்கியராஜ்யம் சோழர் வசமாயிற்று.

1113-1125. ஸ்ரீஹர்ஷராஜன். கானோஜ் (கான்யகுப்ஜ) நகரில் ஆண்ட மன்னன். ரத்னாவளி என்ற ஸம்ஸ்கிருதநாடகத்தை இவர் இயற்றினர். (தாவகன்என்ற கவிதான் இதை இயற்றியதாயும் சொல்லுவதுண்டு.)

1114. பாஸ்கராசாரியர் ஜனனம். இவர் ஜோதிஷசாஸ்த்ர நிபுணர். ஜோதிஷ நூல்கள் இயற்றியவர்.

1116. சகம் (1038=துர்முகி-ஸூ) கங்கவம்சத்தலைநகராய் முன்னிருந்த தலைக்காடென்னும் பட்டணத்தைச் சோழரிடமிருந்து ஹொய்சாலர் ராஜனான பித்திதேவர் பிடித்துக் கொண்டார். இத்துடன் மைசூரில் சோழர் அதிகாரம் அற்றுப்போயிற்று.)

1117. (சகம் - 1039). பித்திதேவன் (1104-ஐப்பார்க்கவும்). இவர் மனைவி சாந்தாதேவி. இவர் க்ஷமணர். ராமானுஜாசாரியர் சோழராஜன்கொடுமை பொறுக்கமாட்டாமல் ஸ்ரீரெங்கத்தைவிட்டு ஓடிவந்து பித்திதேவர் தலைநகர் சேர்ந்தார். பித்திதேவர் ராமானுஜர் உபதேசம்பெற்று, வைஷ்ணவமதத்தைத்தழுவி விஷ்ணுவர்த்தனர் என்ற பெயரும் பெற்றார்.

பேலூர் விஷ்ணு ஆலயம் இவரால் கட்டப்பட்டது.

[ஸ்ரீவணபெலகோளா ஸ்தலபுராணம்.]

1118-1136. (1132?) விக்ரமசோழன் (அகளங்கன்). இவர்காலத்துக் கவிகள்.

(1) ஒட்டக்கூத்தர். விக்ரமசோழன்உலாப்பாடினார்.

(2) கம்பர் பிறந்தகாலம்.

1119. மத்வாசாரியர் ஜனனம். த்வைதமதஸ்தாபகர்.

1125. (1176?) நேமிஸாது. க்ஷமணர். ச்வேதம்பரமதத்தைச் சேர்ந்தவர். ருத்ரதர் எழுதிய காவியாலங்காரம் என்ற நூலுக்கு இவர் உரையெழுதியிருக்கிறார்.

1126-1113. 3-ம் சோமேசுவரன் (பூலோகமல்லன்) மேற்குச்சாளுக்ய 8-ம் அரசன்.

1127. 2-ம் கஜபாஹு. இலங்கைமன்னன்.

1128. 2-ம் குலோத்துங்கசோழன் (?)

1128. பேர்மாதி (?) காலசூரிமன்னன். மேற்குச்சாளுக்யர் ஆதீனத்துக்குட்பட்டவன்.

1129-1150. ஜயசிம்மன். காஷ்மீரராஜன்.

மங்கர் (1135 - 1145). ஸ்ரீகண்டசரிதம் எழுதியவர், இவர் ஸமஸ்தானவித்வான். —[பூலர்]

கல்ஹணர். இவர்காலத்துவித்வான்.

1132. ஒரிஸாவில் கங்கவம்சத்தரசர் அரசாளத்தொடங்கினார்கள். கொங்குதேசத்திலிருந்துவந்தசோரகங்கனென்றஅரசன்



161295

இவ்வம்சஸ்தாபகன். சோரகங்கன், ஸாரங்கதரனுடைய புத்ரன், 1-ம் குலோத்துங்கனுடைய பேரன். இ. பி. 473-ம் முதல் ஆண்டுவந்த கேஸரிவம்சமுடிவில் கங்கவம்சத்தார் அரசாளத்தொடங்கினார்கள்.

1135-1145. மங்ககவி. காச்மீரராஜனான ஜயசிம்மனுடைய ஸமஸ்தான வித்வான். இவர் இயற்றிய காவியங்கள்:—

(1) ஸ்ரீகண்டசரிதம்.

(2) மங்ககோசம். —[Butler]

1136-1146. 2-ம் குலோத்துங்கசோழன். ஒட்டக்கூத்தர், (விக்ரமசோழன், 2-ம் குலோத்துங்கன், ராஜராஜன் இம்மூவரையும்பற்றி) மூவர்உலாப் பாடியிருக்கிறார்.

1137. (?) ராமானுஜர் நிர்யாணம்.

1138-1150. 2-ம் ஜகதேகமல்லன் மேற்குச்சாளுக்கிய 9-ம் அரசன்.

1142-1173. 1-ம் நரசிம்மன். விஷ்ணுவர்த்தனன் குமாரன். ஹொய்சாலராஜவம்ச 6-ம் அரசன்.

1143-1174. குமாரபாலன். கூர்ஜரமன்னன். க்ஷமணகவியாகிய ஹேமசந்திராசாரியார் இவர்காலத்தவர். (1088-ஐப்பார்க்கவும்.)
(?) சோமநாதபுரம்கோவிலை மறுபடி குமாரபாலன்கட்டினான்.

1143. ஒரிஸாவில் கொடியபஞ்சம். [Orissa Legends]

1146-1163. ராஜராஜசோழன்.

1148. கல்ஹணர். இந்தியாசரித்திரம் ஸம்ஸ்கிருதத்தில் எழுதியவர். காஷ்மீரதேசமன்னனான ஜயசிம்மன். (1129-1150) காலத்தவர். இவர் ராஜதரங்கிணி என்ற இந்துதேச சரித்திரத்தை சகம் 1070=லௌகிகாப்தம் 24=காஷ்மீர சகாப்தம் அல்லது ஸப்தர்ஷிவர்ஷம் (4224-ல்) எழுதியதாய் ராஜதரங்கிணி (I-52)யில் சொல்லியிருக்கிறார்.

1150. பாஸ்கராசாரியார் ஸித்தாந்தசிரோமணி என்ற ஜோதிஷ நூலை எழுதிமுடித்தார். [1906-I. R. 282].

1150. சுமார் 1150 வர்ஷம், பஸவர், லிங்காயதம் என்ற வீர சைவமதத்தை ஸ்தாபித்தார்.

1150-1182. தைலப்பதேவர். மேற்குச்சாளுக்ய மன்னன்.

1153-1186. பராக்ரமபாஹு. இலங்கைமன்னன். குலசேகரபாண்டியனைத்தோற்கடித்துச்சிம்மாசனத்தினின்றும்விலக்கினான்.

1156-1167. விஜ்ஜலமஹாராஜன். க்ஷமணன். காலசூரிகளின் அரசன். மேற்குச்சாளுக்ய மன்னரான 2-ம் ஜகதேகமல்லன், 3-ம் தைலப்பன் இவர்கள் ஆதீனத்துக்குட்பட்டவன். லிங்காயதமதஸ்தாபகரான பஸவருடையசகோதரி பத்மாவதியை மணம்புரிந்து, லிங்காயத மதத்தையும் சேர்ந்துகொண்டான். பஸவரைத் தன் மந்திரியாக்கிக்கொண்டு லிங்காயதமதத்தையும் ஆதரித்துப்பரவச்செய்தான்.

1159. வந்த்ய கதிய ஸர்வாநந்தர். அமரத்துக்கு டீகாஸர்வஸ்வம் என்ற உரைஎழுதினார். (Ancient Indian Polity).

1160. மாணிக்ய சந்திரர், காவ்யப்பிரகாசம் என்ற ஸம்ஸ்க்ருத அலங்கார சாஸ்ரத்துக்கு உரை எழுதினார். இதுதான் அந் நூலுக்கு முதல் வ்யாக்யானம்.

ரஸ வக்த்ர க்ரஹாதீஶ, வத்ஸரே மாஸிமாதவே ।
6 1 12
காவ்யே காவ்யப்ரகாஶஸ்ய ஸங்கேதோயம் ஸமர்த்தித: ॥

அதாவது "விக்ரம சகாப்தம் 1216-ம் வருஷம் இவ்வுரை இயற்றப்பட்டது," என்று அவரே தன் நூலில் சொல்லியிருக்கிறார்.

1162-1200. ராஜராஜசோழன் (?)

1162-1197. 1-ம் ப்ரதாபருத்ரன். ஓரங்கல் என்ற இடத்தை ஆண்ட கணபதிராஜன். கம்பன் இவர் ஸம்ஸ்தானத்துக்குவந்ததாய்ச் சொல்லப்படுகிறது. [13-செந்தமிழ்-278.]

அவனிமுழுதுண்டுமெயிராவதத்தான்
பவனிதொழுவார்படுத்தும்—புவனி
உருத்திராவுன்னுடையஓரங்கனாட்டிற்
குருத்திராவாழைக்குழாம்(கம்பன்-தமிழ்நாவலர்சரிதை)



1163-1174. ஸ்ரீஹர்ஷராஜன். நைஷதீயசரிதம் எழுதியவர். —[Buhler பூலர்].

1164. ப்ரிதிவிராஜன், தில்லி அரசனானான்.

1165. த்ரிபுவன தாதாசாரியர். ப்ராமணகவி. பத்மராசு என்பவரால் தர்க்கத்தில் தோல்வியடைந்து வீரசைவரானார்.

1166. இலங்கைமன்னனான பராக்ரமபாஹு மதுரைமீது படையெடுத்துவந்தான்.

1167. பிஜ்ஜலராஜன் (1156-ஐப்பார்க்கவும்) பஸவர் சிஷ்யரால் கபடமாய்க்கொலையுண்டான்.

1167-1166. ராயமூர்த்தி (சோமேசுவரன்) பிஜ்ஜலராஜன் மகன். தகப்பனைக்கொன்றவர்களைச்சிக்ஷிக்க ஆரம்பித்தான். பஸவன், மலையாளத்திலிருக்கும் விருஷபபுரத்துக்கு ஓடிப்போய்விட்டான். ராயமூர்த்தி, படையெடுத்துச்சென்று முற்றுகைபோட்டான். பஸவன் கிணற்றில்வீழ்ந்திறந்தான்.

1173-1220. வீரவல்லாளன். பித்திதேவன் பேரன். ஹொய்சாலரின் 7-வது அரசன். சாளுக்யர், சோழர்களின் அதிகாரத்துக்குட்படாமல் ஸ்வாதீனமாயிருந்தான்.

1175-1202. அநங்கபீமன். கங்கவம்ச 5-ம் அரசன். ஜகந்நாதம் கோவிலைக் கட்டினவன்.

1175. சிங்களர் பாண்டியதேசத்தில் படையெடுத்துவந்தார்கள். சோழர் உதவியால் பாண்டியர், சிங்களரைத்தோற்கடித்தார்கள்.

1176-1181. சங்கமன் (நி: சங்கமல்லன்). பிஜ்ஜலராஜனுடைய இரண்டாம் புதல்வன்.

1178-1215. 3-ம் குலோத்துங்கசோழன்.

1181-1183. ஆகவமல்லன். (அப்ரதிமல்லன்). பிஜ்ஜலராஜன் 3-ம் புதல்வன்.

1182-1179. 4-ம் சோமேசுவரன் (த்ரிபுவனமல்லன்). மேற்குச்சாளுக்ய 11-ம் (கடைசி) அரசன்.

1183. ஸங்கமன். பிஜ்ஜலராஜனுடைய 4-ம் மகன்.

1183-1184. 2-ம் வல்லாளன். த்வாரசமுத்ரநகரில் ஆண்ட ஹயசால மன்னன். காலசூரிகளைத்தோற்கடித்துத் தன் ஸ்வாதீனத்தை ஸ்தாபித்தான்.

1190-ல் வடபாகத்திலுள்ள யாதவர்கள், தேவகிரியைத் தம் தலைநகராக்கிக்கொண்டு ஆளத்தொடங்கினார்கள்.

1185. கம்பர் ராமாயணம் அரங்கேற்றினார்.

"ஆவின்கொடைச்சகராராயிரத்துநூற்றேழில்"

—[3-செந்தமிழ்.]

1190. (சிலேலிபி) வடபாக யாதவர்கள், மேற்குச்சாளுக்யரை ஜயித்து, அவர்கள் ராஜ்யத்தையும் தன் வசப்படுத்தி, தேவகிரியையும் தலைநகராக்கிக்கொண்டார்கள்.

1192-1211. 2-ம் வல்லாளன் காலசூரிகளை ஜயித்து (ஹயசல) ராஜ பட்டமும் அணிந்தான்.

1193. ப்ரிதிவிராஜன் பட்டாணிகளால் அபஜயமடைந்து யுத்த களத்தில் மடிந்தான். அதுமுதல் ஹிந்துராஜ்யமும் அழிந்தது. மஹமதியர் தில்லியைத் தலைநகராக்கிக் கொண்டார்கள்.

சாந்தர். ஸமர்ஷிராஜன் ஸமஸ்தானவித்வான். ப்ரிதிவி ராஜன்பக்கம்சேர்ந்து மஹமதியரைஎதிர்த்துப்போர் புரிந்து அபஜயமடைந்தான்.

கீதகோவிந்தம் எழுதிய ஜயதேவரைப்பற்றிச் சாந்தர் சொல்லியிருக்கிறார்.

1195. சக்ரபாணி. வைஷ்ணவர். சோமநாதர் என்பவரின் உபதேசம்பெற்று வீரசைவர் ஆனார்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்
பி. ஏ., பி. எல்.

---

# ஓர் போலிமேற்கோள்.

—————:o:—————

நமது செந்தமிழ்ப் பத்திரிகையின் தொகுதி-௧௨, பகுதி ௩-இன் கண் 'சுருதிவிசாரணை' என்னும் மகுடத்தின்கீழ் 'ஸாமவேதாதிதம் கீதம் ஸஞ்ஜக்ராஹ பிதாமஹ:' என்று ஸங்கீதரத்னாகரத்திற்கூறிய குறிப்பைக்கொண்டு ஸாமவேதத்திய ஸ்வரங்களேழும் சுத்தஸ்வரங்கள் என்றும், "சுத்தநிஷாதத்தைநோக்கச் $(\frac{9}{8})$ சதுர்சுருதியாயிருப்பது ஷட்ஜமும், அதைநோக்கத் $(\frac{10}{9})$ திரிசுருதியாயிருப்பது சுத்தரிஷபமும், அதைநோக்கத் $(\frac{16}{15})$ துவிசுருதியாயிருப்பது சுத்தசாந்தாரமும், அதைநோக்கச் $(\frac{9}{8})$ சதுர்சுருதியாயிருப்பது பஞ்சமமும், அதைநோக்கத் $(\frac{10}{9})$ திரிசுருதியாயிருப்பது சுத்ததைவதமும், அதைநோக்கத் $(\frac{16}{15})$ துவிசுருதியாயிருப்பது சுத்தநிஷாதமும்" என்றும் காட்டியிருக்கின்றேன். தொன்றுதொட்டு வழக்கில்வந்துள்ள ஸாமகானத்தைக்கவனிப்போமாயின் மேலேகூறிய அளவுப்படிக்கு மத்தியமந்தொட்டுப் பஞ்சமமீறாக அவரோஹணக்கிரமத்தில் அவை வெகுவாய்நிகழ்வது வெளிப்படுகின்றது. ஸாமகானத்தை ஆதாரமாய்க்கொண்டு அதனின்று தங்கள் ஸங்கீதமுறையை வடநூலார் விரித்துள்ளாரென்பது உற்றுநோக்கும் யாருக்கும் தெற்றெனப்புலப்படும். ஒரு ஸ்தாயியில் இருபத்திரண்டு சுருதிகளேயுள்ளனவென்று வடநூலாசிரியர்கூறுவதைத் தற்காலத்திய ஸங்கீத அநுபவத்தினின்றும் நாம் அறிந்துகொள்ளலாம். அது வருமாறு:—ஷட்ஜமும், பஞ்சமமும் ஸ்திரமான ஸ்வரங்களானமையின் அவற்றுள் அவாந்தரபேதங்கள் இல்லை. மற்ற ஸ்வரங்கள் ஐந்தனுள் ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு பேதங்கள் உள்ளனவென்று ஸ்தூலமாய்ப்பார்ப்பவர்க்கும் தெரிகின்றமையால் அவர்களையுத்தேசித்தே தற்காலத்திய வீணைகளில் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இதனால் ஏழுஸ்வரங்கள் பன்னிரண்டு ஸ்தானங்களைப் பெற்றதற்கு நியாயம் புலப்பட்டது. தற்காலத்தில் வழங்கும் இராகங்

களின்போக்கை நுட்பமாய்க்கவனிப்போருக்கு மேலேகூறிய ஐந்து ஸ்வரங்கள் தாமே தம்முள் ஒவ்வொன்றற்கும் இரண்டிரண்டு ஸ்தானங்கள் போதாது நான்குநான்குஸ்தானங்களை அபேக்ஷிக்கின்றமை வெளிப்படும். ஆகவே ஒரு ஸ்தாயியில் $5 \times 4 = 20 + 2 = 22$ ஸ்தானங்களே வேண்டுவன என்பதாயிற்று. இவ் விருபத்திரண்டு ஸ்தானங்களையே மேலேகண்ட வியாசத்தில் யான் கணக்குக்களுடன் எடுத்துக் காட்டியிருக்கின்றேன். வீணையின்கண் காட்டியுள்ள ஸ்தானங்கள் பன்னிரண்டும் பஞ்சமஸ்தானத்தினின்று ஷட்ஜமத்தியமமுறையிலேனும், மத்தியமஸ்தானத்தினின்று ஷட்ஜபஞ்சமமுறையிலேனும் இருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளவியலாது. அவற்றுள் முற்கூறியது வைதிகஸங்கீதத்திற்கும், பிற்கூறியது லௌகிகஸங்கீதத்திற்கும் உபயோகப்படும். பஞ்சமத்திற்குள்ள தந்தியின்நீளத்தைச் சற்றுக்கூட்டியும், மத்தியமத்திற்குள்ள தந்தியின்நீளத்தைச் சற்றுக்குறைத்தும் வைத்துக்கொண்டு மேலேகண்ட ஸ்தானங்கள் பன்னிரண்டும் ஸம இடைவெளியுடையன வென்று எனது நண்பரொருவர் வாதுபுரிகின்றார். செவிநுட்பமுடையார் அதனை ஏற்பாரல்லர். ஆகவே சாஸ்திரமுறையாலும், அநுபவ முறையாலும் சுருதிகள் இருபத்திரண்டேயாமென்று நிறுத்தப்பட்டதென்க.

அந் நண்பர் ஏழு ஸ்வரங்கள் பன்னிரண்டு ஸ்தானங்களைப்பெற்ற முறையைச் சற்றுமுணராது இயற்கையாயுள்ள பஞ்சமமத்தியமஸ்தானங்களை நிலைகுலைவித்ததுமன்றி,

“ஆயத்துக் கீரா றறுநான்கு வட்டத்துக்
கேயுங்கோ ணத்துக் கிரட்டிப்புத்—தூயவிசை
நுண்மைக் கதிலிரட்டி நோனலகு மோர்நிலைக்கிங்
கெண்மூன்று கேள்விகொண் டெண்.’’

என்னும் ஓர் போலிமேற்கோளைக்காட்டி “இதனால் ஒரு ஸ்தாயியில் ஆயப்பாலைக்குப் பன்னிரண்டு சுரங்களென்றும், வட்டப்பாலைக்கு இருபத்துநான்கு சுருதிகளென்றும், திரிகோணப்பாலையில் 48-சுருதிகளென்றும், சதுரப்பாலையில் 96-சுருதிகளென்றும் வழங்கிவந்தார்களென்று



தெளிவாக அறிகிறோம்’’ என்று கூசாது கூறுவாராயினர். இவ் விவரத்தைநோக்கும் சிலருக்குத் தமிழ்நூலாரது வழக்கு அப்படிக்கு யிருக்குமேபோலுமென்னும் ஐயப்பாடு தோன்றற்பாலது. இம்மேற்கோள் நமது தமிழ்நூலெதன்கண்ணுங் காணக்கிடைத்திலது. இனி யான் எடுத்துக்காட்டும் ஆதாரங்களை நோக்கியமாத்திரமே அவர்களது ஐயம் அகன்றுவிடுமென்று நம்புகிறேன்.

வடநூலார் ஸாமவேதஸ்வரங்களை ஆதாரமாய்க்கொண்டு இருபத்திரண்டு சுருதிகளைக் கணக்கிட்டிருப்பதுபோல் தமிழ்நூலுடையார் தமிழ்வேதமாம் திருத்தாண்டகத்தைத் தொன்றுதொட்டுப்பாடும் முறையை ஆதாரமாய்க்கொண்டு அவ் விருபத்திரண்டு சுருதிகளையே நாட்டியுள்ளார். மேலேகண்ட முறைப்படி அந்த ஸ்வரங்களின் அளவைக் கவனிப்போமாயின் குரல் என்னும் ஷட்ஜம் $(\frac{9}{8})$ சதுர்சுருதியாகவும், துத்தம் என்னும் ரிஷபம் $(\frac{9}{8})$ சதுர்சுருதியாகவும், கைக்கிளை என்னும் காந்தாரம் $(\frac{10}{9})$ திரிசுருதியாகவும், உழைஎன்னும் மத்தியமம்$(\frac{16}{15})$ துவிசுருதியாகவும், இளி என்னும் பஞ்சமம் $(\frac{9}{8})$ சதுர்சுருதியாகவும், விளரி என்னும் தைவதம்$(\frac{10}{9})$திரிசுருதியாகவும், தாரம் என்னும் நிஷாதம் $(\frac{16}{15})$ துவிசுருதியாகவும் இருப்பதுவிளங்கும். நாம் இதுகாறும் சுருதியென்றுகூறிவந்ததைத் தமிழ்நூலார் அலகு என்றும் மாத்திரை என்றும் கூறுவர். சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரென்பவர் எடுத்துக்காட்டிய மேற்கோள் வருமாறு:—

“குரறுத்த நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா வுழையிளி நான்கு—விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்.’’

சிலப்பதிகார அரும்பதவுரை மேற்கோள் வருமாறு:—

“குரலே துத்த மிளியிவை நான்கும்
விளரி கைக்கிளை மும்மூன் றாகித்
தளராத் தார முழையிவை யீரிரண்
டெனவெழு மெண்ப வறிந்திசி னோரே.’’

சேந்தன் றிவாகரத்திற்கண்ட செய்யுள் வருமாறு:—

"இளிதுத் தங்குரற் கேற்குநந் நான்கே
கிளையும் விளரிபு மும்மூன் றுழையுந்
தாரமு மிவ்விரண் டேழிசை மாத்திரை."

இவற்றைக் கணக்கிட்டுப்பார்க்கும்போது ஷட்ஜத்திற்கு 240-ம், ரிஷபத்திற்கு 270-ம், காந்தாரத்திற்கு 300-ம், மத்தியமத்திற்கு 320-ம், பஞ்சமத்திற்கு 360-ம், தைவதத்திற்கு 400-ம், நிஷாதத்திற்கு 426⅔-ம் என்றிம்முறையிலே துடிகள் (Vibrations) கிடைக்கின்றன.

இதுவன்றி அடியார்க்குநல்லார்,

"ஆயஞ் சதுரந் திரிகோணம் வட்டமெனப்
பாய நான்கும் பாலை யாகும்."
"வட்ட மென்பது வகுக்குங் காலை
யோரேழ் தொடுத்த மண்டல மாகும்."

என்று ஆயமுதலியபாலை நான்கையுங்கூறி வட்டத்தைமாத்திரம் விரித்துரைத்து மேற்கோள் கூறியுள்ளார். இவற்றினின்று ஆயத்திற்குப் பன்னிரண்டுசுரங்களென்றேனும் வட்டத்திற்கு இருபத்துநான்கு சுருதிகளென்றேனும் பெறப்படவில்லை. சதுரம், திரிகோணமென்னு மிவற்றின்விவரம் ஆங்குக்காட்டப்படவுமில்லை. இவற்றையாராய்ந்தோர் மேலேகாட்டியுள்ள போலிமேற்கோளுக்கு எத்துணை மதிப்புறுத்துவார்களென்பது கூறுமேவிளங்கும். ஆகவே வடமொழிநூல்களிலும் தமிழ்நூல்களிலுங்கண்ட இருபத்திரண்டு சுருதிகளையும் விடுத்துப் புதியதோர் போலிவழியைநாடுவது உண்மைச்சங்கீதத்திற்குப் பொருந்தாதிருக்கிறது.

21-4-18,
தஞ்சை.
பண்டித: S. சுப்பிரமணியசாஸ்திரி.

---

# சோதிடப்பொருத்தம்.

தென்னிந்திய சங்கீதத்திலும், சோதிடத்திலும் பேர்போன தஞ்சை மகா-ள-ள-ஸ்ரீ மு. ஆபிரகாம் பண்டிதரவர்கள் தமது கருணாமிர்தசாகரமென்னுமிசைத்தமிழ்நூலினுள் 695-ம் பக்கத்திற் றொடங்கியுள்ள "இசைத்தமிழில்வழங்கிவருஞ்சுரங்களுக்குச் சோதிடப் பொருத்தம்" என்னுந் தலைப்பின்கீழ் "கடைச்சங்ககாலத்திருந்த ஆசிரியர் நல்லந்துவனார் பாடியதும், வையமலையில் மழைபெய்ய ஆரம்பித்த நேரத்தைக் குறிப்பதுமாகிய பரிபாடலையும், அதற்குப் பரிமேலழகர் எழுதியதாகச் சொல்லப்படும் உரையையும்" காட்டியுள்ளார். அது வருமாறு:—

"ஆசிரியர் நல்லந்துவனார் பாடியதும் நாகனார் இசையமைத்ததுமாகிய அடியிற்கண்ட பரிபாடலில்,

'விரிகதிர் மதியொடு வியல்விசும்பு புணர்ப்ப
வெரிசடை யெழில்வேழந் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றொன்பதிற் றிருக்கையு
ளுருகெழு வெள்ளிவந் தேறியல்சேர வருடைப்
படிமகன் வாய்ப்பப் பொருடெருபுந்தி மிதுனம்
பொருந்தப் புலர்விடியல் வங்கியுயர்நிற்ப வந்தணன்
பங்குவி னில்லத்துணைக்குப் பாலெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதிய மறைய வருநாளில் வாய்ந்த
பொதியின் முனிவன் புரைவரைக் கீறி
மிதுன மடைய விரிகதிர் வேனில்
றிரவாவு மாரி யிளையெனை விவற்றூற்
புரைகெழு வையம் பொழிமழை தாழ
நெரிதரூஉம் வையைப் புனல்'

(இ-ள்) விசும்பு மதியத்தொடு புணர்ப்பனவாகிய வெரியுஞ் சடையுமவேழமு முதலாக வவற்றின்கீழிருந்து விதியால் வேறுபடுக்கப்

பட்ட வோரொன்றென்பது நாளாகிய மூவகை இராசிகளுள் மேலவாய நாண்மீன்களைக் கீழதாகிய மதிபுணர்தலாவ தவ்வநேர்நிற்றன் மாத்திர மாகலின் அவற்றை விசும்பு புணர்ப்பனவென்றார்.

எரி—அங்கியைத் தெய்வமாகவுடைய கார்த்திகை; அதனாலதன் முதலாதனையுடைய விடபமுணர்த்தப்பட்டது.

சடை—சடையையுடைய வீசனைத் தெய்வமாகவுடைய திருவா திரை; அதனாலதனையுடைய மிதுனமுணர்த்தப்பட்டது.

வேழம்—வேழத்திற்கு யோனியாகிய பரணி; அதனாலதனையு டைய மேழமுணர்த்தப்பட்டது.

இவைமுதலாக விவற்றின் கீழிருத்தலாவ திவற்றது பெயரான் இடபவீதி மிதுனவீதி மேடவீதியென வகுக்கப்பட்ட இம்மூவகை வீதியுள்ளுமடங்குதல்.

அவற்றுள், இடபவீதி கன்னி துலா மீன மேடமென்பன; [மிதுன வீதி விருச்சிகந் தனுசு மகரங் கும்பமென்பன;] மேடவீதி இடபம் மிதுனங் கற்கடகஞ் சிங்கமென்பன.

ஓரிராசியாவது இரண்டேகாலுளாகலின் நந்நான்கிராசியாகிய விவை யோரொன்றென்பது நாளாயின. கோட்களுக் கிடனாகலா னிவை பன்னிரண்டி மிருக்கையெனப்பட்டன.

நிறத்தையுடைய வெள்ளி இடபத்தைச் சேரச், செவ்வாய் மேடத்தைச்சேரப், புதன் மிதுனத்தைச்சேரக், கார்த்திகை யுச்சமாக விடிதலுண்டாக வியாழஞ் சனியினில்ல மிரண்டாகிய மகரங்கும்பங் கட்குப்பாலையாகிய மீனத்தைச்சேர, யமனைத் தமயனாகவுடைய சனி வில்லுக்குப் பின்னாகிய மகரத்தைச் சேர, விராகு மதிமறையும்படி வருநாளின்கண் ஆதித்தன் சீயத்தையடையவென்பார் 'புலர் விடி யலங்கியுயர் நிற்ப' என்றார்.

பாம்பு மதியமறையவொல்லை வருநாளென்றது அவ் வாவணி மாதத்து மதிநிறை நாளாகியவவிட்டத்தை எனவே, மதியுமிராகுவு மகரத்து நிற்க வென்பதூஉம், கேது வதற் கேழாமிடமாகிய கற்க டகத்து நிற்க வென்பதூஉம் பெறப்பட்டன.



இதனாற்சொல்லிய தாவணித்திங்க ளவிட்டநாளி னிக்கோட்க டமக்குரிய நிலமாகிய விவ்விராசிகளி னிற்பச் சோமனை யரவுதீண்ட வென்பதாயிற்று.

அகத்தியனென்னுமீன் உயர்ந்த தன்னிடத்தைக் கடந்து மிது னத்தைப் பொருந்த அப்பொதியிலே யிட்டெனவுந் தோன்றநின்றது.

முறுகின வெயிலையுடைய முதுவேனிற்குப் பின்வருங் கார் காலத்து மழைபெய்கவென்ற விவ்விதிவழியா லுயர்ந்தசையமலைக்கண் மழைபெய்ய."

பின்னும் உரையாசிரியரது வாசகத்தையனுசரித்த இராசிச்சக் கரமொன்று பண்டிதரவர்களாலேயே பின்வருமாறு காட்டப்பட்டுள் ளது:—

| | | | |
|---|---|---|---|
| வியாழம். | செவ்வாய். | வெள்ளி | புதன். லக்கினம். |
| | இராசிச் சக்கரம். | | கேது. |
| சனி. மதி. இராகு. | | | ஆதித்தன். |
| | | | |

இவ்விஷயத்திற் சோதிடத்திற்கரைகண்ட பண்டிதரவர்களுக்குச் சந்தேகம் சிறிதும் தோன்றாமையின் முற்காலத்திய தமிழ்நூலாசிரியர் களுக்குச் சங்கீதத்திற்போன்று சோதிடத்திலும் ஒப்புயர்வில்லா வல் லமையிருந்ததென்றுமாத்திரம் அவர்கள் குறிப்பித்தனர். என்னைப் போன்ற சிலருக்கு ஆங்கு இரண்டொரு சந்தேகங்கள் நிகழா நின்றன.

சூரியனிருக்குமிராசிக்கு முன்னே பின்னே இரண்டாவதாயுள்ள இராசிக்கப்பாற் புதன் செல்லுதலில்லையென்பதூஉம், மூன்றாவதா

யுள்ள இராசிக்கப்பாற் சுக்கிரன் செல்லுதலில்லையென்பதூஉம் சோதிட நூல் கற்றோர் யாவருக்கும் வெளிப்படையாம். சூரியனுதயமாகும் போதும் அஸ்தமிக்கும்போதும் அதற்குச் சிறிதே விலகப்பெறும் புதனை நாம் ஏதோசில சமயங்களிற்றான் காணக்கூடும். ஆகவே அதனைச் சூரியனிருக்குமிராசிக்கு மூன்றாவது இராசியின்கண் காண்பது அசம்பவமேயாமெனத் தெரியவருகின்றது. சுக்கிரன் சூரியனிருக்குமிராசிக்கு நான்காவது இராசியிற் காணப்படவேண்டுமாயின் சூரியனது உதயஅஸ்தமயகாலங்களில் அதனை உச்சியிற்காணுதல் வேண்டப்படும். அஃதன்றியும் நடுப்பகலிலும் நடுஇராத்திரியிலும் சுக்கிரனது உதய அஸ்தமயங்கள் காணப்படுதலும்வேண்டும். அக்காலங்களில் அவற்றிற்குச் சம்பவமின்மையும் வெளிப்படையேயாம்.

“[illegible]”

என்று வராகமிகிரர் கூறியதும் இதற்குச் சான்றாகும். ஆகவே நமது பண்டிதரவர்கள் காட்டியபடிக்குச் சிங்கத்திற் சூரியனிருக்குங்கால் இடபத்திற் சுக்கிரனும் மிதுனத்திற் புதனுங் காண்டற்கு நியாயம் புலப்பட்டிலது.

இதுவுமன்றி “பாம்பு மதியமறையவொல்லை வருநாளென்றது அவ்வாவணிமாதத்து மதிநிறை நாளாகிய அவிட்டத்தை எனவே, மதியுமிராகுவு மகரத்து நிற்க” என்றுரையாசிரியர் கூறுமாறு மகரத்து நிறைமதியையும் இராகுவையும் வைத்திடின் அது சூரியனிருக்கும் சிங்கத்திற்கு ஆறாவதே இராசியாவதுகொண்டும், ஏழாவது இராசியாகவிருந்தாலன்றி அது நிறைமதியாதற்குச் சம்பவமின்மைகொண்டும், அவிட்டத்தின் பிற்பகுதியெனக்கொள்ளின் அவை கும்பத்திலிருத்தலே பொருந்துவதாமெனக்கொண்டும் பல சந்தேகங்கள் பிறக்கின்றன.

இவற்றைப் பண்டிதரவர்களே பக்ஷபாதமின்றியகற்றி உண்மையைப் போதிப்பார்களென்று நம்புகிறேன்.

பண்டித, S. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

# கம்பராமாயணத்தின் விகற்பம்.

௧௮௱௯௰-ஆம் ஆண்டில் நாம் காரைக்காலில் இளையவனைத் தமிழைக்கற்றுக்கொண்டுவாழுமளவில் அச்சிட்டவும், கையெழுதியவுமாகிய தமிழ்நூல்களைத்தேடிவந்தோம். அப்போதொருநாள் ஒரு சிற்றூரிலிருந்து ஓரோலைக்கட்டையனுப்பினார்கள். அந்தச்சுவடியில் கம்பராமாயணத்தின் முதன்மூன்றுகாண்டங்களிருந்தன. ஆனால் அச்சுவடி மிகவும் பழையதானதால் பலவோலைகள் கெட்டிருந்தன. அதுவுமன்றி, பல வோலைகள் அசுத்தமான வாசிக்கக்கூடாத கிழிக்கப்பட்டவாயின. பாலகாண்டத்தை அச்சிட்டபிரதிகளோடு ஒத்துப்பார்க்கையில் அச்சிட்டசிலகவிகளில்லாமையும், அச்சிட்டில்லாத சிலகவிகள் வந்தமையும் கண்டோம். அவற்றுள் கையடைப்படலத்தின் கடைசியில் ஒன்பது கவிகள் அகப்பட்டன. அவையின்னமச்சிடப்படாமையால் அவை வெளிப்படனன்றாகுமென்று இவண் எழுதிவெளியிடுகின்றோம். அவை வருமாறு:—

இனியசோலைமற்றியாவதீதென
முனிவகூறெனமுதல்வன்கூறலும்
பனுவல்வேதநூல்பகருமாதவன்
தனுவலாயிதன்றன்மைகேளென. (௨௫)

சம்பரப்பெயர்த்தானவன்னுடன்
உம்பர்கோமகனமருடன்றநாள்
வெம்பிமற்றவன்வெற்றிகொண்டபோ
தம்பரமிழிந்தவனிவந்தனன். (௨௬)

அவனிவந்துமன்னவரிடந்தொறும்
தவனனென்னவேதானுமுன்றறிந்
திவனில்வேறுமற்றில்லையெற்கென
வுவன்விரும்பிவந்துந்தைநாடுவோன். (௨௭)

இந்தவல்லிடத்தெய்திபிந்திரன்
சந்துவார்பொழிற்றருவொரைந்தையும்
வந்துநிற்கெனுமனநினைப்பின்முன்
முந்தவந்துமாமுரலநின்றதால். (௨௮)

நின்றசோலைவாய்நியமநித்தமுங்
குன்றலின்றியேசெய்துகொண்டவ
னன்றியவிருந்தாசைநன்றிய
துன்றுசொலைவயின்றெழில்செலுத்தினான். (௨௯)

உருவமாதினானுருவமாகியே
நிருபனன்குடைநீழல்நிற்றலும்
பருவில்நோக்கிநீபகர்தியாரெனத்
தருவினாயகன்றான்விளம்பினான். (௩௰)

சதமகன்னெனைச்சம்பரன்னெனும்
மதமகன்றுரந்தரசுவவ்வினான்
கதமகன்றிடாக்கவனவெற்பவென்
விதமகன்றுவந்துன்னைமேவினேன். (௩௧)

என்றபோதுதன்னிரதமேறியே
சென்றுமற்றவன்சேனையோடுகக்
கொன்றுவாசவனரசுகொள்ளவே
யன்றளித்துமீண்டயோத்திமேவினான். (௩௨)

அன்னதாதலினவனியைந்துதா
ரென்னுநாமமிச்சோலையென்னலும்
மன்னர்மன்னவன்மதலைநன்றெனப்
பன்னநின்றுபார்பரியவெய்தினார். (௩௩)

கையடைப்படலமுற்றும்.

M. Julien Vinsun,
Paris.

உ

குமரகுருபரன் துணை.

## பெருவல்லம் என்ற ஊர்ப்பெயர் ஆராய்ச்சி.

# ஐயவினா.

‘தமிழ்வளர்கூடல்’ எனப்பெறும் மதுரைமாநகரில், இற்றைக்குப் பதினேழாண்டுகட்குமுன்னர், சேதுபதிகுலதிலகராய ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைப்பூபரால் நிறுவப்பெற்று, தமிழ்மக்கள் அபிமான ஆதரிப்பாற் சிறந்துவிளங்கும் நான்காந்தமிழ்ச்சங்கத்தினின்றும் மாதந்தோறும் தமிழ் இலக்கண இலக்கிய ஆராய்ச்சியுடன் வெளிப்போதரும் செந்தமிழ்ப்பத்திரிகைத்தொகுதி 16 பகுதி 2-ல், ‘பெருவல்லம் ஓர் நூற்பெயராமா’ என்ற பொருளுரையொன்று, பெயர்விழையான் என்னும் ஒருவரால்’ எழுதப்பெற்றிருந்ததை வாசிக்கலாயினன்.

‘பெருவல்லம்’ என்பது நூற்பெயரெனக்கொண்டு குறித்துள்ள ஸ்ரீ சேஷகிரிசாஸ்திரியார் போன்றவர் கொள்கையை மறுக்குமுகத்தான், பெருவல்லம் என்பது நூற்பெயரன்று; ஓர் ‘ஊர்ப்பெயரே’ என யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியர் குறிப்புரைகொண்டு, நிலைநிறுத்த முற்பட்டிருக்கும் ‘பெயர்விழையான்,’—

“சிற்றியாறு பாய்ந்தாடுஞ் சேயரி யுண்கண்ணாய்
வற்றா வளவயலும் வாய்மாண்ட வேரியும்
பற்றார்ப் பிணிக்கும் மதிலும் படுகிடங்கு
மொப்ப வுடைத்தா யொளியோவா நீர்ப்புட்க
டத்தி யிரைதேடுந் தையலாய் நின்னூர்ப்பே
ரொத்துணரும் வண்ண முரைத்தி யெனக்கூறக்
கட்டலர் தாமரையு ளேழுங் கவிமான்றேர்க்
கத்திருவ ரைவருங் காயா மரமொன்றும்
பெற்றவழி தேர்ந்துண்ணும் பேயி னிருதலையும்
வித்தாத நெல்லி னிறுதியும் பெற்றக்கா
லொத்தியைந்த தெம்மூர்ப் பெயரென்றாள் வானவன்கை
விற்பொறித்த வேற்புருவத் தாள்”

என்ற தொல்காப்பிய உரையாசிரியர், யாப்பருங்கலவிருத்தி யுரையாசிரியர் இவர்கள் உரைமேற்கோளாகக்காட்டிய செய்யுளின் பொருளை விரித்து, கட்டலர்தாமரை, கலிமான்றேர்க்கத்திருவர், காயா மரம், பெற்றவழிதேர்ந்துண்ணும்பேய், வித்தாதநேல், ஆகிய இவ்வைந்து தொடர்களும் இன்னின்னபொருளைக்குறிப்பன என்பதைவிளக்கி, ஏழு, ஐவர், ஒன்று, இருதலை, இறுதிஎன்பவை இன்னின்னசொற்களி னின்றும் எடுக்கப்பெற்றுப் பெருவல்லம் என்று புணர்க்கப்படும் என் பதை விவரித்துக்காட்டாது, வாசிப்போரை மயங்கவைத்தது விசன கரமானது. நம் நண்பர் பெருவல்லம் என்றது ஷை செய்யுளினின் றும் இன்னவாறு பெறப்படுவதுஎன்பதைக் கூடியவிரைவில் விளக்கு வாராக.

மேற்படி பொருளுரைக்கு முன்னுரையாகச் சொல்லப்பட்டிருக் கும் பாராவில், "மொழிகள் நின்று நிலவற்கு எழுத்துக்கள் இன்றி யமையாதன" என்னும் ஓர் பண்டிதர்கூற்று, எழுத்துஏற்படாது வழங்கிவந்த சில மொழிகள் நாளடைவே மறைந்தமை உண்மையான் பெரிதும் ஒக்கும் என்று வலியுறுத்தியெழுதப்பட்டுள்ளது. இவ்வாக் கியத்திற்கண்ட சிலமொழிகள் இவையென்று நம் நண்பரால் விளக்கப் பெறுதலும் அவசியமாம்.

இங்ஙனம்,
தமிழ்த்தொண்டன்,
பு. சிதம்பர புன்னைவனநாதன்.

நாதவிலாஸம்,
மதுரை.

---

௨

# தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்

பண்டைத் தண்டமிழ்ப்பனுவல்களுக்கெல்லாம் பேரிலக்கணமாகி விளங்கும் ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்துக்குத் தம் பெருமை ஓராமல் உரைநாட்டப்புகுந்தாரும், அவர் கொள்கையே அதற்கு வாய்ந்த உண்மைப்பொருளெனத் துணிந்து அது வினையமுடையதன் றெனக் கருதுபவராய்ப் பிறவகுப்பான் புகுந்தாருமாகித் தத்தம் அறி யாமையையே வெளிப்படுத்தினர் பலராவர். இதற்குச் சான்றாக நன்னூல் உடையாரையே இதுபொழுது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



ஆசிரியர் "எழுத்தெனப்படுப" என்னுஞ் சூத்திரத்தால் அகர முதல் னகர இறுவாய் அமைந்த முப்பத்தோரெழுத்துக்களை ஒரு வகையாகவும், அல்லாதன மூன்றை ஒருவகையாகவும்கூறினர்.(ஏனைய மூன்றினை அவ்வச்சூத்திரங்களில் விரிவாக விளக்கிக் காட்டுதும்.)

"அவைதாம் குற்றியலிகரம்" என்பதால் அல்லாதனவற்றிற்குத் தனித்தனிப்பெயர் வகுத்தார்

இதனால் ஆய்தத்திற்கும் இடம் உய்த்துணர வைத்தார். இகர உகரங்கள் உயிர்வருக்கத்து ஓர் பிரிவின ஆதலின் அவை ஒழித்து மெய்வகுப்பான் முன்னரே இதைக் கைக்கொண்டு அவை வகுக்கும் வரையில் வாளாச் சேறலினென்க.

"அவற்றுள் அ இ உ" என்பதால் முதல்வகையின் ஒரு பகுதி யின் ஒருபிரிவை விளக்குவதுடன் அதன்பெயர் முதலியனவும் விளக் கினர்.

"ஆ ஈ ஊ" என்பதால் குறிப்பிட்டவகையின் ஒரு பகுதியின் பின்பிரிவை அம்முறைபெற வகுத்தார்.

அம்மட்டோடன்றி அவ்வெழுத்துவரிசையும் உய்த்துணர வைத் தார். இது கருத்து அன்றாயின் குறிலை எடுத்தோதிய ஆசிரியர் அல் லன நெடில் என்னும் இலேசினாற் சொல்வர். இந்நுணுக்கம் அறியாத பிற்காலத்தார் உரையாசிரியரை உள்ளிட்ட அனைவரையும் குறை சாற்றி இடர்ப்படுவர்.

குறில்களுக்குப் பின் அவ்வவ்வினம்பற்றிவரும் நெடில்கள் என் றலை அறிவிப்பதோடு குறிலில்லா ஐகார ஔகாரங்களை எவ்வெவ்விடங் களிற் பெய்து வைப்பதென்னும் ஐயம் உறாது காத்தலுக்கன்றோ நெடி லெழுத்துக்களையும் தனித்தனிமுறைப்பட வகுத்துக்காட்டினரென்க. குறில் நெடில்களைக் குறிப்பிடும்பொழுதே குறிலே அளவு கோட ஆதாரமாமெனக் கண்டுகொள்ளற்காகவன்றோ ஓரளபு ஈரளபு என அவ்வவ்வினங்கூறுமுழி இ எடுத்தோதியும் வேறொரு தனிச்சூத்திரந் தான் எதிர்மறுத்துங் கூறினர். இதை அறியாத நன்னூலார் தாம் ஏதோ ஒரு நுணுக்கங்கண்டார்போன்று மனக்கோட்டைகட்டி முதனூலொடு மாறுபடவும், முறை இன்றிப் படிப்பாரிடர்ப்படவும்

"உயிரளபு" எனத்தொடங்கிக் கூறுவர். ஈண்டு அவர்வகுத்த வரிசையின் வழூஉக்குழூஉக்களை எடுத்துக்காட்டிப் போயின் நாமேற்கொண்டது வலியுறும். குறிலும் நெடிலும் பிறவும் எனவும், இகர உகரக்குறுக்கங்களெனவும் குறிப்பிட்டார். இவைகளை அறிய அளவே கருவியாதலையுணராராதலின் இன்னும் இதனுள் உகரத்தை முற்கூறுதும், முற்கூற வேண்டாப் பிறப்பைக் கூறியும் நம்மை மயங்கவைப்பர்.

"நீட்டம்வேண்டின்" என்பதால் அளபெடை கூறுவார்போன்று இருவகைநெடில்களுமே அளபெடுக்கும் எனவும், அவ்வவைகளுக்கு அவ்வவ்வுயிரினஞ் சார்த்தி எழுதலே அடையாளமெனவும், குறிலளபெடாது எனவும் செவ்வனே அறிந்துகொள்ள அச்சூத்திரப்போக்கிலேயே, 'எழூஉதல்' என உதாரணமுங் காட்டி அருளினர்.

"கண்ணிமை" என்பதால் அளவின் பெயர் கூறுவார்போன்று "வவ்வே" எனக்கூறிய அதுகொண்டு அவைகளை அறியக்கருவியாக்கி உயிர்மாத்திரைகாட்டி உயிர்மெய்க்கு அவ்வுயிர்மாத்திரையே எனவும், உயிராவது உயிர்மெய்யாவது தனித்தும் மெய்சார்ந்தும் வரினும் அவ்வளவினவே எனவும் விளக்கிச் செய்யுள்இயலுக்கும் உபகாரப்படுத்தினர்.

"ஒளகாரவிறுவாய்" என்பதால் நெட்டெழுத்துக்கள் கூறிய ஏதுவால் ஏகாரத்துப்பின் ஐயும் ஒகாரத்துப்பின் ஒளவும் நிலைபெறும் என்றதை வலியுறுத்தவே ஒளகார இறுவாயென்று கூறியதோடு அவைகளை உயிரெனவுங் காட்டினர்.

"னகாரவிறுவாய்" என்பதால் ககரமுதலாகத் தொடங்கத் தவறிக், கூறியது கூறுவார்போன்று இறுதியில் இருத்திய னகரத்திற்கு முன் அதன் இனத்தை இருத்துவதா? எனவும் க ங, ச ஞ, ட ண, த ந, ப ம, யரல வழளன, என வரிசையாக்குவதா? எனவும் பிறக்கும் ஐயமகற்ற, னகரத்திற்கு முன் அதன் இனத்தைச் சேர்க்கவேண்டும் என வலியுறுத்தற்குப் பின்னரும் எடுத்தோதினர்.

அல்லதூஉம் அகரமுதலாக், ககரமுதலா எனச்சூத்திரம் ஆரம்பித்து ஒளகார இறுவாய் னகார இறுவாய் உள்ளனவாகிய இவை உயிர், இவை மெய்எனப்படும் என வேண்டியவர் சூத்திரம் பெருகாமையையும், சுருங்கக்கூறி அறிவை விளங்கவைக்கவேண்டினமையும் கருதிய



ஆசிரியர் இவ்வாறு சூத்திரத்தாலும் ககர முதலா எனக்காட்டாதது குற்றமோ எனின் அற்றன்று. முன்னர் வகுத்த இருவகையில் முன்னையதை முன்வைத்துப் பின்னையதைப் பின்வைத்து அவற்றினுட் கருத்தை ஆராய்ச்சியால் இனிதறிய வைத்தாரன்றே, அம்முறையே முறையாகப் பின்னர் வகுக்கும் முவ்வகையில் முதல் வகையின் முதல் எழுத்தே முதன்மையாகும் எனவும், பின்னதுவே முன்னதுவுக்கு இனமாம்போது, க ங, ச ஞ, ட ண, த ந, ப ம, ற ன எனவும், ஏனைய அவ்வொன்றே இனமில்லாது எனவும், அதுவுஞ்சிறப்பின்மையாலும் இனமின்மையாலும் இனமுள்ள அவை முதற்கண்ணே அமையவேண்டும் எனவும் உய்த்துணரவைத்தார். இம்முறையன்றி அவை பிறழ வருமேல் வேறெடுத்து ஓதியே இருப்பர்.

இவையறியாத நன்னூலார் "அம்முதலீராறுவி கம்முதன்மெய் மூவாறு" எனக்குறுக்கி மேலேகாட்டியவற்றை அடையவொண்ணாது மயக்கித் தொகைவகையறியாது கெடுத்துப்பழிபெறுவர். "னகர இறுவாய்" என்றதற்குப் பிறர் நுணுக்கமாகக்கூறும் விசேடமே விசேடம்.

(தொடரும்.)

இங்ஙனம்,

நவநீதகிருஷ்ணபாரதி,
தலைமைத் தமிழ்ப்பண்டிதன்,
ஸ்ரீராமநாதர் காலேஜ், சுன்னாகம்.

௨

## உரைநுட்பம்.

நிகழாநின்ற இவ்வருஷத்துச்"செந்தமிழ்" 2-ம் பகுதியில் ஸ்ரீ. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள் தம்முடைய உரைநுட்பத்தில், "பதிமருண்டுபைதலுழக்குமதிமருண்டு மாலைபடர்தரும்போழ்து" என்னுந் திருக்குறளுக்கு எழுதிய உரைநுட்பம் அந்தச்செந்தமிழை வாசித்தவர்க்குத்தெரியுமாதலின் அதனைமுழுதும் நான் இங்கே அநுவதிக்கவேண்டியதில்லை.

பரிமேலழகருரை இரண்டுதரமே நாவலர்காலத்திற்பதிப்பிக்கப் பட்டதென்றும், பின்னுள்ளபதிப்புகள் அவர்காலத்துக்குப்பின், சதாசிவப்பிள்ளையாற் பதிப்பிக்கப்பட்டனவென்றுந்தெரியவருகின்றது.

நாட்டாரவர்கள் "போழ்தெனமதிநிலைகலங்கி" என்றிருப்பதைப் "போழ்தென்மதிநிலைகலங்கியென்று திருத்திக்கொண்டாற் பொருள் பொருத்தமுறுகின்றது என்கின்றனர்."

பழைய ஏட்டுப்பிரதியொன்றிலாவது, போழ் தென்மதி என்று புள்ளியிட்டிருத்தலை ஒருவருங்காணவில்லை. நாட்டாரவர்கள் தாமுங் காணவில்லை.

ஏடுகளிற் புள்ளியிடும் வழக்கமில்லை. போழ்தென்மதியென்றும் வாசிக்கலாமேயெனின், போழ்தென என்றிருப்பினும், மாலைமயங்கி வரும்போழ்தென நினைந்து என்மதியானது நிலைகலங்கியென்றும் பொருள்பண்ணலாமே.

இனி, என் என்பதற்குப் பாட்டிலே சொல்லு இல்லை. இல்லாமையால், இனி மாலைவரும்போழ்தெனமதிநிலைகலங்கியென்றும் பொருள் பண்ணலாம்.

தலைமகளோடு இயைபில்லாத பதிமருண்டு, என்று பரிமேலழகர் கொண்டாற்போல மற்றை உரைகாரரும் மதியென்பது சந்திரனெனக் கொண்டு, மாலைமயங்கிவரும்போழ்தென, சந்திரனும், நிலைகலங்கிநோயுழக்குமென்று பொருள்பண்ணலாம். இப்பொருளானது, நாட்டாரவர்கள் பரிமேலழகரைக்கண்டித்துப் பதியென்பதற்கு நிலையென்று பண்ணியபொருளுக்கும் பொருத்தமுறுகின்றது.

ஆதலால் இவையனைத்தினுக்கும் ஏற்றதாயிருத்தலின் (போழ்தெனமதி) யென்றிருப்பதே சரி.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துப்புலவர்கள் ஏட்டுப்பிரதிகளின் ஆதாரமில்லாமல் தங்கள் மனம்போனவாறு திருத்தமாட்டார்கள். இதனை நம்பிப்போலும் சதாசிவப்பிள்ளையவர்கள் சங்கத்தார்பதிப்பைப் பின்பற்றினர்.

இங்ஙனம்,

நா. கந்தையப்பிள்ளை.

---

# ஸ்ரீமூலந் திருநாள் சஷ்டிபூர்த்திச் சரிதம்.

காப்பு.

இஷ்டசரிதம் கூற இருநிலனாள் ராமவர்மன்
சஷ்டிபூர்த் திச்சரிதம் சாற்றவே—சிஷ்டருரை
பாவடியை மேவும் பதப்பொருளாய் நிற்குமருட்
சேவடியே நற்றுணையாம் தேர்.

## திரு அவதாரம்.

### விருத்தம்.

மஞ்சுலவு மதில்சூழும் மதியுலவு மணிமாடப்
பஞ்சுலவு தளிரடியார் பாங்குலவு பசுங்கிளியும்
குஞ்சுலவு குயிலுமலர்க் கொந்துலவு சுரும்பினமும்
கெஞ்சலவின் னிசையெழுப்பும் நிகரில்வஞ்சி வளநாடு, (1)

முன்னர்செய்த மெய்த்தவமும் முழுமணிப்பூண் மார்த்தாண்ட
மன்னர்செய்த நல்லறமும் மறுமுறைசெய் புண்ணியமும்
பொன்னவிரும் பொதியமுனி போற்றியசெந் தமிழணங்கு
நன்னருறச் செய்நலமும் நல்லுருக்கொண் டெழுந்ததுபோல், (2)

முறைவருமோர் ஆயிரத்து முப்பத்து மூன்றாகும்
குறைவறுசீர் கன்னிமதி கொளுந்தேதி பதினொன்றில்
நிறைபுகழ்சேர் மாமூலம் நிலைநாளில் நீள்புகழோன்
அறைகழல்சேர் ஸ்ரீராஜ ராஜவர்மன் அகமகிழ (3)

பூராடத் திருநாளில் பொலிபுனிதை லட்சுமிபாய்
காராடும் குழலழகி கருவுயிர்த்தாள் எங்கோவை
நீராடும் கடல்சூழும் நிலவுலகும் பாதலமும்
தாராடும் இந்திரனார் தனியுலகும் தழைத்திடவே. (4)

விண்ணவர்பூ மழைபொழிந்தார், வேதியரா சிகள்மொழிந்தார்,
மண்ணவர்மா மனமகிழ்ந்தார், மாலருளை மிகப்புகழ்ந்தார்,
பண்ணவர்பாட் டிசையெடுத்தார், பாவலர்தம் துயர்விடுத்தார்
அண்ணலுயர் ராமவர்மன் அவதரித்த அப்பொழுதே. (5)

நிற்பனவும் நடப்பனவும் நெடுவானிற் பறப்பனவும்
நற்பதியில் ஊர்வனவும் நகர்வனவும் நெகிழ்வனவும்
சொற்பொருளாய் நிற்குமவன் தூயதுணை அடிகண்ட
விற்பனராம் தவத்தினரின் மிகுகளிப்பிங் கெய்தியவே, (6)

இவ்வண்ணம் எங்கோமான் இளமதிபோல் எழில்வீசி
மெய்வண்ணம் மிகுந்துவர மேவுபதி னோராம்நாள்
மைவண்ணக் கருவிழியாள் மாதரசி லட்சுமிபாய்
பொய்வண்ண உடல்விடுத்துப் பொன்னுலகம் புகுந்தனளே. (7)

செப்பிலொரு சிறுமுத்தைச் சினையீன்ற சிப்பியுடல்
அப்பொழுதே துறக்குமெனில் அணங்கனையாள் லட்சுமிபாய்,
இப்புவியோர் இதயமலர் இதழ்விரிக்கும் திருமூல
ஒப்புயர்வில் ஒளிமுத்தை உதவியுல கிருப்பாளோ? (8)

ஒவ்வொரணுத் திரளுமொவ்வோ ருட்கருத்தோ டுலகமிசை
செவ்வையுறச் சிலபொழுது திகழ்ந்துதன்னால் செய்கருமம்
எவ்வமற இயற்றியபின் இமைப்பொழுதிங் கியங்காமல்
அவ்வமரர் உலகடைதல் அயன்விதித்த விதியாமால். (9)

பஞ்சணையில் தாயிருந்து பாலூட்டாப் 'பசலை'யைநீர்
மஞ்சணையும் வளநாடன் வார்கருணை மார்த்தாண்டன்
குஞ்சணைக்கும் பெடைபோலக் கோமாலைத் தேன்கமழும்
நெஞ்சணைத்து வளர்த்துவர நிதம்வளர்ந்த திளங்கோவே! (10)

## கல்விப் பயிற்சி.

(வேறு.)

பிறைமதி பெருகு மாபோல்
பீடுய ரிளங்கோ ஓங்கி
கறைமதிச் சடையான் செய்ய
கருணையின் வயதைந் தாக,
நிறைமதிக் குருவை நாடி
நிமித்திகர் குறித்த நாளில்
இறைமதிப் படைந்து வாழ
இருங்கலை பயிலச் செய்தான். (11)



சீர்பெறு தமிழும் அந்தத்
திருமொழி பயந்த செல்வப்
பேர்பெறு மலைய நாட்டார்
பேசுமா மொழியும் பின்னும்
ஏர்பெறு தேவ பாஷை
எனும்வட மொழியுங் கற்றே
தார்பெறும் இனைய கோஇத்
தரணியிற் புதனே யானான். (12)

ஓங்குல கறிஞ ருள்ள
ஒளிமலர் அவிழ்ந்த ஞானம்
தேங்கலை யெறிக்கு மாழித்
தெள்ளமு துறையும் சொல்லார்
ஆங்கல மொழியு மாய்ந்தே
அதிலதி நிபுண னானான்
பூங்குலைத் தேனின் சாலிப்
புலம்விளை புனித நாட்டான். (13)

## திருக்கல்யாணம்.

நாமகள் மருவப் பெற்ற
நறுமலர் பொலிதா ரண்ணல்
பூமகள் மருவ எண்ணிப்
பொற்புறு பெண்மைக் கெல்லாம்
கோமகள் அநந்த லக்ஷ்மி
குலக்கொடி மார்கள் செல்வம்
ஆமகள் தன்னை வேட்டான்
அநங்கனும் பெருமை குன்ற. (14)

## மகுடாபிஷேகம்.

நாமகள் நளினஞ் சேர்ந்த
நலமகள் இவர்க ளையன்
வாமவான் புயத்து மேவி
வளருமின் படையக் கண்ட
காமரு பூமி தேவி
கருத்தழிந் திருகை கூப்பி
மாமகன் கழற்கால் வீழ்ந்து
மலர்க்கணீர் அருவி வார்த்தாள். (15)

தாயினும் கருணை மிக்க
　　தண்ணருள் மூல பூபன்
வேயினும் சிறந்த பொற்றோள்
　　மெல்லியல் தாபந் தீர்ப்பான்
ஆயிரத் தறுபத் தொன்றும்
　　ஆண்டிலா வணிசேர் ஐந்தில்
மேயினன் வேந்தர் வேந்தர்
　　விழைவுறும் அரசு கட்டில். (16)

ஏங்கினன் கலியன் இம்பர்
　　இடம்பிரு புவியிற் காணான்
ஓங்கின அறங்கள், தேவ
　　ரொழிந்தனர் உதர வாதை,
வீங்கின வீரர் தோளும்
　　வேதியர் வயிறும் நன்றாய்
நீங்கினன் கவலை மாலும்
　　நிதந்துயில் கொளலா மென்றே. (17)

ஞானிகள் புரக்கப் பெற்ற
　　ஞாலமே சிறக்கு மென்ன
மேனிலக் கலைஞன் முன்னாள்
　　மெய்யுற மொழிந்த மாற்றம்
நானிலத் தவர்கள் போற்றும்
　　நல்லறி வுடையன் மூலக்
கோனிலங் தாங்கக் குன்றின்
　　விளக்கெனத் தெளிந்த தன்றே! (18)

மாமநு தருமன் கர்னன்
　　மாவலி ஜனகன் ராமன்
தாமமார் புயத்த சோகன்
　　தரியலர்க் சேறு மக்பர்
சேமமார் ஜெகத்தி லின்னார்
　　சீரிய புகழோ ரென்பர்
கோமகன் ராம வர்மன்
　　குணஞ்செயல் அறிகி லாரே. (19)



கூடற்குப் புகழ்செய் சங்கப்
　　புலவர்க்கும், கோவாம் கம்ப
நாடர்க்கும், வில்லி புத்தூர்
　　நாற்கவி வலர்க்கும், ஆதி
சேடர்க்கும் தெரிக்க வொண்ணாத்
　　திருமகன் ஆட்சி வண்மை
மூடர்க்கு மூட னானேன்
　　மொழிவதும் எளிதோ அம்மா? (20)

## ஆட்சி வண்மை.

(வேறு.)

எண்ணென எழுத்தென இசைப்ப இன்னுயிர்க்
கண்ணெனக் கருதிநம் கனக மூலமன்
பெண்ணென ஆணெனப் பிறந்து ளாரெலாம்
பண்ணுறப் பயின்றிசை பாரி லெய்திட, (21)

பட்டினம் தனிலன்றிப் பட்டி தொட்டியும்
கட்டினன் பள்ளிகள் கணக்கி லாதன
வெட்டின மரமென மடமை வீழ்ந்தது
முட்டின 'ஜெயில்'களும் வாயில் மூடவே. (22)

கலைபயில் சாலையும் கரத்தின் வன்மைதேர்
நிலைதொழிற் சாலையும் நீதி சாஸ்திரம்
மலைவறப்! பயிற்றுமா சாலை யும்மறை
பலதரு வடமொழி படிக்கும் சாலையும், (23)

போதனா முறைபயில் புதுவித் யாலயம்
காதனூர் மருத்துவம் நவில்வித் யாலயம்
மாதரார் பயின்றிட வருவித் யாலயம்
*ஏதமார் சிறுவருக் கிசைவித் யாலயம், (24)

இத்தகைக் கலைபயில் இடங்கள் எண்ணில
நித்தலும் வஞ்சியில் நிறையு மாகையால்
உத்தம நாடெனும் உயர்ச்சி மேயது
பத்தரை மாற்றுறு பசும்பொன் மேனியே! (25)

* Reformatory.

நீரணி நதிகளும் நெடுநல் ஏரியும்
சீரணி செய்திடாத் திசைகள் எங்கணும்
காரணி கரத்தன்வாய்க் கால்கள் வெட்டியே
பாரணி பயிர்நனி பல்கச் செய்துளான். (26)

நல்வழி குடிதினம் நடக்க நாடெலாம்
பல்வழி திறந்தனன் பகையில் மாட்சியான்
கல்வழி மலைவழி எங்கும் காவலால்
அல்வழிக் கள்வரை அடக்கி ஆள்கின்றான். (27)

கொல்லமா நகர்முதல் குறிசெங் கோட்டையாம்
நல்லமா நகர்வரை நாமுன் யாத்திரை
செல்லநேர் பொழுதுடல் சிதைந்து சீர்கெடப்
பல்லெலாம் உடையவும் பார்த்த தில்லையோ ! (28)

மைந்தரை இழந்தழும் மாதர் ஓசையும்
சுந்தரக் கணவரைத் துறந்தோர் ஏக்கமும்
தந்தையை இழந்தழும் சேயின் சத்தமும்
இந்நாள் அங்கிலை ! இல்லை !! இல்லையே !!! (29)

இம்மெனும் முனம்இளைப் பெதுவும் இன்றியே
தம்மனப் படிசெலத் தகுதீ வண்டிகள்
நம்மனன் மூலபூ பாலன் நாளையில்
பொம்மெனப் பொலிந்தன பூக்கொள் வல்லியே ! (30)

நீரிடைச் சுறவென நிமிஷம் தாவுறும்
சீருடைப் புகைக்கலம் சிறக்க வந்தன
பாரிடைக் காற்றெனப் பறக்கும் 'பஸ்ஸு'கள்
சேரிடம் எங்கணும் செறிந்த செல்வியே ! (31)

கன்னியம் பதிமுதல் கடல்சூழ் கொச்சியாம்
பொன்னியம் பதிவரைப் போகப் பூவையீர் !
முன்னையப் பொழுதுசொல் நாட்கள் முப்பதாம்
இன்னையப் பொழுதிரு பகலும் ஏற்றமே ; (32)



சஞ்சலம் அறச்சமா சாரம் யாவையும்
எஞ்சலின் றெய்திட இன்சொற் பாவையே !
அஞ்சலந் துறைசிறப் படையச் செய்தனன்
கஞ்சநல் நாபனைக் கருத்தி ருத்தினோன். (33)

பயிர்த்தொழில் புதுமுறைப் படி பயிற்றிட
நயத்தொரு துறையது காட்டி நாடொறும்
செயத்தகு பற்பல திருத்தம் செய்கின்றான்
உயிர்க்குநல் உறுதியே உளத்தில் உன்னுவான். (34)

கால்நடைக் குறுபிணி கருவற் றோயவும்
மால்செயும் பயித்தியம் வருத்து குஷ்டமும்
மேல்வரு கிலமென விரைப்புற் றோடவும்
சால்நல வயித்திய சாலை தாபித்தான். (35)

மன்னுயிர் வருத்துபல் வகைய நோய்களும்
நன்னிலம் தரிக்கிலா தோட நாளுமே
பன்னுயர் மருத்துவ சாலை பற்பல
துன்னுறக் குடியெலாம் சுகிக்கச் செய்துளான். (36)

வட்டவார் உலகினில் வாழும் மன்னர்தம்
பொட்டதாம் மூலமா பூபன் தன்குடிக்
கிட்டமாம் படிவிதி இயற்றி ஆண்டிடச்
சட்டமா சபையொன்று தந்து ளானரோ ! (37)

தங்குறு குடிகளின் குறையைத் தன்னறம்
பங்குறு துரைத்தனம் பரிந்து கேட்டிடத்
துங்கநல் தலைவர்கள் சூழும் ஓர்ஜன
சங்கமும் நிறுவினன் தரும ராஜனே ! (38)

மன்னர்தம் கண்செவி யென்ன மாண்பிலார்
சொன்னஅப் புன்மொழி சொல்லின் வஞ்சியில்
சின்னஓர் மதலையும் செவிக்கொ ளாதெனின்
பன்னலாம் தகைத்ததோ பதியின் மாட்சியே ! (39)

எவ்வழி எவ்வழி குடிகள் ஏகினும்
அவ்வழி திரும்புறும் அன்பின் ஆழியான் !
செவ்வழி அரசியல் செல்லச் சீர்த்திசால்
நல்வழி நிமிஷமும் நாடும் சூழ்ச்சியான் ! (40)

இற்கணி தரும்இள மாதர் ஏங்கிடப்
பற்கல ஞெடுதிரு நாணும் பற்றியே
விற்கவும் நிதம்கணீர் விடவும் ஆக்கிய
நெற்கரம் நீக்கினான் நீதிக் காணியான் ! (41)

யாழிசை மொழிதரும் இன்ப வல்லியே !
பூழியர் குலவிளக் காமிப் பூபதி
வாழிநல் ஆட்சியின் வண்மை எண்ணிடில்
ஊழியும் ஊழியும் உரைக்க லாகுமே ! (42)

"ஸில்வர் ஜுபிலி."

(வேறு)

பாவேந்தர் கவிமாலை பலவேய்ந்து
தமிழ்மணக்கும் பரவு சீர்த்தி
மூவேந்தர் அவருள்ளும் முதல்வேந்தன்
எமைப்புரக்கும் முறைசால் வேந்தன்
மாவேந்தர் குலம்விளக்க வருவேந்தன்
திருமூல மகிபன் அன்பாய்ப்
பூவேந்திப் புகழேந்தும் ஆண்டிருபத்
தைந்தாகிப் பொலிந்த காலை. (43)

"இந்நாளே தமிழர்தவம் ஈடேறி
நலங்கனிந்த இனிய நன்னாள் !
இந்நாளே தமிழர்எல்லை கடந்தஇன்பக்
கடல்திளைத்திங் கிருக்கும் நன்னாள் !
இந்நாளே தமிழுலகம் அனைத்தும்விழாக்
கொண்டாடி ஏத்து நன்னாள்
இந்நாளே தமிழர்களுக் கெந்நாளின்
முன்னாளாய் இசைந்த நன்னாள் ! (44)



பெற்றெடுத்த தாயென்கோ! பின்புவளர்த்
தவளென்கோ! பிறழ்ந்து வீழ்போ
தற்றெடுத்த உறவென்கோ! உணர்வளித்த
குருவென்கோ! உயர்ந்த ஞானம்
முற்றெடுத்த கொழுந்தென்கோ! முதுகருணைப்
பிழம்பென்கோ! முந்நீர்ஞாலத்
தெற்றெடுத்திங் குவமிப்பேன் ? எவ்வகைநான்
உரைசெய்வேன் ? என்கோன் சீரே ! " (45)

(வேறு)

என்னப் பாவலர் ஏத்தி மகிழ்ந்தனர்
பொன்னைப் பெற்றழிப் பொங்குறும் ஏழையர்
அன்ன ஓகை அடைந்தது வஞ்சியும்
கன்னற் பாகு கலந்தெழு சொல்லியே! (46)

இளங்கோ இளவரசி திரு அவதாரம்.

விஞ்சு பாக்கியம் மேலுற வேதினம்
வஞ்சி நாடு வளர்வுறு காலையில்
அஞ்சு பாம்பணை ஆகவே கண்வளர்
கஞ்சநாபன் கருணைப் பெருக்கினால், (47)

சுத்த ஜோதிக் கதிரவன் சோமனோ
டித்த ரைவந் தெழிலுருக் கொண்டபோல்
சித்தி ரைவரு செல்வனும் கார்த்திகை
உத்த மத்திரு வும்உதித் தாரரோ ! (48)

சஷ்டிபூர்த்தி.

(வேறு)

ஒருகுறை உரைத்தற் கில்லா உத்தம வாழ்க்கை நாளும்
மருவுறு குடிகள் செய்த மாண்புறு தவமும், ஆழி
உருவுடைத் துளபத் தாமன் ஓங்கரு ளதுவும, சேரத்
திருவய தறுப தானான் தேவரும் விழையும் பேறன் ! (49)

### பவனிச்சிறப்பு.

(வேறு)

கனியின்மிகு சுவைமொழியான், கருணைமலர்த்
தவிர்விழியான், கடல்சூழ் ஞாலம்
நனிபுகழும் குணஎழிலான், நம்மிறைவன்
ஸ்ரீமூல நாதன் இன்று
தொனிகடல்கிண் டெழுமதியம் என, உலகோர்
துயர்துறக்கச் சுகமே லோங்க,
பனிமொழியீர்! பவனிவரும் பான்மைகண்டு
பவம் தீர்வோம் பரிந்து வாரீர் ! (50)

நீராரும் புயல்திரண்டு நிலமிசையே
நடந்தஎன நிறமார் தந்தப்
போராரும் களிறினங்கள் பூவையர்மா
மனம்பதைக்கப் போவ காணீர் !
காராரும் கடல்திரைகள் கால்பெற்றீண்
டடைந்தஎனக் கண்டோர் எண்ண,
ஏராரும் இளம்பரிகள் ஏகுமெழில்
ஏந்திழையீர் ! இனிது காணீர் ! (51)

ஐந்தாகும் பொறியடக்கி ஆணவம்ஆ
தியநீத்த ஆன்றோர் மான
வெந்தாவும் பரியூரும் வீரர்குழாம்
போம்பரிசு விரைந்து பாரீர் !
நிந்தாசெய் அடையலர்தம் நிணந்தாங்கு
வேல்வீரர் நெடுமா மேரு
வந்தாலிவ் வையமிசை எனஏகும்
வரிசை,நல்லீர் ! மகிழ்ந்து பாரீர் ! (52)

வையமிசைத் துயருழன்றீர்! வறுமையெனும்
கடல்விழுந்தீர்! வருந்தி நாளும்
நையுமுயிர்ப் பொறைசுமந்தீர்! நாடுகலை
நனிபயிலா திருந்தீர்! நம்பன்
பொய்யில்புகழ் ராமவர்ம பூபதிபால்
வாரீரோ? புரைதீ ரீரோ?
உய்யவகை தேடீரோ? எனக்கொடிகள்
உவந்தழைப்ப உற்று நோக்கீர் ! (53)



கலங்கல்விழு வனபாரார், கார்குழல்சோர்
வனைஓரார் களிவண் டீட்டம்
நலங்கவிசெங் கமலமுகம் நாடியவீழ்
வனநோக்கார், நறுந்தார் சேரும்
இலங்குதடத் திருமார்பர் இன்னுயிர்தம்
பால்விடுத்தெங் கெங்கும் ஏங்கித்
துலங்குசுவர் ஓவியமாய்த் தோன்றுவதும்
அறியகிலார், துவர்வாய் மாதர் ! (54)

அழுதழைமக் களைமறந்தார்! அன்புறுதம்
பதிமறந்தார்! அநங்கன் அன்னார்
தொழுதுரைநல் துதிமறந்தார்! தோகைமயி
லனையஉயிர்த் தோழி மாரை
முழுதுமனம் தனில்மறந்தார்! மொழிமறந்தார்!
செயல்மறந்தார்! முந்நீர் வைப்பில்
பழுதில்புகழ் ராமவர்மன் பவனிவிழா
மறவாத பாவை மாரே ! (55)

காளையரும் கன்னியரும் கலங்குமுது
வயதினரும் கருதார்க் கில்லான்
தாளையல தயலறியாத் தருமகுண
வேதியரும் தறுகண் ஆண்மைத்
தோளையுடை க்ஷத்திரியர் தூயதொழில்
வைசியர்சூத் திரரும் ஒன்றாய்
வாளைவயல் வஞ்சியில்எவ் வகைபேதங்
களுமறந்தே மகிழ்ந்தார் மாதோ ! (56)

பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும் பேசுசிறப்
பவ்வுயிர்கள் பின்னர் ஆற்றும்
விறப்பொக்கும் வினைவழியே விளையுமென
மெய்ப்புலவன் மேனாள் சொன்ன
சிறப்பொக்கும் விதிதுணையா ஜெயவேந்தன்
ராமவர்மன் செங்கோ லோச்ச
மறப்பொக்கும் பலவருண வகைபேதம்
மறைந்ததுவே வஞ்சி யெல்லாம் ! (57)

எம்மிறைவன்! எம்மிறைவன்!! எனுமொழியே
எம்முகத்தும் எழுவ காணீர்!
நம்மிறைவன் வாழ்க!எனும் நன்மொழியே
எந்நாவும் நவில்வ கேளீர்!
எம்மிறைவன் இசைத்தமிழ்போல் இசைஅடைக!
எனஎவரும் இசைப்பக் காணீர்!
நம்மிறைவன் துணையுளகால் நடுக்கமுறோம்
எனஎவரும் நவில்வ கேளீர்! (58)

எவருலகே ராமவர்ம ஏந்தலைப்போல்
இசைமருவி இருந்தார்? இன்னும்
எவருலகே தருமபதி தருமபதி
எனஎழிற்பேர் எய்தி ஆண்டார்?
எவருலகே பூமகளும் நாமகளும்
இனிதருளப் பெற்றார்? இன்னும்
எவருலகே மாலுறங்க இப்புவிகாத்
தினிதுயர்ந்தார்? எண்ணின் அம்மா! (59)

(வேறு.)

"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!
காணார்க்கும் கண்டார்க்கும் கண்ணளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!"
எல்லார்க்கும் வாழ்வருளும் எல்லையிலா வாழ்வாய்
இறைவர்அணி திருமுடிமேல் எழும்ஜோதி மணியாய்,
நெல்லார்க்கும் வயல்வஞ்சி நிலந்தொழுமா மகிபன்
நீடூழி எமையாள நீயருள்செய் பெரிதே! (60)

வாழ்த்து

(வேறு.)

வாழ்க! வஞ்சி பாலராம வர்மனூழி யூழியே!
வாழ்க! வஞ்சி வாழ்வின்ஆணி ஆகுமெங்கள் ராணிமார்!
வாழ்க! வஞ்சி இளையராஜ மாசிலாத மாமகன்!
வாழ்க! வஞ்சி குலந்தழைக்க வந்தவல்லி வாழியே!

S. முத்துசுவாமிப்பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்,
சென்ற் ஜோஸப்ஸ் ஹைஸ்கூல், திருவநந்தபுரம்.

---

# ஒரு வேண்டுகோள்.

சேந்தமிழ்ப் புலவர்களே !

ஆராய்ச்சியுரையெழுதுவதிற்சிறந்த மேனாட்டாரும் வியக்கத் தாங்கள் நம் "செந்தமிழி"ல் வஞ்சிமாநகர்பற்றிப் பலவாறு எழுதிவருவது படிப்பவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத்தருகிறது. இத்தகைய வியாசங்களை எழுதுவோர், தாம் வென்றாலும் தோற்றாலும் புகழடைவதை உணர்ந்துவைத்தும், சிலர் பிறரைக்குறிப்பாகவும் வெளிப்படையாகவும் குறைத்துப்பேசுதல் மேற்கூறிய மகிழ்ச்சியினை ஆங்காங்கு தடுத்துவருகின்றது. இக்குறையினை இனி அறவே நீக்கிவிடும்படி பெரிதும் மன்றாடிக்கேட்டுக்கொள்கிறேன். இங்ஙனம்,

R. வேங்கடாசலம்பிள்ளை,
மோகனூர்.

---

உ

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் பிங்கள-ஸு பங்குனிமீ 19, 20, 21
(1918-ஸு ஏப்பிரல்மீ 1, 2, 3)-ஆம் தேதிகளில்
நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷையிற்றேறி
யோக்கியதாபத்திரம் பெறும்
மாணாக்கர்களின்
விவரம்.

---

பண்டிதபரீக்ஷை.

இரண்டாவதுவகுப்பு.

1. 2. T. வேலாயுதம் பிள்ளை, தமிழ்ப்பண்டிதர், விக்டோரியா காலேஜ், பாலக்காடு.

பாலபண்டிதபரீக்ஷை.

இரண்டாவதுவகுப்பு.

1. 4. ரெ. இராமையங்கார், எதிர்க்கோட்டை, சிவகாசிமார்க்கம்.

B. இராஜராஜேஸ்வரஸேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

உ

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1918-ஆு மார்ச்சுமீ 2-ம் தேதியில் நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதா பத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

### யப். ஏ. பரீக்ஷை.

#### 1-வது வகுப்பு.

1. 62. T. P. மீனாக்ஷிசுந்தரன், Pachaiyappa's College, [சென்னை.

(முதற்பரிசு ரூ. 40-பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

#### II-வது வகுப்பு.

1. 11. T. R. கோவிந்தராஜன், S. P. G. காலேஜ், திருச்சிராப் [பள்ளி.

2. 64. T. M. கோபாலகிருஷ்ணன், பிண்டிலே காலேஜ், மன்னார் [குடி.

3. 13. S. இராஜகோபாலன், S P.G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.

4. 39. V. ஸ்ரீநிவாஸன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

5. 61. S. வரதாசாரி, பிரசிடென்ஸி காலேஜ், சென்னை.

6. 42. M. சின்னத்தம்பி, C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

7. 8. R. ஜெகந்நாதராகவன், அமெரிக்கன் காலேஜ், மதுரை.

8. 23. K. M. சுந்தரமூர்த்தி, ஸெண்ட் ஜோஸப் காலேஜ், திருச்சி ராப்பள்ளி.

9. 65. S. ஸ்ரீநிவாஸன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.



10. 51. ஜெ. பத்மினி (பெண்), மஹாராஜா பெண்பாடசாலை, திருவனந்தபுரம்.

11. 49. ஜெஸி லெற் ஆசீர் (பெண்), ஷை ஷை

12. 14 E. V. வெங்கட அஸ்வத நாராயணன், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.

13. 15. K. இராமநாதன், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.

14. 41. S. வைகுந்தநாதன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.

15. 29. அ. கி. பட்டாபிராமன், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்ப கோணம்.

16. 40. T. S. சங்கரநாராயணன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.

17. 53. V. இராமநாதன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

18. 12. S. முகம்மது சுல்தான், S. P. G. காலேஜ், திருச்சிராப் பள்ளி.

19. 55. Y. ஸ்ரீநிவாஸன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

20. 3. A. அப்பாசாமி, அமெரிக்கன் காலேஜ், மதுரை.

---

### மெற்றிக்குலேஷன்.

#### இரண்டாவதுவகுப்பு.

1. 596. H. S. இராமசாமி, St. Francis Xavier's High School, தூத்துக்குடி.

2. 306. S. கிருஷ்ணசாமி, ஸெண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், கூடலூர்.

3. 455. A. K. வெங்கடேசன், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

4. 79. C. N. சுப்பிரமணியன், சேதுபதிஹைஸ்கூல், மதுரை.

5. 302. G. R. சுப்பிரமணியன், டவுன் ஹைஸ்கூல், கூடலூர்.

6. 143. T. R. வெங்கடாசலமூர்த்தி, S. P. G. ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.

7. 245. C. தேவராஜன், முனிசிபல் காலேஜ், சேலம்.

8. 278. A. பசுபதியப்பன், ஸெண்ட்மிக்கேல்ஸ் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

9. 468. தி. ரா. ஸ்ரீநிவாஸன், Pachaiyappa's College, சென்னை.

10. 613. U. S. ராமசுந்திரம், முனிசிபல் ஹைஸ்கூல், கரூர்.

11. 363. S. முத்தையன், Central High School, திருவையாறு.

12. 616. R. விஸ்வநாதன், முனிசிபல் ஹைஸ்கூல், கரூர்.

13. 545. C. நடேசமுதலியார், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.

14. 615. U. M. சுந்திரம், முனிசிபல் ஹைஸ்கூல், கரூர்.

15. 77. V. செல்லச்சாமி, சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

16. 187. A. சங்கரநாராயணன், St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

17. 189. L. ஜோஸப் கோமஸ், ௸ ௸

18. 276. P. சுப்பராயன், ஸெண்ட்மிக்கேல்ஸ் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

B. இராஜராஜேஸ்வரஸேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

---

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கசு.] காலயுக்தி௵ வைகாசிமீ [பகுதி - எ.
Vol. XVI. May,—June. 1918. No. 7.

## யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை.

சில மாதங்கட்குமுன்னர் ஸ்ரீ. வெ. இராஜகோபாலையங்கார்என்பார் "செந்தமிழில்" பத்திராசிரியர்க்கு ஒரு விஞ்ஞாபனரூபமாகச் சில விஷயங்கள் எழுதினர். அவற்றிற் பெரும்பாலானவை ஆதாரமில்லாத வெறுங்கூற்றாகவும் மெய்ம்மையிற்றிரம்பினவாகவு முள்ளன. ஆதலால் அவ் விஷயங்களின் உண்மையை உள்ளவாறுரைக்கவேண்டுமென்னும் நோக்கத்தோடு யானைக்கட்சேய் மாந்தரனைப்பற்றி யானறிந்ததை இங்கே கூறுவேன்.

'வஞ்சிமாநகராராய்ச்சி'யில் யானைக்கட்சேய் மாந்தரன் சேருட்பேரரசனென்று குறிக்கப்பட்டது. அது தவறென்றுகொண்டு, ஒரு விஞ்ஞாபனமுடையார், அவன் ஒரு குறுநிலமன்னனென்றும், பேரரசனேயல்லனென்றும் ஒருமுறைக் கிருமுறை வற்புறுத்தினர். ஆதலால் இவ்விருதிறக்கொள்கையில் உண்மையுடையதெதுவென ஆராய்வேன்.

அவ் வரசன்பெயர் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என வழங்கப்படுதலைக் கற்றோர் பலருமறிவர். அதிலுள்ள கோ, சேரமான் என்னுஞ்சொற்கள் அவன் பேரரசனென்பதை நன்குவிளக்குமாற்றலுடையன வென்று தோன்றுகிறது. கோச்சோழன், கோப்பாண்டியன் என்பனபோலுமிது.

புறநானூற்றில் 17-ஆம் பாட்டு அவ் வரசனைப்பற்றியது. அதில்,

"தென்குமரிவடபெருங்கற்
குணகுடகடலாவெல்லை

குன்றுமலைகாடுநா
டொன்றுபட்டுவழிமொழியக்
கொடிதுகடிந்துகோறிருத்திப்
படுவதுண்டுபகலாற்றி
யினிதுருண்டசுடர்நேமி
முழுதாண்டோர்வழிகாவல” என்றுள்ளது.

“தென்றிசைக்கட் கன்னியும் வடதிசைக்கண் இமயமும் கீழ்த்திசைக்கண்ணும்மேற்றிசைக்கண்ணுங்கடலும்எல்லையாகநடுவுபட்டநிலத்துக், குன்றும் மலையும் காடும் நாடும் என இவற்றையுடையோர் ஒரு பெற்றிப்பட்டு வழிபாடுகூறத் தீத்தொழிலைப்போக்கிக் கோலைச்செவ்விதாக்கி ஆறிலொன்றாகிய இறையை உண்டு நடுவுநிலைமையைச்செய்து தடையின்றாக உருண்ட ஒளியையுடைய சக்கரத்தால் நிலமுழுதையும் ஆண்டோரது மரபைக்காத்தவனே” என்பது அதனுரை. இவற்றால் அவன் குடபுலமுழுதும் ஆண்ட ஏகசக்ராதிபதி என்பது இனிது விளங்கும். இங்ஙனமாகச்சிறப்பித்துக் கூறப்பட்டவனைக் குறுநில மன்னனென்று துணிந்து கூறத்தலைப்பட்ட விஞ்ஞாபனமுடையார் பெருநிலமன்னனுடைய இலக்கணம் எத்தன்மைத்தென்று கொண்டனரோ அறியக்கூடவில்லை.

யானைக்கட்சேய்மாந்தரன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுடன் பொருத சேரஅரசன் என்பது 17-ஆம் புறப்பாட்டானறியலாவது. அக்களத்துப் பாண்டியனுடன் பொருதவர் எழுவர் என்ப. அதனை,

“கொய்சுவற்புரவிக்கொடித்தேர்ச்செழியன்
ஆலங்கானத்தகன்றலைசிறப்பச்
சேரல்செம்பியன்சினங்கெழுதிதியன்
போர்வல்யானைப்பொலம்பூணெழுநி
நாரரிநறவின்எருமையூரன்
தேங்கமழ்கலத்துப்புலந்தசாந்தி
னிருங்கோவேண்மானியறோர்ப்பொருநனென்
றெழுவர்நல்வலமடங்கவொருபகன்
முரசொடுவெண்குடையகப்படுத்துரைசெலக்
கொன்றுகளம்வேட்டஞான்றை”



எனவரும் அகப்பாட்டடிகளானறியலாம். இதிற் சேரல் என்ற நாம ஏகதேசக்கிரஹணத்தால் அவன் மாந்தரஞ்சேரல் என்றறியலாம். அன்றியும், 19-ஆம் புறப்பாட்டில் நெடுஞ்செழியன் “எழுவர் நல்வலங் கடந்தோய்”என்று கூறப்படுகிறான். அதன் உரைகாரர் அவ்விடத்து “இருபெருவேந்தரும் ஐம்பெருவேளிருமாகிய எழுவரது நல்லவலியை வென்றோய்” என்றெழுதினர். இதில் இருபெருவேந்தரென்றது சேரனையும் சோழனையும். அவருள் அப்பாண்டியனுடன்பொருத சேரன் மாந்தரஞ்சேரலே என்பது மலையிலக்கு. அங்ஙனமாகவே புறப்பாட்டுரையாசிரியர் மாந்தரஞ்சேரலைப் பெருவேந்தனென்று குறித்தாராவர். இங்ஙனமே, மாந்தரஞ்சேரலையும் சோழவரசனையுங்குறித்து‘இருபெருவேந்த’ ரென்று மதுரைக்காஞ்சியிலும் வழங்கப்பட்டது. இவையன்றி, உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியரும், மாந்தரஞ்சேரலும் சோழஅரசனும் மற்றைவேளிரும் ஆகிய எழுவரையுங்குறித்து, “நெடுநிலமன்னரிருவரும் குறுநிலமன்னரைவரும்”என்று கூறினர்.* ஆகவே மதுரைக்காஞ்சிபாடிய புலவரும், பழையஉரையாசிரியர்கள் இருவரும், மாந்தரஞ்சேரலைப் பேரரசனென்றேகொண்டிருக்க அதற்கு நேர் விரோதமாய், விஞ்ஞாபனமுடையார், அவன் ஒரு குறுநில மன்னனென்றுகூறியது யாதாகுமென்பது சொல்லாமலே விளங்கும்.

புறநானூற்றில் 22-ஆம் பாட்டு மாந்தரஞ்சேரலைப்பற்றியது. அதில்,

“வேந்துதந்தபணிதிறையாற்
சேர்ந்தவர்கடும்பார்த்து
மோங்குகொல்லியோரடுபொருந”

என்று அவன் கூறப்படுகிறான். அவனுக்கு மாற்றரசர் பலர் பணிந்து திறைதருதல் சொல்லப்பட்டமையும் அவன் பேரரசனென்பதை வலியுறுத்தும். அன்றியும் அவனுக்குக் கொல்லிமலையுடைமை கூறப்பட்டமையாலும் அவன் சேரருட் பெருவேந்தனென்பது விளங்கும். கொல்லிமலை பேரரசனுக்குரியதென்பது பிரசித்தம்.

ஆனால், மாந்தரஞ்சேரல், சிற்றரசனாக இருந்துகொண்டே; கொல்லிமலையைப் பேரரசனிடமிருந்து கைப்பற்றி ஆண்டுவந்தா

* பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, 128-ஆம் அடியின் உரை.

னென்று விஞ்ஞாபனமுடையார் கருதுவதாகத்தெரிகிறது. அக்கொல்லிமலை, விஞ்ஞாபனமுடையார் கருத்துப்படி கொங்கின்கீழ்புடைக்கொல்லியாக வேண்டுமன்றோ? தொண்டிராச்சியத்திலிருந்து மலைவேலிகடந்துவந்து அக் கொங்கின்புடைக் கொல்லியை மாந்தரன் கொண்டானென்று கொள்ளுங்கால், அக்கொல்லிக்கும் தொண்டிக்கும் இடைப்பட்ட கொங்குநாடும், அதனகத்துள்ளதாகத் தாம் கருதும் சேரர்கருவூரும், அதனருகோடும் பொருநையாறும்,பேரரசனைவென்ற அவனுடையன வாகவேண்டுமென்பது அவர்க்கு முடன்பாடாக வேண்டும். ஆகவே தங்கருத்துப்படி கொல்லிக்கிடைப்பட்டகொங்கிற் கருவூர், பொருநை, தொண்டிமுதலிய சேரர்க்குரியன முழுதும் உடையனாகிய மாந்தரனை ஒரு சிற்றரசனென்றது விஞ்ஞாபனமுடையார் கொள்கைக்கே சிறிதும் பொருந்தாதிருக்கிறது.

நிற்க, விஞ்ஞாபனமுடையார், கொல்லிமலை பின்பு மாந்தரஞ்சேரலிடமிருந்து பறிக்கப்பட்டுக் காரியால், தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறைக்கு அளிக்கப்பட்டதென்று புதிதாக ஒரு கதை எழுதினர். இது எந்தநூலிற் கூறப்பட்டதென்பது, அறியக்கூடவில்லை. காரி என்பவன் ஓரி என்பவனைக்கொன்று கொல்லியை ஒரு சேரனுக்குக்கொடுத்ததாக,

"முள்ளூர்மன்னன்கழறொடிக்காரி
செல்லாநல்லிசைநிறுத்தவல்வில்
லோரிக்கொன்றுசேரலற்கீத்த
செவ்வேர்ப்பலவின்பயங்கெழுகொல்லி"

எனவரும் அகப்பாட்டடிகளானறியப்படுவது. அவர் இக்கதையையே அங்ஙனம் பிறழ உரைத்தனர்போலும்.

இதுகாறுங்கூறிவந்தவை மாந்தரஞ்சேரல் பெருவேந்தனென்று துணிதற்குச்சிறந்தசான்றாய் நிற்பன. இனி அத்துணிபை வலியுறுத்தற்கு அவனைப்பற்றிய செய்யுள்களிற் பல குறிப்புக்கள் உள்ளன; அவற்றையுமிங்கே குறித்தல் மிகையாகாதென நினைக்கிறேன்.

17-ஆம் புறப்பாட்டில்,

...........“மண்டிய
மழையெனமருளும்பஃறோன்மலையெனத்



தேனிறைகொள்ளுமிரும்பல்யானை
யுடலுநருட்கவீங்கிக்கடலென
வானீர்க்கூக்குந்தானையானது
கடுவொடுங்கெயிற்றரவுத்தலைபனிப்ப
விடியெனமுழங்குமுரசின்
வரையாவீகைக்குடவர்கோவே."

என்றும்; அதன் உரையில் "திரண்டமுகிலெனக்கருதிமயங்கும் பல பரிசைப் படையினையும், மலையென்றுகருதித் தேனினந்தங்கும் பெரிய, பல யானையினையும், மாறுபடுவோர் அஞ்சும்படி பெருத்தலாற் கடலெனக்கருதி மேகம்நீர்முகக்க மேற்கொள்ளும் படையினையும், அமையாது நஞ்சுகரக்கும் பல்லினையுடையவாகிய பாம்பினது தலைநடுங்கும் பரிசு இடியென்றுகருத முழங்கும் முரசினையும், எல்லார்க்கும் எப்பொருளும் வரையாதுகொடுக்கும் வண்மையையுமுடைய குடநாட்டார் வேந்தே" என்றும் உள்ளன. இவற்றால் அவன் ஒரு பெரும் படையை உடையவனென்பது அறியப்படும். இதுகொண்டு அரசியன் முறைப்படி இத்தகைய படைக்கு ஒரு சிற்றரசன் உரியவனல்லன் என்பது நன்குணரத்தக்கது.

இன்னும் இப்பாட்டின் ஈற்றிலுள்ள கோ என்னுஞ்சொல்லின் பொருளாற்றலாலும் அவன் பேரரசன் என்பது நன்குபெறப்படும். அச் சொல்லுக்கு அவ்வாற்றலுண்மை "கோக்கண்டுமன்னர்குரைகடற்புக்கிலர்" எனவருஞ்செய்யுளாலுமறியப்படும். இங்ஙனமாகவும் "குடவர்கோ" என்றது கொண்டு அவன் பேரரசனெனல் பொருந்தாதென்பதை உதாரணமுகத்தானறிவுறுத்த வந்தவராய், விஞ்ஞாபனமுடையார், நெடுஞ்சேரலாதனுங்குடக்கோ என்று வழங்கப்படுவன்; அதுகொண்டு அவன் குடபுலமுழுதும் ஆண்டவன் எனல் பொருந்தாதென்றுகூறினர். இந் நெடுஞ்சேரலாதன் யாவனென்று அறிந்துகொள்ளச் சிறிதுபிரயாசை எடுத்துக்கொண்டிருந்தால் அவர் அங்ஙனம் எழுதவேமாட்டார் என்பது திண்ணம்.

சேரரில் செங்குட்டுவன் என்னும் அரசனைப்பற்றிக் கற்றார்பலருமறிவர். அவன் வஞ்சியிலிருந்து அரசுசெலுத்தியவனென்பதும், குடபுலமுழுதும் ஆண்டவனென்பதும், பேரரசுரிமை வகித்தவனென்பதும்

சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்தாலும் பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பத்தாலும் நன்கறிந்தன. அங்ஙனம் பேரரசனென்று பலராலுங்கொள்ளப்பட்ட செங்குட்டுவனுடையதந்தை இக்குடக்கோநெடுஞ்சேரலாதனெனின், அவன் சிற்றரசனென்பார்கூற்றுச்சிறிதேனும் பொருந்துவதாகுமா? நெடுஞ்சேரல் செங்குட்டுவனுக்குத் தந்தை என்பது, பதிற்றுப்பத்து ஐந்தாம்பத்தின் பதிகத்தில்,

> "வடவருட்கும்வான்றோய்வெல்கொடிக்
> குடவர்கோமானெடுஞ்சேரலாதற்கு......மகன்"

என்றும், சிலப்பதிகாரத்தின் பதிக உரையில் "குமரியொடுவடவிமயத், தொருமொழிவைத்துலகாண்ட சேரலாதற்குச் சோழன் மகள் நற்சோணையீன்ற மக்களிருவருள் முன்னோன்" என்றும் செங்குட்டுவன் குறிக்கப்படுதலாலறியலாம். செந்தமிழ்ப்புலவர் ஸ்ரீமத்-மு. ராகவையங்கார் அவர்களும் 'சேரன் செங்குட்டுவன்' என்னும் தமது அரிய பெரிய ஆராய்ச்சிநூலிற் பலவிடத்தும் இந்நெடுஞ்சேரலாதன் பேரரசனென்பதே விளங்குமாறு எழுதிச்செல்வர். ஸ்ரீமத்-மு. ராகவையங்காரவர்கள் விஞ்ஞாபனமுடையாராலும் நன்குமதிக்கப்பட்டவர்களுள் ஒருவர் என்பது, அவர் எழுதிய 'அரியவினைக்கட்கு உரியவிடையில்' "சங்கமிருந்ததமிழையெல்லாமுண்டுதிகழ், சிங்கங்களிரண்டு" என்று குறித்ததனாலறியலாம். அங்ஙனமாகவும் இங்கு தம்முடையகொள்கைக்கும் விரோதமாக விஞ்ஞாபனமுடையார்கூறிச் செல்வது எதுபற்றியோ தெரியவில்லை. ஆகவே, இதுகாறும் கூறியவாற்றால் "குடக்கோ" எனப்பட்டமையும் மாந்தரஞ்சேரல் பேரரசனென்று துணிதற்கு ஏற்றசான்றாதல் புலப்படும்.

இதுநிற்க, விஞ்ஞாபனமுடையார் நெடுஞ்சேரலோடு மாந்தரஞ்சேரலைச் சமகாலத்தவனாகக்குறித்தது தவறு. தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையையும் மாந்தரஞ்சேரலுடைய சமகாலத்தவனாக்கியதும் அங்ஙனமேயாகும். அவற்றிற்கெல்லாம் அவர் ஆதாரங்காட்டாது செல்வதால் நானும் அவற்றின் உண்மையை ஆதாரத்துடன் விளக்குவது மிகையாம் என விடுத்தேன்.

மேலும் விஞ்ஞாபனமுடையார், வஞ்சியிலிருந்த சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோவாழியாதன்மகனும் பேரரசனுமான சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை கொங்குநாட்டுக்



கருவூரிலிருந்தவனென்றும், கொங்குநாடுமுழுதும் ஆண்டவனென்றும் எழுதினார். அவை முற்றவும் தவறுதல் பதிற்றுப்பத்தின் 77-ஆம் பாட்டில் "கொங்கராபாந்தன்ன"—என்பது முதலாகவரும் சில அடிகளின் பொருளையும் 78-ஆம் பாட்டின் ஈற்றிலுள்ள சில அடிகளின் பொருளையும் உற்றுநோக்குவார்க்கு இனிது புலனாகும். இவற்றாற் சேரர் தலைநகராகிய வஞ்சியும் கடன்மலைநாட்டிலே யுள்ளதென்பதும் எளிதினுணரப்படும்.

இவை நிற்க: புறநானூற்றில் 20-ஆம் பாட்டையும் அதன் உரையையும் ஒருமுறையேனும் படித்திருந்தால் அவர் மாந்தரஞ்சேரல் குறுநிலமன்னனென்றுகூறச் சிறிதும் உடன்படார்.

மேலும் 22-ஆம் பாட்டில்,—

> "மாந்தரஞ்சேரலோம்பியநாடே
> புத்தேளுலகத்தற்றெனக்கேட்டுவந்
> தினிதுகண்டிசிற்பெரும" என்றுள்ளது.

இதிலுள்ள நாடு என்னுஞ்சொற்பொருட்குறிப்பால் மாந்தரன் ஆண்டது மிகுந்த நிலப்பரப்புடைய குடபுலமுழுதுமே என்று கொள்ளப்படும். அவனுடையநாடு புத்தேளுலகத்தோடு உவமிக்கப்பட்டமையால் அந்தர மத்திய பாதாளம் என்னும் மூன்றுலகங்களிலும் தேவலோகமானது வானவர்க்கிருப்பிடமாய்ப் பல்வகைவளனும் நிறைந்து அதிலுள்ளோர் இன்பம் நுகர்தற்கு இடனாகுமாறே சேர சோழ பாண்டியமண்டலங்கள் மூன்றட் கடன்மலைநாடாகிய சேரனாடு எல்லா வளனும் நிரம்பி வானவர் (சேரர்) ஆட்சிக்குட்பட்டு ஆங்குள்ளோர் எல்லா இன்பமும் நுகரும் போகபூமியாயுள்ளதென்பது உய்த்துணரப்படும். மாந்தரஞ்சேரல் ஒரு குறுநில மன்னனாயின் அவனடிப்பட்ட குறுகிய நிலத்தைப் புத்தேளுலகத்தை ஒத்தநாடு என்று கூறினது சங்கப்புலவர் வாக்கிற்கு இசைந்ததாகக் காணப்படவில்லை என்பதும், அன்றியும், அங்ஙனம் கூறப்பட்டது ஒரு சிற்றரசனுடையநாடேயாயின், அவனைப்போன்ற ஏனைய சிற்றரசருடைய நாடுகளையும் அக்காலத்துப் பேரரசனுடைய பெரியநிலத்தையும் அத்துணை சிறப்புடையனவல்லவென்று அவர் கருதினாரென்பது இழுக்குடையதாகுமென்பதும் அறியத்தக்கன.

இனி, "நம் சேய்மாந்தரன் தொண்டியையும் விளங்கிலையும் கொல்லியையும் ஆண்டுவந்தான்" என்பது விஞ்ஞாபனமுடையார் கூற்று. இதனால் அவர் மாந்தரனை மேற்குறித்த இடங்களுக்குமட்டிலும் அதிபனான ஒரு சிற்றரசனென்று கருதினதாகத்தெரிகிறது. கொல்லி, தொண்டி, விளங்கில் இவையே இவனைப்பற்றிய சில செய்யுள்களிற் காணப்படுவதுகொண்டு அவைநீங்கலாக ஏனைய இடங்களுக்கு அவன் உரியவனல்லன் என்று துணிந்துவிட்டனர். சொல்லாததெல்லாம் இல்லாததென்பதே அவருடைய சித்தாந்தம்போலும். மாந்தரஞ்சேரல் தொண்டியோடுபொருநனென்று கூறப்பட்டதுகொண்டு அவன் தொண்டியைமட்டும் ஆண்டவன் என்று கூறும் அவருக்கு, முத்தொள்ளாயிரத்து,

> "வரைபொருநீண்மார்பின்வட்கார்வணக்கு
> நிரைபொருவேன்மாந்தைக்கோவே—நிரைவளையார்
> தங்கோலம்வவ்வுதலாமோவவர்தாய்மார்
> செங்கோலனல்லனென."

எனவரும் செய்யுளாற் குறிக்கப்படும் சேரவரசன் 'மாந்தைக்கோ' என்றமையால் மாந்தையை மட்டும் ஆண்ட ஒரு சிற்றரசனே என்பதும் உடன்பாடாதல் வேண்டும். இங்ஙனமாக வருமிடங்கள் எத்துணையோ பல. அங்கெல்லாம் விஞ்ஞாபனமுடையார்கருத்துப்படி கொள்ளுதல் முற்றும் தவறுதலைக்கற்றோரறிவர். முத்தொள்ளாயிரத்துட் சேரனைப்பற்றிய செய்யுட்களெல்லாம் பேரரசனையே குறிக்குமென்பது வெளிப்படை.

ஆகவே பல்லாற்றானும் கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை, குடபுலமுழுதும் ஆண்ட பெருவேந்தனென்பது விளக்கமெய்தி, அவன்விஷயமாய்ப் பத்திராசிரியர் "வஞ்சிமாநகராராய்ச்சி"யிற் குறித்தனவெல்லாம் விஞ்ஞாபனமுடையாருடைய வெற்றுரைகளாற்சிறிதும் அசித்தியடையாது நிற்கின்றனவென்பது இதனால் அறிவிக்கப்பட்டது.

ஒரு மாணவன்.

# அந்தகக்கவிவீரராகவமுதலியார்காலம்

("செந்தமிழ்"த்தொகுதி ௧௫-பகுதி ௭-ல் ௧௭௨-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

கி. பி. 1236-ல் மூன்றாம் விஜயவாகு அரசனாகித் "தம்பதேனியா"வைத் தன்னிருப்பிடமாக்கினான். இவன் இலங்கையின் தென்பாகத்திலிருந்த தமிழர்களை வடபாகத்துக்குத்துரத்தி அவர்கள் துவீபத்தின் பலவிடங்களிலுங்கட்டியிருந்த அரண்களைத்தகர்த்து வன்னிப்பற்றில் இருந்த தமிழர்களையுமழித்துப் பாண்டிய சோழதேசங்களுக்கோடிப் போய்விட்ட பௌத்தவாசாரியர்களைத் திரும்ப ஈழத்துக்கழைத்தனனென்று இதிகாசங்கூறும். ஆயினும் ஈழத்தின் வடபாகத்தில் தமிழவரசர் கோட்டை கொத்தளங்கள் கட்டிப் பலத்துக்கொண்டிருந்தார்கள்.

கி. பி. 1240-ல் இரண்டாம் பராக்கிரமவாகு அரசனாயினன். இவன் தமிழரை வெல்லக்கருதி முதலாவது ஈழத்துவன்னியரைத் தன்னடிப்படுத்தினான். பிற்பாடு சிங்களப்போர்வீரரைச்சேர்த்துத் தேசத்தில் அங்குமிங்கும் அரண்கள்கட்டிக்கொண்டிருந்த தமிழர்களை நெருக்கத்தொடங்கினான். இந்தக்காலத்திலே தமிழ கேரள போர்வீரர் நாற்பதினாயிரவர் "மாகன்" அவன் மகன் "சயவாகு"வென்னும் தமிழரசர்களின் கீழிருந்த புலத்திபுரம், கொத்தசாரகம், கங்காதடாகம், காகாலம், பாடினாடு, குருண்டி, மானாமத்தை, மாதோட்டம், மன்னார்பட்டணம், புலச்சேரித்துறை, வாலிக்காமம், கோணதேசம், குணாசு, மதுப்பாதவதுறை, சூகரம், முதலியவிடங்களிலே அரண்களை வகுத்துக்கொண்டிருந்தனர். ஆயினும் சிங்களவரொருமித்து நெருக்கினதினாலும், இந்துதேசத்து அரசர்களிற்சிலர் சிங்களவர்க்குத்துணையாய் நின்றதினாலும், தமிழருக்குள்ளும் ஓர்கட்சியார் சிங்களவருடன்சேர்ந்துகொண்டதினாலும் இதுகாறும் சிங்களவரை யெதிர்த்துநின்ற தமிழ்மக்கள் இனித் தஞ் சுயதேசத்துக்குத் திரும்பிப்போவதே தகுதியென்றெண்ணித் தங்களுடைய பொருள்பண்டங்களெல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு இந்தியாவுக்குப்போகும் வழியிலே காளவாப்பியென்றவிடத்தில் பதிவிருந்த சிங்களச்சேனையொன்று இவர்கள்மேல்

விழுந்து அநேகரைக்கொன்று பொருள்களைப்பறித்துக்கொண்டதென்று இதிகாசங்கூறும். இதற்குப்பிற்பாடு "சந்தபானு"வென்னும் மலாயவரசன் மலாயச்சேனையொன்றுடன் வந்திறங்கித் தாங்களும் புத்தமதத்தவரேயென்றுசொல்லிப் பிரளயம்போலத்தேசத்தை மூடி இலங்கைமுழுவதையுமழிக்கத்தொடங்கினான். இம் மலாயர் நஞ்சூட்டியவம்புகளை இயந்திரங்களினாலே யெய்தனரென்றும், சிங்களவீரர் அவ்வம்புகளைக் கூரிய அகன்றவாயுள்ள அம்புகளால் துண்டுகளாக வெட்டி அநேக மலாயரைக்கொன்று துரத்திவிட்டனரென்றும் மகாவம்சம் சொல்லுகின்றது. இப் பராக்கிரமவாகு தன் தகப்பனைத்தோற்கடித்ததமிழர்களைத் தேசத்திலிருந்து துரத்திவிட்டதாகவும், தேசத்தின் பற்பலவிடங்களிலுமிருந்த வன்னியர்களெல்லாரையும் தன்வசமாக்கிப்போட்டதாகவும், இந்தியாதேசத்து அரசகுடும்பங்களோடு சம்பந்தங்கலந்து அவர்களைத் தனதுஇனத்தாராக்கிக்கொண்டதாகவும், சந்திரசூரியவம்சத்துப் பாண்டியசோழவரசர்கள் இவனுக்கு வெகுமதிகளனுப்பினதாகவும் இதிகாசம் கூறும்.

கி. பி. 1275-ல் நாலாம் விஜயவாகு புலத்திபுரத்தில் அரசனாயினன். இவன் காலத்திலே முன் தோற்றோடிப்போன சந்தபானுவென்பவன் பாண்டிய சோழதேசங்களிலே பெருந்தொகையான தமிழரைச் சேர்த்துக்கொண்டு தன்னுடைய மலாயச்சேனையோடு மாந்தையிலிறங்கிப் பாடி, குருண்டி முதலியவிடங்களைப் பிடித்து "யப்பாகு"வுக்குப்போய் அங்கே பாளையமடித்தான். இருதிறத்தாருக்கும் பெரும்போர் மூளவே சந்தபானுவும் சேனையும் தோல்வியுற்றோட்டம்பிடித்தனர். இவ் விஜயபாகு அநுராசபுரத்தைப் புதிப்பித்துக், காட்டைவெட்டி மதிலைக்கட்டினான். வடபக்கத்து வன்னியத்தலைவர்களுக்கு வெகுமதிகள்கொடுத்துத் தன்வசமாக்கி அவர்களை அநுராசபுரத்துக்குக் காவலாளராக நியமித்தான்.

இக்காலத்திலே ஆரியச்சக்கரவர்த்தி "யாப்பா பட்டண"த்தைத் தனதிருப்பிடமாக்கிக்கொண்டானென்றும், சேனையாலும்பணத்தாலும் மற்றையவரசர்களிலும் மிகவும் மேம்பட்டவனாய் ஈழத்து மலைநாடுகளிலும்சமபூமிநாடுகளிலுமிருந்த சிங்களவரிடத்திலிருந்துதிறைவேண்டினனென்றும் இராஜவழியென்னுமிதிகாசம் கூறுகின்றது.



கி. பி. 1277-ல் முதலாம் புவனேகவாகு அரசனாயினன். இவன் தம்பதீனியாவிலே யரசனாகிப் பிற்பாடு யப்பாகுவென்னும் நகரியைத் தனதிருப்பிடமாக்கினான். இவன் காலிங்கராயன், சோழகங்கன் முதலிய தமிழத்தலைவர்களைத் தோற்கடித்துக் கடலிவாதன், மாப்பாணன் முதலிய சிங்களவன்னிய அரசரையுமகற்றிவிட்டான். பின்பு பாண்டிநாட்டையாண்டுகொண்டிருந்த ஐந்து சகோதரர் தமிழர்களுக்குள்ளே பெருந்தலைவனாயிருந்த ஆரியச்சக்கரவர்த்தியென்பவனை ஒரு பெருஞ்சேனையோடு ஈழத்துக்கனுப்பினார்கள். இவனிறங்கித் தேசத்தையழித்து அங்கிருந்த புத்தருடைய பல்லையுமெடுத்துக்கொண்டு தன்னாட்டுக்குத்திரும்பி அதைக் குலசேகரபாண்டியனிடங் கொடுத்தான்.

கி. பி. 1288-ல் மூன்றாம் பராக்கிரமவாகு அரசனாயினன். இவன் குலசேகரபாண்டியனிடம்போய் அவனிடம் மிகவும் பணிவாய்ப்பேசி அரசன் மனதை யிளகச்செய்து ஆரியச்சக்கரவர்த்தி யெடுத்துக்கொண்டுபோன புத்தருடைய பல்லை வேண்டிக்கொண்டு திரும்பினான்.

கி. பி. 1293-ல் இரண்டாம் புவனேகவாகு குருனாகலில் அரசனாயினன்.

கி. பி. 1295-ல் நாலாம் பராக்கிரமவாகுவும், இவனுக்குப்பின்பு வன்னிபுவனேகவாகு வென்பவனும், சயவாகுவென்ற வேறொருவனுமரசாண்டார்கள்.

இவர்களுக்குப் பிற்பாடு கி. பி. 1347-ல் நாலாம் புவனேகவாகு, கம்பளையில் அரசனாயினன்.

கி. பி. 1351-ல் ஐந்தாம் பராக்கிரமவாகு அரசனாகி ஒருவருஷம் ஆளுகைசெய்தான்.

கி. பி. 1352-ல் மூன்றாம் விக்கிரமவாகு அரசனாயினன். இவன் காலத்திலே அழகைக்கோனென்னுமோர் அரசகுமாரன் பேராதெனியாவிலேயிருந்தனன். இவனுடைய முன்னோர் வஞ்சிநகரத்திலிருந்து ஈழத்துக்கு வந்து குடியேறினவர்களென்றும், கிரிவம்சத்தைச் (மலைய குலம்) சேர்ந்தவர்களென்றும், இவனே சயவர்த்தனபுரியென்ற நகரத்தைக்கட்டி அதை அரணித்தவனென்றும் இதிகாசம் கூறும். இவனே

ஈழத்துத் தமிழருடைய தத்துவத்தை வேரறுக்கும்படி முயற்சித்தவர்களில் முதலாவதானவன். இவன் தமிழர்களையடக்கும் நோக்கத்தோடு கோட்டைகளைக்கட்டி அவைகளுக்குள் பல்லாண்டுகளுக்குப் போதுமான தின்பண்டங்களெல்லாம் சேகரித்துவைத்துப் பெருஞ்சேனையொன்றைத்திரட்டிச் சேனாவீரருக்குப் படைத்தொழில் நன்கு படிப்பித்துத் தமிழர்களைச் சருவத்தொடங்கினான். ஆரியச்சக்கரவர்த்தி ஈழத்தின் பலவிடங்களிலும் தன்னால் விதிக்கப்பட்ட இறைப் பணத்தைச் சேர்க்கும்படி வரிப்பற்றர்களை நியமித்திருந்தான். இவர்களில் அநேகரை அழகைக்கோனார் பிடிப்பித்து மரத்திலே தூக்கிப் போட்டனர். இச் செய்தியைக்கேள்வியுற்ற ஆரியச்சக்கரவர்த்தி தமிழர் பல்லாயிரவரைச் சோழதேசத்திலிருந்தழைப்பித்து ஒரு நூறாயிரத்துக்குமேற்பட்டதொகைகொண்ட சைனியத்துடனே சிங்களவரோடு சமர்புரியப்புறப்பட்டனன். இதற்கிடையில் "மூன்றும் விக்கிரமவாகு" இறந்துபோயினனாக "ஐந்தாம் புவனேகவாகு" கம்பளையில் அரசனாயினன். ஆரியச்சக்கரவர்த்தி தனது சைனியத்தை இரண்டாகப்பிரித்து ஒரு பாகம் மாத்தளைவழியாய்ச்சென்று கம்பளையைப்பிடிக்கவும், மற்றது கடல்வழியாய்ச்சென்று பாணன்துறையிலும் கொழும்பிலும் இறங்கித்தெமட்டைக்கொடை, வத்தளை, நீர்கொழும்பு சிலாவம் முதலிய கரைப்பட்டணங்களில் பாளையமடித்துச் சயவர்த்தன புரியைப்பிடிக்கவும் ஏவிவிட்டனன். தண்டநாயகன் அழகைக்கோன் ஓர் சிங்களச்சேனையோடும் தமிழச்சேனையோடும் சயவர்த்தனபுரியைத் தனதிருப்பிடமாக்கிக்கொண்டு பகைவரையழிக்கத் தருணம்பார்த்துக் கொண்டிருந்தனன். சக்கரவர்த்தியுடைய சேனைகள் கரையிலிறங்கின செய்தி செவிபுக்கவுடனே அழகைக்கோன் தனது யானைமேலேறி, தெமட்டக்கொடையில் நின்ற சேனைமுழுவதையும் தோற்கடித்துக் கொழும்புக்குடாவில்நின்ற மரக்கலங்களை உடைத்துத் தனது சேனாவீரர்களோடு கடுநடையாய்ப் பாணத்துறைக்குச்சென்று அவ்விடம் நின்ற தமிழச்சேனையையும் புறங்கண்டு அவர்கள் ஏறிப்போன மரக்கலங்களையும் உடைத்துவிட்டான். இவ்விதமாய் யாழ்ப்பாணத்தரசனுடைய பெருஞ்சேனையானது சின்னாபின்னமாய்ச்சிதறி மாண்டவர் போக எஞ்சினோர் தமது ஊருக்கு ஓட்டம்பிடித்தனர். இனி, கம்பளை நகரத்தினின்றுஞ்சென்ற மற்றைச்சேனை மாத்தளையிற்சேர்ந்த செய்தி



யைக்கேள்விப்பட்ட சிங்களவரசன் உடனே நகரத்தையும் தனது சைனியங்களையும் பிரஜைகளையும் கைவிட்டோட்டம்பிடிக்க அவன் தம்பி திடமனத்தோனாய் முன்னேறிவந்து அரசனது சேனாவீரர்களைத் தைரியப்படுத்திக் காலதாமசமின்றிப் பெருஞ்சேனையொன்றுடன் மாத்தளைக்குப்போய்த் தமிழச்சேனாவீரர் பயமற்றுக் கடுநித்திரையாயிருந்த ஓர் இரவிலே சடுதியில் அவர்கள்மேல் விழுந்து ஈட்டிகளினால் குத்திக்கொன்றனன். பல்லாயிரவர் மடிந்துபோக எஞ்சினோர் மலைகளுக்குள் ஓடிச் சிக்குண்டு அழிந்தனர். இவ்விதமாய் யாழ்ப்பாணத்தரசன் சிங்களவரால் இந்த முறையில் மிகவும் அபஜெயப்பட்டு மனமடிந்து ஒடுங்கியிருந்தனன்.

கி. பி. 1412-ல் "ஆறும் பராக்கிரமவாகு" சயவர்த்தனபுரியில் அரசனாயினன். இவன் பிற்காலத்திலிருந்த சிங்கள அரசர்யாவரிலும் பிரசித்திபெற்றவனாயிருந்தான். இவனுக்குவிரோதமாய்க் கன்னட தேசத்தரசன் அனுப்பின பெருஞ்சேனையொன்றை இவன் தோற்கடித்தானென்று இதிகாசம் கூறுகின்றது. ஈழத்து மலையநாட்டிற்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலேயுள்ள தேசமுழுவதும் அக்காலத்தில் வன்னியரென்னும் காட்டரையர்களுடையகைக்குள்ளேயிருந்தது. அவர்கள் அதைப் பதினெட்டுக் கூற்றங்களாகப்பிரித்து, கூற்றமொவ்வொன்றிற்கும் ஓர் வன்னிய அதிபதியை ஏற்படுத்தித் தங்களுக்கு அங்கங்கே பலத்த அரண்களையும் உண்டாக்கி அவைகளிலேயிருந்து கொண்டு சுயாதிபத்தியமுடையோராய் வாழ்ந்திருந்தனர். இவர்களில் அனேகர், குலத்தில் தமிழராயிருந்தமையின் சிங்களவரசர்களுக்கு அடங்காத மனச்செருக்குடையோராயும், யாழ்ப்பாணத்தரசர்களுக்குத் துணைசெய்வோராயுமிருந்தனர். பராக்கிரமவாகு இவ்வன்னியச் சிற்றரசர்களை அடக்கக்கருதித் தனது சேனாவீரர்களுடன் வடக்குச் சென்று தம்பதீனியாஎன்னுமிடத்திலே பாடிவீடுகொண்டு அவ்விடத்திலிருந்து வன்னிய மன்னருடைய அரண்களைச் சருவத்தொடங்கினான். வன்னியரும் எதிர்த்துக் கடும்போர்செய்தனர். ஈற்றில் குன்றுகளின் மேல் வன்னியவீரர் கட்டியிருந்த அரண்கள் பலவற்றைச் சிங்களச் சேனைகள் பிடித்து அழித்தன. வன்னியர் இடர்ப்பட்டுச் சமாதானங் கேட்டுச் சிங்களவரசனுக்குத் திறைகொடுக்கச் சம்மதித்தனர். கி. பி. 1597-ம் வருஷம்வரைக்கும் வன்னியமன்னர் சிங்களவருக்குக்கப்பங்

கட்டிக்கொண்டேவந்தனரென்று சிங்கள நூல்கள்கூறும். வன்னியரைப் பராக்கிரமவாகு தோற்கடித்துக் கொண்டிகொண்டானென்ற செய்தியை ஆரியச்சக்கரவர்த்தி கேட்டவுடனே பயப்படத்தொடங்கி, கோட்டை கொத்தளங்கள் ஆங்காங்குக்கட்டுவித்ததுமன்றி இலங்கைத்தீவின் "வேந்தர்வேந்தன்" தானேயென்று எங்கும் பிரசித்தப்படுத்தினான். இதைக்கேள்விப்பட்ட பராக்கிரமவாகு இலங்கைத்தீவில் இரண்டுசக்கரவர்த்திகளுக்கு இடமில்லையென்றுசொல்லித் தனது தண்டநாயகன் "சபுமல்குமார"னை யாழ்ப்பாணத்தைப் பிடிக்கும்படி அனுப்பினான். ஆயின், சக்கரவர்த்தியுடைய புறக்காவற்சேனை பகைவரை அதி மூர்க்கத்தோடும் விடாப்பிடியான தைரியத்தோடும் எதிர்த்ததினால் அவர்கள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போய்விட்டனர். ஆயினும் சிங்களவரசன் சிறிதுகாலஞ்சென்றபின்பு பெரியசேனையொன்றைத்திரட்டி யாழ்ப்பாணத்தை ஜெயித்தற்பொருட்டுத் தண்டநாயகன் சபுமல்குமாரனை அதற்குத் தளபதியாக நியமித்து இரண்டாந்தரம் தமிழரைச் சருவத்தொடங்கினான். சபுமல்குமாரன் தனது சேனைகளோடு சயவர்த்தனபுரியிலிருந்து புறப்பட்டு களனி, வத்தளை, நீர்கொழும்பு,சிலாவம், மன்னார்வழியாய்ச் சாவகச்சேரியில் இறங்கிச் சமர்புரியத்தொடங்கித் தமிழச்சேனைகளைத் தோற்கடித்துப் பின்னிடச்செய்து ஆரியச்சக்கரவர்த்தி கட்டியிருந்த கோட்டைகளைக் கைப்பற்றினானாக, சக்கரவர்த்தி தனது ராஜதானியின் புறக்காவல் அரண்கள் சிங்களவர்கையில் அகப்பட்டதைக்கேள்வியுற்றுத் தனது போர்வீரர்களெல்லாரிலும் படைத்திறமையில் விசேஷித்தவர்களான சேனாவீரர்கள் பல்லாயிரவரைச் சிங்களச்சேனை, ராஜதானியின்மேற் செல்வதைத் தடுக்கும்படி தீவிரமாய் அனுப்பினான். ஆயினும் சபுமல்குமாரன் தமிழச்சேனைகளைச் சின்னாபின்னப்படுத்தி "நல்லூர்" நகரிக்குட்புக்கனன். தெருக்கள்தோறும்நடந்த கொடியசமரிலே வாள்வாய்ப்பட்டு மாண்டோருடைய குருதிவெள்ளத்தினால் நகரத்தின் தெருக்களெல்லாம் மூடப்பட்டனவென்று சிங்கள நூல்கள் கழறுகின்றன. ஆரியச்சக்கரவர்த்தி நகரத்தைவிட்டோடிக் கடலைக்கடந்து அக்கரைப்பட்டனன். சபுமல்குமாரன் சக்கரவர்த்தியுடைய மனைவிமக்களையும், பிரபுக்களனேகரையும் சிறைப்படுத்திச் சயவர்த்தனபுரிக்குக் கொண்டுபோயினன். பின்பு சபுமல் யாழ்ப்பாணத்துக்குத்திரும்பிப்போய்த் தேசம்



முழுவதையும் தன் அதிகாரத்துக்குட்படுத்திச் சிலகாலம் பதிலரையனாய் ஆளுகைசெய்தானென்றும், ஈற்றில் இராஜ்யபாரத்தை ஆரியச்சக்கரவர்த்தியுடைய மருமகனது கையிலொப்புவித்துத் தான் யப்பாகு நகரத்திற்குப்போய் அங்கே சில்லாண்டுகள் பதிலரையனாயிருந்தானென்றும் ஈழச்சரித்திரகாரர் கூறுவர்.

கி. பி. 1467-ல் பராக்கிரமன் இறந்துபோக அவன் மகன் "சயவாகு"வென்பவன் அரசனாகி, சில மாசங்கள் ஆளுகைசெய்து சபுமல்குமாரனால் கொலைசெய்யப்பட்டான். இந்தச்சபுமல்குமாரன் புவனேகவாகு வென்னும் பெயரோடு சயவர்த்தனபுரியில் அரசனாயினன்.

கி. பி. 1471-ல் "ஏழாம் பராக்கிரமவாகு" அரசனாயினன். அவனுக்குப்பின்பு "எட்டாம் பராக்கிரமவாகு" அரசனாயினன். அவனுக்குப்பின்பு "ஐந்தாம் விஜயவாகு" அரசனாயினன்.

கி. பி. 1542-ல் "வீரவிக்கிரம"னென்பவன் "செங்கடால" நகரத்தில் அரசனாயினன். இவனுக்குப்பிற்பாடு "சீதாவக்கை"என்றவிடத்தில் "மாயாதனு" என்பவன் அரசனாயினன். இவன் மகன் "ராசசிங்கன்." இவன் பௌத்தத்தைவிட்டுச் சைவனாகிப் புத்தர் கோவில்களை இடித்து ஏடுகளைச்சுட்டுச் சமணர்கூடத்திலே சைவக் குருக்களை வைத்தான்.

கி. பி. 1592-ல் "முதலாம் விமல தர்மசூரியன்" அரசனாயினன். இவன் கம்பளையிலிருந்து கொழும்புக்குப்போய் அங்கிருந்து கோவைக்குச்சென்று பின்பு ஈழத்துக்குத்திரும்பிக் கண்டியிலிருந்து அரசு நடாத்தினான்.

கி. பி. 1620-ல் தர்மசூரியனுடைய தம்பி "சேனரத்தினன்" அரசனாயினன். இவன்காலத்திலே பறங்கிக்காரர் மிகவும் பெலத்துக் கெடுதி செய்யத் தொடங்கினார்கள்.

கி. பி. 1627-ல் "இரண்டாம் ராசசிங்கன் அரசனாகி" உலாந்தாக்காரரோடு சிநேகம்பண்ணிப் பறங்கிகளைத் துரத்தினான்.

(தொடரும்.)

வே. ஜோ. தம்பிப்பிள்ளை. M. R. A. S.

# தமிழ் நாடுகளும்

## பண்டித சுப்பிரமணிய சாஸ்திரியாரும்.

("செந்தமிழ்"த்தொகுதி கரு. பகுதி ௧௦ ல் ௫௬௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி, இளம்பூரணவடிகள் தொல்காப்பியப்பாயிரவுரையிற் குறித்துள்ள பிறநாடே பேராசிரியருடைய பனைநாடாய் மாறினது என்று கொள்வதற்கு ஆதாரமென்ன? பிறநாடென்று அடிகள் குறித்தது தமிழ்நாடல்லாத நாடன்றோ? பனைநாடு தமிழ்நாடன்றோ? ஆகவே, அது குமரியாற்றிற்கு வடக்கின்கண்ணுளதாய ஓர் நாடாயிருந்ததெனின் அமையாதோ? பேராசிரியருக்கு மேற்குறித்த பாயிரவுரையையன்றி வேறுமேதோ நூலாதாரம் இருந்ததென்றுநினைக்க இடமுண்டு. இளம்பூரணவடிகள் குமரியென்றோர்யாறு பண்டைக்காலத்தில் தமிழகத்துத் தெற்கெல்லையாயிருந்தது என்பதை எங்கிருந்துபெற்றார்? களவியலுரையிலிருந்தல்லவென்பது தெளிவாம். பேராசிரியர் இப்பனைநாட்டைத் தமது சுத்த மனோதர்மத்திலிருந்தெடுத்துக்கொண்டாரென்று சொல்வது பொருந்தாமையின், அவர்காலத்திலிருந்த தமிழ் நூல்களிலேயே அதைக்கண்டாரென்று சொல்வதே பொருத்தமுடைத்து. பேராசிரியருடைய பனைநாட்டிலே மிகுதியான பனைமரங்களுடன் கீழ்குலத்தாரான சவுண்டிகர்மாத்திரம் தங்கியிருந்தனரென்றும், அந்நாட்டில் செந்தமிழ்மாக்கள் குடியிருந்தனரல்லரென்றும் நினைக்க இடமுண்டென்று சாஸ்திரியார் கூறுகின்றார். கள்ளிறக்குவோர் தற்காலத்தில் கீழ்ப்பட்டசாதியாரென்றெண்ணப்பட்டாலும் எக்காலத்திலும் அப்படி எண்ணப்பட்டவரோ? அவர்களும் மதுக்குலமாகிய யாதவகுலத்தினது ஓர் கிளையென்றெண்ண இடமிருக்கின்றதே. களவியலுரையிலே அதற்கு முற்காலத்திய தமிழ்நூல்களொன்றிலுங் காணப்படாத சில புது விஷயங்கள் வரையப்பட்டுள்ளனவென்று சா திரியார் கூறுகின்றனர். அவர் குறித்தது எந்நூல்களையோ? மு னர்க்காட்டியபடி பழைய உரைநூல்களெல்லாம் இறந்தொழி போயின. உரைநூல்களிலன்றித் தேவாரங்களிலும் சங்கத்தொக நூல்களிலும் களவியலுரைகாரர் சொன்னவிபரங்கள் கூறப்படா த யிட்டுக் கலங்கவேண்டியதில்லை. பேராசிரியர், குமரியாறும் பனை ம்



சகரர்தொட்ட கடலகத்துப்பட்டதைக் கூறினமையினால் அதற்கு முன்னர், கடல்கோளொன்றும் இருந்ததில்லையென்றெண்ணினாரென்று வற்புறுத்தற்கு நியாயமுறையொன்றுங் காண்கிலேம். ஆசிரியர் தமது உரையிலே "மூன்றுவகைச் சங்கத்துள்ளிட்ட சான்றோ"ரென்று முற் சங்கத்துப்பாவலர்களைக் குறித்திருக்கின்றனர். பிற்காலத்தார் முதலிடை கடைச்சங்கப்புலவர்களென்று பிரிவுசெய்தற்கு நியாயம் இவ்விருகடல்கோள்களேயென்பது சொல்லாமலே விளங்கும். காலமே பத்துமணியளவில் மதுரையிலோர் பெருமழை பெய்ததென்றால் அது பின்னேரம் அந்நகரில் ஒரு பாட்டம் மழையும் பெய்யவில்லையென்று மறுத்தற்குச்சரியோ? ஆகவே, பேராசிரியர் ஒரு கடல்கோளை மாத்திரம் கூறினமை, வேறொன்று முன் அல்லது பின்னிருந்ததை எவ்வளவேனும் மறுத்ததாகக் காட்டாது.

10. சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் பஃறுளியாற்றைக் குமரிப்பக்கத்ததோர் யாறு என்று குறித்துள்ளமை குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கும் இடைப்பட்ட நாடு விசாலமானதென்று நினைக்க இடமில்லையென்கின்றார் சாஸ்திரியார்.

குமரி அல்லது குமரிக்கோடென்றோர் மலையுமிருந்தது, பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடு என்று இளங்கோவடிகள் சொன்னதினால் விளங்கும். ஆகவே, பஃறுளியாறு அம் மலைப்பக்கத்ததோர் யாறு என்றாலென்? மேலும் கொழும்பிலிருக்குமொருவன் தன் அயலான் ஒருவன் கண்டிநாட்டுக்கு அல்லது கண்டியிருக்குந்திசைவழியாய்ப் போய்விட்டானென்று சொல்வதற்குப்பதிலாக, கண்டிப்பக்கத்துக்குப் போய்விட்டானென்று சொல்வது பேச்சுவழக்கிலுண்டு. பக்கம் என்றது இங்கே அணிமையையல்ல; திசையை அல்லது பகுதியைக்குறித்துள்ளதென்றாலென்? ஆகவே அரும்பதவுரைகாரர் பஃறுளியாறு குமரிநாட்டிலிருந்ததோர் யாறு என்று கருதினாரென்றெண்ண இடமுண்டு.

11. பன்னிரண்டாம் நூற்றாண்டுவரையிலிருந்த அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரத்துக்குத் தாமெழுதியவுரையில் முதற்சங்ககாலத்தை முதலூழி இறுதியென்றும், அவ்வூழியிறுதியில் கடல்கோளொன்று நிகழ்ந்ததென்றும், அக் கடல்கோளில் அழிந்தன நாற்பத்

தொன்பது தமிழ்நாடுகளென்றும், பஃறுளியாறு குமரியாற்றிற்குத் தெற்கில் எழுநூற்றுக்காவதங்களுக்கப்பாலிருந்ததென்றும், ஒன்றாயிருந்த கடல்கோளை இரண்டூழிகளென்றும், இடைச்சங்கத்துத் தொல்காப்பியத்தை முதற்சங்கத்து நூலென்றும், நிலந்தருதிருவிற்பாண்டியனைத் தலைச்சங்கத்துக்கவியென்றும், பஃறுளியாறு தென்பாலிமுகத்தின் வடக்கெல்லையென்றும், கடல்கோளால் அழிந்தநாடுகளுக்கு, தெங்கநாடு, மதுரைநாடு, பாலைநாடு, குன்றநாடு, குணகாரைநாடு, குறும்பனைநாடு, குமரிநாடு, கொல்லநாடு என்ற பெயர்களிருந்தனவென்றும், தாம் இப்படிக்கூறியதற்காதாரம் "வடிவேலெறிந்த" வென்ற இளங்கோவடிகள் கூற்றும், நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரையும், இளம்பூரணவடிகள் முகவுரையும், பிறவும் என்றும் வரைந்துள்ளார். இவர்குறித்த மேற்கோளை இதற்குமுன்னரே காட்டியுள்ளேம். இப்பெருமகன் இவ்வரலாறுகளைத் தானேகற்பித்துப் பெருக்கிக்கொண்டனர்" என்றனர் சாஸ்திரியார்.

தொல்காப்பியனார் அகத்தியனாருடைய பன்னிருமாணவர்களிலொருவரென்பது ஐதிகம். அகத்தியம் முதற்சங்கத்துக்கு நூலாயினதென்பதும், அகத்தியமும் தொல்காப்பியமும் இடைச்சங்கத்துக்கு நூலாயினதென்பதும், களவியலுரைகாரர் கூற்றாகவே, அடியார்க்குநல்லார், அகத்தியர்காலத்தவரான தொல்காப்பியர் முதலூழியினிறுதிக்கண் இவ்வாசிரியர் இருவரும் இருந்தனரென்றும், அக்காலத்திலேயே தொல்காப்பியம் புலப்படுத்தப்பட்டதென்றுமெழுதினார். அகத்தியனார் முதற்சங்ககாலத்தவரென்றால் அவர் மாணவராகிய தொல்காப்பியரும் அக்காலத்தவரே. அகத்தியர்மாணவரான பனம்பாரனார் தொல்காப்பியத்துக்குத் தாம் இயற்றின பாயிரத்திலே குமரியாற்றைத் தமிழகத்தின் தெற்கெல்லையாகக்கூறினமைகண்டு தொல்காப்பியம் கடல்கோளுக்கு முந்தின நூலென்று அடியார்க்குநல்லாரெண்ணினது நியாயமுறைக்கு முழுவதும் பொருந்துகின்றது.

முதலூழியிறுதியில் நிகழ்ந்த கடல்கோள், அடியார்க்குநல்லார் கற்பித்ததொன்றல்ல. ஏனெனின், தலைச்சங்கமிருந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரையென்பதும், அவர்க்கு நூல் அகத்தியமென்பதும் களவியலுரையாளர் கூற்றாகும். இடைச்சங்கத்திலும் அகத்தியனார் இருந்து தமிழாய்ந்தாரென்பதும் களவியலுரையாளர்கூற்றே. இவ்விரு



ஆசிரியர்களும் முதற்சங்ககாலத்திறுதியிலும், இடைச்சங்ககாலத்துத் துவக்கத்திலும் இருந்தனராதல் வேண்டுமென்று அடியார்க்குநல்லார் நிச்சயித்தது முழுவதும் சரியென்றே காணப்படுகின்றது.

கடலகத்தகப்பட்டு அழிந்த நாடுகள் நாற்பத்தொன்பதென்று அடியார்க்குநல்லார், மனம்போனபோக்கில் கற்பித்துவிட்டாரென்றேன் சொல்லவேண்டும். அவர் இப்படி எழுதினதற்கு நியாயமேதோயிருந்திருக்கவேண்டுமென்று எண்ணுவதல்லவோ யுக்திக்கிசையும். இவ்விஷயத்திலே அவரெழுதியதில் பிழையிருக்கலாம். கையெழுத்துப் பிரதிகளில் வழுக்கள் நுழைவதுண்டென்பதை நாம் மறந்துபோகக்கூடாது. ஆயின், அந்நாடுகளின் நாமதேயங்களை அவரே சிருஷ்டித்துவிட்டாரென்றெண்ணுவது சற்றேனும் புத்திக்கிசையாது. யாரோ ஒருவன் காகங்காகமாய்க் கக்கினான் என்ற கதையும் ஓர் காரணம் பற்றியே எழுந்ததென்பதையறிவோம். அடியார்க்குநல்லாரைப் போன்றகல்விமான்கள், நோக்கமின்றிப் பெரும்பொய்களைத் தாமெழுதும் நூல்களில் நுழைத்துவிடுவார்களென்றுகொள்வதற்கு யாம் சற்றேனுமிணங்கேம். அவர் தாம் கூறியவற்றிற்கு நாலுவகை ஆதாரம் குறித்துள்ளார். அவை சிலப்பதிகாரம், நக்கீரர்கண்ட இறையனார் அகப்பொருளுரை, இளம்பூரணவடிகள்முகவுரை பிறவுமென்பன. இளம்பூரணவடிகள் முகவுரையென்று அடியார்க்குநல்லாரால் குறிக்கப்பட்டது, அவ்வடிகள் தொல்காப்பியப்பாயிரத்துக்குச்செய்த உரையேயென்று சாஸ்திரியார் நினைக்கின்றார். இது சரியன்று. நக்கீரர்செய்தவுரைக்கு இளம்பூரணவடிகள் ஒரு முகவுரை யெழுதியிருந்தாரென்று கொள்ளல்வேண்டும். இவ்வுரை நூல் இக்காலத்தகப்பட்டிலது. இப்போதுள்ள களவியலுரை பிற்காலத்திலே துறவுபூண்டோரொருவரால் எழுதப்பட்ட வேறான உரைநூலென்றெண்ணுகின்றாம். அவர் "பிறவு" மென்றதினால் அவர்காலத்திலிருந்த வேறுசில நூல்களிலும் இக்கடல்கோளினால் அழிந்துபோன தமிழ்நாடுகளைப்பற்றிய வரலாறுகளிருந்தனவென்று ஊகிக்கலாம். அவர் நூலின்பெயர் கூறாதுவிட்டமை அவர்மேற் குற்றமென்னல் பொருந்தாது. உரையாசிரியர்கள் இன்னவிடத்திலிருந்தெடுத்ததென்று இக்காலத்தார்க்குத்தெரியாத எத்தனையோ மேற்கோள்களைத் தாமியற்றியவுரைகளிற் காட்டியிருக்கின்றனரன்றோ? மேற்கோள் ஒவ்வொன்றிற்கும் அது இன்ன நூலிலிருந்து

எடுத்ததென்று வரைந்திருக்கின்றார்களா? இந்த விஷயத்தில் அடியார்க்குநல்லார்மேல்மாத்திரம் குற்றம்பாரிக்கவேண்டியதென்ன?

எழுநூறுசாவதக்கணக்கை அடியார்க்குநல்லாரே பெருக்கிவிட்டனரென்று நம்போலியர் சொல்வதற்கு ஆதாரமொன்றும் புலப்படவில்லை. அவர் இக்கணக்கை முன்னிருந்து பின் அழிந்தொழிந்த நூல்களிலிருந்தெடுத்திருக்கலாம்; அல்லது இக்கணக்கின்பெருக்கம் பிற்காலத்து எழுத்தாளர்விட்ட எழுத்துப்பிழையின்வழி வந்திருக்கலாம். "ஒன்றாயிருந்த கடல்கோளை இரண்டூழிகளாய் மாற்றிவிட்டார்" அடியார்க்கு நல்லாரென்றனர் சாஸ்திரியார். களவியலுரைகாரரோ இடைச்சங்ககாலத்திலும் அக்காலத்துப்போலும் பாண்டியநாட்டைக் கடல் கொண்டதென்று கூறியிருக்கின்றனர். அக்காலத்துப்போலுமென்றதினால் தலைச்சங்ககாலத்திலே மதுரையைக் கடல்கொண்டதுபோல இடைச்சங்ககாலத்திலும் கபாடபுரத்தையுங் கடல்கொண்டது என்று கருதினாரென்பது தெளியக்கிடக்கின்றது. இனி, தலைச்சங்ககாலத்தை ஒரு ஊழியென்றும், இடைச்சங்ககாலத்தை ஒரு ஊழியென்றும் அவர் ஓர் நியாயமுமின்றிச் சொல்லிவிட்டனரென்பதற்கு இடமில்லை. ஏனெனில், கிரேதாயுகம், வருஷம் நாலாயிரங்கொண்டதென்றும், திரேதாயுகம், வருஷம் மூவாயிரங்கொண்டதென்றும் பாரதத்திலே கூறப்பட்டுள்ளதை நாம் மனதில்வைத்துழி, வருஷம் நாலாயிரத்து நானூற்றுநாற்பதுகொண்ட தலைச்சங்ககாலத்தை ஓர் ஊழியென்றும், வருஷம் மூவாயிரத்தெழுநூறுகொண்ட இடைச்சங்ககாலத்தை ஓர் ஊழியென்றும் அடியார்க்கு நல்லாருரைத்தது குற்றமாய்த்தோன்றமாட்டாது.

12. "அடியார்க்குநல்லார்க்குப்பின்னர்வந்த நச்சினார்க்கினியர், தொல்காப்பியர் வேதவியாசருக்கு முன்னிருந்தோரென்றும், பாண்டியன் மாகீர்த்தி இருபத்தினாலாயிரம் ஆண்டுகளுக்கு வீற்றிருந்தானென்றும், அகத்தியனாருக்கும் தொல்காப்பியனாருக்கும் பெருங்கலகம் நேரிட்டதென்றும், தலைச்சங்கத்திலே மார்க்கண்டேயனார், வான்மீகனார், கௌதமனார் என்ற புலவர்களும் இருந்தனரென்றுங்கூறியுள்ளார்; இவற்றிற்கு மேற்கோளொன்றும் காட்டாதொழிந்தார்; சங்கக்கதை இவ்வாறு கூட்டுமாற்றுக்களையடைந்து இப்பொழுதுள்ள நிலைமைக்கு



வந்தது; நச்சினார்க்கினியர் தமக்கு முந்தினோரெழுதியவற்றைத் தமதாக்கியதோடு தாமும் தமது பங்கைக் கூட்டிவிட்டார்" என்கின்றார் சாஸ்திரியார்.

சங்கங்களைப்பற்றிய விஷயத்தில் உச்சிமேற்புலவர்கொள்ளும் நச்சினார்க்கினியரைச் சாஸ்திரியார் குருவான கள்ளனாக்கிப்போட்டார். இப்பாரியகுற்றத்திற் கிலக்காவதற்கு இக்கல்வியிற்பெரியார்செய்த குற்றங்களென்னவென்று இங்கே விசாரணைசெய்வோம். முதலாவது, தொல்காப்பியர் வேதவியாசருக்கு முந்தினோரென்பது. வேதவியாசர் துவாபர கலியுக சந்திக்காலத்திலே யிருந்தவரென்பதைச் சாஸ்திரியாருமொத்துக்கொள்வர். தொல்காப்பியர் தலையிடையூழிச் சந்திக்காலத்திலேயிருந்தவரென்ற தமக்கு முன்னிருந்த சான்றோர்கூற்றை ஆதாரமாகக்கொண்டே, நச்சினார்க்கினியர், காப்பியர் வியாசருக்கு முற்பட்ட காலத்திலே தமது நூலைச் செய்தனரென்றார். இருக்குவேதம் வியாசருக்கு முற்பட்ட நூலெனின் அவ் வேதத்திலுள்ள சுலோகங்கள் பலவற்றிற்கு ஆக்கியோனாய அகத்தியரும் அவர் காலத்தவரான காப்பியரும் வியாசருக்கு முந்தினோராவரென்பது தெளிவாம். இதிலே நச்சினாரொன்றையுங் கூட்டினாரல்லர். தமக்கு முந்தியெழுதின சான்றோர் கூற்றை அவர்மேற்கொண்டமை குற்றமாயின் அஃது அவ்வாறாகுக. மற்றைப்படியன்று.

இரண்டாங்குற்றம்—பாண்டியன் மாகீர்த்தி இருபத்துநாலாயிரம்யாண்டு வீற்றிருந்தானென்றது. இந்திய சரித்திரநுட்ப ஆராய்ச்சி, நெடுங்காலத்துக்குமுன்னர்த்தொடங்கப்பட்டவோர் முயற்சியன்றென்பதை நாம் அறிந்துள்ளோம். நச்சினார் இவ்வகை ஆராய்ச்சியில் அதி தேர்ச்சியடைந்தோரல்லர். பூர்வீக எகிப்திய அரசரில் அநேகர் தேவகுலத்தவரென்றும், மாகீர்த்தியைப்போலப் பல்லாயிரமாண்டுகளுக்கு வீற்றிருந்தனரென்றும் பூர்வ இதிகாசகாரர் வரைந்திருக்கின்றனர். பழையநாட்களிலிருந்த தெய்வப்பாண்டியரும் அங்ஙனமே இருபத்துநாலாயிரமாண்டுக்கு அதிகமான காலத்துக்கும் வீற்றிருந்தாரென்று சொன்னதிலே குற்றமென்ன? பாண்டியரது குலமுதல்வன் "திங்கட்செல்வ"னென்றும் "மறைமுதுமுதல்வ"னென்றும் "தென்னர்ப்பெயரிய துன்னருந்துப்பிற் றொன்முதுகடவு"ளென்றும்நம்பினோர்க்கு, இவ்வகைக்கூற்றுகள் எவ்வளவாயினும் நூதன

மாகக் காணப்படாவென்பது தெளிவாம். பாண்டியர்சரிதை (Pandiyan Chronicle) யென்றவோர் சிறு வசனநூலிலே குலசேகர பாண்டியன் நாலாயிரத்திருநூறுவருஷம் வீற்றிருந்தானென்றும், மலையத்துவசன் ஆறாயிரத்தெழுநூறுவருஷம் வீற்றிருந்தானென்றும், தடாதகைப்பிராட்டியார் அறுபதினாயிரம் வருஷம் வீற்றிருந்தாரென்றும், உக்கிரபாண்டியன் நாற்பதினாயிரம் வருஷம் வீற்றிருந்தானென்றும், இன்னும் மற்றைய பாண்டியர்கள் ஒவ்வொருவரும் அங்ஙனமே பல்லாயிரம் யாண்டுகளுக்கு வீற்றிருந்தனரென்றும் எழுதியிருக்கக் கண்டோம். மாகீர்த்தி வீற்றிருந்தது யாண்டு இருபத்துநாலாயிரமென்ற கதையை இவ்வகை நூலொன்றிலிருந்துதான் நச்சினார் எடுத்துள்ளாரென்றெண்ணுவது பிசகல்ல. இந் நீண்டகாலத்தை மாகீர்த்திக்கு மனங்கொண்டபடி அவர் தாமேகற்பித்து எழுதிவைத்தாரென்று கொள்ளல் சரியன்று. நச்சினார் இதிகாச அறிவிற் குறையுடையோரென்பது எமக்குமோரளவுக்குச்சம்மதமே. ஆயினும், இராமலட்சுமணர்களுக்கு உதவியாகநின்று இலங்கை அரக்கரைச் சமர்க்களத்தில் வென்று தம் புகழைநாட்டின குரங்குப்படை வீரர்களைப்பற்றி விரித்துரைத்த புலவர்பெருமகன் இதிகாசவுணர்ச்சியில் நச்சினாரினும் சிறந்தவரல்லர்.

நச்சினார்செய்த மூன்றாங்குற்றம்—அகத்தியனாருக்கும் காப்பியனாருக்குமிடையில் ஒருமுறை ஓர் கலகம் நிகழ்ந்ததென்று சொன்னதாகும். இக்கதையை நச்சினார் தாமேயெடுத்துக்கட்டிவிட்டாரென்றதற்கு நியாயமென்னோ? அக்கதை இக்காலத்திலுள்ள மற்றைய நூல்களிற் காணப்பட்டிலதென்பதல்லவா? அவர்காலத்திலிருந்த பழந்தமிழ்நூல்களெல்லாம் தற்காலத்திலுமுண்டென்று சாதித்தல் கூடியதாமோ? அக்கதை மெய்யோ பொய்யோவென்று ஈங்கு ஆராய்கின்றிலம். ஆயின், அவ்வித கதையொன்றை அவர் அக்காலத்திருந்த பழையநூல்களில் கண்டிருந்தாரென்றெண்ணுவதல்லவோ பொருத்தமுடைத்து. பூர்வசரிதங்கள் கர்ணபரம்பரையாக வந்துழி, காலகதியிலே தங்கள் சுயவுருவம் பிறழ்ந்து வேற்றுருவம் கொள்வதியல்பே. ஆர்க்காடு, "ஆறுகாடு" எனத்திரிந்து பின்னர் ஆரியத்தில் ஷடாரண்யமெனப் பெயர்பெற்றமையின், இப்பெயர்கொண்டவோர் ஆரணியம் தென்னாட்டிலிருந்ததென முதன்முறைகூறின புலவன்



பொய்யைப்பிணைத்துவிட்டானென்போமா? ஓர் தேயத்திற் பரம்பரையாய் வழங்கிவரும் கிழவிகள்கதைகளிலும் உண்மைகள் சில புதைந்திருத்தல்சாத்தியமே.

இனி, நச்சினார்செய்த நான்காங்குற்றம்—கௌதமனார், மார்க்கண்டேயனார், வான்மீகனாரென்ற பழந்தமிழ்ப்புலவர் தலைச்சங்க காலத்தவரென்றதே. இக்கூற்றிற்கு நூலாதாரமொன்றும் நச்சினார் கூறாமையின், அதை அவர்தாமே தமது சுய இச்சையின்படி சிருஷ்டித்துவிட்டனரென்று சாஸ்திரியாரவர்கள் செப்புகின்றனர். மேற்சொல்லிய மூன்றுபெயர்களும் தற்காலத்தெஞ்சியிருக்கும்,பழைய நூல்களில் வரக்காண்கிறோம். புறத்தொகையுள் சில வரிகள் சிதைந்தனவானசில பாக்களுக்கு இவர்கள் ஆக்கியோன்களாகக் குறிக்கப்பட்டுள்ளார். கௌதமனார் பாரதகாலத்தவரென்று ஊகித்தற்குக்காட்டக் கூடிய சில பலத்த நியாயங்கள் உள்ளனவென்பதை நாம் அறிவோம். மற்றைய இருபேரும் பழங்காலத்தவரல்லரென்பதை நிலைப்படுத்தக் கூடிய உண்மையொன்றும் இன்னும் வெளிப்பட்டிலது. மார்க்கண்டேயனார், வான்மீகனார் என்ற பெயர்களையுடைய பெருந்தகையோர், பாரதகண்டத்தில் அதி பூர்வநாட்களிலிருந்தனரென்று புராணேதிகாசங்களும் கூறுகின்றன. தலைச்சங்கத்து மார்க்கண்டேயனாரும், சிவபக்தரென்று புராணேதிகாசங்களிற் கூறப்பட்டுள்ள மார்க்கண்டேயனாரும் ஒருவர்தானோ அலலது இருவரோவென்று நிச்சயித்தல் கருவிகளின்மையின் கூடியகாரியமன்று. ஆயினும் வான்மீகனார், குலத்தில் வேட்டுவச்சாதியைச்சேர்ந்தவரென்றும், அவர் பிறந்தவிடம் தற்காலத்தில் சூடியநாகபுரி யென்றழைக்கப்படுகிறதும், பூர்வகாலத்திலே தமிழர் குடியேறியிருந்ததுமான மத்தியஇந்தியாதேசத்திலிருந்த ஓர் கிராமமென்றும், அவர் தவத்திலே முதன்மையடைந்துள்ளோரென்றும் ஆரியர்க்குள்ளே அவரைப்பற்றிப் பரம்பியிருந்த கதைகள் அறிஞர்கள் கூர்ந்து நோக்கற்பாலனவாம். மார்க்கண்டேயனார்காஞ்சியென்றோர் நூல் பூர்வகாலத்திலிருந்ததாகத்தெரிகின்றது. புறத்தொகையுள் மார்க்கண்டேயனார் இயற்றினதாகக் காட்டப்பட்டிருக்கும் அகவற்பா அந்நூலிலிருந்தே எடுத்ததாகலாம். இனி இதிகாசவறிவிற் குறையுடையோரென நாம் முன்னர்க்கூறிய நச்சினார் முரிஞ்சியூர் முடிநாகராயர்காலத்தவரென்று தற்காலத்து நவீனவாராய்ச்சியினாற்கண்

டிருக்கும் கௌதமனார் தலைச்சங்கத்துப்புலவர்களுள் ஒருவரென்று எப்படி அறிந்தனர்? ஒரு ஆதாரமுமின்றி எழுந்த மானத்தில் அவர் உளறிபகூற்றுத் தற்செயலாய் உண்மைப்பாலதாயிற்றெனக்கொள்வதோ அல்லது அவர்காலத்திருந்த பழைய உரைநூல்களிலேயே இப்பெரியோர்களும் தலைச்சங்ககாலத்துப் புலவர்களென்றுகண்டு பிற்காலத்தார்க்கெழுதிவைத்தனரென்று கொள்வதோ எது நமது சிற்றறிவுக்கு ஏற்றதாகும்? பின்னையதல்லவோ?

13. அடியார்க்குநல்லார் கடல்கோள் தெற்கிலிருந்து வடக்குச் சென்று "தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறும் கொண்டொழிந்த"தென்று இளங்கோவடிகள் "பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல்கொள்ள"என்றுசொன்ன முறையாய்ச் சொற்றமையின் பஃறுளியாறு குமரிக்குத்தெற்கேயுள்ள தென்றாயிற்று. "தடநீர்க்குமரிவடபெருங்கோ"டென்றதினால், குமரிக்கோடென்றது அப்பெயர்கொண்டவோர் மலையையல்ல; அப்பெயர்கொண்டவோர் யாற்றின்கரையையே குறிக்கும். கோடென்பது பெருமலையையல்ல, குன்றையே குறிக்கும். பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடென்று இளங்கோவடிகள் சொல்லியிருப்பது குமரியாற்றின்வடகரை மலைத்தொடர்பாலாகியதைக்குறிக்கும். குமரியென்பது பெண்பாற்பெயர். பெண்பாற்பெயரையுடைய மலை இந்தியாவிலெங்குங்காணப்படவில்லை. உரையாசிரியரனைவரும் குமரியை யாறெனக்கொண்டதற்குரிய காரணங்களில் அதுவுமொன்றென்கின்றனர் சாஸ்திரியார்.

அடியார்க்கு நல்லார் குமரிக்கோட்டுக்கு, குமரியின்கரையென்றே பொருள்கூறியிருக்கின்றனரென்பதை ஒத்துக்கொண்டோம். ஆயின் குமரிக்கோடென்றது அப் பெயருள்ளவோர் மலையைக்குறிக்காது என்று சாஸ்திரியார்சொன்னதற்குத் தகுந்தகாரணத்தைக்காண்கிலேம். குமரிக்கோடென்று ஓர் மலையே குறிக்கப்பட்டுள்ளது என்பது மஹாமஹோபாத்தியாய சாமிநாதஐயரவர்கள், காலஞ்சென்றுபோன கனகசபைப்பிள்ளையவர்கள் போன்ற சான்றோருடைய கருத்தாகும். பரதகண்டத்திலுள்ள மலைகளெல்லாவற்றினதும்பெயர்களையறிந்த பின்னரன்றோ அக் கண்டத்திற் பெண்பாற்பெயர்கொண்ட மலை எங்குங்காணப்படவில்லையென்றுகூறல் அமையும். பரதகண்டத்தின்



வடக்கெல்லையாயுள்ளதும்,கிழக்குமேற்காய் ஆயிரத்திருநூறுமைலுக்கு நீண்டு கிடக்கின்றதுமான இமாலயமலைத்தொடரிலுள்ள குன்றுகள், மலைகள், கோடுகள் முதலியவற்றின் நாமதேயங்கள்என்னவென்று முழுதுணர்ந்த பூமிசாஸ்திர விற்பன்னரை யாம் எங்குங்கண்டிலேம். மேலும், ஆண்பாற்பொருளுக்குப் பெண்பாற்பெயரும், பெண்பாற்பொருளுக்கு ஆண்பாற்பெயரும் முறைபிறழ்ந்துகூறும் ஆரியவழக்குப்பட்ட வடநாட்டுப்பெயர்களை இவ் வாராய்ச்சிக்கு ஆதாரமாகக்கோடல் ஆவசியகமன்று. தமிழில் மலையென்றபொருள்படும் கல்லென்கிளவிக்கு ஆரியத்தில் "பாஷாண" என்ற ஆண்பாற்பெயரும், "சிலா" என்ற பெண்பாற்பெயரும், "உபலம்"என்ற ஒன்றன்பாற்பெயரும். பெருவழக்கினுண்டெனின், குமரியென்ற பெண்பாற்பெயரைப் பூர்வதமிழர் தந்நாட்டுமலையொன்றிற்கிட்டுவழங்கினரென்பது நூதனமாகாது. பாண்டியநாட்டில் பசுமலையென்றோர்மலை தற்காலத்திலுமுண்டே. சேரநாட்டில் அயிரையென்றோர் மலையும், அம் மலையினின்று உற்பத்தியாகும் அயிரையென்றோர்யாறும் உண்டே. இவை பெண்பாற்பெயர்களன்றோ. மலையுச்சிகள் தெய்வங்களுக்கு உகந்த உறைவிடமென்று நம்முன்னோர் எண்ணியிருந்தனர். "அணங்குடை நெடுங்கோடு"என்று புறத்தொகையுள்வருதல் காண்க. குமரியுமோர் அணங்கன்றோ. குமரிவீற்றிருந்தகோட்டைக் குமரிக்கோடென்று பழந்தமிழர் சொற்றனராயின் அதிற் பிழை அறியேம். காளிதேவியாருக்கு விந்தையகிரி நித்திய உறைவிடமென்று மகாபாரதம் கூறுகின்றது. இஃதுண்மையாயின் விந்தையத்துக்குக் காளிமலை அல்லது காளிக்கோடென்ற பெயரைச்சூட்டுதல் கிஞ்சித்தேனும் பிழையாகாதே.

பஃறுளியாறு குமரியாற்றிற்குத்தெற்கேயிருந்ததொன்றெனின், உரையாசிரியர் பிறநாடென்றுசொன்ன நாட்டிலல்லவோ அது இருந்ததாதல்வேண்டும். "வடிம்பலம்பநின்ற" பாண்டியன் தன் நாடல்லாத பிறநாட்டிலே தனக்கோர் ஆற்றை வெட்டுவித்தான் என்பது நம்பத்தகுமோ? இனி, பனைநாட்டோடு குமரியாறும் அழிந்ததென்றபோசிரியர்கூற்றை உற்றுநோக்கின், அப்பனைநாடு குமரியாற்றிற்கு வடக்கிலிருந்ததென்றே கொள்ளநேரிடுகின்றது. என்னை? அந்நாடு அவற்றின் தெற்கின்கண் இருந்ததென்றுழி அது பிறநாடேயாகும். ஆயின்

பஃறுளியாறு குமரிக்குத் தெற்கேயிருந்தமையின் அது பனைநாட்டிலேயேயிருந்ததென்று பெறப்படும். அதன் பெயரானும், அதன்கண் பஃறுளியாறு இருந்தமையானும் அதுவும் தமிழகத்தின் ஓர் பாகமாயிற்று. இஃதுண்மையாயின் குமரியாறு தமிழகத்தின் தெற்கின்கண் அகப்பாட்டெல்லையாயிற்றென்பது சற்றேனும் பொருந்தாமை கண்டுகொள்க.

இனி, பனைநாடு குமரிக்கு வடக்கின்கண் இருந்ததெனின் அதுவும் கடல்கோளில் அகப்பட்டொழிந்ததினால் அக் கடல்கோளின் எல்லை குமரியின் வடபெருங்கோடென்றது பொய்யாகுமென்றுணர்க. குமரியாறு பனைநாட்டின் நடுப்பகுதியிலிருந்ததெனின் அது தமிழகத்தின்தெற்கெல்லையாயதுஎன்னுங்கூற்றுப் பொய்யாமாறு கண்டுகொள்க. அன்றியும், குமரியின்வடகரை பன்மலையடுக்கத்தாலாயதெனின், அம் மலையடுக்கம் குமரியையழித்த பூகம்பத்தினால் ஓர் கற்றூண் தான்நின்ற நிலம்போழ்ந்து கீழிறங்கினமைக்கொப்பத் தன்னைத்தாங்கிநின்றநிலமிடிந்து பக்கத்துநாடுகள் கெடாவண்ணம் பாரகத்துட்குட்பட்டதென நம்பவேண்டியதாகும். மலைத்தொடரையழித்த நிலநடுக்கம் அம்மலைத்தொடர்க்குவடபாலுள்ளநாட்டிலும் ஓர் பெரும்பாகத்தைக்கெடுத்திருக்குமென்று ஊகிப்பதன்றோ எமது புத்திக்கியைபுடைத்து. ஆகவே மலைத்தொடராலாய "தடநீர்க்குமரி வடபெருங்கோட்டை" யழித்தொழித்தகடல்கோள் அம்மட்டில் நின்றுவிடாது அக் கோட்டிற்கு வடபாற் சிலகாதவழி தன் வாய்ப்படுத்தியிருக்குமன்றோ. நிற்க, ஓர் யாற்றிற்குக் கோடிரண்டுளவாகக் குமரிக்கோடு என்று ஓர் கோட்டைமாத்திரம் ஆசிரியர் குறிக்கவேண்டியதென்னை? பஃறுளிக்கோடென்னாது பஃறுளியாற்றைக் கொடுங்கடல் கொண்டது என்ற இளங்கோவடிகள் குமரியாற்றையும் அங்ஙனமே கடல்கொண்டதென்னாது குமரிக்கோட்டைக் கடல்கொண்டதுஎன்று கூறினதற்குக் காரணமென்னை? ஓர் யாற்றையும் ஓர் மலைத்தொடரையும் அக் கடல்கோள் ஒழித்ததென்று அவர் சொல்லப்புகுந்தாரேயன்றி அக் கடல்கோள் தெற்கிலிருந்து வடக்கேவந்த முறையாய் அவர் கூறியுள்ளாரென்று நினைத்தற்குப் பெலத்தநியாயமொன்றையுங்காண்கிலோம். இளங்கோவடிகள்சொன்னதை அடியார்க்குநல்லார் வேறுவிதமாய் விளக்கிக்கொண்டனரென்பதுதான் உண்மை



போலும். மேலும் மலைத்தொடர்லாயதென்பதிலும் பலபக்கமலைகளையுடைய குமரிக்கோடென்ற பெருமலையென்று அர்த்தம் பண்ணுவதே அதிகப்பொருத்தமுடைத்துப்போலும்.

(தொடரும்.)

வே. ஜோ. தம்பிப்பிள்ளை, M. R. A. S,

உ

# காந்தமனும் ககந்தனும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் முற்காலத்தில் காந்தமன் என்னும் அரசன் ஒருவன் இருந்தனன். அவன் அப்பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு சோழநாட்டை ஆண்டுவந்தனன். அவன் சோழர் குடியிலுதித்தோன். அவனுக்குக் குலகுருவாகவும், சூழ்ச்சித்துணைவராகவும் அமைந்தவர் அகத்தியமுனிவராவர். அரசன் அவரனுமதியின்றி அரசியலில் யாதொருகாரியமும் செய்யான்.

அவ்வரசன் தன்னாட்டில் ஆறு ஒன்று இருக்குமாயின் விவசாயம் முதலியன செய்து அதனைச்செழுமையுறச்செய்யலாம் என்று கருதி அகத்தியரிடம் சூழ்ந்தனன். அவர் அவனது வேண்டுகோளுக்கு இரங்கிக் காவிரியைச்சோழநாட்டிற் பெருகிவரும்வண்ணம் செய்தனர்.

காவிரிநதி சோழநாட்டிற்பெருகிவருவதற்குக் காரணமாயிருந்தவர் அகத்தியரே என்பது பண்டைத்தமிழ்நூல்களால் அறியப்படும். அது:—

மணிமேகலையுள்,

"செங்கதிர்ச்செல்வன்றிருக்குலம்விளக்கும்
கஞ்சவேட்கையிற்காந்தமன்வேண்ட
அமரமுனிவனகத்தியன்றனாது
கரகங்கவிழ்த்தகாவிரிப்பாவை" என,

பதிகம், 9—12, அடிகளில் காந்தமன் என்னும் அரசன் நீர்வேட்கையால் (தன்னாட்டிற்கு ஆறு ஒன்று வேண்டும் என்னும் அவாவால்)

அகத்தியமுனிவரைவேண்ட அவர்தம் கரகத்தைக்கவிழ்க்க, அதினின்றும் காவிரியாறு பெருகிற்று என்று கூறுவதாலும், தொல்காப்பியப் பாயிரச்சூத்திரவிசேடவுரையில் நச்சினார்க்கினியர், "கங்கையாருழைச் சென்று காவிரியாரைவாங்கிக்கொண்டு" என்று கூறுவதாலும், இன்னும் கந்தபுராணம் முதலிய நூல்கள் "சோழநாட்டில் இந்திரன் தான் வைத்துவளர்த்த நந்தனவனத்திற்கு நீர்வேண்டும் என்று கருதி விநாயகரை வழிபட அவர், சகியமலையிற்றவஞ்செய்துகொண்டிருந்த அகத்தியமுனிவர்கரகத்தைக் காக்கையுருக்கொண்டு கவிழ்த்தனர். அதினின்றும் காவிரியாறு பெருகிற்று" என்று கூறுவதாலும் அகத்தியராலேயே காவிரியாறு தென்னாட்டிற் பெருகிவந்தது என்பது தெளிவாம். அதுவும் மணிமேகலையிற் காந்தமன் என்னும் அரசன் அகத்தியரை வேண்ட அவர் தம் கரகம் கவிழ்த்தனர்; என்பதனால் காவிரியாறு சோழநாட்டிற்குக் காந்தமன் என்னும் அரசன்காலத்தில் வந்ததாகக் கூறுவது பொருத்தமாம்.

இவ்வரசன் சோழநாட்டையாளுங்காலத்திற் பரசுராமன் என்னு முனிகுமாரர் சூரியவம்சத்து அரசர்களைக் கருவறுத்துவந்தனர். காந்தமன்என்னும்அரசனும் சூரியகுலத்துதித்தவனாதலின் தன்னையும் பரசுராமன்வந்து பிடிக்கக்கூடும் என்று அஞ்சித் துர்க்காதேவியை அடைந்து அவளிடத்துக்கூற அவள் "நீ இது பொழுது பரசுராமன் முன்னின்று போர்செய்வது தகுதியன்று; நீ எங்காவதுசென்று மறைந்துவசிப்பாய்" என்று கூறினள்.

காந்தமன் துர்க்காதேவிகூறியதை அகத்தியரிடம்கூறி "நான் பரசுராமன்பொருட்டு மறைந்துறையுங்காலத்தில் இந் நகரத்தைக்காப்பதுயார்" என்று சிந்திக்க அகத்தியர் "நீ மறைந்துறையுங்காலத்தில் இந் நகரத்தை உன்னுடையகாதற்பரத்தைமகன் ககந்தன் என்பவன் காக்கட்டும்; அவனிடத்தில் அரசாள் உரிமை இல்லை; ஆதலால் அவன் பரசுராமனிடத்து அச்சங்கொள்ளவேண்டுவதில்லை" என்று கூறினர்.

அதுகேட்டுக் காந்தமன் தன் காதற்கணிகைமகன் ககந்தனையழைத்து "யான் பரசுராமனிடத்து அச்சத்தால் வேற்றுருக்கொண்டு மறைந்து திரிவேன். பின்னர் யான் வருமளவும் நீ இந்நகரைக்காப்பாய்; பரசுராமனிடத்து நீ அஞ்சவேண்டுவது இல்லை; என்று கூறி,



அவனிடத்து அரசியலை ஒப்புவித்துத் தான் அகத்தியர்வசிக்கும் பொதியமலையையடைந்து கரந்து உறைந்தனன்.

பின்னர், ககந்தன் சோழநாட்டை ஆண்டுவந்தனன். அவனுக்கு மக்கள் இருவர் இருந்தனர். அக்காலத்து மருதிஎன்னும்பெயர்பூண்ட பார்ப்பனிபொருத்தி காவிரியில்நீராடித் தனிமையாகவந்தனள். அப்பொழுது ககந்தனுடைய இளையபுதல்வன் அவள் தனிமையாகச்செல்வதைப்பார்த்து அவளிடத்துமயல்கொண்டு அவளை அழைத்தனன். அவள், அதுகேட்டு நடுநடுங்கி ஐயோ! இவ்வுலகத்திற் கற்புள்ள பெண்கள் மழையைப்பெய்யென்றாற் பெய்யும் என்று கூறுவார்களே. அத்தகைய பெண்கள் பிறர்நெஞ்சுபுகார்களே. யான் அங்ஙனமின்றி இவன்மனத்திற்புகுந்தேன். ஆதலால் என்னிடம் என் கணவனுடன் சேர்ந்து முத்தீயைப்பேணும் தன்மை இல்லையாயது. என்று கூறிக்கொண்டே நேரே தன் வீட்டுக்குப்போகாது *பூதசதுக்கம் என்னும் இடத்தை அடைந்தனள்.

அங்கே மருதி பூதசதுக்கத்துத்தெய்வமே! யான் என்னைக்கொண்ட கணவனுக்கு யாதொருகுற்றமுஞ்செய்தறியேன். அங்ஙனமிருந்தும் என்னைக்கண்ட ஒருவன்மனதில் எளிதாகப்புகுந்தேன். ஆதலால் என்னிடத்து மழையைத்தரும்படியான கற்பு இலையாயது. இதற்கு யான்செய்த குற்றம்யாதோ! நீ என்னைப்புடைத்துண்க, என்னை நீ இன்னும் வந்து அறைந்துண்கவில்லையே; என்னிடத்து உன் சத்தி பொய்யாய்விட்டதோ! என்று அரற்றினள்.

அப்பொழுது அப்பூதம் அவள் எதிரிற்றோன்றிப் பெண்ணே உலகத்துக் கற்புடைப்பெண் தன் கணவனையே தெய்வமாகக்கருதுவதல்லது வேறுதெய்வம் கருதாள். கணவனையே தொழுவாள்; தெய்வம் தொழாள்; அத்தகையார் மழைபெய்யெனப் பெய்யும் என்று முன்னோர்கள் கூறுவர்; நீயோ அங்ஙனமன்றிக் கட்டுக்கதைகளையும் பரிகாசவார்த்தைகளையும்கேட்டு அவற்றில் நம்பிக்கைகொண்டு ஆநந்த

---

* பூதசதுக்கம் என்பது—தவத்தின்கண் மறைந்தொழுகும் பொய்வேடத்தார், அவமறைந்தொழுகும் அலவைப்பெண்டிர், அறைபோகமைச்சர், பிறர்மனை நயப்போர், பொய்க்கரியாளர், புறங்கூற்றாளர் ஆகிய இவர் முதலியவரைத்தன் கையகத்துள்ள பாசத்தாற்கட்டி அவர்களை அறைந்துண்ணும்பூதமிருக்கும் இடமாம்.

மடைந்தும், கடவுளர்களுக்குச்செய்யும் விழாவினை விரும்பிச்சென்று கண்டும் உன் தன்மையை இழந்தாய். மற்றைக்கற்புள்ளபெண்களைப் போல நீ ஏவ மழைபெய்யாது. ஆயினும் தன் மனம்போனவண்ணம் நடக்கின்ற மற்றைப்பெண்களையே என் கையிலுள்ள பாசம் கட்டி இழுத்து வருமேயன்றி உன்னை என்கைப்பாசம் கட்டாது. குற்றம் செய்தவர்களை ஏழு நாளுள் அவர்செய்தகுற்றத்தை அறிந்து ஒறுப்பது அரசன்கடமையாம். அங்ஙனம் செய்யாவிடின் பின்னர் யான் அக் குற்றம்செய்தவரைப் புடைத்துண்பேன். இப்பொழுது உன்னிடம் மயல்கொண்ட அவனை அரசன் இன்று ஏழாம்நாள் ஒறுப்பன். ஆதலின் நீ உன்வீடு செல்கஎன்று கூறிவிடுத்தது.

பின்னர்க் ககந்தன் தன் மகன்செய்த குற்றத்தைக்கேட்டறிந்து ஏழுநாளைக்குள் அவனைத் தன் கைவாளால் கொன்றெறிந்தனன்.

இன்னும், தருமதத்தன் என்னும் வாணிகன் தன் மாமன்மகள் விசாகையுடன் இளம்பருவத்தில் விளையாடிக்கொண்டு மிகவும் அந்நியோந்நியமாக இருந்தான். அதனைக்கண்ட ஊரார் இவ்விருவரும் காந்தருவவிவாகத்தாற் கணவன் மனைவியாயினர் என்று நிகழாததைக்கூறி அலர்தூற்றுவாராயினர்.

விசாகை, ஊரார்கூறும் பொய்மையைப்பொறுமல் உலகவறவியை அடைந்து, அவ்விடத்துள்ள *கந்திற்பாவையை நோக்கி "பாவாய்! நீ இவ்வுலகோர்கூறும் பொய்ப்பழியை ஒழிப்பாய்" என்று கூறினள். அக் கந்திற்பாவை முக்காலமுமுணர்ந்ததாதலின் அங்குவந்திருக்கும் ஊரானரநோக்கி "இவ் விசாகை நீங்கள்கூறும் பழிப்பிற்கு இலக்கு அல்லள், அவள் யாதொரு தீச்செய்கையும் கருதிலள்" என்று தெரிவித்தது.

விசாகை கந்திற்பாவைத்தெய்வத்தால் பழியற்றவள் என்று தெளிவிக்கப்பட்டு நகரத்தார் தன்னைச்சூழ்ந்துவர அவர்கள் நடுவில்

---

* உலகவறவி—இது காவிரிப்பூம்பட்டினத்துள்ள ஒரு பொது இடம். பலரும்வந்து தங்குதற்குரிய தருமசாலை.

கந்திற்பாவைஎன்பது—உலகவறவியில் உள்ள தூணொன்றில் மயனால் நிருமிக்கப்பட்ட ஒரு பிரதிமை. துவதிகன் என்னுந்தேவனுடைய வடிவமாக உள்ளது. அந்தத்துவதிகன் என்னும் தேவன் இதன்மூலமாக முக்காலச்செய்தியையும் கூறுவன்.



வீதியில்வரும்பொழுது ககந்தன்மக்களில் முன் மருதிபொருட்டாக மடிந்தவனுக்குத்தமையன் விசாகையிடத்து மயல்கொண்டு அவள் தன் மனைவியாயினள் என்பதற்கு அடையாளமாக அவள் கழுத்தில் மாலைபோடுவதற்குத் தன் குஞ்சியில் அணிந்துகொண்டிருந்த பூவை எடுக்கமுயன்றனன். அப்பொழுது பூவை எடுக்கச்சென்ற அவன்கை குடுமியை விட்டுவிலகாதாயிற்று.

ககந்தன் தன் மகன்கை அவ்விதம் இருப்பது அந்த விசாகையிடத்துக்கொண்ட தகாக்காதலால் என்று அறிந்து மிகுந்தசினங்கொண்டு அம் மகனையும் தன் கைவாளால் எறிந்துகொன்றனன்.

இங்ஙனம் ககந்தன், காந்தமன் என்னும் சோழனிடமிருந்து அரசு பெற்று இவன் அடைந்தது தன் மக்களை இழந்ததேயாம். இத்தகைய அரசர்கள் நீதியைச்செலுத்துமிடத்து ஒருபாற்கோடாது யாவரையும் ஒப்பநாடிக் குற்றத்திற்குத்தக ஒறுப்பதே தங்களுக்குப்பெருமை என்று கருதினர்.

காந்தமன் ககந்தன் என்னும் இவ்விருவர் வரலாற்றின் மற்றைப் பகுதிகளை அறிவதற்கு ஏற்றகருவிகள் இல்லாமையால், இவ் வரலாறு மாத்திரம் எழுதப்பட்டது.

சு. ஸ்ரீநிவாசையங்கார்.

---

உ

# அறியாமைவினா.

---

சேந்தமிழ்ச்செல்விரே!

பழந்தமிழ்ப்பனுவல்களைப் பன்முறையின் ஆராய்ந்து அவற்றின் உள்ளுறையின் நுட்பங்களைப்பலருமறியப் பல பத்திரிகைகளில் வெளியிடுதலே தமது பொழுதுபோக்காகக்கொண்ட பெயர்விழையான் என்பார் "பெருவல்லம் ஒரு நூற்பெயராமா"? என்ற தலைப்பிட்டு மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுவித்த பொருளுரையைப்படித்துப்பார்த்ததில், அறிவிற்சிறியஎனக்குச் சில விஷயங்கள் புலப்படவில்லை. அறிவுடையார்மாட்டடைந்துகற்றுக்கோடற்கு வேண்டியசௌகரியங்களைப்பெறுதேனுகையால் இப் பத்திரிகைமூலம் தெரியப்படுத்திக்கொள்கிறேன். இப் பத்திரிகையின்

விஷபதாதாக்களாகிய அருந்தமிழறிஞன்றோர் தெளிவிப்பார்க ளென்றெதிர்பார்க்கிறேன்.

'மொழிகள் நின்றுநிலவற்கு எழுத்துக்கள் இன்றியமையாதன, என்பதைப் பிறன்கோட்கூறலாகக்கூறி' எழுத்துஏற்படாதுவழங்கி வந்தமொழிகள் நாளடைவில்மறைந்தமைஉண்மையான் அவர் கூற்றுப்பெரிதும் ஒக்கும், எனத் தமது உடன்பாட்டையுந்தெரிவிக்கும் பெயர்விழையான், அவ்வாறு அழிந்தமொழிகள் இவைஎன வெளியிட்டிருப்பாராயின் எம்போலியர் பொருளுணராதிடர்ப்படவிடமிராது. அன்றியும் நானறிந்தமட்டில் பல்லாயிரக்கணக்கான ஜனங்களாற்பேசப்பட்டு இன்னும் வரிவடிவெழுத்தேற்படாதுள்ளதாகிய சௌராஷ்டிர பாஷை அக் குறைபால் அழிவுபெற்றதாகத்தெரியவில்லை. வேறெம் மொழியோவறியேன். எழுதப்படுதலினெழுத்தெனப்பெற்றது என் பதே இலக்கணநூலார் கருத்து.

நன்னூலார்கொள்கைப்படி எழுத்துக்கு ஒலிவடிவம் வரிவடிவம் என்னும் இரண்டுவடிவங்கள் உண்டென்கிறோம். வரிவடிவமாகிய பின்னையது இன்றி ஒலிவடிவமொன்றுகொண்டே நந்தமிழ்மொழியும் அகத்தியர்க்குமுன்பு நம் நாட்டில் வழங்கிவந்ததாகச் சரித்திரக்காரர் கள் கூறக்கேட்டிருக்கிறோம். ஒரு மொழி சிலகாலம் ஒலிவடிவத் தோடேவழங்கியிருப்பதும், பின்னர் அம்மொழி பேசுவோரில் அறி வுடையார் ஒருவர்தோன்றி அதற்கு வரிவடிவந்தருவதும் இயற்கையே. எழுத்தென்பதின்றி மொழியெவ்வாறமையும்? ஆகையால் "மொழிகள் நின்று நிலவற்கு எழுத்துக்கள் இன்றியமையாதன" என்பார்கருத்துப் பெயர்விழையான் உட்கொண்டமுறையினோ, வேறுமுறையினோ அறி யேன்.

"ஐந்தின்முன் ஆவதென்ன ஆனனத்தின் பேர் என்ன ?" என்ற மேற்கோட்செய்யுளடியில் உள்ள குறிப்புச்சொல்யாது ? "இவ்வா றமைந்தசொற்கள் குறிப்பின்பாற்படும்'' என்பதால் இங்குக்குறித்த ஆறுமுகம் என்பது குறிப்புச்சொல்லா ? அன்றி அதனையுணர்த்திய இவ்வாக்கியம் குறிப்புத்தொடர்மொழியா ? குறிப்புச்சொல் என்பது சொல்லைப்பற்றியா ? பொருளைப்பற்றியா ? 'ஆறுமுகம்' என்ற சொல் லால் இங்கேதும் குறிப்புப்பொருள் உண்டா ? சொல் ஒன்றுதானே குறிப்பால் ஒரு பொருளையும், வெளிப்படையால் ஒருபொருளையும் உணர்த்துவதுண்டன்றோ ? அதற்கும் இக் குறிப்புச்சொற்கும் உள்ள வேறுபாடென்னை ?



'யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியரும் இளம்பூரணவடிகளும், குறிப்பிற்பொருளுணர்த்தும் பஃறொடைவெண்பாவாகக்காட்டியுள்ள சிற்றியாறு........தாள்' என்ற செய்யுளிற் குறிப்புப்பொருள்குறித்த தெவ்வாறு ?

1. கட்டலர்தாமலரயுளேழென்றுலென்ன ?
2. கத்திருவர் ஐவர் யாவர் ?
3. காயாமரமொன்று என்பதிற் குறிப்பென்ன ?
4. பேயினிருதலை என்பதன் உட்கிடை என்ன ?
5. வித்தாத நெல்லினிறுதியாவது யாது ?

இவ்வைந்தும் சேர்த்துப்பெறும் மொழியாது ? யாப்பருங்கல விருத்தி யுரையாசிரியர் "பெருவல்லம்" என்னும் ஊர்ப்பெயரை எவ் வாறு அறியவைத்தார் ?

அப் பெருவல்லம் என்னும் பெயரைக்கொணர்தற்பொருட்டு (ப - ர - வ - ல - ம) இம் மெய்களை எங்கிருந்துபெறலாம் ? இம் மெய் களை எடுத்தாண்டு குறிப்பைவெளிப்படுக்கச் செய்யுளில் அதிகார முண்டோ ? இவ் வெழுத்துக்களைக்குறிப்பித்தேதேனும் அச் செய்யு ளில்வந்திருப்பின் தெரிவிக்கவேண்டுகிறேன். அன்று வேறுவகையாற் பொருளுணரக்கூடுமாயின் அதையும் அறிவானுயர்ந்தோர் அறிவிப்பா ராக.

நா. கனகராஜன்.

---

# பெண்கல்வி.

இவ்வுலகத்துதித்த மனிதரெவரும் இன்பத்தையநுபவிக்கவே விரும்புவர். அவ்வின்பத்தையநுபவித்தற்கு அவரவர்வீட்டிலுள்ள பெண்பாலரும் உதவியாகவிருக்கக்கூடியவரே. அவர்களதுஉதவியின் றேல், ஆடவரின்பத்தையநுபவித்தல் முடியாததாகும். அவ்வுதவியை யெவரும் படிப்பில்லாதபெண்களிடமிருந்து எதிர்பார்த்தல்முடியாது. ஆகவே, முழுஇன்பத்தையுமடையவிரும்பின், எவரும் அவரவர்வீட் டுப்பெண்பாலார்க்கும்கல்விகற்பிக்கவேண்டியதவசியமாகின்றது. நிற்க,

பெண்களுக்குக் கல்விகற்பிக்கப்படவேண்டும்என்று சொல்லப்படு மிக்காலத்தில் நாம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்தகொள்கைப்படி யிருப்போமாயின் அதுமிகவும் கடினமானதாகவிருக்கும். ஏனெனில், அந்நூற்றாண்டில் பெண்கல்வியைப்பற்றிப்பேசிடில், பெண்கல்வியென்றாலென்ன? அது அவசியந்தானா? அவசியமாயின், அதற்குத்தக்க காரணம்யாது? என்றவினாக்கள்கிளம்பி அவற்றிற்குச்சமாதானம் சொல்லியபின்பே முடிவுபெறவேண்டியதாகும். ஆனால், இவ்விருபதாம் நூற்றாண்டில், இப்பெண்கல்வியைப்பற்றிப்பேசுவதில் அத்தகைய கஷ்டமில்லை. ஏனெனில், அஃது அவசியமானதென்று பொதுஜனத்தலைவர்களாலும், பத்திரிகைகளினாலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில், "கற்றபின்நிற்கவதற்குத்தக" என்றபடி, அவசியமானதென்றேற்பட்டதைச்செய்ய முயற்சிக்கவேண்டுமேயல்லாது மறுபடியும்மறுபடியும் அவசியமென்பதைப்பற்றியே பேசிக்கொண்டிருத்தல்பொருந்தாது. ஆயினும், இஃது அவசியமானதென்பதை யெல்லோருக்கும் விளங்கச்செய்யவில்லையாகையாலும், அவசியமானதென்பதைப்பலர் சிலபலகாரணங்களைக்காட்டி மறுக்கின்றார்களாகையாலும், நாம் இன்னும் அஃதவசியம் என்பதை முற்றுமுணர்ந்தவர்களாக ஆகவில்லை. ஆதலின், அம்மறுக்கின்றவர்களுக்குச்சமாதானங்கூறி அவர்களையடக்குவதோடு இன்னும்பன்முறையும் அதனவசியத்தை வற்புறுத்திவரவேண்டுவதும் இன்றியமையாததாகின்றது. இனி, அவசியமென்பது நாட்டப்பட்ட ஒருகம்பம். பலர்நடக்கும்வழியில் நாம் அதைநட்டுவிட்டு அதைக்கவனியாதிருப்போமாயின், அஃது ஆட்டங்கொண்டு கீழேவிழும்நிலைக்குவந்துவிடும். ஆனால், நாம் அக்கம்பத்தின்மேல் பந்தல்போடும்வரையில் அதைவிட்டுவிலகாது பிறர்அதை அசைத்தாலும் அசையாது கிட்டித்துவருவோமாயின், அது நன்குநிலைபெறும். அவ்விதமே, இப்பெண்கல்வியவசியமென்றகம்பம் பலரால் அசைக்கப்பெற்றுவருகின்றது. அவ்வசைப்புக்கிடங்கொடாது தடுத்தாலன்றி நம் எண்ணம் பூர்த்தியாவதுசற்றுக்கடினந்தான். அவ்வசைப்போரில், முதலாமவர் அடுப்பண்டையிருந்து அதிகாரஞ்செய்யும், அயல்வீட்டுச் செய்தியுமறியாத ஒருகூட்டத்தார். இரண்டாமவர், ஆழ்ந்துநோக்காது அயல்நாட்டுச்சமாசாரங்களைக் கேட்டஞ்சுபவர். மூன்றாமவர், பொது



வாகக்குற்றங்கூறுபவர். இவர்களுள், முதலாமவர்க்கு முன்னமேசமாதானங்கூறவேண்டும். அதுவருமாறு:—

நாம் நமது வீட்டிற்கொருவேலைக்காரனை நியமிக்கிறோம். அவனுக்குச்சம்பளமும் ஏற்படுத்துகிறோம். ஆனால், இன்னவேலைகளைச் செய்யவேண்டுமென்று தெரிவிக்கவில்லை. இந்நிலையில், அவன்மாதக்கடைசியில் நம்மைச்சம்பளங்கேட்கிறான். நாம் அவனிடம், நீ என்ன வேலைசெய்தாய்! ஏன் சம்பளம்கேட்கிறாய்? என்றுகேட்டால் அஃது யாருடையகுற்றமாகும்? நமதுகுற்றமல்லவா? அங்ஙனமின்றி நாம் முன்னமேயே அவ்வேலைக்காரனை, நீ இன்னவேலைசெய்யவேண்டியதென்று ஏற்படுத்தியிருப்போமாயின், அவன் தனதுகடமையைச்சரியாகச்செய்திருப்பானல்லவா? ஆகவே, நாம் நமதுபெண்பாலர்களுக்கும் அவர்களதுகடமை யின்னதென்றுதெரிவிக்கவேண்டியதவசியமாயிருக்கின்றது. எவரும் கடமையைச்செலுத்தவேண்டுமென்றால் அதற்குப்போதிய அறிவுவேண்டாமா? அறிவு படிப்பின்றி உண்டாகுமா? "தான்கற்றநூளலவேயாகும்நுண்ணறிவு" என்பது மூதுரையன்றோ? படிப்பன்றோ நீதிமார்க்கத்தைப்புகட்டவல்லது. படிக்காதவரல்லவோ குற்றங்களைச்செய்து தண்டனைக்குள்ளாகிறார்கள். ஒருவனையொரு குற்றத்தினின்றும்விடுவிக்க, அவன், படிப்பில்லாதவன் அறிவில்லாதவன் என்றகாரணங்களைக்கூறவில்லையா? படிக்காதபுருஷனேகுற்றஞ் செய்வானாகில், ஸ்திரீகள் என்செய்யமாட்டார்கள். ஸ்திரீகளுக்குப்படிப்புவேண்டியதில்லை; அவர்களதற்குத்தகுதியற்றவர்கள் என்றுகூறும்பெரியோர்கள் இக்காரணத்தைக் கவனிப்பாராயின், அவர்கள் புருடரைவிட ஸ்திரீகளை எவ்வளவு உயர்வாகமதிக்கிறார்களென்பது அவர்களுக்கு ஒருவாறுவிளங்கும். நினைப்பதொன்றும் செய்வதொன்றுமாக இருக்கலாமா? படித்தஸ்திரீகள் நடத்தைகெட்டுவிடுகிறார்களென்று சிலபெரியோர்கள் கூறுகின்றனர். படிக்காதஸ்திரீகள் கணவனதுகட்டிற்குப்பயந்து நன்குநடக்கிறார்களென்றால், படித்தவர்கள் மானத்திற்கும் கடவுளுக்கும்பயந்து இன்னும் உயர்வாக நடக்கமாட்டார்களா? படித்தவர் கெடுவாரென்றுநினைத்துப் பெண்பாலர்களைப்படிக்கவைக்காது பாழாக்குவோர் கண்ணிருந்தால் பிறபுருஷனைப் பார்ப்பாளென்று தன்மனையாளின் கண்களைக்குத்துபவனைப்போலாவரன்றோ? புருடன்மாத்திரம்படித்திருந்து, பெண்கள்படிக்காதிருத்தல்

பாதி அலங்கரிக்கப்பட்டும், மறுபாதி அலங்கரிக்கப்படாமலுமிருக்கும் ஒருசரீரத்தையொக்குமன்றோ? பெண்ணும்புருடனும் இரண்டுகண்களல்லவா? ஆணைப்படிக்கவைத்துப் பெண்ணைப்படிக்கவையாதிருத்தல், ஒருகண்ணை நல்லஸ்திதியிலும் மறுகண்ணைக்கெட்டஸ்திதியிலும் வைத்திருத்தற்கொப்பாகும். இருவரும் சேர்ந்தல்லவோ குடும்பமாகியவண்டியையிழுக்கவேண்டும். மனையாளும் காதலனும் மாறின்றிச்செய்தாலன்றோ கருமம் கைகூடும். படிப்பில்லாதபெண்ணை இல்லறத்தில் வைப்பது நீந்தத்தெரியாதவனை நடுக்கடலில் விடுதல்போலன்றோ? ஸ்திரீகளன்றோ வீட்டிற்கு விளக்குப்போன்றவர்கள்? அவர்களைப் படிக்கவையாதிருத்தல் அவ்விளக்கைக் குடைகொண்டுமறைப்பது போலாமன்றோ? படித்தவர்கெடுவரென்பது அமிர்தத்தையுண்டவர் சாவரென்பதற்கொப்பாகும். ஆடவர்வெளியிற்போய்த்தான் சம்பாதிக்கலாம். வீட்டில்வந்து அவர்கள்கவலைப்படாததற்குப் பெண்பால்கவலைப்படுதல்முடியுமா? அக்காரியங்களை நன்கு நிறைவேற்றுதலன்றோ காரணம். குடும்பகாரியத்தைநிறைவேற்ற அறிவுவேண்டாமா? அறிவுதான் படிப்பின்றிவராது என்று முன்னமேயேசொல்லியிருக்கின்றது. இத்துணையுங்கூறியவாற்றால் முதலாமவர் ஒருவாறு சமாதானமடையலாம். இனி, இரண்டாமவர்க்குச் சமாதானங்கூறவேண்டும். அது வருமாறு:—

அவர்களோ மேல்நாட்டுஸ்திரீகள் நன்குபடித்ததின்பயனாகச் சில சுதந்திரங்களைத்தங்களுக்கு வேண்டுமெனக்கேட்கிறார்கள். நாமும் நம் நாட்டுஸ்திரீகளுக்குப் படிப்பைக்கொடுப்பின், இவர்களும் அவர்களைப் போலவே நம்மையிம்சிப்பார்கள் என்கின்றனர். ஆனால் அவர்கள் சொல்லுவது முற்றும்பொருந்தாது. ஏனெனில், அந்நாட்டின்படிப்பும், அதன்முறைமையும்வேறு. நம்நாட்டின்படிப்பும் அதன்முறைமையும்வேறு. நம்நாட்டுப்படிப்பின்முறைமை நமக்கு இன்னும்சில சுதந்திரங்களையும் ஒழிவையும் அதிகரிக்குமேயன்றிக் குறைக்காது. எங்ஙனமெனில், படிப்பிக்காத நிலைமையிலிருக்கும் நம்நாட்டுஸ்திரீகள் நம்மை இத்துணை உயர்வாகநடத்துகையில், படிப்படைந்தபிறகு எவ்வளவுஉயர்வாக நடத்தமாட்டார்கள்? அவர்கள் நம்மை அவ்வாறு நடத்துவதைக்காண நமக்கு எவ்வளவுசந்தோஷமுண்டாகும். வீட்டுக்கவலையடையாது நம்மைச் சுயேச்சையாய்விடும்பக்ஷத்தில், நமக்குப் பொருளீட்டுவதற்கு இன்னும் சிறிதுநேரம் அதிகமாகக்கிடைக்கும்.



மேலும் அவர்கள் நம்வழித்தோன்றல்களை நல்வழியிற்பழக்கிவைக்கச் சக்தியுடையவராவார்கள். பாருங்கள் இச்சிறுமாறுதலால் உண்டாகும் நன்மைகள் பலவற்றை! இத்துணையுங்கூறியவாற்றால் இரண்டாமவர் ஒருவாறு தமதுகொள்கையைமாற்றிச் சமாதானம்செய்துகொள்ளுதல்கூடும். இனி மூன்றாமவராகிய பொதுக்குற்றங்கூறுவாருக்குச் சமாதானங்கூறல்வேண்டும். அதுவருமாறு:—

அவர்களோ, "நுண்ணறிவுடையோர் நூலொடுபழகினும் பெண்ணறிவென்பதுபெரும்பேதமைத்து," ஆதலின், பெண்களுக்குப்படிப்பைக்கொடுத்துப்பயனென்ன என்றுரைக்கின்றனர். நாகரிகமிக்க இக்காலத்தில் இவ்விதஞ்சொல்லுவோரிருப்பரென்று எமக்குத்தோன்றவில்லை. அவ்விதமிருப்பராயின், அவர்களுக்கு நம்நாட்டுஸ்திரீகளாகிய, அரசாக்ஷிசெய்துவந்த மதுரைமங்கம்மாள், நாட்டேர்ராணி, பவானியார் முதலாயினோரும், மிகப்புலமைமிக்கோரெனச் சங்கநூல்களால் அறியப்படுகிற ஔவையார், வெள்ளிவீதியார் முதலாயினோரும், மகாபத்தினியெனக்கொண்டாடப்படுகிற கோக்கோதை, கண்ணகி, முதலாயினோரும் பெண்பாலாரல்லரோ எனக்கூறி மறுக்க.

இதுவரை நாம்பேசிவந்ததுகொண்டு பெண்கல்வி நம்நாட்டின் முன்னேற்றத்திற்கவசியசாதனங்களுளொன்றென்பதும், அதனை ஆக்ஷேபிப்பார்கூற்றுப் பொருந்தாதென்பதும், இச்சமாதானங்களையும் இன்னும் பிறவற்றையும் சந்தர்ப்பத்திற்குத்தக்கவாறுகூறி ஆக்ஷேபிப்பார்களைக்கண்டித்து இஃது அவசியமானதொன்றென்பதை ஸ்தாபித்தல் முக்கியமானதென்பதும், இதனால் மனிதர் இன்பமாய் இனிதுவாழமுடியுமென்பதும் ஏற்படுகின்றன. இனி, செய்யவேண்டிய முறையைப்பற்றிப்பேசவேண்டியதவசியம். ஆனாலிதை எவ்விதம் நடத்தவேண்டுமென்பதைப்பற்றிச் சென்ற ஏப்பிரல்மாதத்தில் கவர்ன்மெண்டார் முனிசிபாலிட்டிகளுக்கு அனுப்பிய உத்தரவினால் நம்நாட்டிலுள்ள பலமுனிசிபாலிட்டிகள் அவ்வவ்விடங்களுக்கேற்ற ஆலோசனை சொல்லியிருப்பதாலும், அவை நமது ஜனத்தலைவர்களுடைய அபிப்பிராயங்கையாலும், அவ்வண்ணமே நிறைவேற்றவேண்டியதுதான். இங்கு இவ்விஷயத்தின் அவசியத்தைப்பற்றியும், இதனையனுஷ்டிக்கவேண்டியமுறைமைகளைப்பற்றியும், கனம், ஜஸ்டிஸ், T. V. சேஷகிரி ஐயரவர்கள் பலசமயங்களில் பேசியும் எழுதியுமிருப்பனவும், கனம்,

ஸர். சங்கரன் நாயரவர்களைவரவேற்று உபசரித்து, சென்னை மகாஜன சபையார்பேசியபொழுது சொல்லியிருக்கும்முறைமைகளும் ஆராயற்பாலன. அன்றியும், பூனா பர்கூஸன்காலேஜ்புரொபெஸர் மிஸ்டர் கார்வே அவர்கள் இப்பெண்கள்விஷயமாய் மிக்க ஊக்கத்தோடு உழைத்து ஒரு சர்வகலாசங்கத்தையும் ஸ்தாபிக்க முயற்சிசெய்துவருகிறார். அந்தக்காரியம் இனிது நிறைவேறவேண்டியதுதான். ஒரு நூல் கயிறாகாது. பலநூல்கள்சேர்ந்தே ஒருகயிறாகுதல்போல, நம் எண்ணம் இனிதுநிறைவேற நாம் அனைவரும் அப்பெரியோர்களது நன்முயற்சியோடுகலந்து போதிய ஊழியங்களைச்செய்து சித்திபெறுவோமாக! சுபம்.

ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தொண்டன்.

---

செந்தமிழ் நேயர்கட்கு,

இவ்வருடத்திய செந்தமிழ், தொகுதி, 4-வது பகுதியின் 174-ம் பக்கத்தில் "கான்ஸ்டான்டின்பீஸ்சி என்ற வீரமாமுனிவர்" என எழுதப்பட்டிருக்கிறது. வீரமாமுனிவரது சுயஇத்தாலியபாஷையிலாவது, இந்நாட்டின் துரைத்தனபாஷையாய ஆங்கிலேயத்திலாவது, இவரது உடன்மதத்தினர் இங்கேபேசிவரும் நமது இன்மொழியாகிய தென்மொழியிலாவது, இவரதுபெயரை 'பீஸ்கி' என்று உச்சரிப்பதில்லை. ஆனால், எல்லாவிடங்களிலும் 'பெஸ்கி' என்று வழங்கிவருகிறது. நமது தாய்மொழியைமதித்து, சுகித்து இன்சுவையுடன் எழுதிய இக்கலாமுனிவருக்குக் கைம்மாறாக, இவரது நாமத்தைச் சரிவர எழுதவாவது கூடாதா? அந்நியநாட்டுச் சிறப்புப்பெயர்களை எப்படி யெழுதினாலும் பாதகமில்லையென்றபோதிலும், நமது பெயர்களை மேல்நாட்டார் கரடுமுரடாய் எழுதும்பட்சத்தில் நாம்சந்தோஷங்கொள்வோமா? ஆதலால் செந்தமிழபிமானிகள், இனி இவர்பெயரை எழுதுங்காலை 'பெஸ்கி' என்றாவது அல்லது வெறுமனே 'வீரமாமுனிவர்'என்றாவது எழுதும்படிகேட்டுக்கொள்ளுகிறேன்.

J. M. Gnanadikam Esq.,
*Shembaganoor,*
Madura Dt.

---



சிவமயம்.

## திருஞானசம்பந்தசுவாமிகள்
# பிள்ளைத்தமிழ்.

### ௩. தாலப்பருவம்.

இனிதாகக் கமலப்பூ மேய்மேதித் திரண்மீ
    திளவாளைத் திரள்சீற வேறுவன் கரைசூழ்
கனிவாழைப் பொழில்சாடா வோடாவூர் புகுதுங்
    கதிர்மாடம் பயில்காழிக் கரசேவான் மதிதோய்
பனிவாசப் பொழில்சூழத் திகழ்கூடற் சமணப்
    பசுவெண்ணா யிரம்வந்துட் படுகோளத் திடையே
தனிஞானப் புலியொப்பாய் தாலோதா லேலோ
    சம்பந்தப் பெருமானே தாலோதா லேலோ.

விண்டாவத் திவலைத்தெண் டிரைவீசுங் கடல்வாய்
    விடுகற்றூண் மிதவைக்கே விடுபுற்பா யுடையார்
திண்டாடக் கரையேறத் தமிழைத்தந் தருளுந்
    திருநாவுக் கரையன்றன் சித்தத்தின் றுணையே
வண்டானத் தெழுகொல்லிப் பண்பாடிச் சிறைதோய்*
    மணநாறப் புனலூடே மலரும்புண் டரிகத்
தண்டாமத் திருமார்பா தாலோதா லேலோ
    சம்பந்தப் பெருமானே தாலோதா லேலோ. (௨)

வேறு.

† படைவணிக நச்சிவிடு பணியெயிறு கக்கவிழு
    படுகொலை யெனத்தெரிவை பாராமுன்
பதுமவிழி யுக்கபுனல் ‡ பரவையி னலைக்கவவள்
    படுதுயர் திருக்கண்மலர் காணாமல்

---

* சிலர்பாய் (பி-ம்)
† படவரவி (பி-ம்)
‡ பரவையினளக்கவிவள் (பி-ம்)

விடைபெற வெடுத்தகொடி மருகலுறை யுத்தமரை
விரகொடு திருப்பதிக நேர்கூறு
விடமது கடித்தவிழி யிழியவரு ளிப்புவியின்
மிருபுகழ் பரப்புமுனி தாலேலோ
மடைதொறு முகிழ்த்தமதி பெனமணி குவித்தரவின்
வரிவளை யொலிப்பவத னேர்பாலே
வளர்பல வெடுத்தகனி கிழியவதி லுக்கபுனல்
மதகினி லொலிப்பவத னேர்பாலே
கடைசியர் மலர்க்கைவளை கலினென வொலிப்பநிறை
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தமிழ்வி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர் குலக்குரிசில் தாலேலோ. (சு)

இனமொடு பறித்ததலை யருகரிக முத்திகழு
மெரியினிடை யிட்டவுரை தோலாமே
யிருகரை யொதுக்கியொரு குலகிரி யடுக்குநதி
யிடையிடு தமிழ்ப்பனுவல் போகாமே
சினமிக வடர்த்தமடை வழுதியுட லுட்கும்வகை
திரியவிடு வெப்பிலவன் வேகாமே$
சிவனிட மிருக்குமுமை திருமுலை சுரக்கவரு¶
திருவருள் படைத்தமுனி தாலேலோ
முனைமுனை யறுத்துழவ ரிடவிட வெடுக்கும்வரி
முறைமுறை குவித்தபல சூடார்மேல்
முகில்படு முகட்டினிடை முழுகவிர தத்தினுடன்
முதன்மைதரு பச்சைவய மாவாலே
கனகவரை சுற்றிவரு கதிரிரவி கட்கவளர்
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தமிழ்வி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர் குலக்குரிசில் தாலேலோ. (௧0)

---

$ மாயாமே பி-ம்

¶ சுரக்கவளர் (வளர்)



## ௪. சப்பாணிப்பருவம்.

பொங்குதே னொழுகவிடு சண்பகா டவிதழுவு
பொய்கைசூழ் புகலிநகரிற்
புனிதவா ணகையுதவு குமுதவா யமுதவிதழ்
பொழியுஞா னத்தமிழினால்
வங்கமார் கடல்பொதிபு மெண்டிசா முகசிகர
மந்தமால் வரைதழுவுபூ
மகளைவாழ் வித்துரிய மறையைவாழ் வித்தெனையும்
வாழ்வித்த மாநாயகன்
கங்கைநா யகனிமைய மங்கைநா யகனிலகு
கயிலைநா யகனடுபடைக்
காளிநா யகன்வலிய கூளிநா யகனிருவர்
கருதுநா யகன்மறுவிலோர்
தங்கணா யகன்மதலை சண்பைநா யகனிளிது
சப்பாணி கொட்டியருளே
தலவலய முழுதுமர வொலிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டியருளே.

தூங்கமத கிற்கிளைஞர் துன்றுகுடி யிற்புரிசை
சூழுமக ழிற்படுகையிற்
சுழிதரு குரம்பின்மலர் பொழிதரு வரம்பிலளி
சூழ்தரு கரும்பின்முதலை
பொங்குமுழை யிற்புதிய ஞெண்டின்வளை யிற்குவளை
புல்குமல ரோடையினறும்
பூகக் கிடங்கிலரி தாளிற் பரம்பிலிடு
போரிற் களங்களில்விடா
மங்கல மலர்ப்பணையில் வண்டெழு குளக்கரையின்
மஞ்சளிடு பத்திகளினீர்
வாழையடி யிற்பெரிய தாழையடி யிற்கனிகொள்
மாவினிழ லிற்பொருகடற்
சங்குசொரி முத்திலகு சண்பைநக ருக்கதிப
சப்பாணி கொட்டியருளே
தலவலய முழுதுமர வொலிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டியருளே. (௨)

கடியவெம் பிறவிதரு கடல்விழுந் தலறுமவர்
பற்றவரு நற்றோணியே
கவியமிழ்ந் திடவிலகு கருணையம் புனலது
பரப்பிய சரற்காலமே
யடிபணிந் தெழுமவர்த மிடிகெடும் படியரு
ளளப்பதொரு கொட்டாரமே
யறம்விரும் பிமயமயி லரனுடன் படவினிது
பெற்றதொரு கைக்காணியே
நெடியவன் சமணிவுளி நிரைபிணம் படவுழறி
நிற்பதொரு புற்றுணையே
நிலையுடன் றெரியுமிய லிசையெனும் பயிர்விளைய
வித்துவிளை பொற்பூமியே
கொடியகுண் டர்கள்செவிடு படமகிழ்ந் திருகைமலர்
கொட்டியருள் சப்பாணியே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணியே.

அறுபதந் திகழ்ந்துழுத விதழ்நிறந் தழுதழுது
துய்த்தது முலைப்பாலைவா
னமரருஞ் சதுமறையு முனிவருந் தொழவினிது
பெற்றது திருத்தாளம்வாய்
முறுகுசெந் தழலினிடை தளிர்நிறம் பெறவெழுதி
யிட்டது தமிழ்க்கோவை வான்
முறுவலென் புகள்பொதிவ தொருகுடங் கொடுவர
வழைத்தது மலர்ப்பாவைகார்
செறிவிசும் புழுதபொழில் மிழலையம் பதியர
னளித்தது படிக்காசுசூழ்
திருவிளங் கியமருகல் மருவுசெஞ் சடையரொடு
சுற்றது விடத்தீர்வையாங்
குறுகிநின் பெருமைசொல வெனநிலம் பரவுமுனி
கொட்டியருள் சப்பாணியே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணியே.



கழுமலந் திருவதிகை திருவலம் புரமருகல்
கற்குடி திருக்கோவலூர்
களர்புறம் பயமயிலை சிவபுரங் கடைமுடி
கருக்குடி திருக்கோடிகா
மிழலைவெண் டுறைபரிதி நியமவண் குடிசுழியல்
வக்கரை யளப்பூர்நணா
விளமர்கொங் கணமிடவை திருவலஞ் சுழிதிரு
வரத்துறை திருச்சேய்ஞலூர்
பழனமம் பலமதுரை வளைகுளங் கொடுமுடி
யருட்டுறை திருப்பூவனூர்
பறியல்தண் டலைகயிலை வலிவலஞ் சிறுகுடில்
பருப்பத மறைக்காடுசேர்
குழகர்தங் கழல்பரவ வுரியசெந் தமிழ்விரக
கொட்டியருள் சப்பாணியே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணியே.

## ௫. முத்தப்பருவம்.

எருக்கே புனலே கடிக்கொன்றை
யிணரே யரவே யிளம்பிறையே
யிலையே முடிக்குஞ் சடாமகுடப்
பெருமா னுலகுக் கினிதளித்த
தருக்கே தெய்வத் தமிழ்க்கொழுந்தே
தனிநான் மறையின் கிழங்கேபுன்
சமணப் பரிமேய் கரையுழக்குந்
தனிவா ரணமே திருஞானப்
பெருக்கே யடியார் பெற்றபெரும்
பேறே நாறுங் குமுதமே
பேணுந் தொண்டைச் செங்கனியே
பீடார் சோதிப் பவளமே
முருக்கே யனைய கனிவாயாய்
முத்தந் தருக முத்தமே
முத்தின் பந்த ருடையபிரான்
முத்தந் தருக முத்தமே.

*கொத்துப் படுநாண் மலர்க்கூடை
குஞ்சி யாக மஞ்சனநீர்
கொள்ளுங் கலசம் வாயாக
மெல்லு மிறைச்சி யமுதாகச்
சித்தத் தெழுந்த பேரன்பாற்
சிலைக்கை வேடன் பணிசெய்யுந்
திருக்கா ளத்தி யிறையவர்பாற்
செம்பொற் சின்னம் பெற்றோனே
மத்தக் களிற்றுப் பணைமுத்தும்
வளைவாய் முத்துங் கழைமுத்து
மன்னுஞ் செங்நெற் றாளமுத்துங்
கன்னன் முத்து நிகரொவ்வா
முத்துப் பவளக் கனிவாயான்
முத்தந் தருக முத்தமே
முத்தின் பந்த ருடையபிரான்
முத்தந் தருக முத்தமே. (௪)

வேறு.

பிணமுடைச்செஞ் சுடலைநட்டம் பயில்விருப்பம் பெருகவோர்
பிறைமுடிக்கும் பரமர்பக்கம் பெரிதுவக்குந் தலைமைசேர்
மணமிருக்குங் குழவிசெப்பின் றிருமுலைக்கண் பெருகுபால்
மருவிபித்தெண் டிரைவிளைக்கும் புவிவளர்க்குங் குழவிபே
ருணவுதத்தந் தவமெனக்கொண் டியிருகைக் குண்டிகையினோ
ருடனுகைத்தங் கெதிர்வரக்கண் டவருவட்டம் பரிசுசேர்
சணவரைக்குண் டரையுழக்குந் தலைவமுத்தந் தருகவே
தமிழ்வளர்க்கும் புகலியத்தன் றருகமுத்தந் தருகவே. (௫

உவமைமுற்றும் பவளமொக்குந் திருவுருக்கொண் டவனும்வே
றுருவுபச்சென் றவனிடப்பங் குரிமையிற்கொண் டவனுநீ
டவலொடப்பந் திருவயிற்றங் கடைசிவைக்குங் களிறுமே
லமரர்தத்தஞ் சிறைவிடுத்தங் குமரரைக்கொண் டவனுமார்
துவலைமொத்துஞ் சடையருக்கன் புடையமெய்த்தொண் டினருநீள்
சுருதிமுற்றுந் திருவிசைப்பண் டிருசெவிக்கொண் டிருகவோர்
தவமில்புத்தன் றலையுருட்டுந் தலைவமுத்தந் தருகவே
தமிழ்வளர்க்கும் புகலியத்தன் றருகமுத்தந் தருகவே. (௮)

* இது சிலபிரதிகளில் 8-வது பாட்டாகக்காணப்பட்டாலும் சந்த நோக்க 4-வது பாட்டேயாகும். இந்தப்பருவத்தில் 9-செய்யுள்களே காணப்படுகின்றன.



## ௬. வருகைப்பருவம்.

தென்ற லிலங்கு மலைத்தமிழின் செவ்விச் செந்தேன் முகந்தகன்று
தெய்வப் பொன்னித் திருநதியிற் செழுநீ ராடிச் செங்கழுநீ
ரொன்றிச் செந்தா மரையுலர்த்தி யுயருங் கமுகி னறும்பாளை
யுழக்கிப் பகலின் பொழுதையெல்லா மங்கே யுலாவி யுயர்மகர
வென்றிக் கொடிவே டனுக்கெடுத்த திங்கட் கவிகைக் கதிர்வீச
வீசுங் குமுதப் பெரும்போதின் வேரி மணந்த பசுந்தென்றன்
மன்றிற் புகுந்து விளையாடும் புகலிப் பெருமான் வருகவே
வடநூற் பெருமான் தமிழ்ப்பெருமான் மறையின் பெருமான் வருகவே.

வேறு.

முறுகு கதிர்விரி முளரி தருதெரியல் முழுகு கனகபுயன் வருகவே
முதலி மறைமுதலி கமல மகன்முதல் முனிவர் தவமுதலி வருகவே
யறுகு மலரயனு மரியு மிடவுமையை யணையு மரன்மதலை வருகவே
*யலைய வருபுனலி லனலி யுரையழியு மமணர் வலிநுகரி வருகவே
சிறுகு மிடையசைய வளக மசையவொளி சிதறு தரளவட மசையவார்
திகழு முலையசைய வுயிர்க ளசையவிழி செருகு மகரகுழை யசையமா
மறுகு தொறுமகளி ரசைய வசையவரு புகலி வருகுரிசில் வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி பருகு தமிழ்விரகன் வருகவே (௭)

அகலு முதுபரவை பொதியு முலகுதனி லரிய பெருமைவர வருகவே
யரிய தரளவொளி பெருகு திருசிவிலி லமரு மழகுவர வருகவே
மிகவு மமணர்பொரு மவையி னவரவர்கள் விளையும் விரகுவர வருகவே
வெறிகொள் குவளையிதழ் நயன வனிதையுடன் விடையி லிறைவன்
[மகன் வருகவே

* யலையவரு புனலி னனலி லுரையழியு மமணர்வலிநுகரி.

இகலு மிருபுருவம் வளைய வளக முட னிதய கமலமுகை யுதையவா
யிதழி நிறமுடைய வினைய முலைகவர விடையு மிடைதுவள வெழுதொ
மகளிர் மகிணரொடு கலவி யமளிபுகு புகலிவருகுரிசில் வருகவே [ணு
மலையின் மகளமுத கலச முலையருவி பருகு தமிழ்விரகன் வருகவே. ()

## எ. அம்புலிப்பருவம்.

உரைசெய் கோல்பிடித் தூன்றுவா ரின்றியே யோடத்தை வருகென்று
னுயர்ந்த வாண்பனை பெண்பனை யாகவு மொருவிசை கண்பார்த்தான்
றிரைசெய் வார்புனல் வையையி னெதிர்செலத் தன்றிரு வேடிட்டான்
செய்ய பாலகன் செய்யுமிச் செய்திகள் யாவர்க்குந் தெரியாது
விரைசெய் தாமரைக் கண்களா லுன்கறை மேனியைப் பார்த்தானேல்
மேல் வரும்பழி கடக்கநீ தூய்மையாய் விளங்கலாம் விண்ணோருக்
கரச னுகென விடுக்கினும் விருக்குமின் றம்புலி வருவாயே
யழுது வாழ்வுதந் தருளின னழைத்தன னம்புலி வருவாயே. (௩)

## அ. சிற்றிற்பருவம்.

சுழியா வெறிக்குந் திரையுகுத்த சூல்வெண் சங்கு நீலமலர்க்
கழியால் வந்து வயல்புகுதுங் காழிக் கரசே முலைசுரந்த
மொழியான் முடியாப் பெரும்பொருளை முன்னே காட்டி யுலகமெல்லா
மழியா வகைவந் தாட்கொண்டா யடியேஞ் சிற்றி லழியலே. (௧)

பிடித்தார் பிடித்த கதியேநின் றிட்ட பிண்டந் தின்றவமே
தடித்தார் மெலியத் தமிழ்பாடுஞ் சண்பைக் கரசே தனியேற்றின்
கொடித்தா னுடைய பெருமான்பங் குடையா ளுடைய பெருமகனே
யடித்தா மரையின் முத்துநிர வடியேம் சிற்றி லழியலே. (௨)

சாதித் தெமது பாவமெல்லாந் தள்ளித் தள்ளா டாவகையே
வேதித் தடியா ரடிமைசெய்த வழியாட் கொண்ட பெருமானே
சோதித் தயன்மால் தேடியநாள் தோன்றாப் பொருளைத் தோன்றுவித்த
வாதித் தியனே தமிழ்க்கரசே யடியேஞ் சிற்றி லழியலே. (௩)

சுழிக்கும் பெருஞ்சா றலையெறிய நாறு யிரம்பேர் சூழ்கரும்பு
கழிக்கும் பழனக் கழனிசூழ் காழிக் கரசே வேதத்தைப்
பழிக்கும் பொல்லாப் பரசமயப் பகட்டைப் பால்வாய்ப் பசுந்தமிழா
லழிக்கும் புகலிப் பெருமானே யடியேஞ் சிற்றி லழியலே. (௪)



வழுதி கூனு மவன்வெதுப்பு மாற்றி மண்மே லொருநாளும்
பழுதி லாத திருநீறும் பஞ்சாக் கரமு நிலைநிறுத்தி
யெழுதொ ணாத நான்மறைக்கு மடியேங் களுக்கு மெல்லார்க்கு
மழுது வாழ்வு தந்தோனே யடியேஞ் சிற்றி லழியலே. (௫)

## ௯. சிறுபறைப்பருவம்.

கருதரிய முத்திதரு காரே கலைகணிறை வுற்றமறை வேரே
பொருகலி தணித்தபுகர் வாளே புவனமகள் பெற்றபெரு பேறே
யரியவிசை கட்டுமடு பாகே யதிமதுர மிக்கதெளி தேனே
திருமுலை சுரக்கவரு பாலே சிறுபறை முழக்கியரு ளாயே. (௧)

அளியிசை முழக்கமொரு பாலே யணிவளை முழக்கமொரு பாலே
கிளியிசை முழக்கமொரு பாலே கிடையொலி முழக்கும்வள நாடா
குளிர்புன லத்தினிடை யேவாழ் குமுதமல ரொத்தவித ழாலே
தெளிதமி ழுரைத்தபெரு மானே சிறுபறை முழக்கியரு ளாயே. (௨)

அருகரொடு புத்தர்குல காலா வழல்வலி தவிர்த்ததமிழ் வீரா
முருகுகமழ் கொச்சைவள நாடா முடுகுதிறல் மிக்ககவி கோபா
பருவரையை யொத்ததிர டோளா பரனையறி வித்தவிர லாளா
திருவிசை யளித்தகனி வாயா சிறுபறை முழக்கியரு ளாயே. (௩)

## ௧௦. சிறுதேர்ப்பருவம்.

ஆதி யுகந்தனி லன்னமு மேனமு மன்று முதற்கரிதா
மங்க னிமைப்புற லிங்க னெமக்கருள் செய்தவ னவ்வுருவிற்
பாதி யுகந்தவள் சீதன நித்தில மாலை முலைக்கலசப்
பாலினை வெங்குரு மாநகர் நின்று பரிந்தமு துண்டமுதாய்
வேதமு மங்கமு மாதி புராணமு மெய்த்தமிழ் நூல்களினால்
வேலை பொருந்தின சோலைக ளெங்கும் விளங்க விளங்க விரித்
தோதுத லன்றி யுணர்ந்தருள் பத்த னுருட்டுக சிறுதேரே
யுலகுடை யாளுத வுந்தனி யானை யுருட்டுக சிறுதேரே. (௪)

இலக்கணவிளக்கபரம்பரை,
திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

# "அருங்கலச்செப்பு"

முழுதுணர்ந்துமூன்றொழித்துமூவாதான்பாதம்
பழுதின்றியாற்றப்பணிந்து—முழுதேத்தி. (சிறுபஞ்சமூலம்.)

செந்தமிழ்வாணர்காள் !

தமிழ்நாடெங்கு நிலவுபோற்பிரகாசிக்குந்தன்மநூற்களிலொன்றாகிய "அருங்கலச்செப்பு" என்னுமரியநூல் சென்னை "கன்னிமாரா லைபெரி"யில்வைத்துள்ள ஓலைப்பிரதியிலும், கல்லச்சுப்பிரதியிலும், நூற்றெழுபத்தொன்பது (179) பாக்களுக்குமேற்படாமலும், காலஞ்சென்ற போளூர் திருமலைக்கிராமமுன்சீப் ஸ்ரீமாந்-ஆதிசக்ரவர்த்தியுபாத்தியாயர் ஓலைப்பிரதியில், நூற்றெண்பது (180) பாக்களும்; காலஞ்சென்ற ஸ்ரீமாந்-க. அ. யோகிதாஸ்பண்டிதர் தமதரிய "தமிழன்" பத்திரிகையில் மேற்கோளாகக்காட்டப்பட்ட பாக்கள் "இருநூற்றெண்பதி"(280)ற்கு அதிகமாகவுமிருக்கின்றபடியால், இவ் வருங்கலச்செப்பின்பாக்களித்தனையெனவறியாதிடர்படுமெமக்கு மெம்போலியார்க்குமிடர்படாதொழியுமாறு நூலாசிரியர்பெயருடன் விளக்கவேண்டுகின்றேன்.

அன்றியுமிவ்வருங்கலச்செப்பைக்குறித்து யாவரேனு முன்னர், சந்தேகித்திருப்பரேல் அச் சந்தேகத்தையும் வெளியிடவேண்டுபவனாகிய,

செந்தமிழ்மாணவன்,
பெ. மூ. மதுரையார்.

உ

# யோசனையைப்பற்றிய ஒரு குறிப்பு.

சின்னாட்களாக, யோசனையைப்பற்றிச் சிலபல அறிவாளர் ஆராய்ச்சிசெய்துவருவது அனைவர்க்குந்தெரிந்ததொன்றே. இந்நிலையில், அதைப்பற்றி வேறு குறிப்புக்கள் கிடைப்பின், அவற்றை அன்னார்க்குதவியாயிருக்கும்பொருட்டுத் தெரிவித்தல் தமிழ்மக்கள்கடனாம். ஆதலின், ஈண்டு, யான் எனக்கெட்டியதைத்தருவேன்.

௧. தமயந்தியினது இரண்டாஞ்சுயம்வரத்திற்கென்று தேரூர்ந்து செல்லும் இருதுபன்னன், தனது உத்தரீயம் நடுவிற்கீழேவிழ, தேரை நிறுத்தி அதனை எடுக்குமாறு பாகனாகிய வாகுவற்கு(நளன்) அறிவிப்ப, அதற்கு விடையளிக்குமுகத்தால் மேலாடைவிழுந்த இடத்திற்கும் தேர்வருமிடத்திற்குமுள்ள அளவை, கி. பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விளங்கியவரென அறிஞர்களாலே தீர்மானிக்கப்பெற்ற பெரும்புலவரான புகழேந்தியார் தமது நளவெண்பாவின் கலிநீங்கு காண்டத்தில்,

"மேலாடை வீழ்ந்த தெடுவென்று னவ்வளவில்
நாலாறு காத நடந்ததே—தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா;" (௪௩)

என்ற இச்செய்யுளில் நாலாறுகாத மென்கின்றனர்.

௨. கி. பி. பதினைந்தாம்நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தவராகக் கருதப்படும் அதிவீரராமபாண்டியனார் தமது நைடதம், கலிநீங்கு படலத்தில் அதே அளவை,

"முத்தவெண்குடைவேந்தர்கோன்முழவுறழ்தடந்தோ
ளுத்தரீயமந்நெறியிடைவீழ்ந்ததுமுணர்ந்தா
தத்துவாம்பரிநிறுவியத்துகிறருகென்னப்
பத்தியோசனைகடந்ததுதேரெனப்பகர்ந்தான்;" (மக)

என்ற இச்செய்யுளில் பத்துயோசனை என்று கூறுகின்றனர்.

ஈண்டு, ஒரே அளவினைப்பற்றி "நாலாறுகாதம்" என்றும்; 'பத்துயோசனை' என்றும் முறையே தனித்தனி வேறுவேறு பெயர்கள் பயின்றுவருதல் ஆராயத்தக்கது.

உ. சா. வேங்கடராம ஐயன்,
தண்டமிழ்த்தொண்டன்.

# கம்பர் திருநக்ஷத்திரம்.

நாட்டரசன்கோட்டை நகரத்தார்களால் நடத்தப்பெறும் வித்தியா பரிபாலனசங்கத்துக் கம்பர்கலாசாலையில் நிகழும் காளயுக்தி-ஹு சித்திரைமீ 7உ (19–4–18.) வெள்ளிக்கிழமை கம்பர் திருநக்ஷத்திரத் திருவிழா நடைபெற்றது. காலை 7-மணி தொடங்கி ஊர்வலத்திருவுலா. அக்கிராசனாதிபதி மதுரை வக்கீல் பிரம்மஸ்ரீ D. சுந்தரராஜ ஐயங்காரவர்கள். கனதனவான்களாகிய நகரத்தார்கள், வித்துவான்கள் புடைசூழக் கோயில்விருதுகள் முன்விளங்க மேளவாத்தியங்கள்முழங்க ஸ்ரீ ராமர்திருவுருவப்படமும் கம்பராமாயணப் பெருங்காப்பியத் திருவேடும் அபிடேகசந்தன வெள்ளிக்கும்பமும் பல்லக்கில் எழுந்தருள, ஸ்ரீ கண்ணுடையநாயகி சந்நிதியினின்று திருவுலாப்போந்து கம்பர் அடங்கியுள்ள சமாதிக்கோயிலில் அபிடேக ஆராதனைகள் நிறைவேறியது. பின் கலாசாலை மாணவர்களும் வித்துவான்களும் முறையே திருவாய்மொழியும், ராமாயணப்பாசுரங்களும், கம்பர்க்குத்தோத்திரப் பாக்களும் பாடினர்கள். அத்தருணம் அங்குவந்திருந்தோர் அனைவர்க்கும், கனஆவி அருணசலஞ்செட்டியாரவர்கள் உபசாரஞ்செய்தனர். பின் 11-மணி தொடங்கிக் கம்பர்கலாசாலையில் சுமார் 200-ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது.

மாலை 3-மணி தொடங்கிச் சிற்றுண்டிவிநியோகம் செய்யப்பட்ட பின் மகாசனக்கூட்டம் நடைபெற்றது. மிகுந்த அபிமானமும் அன்புங்கொண்டு தகுதிவாய்ந்த நகரத்தார்கள்பலரும் ஏனை அன்பர்கள் அநேகருமாகச் சுமார் 300-பேர்கள் வந்து கூடியிருந்தனர். முன் அறிக்கையிற்கண்டபடி மதுரை வக்கீல் பிரம்மஸ்ரீ D. சுந்தரராஜ ஐயங்கார் அவர்கள் அக்கிராசனத்தில் அமர்ந்தனர். முறைப்படி கடவுள்வழிபாட்டுடன் சபை தொடங்கியது. உபந்நியாசகராகக் கம்பர்கலாசாலைத் தலைமையாசிரியர் உரத்தூர் கோ. வைத்தியலிங்கம்பிள்ளை எழுந்து நின்று கம்பர் வரலாறும், அவர்க்குத்திருவிழாவேண்டியவாறும், அவர் செய்துள்ள இராமாயணப் பெருங்காப்பியத்திட்பநுட்ப ஆராய்ச்சியும் எடுத்து விளக்கிப்பேசினர்.



மேலும், "கல்வியிற்பெரியன் கம்பன்." "கவிச்சக்ரவர்த்தி கம்பர்" "கம்பநாட்டாழ்வார்," என்றின்ன சிறப்புப் பெயர்களால் எல்லோராலும் வழங்கப்பெறுபவர் கம்பர். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களையமைத்து, உலகியலைச் செவ்வனேயுணர்த்திக், கவித்திறனெல்லாம் அமையக்காட்டிச், செந்தமிழ்ச்சுவையையூட்டி, அத் தமிழ்க்கோர் அணிகலமாய் இராமாயணப்பெருங்காப்பியத்தை நமக்குத்தந்தருளியவர் கம்பர். அப்பெருஞ் செய்தியெல்லாங்கருதி அவர்க்குத்திருவிழாநடத்தவேண்டுவது தமிழ் மக்களாயினோரெல்லோர்க்கும் பெருங்கடமையாகும். அம் முறைபற்றியும், கம்பர்கலாசாலை என்னும் பெயர்க்கேற்பவும், "நாட்டரசன் கோட்டை நமக்கு" எனக்கூறிக் கம்பர் பரிபூரணமான திருநகர் நாட்டரசன்கோட்டையென வழங்குதலானும் இக் கலாசாலையில இத் திருவிழாநடத்தியது மிகப்பொருத்தமும் அவசியமுமாகும். கம்பரது பிறப்பையுணர்ந்துகொள்ள எழுத்துமூலமான ஆராய்ச்சிகிடைத்திலது. அவரை நாம் உணர்ந்துகொள்ளக் கருவியாயும் அவரது திறனெல்லாம் அமைந்து அவரது வடிவாய் விளங்குவதாயுமுள்ளது இராமாயணம் ஒன்றுமே. அவ் விராமாயணத்திற்கு வாச்சியப்பொருளாயுள்ளவர் ஸ்ரீ ராமபிரான். அவரது ஜனனதினத்தையே கம்பரது திருநாளாகக் கொள்ளுதல் ஒக்கும் எனக்கொண்டு ஸ்ரீ ராமநவமியையே கம்பர் திருநக்ஷத்திரமாக்கியது எல்லோர்க்கும் உடன்பாடாகுமென்றே நினைக்கிறேன்" என்று கூறினர். பின் பண்டிதர்களாகிய கணபதியாபிள்ளையவர்கள், இராமலிங்கம்பிள்ளையவர்கள், சீதாராம ஐயங்கார் அவர்கள், வெள்ளைவாரணம் பிள்ளையவர்கள், வக்கீல் இலட்சுமண ஐயங்காரவர்கள் கம்பர் திருவிழாவில் தாம் தாம்கொண்ட கருத்தைவிளக்கி உபந்நியசித்தார்கள். முடிவில் அக்கிராசனாதிபதியவர்கள் மிகவிளக்கத்துடன் கம்பரைக்குறித்தும் அவர்பேரால்வழங்கும் கலாசாலையைக்குறித்தும் விரிவாய்ப்பேசினர். பின் முறைப்படி சந்தனதாம்பூலவிநியோகங்களுடன் சபை நிறைவேறியது. இதையே முதலாகவும் வழிகாட்டியாகவும் கொண்டு தமிழ்வழங்கும் எல்லாநிலங்களினுமுள்ள எல்லாத்தமிழ் மக்களும் வருடந்தோறும் சித்திரைமாதத்து ஸ்ரீ ராமநவமியில் கம்பரது திருவிழா நடத்தி அவர் நமக்குச்செய்துள்ள நன்றிக்காக அவரை நினைந்துவழிபடிற் பெருஞ்சிறப்பும், பெருநலனும், பெரும்பேறுமெய்து

மெனல் சாதம். ஸ்ரீ ராமநவமியையேயன்றிக் கம்பரது பிறப்பிறப்புக்களின் சரியான ஆதாரவுடன் ஆராய்ச்சிகிடைக்கப்பெறின் அவ்வாறு அவர் திருவிழாவை நடத்தலுமிழுக்காது. எவ்வாற்றானும் செந்தமிழருமைபுணர்ந்து அத் தமிழபிமானம்வாய்ந்து கம்பரது திருநக்ஷத்திரத்தை ஔதாரியமாய்ச்செய்துசிறந்த நாட்டரசன்கோட்டைநகரத்தார்போல ஏனை எல்லாத்தமிழ்ப்பெருமக்களும் கம்பர்திருநாளாகிய இப் பெருநலத்திருப்பணியை இனிது நடத்துதல் சிறப்புடைத்தாம்.

ஆர். எம். இராமசுவாமிசெட்டியார்,
காரியதரிசி,
வித்தியாபரிபாலனசங்கம், நாட்டரசன்கோட்டை.

---

ஸ்ரீ:

# புத்தகமதிப்புரை.

1. நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும்:—இது பன்னருஞ்சிறப்பிற்பவணந்திமுனிவரியற்றிய நன்னூலுக்குப் பின்னோர் செய்துள்ள உரைகளிலெல்லாம் முன்னையிருந்தும் இஃதிருக்குமிடந்தெரியாதுமறைந்துகிடந்ததுகண்டு, தமிழினிலக்கியவிலக்கணங்கற்போர்க்கெல்லாமினிதுபயன்படும்படி தமிழ்ப்பழம்பனுவல்கள் பலவற்றையும் ஒன்றன்பினொன்றாக அச்சிட்டுதவிவருதலையே பொழுதுபோக்காகக்கொண்ட லோகோபகாரசீலரான மஹாமஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்களால் நன்கு பரிசோதித்தச்சிடப்பெற்றுள்ளது.

இதில் மற்றை நன்னூலுரைகளிலில்லாத பலபுராதனமேற்கோள்களும் உதாரணங்களும் காணப்படுகின்றன. இதனருமைமுதலியனவெல்லாம் இப்புத்தகத்தை வாங்கிப்படிப்பதனாலும் முகவுரை வாக்கியங்களாலும் நன்கறியலாகும். இதன் விலை ரூபா 3—2—0. வேண்டுவோர் அச்சிட்டோர்க்கெழுதிப்பெறலாம்.

2. சிவஞானபோதச்சிற்றுரைவிளக்கம்:—இதனுள் ஸ்ரீமெய்கண்டதேவனார் அருளிச்செய்த சிவஞானபோதமூலமும், வார்த்திகப்பொழிப்புரையும், இவற்றிற்குத் திருக்கைலாயபரம்பரைத்திருவாவடுதுறைஆதீனத்துச் சிவஞானயோகிகளருளிச்செய்த சிற்றுரையும்,



அவ்வுரைக்கு ஷை ஆதீன சைவப்பிரசாரகர் தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளையவர்களெழுதிய விளக்கமுமுள்ளன. இப்புத்தகம் சைவசித்தாந்தசாத்திரங்கற்பார்க்கு மிகப்பயன்படத்தக்கதே. இப்புத்தகத்தை அச்சிடுதற்கு வேண்டும்பொருளுதவிபுரிந்த தேவகோட்டை ஸ்ரீமாந். அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களது சைவாபிமானம் பாராட்டற்பாலது. இதன் விலை ரூபா 3—8—0. வேண்டுவோர் இதனைப்பதிப்பித்த தூத்துக்குடி ஸ்ரீமாந். பொ. முத்தையபிள்ளையவர்கட்கெழுதிப்பெறலாம்.

3. தசாவதாரம்:—இது கும்பகோணம் இந்து எஜுகேஷனல் டிரேடிங் கம்பெனியாராற் பிரசுரிக்கப்பட்ட தமிழ்ப்புத்தகங்களில் ஒன்று. இதில் காவற்கடவுளான திருமாலின் தசாவதாரக்கதைகள் சுருக்கமாயும், தெளிவாயும் சிறுவர் சிறுமியரெல்லோரும் விரும்பிப் படிக்குமாறு நன்றாயெழுதப்பட்டுள்ளன. இதன் விலை அணா 9. வேண்டுவோர் ஷை கம்பெனியார்க்கெழுதிப்பெறலாம்.

4. ஸாக்ரடீஸ் சரித்திரம்:—இது மதனப்பள்ளிக்காலேஜ் புரொபஸர் மகா-ள-ள-ஸ்ரீ ஆர். அரங்காச்சாரியரவர்கள், எம். ஏ., எல். டி., யால் தமிழ்நடையிலெழுதி அச்சிடப்பட்டது.

இதில் ஸாக்ரடீஸ் என்னும் யவனதேசத்து அறிஞர்தலைவனது ஜீவியசரித்திரம் நன்கு புலனாவதோடு அப்பெருந்தகையினுடைய தைர்யம், சத்யம், பொறுமை, அறிவு, ஆற்றல் முதலிய நற்குணங்களும் அறியக்கிடக்கின்றன.

இது ஆங்கில நூலின்வழியாகவந்தமையால் அதற்கு இன்றியமையாத சில ஆங்கிலப்பெயர்கள் விரவிவருவதாயிருப்பினும் விஷயங்களெல்லாம் இயல்பான தமிழ்நடையாற் றெளிவாயெழுதப்பட்டுள்ளன.

இதைப்படிக்கும் மாணவர்க்கெல்லாம் நல்லறிவும் நன்னடையுமுண்டாமென்றுதோன்றுவதால் இப்புத்தகத்தைக் கலாசாலைமாணவர்க்குப் பாடமாகவைத்துக் கற்பித்துவந்தால் மிகவும் நலமாயிருக்குமென்று நம்புகிறேன்.

மனிதர், பொதுவில் அறிந்துகொள்ளவேண்டிய பலகற்பனைகளும், ஒழுக்கவழக்கங்களும் இதன்கண் உள்ளனவாதலால் இப்புத்தகம் எல்லோராலும் விரும்பிப்படிக்கத்தக்கதே. இதன் விலை அணா 12. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

5. கொசுக்களும் மலேரியாசுரமும்:— இப்புத்தகம், சைதாப்பேட்டை விவசாயவித்தியாசாலைக் கிராஜிவேயட்டும், சென்னைநகர்க் கார்ப்பொரேஷன் சானிட்டெரி இன்ஸ்பெக்டருமான மகா-ள-ள-ஸ்ரீ ஏ. சோக்கலிங்கப்பிள்ளையவர்களாலும், சப் அஸிஸ்டெண்டு ஸர்ஜனும், சென்னைநகர்க் கார்பொரேஷன் கௌரவ காரியதரிசியுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ அ. மு. வையாபுரிமுதலியாரவர்களாலும் எழுதப்பட்டது. இதில் மலேரியாவென்னும் விஷஜுரமுதலிய சில தொத்துவியாதிகளைப்பரவச்செய்து மானிடர்சுகவாழ்வைக்கெடுக்கும் கொசுவகைகளின் உற்பத்தியும், அவற்றின் உடற்பகுதிகளின் அமைதியும், அவற்றின் சுபாவங்களும், அவற்றூற் பரவக்கூடிய நோய்களும், அந்நோய்களைத்தடுக்கும் உபாயங்களும், அக்கொசுக்களையழிக்கும் உபாயங்களும் யாரும் எளிதிலுணரும்படி தெளிவான தமிழ்நடையிலெழுதப்பட்டுள்ளன. போதனுமுறைக்குரியபடங்களும் ஆங்காங்குச்சேர்க்கப்பட்டுள்ளன. இப்புத்தகம் சுகவழியைவிரும்புவோரெல்லோராலும் படிக்கத்தக்கது. இதன் விலை அணு 6. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

6. பூரண சுகம்:—இப்புத்தகம், சுவாமி அபேதாநந்தர் அவர்கள் ஆங்கிலத்திற்செய்த வுபந்யாஸத்தினின்றும் தமிழில் வசனரூபமாக மேலேகண்ட கண்யமுள்ள சைதாப்பேட்டை ஸ்ரீ ஏ. சொக்கலிங்கப்பிள்ளையவர்களால் நன்கு மொழிபெயர்க்கப்பட்டது. இதிற் சரீரம் துக்கஹேதுவென்றும், அதனின் வேருய ஆன்மா சுகரூபியென்றும் பிரத்தியக்ஷாநுபவத்தால் ஆத்மஞானத்தை நன்கு பிரகாசப்படுத்தியிருக்கிறது. இதன் விலை அணு—1, பைசா—6. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

7. புதிய தமிழ்ப்பாடபுத்தகம்:—(நடுத்தர கலாசாலைகளில் உபயோகப்படுத்தக்கூடியது.) இது கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலின் தமிழ்ப்பண்டிதர்களாகிய ஸ்ரீமாந். அ. பாலசுப்பிரமணிய பிள்ளையவர்களாலும், ஸ்ரீமாந். ஊ. சா. வேங்கடராமையரவர்களாலும் நன்ருக எழுதப்பட்டு, கும்பகோணம் இந்து எஜுகேஷனல் டிரேடிங் கம்பெனியாராற் பிரசுரிக்கப்பெற்றது. இதன் விலை அணு 6. வேண்டுவோர் ஷை கம்பெனிக்கெழுதிப்பெறலாம்.



1. ஸஸேமிரா:—இது, ஸ்ரீமத்-கே. டி. சுந்தரராஜாச்சாரியரவர்கள் பி. ஏ., எல். டி., இயற்றியது. இதன் விலை அணு—2.

2. வளையல் உடன்பாடு:—என்னும் ஒரு ரஜபுத்திரக்கதை. இதன்விலை அணு—2.

3. தாதாபாய் நௌரோஜிசரித்திரம்:—இதன்விலை அணு-3.

4. யுக்திபோதினி:— இது மனிதர்கள்குடிவாழ்க்கைக்குபயோகமாகத் தெரிந்துகொள்ளவேண்டியதும், யுக்திசாத்தியமாயுமுள்ள 122-விஷயங்களடங்கிய சிறு புத்தகம். இதன்விலை அணு 10. மேலேகண்ட புத்தகங்கள் நான்கும் ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, ஹைக்கோர்ட்டுக்கெதிரில், 3, 4-கொண்டிசெட்டித்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ் என்ற விலாசத்திற்கெழுதிப்பெறலாம்.

9. குகப்பெருமாள்:—(இராமாயணத்துள் அடங்கிய ஒரு சரித்திரம்.) இது, வேலூர் ஊர்ஹீஸ்காலேஜ் தமிழ்ப்பிரதமபண்டிதர் ஸ்ரீமத்-பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களாலியற்றப்பெற்றது. இதன்விலை அணு 3. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

10. கருவூர்ப்பசுபதீச்வரர் அஷ்டமங்கலம்:— இது மாட்சிமைதங்கிய ஆண்டிபட்டி ஜமீந்தார் ஸ்ரீமாந்-சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களின் க்ஷேமாபிவிருத்தியின்பொருட்டு அரிகேசநல்லூர் ஸ்ரீமத், பு. வ. முத்துசுப்பபாரதியவர்களால் ஆர்வத்தோடு இயற்றப்பெற்ற எட்டுப்பாட்டுக்களையுடையதொரு மங்களவாழ்த்து. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

11. பாலர் பெரிய தமிழரிச்சுவடி:—(1, 2, 3-பாகங்கள்.) இவற்றின் ஒவ்வொருபிரதியும் இரண்டணுவிலைக்குக்கொடுக்கப்படும். வேண்டுவோர் கொ. லோ. பாரியாள் ஸ்ரீமதி செல்வரெங்கம்மாள் அவர்கள், மனோன்மணி விலாசம் பிரஸ், நெ. 29, வைத்தியநாதமுதலியார்வீதி, சென்னை என்ற விலாசத்திற்கெழுதிப்பெறலாம்.

12. இருக்குவேத சங்கிதை:—இது குன்னூர் ஆனந்தாச்ரமத்து ஸ்ரீமத்-சிவத்தியாநாநந்த மஹரிஷியால் தமிழிற்செய்யுளும் வசனமுமாய் மொழிபெயர்த்தியற்றப்பெற்று 1918-௵ ஏப்பிரல்௴த்திலிருந்து சஞ்சிகைரூபமாக வெளியிடப்பட்டுவருகிறது. இதன்வருடச்சந்தா ரூபா 6. வேண்டுவோர் வேதபியூரோ, ஆநந்தாச்ரமம், குன்னூர், நீலகிரிமலை என்ற விலாசத்திற்கெழுதிப்பெறலாம்.

13. லோகமாதா:—இது திருவாங்கூர்ச் சமஸ்தானம் புனலூரினின்றும் தமிழ்மொழியபிவிருத்தியின்பொருட்டு வெளியிடப்பெற்றுவரும் ஒரு மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீமத்-வித்துவான் ம. மு. நாராயணசாமியவர்கள். இதில் ஆங்கிலத்திலும் தமிழிலும் விற்பன்னரான பலபண்டிதர்களெழுதும் பலவியாஸங்களடங்கியுள்ளன. இதன் வருடச்சந்தா ரூபா 1—8—0. வேண்டுவோர் மானேஜர், லோகமாதா, புனலூர் என்றவிலாசத்திற்கெழுதிப்பெறலாம்

14. தென்னிந்திய விவசாயக்கைத்தொழில்:—இது மைலாப்பூரிலிருந்து வெளிவரும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை; இதில் விவசாயம், கைத்தொழில், சுகாதார முதலிய விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. இதன் வருடச்சந்தா ரூபா—3. வேண்டுவோர் ஸ்ரீமத்-ஜி. இராஜகோபால் அவர்கள், தென்னிந்திய விவசாயக்கைத்தொழிற் பத்திராதிபர், திருவள்ளுவநாயனார்சந்நிதி, ராக்கியப்பமுதலிதெரு, மயிலாப்பூர், மதராஸ் என்ற விலாசத்திற்கெழுதிப்பெறலாம்.

மேலேகண்ட புத்தகங்கள் பத்தொன்பதும் பாண்டியன் புத்தகசாலையிற் சேர்க்கப்பெற்றன.

பத்திராதிபர்.

24 AUG 1918

உ
கடவுள் துணை.
# செந்தமிழ்

தொகுதி-௧௬.] காலயுக்தி-௵ ஆனி௴ [பகுதி-௮.
Vol. XVI. June,—July. 1918. No. 8.

## கொங்கதேச அரசர்கள்.

("செந்தமிழ்"த்தொகுதி ௧௫-ன் பகுதி ௪-ன் ௨௦௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

௨௩. இராஜமல்லதேவராயன். ப...ம்.

அவன் தம்பி இராஜமல்லதேவராயன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு சகல ராஜாக்களுடைய விருதுமடைந்து அப்பொழுது பாண்டியராஜன் யுத்தத்திற்குவந்தவிடத்திலே அவனுக்கு அபசெயம்பண்ணுவித்துச் சகல ராஜாக்களுள்ளும் இவனுக்குச் சமானமான பலசாலியில்லையென்று கீர்த்தியையடைந்து தன்னுடைய அண்ணனை விஜயஸ்கந்தபுரத்திலேவைத்து அரசாண்டனன். அப்பொழுது அவன் அண்ணன் குணதுத்தமராயன் தருமம்பண்ணின வயணம்:—சாலிவாகனசகை வருஷம் நோபாவலீ ௮௱. விகாரிவருடம் ௩௰௩. ஆனிமாசத்திலே குருவாரத்திலே பூர்ணிமையிலே புனர்வசு நக்ஷத்திரத்திலே ஏ. விஷ்ணுகுஹாலயமென்கிற சைனதேவாது நவகரும பலி பூசை முதலான தருமத்துக்குக் தொங்கணகுளீசுவரபகவந்தனுடைய சிஷ்யன் பாரபூதிபகவந்தன் அவன் சிஷ்யன் தேசசோமபகவந்தன் அவன் சிஷ்யன் அகோரசோமபகவந்தன், அவன் சிஷ்யன் சகிபூஷணமஹாமுனி அவனுக்குத் தலைகாடுநாடு வடகரைநாடு வீரஅள்ளியென்கிற கிராமம் சர்வமானியமாய்த் தர்மம்பண்ணிக்கொடுத்தான். அதன்பிறகு உபயகாவேரிமத்தியத்திலே பச்சிமரெங்கநாயகருடையசேவை வெகுநாளாய்க் கௌதமபூசைசெய்து இருந்தபிறகு இந்தஸ்தலம் வனமாய்ப்போய்த் திருமலையனென்கிறவன் இரங்கநாயகர் கோவில் கட்டிவைத்துக் கொஞ்சம் பிராகாரங்கட்டி ஸ்ரீரங்கபுரமென்று

*

பெயர்வைத்து அந்தக்கோவிலுக்குமேற்குத் தன்பெயர்வைத்துத் திருமலைதேவரென்று ஒரு விஷ்ணுபிரதிஷ்டைபண்ணி இந்த இரண்டு கோவிலுக்கும் பூசைமுதலான தருமம் நடப்பித்துக்கொண்டுவந்தான். சகை வருஷம் ௮௱௰௯. ஆனந்தவருஷம் வைசாகமாதம் சுக்கிலபக்ஷம் சப்தமி சுக்கிரவாரம்.

### ௨௯. சோழவம்சத்திலே கொங்கதேசபட்டம்.

சோழவம்சத்திலே விச(ய)ரடாராயன் மகன் ஆதித்தியவர்மராயன் சோழதேசம் தஞ்சாவூரிலே பட்டங்கட்டிக்கொண்டு கொங்கதேசத்துக்குவந்து ராசா வேடர்களைச்செயம்பண்ணித் தலைக்காடென்ற பட்டணங்கட்டிக்கொண்டு இந்த ராச்சியங்களிலே அநேக அக்கிரகாரம் சர்வமானியமாய்த் தருமம்பண்ணி அந்த அரசை அரசாண்டனன்.

### ௩௰. வீரசோழராயன் ப...ம்.

இவன் மகன் வீரசோழராயன் கொங்ககன்னட தேசங்களுக்கு அரசனுய்த் தஞ்சாவூரிலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு அநேக தேசங்களைச் செயம்பண்ணி யுத்தத்திலே பயப்படாமல் மிக்க சூரனுயிருந்தபடியினலே இவனுக்கு வீரசோழராயனென்று பெயர்வந்தது. இவன் நாராயணனிடத்திலே மிக்க பத்தியாயிருந்தபடியினலே வீரசோழநாராயணனென்று பெயர்வந்தது. இந்தராஜாவும், பாண்டியராஜாவும் அநேகதேசம் திக்குவிஜயம்பண்ணினர்கள். அதன்பிறகு வீரசோழநாராயணராஜாவானவன் சிங்களத்தீவுக்குப்போய்ச்சண்டைபண்ணிச் சிங்களராஜாவைச்செயித்து உலகத்திலே மிக்க கீர்த்தியை அடைந்து சோழதேசம் காவேரிதீரத்திலே வீரநாராயணபுரமென்ருெரு அக்கிரகாரங்கட்டிமுடித்துப் பிராமணர்களுக்குச் சர்வமானியம் பண்ணி இன்னும் சிறிது அக்கிரகாரமுங்கட்டித் தானம்பண்ணினன். அவன் ஒருநாள் சமுத்திரதீரத்திலே இருக்கும்பொழுது அவ்விடத்திலே மத்தளவாத்தியசப்தங்கேட்டது. அவ்வோசையுண்டாகும் இடத்திற்குச்சென்றுன். அங்குச்சிதம்பரசபாபதிசுவாமி டமருகவாத்தியத்துடனேகூட நாட்டியம்பண்ணுகிறதாய்க்கண்டான். அவ்விடத்தில் மிக்க திரவியஞ்செலவுசெய்து அவ்விடத்திலே கனகசபைகட்டுவித்தான். இந்த அரசனுக்குப் பிள்ளைகள் அநேகம்பெயர். அவர்களிலே தேசோத்தியராயனுக்குச் சோளதேசமும், அரிஞ்சயராஜசனுக்குத் திராவிடதேசமும் கொடுத்துச் சுவர்க்கத்தையடைந்தான்.



### ௩௧. தேசோத்தியராயன். ப..ம்

அவன் மகன் தேசோத்தியராயன் தஞ்சாவூரிலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு அண்ணன் அரிஞ்சயராயனுக்குத் திராவிடதேசம் பட்டாபிஷேகம்பண்ணுவித்துக் கொங்கதேசமுதலானதுக்கு அரசனுய் இராச்சியபரிபாலனம் தர்மநீதிப்படிபண்ணினுன். இவன் காவேரி தீரத்திலே சதுசமுத்திரமென்கிறபெயருடனே நாலு அக்கிரகாரங் கட்டினுன். இவனுக்குப் புத்திரனில்லை.

### ௩௨. புரந்தகராயன். ப...ம்.

இவன் அண்ணன் அரிஞ்சயராசன்மகன் முதற்புரந்தகராயன் பாண்டியராஜாவுடனே யுத்தம்பண்ணிச்செயித்துக் கப்பம் வாங்கிக்கொண்டு தஞ்சாவூரிலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு காவேரி தீரத்திலே அக்கிரகாரமானியம்பண்ணிப் பூ(மி)தானம் கோதானம் கன்னிகாதானம் முதலானதும்பண்ணிச் சேதிராயன்மகள் சித்திரியென்கிறவளைக் கலியாணம்பண்ணினுன் ; அவளுக்கொரு பிள்ளைபிறந்தது. பிறகு சத்துருக்களைச்செயம்பண்ணினதினலே, அவனுக்கு அரிமாவியென்று பெயர்வந்தது. அதன்பிறகு அவன் பரலோகத்தையடைந்தான். அவன் பெண்சாதி சித்திரை என்கிறவளும் அவனுடனேகூட அனுகமனம்பண்ணினுள். அவளுக்கு வேறுபிள்ளைகள் பிறந்தன.

### ௩௩. திவியராயன். ப...ம்.

அந்தப்பராந்தகராயன் பிள்ளைகளிலே திவ்வியராயன் என்கிறவன் தஞ்சாவூரிலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு திராவிடதேசமும் இரக்ஷித்துக்கொண்டு அதன்பிறகு வீரபாண்டியனிடத்திலே மிகவும் பயத்தையடைந்து அந்த வீரபாண்டியன் தஞ்சாவூருக்குச்சண்டைக்கு வந்தவிடத்திலே அவனுடனே சண்டைபண்ணிச்செயித்து அவன் காதையறுத்துப்போட்டான். அப்போது வீரபாண்டியன் மதுரைக்குப்போய்விட்டான். இதனலே இவனுக்கு அரிதிட்டு என்றுபெயர் வந்தது. அந்த அரிதிட்டுராயன் தஞ்சாவூர்ப்பட்டினத்திலே மந்திரியை வைத்துத் தான் உத்தரதேசம் செயம்பண்ணவேணுமென்றுபோய் வெகுநாள் அவ்விடத்திலேதானே இருந்தபடியினலே, இந்தத்தஞ்சாவூரிலே இருந்த இராஜவம்சத்து ஜனங்கள் மந்திரிபேச்சைக்கேளாமல் ஒருத்தருக்கொருத்தர் சண்டைவந்து மனுஷமுகாந்தரமாய் ராசா

விசேஷங்கேள்விப்பட்டு ராஜாவந்து துஷ்டநிக்கிரகம், சிஷ்டபரிபாலனம்பண்ணிக் காவேரிதீரத்திலே வாய்க்கால்கள் வெட்டுவித்துத் தருமங்களை முன் நடந்தபடியே நடப்பித்துத் துலாபாரதானம் முதலான சோடசதானமும் பண்ணினான். அதன்பிறகு வைதொண்டவம்சத்திலே சத்திரனகனை ஜெயித்து அவனிடத்திலே கனகம் இரத்தினம் மாணிக்கங்கள்கொண்டுவந்து ஸ்ரீமந்-நாராயணனுக்குப்பிரீதியாய்ப்பிராமணருக்குக்கொடுத்துவிட்டான். இவனுக்குப் பிள்ளையில்லாதபடியினாலே தன்னுடைய தம்பி அரிவாரிதேவனுக்குப் பட்டங்கட்டினான்.

## (௫௪) அரிவாரிதேவன் ப...ம்.

அந்த அரிவாரிதேவன் தஞ்சாவூரிலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு சோழ, திராவிட, கொங்கதேச முதலாய் இரக்ஷிக்கிறகாலத்திலே அப்போது அவன் அண்ணன் நிவியராயன் சதுரங்கசேனைகளுடனே மதுரைக்குப்போய்ப் பாண்டியராஜாவுடனே சண்டைபண்ணினவிடத்திலே சண்டையிலே அபஜயமாகப் பாண்டியராஜா ஓடிப்போய்விட்டான். அப்போது பாண்டியதேசத்தையுங் கட்டிக்கொண்டு விரிஞ்சபுரமுதலாய்க் கொள்ளைபண்ணிக்கொண்டு திரும்பித்தஞ்சாவூருக்கு வந்தான் அப்போது இவன் இராஜாக்களை ஜெயித்தபடியினாலே இவனுக்கு ராஜராஜாவென்று பேர்வந்தது. இந்த ராஜாவுக்கு ஓடிப்போன பாண்டியராஜாவுடைய தாய் மிகவும்உறவு ஆனபடியினாலே அந்தப் பாண்டியராஜாவினிடத்திலே அநேக திரவியபூஷணங்கள் வாங்கிக்கொண்டு அந்த மதுரையை அவன்வசம்விட்டு இரண்டுபேரும் மிகவுஞ் சிநேகிதமாயிருந்தார்கள். அதன்பிறகு அந்தராஜாவின் சேனாதிபதியானவன் மிகவும் கிட்டின பந்துசெனமானபடியினாலே தான் தானே அவன்வீட்டிற்குவந்தான். அந்தஅமர்புசனென்கிறசேனாதிபதி சந்தோஷத்துடனே இராஜாவுக்குக் கனகாபிஷேகம்பண்ணினான். அப்போது இராஜா சந்தோஷப்பட்டு அவனைத்தேச ஜயத்துக்கு அனுப்புவித்தான். அப்படியே அந்த அமர்புசனென்கிற சேனாதிபதி சதுரங்கசேனைகளுடனே மேற்குத்திக்கிலே இருக்கிற ஸஹ்ய பருவதத்திற்குப்போய் அவ்விடத்திலே இருந்து கேரளதேசம் ஜெயம்பண்ணப்போனவிடத்திலே, அந்தராஜாவானவன் சத்துருபலாயன முதலான ஆபிசார கிருத்தியஞ் செய்கிறானென்றுகேட்டு அதிகக்கோபத்துடன்போய்க் கொல்லூர், யந்திரகிரி, நீலகிரி, தூர்க்கம் முதலானதும் ஜெயித்தான்.



அந்தராஜா சகலபலமும்போனபடியினாலே கப்பலேறிக்கொண்டு சமுத்திர நடுவிலேஉள்ள தீவிற்கோடிப்போய்விட்டான். அதன்பிறகு சோழராஜாசேனாதிபதியானவன் தங்கள்துரை உத்தரவுப்படிக்கு அங்கே அகப்பட்ட திரவியங்களைச் சிவாலயத்தோடே கூடியிருக்கிற கணவாய்ஸ்தலத்திலே நிக்ஷேபம்பண்ணிப் பச்சிமதிக்கிலே ஜயஸ்தம்பம்நட்டு, உலகத்திலே வெகுகீர்த்திபண்ணிவைத்தான். அதன்பிறகு பீமராயனென்கிறவன் இந்தச்சமாசாரங்கேட்டுச்சண்டைக்குவந்தவனை யுத்தம்பண்ணி ஜெயித்து அவன் மகனையுங்கொன்றுபோட்டு அதற்குமேல் கலிங்கதேசத்திற்கு யுத்தத்திற்குப்போய் அவனிடத்தில் கப்பம்வாங்கிக்கொண்டு அங்கேயிருந்து நர்மதா தீரத்திற்குப்போய் அந்தத்தேசங்களிலே அநேக ராஜாக்களை ஜெயம்பண்ணி நர்மதாதீரத்திலே ஜயஸ்தம்பம்நட்டுத தக்ஷிணதிக்குமஹேந்திரகிரிபர்வதத்திலே வியாக்கிர அடையாளத்துடனே சயஸ்தம்பம்நட்டு,அங்குள்ள வைதும்பராயன்,காமாரணவராயன், தானபால்லியபீமராயன், அம்மராயன் முதலான இராஜாக்களைச்செயித்து அநேக ஆபரணங்களோடு அந்தப்புரஸ்திரீகளையும் கப்பமாக வாங்கிக்கொண்டு சுவர்ணத்துமமாயிருக்கிற பீமராயனுடைய பாவபிரதிமை வாங்கிக்கொண்டு சேனைகளுடனேகூடவந்து ராஜாவைக் கண்டனன். இராஜா சந்தோஷத்துடனே சம்பாதித்துவந்த சகலவித திரவியங்களையும் சிதம்பரேசுரருக்குத் தங்கள் பிதாமகன் கனகசபை மாத்திரங்கட்டுவித்தான் என்றெண்ணிச் செலவுசெய்தான். கோபுரங்கள்,மதில்கள்,மண்டபங்கள்,சோபானங்கள்முதலானதுகள்கட்டுவித்துச் சபாபதிக்கு வெகுஆபரணங்களும்பண்ணி, வெகு தருமம்பண்ணினான். அதற்குமேல் துலாபாரதானம் அநேகந்தரம்பண்ணிக் காவேரிதீரத்தில் அநேக அக்கிரகாரம் சர்வமானியம்பண்ணிச் சிறிது பூமிதானங்களும் பண்ணினான். அப்போது கொங்குதேசம், கன்னடதேசம், கைவசத்திலே இருக்கிறபடியினாலே மகாராஜசோழராயனானவன் கொங்கதேசத்துக்கு வடபுரத்திலே தலைக்காடுசீமை, கேரையூரென்கிற கிராமம் இராஜராஜபுரமென்று பெயர்வைத்துத் தளவன்புரத்திலே இருக்கிற தேவப்பிராமண பூசைபண்ணித்தருமம்பண்ணுகிற வைசியர்களுக்குக் கொடுத்து அவர்கள் கையினாலே அக்கிரகாரதருமம்பண்ணிக்கொடுத்தான். அந்தவேளையிலே இன்னம் அநேகதருமம்பண்ணிக்கொடுத்தான்.

சாலிவாகன சகைவருஷம் கூளாஉயிள விசுவாவசுவருஷம் சுத்த பஞ்சமி சதயநக்ஷத்திரம் இந்தவேளையிலே தருமமாகத் தானம்பண்ணிக் கொடுத்துச் சோழராச்சியம் தஞ்சாவூரிலேயிருந்துகொண்டு இந்த அநேகதேசங்கள் கப்பம்வாங்கிக்கொண்டு அரசாண்டனன்.

### எ-வது வம்சம், ஒயிசள ராஜாக்கள் வம்சம்.

சமஸ்தபிரபஞ்சமும் இரக்ஷிக்கிறவராயிருக்கிற விஷ்ணுவினுடைய நாபிக்கமலத்திலே பிரமன் உண்டானான். அவனிடத்திலிருந்து அத்திரிரிஷி உண்டானான். அத்திரிரிஷியினுடைய நேத்திரத்திலே சந்திரன் அவனிடத்திலே புதன் புதனிடத்திலே புரூருவன் அவனிடத்திலே ஆயு ஆயுவினிடத்திலே நகுடன் நகுஷனிடத்திலே யயாதி யயாதியினிடத்திலே யது அந்த யதுவம்சத்திலே அநேகஇராஜாக்கள்தோன்றித் துவாரகாபட்டணத்திலே இராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அந்த இராஜாக்களிலே சாளனென்ற ஒருராஜா வேட்டையாடும்நிமித்தம் அநேக சேனைகளுடனே தக்ஷிணதிக்கிலே சிம்மாசலமென்கிற ஒரு பருவதத்திற்குவந்து வேட்டையாடுகிறவேளையிலே அவ்விடத்திலே ஒருமுயலானது ஒரு புலியைத்துரத்திவருகிறதைக்கண்டு இந்த க்ஷேத்ரம் நல்ல வீரக்ஷேத்ரமென்று யோசனைபண்ணினான். அவ்வேளையில், அந்தப்புலியானது அவ்விடத்திலே தபஸ்கமுனியென்கிற ஒரு ரிஷி தவம்பண்ணிக்கொண்டிருந்தார்; அவரைப் பாய்ச்சென்றது. இந்த ராஜாவானவன் அந்தப்புலியை ஒருபாணத்தினாலே கொன்று போட்டான். அப்பொழுது அந்த ரிஷி இந்த ராஜாவைப்பார்த்து விசயனென்று பெயர்பெறுகுவை இப்புலியைக்கொன்றதனாலென்றான்.

### ஒயிசள வம்சம்.

கன்னடபாஷையிலே ஒயிசளனென்று பெயர்வைத்து அந்தத் தேசத்திற்கும் ஒயிசள தேசமென்று பெயர்வைத்து இந்தத்தேசத்தை இராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருப்பாயென்று அந்த ரிஷி வரங்கொடுத்தபடியினாலே அப்படியே அந்தத்தேசத்திலே பட்டங்கட்டிக்கொண்டிருந்தான். பிறகு வெகுநாட்கழித்து அந்தவம்சத்திலே ஒரு இராஜா வெகு வணக்கத்தினாலேயும், கீர்த்தியினாலேயும் ஆதித்தியனைப்போல இருந்தபடியால் வினையாதித்தியனென்றுபெயர்பெற்றான்.



### ஙயிரு. வினையாதித்தியராயன் பட்டம். சகை வருஷம் கூளாகூயக.

அந்த வினையாதித்தியராயன் தலைக்காட்டிலே இருந்து இந்த இராச்சியத்தைக் கொஞ்சங்கொஞ்சமாகக் கைவசம்பண்ணிக்கொண்டு இந்தத் தேசங்களிலேயிருக்கிற பாளையக்காரரைப் பிரீதிபண்ணிக்கொண்டு சிறிதுதேசம் இரட்சித்துக்கொண்டிருந்து அதற்குமேல் தலைக்காட்டிலே இருக்கப்படாமல் துளுவதேசத்திற்குப்போய் அங்கே சிறிது கிராமங்கைவசம்பண்ணிக்கொண்டு இருந்தான். அப்போதிந்தக் கன்னட, கொங்கதேசங்கள் முன்பு சோழராஜனுக்குக் கப்பங்கொடுத்துக் கொண்டிருந்த பாளையக்காரர்வசமாயிருந்தன. இந்தத்தேசம் இந்த வினையாதித்தியராயன் தலைக்காட்டிலே இராச்சியபாரம்பண்ணிக் கொண்டிருக்கையில் அவன்மந்திரி வித்தியாவினைஞன் தலைக்காடு மல்லிகார்ச்சுனசுவாமிக்குத் தங்கள் இராஜன் உத்தரவுகொண்டு பூமிதருமங் கொடுத்தான். சாலிவாகன சகைவருஷம் கூளாகூயக, சாதாருணவருஷம் சித்திரை சுத்தபஞ்சமியில் பூமிவயணம் [எழுத்துப்போச்சுது.] வினையாதித்தனுடைய மனைவி வலதேவியின் வயிற்றிலே வல்லாளனென்று ஒரு பிள்ளையுண்டானான்.

### ஙசு வல்லாளராயன் பட்டம். சகை சூயிரு.

வல்லாளராஜன் சசபுரத்திலே இருந்து கொஞ்சதேசம் இராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டு தன்தம்பி பட்டதேவன், உதயாதித்தியதேவன் என்னும் இருவருடனே வெகுசேனைகள் சேர்த்துக்கொண்டு தன்மகன் பெட்டதனுடன் தலைக்காட்டிற்குவந்து கொங்குபாளையக்காரரைச்செயித்து அந்தத்தலைக்காட்டிலே பட்டங்கட்டிக்கொண்டு அவ்விடத்திலேநின்றும் நொணம்பவாடி, கெங்கைவாடி, பளவசை, ஆனைக்கல்லு முதலியவற்றைச்செயம்பண்ணி, சின்னமதத்திலே இருந்துகொண்டு அந்தச்சாஸ்திரம் விஜாரித்துக்கொண்டிருந்தான். அவன் மந்திரி எச்கடைலகுமயன் தன்னுடைய எஜமானன் கையிலே உத்தாரம் வாங்கிக்கொண்டு சென்னக்கேசவசுவாமிக்குப் பத்துக்கண்டகம் பூமிதருமம்பண்ணிக்கொடுத்துச் சகைவருஷம் சூயிரு, அக்ஷயவருடம் புஷ்யபகுள திரயோதசி மங்களவாரத்தில் தருமதானம்பண்ணிக் கொடுத்தான். அந்த வல்லாளராயன் மனைவியிடத்தில் பெட்டதிராயன் பிறந்தான்.

௫௭. பெட்டதவிஷ்ணுவந்தராயன் ப...ம். சகை. ௲. ௨௰.

பெட்டதவிஷ்ணுவந்தராயன் தலைக்காட்டிலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு அவன்மந்திரி மாதவ மாதவனாயகனுடனே கூடிக் கொண்டு சிறிதுசேனைகளைச்சேர்த்துக்கொண்டு சசபுரம் வாயந்திகா தேவி வரப்பிரசாதத்தினாலே துளுவதேசம், சக்கிரகூடம், முச்சங்கிகோளான், நிலாவளதுர்க்கம், இராயராயோதகம்புரி, தோயக்கூர், கொத்தவாடி, ரொங்கு முதலான தேசங்களைச்செயித்து மேற்குமலையாளம் குடகு மட்டுக்கும் வடக்குச்சாதிமலை, தெற்குக்கொங்கு, கிழக்குஆலம்பாடி இவைகளின் மத்தியிலிருக்கிற தேசங்களையாண்டுகொண்டுகுருவினிடத்திலே வெகுபக்தியுடனேயிருந்தான். இவன் அலசூர்க்காந்தபுரத்திலே தனக்கு அரண்மனைகட்டுவித்துத் தலைக்காடு இராச்சியத்தைப்பரிபாலனம் பண்ணுகிறகாலத்திலே சோழவரசன் சண்டைக்குவந்தான். அவனைச் சண்டைபண்ணிச்செயித்து, கேரளதேசத்து ராஜாவுடனே வெகுயுத்தம்பண்ணி அவன்சேனைகளில் வெகு சனங்களைக்கொன்றுவிட்டு வடக்கே மாளவதேசமட்டுக்கும் ஜயம்பண்ணி வெகுதிரவியம் வாங்கிக்கொண்டு கொங்கராஜாவுக்குக் காட்டுத்தீயாயிருந்துகொண்டு பாக்கியத்திலே தேவராஜாவுக்குச்சமானமாய் ரூபத்திலே மன்மதனைப்போலே சரணாகதமாய் வந்தபேர்களை ரக்ஷித்துக்கொண்டு கவீச்வரனை ரக்ஷிக்கிறவன். தங்கள்மதத்திலேயிருக்கிற சென்னியசாத்திரம்விசாரித்து அவர்களை ரக்ஷித்துக்கொண்டு கெங்கண்ணியசளுவதேவர் கெங்கவாடிமனேனம்பவாடிசெனங்களைத் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம்பண்ணித் தன்சென்ம வெகுசனங்களை ரக்ஷித்து அதற்கு மேல் அவனுடைய ஸ்திரீ......

ஸ்ரீரங்கத்துக்குப்போய் வைஷ்ணவமதம் செய்துகொண்டு அந்தச் சாஸ்திரம் நன்றாய்விசாரித்து இதுமெய்யான சாஸ்திரமென்று மனதிலேபக்தியாய்த் தேவப்பிராமணாளிடத்திலே வெகுபக்திபடைந்து வெகுதானதருமம், கன்னிகாதானம், உபநயனதானம்பண்ணி வெகு சந்தோஷத்துடனேவந்து தன்னுடைய புருஷன் பெட்டராயனுக்கு வியாசராலேசொன்ன தருமசாஸ்திரம் விசாரிக்கச்சொல்லியும், தேவப்பிராமணாளை ரக்ஷிக்கச்சொல்லியும் இந்தப்படி தன்புருஷனுக்குச்சொல்லிக்கொண்டுவருவாள். அதுகேட்டு, பெட்டராயன் பேசாமலிருப்பான்.



அதின்பிறகு இராமானுஜாசாரியரென்கிறவர் சோழதேசத்திலேயிருந்து இவ்விடம்வந்து பெட்டதராயனுடைய ஸ்திரீ, விஷ்ணு மதத்திலேயிருக்கிறபடியினாலே தான்வந்தசமாசாரம் அவளுக்குச் சொல்லியனுப்புவித்தார். அவளுஞ்சந்தோஷப்பட்டுத் தன்னுடைய புருஷனோடுசொல்லி அவரைத்தன்னுடைய அரண்மனைக்கு அழைப்பித்துப்பேசினவிடத்திலே அந்தராசா சயினியர்சாஸ்திரம் மெய்யாயிருக்கிறதென்று சொன்னபடியினாலே ஜைநியஸ்திரீ................

சகை ௲௨௰௧.

இந்த விஷ்ணுவர்த்தனராயன் பூமிதருமம்பண்ணினவயணம். சகை வருஷம் ௧௦௨௧. விக்கிரமவருஷம் மாகமாசம் அவிட்டநக்ஷத்திரத்திலே சிவயோகம், பவகரணம் இந்தத்தினத்திலே ஸ்ரீரங்கபட்டணம்......

அக்காசி அக்கம்மா எடத்துறையிலேசேர்ந்த குருவனூர். குருவனூர்கிராமம். சமக்கிரமாய்ப் பச்சிமாங்கநாதசுவாமிக்குக் கெங்கை சந்நிதியிலே தாராபூர்வகமாய்த் தருமதானம் பண்ணிக்கொடுத்தான்.

சகை ௲௩௰௧. விஷ்ணுவர்த்தனராயன்.

அதின்பிறகு விஷ்ணுவர்த்தனராயன் தளவாய் செங்கைதெண்டதேநாயக்கன் தங்கள் ராசாவினுடைய உத்தாரத்தின்படி தங்கள் குருக்கள் சுபசந்திரசிந்ததேவருக்குக்கொடுத்த பூமிவயணம்.

சகை வருஷம் ௧௦௩௧ விளம்பிவருஷம் பால்குன சுத்தபஞ்சமி சோமவாரத்திலே தங்கள் பௌகுளக்கிராம சமக்கிரமாய்த் தருமதானம் பண்ணிக்கொடுத்தான். பூமிதானம்.

சகை ௲௩௰௩ விஷ்ணுவர்த்தனராயன்.

சகை வருஷம் ௧௦௩௩. நந்தனவருஷம் மார்க்கசிர சுத்த அஷ்டமியில் சோமவாரத்தில் விஷ்ணுவர்த்தனராயருடைய சேனாநாயகராயிருக்கிற பண்டநாயகன் செங்கைமைதரி சூரணதெண்டநாயகன் இவர்கள் சையின்யசுவாமிக்குத் தங்கள் எசமானனான பெட்டதராயனைக் கேட்டுக்கொண்டு மைசூர்சீமை படவன் அள்ளி முன்னேயிருக்கிற ஏரி கீழ்வயல் இருபது. சல்கைவிரைக்கிறபூமி ஏரிக்கு வடபுறத்திலே கர்மபூமி கம்பம்-௪௰௨. அந்த ஏரிக்குமேற்கு தோட்டம் குழி-௨௱. அவ்விடத்திலே உக்கிராண ஏண்ணைக்குச்சேருகிற பூமிகம்பம்-௨௰. இந்தப்படி தருமம்பண்ணிக்கொடுத்தான்.

### சகை ௲௩௰௯ விஷ்ணுவர்த்தனராயன்.

விஷ்ணுவர்த்தனராயன் சகை வருஷம் ௧௦௩௯. விளம்பிவருஷம் சித்திரைச்சுத்தபஞ்சமி புதவாரத்திலே வேலூரிலே சென்னகேசவ நாராயணசுவாமி பிரதிஷ்டைபண்ணி அவருக்குப்பூசை அங்கரெங்க போகத்துக்கு வேலாபுரமென்கிறகிராமமும், அந்தக்கிராமத்திலே சுங்க முதலானதும், அதிலேசேர்ந்திருக்கிற பன்னிரண்டு கிராமமும் இது தவிர அப்பதுரை, தகரை என்ற இரண்டு கிராமமும், பளவினாடு, மணவினாடு, பன்னிரண்டு கிராமமும், கெசகூடமென்கிற கிராமமுத லான மைசனாடு பெட்பெட்கரைலாசண்டிநாடும் தேவனூர் சகலபூமி சகிதமாய் இந்தக்கிராம பூமிகளெல்லாம் அந்தச்சுவாமிக்குவிட்டும் இது தவிர வெகுதிரவியங்கொடுத்து அந்தக்கோவில் இடிந்துபோனதெல் லாம் நன்றாய்க்கட்டிவைத்தும் தருமம்பண்ணினான். இது அந்தக்கோவி லிலே எழுதியிருந்த பிரதி.

விஷ்ணுவர்த்தனராயன் தன்னுடைய ஸ்திரீ சாந்தலாதேவிக்குப் பூமிகொடுத்து அவள் தருமேசுவரசுவாமிக்குப் பூசைநைமித்தியம் வசகைநாடு, கெண்சாந்திக்கிராமம் தர்மங்கொடுத்த வருஷம்.

### சகை ௲௪௰௪ விஷ்ணுவர்த்தனராயன்.

சகை வருஷம் ௧௦௪௪. சோபகிருதுவருஷம் புஷ்யபகுளதெசமி சோமவாரம் உத்தராயண சங்கிரமணத்தில் தருமம் பண்ணிக்கொடுத் தான்.

### சகை ௲௪௰௫ விஷ்ணுவர்த்தனராயன்.

விஷ்ணுவர்த்தனராயன் தன்னுடைய அண்ணன் சக்கிரசதேவ ருடனேகூடப் பூதானம் பண்ணினவயணம். சகை வருஷம் ௧௦௪௫. குரோதிவருஷத்திலே புஷ்யபகுள தசமி ஆதிவாரம் உத்தராயண சங்கிரமணத்திலே எடதுரைநாடு காவேரியும் கபனியும்கூடின வேணீ சங்கமத்திலே திருவக்குடல் அகத்தியேசுவரசுவாமியாருக்குப் பூசை நைவேத்தியம் சிரேணுத்தாரண நைமித்தியம் எட்துரைநாடு பைதலே யுடனேகூடியது. சசலூர் இந்தக்கிராமம் பூமி சமக்கிரமாய் அகத்தி யேசுரசுவாமிக்குத் தாராபூர்வகமாய்த் தருமதானம்பண்ணிக்கொடுத் தான்,



### சகை ௲௫௰.

விஷ்ணுவர்த்தனராயன் மைசூருக்குத் தெற்குப்புறத்திலேயிருக் கிற மகாபலாசத்திலேயிருக்கிற மகாபலேசுவரர் சாமுண்டி அம்மனுக் குருத்திய கட்டளை பூசைநைவேத்தியத்துக்கு விட்டதருமம். சாலி வாகன சகைவருஷம் ௧௦௫௦. சௌமியவருஷம் கன்னியாமாசம் அஸ்த நக்ஷத்திரம் இந்தவேளையிலே மைசூர்ச்சீமை மளலவாடிக்கிராமம் மகா பிலேசுவர சாமுண்டி அம்மனுக்குத் தருமதானம் பண்ணிக்கொடுத் தான்.

இது அந்தக்கோவிலில் தெற்கேநட்டிருக்கிற சிலாசாஸன பிரதி தருமம்.

### சகை ௲௫௰௩ விஷ்ணுவர்த்தனராயன்.

விஷ்ணுவர்த்தனராயன் பூசைநைவேத்தியத்துக்கு மைசூர் ஏரி கீழேயிருக்கிற நஞ்சைவயல்பூமி அஞ்சகண்டகம் விரைக்கிறபூமி மைசூர்ச்சைனிய சுவாமிக்குவிட்டது. சகைவருஷம் ௧௦௫௩. பரீதாபி வருஷம் பால்குனபகுள பாட்டிமை மங்களவாரத்திலே பண்ணின தருமம்.

### சகை ௧௦௫௪ விஷ்ணுவர்த்தனராயன்.

விஷ்ணுவர்த்தனராயன் பெளகேரை ஜயினியஸ்வாமி தர்மத் துக்குப் பெளகேரை உபக்கிராமத்துடனேகூடத் தர்மம்பண்ணின வயணம். சகைவருஷம் ௧௦௫௪ பிரமாதீசவருஷம் ஆசிவச சுத்ததசமி-௰ புதவாரம் பூரட்டாதி நக்ஷத்திரம் உ௰௫. இந்த ...... தனக்குக் குருவாயிருக்கிற முதலாசாரிக்குக் கொடுத்த தருமம்.

விஷ்ணுவர்த்தனராயன் செவிளிநாடு மொறளைக்கிராமம் பிராம ணுளுக்கு அக்கிரகாரம்பண்ணிக்கொடுத்துச் சர்வமானியமாய்விட்டு, சென்னகேசுவரசுவாமிக்குப்பூசை வைபோகத்துக்குக் கெஞ்சிகேனக் கிராமத்திலேசேர்ந்த சாவந்தன்கேரையிலே முகிளிய ஒருவிருத்திபூமி யும், மாகுண்டிகெரையிலே எட்டுச்சலகைவிரைக்கிற பூமியும், மொத ளையுனுரைடதேவன் கெரையிலேயிருக்கிற பூமியும் சர்வமானியமாய் ஸ்ரீகேசவஸ்வாமி பாதத்திலேவிட்டது. சகை............

## சகை ௧௦௫௫.

சகை ௧௦௫௫. ஆனந்தவருஷம் பால்குன சுத்தசப்தமி புதவாரம் தர்மம்பண்ணிக்கொடுத்தான்.

இந்தப்படி விஷ்ணுவர்த்தனராயன் இன்னும் அநேக தருமம்பண்ணி இராமாநுஜாசாரியாரிடத்திலே குருவிசுவாசத்தினாலே அநேக விசுவாசத்துடனே அனேக விஷ்ணு தேவாலயம் இரக்ஷித்து விஷ்ணுபக்தியாயிருந்தான். அப்படிப்பட்ட விஷ்ணுவர்த்தனராயனுடைய ஸ்திரி லக்ஷுமி யென்கிறவளுடையமுகம் தாமரைப்பூப்போலவும் பவளம் போலஉதடும் முத்துக்கள்போன்ற பற்களும் சங்கம்போன்ற கழுத்தும் மேகசாலம்போன்ற மயிர்களும் இன்னும் அநேக லக்ஷணங்களுடனே லக்ஷுமியைப்போலேயிருக்கிற லக்ஷுமி யென்கிற ஸ்திரியினிடத்தில் நரசிங்கனென்கிற ஒருபிள்ளை பிறந்தது. அவனை நாளொருமேனியாய் வளர்த்து எழுவயதுக்குமேலே வித்தை கற்பித்து விஷ்ணுவர்த்தனராயன் வெகு கீர்த்தியடைந்தான்.

## ௩௰௮. நரசிங்கராயன் பட்டம்.
### சகை வருஷம் ௧௦௭௧.

விஷ்ணுவர்த்தனராயன் மகன் நரசிங்கராயன் தலைக்காட்டிலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு தன் தகப்பனுக்கு அதிகமாய் வெகு புத்தியுடனே சத்தியத்திலே ஹரிச்சந்திரனைப்போன்றும், கீர்த்தியிலே நளமகாராசாவைப்போன்றும், ராசதர்மத்திலே பரசுராமனைப்போன்றும், கோபத்திலே நரசிம்மனைப்போன்றும், பொறுமையிலே பூமிதேவியைப்போன்றும் இந்தப்படி வெகுநீதியுடனேயிருந்து தலைக்காடு முதலான தேசமும் கைவசம்பண்ணிக்கொண்டு கொங்கு கர்னாடம் இந்தத்தேசங்களை ரக்ஷித்துக்கொண்டு திராவிடதேசத்திலே கப்பம் வாங்கிக்கொண்டு துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம்பண்ணிக்கொண்டு தேவப்பிராமணரை ரக்ஷிச்சுக்கொண்டு அநேக தர்மங்கள்பண்ணி அநேக பூதானம்பண்ணி இராச்சியம் ரக்ஷிக்கிறகாலத்திலே.......... ........................ அதற்குமேல் துரை சமுத்திரத்திலே யிருந்து கொண்டுராச்சியபரிபாலனம்பண்ணினான். நரசிங்கராயன் பூமிதானம் பண்ணினவயணம்.



## சகை ௧௦௭௧.

நிறக்குந்த நாட்டிலேசேர்ந்த ஒன்னுவாரமென்கிற அக்கிரகாரத்திலே ஸ்ரீகேசவப்பிரதிஷ்டையும்பண்ணி அந்தச்சுவாமி அங்கரங்க வைபோகத்திற்குப் பூமியும்விட்ட சகைவருஷம் ௧௦௭௧. பிரபவ வருஷம் மாகசுத்தத்திரயோதசி மங்களவாரம் உரோகிணிநக்ஷத்திரம் கடக லக்கினத்தில் பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு பூமிவிட்டவயணம். நாற்பத்தாறு கோதானம்பண்ணிப் பாகிவிடபத்திலே கிழக்குக்கோடியிலே முந்நூறுகாணி மலையாண்டகேரை கீழே ௬௰௫. புல்லைக்கேரை ஏரிகீழேயேரிகீழே இருபத்தைந்துகாணி பொண்டேசுவரி யேரிகீழே முப்பதுகாணி சுங்கம்முதலானதும் விட்டுத்தருமம்பண்ணி இதுதவிரச் சங்கர்டநாயகன் மகன் பொர்க்கண்ணனுக்கு ஒருகண்டகம் விரைக்கிற வயல், பரிசாரக மாளயயனுக்குப் பத்துக்குளகம்வயல் இந்தப்படி தர்மதானம்பண்ணிக்கொடுத்தான்.

## சகை ௧௦௭௨. நரசிங்கராயன் காலம்.

நரசிங்கராயன் அகோரசிவபண்டிதருடைய நித்தியநைமித்தியக பூசாவிதானத்துக்குப் பிதகைகேரைகீழேயிருக்கிற நஞ்சைபூமி தர்மம் பண்ணிக்கொடுத்த சகை வருஷம் ௧௦௭௨. பிரசோற்பத்தி வருஷம் புஷ்யசுத்தபஞ்சமி சோமவாரத்திலே உத்தராயண சங்கிரமண புண்ணியகாலத்திலே தர்மம்பண்ணிக்கொடுத்தான்.

## சகை ௧௦௮௦.

நரசிங்கராயன் சர்வாதிகாரிக்கத் தண்டநாயகன் தங்கள் எசமானன் உத்தாரத்தின்படி யாதவகிரியிலே ஸ்ரீதிருமலைதேவர் பிரதிஷ்டை பண்ணிப் பூமிவிட்டவயணம். சகைவருஷம் ௧௦௮௦. பிரமாதிவருஷம் சிராவணசுத்த அஷ்டமி குருவாரம் இந்தத்தினத்திலே பெடடள்ளி இந்தநாடு பாகேஅள்ளி, சாகூர், கிராமணஅள்ளி, குமனஅள்ளி, அளேசிந்து, கெட்டம் பெடடஅள்ளி, எரையிற்குப் பேகியாதனஅள்ளி கொறவி, அள்ளதகெரைகேதனஅள்ளி, ரெண்டாம்சாரங்கி, பெப்பஊர், சரஅள்ளி இந்தப்பதினாலு கிராமம் தாராபூர்வகமாய்த் தருமம் பண்ணிக்கொடுத்தான்.

இதுதர்மம் தொண்டனூர்க் கோபாலசுவாமிகோவிலிலேயிருந்த சிலாசாஸனபிரதி.

நரசிங்கராயன்ராச்சியம் ரக்ஷிக்கிறகாலத்திலே சக்கிராயண லோகாம்பிகைக்குப்பிறந்த பவியசூடாமணியென்கிறவன் நரசிங்கராயன் உத்தாரத்தின்படி தருமம்பண்ணின வயணம்.

குக்குடேசுவரதருமத்துக்கு அந்தப்பமென்கிறகிராமம் சமக்கிரமாய்த் தர்மம்பண்ணிக்கொடுத்தான். இதுதவிரத் தங்கள் வீட்டுத்தெய்வத்திற்குக் கொம்படபுரத்துத் திப்பையன் சுங்கத்திலே பாக்குப்பொதிக்குப்பணம்—வ. உப்புப்பொதிக்கு வள்ளம்—க. மஞ்சட்பொதிக்குச் சேர்—க. மிளகாய்ப்பொதிக்கு வள்ளம்—க. வெற்றிலைப்பொதிக்குப் பணம்—வ. இந்தப்படி வாங்கிக்கொண்டு கோவிற்றருமம் நடக்கும்படியாய்த் தருமம்பண்ணின சகைவருஷம் க0அக. விக்கிரமவருஷம் மாகசுத்த சதுர்த்தசி சுக்கிரவாரத்திலே உத்தராயணத்திலே இந்தத் தருமம்பண்ணிக்கொடுத்து ராசாவுக்கு வெகு பிரீதியாயிருந்தான்.

சகை க0அஉ.

நரசிங்கராயன் ராச்சியபரிபாலனம் பண்ணுகையில் அவனுக்குச் சிநேகிதனாயிருக்கிற பெட்டையனென்கிறவன் அப்பணை வாங்கிக்கொண்டு பெட்டேசுவரதேவனுக்குப் பூசைதருமம் நைமித்தியம் கன்னக்கேரையென்கிற கிராமத்தைப் பெட்டேசுவரபுரமென்று பேர் வைத்துத் தருமம்பண்ணிக்கொடுத்தான். சகைவருஷம் க0அஉ விஷுவருஷம் உத்தராயணம் மகரமாசத்திலே சோமவாரத்திலே தருமம் பண்ணிக்கொடுத்தான்.

சகை க0அச.

நரசிங்கராயன் தனக்கு மிகவும் பிரீதியாயிருக்கிற பவியசூடாமணியென்கிறவனுக்குத் தருமத்துக்குப் பூமிகொடுத்து அந்தப்பவியசூடாமணியென்கிறவன் இராசாவினுடைய உத்தாரப்படிக்குக் குக்குடேசுவரஸ்வாமிக்குப் பூஜாநைமித்தியம் எப்பாளைக்கிராமத்திலே சேர்ந்தமேடன் அள்ளியிலே தோட்டப்பயிர்செய்கிற பூமிகண்டகம்-ச. தருமம்பண்ணிக்கொடுத்த சகைவருஷம் க0அச. சுபானுவருஷம் சைத்திரசுத்தபஞ்சமியிலே தர்மம்பண்ணிக்கொடுத்தான்.

சகை க0அச.

அந்தவருஷத்திலே நரசிங்கராயன் அரெகேரையென்கிறகிராமம் அக்கிரஹாரம்பண்ணி ஸ்ரீ மல்லிநாத பிரதிஷ்டையும்பண்ணி அந்தச்



சுவாமிபூசை நைவேத்தியத்திற்கும் சீரணோத்தாரணத்திற்கும் படகரைநாடு விஷயத்திலே கெணங்கூறும் சர்வமானியமாய்த் தாராபூர்வகமாய்த் தர்மம்பண்ணிக்கொடுத்தான்.

சகை வருஷம் க0அச. சுபானுவருஷம் மாகமாசம் சுக்கிலபக்ஷம் ஏகாதசி சோமவாரம் தநிஷ்டாநக்ஷத்திரத்தில் தருமம்பண்ணிக்கொடுத்தான்.

சகை க0அரு.

நரசிங்கராயன் துரை சமுத்திரத்திலேயிருந்துகொண்டு ராச்சியம் ரக்ஷிக்கையில் அவன் மந்திரி மாதண்ண தெண்டநாயகன் மகன் விஷ்ணு தண்டநாயகன் தங்கள் ராசா நரசிங்கராயரண்டை உத்தாரம் வாங்கிக்கொண்டு பௌகுளம் கைலாசேசுவர அங்கரெங்கபூசாவிதானத்துக்குத் தருமம்பண்ணிக்கொடுத்தது. சகைவருஷம் க0அரு. தாருணவருஷம் புஷ்பபகுள பாட்டிமை புதவாரம் உத்தராயண சங்கராந்திபுண்ணிய காலத்திலே பௌகுளம் புஞ்சை பூமி காணி உஉ0. இந்த நானூற்றிருபது பூமியுடனே தருமதானம்பண்ணிக்கொடுத்தான்.

இந்தச்சாஸனம் பௌகுளம் கைலாசேசுவரர் கோவிலிலே கல்லிலே எழுதியிருந்தது.

சகை க0கூரு.

நரசிங்கராயன் மைசூர் ஒபளிக்கல்லயன் சிவாலயத்துக்குவிட்ட பூமிசாஸனம்.

மந்திரி கல்லயன் இராசா உத்தாரப்படிக்கு ஸ்ரீராமநாததேவாலயமும் சோமநாதசுவாமி சிவாலயமும் கட்டுவித்து அந்தக்கோவில் அங்கரங்க சீரணோத்தார பூஜை நைமித்தியம் பெட்டரெவாடிக்கிராமம் தருமதானம் பண்ணிவிட்டான். சகை வருஷம் க0கூரு நந்தனவருஷம் புஷ்யசுத்தபஞ்சமி ஆதித்தியவாரம் உத்தராயண சங்கிரணமத்தில் அந்தக்கிராமம் ஏரிகீழே முப்பதுகோளகம் விரைக்கிற பூமிவிட்டுத் தருமதானம் பண்ணினான்.

சகை க0கூச.

நரசிங்கராயன் தன்னுடையவீட்டிலே சாத்திரம் சொல்லுகிற கோவிந்தேசுவரன் விநாயகபட்டன் இவர்களிரண்டுபேருக்கும் பத்துக் குளகம் விரைக்கிற பூமிகொடுத்து அந்தப்பூமியை அவர்கள் நாகேசுவரதேவதைக்குத் தருமம்பண்ணிக்கொடுத்தது சகை வருஷம் க0கூச.

விஜயவருஷம் சைத்திரசுத்தநவமி பானுவாரம்புனர்வசுநக்ஷத்திரத்திலே தருமம்பண்ணிக்கொடுத்தார்கள்.

இது சோரவங்கலம் நாகேசுவரசுவாமி சாசனப்பிரதி. இன்னும் அநேக தருமங்கள்பண்ணி, கொங்கு, கர்நாடதேசம் ரக்ஷித்துக், கேரளம், பாண்டியதேசம், சோளதேசம், ஆந்திரதேசம், வராடம், இந்து, இது மட்டுக்கும் யுத்தம்பண்ணிக் கப்பம்வாங்கிக்கொண்டு இராஜாதிராஜன் என்று கீர்த்தியை அடைந்து வீர நாரசிம்மனென்று பிரசித்தமாய் ஜய வருஷத்திலே சித்திரைமாதம் ரங்கநாதருடைய பாதாரவிந்தத்தை அடைந்தான்.

அவன் ஆண்டவருஷம் ௨௰௭. அதின் பிறகு அவனுடைய ஸ்திரீ வலதேவதையினிடத்திலேபிறந்த வல்லாளராயனுக்குப் பட்டமாச்சுது.

௩௰௯. வல்லாளராயன் பட்டம்.

சகை வருஷம் ௧௦௯௫.

வல்லாளராயன் தலைக்காட்டிலே ஜயவருஷத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு சந்திரமவுலி என்கிற மந்திரியுடனே கொங்கு, நங்கவாடிமுதலான பாளையக்காரர்களுக்குச் சிம்மம்போலேயிருந்துகொண்டு அநேக யானை, குதிரை, காலாள்ப்படைகளுடனே கேரள தேசத்துக்குப்போய் அந்த இராசாவுடனே சண்டைபண்ணிக் கேரள தேசமெல்லாம் கொள்ளைபண்ணி அதற்குமேல் அவன்கையிலே வெகு திரவியம் வாங்கிக்கொண்டு பாண்டியதேசத்து.......................... ..............நாயகன்கையிலே கப்பம்வாங்கிக்கொண்டு அதற்குமேல் விஜயாபுர ........................................................... ...........இராஜ்யபரிபாலனம்பண்ணிக்கொண்டு கெவுடர் பாளையக்காரர்கள்கையிலே கப்பம்வாங்கிக்கொண்டு அங்கேயிருந்து சோளராஜ்யம் ரக்ஷித்துக் கொங்கணதேசத்துப்பாளையக்காரருடனே வெகுயுத்தம் பண்ணி அவ்விடம் போனவிடத்திலே தங்கள் ஜனங்களுக்கு வியாதி உபத்திரவங்கள் உண்டாகி அங்கேயிருந்து பட்டணத்திற்கு வந்துவிட்டான். அதன்பிறகு வல்லாளராயன் அநேகதருமங்கள்பண்ணி அநேக சாஸ்திரங்கள் விசாரித்துத் தருமசாஸ்திரப்படிக்கு இராஜ்யம் ரக்ஷித்துத் தங்கள்வம்சத்திலே உண்டாயிருக்கிற இராஜாக்களுக்கு அநேக பூமிகள்விட்டுப் பூமிதருமம் பண்ணினான்.

(தொடரும்.)

---

உ

# இந்துதேசசரித்திரகாலக்குறிப்புகள்.

## (Chronological Notes of Indian History.)

"செந்தமிழ்"த்தொகுதி-௧௯-ன் பகுதி-௯-ன் ௩௦௪-ம் பக்கத்தொடர்ச்சி.

1210-1247. (சகம் 1132—1167) செங்கண்ணன். யாதவமன்னன். ஸங்கீதரத்நாகரம் இயற்றியவர் இவர்காலத்தவர். இந்நூலைப்பற்றி மல்லிநாதர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

1216. 3-ம் ராஜராஜசோழன். ஷையார் சிலாசாஸனத்தில் சகம் 1154 (கி. பி. 1232)ஐ ஷை ஆட்சியின் 16-ம் ஆண்டாகக்கூறப்பட்டிருக்கிறது.

1220-1235. 2-ம் நரசிம்மன். 2-ம் வல்லாளன்புதல்வன். ஹயசாலவம்சத்தரசன். —சிலைலிபி.

1225. (?) பவணந்தி. நன்னூல்என்ற தமிழ்இலக்கணம் இயற்றியவர். சீயகங்கன் காலத்தவர்.

1228. சோழர் களிங்கதேசத்தை இழந்தார்கள். ஓராங்கல்லில் ஆண்ட 1-ம் ப்ரதாபருத்ரன் புதல்வன் கணபதிதேவன் காலத்தில் இப்படிநேர்ந்தது.

1232. திருவண்ணாமலைச்சாஸனம். திருபுவனசக்ரவர்த்தியாகிய 3-ம் ராஜராஜதேவரின் 16-ம் ஆண்டு. இதில் சைவாசாரியார் மெய்கண்டதேவரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. [3. செந்தமிழ்.

1232. சேந்தமங்கலம்சண்டை. (வட ஆர்க்காடுஜில்லாவில் உள்ளது). 3-ம் ராஜராஜனை (பல்லவ) சடவராஜனான பெருஞ்சிங்கன் சிறைகொண்டான். ஹயசாலராஜனான 2-ம் நரசிம்மன் சோழராஜனைமீட்டி, "சோழராஜ்யப்ரதிஷ்டாபாசாரியன்" என்றபட்டமும் பெற்றான்.

1235-1254. சோமேசுவரன். ஹயசாலவம்ச 9-ம் அரசன்.

1242. (விக்ரம 1298). நரஹரி (ஸரஸ்வதிதீர்த்தர்) ஜனனம். இவர் மல்லிநாதருடைய புதல்வர்.

1242. கோப்பெருஞ்சிங்கத்தேவர் சோழராஜனுனர். இவருடைய 18-ம் ஆண்டான 1260-ம் வருஷச்சிலேலிபியைப் பார்க்க. [ஸூவெல். I. 87].

1251-1271. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (I). நெல்லூர் முதல், கன்யாகுமரிவரையுள்ள தேசத்தை ஜயித்தான்.

1252. சிலேலிபி. ஹயசாலராஜன் சோமேசுவரன்.

1254-1291. (?) 3-ம் நரசிம்மன். ஹயசால 10-ம் அரசன். சோமேசுவரன் புதல்வன். வித்யாதரர், 'ஏகாவளி'யில் இவரைப் பற்றிச் சொல்லியிருக்கிறுர்.

1257-1295. ருத்ரம்மா. ஓராங்கல்ராஜன் கணபதிதேவனுடைய மனைவி (widow). 1292-ல் மார்கபோலோ என்பவர் இவரைப் பற்றிச்சொல்லியிருக்கிறுர்.

1268. (செப்டம்பர்?). வேதாந்ததேசிகர் (வேங்கடநாதர்) ஜனனம். [கு. ப.]

சுக்ல-ஹு,

பிறப்பிடம்—காஞ்சீபுரத்துக்கடுத்த தூப்புல் என்ற க்ராமம்.

தந்தை—அநந்தஸூரி.

தாயார்—ஆத்ரேய ராமானுஜரின் சகோதரியான தோதாரம்மாள்.

குரு—ராமானுஜதயாபாத்ரஸ்தாபகரும், தேசிகரின் மாமனுமான, ஆத்ரேயராமானுஜர்.

தேசிகர், கடலூர்ஜில்லா திருவேந்திபுரத்தில் சிலகாலம் வசித்தார். அநேக புண்யஸ்தலங்களில் யாத்திரைசெய்து வந்தார். விஜயநகரம் வித்யாரண்யரையும் பார்த்தார். மதப்பிரிவினை—ப்ரபத்தி முதலான சில முறைகளைப்பற்றி அபிப்ராயபேதங்கள் தேசிகர்காலத்தில் உண்டாயின. இதனுல் ராமானுஜமதத்தைச்சேர்ந்த வைஷ்ணவர்கள், தென்கலையென்றும், வடகலையென்றும் இருபிரிவாய்ப் பிரிந்தார்கள். தேசிகர் வடகலைமதத்தைத்தழுவினுர். பிள்ளைலோகாசாரியாரும், பெரிய ஆச்சான்பிள்ளையும் தென்கலை மதத்தலைவர் ஆனுர்கள். மணவாளமாமுனி பிள்ளை லோகாசாரியார் பரம்பரையில் இரண்டாம் அம்சத்தவர்.



தேசிகர் இயற்றியநூல்கள்.

1. அச்சுதசதகம் (ப்ராக்ருதம்).
2. ப்ரமதாபங்கம் (தமிழ்).
3. கோபாலவிம்சதி (ஸம்ஸ்).
4. வரதராஜபஞ்சசதம்.
5. ந்யாஸசதகம். ப்ரபத்திமுறையைப்பற்றிய சிறிய நூல்.
6. தயாசதகம். திருப்பதிவேங்கடாசலபதியைப்பற்றிய ஸ்தோத்ரம்.
7. தத்வடீகா. ஸ்ரீபாஷ்யத்துக்குக்குறிப்புரை.
8. தாத்பர்ய சந்த்ரிகை. (கீதாபாஷ்யம்).
9. சதூஷணி. அத்வைதமதத்தைக் கண்டனம் செய்து 100-ஆட்சேபங்கள்.
10. தத்வமுக்தாகலபம். 500-சுலோகங்களடங்கியது. விசிஷ்டாத்வைதச்சிறப்பைப்பற்றிக் கூறுவது.
11. நயசித்தாஞ்சனம். வசனநடை. விசிஷ்டாத்வைதத்தைப்பற்றிய நூல்.
12. ஸேசுவரமீமாம்ஸம். ஜைமினி ஸூத்ர உரை.
13. அதிகரணஸாராவளி. வசனநடை. வேதாந்தஸூத்ர விளக்கம்.
14. ரஹஸ்யத்ரயஸாரம். 'ப்ரபத்தி'என்ற முறையைப் பற்றிக்கூறும் தமிழ்நூல்.
15. யாதவாப்யுதயம். காவ்யம். 21-ஸர்க்கமுள்ளது.
16. ஸங்கல்பசூரியோதயம். விசிஷ்டாத்வைதபரமான வேதாந்த நாடகம். 10-அங்கமுள்ளது.
17. ஹம்ஸஸந்தேசம்.
18. பாதுகாஸஹஸ்ரம்.
19. ஸூபாஷிதநீவி.

தேசிகர்புத்ரர்—வரதாசாரியார், 1317-ல் பிறந்தார்.

தேசிகர் மரணம்—1369 (சௌமிய-ஹு கார்த்திகைமீ).

1271-1309. மாதவராஜன் } தேவகிரியில் ஆண்ட யாதவ அரசர்
ராமசந்த்ரராஜன் } கள். இவர் காலத்தவர்:—

1. ஹேமாத்ரி—மந்திரி, கவி.
2. போபதேவர்—ஹேமாத்ரியின் சிஷ்யர். "முக்த போதம்" என்ற இலக்கண நூல் இயற்றியவர். போபதேவர் நூல்களிலிருந்து மல்லிநாதர் ஆதாரவுகள் கூறுகிறார்.

1281. (சகம் 1203) சிலேலிபி.

நரஹரி. அக்காலத்துக் களிங்கதேச இளவரசருக்குப்ரதிநிதியாய் ஆண்டவர். சிகாகோல் என்ற ஊரிலுள்ளகூறம் என்ற கோவிலுக்கும், சிம்மாசலம் கோவிலுக்கும், மாதவருக்குப்பின் இரண்டாவது அத்யக்ஷராய்வந்தார். 1264 (ச-1186) முதல் 1293 (1215-சகம்) வரையுள்ள இவர் சாஸனங்கள் அகப்பட்டிருக்கின்றன.

1286. மதுராந்தகசோழன் அரசனானான். [ஸுவெல் I. 181].
இவர் மரணம்.—1310-ல் [24-ம் ஆண்டு].

1288. 2-ம் ப்ரதாபருத்ரன்.

1290. த்யானதேவரால், மஹாராஷ்ட்ரபாஷையில் பகவத்கீதை மொழிபெயர்க்கப்பட்டது.

1291-1342. 3-ம் வல்லாளன். 3-ம் நரசிம்மன்குமாரன். ஹாயசால வம்ச 11-ம் அரசன்.

1292. மார்க்கபோலர் என்ற ஐரோப்பியர் கேரளதேசத்தில் யாத்திரைசெய்தார். அக்காலத்து நிலைமையைப்பற்றி இவர் எழுதியிருக்கிறார்.

1293. சுந்தரபாண்டியரின் மரணம். இவர் பாண்டியவம்சக் கடைசி அரசர்.

1294. ராமசந்திரன், அல்லாஉதீன்கில்ஜிஎன்ற மஹமதியசேனைத் தலைவரால் தோல்வியடைந்தான்.
இவர், யாதவவம்சக்கடைசி ஸ்வாதீன அரசர்.

1294. (விக்ரம 1350). ஜயந்தர். மம்மடர் காவ்யப்ரகாசத்துக்கு, ஜயந்தி என்ற உரை எழுதினார். —[ஸுபாஷிதாவளி].

1295-1323. 2-ம் ப்ரதாபருத்ரன். காகதீயவம்சத்தரசன். ஓரங்கல் ருத்ரம்மா என்பவரின் புதல்வர்.



யாதவ ராஜனான ராமசந்த்ரன் காலத்தில், டில்லி ராஜ்யத்தின்மீது படையெடுத்துச்சென்றார்.
ப்ரதாபருத்ரீயம் என்ற அலங்காரசாஸ்திரம் இவர்காலத்தில் இயற்றப்பட்டது.

1309. ஓரங்கல்லில் ஆண்ட காகதீய அரசனான ப்ரதாபருத்ரன், மாலிக்காபர் என்ற மஹமதிய சேனைத்தலைவனால் தோல்வியடைந்து, தில்லி மஹமதிய சக்ரவர்த்தி (சுல்தான்)க்குக் கப்பம்கட்டிவரவும் நேர்ந்தது.

1310. தமிழ்த்தேசத்தில் மாலிக்காபர் படையெடுத்துவந்தார்.

1310. வீரவல்லாளதேவன், ஹாயசாலவம்சத்தரசனாயிருந்தான்.

1313. உமாபதிசிவாசாரியார், 'சங்கற்பநிராகரணம்' எழுதினார். இவர் மெய்கண்டதேவர் சிஷ்யபரம்பரையில் 4-வது.

"எழுஞ்சிருநூறெடுத்தவாயிரம் (1235-சகம்)
வாழுநற்சகன்மறுவாகிற்ப
பொற்பொதுமலிந்தவற்புதனாகி
ஆறும்விழவிற்பொற்றோலயத்து."
—சங்கற்பநிராகரணம், [செந்தமிழ் III].

பரிமேலழகரைப்பற்றி உமாபதிசிவாசாரியார் கூறியிருக்கிறார்.

"வள்ளுவர்சீரன்பர்மொழிவாசகந்தொல்காப்பியமே
தெள்ளுபரிமேலழகர்செய்தஉரை"—[சங்கற்ப நிராகரணம்].

1317-1414. வரதாசாரியார். வேதாந்ததேசிகரின் குமாரர்.

1318. தேவகிரி யாதவவம்சக் கடைசியரசனான ஹரிபாலன் தில்லிச் சக்ரவர்த்தி முபாரக் என்பவரால் தோல்வியடைந்து சிரச்சேதம் செய்யப்பட்டார். இவருடன் இந்த யாதவவம்சமும் அற்றுப்போயிற்று.

1323. ஓரங்கல் மன்னனான 2-ம் ப்ரதாபருத்ரனை மஹமதியர் தோற்கடித்துத் தில்லிக்குச்சிறைகொண்டுபோனார்கள். இத்துடன் ஓரங்கல், மஹமதியர் ஆட்சிக்குச்சென்றுவிட்டது.

1330. சிங்கபூபாலர் (சிங்கமநாயகர்). 'ரஸார்ணவ ஸுதாகரம்' என்ற நாடகசாஸ்த்ரம் எழுதினார்.
—[சேஷகிரிசாஸ்த்ரியார்.]

1336\. விஜயநகரஸ்தாபனம், வித்யாரண்யரால்செய்யப்பட்டது. [சகம் 1258,=தாது-ஹூ வைகாசிமீ, சுக்லபக்ஷஸப்தமி, புதன்கிழமை].

நாமேஷ்வர்க்கே. நேமிதஶகே ஶாலிவாஹஸ்யயாதா
யாதுர்யஷ்டே ஸம்மணஸஹிதே மாஸவைஶாவிநாம்நி ॥
ஶுக்லேபக்ஷே ஸப்தம்யுதே வௌம்யவாரே ஸுலக்நே
ஸப்தம்யாம் ஸ்ரீவிஜயநகரே நிர்மமே........॥

—[சிலாசாஸனம்].

1336\. (சகம்-1258). வித்யாரண்யர், விஜயநகரத்தரசரிடமிருந்து சிருங்கேரிமடத்தைத் தானசாஸனம் பெற்றார்.

வித்யாரண்யர்காலத்தவர்கள்:—

வேதாந்ததேசிகர்.
அக்ஷோப்யதீர்த்தர். மாத்வாசாரியாரின் சிஷ்யர்.
பத்மநாபர், மாதவருக்குப்பின் 7-ம் ஆண்டில் வந்தவர்.
நரஹரி. ,, 9-ம்.
மாதவர். ,, 17
அக்ஷோப்யர். ,, 17

விஜயநகர ராஜவம்சாவளி.




—[கம்பராயசரித்திரத்துக்கு ஸ்ரீ கோபிநாதராவ் எழுதிய முகவுரை].

1341\. புதுவைப்பு சகாப்தம் ஆரம்பம். கொச்சிக்கு அடுத்த வைப்பன் என்றதீவில் குடியேறின முதல்வருஷம்.

1343\. 4-ம் வல்லாளன். 3-ம் வல்லாளன் மகன் ஹொய்சாலவம்ச 12-ம் அரசன். இவன்தான் இவ்வம்சக்கடைசியரசன்.



1346\. [சகம்-1268]. 1-ம் ஹரிஹரமஹாராஜரின் கடைசித் தானசாஸனம்.

ஹரிஹரர் தம்பி—1-ம் புக்கர்.
புக்கர் குமாரர்—கம்பனர்.
கம்பனர் சேனாபதி—கோபன்னர்.

1347\. பாமினீ ராஜ்யஸ்தாபனம். இதுவரை இப்ரதேசத்து ராஜப்ரதிநிதியாயிருந்த ஹஸன் ஷாங்கோ பாமினீஎன்றவர், கங்கா என்ற ஓர் ப்ராம்மணர் உதவியால் இந்த ராஜ்யத்தை, கல்பர்கம் (ஹஸனாபாத்) என்ற இடத்தில் ஸ்தாபித்தார். சுமார் 1480-ம் வருஷத்துக்குப்பிறகு இவ்விராஜ்யம் 5-சிறுராஜ்யங்களாகப் பிரிந்தது.

| ராஜ்யங்கள். | | ஸ்தாபனகாலம் |
|---|---|---|
| 1. | பீரார் | 1484 |
| 2. | பீஜபூர் | 1489 |
| 3. | அஹமதுநகர் | 1490 |
| 4. | பீடார் (அஹமதாபாத்) | 1492 |
| 5. | கோல்கொண்டா | 1512 |

இவ் வைந்து ராஜ்யங்களும் ஒன்றுக்கொன்று சண்டைபோட்டுக்கொண்டேயிருந்தன. கடைசியாய் ஒன்று சேர்ந்து 1565-ல் தலைக்கோட்டைச்சண்டையில் விஜயநகரராஜனையும்தோற்கடித்து விஜயநகரையும்பாழாக்கின.

1347\. 2-ம் ராஜராஜசேகரர். க்ஷமணகவி. 'ப்ரபந்தகோசம்' எழுதியவர். —[761-ஐயும் பார்க்க].

1356\. (சகம்-1278) தானசாஸனம். விஜயநகரத்தரசனான சங்கமராஜனுக்காக ஸாயனார் மந்திரியும், ஸாயனமாதவருடைய சகோதரருமான போகநாதரால் அளிக்கப்பட்டது.

"ஸ்ரீமதிஜனனீயஸ்ய ஸுகீர்த்திர்மாயணஃபிதா ।
ஸாயணோஸோமநாதஶ்ச, மநோபுத்தீ ஸஹோதரௌ ॥
பௌதாயநம் யஸ்யஸூத்ரம், ஶாகாயஸ்யசயாஜுஷீ ।
பாரத்வாஜகுலம் யஸ்ய, ஸர்வக்ஞஸஹிமாதவஃ ॥

—[பாராசரமாதவீயம்].

1361. [சகம்-1283] சம்பராயரைக்கம்பனர் தோற்கடித்து, காஞ்சீபுரத்தையும் தன்வசப்படுத்திக்கொண்டார். கம்பராயர் பட்டமஹிஷியான கங்காதேவி, அவர் பராக்கிரமங்களைப்பற்றிக் கம்பராயசரிதம்,மதுராவிஜயம்என்றஸம்ஸ்க்ருதகாவியங்களில் வர்ணித்திருக்கிறாள்.

1368 சிலாலிபி. புக்கராயர், ஜைனருக்கும் வைஷ்ணவருக்கும் நேசம்பண்ணிவைத்தார்.

1369 வேதாந்ததேசிகர் மரணம். (சௌமியஹு கார்த்திகைமீ)

1370–1443 மணவாளமாமுனிகள். 1770-ல் ஆழ்வார்திருநகரியில் ஜனனம்.

இவர்குரு—ஸ்ரீ சைலேசர் (திருவாய்மொழிப்பிள்ளை). தென்கலையார் அநுஷ்டித்துவரும் 'ஸ்ரீசைலேசபாத்ரம்' என்பதை ஸ்ரீசைலேசரே ஸ்தாபித்தார்.

இவர்குமாரர்—ராமானுஜர்.

இவர் பௌத்திரன்—ஜீயர் நாயனார்.

ஜீயர் நாயனாருக்குமுன் ராமானுஜர் மரணமடைந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்:—

1. யதிராஜவிம்சதி. ஸம்ஸ்கிருதம். ராமானுஜரைப் புகழ்ந்து 20 சுலோகங்கள் உள்ளது.
2. உபதேச ரத்னமாலை, } தமிழ்.
3. ஆர்த்திப்ரபந்தம். } தமிழ்.

குறிப்பு:—2வது நூல்—ஆழ்வார்களையும், அவர்கள் நூல்களையும்பற்றிக் கூறுவது.

3-வது—தனக்கு முக்திவரும்படியாய் ராமானுஜரைப் பற்றிய ஸ்தோத்திரம்.

1370-1440. நாமதேவஸ்வாமிகள். மஹாராஷ்ட்ர பாகவதர்.

1371 கம்பராயர் மஹமதியரைத் தோற்கடித்து, அவர்களைத் தக்ஷிணத்தினின்றும் துரத்தினார்.

1371 ஸ்ரீரெங்கம் கோவிலில், ரெங்கநாதர் விக்ரஹம் மறுபடி கொண்டுவந்துசேர்த்து, ப்ரதிஷ்டையும் செய்யப்பட்டது. (மஹமதியர் உபத்திரவத்தால் ஷை விக்ரஹம் திருப்பதியில் ஒளித்துவைத்திருந்ததாய்ச் சொல்லுவதுண்டு.)



வந்யாப்ரியே (1293) ஶகாப்தீ = பரீதாபிஹு வைகாசிமீ 17உ.

— { Epigraphica Indica VI. 330.
{ கோயிலொழுகு.

குறிப்பு:—ஆனால் பரீதாபிஹு=1372.

1374 (சகம் 1296=ஆனந்தஹு கார்த்திகைமீ சுக்லபக்ஷ ப்ரதமைக்குப்பிறகு) கம்பனர் மரணம்.

1376 [சகம் 1298 = நளஹு பால்குனமீ கிருஷ்ணபக்ஷப்ரதமை ஞாயிற்றுக்கிழமை.]

கம்பனர் தகப்பன் புக்கர் மரணம். 2-ம் ஹரிஹரர் விஜயநகர அரசனானார்.

1376 நரஹரி(ஸரஸ்வதிதீர்த்தர்)ஜனனம். இவர் இயற்றிய நூல்-பாலசித்தானுரஞ்ஜனம்—காவ்யப்ரகாசம் என்ற அலங்கார சாஸ்திரத்தின் உரை. இந்நூலில் தனது பிறப்பைப் பற்றி நரஹரி கூறியிருக்கிறார். சந்யாஸ ஆச்சிரமம் நரஹரி

1385 பெற்றார். (விக்ரம 1441) தினகரர், ரகுவம்ச காவியத்துக்கு, ஸுபோதினீ என்ற வியாக்யானம் எழுதினார். வல்லபர் எழுதிய 'சிசுஹிதைஷிணி' என்ற வியாக்கியானத்தின் சுருக்கந்தான் ஸுபோதினி என்று அந்நூலிலேயே தினகரர் அறிவிக்கிறார்.

1386 [சகம் 1308=க்ஷயஹு, கும்பமீ, 202, பூர்வபக்ஷ த்விதியை, வியாழன், ரேவதி] சிலாலிபி. காளையார்கோவில் வடக்கூரிலுள்ள கைலாசநாதர்கோவில் அர்த்தமண்டபத்திலுள்ள ஓர் கற்றூணிலிருக்கும் லிபி. விஜயநகரத்தரசனான விருபமர் (விருபாக்ஷன்) காலத்தைச்சேர்ந்தது. இதனால் திருப்பெருந்துறை என்பது ஆளுடையார்கோவில் தான் என்று நிச்சயமாகின்றது.

1387 ஸாயன ஆசாரியார் மரணம்.

ஸாயனர்—ரிக்வேதம் முதலான பூர்வ ஸம்ஸ்க்ருதநூல்களுக்கு உரை எழுதிய ப்ரசித்தமான வியாக்யாதா. 2-ம் ஹரிஹரராஜன் மந்திரியான மாதவாசாரியருடைய சகோதரர் ஸாயனர்.

—[Prof. Antrecht, Sewell's Forgotten Empire. 48-ம் பக்கம்.]

2-ம் சங்கமர், 2-ம் ஹரிஹரர்—இவர்களுடைய மந்திரியாய் இருந்தார்.

1391 (சகம்—1313) மாதவர் தானசாஸனம்.

மாதவர். விஜயநகரத்தரசரான புக்கர், ஹரிஹரர்—இவர்களுடைய மந்திரி. பிறகு ஸந்யாஸமும் வித்யாரண்யர் என்ற பட்டமும்பெற்று, சிருங்கேரிமடத்தில் சங்கராசார்ய ஸ்தானமும் வஹித்தார்.

1396–1408 மஹாராஷ்ட்ரதேசத்தில் 12-வருஷ [துர்க்காதேவி]ப் பஞ்சம். —[Duffs' History.]

1398 தைமூர் (தாமர்லேன்) என்பவனால் தில்லிநகர் பாழாக்கப்பட்டது. தில்லி நகரத்தார் கத்திக்கிரையானார்கள்.

1399 (15—10—1399 சிலேசிபி)

2-ம் ஹரிஹரர் மரணம்.

2-ம் புக்கர் விஜயநகரத்தரசனானார்.

1402. அபிராம பராக்ரமபாண்டியன்.

ஷை வம்சாவளி.

அபிராமன் (1402). — ஆஹவராமன்

- அபிராமன் (1402):
  - 9. பராக்ரம குலசேகரன். (1543-1550)
    - குணராமன்
    - 13. வரகுண =(அபிஷேக ராமன்) =(அபிராமன்) (1518)
  - 10. நெல்வேலிப் பெருமாள். =[சாலிவாடிபதி]. (1552-1564)
    - 11. அதிவீர ராமன். 1564.
    - 12. ஸ்ரீவல்லபன்.
- ஆஹவராமன்:
  - 8. ஸ்ரீவல்லபன் [குலசேகரன்] (1534-1543)



[குறிப்பு:—இந்த வம்சாவளியும் காலக்ரமமும் இன்னும் தக்க ஆதாரங்களுடன் நிர்ணயிக்கத்தக்கது. 1422-ஐயும் பார்க்கவும்].

1406 நவம்பர்—5 [விஜய௵]

2-ம் புக்கருக்குப்பிறகு ஷையார் சகோதரர் 1-ம் தேவராயர் பட்டத்துக்கு வந்தார்.

[ஹஸன் சிலேசிபி]

1413 1-ம் தேவராயர் மரணம்.

வீரவிஜயர் பட்டத்துக்கு வந்தார்.

1419 2-ம் தேவராயர். வீரவிஜயர் குமாரன்.

1422 சகம் 1345 அரிகேசரி பராக்ரம பாண்டியன் பட்டத்துக்கு வந்தான்.

—[T. A. S. I.]

பாண்டிய வம்சாவளி.

- அபிராமபராக்ரமன்
  - அரிகேசரி பராக்ரமன். (1422—1466)
  - குலசேகரன் (1429–1463)
    - பராக்ரமன் 1463—1506
- ஆஹவராமன்.
  - ஸ்ரீவல்லபன் =(குலசேகரன்) (1534— )

[1402-ஐயும் பார்க்கவும். சந்தேகப்பட்டது].

1423. தக்ஷிணத்தில் கொடும்பஞ்சம். —[Ferishta].

1429. [சகம்-1351]. குலசேகரபாண்டியன் பட்டத்துக்குவந்தான். 1463-வரை ஆண்டான்.

1431. [சகம் 1353=கலி-4532] ராயமகுடர். அமரகோசத்துக்கு உரை எழுதினர். அதில் அவர் சொல்லுவதாவது:—

"இதானீம் சகாப்தா: 1353
த்வாத்ரிம்சத் அயிகபஞ்ச
[சத ? ] வர்ஷோத்தா சதுஸ்ஸஹஸ்ராணி கலௌ
ஸங்க்ஷயாம் அதீதானி."

—[Ray on Amara. I. I. 3. 22].

ராயமகுடர் மேதினியை ஆதாரவாய்ச்சொல்லுகிறார்.
மேதினி மாதவரைச்சொல்லுகிறார்.
மாதவர் புக்கர், ஹரிஹரர் என்ற விஜயநகர அரசரின் முக்ய மந்திரி.

மாதவர் தானசாஸனம் 1391-கி. பி. சகம்-1313.

1440. கபீர்தாஸ் ஜனனம்.

இவருடைய குரு—ராமாநந்தர்.

1446. ஜுன் 24=க்ஷய-(ஆ), வைகாசிமீ, கிருஷ்ணசதுர்த்தசி, செவ்வாய்க்கிழமை ப்ரதாபதேவராயர் மரணம்.

—[ஶ்ரவண பெலகுளா சிலைலிபி].

1449. ஆகஸ்ட் 2.=சகம்-1371, சிம்மமீ சுக்லத்ரயோதசி, சனிக்கிழமை, உத்திராடம்,—வீரப்ரதாப நரேந்திர இம்மடி தேவராயர்கொடுத்த தானசாஸனம்.

—[கஞ்சிச்சிலைலிபி].

[அருணகிரிநாதர் இவரைப்பற்றித் திருப்புகழில் பாடியிருக்கிறார்].

இவர்காலத்தவர்—

1. வில்லிபுத்தூரார்.
2. இரட்டையர்.
3. காளமேகம். [13-செந்தமிழ் 278].

1450. ரத்னநந்தி, பத்ரபாகுசரித்ரம் எழுதினார்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்,
பி. ஏ., பி. எல்.

---

ஸ்ரீ:

# இந்திரவிழா.

நம் பாதகண்டம் முற்காலத்தில் நாகரிகங்களாற் சிறந்துவிளங்கிற்று என்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தகுந்த விஷயமாம். அப்பரதகண்டத்தின் ஒரு பகுதியாகிய நம் தமிழ்நாடு நாகரிகத்திற்கே பிறப்பிடமாயிருந்ததுஎன்று கூறுவது தக்கதேயாம். தமிழ்நாடு, அரசியல் கல்வி போர்த்தொழில் சிற்பம் வாணிபம் கைத்தொழில் முதலியவைகளில் ஒருகாலத்து இணையற்றதாகவிளங்கிற்று. அதாவது இற்றைக்கு 2000-வருஷங்களுக்குமுன் அத்தகைய மகோன்னதநிலையிலிருந்தது என்பது சரிதவாசிரியர் பெரும்பாலார்கொள்கை. அதற்குப்பின்னர்த் தமிழ்நாடு தன் நாகரிகத்திற் சிறுகத்தொடங்கி வாசனையால்மாத்திரம் நாகரிகமுடையது என்னும்படியிருந்துவருகின்றது.

மேலேகூறிய அந் நாகரிகச்சின்னங்கள் பல இறந்தொழிந்தனவாயினும், அவை தமிழ்நாட்டில் இத்தன்மைவாய்ந்திருந்தன என்பதை இப்பொழுது நம் பண்டைத்தமிழ்நூல்கள் நமக்குத்தெரிவிக்கும் பெருஞ்சாதனமாயுள்ளன. அவற்றிலுள்ள ஒவ்வொரு விஷயங்களையும் நன்குஆராய்ந்து புலப்படுத்தல் தமிழ்மக்களது கடமையாம். அங்ஙனம் பண்டைநூல்களிற்கூறப்பட்ட விஷயங்கள் பலவற்றுள்ளும் இப்பொழுது நாம் எடுத்துக்கொண்ட இந்திரவிழா என்பதும் ஒன்றாம்.

அவ் விந்திரவிழா என்பது ஒருகாலத்தில் இப்பரதகண்டம் முழுதும் செய்யப்பட்டுவந்த ஒரு மஹோத்ஸவமாம். அவ்விழா தேசத்தின் க்ஷேமத்தின்பொருட்டு (மழைமுதலியன சிறத்தல்வேண்டி)த் தேசத்துக்குடிகளாலும் அரசர்களாலும் இயற்றப்பட்டுவந்ததாம். இந்திரவிழாஎன்றால் இந்திரனைக்குறித்துச்செய்யப்படும் மஹோத்ஸவம் என்பது பொருளாம். அவ் விழாவினுக்கு அதிதேவதை இந்திரனேயாம். பலவிதமான சிறப்புக்களும் இந்திரனை ஆவாகனம்பண்ணியிருக்கும்பொருளுக்குச்செய்யப்படும். அவ்விழா இந்திரகோடணை, இந்திரத்வஜம், புருஹூதத்வஜம் முதலிய பல பெயர்களைப்பெறும். முற்காலத்தில் நாவலந்தீவிலுள்ளார்க்கு அசுரரால்வருந்தீங்கைப் பரிகரித்தற்பொருட்டு, சம்புத்தீவக்காவற்றெய்வம் (சம்பாவதி) அவ் விழாவினை

இந்திரன்பொருட்டுச்செய்தமையால் அது தீவகச்சாந்திஎன்றும் பெயர் பெறும். அவ் விழா தமிழ்நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் செய்யப் பட்டுவந்ததாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய தமிழ்நூல்கள் கூறுநிற்கும். அதுபோலவே வடநாட்டிற் பெரும்பாலான இடங்களிற் செய்யப்பட்டுவந்தனவாக வடமொழிநூல்களும் கூறும். அவ் விழா வினைத் தென்னாட்டில் முதன்முதல் அகத்தியமுனிவர் ஏவலால் தூங் கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் சோழன் தொடங் கிச்செய்தனன். அகத்தியமுனிவர் அவ் வரசனிடம்சென்று நீ நமது நாடு செழித்தற்பொருட்டு இந்திரவிழாவினைச்செய்தல்வேண்டும் எனச் சோழன் முனிவர்கூறியவாறே செய்யக்கருதி அவ் விழாவிற்கு இந்திர னையே நேரில் அழைத்துவரவேண்டும் என்றுகொண்டு இந்திரனிடம் சென்று அவனைவணங்கி "இந்திரனே! நான் பூமியில் காவிரிப்பூம் பட்டினத்தில் பெரியோர்களின் கருத்துப்படி இந்திரவிழாச்செய்வேன். அக்காலத்து அவ் வுத்ஸவத்திற்கு நீயே நேரில்வந்து உன்பொருட்டுச் செய்யப்படும் வழிபாடுகளை ஏற்றுக்கொண்டு அவ் விழாவினைச்சிறப்பித் தருள்க"என்று வேண்டினன். இந்திரன் அவ் வரசன் கூறியதற்கு இணங்கி அவ்வண்ணமே விழாவிற்குவந்தனன். அதுமுதல் அவ்விழா சோழவரசர்களாற் செய்யப்பட்டுவந்தது.

இவ் விழா தமிழ்நூல்களாகிய மணிமேகலையிலும் சிலப்பதிகாரத் திலும் மிகச் சிறப்பாகக்கூறப்பட்டுள்ளது. அவற்றின் கருத்தை ஈண்டுத்தருகின்றேன். அதனால் அவ் விழாவின் வரலாற்றின் பெரும் பாகம் அறியவரும் என்று கருதுகின்றேன். மணிமேகலையில், "அவ் விழாக் கொடியேறுவதன்முன் பல சமயவாதிகளும், சோதிடம்வல் லோர் முதலியவர்களும், மரக்கலம்தரும் செல்வப்பொருட்டால் வந்த பரதேசவாசிகளும், அமைச்சர் புரோகிதர் சேனாபதியர் தூதுவர் சார ணர்முதலியவர்களும், கரணத்தியலவர் கருமவிதிகள் கனகச்சுற்றம் கடைகாப்பாளர் நகரமாந்தர் படைத்தலைவர் யானைவீரர் இவுளிமறவர் முதலியவர்களும், ஒன்றாகக்கூடி நாம் இந்திரவிழாவை மறப்பின் பட் டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் என்னும் இரண்டிற்குமிடையேயுள்ள நாளங்காடியிடத்துப்பூதம் மிக்க இடும்பையைச்செய்திடும்; தவம் மறைந்தொழுகும் தன்மையிலாளர், அவமறைந்தொழுகும் அலவலைப் பெண்டிர், அறைபோகமைச்சர், பிறர்மனைநயப்போர், பொய்க்கரியாளர்,



புறங்கூற்றாளர் ஆகிய இவர்களைப் புடைத்துண்ணும் சதுக்கப்பூதம் நகரத்திற் பொருந்தாதாயிடும். அவ் விழாவினையியற்றின் அரசனுக்கு மிகப்பெரியபூமி கைகூடும்; ஆதலின் அவ்விழாவினைத்தொடங்குக என்று கூறவே; முரசுகடிப்பிடும் முதுக்குடிப்பிறந்தோன் ஒருவன் அந் நகரத்து வச்சிரக்கோட்டத்தின்கண் வைக்கப்பட்டுள்ள மணமுரசை யானையின்பிடரியில்ஏற்றி, முதலில் திருவிழைமூதூர்வாழ்க, வானமும் மாரிபொழிக, மன்னவன் கோனிலைதிரியாக்கோலோனாகுக என்று வாழ்த்தி நகரமாந்தரை முன்னிலைப்படுத்தித் தீவகச்சாந்தியாகிய அவ் விழாநடக்கும்காலத்தில் இந்திரனோடும்கூட அவ்விடத்துள்ள தேவர் களும் இந்த நகரத்தைநினைந்து பொன்னகர்நீங்கி இங்கேவருவார்கள் என்பது பெரியோர்கள் துணிபொருளாதலின், அவ் விழாநடக்கும் இருபத்தெட்டு நாட்களிலும் குற்றமற்ற சபைகளிலும் தோரணங்கட் டப்பட்ட வீதிகளிலும் பூரணகும்பமும் பொற்பாலிகைகளும் பாவை விளக்கும் ஆகிய இவற்றைப்பரப்புமின்; காயாகிய குலையையுடைய கமுகமரத்தையும், வாழைமரத்தையும், பூவையுடைய வல்லிக்கொடி யையும், வஞ்சிக்கொடியையும், கரும்பையும் நடுமின்; திண்ணைகளில் வரிசையாயுள்ள தூண்களில் முத்துமாலைகளை வரிசையாகத்தொங்க விடுங்கள்; சிறப்புமிகுந்த மூதூர் வீதிகளிலும், மன்றங்களிலும் பழைய மணலை எடுத்துவிட்டுப் புதுமணலைப்பரப்புமின்; பலவகைப்பட்ட கொடி களையெல்லாம் மாடத்திலும் வாயிலிலும் பறக்கும்படிகட்டுங்கள்; பரம சிவன் முதலாகச் சதுக்கப்பூதம் வரையிலுள்ளதெய்வங்களின் கோயில் களில் அந்தணர்கள் அவ்வத்தெய்வங்களுக்குரிய சிறப்புக்களைச் செய் யட்டும்; கீழே மணற்பரப்பப்பட்டுப் பந்தர்போடப்பட்ட இடங்களிலும் பொதியில்களிலும் புண்ணியநல்லுரையறிவீர் பொருந்துமின்; வித்தியா மண்டபத்தின்கண் சமயசாத்திரங்களையறிந்தவர்கள் தம் மதக்கொள் கையைப்பற்றிப் பிரசங்கம் செய்யட்டும்; பகைவர்களோடாயினும் பகைமுதலியவற்றைச்செய்யாதீர்கள். என்று விழாவினை நகரமருங்கு அறைவான்" என்று மிகவும் தெளிவாகச்சாத்தனார்என்னும் புலவர் கூறியிருக்கிறார். அதுபோலவே சிலப்பதிகாரத்தில் இன்னும் சிறிது விளக்கமாக இளங்கோவடிகள் கூறியிருக்கின்றனர். அது:—

"மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என இரண்டுகூறுபட்டவூருக்கு நடுப்பட்ட பொதுநிலமாகிய நாளங்காடித்தெருவின்கண் வெற்றிபொ

ருந்தியவேலையுடைய முசுகுந்தன்என்னும் மன்னனுக்குவரும் இடையூற்றை ஒழிப்பாய்எனத் தேவர்கோன் ஏவுதலானே அத்தேவருலகினின்றும்போந்து அந் நாண்முதலாகப் பலிகொண்டுபோதும் பூதத்துவாயிற் பலிபீடிகையிடத்துச் சித்திரைமாதம் சித்திரைநாளோடு நிறைமதிசேர்ந்தநாளிலே மறக்குடிப்பெண்டிர்கள் புழுக்கல் முதலியவற்றையுகுத்து எம் மன்னனுடைய நிலமுழுதும் பசிமுதலியனநீங்கி வசிமுதலியனசுரக்க என வாழ்த்தித் துணங்கையாடுவர்: குரவையாடுவர்: அணங்கெழுந்து ஆடுவர். வீரர்கள் அப் பலிபீடிகையிடத்துச்சென்று தம்மைத்தாமே பலியிடுவாராய்த் தமதுசிரத்தையரிந்து பூதத்துக்கு எதிரில்வைத்துக் குறையுடல்களாற் கூத்தாடுவார்கள். வெள்ளிடைமன்றம், இலஞ்சிமன்றம், நெடுங்கல்நின்றமன்றம், பூதசதுக்கம், பாவைமன்றம் ஆகிய இவ்விடங்களிலும் பலிக்கடன்செலுத்தியபிறகு வச்சிரக்கோட்டத்திலிருக்கும் முரசை எடுத்து யானையினது பிடரியில் ஏற்றி வெண்ணிறம்பொருந்திய ஐராவதம்நிற்கும் கோயிலிலேசென்று விழவின்முதலும் முடிவும்சாற்றித் தருக்கோட்டத்தின்முன்னர் அட்டமங்கலத்தோடும் ஐராவதம் எழுதிய கொடியைத் துறக்கத்தேசெல்லஎடுத்து ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் அரசகுமாரரும் பரதகுமாரரும் ஒன்றுசேர்ந்து மிகப்பெரிய ஞாலத்தின்கண்ணே தமதான அரசியல் மேம்படுவான்வேண்டிக் காவிரியாற்றுக்குச்சென்று அவ்விடத்திலுள்ள சங்கமத்துறையினின்றும் நீரைப்பொற்குடத்துஎடுத்து ஆயிரத்தெட்டு அரசர்கள்தலையிற் சுமந்துகொண்டுவரும்படிசெய்து எம் மன்னன் கொற்றங்கொள்வானாக என்று வாழ்த்தி அந்நீரால் இந்திரனை மேலேகூறிய அரசகுமாரர்முதலியவர்கள் மஞ்சனமாட்டுவார்கள். அக்காலை பரமசிவன்கோயில், முருகவேள்கோயில், பலதேவன்சோயில், நெடுமால்கோயில், வாசவன்கோயில் ஆகிய இவ் விடங்களில் பிரமனால் அருளப்பட்ட வேதத்திற்சொன்ன முறைப்படி ஓமங்கள்நடக்கும். நால்வகைப்பட்ட தேவரும் பதினெண்வகைப்பட்ட கணங்களும்என வேற்றுமைதெரிந்து வகுக்கப்பட்ட தோற்றத்தையுடைய கடவுளரது விழவு சிறக்கும் ஒருபக்கம். அறவோர்பள்ளி முதலியவற்றிலெல்லாம் தருமம் போதித்தலும், புராணம்படித்தலும்,பிறவுமாகியசெய்கைகள்மிகும் ஒருபக்கம். அரசன் மிகவும் அருளுடன் தன் பகையரசர்களையும் குற்றவாளிகளையும் தளையவிழ்த்துச்சிறைவீடுசெய்வன். குழலும்தோலும் நரம்பும் கண்டமும் என்னும் இவற்றை இசைக்கவல்ல புலவர்களாலே



அளந்தறிதலரிய சிறப்பையுடைய இசைகள்மிகும். இங்ஙனம் நடப்பதால் கங்குலும் பகலும் முழவின்கண்கள் அடங்குதலின்றிக்குறுக்தெருக்களும் நெடுந்தேர்வீதிகளும் இந்திரவிழாவாற் களிப்புமிகும். அப்பொழுது அந்நகரத்தில் நாடகமாக்கள் பலவிடங்களிலும் நாடகம் நடிப்பார்கள். இங்ஙனமாக இவ்விழா இருபத்தெட்டுநாட்செய்யப்பட்டு முடிவில் யாவரும் கடலாடுதற்குச்செல்வார்கள். அதற்கு நகரமுழுதுமே திரண்டுசெல்லும்," என்பதாம்.

இங்ஙனம் தமிழ்நாட்டில் தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியனால், தொடங்கப்பட்டுச் சோழவரசர்களாற் செய்யப்பட்டுவந்தது போலவே, சேதிதேசத்தில், உபரிசரவசு என்னும் அரசனால் நடத்தப்பட்டுவந்ததாக இதிஹாசமாகிய ஸ்ரீமஹாபாரதம் கூறுநிற்கும். மேலே காட்டிய தமிழ்நூல்களில் விளக்கமாகக்கூறியிருப்பதுபோலவே வியாசபாரதத்திலும் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. அது:—

*"சேதிதேசத்தில் வசு என்னும் பெயருள்ள அரசன் ஒருவன் இருந்தான். அவன் காட்டிற்சென்று சிறந்த தவத்தில் பிரவர்த்தித்தான். அதனை இந்திரன்கண்டு வசுவே! நீ இந்தத்தவத்தை விட்டுவிடு; உன் குலத்திற்குரிய தர்மமாகிய குடிகளைப்பாதுகாத்தலைச் செய்வாய்; அதனால் நீ மேலான உலகங்களையடைவாய். நான் உனக்குத்தோழன். நான் உனக்கு, யாவருக்கும் கிடைப்பதற்கருமையான ஆகாயத்தில் சஞ்சரிக்கக்கூடிய ஸ்படிகமயமான விமானத்தையும், ஜயத்தைத்தரத்தக்கதும்,யுத்தங்களில் ஆயுதங்களாற் காயங்கள்படாமற் காப்பாற்றுவதுமான தாமரைப்பூக்களையுடைய வைஜயந்தி என்னும் மாலையையும் தருகின்றேன்; பெற்றுக்கொள். என்றுசொல்லிச்சொடுத்துப் பின்னும் நல்லவர்களைக் காப்பாற்றற்குரிய மூங்கிற்கோல் ஒன்றனையும் கொடுத்தான்.

†அதன்பின் சேதிதேசத்து அரசன் இந்திரன்கொடுத்த ஆபரணமாகிய வைஜயந்திமாலையை அணிந்துகொண்டும், அவனாற் கொடுக்கப்பட்ட அந்தவிமானத்தில் ஏறிக்சொண்டும் நகரத்திற்குப்போனான். அப்போது பூமியில் இந்திரனைப் பூஜிப்பதற்காக அந்தராஜா அந்தக்

* ஆதிபர்வம், 64-வது அத்யாயம்.

† ஸ்ரீ உ.ஹ.வே. ம. வீ. இராமாநுஜாச்சாரியர். வியாசபாரதமொழிபெயர்ப்பு.

சோழனுக்கு எல்லா உத்ஸவங்களிலும் சிறந்த நகரப்பிரவேசம் என்னும் உத்ஸவத்தைச் செய்வித்தான் ......அதுமுதல் இன்னமும் அந்தராஜாக்ஞையின்படி எல்லா ராஜசிரேஷ்டர்களும் மார்கழிமாதம் சுக்கிலபக்ஷத்தில் சோழனுக்கு நகரப்பிரவேசத்தைப் பெரியயாகமாகச்செய்கின்றனர். அதற்குமுறுதினம் அந்தக்கோலைப் பொற்கிங்கிணிகளாலும், சந்தனங்களாலும், புஷ்பமாலைகளாலும், ஆபரணங்களாலும் அலங்காரஞ்செய்து ராஜாக்கள் எடுத்துநாட்டுகின்றனர். புஷ்பமாலைகளால் சுற்றப்பட்டதும், முப்பத்திரண்டுசாண் அளவுள்ளதுமாகிய அந்தக்கோலைத்தூக்கிச் சுவர்ணமயமான வஸ்திரங்களை அந்தக்கோலுக்குச்சுற்றி வஸ்திரங்களினாலும் அன்னபானங்களினாலும் பிராம்மணசிரேஷ்டர்களைத் திருப்தி செய்வித்து அவர்களாற் புண்யாஹவாசனஞ்செய்வித்து ஆறுகஜம் உயரம் இருக்கும்படி பள்ளத்தில் அந்தத்துவஜத்தை நாட்டுகின்றனர். அந்தக்காலத்தில் சங்கங்களும் பேரிகளும் மிருதங்கங்களும் வாசிக்கப்படும். மஹாத்மாவான உபரிசரவசுவினிடம் அன்பினால் தானேகோல்வடிவமெடுத்துக்கொண்டுவந்த பகவானாகிய இந்திரன் அந்தக்கோலில் பூஜிக்கப்படுகிறான். மாணிபத்திரன் முதலிய யக்ஷர்களும் தேவர்களுடன்கூடப் பூஜிக்கப்படுகின்றனர்: வேண்டுகிறவர்களுக்கு அநேகவிதமான தானங்களைக்கொடுத்து இஷ்டமித்திரர்களுடன் புஷ்பமாலைகளாலும், பலவித ஆடைகளாலும் அலங்காரஞ்செய்துகொண்டு ராஜாவின் ஆக்ஞையினால் ஜலம் நிரம்பிய அநேகம் தோற்றுருத்திகளைக்கொண்டு விளையாடி ராஜாவைக்கண்டு வேடிக்கையான பேச்சுகளைப்பேசி நகரத்துஜனங்களும் கிராமத்து ஜனங்களும் விளையாடுகின்றனர். ஸூதர்களெனப்பட்ட பௌராணிகர்களும், ராஜாவைப்பற்றிய தோத்திரங்களைப்பாடுகின்ற மாகதர்களும், நாடகம்ஆடுகிறவர்களும், நர்த்தனஞ்செய்கின்றவர்களும் சந்தோஷிக்கின்றனர்......அந்த உபரிசரராஜாகாலத்தில் எல்லோரும் சந்தோஷமாகப் பெரியஉத்ஸவத்தைச்செய்தனர். அப்போது சேதிதேசத்தரசனான உபரிசரவசு அந்தப்புர ஸ்திரீகளோடும், மந்திரிகளோடும் எல்லா ஆபரணங்களையும் அணிந்துகொண்டும், சுவர்ணமயமான பீதாம்பரங்களை யுடுத்துக்கொண்டும், உயர்ந்த ஜாதி விங்கம்பூசிக்கொண்டும் சந்தோஷமாக இருந்தான்" என்பதாம்.

இங்ஙனம் தமிழ்நூல்கள்கூறியதும் வடநூல்கள்கூறியதும் சிற்சிலவிடங்களில் மாறுபடுவதுதவிர மற்றவிஷயங்கள் பெரும்பாலும் ஒத்திருப்பதனால் அவ் விழா ஒருகாலத்து இப் பரதகண்டத்தில் பெரும்பாலான இடங்களில் ஒரேவிதமாகச்செய்யப்பட்டுப் பிற்காலங்களில் சிற்சில மாறுபாடுகளுடன் நடைபெற்றுவந்தது என்பது தெளிவாம்.



அவ் விழா தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியனால் தமிழ்நாட்டிற்செய்யப்பட்டுப் பின்னர் அவன் பரம்பரையோரான சோழர்களால் வருடந்தோறும் கொண்டாடப்பட்டுவந்ததாம். அவ் விழாவினைப்பற்றிச் சுருக்கமாகக்கூறுமிடத்து விழா ஆரம்பிக்குமுன் அரசன் முதலாயுள்ள நகரமாந்தரனைவருமொன்றுகூடிப் பூதங்களுக்குப்பலியூட்டி யானைமேல் முரசவாத்தியத்தை யேற்றி விழாக்கொடியேறுவதைச் சாற்றிக் காவிரியாற்றிற்குச்சென்று அக் காவிரியினின்றும் ஆயிரத்தெட்டுக்குடம் தீர்த்தம் அரசர்களாற் கொணர்வித்து இந்திரனை ஆவாகனம்பண்ணியிருக்கிற பொருளில் திருமஞ்சனஞ்செய்வார்கள். அந்த உத்ஸவம் இருபத்தெட்டுநாள் நடக்கும். அக்காலத்தில் நகரமாந்தரனைவரும் தங்களை யாடையணிகளால் அலங்கரித்துக்கொள்வார்கள். நகரவீதிகள் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். கோயில்களிலெல்லாம் ஓமங்கள்நடக்கும், சாஸ்திரங்களையறிந்தபெரியோர்கள் தாம்கற்ற கல்விகளைப்பற்றிப் பொதுஇடங்களிற்சென்று பிரசங்கிப்பார்கள். அக்காலத்தில் கோபம், பகைமுதலியவற்றைக் கொள்ளக்கூடாது. தெருக்களிற் கூத்துக்கள் நடைபெறும். நாடகவரங்குகளில் நாடகமடந்தையர் தாம்கற்ற பரதசாஸ்திரத்தை அவையோர்கண்களிக்குமாறு நடித்துக்காட்டுவார்கள். விழா முடிவின்கண் யாவரும் நீர்விளையாடிக் களிப்பார்கள்.

இவ்விதம் அவ்விழாவினைக்கொண்டாடுவதால் அரசர்கள் தம் பகைவர்களைவென்று விசாலமானபூமியையடைவார்கள். அரசர்களும் ஜனங்களும் இவ் விழாவினைக்கொண்டாடுவாராயின் அவர்கள் தேசங்கட்கும் அவர்களுக்கும் ஜயமும் சம்பத்தும் உண்டாகும். அப்படியே தேசம் செழுமையாகவுமிருக்கும். அநேகவிதமான பயிர்கள் கெடுதியில்லாமல் உண்டாகும். ராக்ஷசர்களும் பிசாசர்களும் அவற்றிற்கு எவ்விதத்திலும் கெடுதிசெய்யமாட்டார்கள்; என்று நம்பி அவ் விழாவினை அரசர்களும் நகரமாந்தரும் வருடந்தோறும் அவ் விழாக்கொண்டாடப்படுங்காலத்தில் அதனைமறவாமல் கொடியேற்றி உத்ஸவத்தை வெகுசிறப்பாக நடத்துவார்கள்.

அவ் விழா காவிரிப்பூம்பட்டினத்தில் தூங்கெயிலெறிந்ததொடித்தோட்செம்பியன்முதல் கரிகாற்சோழன்வரையிலும், இடையூறு ஒன்றுமின்றி ஒழுங்காகச்செய்யப்பட்டுவந்தது. அக் கரிகாற்சோழனுக்குப்பின்னர்க் காவிரிப்பூம்பட்டினத்தையாண்டுவந்த நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழன் அவ் விழாவினைச்செய்யவேண்டுங்காலத்துச் செய்யாமையால் இந்திரனுக்குக்கோபமுண்டாகி அவ் வரசன் ஆண்டுவந்த காவிரிப்பூம்பட்டினத்தைக்கடல்கொள்ள ஏவினன். அவ்வரலாறு:-

நெடுமுடிக்கிள்ளி என்னும் சோழன் இளவேனிற்காலத்து ஒருநாள் ஒரு பூஞ்சோலையையடைந்து வசித்தனன். அங்கே ஒரு மடந்தை யாருமில் ஒரு சிறைத்தமியளாக நின்றனள். அரசன் அவளைக்கண்டு மயக்கங்கொண்டு அவளோடுமருவி மகிழ்வானாயினன். இங்ஙனம் மாதமொன்று சென்றது. ஒருநாள் அவள் அவனுக்குத்தெரியாமல் தன்னிடமடைந்தனள். அரசன் அவளைக்காணானாய்ப் பலவிடங்களிலும் தேடிக்கொண்டிருந்தனன். அப்பொழுது சாரணரொருவர் அரசன் எதிரிற் றோன்றினர். அரசன் அவரைவணங்கித் தன்னோடுசேர்ந்திருந்தமாதை அவர்கண்டனரோஎன்று வினவினன். அவர், "அரசே! நான் அவ் வணங்கு இப்பொழுதுசென்றவிடமறியேனாயினும் அவளுடைய முன்னிகழ்ச்சிகளை யறிவேன். நாகநாட்டிற்கரசன் வளைவணன் என்பான்; அவன் மனைவி வாசமயிலை என்பாள்; அவ் விருவர்க்கும் பிறந்தவள்தான் நின்னோடு இதுவரையில் இருந்தவள். அவள் பெயர் பீலிவளை என்பது. அவள் பிறந்தகாலத்துச் சோதிடங்கூறுவோர் 'இப்பெண் சூரியகுலத்துஅரசன் ஒருவனோடுசேர்ந்து கருவுற்றுவருவாள்' என்றுகூறினர். அங்ஙனமே நின்னோடுவந்து கலந்து கருவுற்றுச்சென்றனள். இனி அவள் வாராள். அவள்பெற்றபுதல்வனே வருவன். அரசனே நீ வீணே புலம்பல்வேண்டா. நீ இந்திரவிழாவை மறவாதியற்றிவரின் உனக்கு நன்மைபலவுண்டாம். அன்றி அதனைமறப்பின், நின் நகரம் கடலாலழிவுறும். ஆகலின் இந் நகரம் கடல்வயிறுபுகாமல் இந்திரவிழாவை மறவேல்"என்று கூறிச்சென்றனர். அங்ஙனமே சில நாட்கள் சென்றபின்னர் அப்பீலிவளை ஆண்மகவைக் கருவுயிர்த்தனள். அப்பொழுது அவள் இருக்குந்தீவிற்குக் கம்பளச்செட்டி என்பவனுடைய கலம் வந்தது. அவள் தன்மகனைக் கம்பளச்செட்டியிடங் கொடுத்து நீ இவனைச் சோழவரசனிடந்தந்திடுக என்று கூறியனு



பினள். அவனும் அம் மகவைப்பெற்றுக்கலமுகைத்துக் காவிரிப்பூம்பட்டினத்தின்கண் கரையணித்தாகவருகையில் கலம் கவிழ்ந்தது. உடனே யாவரும் அரசகுமாரனைத்தேடினர். காணவில்லை. அச்செட்டியரசனிடம்சென்று அவன் மகனைப்பற்றிக் கூறலும் அவன் தன் மகனைத்தேடிக்கொண்டு கடற்கரைசென்றனன். அப்பொழுது இந்திரவிழாச்செய்யப்படவேண்டியகாலம். அரசன் தன் மகன்மேலேயே மனத்தைச்செலுத்தி விழாச்செய்தலை மறந்தனன். தனக்குரியவிழாச் செய்யப்படாமையால் இந்திரன் கோபித்து அந்நகலரக்கடல்கொள்க என்று ஏவினன். அப்பொழுது காவிரிப்பூம்பட்டினத்தின்மேல் கடல் பொங்கிச்சென்று அதனையழித்தது" என்பதாம்.

அவ்விழாவினைச்செய்யாததால் நேர்ந்தகேடு மிகப்பெரிதாகக் காணப்படுகின்றது. காவிரிப்பூம்பட்டினம் அழிந்ததற்குக்காரணம் அவ்விழாச்செய்யப்படாமையே என்று மணிமேகலை கூறுகின்றது. அதாவது நெடுமுடிக்கிள்ளிஎன்பவன்காலத்துக் காவிரிப்பூம்பட்டினம் கடல்வாய்ப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. இந்நெடுமுடிக்கிள்ளியே கிள்ளிவளவன், வென்வேற்கிள்ளி, மாவண்கிள்ளி, வடிவேற்கிள்ளி என்று மணிமேகலையில் பலவிடத்தும் வழங்கப்பெறுவன். இவன் காரியாற்றில் பெரும்போர்நிகழ்த்தினவன் என்று நூல்கள்கூறும். இவன் கடைச்சங்கத்திறுதியில் இருந்த உக்கிரப்பெருவழுதி என்பவனுக்கு ஒருதலைமுறைமுந்திச் சோழதேசத்தையாண்டவனாகக்கருதப்படுவான். ஆதலின் இவன்காலம் கி. பி. இரண்டாம்நூற்றாண்டின் இடைப்பட்டகாலமாகக்கொள்ளலாம். எனவே இரண்டாம் நூற்றாண்டில் காவிரிப்பூம்பட்டினம் அழிவுற்றதாம். அப்பொழுது அரசன் காவிரிப்பூம்பட்டினத்தைவிட்டுக் காஞ்சிநகரையடைந்தனன். காவிரிப்பூம்பட்டினம் அழிவுற்றதோடு அவ்விழா நடத்தப்படாமல் நின்றது என்பதை மணிமேகலை சிலப்பதிகாரங்களுக்குப்பின்வந்துள்ள நூல்களில் அவ்விழாவினைப்பற்றிய கூற்றுக்கள் ஒன்றுமில்லாமையே வலியுறுத்துவதாம். எனவே இவ்விழா இரண்டாம்நூற்றாண்டுடன் தமிழ்நாட்டில் நடத்தப்படாமல் நின்றுவிட்டது. ஆதலின் அவ்விழாவினுக்குக்கடையெல்லையாக இரண்டாம் நூற்றாண்டினையே கூறலாம்.

இனி அதன்தொன்மையையாராயுமிடத்து அவ்விழா தமிழ்நாட்டில் தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியனால் முதல்முதல் நடத்

தப்பட்டது என்று முன்னர்க்கூறினும். அவ்வரசன் தமிழர்களால் மிக்க பழமையானவன் என்று கருதப்படுபவன். அவன் காலத்தையறிவது கூடாதகாரியம். ஆதலின் அவ்விழா நமது சரிதவாசிரியர்கள் காலத்துக்கும் எட்டாத மிக்க பழமைபொருந்திய அரசன் ஒருவன் காலமுதல் தமிழ்நாட்டிற்கொண்டாடப்பட்டுவந்தது என்று நாம் கொள்ளவேண்டும். அன்றியும் வடநாட்டில் அவ்விழாவினை நடத்திய உபரிசரவசு என்பவன் மிக்க பழமையானவன் என்பது சரிதவாசிரியர்கள் ஒப்புக்கொண்டவிஷயமாம். எவ்விதத்திலும் அவ்விழா இப்பரதகண்டமுழுவதிலும் மிக்க பழமையானகாலமுதற்கொண்டு நடைபெற்றுவந்ததாம்.

இனி அவ்விழா முதலில் தமிழ்நாட்டில் நடைபெற்றதா! வடநாட்டில் நடைபெற்றதா? என்று ஆராயுமிடத்து அது தமிழ்நாட்டில் சோழர்களது தலைநகரமாகிய காவிரிப்பூம்பட்டினம் ஒன்றில்மாத்திரம்தான் நடைபெற்றதாகத்தமிழ்நூல்கள்கூறுகின்றனவேயன்றி மற்றைச் சேரபாண்டியநாடுகளில் நிகழ்ந்ததாக நூல்களாற் றெரியவில்லை. வடநாட்டிலோ பலபல விடங்களில் நடந்துவந்ததாகப் பலநூல்களாலும் குறிப்பாகவும் விளக்கமாகவும் தெரிகின்றது. பெரும்பாலும் வடநாட்டிலும் ஓரோவிடத்துத்தமிழ்நாட்டிலும் நடந்த அவ்விழாவினுக்குப் பிறப்பிடம் வடநாடு என்றுகொள்வதே பொருத்தமுடையதாம். வடநாட்டிற்பிறந்த அது வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்தமுனிவரான அகத்தியரால் குடிகளின் க்ஷேமத்தின்பொருட்டு ஏவப்பட்டுத் தூங்கெயிலெறிந்த தொடித்தோட்செம்பியன் தொடங்கினான் என்று கருத இடமுண்டாகிறது.

இனி "கோபாலர்கள் இந்திரனுக்கு வருடந்தோறும் செய்யும் சிறப்பினைக் கண்ணன் தன்பொருட்டுச்செய்யும்படிகூற அவர்கள் அவ்வண்ணமேசெய்ய இந்திரன் வெகுண்டு அவர்களுக்கு மிருந்த இடையூற்றினையுண்டாக்கினான். அவற்றையெல்லாம் கண்ணன் காத்தருளினன்" என்னும் வரலாறு இந்திரவிழாவினையே குறிக்கும் என்று கருதலாம்,

இந்திரனுக்கு விழா நடத்தப்பட்டுவந்ததுபோலவே தமிழர்கள் இவ்வுலகத்தை முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என நானிலமாகப் பிரிவுசெய்து முல்லையில் மாயோனையும், குறிஞ்சியில் முருகவேளையும்



மருதத்தில் இந்திரனையும், நெய்தலில் வருணனையும் கடவுளர்களாகக் கொண்டு தனித்தனி விழவுசெய்து வழிபட்டுவந்தனர் என்று தொல்காப்பியம் முதலிய பண்டைத்தமிழ்நூல்கள் கூறும்.

இந்திரவிழாவைப்பற்றி மணிமேகலை சிலப்பதிகாரம் இவ்விரண்டும் மிக்க அழகாக வருணித்துச்செல்வதுடன் நகரம் அலங்கரிக்கப்படுவது கடலாடுவது முதலியவற்றை மிக அழகாக எடுத்துக்கூறுகின்றதை அறிஞர்கள் அவற்றிற் கண்டுமகிழ்வாராக.

சு. ஸ்ரீநிவாஸையங்கார்.

---

உ

# சேதுபூசித்தபடலம்.

---

என்பனபலவுமந்தவேந்திழைக்கினிதுகூறித்
தன்பெருஞ்சேனையோடுந்தம்பிபுமரக்கர்கோனும்
பொன்பொருவிமானந்தன்மேற்போகின்றபோதுமிக்க
வின்புடைபிராமன்வேலைக்கிப்புறத்திழிந்தென்செய்வான்.

வேறு.

கப்பையெனுங்கன்னியையுங்கந்தமாதனந்தன்னில்
அப்பொழுதேதிருவணைக்குக்காவலாயங்கிருத்திச்
செப்பரியசிலையாலேதிருவணையைவாய்கீறி
ஒப்பரியாள்தன்னுடனேஉயர்சேனைக்கடலுடனே.

வேறு.

வேந்தர்வேந்தனும்வேலையின்கரையினில்வரவே
வாய்ந்தசாலையும்வந்ததுதானவணகல
வேந்துதோள்புயத்திராமனுமிலக்குவன்றானும்
வாய்ந்தசீதையும்விமானமும்வானரவேந்தும்.

நின்றபோதினில்நிகரிலாவகத்தியன்முதலோர்
குன்றுபோல்புயத்திராகவன்றனைவந்துகுறுக
நன்றுநும்வரவென்னவேநாதனும்வணங்கி
வென்றிவேந்தனும்வேதியர்தம்மொடும்வியந்து.

சேதுவின்கரைசேர்ந்தவத்திறல்புனையிராமன்
ஏதுவித்தலமெனக்குறுமுனிவனைக்கேட்ப
வாதராசனும்வாசுகிநாதனுமலைந்த
போதுவந்ததிப்பொன்னகரென்றவன்புகன்றான்.

புகன்றவன்றனைப்பூங்கழலிராகவன்சாயை
யகன்றகாரணங்குறுமுனியுரையெனவவனும்
பகர்ந்ததேவரும்பாற்கடற்பள்ளியான்பரமன்
புகுந்ததிவ்வழிப்பூவில்வந்தவனுமற்றியாரும்.

இருப்பதித்தலமாயையாலிராவணன்சாயை
அருத்தியின்றியேயகன்றதென்றருண்முனியறையப்
பெருத்ததோளுடையண்ணலும்பிரியம்வந்தெய்திக்
கருத்துமற்றினியுரையெனக்குறுமுனிகழறும்.

இந்தமாநகர்தன்னிலேயிறைவனையருச்சித்
துந்தன்மாநகரெய்தினுற்சாயைபோமுரவோய்
அந்தநீதியேசெய்துமென்றநுமனையழைத்திட்
டெந்தநாதனையிமைப்பினிற்கொடுவரவென்றான்.

வேறு.

அந்தவேலைமுன்னையனளித்தருள்
இந்தமாநிலத்தியாவருமின்புறக்
கந்தமேவியகங்கையினோர்சிலை
தந்துகாணெனமாருதிதாவினான்.

வேறு.

போதியென்றவற்போக்கியிராமனுமந்த
மாதுசீதையுமைந்தனுமிலக்குவன்றானும்
தீதில்தீர்த்தங்களின்புறயாவையுமாடி
யாதிநாதனுமிருந்தனனமரர்கள்வியப்ப.

(தொடரும்.)

N. Kanakarajan.

---

உ

கடவுள்துணை.


# செந்தமிழ்

தொகுதி-௧௬.] காலயுக்தி-௵ ஆடி௴ [பகுதி - ௯.
Vol. XVI. July,—August. 1918. No. 9.


## பரிபாடல்.

இது கடைச்சங்கநூல்களுளொன்றாக வழங்கப்பட்டுவருவதொரு தொகைநூல். இதன்பெயர்மாத்திரத்தாலே இதிலுள்ள பாடல்களெல்லாம் பரிபாட்டென்னும்பெயருடைய ஒருவகைப் பாக்களாயிருக்கவேண்டுமென்னுமளவிலறியப்பட்டிருந்தது.

இப்பாட்டின்பெயரிலுள்ள நிலைமொழியானது இக்காலத்தில் தமிழ்வழக்கிலில்லாத ஏற்றுவருதற்பொருளுடையதாயிருப்பதை நோக்குமிடத்து இப்பாட்டின்பெயர் பல்லாயிரவருடங்கட்குமுற்பட்டிருந்து வீழ்ந்துபோன பழையதமிழ்வழக்கிலிருந்து தொடர்ந்துவந்திருக்கவேண்டுமென்பது தெளிவாகின்றது.

இப்பாடல்கள் பல்வகைப்பாவடிகளையும் ஏற்றுவருமென்னுமிலக்கணத்தால் இசைநலம் பலவுமுடையனவென்பதும், இன்பம் நுதலிவரும் என்னுமிலக்கணத்தாற்சொன்னயம் பொருணயங்களை மிகவுமுடையவாயிருக்குமென்பதும் சொல்லாமலேயறியலாம்.

இத்தகையாற்சிறப்பெய்திய பரிபாடற்பிரபந்தம் தலைச்சங்ககாலத்தில் எத்துணையோபலவிருந்தனவென்பதும், அவை நாளடைவிலிறந்துபடக் கடைச்சங்ககாலத்தில் எழுபதுபாட்டளவில் ஒரு தொகைநூலாயிருந்ததென்பதும் அறியக்கிடத்தலால் இது சங்கநூல்கள் பலவற்றிலும் இக்காலத்தில் மிகவும் அருமையுடையதாயிற்றென்பது யாவருமறியத்தக்கது.

இங்ஙனம் அருமைவாய்ந்த இப்பரிபாடலும் பின்பு காலக்கொடுமையாற்பாதுகாப்பாரின்றி நாளடைவிற்கறையான்வாய்ப்பட்டு வெட்டுண்டு அடியுமுடியுமற்று இன்னநூலென்றறியப்படாது இருபத்திரண்டுபாட்டளவிற்குறுகிக் குத்துயிரும் குறையுடலுமாயிறந்துபடுநிலைமையையெய்துவதாயிற்று.

இதனைக்கண்ணுற்ற காருணிகரான மஹாமஹோபாத்தியாயர் பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் சங்கநூற்பரிசயத்தால் இது சங்கநூல்களுளொன்றாயிருக்கவேண்டுமென்று கண்டு இதனுடலாகிய ஏட்டைப்புரட்டிப்பார்த்துப் பிறநூல்களிலுரையாசிரியர்காட்டிய சில வுறுப்படையாளங்களிருப்பக்கண்டு இது பரிபாடலேயாமென்று கொண்டு இதனுரைவாக்கியங்களின் பற்பல குறிப்புக்களாலும் வேறு பிற குறிப்புக்களாலும் இதனுரை, ஆசிரியர் பரிமேலழகருரைத்த உரையேயாமென்றறிந்து பிறநூலினுரைமேற்கோள்களாகத் துண்டுபட்டுக்கிடந்த சிற்சிலவுறுப்புக்களை ஆங்காங்குக் கண்டெடுத்துக்கொணர்ந்து அவற்றுள் "ஆயிரம்விரித்த அணங்குடையருந்தலை" என்ற ஒரு பரிபாட்டே இதன் தலையாகிய முதற்பாட்டாயிருக்கவேண்டுமென்று உரையினுதவிகொண்டுதெளிந்து அதனை முதற்கட்சேர்த்துத் தலையுடையதாக்கி ஏனையவற்றை இறுதியிற்சேர்த்துப் பரிசோதித்து அச்சேற்றியுயிர்ப்பித்து உரையுடனுலவிவருமாறு புத்தகரூபமாக்கி வெளியிட்டிருக்கிறார்கள். இப்புத்தகத்தின் அருமைபெருமையும், ஆராய்ச்சியின் திறமையும் விரிவாயறியவிரும்புவோர் இப்புத்தகத்துள் முகவுரை, பாடினோர்வரலாறு, இசைவகுத்தோர் வரலாறு, உரையாசிரியர் பரிமேலழகர்வரலாறு என்னும் பகுதிகளை நன்குபடித்துப்பார்த்து அறிந்துகொள்ளற்பாலர்.

இப்புத்தகத்தின் பக்கந்தோறும் கீழ்க்குறிப்பில் மூலம், உரை இவற்றில்வந்துள்ள விஷயங்களுக்குப் பிறநூல்வழக்குகளையும் ஆராய்ந்தெடுத்துக்காட்டியிருப்பது மிகவும் அருமைபாராட்டத்தக்கது.

இப்புத்தகத்துள்ள அரும்பதமுதலியவற்றிற்கு இறுதியில் ஒரு அகராதிசெய்து சேர்க்கப்பெற்றிருக்கிறது.

இப்புத்தகத்தாலறியக்கிடப்பன வேதாகமவழக்கும், உலகவழக்கும், சிங்காரவகைகளும், அலங்காரவகைகளும், இலக்கணவிசேடங்களும், துறைவிசேடங்களும், பிற குறிப்புக்களும் மிகப்பலவுள்ளன.



அவையெல்லாம் இப்புத்தகத்தை வாங்கிப்படித்தறியத்தக்க புலவரால் நன்குணரத்தக்கன. இப்புத்தகத்தின் மூலமும் உரையும் படித்துணரும் பண்டிதர்க்குண்டாகுமகிழ்ச்சி கடலிற்பெரிதாயிருக்கும்; அவர்க்கிந்நூலுமுரையும் குறையும்கிடைக்கப்பெறாத வருத்தம் அதனினும் பெரிதேயாம்.

இங்ஙனம் அருமைவாய்ந்த தமிழ்ப்பழம்பநுவல்கள் பலவற்றையும் பரிசோதித்தச்சிட்டு உலகிற்குதவியும், உதவிக்கொண்டுமிருக்கும் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் ஆயுராரோக்கியமுடையராய் வாழுமாறு இத்தமிழுலகம் பிரார்த்தித்து நன்றிபாராட்டக்கடமைப்பட்டுள்ளது.

இங்ஙனம் ஐயரவர்கள் தமிழ்நூல்களைப்பரிசோதித்து அச்சிட்டுதவிவருதற்குபகாரமாக, அவர்களுடனிருந்து உதவிசெய்துவரும் பண்டிதரிருவர்க்கு மாதவேதனமாகப்பொருளுதவிபுரிந்து ஐயரவர்களையூக்கிவருபவர்களும், மதுரைத்தமிழ்ச்சங்கத்து நிரந்தர அக்ராசனாதிபதிகளும், சென்னைச்சட்டநிரூபணசபை அங்கத்தினர்களுமான கௌரவம்பொருந்திய இராமநாதபுரம் மஹாராஜா ராஜராஜேசுவர முத்துராமலிங்கசேதுபதியவர்கள் அரோகதிடகாத்திரமும், ஆயுரபிவிருத்தியுமுடையவர்களாய் வாழுமாறு எல்லாம்வல்ல இறைவன்திருவருளைச்சிந்திப்போமாக.

---

ஸ்ரீ:

## மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்

# பதினேழாவது வருடக்கொண்டாட்டம்

நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினேழாம் வருடக் கொண்டாட்டமானது நாளது-௵ ஆகஸ்டு-மீ 4, 5-உ களில் மதுரைமாநகரில் விக்டோரியா எட்வர்டு ஹால் கட்டிடத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

உள்ளூரினின்றும் பிறவூர்களினின்றும் வந்துள்ள அறிஞர்களும் பண்டிதர்களும் பிரபுக்களும் பலர் கூடினர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சாசுவத உப அக்கிராசனாதிபதியும், ஆண்டிபட்டி ஜமீந்தாருமான

ஸ்ரீமான். சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்கள் வேண்டிக் கொள்ள, திருவனந்தபுரம் ஹைகோர்ட் ஜட்ஜு மகா-ள-ள-ஸ்ரீ கே. ஜி. சேஷையரவர்கள் சபா நாயகராக வீற்றிருக்க ஸபையார் கரகோஷத் துடன் அநுமோதித்தங்கீகரித்தார்கள்.

தமிழ்ச்சங்கக்கலாசாலைமாணவன் சேஷாத்திரியால் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்றது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் கௌரவ காரியதரிசி மகா-ள-ள-ஸ்ரீ டி. வி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் சங்கக் கூட்டத்துக்கு வரமுடியாத அங்கத்தினரும் அபிமானிகளும் அனுப்பிய * தந்திகளையும் கடிதங்களையும் படித்து முடித்து அறிக்கைப்பத்திரம் படித்தார்கள்.

---

## *தந்திகள்.

1. மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பஹதூர் P. I. சின்னசாமிப்பிள்ளையவர்கள், பாலக்காடு.
2. ,, கரந்தை T. S. முருகேசன் அவர்கள், முத்துப்பேட்டை.
3. ,, S. Rm. S. A. குட்டையன் செட்டியாரவர்கள், கொத்தமங்கலம்.
4. ,, காசிநாதன் செட்டியாரவர்கள், கொத்தமங்கலம்.

## கடிதங்கள்.

1. ,, மாட்சிமைதங்கிய கனம். சேதுபதி மஹாராஜா அவர்கள், சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதி.
2. ,, ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள், சீகாழி.
3. ,, T. வேலாயுதம் பிள்ளை அவர்கள், பாலக்காடு.
4. ,, அ. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், சுன்னாகம்.
5. ,, மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், திருச்சிராப்பள்ளி.
6. ,, A. M. சடகோபராமாநுஜாசாரியரவர்கள், வித்வான் (மதராஸ் யூநிவர்ஸிடி) திருச்சிராப்பள்ளி.
7. ,, V. P. சுப்பிரமணிய முதலியாரவர்கள், வெள்ளக்கால்.
8. ,, S. சோமசுந்தரபாரதியவர்கள், M. A., B. L., தூத்துக்குடி.
9. ,, S. வேங்கடராமையர் அவர்கள், கும்பகோணம்.



பின்பு சங்கத்தின் நோக்கத்தையும் அதன் இன்றியமையாமையையும் அது செய்துள்ள வேலையையும்பற்றி ஸ்ரீமத். மஹாமஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள், 2. இராமநாதபுரம் சப் ஜட்ஜு மகா-ள-ள-ஸ்ரீ சுப்பையா முதலியாரவர்கள் 3. மகா-ள-ள-ஸ்ரீ மு. சாம்பசிவநாயனாரவர்கள் 4. மகா-ள-ள-ஸ்ரீ பி. கே. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் 5. மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமத் ஆலிம் புலவரவர்கள் இவர்கள் தனித் தனி வியந்து பேசினார்கள். தமிழ்வளர்ச்சியைப்பற்றிச் சுன்னாகம் வித்வான் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களெழுதியனுப்பிய "தமிழ்மொழிப் பரிபாலனம்" என்னும் வியாசம் படிக்கப்பெற்றது.

சபாநாயகரது அபிப்பிராயம் தமிழிலச்சிட்டுப் படிக்கப்பெற்றது.

செந்தமிழுதவிப்பத்திராதிபர் சு. நல்லசிவன் பிள்ளையாற் பாடப்பெற்ற மங்களவாழ்த்துப்பாடல் தமிழ்ச்சங்கக்கலாசாலை உதவியுபாத்தியாயர் பண்டிட் M. S. அரிஹரையரவர்களால் இசையுடன் படிக்கப்பெற்றவுடன் சங்கத்தின் சாசுவத உப அக்கிராசனாதிபதியவர்கள் சபாநாயகருக்கு வந்தனோபசாரம் வழங்கி ஸபையோர்க்கெல்லாம் புஷ்ப தாம்பூலமளிப்பிக்க மகிழ்வுடன் சபையோர் தத்தமிருக்கைக்கெழுந் தருளினர்.

மறுநாட் காலை 8-மணிக்கு மஹாஸபைகூடினவுடன் சங்ககாரியங்களைப்பற்றிச் சில தீர்மானங்கள் செய்யவும், சங்கத்தின் நிரந்தர உப அக்கிராஸனாதிபதியாகிய ஆண்டிபட்டி ஜமீந்தார் ஸ்ரீமான் பெத்தாச்சிசெட்டியாரவர்கள் மனமுவந்து, நம் சங்க ஸ்தாபகரான ஸ்ரீமான்-பாண்டித்துரைத்தேவரவர்களின் ஞாபகார்த்தமாக, அவர்களாற்றொகுத்து வெளியிடப்பட்ட பன்னூற்றிரட்டு என்னும் அரிய புத்தகத்தை இப்பொழுது மூன்றுமுறையாகப் பதிப்பதற்குத் தாம் வேண்டும் பொருளுதவிபுரிவதாக வாக்களித்தபின்பு மஹாமஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் பரிபாடலையும் அதனுரையையும் அதிற்சொல்லியுள்ள விஷயங்களையும்பற்றிய அருமை பெருமைகளை யாவருமறியும்படி ஒரு பிரசங்கம் செய்தார்கள்.

பின்பு திருவனந்தபுரம் ஹைகோர்ட்டு வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ கே. ஜி. சங்கரையரவர்கள் காளிதாஸர் காலநிர்ணயத்தைத் தாம் ஆராய்ச்சி செய்தெழுதிய வியாசமொன்று படித்தார்கள். (அது தனியே செந்தமிழில் வெளியிடப்பெறும்.) பின்பு மதுரை ஸ்கூல் பெர்ஸனல் அஸிஸ்

டெண்ட் இன்ஸ்பெக்டர் மகா-௱-௱-ஸ்ரீ வி. முத்துசாமி ஐயரவர்கள் M.A., L.T., "நக்கீரர்வாக்குநலம்" என்னும் விஷயமாக நக்கீரதேவர் வாக்குநலங்களை ஆராய்ச்சிமுறையில் ஆங்காங்குள்ளனவற்றை ஒருங்கு திரட்டிப் புலவர்களின்புறும்படி ஒருபந்யாசம் செய்தார்கள்.

பின்பு சபையோர் அமுதருந்தி இளைப்பாறிவந்தவுடன் மகா-௱-௱-ஸ்ரீ பி. கே. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள் புகழேந்திப்புலவரது கவித்திறமையைப்பற்றி மிகச்சிறப்பித்து ஒரு பிரசங்கம் செய்தார்கள்.

அதன்பின் மகா-௱-௱-ஸ்ரீ பொ. முத்தையபிள்ளையவர்கள் திருக்குறள் முதலதிகாரவாராய்ச்சி என்ற விஷயமாகப் பல குறிப்புகளால் ஒவ்வொருகுறளுக்கும் அதிகாரமுறைமுதலிய சில நுணுக்கங்களைக் காட்டி ஒரு பிரசங்கம் செய்தார்கள்.

பின்பு மகா-௱-௱-ஸ்ரீ பழனிவேற் பிள்ளையவர்கள் தாம்பாடியச்சிட்டு வெளியிட்ட வாமுருகாற்றுப்படையென்னும் பிரபந்தத்தைப் படித்தார்கள்.

மகா-௱-௱-ஸ்ரீ பாலகவி. நல்லையா ஆசாரியவர்கள் "பெரிய புராணமும் அப்பூதியடிகளும்" என்னும் விஷயமாய் ஒரு பிரசங்கம் புரிந்தார்கள்.

பின்பு மகா-௱-௱-ஸ்ரீ மதுரை வக்கீல் ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயரவர்கள் "கல்விநிலையும் அதை அபிவிருத்திசெய்யுமுறைகளும்" என்னும் விஷயமாயொரு பிரசங்கம் செய்தார்கள்.

மகா-௱-௱-ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் தாமியற்றிய 'விசுவநாதநாயக்கன்' என்னும் நாடகப்பநுவலைச் சபையோர்மகிழும்படி படித்து முடித்தார்கள்.

பின்பு மதுரை வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ ராவ்பஹதூர் P. சுப்பராய ஐயரவர்கள் B.A, 'தமிழ்மொழிவளர்த்தல்' என்ற விஷயமாய்த் தமிழ்மொழிவளர்ச்சி நமக்கின்றியமையாதென்பதும் அதன் விஷயமாக மதுரைத்தமிழ்ச்சங்கம் செய்திருக்கும் உதவி இவ்வளவென்பதும் இன்னும் செய்யவேண்டும் விஷயங்களிவையென்பதும்பற்றி யொரு பிரசங்கம் செய்தார்கள்.



பின்பு நம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதியாகிய இராமநாதபுரம் மஹாராஜா மாட்சிமைதங்கிய ராஜராஜேஸ்வர முத்துராமலிங்க சேதுபதியவர்களின் மூன்றாவது ராணியார் காலஞ்சென்றமைக்குச் சங்கத்தாருக்குள்ள அநுதாபந்தோன்ற, செந்தமிழதவிப்பத்திராதிபர் சு. நல்லசிவன்பிள்ளையாற் பாடப்பெற்ற இரங்கற்பாப் படிக்கப்பட்டது.

பின்பு சபாநாயகர் முடிவுரை கூறியவுடன் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் சபாநாயகருக்கு வந்தனோபசாரஞ் சொல்லியவளவில் ஸபையோர்க்கும் பிறர்க்கும் சங்கம் கௌரவ காரியதரிசியவர்கள் வந்தனோபசாரமளித்தார்கள்.

முடிவில் ஆண்டிபட்டிச்சமஸ்தான வித்வான் ஸ்ரீமத் திருஞானசம்பந்தக்கவிராயரியற்றிய மங்களவாழ்த்தும், சிவகெங்கைச்சமஸ்தான வித்வான் ஸ்ரீமத் பெரியசாமிக்கவிராயரியற்றிய மங்களவாழ்த்தும் படிக்கப்பெற்றன.

இம்மட்டோடு இவ்வருடக்கொண்டாட்டம் பூரணமாயிற்று.

---

உ

# தமிழ்மொழிப்பரிபாலனம்.*

பண்டைக்காலத்திலே தமிழ்நாட்டரசர்களாகிய சேரசோழ பாண்டியர்களும், சில சிற்றரசர்களும் பிறரும் நன்குமதித்தும், தாங்கள் இனிதுபடித்தும், படிப்பித்தும், படித்து வல்லார்களோடு நூற்பொருள்களை ஆராய்ந்துபாராட்டியும், அவர்களுக்குவேண்டும் பொருள்கொடுத்தும் தமிழ்மொழியைப் பரிபாலித்துவந்தார்கள். அவர் பரிபாலனம் நோக்கிப் பண்டைப்புலவர்களும் பலவகைநூல்களையுஞ் செய்துவைத்தார்கள். அந் நூல்கள், அறம்பொருளின்பங்களை விளக்குதலோடு அவர்கள் கீர்த்திகளையும் விளக்குகின்றன. படித்துப் பயனடைவார்களும் பலராயினர்.

* இது நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினேழாம் வருடக்கூட்டத்திற் படிக்கும்படி சுன்னாகம் வித்வான் ஸ்ரீமத்- அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களா லெழுதியனுப்பப்பட்டது.

பின்னர் அவர்போன்ற தமிழபிமானிகள் வரவரக்குறைந்து மறைந்தொழிந்தமையானும், பொருள்வரவுக்குரிய பிறமொழியைக் கற்பவர் பலராயினமையானும் வரவர மழுங்கித் தமிழ்மொழி தேய்வதாயிற்று. இதனை நன்குணர்ந்த ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கள் இந்தச்சங்கத்தைத் தாபித்து இதன் வாயிலாகப் பழந்தமிழ்நூல்களை அச்சிட்டும், தமிழ்க்கலாசாலைவைத்தும் "செந்தமிழ்" என்னும் பத்திரிகையைப் பிரசரித்தும், பரீக்ஷைநடாத்திப் பரிசில்கொடுத்தும் தமிழ்மொழியை வளர்த்துவந்தார்கள். அவர்காலத்தின்பின் மஹாமகிமை பொருந்திய ராஜராஜேஸ்வர ஸேதுபதிமஹாராஜா அவர்கள் அவைகளை அநுசரித்தும், வேறு வேண்டுவனசெய்தும் இச்சங்கத்தை நடாத்தித் தமிழ்மொழியை வளர்த்துவருகின்றார்கள். இவர்கள் தமிழபிமானம் வியக்கற்பாலது.

இவர்கள் தமிழ்மொழி வளர்ச்சியின்பொருட்டுச் செய்யும் முயற்சியில் உயர்ச்சியுடையாராயினும் அதிகாரம், செல்வம் முதலியவற்றாற் சிறந்துவிளங்குந் தமிழ்நாட்டுப்பிரபுக்களின் துணையும், பிறர் துணையும், தமிழ்ப்பண்டிதர்கள்துணையும் வேண்டும். சங்கத்திற்குத் தங்களால் இயன்ற பொருள்கொடுத்தல் வேண்டும். சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்களையும், செந்தமிழ்ப்பத்திரிகையையும் விலைக்குவாங்கிப் படித்தல் வேண்டும். தமிழ் அறிந்தோர் செந்தமிழ்ப்பத்திரிகைக்கு ஏற்றவிடயங்களை எழுதிவரல்வேண்டும். தத்தம் புத்திரர்களைத் தனித்தமிழ்ப் பரீக்ஷைக்குச்செல்லுமாறு படிப்பிக்கவேண்டும். புத்திரர்கள் இம்மைப் பயனை அறிவிக்கும் பிறமொழிகளைமாத்திரம் படித்தல் போதுமா? இம்மை மறுமை என்னும் இருமைப்பயன்களையும் அறிவிக்குந் தமிழ்மொழியையும் படிக்கவேண்டாமா?

சங்கப்புத்தகங்களையும், பத்திரிகையையும் வாங்கிப்படிப்போர் தொகையும், பத்திரிகைக்கு விடயம் எழுதும் அறிஞர்தொகையும், தனித்தமிழ்ப்பரீக்ஷைக்குச்செல்வோர் தொகையும் குறையுமாயின்; தமிழ்மொழிவளர்ச்சி எங்ஙனம் சித்திக்கும்!

இப்போதுதோன்றிய சில நூல்களிலும், உரைகளிலும், சில பாடசாலைப் புத்தகங்களிலும், சில விஞ்ஞாபனங்களிலும், தனிக்கவிகளிலும் குன்றக்கூறல், கூறியதுகூறல் முதலிய வழுக்களும் அந்நியபாஷைச்



சொற்களும், அந்நியபாஷை நடைகளுமாகிய களைகள்முளைத்துத் தோன்றிக் கறுத்துவளர்ந்து நற்றமிழ் என்னும் நெற்பயிரை முற்ற நெருக்கிக் கருந்தமிழாக்குகின்றன. படிப்பாருள்ளும் பலர் அங்கீகரிக்கின்றனர். இவ்வாறாய களைகளை இவை இவை என்று காட்டி அறிஞராயுள்ளோர் களைதல் நற்றமிழ்வளர்ச்சிக்கு அவசியமன்றோ! வழுக்களை நோக்காது பாயிரங்கொடுப்பார் கருத்தென்னை!

ஒருவர் ஒரு நூலிலே "பேரவாநசை" "தெற்றனவுரைத்தி" "யாதிது விபரமென்னே" "வேதவைதிகம்" என்று பாடினர். மற்றொருவர் "இருக்கினொடுநான்மறை" என்று பாடினர். மற்றொருவர் "முருகு பண்புப்பகுபதம்" என்றார். உரைகாரருள் ஒருவர் "மதுத்தண்டு-ஒரு பூண்டு" என்றார். மற்றொருவர் "நிலவு - சந்திரகிரகணம்" என்றார். பாடசாலைப்புத்தககாரர் சிலர் "பராக்குப்பார்த்தல்" "வேலைகாலியானவுடன்" "உடம்பும் மரத்துப்போய்விட்டது" "இராமன் என்றழைக்கப்படும் அரசன்" "நித்திரைபண்ணிக்கொண்டிருப்பான்" என்று எழுதினர். விஞ்ஞாபனங்களிலே "இத்தாற் சகலரும் அறிக." "மகோபநியாசம்" "அக்கிராசனம் வகிப்பார்" "இந்துமத உபநியாசம்" "சமயிகள் அழைக்கப்படுகின்றார்" என்று எழுதுவர். இவ்வாறு வருவன பல.

இங்ஙனம் வரும் வழுக்களை ஆங்காங்குள்ள அறிஞர்கள் கண்டித்துத் திருத்துதலும், பாடசாலைக்குச் சுத்தமானபுத்தகங்களை எழுதி அச்சிடுவித்தலும் தமிழ்வளர்ச்சிக்குக் காரணமாகும்.

பலர்க்கும் பயன்படுவனவாய் ஏட்டிலிருக்கும் பழந்தமிழ்நூல்களைப் பரிசோதிப்பித்து அதிகமாக அச்சிடுவித்தலும், உரையில்லாத நூல்களுள்ளே தக்கனவற்றிற்கு உரைசெய்வித்து அச்சிடுவித்தலும், வடமொழியிலுள்ள நூல்களுள்ளே வேண்டியநூல்களைத் தமிழ்மொழியிற் பெயர்ப்பித்து அச்சிடுவித்தலும், தகரவர்க்கம் வரையிலே அச்சிட்ட தமிழ்ச்சொல்லகராதியை முற்றமுடித்தலும், இதுவரையும் எழுதப்பட்ட தமிழ்ப்பரீக்ஷை வினாக்களை ஒரு புத்தகமாக்கி அச்சிடுதலும்,

இன்னும் பரிசிற்றொகையை உயர்த்திக்கொடுத்தாவது அரசினர் மதிக்கும்படி செய்வித்தாவது வேறுவழிசெய்தாவது பலரைத் தமிழ்படிக்கச்செய்தலும், செந்தமிழ்ப்பத்திரிகையைப் பலரும்வாங்கிப் படிக்கச் செய்தலும் பிறவுமாகத் தமிழ்மொழிவளர்ச்சிக்குப் பலசெயல்கள் செய்யலாம் என்று கருதுகின்றோம்.

இவற்றுள்ளே அங்கீகாரமாகத்தோன்றுங் காரியங்களைச் சங்கத்தார் செய்யுமாறு ஆலவாயவிர்சடைக்கடவுள் திருவருள்புரிக.

இங்ஙனம்,

சுன்னாகம்,
காலயுக்தி-ஸு
வைகாசிமீ
உஉ.

தங்கள் சங்கத்தாருள் ஒருவன்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

உ

# அக்கிராசனர் பிரசங்கம். *

சங்கப் புலவரொடு தாமிருந்து தண்டமிழைத்
துங்கம் பெறப்புரந்த சுந்தரரின்—பங்கசத்தாள்
சென்னி மிசைவைப்பாஞ் செந்தமிழ்ச் சங்கமிது
மன்னி வளரும் பொருட்டு.

பல்கலையாயும் பல்சான்றீரே !

நும்மனோர்குழுமிய இவ்வவையின்கண் தலைமையேற்றுக்கோடற்குரிய பண்பும் ஆற்றலும் ஒரு சிறிது மில்லேனாயினும், தமிழன்னையின்பால் யான்கொண்டுள்ள பேரன்பும், இம் மதுரைத்தமிழ்ச்சங்கம் புரப்பவராய்ச் செந்தமிழ்வளர்க்கு முரிமையும் போற்றுந்திறனும் பெற்றுப் புகழ்வாய்ந்த மாண்பினரும் என் நண்பருமாகிய கௌரவம் பொருந்திய ஸ்ரீமாந்-இராஜாதிராஜ முத்துவிஜயரகுநாத ராஜராஜேசுவர முத்துராமலிங்கசேதுபதி மன்னரது ஆணையை மறுக்க வலியின்மையுமே என்னை இப் பெரும்பதவி வகிக்க இசைவித்தன. இப் பதவி

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 17-வது வருடக்கொண்டாட்டத்தில் திருவனந்தபுரம் ஹைக்கோர்ட்டு ஜட்ஜி மகா-௱-ஸ்ரீ கே. ஜி. சேஷையரவர்கள் படித்தது.



வகிக்கும்வண்ணம் என்மாட்டுக் கௌரவம்காட்டின நமது சங்கத்தின் அக்கிராசனாதிபதியவர்கட்கும் சங்கத்தைச்சேர்ந்த ஏனையோர்கட்கும் என்னன்றி செலுத்துவன்.

இன்றைத்தினம் ஆகஸ்டுமீ 4உ என்பதை நீங்கள் அறிவீர்கள். நான்கு வருடங்கட்கு முன்பு 1914-ஸு இதே தேதியில் ஜர்மானியர் துரைத்தனமுறை வழுவி, பெல்ஜியராஜ்யத்திற் கடக்க, பெல்ஜிய மன்னன் நம் சக்கரவர்த்திப்பெருமானிடம் உதவிவேண்ட, நம் காவலர் பெருமான் பெல்ஜியத்திற்குற்ற பேரிடரை நீக்கி அச்சிறு ராஜ்யத்தின் சுதந்திரத்தை ஜர்மானிய அரசனது கொடுங்கோன்முறைமைக்கு இரையாகவிடாமல் மீட்டுதற்காக, தர்மப்போர்புரியத்தலைப்பட்டனரென்பது எல்லோரும் நன்கறிந்தவிஷயம். தர்மமும் அதர்மமும் ஒன்றோடொன்று போர்புரிந்தால், அதர்மம் எவ்வளவு வலியுடையதாய்த்தோன்றினும், கடைசியில் தர்மமே ஜயிக்கும் என்பதற்கு மஹாபாரதப்போரே நற்சான்றாகும். மஹாபாரதப்போரோ பதினெண் தினங்களேநிகழ்ந்ததாகப் புராணம்கூறும். இக்கொடும்போரோ இந் நான்கு வருடங்களாக ஓயாமுயற்சியுடன்செய்யப்பெற்றும் இன்னு முடியவில்லை. இதனால் உலகத்திற்கு இதுகாறுமேற்பட்ட கஷ்டமும் நஷ்டமும் அளவிடற்பாலதல்ல. போர் நிகழுமிடமட்டுமன்றி உலக முழுதுமே பல்லாற்றானும் கருங்கலியால்வருந்தித் துன்புறுவதை யாரே மனம்பதைக்காமல் நினைக்கவல்லார் ! துஷ்ட நிக்ரகமும் சிஷ்ட பரிபாலனமும் உரிமையாகக்கொண்ட இறைவர்க்கிறையான பரம்பரனருளாற் கடிதில் நம் ஆங்கிலஸாம்ராஜ்யமும் அத்துடன் ஐக்யங்கொண்டுள்ள ராஜ்யங்களும் முற்றும் ஜெயம்பெற்று வெற்றிமாலையை மேதகப்புனைந்து, வையகத்தின் துயர்தீர்க்க இன்று ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட எல்லாநாடுகளிலும் ஜனங்களனைவரும் கடவுளைவேண்டுவராவார். நாமும் அவ்வண்ணமே தமிழ்க்கடவுளை யொருமனதுடன் வேண்டுவோமாக. சீக்கிரத்தில் நம்மவர் இவ்வன்போரில் வெற்றிபெறவும், உலகில் தீயவெலாமாழ்ந்து அறம்பொருள் இன்பம் பெருகவும் கடவுள் பூர்ணமாய் அருள்புரிவாராக !

நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினேழாவது ஆட்டைத்திருநாள் கொண்டாட இன்று கூடியிருக்கின்றோம். ஹிந்துதர்ம சாஸ்திரத்

தின்படி பதினாறுவதுவயதுமுடிய வாலிபப்பருவம் நீங்கலாகும். பாலப்ராயத்தைவிட்டு யௌவனப்ராயத்தை இப்பொழுது இச் சங்கமடைந்திருக்கிறது. இப்பொழுது நீங்கின இளமைப்பருவத்தில் நம் சங்கம் செய்துவந்த பெருங்காரியங்கள் எத்துணையென்பது இச்சங்கத்தால் வெளியிடப்பட்டுவருகிற "செந்தமிழ்"ப்பத்திரிகையாலும், சங்கம் பதிப்பித்துள்ள அரிய நூல்களாலும் இனிதறியக்கிடக்கின்றது. தமிழ்நாட்டாரது இக்காலவாழ்வுக்கு அநுகுணமானவறிவையூட்டச் சங்கம் முயற்சிசெய்யவில்லையென்று சிலர் குறைகூறுவது கேட்டுள்ளேன். "செந்தமிழ்"ப்பத்திரிகை வாயிலாக வெளிவரும் விஷயங்களும், சங்கம் பதிப்பித்து வெளியிட்ட நூல்களும் பொதுஜனங்கட்கு உபயோகமற்றனவென்றும், அதனாற் சங்கத்தின்முயற்சிகள் தக்கவழியிற்செலுத்தப்படவில்லையென்றும் பழிகூறுவர் சிலர். ஆனால் இத்தகையோர் மனக்காட்சிவிசாலமற்றதென்றே சொல்லவேண்டும். சின்னாள்முன் தமிழ்ப்பாஷையடைந்திருந்தநிலைமையையும் தற்பொழுது அதற்கு இச் சங்கத்தின் காரணமாய் உற்றிருக்கும் ஸ்திதியையும் கவனித்தால் இவ்வாறு பழிகூறற்கு இடமிராது. சங்கமேற்பட்டகாலத்திற்குமுன் தமிழ்க்கலைஞர் பலருமிருந்தனராயினும் அவர் ஆங்காங்கு குடத்திலேற்றிய விளக்கைப்போலப் பதுங்கிக்கிடந்தனர். தமிழபிமானிகளை ஒருவன் விரல்களாற் கணக்கிடலாகும். பண்டைக்காலத்து வழக்கம் போல ஆசிரியனைத்தேடி மாணவர் கல்விகற்கப்போகும் சம்பிரதாயம் இல்லாததால், நாட்டில் தமிழொளி மங்கலடைந்தேயிருந்தது. அக்காலத்து ஆங்கிலங்கற்றுவந்தஆடவர் பெரும்பான்மையரும் தமிழையுந் தமிழாசிரியனையும் அசட்டைசெய்துவருவது வழக்கமாயிருந்தது. அம்மையப்பபிள்ளையை மாணவர்கள் படுத்தியபாடுகள் யாரே அறியார்! ஆகவே தமிழ்நாட்டில் நல்லாசிரியனைநாடித் தமிழ்படிப்பாருமில்லை. பள்ளிக்கூடங்களில் பரீக்ஷைகட்காகக் கற்பிக்கப்பட்டுவந்த தமிழ்க்கல்வியும் பயனொன்றும் விளைக்காது வீணேமுடிந்தது. தமிழ்ப்பாஷையின் கிளர்ச்சியுங்குன்றிவந்தது. செல்வாக்கும் குறைந்தது. இத்தகையிடரிலகப்பட்டு வருந்தும் தமிழை வளர்க்கும்பொருட்டே ஸ்ரீமான்-பாண்டித்துரைத்தேவரவர்கள் இச்சங்கத்தை நிறுவியது. சுவையினுங் கவித்திறத்திலும் பொருள்விளக்குமாற்றலிலும் ஏனையபாஷைகளுக்குச் சற்றுங்குறையாது தொன்றுதொட்டு வழங்கிவரும் நம் ஜீவபாஷைக்கு



ஜனங்களின் அனாதரவாலேற்பட்ட தள்ளாட்டத்தைப்போக்கி அதற்குயிரும் வலியும் பெருக்கி, அபிமானத்தோடெல்லாரும் அதைக் கொண்டாடி மேன்மேலும் அதன் மேன்மையோங்க முயற்சிசெய்யத் தூண்டிவருவது இச் சங்கமன்றோ! இப் பேரவையிற் பண்டிதசிகாமணிகளும் தமிழபிமானிகளும் ஒருங்கே கூடியிருக்கும் இவ் வானந்தக் காட்சி, பதினைந்து வருடங்கட்குமுன் காண்டலெத்துணை அரிதாயிருக்குமென்பது சொல்லவும்வேண்டுமோ? தமிழ் ஏற்கனவே வனப்புந் திறமும்பெற்றுத் தென் இந்தியாவின் பூர்வீகநாகரிகத்திற்குச்சாதகமும் இருப்பிடமுமாகியிலங்கியதோடு, நாம்குழவிப்பருவமுதல் எங்கும்யாண்டும் இன்பினும் துன்பினும் நம் தாய்ப்பாஷையாகப்பயின்று வருவதற்குரிய பாஷையாயிருந்தும், சமீபகாலத்திலே அதைச்சீராய்ப்பேசுவதிலும் கற்பதிலும் பரப்புதலிலும் நாமாசைகொண்டவராய்க் காணப்படுகின்றோம். இந்தஸ்வபாஷாபிமானம் நம்மிடம் ஜனித்து வளர்தற்கு இச் சங்கம் புரிந்த உதவி பெரிதேயாகும். இத்துடன் நில்லாது, அறிஞர் யாவரும் தம்மாலீட்டப்பட்டுள்ள கலைஞானத்தைப் பலருமறிந்துய்யச் "செந்தமிழ்"ப்பத்திரிகையில் வெளியிட இடங்கொடுத்துத் தமிழரின் ஞானப்பெருக்கத்திற்கு ஏதுவாயும் நம் சங்கம் நிற்கின்றது. பன்னாண் முன்னரே பதுங்கியொளித்த தொன்னூல்பலவும்துலங்கப்பதித்துத் தமிழர்க்கு மனமகிழ்ச்சி ஏராளமாய் ஊட்டி வந்திருக்கின்றது. ஈண்டு வேறொருவிஷயமும் கவனிக்கத்தக்கது. நம் பாஷையை மாணவர் மறந்திடச்சர்வகலாசாலையார் வரையற்றவுபாயங்கள் இப்பொழுது சில வருடங்களாகச் செய்துவருகின்றனர். சின்னாண்முன்னர் ஆங்கிலக் கல்லூரிகளில் பெயருக்காவது தமிழ்ப்பாடங்கள் உயர்தரப்பரீட்சைகட்கும் ஏற்பட்டிருந்தன. இப்போழ்தோ அப் பட்டாங்கும் போய்விட்டது! ஆங்கிலப்பயிற்சிக்குத்துணையாக லோஜர்மன், காதிக், முதலான பாஷைகளின் தத்வங்களையும் ரகசியங்களையும் படிக்கநேர்ந்த இவ் வவசரத்தில் மாணவர் நாட்டுப்பாஷையான தமிழையும் படிக்க அவகாசங்கிடைப்பது எங்ஙனம்? அதுபற்றியே தமிழ்முதலிய தேச பாஷைகள் சர்வகலாசாலைப்பரீட்சைகளினின்று முழுதும்நீக்கிவிடப்பட்டனபோலும். நம்மாணவர்களிடையில் தமிழ் நடமாடாதிருத்தல் போதாதென்று நினைத்து, உருது அல்லது ஹிந்திபாஷையை நாம் பேசும் பாஷையாய்ச்செய்துகொள்ளவேண்டுமென்றும் ஆங்கிலங்கற்ற அற்புதர் அநேகர் தற்பொழுது கூறுவதுமுண்டு. பல்லாற்றானும்

இங்ஙனம் நம் அரும்பெறலன்னையாம் தமிழ்மாதை அலங்கோலப் படுத்த முயன்றுவரும் இத் தருணத்தில், நம் சங்கம் ஆதிமுதல் ஆங்கிலக் கல்விச்சாலைகளிற் படிக்கும் மாணவர்கட்குத் தமிழ்ப்பரீக்ஷைகள் ஏற்படுத்தி, விஜயிகட்குப் பரிசுகளுமளித்து, தேசியச்சிறுவரிடத்துத் தமிழின் சீர்சிதையாமற் காத்துவருகின்றது. இவ்வருஞ்செயல்கட்குத் தமிழ்நண்பர் யாண்டும் சங்கத்திற்கு நன்றிபாராட்டுங் கடமைப்பாடுடையராவார்.

இளம்பிராயத்தில் நம் சங்கம் நிறைவேற்றியது வியக்கத்தக்கதேயாயினும், மேல் அதற்கு நேருங்கடமை சாலவும் பெரிதேயாகும். இக்காலத்தில் பிராசீனநாட்டார்கள் தம்முட் கிளம்பியிருக்கும் தேசியவபிமான எழுச்சியால் ஏற்பட்ட பலவிஷயங்களில் ஒரு முக்ய விஷயம் தேசிய வித்யாப்பியாசம். நாகரிகநாடுகளென்று மதிக்கக்கூடிய நாடுகளுள் இந்தியாநீங்கலாக வேறெவ்வொரு நாட்டிலும் அத்தேசத்திய பாஷையிலே கல்வி கற்பது வழக்கம். நம் நாட்டில்மாத்திரம் தாய்மொழியைவிட்டுப் பிறமொழியிற் கல்விபுகட்டிவருகிறார்கள். அன்றியும் இங்கு நிகழும் போதனாமுறையும் விதேசமுறையென்றே கூறவேண்டும். நந்நாட்டின் நன்மைவளர்ச்சிக்கு அம்முறையை மாற்றவேண்டுமென்ற எண்ணம் சென்ற சிலகாலமாக ஜனங்களின் மனதைப் பற்றியிருக்கின்றது. இவ்விஷயத்தை ஆராய்ந்துள்ளோர்யாவரும் நந்நாடு நலன்மிகப்பெறவேண்டுமானால், நங்கலாசாலைகளிலும் ஏனைய பள்ளிக்கூடங்களிலும் கல்விகற்கக் கருவியாகநடைபெறவேண்டியவை நந்நாட்டுச்செம்மொழிகளே என்கின்றனர். எவ்வாறு பழக்கமில்லாத உணவைப்புகட்டினால் அது சீர்ணமாகாது தேகத்திற்கு அஹிதம் விளைக்கின்றதோ, அதுபோலப்பிறமொழிவழிக் கல்வியூட்டப்பெற்றால் அது நமக்குரியதாய் நிலைத்துப்பயனளிப்பதில்லை என்பது அவர்கள் திண்ணமான கொள்கை. "கல்வியினூங்கில்லைச்சிற்றுயிர்க்குற்றதுணை" என்று கூறியது ஆங்கிலமொழிவழக்கினிற்கும்கல்வியைமாத்திரந்தானா உத்தேசித்துக்கூறியது? நம் நாட்டார் பலரும் ஆங்கிலத்தில் கல்விபயில ஆற்றலற்றவர்களாயிருக்கிறார்கள். அவர்கட்குப் புத்திநுட்பமெவ்வளவுதான் இருந்தபோதிலும், ஆங்கிலம்பயில அளவில் ஊதியச் செலவு வேண்டிவருவதால், வறுமையின்கொடுமையால் ஆங்கிலவழி அணுகவும் அவர்களால் முடியாது. அதனால் தேசியபாஷையில் கல்வி



கற்குமுறை ஏற்படாவிட்டால் நம்மவர் பெரும்பான்மையரும் அறிவொளியற்றவராய்ப் பூதேவிக்குப் பாரமாய் முடிவர். "ஒரு மனிதனை அவன் வித்யாதனம்பெறுதற்குமுன் னிருந்ததைவிட மிகச்சிறந்த வேலைக்காரனாக்குவதற்கு மாத்திரமன்று, ஒரு வேலைக்காரனை முன்னினும் மிக்க நலம்பொருந்தியவனாக்கவும் நாம் கல்வி ஆவசியகமென்று தேர்ந்துரைக்கின்றோம்" என்றார் ஸர் ஜான்லபக்கென்ற ஆங்கில கலைஞர். மனிதனுக்கு நலமளிக்குங்கருவி கல்வியேயாகும். பற்பல விஷயங்களை ஆய்ந்தறிந்து, நற்குண நற்செய்கைகளமையப்பெற்று, பௌதிகம், மானவிகம் ஆமுஷ்மிகம் ஆகிய எல்லாக்காரியங்களிலும், செவ்வனே ஒழுகுதற்குக் கல்வி இன்றியமையாத ஸாதனமாகும். நம் நாட்டு ஜனசமூகம் பொதுவாய்க் கல்வியின்பயனடைந்துய்யவேண்டுமானால், நம்பால் இயற்கையிலேயே அமைந்துள்ள நம்முன்னோர் விளக்கிய உயர்ந்தவுண்மைகளைத்தெற்றெனவிளக்கும்தேசியபாஷையில் கல்வியெய்தப்பெறவேண்டும். ஒரு தேசத்தாராவது தம் நாட்டுப் பாஷையாலன்றி வேறொரு ஸாதனத்தாலும் ஒருபொழுதும் உண்மையாக நாகரிகத்தையும் கல்வியையும் பெற்றிலர் என்பது சரித்திரவாராய்ச்சியால் விளங்கும். ஒரு ஜாதியாரின் ஒற்றுமைவளர்ச்சிக்கு, அவரதுமொழியும், அம்மொழியிலமைந்த நூல்கள்விளக்கும் அரும்பெரும்போதனைகளும், அவர் அப்போதனைகளின் பயனாய்க் கைக்கொண்டனுஷ்டித்துவரும் ஒழுக்கங்களும் உதவிக்கருவிகளாய் ஏற்படும். நம்மவர் முற்பட்டுயர ஆங்கிலம்போன்ற விதேசபாஷையின் அறிவால் அதிகம் பலன்விளையுமென்று நினைத்தல் பிழையாகும். ஆங்கில சாம்ராஜ்யத்தினது பற்பல அங்கங்கள் தம்முள் ஐக்யமுற்று, அவற்றின் பரஸ்பரஸஹவாஸத்திற்கு எத்தனையோ ஆவசியகமாகும் ஆங்கிலமொழியின் உபயோகத்தை யான் குன்றக்கூறவில்லை. ஆனால் ஒரு ஜாதியார்க்கு உரியனவான உயர்ந்த மனோபாவங்களும் உத்தம உயிர்வாழ்க்கைக்குவேண்டிய உண்மைகளும் உபதேசங்களும் அவர்களாண்டுவரும் ஸ்வபாஷையில் முன்னர் அமைக்கப்பெற்றனபோல இன்னும் அமைக்கப்பெற்றால்மாத்திரமே பயன்படுவனவாம். ஒவ்வொருநாட்டுமக்கள் திரட்சிக்கும் ஏனையநாட்டுமக்கள்தொகுதிகட்கில்லாத சிறப்புக்குணங்கள் உள்ளனவாகையால், வையகத்தின் அறிவுவிசாலத்திற்கும், நல்லொழுக்கப்பெருக்கத்திற்கும், நல்வளர்ச்சிக்கும், நாகரிகக்கிளர்ச்சிக்கும் அவ்வம்மக்கள் தொகுதியும் அவரவர்க்குரிய

விகிதம் உதவவேண்டும். அம்மாதிரி நம்மவரும் உதவவேண்டுமானால், நம் தாய்மொழிவளர்ச்சியாலேதான் அவரினின்று அவ்வுதவி உலகம் பெறும். நந்நாட்டு எல்லாமக்கட்கும் ஆங்கிலங்கற்றுத்தேர்தலியலாது. அவ்வாறியன்றாலும், அம்மொழியின் இயல்புக்கு முற்றிலும் மாறாகும் நம்மவர் கருத்துக்களைத் தெரிவிப்பதற்குரிய இயற்கைக்கருவியாய் அப்பாஷை ஒருகாலுமமையாது. இக் காரணத்தாற்றான் ஒவ்வொரு இறத்தாரின் வித்யாபிவிருத்திக்கும் அவ்வவரது தாய்மொழியே கருவியாகவேண்டுமென்று சாதிப்பது. தாய்மொழியிற் கல்விகற்றால்தான் அக்கல்வி அம்மொழியாளர்க்கு நிலையுற்றவுடைமையாகும். அக் கல்வியே கற்றவர்க்குக் கேடில் விழுச்செல்வம். அவ்விதங்கற்ற கல்வியே ஒருவனுயிரிடத்தே தங்கி 'எழுமையுமேமாப்புடைத்து' அதனால்,

விலங்கொடுமக்களனையரிலங்கு நூல்
கற்றாரோடேனையவர்.

என்ற திருக்குறளின் கருத்தையறிந்து, நந்நாட்டில் மனிதப்பிறப்பைக் கடவுள்கிருபையாற் பெற்றவர் மிருகங்களாகத்திரியாமலிருக்க, நம் தாய்மொழிவாயிலானே வறியோரும் கல்வியும், அதினின்றுவிளையும் அறிவும் பெறற்கு இச் சங்கமும் சங்கத்தினங்கத்தினர்களும் விடா முயற்சிசெய்யவேண்டியது முக்கியகடமை என்று கூறவேண்டும்.

தமிழ்மொழி வாயிலாக இக்காலத்திற்கேற்ற கல்விபயிற்ற முடியாதென்று சாதிப்பார்கூறும் ஓர் முக்கிய ஆக்ஷேபம் தமிழ்ப்பாஷையில் சாத்திரக்கலைகள் கற்றற்கேற்ற பாடபுத்தகங்களில்லாமையும், வேண்டியபுத்தகங்களியற்றமுடியாமையுமாம் ! வேண்டிய புத்தகங்கள் தமிழில் ஏற்படவில்லையென்பது மெய்யே; ஆனால் தேசீயபாஷையிலேயே, கல்விகற்பித்தலில் ஊக்கஞ்செலுத்தி முயன்றால் புத்தகங்களோ ஏற்படா? படிப்பவருளரேல், பாடபுத்தகங்கள் முறையேதோன்றும். இவ்விஷயத்தில் ஜப்பான்தேசம் நமக்கு நெறிகாட்டும். சகல நூல்களும் சாத்திரங்களும் ஜப்பான் பாஷையிலேயே போதிக்கப்படவேண்டுமென்ற உத்தேசத்தோடு கௌண்ட் ஒகூமா என்ற ஜப்பானியபிரபு 1882-ல் வஸிடா ஸர்வகலாசாலை ஏற்படுத்தினார். போதிய பாடப் புத்தகங்களில்லாமையால் நேருங்கஷ்டத்தை நீக்குவானென்றே அக் கலாசாலையில் ஓரச்சியந்திரசாலை அமைத்து, தக்கபுத்தகங்கள் வரையச்செய்து பதிப்பித்தார். அங்கு சகல மேனாட்டுச்சாத்திர அறிவையும் மாணவர் ஜப்பான் பாஷைவாயிலாக இப்பொழுது பெறுகின்றனர். அக் கலாசாலையில் இப்பொழுது 180-போதகாசிரியர்களும் 7000-மாணவர்களுமுளராம். ஐம்பது வருடங்கட்குமுன் ஜப்பான் பாஷையின் நிலைமை நந்நாட்டில் நம்மொழிகள் இப்பொழுதடைந்திருக்கும் நிலைமைக்குச் சற்றேனும் மேலதாயிருக்கவில்லை. இந்தியாதேசத்தும் ஹரித்வாரத்துள்ள குருகுலத்தில் உயர்தரக்கல்வி தேசீயபாஷையொன்றில் செவ்வனே பயிற்றப்பெற்றுவருகிறது. பரோடாராஜ்யத்தில் "கலாபவன்" என்ற கைத்தொழிற்பாடசாலையில் சாத்திரங்களனைத்தும் ஸ்வபாஷையிலே கற்பித்துவருகின்றனர். புனாவில் சமீபத்தில் ஏற்படுத்தப்பெற்ற ஸ்த்ரீவித்யாலயத்தும் அவ்வாறே முயன்றுவருகின்றனர். அஃதற்றாக, தமிழில் உயர்தரக்கல்வி பயிற்றல் முடியாதென்றகூற்று வீண்கூற்றேயன்றோ? நந்தமிழில் இற்றைப்பொழுதே அரும்பெரு நூல்கள் அளவிலாதமைந்துள. 'சுதேசமித்திரன்' போன்ற தினசரி பத்திரிகைகளும் 'விவேகபோதினி' 'விவேகசிந்தாமணி' போன்ற நற்றமிழ் மாசிகைகளும் நாடெங்கும் நடைபெற்று, சமயோசிதம்போற் சொற்றொடர்களமைத்துத் தமிழ்மொழியைப் பெருக்கிவருகின்றன. இத்தகைய இருநிதி தமிழகத்திற்குக்கிடைத்திருக்க, அந்நிதியம் நம் முன்னோர்கட்குக் கல்வித்தேர்ச்சியும் நாகரிகமுமடையப் பெரியவோர் கருவியாய்நின்றதுபோல நம் பின்னோர்கட்குமவ்வாறு பயன்படுமாறு நம்மாற்போற்றப்படாவிட்டால், நாம் நம் புதல்வரின் பழிமொழிக்காளாகவேண்டும். அதனால் இக்காலத்திய கல்விமுறைக்கிசைந்த பாடங்கள் படித்தற்குத்தக்க புத்தகங்கள் தமிழிலெழுதப்பெறவேண்டும். இதற்கு ஆங்காங்குத் தனித்தனியாய் ஒவ்வொருவர் உழைத்தாற்போதாது. நந்தேசவளர்ச்சிக்குவேண்டும் விஷயங்கள் ஒவ்வொன்றையும் நம் பாஷையில்விளக்கிப் புத்தகங்களெழுத இச்சங்க மேற்பாடு செய்யவேண்டும். மேனாட்டுச்சாத்திரங்களையும் ஏனைய படித்தற்குரிய விஷயங்களையும் தென்மொழியிற் செவ்வனே கைம்மாறுகருதாமல் எழுதியுதவுதற்கு "பயன்றூக்கார் செய்தவுதவி நயன்றூக்கின் நன்மை கடலிற்பெரிது" என்ற குறளையுணர்ந்த மிக்கோர் ஏற்படாராயின்; அத்தகைய புத்தகங்களெழுதவல்லார்க்குக் கைம்மாறாக நன்கொடை

யாதேனுமளிக்க நிதியொன்று ஏற்பட்டால் புத்தகங்கள் எளிதில் வெளிவரும். இப்புத்தகங்கள் இப்பொழுது ஆங்கிலத்தில் Jack's People's Books என்றும், Home Library Series என்றும் பெயர்கள் வழங்கும் புத்தகத்தொகுதிகளில் வெளியிடப்படும் புத்தகங்களைப்போல எழுதப்பெற்று இச்சங்கத்தால் நியமிக்கப்படும் சில பிரபல வித்வான்களுடைய பொதுமேற்பார்வையில் பிரசுரஞ்செய்யப்படவேண்டும். இராஜாங்கத்தாரும் சர்வகலாசங்கத்தாரும் நம் பாஷையின் மேம்பாட்டிற்காகச் சிரத்தைகாட்டினாலன்றிப் பாஷாபிவிருத்திக்கு வழிகள் ஏற்படுதலிலகுவன்று என்று நீவிர் நினைப்பீர்களானால், ராஜாங்கத்தார்க்கும் கலாசாலையார்க்கும் ஊக்கம் இவ்விஷயத்தில் உண்டாகும்படி செய்யவேண்டுவது நம் தமிழ்ச்சங்கத்தின் கடமையாகும். ஆனால் தமிழ்முதலிய தாய்மொழிகளை ஆதரிப்பதில் சென்னைச்சர்வகலாசங்கம் எவ்வளவு முன்னின்று முயன்றுவருகிறதென்பதை நினைக்குங்கால், சர்வகலாசங்கத்தின் உதவி ஏற்படுமோவென்று ஐயமுற இடமுண்டாகின்றது. அது எவ்வாறாயினும் நம்சங்கத்தின்பொறுப்புச் சற்றும் மாறாது. சின்னாள்கட்குமுன் உர்தூ சர்வகலாசாலை ஏற்படுத்தக்கருதி மாட்சிமைதங்கிய நிஸாம்கோமான் அக்கருத்து நிறைவேறுதற்பொருட்டு உர்துபாஷையில் தக்கபுத்தகங்கள் வரைதற்குப் புலவர்குழாம்நியமித்திருக்கின்றனர். நமது ஆந்த்ர சகோதரர்களும் வங்காளமாகாணத்தார்களும் மேனாட்டுச்சாத்திரப் பயிற்சிக்கும் ஏனைய நவீனகலைத்தேர்ச்சிக்கும் பயன்படத்தக்க புத்தகங்கள் அவரவர் தாய்மொழியில் எழுதிவருகின்றனர். முற்காலத்தில் ஞானமார்க்கத்தைநாடி வீடுபெறமுயன்ற நம்முன்னோர் லௌகிக கலைகளையும் நன்கு கற்றுவந்தனர். பொருளும் இன்பமும் புருஷார்த்தம் நான்கனுள் அடங்கியிருத்தலே அதற்குப்போதுமான சான்றாகும். லௌகிககலைகளுள் இயற்கைச்சாத்திரங்களும் வளர்க்கப்பெற்று வந்தனவென்பது Hindu Adchievement in Exact sciences என்ற தலைப்பின்கீழ் இப்பொழுது The Modern Review என்ற மாசிகையில் வெளிப்படுத்திவரும் விஷயத்தாலும் Dr. Brojendra Nath Seal என்ற பேரறிஞர் எழுதிய The Physical Science of the Hindus என்றும் The Positive Sciences of the Hindus என்றும் பெயர்கள்புனைந்த அரிய நூல்களாலும் நன்கு விளங்கும். ப்ராசீன சாத்திரங்களையும் நவீன சாத்திரங்களையும்



தமிழ்மொழியில் விளக்குதல் சாத்தியமோவென்று ஐயுறுவார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையவர்கள்செய்த "நூற்றொகைவிளக்கம்" என்ற அருமையான நூலை வாசித்திரார்போலும். எவ்வகைமுயற்சியையும் பயனறச்செய்வது ஐயுறுதலேயாதலால், ஐயந்தெளிந்து நம்பாஷையின் ஆற்றலைப்பெருக்கித் தேசீயவித்தியாப்பியாசத்திற்கு வேண்டும் புத்தகங்கள் ஏராளமாய் எழுதியுதவக்கடன்பட்டவராவார் ஆங்கிலங் கற்ற தமிழர். இவ்விஷயமாக நம் சங்கத்திற்கேற்படும் பொறுப்பின் நிறைவேற்றம் அன்னோரையே சார்ந்ததாகும். அன்னோர்பயின்ற ஆங்கிலவித்தைக்குவேண்டிவந்த தனச்செலவில் அற்பபாகமன்றோ அவர் கைப்பொருளினின்று செலவானது? அஃதவ்வாறாக, அன்னோர் நலமடைய ஊதியமுதவிய ஊரார்க்கு நன்றிசெலுத்த வித்தியாதனத்தை ஊரார்மாட்டு விநியோகஞ்செய்தலினுஞ் சிறந்தமார்க்கம் என் சிற்றறிவுக்குத் தோன்றவில்லை. ஸ்ரீமான். R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் "செந்தமிழ்" வாயிலாய் இவ்விஷயத்தில் உழைத்துவருவது மிகவும் மெச்சத்தக்கது. நிற்க, நாம் மேம்பாடடையச் சாத்திரப்பயிற்சிமாத்திரம்போதாது. நம்மவர்க்குத் தொன்றுதொட்டுரிய தாய்நிற்கும் இயற்கைநலங்களும் அநுபவசித்திகளும் பரக்கவிளக்கும் ஆன்றோராக்கிய அரியபெரியநூல்களைக் கற்றறிதலும் இன்றியமையாததாகும். ஒளித்தோடிய ஓலைச்சுவடிகளைக் கண்டுபிடித்துக் காலப்போக்கையும் பொருட்செலவையும் சற்றுங்கவனியாது விடாவாராய்ச்சிசெய்து, தீர்க்ககாலமாய்த் தொன்னூல்பலவும்பதிப்பித்து, படிப்போர்மனதிற்கு மகிழ்வூட்டி நல்லிசைபெற்றிலங்கும் புலவர்பெருமானாகிய மஹாமஹோபாத்யாய ஸ்ரீமான் சாமிநாதையரவர்கள் தமிழகத்திற்குப்புரிந்துவரும்பேருதவியை இங்கு வியந்துகூறற்பாலது. நம் பண்டிதசிகாமணி வெளிப்படுத்தும் பண்டைத் தமிழ்நூல்கட்கு வரைந்துள்ள ஆராய்ச்சிமுகவுரைகளே நவீனக்கருத்துக்களை நயம்பட விளக்குமாற்றல் நந் தமிழ்மொழிக்குளதென்பதைப் புலப்படுத்துகின்றன. இலக்கியப்பயிற்சியோடு சரித்திரப்பயிற்சியும் லௌகிகவாழ்க்கைக்கு மிக்க உபயோகமுள்ளதாகும். சரித்திரநூல்கள் நம்பாஷையிற்சற்றுமில்லையென்ற பெருங்குறை நிலைத்துநிற்கின்றது. அதை நீக்குவதும் நங்கடமையாகும். பண்டைக்காலமுதல் உயர்ந்த நாகரிகமும் யாவரும் வியக்கத்தக்க சொற்சுவை பொருட்சுவைநிறைந்த சிறந்த இலக்கியமும்பெற்றுவிளங்குவதும், புலவர்பலரால் புகழ்ந்து

பாடப்பெற்ற முடிமன்னர்களால் ஆளப்பட்டுவந்ததுமான தென்னிந்தியாவின் சரித்திரம் இதுகாறுமெழுதப்படவில்லை. 'கரிகாலச்சோழன்' 'சேரன் செங்குட்டுவன்' 'வேளிர்வரலாறு' 'சோழவம்ச சரித்திரம்' என்பன நம்மவர் சரித்திரவாராய்ச்சிசெய்ய ஆற்றலுடையரென்பதை நன்குவிளக்கும்.

ஒருவன் உண்மையில் நல்லறிவடைந்து நலம்பெறவிரும்பினால் அவன் சாஸ்திர நூல்களிற் சிறிதேனும் அறிவும், இலக்கியத்திலும் சரித்திரத்திலும் சாமானியப்பயிற்சியும் உடையவனாதல் இன்றியமையாததாகும். நந்நாட்டில் அறிவும் நலனும் ஒழுங்குறப்பெருக நம் சங்கத்தங்கத்தினரெல்லோரும் ஊக்கமும் ஒற்றுமையும்பொருந்த உழைத்தல்வேண்டும். தேசநலன்விளைத்தற்கு எத்தனையோவழிகளுள. நாடுவோர்க்கு அவை எளிதிற்றென்படும். ஆனால் உழைக்க இச்சையும் சங்கற்பமுமே வேண்டியவை. நந்நாட்டில் நல்லறிவுபரவ, பலருமொருங்கே முயற்சிசெய்தால்,

> ஆக்கமதர்வினாய்ச்செல்லுமசைவிலா
> வூக்கமுடையானுழை

என்ற தேவர் வாக்கிற்கிணங்க, காரியசித்தி நிச்சயமாகப்பெறுவோம். 'மன ஊக்கத்தோடு உண்மையாய் உழைப்பவன்வழி நலமெப்பொழுதுஞ்சேரும்' என்று Carlyle என்ற ஆங்கில ஆசிரியருங்கூறுகின்றார். வள்ளுவனாரின் கூற்றுமஃதேயன்றோ?

> உடையரெனப்படுவதூக்கமஃதில்லா
> ருடையதுடையரோமற்று

என்ற குறளால் ஊக்கத்தின்பெருமையுஞ் செவ்வனே விளங்கும்.

சீரியர்காள்! பண்டிதசிகாமணிகள் நிறைந்த இச்சபையில் புதிதாய் நான் கூறக்கூடியதொன்றுமிலதேயாயினும், சிற்சிலவமயங்களில் யாவரும் நன்றாயறிந்த சிலவிஷயங்களை வற்புறுத்திக்கூறுதலால் நற்பயன்விளைவது நம்மனுபவமானதுபற்றி நான் இவ்வார்த்தைகளை இங்கு மொழியத்துணிந்தேன். என் புன்சொல்லைப்பொறுமையுடன் நீங்கள் கேட்டதற்கு வினயத்துடன் வந்தனம் சமர்ப்பிக்கின்றேன். ஆலவாயரன்றிருவருளால் நம்மதுரைத் தமிழ்ச்சங்கம் "ஆநாணிலைறமதியலர்தரு பக்கம்போ லொளினொளின்" நல்லொளிபரப்பித் தமிழகத்திற்குப்பயன்பட்டோங்கி வளரக்கடவது!

> எல்லாம்வல்லவீசனருளென்றுமடைந்தே தலையறிஞர்
> பல்லார்சேர்நம்சங்கமதின்பண்புசிறக்கப்புரப்பேற்ற
> நல்லாரேத்தும்சேதுபதிநாளும்நலம்பெற்றோங்கதமிழ்
> வல்லாரோடுசெந்தமிழும்வாழ்கவளர்ந்துமகிதலத்தே!

---



# சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம்

## முதற்பாகம்.

## விக்கிரமாதித்தனது முன்னோர்கள்.

**சளுக்கியர் பெயர்த்தொகுதி.**

சளுக்கியரென்பவர் சௌளுக்கியரென்றும், சுளுக்கியரென்றும், சாளுக்கியரென்றும், சளுக்கரென்றும், சலிக்கியரென்றும், சல்கியரென்றும், சோலங்கி அல்லது சோலகி என்றும் பலவிதமாக நூல்களிலும் சாஸனங்களிலும் கூறப்பட்டிருக்கின்றனர்.

**சளுக்கியரின் பெயர்க்காரணமும் புராதன வரலாறுகளும்.**

பிரமதேவர் சந்திசெய்துகொண்டிருக்கையில் தேவேந்திரர் ஒரு சமயம் அவ்விடம்வந்து பூலோகத்தில் பாவம் அதிகரித்துவந்ததினால் துஷ்டநிக்ரகம் செய்யத் தகுந்த ஒருவீரனைச்சிருஷ்டிக்கும்படி அவரைப் பிரார்த்திக்க அப்போது அவர் தம் சுளுகத்தை (ஆசமனத்துக்காகக்குவித்த உள்ளங்கையை, நோக்க, அதிலிருந்து சுளுகன் என்ற வீரனுண்டானனென்றும், அவனுடைய பரம்பரையாருக்கே சௌளுக்கியர் அல்லது சுளுக்கியரென்ற பெயர் வழங்கலாயிற்றென்றும் விக்கிரமாங்கதேவசரிதத்தில் (1) பில்ஹணர் கூறியிருக்கிறார். ஹந்தார்க்கிசாஸனத்திலும் (2) இவ்வாறே காணப்படுகிறது. இவைகளுக்குச்சற்று மாறுபாடாக ஹேஹய அல்லது கலசுரிகுலத்தைச்சார்ந்த இரண்டாவது யுவராஜனது சாசனத்தில் (3) துரோணாசாரியார் தம்மைப் பாஞ்சாலதேசத்து அரசனாகிய துருபதன் அவமதிக்க அவனைச்சபித்தபோது அவருடைய சுளுகத்திலிருந்து சளுக்கியர் உற்பத்தியாயினரென்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றோரிடத்தில் (4) அவர் வடதேசத்துமுனிவர் ஹாரீதபஞ்சசிகரது சுளுகத்திலிருந்துதோன்றினவ

---

1. விக். சரி. அத்-1, சு, 31-56
2. J. R. A. S. IV. 8.
3. Epi. Ind. I. 257
4. Ind. Ant. VII. 74; Bom. Gaz. IV. 389

ரெனக் கூறப்பட்டிருக்கின்றார்கள். இவ்வேறுபாடுள்ள வரலாறுகளால் 'சுளுகம்' என்னும்பதத்தைக்கொண்டே சளுக்கியரின் பெயர்க்காரணம் கற்பிக்கப்பட்டதென்று விளங்குகிறதேயன்றி, சரித்திரசம்மதமானவரலாறு யாதொன்றும் கிடைத்தபாடில்லை.

**சளுக்கியர்குலம்.**

தங்களுடைய மெய்க்கீர்த்திகளில்(5) சளுக்கியர் தங்களைச்சந்திரகுலத்தினரென்றும் ஹாரீதிபுத்திரரென்றும் மானவியகோத்திரத்தாரென்றும் சத்தியாசிரயகுலதிலகரென்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சண்ட்பர்டேவின் பிருதிவி ராஜராஸா (6) என்னும் நூலில் அவர் அக்னிகுலத்தினரென்று சொல்லப்பட்டிருக்கின்றனர். ஆனால் சாஸனங்களிலும் பல வேறுநூல்களிலும் இவ்வாறு சொல்லப்பட்டிராமையாலும் இதற்குப் போதுமான ஆதாரம் காட்டப்படாமையாலும் இதைத் துணிந்துரைக்கவிடமில்லை(7). நிற்க

சளுக்கியரை வேளிர் அல்லது வேற்குலத்தவரென்று ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்கள் (8) அபிப்பிராயப்படுகிறார்கள். அதற்கு அவர் கூறும் முக்கிய ஆதாரங்களாவன: 'தாரகாரியும் சளுக்கியர் வேந்தனும் வேனிலாளனும் வேளெனலாகும்' என்னும் பிங்கலந்தையும் 'வேள்புலவரசர்சளுக்குவேந்தர்' 'கேழல் வேள்புலவரசர் கொடியே' என்னும் திவாகரமும் 'வேள்குலத்தரசர்' 'வேள்குலச் சளுக்கியர்' என்னும் பிற்காலத்துச் சோழசாசனங்களுமேயாம்(9). வேள் என்ற சொல்லடியாக வழங்கிவரும் வேளாளர் என்னும் குலப்பெயரும் வேளுக்கு வேள்புலம், வேளூர், வேளூரகம், வேளாபுரம், வேளகம், வேள்பட்டி முதலிய ஸ்தலப்பெயர்களும் இதனையே வற்புறுத்துமென்பர் (10). தமிழ்நாட்டில் வேளிர் என்பார் குறுநில

5. Hemachandra's Dwasraya Kosha; Jinaharshana's Vastupalacharita, கடக்சாஸனம் Ind. Ant. XXI. 167. கொரிமல்லிசாஸனம் Ind. Ant XIV. 50-55.
6. Todd's Rajasthan; Ojha's History of the Solankis.
7. Ind. Ant. XL. 25
8. வேளிர் வரலாறு 9.
9. S. I. I. III. Nos. 28, 73.
10. வேளிர் வரலாறு-14.



மன்னராயிருந்தனரென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்தது. இவர்கள் வேளிர் என வழங்கப்பட்டதற்குக்காரணம் முடியுடைவேந்தரது விருப்பத்துக்கு உரியவராயிருந்தனரென்பதும், யாகசமயத்திற்றோன்றினரென்பதும்,நிலத்தை உழுதுபயிரிட்டுவந்தனரென்பதும், அல்லது ஏனையோர்க்கு அன்னமளித்துப்புரக்கும் அரியவுபகாரச்செயலுடையரென்பதும் முதலாய பல்வகையினவாகக்கூறப்படுகின்றன(11). ஆனால் இவைகளெல்லாம் வேளென்னும் பதத்திற்கு அகராதியிற்காணப்படும் பலபொருள்களைக்கொண்டு மனம்போனபடி வேளிருக்கு வரலாறுகூறுவதேயன்றிச் சரித்திரசம்மதமானவையென்று அங்கீகரிக்கவிடமில்லை. இனி, புறநானூறு 201-ஆம் செய்யுளில் 'வடபால்முனிவன் தடவினுட்டோன்றி............நாற்பத்தொன்பதுவழிமுறைவந்த வேளிருள் வேளே' என்று இருங்கோவேள் சொல்லப்பட்டிருக்கிறான். இங்கே 'வடபால்முனிவன் தடவினுட்டோன்றி' என்பதற்கு, புறநானூற்றுஉரைகாரர் 'கதையுரைப்பிற்பெருகும் அது கேட்டுணர்க' என்றெழுதி 'தடவு' என்பதற்கு ஓமகுண்டமென்று பொருள்கூறியிருக்கிறார். இதை அங்கீகரிப்போமாயின் சளுக்கியர் அக்கினிகுலத்தவரென்பதேயுசிதமாகும். ஆனால் அவ்வாறு துணிதற்கிடமில்லையென்று மேலே கூறியுள்ளோம். யாக(வேள்வி)சமயத்தில் தோன்றினரென்னும் கதைகளுக்கியைய 'தடவு'என்பதற்கு யாகபாத்திரம் என்று பொருள் கூறுவதே பொருந்துமென்று ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்கள் (12) அபிப்பிராயப்படுகின்றார். ஆனால் தமிழில் 'தடவு' என்பதற்கு 'தடவென்கிளவிகோட்டமுஞ்செய்யும்' என்னும் தொல்காப்பியச்சூத்திரப்படி (13) வடமொழியில் சுளுகமென்றுகுறிப்பிட்ட குவிந்த உள்ளங்கையே என்று பொருள்கொள்ளுதல் மேற்கூறிய பல புராதன வரலாறுகளுடன் ஒப்பமுடிவதால் விசேஷப்பொருத்தமுடையதாகுமல்லவா?

இனி ஸ்ரீமான். தே. ரா. பண்டாரகர் (14) சளுக்கியரை, கூஜர் குலத்தைச்சார்ந்தவரென்று அபிப்பிராயப்படுகிறார். இவர்கள் வெளி

11. ந. மு. வேங்கடசாமி நாட்டாரின் வேளிர்வரலாற்றின் ஆராய்ச்சி pp. 20, 21. 27.
12. வேளிர்வரலாறு 12.
13. சொல்லதிகாரம் - உரிச்சொல்லியல். 23.
14. Ind. Ant. XL. லாடதேசம் கூர்ஜரத்தின் மத்தியதென்பாகமாகும். பின்பும் அப்பெயர் வழங்கிவந்துளது.

நாட்டிலிருந்துவந்து குடியேறினதனாலேயே அதுவரையில் லாடா என்று வழங்கிவந்த நாடானது கூஜர் ராஷ்டிரம் அல்லது குஜராட் என்று பெயர் வழங்கலாயிற்றென்பர். ஆனால் இதற்குச் சாசனமூலமான ஆதாரம் ஒன்றுமில்லையென்று அவரே ஒப்புக்கொள்ளுவதனால் அதை அங்கீகரிப்பது கூடாததாகும். மேலும் குஜராட் என்னும் நாட்டின்பெயரைக்கொண்டே அதிற்குடியேறினவர்களின் குலத்தை நிர்ணயிப்பது முடியாதகாரியம்.

**சளுக்கியரது ஆதியிருப்பிடம்.**

சளுக்கியர் ஆதியில் குடியேறினது சவலாக் (ஒன்றேகால் இலக்ஷம்) பர்வதத்தைச்சார்ந்த சபாதலக்ஷத்துத் தலைநகராகிய அஹிச்சத்திரமென்று தே. ரா. பண்டாரகர்(15)சாசன ஆதாரங்களைக்கொண்டு நிரூபித்திருக்கிறார். முதலில் அரசாளத்தொடங்கியது அயோத்தியென்றும் இதரதேசங்களைஜயிக்கவேண்டித் தெற்கு நோக்கிவந்தனரென்றும் பில்ஹணர் (16) சொல்லுகிறார். அயோத்தியில் ஐம்பத்தொன்பதின்மர் ஆண்டனரென்றும், பின்னர் பதினாறு அரசர் அயோத்திக்குத்தென்தேசமாகிய கங்காதீரத்தையும் சேர்த்து ஆண்டனரென்றும் மிராஜ் (17) கௌதம் (18) ஏவூர் (19)சாசனங்கள் விரிவாகக்கூறுகின்றன. ஆகையால் சளுக்கியர் வடதேசத்திலிருந்து தெற்குநோக்கிவந்தனரென்பது நிச்சயமாக விளங்குகிறது.

**முன் சளுக்கியர்.**

முன்சளுக்கியரில் முதலிற்கீர்த்திபெற்றுவிளங்கினவன் சத்யாசிரய ஸ்ரீ புலகேசிவல்லப மகாராஜன். அவன் நருமதையைக்கடந்து வாதாபி (நிஜாம் ராஜ்ஜியத்து பாதாமி) புரத்தை ராஜதானியாக்கிக் கொண்டான். அவனுடையபேரனாகிய இரண்டாம்புலகேசியின் காலத்தில் (கி. பி. 609 - 642-ல்) இக்குலம் உயர்ந்தோங்கிவிளங்கிற்று. இவன் தென்தேசத்தில் பல்லவர்களின் பலத்தையொடுக்கி அசுவமேதம் செய்து துங்கபத்திரிநதிதொடங்கி வடக்கே நருமதைக்கரை

15. Ind. Ant. XL. E.
16. விக். சரி. I. 63-4-5.
17. Ind. Ant. VIII. 18.
18. Ind. Ant. XVI. 23.
19. Ind. Ant. VIII. 15.



வரையில் ஏகசக்ராதிபதியாக விளங்கினான். இப்பரம்பரையரசர்களில் இவனே ஒப்புயர்வற்றவன். சீனதேசத்து யாத்ரிகராகிய யுவான் ச்வாங் என்பவரும் சளுக்கியரின் பராக்கிரமத்தைவியந்து, நருமதைக்கப்பால் வட இந்தியாவில் கன்யாகுப்ஜத்தை(கானோஜை) ராஜதானியாகக்கொண்டு ஏகசக்ராதிபதியாக விளங்கின சீலாதித்தன் அல்லது ஹர்ஷவர்த்தனனென்பவனைத் தென்னாட்டிற்கு வரவொட்டாமல் புலகேசி தடுத்துவிட்டதாகச்சொல்லியிருக்கிறார். இப்புலகேசியின்காலத்திலேயே இவன் தம்பியாகிய குப்ஜவிஷ்ணுவர்த்தனன் கோதாவரி கிருஷ்ணாநதிதீரமாகிய வேங்கிநாட்டின்மேற் படையெடுத்துச்சென்று அதனை ஜயித்து கீழைச்சளுக்கியநாடொன்று ஏற்படுத்தினான். இதற்கு ஒரு நூற்றாண்டுக்குப்பின்னர் சுமார் கி. பி. 757-ல் இரண்டாம் கீர்த்திவர்மன் ராஷ்டிரகூடகுலத்தைச்சேர்ந்த தந்திதுர்க்கனால் தோல்வியடைய, சளுக்கியகுலமே பலக்குறைவுற்றது.

**ராஷ்டிரகூடர்.**

அதுமுதல் கி. பி. 977 வரையில் இரண்டுநூற்றாண்டுகளுக்கு மேலே ராஷ்டிரகூடர்கள் தக்ஷிணத்தில் பிரதானவரசர்களாக இருந்தார்கள். இக்காலங்களிலெல்லாம் சளுக்கியர் பலகிளைகளாகப்பிரிந்து ராஷ்டிரகூடர்களின் ஆட்சியின்கீழ் சிற்றரசர்களாகத்தான் இருந்தார்களென்று ஊகிக்கப்படுகின்றது (20).

**பின்சளுக்கியர்.**

ராஷ்டிரகூடக்குலத்துப் பதின்மூன்றும் அரசனாகிய கொட்டிகனதுநாளில் பரமாரகுலத்து மாளவதேசத்தரசனாகிய ஸ்ரீஹர்ஷன் அல்லது சீயகன் என்பவன் கி. பி. 972-ல் தக்ஷிணதேசத்தரசர்களைத்தாக்கித் தலைநகராகிய மானியகேடத்தையும்(நிஜாம்ராஜ்யத்து மால்கேடையும்) கொள்ளையடித்தான். (21) கொட்டிகனுக்கு மருமகனாகிய கற்கரனது காலத்தில் அதுவரையிற் சிற்றரசராயிருந்த சளுக்கியரின் தலைவனாகிய தைலபன் இதுதான் தக்கசமயமென்றுகருதி சற்றேறக்குறைய

20. Ind. Ant. XII-II; Ind. Ant. XL. 41; Epi. Car. XI. cl 15 Epi. Report. 1904.
21. உதயபுரசாஸனம். Epi. Ind. I. 235.

கி. பி. 973-ல் கக்கலனையும் (கற்கரனையும்) ரணஸ்தம்பனையும் (22) வென்று ராஷ்டிரகூடக்குலத்து ஜாகவ்வா என்பவளை மணம்புரிந்து சளுக்கியகுலத்தின் கீர்த்தியை மறுபடியும் நிலைநாட்டினன்(23). இவனும் இவன் பரம்பரையாரும் பின்சளுக்கியரெனப்படுவர்.

**முன்பின் சளுக்கியரின் சம்பந்தம்.**

இப்பின்சளுக்கியர், பொதுவாக சளுக்கியகுலத்தைச்சேர்ந்தவரேயென்றாலும் முன்சளுக்கியரின் நேரான மரபினரல்லரென்றும், வேறொரு சிறுகிளையினரே என்றும் ஸ்ரீமான். ரா. கோ. பண்டாரகர் அபிப்பிராயப்படுகிறார்(24). ஆனால் அவர் இதற்கென்றுகூறிய இருகாரணங்களும் பொருந்தாவாம். அவர்கூறும்முதற் காரணம்:-முன்சளுக்கியர் தங்களை ஹாரீதி புத்திரரென்றும் மானவிய கோத்திரத்தாரென்றும் சொல்லிக்கொள்ள, பின்சளுக்கியரோ பெரும்பாலும் தங்களைச் சத்தியாசிரயகுலத்தவரென்று சொல்லிக்கொள்கின்றனர் என்பதேயாம். இது பெரும்பாலும் உண்மையேயாயினும் முன்சளுக்கியரில் மங்களீசன் கீர்த்திவர்மன் இவர்களன்றி மற்றெல்லா வரசர்களுக்கும் சத்தியாசிரயன்என்கிற பிருது வழங்கிவந்திருக்கிறது(25). மேலும் பின் சளுக்கியரும் தங்களை ஹாரீதிபுத்திரரென்றும் மானவிய கோத்திரத்தாரென்றும் சொல்லிவந்தனரென்பது மிராஜ் கௌதம் ஏவூர் சாசனங்களால் நன்கு வெளியாகிறது. ஆகையால் ஹாரீதி வமிசமும் சத்தியாசிரயகுலமும் ஒரேசந்ததியாக இருந்திருத்தல்வேண்டு

22. 'ரணஸ்தம்ப' என்னும் பதத்திற்கு ஒரு இடமென்று டாக்டர் எலியட்டும், ஜயஸ்தம்பம் என்று டாக்டர் பிலீட்டும் பொருள்கொள்ளுகின்றனர். இது தவறு. கக்கலனுடைய உறவினனாகிய ஒருவனுடையபெயராகவே இருத்தல்வேண்டும். மிராஜ், கௌதம், ஏவூர் சாஸனங்களின் சுலோகம் பார்க்க.
23. குண்டூர் சாசனம். Ind. Ant. XII. 270-1.
    கடக் சாசனம். Ind. Ant. XXI. 167-8.
    ஏவூர் சாசனம். Ind. Ant. XIII. 15.
    கௌதம் சாசனம். Ind. Ant. XVI. 23.
    J. R. A. S. IV. 12.
24. Early Hist. of the Dekkan. 44-58.
25. Bom. Gaz. Part II. ch. II.



மென்பது ஊகிக்கக்கிடக்கின்றது. இதைத்துணிந்துரைக்கவும் இடமுண்டு. ஏனெனில் கன்னடரண்ணகவியின் சளுக்கியவமிசாவளியிலிருந்து (26) முன்சளுக்கியருக்கு சத்தியாசிரயன் என்ற ஒரு மூலபுருஷனிருந்ததாக வெளியாகிறது. இச் சத்தியாசிரயனே அயோத்தியில் ஆண்டானென்றும் ஹாரீதிபுத்திரனென்றும் அதைப்பற்றியே அவன் மரபினர்க்கு சத்தியாசிரயகுலதிலகரெனப் பெயர்வழங்கலாயிற்றென்றும் இத்தகி சாசனத்தால்(27) நன்கு விளங்குகிறது. நிற்க, பின்சந்ததியாரின் 'மல்ல' பிருது முன்சந்ததியார் பெயர்வரிசையில் வழங்கவில்லை என்னும் பண்டாரகரது இரண்டாம்வாதமும் பொருந்தாது. ஏனெனில் முன்சளுக்கியருள்ளும் விக்கிரமாதித்தன் விநயாதித்தன் இருவருக்கும் முறையே ராஜமல்லன் யுத்தமல்லன் என்னும் பிருது உளது (28). இம் மல்லபிருதே பின்னிட்டு விசேஷித்துவழங்கலாயிற்று. மேலும் இவ் விருவகையாரிலும், மகாராஜாதிராஜன், பரமேசுவரன், பட்டாரகன், பரமபட்டாரகன், பிருதிவீவல்லபன் என்னும் அநேக வேறு பிருதுகள் பொதுவாக வழங்கிவந்திருக்கின்றன. எப்படியிருந்தபோதிலும், பிருதுகளின் ஒற்றுமை வேற்றுமையைக்கொண்டே குலங்களின் தொடர்ச்சியுண்மையையோ இன்மையையோ நிச்சயிப்பது முடியாதகாரியம். இத்தகைய காரணங்களால் முன் பின் சளுக்கியரனைவரும் ஒரே குலத்தினரென்று கொள்ளுவதே உசிதமாம் (29).

**கி. பீ. பதினோராம் நூற்றுண்டின் தக்ஷிணநிலைமை.**

இனி கி. பி. பதினோராம்நூற்றுண்டின்தொடக்கத்தில் தக்ஷிணதேசங்களின் நிலைமையைக்கூறுவாம். மாளவதேசத்துப் பரமாரகுலத்து ஸ்ரீஹர்ஷராஜனால் ராஷ்டிரகூடருடைய ராஜ்யம் நிலைகுலைய, தைலபனைமுன்னிட்ட சளுக்கியர் ஓங்கினர். துங்கபத்திரைக்குத் தெற்கே பல்லவராஜ்யம் அழியச் சோழர்கள் மேம்பட்டு மைசூரின்பாகமாகிய கங்கநாட்டின் ஒரு பகுதியைக் கைக்கொண்டு, அரசனின்றி ஆதரவற்றுக்கிடந்த வேங்கி நாட்டி

26. Ind. Ant. XL. 43-44.
27. Epi. Ind. XIII. No. 4. verse 21.
    இங்கு குறிக்கப்பட்ட சத்யாசிரயன் டாக்டர் பார்னெட்டு நினைக்குமாறு புலகேசியாகான்.
28. Bom. Gaz. Part II. ch II.
29. Ind. Ant. XL. 24-44.

லும் பிரவேசித்தார்கள். ஆகையால் இனி, சளுக்கியருக்கு முக்கியமான எதிரிகள் வடக்கில் பரமாரவரசர்களும் தெற்கில் சோழர்களுமேயாவர்.

**தைலபன் (கி. பி. 973-997.)**

நிஜபுஜசக்கரவர்த்தி என்றும் காஹட கொங்கண பயங்கரனென்றும் ராஷ்டிரகூடருக்கு விஷம்போன்றவனென்றும் கூர்ஜ்ஜரருக்கு ஜ்வரம்போன்றவனென்றும் மாளவ தேசத்தரசனுக்குக் காலாக்கினியென்றும் தைலபன் சொல்லப்பட்டிருக்கிறான்(30). ஆனால் அவன் ஆறுமுறை போர்க்களத்தில் மாளவதேசத்தரசனாகிய வாக்பதிமுஞ்சனால் தோல்வியடைந்தானென்பது வேறுசில ஆதாரங்களால் (31) வெளியாகிறது. கடைசியாக முஞ்சன் கோதாவரியைக்கடந்து தைலபன் ராஜ்யத்திற்பிரவேசித்தபோது சிறைபிடிக்கப்பட்டு கி. பி. 9937 ல் (32) கொல்லப்பட்டான்(33). தைலபனுக்குச் சோழர்களோடும் சண்டைநேர்ந்ததென்பது சாசனங்களால் (34) தெரியவருகிறது.

தைலபனுடைய ராஜ்யத்தின் விஸ்தீரணத்தை ஒருவாறு நிச்சயிக்கலாம். சௌந்தத்திராட்டர்களும், வனவாஸி சாந்தலீஜ் கிசுக்காட்டுச் சிற்றரசர்களும் கொங்கணதேசத்துச் சிலாஹாரர்களும் சேவுணதேசத்து யாதவர்களும் அவனது ஆளுகையின்கீழிருந்தனர். லாடர (கூர்ஜர) தேசமும் அவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஏனெனில் அதன் தலைவனாகிய பாரப்பன் தைலபனால் அனஹில்வாத்குலத்து மூல

30. Ind. Ant. XL. 44. ரன்னகவியின் சளுக்கியவமிசாவளி.
31. மேருதுங்கனது பிரபந்தசிந்தாமணி. Ind. Ant. XXXVI. 169. Epi. Ind. I. 223. Bom. Gaz. IV. 432. N. A. Smith's Ancient India. p. 395.
32. ஜைனசாது அமிதகதி கி. பி. 993 இல் சுபாஷித ரத்நசந்தோஹா என்னும் நூலை எழுதினார். அதில் அப்போது மாளவத்தை முஞ்சன் ஆண்டுவந்ததாகச்சொல்லுகிறார்.
33. போஜசரித்திரம். J. R. A. S. IV. 12. கடக்சாசனம். Ind. Ant. XXI. 168. Epi. Ind. II. 218. Bom. Gaz. IV. 430.
34. Ind. Ant. V. 17. Epi. Car. VII. S. K. 125.



புருஷனாகிய மூலராஜனென்பவனுக்கு எதிரியாக அனுப்பப்பட்டான் (35). தைலபன் திலிங்க கர்நாடதேசத்தலைவனென்று மேருதுங்கனுடைய பிரபந்தசிந்தாமணியிற் சொல்லப்பட்டிருப்பதால் அந்நாடுகளும் இவன் ராஜ்யத்தைச்சேர்ந்திருத்தல்வேண்டும்.

அவனுடையராஜ்யத்தின் பிரதானநகரம் இன்னதென்று நிச்சயமாகத் தெரியவில்லை. முன்சளுக்கியரதுகாலத்தில் வாதாபிபுரம் தலைநகராக இருந்தது. ராஷ்டிரகூடரதுகாலத்தில் சார்வா அல்லது அமோகவர்ஷனது ஆளுகையில் மானியகேடம் பிரதானபட்டணமாக்கப்பட்டது (36). ஆகையால் ராஷ்டிரகூடரின் ராஜ்யத்தைக்கைப்பற்றின தைலபனது நாளிலும் இதுவே ராஜதானியாக இருந்திருத்தல்கூடும் என்பது ஊகிக்கப்படுகிறது (37).

**சத்தியாசிரயன் (கி. பி. 997-1008)**

தைலபனுக்குப்பின் அவன்மகன் சத்தியாசிரயன் ராஜ்யத்தையடைந்து இரட்டபாடி ஏழரை இலக்கமுழுதும்(38) அரசாண்டான். அவனதுகாலத்தில் சோழர்களின் விரோதம் அதிகமாகிப் புகழ்பெற்ற ராஜராஜன் இருமுறை இரட்டபாடியைத்தாக்கி, கங்கபாடி நொளம்பபாடி இவைகளைக்கைப்பற்றினான்(39). ஆனால் இவைகள் சில வருஷங்களுக்குள் சளுக்கியரால் மறுபடியும் ஜயிக்கப்பட்டன.

**ஐந்தாம் விக்கிரமாதித்தன் கி. பி. (1008-1012?)**

சத்தியாசிரயன் மக்கட்பேறின்றி இறந்தமையால் அவனுக்குப் பிறகு அவனது சகோதரனாகிய தசவர்மனது மக்களான ஐந்தாம்விக்கிரமாதித்தனும் ஜயசிங்கனும் ராஜ்யத்திற்கு உரியவராயினர். இவர்களுள் விக்கிரமாதித்தன் சில வருஷங்களே யாண்டான்.

35. ராஸமாலா; கீர்த்திகௌமுதீ.
36. கர்டா சாசனம். Ind. Ant. VI. 64. XII. 268. Bom. Gaz. IV. 430.
37. Epi. Ind. XIII. No. 15.
38. காளீபடன் சாசனம். Bom. Gaz. IV. 431.
39. S. I. I. II. 13. Epi. Report. 1910, 83. Leyden grant - Tanjore ins-n. ஹொட்டேர் சாசனம். Bom. Gaz. IV. 433.

பிறகு ஜயசிங்கன் சிங்காதனம் அடைந்தான். முதல் ராஜராஜன் மகனாகிய ராஜேந்திரசோழனாகிய யானைக்குத் தான் ஒரு சிங்கம்போன்றவனென்றும் சேரசோழவரசர்களைப் பலமுறை கடலில் மூழ்கவடித்ததாகத் தன் சாசனங்களில் (40) சொல்லிக்கொள்கிறான். சோழ சாசனங்களிலோ (41) ராஜேந்திரசோழன் ஜயசிங்கனிடமிருந்து (கிருஷ்ணா துங்கபத்திரைக்கிடையிலுள்ள) இடைத்துறை, வனவாசி, கொள்ளிப்பாக்கை முதலிய பல இடங்களைப் பிடித்துக்கொண்டதாகத் தெரியவருகிறது. இம்மாதிரி இருவரும் ஒருவனை மற்றொருவன் ஜயித்ததாகச் சொல்லிக்கொள்ளுவதனால் ஒருவனாவது முடிவாகத் தோல்வியடைந்தானென்று சொல்லுவதற்கிடமில்லை.

ஜயசிங்கன் கி. பி. 1012?–1042.

வடக்கில் மாளவதேசத்தரசனாகிய போஜன் இளமைப்பருவமுற்றி ராஜ்யத்தை யாண்டுவருகையில், முஞ்சனுக்குத் தைலபனால்நேர்ந்த விபத்தை நினைந்து பழிக்குப்பழிவாங்கவேண்டுமென்று நிச்சயித்து, ஒரு பெரிய சேனையோடு தக்ஷிணத்திற் பிரவேசித்து, தைலபனைப் பிடித்து முஞ்சனுக்குத் தைலபன்செய்வித்ததுபோல அவனுக்கும் மானக்கேட்டையுண்டுபண்ணிக் கடைசியாக அவனைக்கொன்றுவிட்டதாகப் போஜசரிதத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் இதை முழுதும் நம்புவதற்கிடமில்லை. ஏனெனில் சற்றேறக்குறைய கி. பி. 1055-இல் போஜன் இறந்ததாகத்தெரியவருகிறது (42). அவன் 55-வருஷம் மாளவதேசத்தை ஆண்டதாகப்போஜசரித்திரமேகூறுவதால் சற்றேறக்குறைய கி. பி. 1000-இல் தான் ராஜ்யத்துக்கு வந்திருத்தல் கூடும். தைலபன் இறந்து அப்பொழுதே இரண்டு அல்லது மூன்று வருஷங்களாகிறபடியால் போஜனாற்கொல்லப்பட்டவன் தைலபனாக

40. பலகாம் சாசனம். Epi. Car. VII. S. K. 125.
மிராஜ் சாசனம். Ind. Art. VIII. 18; Ind. Ant. V. 15.

41. S. I. I. I. 96-9.
Epi. Ind. XII 226.

42. மாந்தாதா சாசனம். 1055 கி. பி. Epi. Ind. III. 46-48. இதில் போஜனது திருவடியைத்தான் தியானித்துக்கொண்டிருப்பதாக ஜயசிங்கன் சொல்லிக்கொள்ளுகிறான். விவரத்திற்கு இரண்டாம் அநுபந்தம் பார்க்க.



இருத்தல் முடியாது (43). போஜன்கொன்றது நிஜமாயின் அவ்வாறு கொல்லப்பட்டவன் தைலபனுக்குப் பின்வந்தவர்களில் ஒருவனாக இருத்தல்வேண்டும். சாசனங்களில் (44) போஜன் இதர அரசர்களைத் துணைக்கொண்டு கர்நாடரைத்தாக்கிக் கொங்கணத்தை ஜயித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜயசிங்கனோ கி. பி. 1019-ம் வருஷத்திய சாசனத்தில் (45) போஜனாகியதாமரைக்குத் தான் சந்திரன்போன்றவனென்றும் போஜனையும் அவன் துணையரசர்களையும் தேடித்துரத்திப் பொடியாக்கினதாகவும் சொல்லிக்கொள்ளுகிறான். இதனால் ஜயசிங்கனுக்கு முன்னிருந்த ஐந்தாம் விக்கிரமாதித்தனைப் போஜன்வென்று ஒருகால் ஸ்ரீமான் ரா. கோ. பண்டாரகர் ஊகிக்குமாறு (46) அவனைக் (47) கொன்றும் இருக்கலாமென்று அநுமானிக்க இடமுண்டாகிறது.

43. இஃதொன்றேயன்றி போஜசரித்திரத்தில் வேறு சில தவறுகளும் காணப்படுகின்றன. உதாரணமாக மாளவதேசத்தாரின்பரம்பரை முறையே தவறாகச்சொல்லப்பட்டிருக்கிறது. முஞ்சன் சிந்துராஜனது தமயனேயன்றித் தம்பியல்ல. அவனுக்குமுன் மாளவத்தையுமாண்டவன். இதுவிஷயமாக முஞ்ச போஜசாசனங்களையும், Ind. Ant. VI. 14. நாகபூர் பிரசஸ்தி Epi. Ind. II பத்மகுப்தனுடைய நவசாஹசாங்க சரித்திரத்தையும் Ind. Ant. XXV ஐயும் பார்க்க. சிற்றரசனாகிய முஞ்சன் தமயன் மகனாகிய போஜனைக்கொன்று ராஜ்யத்தையடைய விரும்பினானென்பதும் ஆதாரமில்லாத ஒரு பொய்க்கதையேயாகும்.

44. உதயபூர் பிரசந்தி. Epi. Ind. I. 223-30.
பான்ஸ்வாரா சாசனம். Ind. Art. XLI. 201.

45. Ind. Ant. V. 17. டாக்டர் பிலீட், ரைஸ் இவர்களின் மொழிபெயர்ப்பு தவறு.

46. Early History of the Dekkan. 61.

47. டாக்டர் ஓஜா என்பவர் போஜனால் கொல்லப்பட்டவன் ஜயசிங்கனே என்று அபிப்பிராயப்படுகிறார். (History of the Solainkes) இதற்கு அவருடைய முக்கியமான ஆதாரம். விக். சரி. I. 86. இந்திரனே அவனுக்குத் தன் கையால் மாலையிட்டதாகச்சொல்லியிருப்பதைக்கொண்டே ஜயசிங்கன் போர்க்களத்தில் மடிந்தானென்று அவர் எண்ணுகிறார். ஆனால் அதற்கு அவன் ஒரு பெரிய வீரனாயிருந்து புகழோடுமாண்டு இந்திரலோகமடைந்தானென்பதே பொருளன்றி போர்க்களத்தில் மடிந்தானென்றுகொள்ள இடமில்லை. இதாமேற்கோள்களாவன: சாகுந்தலம் VII. 2; விக். சரி. VI. & IV. Epi. Ind. II. நாகபூர் சாசனம். புறநானூறு 241 மோசியார் பாடலும் இதையே வற்புறுத்தும் அது வருமாறு:—

'திண்டேரிரவலர்க்கீத்ததண்டா
ரண்டிரன் வரூஉமென்னவொண்டொடி
வச்சிரத்தடக்கை நெடியோன்கோயிலுட்
போர்ப்புறுமுரசங்கறங்க
ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பினானே'

**ஆகவமல்லன் அல்லது முதல் சோமேசுவரன் கி. பி. (1042–1068)**

கி. பி. 1042-இல் ஜயசிங்கன் இறக்க அவன்மகனாகிய முதற் சோமேசுவரன் அல்லது ஆகவமல்லன்(48) ராஜ்ய பாரத்தை வகித்தான். இவன்காலத்தில் (நிஜாம்ராஜ்யத்து பீடர் ஜில்லாவைச்சார்ந்த) கலியாணபுரமானது பிரபலமடைந்து ராஜதானியாக்கப்பட்டது. இந்நகரம் கி. பி. 1054-ம் வருஷத்துச்சாசனத்தில் (49)'நெலவீடு' (ராணுவஸ்தலம், கைநிலை அல்லது பாசறை (50) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குமுந்திய சளுக்கிய ராஷ்டிரகூடசாசனங்களில் இதன்பெயரே காணப்படவில்லை(51). ஆகவே இது ஆகவமல்லனாற்புதிதாகக் கட்டப்பட்டதா அல்லது முன்னமேயிருந்து இவனால் நெலவீடாக்கப்பட்டதா என்ற கேள்விக்கு இடமுண்டாகிறது. இதைப்பற்றிப்பில்ஹண கவி (52) சொல்லியிருப்பதற்கு இருவிதமாகவும் பொருள்படுகின்றதாகையால் ஒருதலையாகக்கூறுதல் இயலாததாகும்.

தன் முன்னோர் வழக்கப்படி ஆகவமல்லனும் சோழனை எதிர்த்துப்பொருதான். போஜராஜனது பிரதானபட்டணமாகிய தாராநகரை சேனையுடன் வளைத்துப் போஜனை அதைவிட்டோடச்செய்தான். தாஹலா(சேதி)ராஜ்யத்தையழித்து அதன் அரசனான கர்ணனை ஜயித்தான். கடற்கரையில் ஜயஸ்தம்பம்நாட்டி அதைத்தடுக்கவந்த திராவிட அரசனை முதுகிடச்செய்து சோழவரசனது பிரதானநகராகிய காஞ்சியைத்தாக்கினான்(53). சாசனங்களும் சில விவரங்களுடன் இவ்வாறே கூறுகின்றன. இவன்காலத்துச் சோழவரசர்களாவார் கங்கைகொண்ட சோழனென்றுவிளங்கும் ராஜேந்திரசோழனுடைய கீர்த்திபெற்ற சகோதரர்களாகிய ராஜாதிராஜன் (கி.பி.1018-53), ராஜேந்திரதேவன் (கி. பி. 1052 - 63) வீரராஜேந்திரன் (கி. பி. 1063 - 70) என்பார்.

48. இவன் பெரிய போர்வீரனாகையால் சோழ சாசனங்களிலெல்லாம் ஆகவமல்லனென்றே சொல்லப்படுகிறான்.
49. கேம்பாவி சாசனம். Bom. Gaz. IV, 440.
50. J. R. A. S. 1917, 117.
51. Bom. Gaz. IV. 427.
52. விக். சரி. II. I.
53. விக். சரி. I.
நாகவிசாசனம். J. R. A. S. IV. 13.
குராஜ் சாசனம். Ind. Ant. VIII.



கி. பி. 1047-ம் வருஷத்துச் சாசனத்திலிருந்து (54) ராஜாதிராஜன் ஆகவமல்லனை ஜயித்து (நிஜாம்ராஜ்யத்து சகிண்டாபாத்துக்கு 42-மைல் தூரத்திலுள்ள) கொள்ளிப்பாக்கையையெரியூட்டி (பல்லாரி ஜில்லா ஹொஸ்பெட்தாலூக்காவைச்சேர்ந்த) கம்பிலித்தோட்டத்தையும் அரண்மனையையும் அழித்து ஜயஸ்தம்பம் நாட்டினதாகத்தெரியவருகிறது (55). இவற்றுடனில்லாமல் ராஜாதிராஜனும் இளவரசாகிய ராஜேந்திரதேவனும் இருவருமாக இரட்டமண்டலம்புகுந்து பிரதானநகராகிய கலியாணபுரத்தைக்கைப்பற்றி, கொல்லாபுரத்தில் (கொல்ஹாபூரில்) ஒரு ஜயஸ்தம்பம் நாட்டினார்கள். வீரனாகிய ஆகவமல்லன் இவ்வவமானங்களைப்பொறுனாய்ப் பேராற்றங்கரையிலுள்ள (கிருஷ்ணாநதிக்கரை) (56) கொப்பத்துச்சண்டைக்கு அழைத்தான். அங்கே கி. பி. 1053-4-இல் (57) ஒரு பெரிய கடுமையான சண்டை நடந்தது. அதில் ஆகவமல்லன் ஒரு மதயானையின்மேல் ஏறிக்கொண்டு

54. S. I. I. III, 56.
55. கம்பிலிச்சயத்தம்பநட்டதுங்
கடியரண் கொண்கல்யாணர்கட்டறக்
கிம்புரிப்பணைகிரியுகைத்தவன்,
கலிங்கத்துப்பரணி VIII, 26.
மும்மடிபோய்க் கலியாணிசெற்ற
தனியாண்மைச் சேவகனும்
விக்கிரமசோழனுலா—19.
தாராசுரத்தில் விஜயராஜேந்திரதேவனால் கலியாணியிலிருந்துகொண்டு வரப்பட்ட விக்கிரகம் ஒன்று இருக்கிறது.

56. மணிமங்கலசாசனத்தில் (S. I. I. III. 68. No. 30.) விஜயவாடையோடடுத்த பேராறு என்பதனால் பெஜவாடாவையடுத்த கிருஷ்ணாநதி என்று விளங்குகிறது. ஆகையால் பேராறு கிருஷ்ணாநதியேயன்றி துங்கபத்திரை, பாலாறு முதலியனவாகா. (Epi. Ind. XII. 297. M) கிருஷ்ணாநதிக்கரை கொப்பை அக்காலத்தில் ஒரு விசேஷமான க்ஷேத்திரமென்பது ஏஹூர் சாசனத்தாலும் (Epi. Ind. XII. 279) மசபபுருந்தீர்த்தகொப்பத்து என்றும் (S. I. I. III. 603) செப்பமாதீர்த்தகொப்பத்து என்றும் Epi. Car. IX. Bom. 108) சொல்லியிருப்பதாலும் விளங்கும்.

57. ராஜாதிராஜனுடைய கடைசிச் சாசனத்தின் தேதி கி. பி. 1053 மேமீ 23உ (Epi. Ind. VI. 22) அவனிறந்ததாக கி. பி. 1054 மேமீ சாசனத்தில் (Epi. Car. VII. S. K. 118) கண்டிருக்கிறது. ஆகையால் கொப்பத்துச்சண்டை கி. பி. 1053-4க்குள்ளாக நடந்திருத்தல்வேண்டும்.

அம்பெய்து ராஜாதிராஜன்தலையைக்கொய்தான்(58). உடனே ராஜேந்திரதேவன் 'ஒரு களிற்றின்மேல்வருகளிற்றையொத்து உலகுயக்கொளப்பொருது கொப்பையிற்பொருகளத்திலே முடிகவித்து'(59) சோழருக்கு அபஜயம்நேரிடாமற்காப்பாற்றினன். சிலவருஷங்களுக்குப் பின்னர் ஆகவமல்லன் ராஜேந்திரதேவனை எதிர்த்துச் சோழநாட்டிலும் பிரவேசித்தான். 'கலியாணபுரமுங் கொல்லாபுரமுங்கொண்டருளி ஆனைமேல்துஞ்சியருளிய(60)பெருமாள் விஜயராஜேந்திரதேவன்'என்று சோழசாசனத்தில் (61) காணப்படுவதால் ராஜேந்திரதேவனும் (62) சளுக்கியரோடு நேர்ந்த சண்டையிலேயே ஒருகால் உயிரிழந்திருக்கக் கூடும். இவ்வாறு தன் முன்னோர்நாள்முதலாக ஏற்பட்டிருந்த சண்டைகளில் ஒரு சிறிதும் பின்வாங்காமல் ஆகவமல்லன் முயன்று தன் நாட்டைப் பாழ்படுத்திய சோழர்களைத்தூரத்தித் தன்பெயரை நிலைநாட்டினன்.

முதற்பாகம் முற்றிற்று. (இன்னும் வெளிவரும்.)

அ. வா. வெங்கடராமய்யர்,
இராஜாங்க கலாசாலை, கும்பகோணம்

---

58. Epi. Car. VIII. part. II. Sb. 325.
Epi. Car. VII. S. K. 118.
அண்ணிகிரி சாசனம். Bom. Gaz. IV. 441. S. I. I. III. 39.

59. கலிங்கத்துப்பரணி ராஜபாரம்பரியம் VIII-27.
விக்கிரமசோழனுலா 20. 'வெப்பத்தடுகளத்து வேழங்களாயிரமுங் கொப்பத்தொருகளிற்றாற்கொண்டோனும்'.

60. 'துஞ்சிய' என்பது 'இறந்த' என்பதற்கு மங்கலவழக்கு என்பது மஹாமஹோபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்களது புறநானூறுக்கு மகா-ா-ா-ஸ்ரீ வீ. கனகசபைப்பிள்ளையவர்கள் எழுதிய விசேஷக்குறிப்பால் உணர்க. 'ஆனைபோல்துஞ்சிய' 'போர்க்களத்தில் மடிந்த' என்று பொருள்.

61. சுடிசாசனம். Bom. Gaz 1V-441.
ஆலங்குடி சாசனம். Epi. Rep. 1898-9. S. 1. I. III. 191.
No. 87 of 1895. Epi. Rep. திருமலவாடி சாசனம்.

62. இவ்விஜயராஜேந்திர தேவன் ராஜேந்திரதேவனல்ல, ராஜாதிராஜனே என்று ஸ்ரீமான். ராவ்பகதூர் வெங்கய்யரவர்கள் (Epi. Rep. 1908.) அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இதற்கு முக்கியமான இரு ஆக்ஷேபனைகள் எழுகின்றன. சாசனங்களில் விஜயராஜேந்திரதேவன் பரகேசரி என்றுசொல்லப்பட ராஜாதிராஜனோ ராஜகேசரி என விளங்குகிறான். மேலும் சகசகாப்த 981. அதாவது கி. பி. 1057-ம் வருஷத்தில் பெத்ததிப்பசமுத்திரத்தில் விஜயராஜேந்திரதேவனுடைய சாசனமொன்று (534 of 1906. Epi. Rep.) உளது. ராஜாதிராஜனோ கொப்பத்தடுகளத்து 1053-4ல் இறந்ததாக ஏற்கனவே நிரூபிக்கப்பட்டது. ( மேலே 57-ம் குறிப்புப் பார்க்க. ) ஆகையால் மேலே கண்ட விஜயராஜேந்திரதேவன் தமையன் இறக்க 'கொப்பையிற்பொருகளத்திலே முடிகவித்து' விஜயாபிஷேகம்செய்த ராஜேந்திரதேவனே ஒழிய ராஜாதிராஜனாகான்.

## முதற்பாக அநுபந்தம் I.

### பின்சளுக்கிய வமிசாவளி.

1. தைலபன் (973-99 கி. பி.)
   - 2. சத்தியாசிரயன் (997-1008 கி. பி.)
   - தசவர்மன்
     - 3. விக்கிரமாதித்தன் V. (1008-12? கி. பி.)
     - 4. ஜயசிங்கன் (1012-42 கி. பி.)
       - 5. ஆகவமல்லன் (அ) சோமேசுவரன் I. (1042-68 கி. பி.)
         - 6. சோமேசுவரன் II. (1068-76 கி. பி.)
         - 7. விக்கிரமாதித்தன் VI. (1076-1127 கி. பி.)
         - ஜயசிங்கன்

*N. B.* For the above dates *Vide* Bom. Gaz. Vol. I. Ch. IV. The names of kings that ruled are numbered. Terminal dates are approximate.

## முதற்பாக அநுபந்தம் II.

### சற்றேறக்குறைய ஏககாலத்தாண்ட முக்கியவரசரின் குறிப்பு.

| பாமார (மாளவ) | மேலைச்சளுக்கி | சோழ | கீழைச்சளுக்கி (வேங்கி) |
|---|---|---|---|
| முஞ்சன் (?-997 கி. பி.) | தைலபன் (973-97 கி. பி. | ராஜராஜன் I (985-1013 கி. பி.) | விமலாதித்தன் |
| சிந்துராஜன் (997-1000 கி. பி.) | சத்தியாசிரயன் (997-1008-கி. பி.) | | |
| போஜன் (1000-1055 கி. பி.) | விக்கிரமாதித்தன் V (1008-12?) | | |
| | ஜயசிங்கன் (1012?-1042 கி. பி.) | ராஜேந்திரசோழன் I (1012-42 கி. பி. (அ) கங்கைகொண்டசோழன் | |
| ஜயசிங்கன் (1055 கி. பி.) | ஆகவமல்லன் (அ) சோமேசுவரன் I (1042- கி. பி.) | ராஜாதிராஜன் (1018-53 கி பி. ராஜேந்திரதேவன் (1052-63 கி. பி.) வீரராஜேந்திரன் (1063-70 கி. பி.) | ராஜராஜன் (1022-62 கி. பி.) ராஜேந்திரசோழன் II (1063-70 கி. பி.) |
| உதயாதித்யன் (1090கி. பி.) | சோமேசுவரன் II (1068-76 கி. பி. | அதிராஜேந்திரதேவன் (1070 கி. பி.) | |
| | விக்கிரமாதித்தன் VI (1076-1127 கி. பி.) | ராஜேந்திரசோழன் II (அ) குலோத்துங்கன் I. (1070-1118 கி. பி.) | |

உ

# மகாமாட்சிமைதங்கிய நமது ஐந்தாம்ஜார்ஜ் சக்கரவர்த்தியின் செயமங்களக்கொண்டாட்டநாட்பிரசங்கம்,* மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்செய்தது.

அன்பர்களே!

சர்வசிவதயாபரனாகிய கடவுள் "அருளினாலுரைத்த நூலின்வழி வாராததமஞ்செய்யில், இருளுலாநிரையத்துன்பமிட்டிரும்பாவந்தீர்ப்பன், பொருளுலாஞ்சுவர்க்கமாதிபோகத்தாற்புணியந்தீர்ப்பன்" எனச் சித்தாந்தசாத்திரவழிநூலிற்கூறியவாறு உலகின்மேல்வைத்த அருளினாலுரைத்தருளிய வேதசிவாகம முதலிய நூல்களின்வழியொழுகாது அதர்மஞ்செய்வாரை நரகத்துன்பத்திற்புகுத்தி அதர்மமாகிய பாவத்தைநீக்குவான், அந்நூல்களின்வழியேயொழுகித்தருமஞ்செய்வாரைச் சுவர்க்கமுதலிய பதவியின்பங்களையனுபவிக்கச்செய்து புண்ணியத்தைக்கழிப்பான்; என்பார்கள். ஆதலாலக்கடவுள்செய்யுநிக்கிரகமு மநுக்கிரகமுமுயிர்களிடத்துவைத்த கருணையேயாம்.

இனி, அக்கடவுளியற்றுமிதமகிதமாகிய நீதிமுறைகளை நாங் காட்சிப்பிரமாணத்தாலறியவில்லை.

அக்கடவுளைப்போலவே அரசன் நீதிநூலென்கிற சட்டத்தை யேற்படுத்திச்செய்யும் இதமகிதமாகிய நீதிமுறைகளை நாம் பிரத்தியக்ஷமாகப்பார்த்திருக்கிறோம்.

அரசனைக் கடவுளுக்கொப்பாகக்கூறலாமோவெனில், அதற்குச் சந்தேகமில்லை. "இளையரினமுறையரென்றிகழார்நின்ற - வொளியோ டொழுகப்படும்" எனத்திருவள்ளுவர்கூறிய குறளிலே இளமை இன முறையுநோக்கி அரசரையிகழாது அவரிடத்திநின்றவொளியாகிய தெய்வத்தன்மையோடு பொருந்தவொழுகல்வேண்டுமென்றார். சிந்தாமணியில் "உறங்குமாயினுமன்னவன்றன்னொளி - கறங்குதெண்டிரை வையகங்காக்குமால்" என்றார். இதற்கு நச்சினார்க்கினியரும், மன்னவனுறங்குமாயினுமவனொளி உலகைக்காவாநிற்குமென்றுரைகூறினார். ஒளியாவது அரசரிடத்திருக்குந்தெய்வத்தன்மையென்றார்; ஒளியோடு பொருந்தவொழுகலாவது: அவ்வரசர் தேவராகவுந் தாமனிதராகவு நடத்தலென்க. இன்னுந்திருவாய்மொழியிலே அரசர் திருமால் அமிசமேயென்பதுதோன்ற "திருவுடைமன்னரைக்காணிற்றிருமாலைக்கண்டேனேயென்னும்" என்றருளிச்செய்திருக்கின்றார். அரசனதியல்பை உடு-அதிகாரமாகவெடுத்துக்கூறிய திருவள்ளுவர் முதலதிகாரத்திற்கு

* இப்பகுதி பிற்பட்டுவெளிவருதலாலிதுசேர்க்கப்பட்டது.

இறைமாட்சியெனப்பெயரிட்டார்; உலகபாலருருவாய்நின்றுலகங்காத்தலின் அரசனை இறையெனக்கூறினாரெனப் பரிமேலழகருரையெழுதினார்; உலகபாலராகிய இந்திரன், வாயு, யமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரன் இவர்களமிசங்களினாலே அரசனுண்டாக்கப்பட்டான் என மனுதர்மசாத்திரத்திற்கூறியதாக மற்றொருவருரைகூறியிருக்கின்றார். "முறைசெய்துகாப்பாற்றுமன்னவன்மக்கட்கிறையென்று வைக்கப்படும்" எனத்திருக்குறளினுங்கூறியிருக்கின்றார். ஆதலாற்கடவுளும் அரசனுஞ்சமமாகக்கூறலாமென்க.

இம்மைப்பயனுமறுமைப்பயனுந்தருவதாகியபொருளை நாமீட்டுவதற்கும், அப்பொருளைப்பாதுகாப்பதற்கும், அப்பொருளாற்பெண்டு பிள்ளை பண்டபதார்த்தங்களையனுபவிப்பதற்கும், அப்பொருளாலும், மனவாக்குக்காயங்களாலும், மறுமைப்பயன்குறித்துச்செய்யுந் தானதருமங்களிடையூறின்றி நடத்துவதற்கும் அரசனுடைய நீதிமுறையே துணைக்காரணமாகும்.

அவ்வரசன் எவ்வியல்புடையானாகியிருக்கவேண்டுமெனில், திருவள்ளுவர்கூறியமுறைபோலப்பல நூல்களினுங்கூறியிருக்கின்றார். "மாநிலங்காவலனாவான்மன்னுயிர்காக்குங்காலைத் - தானதனுக்கிடையூறு தன்னாற்றன்பரிசனத்தா- லூனமுறுபகைத்திறத்தாற்கள்வரா லுயிர்தம்மா - லானபயமைந்துந்தீர்த்தறங்காப்பானல்லனோ" எனப் பெரியபுராணத்திற்கூறியபடி ஐவகையான பயத்தை நீக்கி அறங்காவல்செய்யவேண்டுமென்பர். இதனைத் திருவிளையாடற்புராணத்திலே "அறமலி செங்கோலஞ்சுபயந்தீர்த்தரசாளுமுறைமையுநன்றால்" எனக்கூறியிருக்கின்றார்.

இன்னுந்திருவிளையாடற்புராணத்திலே "ஆறிலொன்று,கொற்றவர்கடமைகொள்ளப்பண்டியிற்கொடுபோய்த்தென்னா - டுற்றவர்சுற்றந்தெய்வம்விருந்தினர்க்கூட்டியுண்பார்" எனக்கூறியிருக்கின்றார். "தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கறானென்றாங் - கைம்புலத்தாறோம்பறலை" எனத்திருவள்ளுவர்கூறியபடி பிதிரர்முதலிய ஐந்திடத்துச்செய்யுந்தருமநெறியை வழுவாமற்காக்கவேண்டுதல் குடிகட்குண்மையாலே அரசன் ஆறிலொன்றுவரிவாங்கியுலகங்காக்கவேண்டுமென்றார். திருமந்திரத்திலே "சிறந்தநீர்ஞாலஞ்செய்தொழிலியாவையு - மறைந்திடில் வேந்தனுக்காறிலொன்றாமே" என்றார்.

இன்னும் "படைகுடிகூழமைச்சுநட்பரணாறு - முடையானரசருளேறு" எனத்திருவள்ளுவர் கூறலால், படைமுதலிய ஆறங்கமுமுடையவனே அரசருள்ளே ஆண்சிங்கமென்பர். "ஏடவிழ்பைந்தாரோயிமையோர்பதம்பெறினு - நாடுநடுநடுங்கநன்கலவைபுரியார்-வேடர்புரிவேட்டஞ்செய்யார்வினைதருஞ்சூ - தாடல்புரியார்மட்டுண்ணாரரசரே" என வாசிட்டத்திற்கூறியபடி அரசன் றீயசெய்கைகளைநீக்கி,



"எந்தவேளையினுநொந்தவர்துயர்கேட்டிடரிழைப்பவன்றனதேசு-மைந்தனேயெனினும் வதைத்திடவொல்கான்மாக்களின்சுகநலமன்றிச் - சிந்தனைமற்றோர்பொருளினிற்செலுத்தான் றீமொழிகனவிலும்புகலான் - றந்தைபோற்றாய்போலெவரையுமோம்புந்தன்மையனேயிறையன்றோ" என நீதிநூலிற்கூறியபடி நற்செய்கைகளைத்தழுவி நீதிசெலுத்தவேண்டுமென்பார்.

இவ்வாறின்றி அரசன்செங்கோல்பிழைத்திருப்பின், உலகிற்குக்கேடுண்டாமென்பதுவிளங்கச் சிந்தாமணியிலே "கோணிலைதிரிந்துநாழிகுறைபடப்பகல்கண்மிஞ்சி - நீணிலமாரியின்றிவிளைவஃகிப் பசியுநீடிப் - பூண்முலைமகளிர்பொற்பிற் கற்பழிந்தறங்கண்மாறி - யாணையிவ்வுலகுகேடாமரசுகோல்கோடினென்றான்" எனவெடுத்துவிரித்துக்கூறியிருத்தலால், அரசன் கோல்கோடாமலிருக்கவேண்டுமென்பார். இவ்வாறு நீதிபதியாயரசாண்டு வாழ்ந்திருந்த மன்னர் அரிச்சந்திரன், தயரதன், நளன், தருமன், சேரசோழபாண்டியர்முதலானவர்களாக நூல்களாற்கூற அறிந்திருக்கின்றோம். நம்முடைய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியார் அவ்வரசர்களினுமாட்சிமையுற நீதிசெலுத்தி அவ்வரசர்கள்காலத்திலில்லாத அரியபெரியகாரியங்களாகிய ரயில், தந்தி, தபால் முதலாகிய நன்மைகளை நமக்குச்செய்திருக்கிறார். நேரே நாங்கண்டிருக்கிறபடியால், முன்னிருந்த அரசர்களிவ்வாறுசெய்தரசாளவில்லையென்று நாந்துணிவாகச்சொல்லலாம். அரசர்சிகாமணியாய் விளங்கிய இச்சக்கரவர்த்தியார் அநுக்கிரகத்தாலன்றோ எல்லா நன்மைகளையுமடைந்திருக்கின்றோம்.

அரசிலையேற்குடிகளுமில்லை; குடிகளில்லையேல் அரசுமில்லையென்பதுதோன்ற "மழையின்றிமாநிலத்தார்க்கில்லைமழையுந் - தவமிலாரில்வழியில்லைத்தவமு - மரசிலானில்வழியில்லையரசனு - மில்வாழ்வானில்வழியில்" என நான்மணிக்கடிகையிற்கூறினார் ஆதலால், அரசனுங்குடிகளும் எவ்வாறிருக்கின்றார்களென்றால், சந்திரனின்றியிராக்காலத்திற்குப்பெருமையில்லை; இராக்காலமின்றிச் சந்திரனுக்குப்பெருமையில்லையென்பதுபோலவே யிருக்கிறார்களெனத்தோன்றுகின்றது.

இவ்வாறிருக்கினும், "காதிறைவனுக்குக்கண்ணெலாம்" என நீதிநூலிற்கூறியபடி அரசனானவன் காது கண்ணாகவும், "கண்போலண்ணன்மந்திரியில்லரசாட்சியும்" எனத்திருவிளையாடலிற்கூறியபடி மந்திரிகளையே கண்களாகவுங்கொண்டறிந்து முறைசெலுத்தவேண்டுமென்பர். திரிமூர்த்திகளுக்குண்டாகிய வலிமையை அரசன் பெற்றிருந்தாலும், மந்திரிகளின்சொல்வழிச்செய்தலே மிக்கவலிமையாம் என்பதுதோன்ற இராமாயணத்திலே "உமைக்குநாதர்க்குமோங்குபுள்ளூர்திக்கு - மிமைப்பினாட்டமோரெட்டுடையானுக்குஞ் - சமைத்ததோள்வலிதாங்கினராயினு - மமைச்சர்சொல்வழியாற்றுதலாற்றலே" எனக்

கூறியிருக்கின்றபடியால் மந்திரிகளைக்கொண்டேயெல்லாக்காரியமுந்தெரிந்து முறைசெலுத்தவேண்டுமென்பர்.

இனியுலகத்திலே யியங்கியற்பொருளும், நிலையியற்பொருளுமாகிய சராசரங்களெல்லாம் அரசையின்றியமையாமல் அரசுடையனவாயிருக்கின்றன என்பதனை விளக்கிக்கூறுவாம்:—தேவர்கட்கு இந்திரன் அரசாயிருக்கின்றான்; நாகருக்கு ஆதிசேடன் அரசாயிருக்கின்றான்; பறவைகட்குக் கருடன் அரசாயிருக்கின்றது; அதற்குப்பறவைவேந்தன் என்று பெயருண்டு; மிருகங்கட்குச் சிங்கம் அரசாயிருக்கின்றது; அதற்கு மிருகராசன் என்று பெயருண்டு; மரங்களுக்கு அரசே அரசாயிருக்கின்றது; அதற்குத்தருவேந்து என்று பெயருமுண்டு. நரர்களுக்கு இப்போது நம்முடைய சக்கரவர்த்தியார் நரபதியாகிய அரசாயிருக்கின்றார். இங்ஙனங்கூறிய தாற்பரியமாக இராமாயணத்தில், "வள்ளுறுவைரவாளரசில்வையகம் - நள்ளுறுகதிரிலாப்பகலுநாளொடுந் - தெள்ளுறுமதியிலாவிரவுந்தேவுட - னுள்ளுறையுயிரிலாவுலகுமொக்குமே" "தேவர்தம்முலகினுந்தீமைசெய்துழன் - மாவலியவுணர்கள்வைகுநாட்டினு - மேவலையுலகமென்றிசைக்குமன்னவை-காவல்செய்தலைவரையின்மைகண்டிலம்" "முறைதெரிந்தொருவகை முடியநோக்குறின் - மறையவன்வகுத்தனமண்ணில்வானிடை - நிறைபெருந்தன்மையினிற்பசெல்வன- விறைகளையில்லனயாவைகாண்கிலம்" என்று கூறியிருக்கின்றார். பெரியபுராணத்திலே "பன்முறையுயிர்களெல்லாம் பாலித்து ஞாலங்காப்பான் - றன்னெடுங்குடைக்கீழ்த்தத்தநெறிகளிற் சரித்துவாழ - மன்னரையின்றிவைகுமண்ணுலகெண்ணுங்காலை - யின்னுயிரின்றிவாழுமியாக்கையையொக்குமென்பர்" என்று கூறியிருக்கின்றார்; ஆதலாற்குடிகட்கு அரசுவேண்டுமென்பதாயிற்று.

இனி அரசன் உலகிற்சராசரங்களாகியவெல்லாவுயிர்களையுந்தன்னுயிரைப்போலக்காப்பாற்றுதலாலே யெல்லாவுயிருந்தங்கியிருக்குமோருடம்பாயிருக்கின்றான் என்பதுதோன்ற இராமாயணத்திலே "வயிரவான்பூணணிமடங்கன்மொய்ம்பினை - னுயிரெலாந்தன்னுயிரொப்பவோம்பலாற் - செயிரிலாவுலகினிற்சென்றுநின்றுவா - ழுயிரெலாமுறைவதோருடம்புமாயினான்" என்று கூறியிருக்கின்றார்.

இனி அரசன் உயிராயிருக்கின்றான்; குடிகளுடலாயிருக்கின்றார்கள்; உயிர்சும்மாவிருக்கத்தேகம்வருந்தித்தொழில்செய்து அவ்வுயிரைக் காப்பதுபோலக் குடிகளெல்லாந் தங்கள் சரீரங்களாலுழைத்துத்தொழில்செய்து அரசனைக்காக்கக்கடனாயிருக்கின்றது என்பதுதோன்ற, நீதிநூலிலே "கோவரியசீவன்குடிகளுடலாவார்- சீவன்சும்மாவிருக்கத்தேகமுழைத்தோம்புதல்போற் - பூவலயமீதிற்றம்பூட்சிகளினுழைத்துக் - காவலனைக்காக்கக்கடனுங்குடிகளுக்கே" என்று கூறியிருக்கின்றார்; ஆதலால் நம்முடைய சக்கரவர்த்தியாருக்கு எக்காலத்தும் வேண்



டுங்காரியங்களையூக்கத்துடன்செய்வது நம்முடைய கடனாகவேயிருக்கிறது. அதுவும் நம்மைக்காத்தற்பொருட்டேயாமென்றறிவீர்களாக.

உலகிலெல்லாவற்றிற்குங்காரணமாயிருத்தல்பற்றி அரசன் வாழ்ந்திருக்கவேண்டுமென்று நம்முன்னோரெல்லாம் நூல்களிலே வாழ்த்துரைகூறியிருக்கின்றார். எவ்வாறெனில், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் வையைநீரிலே ஏடெதிர்செல்லவிட்ட திருப்பாசுரத்தில் "வாழ்கவந்தணர் வானவரானினம் - வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக" என்றும், திருவிளையாடற்புராணத்திலே "உலகமெல்லாம்புரவலன்செங்கோல்வாழ்க" என்றும், சிந்தாமணியிலே "திங்கண்மும்மாரிபெய்கதிருவறம்வளர்கசெங்கோல் - நன்கினிதரசனாள்க நாடெலாம் விளைக" என்றுங்கூறியிருக்கின்றார்கள். ஆதலால் நாமும் நம்முடைய சக்கரவர்த்தியாருக்கு இந்நாளிலே செயமங்களமுண்டாயிருத்தல்போலே எந்நாளுஞ்செயமங்களமுண்டாகவேண்டுமென்று ஸர்வேசுவரனைத் திரிகரணங்களாலும் வேண்டிக்கொள்வோமாக.

திருவாசகத்திலே "வாழ்த்துவதும் வானவர்கடாம்வாழ்வான்" எனக்கூறியிருக்கின்றார். இதன்கருத்து:—சுவாமியுன்னைத்தேவர்கள் வாழ்த்துவது எதன்பொருட்டென்றால், தாம் வாழும்பொருட்டேயாம் என்பதே. அதுபோலவே நம்முடைய சக்கரவர்த்தியாருக்கு எக்காலமுஞ்செயமங்களமுண்டாகவேண்டுமென நாம் சர்வேசுவரனை வேண்டிக்கொள்வது நம்பொருட்டேயாமெனக்கொள்க.

மங்களம்.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும், மதுரைத்
தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய,
ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

7—10—18.

---

## பிழைதிருத்தம்.

"செந்தமிழ்" (தொகுதி ௧௬ - பகுதி ௬-பக்கம் ௬௧௭.) மூன்றாவது வரியிலுள்ள முப்பத்தோரெழுத்துக்களை, என்பதை முப்பதெழுத்துக்களை என்று திருத்திக்கொள்ளவும்.

இங்ஙனம்,

நவநீதகிருஷ்ணன்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

15 NOV 1918
MADRAS.

தொகுதி-௧௬.] காலயுக்தி-௵ ஆவணி௴ [பகுதி - ௰.
Vol. XVI. August,—September. 1918. No. 10.

## நிகண்டு கற்றல்.

நிகண்டாவது இச்சொற்கு இதுவே பொருளென்று சொற்கும் பொருட்குமுள்ள ஆற்றலாகிய நியமம்அறிவிக்கும் நூல். ஆற்றலாகியநியமமில்லையாயின்; இதற்கிது பொருளென்னும் நியமவுணர்ச்சி தடுமாறும். தடுமாறவே சங்கரன்=விட்டுணு. நாராயணன்=சிவன். என்ப் பொருள்கூறலும் பொருந்துவனவாகும். நிகண்டு வடமொழி, தென்மொழி என்னும் இரு மொழிகளிலும் பலவாகப் பலராலும் இயற்றப்பட்டிருக்கின்றது. வடமொழிநிகண்டுகள் அமரகோசம், விசுவகோசம், அமரதத்தம், யாதவப்பிரகாசம் முதலியன. தென்மொழிநிகண்டுகள் திவாகரம், பிங்கலம், சூடாமணி, உரிச்சொல் முதலியன.

வடமொழிநிகண்டுகளிலேவருஞ்சொற்கள் தென்மொழிநிகண்டுகளிலும், மற்றைத் தென்மொழிநூல்களிலும் விரவிவருகின்றன. வடசொற்கள் பரந்துவாராதநிகண்டுநூல்கள் யாவை? சங்கச்சான்றோர் நூல்களிலே வடசொற்கள் வரவில்லை என்று சிலர் வாதிப்பர். அவர் சங்கச்சான்றோர்நூல்களை நன்கு நோக்கக்கடவர். நோக்குங்கால் ஆங்காங்குப் புலப்படும். சங்கச்சான்றோர் நூல்களினும் பிற்றைச் சான்றோர் நூல்களிலே வடசொற்கள்மிகப் பரந்துவருகின்றன என்பாராயின்; அவர்கூற்று ஒக்கும். இப்பொழுதைநூலாளர்களும் தத்தம் நூல்களிலே வடசொற்களை இடையிடை பிரயோகிப்பர். வடசொற்க

*

ேணைக்கி வெறுப்பாருமுளர். முன்னோராற்பிரயோகிக்கப்பட்டு இயற்சொற்போலவழங்கிவந்த வடசொற்களையும், வேண்டுழிப்பிரயோகிக்கும்வடசொற்களையும் வெறுத்தல் நன்றன்று. ஆத்திசூடி, கொன்றைவேந்தன்முதலியவற்றிலேவருஞ் சக்காம், சித்திரம், தானம், மூர்க்கர், ஆலயம், சந்ததி, விடகாரி முதலியன வடசொற்களல்லவா? தொல்காப்பியத்திலேவரும் ஆனந்தம், அங்கதம், அம்போதரங்கம் முதலியன வடசொற்களல்லவா? அவைகளை வெறுப்பவர் யாவர்! தென்மொழி நூல்களிலே வடசொற்களும்விரவிவரும்வழக்கம் அன்றுதொட்டுவந்த வழக்கமேயாம்.

தென்மொழிநூல்களுள்ளே நிகண்டுச்சொற்கள் வாராதநூல்கள் யாவை? நிகண்டுச்சொற்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் முதலிய நீதிநூல்களிலும் வருகின்றன. நாலடியார், திருக்குறள் முதலிய நீதிநூல்களிலும் வருகின்றன. நன்னூல், தொல்காப்பியம் முதலிய இலக்கணநூல்களிலும் வருகின்றன. பாரதம், இராமாயணம் முதலிய இலக்கியநூல்களிலும் வருகின்றன. கந்தபுராணம், சேதுபுராணம் முதலிய புராணங்களிலும் வருகின்றன. மற்றைநூல்களிலும் வருகின்றன.

ஆத்திசூடி முதலியவற்றில்வருவன அஃகம், ஐயம், பீரம், சொக்கு, வையம், கருமம் முதலியன. நாலடியார்முதலியவற்றில் வருவன பகடு, அகடு, அட்கு, துப்பு, கைதூவாமை, உப்பு முதலியன. நன்னூல் முதலியவற்றிலே வருவன எகின், முரண், இடக்கர், பொச்சாப்பு முதலியன. பாரதம் முதலியவற்றில் வருவன பெருக்காளர், வேட்கோ, அந்தப்புரம், காகதுண்டம், குப்புறல் முதலியன. கந்தபுராணம் முதலியவைகளிலே வருவன சீகரம், கபித்தம், துருவை கண்டுதி முதலியன. சேதுபுராணத்திலேவருந் திரிசொற்களுக்கு அளவில்லை. அவை பின்னல், இலஞ்சி, குகு முதலியன.

இவைகளெல்லாம் நிகண்டுநூலுணர்ச்சிகொண்டே அறிதற்பாலன. முற்காலத்திலே நூல்களைக்கற்பவர்யாவரும் இலக்கணம் முதலியவற்றோடு நிகண்டுநூல்களையும் நியமமாகக்கற்றுவந்தார்கள். அக்காரணத்தினாலே கற்கும் நூலுரைகளின் சொற்பொருள்களை எளிதில் அறிந்தார்கள். நூலுரைகளைப் பிழையற வாசித்தார்கள். வேண்டுஞ்சொற்களைத் தெரிந்துபிரயோகித்து நூலுரைகளைச் செய்தார்கள்.



இக்காலத்திலே தமிழ்நூல்களைக்கற்பவரைக் காண்டலரிது. சிலர் சிலநூல்களின் சிலபாகங்களைக்கற்றாலும் நிகண்டு, இலக்கணம் முதலிய கருவிநூல்களைக் கற்பதில்லை. கருவிநூலுணர்ச்சியின்மையாலே நூல்களினுள்ளே செல்ல இயலாது. புறத்தேநின்று காலநிரூபணமும், வாதமும் பிறவுஞ்செய்வர். அவருள்ளே ஆங்கிலேயப்பயிற்சியிலே மிக விருப்புடையோர் சிலர் நிகண்டுகற்றல் நிர்மூடத்தனம்; அகராதி ஒன்றே அமையும் என்பர். இவர்கூறும் புதுவழி பல நிகண்டுகளை ஆக்கிவைத்துச்சென்ற முன்னோர்க்கும், அவைகளைக்கற்றுவந்த பின்னோர்க்குந்தெரியாதா? கற்போரெல்லாந் தனித்தனி அகராதி வைத்திருத்தலும், கவிதோறும் வருஞ்சொற்களை அகராதியிலேநோக்கலும், நூலுரைசெய்யுங்கால் வேண்டுஞ்சொற்களுக்கு அகராதிதேடலும் இயைவதெப்படி? அகராதி நோக்கினும் நிகண்டுகற்றோர்நெஞ்சம்போல நினைவுந்துணிவும் அமையுமா? நிகண்டினும் அகராதிபடித்தல் நன்று என்றாருமுளர். அகராதிபடிப்பவருமுளரா? இக்காலத்திற் பலர், நிகண்டுகளிலும், பிறநூல்களிலும் வேண்டிய சொற்களிருக்கவும் அவைகளை அறியாத முட்டுப்பாட்டினாலே திசைச்சொற்களையும், சேரிச்சொற்களையும், வழூச்சொற்களையும், வேறு பொருட்சொற்களையும், அவசியமற்ற வடசொற்களையும் விரும்பியவாறெல்லாந் தத்தம் புத்தகபத்திரங்களிற் பிரயோகிக்கின்றனர்.

திசைச்சொற்களாவன; சர்க்கார், சுமார், இந்துமதம், இந்துநூல், கோரிக்கை, மரத்துப்போதல் முதலியன. சேரிச்சொற்களாவன: புருஷன் பெண்சாதி, ஆணுவாத்தி, பெண்ணுவாத்தி, ஆண்கல்வி, பெண்கல்வி, சுடுதண்ணீர், குமாரு, வேலு, அவர்கள் முதலியன. வழூச்சொற்களாவன: கிரகஸ்தன், பார்ப்பினி, சஞ்சிகை, பூமாதேவி முதலியன. வேறுபொருட்சொற்களாவன: அக்கிராசனம்வகித்தல் உபநியாசம், சொற்பாவித்தல், ஆண்டநூல் முதலியன.

நிகண்டுச்சொற்கள் பொருள்களைமாத்திரந்தான்அறிவிக்குமா? பொருள்களின் உருவம், செயல், உடைமை,பால்,உற்பத்திமுதலிய பலவற்றையும் அறிவிக்கும். காரி, வெள்ளை, கடனிறவண்ணன் முதலியன உருவத்தை அறிவிக்கின்றன. அரன், அரி, வாசந்தி, மாதவி முதலியன செயலை அறிவிக்கின்றன. வேலன், கடம்பன், முதலியன உடை

மையை அறிவிக்கின்றன. ஆடவன், ஆடவள் முதலியன பாலை அறிவிக்கின்றன. பங்கயம், மலயசம் முதலியன உற்பத்தியை அறிவிக்கின்றன.

இவ்வியல்புடைய நிகண்டு நூல்கள் கற்பிக்கப்படல் வேண்டுமா? வேண்டாமா? வேண்டுமாயின்; கல்லாதவாறு என்னையோ? வேண்டாமாயின்; சொற்பொருளுணர்ச்சி எப்படிச்சித்திக்கும்! தமிழ்ப் பரிபாலனஞ்செய்யுஞ்சபையாரும், தமிழ் கற்பிப்போர்கற்பவர்களும் தமதுகருத்தை அறிவித்தல் நன்று.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்.

---

உ

# காளிதாஸர் காலநிர்ணயம்.

செந்தமிழ்ச்செல்வரே?

முன்னுரை.—காளிதாஸர் காலநிர்ணயத்திற்கும் அதன் உடன் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கும் பொருத்தமான ஆதாரங்களையெல்லாம் தொகுத்தெழுத இதுகாறும் ஒருவரும் முன்வாராததால், இவ்வியாஸத்தில் அவ்வாறு செய்யத்துணிந்தேன். இவ்வாராய்ச்சியைப் பூர்ணமாக்க நினைத்தே இதுவிஷயமான நூல்களையெல்லாம் தாராளமாய் உபயோகித்திருக்கிறேன். இங்ஙனம் கையாளப்பட்ட நூல்கள் அளவற்றவைஆதலால், அவைகளையெல்லாம் மறவாது ஈண்டெடுத்துக் கூறுதற்கு இயலாது. ஆகையால், சரிபார்ப்பதற்கு அவசியமான இடங்களில்மட்டுமே அவைகளைப்பெயராற்குறித்து இதற்குமுன் இவ்வாராய்ச்சியில் உழைத்திருக்கும் புலவர்களுக்கெல்லாம் பொதுவாக என் நன்றியை மிகுந்த களிப்புடன் செலுத்துகின்றேன். ஆயினும், இவ்வியாஸத்திற்காணப்படும் முடிபுகளெல்லாம் எனக்கே உரியவை. சில இடங்களில் என் சிறிய ஆராய்ச்சியில் கிடைத்த



பொருளையும் சேர்த்திருக்கிறேன். ஆதாரங்கள் காட்டப்பெறுதமொழிகளையெல்லாம் இவ்வியாஸத்திலேயே வேறு இடங்களில் நிரூபித்திருக்கிறேன்.

எல்லைகள். பாரதயுத்தத்திலிருந்து 3735 - ஆம் ஆண்டும், சகவரசரின் 556-ஆம் ஆண்டுமான கி. பி. 634 - இல் பொறிக்கப்பட்ட சளுக்கவேந்தன் இரண்டாவது புலகேசியின் ஐஹோல் லிகிதத்தில் (Epigraphia Indica VI. p. 7.) காளிதாஸர் புகழ்பெற்ற புலவராகக்கூறப்படுதலின், அவர் கி. பி. 600 - க்கு முன்னிருந்தவராதல் வேண்டும். ஆனால், காளிதாஸர் இயற்றிய 'மாளவிகாக்நிமித்ரம்'என்ற நாடகத்தில் "மகன் அக்நிமித்ரனை அணைந்து புஷ்யமித்ரன்" என்றிருப்பதால் (V) அக்நிமித்ரன் புஷ்யமித்ரனது மகனென்றும், "நமது மகனை மிகவும் கொடியவேலையில் ஸேநாபதி அமர்த்தினரன்றோ" என்றிருப்பதால் (V) அக்நிமித்ரனது மகன் வஸுமித்ரன் ஆவனென்றும், புஷ்யமித்ரன் ஸேநாபதி எனவும், பெயர்பெற்றிருந்தனரென்றும், "மௌரியஸசிவன்" அதாவது மௌரியவரசனது அமைச்சன் பகைவனென அக்நிமித்ரனால் அழைக்கப்படுவதால் (I-7) மௌரியவரசருக்குப்பின் புஷ்யமித்ரன் பட்டமெய்தினனென்றும், தெரியவருகிறது. புராணங்களிலும், கடைசி மௌரியவரசனான ப்ருஹத்ரதனைக்கொன்று அவன் ஸேநாபதி புஷ்யமித்ரன் ஆண்டானென்றும், அப்புஷ்யமித்ரனது மகன் அக்நிமித்ரனென்றும், அவ்வக்நிமித்ரனது மகன் வஸுமித்ரனென்றும், காணப்படுதலால் (Pargiter: Dynasties of the Kali age. p. 70.), காளிதாஸர் கூறும் அக்நிமித்ரனும், புராணங்களில் காணப்படும் அக்நிமித்ரனும் ஒருவனேயாம். இவ்வக்நிமித்ரன் கி. மு. 150-இல் பட்டமெய்தியதால் (Smith: Early History of India. p. 203), காளிதாஸர் கி. மு. 150-க்குப்பின்னரே இருந்தவராதல்வேண்டும். ஆகவே, காளிதாஸர்காலம் கி. மு. 150-க்கும், கி. பி. 600-க்கும் இடைப்பட்டகாலமெனப்பெறப்பட்டது.

அக்நிமித்ரவாதம். கி. பி. 1411 - இல் இருந்த காடயவேமர் (Epi. Ind. IV. pp. 321-ல்) 'மாளவிகாக்நிமித்ர'த்திற்கு அவரியற்றியவுரையில், ஒவ்வொரு நாடகத்திலும் 'பரதவாக்கியம்' என்ற முடிபுரை முக்காலங்களுக்கும் பொதுவாக இருக்கவேண்டுமென்றும், இவ்

விதிக்கு மாறாக 'மாளவிகாக்நிமித்ர'த்துப் பாதவாக்கியத்தில் காளிதாஸர் அக்நிமித்ரன்பேரைக்குறித்திருப்பதால் காளிதாஸர் அக்நிமித்ரன்காலத்திலிருந்தவராதல்வேண்டுமென்றும் எழுதிப்போந்தனர். அங்ஙனமாயின், தமது 'முத்ராராக்ஷஸத்துப் பாதவாக்கியத்தில் விசாகதத்தர் (கி.பி. 550-600) சந்த்ரகுப்தன் பெயரைக்குறித்திருப்பதால், விசாகதத்தரும் சந்த்ரகுப்தமௌரியன் (கி. மு. 321-297), முதலாவது சந்த்ரகுப்தன் (கி.பி. 319-330), அல்லது இரண்டாவது சந்த்ரகுப்தன் (கி. பி. 375-413) காலத்திலிருந்தவராகவேண்டுமே. ஆனல் ஹூணரை நாகரிகமற்ற 'இந்திய' ஜாதியராக அவர் குறிப்பதாலும் (V-11), கி. பி. 528 - இல் யசோதர்மனல் அபஜயம்பெற்றபிறகே ஹூணர் அவ்விதம் ஆயினராதலாலும், விசாகதத்தர் கி.பி. 528க்கு முன் இருந்தவராகார். ஆகையால், காடயவேமர்கூறும்வாதம் வலியற்றதெனவும், காளிதாஸர் அக்நிமித்ரன்காலத்தில் இருந்தவராக வேண்டுவதில்லையெனவும் தெளியலாகும். மேலும், 'மௌரியஸசிவன்' என்ற பதத்திற்கு மௌரியவரசனது அமைச்சன் என்னது மௌரியனென்றபெயரால் விளங்கிய அமைச்சன் என்று காடயவேமர் உரையெழுதுவதிலிருந்தே, அவர் கூறுவனவெல்லாம் பிரமாணமாகாவென விளங்கும்.

நவரத்னவாதம். 'ரகுவம்சம்' முதலான மூன்று காவ்யங்களையும் 'ச்ருதிகர்மவாத' நூலொன்றையுமியற்றிய காளிதாஸரால் கலிவர்ஷம் 3068 என்ற கி. மு. 34-இல் விக்ரமாதித்ய'னது அவையில் இயற்றப்பெற்றதெனக்கூறிக்கொள்ளும் "ஜ்யோதிர்விதாபரண" மென்ற ஜ்யோதிஷநூலொன்று அவ்வவையில் தந்வந்தரி, க்ஷபணகர், அமரஸிம்ஹர், சங்கு, வேதாளபட்டர், கடகர்பர், காளிதாஸர், புகழ்பெற்ற வராஹமிஹிரர், வரருசி என்ற நவரத்னங்கள் வீற்றிருந்தனரெனக் கூறுகின்றது. முதலில் பாவரத்னரென்பவரால் கி. பி. 1711 - இல் தான் இந்நூல் முதன்முதல் உரையெழுதப்பெற்றது. காளிதாஸரால் எழுதப்பெற்றதெனக்கூறிக்கொள்ளும் இந்நூலைக்குறித்தாவது, காளிதாஸர் இயற்றியதாக அதுகூறும் 'ச்ருதிகர்மவாத' நூலைக்குறித்தாவது பிரஸ்தாபம் வடமொழிநூல்களில் எங்கும் காணப்படவில்லை. காளிதாஸரது சிறப்புற்ற நாடகங்கள் யாவுமே 'ரகுவம்சத்திற்குமுன் இயற்றப்பெற்றிருந்தபோதிலும், அவைகளிலொன்றேனும் இந்நூலில்



குறிக்கப்படாததும் கவனிக்கத்தக்கது. மேலும், கலியுகத்தில் உதித்த ஆறு சககாரகரில், அதாவது சகங்களை வழங்கச்செய்தவர்களில் சாலிவாஹநனையும் ஒருவனாக இந்நூல் கூறுகின்றது. (X 110). ஆதிகாலங்களில் தங்களுடைய சகங்களில் அதாவது காலகணனங்களில் ஒன்றையாவது ஒருமனிதனுடைய தனிப்பெயரால் இந்தியர்கள் வழங்கி வந்ததாகத்தெரியவில்லை. கி. பி. 78 முதல் வழங்கப்பட்டுவரும் காலகணனம் பல்நூற்றாண்டுகளாக 'சகவரசரதுகணனம்' அல்லது 'சாகம்' என்றே பெயர்பெற்றிருந்தது. கி. பி. 1354-இல் பொறிக்கப்பட்ட முதலாம் புக்காராயனது ஹரிஹர்சாஸனத்தில்தான் இக் காலகணனம் 'சாலிவாஹநன்' என்றபெயருடன் முதன்முதல் சேர்ந்து காணப்படுகிறது. (Journal of the Royal Asiatic Society. 1966. pp. 809-820). ஆகையால், இஜ்யோதிஷநூல் கி. பி. 1350-க்குப் பின்னரே இயற்றப்பெற்றிருக்கவேண்டும். இது எங்ஙனமாயினும், கி. மு. 34-க்குமுன் தமது நூல்களையெல்லாம் இயற்றினதாகக்கூறும் இவ்வாசிரியர் 33+78=111 வர்ஷங்களுக்குப்பின்னரே ஏற்பட்ட ஒரு சகத்தை எவ்வாறு குறித்தனர்? அன்றியும், கி. பி. 450-ல் இயற்றப்பெற்ற ஜ்யோதிஷ 'ஸித்தாந்த'ங்களிலும், லிகிதங்களுள் கி. பி. 634-இல் பொறிக்கப்பட்ட ஐஹோல் லிகிதத்திலும்தான் கலிவர்ஷம் முதன்முதல் கூறப்படுகிறது. ஆயினும், கி. மு. 34 - இலேயே கலிவர்ஷத்தைத் தாம் உபயோகிப்பதாக இவ்வாசிரியர் கூறுகிறார். ஆகையால் இந்நூலைக் காளிதாஸர் இயற்றிலர் எனக்கருதல் தகும். கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் இருந்ததாக Dr. Hoernle கூறும் ஸுச்ருதர் தமது குருவெனக்குறிப்பிடும் தந்வந்தரியும், கி. பி. 300-ல் இருந்த அமரரும், சாகம் 509 என்ற கி. பி. 587-இல் இறந்த வராஹமிஹிரரும், (Anaraja's commentary on Brahmagupta's Khanda-Khadya), காளிதாஸரும் கி. மு. 34-இல் விக்ரமாதித்யனது அவையில் ஒருங்கு வீற்றிருந்ததாக இந்நூல் கூறுவது வியக்கத்தக்கதே. இவ்விக்ரமாதித்யனே கி. மு. 58-இல் இருந்து வழங்கப்பட்டுவரும் காலகணனத்தை ஸ்தாபித்தவனாகக் கருதப்படுகிறான். ஆனல், கி.மு. 58-இல் மாளவதேசத்தில் விக்ரமாதித்யனென்ற அரசன் ஒருவனும் இருந்திலன் என்று நினைப்பதற்கு இடமுண்டு. இக்காலகணனம் முதல் நான்குநூற்றாண்டுகளாகப் பெயரொன்றுமின்றியே வழங்கப்

பட்டுவந்தது. பின்னர், கி. பி. 343-இலும், 371 - இலும் "க்ருத" என்று பெயர்பெற்றிருந்தது. (Gangdhar inscription of Visvavarman; and, Bijaygadh inscription of Vishnuvardhana. Gupta Inscription. pp 75, 253). பிறகு கி. பி. 404 - இலும், 424-இலும், "க்ருத" என்றும், 'மாளவகணங்களால் வழங்கப்பட்டு வரும் சகம்' என்றும் இருபெயர் பெற்றிருந்தது. (Third Mandasor inscription; Nagari inscription). அதற்கும்பின்னர்? மேற்கூறப்பட்ட இரண்டாவது பெயரால்மாத்திரமே இச்சகம் விளிக்கப்பெற்றது (G.T.pp 87, 158). முதன்முதல் இச்சகம்'விக்ரம்' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. கி. பி. 842-இல் பொறிக்கப்பட்ட ஒரு டோல்பூர் லிகிதத்தில்தான் (Indian Antiquary XX. p. 406, No. 10). ஆயினும், கி. பி. 971-இல் பொறிக்கப்பட்ட ஏக்லிங்ஜிலிகிதத்தில்தான் இச்சகம் விக்ரமாதித்யன் என்ற 'அரச'னுக்கு உரிமை கூறப்பட்டது. (Journal of the Bombay branch of the Royal Asiatic Society. XXII. p. 166). இலக்கியங்களில் அவ்வாறு முதன்முதல் உரிமைகூறப்பட்டது அமிதகதி கி. பி. 993-இல் இயற்றிய 'ஸுபாஷிதரத்னஸந்தோஹ'த்தில்தான் Ind. Ant. XX. p. 406. No. 40). ஆகவே, இலக்கிய சாஸன ஆதாரங்களிரண்டும் இச்சகத்தை விக்ரமாதித்யன் ஸ்தாபித்தான் என்ற வாதத்திற்கு மாறாகவே இருக்கின்றன. கி. பி. 1070-இல் ஸோமதேவர் இயற்றிய 'கதாஸரித்ஸாகரத்தில் விக்ரமாதித்யன் உஜ்ஜயினீயில் ஆண்டவனென்றும், மஹேந்த்ராதித்யன் மகனாவன் என்றும், மிலேச்சரை நாசஞ்செய்தவனென்றும் காணப்படுதலாலும், ஸ்கந்தகுப்தனுக்கு (கி. பி. 455-470) விக்ரமாதித்யனென்றும், அவனது தந்தை குமாரகுப்தனுக்கு மஹேந்த்ராதித்யனென்றும் சிறப்புப்பெயர்கள் இருந்தனவாதலாலும், குமாரகுப்தனது ஜீவிதகாலத்தில் (கி. பி. 413-455) அவனது பிரதிநிதியாக ஸ்கந்தகுப்தன் உஜ்ஜயனீயில் ஆண்டவனாதலாலும், ஸ்கந்தகுப்தனும் ஹூணரென்ற மிலேச்சரை நாசம் செய்தவனாதலாலும், ஸ்கந்தகுப்தனும் விக்ரமாதித்யனும் ஒருவனேயாமெனக்கருதல் தவறாகாது. குப்தரென்பவர் வலிமிகுந்த கொடுங்கோன்மன்னராய் இருந்தனரென்றும் அவர் வம்சம் அழிவுற்றபொழுது, அச் சுபநிகழ்ச்சியைக்குறிப்பதற்கே கி. பி. 319-இல் ஒரு சகம் ஸ்தாபிக்கப்பட்டதென்றும்



அல்பிரூனி (கி. பி. 1030) கூறுகின்றார். (India. Sachau. Trans. II. p. 7.) ஆனால், இதற்கு மாறாக, குப்தர்சகம் அவர்களது அழிவைக் குறியாது முதலாவதுசந்த்ரகுப்தனது ராஜ்யாபிஷேககாலத்தையே குறிக்கின்றதென்றும், குப்தவரசர் கொடுங்கோன்மன்னரென்றது முற்றிலும் பிழையேயாமென்றும், அவர்களது பேருதவிகொண்டே இலக்கியங்களும், கலைகளும், சமயங்களும் செழித்தோங்கினவென்றும், நாம் நன்கறிவோம். ஆகையால், பிற்காலத்தரசரான குப்தர்களைப் பற்றிய வரலாறுகளே கி. பி. 11 - ஆம் நூற்றாண்டில் அழிவுற்றனவென்று தெளிவாகின்றது. ஹூணர்களை ஸ்கந்தகுப்தன் வென்ற செய்தியொன்றே ஜனங்களது அவ்யக்தஞாபகத்தில் எஞ்சிநின்றது. இதுகாரணமாகவே மாளவசகம் விக்ரமாதித்யனதுபெயருடன் சேர்க்கப்பெற்றிருக்கவேண்டும். புராணங்களில் காணப்படும் கலியுகராஜவிருத்தாந்தத்தில் ஓரிடத்திலேனும் விக்ரமாதித்யனது பிரஸ்தாபமேயில்லாததற்குக் காரணமும் விக்ரமாதித்யன் ஒரு குப்தவரசனாகயிருந்ததே. ஏனெனில், அவ்விருத்தாந்தம் குப்தர்கள் ஆண்டுகொண்டிருக்கும்பொழுதே இயற்றப்பெற்றதால், அவர்களது பூர்ணமான வரலாறுகளை எழுதுவதற்கு முடியாமல் அவர்களைப்பெயரால்மாத்திரம் குறித்துவிட்டு நிற்கின்றது. கி. மு. முதனூற்றாண்டின் பிற்பகுதியில் மாளவதேசத்தில் ஆண்ட அரசன் நஹபானன் என்ற பார்த்தியனாவனென்று கீழ்வரும் தக்க காரணங்களால் ராகல்தாஸ் பானர்ஜி அவர்கள் நிரூபித்திருக்கிறார். (J. R. A. S. 1917. pp. 273-89). நாஸிக்கிலும் கார்லேயிலும் கிடைத்த நஹபானன்மருகன் உசவதாதனது லிகிதங்களின்காலம் 41, 42, 45, என்றும், ஜூந்நாரில் கிடைத்த நஹபானன் மந்த்ரி அயாமனது லிகிதத்தின்காலம் 46 என்றும் காணப்படுகின்றன. ஆயினும், இவ்வாண்டுகள் இன்ன சகத்திலென்று குறிக்கப்படவில்லை. சகன் ருத்ரதாமனது ஆண்டௌலிகிதம் சாகம் 52 என்ற கி. பி. 130 - இல் பொறிக்கப்பட்டது.

நஹபானனது ஜூந்நார் சாஸனமும் இதே சகத்தின் 46-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டதென்று கருதுவோமாயின், இவ்விரண்டுசாஸனங்கட்குமிடைப்பட்ட 52-46=6-வர்ஷங்களில் நாம் பின்னர்க்கூறும் நிகழ்ச்சிகளெல்லாம் ஸம்பவித்திருக்கவேண்டும். க்ஷஹராதவம்சத்தைத் தன் தந்தை கோதமீபுத்ரசாதகர்ணி உந்மூலனம் செய்தானென்று ஸ்ரீ

வாசிஷ்டீபுத்ரபுளுமாயியின் 19-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட நாஸிக் லிகிதத்தில் (Epi. Ind VIII. p 60) கூறப்படுதலாலும், மற்றொரு நாஸிக் லிகிதத்தில் (Epi. Ind. VIII. p. 82) க்ஷஹராத க்ஷத்ரபனென்ற சிறப்புப்பெயரால் நஹபாநன் கூறப்படுதலாலும், நஹபாநனது வம்சத்தையே கோதமீபுத்ரன் உந்மூலனம் செய்தானென்று தெளிவாகின்றது. ஆகராவந்தி என்ற மாளவம், கச்ச, ஸுராஷ்ட்ரம் என்ற கத்தியவார், அநூபம் முதலான மாகாணங்களை க்ஷஹராதரிடமிருந்து கோதமீபுத்ரனும், ஆந்த்ரரிடமிருந்து சகன் ருத்ரதாமனும் முறையே வென்றனரென்று ஸ்ரீ வாசிஷ்டீபுத்ரபுளுமாயியின் 19-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட நாஸிக்லிகிதத்திலிருந்தும், ருத்ரதாமனது கிர்நார் லிகிதத்திலிருந்தும் நாம் அறிகிறோம் (Epi. Ind. VIII. pp. 60,64.) தனது பிரதாபத்தினாலேயே இவைகளையெல்லாம் பெற்றதாக ருத்ரன் கூறுவதாலும், ஆண்டௌ கச்சநாட்டிலிருப்பதாலும், இம் மாகாணங்களையெல்லாம் ஆண்டௌலிகிதம்பொறிக்கப்பட்ட கி. பி. 130-க்கு முன்னரே ருத்ரன் ஆந்த்ரரிடமிருந்து வென்றிருக்கவேண்டும். மேலும், கோதமீபுத்ரனது 18, 24-ஆம் ஆண்டுகளிலும், அவன்மகன் வாசிஷ்டீபுத்ரனது 2, 6, 19, 22-ஆம் ஆண்டுகளிலும் பொறிக்கப்பட்ட சாஸனங்கள் நாஸிக்கில் காணப்படுவதால் (Epi. Ind. VIII. pp. 60, 73; J. B. B. R. A. S. X. pp. 122-3. No. 1122-4), கோதமீபுத்ரனது 18-ஆம் ஆண்டிலிருந்து அவன் மகனது 22-ஆம் ஆண்டுவரை, 28-வர்ஷங்களாவது நாஸிக் அவர்களதாட்சிக்கு உட்பட்டிருக்கவேண்டும். ஆகவே, கி. பி. 124, 130 இவைகட்கு இடைப்பட்டகாலத்திலேயே கோதமீபுத்ரன் க்ஷஹராதரை உந்மூலனம் செய்ததும், ஆந்த்ரர் நாஸிக்கில் இடைவிடாமல் 28-வர்ஷங்களாவதாண்டதும், பின்னர் அதை ருத்ரதாமன் வென்றதும் நிகழ்ந்திருக்கவேண்டும். இது அஸாத்யமாதலால், நஹபாநனது சாஸனங்களில் உபயோகப்படுத்தப்பட்ட சகம் 'சாகம்' அன்று. நஹபாநனது சாஸனங்களில் காணப்படும் அக்ஷரவடிவங்கள், மாளவசகம் 72-என்ற கி.பி. 15-இல் பொறிக்கப்பட்டிருக்கவேண்டிய ஸுதாஸனது மதுராபுரிச்சாஸனங்களின் அக்ஷரவடிவங்களைவிட ப்ராசீனமாகத்தோன்றுவதால் (J. B. B. R. A. S. XX.p. 275), நஹபாநனது சாஸனத்தில் காணப்படும் 46-ஆமாண்டு கி. பி. 15-க்கு முற்படவேண்டும். கி. மு. முதனூற்றாண்டில் தொடங்கிய சகம் மாளவசகம் ஒன்றே ஆதலால், நஹபாநனது சாஸனங்கள் மாளவசகத்தில்தான் இருத்தல்வேண்டும். ஜோகல் தெம்பியில் நஹபாநனது வெள்ளிநாணயங்களில் 13000-த்திற்குமேல் ஒரே குவியலாகக் கிடைத்திருப்பதிலிருந்து நஹபாநன் அநேக வர்ஷங்களாண்டிருக்கவேண்டுமென்று தெரியவருகிறது. ஆகையால், அவனது சாஸனத்தில் காணப்படும் 46-ஆம் ஆண்டு அவனது அபிஷேககாலத்திலிருந்தே கணிக்கப்பட்டிருக்கலாமென்றும், மாளவசகம் அவனது ஆட்சிகாலமுதற்கொண்டே வழங்கப்பட்டிருத்தல்கூடுமென்றும் கருதுவது தவறாகாது. அஃதெங்ஙனமாயினும், அவன் வம்சத்தவரிடமிருந்து கோதமீபுத்ரன் வென்ற மாகாணங்களில் ஆகராவந்தியென்ற மாளவமும் ஒன்றாதலின், கி. மு. முதனூற்றாண்டின் பிற்பகுதியில் மாளவத்திலாண்டவன் நஹபாநனென்பதும், ஆகையால் அதேகாலத்திலும் அதேதேசத்திலும் விக்ரமாதித்யன் ஆண்டிருக்கமுடியாதென்பதும் பெறப்பட்டன. இனி, கி. பி. முதனூற்றாண்டிலிருந்த ஹாலன் இயற்றிய 'காதா ஸப்தசதீ' என்ற நூலில் ஒரு விக்ரமாதித்யனது செய்தி கூறப்படுகிறதே (V-64) எனில், இந்நூலாசிரியனான ஹாலனும் கி. பி. முதனூற்றாண்டிலிருந்த ஹால சாதவாஹநனும் ஒருவனேயென்பதற்குப் பெயரொற்றுமையும் கர்ணபரம்பரையுமன்றி வேறு ஆதாரம் காண்கிலமென்றும், கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்த பாணகவி குறிப்பிடும் சாதவாஹநனது 'கோசமும்' இந்நூலும் ஒன்றேயென்பதற்கு ஆதாரமேயில்லையென்றும், கி.பி. 170-க்குப்பின்னரே இந்தியர்கள் வாரநாட்களையறிந்தவராயிருக்க, இந்நூல் 'செவ்வாய்க்கிழமை'யைக் குறிப்பதாலும் (III-61), கி. பி. 500-க்குமுன் இயற்றப்பட்ட வடமொழிநூல்களொன்றிலும் ராதிகையைக்குறித்த பிரஸ்தாபமே காணப்படாமலிருக்க, இந்நூல் 'ராதிகை'யைக் குறிப்பதாலும் (I. 89) இந்நூல் கி. பி. 500-க்குப்பின்னரே இயற்றப்பட்டிருக்கவேண்டுமென்றும், அதிற்காணப்படும் விக்கிரமாதித்யன் ஸ்கந்தகுப்தனே என்றும் கூறுவேன். ஆகவே, நவரத்னவாதம் ஆதாரமற்ற ஒரு கூற்றெனவே நன்கு நிரூபிக்கப்பட்டது.



பராதீன வாதம். 'குமாரஸம்பவ'மும், 'ரகுவம்ச'மும் அபூர்வமாக முடிவதால், இக்காவ்யங்களை இயற்றிய காளிதாஸர் வேண்டுமென்றே அவைகளை அவ்வாறு முடித்தனரென்றும், தம்காலத்தில் நமதுநாடு பராதீனமாய் அதாவது மிலேச்சரது ஆட்சிக்கு உட்பட்டு இருந்த

தென்பதை ஸூசிப்பதற்கே அவர் அவ்வாறு செய்தாரென்றும், கி. பி. 320-இலிருந்து 500-வரை இந்தியாவை இந்தியர்களான குப்தவரசரே ஆண்டுவந்ததாலும், காளிதாஸர் கி. பி. 473-க்கு முன்னரே இருந்தவராகவேண்டுவதாலும் அவர் கி. பி. 320-க்கு முன்னிருந்தவரென்றும் சிலர் கூறுவர். இவ்விரு காவ்யங்களும் அசுபமாய்முடிவதற்கு வேறு காரணங்கள் காட்டப்படுமாயின் இவ்வாதம் வலியிழந்துவிடுமென்பது கூறாமலே விளங்கும். அவ்வாறு காட்டக்கூடுமென்பதே எனது துணிபு. 'குமாரஸம்பவ'மே காளிதாஸர் முதன்முதல் இயற்றிய நூலென்றும், கவித்திறம் முற்றும் பெறுவதற்குமுன், தேவர்களுக்கு ஸேநாபதியாகவும் ரக்ஷகராகவும் அவதரித்த குமாரக்கடவுளது பிறப்பையும் வீரச்செயல்களையும் இந்நூலில் பாடமுயன்று, இப்பெருவிஷயத்திற்கும் மகாகாவ்யத்தின் இலக்கணங்களுக்குமேற்ப, உயர்நடையையும் அர்த்த கௌரவத்தையும் சிறிதும் கைவிடாமல் முழுதும் எழுதிச்செல்வது அஸாத்தியமெனக்கண்டு, காளிதாஸர் இந்நூலைப் பூர்த்திசெய்யாது பார்வதியை ஈசன் மணந்தசெய்தியுடன் நிறுத்திவிட்டனரென்றும் கூறுவது தவறாகாதாகையால், 'குமாரஸம்பவம்' அசுபமாக முடிவதிலிருந்து காளிதாஸர் காலநிர்ணயவிஷயத்தில் யாதொரு பயனையுமடையமுடியாது. மேலும், காளிதாஸர் தம்காலத்துச் சரித்திரத்தை விளக்குவதற்கு இந்நூலை இயற்றவில்லை. இதில் சரித்திரக்குறிப்புகளேதாகிலும் காணப்படுமாயின் அவைகள் தற்செயலாகவே ஏற்பட்டிருக்கவேண்டும். 'குமாரஸம்பவ'த்தில் கூறப்படும் அஸுரரது தீச்செயல்களும் தேவர்களது கஷ்டதசையும் காளிதாஸர்காலத்தில் மிலேச்சர் ஆதிக்கம்பெற்று இந்தியரை வருத்தினரென்று குறிப்பாலுணர்த்துமென்பதற்கு இப் பராதீனவாதிகள் காட்டும் ஆதாரமெல்லாம் 'லப்த ப்ரதிஷ்டா:' என்றபதத்தை தேவர்களைக்குறித்து உபயோகித்திருப்பது ஒன்றே (II. 27). இப்பதத்தின் பொருள் ஸ்திரமான பதவியை அடைந்தவர் என்றிருப்பதாலும், தேவர்கள் படைப்புக்காலம் தொட்டே வானுலகிலிருப்பவராதலாலும், ஆகையால் வானுலகை 'அடைந்தவர்' என்பது அவருக்குப்பொருந்தாது வானுலகில் முன்னிராது பின்னடைந்தவர்க்கே பொருந்தும் ஆதலாலும், இப்பதம் இவ்வுலகில் ஆளும் அரசரையே குறிக்குமென்றும், அவர்க்குப்பகைவரான அஸுரர் மிலேச்சரேயாகவேண்டுமென்றும் அவர்வாதிக்கின்றனர்.



இவ்வாறு கூறுமவர் இப்பதத்தை அடுத்துவரும் 'ப்ரதமம்' என்ற பதத்தையும், அதற்கு 'பூர்வம்' அதாவது முற்காலத்தில் என்ற மல்லிநாதருரையையும் கவனித்திருப்பாராயின், தேவர்களும் வானுலகைப் படைப்புக்காலம்தொட்டே அநுபவித்தவரல்லர் என்றும், அவரும் அநேக யாகங்களைச்செய்ததின் பயனாகவே வானுலகை அடைந்தனரென்றும், அவரும் இறக்கவேண்டியவரே என்றும், அவரை அமரர் என்றழைப்பதால் மனிதரைவிட நீண்ட ஆயுளை உடையவரென்று மாத்திரமே நாம் உணரவேண்டுமென்றும், அவர் செய்தவம் குன்றின் அவரும் இவ்வுலகிற்கே வரவேண்டுமென்றும், அவருடைய பதவி இந்நூலில் காண்பதுபோல அஸுரராலும் அநேக வேள்விகளியற்ற ஆற்றலுடைய மக்களாலும் எப்பொழுதும் அபாயத்திலிருக்கிறதென்றும், அதுகாரணமாகவே அவ்வித மக்களது பேரெண்ணங்களையும் பெருமுயற்சிகளையும் வீணாக்க ஆசாபாசங்களில் அவரை இழுக்கும் முயற்சியில், அஸூயை நிறைந்த அவர்கள் கண்மூடாது கவனமாயிருக்கிறார்களென்றும் நமது புராணங்கள்கூறுவதை மறந்திரார். இதைக் காளிதாஸரே 'அபிஞான சாகுந்தள'த்தில் (I) விச்வாமித்ரரது தபஸைக் கலைக்க ஸந்தேஹம்நிறைந்த தேவர்கள் மேநகையை அனுப்பினரென்று அநஸூயைகூறியதற்கு துஷ்யந்தனது விடையாக பிறரது நிஷ்டை எப்பொழுதும் தேவர்கள்மனதில் அச்சத்தை விளைப்பது இயல்பே எனக்குறித்திருக்கிறார். 'ரகுவம்ச'த்தின் அசுபமான முடிவிற்கும் வேறு காரணங்கள் காட்டல்கூடும். அதுவே காளிதாஸர் கடைசியிலியற்றிய நூலென்றும், அதை முடிப்பதற்குமுன் அவர் இறந்திருக்கக்கூடுமென்றும் கூறுவதும் தவறாகாதாகையால், இப்பராதீனவாதம் ஒரு வலியற்றவாதமேயெனப் பெறப்பட்டது.

யசோதர்மவாதம். இனி, கி. பி. 528-இல் மிஹிரகுலனென்ற ஹூணனைவென்ற யசோதர்மனது அவைப்புலவர் காளிதாஸர் என வேறுசிலர் கூறுவர். முதலில், ஹிமாலயத்தில் செல்வதற்கு முதன்முதல் ஸாத்யமாக்கியது யசோதர்மனே என்றும், அப்பர்வதத்தைக் காளிதாஸர் நன்கு அறிந்தவராகத்தெரிதலால், அவர் யசோதர்மன் காலத்தில் இருந்தவராதல் வேண்டுமென்றும் அவர் கூறுகின்றார். ஆனால் "எவனது தோள்வலியால் செல்வதற்குக் கஷ்டஸாத்தியமானது என்ற சிறப்புப்பெயரை ஹிமாலயம் இழந்துவிட்டதோ" என்று யசோ

தர்மனே பொறித்த மந்தஸாரலிகிதத்தில் காணப்படுவதால் (G. I. pp. 147-8. No. 33), யசோதர்மன் காலத்திற்குமுன்னரும் ஹிமாலயத்தில் கஷ்டத்துடனுவது செல்வதற்கு ஸாத்தியமேயாமென்றும், யசோதர்மன்செய்ததெல்லாம் அதில் செல்வதை ஸுலபஸாத்யமாக்கியதே என்றும், கஷ்டஸாத்யமாயிருந்தபோதிலும் இயற்கை அழகுநிறைந்த இடங்களைக் கூர்ந்துபார்க்கவும் கவனிக்கவும் வல்லவராதலால், காளிதாஸர் யசோதர்மன்காலத்திற்குப்பிறகே இருந்திருக்கவேண்டுவதில்லை என்றும் தெளிவாகின்றது. ரகுமஹாராஜன் உத்ஸவஸங்கேதரை வென்று, அவர்கள் நாட்டில் அக்ஷோப்யரை ஸ்தாபித்தானென்று 'ரகுவம்ச'த்தில் காணப்படுகிறதென்றும், உத்ஸவஸங்கேதர் டிபெட்டர்களேயென்றும், அக்ஷோப்யர் மஹாயான பௌத்தர்கள் தொழுதுவரும் தேவதையென்றும், அவரது பூஜை டிபெட்டில் ஏற்பட்டது கி. பி. 6-ஆம் நூற்றூண்டில்தான் என்றும், ஆகையால் காளிதாஸர் அந் நூற்றூண்டிலேயே இருந்தவராதல்வேண்டும் என்றும் ஸ்ரீமாந்-ஹரப்ரஸாத சாஸ்த்ரி அவர்கள் வேறொருகாரணம் கூறுவர். 'ரகுவம்ச'த்தில் கூறியிருப்பதோ இதற்கு முற்றிலும் மாறுகவே இருப்பதாக என் சிற்றறிவிற்குத் தோன்றுகிறது. ரகுமஹாராஜன் உத்ஸவஸங்கேதரைவென்று (IV. 78), அவர்கள் ஸமர்ப்பித்த காணிக்கைகளைப்பெற்று கைலாஸ பர்வதத்திற்குப்போகாமலே மலையுச்சியினின்றும் இறங்கிவிட்டான் எனத் தெரியவருகிறது. (IV. 80-ம், மல்லிநாதருரையும்). ஆகையால், உத்ஸவஸங்கேதர் ஹிமாலயத்தின் இந்தியபக்கத்திலேயே இருந்தவரென்றும், ரகு கைலாஸபர்வதத்திற்கே போகாததால், அதற்கப்புறம் இருக்கும் டிபெட் அவர்கள் நாடு அல்லவென்றும் தெரிகிறது. மலையிலிருந்து இறங்குமுன், அம்மலையுச்சியில் தனது புகழை அசைக்க முடியாவண்ணம் ரகு நாட்டினுன் என்றிருப்பதையே (IV-80) 'தத்ர' என்ற பதத்திற்கு 'ஹிமாத்ரௌ' அதாவது ஹிமாலயத்தில் என்ற மல்லிநாதருரையைக்கவனியாது டிபெட்டில் என்றும், 'அக்ஷோப்யம்' என்ற பதத்திற்கு 'அத்ருஷ்யம்' அதாவது அசைக்கமுடியாவண்ணம் என்ற மல்லிநாதருரையைக்கவனியாது மஹாயான பௌத்தரது தேவதை என்றும் பொருள் கற்பித்தும், 'யசோராசிம்' அதாவது புகழ்க்குவியலை என்றபதம் ஒன்றிருப்பதையே மறந்தும், சாஸ்த்ரி அவர்கள் எழுதிப்போந்தது ஆச்சர்யம். பிறகு, 'ரகுவம்ச'த்தில்



(XVII) அயோத்தியை ஸ்ரீ ராமரது புத்ரர் விட்டுப்போனதால் அழிவுற்றசெய்தி கூறப்படுதலிலிருந்து தலைநகராயிருந்த அப்பதியை விட்டு குப்தர்கள்போனதைக் காளிதாஸர் நேரில் பார்த்திருக்கவேண்டுமென்றும், அவ்வாறு போனது கி. பி. 6-ஆம் நூற்றூண்டில் ஹூணர்கள் இந்தியாவின்மேல் படையெடுத்துவந்தபிறகே என்றும், ஆகையால் காளிதாஸர் அந்நூற்றூண்டிலேயே இருந்தவராகவேண்டுமென்றும் அவர்கூறுவர். ஆனால், கி. பி. 6-ஆம் நூற்றூண்டிற்குமிகவும் முன்னரே முடிவுபெற்ற 'ராமாயண'த்திலேயே அயோத்யையழிவுற்ற இச்செய்தி காணப்படுதலால் (Ramayana Nirnaya Sagar Press Fd. VII. 108, 4-6) இவ்வாதம் வலியற்றதென விளங்கும். இனி, 'மேகதூத'த்தில் உஜ்ஜயினீயிலிருந்து மந்தஸாரத்திற்குப்போகும் சாலையில் தேவகிரியிலிருக்கும் ஸ்கந்தர்கோயிலை காளிதாஸர் கூறுகிறுரென்றும், அதனருகில் குதிரையின்மேல் வீற்றிருக்கும் ஸ்கந்தர்சிலையொன்றுளதென்றும், அச்சிலையும் கோயிலும் ஸ்கந்தகுப்தன் இறந்தபிறகு அவன் ஞாபகார்த்தமாகவே அமைக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும், ஆகையால் காளிதாஸர் 6-ஆம் நூற்றூண்டிலிருந்தவராகவேண்டுமென்றும் அவர் கூறுவர். ஆனல், அஸுரரொடுபொருத தேவஸை[illegible]த்திற்குக் குமரக்கடவுள் தலைவராக அவதரித்தவராதலால், அவரை பரிமாவின் மேலிருத்துவது தவறுகாது என்பதும், ஆகையால் அச்சிலையும் கோயிலும் ஸ்கந்தகுப்தனது ஞாபகார்த்தமாகவே அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்ற நியதியில்லை என்பதும் தெளிவாம். கடைசியாக, 'குமாரசம்பவ'த்தில் (IV-27) வண்டுகள் 'மனோபவ' என்ற பெயரின் அக்ஷரங்களை ஒத்திருக்கின்றன என்று கூறப்பட்டிருப்பதாலும், மந்தஸார லிகிதம் முதலான சாஸனங்களில் காணப்படும் 6-ஆவது நூற்றூண்டின் பிராஹ்மி லிபியிலேயே ம, நோ, ப, வ என்ற அக்ஷரங்களில் ஒவ்வொன்றும் ஒரு கருவண்டைப்போல அடியிலும் முடியிலும் விரிந்தும், இடையிற்குறுகியும் இருப்பதாலும் காளிதாஸர் அவ்வாறும் நூற்றூண்டிலேயே இருந்தவராகவேண்டும் என்று அவர் கூறுவர். ஆனல், கி. பி. 5-ஆம் நூற்றூண்டின் பிராஹ்மி லிபியிலும் அவ்வாறே இருத்தலால், காளிதாஸர் 5-ஆம் நூற்றூண்டிலும் இருந்தவராதல் கூடும். மேலும், "அநேக அரசரின் முடிகளைவணக்கிய ஹூணர்தலைவனது ஆணைச்சடங்காத பிரதாபத்தைஉடையவனும், மிஹிரகுல

வரசனாலும் வணங்கப்பட்ட பாதங்களை உடையவனும்" என்று கி. பி. 532-இல் பொறிக்கப்பட்ட மந்தஸார லிகிதத்திலிருந்து மிஹிரகுலனை வென்றவன் யசோதர்மன் என்று நாம் அறிவோமேயாயினும், அவன் விக்கிரமாதித்யன் எனப் பெயர்பெற்றிருந்தான் என்றாவது, அவனே தன்னை அவ்வாறு சிறப்பித்துக்கூறிக்கொண்டானென்றாவது சொல்வதற்குச் சரியான ஆதாரமொன்றும் காணப்படவில்லை. அன்றியும், இவ்வாதத்திற்கு முற்றிலும் மாறாகவும் சில விஷயங்கள் இருக்கின்றன. இலங்கையில் இருந்த 'ஒரு காளிதாஸனும் அவனது ரக்ஷகனாய குமார தாதுஸேநனென்ற இலங்கைவேந்தனும் கி. பி. 524-இல் இறந்தனர் என்று 'பூஜாவளீயம்' என்ற இலங்கைச்சரிதம் கூறுவதால், புகழ்பெற்ற 'நமது' காளிதாசர் கி. பி. 500-க்கு முன்னிருந்தவராக வேண்டும். மேலும், கி. பி. 531-முதல் 579-வரை ஆண்ட பாரஸீக வரசன் குஸ்ரு அநுஷிர்வானது கட்டளையை மேற்கொண்டு பெஹ்லவி பாஷையில் இயற்றப்பெற்ற 'பஞ்சதந்த்ர'மொழிபெயர்ப்பில் (Panchatantra I-51) 'குமாரஸம்பவ'த்திலிருந்து ஒரு மேற்கோள் (II-55) எடுத்தாளப்பட்டிருப்பதால் (Telang: was Ramayana copied from Homer? pp. 36-59), அம் மொழிபெயர்ப்புக்கு ஒரு தலைமுறைக்கு முன்னரே 'பஞ்சதந்த்ரம்' இயற்றப்பெற்றதென்றும், அப் 'பஞ்சதந்த்ர'த்திற்கு ஒரு தலைமுறைக்கு முன்னரே 'குமாரஸம்பவம்' இயற்றப்பெற்றதென்றுமே கருதியபோதிலும், காளிதாஸர் கி. பி. 500-க்குப்பின் இருந்தவராகாரென விளங்கும். இம் முடிபை வற்புறுத்தும் வேறொருசான்றும் காணப்படுகிறது. கி. பி. 473-இல் பொறிக்கப்பட்ட மந்தஸார லிகிதத்திற்காணப்படும் வத்ஸபட்டி இயற்றிய 10-ஆவது, 11-ஆவது ச்லோகங்களை (G. I. p. 83; Ind. Ant. XV. p. 198) காளிதாஸர் இயற்றிய 'மேகதூத'த்தின் 66-ஆவது (Pathak's Ed.) ச்லோகத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் காளிதாஸருக்கு வத்ஸபட்டியே கடன்பட்டிருக்கிறான் எனத்தெரியவரும். மேலும், ஜனங்களால் நன்குமதிக்கப்படும் ஒரு புலவரது நூல்களின் சிறப்புக்குணங்களை மனதில் இருத்தி ஒரு சாஸன வாசகாசிரியன் அவைகளைப்போல எழுதமுயன்றான் எனல் பொருந்துமேயன்றி, ஒரு மஹாகவி தான் நூல்களியற்றுமுன் ஸத்காவ்யலக்ஷணங்கள் இவை என அறியவிருப்பி இக்காலத்துக் கல்வெட்டுப்புலவரைப்போல் ஸ்தூபி



களில் பொறிக்கப்பட்ட சாஸனங்களை ஆராய்ந்தான்எனல் ஒருசிறிதும் பொருந்தாது. அன்றியும், காளிதாஸரது ஒருங்கமைந்த்வர்ணனையைச்சிதைத்து அநேகமாய் அவரது வாசகத்திலேயே அவ்வுபமான உபமேயங்களைக் கணக்கிடுவதுபோலவே வத்ஸபட்டி எழுதியிருத்தலும் கவனிக்கத்தக்கது. காளிதாஸரைப்போலவே, வத்ஸபட்டியும் 'ஸ்வபக' என்ற பதத்தின்பால் தனது விருப்பத்தை வெளியிடுகிறான். 'குமாரஸம்பவ'த்தில் காணப்படும் 'ப்ரஸாதமாலாஸு'என்ற பதத்தை (VII. 56) அநுஸரித்தே, வத்ஸபட்டி 'ப்ரஸாதமாலாபி:'என்ற பதத்தை 12-ஆவது ச்லோகத்தில் உபயோகித்திருக்கிறான். 44-ஆவது ச்லோகத்தில் 'ப்ரயத்நேன' அதாவது சிரமப்பட்டே தான்எழுதியதாக ஒப்புக்கொள்ளும் வத்ஸபட்டி புகழ்பெற்ற காளிதாஸரின் சிறந்த நூல்களையே அநுஸரித்துத் தானும் எழுதியிருப்பதாகத்தெரிவிக்க விரும்புவது போலத்தோன்றுகிறது. மேலும், 'ரகுவம்ச'த்தில் (XVIII) ரகுவின் வம்சத்தாரது பெயர்களை ச்லேஷைப்படுத்திக் காளிதாஸர் எழுதிச்சென்றதுபோலவே, வத்ஸபட்டியும் 'பந்துவர்மன்' என்ற பதத்தை "பந்துப்ரியோ பந்துரிவ ப்ரஜானாம் பந்த்வார்த்திஹார்த்தாந்ருப பந்துவர்ம" என்ற 26-ஆவது ச்லோகத்தில் ச்லேஷைப்படுத்தி எழுதிப்போந்தனன். ஆகவே, இம்மந்தஸாரலிகிதத்தில் 'குமாரஸம்பவம்' 'மேகதூதம்,' 'ரகுவம்சம்', என்ற இம்மூன்று காவ்யங்களையும் அநுஸரித்து வத்ஸபட்டி எழுதியிருப்பதால், கி. பி. 450-க்கு முன்னரே காளிதாஸர் தமது நூல்களையெல்லாம் இயற்றியிருந்தனர் எனக் கருதுவது தவறாகாது.

முடிவுரை. இனி, இவ்விஷயம் பெரிதாயிருப்பதாலும், அதற்குப் போதிய அவகாசம் இங்கு கிடைத்தல் அரிதாதலாலும், இவ்வியாஸத்தை இத்துடன் நிறுத்துகின்றேன். நான் வாசிக்குமளவும் பொறுமையுடன் கேட்டருளியதற்காக இவ்வவையோர்க்கு என் நன்றியை விநயத்துடன் செலுத்துகின்றேன். இன்று யான் வாசித்ததைக்கேட்டு, இவ்விஷயத்தில் மேலும் அறியவிரும்புவோரை பங்களூரில் பதிப்பிக்கப்பெற்றுவரும் Journal of the Mythic [illegible]iety என்ற பத்திரிகையின் 1918-ஆம் ஆண்டு ஜூலை, அக்டோபர் ஸஞ்சிகைகளைப்பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டுகின்றேன். இவ்வியாஸத்

தைப்பிழையின்றித்திருத்தி உதவியதற்காக எனது நண்பர் ஸ்ரீமாந். பி. எஸ். ராமஸ்வாமி ஐயரவர்களுக்கும், ஸ்ரீமான். எஸ். தேசிவிநாயகம்பிள்ளையவர்களுக்கும், ஸ்ரீமாந். எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களுக்கும் யான் என்றும் கடமைப்பாடுடையவனாகிறேன்.

[illegible] ।
[illegible] ॥

கே. ஜி. சங்கரையர்.

(இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினேழாம்வருடக்கொண்டாட்டத்திற்படிக்கப்பெற்றது.)

---

# இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பல்.

"சந்தனப்பொதியச்செந்தமிழ்முனியும்
சவுந்தரபாண்டியனெனுந்தமிழ்நாடனும்
சங்கப்புலவருந்தழைத்தினிதிருந்த
மங்கலப்பாண்டிவளநாட்டின்."

தலைநகரமாயும் நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ, நிறை நெடு மங்கலநாணோவென உலகுவியந்து புகழப்பெற்றதாயும்,

"திருமகட்கொருதாமரைக்கூடமேதிருமான்
மருமகட்குவெண்டாமரைமாடமேஞானந்
தருமகட்குயோகத்தனிப்பீடமேதரையாம்
பெருமகட்கணிதிலகமேயானதிப்பேரூர்."

"எண்ணும்போதுளத்துயரொழிப்பதுமகிழ்ந்தெழுந்து
நண்ணும்போதுமாமிடியையுந்தொலைப்பதுநாளுங்
கண்ணுநெஞ்சமுங்களித்திடச்செய்வதுகனிந்த
பண்ணும்பாடலும்பயில்வதுகூடலம்பதியே."

என்பனவாதியாகப் புலவர்பெருமக்களாற் பெரிதும் பாராட்டிப்பாடப் பெற்றதாயுமுள்ள மதுரைமாநகரில் நமது மதுரைத்தமிழ்ச்சங்கப் பதினேழாம்வருடோற்சவக்கொண்டாட்டம் நாளிது மாதம் 4, 5-ம் தெய்திகளில் வெகு விமர்சையாய் நன்கு நடைபெற்றதென்பதெவருமறிவர். மேற்படி வருடக்கொண்டாட்டத்தின் இரண்டாந்தினமாகிய இம்மதி ஐந்தாம்தேதிப்பிற்பகலில் "வெண்பாவிற் புகழேந்தி" என்றறிஞர்களாற் கூறப்படும்புலவர்பெருமானைப்பற்றியுபந்யசிக்கப்புகுந்த ஓர் வைஷ்ணவ பண்டிதசிகாமணியவர்கள், வெண்பாக்களின் அமைப்பு, இலக்கண முதலியவற்றைப்பற்றிப்பேசிவரும்போது, பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார்முதலியோர் கூறியுள்ள வெண்பாக்களும் இலக்கணவரம்பின்றித் தளைதட்டு முரண்படுகின்றனவெனக்கூறிப்போந்தனர். அவ்வமயம் ஆங்கவர்க்கணித்தாய் வீற்றிருந்த,

தொல்லைவளம்படைத்ததிரிசிரபுரத்துத் தோன்றுபுகழ்மீனாட்சிசுந்தரப்பேர் - வல்லபெருந்தகைமாட்டுப்பன்னூலாய்ந்து வளர்சங்கநூல்கள்பல வனைந்தச்சேற்றி - யெல்லவருங்கொண்டாடும்வண்ணமேனாட் டிறைவர்மகாமகோபாத்தியாயப்பட்டம் - ஒல்லைதரத்தமிழரசிமுதற்சேயாகி யொளிர்கின்ற உ. வே. சாமிநாதையர் அவர்கள், பொய்கையாழ்வார் முதலிய மகான்களின்பாக்களிற் குற்றங்கற்பிக்கும் பிரசங்கியாரின்கூற்றைக் கூற்றெனமதித்துத் துடித்து உடனே அன்னோர் நூற்பாக்களில் குற்றங்கள்காணப்படின் அவைகள் அச்சுப்பிழைகளாக வேயிருக்கவேண்டுமென்று சூசிப்பித்தும் கவனியாது அப்பிரசங்கியார் மறித்தும், சந்திரனிடத்துத்தோன்றும் களங்கங்கள் சந்திரனது பிரபையால் தெரியாது எவ்வாறு போகின்றனவோ, அவ்வாறே பெரியோர்களது பாக்களிற்காணும் குற்றங்களும் மறைந்துபோகின்றனவென்று மிகவும் வற்புறுத்திக்கூறி முடித்தனர்.

அந்தோ! பெரியோர்கள் எம்மதத்தினராயினும் அவர்களையெம்மதத்தினரெனக்கருதுங் கொள்கையுடையேனாதலான், அப்பிரசங்கியார் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் ஆதிய மகான்களின் பாக்களில் இலக்கணக்குற்றங்கற்பித்ததைச் சிரவணித்திருந்தயான் ஒரு சிறிதுஞ்சகிக்கலாற்றாது அன்னார் பிரசங்கமுடிவில் எழுந்து, ஸ்ரீமத். அக்கிராசனாதிபதியவர்களை விளித்து, பெரியார்களின் பாக்களுக்குப் பிரசங்கியார் குற்றங்கற்பித்துள்ளார்: ஆதலின், அதைமறுத்துப் பேசுதற்கெனக்கனுமதிகொடுத்தருளவேண்டும் எனக் கேட்டனன். அதற்கு ஸ்ரீமத். அக்கிராசனாதிபதியவர்கள் "நடுவில் பேசப்படாது இட்டமானால் முடிவிற்பேசலாம் என உமக்கு ஆக்ஞாபிக்கின்றேன்"

என்றெனக்கிட்ட கட்டளையை அந்நாள் அச்சபையின்கண் வீற்றிருந்தாரனைவருமறிவர். அச்சபையின்கண்பேசி அதனால் ஓர் பெரும் புகழ் அடைதல்வேண்டுமென்னும் அவாப்பற்றியாவது பிரசங்கியார் மீது குறைகூறவேண்டுமென்னுங்கோள்பற்றியாவது வந்தேனல்லேன். பெரியார்பாக்களிற் குற்றங்காணலாகாதென்பதுபற்றியேவந்தேனென்றறிஞரறிவாராக. ஸ்ரீமத். அக்கிராசனாதிபதியவர்கள் அன்று என்னைப் பேசவிடாததற்குச்சில நியாயங்கள் இருந்தனவென்பதை எல்லையற்ற சட்டஞானமும், சொல்வன்மையும் யாவரிடத்தும் ஒரேபடித்தான அன்பும் நற்குணநற்செய்கைகளும் உடையாரும், என்மாட்டு ஒரு கோடிவருடமாகக் கோடாதநட்புரிமைபூண்டு உழுவலன்புமிக்காரும், பிரபலநியாயவாதியுமாகிய நமது தமிழ்ச்சங்க காரியதரிசி ஸ்ரீமத். T. C. சீனிவாசையங்கார் அவர்கள் மூலமாக அறிந்தேன். எனினும் நமது பிரசங்கியாரின் கூற்றையே ஆதாரமாகக்கொண்டு அம்மகா சபையின்கண் நடைபெறும் பிரசங்கங்களைக்கேட்டானந்திக்குமாறு விஜயஞ்செய்திருந்தவர்களிற்சிலர், பெரியோர்கள் இலக்கணவரம்பின்றி வெண்பாமுதலிய பாக்கள் பாடுவார்கள்போலும், அத்தகையபாக்களையும் உலகமுவக்கும்போலும் என்று நினைப்பர் என்பதனாலும், வேறு சிலர், பெரியோர்களே இலக்கணவரம்புகடந்து பாடுவார்களாயின், நாமேன் இலக்கணவரம்பின்றிப்பாடலாகாதென்றுதுணிவர் என்பதனானும், இன்னும் வேறு சிலர் இலக்கணத்தைச்சிறிதும்லட்சியஞ்செய்யாது தம்மனம்போனபடி பாக்கள்செய்து அவைகட்கு வெண்பா ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாவெனப் பொய்ப்பெயர்புனைந்திடுவர் என்பதனானும், அன்னவர்களது மயக்கறுப்பான்கருதி அடியிற்கண்ட விஷயங்களை நம் "செந்தமிழ்" வாயிலாக எழுதத்துணிந்தனன். இவ்விஷயங்களால் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார்போன்ற மகான்கள் ஒருபோதும் தப்புச்செய்யுட்கள் செய்யார் என்பதும், அவர்கள்பாடும் பாடல்கள் எல்லாம் இலக்கண அமைதி நிரம்பியவைகள் என்பதும், அத்தகுபாடல்களிற் பயின்றுவரும் சொற்பொருள் யாப்பு அணி நயங்களுக்கியையவே யிலக்கணம் செய்தல்வேண்டுமென்பதும் நன்கு புலப்படும். ஆகவே கனம் பிரசங்கியாராவது, ஏனைய வித்துவசிரேட்டர்களாவது நான் ஏதோ பிரசங்கியார்மீது குற்றங்கூறவந்ததாகக் கருதாது, பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் ஆதியோர் மகான்கள்



எனவும், அத்தகுமேலையோர்செய்தருளிய பாடல்கள் எவ்விதக்குற்றங்களுமின்றிச் சொற்சுவைபொருட்சுவையோடு பத்திரசம் ததும்பி, இலக்கணங்கட்கெல்லாம் ஆதியாய், நிற்கக்கூடியவைகள் எனவும், புறமதத்தினனாகிய மகமதியன் ஒருவன் முன்வந்து எடுத்துக்காட்டித் தங்களது சமயகுரவர்களுடைய சீரும் சிறப்பும் விரித்துக்கூறிய குரவர்களின் பாடல்களின் பரிசுத்தத்தையும் நன்கு புலப்படுத்தினனே எனத் தம் உள்ளங்கனிந்துவகைபூப்பர் எனவும் நம்பியே இவ்விஷயங்களையீண்டுச்சுருக்கிக்கீழ் எழுதுகின்றனன்.

இம் மலர்தலையுலகில் பல்லாயிரம் பாஷைகள்உள. அப் பாஷைகளுக்குள், மதுரமுற்றதென்னும் பொருளைத்தாங்கின்றதும் தென்மொழியும் தேன்மொழியுமாகி ஆதிகாலந்தொட்டேயுள்ளதும் தெய்வத்தன்மைபொருந்தியதும் தமிழ். கணிகண்ணன்பொருட்டுக் காமருபூங்கச்சிமணிவண்ணன், கச்சியைநீத்துத் தன்பாய்சுருட்டிக்கொண்டுசெல்லும்படிசெய்ததும்தமிழ். மறுபடியும் கச்சிக்கணணுகித் தன்பாய் விரித்துக்கொண்டிருக்கும்படி செய்ததும் தமிழ். தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்ததும் தமிழ். முதலையுண்ட பாலனையழைத்ததும் தமிழ். எலும்பு பெண்ணுருவாக்கண்டதும் தமிழ். மறைக்கதவினைத் திறந்ததும் தமிழ். இத்தகைய தமிழ்மாதை மணந்து அவளது மங்கலநாணைஸ்திரவைத்த மாதவச்சிரேட்டர்கள் எண்ணிலர். புலவர் பெருமக்கள் பலர். அரசர் அநேகர். அன்னவர் லோகோபகாரார்த்தமாய்ச் செய்தருளிய வேதம், வாதம், வைத்தியம், சரித்திரம், ஆகமம், புராணம், சோதிடசாத்திரம், நீதிசாத்திரம், கணிதசாத்திரம், சிற்பசாத்திரம் முதலிய இலக்கியங்களோ அம்மம்ம! அபரிமிதமானவை. அத்தகு இலக்கியங்களில் பொதிந்துள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி முதலிய இலக்கணங்களையும், அவற்றுள் இலைமறைகாய்போற் கிடந்த அரிய பெரிய இலக்கணங்களையும் பொறுக்கி ஒருங்குதிரட்டிப் பண்டைக்காலப்பெரியார்களும் பிற்காலத்து நல்லிசைப்புலவர்களும் முதல்வழிசார்புநூலெனப் பல இலக்கணஞ்செய்துவைத்துள்ளார்கள்.

ஆகவே அறிஞர்களாலாக்கப்பெற்ற இலக்கியங்களிலிருந்தே யிலக்கணஞ்செய்யப்பட்டிருக்கின்றனவென்பதொருதலை. இதற்கு யாவரு மேற்றுக்கொள்ளத்தக்க நற்சான்றுகள் உளவோவெனின், பலவுள. உலகத்திலே யெந்நாளும் உலவாப்பெரும்புகழ்படைத்துக் குணமென்னும் குன்றேறித் தபோமகிமையாற்சிறந்த இருடிகளிற் சிரேட்டமுற்றவரும், அருளொடுவாய்மையா லுயர்ந்து வலம்புரிச்சங்குகளுட் பாஞ்சசன்னியம்போலவே கலாவல்லவருள் அதி துல்யராய் மதிக்கப்பெற்றவரும், "குணகடல் குமரிகுடகம்வேங்கடமெனு நான்கெல்லையுள்" வழங்கி இருங்கடலென்னும் பெரும்பெயர் தாங்கிய செந்தமிழ்க்கடலைத் தோண்டி யாழமாக்கினேரும், பார்ப்பதியின்திருமணக்காட்சி காண்டற்பொருட்டுத் தேவரும் முனிவரும் பிறரும் இமயமலைக்கண் ஈண்டிய காலத்து, உயர்ந்த தென்றிசையைச் சமப்படுத்தியும், ஆகாயத்தை யளவுசெய்து சோமசூரிய கிரகபாதைகளைத்தடுத்து இடையூறுவருவித்த விந்தவெற்பினைத் தம் குடங்கைசேர்த்துப் பாதலத்திற்புகுத்தி யதனைக்கர்வபங்கம்செய்தும், சமுத்திரத்திற்குள் புகுந்தொளித்துக்கொண்ட விருத்திராசுரனைக் கொல்வதற்காகக் குடங்கையினெடுங்கடலடக்கி யதை யாசமனம்செய்தும், கிரவுஞ்சனெனும் அவுணனைக் கைத்தண்டத்தாற்குற்றி மலையாக்கியும் இன்னும் எத்தனை எத்தனையோ அதியற்புதங்களைத் தம் தபோவலியாற்செய்துள்ளார் என்று நூல்கள் முறையிடுகின்றவரும், ஒல்காப் பெரும்புகழ்படைத்த தொல்காப்பியனாதிய பன்னிரு மாதவச்சிரேட்டர்களுக்கும் ஆசிரியராயுள்ளவரும், இந்திராதிதேவர்கட் கிடுக்கணேர்ந்துழியெல்லாம் உடுக்கையிழந்தவன் கரம்போலுதவி யன்னவர் துயர்தீர்த்த உத்தமோத்தமரும்,

> "வடமொழியைப்பாணினிக்குவகுத்தருளியதற்கிணையாத்
> தொடர்புடையதென்மொழியையுலகமெலாந்தொழுதேத்துங்
> குடமுனிக்குவற்புறுத்தார்கொல்லேற்றுப்பாகர்"
>
> எனவும்,
>
> "விடையுகைத்தவன்பாணினிக்கிலக்கணமேனாள்
> வடமொழிக்குரைத்தாங்கியன்மலயமாமுனிக்குத்
> திடமுறுத்தியம்மொழிக்கெதிராக்கியதென்சொல்"



எனவும், புராணங்கள்கூறுமாறு பரமசிவனால் இலக்கணங்கற்பிக்கப்பட்ட பேரிலக்கணியும், தமிழ்முனியெனவோர் தனிப்பேர்பெற்றவருமாகிய அகத்தியமாமுனிவர் தாமியற்றிய பேரகத்தியம் என்னும்பெயரியமுதனூல் இலக்கணத்தின்கண்,

> "இலக்கியமின்றியிலக்கணமின்றே
> எள்ளின்றாயினெண்ணெயுமின்றே
> எள்ளினின்றெண்ணெயெடுப்பதுபோல
> இலக்கியத்தினின்றெடுபடுமிலக்கணம்"

எனச்சூத்திரஞ்செய்துள்ளார். சம்ஸ்கிருதத்திற்குப்பாணினிமுனிவர் செய்த பாணிநீயம் சிரேட்டமானாற்போலத் தமிழிற்கு அகத்தியமுனிவர்செய்த அகத்தியமே மாசிரேட்டமுற்றது என்பர் பெரியோர். ஆகவே, இவ்வொருசான்றே யிலக்கியத்தினின்றெடுபடுமிலக்கணம் என்பதற்குப் போதிய நற்சான்றாம். இம்மட்டோ! முன்னோர் நூலின் முடிபுணர்வழியே முறைபடக்கண்டு, நன்னூலாகிய தொன்னூல்தமக்கெலாநன்னூலீதெனவகுத்த பொன்மதிற்சனகைச்சன்மதிமுனியருள் பன்னருஞ்சிறப்புவாய்ந்தபவணந்திமாமுனிவரும், "ஐம்பதின்மர்சங்கத்தாராகிவிடாரோநாற்பத்-தொன்பதின்மரென்றேயுரைப்பரோ-இம்பர் புகழ்- வன்மீகநாதனருள்வைத்தியநாதன்புடவி - தன்மீதந்நாட்சரித்தக்கால்" என்று சிறப்பிக்கப்பெற்றவரும் குட்டித்தொல்காப்பியமென்றறிஞர் புகழ்ந்துபாடப்பெற்ற இலக்கணவிளக்கம் என்னும் நூலாசிரியருமாகிய வைத்தியநாததேசிகரும், "இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பல்" எனத்தனித்தனி சூத்திரஞ்செய்திருக்கின்றமையால், அறிவுடையாரால் நியமிக்கப்படும் இலக்கியங்கண்டு, அதற்கு அவ்விலக்கியத்தின் அமைதியே இலக்கணமாகக்கூறல்வேண்டுமென்பது வெள்ளிடைமலைபோல் தெள்ளிதினுணரக்கிடக்கின்றது. ஆகவே, அறிவுடையாராகிய பெரியார்களாலாக்கப்படும் பாக்களிற்கண்ட இலக்கியத்தின் அமைதியே யிலக்கணம் என்பதாயிற்று. இனி, பிரசங்கியாரால் இலக்கணக்குற்றமுடைய வெண்பாக்கள் பாடியுள்ளார்களென்று கூறப்பெற்ற பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் எத்தன்மைத்தர் என விசாரிப்பாம்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னுமிவர்கள் முதலாழ்வார் மூவரென்னப்படுவர். இம் மூவரும் திவ்யதேசயாத்

திரை செய்வான்கருதிப் பல விடங்களி லாங்காங்குச் சஞ்சரித்துக்
கொண்டு, கடைசியாகத் திருக்கோவலூருக்கு ஒருவரையொருவர் அறி
யாராய் வந்துசேர்ந்து, தம் பெருமானைத்தரிசித்துத் தனித்தனி யொவ்
வோரிடங்களிற் றங்குவாராயினர். அங்ஙனமிருப்புழி யஞ்ஞான்று
ஆயிரங்கரத்தோன் குடகடற்புக்கு அஸ்தமயமானபின், முதலிற்
பொய்கையாழ்வார் ஒரு பாகவதரின் திருமாளிகையின் இடைகழியிற்
சயனித்திருந்தனர். பூதத்தாழ்வார் சயனிக்கவிடந்தேடிச்சென்று
பொய்கையாழ்வார்இருக்குமிடமணுகி "அடியேன்படுக்க இடமுண்
டோ." என, பொய்கையாழ்வார், ஒருவர்படுக்கலாம். இருவர்
இருக்கலாம் எனப்பணித்தனர். இருவருமாயிருக்கையில், பேயாழ்வா
ரும் அங்ஙனமே ஆங்குற்று "இடங்கிடைக்குமோ"வென அவ் இரு
வரும் "ஒருவர்படுக்கலாம், இருவரிருக்கலாம், மூவர் நிற்கலாம், வருக"
எனப் பேயாழ்வாரும் அங்குற்றனர். ஆக மூவரும் ஒருவரையொரு
வர் விசாரித்தறிந்து களிப்புறுகையில், திருமால் பேரிருளையும், பெரு
மழையையும் உண்டுபண்ணி அவ்விடத்தை நெருக்காநிற்புழி, மூவ
ரும் இஃதென்னென்று திகைத்து, பொய்கையாழ்வார் சூரியனை விளக்
காக ஏற்றிப்பார்க்க, பூதத்தாழ்வார் ஞானதீபத்தையேற்றிப்பார்க்க,
பேயாழ்வார் இருவகைவிளக்காலும் இருளற்றபடியால் தம் பெரு
மானை உள்ளபடியே தரிசித்தனர் என்பர். அப்பொழுது, பொய்கை
யாழ்வார் "வையந்தகளியா" என்கிற முதல் திருவந்தாதி நூறுபாட்டா
லும், பூதத்தாழ்வார் "அன்பேதகளியா"என்கிற இரண்டாந்திரு
வந்தாதி நூறுபாட்டாலும், பேயாழ்வார் "திருக்கண்டேன்" என்னும்
மூன்றாந்திருவந்தாதி நூறுபாட்டாலும் தோத்திரஞ்செய்து திருவருள்
பெற்றனரெனவும், இவர்கள்கூறிய மேற்கண்ட பாக்கள் முந்நூறும்
நாலாயிரப்பிரபந்தத்தோடு சேர்க்கப்பட்டிருக்கின்றனவெனவும் கூறு
வர். இம் மூவரும் தெய்வப்புலமைமிக்க மெய்ஞ்ஞானிகளெனவும்
எண்ணரும் புண்ணியம் பண்ணிய கண்ணிய நற்றவசீலர்களெனவும்
உலகுவந்தேத்தியிருத்தலை, சகலதர்மங்களையும் பல்வகை நீதிகளையும்
உறுதிபயக்கும் மோட்சபுருஷார்த்தத்தையும் கூறும் தன்மையாலும்,
ஸகலோபநிஷத்ஸாரமான கீதையையுட்கொண்டிருத்தலாலும்
"பாரதம் பஞ்சமோ வேதம்." என்றும்,



"நீடாழியுலகத்துமறைநாலொடைந்தென்றுநிலைநிற்கவே
வாடாததவவாய்மைமுனிராசன்மாபாரதஞ்சொன்னநாள்."

என்றும் வரும் வாக்கியங்களால் யாவராலும் ஐந்தாம்வேதமெனப்
போற்றப்படும் வில்லிபுத்தூரார்பாரதம் சிறப்புப்பாயிரத்தில் கூறப்
பெற்றுள்ள,

"பாவருந்தமிழாற்பேர்பெறுபனுவற்பாவலர்பாதிநாளிரவில்
மூவருநெருக்கிமொழிவிளக்கேற்றிமுகுந்தனைத்தொழுதநன்னாடு."

என்னும் திருவிருத்தமே நிலைநிறுத்தியுள்ளது. ஆதலான் மேற்கூறிப்
போந்த மாதவசிரேட்டரும் மஹானுபாவருமாகிய பொய்கையாழ்வார்,
பூதத்தாழ்வார் இயற்றியுள்ள பாக்களனைத்தும் மஹா பரிசுத்தமுள்ள
வைகளே. அப்பாக்களிற் குற்றமுண்டெனல் ஒரு சிறிதும் பொருந்
தாதே. அப்பாக்களிற் பயின்றுவரும் இலக்கியங்களுக்கேற்ப விலக்கண
மமைத்தலே யறிவுடைமை. அங்ஙனமின்றி யப்பாக்களில் இலக்கணக்
குற்ற முண்டெனவுரைத்தல் அறமாமோ, அம்மம்ம! அறக்கொடுமை
யன்றோ. இனி பிரசங்கியார்கூறியாங்கு பொய்கையாழ்வார், பூதத்
தாழ்வார்பாடிய வெண்பாக்களில் குற்றமுண்டோவென வாராய்தற்குப்
பிரசங்கியார் அம் முதறிஞர்கள்பாடியதாகச்சொல்லும் தப்புவெண்
பாக்களில் இரண்டொன்றையேனும் எடுத்துக்காட்டாதது யாது
காரணமோ: அங்ஙனம் எடுத்துக்காட்டியிருப்பாராயின், அச்செய்யுட்
களில் அமைந்துகிடக்கும் இலக்கணங்களையும் எடுத்துத் தக்க மேற்
கோள்களுடன் நன்குபுலப்படுத்தியிருப்பேன். ஆதலான், பிரசங்கி
யாரால், இலக்கணமின்றித் தப்புச்செய்யுட்கள் என்று நினைக்கப்படும்
அந்நுண்ணறிவாளர் இயற்றிய வெண்பாக்கள் இன்னின்னவென்று
கூறாமைக்கு யான் மிக்க விசனமுறுகின்றேன். ஆயினும், வெண்பாவி
னிலக்கணங்களையும் அவற்றின் மரபு ஒழிபுமுதலிய விசேட இலக்
கணங்களையும், அவைகள் ஆங்காங்குப்பயின்றுவருமிலக்கியங்களையும்
ஒருவாறு ஈண்டு எடுத்துக்கூறுகின்றனன். வெண்பாக்கள், வெண்ட
ளையும் அளவடியும்பெற்றுச் செப்பலிசையுடையதாய், நாள், மலர்
என்னும் ஓரசைச்சீர்வாய்பாடுகளும் காசு, பிறப்புஎன்னுங் குற்றுகர
வாய்பாடுகளுமாகிய நான்கனுள் ஒன்றாய்முடிந்த "இறுதிச்சீரினை
யுடைய சிந்தடி இறுதியடியாய்வரப்பெற்றுமுடியும் என்பது இலக்கணி

கள்விதித்த பொதுவிதி. மேற்கூறியவற்றுள், வெண்டளைஎன்பது வெண்சீர்வெண்டளையெனவும், இயற்சீர்வெண்டளையெனவும் இருவகைத்து. வெண்சீர்நின்று, நேரசைமுதலாய் வரும்சீருடன்புணர்தற்கண் உளதாகும் தளை வெண்சீர் வெண்டளையென்பர். அஃதாவது காய்ச்சீர்க்குமுன்னே நேர்வருதல். அகவலுக்குரிய சீராகிய இயற்சீர் நின்று, வருஞ்சீருடன் ஒன்றாமையாகிய விகற்பப்புணர்ச்சிக்கண் உளதாகுந்தளை இயற்சீர்வெண்டளை என்பர். இஃதாவது மாச்சீர்க்கு முன்நிரையும் விளச்சீர்க்கு முன்நேரும் வருதல். இதனை,

“தன்சீர்தனதொன்றிற்றன்றளையாம்..........வெண்டளையாம் ஒண்சீரகவலுரிச்சீர்விகற்பமுமொண்ணுதலே” என்னும் ஆசிரியர் அமிர்தசாகரர் காரிகையாலுணர்க.

அளவடியென்பது நான்குசீர்கொண்டு முடிவுபெற்றுநிற்கும் அடியாம். இதனை நேரடியென்றும் வழங்குவர். குறுகுதலும் நெடுகுதலுமின்றி அளவுபட்டுநிற்றலால் அளவடி எனவும், யாண்டும் பயின்றுதலைமையெய்திநிற்றலால் நேரடிஎனவும் கூறுவர். “நாலொருசீரடியளவொடுநேர்” என்பது காரிகை.

செப்பலிசை என்பது செப்பிக்கூறும் ஓசையெனப்படும். அஃதாவது, அழைத்துக்கூறாமல் ஒருவனுக்கு மற்றொருவன் இயல்புவகையானே ஒருபொருண்மைக்கட்டுரைக்குங்கால் எழுகின்ற இசை செப்பலிசையென்பர் நச்சினார்க்கினியர். இதனை, “அஃதான்றென்ப வெண்பாயாப்பே” என்னும் தொல்காப்பியச்சூத்திரவுரையாலறிக. இத்தகைய செப்பலிசையாவது, ஏந்திசைச்செப்பல், தூங்கிசைச்செப்பல், ஒழுகிசைச்செப்பல் என மூவகைப்படும்.

ஏந்திசைச்சேப்பல் - முற்றும் வெண்சீர்வெண்டளைபெற்றுவரும் வெண்பாவில் நிகழும் இசை. இதனை “யாதானுநாடாமால்” என்னும் குறள்வெண்பாநோக்கியறிக.

தூங்கிசைச்சேப்பல்.—முற்றும் இயற்சீர்வெண்டளை பெற்றுவரும் வெண்பாவில் நிகழும் இசை. இதனை “இளையானடக்கம்” என்னும் நாலடிவெண்பாநோக்கி அறிக.



ஒழுகிசைச்சேப்பல். — இருவகைவெண்டளையும்விரவிய வெண்பாவில் நிகழும் இசை. இதனை “வளம்படவேண்டாதார்” என்னும் வெண்பாநோக்கியறிக. இம்மூவகைச்செப்பலோசைக்கும்,

“வெண்சீர்வெண்டளையான்வரும்யாப்பை
யேந்திசைச்செப்பலென்மனார்புலவர்“

“இயற்சீர்வெண்டளையான்வரும்யாப்பைத்
தூங்கிசைச்செப்பலென்மனார்புலவர்”

“வெண்சீரொன்றலுமியற்சீர்விகற்பமு
மொன்றியபாட்டேயொழுகிசைச்செப்பல்”

161295
600 008.

என்பன முறையே சூத்திரம்.

வெண்பாவினிறுதியில்வரும் சீர்களென்று முன்னர்க்கூறப்பெற்ற நாள் என்னும் வாய்பாட்டு நேரசைச்சீரும், மலர் என்னும் வாய்பாட்டு நிரையசைச்சீரும், காசு, பிறப்பு என்னும் குற்றுகரவாய்பாட்டுச்சீர்களும் இறுதியிற்சீராய்நின்று வெண்பாவிற்குரிய செப்பலிசையை இனிதுமுடிக்கும் சிறப்புடையனவாதலால் மற்றையவாய்பாட்டுச்சீர்கள் வெண்பாவினிறுதியில் வரலாகாவென்பது இலக்கணம். ஆனால், பல கல்வியிற்பெரியார்பாடிய வெண்பாக்கள் ஏகதேசம் இதுகாறும் கூறிவந்த வெண்பாவிலக்கணங்களைக்கடந்து செல்கின்றன. ஆயினும் அவைகள், நுண்மாணுழைபுலமிக்க ஒண்மாண்புடைக் கவிகளாலும் பூதலம்போற்றும் மாதவமணிகளாலும் இயற்றப்பெற்றவைகளாதலான், அப் பாக்களிற்கண்ட இலக்கியங்களைக்கற்றவரனைவரும் முற்றிலுமேற்று அவ் விலக்கியங்களுக்கியையவே இலக்கணமும் செய்துள்ளார்கள். இஃது அடிப்பட்ட சான்றோரிடம் முறைப்பட்ட கேள்வியுடைய நம் முன்னையோர் தொன்றுதொட்டுச்செல்லும்நெறி. அம்மரபு நெறிகுலையாது அவர்வழிச்சேறலே நம்மனோர்கடன். ஆதலான் அத்தகைய உதாரணச்செய்யுட்களில் சிலவற்றைமட்டும் ஈண்டு குறிக்கின்றனன். அவையாவன:—

(1) வெண்பாவினுள் ஓரடியுள் நான்குசீர்கள் வருதலன்றி ஐஞ்சீர்களும் அருகிவருகின்றன. ஐஞ்சீரடுத்தலுமண்டிலமாதலும் - வெண்பாயாப்பிற்குரியவல்ல.” என்னும் இலக்கணமிருப்பினும், கடைச்சங்க

மருவியபதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்றாகியஐந்திணையைம்பது என்னும் நூலிற் பாலைத்திணைக்கண் பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச்சொல்லிய,

"உதிர்ந்துவறியவேங்கையுகிர்போலெதிரி
முருக்கரும்பவீர்ந்தண்கார்நீங்க—வெதிருநர்க்
கின்பம்பயந்தவிளவேனிற்காண்டொறுந்
துன்பம்கலந்தழியுநெஞ்சு."

என்னும் வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான்வந்திருக்கின்றது. இதற்கிலக்கணம்:—

"வெண்டளைவிரவியுமாசிரியம்விரவியும்
ஐஞ்சீரடியுமுளவெனமொழிப."

என்னும் தொல்காப்பியச்செய்யுளியற்சூத்திரத்துப் பேராசிரியர், "வெண்டளைவிரவியும், ஆசிரியம் விரவியும் என்றது என்னையெனின்—அவ்வைஞ்சீரடி வெண்பாவோடு விராயும், ஆசிரியப்பாவோடு விராயும் வரும் என்றவாறு".

"கண்டகம்பற்றிக்கடகமணிதுளங்க
வொண்செங்குருதியினோடுகிடப்பதே—கெண்டிக்
கெழுதகையில்லேன்கிடந்தூடப்பன்னா
ளழுதகண்ணீர்துடைத்தகை."

என்னும் வெண்பாவினுள், இரண்டாமடி ஐஞ்சீரான்வந்தது." எனவும் கூறியவாற்றானும், நச்சினார்க்கினியர், "வெண்பாவோடுங் கலிப்பாவோடும்விராயும், ஆசிரியப்பாவோடு விராயும், ஐஞ்சீரடிகளுமுள என்று கூறுவர்புலவர் என்றவாறு" எனவும், "கண்டகம்பற்றி...... ..............கண்ணீர்துடைத்தகை"

"கிடங்கிற்கிடங்கிற்கிடந்தகயலைத்
தடங்கட்டடங்கட்டளிரியலார்கொல்லார்—கிடங்கில்
வளையாற்பொலிந்தகைவையெயிற்றுச்செவ்வா
யிளையாடன்கண்ணொக்குமென்று"

இவற்றுள் இரண்டாமடி ஐஞ்சீரடிவந்தவாறுகாண்க." எனவும் கூறியவாற்றானும் நன்குணரக்கிடக்கின்றமையால், வெண்பாவினுள்



ஐஞ்சீரடிவருதல் கூடுமென்பதும் ஆன்றோர் இலக்கியங்களுக்கியைய இலக்கணஞ்செய்துள்ளார்களென்பதும் நன்குபெறப்படுகின்றது.

(2) வெண்பாவிலே கனிச்சீர் எனப்படும் வஞ்சிச்சீர்புகுந்து விரவுமாயின், செப்பலோசையாகிய அதன் இலக்கணம் சிதைந்து வேறாய் விடும் என இலக்கணநூலாசிரியர்பலரும், "மாஞ்சீர்கலியுட்புகா"என்ற தொடக்கத்தையுடைய காரிகையில் "வெள்ளைத்தன்மைகுன்றிப்-போஞ் சீர்கனிபுகில்"என ஆசிரியர் அமிர்தசாகரரும், கூறியிருப்பினும், நல்லாறொழுக்கின்றலைநின்று பல்லாற்றானுஞ்சிறந்துவிளங்கிக் கல்வித்துறை கொண்டு நல்வித்தகம்படைத்தசொல்உத்தமக்கவிகள்பலர் தாமியற்றியுள்ள வெண்பாக்களில் கனிச்சீர்வரப்பாடியுள்ளார்கள். அவற்றுள் சிலவற்றை யெடுத்துக்காட்டுவல்.

"எண்டிசையுமன்னுமெழில்வாளிளங்கதிரோன்
கொண்டல்பொழிலேழ்குலவரையோ—டண்டர்பதி
முட்டப்பரந்ததேவின்னொளிமுற்றும்
வட்டத்திகிரிசூழ்மண்."

'ஈதலறந்தீவினைவிட்டீட்டல்பொருளெஞ்ஞான்றுங்
காதலிருவர்கருத்தொக்க—ஆதரவு
பட்டதேயின்பம்பரனைநினைந்திம்மூன்றும்
விட்டதேபேரின்பவீடு."

இவ்வெண்பாக்களில் முறையே அண்டர்பதி, ஈட்டல்பொருள் என்னும் கனிச்சீர்கள் வந்துள்ளன. எனினும் இவற்றை "இலக்கியங் கண்டதற் கிலக்கணமியம்பல்" என்னும் விதிபற்றிக் கல்விமான்கள், ஒற்றுக்கள்நீக்கி யலகிட்டுக்கூவிளங்காய்வாய்பாட்டுவெண்சீராகக்கொள்கின்றனர். இங்ஙனம் சான்றோர் இயற்றிய நூற்செய்யுட்களில் அமைந்துகிடக்கும் இலக்கியங்களுக்கொப்பவே,

"சொல்லாரும்வல்லினமல்லாதமெய்யிடைதோன்றுமொற்று
நில்லாதுநேர்நேர்நிரையென்றுரைப்பர்நிரம்பியநூற்
கல்லாதமாந்தர்கடேமாங்கனியென்பர்கற்றுணர்ந்த
நல்லாரனைவருங்கூவிளங்காயெனநாட்டுவரே."

என இலக்கணம் கண்டிருக்கின்றனர். இஃதன்றியும், "வெண்பா, கட்டளைக்கலித்துறை முதலியவற்றிலே சீர் சிதைவுழி, இருகுறிற்கு

நடுநின்ற ஒற்றெழுத்து அவ்விருகுறிலும் இணைந்து நிரையசையாதல் வேண்டி நீக்கப்படுதலுமுண்டு" என்று யாப்பருங்கலக்காரிகையின் ஒப்புயர்வில்லாக் கல்விவல்லவராகிய உரையாசிரியர் ஒருவர் கூறுகின்றனர். ஆகவே, கனிச்சீர் வெண்பாவினுள்வரலாகாதெனினும், மூதறிவாளர் கூறிய வெண்பாக்களில் அச்சீர்வருமாயின் மேற்கூறியவாறலகிட்டுக் கூவிளங்காய் எனக்கொண்டு வெண்சீரின்பாற்படுத்தி யதனையே யிலக்கணமாகக்கொள்ளல் வேண்டுமென்பது பெறப்படுகிறது.

(3) "அருளல்லதியாதெனிற்கொல்லாமைகோறல்
பொருளல்லதவ்வூன்றினல்."

என்னும் திருக்குறள்வெண்பாவில்வரும் அருளல்ல+தியாதெனில் என்னுஞ்சீர்கள் முறையே புளிமாங்காய், கருவிள[illegible] என்னும் சீர்களாகி வெண்டளைதட்டுக் கலித்தளைவந்துவிரவி வெண்பாவிலக்கணம் சிதைவுறுகின்றது. இஃது எல்லாமதத்தினரும் நல்லாதரங்கூரும் நீதிவேதம் போன்றதும், அறம், பொருள், இன்பம், வீடு என்னுஞ் சதுர்வித புருடார்த்தங்களைவிளக்கும் முதனூல்களில் இலைமறைகாய் போற் பலவிடங்களினும் மறைந்துவெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களையெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக்கொடுத்தவரென்னுங்காரணம்பற்றித் தெய்வீகமும் உயர்வும், வண்மையும் உடையவரெனப் பொருள்படும் தெய்வப்புலமைத்திருவள்ளுவராலாக்கப்பட்டதுமான பொய்யாமொழி என்னும் தெய்வநூல்வெண்பாவாதலால் அறிஞர் இவ்வெண்பாவில்வரும் தியாதெனில் என்னுஞ்சீர்க்கணுளதாய குற்றியலிகரத்தை நீக்கி, கூவிளம் என்னும் சீராக அலகிட்டு "இலக்கியங் கண்டதற்கிலக்கணமியம்பல்" என்னும் முறைப்படி முடித்துள்ளார்கள். இதுபோலவே வெண்பாமுதலியவற்றில் சீரும் தளையும் சிதையுமாயின் குற்றியலுகரமும், அளபெடையுயிரும் அலகுபெறாது வாளாநிற்கும் என்ப. இதற்கிலக்கணம்—"சீருந்தளையுஞ்சிதையிற்சிறியஇஉ அளபோ—டாருமறிவரலகுபெறாமை" என்னும் காரிகையாலறிக.

(4) வெண்பாவினிறுதியில் நாள், மலர் என்னும் வாய்பாட்டு ஓரசைச்சீர்களும் காசு, பிறப்பு என்னும் ஈரசைவாய்பாட்டுச்சீர்களும் நின்று செப்பலிசையையினிது முடிக்கும் இயல்புடையனவென முன்னர்க்கூறியுள்ளேன். இவற்றுள் காசு, பிறப்பு என்பன அரைமாத்



திரையுடையவாய் ஒடுங்கியிசைக்கும் குறிலீறுடையன. இவை போன்றுவரும் முற்றுகரவீற்றுச்சீர்களையும் இசையொப்புமைபற்றி இவற்றொடுகூட்டி ஆசிரியர் தொல்காப்பியர் அசையென்றுகொள்வர். அவர்கூறும் அசை நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கு.

"இருவகையுகரமோடியைந்தவைவரினே
நேர்புநிரைபுமாகுமென்ப"

என்னும் தொல்காப்பியச்சூத்திரப்படி வெண்பாவினிறுதிச்சீர்க்கண் வரும் காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டுச்சீர்கள் முறையே நேர்பு, நிரைபு என்னும் அசைகளாகின்றன. ஆதலான் காசு, பிறப்பு என்பன தேமா, புளிமாவென்பவைகளிலடங்கா. ஏனெனின், தேமா, புளிமா என்பன இருமாத்திரையுடையவாய் விரிந்திசைக்கும் நெடிலீறுடையனவாதலானென்க. ஆகவே, வெண்பாக்களிலிறுதியில் நேர்பு, நிரைபு என்னும் வாய்பாட்டசைச்சீர்கள் வருதலன்றி, தேமா புளிமா என்னுஞ்சீர்கள் வராவென்பதுபெறப்படுகிறது. ஆனால் சிற்சில மகாகவிகள் ஒவ்வோரிடங்களில் இந்நியதிகடந்து பாடியுள்ளார்கள். இதற்கு உதாரணம்:—

"நல்லதொருபுதுமைநாட்டிற்கண்டேனதனைச்
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
குதிரைவிற்கவந்தவனைக்கூடி"

என்னும் வெண்பாவின் ஈற்றுச்சீரானும் பிறவற்றானும் காண்க.

இதுகாறும் மேற்கூறிப்போந்த நியாயங்களால் தாமுன் அறிந்ததற்கிதுமாறாயின் எந்நூல்விதியோ எனவேயெண்ணுக" என இலக்கணக்கொத்துடையார் கூறியவாறு நல்லிசைப்புலமையோரும் நற்றவமுனிவரும் செய்துள்ள வெண்பாக்கள் எவ்விதக்குற்றமுமில்லாதவைகளெனவும், நம்போல்வார்படித்த இலக்கணங்களுக்கு மாறாய் யாதேனும் குற்றங்கள் காணப்படின் அவைகள் நாம் படியாத இலக்கணவிதிகளுக்குட்பட்டிருத்தல்வேண்டுமெனவும் கொள்ளல்வேண்டுமேயன்றி, பெரியார் செய்யுட்களில் ஒருபோதுங்குற்றங்காணல் ஆகாது. "கற்றதுகையளவுகல்லாதுலகளவு" என்றார் ஔவைப்பிராட்டியார். இயல் இசை நாடகமென்னும் முத்தமிழுக்கும் முதனூல் இலக்கணமாகிய

அகத்தியம் பன்னீராயிரம் சூத்திரங்கொண்டதென்பர். அவற்றுள் சிலவே உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. பிறவெல்லாம் இறந்தொழிந்தன. அங்ஙனம் இறந்தொழிந்தசூத்திரங்கள் எத்தகைய அரியபெரிய விதிகளையுடையனவோ? என்னென்ன ஒழிபுவழக்கு மரபிலக்கணங்களைக்கூறினவோ? நமக்கென்தெரியும்; நாம் எவ்வாறறிதல்கூடும். "கல்விகரையிலகற்பவர்நாள்சில- மெல்லநினைக்கிற்பிணிபல." என்றாராகலின் நம்வாழ்நாள் சிலவும், அறிவு அற்பமும், பிணிகள்பலவுமாயிருத்தலால், கரைகாண்டற்கரிய கல்விக்கடலை நாம் எவ்வாறுகடத்தல்கூடும். ஆதலான் பிரசங்கியார் இனி எந்தப்புற்றில் எந்தப்பாம்பு இருக்குமோ என்ற பழமொழியையும், "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் - சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்னும் வேதவாக்கையும் உணர்ந்தொழுகுவாராக. என் இங்ஙனம் வற்புறுத்திக்கூறியுள்ளேனெனின், பிரசங்கியார் செய்யுட்குற்றங்கற்பித்துத்தூஷித்த பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் இருவரும் முதலாழ்வார் மூவரைச்சேர்ந்தவர்கள். அன்னவரிருதவமக்களும் வைஷ்ணவராகிய பிரசங்கியாருக்குக் குருமரபுடையார்கள். அத்தகு குருமரபுடைய முத்தர்கள் யாத்த உத்தமப்பாக்களில் இலக்கணக்குற்றமுளதாகக்கூறித் தூஷித்தல் குருநிந்தையாகும். பஞ்சமாபாதகங்களில் ஒன்றாகிய குருநிந்தைசெய்தல்மகாபாதகமன்றோ! கற்றறிவுடையோர் கொன்னே மாபாதகத்துக்காளாதல் ஏனோ! பிரசங்கியாரே உய்த்துணர்வாராக.

இன்னும் விரிக்கின், வரம்பின்றிப்பெருகுமாதலானும் நம் செந்தமிழ்ப்பத்திரிகையிடந்தராதென்னும் பீதியாலும் இவ்வளவோடு நிறுத்துகின்றனன். ஆதலான் பிரசங்கியார் என்னை வேறாக நினையாது யாமிருவரும் ஒரே சங்கத்தங்கத்தினராதலால் நண்பனாகக்கருதி, "நகுதற்பொருட்டன்றுநட்டன்மிகுதிக்கண் - மேற்சென்றிடித்தற்பொருட்டு" என்னுந்திருக்குறளை நினைந்து அன்புபாராட்டுவாராக.

இங்ஙனம்,
சோதகுடி,
எம். கே. எம். அப்துல்காதிறு.

---

உ

## செந்தமிழபிமானிகளுக்கு ஒரு விஞ்ஞாபனம்.

---

செந்தமிழை அன்புடன் வளர்க்கும் புலவர்களே!

பண்டிதர் ஸ்ரீமான். மு. இராகவையங்காரவர்கள் இயற்றியருளிய "சேரன்-செங்குட்டுவன்" என்ற அரிய ஆராய்ச்சிநூலைப் படித்துத் தமிழகமெல்லாம் களித்திருப்பதை யான்கூறவேண்டுவதில்லை. ஆயினும், அதுஓர் ஆராய்ச்சிநூலாதலாலே அதிற்கூறப்படும் சில கொள்கைகள், விவாதத்திற்கு இடமாயிருப்பது இயல்பே. அதை வெளியிட்டதில் அந்நூல் ஆசிரியர் கருத்தும் யாவரும் தம்கொள்கைகளைச்சிறிதும்மறுக்காமல் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பதல்ல; படிப்பவர்மனதில் அவ்விஷயங்களைத் தீரஆராய்தல் வேண்டுமெனும் அவா எழுந்து, அவைகளைப்பலரும்: ஆராய்ந்து, உண்மை வெளிப்படுத்தவேண்டுமென்பதே. இக்கருத்துக்கநுகுணமாகவே பலரும் அவ்விஷயங்களை ஆராய்ந்து தம்தம் அபிப்பிராயங்களை வெளியிடலாயினர். அவைகளால் பல அரியபெரிய விஷயங்கள் விளங்கலாயின எனினும், அவ்வியாசங்களியற்றிய பலரும் பிறரையும் அப்பிறர் கொள்கைகளையுங் குறிப்பிடுங்கால், "என அறியார் கூறுவர்", இங்ஙனம் சிலர் பிதற்றுவர்" என்பனபோன்ற பல இகழ்ச்சிவாக்கியங்களை உபயோகித்திருக்கின்றனர். இவர்களிலெல்லாம் மிகவும் பிழைபாடு இயற்றியவர் 'கதைக்கொத்து' என்ற அரியநூலை வெளியிட்டுதவிய ஸ்ரீமான். வே. இராஜகோபாலையங்காரவர்களே. செந்தமிழ்ப்பத்திராதிபர், ஸ்ரீ சேதுபதி மஹாராஜா அவர்களது ஆணையைமேற்கொண்டு 'வஞ்சிமாநகராராய்ச்சி'யில் தமது அபிப்பிராயத்தையும், ஸ்ரீமான். ரா. இராகவையங்காரவர்கள் கூறிய நியாயங்களுக்குத் தமக்குத்தோன்றிய ஆக்ஷேபங்களையும் மிதமாகவும் விளக்கமாகவும் பிறரையும் அப்பிறர் கொள்கைகளையும் இகழாமலும் கூறியிருக்க, அவர்களது ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானங்கள் கூறாமலும், தமது கொள்கைகளை விளக்கத் தமக்குத்தோன்றும் நியாயங்களைக் காட்டாமலும், தம் நெஞ்சிற்றோன்றியபடியெல்லாம் நம் பத்திராதிபரை இகழ்ந்து பேசுவது தமது கல்விக்கும் பெருமைக்கும் பொருத்தமுடையதாக

ஸ்ரீமான். வே. இராஜகோபாலையங்காரவர்கள் நினைத்தது வியப்பே. இவ்வித வாதநெறியை நம்நாட்டிலன்றிப் பிறநாடுகளிற்காண்பதரிது. பிறரை இகழ்வதற்கும் விவாதவிஷயத்திற்கும் பொருத்தம் யாதோ விளங்கவில்லை. யானும் இவ்விதப்பிழையியற்றியுள்ளேனாயினும், பின்னர் என் அறியாமையை உணர்ந்து அதற்குவேண்டிய பரிஹாரங்களையும் இயற்றியுள்ளேன். என் அநுபவத்திற்றெரிந்த விஷயங்களைப் பிறருமறிந்து பயனடையக்கூடுமென்று நினைத்து ஈண்டு அவைகளை விளக்குவேன். பிறர் கூறுவது பிழையேயாயினும் அதை நாம் மரியாதையிற் பிறழாமல் அவர்களுக்கு அப்பிழைகளைத் தெரிவித்தால், அவர்களே தமதுபிழைகளையுணர்ந்து திருத்திக்கொள்வர். அவரை நாம் இகழ்ந்துகூறின், அவர்கள் கூறுவது பிழையேயாயினும், தாம் கூறியதையே ஸ்தாபிப்பதற்கு முயல்வரேயன்றி, ஒருகாலும் தமது பிழையை ஒப்புக்கொள்ள இசையார். இதனால், உண்மைவிளங்கவேண்டுமென்ற நமதுகருத்தும் பயனற்றதாய்விடும். நம் செந்தமிழ்ப்பத்திராதிபரும், இனி நாம் சொல்வதொன்றும் பிறர் செவியேறாதென்று நினைத்தோ, இவ்விதவாதநெறியைக் கைப்பற்றியிருப்பவருடன் வாதிப்பது வீணென்று நினைத்தோ, அல்லது இவ்வித இகழ்ச்சிமொழிகளால் தம் மனம் புண்பட்டோ, தாம் எழுதிவந்த 'வஞ்சிமாநகராராய்ச்சி' என்ற கல்விக்களஞ்சியநூலை முற்றுப்பெறச்செய்யாது விடுத்தனர். இவ்வாராய்ச்சியில் உண்மைவிளக்கி முடிவுரை கூறவேண்டுமானால் அவரைப்போன்றவர்களே முன்வரவேண்டுமாதலாலும், இவ்வளவில் ஸ்ரீமான். வே. இராஜகோபாலையங்காரவர்களே தாம்நடந்துகொண்டது பிழையேயென்றறிந்து வருந்துகின்றாரென எனக்குத்தோற்றுவதாலும், இனி நம் தமிழ்நாட்டில் இவ்வித ஆராய்ச்சியில் விவாதநெறிபிறழாமலே யாவரும் அரிய ஆராய்ச்சிகளை யெழுதுவரென யான் நம்புவதாலும், நம் செந்தமிழ்ப் பத்திராதிபரை இப்பிழையைப்பொறுத்துத் தம்நூலைமீண்டும் எழுதி முடிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதில் செந்தமிழபிமானிகளெல்லாம் உடன்படுவாரெனநினைந்து அவரை விநயத்துடன் அவ்வாறருள வேண்டிக்கொள்கிறேன்.

கே. ஜி. சங்கரையர்,

[ஹைக்கோர்ட்டு வக்கீல், திருவனந்தபுரம்.]

உ

# * மங்களவாழ்த்து.

வடபா லிமயமுந் தென்பாற் பொதியமு
மெனவிசை பெறுமிவ் விருபெரு வரையுட்
டண்மலர் பொதுளிய சண்பகப் பொதும்பரும்
விண்வரை நிவந்த விரைமலர்க் கொன்றையுங்
கொங்கவிழ் நறுமலர்க் குங்குமத் தாருவு
மெங்கணுங் குளிர்தரு மெழிற்சுர புன்னையுஞ்
சந்தமு மகிலுந் தாரமுஞ் செறிந்து
மந்த மாருத மணங்கமழ் பொதியத்
தடவரைப் பிறந்து தமிழ்மூ வேந்தருட்
பாண்டியர் தம்பாற் பல்பகல் வளர்வுற்
றீண்டு வையை யினிற்றவழ்ந் தன்னோர்
சங்கத் திருந்த தமிழ்மக வொருபோ
திங்குல கத்தோ ரெவருமன் னியர்போற்
போற்றா திருப்ப வேற்றமில் சிலநாட்
குன்றிய செயலை நன்று தெரிந்து
ஞாலத் தவர்க்கொரு நற்றா யென்னப்
பாலவ னத்தப் பதிபுரந் துயர்ந்தோ
றாண்டெழு பரித்தேர்ச் சுடரவன் சுதனோர்
பாண்டித் துரைப்பெயர்ப் பார்புகழ் வள்ளல்
அம்மக வதனைச் செம்மனத் துடனே
வாழ்த்தி யெடுத்துளம் வாடா வகையிக்
கூடற் பதியிற் பீடுறு சங்கமொன்
றாக்கி யிருத்திட வகமகிழ்ந் துறைநாட்
செந்தமிழ் நாட்டின் றீவினைப் பயனாற்

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினேழாம்வருடக்கொண்டாட்டத்தன்று திருவனந்தபுரம் சமஸ்தானம் ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீமாந். கே. ஜி. சேஷையரவர்கள் B. A, B. L, M. R. A. S. ஸபாநாயகராக வீற்றிருக்க, ஷை சங்கம் செந்தமிழ் உதவிப்பத்திராதிபர் அ. நல்லசிவன்பிள்ளை பாடியது.

பைந்தமிழ்ப் பாவலர் பரிதபித் திரங்க
ஆண்ட ரைந்திலத் தாதையை யந்தத்
தமிழ்மக ளிழந்து தனிப்பட ருழந்தினி
யென்னே புரிவலென் றேக்கறு போழ்திற்
றளர்ந்தோர்க் குதவுந் தமிழ்ப்பெரு வேந்தன்
சேது காவலன் செம்பிநாட் டதிபன்
வையையந் துறைவன் மாமண்ட லாதிபன்
முல்லையந் தாரான் முகவையர் கோமான்
தொல்காப் பியமும் பல்காப் பியமுங்
கற்றோர் கூட்டுணச் சொற்றொறு மதுரம்
பொழியும் பாப்பல புகன்றிடும் பூபன்
பாற்கர மன்றரு நாற்கவி ராசன்
தராதலம் புகழும் இராஜரா ஜேஸ்வர
சேது பதியென மேதினி துதிக்கும்
எம்மனன் முன்வந் தெழிற் கரம்பற்றி
நாயக னாகி நனிமகிழ் விக்கும்
பெருமையும், வண்மைக் கொருவனென் றுலகோர்
போற்றித் துதிக்கு மேற்றமிக் குள்ளோன்
வானாடு போற்றுங் கானாடு காத்தா
னென்னும் பதியி லினிதுதித் தியார்க்கும்
வேண்டிய தளிக்கு மேதகு குணத்தான்
அறஞ்சிறந் தோங்கும் ஆண்டி பட்டி
ஜமீந்தா ராகித் தாரணி புரக்கும்
பேத்தாச் சிப்பெயர்ப் பிரபுவின் றுணையு
மொருங்குற்று வாழ்நா ளொருபதி னேழாம்
வருடத் திருநாண் மாண்புமிக் கோங்க
மும்மனர் தம்மின் முதன்மைபெற் றுயர்ந்து
செம்மையின் மும்மைச் செகமுழு தாண்ட
சிலைக்கொடி யுயரிய சேரலர் மருமான்
போந்தையந் தாரான் புரவலர் பெருமான்
ராம வர்ம நரேந்திரன் றனது
மன்னவை யதனிற் செந்நெறி பிறழாது



திருந்தறத் தவிசிற் சேர்ந்துநன் னீதி
பொருந்த வுரைக்கும் புகழ்ப்பெருஞ் செல்வன்
பன்னூ லுணர்பெரும் பண்டித னிவனென
முன்னோ ராய்ந்து மொழிந்திடப் பெற்ற
சேஷ நாமன் பூசுரர் திலகன்
அக்கிரா சனத்தி லமர்ந்தன னறிவின்
மிக்கோ ரனைவரும் வேந்தருஞ் செல்வரு
மித்திரன் பேரவை யெய்திய புலவரின்
வந்தொருங் கீண்டினர் மன்னுமித் திருநாள்
செகதல மகிழச் சிறந்தது மன்னோ
தண்டமிழ்ச் சபையுமிச் சபையின் றலைவரும்
செந்தமிழ்ச் செல்வச் சேது வேந்தரும்
நந்தமிழ்க் குதவு நல்லோர் பலரும்
ஊழி யூழி யுயர்ந்து
வாழி வாழி வளம்பல சிறந்தே.

---

நேரிசை வெண்பா.

மண்டு கொடும்போரின் மாமண்ட லீகர்வந்து
தெண்டனிடும் வெற்றித் திறம்படைத்துத்—தெண்டிரைசூழ்
வைய மெலாம்ஜார்ஜு மன்னர்பிரா னாணைசெலச்
செய்க விறைவன் சிறந்து.

---

## * மங்களவாழ்த்து.

---

தண்ணம்பிறைமுடித்த தாணுவுமைமுந்நான்கு
கண்ணனிவர்மூவர்காதலுடன்—நண்ணுமர
சாட்சிசெய்துமேன்மையடைந்தமதுரைத்தமிழின்
மாட்சிசொலயாரேவலார். (1)

---

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினேழாம்வருடக்கொண்டாட்டத்தில் ஆண்டிபட்டி சமஸ்தானவித்வான், வி. திருஞானசம்பந்தக்கவிராயரவர்கள், பாடியது.

இன்பப்பொருள்கொண்டிறைவனைத்து
 தியைத்துப்புனலினெதிர்த்தேறி
யெம்மானவன்போற்கனற்கணுயர்ந்
 தேற்றம்படைத்ததமிழ்க்குழவி
அன்பிற்குரியசெழியர்குலத்
 தழகுபடைத்துவளர்ந்திடையே
அறியாவகையினிருப்பவதற்
 காக்கம்பெருக்கிவாழ்வளிக்க
முன்பிற்சிறந்தசேதுகுல
 முளைத்துப்பாண்டித்துரையென்ன
முறைசேர்செழியர் இனப்பெயரை
 முன்னோர்தவத்தாற்படைத்தபிரான்
தன்பற்பலசிரிலங்கிநிதந்
 தழைக்கப்பாற்கரேந்திரனார்
தனந்தந்தருள்வீடெனும்நான்காஞ்
 சங்கத்திருத்திமகிழ்ந்ததன்பின் (2)

தூயோர்புகழும்பாற்கரவேள்
 சுதனும்ராஜராஜேசன்
தோன்றுங்கருணைக்கிருப்பிடமாய்த்
 துங்கக்கவிஞர்தவப்பயனாய்
நேயார்தருமஜயமுயர்த்தி
 நிலத்தார்களிக்கமனங்களிக்கும்
நிருபன்உரமன்பெத்தாச்சி
 நேர்ந்ததுணைகொண்டினிதடைந்து
மீயார்தருபாண்டித்துரைதன்
 மேலாம்மனம்போனடந்தவர்பால்
விளையன்பதனைத்தன்செயலால்
 விளக்குமுயற்சிமிகப்படைத்தோன்
சேயானவன்மாமன்றனது
 செந்தாமரைத்தாள்தினந்துதிக்கும்
சீமான்சீனிவாசனது
 சீர்சேர்த்தினிதேதிகழ்தருநாள் (3)



தூய்யபதினேழாகத்தோன்றுவருடோற்சவத்தைச்
செய்கலையிற்சேஷன்தீரனென—வையமெலாம்
கூறுமொழிமனத்துட்கொண்டவன்றன்முன்னிலையில்
வீறுபெறக்கண்டானவ்வேந்து. (4)

கம்பனெனுஞ்சாமிநாதக்கலைஞன்முதற்
பம்புபெரும்புகழ்சேர்பண்டிதரும்—நம்பினரை
ஆதரிக்குமக்ராசனுதிபருஞ்ஜார்ஜராசும்
நீதியுடன்வாழ்கதமிழ்நேர்ந்து. (5)

## * மங்களவாழ்த்து.

மீன்காய வெயில்விரிக்கு மணித்தடஞ்சூழ் தென்கூடல்
 மேவப் பெற்ற
நான்காய தமிழ்ச்சங்கப் பதினேழாம் வருடவிழா
 நாத னாகித்
தேன்காயும் படியினிக்கும் பிரசங்க மழைபொழிந்து
 சிறப்புற் றானல்
மான்காயும் விழிக்கலைமா னிகர் கே. ஜி. சேஷையரா
 மதிமிக் கோனே. (1)

மெய்யறிவுச் சட்சிகளும் வியன்கலைக்கட் டருநீதி
 விளக்குஞ் செங்கோற்
கையர்மதி கவர்னருமெக் கா னுமதி மதிப்பாகக்
 கருத லாலே
துய்யபுகழ்ச் சேஷையனீ திருவாங்கூ ருயர்நீதித்
 துரையே யானாய்
ஐயவின்று தமிழ்ச்சங்கத் தலைமையுற்றாய் நின்புகழ்போ
 லார்பெற் றாரே. (2)

* இது, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினேழாம் வருடோத்சவக்கொண்டாட்ட தினமாகிய (4—8—18)ல் சோதுகுடி சாஹிப் பஹதூர் எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர் அவர்கள் பாடியது.

மண்ணரசர் புகழுமுத்து ராமலிங்க சேதுபதி
    மாலுஞ் சேரன்
கண்ணகன்ற ஞாலமுயர் நீதிதுரை சேனையருங்
    களிமீக் கூர்ந்து
பண்ணுநித்ய நைமித்ய சபைத்தலைமையுறச்சங்கம்
    பரிக்கு மாண்பை
விண்ணுலகத் தவரறிந்தாற் றம்வாழ்வை யொருநாளும்
    விழைந்தி டாரே. (3)

ஓங்கும்விண்ணிற் பெரும்புலவர் சங்கத்தை யிந்திரனோ
    டுபேந்தி ரன்றான்
றாங்குதல்போ லிம்மதுரைப் புலவர்தமிழ்ச் சங்கத்தைத்
    தனக்கொப் பில்லாப்
பாங்குபெறு முகவைமுத்து ராமலிங்கப் பேர்ச்சேது
    பதியொ டன்பால்
ஈங்குவந்து தாங்குகின்றான் பெத்தாச்சிப் பெயர்ப்பெரியோ
    னிவனும் வாழி! (4)

## * மங்களவாழ்த்து.

பாமருவும் பாரதிக்கோ ருறையிடமாப்
    பனித்தசெழும் பதுமத் தார்ந்த
மாமருவும் திருமகட்கோர் திருமுகமாய்
    வனைந்தென்றும் மருவுந் தூய
காமருவும் உயர்மதுரைப் பதிவதியும்
    கனதிமிகும் கவினுற் சங்கம்
கோமருவும் பரனருளா லென்ஞான்றும்
    வாழ்கவெனக் கூறு வோமே.

வெண்பா.

நாற்சங் கமும்இங்கே நாடும் சபையினரும்
பாற்சங்க மேந்து பவனைநிகர்த்—தேற்றமிகும்
எங்கோன்பெத் தாச்சி இறைவன் றனதுதிருச்
செங்கோலும் வாழ்கவினி தே.

* இது, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினேழாவது வருடக்கொண்டாட்டத்தன்று சிவகங்கை வித்வான், வே. பெரியசாமிசேர்வை அவர்கள், பாடியது.

உ

சிவமயம்.

## சேக்கிழார்வாக்கு

அறிவான்மிக்க பெரியோர்காள்!

சென்னை யூனிவர்சிட்டி பாடசாலை (School final) முடிவுப்பரிசைக்கு 1918-19ஆண்டிற்கு ஏற்பட்டிருக்கும் (Tamil text) தமிழ்ப் பாட புத்தகத்தில் தொண்டர்சீர்பரவுவாராகிய ஸ்ரீமத் சேக்கிழார் பெருமான்றிருவாக்காகிய பெரியபுராணத்தில் இளையான்குடிமாற நாயனார் சரித்திரங் கூறப்பட்டுள்ளது. அத்தமிழ்ப் (Tamil text) பாட புத்தகத்திற்கு (Notes) உரையெழுதப்புகுந்த S. கிருஷ்ணமாச்சாரியாரவர்கள் (Retired Head Tamil Pandit Wesley College Rayapetah) இலக்கணவிலக்கியவாராய்ச்சி மிக்குடையாரென்பது யாவருமுணர்ந்ததே. அவர்களாலெழுதப்பட்ட ஷை உரைப்புத்தகம் பெரியபுராண நூலாசிரியர் சேக்கிழார் வரலாறு 18-வது பக்கத்தில் அநபாயசோழன்கூற்றாக "இச்சரித்திரம் யாவர்க்குந் தெளிவாக விளங்குதற்பொருட்டு இலக்கணவிதிப்படியமைந்த பெருங்காப்பியமாக விரித்துச்செய்து தாருமென்றான்." என்று கூறப்பட்டுள்ளதை யெடுத்தெழுதிய ஐயங்காரவர்கள் ஷை (Tamil Text) தமிழ்ப்பாட புத்தகத்தில்

"அன்பனே அன்பர்பூசையளித்தநீயணங்கினோடு
மென்பெருமுலகமெய்தியிருநிதிக்கிழவன்றானே
முன்பெருநிதியமேந்திமொழிவழியேவல்கேட்ப
வின்பமார்ந்திருப்பீராமென் றருள்செய்தானெவர்க்குமிக்கான்"

என்னும் 26-வது செய்யுளுக்கு உரையெழுதப்புகுந்து உரைப்புத்தகம் 37-வது பக்கத்தில் "'இன்பமார்ந்திருக்கவென்றேயருள்செய்தான்' என்று மூலத்தைத் திருத்துக. 'இன்பமார்ந்திருப்பீராமென்று'

என்று காணப்படுகின்ற பாடம் 'அன்பர் பூசையளித்த நீ இன்பமார்ந் திருப்பீர்' என்று இயைந்து ஒருமையெழுவாயும் பன்மைப்பயனிலையு மாக முடிதலால் ஒருமைப்பன்மை வழுவிற்கு இடமாதலறிக. 'அன்பர் பூசையளித்தநீர் என்றிருப்பினுமாம்" என்றெழுதியிருக்கின்றார்கள்.

"மதுரவிராமாயணகதையுரைசெய்தவான்மிகபகவனுமொப்பல்ல
விதிவழிபாரதமுரைசெய்துகரைசெய்தவேதவியாசனுமொப்பல்ல
சிதைவரலாயிரநாவுடனறிவுளசேடவிசேடனுமொப்பல்ல [பார்."
பொதியமலைக்குறுமுனிவனுமொப்பலபுகழ்புனைகுன்றைமுனிக்கென்

என்ற பெரியார்வாக்குக் கிணங்கவும்

"அடியார்பெருமையுமருமையுநாளுமறியம்பலவாணர், அவர்வர லாறு விரித்துரைசெய்பவர் யாரெனவுட்கருதிக், கடியார் மற்றவ ரன்பத்தனையுங் கண்காண்படிசெய்து காமறு முதலுமெடுத்தருளின ரிக், கடல்சூழ்புவி யிடையிப்படி யார்பெற்றாரித், தமிழ்மான்மிய மெப் பாடைகளுக்குளது" என்றபடியும் சைவிகவாக்காய் அநபாயசோழ ராலும் பௌஷ்கராகமவிர்த்திசெய்த ஸ்ரீமத் உமாபதிசிவாச்சாரியர் முதலிய பலபிரபல ஆன்றோர்களாலுஞ் சிரோரத்தினமாக் கோடற்பால தாந் தொண்டர்புராணமென்னும் பெரியபுராணத்திற்கு எவர்க்கு மெட்டா விலக்கணப்பிழை இவர்க்கெட்டியது வியப்பே. ஐயங்காரவர் கள் தமது உரைப்புத்தகம் 19-வது பக்கத்தில் (சேக்கிழார்) காலம்:— என்றெடுத்துக்கொண்டு "இவர் அநபாயசோழன்காலத்தில் அவ னுக்கு மந்திரியாயிருந்து........இந்தப் பெரியபுராணத்தைப் பாடின தாகக் கூறப்படுதலாலும்...............இவர்காலம் ஏறக்குறைய எண் ணூறு வருடங்களுக்கு முன்னெனன்பார்" என்றும் ஷை உரைப்புத்த கம் 41-வது பக்கத்திறுதியில் நன்னூலாசிரியர் வரலாற்றில் "அவர் காலம் இப்பொழுதைக்கு ஏறக்குறைய நானூற்றைம்பதுவருடங் களுக்கு முன்பென அறியப்படுகிறது" என்றுங் கூறியிருக்கின்றார்கள். எண்ணூறுவருடங்களுக்குமுற்றோன்றிய பெரியபுராணத்திற்கு



முந்நூற்றைம்பது வருடஞ்சென்று பிற்றோன்றிய நன்னூல் எவ்வாறு இலக்கணமாகுமென்றுந் தெரியாதவர்களல்ல. சொற்பொருள்சம்பிர தாயக் களஞ்சியமாயுள்ள ஐயங்காரவர்கள் பெரியபுராணத்திற்குத் "துங்கமிகுந்த வருந்தவமேவிய தோலா நாத்திரண தூமாக்கினியருள் தொல்காப்பியமே தோன்றுமிலக்கணம்" என்ற சேக்கிழார்பிள்ளைத் தமிழையும் பார்த்திருக்கலாம். ஆதலில் தொல்காப்பியம் சொல்லதி காரம் "முன்னிலை சுட்டிய ஒருமைக்கிளவி, பன்மையொடு முடியினும் வரை நிலையின்றே, ஆற்றுப்படை மருங்கிற்போற்றல் வேண்டும்" என் னும் 462-ம் சூத்திரத்தையும் அதற்குச் சேனாவரையர் செய்துள்ள உரையையும் நன்காராய்ந்துள்ள ஐயங்காரவர்கள் (Text Notes) பாட புத்தக உரையெழுதுங்காலத்து இச்சூத்திரத்தை மறதிக்கள்வன்வா ரிக்கொண்டனன் போலும். ஐயங்காரவர்களது உரைகொண்டுணரும் மாணவர்களும், ஆசாரியர்களும் மூலபாடத்தை யெவ்வகையானுந் திருத்தாது மேற்காட்டிய சூத்திரப்படி ஒருமையெழுவாய்க்குப் பன் மைப் பயனிலை கோடற் கூடுமென்றுகொண்டு அவர்களது உரைப் புத் தகத்தைத் திருத்திக்கொள்ளும்படி இப்பத்திரிகை மூலமாய்க்கேட்டுக் கொள்கிறேன்.

சி. குருசாமி.

---

## பிழைதிருத்தம்.

---

"செந்தமிழ்"த் தொகுதி ௧௬-பகுதி ௯-ல் ௪௩௯-ம் பக்கம் ௧௨-வது வரியில் முடிவில் என்பதற்குப்பின் சோதுகுடி சாஹிப் பஹதூர் எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தரவர்கள்பாடிய மங்களவாழ்த் தும் என்று சேர்த்துப்படித்துக்கொள்க.

உ

கடவுள்துணை.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் சாசுவத அக்கிராசனாதிபதிகளாகிய மாட்சிமைதங்கிய இராஜராஜேச்வர முத்துராமலிங்கசேதுபதியவர்களது மூன்றாம் தேவியார் தேகவியோகத்தை நினைந்து மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் பாடிய இரங்கற்பாக்கள்.*

ஈந்திரப்போர் தமைப்புரப்போ னம்மதுரைத் தமிழ்ச்சங்கத்
திறைவ னாகி
ஆர்ந்தபல நலனடைய வளித்துவப்போன் தென்முகவை
யரச ரேறாஞ்
சாந்தகுணன் புகழாளன் ராஜரா ஜேஸ்வரமால்
தனக் குகந்த
பூந்தவிசிற் றிருநிகர்மூன் றாநாச்சி யார்விண்ணம்
புகுதல் கேட்டேம்.

வையமெலா நனியிரங்க மாமதுரைத் தமிழ்ச்சங்க
மன்றத் தின்று
செய்யமனு முறைதவறா நம்மிறைவற் கித்துயரஞ்
சேரற் பாற்றோ
ஐயவென வுளந்தளர்ந்தே மூழ்வினையின் வலியெனவே
யறிந் தயர்ந்தே
நையுமனத் தினமாகி யாங்களெலா மறுதாப
நண்ணி னேமால்.

பொல்லாதார் நன்மையினைப் பொருந்துவதும் புனிதமிகப்
பொருந்தி வாழும்
நல்லார்துன் புறுவதுமூழ் வயத்தாலென் பாரவையன்
னவர்பா லென்றும்
நில்லாவென் பதுசரதம் நம்மிறைவ னித்துயரி
னீங்கி யெல்லாம்
வல்லான்ற னருளானல் வாழ்வடைவா னவன்றாளை
வணங்கு வாமே.

---

* இவை செந்தமிழுதவிப் பத்திராதிபர் சு. நல்லசிவன்பிள்ளையாலியற்றப் பெற்றன.

## 1918-ளூ ஆகஸ்டுமீ 5உ திங்கட்கிழமை மதுரை விக்டோரியா எட்வர்டு ஹால் கட்டிடத்திற் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்க மகா சபையோரால் ஆலோசித்துத் தீர்மானிக்கப் பெற்ற விஷய விவரக்குறிப்பு.

———:o:———

அடியிற்கண்ட முப்பத்தொருவர் (31-பேர்) அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள்.

1. மகா-ள-ள-ஸ்ரீ Justice K. G. சேஷையரவர்கள் B.A., B.L. M.R.A.S.
சங்கவருஷோத்ஸவ அக்கிராசனாதிபதி.
2. ,, S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள் M.R.A.S.
சங்கத்தின் சாசுவத உபஅக்கிராசனாதிபதி.
3. ,, மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள்,
4. ,, K. G. சங்கரையரவர்கள், B.A., B.L.
5. ,, T. V. ஸ்ரீநிவாஸராகவாசாரி அவர்கள், B.A.,
6. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L.
7. ,, T. N. சுந்தரராஜையங்காரவர்கள், B.A., B.L.
8. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B.A., B.L.
9. ,, வேணுகோபாலையங்காரவர்கள்.
10. ,, ராவ்பகதூர். P. சுப்பராயஐயரவர்கள், B.A.,
11. ,, V. சிவஞானயோகி அவர்கள்,
12. ,, பொ. முத்தையபிள்ளை அவர்கள்,
13. ,, மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்,
14. ,, R. கணபதிஐயரவர்கள், B.A., B.L.
15. ,, மு. சாம்பசிவநாயனார் அவர்கள்,
16. ,, திரு. நாராயணையங்காரவர்கள்.
17. ,, D. சுந்தரராஜையங்காரவர்கள்,
18. ,, S. கோபாலசாமிஐயங்காரவர்கள், B.A.,
19. ,, சையத் மகம்மது ஆலிம்புலவரவர்கள்,
20. ,, V. முத்துசாமிஐயரவர்கள், M.A., L.T.
21. ,, P. K. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள்,
22. ,, M. K. M. அப்துல்காதிறு ராவுத்தரவர்கள்,
23. ,, ம. கோபாலகிருஷ்ணையரவர்கள்,
24. ,, ராம. பழனிவேற் பிள்ளையவர்கள்,

25. ,, ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்.
26. ,, கர. நல்லைய ஆசாரி அவர்கள்;
27. ,, ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்,
28. ,, T. சுதர்சனாச்சாரியரவர்கள்,
29. ,, N. V. சுந்தரராஜையரவர்கள், B.A., L.T.
30. ,, N. R. சுப்பிரமணியசர்மா அவர்கள்,
31. ,, P. சிதம்பரபுன்னைவனநாதன் அவர்கள்.

## தீர்மானங்கள்:—

I. யாழ்ப்பாணம் இராமநாதன் காலேஜில் படிக்கும் பெண்களுக்கு, அக்கலாசாலையில் கற்பிக்கும் தமிழ்நூல்களில் ஓர் பரீக்ஷை நடத்தவேண்டுவதாய் ஷை கலாசாலைத்தலைவர் மகா-௱-௱-ஶ்ரீ Hon'ble P. இராமநாதன் அவர்கள், கேட்டுக்கொண்டபடி அங்கீகரிக்கலாயிற்று.

II. ஆங்கில கலாசாலை மாணவர்களுக்காக நடத்தும் பரீக்ஷை சம்பந்தமான 6-வது விதியில் 'போகிறவர்களாயும்' என்பதற்குப்பதிலாக 'போகக்கூடியவர்களாயும்' என்று மாற்றவேண்டுவதாய்த் தீர்மானிக்கலாயிற்று.

III. காலஞ்சென்ற மு.ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் ஸ்தானத்திற்கு வித்யா விஷய ஆலோசனை சபையில் மகா-௱-௱-ஶ்ரீ V. முத்துசாமி ஐயரவர்களை நியமித்திருப்பதாகத் தீர்மானிக்கலாயிற்று.

IV. பன்னூற்றிரட்டுப் புத்தகத்தை சங்கத்தில் மறுபடியும் அச்சிட ஏற்படும் செலவிற்கு ஶ்ரீமான். பெத்தாச்சி செட்டியாரவர்கள், பொருளுதவி செய்வதாக அன்புடன் வாக்களித்தது சபையோரால் உவந்து அங்கீகரிக்கப்பட்டது.

மதுரைத் தமிழ்ச்சங்கம், 5—8—1918. } S. Rm. M. Ct. Pethachi, உப அக்கிராசனாதிபதி.

---

மாட்சிமை தங்கிய கிரந்த அக்கிராசனாதிபதியவர்களுக்கு இப்போது நேர்ந்துள்ள துக்க சம்பவத்தைக்குறித்து சங்கத்தார் அநுதாபத்தை இதனுடன் சேர்த்திருக்கிற இரங்கற்பாக்களால் தெரிவிக்கிறார்கள். இவ்வருஷக் கூட்டம் மூன்றுநாள் நடத்துவதாய் ஏற்பட்டிருந்ததில் மேலேகண்ட அசந்துஷ்டியால் இரண்டு நாளோடு முடித்து மூன்றுநாள் விடுமுறை நாளாக்கப்பட்டது.

மதுரைத் தமிழ்ச்சங்கம், 5—8—1918. } K. G. Seshaiyar, வருஷோத்ஸவ அக்கிராசனாதிபதி.

---

## 1918-ஆண்டு செப்டம்பர்மீ 3உ காலை 9-மணிக்குக்கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக சபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

—:o:—

1. மாட்சிமை தங்கிய கனம் B. இராஜராஜேசுவர ஸேதுபதிமன்னரவர்கள் —அக்கிராஸனாதிபதி,
2. மகா-௱-௱-ஶ்ரீ. Hon'ble K. இராமையங்காரவர்கள், B. A. B. L.,
3. ,, வித்துவான் R. இராகவையங்காரவர்கள்.
4. ,, V. S. இராமசாமிசாஸ்திரியவர்கள் B. A., B. L.
5. ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.
6. ,, T. C. ஶ்ரீநிவாஸையங்காரவர்கள் B. A., B. L.
7. ,, T. சுதர்சனாச்சாரியர் அவர்கள்.

இவர்கள் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்:—

I. 1918-ஆண்டு ஜூன், ஜூலை, ஆகஸ்டுமாதங்களின் வரவுசெலவுகணக்குகள் அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

1. மகா-௱-௱-ஶ்ரீ P. M. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள், M.A. L.T. Lecturer in Natural Science, அமெரிக்கன் காலேஜ், மதுரை.
2. ,, V. R. ஹரிஹரையரவர்கள், B. A. L. T., தலைமையுபாத்தியாயர், ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம்.
3. ,, S. R. பிரமநாதவேளாளர் அவர்கள், திருநாவுக்கரசு வித்தியாசாலைத்தலைவர், மஞ்சள்வயல், மறவக்காடு போஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா.

III. கலாசாலை மாணவர்களின் போஷணைக்காக அடியிற்கண்ட கனவான்கள் மாதச்சந்தா அன்புடன் உதவிபுரிவதற்குச் சங்கத்தார் நன்றி பாராட்டி வந்தனமளிக்கிறார்கள்.

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேசுவர ஸேதுபதிமன்னரவர்கள்,
2. மகா-௱-௱-ஶ்ரீ S. Rm. M. Ct. பெத்தாச்சிசெட்டியாரவர்கள், M.R.A.S. ஆண்டிபட்டி ஜமீந்தார்.

3. „ தக்ஷிணாமூர்த்திதுரைராஜா அவர்கள், B.A. B.L. ஹைக்கோர்ட்டு வக்கீல், மதுரை.

4. „ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். B. A. B. L., ஹைக்கோர்ட்டு வக்கீல், மதுரை.

5. „ ராம. மெ. சித. வைரவன்செட்டியார் அவர்கள், தேவகோட்டை.

IV. சங்கத்தின் உப அக்கிராசனாதிபதியாகிய ஆண்டிபட்டி ஜமீந்தார் மகா-௱-௱-ஸ்ரீ சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களை, 'பன்னூற்றிரட்டு' மூன்றும் பதிப்பு, சங்கத்தில் அச்சிடும் விஷயமாக நேரிடும் செலவைத்தான் ஏற்றுக்கொள்வதாக அன்புடன் வாக்களித்திருப்பதற்குச் சங்கத்தார் நன்றிபாராட்டி வந்தன மளிக்கிறார்கள்.

V. சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆந்திரபாஷாபிவிருத்தி சங்கத்தின் பிரசுரங்களை ஷை சங்கத்தார் மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்கு அன்புடன் இனாமாக அளித்திருப்பதற்காக, மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் வந்தனம் கூறி அதனை ரிக்கார்டில் பதிவு செய்தார்கள். ஷை ஆந்திரபாஷாபிவிருத்தி சங்கத்திற்கு இனாமாக அளிக்கப்பட்ட சங்கப்பதிப்புப் புத்தகங்களை சங்கக்கணக்கில், செலவு போடும்படிக்கும் தீர்மானித்தார்கள்.

VI. சங்கப் பரீக்ஷைகளில் மாணவர்கள் பெற்ற அம்சங்களைக் குறித்தனுப்பும்படி எழுதிக் கேட்டுக்கொண்ட மாணவர்கட்கு அம்சங்களைக் குறித்தனுப்பும்படி தீர்மானிக்கலாயிற்று.

VII. (1) 1918-19-ம் வருஷத்திற்குத் தயாரித்த பட்ஜெட் அடுத்த மீட்டிங்கிற்குத் தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது.

(2) திருவண்ணாமலை, பரீக்ஷாஸ்தலங்களிலொன்றாக ஏற்படுத்தப்பட்டதை அங்கீகரிக்கலாயிற்று.

(3) மாட்சிமைதங்கிய இராஜராஜேஸ்வர முத்துராமலிங்க ஸேதுபதி அவர்களது மூன்றும் தேவியார் தேகவியோகத்தை நினைந்து மதுரை தமிழ்ச்சங்கத்தார் பாடிய "இரங்கற்பாக்கள்" மனதிற்கு ஆறுதலைச் செய்வதாக எழுதிய கனம் ஸேதுபதியவர்களது 26—8—18உ கடிதம் ரிக்கார்டில் வைக்கலாயிற்று.

B. இராஜராஜேஸ்வர ஸேதுபதி,
அக்கிராஸனாதிபதி.

---

(True copy)

*Joint Secretary.*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-DEC 1918
MADRAS

உ

கடவுள்துணை.

செந்தமிழ்

தொகுதி-கசு.] காலயுக்தி-வரு புரட்டாசிமீ [பகுதி - கக.

Vol. XVI. September—October. 1918. No. 11.

# சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம்

## (இரண்டாம்பாகம்.)

## விக்கிரமாதித்தன் இளமையும், தந்தைக்குத்துணையாக அவன்காட்டிய போர்த்திறமும்.

---

**விக்கிரமாதித்தன் ஜனனம்.**

ஆகவமல்லன் இவ்வாறு ஜயங்கொண்டு மகிழ்ந்திருந்தபோதிலும் மக்கட்பேறில்லாப் பெருங்குறையொன்று அவனைப்பீடித்துத் துயரக்கடலில் வீழ்த்திற்று. முன்னோரிடமிருந்து முறையே வந்த ராஜ்யலக்ஷ்மியும் இவனுக்குப்பின் தனக்குப்பற்றுக்கோடின்மையால் ஏக்கமுற்று கடலிடையே கப்பலின் பாய்மரத்திற்றங்கிய பறவையைப்போலத் தத்தளித்துக்கொண்டிருந்தாள். ஆகையால் ஆகவமல்லனும் தன் ராஜ்யத்தை அமைச்சரிடம் ஒப்பித்துத் தங்கள்குலதெய்வமாகிய சிவபிரானுடைய பிரசாதத்தாலகளையடையவிரும்பித் தானும் தன் மனைவியும் எல்லா ஆடம்பரங்களையும் ஒழித்துக் கோயிலுக்குச்சென்று கடுமையான தவஞ்செய்தார்ள். சிவபிரானும் திருவுளமுவந்து அருள்கூர்ந்து முன்தோன்றி யுவர்களுக்கு மூன்றுமக்கள் பிறப்பார்களென்றும் அவர்களில் இரண்டாம்புத்திரன் தம்முடைய முழுக்கருணையைப்பெற்று, குணம் பராக்கிரமம் முதலியவற்றில் பண்டையரசர்களெல்லோரிலும் மேம்பட்டவனாக விளங்குவானென்றும் அருள்புரிந்தார். அவ்வாறே அரசியும்

*

நாளடைவில் சோமேசுவரன் விக்கிரமாதித்தன் ஜயசிங்கனென்னும் மூன்றுமக்களையும் முறையேபெற்றுக்களிகூர்ந்தனள். தேவரெல்லாம் மகிழ்ச்சியடைந்து அலர்மழை பொன்மழைவருஷித்தனர்.

இவ்வாறு பில்ஹணகவி (1) சொல்லியிருப்பதிலிருந்து ஆகவமல்லன் அரசுபுரியத்தொடங்கிப் பலவருஷங்களுக்குப்பின்னரே (அதாவது கி. பி. 1042-க்குப்பின்பே) அவனுக்கு மக்கள் பிறந்தார்களென்று கொள்ள இடமுண்டாகிறது. இது சரித்திரசம்மதமாகுமா? சாசனங்களின் (2) உதவியால் சீர்தூக்கிப்பார்த்தால் இதை அங்கீகரிப்பது கூடாததாகிறது. கி. பி. 1053 இலேயே பெலுவோலா புலிகீர் பிராந்தியங்கள் மூத்தகுமாரனான சோமேசுவரனுடைய அதிகாரத்தின் கீழும், கி. பி. 1055 இல் கங்கபாடி, வனவாசி, சாந்தலிஜ், நொளம்பபாடி என்னும் மாகாணங்கள் இரண்டாம்குமாரனான விக்கிரமாதித்தன் ஆட்சிக்குள்ளும் இருந்தனவென்பது வெளியாகிறது. ஆகவமல்லன் இவ்வாறு தன் ராஜ்யத்தின் எல்லையிலிருந்த முக்கியமாகாணங்களை இவர்கள் கைவசத்தில் விட்டிருந்ததனாலேயே இவர்கள் அப்போதே உரியபிராயமடைந்து ஆளுந்திறமையும்பெற்றிருத்தல்வேண்டும். ஆகையால் ஆகவமல்லன் பட்டத்திற்குவருமுன்னமேயே இவர்கள் பிறந்திருத்தல்வேண்டுமென்று எண்ண இடமுண்டாகிறது. இதனைத் துணிந்துரைக்கவும் கூடும். ஏனெனில் சோழவம்சத்து ராஜாதிராஜனது 29 ஆம் ஆண்டு சாசனத்தில் (3) (அதாவது கி. பி. 1047-இல்) 'திண்டிறல் விருதர்விக்கி' யென்று சொல்லப்பட்டவன் பின் சோழசாசனங்களில் விக்கலன் அல்லது விக்கிரமாதித்தனென்று கூறப்பட்டவனேயாம்.(4) அவன் சண்டைசெய்யும்வன்மையுடையவனாயிருந்ததோடு விரோதிகளாலும் புகழப்பட்டவனாயிருந்ததால் அப்போது அவனுக்குக்குறைந்தது 16 - வயதாகிலும் இருந்திருத்தல்வேண்டும்.

1. விக். சரி. II-25-91.
2. Bom. Gaz. IV. 440.
   Epi. Car. VII. S. K. 83, 11, 152.
   Ind. Ant. IV. 303. முல்குண்டு சாசனம்.
3. S. I. I. III - 56.
4. Do.



எனவே சற்றேறக்குறைய கி. பி. 1031 இலேயே விக்கிரமாதித்தன் பிறந்திருத்தல்வேண்டும். இதற்கு இரண்டுமூன்றுவருடமுன்னரேயே தமையனாகிய சோமேசுவரன் ஜனித்திருத்தல்வேண்டுமென்பது சொல்லாமலே அமையும். ஒருக்கால் மூன்றாம்மகனாகிய ஜயசிங்கன்மட்டும் ஆகவமல்லன் அரசெய்தியபின்னர் பிறந்திருக்கலாம். ஏனெனில் அவன் பெயர் கி. பி. 1063-4 வருஷத்திய சாசனத்தில்தான் (5) முதல் முதல் காணப்படுகிறது.

உண்மை இங்ஙனமிருக்க, பில்ஹணகவி மாறுபாடாகக்கூறியதற்குக்காரணம் என்ன? புகழ்பெற்று விளங்கிய விக்கிரமாதித்தனை ஈசுவரானுக்கிரகம்பெற்றவனென்று சிறப்பித்துரைப்பதற்கே போலும். நிற்க.

இம்மூன்று புத்திரரும் ஒருதாய்வயிற்றுப்பிள்ளைகளா அல்லவா என்ற கேள்வி எழுகின்றது. சோமேசுவரன் விக்கிரமாதித்தன் இவர்களுடைய கங்கபிருதுகளால் கங்கவம்சத்தரசியின் பிள்ளைகளென்றும் ஜயசிங்கனுடைய பல்லவபிருதுகளால் அவன் பல்லவகுலத்தரசியின் புத்திரனென்றும் ஆகவே மூவரும் வெவ்வேறுமனைவிகளின்மக்களாக இருத்தல்வேண்டுமென்றும் டாக்டர் ரைஸ் (6) அபிப்பிராயப்படுகிறார். ஆனால் இவ்வபிப்பிராயத்துக்குச்சிறிதேனும் இடமில்லை. கங்கமாகாணங்களின்எல்லையைப் பாதுகாத்துவந்தமையால் கங்கபிருதுகளும் பல்லவதேசத்தெல்லையைப் பாதுகாத்துவந்தமையால் பல்லவபிருதுகளும் கிடைத்திருத்தல்வேண்டும். இம்மாதிரியான வழக்கம் சோழர்களிடத்திலும் (7) வெகுவாய்க்காணப்படுகிறது. மேலும் விக்ரமாங்கதேவசரிதத்தில் (8) 'அரசே இந்த உன் மனைவியின்வயிற்றில் மூன்றுமக்களுண்டாவர்'என்று சிவபிரான்சொன்னதாக வெளிப்படை

5. S. I. I. III. No. 20. கருவூர்ச்சாசனம்.
   Epi. Rep. 113. A. of 1896.
6. Epi. Car. VII. SK. 136. Dg. 133. Cd. 12.
7. S. I. I. III. Part. I.
8. விக். சரி. II. 51.

யாகக்கூறப்பட்டிருக்கின்றது. டாக்டர் பிலீட் வெளியிட்ட கடக்சாசனத்திலிருந்தும் (9) மூவரும் ஆகவமல்லன் மூத்தமனைவியாகிய பாசலதேவியின் புத்திரரென்று வெளியாகிறது. ஆகையால் இவர்கள் சகோதரரேயன்றி வேறல்ல என்று துணியலாம். இப்பாசலதேவியும் பல்லவகுலத்தைச்சேர்ந்தவளாகவிருத்தல்வேண்டுமென்று தேவூர்ச் சாசனத்தைக்கொண்டு (10) ஒருவாறு ஊகிக்கலாம்.

**சோமேசுவரன் இளவரசாதல்.**

புத்திரர்கள் பல கலைகளையும் பயின்று பருவமுதிர்ந்தகாலையில் ஹிந்து அரசரின்வழக்கப்படி ஆகவமல்லன் தான் அதுகாறும் வகித்துவந்த ராஜ்யபாரத்தை ஒருவாறு குறைத்துக்கொள்ளுவதற்கும் அரசாளுமுறைமையில் மைந்தர்களைப்பழக்குவதற்கும்வேண்டித் தன் புதல்வரில் ஒருவனை இளவரசாக்க எண்ணங்கொண்டான். மூத்தகுமாரனான சோமேசுவரன் இளவரசுக்குரியவனாயிருந்தபோதிலும் அவன் தம்பி விக்கிரமாதித்தன் தமையனைக்காட்டிலும் புஜபலபராக்கிரமங்களில் மேம்பட்டவனாயிருந்தமையால் ஆன்றோரொழுக்கமும் உரிமையுமொருப்புறமிருக்க தன் மனப்போக்கும் பொருத்தமும் மற்றொருபுறமாக ஆகவமல்லன் இன்னதுசெய்வதென்று தெரியாமல் குழப்பமடைந்திருந்தான். இக்குழப்பத்தை ஊகித்தறிந்த விக்கிரமாதித்தன் தமையனிருக்கத் தான் இளவரசாதல் தனக்கும் தன் தந்தைக்கும் சளுக்கியகுலத்துக்குமே பெரும் பழிக்கிடனாகுமாதலால் கூடாதென்றும் யுவராஜபட்டமில்லாமலே தன்னாலியன்றவூழியம்புரிவதாகவுஞ்சொல்லிவிட்டான். ஆகவே சோமேசுவரன் இளவரசாக நியமிக்கப்பட்டான்.

இங்ஙனம் இளவரசுவிஷயத்தைப்பற்றி பில்ஹணர் (11) கூறியது, வனுமென்றே விக்கிரமாதித்தனைப்புகழ்ந்து சோமேசுவரனை இகழ் லாகிய பக்ஷபாதமுடைத்தென்று டாக்டர் பூலர் (12) அபிப்பிரா

9. Ind. Ant. II. 297.
   Bom. Gaz. 438. N. 1.
10. Bom. Gaz. 440. N. 5.
11. விக். சரி. III. 26 - 59.
12. பூலர் பதிப்பு. விக். சரி. முகவுரை. 31. N. 1.



யப்படுகின்றார். ஆனால் இதில் அப்படி அதிகமாகப்பக்ஷபாதம் இல்லையென்பது பிற்காலத்தில் இவர்கள் அரசுநடத்திய சீர்மையாலேயே யாவர்க்கும் தெற்றெனவிளங்கும். இது நிற்க. ஆகவமல்லன் குழப்பமடைந்து உண்மையிலேயே இளவரசை இளையவனுக்குக்கொடுக்க விரும்பினானா அல்லது பில்ஹணகவி சாதுர்யமாக சகோதரரின் ஏற்றத்தாழ்வை எடுத்துக்காட்ட இவ்வாறு புனைந்துரைத்தாரா என்கிற முக்கியமான கேள்வி எழுகின்றது. ராஜ்யத்தின்பொருட்டாக நெடுங்காலம் பிரயாசைப்பட்டு அதன் அபிவிருத்தியையே நாடின ஆகவமல்லன் வல்லமைவாய்ந்த இளையவனையே இளவரசாக்க இசைந்திருப்பானென்பது ஒருக்காலும் அசம்பாவிதமாகாது. ஆகவமல்லன் கேட்டதுண்மையாயின் விக்கிரமாதித்தன் மறுத்ததும் உண்மையேயாம். ஏனெனில் ஆகவமல்லனுடையகாலமுழுதும் சோமேசுவரனே யுவராஜனாகவிருந்து தந்தைக்குப்பின் தம்பியால்யாதொருதடையுமின்றிச் (13) சிங்காதனமேறினான். ராஜ்யம் என்றால் சகோதரர் சண்டையிட்டேதீரவேண்டுமா? (14) அல்ல.

13. 3 - ம் பாகம் பார்க்க.
14. அல்ல என்பதற்கு, சிலப்பதிகாரம் பார்க்க.
    "வேள்விச்சாலையின்வேந்தன்பெயர்த்தபி
    னியானுஞ்சென்றேனென்னெதிரெழுந்து
    தேவந்திகைமேற்றிகழ்ந்துதோன்றி
    வஞ்சிமூதூர்மணிமண்டபத்திடை
    நுந்தைதாணிழலிருந்தோய்நின்னை
    யரசவீற்றிருக்குந்திருப்பொறியுண்டென்
    றுரைசெய்தவன்மேலுருத்துநோக்கிக்
    கொங்கவிழ்நறுந்தார்க்கொடித்தேர்த்தானைச்
    செங்குட்டுவன்றன்செல்லனீங்கப்
    பகல்செய்வாயிற்படியோர்தம்மு
    னகலிடப்பாரமகலநீக்கிச்
    சிந்தைசெல்லாச்சேணெடுந்தூரத்
    தந்தமிலின்பத்தரசாள்வேந்தென்
    றென்றிறமுரைத்தவிமையோரிளங்கொடி
    தன்றிறமுரைத்ததகைசானன்மொழி
    தெரிவுறக்கேட்டதிருத்தகுநல்லீர்".

30. வரந்தருகாதை. 170 - 185 வரி.

**தந்தைக்குத்துணையாக விக்ரமாதித்தன்காட்டிய போர்த்திறமை.**

சோமேசுவரன் இளவரசனானாலும் ராஜ்யபாரத்தைப்பெரும்பாலும் விக்கிரமாதித்தனே வகித்துவந்தான். எல்லாச்சண்டைகளுக்கும் அவனையே ஆகவமல்லன் அனுப்பினான். பலமுறை சோழனைப் புறங்காட்டச்செய்து தென் கடற்கரைவரையில் வந்து மலயமலையைக் கைக்கொண்டு தன்னிடமடைக்கலம்புகுந்த மாளவ அரசனுக்கு அந் நாட்டை மீட்டு அளித்து, கௌட (வங்காளம்) காமருப (அஸ்ஸாம்) தேசங்களுக்குச்சென்று கிழக்குத்தொடர்ச்சிமலையைக்கடந்து காஞ்சியைத்தாக்கி மலையவனத்தையழித்துக் கேரளவரசனைத்தோற்கச் செய்து சோழநாட்டுராஜதானியாகிய கங்கைகொண்டசோழபுரத்தைக்கைப்பற்றி வேங்கிக்கும், சக்கரகொட்டத்திற்கும் சென்று கிருஷ்ணாநதிக்கரைக்கு விக்கிரமாதித்தன் திரும்பிவருமளவில் தந்தையாகிய ஆகவமல்லன் இறந்தசெய்தியைக்கேட்டானென்று பில்ஹணகவி (15) வருணித்திருக்கிறார்.

சற்றேறக்குறைய இருபத்தைந்துவருஷங்களடங்கிய மேற்கண்ட வரலாற்றின் வரிசையை நிர்ணயிப்பது கூடாததாகுமென்று டாக்டர் பூலர் கருதியபோதிலும் (16) பின்பு வெளிவந்த சோழசாசனங்களைக் கொண்டு ஒருவாறு நிச்சயிக்கலாம்.

**முதன்முறை சோழரைத் தாக்கியது.**

முதன்முறை சோழநாடு மலயநாடுகளில் விக்கிரமாதித்தன் பிரவேசித்தது கி. பி. 1047 ஆகும். இது அவ்வருஷத்திய ராஜாதிராஜனுடைய சாசனத்தில் (17) 'திண்டிறல் விருதர் விக்கி' என்பதனால் அறியக்கிடக்கின்றது.

"குணவாயிற்கோட்டத்தரசுதுறந்திருந்த
குடக்கோச்சேரலிளங்கோவடிகட்கு"

பதிகம் - 1 - 2 - வரி.

15. விக். சரி. III. & IV.
16. பூலர் பதிப்பு.
விக். சரி. முகவுரை. 31. N. 3.
17. S. I. I. III. 56.



**மாளவ அரசனுக்குச் செய்த உதவி.**

விக்கிரமாதித்தனுடைய உதவியால் ராஜ்யத்தையடைந்ததாகப் பில்ஹணர் கூறியிருக்கும் மாளவ அரசன் யாவன்? எப்போது? எக்காரணத்தைக் கொண்டு அவ்வரசன் விக்கிரமாதித்தனுடைய உதவியைநாடினான். கி. பி. 1055-6 ஆம் வருஷத்திய பிரமாரகுலத்து மாந்தாதா சாசனத்தில் (18) மாளவ தேசத்தரசனாகிய ஜயசிங்கன் போஜதேவனுடையதிருவடிகளைத் தியானித்துக்கொண்டிருப்பதாகச்சொல்லப்பட்டிருப்பதால் தாராநகரத்து, போஜராஜன் கி.பி. 1055-க்கு முன்னமிறந்திருத்தல்வேண்டுமென்பது தெளிவாகிறது. (19) போஜன் புத்திரனின்றிஇறந்ததும் அக்காலத்துப் பிரபலவீரனும் சேதிதேசத்தரசனுமாகிய கர்ணன் கூர்ஜரதேசத்தரசனான பீமதேவனுடன்சேர்ந்து மாளவதேசத்தையெதிர்த்து தாராநகரத்தை இருபுறமுந்தாக்கிவளைக்கவே (20) போஜனது உறவினனாகிய ஜயசிங்கன் தன்னந்தனியனாய் நாட்டைக்காப்பாற்றச் சக்தியற்றவனாகி ஆகவமல்லனைத் தனக்குஉதவிபுரியவேண்டினான். ஆகவமல்லனும் மாளவதேசத்திற்கு விரோதியான சேதி கூர்ஜர அரசர்கள் ஒன்றுசேர்ந்தால் தன் நாட்டின் வடஎல்லைக்கே நாளடைவில் பலக்

18. Epi. Ind. IV. 46-48. காலஞ்சென்றவரசர்களின் திருவடியைத் தியானிப்பதாகச்சொல்லிக்கொள்வது பிரமாரகுலத்துஅரசரின்வழக்கம்.

19. டாக்டர் பூலர் விக். சரி. முகவுரை 23-ம் பக்கத்து முதற்குறிப்பில் போஜன் 1063-5 வரையிலும் கூட மாளவத்தை யாண்டிருக்கலாமென்றும் பில்ஹணகவி நேரில் அவனைப்பார்க்கவில்லை யென்றாலும் வேண்டுமானால் பார்த்திருக்கக்கூடுமென்றும் சொல்லியிருக்கிறார். இதற்குப்பூலர்கூறும் ஆதாரம் விக். சரி. XIII. 96-ம் சுலோகம். ஆனால் இச்சுலோகத்தில் பில்ஹணன் போஜனைப் பார்க்கப்போனபோது தாராநகரே அழுதுகொண்டிருந்ததென்று சொல்லப்பட்டிருப்பதால் போஜன் இறந்துவிட்டானென்பதே பொருளன்றி டாக்டர் பூலர் கொள்ளுமாறு அவன் ஒரு பாசறைக்குச்சென்றிருந்தானென்று பொருள் கொள்ள இடமில்லை. அன்றியும் போஜனைப்போன்ற கவிகளை யாதரிப்பவன் (கவிபார்த்தவன்) வட இந்தியாவில் அப்போது இருந்திருந்தால் பில்ஹணகவி தக்ஷிணத்திற்கு வர நேர்ந்திராது. மேலும் கி. பி. 1055—6க் கப்பால் போஜன் மாளவத்தை யாண்டிருக்க முடியாதென்று மேற்சொன்ன மாந்தாதாசாசனத்தால் நிச்சயமாக விளங்குகிறது.

20. உதயபூர் பிரசஸ்தி Epi. Ind. I. மேருதுங்கன் பிரபந்த சிந்தாமணி,

குறைவாகுமென்றெண்ணிச் சேதிநாட்டைத்தாக்க, கர்ணன் மாளவத்தினின்றும் பின்னிடைந்தான். இதோடுநில்லாமல் ஆகவமல்லன் தன் மகனான விக்கிரமாதித்தனையும் மாளவத்திற்கனுப்ப அவனும் அதுவரையில் கர்ணனுக்கு எதிராக ஜயசிங்கன்பக்கலிலிருந்து போர்புரிந்துவந்த உதயாதித்யனோடு (21) சேர்ந்து ஜயசிங்கனை மாளவத்தில் நிலைநிறுத்தினான். ஜெயசிங்கன்இறந்தபின் உதயாதித்யன் மாளவத்தையாண்டான்.

கௌடகாமரூபங்களுக்குச் சென்றது.

விக்கிரமாதித்தன் இவ்வாறு மாளவத்திலிருந்து திரும்புகையில் கௌடகாமருபதேசங்களுக்கும் சென்றிருக்கலாம்.

இரண்டாமுறை சோழரைத் தாக்கியது.

கி. பி. 1053-4 இல் சோழருக்கும் சளுக்கியருக்கும் கொப்பத்தில் நடந்த கடுஞ்சண்டையில் ராஜாதிராஜன் கொலையுண்டு அவன் தம்பியாகிய ராஜேந்திரதேவன் 'போர்க்களத்திலேயே முடிகவித்தானென்று' முன்னமே (22) சொல்லியிருக்கிறோம். பிறகு கி. பி. 1062 வரையில் ராஜேந்திரதேவன் அரசாண்டுவந்தான்.

(தொடரும்.)

அ. வா. வெங்கடராமய்யர்,

இராஜாங்க கலாசாலை, கும்பகோணம்.

---

21. Epi. Ind. II. 192. நாகப்பூர் சாசனம்.
303. காசி சாசனம்.

22. முதற்பாகம்.

2 DEC ... MADRAS.

# பல்லவசரித்திரம்.

(G Jouvean Dubrenil அவர்களது The Pallvas என்ற அரிய நூலிலிருந்து அவர்களது அநுவாதத்துடன் மொழிபெயர்க்கப்பெற்றது.)

## அத்தியாயம் 1.

பல்லவர்களின் ஆதிசரித்திரத்தை அறிவதற்குப் பெரிதும் உபகாரமான ஒரு லிகிதம் கிருஷ்ணாநதியின் தென்கரையோடு பரவியிருக்கிற குண்டூர் ஜில்லாவில் 'நரஸராவ்' பேட்டைக்கு 12-மைலுக்கப்பாலுள்ள 'மயிதவோலு' கிராமத்தில் கிடைத்திருக்கின்றது. அதற்குச் சரித்திரகாரர் விரிபரசாஸனம் எனப்பெயர்வழங்குகின்றனர். பல்லவ வமிசத்தையும் பாரத்வாஜ கோத்திரத்தையும் சேர்ந்தவனான சிவஸ்கந்தவர்மன் என்னும் யுவமகாராஜன், தன் தந்தை அரசாட்சியின் பத்தாவது வ்ருஷத்தில் (தந்தையின் பெயர் இன்னதென்று தெரியவில்லை) தன் ராஜதானியாகிய காஞ்சீபுரத்திலிருந்து ஆந்திராபத ப்ராகாணத்திலுள்ள விரிபரகிராமத்தைப்பற்றி தஞ்ஞகட "கவர்னர்" களுக்கு ஒரு உத்தரவு அனுப்பினான். (Ep. Ind. Vol. VI. Page 84.)

இந்த ராஜகுமாரன் பல்லவவமிசத்தைச்சேர்ந்தவன் என்பது திண்ணம். ஏனென்றால் சிவஸ்கந்தவர்மன் காஞ்சியில் வசித்தானென்றும் அவன் பல்லவவமிசத்தையும் பாரத்வாஜகோத்திரத்தையும் சேர்ந்தவன் என்றும் அந்தச் சாஸனத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தச்சாஸனங்கள் குண்டூர் ஜில்லாவில் கண்டெடுக்கப்பட்டதனாலும் அது எந்தக்கிராமத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்தக்கிராமம் ஆந்திராபதத்தில் இருந்ததனாலும் உத்தரவு அமராவதி பட்டணமாகிய தஞ்ஞகட "கவர்னர்" களுக்கு அனுப்பப்பட்டதனாலும் இக்காலத்திய பல்லவராஜாக்கள் காஞ்சிமாகாணமாகியதொண்டைமண்டலத்தில்மட்டுமன்றி கிருஷ்ணாநதிக்கரைவரையிலுள்ள நாட்டிலும் அரசுசெலுத்தி

னார்கள் என்று உறுதியாகக் கூறலாம். கிருஷ்ணாநதிக்கரையிலுள்ள இந்நாட்டில் ஆந்திரர்கள் வசித்து வந்திருந்தனர். அமராவதிப்பட்டணமும் அந்த நாட்டிலேயே இருந்தது. இரண்டாவது நூற்றாண்டின் மத்தியில் இரண்டாவது புளுமாயி என்னும் அரசன் வெண்சலவை ஸ்தூபத்தை அங்கே கட்டினான். அது இப்பொழுது சென்னைப் பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறாகப் பல்லவர்கள் ஆந்திரர்களுக்கப்பால் கிருஷ்ணாநதிக் கரையிலுள்ள நாடுகளை ஆண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு எவ்வளவுகாலத்துக்கப்பால்? எந்தச் சமயத்தில்? என்பனவே அறிய வேண்டியவைகளாக இருக்கின்றன.

இரண்டாவது புளுமாயி, மேலேசொன்ன பெயர்பெற்ற ஸ்தூபத்தைக்கட்டிய சிறிது காலத்துக்குப்பின்னரே சிவஸ்கந்தவர்மனுடைய தந்தை அநேகமாய் அமராவதிப்பட்டணத்தை ஆண்டிருக்கவேண்டுமென்று நாம் இப்பொழுது காட்டுவோம்.

விரிப்ரகிராமத்தின் தானப்பிரமாணத்தில் ராஜாவின் அரசாட்சி வருஷத்தின் தேதியே பொறிக்கப்பட்டிருக்கிறது. எனினும் ஒப்பிட்டு நோக்க வேறு ஏதேனும் விஷயங்கள் இருந்தால், அது பொறிக்கப்பட்டிருக்கும் அக்ஷரங்களின் உதவியினால் தேதியை ஒருவாறு குறிப்பிடலாம். இதற்கநுகூலமாய் ஒப்பிட்டு நோக்கத்தக்க சில பிரமாணங்கள் இருக்கின்றன. குண்டூர்ஜில்லாவில் தென்னாலித்தாலூகாவிலுள்ள கோண்டமுதிக்கிராமத்தில் கிடைத்த சாஸனங்களில் பொறிக்கப் பெற்ற எழுத்துக்களாலேயே மயிதவோலு சாஸனங்களும் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. பாஷைநடையிலும் பதஅமைதியிலும் கொண்டமுதிப்பிரமாணமானது கோதமீபுத்ரசாதகர்ணியின் "கார்லே" லிகிதத்தையும் வாசிஷ்டிபுத்ர புளுமாயியின் "நாஸிக" லிகிதத்தையும் மிக ஒத்திருப்பதனால் அவைகளில் அதிக வித்தியாசமிருக்க இடமில்லை.

"மயிதவோலு" சாசனங்களைவெளியிட்ட சிவஸ்கந்தவர்மன் என்னும் பல்லவஅரசன்காலத்திலேயே அவனும் ஜீவித்திருந்திருக்க வேண்டுமென்று இந்த லிகித அக்ஷரங்களால் ஊகிக்கலாம்.

அன்றியும் அந்த லிகிதத்தின் பாஷைநடையும் பதஅமைதியும் கோதமீபுத்ரசாதகர்ணியினுடையவும் (Nos. 4 & 5) வாசிஷ்டீபுத்ர



புளுமாயியினுடையவும் லிகிதங்களையும் (No. 3) மிக ஒத்திருப்பதனால் ஜயவர்மனுடையகாலம் அவ்விரண்டு ஆந்திர அரசர்களின்காலங்களுக்கும் மிக எட்ட இருக்கமுடியாது. (Bom. Gaz. Vol. XVI. Ep. Ind. Vol. VI. No. 31. P. 315) அன்றியும் ஜயவர்மன் சாஸனங்களுக்கும் 19-ஆவதுநம்பர் கார்லே லிகிதத்துக்கும் (A. S. W. I. Vol. IV. P. 112.) உள்ள மிக நெருங்கிய ஒற்றுமையும் இதை வற்புறுத்துகின்றது. அமராவதிப்பட்டணத்திலுள்ள ஸ்தூபத்தைக்கட்டியது வாசிஷ்டீபுத்ரபுளுமாயியே என்று நாம் கொள்வோமானால் மயிதவோலுசாஸனங்களைக்கொத்துவித்த சிவஸ்கந்தவர்மன்தந்தையாகிய பல்லவ அரசன் புளுமாயி இரண்டாவானுக்குச் சிறிதுகாலத்துக்கப்பால் அமராவதியில் அரசாட்சிசெய்தான் என்று நாம் துணியலாம்.

இந்தப்புளுமாயியின் மகன் கி. பி. 177 முதல் 184 வரை சிவஸ்கந்தவர்மன் என்ற பெயருடன் அரசாண்டிருந்தான். பல்லவ அரசன் மகனுக்கும் அதுவே பெயராக இருக்கின்றது. இவ்விருவர்பெயரும் ஒற்றுமையாயிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

இவ்வொற்றுமைக்குக்காரணம் என்னவெனில் பல்லவ அரசன் சிவஸ்கந்தசாதகர்ணியின்மகளை விவாகம் செய்திருக்கவும், பல்லவ இளவரசன் இந்துக்களின் வழக்கப்படி தன் பாட்டனாகிய ஆந்திர அரசன் பெயரைப்பெற்றிருக்கவும் கூடும்.

ஊகங்களைப்பற்றிமட்டுமே நாம் இப்பொழுது சிந்தனைசெய்கின்றோமாகையால் பல்லவர்களின் பாரஸீக உற்பத்தியைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுவோம்.

இரண்டாவதுபுளுமாயியின்தந்தை பஹ்லவர்களோடுபொருதான். இந்தப்புளுமாயியே ருத்ரதாமன் என்ற க்ஷத்ரபனோடு சண்டைசெய்து கஷ்டப்பட்டவன். ருத்ரதாமன் கி. பி. 150-க்கிடையே ஸுவிசாகன் என்ற ஒரு பஹ்லவனை மந்திரியாக வைத்திருந்தான். (Ind. Ant. VII. 257. Junagadh Inse.) பெயர்களின் ஒற்றுமையைநம்பி ஆந்திரர்களோடு போர்புரிந்த இந்தப் பஹ்லவர்களே கிருஷ்ணாநதிக்கும் பாலாற்றுக்கும் இடையில் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தி, பல்லவவம்சத்தை ஸ்தாபித்தார்கள் என்று சில ஆசிரியர்கள் எண்ணுகிறார்கள்.

நுட்பமாய் ஆராய்ந்துபார்த்தால் இவ்விதி பல மாறுபாடுகளுக்கு இடந்தருகின்றது. திருஷ்டாந்தமாக, சிவஸ்கந்தவர்மன் தந்தைக்கும் அதே பெயருடைய ஆந்திர அரசன்மகளுக்கும் நடந்ததாக எண்ணப்படும் விவாகத்தைப்போன்ற விவாகசம்பந்தத்தாலேயே ஆந்திர ராஜ்யத்தின் ஒருபாகத்தைப்பெற்றார்களேயன்றி, ஜெயத்தினால் பெறவில்லையென்று நாம் எண்ணலாம். ஆந்திரர்களுக்கும் மற்றவமிசத்தவர்களுக்கும் இதுபோன்ற விவாகங்கள் நடைபெற்றிருக்கின்றன. இரண்டாவதுபுளுமாயி ஒரு பஹ்லவனை மந்திரியாக வைத்திருந்த ருத்ரதாமன் மகளை மணந்தானென்று நமக்குத்தெரியுமே. இந்த ஊகங்களெல்லாம் யுவமகாராஜ சிவஸ்கந்தவர்மன், சிவஸ்கந்த சாதகர்ணிஎன்ற பெயர்களுக்கும், பஹ்லவர் பல்லவர் என்ற பெயர்களுக்கும் உள்ள ஒற்றுமைகளையே ஆதாரமாகப்பெற்றிருக்கின்றன. ஆகையால் இவை விவாதங்களுக்கு இடந்தருகின்றன.

நமக்கு நிச்சயமென்று எண்ணக்கூடியதெல்லாம் மயிதவோலு சாஸனங்கள் செதுக்கப்பட்டபொழுது அமராவதியில் அரசுபுரிந்த பல்லவ அரசன் அமராவதியில் ஸ்தூபங்கட்டின இரண்டாவது புளுமாயிக்குச்சிறிதுகாலத்துக்குப்பின் வாழ்ந்திருந்தான் என்பதே. ஆனால் எவ்வளவுகாலத்துக்குப்பின் என்று திட்டமாகச்சொல்லவும் முடியாது. ஆந்திரவமிசம் கி. பி. 236-க்கு அணித்தாக முடிவுபெற்றது. பல்லவர்கள் ஆந்திரர்களுக்குப்பின் அமராவதியில் இதற்கு மிக முன்னரே அரசாளவில்லையென்றும் அக்காலத்தில் மிகவும் குறுகின ராஜ்யத்தை உடைத்தாயிருந்த ஆந்திரக் கடைஅரசர்களின் ஸமகாலத்தவனாக சிவஸ்கந்தவர்மன் இருக்கவில்லையென்றும் காட்ட ஆதாரமொன்றுமில்லை. அப்படியானால் மயிதவோலுசாஸனங்கள் கி. பி. 200-க்கு அணித்தாகச்செதுக்கப்பெற்றிருக்கலாம். கி. பி. 236-க்கு அப்பால் பல்லவர்கள் ஆந்திரராஜ்யத்தை ஆண்டார்கள் என்று கொள்வோமானால் அவ்வாறு அரசாண்டது கி. பி. 236-க்கு ஸமீபமாகத்தான் இருந்திருக்கவேண்டும். ஏனென்றால் மயிதவோலுசாஸனங்களுக்கும் கோண்டமுதியில் கண்டெடுக்கப்பெற்ற ஜெயவர்மன் சாஸனங்களுக்கும் உள்ள ஒற்றுமை மிக நெருக்கமாக இருப்பதனால் சிவஸ்கந்தவர்மனுக்கும் இரண்டாவதுபுளுமாயிக்கும் இடையே உள்ள காலம் ஒரு நூற்றாண்டுக்குமேல் இருந்திராது. ஆகையால் பல்லவ அரசர்கள்



கி. பி. மூன்றாவது நூற்றாண்டின் முற்பகுதியில் அதாவது ஸ்தூபம் கட்டப்பட்டதற்கு 50 வருஷங்களுக்குப்பின் அமராவதியில் அரசாண்டிருந்தார்கள் என்று நாம் துணியலாம். இவ்வரசர்கள் மிக விரிவான ராஜ்யத்தை ஆண்டிருந்தார்கள். அவர்களது ராஜ்யம் பாலாற்றங்கரை முதல் கிருஷ்ணாநதிக்கரைவரை பரவியிருந்தது. ஆகையால் அவர்கள் மிகச் சக்தியுடையவர்களாகவும் பெயர்பெற்றவர்களாகவுமிருந்தார்கள்.

## அத்தியாயம் II.

### வாயலூர்ச்சாஸனம்.

மயிதவோலுவில் கண்டெடுக்கப்பட்டசாஸனம் பிராகிருதபாஷையில் எழுதப்பெற்றிருக்கிறது. அதைப்போன்ற வேறிரண்டு சாஸனங்களும் இருக்கின்றன. ஆனால் மற்றப் பல்லவசாஸனங்கள் எல்லாம் ஸம்ஸ்கிருதபாஷையில் எழுதப்பெற்றவை. முற்கூறப்பட்டவையே மிகப்புராதனமானவையென்றும் மூன்றாவதுநூற்றாண்டில் பொறிக்கப்பெற்றவை யென்றும் கொள்ளலாம். இவ்விரண்டுசாஸனங்களில் ஒன்றான ஹீரஹடகல்லி சாஸனம் (Ep. Ind. Vol. I. P. 2.) பல்லவ வமிசத்தவனும் பாரத்வாஜ கோத்திரத்தவனுமான காஞ்சி அரசன் சிவஸ்கந்தவர்மனது 8-ஆவது ஆண்டில் தோன்றியது. தன் தந்தையாகிய பப்பதேவன் செய்த தானத்தை சிவஸ்கந்தவர்மன் இந்தச்சாஸனத்தினால் உறுதிப்படுத்துகிறான். மயிதவோலு தானம் நிகழ்ந்தகாலத்து யுவமகாராஜனாக இருந்தவனே இந்தச் சிவஸ்கந்தவர்மன் என்று நாம் ஊகிக்கலாம்.

இந்தச் சாஸனம் பல்லவராஜ்யத்தின் விரிவை மிகத்தெளிவாகக் காட்டுகின்றதனால் மிக முக்கியமானதே. பெல்லாரி ஜில்லாவில் கண்டெடுக்கப்பெற்ற இந்தச் சாஸனங்கள் ஸாதாஹனிரட்டம் (அதாவது மாகாணம்) பல்லவராஜ்யத்தின் ஒருபாகமென்று கூறுகின்றன. பெல்லாரி ஜில்லாவின் ஒருபாகம் இதிலடங்கியுள்ளது. ஆகையால் காஞ்சீபுரத்தை ராஜதானியாகவுடைய பல்லவராஜ்யம் சோழமண்டலக்கரையில் கிருஷ்ணாநதியின் ஸங்கமம்வரை மட்டுமன்றி தெக்கணத்தின் மேற்குப்பாகத்தில் துங்கபத்திராநதிக்கரைவரையிலுங்கூடப் பரவியிருந்தது என்று நாம் அறிகின்றோம்.

இவ்விடத்தும் பல்லவர்கள் ஆந்திரர்களுக்குப் பிறகே வந்தார்கள். பெல்லாரிஜில்லாவில் கண்டெடுக்கப்பெற்ற மியாகதோனி சாஸனம் (G. O. No. 99 29th August 1916. Report on Epigraphy for 1915—16.) இரண்டாவது புளுமாயி கி. பி. 140-க்கு ஸமீபத்தில் ஸாதாவஹனிஹாரம் என்ற மாகாணத்தை ஆண்டிருந்தானென்று கூறுகின்றது. இந்த மாகாணம் ஹீரஹடகல்லி தாமிர சாஸனங்களில் கூறப்படும் ஸாதாஹனிரட்டமேயன்றி வேறன்று.

ஆகையால் ஆதியில் பல்லவராஜ்யம் தமிழ்நாட்டைவிடத் தெக்கணத்திலேயே அதிகமாகப்பரவியிருந்தது. காவேரிநதிக்கரைகளும் அதில் உட்பட்டிருந்தன என்பதற்கு ஆதாரம் ஒன்றுமேயில்லை. திரிச்சிராப்பள்ளியை அடுத்த நாடுகள் ஒருக்கால் சோழர்களால் ஆளப்பட்டிருக்கலாம். ஆனால் பெல்லாரிமுதல் பெஜவாடாவரை (அதாவது ஆந்திரராஜ்யத்தின் ஒரு முக்கியபாகத்தை) யுள்ள தேசங்களைப் பல்லவர்கள் ஆண்டார்கள் என்று நமக்குத்திட்டமாய்த்தெரியும். இக்காரணங்களால் பல்லவர்கள் வடதேசத்தவர்கள் என்றும் ஆந்திரவமிசத்து ராஜகுமாரிகளை மணந்து ஆந்திரராஜ்யத்தின் தென்பாகத்தில் ஒருபகுதியை அடைந்தார்கள் என்றும் ஊகிக்க இடமுண்டு.

மற்றச் சாஸனம் குண்டூர்ஜில்லாவில் கண்டெடுக்கப்பெற்றது. (Ep. Ind. Vol. VIII. P. 143.) விஜயஸ்கந்தவர்மனது அரசாட்சிக் காலத்தில் பாரத்வாஜகோத்ரத்தவனான விஜயபுத்தவர்மன் என்ற ஒரு பல்லவ யுவமகாராஜன் மனைவியும், புத்தியாங்குரன் தாயுமாகிய சாருதேவியானவள் தாலூரத்திலுள்ள நாராயணசுவாமி ஆலயத்துக்கு ஒரு தானம் செய்தாள்.

இந்தச் சாஸனங்களின் எழுத்துக்கள் ஹீரஹடகல்லி சாஸனங்களின் எழுத்துக்களை ஒத்திருக்கின்றன.

எனினும் அரசன்பெயர் ஒவ்வாதிருப்பதனால் விஜயஸ்கந்தனும் சிவஸ்கந்தனும் ஒருவனேயென்று திட்டமாய்ச்சொல்லமுடியாது.

குண்டூர் பெல்லாரி ஜில்லாக்களில் கண்டெடுக்கப்பெற்ற மூன்று பிராகிருத சாஸனங்களும் (மயிதவோலு சாஸனம், ஹீரஹடகல்லி சாஸனம், சாருதேவியின் தானசாஸனம்) காஞ்சீபுரத்தவர்களான பல்லவவமிசத்தைச் சேர்ந்த அநேக அரசர்கள் - அதாவது (1) சிவஸ்கந்தவர்மன் யுவமகாராஜாவின் தந்தை (இவனே ஹீரஹடகல்லி சாஸனங்களில் பப்பதேவன் என்று அழைக்கப்படுகிறவன்). (2) யுவமகாராஜன் சிவஸ்கந்தவர்மன் (3) மகாராஜன் சிவஸ்கந்தவர்மன் (4) மகாராஜன் விஜயஸ்கந்தவர்மன் (5) யுவமகாராஜன் விஜயபுத்தவர்மன் (6) அவன் மகன் புத்தியாங்குரன் (இரண்டாம்மூன்றும்பெயர்க்காரர் ஒருக்கால் ஒருவராக இருக்கலாம்) முதலியோர் மூன்றாவது நூற்றாண்டிடையில் தொண்டைமண்டலத்தை மாத்திரமன்றி கிருஷ்ணா துங்கபத்திரை நதிக்கரைகளையடுத்த நாடுகளையும் (அதாவது தெலுங்கநாட்டின் மிகுதிப்பாகத்தையும்) ஆண்டார்கள் என்று காட்டுகின்றன.



அலகாபாத் ஸ்தூபியில் பொறிக்கப்பெற்ற லிகிதத்தினால் ஸமுத்ரகுப்தன் என்ற பெயர்பெற்ற சக்கரவர்த்தி காஞ்சியரசனாகிய விஷ்ணுகோபனை கி. பி. 340-க்கு ஸமீபகாலத்தில் ஜெயித்தானென்று தெரிகிறது. விஷ்ணுகோபன் பல்லவன் என்றும், ஸமுத்ரகுப்தன் தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிவரையிலும் வந்தானென்றும் சில ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

இறுதியில் கூறப்பட்ட முடிவு சரியல்லவென்று நான் எண்ணுகிறேன். ஸமுத்ரகுப்தன் ஒரு பொழுதும் தமிழ்நாட்டில் பிரவேசிக்கவில்லை யென்றும், ஆனால் விஷ்ணுகோபன் பல்லவனே யென்றும் நான் நம்புகிறேன். காஞ்சியரசர்கள் கிருஷ்ணாநதிக்கரையிலுள்ள நாடுகளையும் ஆண்டார்கள் என்று நமக்குத்தெரியும். ஆகையால் நான் அடியில் கூறுகிறபடி நேர்ந்திருக்கவும் கூடும். அதாவது ஸமுத்ரகுப்தன் வட இந்தியாவிலிருந்து வந்து பீடாபுரத்திலும் மகேந்திரகிரியிலும் கோட்டூரத்திலும் அரசாண்ட அரசர்களைத் தோற்கடித்ததனால் அவன் கோதாவரிக்குத் தெற்கிலும் செல்லத்தொடங்குவதைக் கண்டவுடன் கொல்லேரு ஏரியண்டை ஆண்டிருந்த மண்டராஜனும் அவன் அயலானான வெங்கீயரசனும் கிருஷ்ணாநதியின் தென்கரையை ஆண்ட காஞ்சியரசனான விஷ்ணுகோபனும் அவனது அயலானான பாலக்கராஜன் உக்கிரஸேநனும் ஒன்று சேர்ந்து தடுக்க முயன்றிருக்கலாம். ஆனால் அவனே வெற்றியடைந்ததாக அவன் கூறுகின்றான். அவன்மொழிக்கு எதிரிடையான தெளிவுகள் ஏற்படும்வரை நாம் அவன் வார்த்தையை நம்பவேண்டியவர்களே.

அது எப்படியாகுலும் ஆகட்டும். முன்னேறிச்செல்வதற்குக் கஷ்டமான தென்னாட்டில் ஸமுத்ரகுப்தன் பிரவேசிக்கத்துணியாது வடதேசத்துக்குத் திரும்பிச் சென்றிருக்கலாம்.

நாம் இப்பொழுது ஸம்ஸ்கிருதசாஸனங்களைப் பரிசோதனை செய்வோம்.

### 5. தாம்பிரசாஸனங்கள்.

1. ஓம்கோடு No. 1. (G. O. No. 99 29th August 1916 Part II. No. 3.)
2. உருவுபள்ளி (Ind. Anti. Vol. V. Page 50.)
3. ஓம்கோடு No. 2. (G. O. No. 99 29th August 1916 Part II. No. 4.
4. பிகிரி (Ep. Ind. Vol. VIII. P. 159.)
5. மாங்களூர் (Ind. Anti. Vol. II. P. 154.)

இந்தச் சாஸனங்களிலிருந்து கீழ்வரும் வம்சாவளி பெறப்படுகின்றது.

குமாரவிஷ்ணு
|
ஸ்கந்தவர்மன் I
|
வீரவர்மன்
|
ஸ்கந்தவர்மன் II
|
யுவமகாராஜன் விஷ்ணுகோபன்
|
ஸிம்ஹவர்மன்

இந்த ஆறு அரசர்களும் பல்லவ வமிசத்தையும் பாரத்வாஜ கோத்திரத்தையும் சேர்ந்தவர்கள். அவர்களது ராஜதானி காஞ்சீபுரம் என்று ஸ்தாபிக்கப்பிரமாணம் ஒன்றுமேயில்லை.

(தொடரும்.)

பண்டிதர் S. முத்துசுவாமிப்பிள்ளை.

# இந்துதேசசரித்திரகாலக்குறிப்புகள்.

## (Chronological Notes of Indian History.)

"செந்தமிழ்" தொகுதி கரு - பகுதி அ - ன், சஉ0-ஆம்பக்கத்தொடர்ச்சி.

1452. லுங்கர் மதம் ஸ்தாபனமாயிற்று. இது க்ஷமணமதத்தின் ஓர் பிரிவு.

1458. (சகம் 1380) ஜயவீரசிங்கமஹாராஜனுக்கும், கண்டி மன்னனான புவனேகபாஹுவுக்கும் முத்துச்சலாபம் விஷயமாய் நடந்த யுத்தத்தில் கண்டிராஜன் தோல்வியடைந்தான்.

1463-1506. ஜடில அழகன் பராக்ரமபாண்டியன்.

1469-1529. மாகியவல்லி. இதாலிதேசத்து ராஜநீதிசாஸ்திரி.

1469-1538. நாநக். சிக் மதஸ்தாபகன். கபீர்தாஸருடைய சிஷ்யர். 1469 சித்திரைமீ லாகூர்ஜில்லா தலவண்டிகிராமத்தில் பிறந்தார்.

1473. ஸ்தானகவாஸிகள் என்ற ஓர் க்ஷமணமதப்பிரிவு ஸ்தாபனமாயிற்று. விக்ரஹ ஆராதனை கூடாது என்பது இவர்கள் கொள்கை.

1. திகம்பரர்,
2. சுவேதம்பரர்,
3. ஸ்தானகவாஸிகள்,

} க்ஷமணமதப்பிரிவுகள்.

1474. தக்ஷிணத்தில் பஞ்சம்.

[Ferishta.]

1478-1504. புருஷோத்தமதேவன். ஒரிஸாவில் ஆண்ட கங்கவம்சத்தரசன். கஞ்சிமன்னன் தன் புதல்வியை இவனுக்கு விவாகம் செய்விக்கமாட்டேனென்றான். புருஷோத்தமன் படையெடுத்துச்சென்று கஞ்சிராஜனைவென்று அவன் மகளைச்சிறைகொண்டுவந்து மணம்புரிந்தான்.

இவர் பிறப்பிடம்— வடக்கே கிருஷ்ணமதுரைக்கு அடுத்த தேவவனம் எனும் கிராமம்.

1503. (சகம் 1425) நரசிம்மநாயக்கர் என்ற சேனாபதியின் மரணம். அவர்மகன் வீரநரசிம்மன் பட்டத்துக்கு வந்து 1508-ம்௵ வரை ஆண்டான்.

1504-1532. ப்ரதாபருத்ரதேவர். ஒரிஸாவில் ஆண்ட கங்கவம்சத்தரசன். சைதந்யர் ஷை தலைநகராகிய ஜகந்நாதம் சென்று ப்ரதாபருத்ரனை வைஷ்ணவமதத்தில் சேர்த்தார். ப்ரதாபருத்ரன் ஜயபுரத்தில் வராஹர் ஆலயம் நிர்மாணம் செய்தார்.

1508-9. (மாக்சுக்ல சதுர்த்தசி) கிருஷ்ணதேவர் பட்டாபிஷேகம்.

இவர் காலத்தவர்—

தாதாசார்யலு. இவ்வரசாட்சியில் மிகச்செல்வாக்கும் பெருமையும் அடைந்தார். வட ஆர்க்காடுஜில்லா விரிஞ்ஜிபுரத்தில் பிறந்த அப்பயதீக்ஷிதருக்கும் இவருக்கும் விசேஷ ஸம்வாதம் நேர்ந்தது.

[1906 I. R. 886.]

1508. மண்டலபுருஷர். க்ஷமணசந்யாசி. விஜயநகரம்கிருஷ்ணதேவராயர்காலத்தவர். சூடாமணிநிகண்டு என்பதை இயற்றியவர்.

—[ஷை அத். 9. செய்யுள் 10.]

1510. அல்பூகர்க் என்பவர் கோவா என்னும் (போர்த்துகீசத்) தலைநகரை ஸ்தாபித்தார்.

1512. கோல்கோண்டா ராஜ்யம். குதுப்ஷா என்பவரால் ஸ்தாபனம் ஆயிற்று. 1688-ல் தில்லிராஜ்யத்துடன் சேர்ந்துவிட்டது.



1518. (விக்கிரம 1575) மாகமீ சுக்லபக்ஷ ஏகாதசி. கபீர்தாஸ் மரணம். கோரக்பூருக்கு அடுத்த மாகர் என்ற இடத்தில்.

1524. வீரகவிராயர். நல்லூர்வர்வி. (1212 செய்யுள் அடங்கிய) ஹரிச்சந்திரபுராணம் இயற்றியவர்.

1524. லக்ஷ்மணபட்டர் புதல்வரான ராமசந்திரகவி, 'ரஸிகரஞ்ஜனம்' என்ற ஸம்ஸ்கிருதகாவியமும், ரோமாவளி சதகமும் இயற்றினர்.

1526. (சகம் 1448=தாருண௵) ஜேஷ்டமீ சுக்லபக்ஷ ஷஷ்டி கிருஷ்ணதேவராயர் மரணம்.

—[தெலுங்குச்செய்யுள்.]

1526. பாணிப்பேட் யுத்தம். பேபர் என்ற முகல் சக்ரவர்த்தி இப்ராஹீம் லோடி என்பவரை ஜயித்தார்.

1528-1599. ஏகநாதர். மஹாராஷ்ட்ர பாகவதர்.

1530. கிருஷ்ணதேவர் மரணம். (ஏப்ரல்மீ 23உ)

[Sewall's Forgotten Empire.]

1530. (சகம் 1452) அச்சுததேவர் பட்டாபிஷேகம். 1542 வரை ஆண்டார்.

1532-1623. துளஸீதாஸ். ஹிந்திபாஷையில் ராமாயணம் இயற்றியவர். குருபரம்பரையில் ராமானந்தர்முதல் துளஸீதாஸ் 7 - ஆமவர். ராமானுஜரிலிருந்து ராமானந்தர் 5 - ஆமவர்.

1533. சிலைலிபி. இதில் வரையப்பட்டிருக்கும் சுலோகம் ஒன்று மல்லிநாதருடையது.

அதாவது:—

*"அந்தராயதிமிரோபசாந்தயே*
*சாந்தபாவனமசிந்த்யவைபவம்,*
*தம்நரம்வபுஷிகுஞ்சரம்முகே*
*மன்மஹேமஹிமபிதுந்திலம்மஹ:".*

1533. (விக்ரம. 1589.) விதக்தமாதவம். 7 அங்கநாடகம் ஸம்ஸ்கிருதம். சைதன்யர் சிஷ்யரான ரூபர் இயற்றினர்.

1534-1543. ஸ்ரீவல்லபன். (குலசேகரபாண்டியன்.) ஆகவராமன் மகன். விஜயநகர அரசனன அச்யுதராயர் உதவியால் 1534 - ல் பட்டத்துக்குவந்தான். "பாண்டியராஜப்ரதிஷ்டாபனசாரியார்" எனப்பட்டமும்பெற்றார்.

1534. கல்ஹரூபதேவ (ஒரிஸாவில் ஆண்ட கங்கவம்சக் கடைசியரச)னைக்கோவிந்தவித்யாதரன்கொலைசெய்துவிட்டு, அப்பட்டத்தையும் அபகரித்துக்கொண்டான்

1540. வாராங்கல். மஹமதியரால் பாமினிராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது.

1543-1552. பராக்ரமகுலசேகரன்– அபிராமனுடையபுதல்வன்.

1546. ட்ரேண்ட் என்ற இடத்தில் நடந்தமஹாசபை. ரோமன்காதலிக் மதத்தாரின்கொள்கைகள் ஒருவாறாய்நிர்ணயிக்கப்பட்டன.

1551-1559. முகுந்ததேவன். ஒரிஸாவிலாண்ட கங்கவம்சக்கடைசி அரசன். 1559-ல் ஜயபுரத்துக்கருகில் நடந்த சண்டையில், காலபஹர் என்ற மஹமதியசேனைத்தலைவனால் தோல்வியடைந்து இறந்தான். இவனுடன் கங்கவம்சமும் ஒரிஸாவில் ஹிந்துக்கள் ஆட்சியும் அற்றுப் போயின.



1552. (சகம் 1474)-1564. சாலீவாடிபதி. அபிராமபராக்ரம பாண்டியனுடைய 2-ஆம் குமாரன். தென்காசியில் பட்டாபிஷேகம் செய்விக்கப்பெற்றான்.

[T. A. S. (I)]

நெல்வேலிப்பெருமாள்
[=சாலீவாடிபதி]
(1552-1564)

அதிவீரராமன். (1564—1596) | ஸ்ரீவல்லபன்.

1556-1605. அக்பர். தில்லியில் ஆண்ட முகல்சக்ரவர்த்தி.

1557. சித்தூர் பாழாக்கப்பட்டது.

1559-1563. விசுவநாதநாயக்கர். விஜயநகரத்தரசர் ப்ரதிநிதியாய் மதுரையில் ஆண்டவர். மதுரை நாயக்கர்வம்ச முதல் அரசர்.

1559. ஜயபூர் சண்டை. (1551-ஐப்பார்க்கவும்.)

1559. பண்டிதராஜ ஜகந்நாதகவி. ஆந்த்ரதேசம். தைலங்க வம்சத்தில் பிறந்த அந்தணர். இவர்தந்தை பேரம் பட்டர். இவர்தாய் லக்ஷ்மி. அக்பர்சக்ரவர்த்தியின் ஸமஸ்தானவித்வான் ஆனார். அக்பருக்கு ரஜபுத்ரி மனைவியிடம் பிறந்த லவவாஜி என்ற கன்னிகையை மணம்புரிந்தார். பிறகு காசிநகர்வந்துசேர்ந்து அப்பய தீக்ஷிதரையும் கண்டார்.

இவர் இயற்றிய நூல்கள்—

1. ரஸகங்காதரம். (அலங்காரசாஸ்திரம்.)
2. பாமினீவிலாசம்.
3. பீயூஷலஹரி முதலானவைகள்.

1563-1573. குமாரகிருஷ்ணப்பநாயக்கன். மதுரை நாயக்கர்வம்ச 2-ஆம் அரசன்.

1564-1596. அதிவீரராமபாண்டியன். 1564 (சகம் 1486)ல் கொற்கையில் பட்டாபிஷேகம்பெற்றார்.

[3 செந்தமிழ் 119]

இவன் பிதா—நெல்வேலிப்பெருமாள்.

1567 (சகம் 1489-ல்) தென்காசிக்குலசேகரமுடையார்கோவில் பிரதிஷ்டை.

[தென்காசிச்சிலைலிபி.]

இவன் ஒரு ராஜகவி.

இவர் இயற்றிய நூல்கள்:—

1. நறுந்தொகை (வெற்றிவேற்கை.)
2. நைடதம்.
3. கூர்மபுராணம்.
4. காசிகாண்டம்.
5. கொக்கோகம். (முதலானவை.)

இவர் காலத்தவர்கள்:—

1. வரகுணன். (வாயுஸம்ஹிதை இயற்றியவர்.)
2. வரதுங்கபாண்டியன். (பிரமோத்தரகாண்டமியற்றியவர்.)
3. பரஞ்சோதி (திருவிளையாடற்புராணமியற்றியவர்.)
4. அழகிய தேசிகர். (சேதுபுராணமியற்றியவர்.)

—[7 விவேகபோதினி 93.]

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்,
பி. ஏ., பி. எல்.

# அச்சிட்ட குறுந்தொகையுரை.

குறுந்தொகையென்பது 'அமிழ்திற்சிறந்த தமிழ்மொழியதனை ஒன்பான் சுவையும் ஒழுகுற வளர்த்த நச்சும் பெருமை முச்சங் கத்துள்' கடைச்சங்கத்துச்சான்றோர்காலத்துத் தொகுத்த தொகை நூல்களுளொன்றென்பதைக் கற்றோர்பலரும் அறிவர்.

இது பண்டைக்காலத்துத் தண்டமிழ் நாட்டு அரசியல் வாணிகம் கைத்தொழில் முதலியவற்றின் நன்னிலையையும் தமிழ்மக்களின் வழக்கவொழுக்க நாகரிகங்களையும் செவ்வனே விளக்குந் திறத்தது. இந்நூலின் இருபது பாக்களொழிந்த மற்றப்பாக்களுக்கு நல்லறிவுடைய தொல்பேராசான் பொருள்புலப்படுத்தினரென்றும் அவர் புலப்படுத்தாதொழிந்த இருபது பாக்களுக்கும் இச்சகம்புகழும் நச்சினார்க்கினியர் பொருள் கண்டாரென்றும் கூறுப. இப்பேரறிவாளர்கள்கண்ட அரிய உரைகள் இந்நாள்வரையும் நமக்குக்கிடைத்தில. இவ்வுரைகளேயன்றி இக்குறுந்தொகைமூலந்தானும் ஈராண்டுகட்கு முன்னர்வரை அச்சுவாகனம் ஏறி வெளிவந்திலது. பண்டைச் செந்தமிழ்நூல்கள் பலவற்றை நாம் காலவயத்தானிழந்ததுபோல் இதனையும் இழவாது திருக்கண்ணபுரதலத்துப்பண்டிதர் ஸ்ரீ சௌ. அரங்கசாமி ஐயங்காரவர்கள் பல ஏட்டுப்பிரதிகள்கொண்டு மூலபாடங்களையாராய்ந்து பாடாந்தரங்களுடனும் திணை உள்ளுறை இறைச்சி மேற்கோள் இலக்கணக்குறிப்பு முதலியவற்றுடனும் திட்பநுட்பஞ்செறியத் தம் நுண்மாணுழைபுலத்தான் ஓர் அரியவுரைகண்டு ஈராண்டுகட்குமுன்னர் வெளிப்படுத்தியுள்ளார்கள். இக்குறுந்தொகையை வெளிப்படுத்திய அப்பெருந்தகையாளர்க்குத் தமிழகம் பெரிதும் நன்றிபாராட்டுங்கடப்பாடுடையதே.

இங்ஙனம் இவர்கள்கண்டு வெளிப்படுத்திய உரையினுள் ஒரு செய்யுளுரையில் சிறிது முரண்பாடொன்று ஓரிடத்துக்காணக்கிடக்கின்றமையின் அதனைக்குறித்தே ஈண்டொரு சிறிது எழுதுகின்றேன். மிகையாயின் அறிஞர் பொறுக்க.

அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாஞ் சிறுபசு முகையே.

என்ற முல்லைத்திணையாகிய குறுந்தொகை உ௨௧-ம் செய்யுளில் இரண்டாமடிக்குப் 'பறியினைக்கொண்டகையினராய் ஆயர்மறியினத் தோடு செல்ல' என உரைவரைந்து விசேடவுரையில் 'பறி'—'மீன் பிடிக்குங்கருவி' எனவும் வரைந்துள்ளார்கள். இச்சொற்குப் பொருள் இங்ஙனம் உரைப்பின் முல்லைநிலமாக்கட்கு மீன்பிடித்தற் றொழிலும் உண்டென்பது பெறப்படுமன்றோ? அங்ஙனமாயின் அவர்கட்கு மீன்பிடித்தற்செய்தியாண்டுக்கூறப்பட்டுளது? தொல்காப்பியம், நம்பியகப்பொருள் நிகண்டுகள் முதலிய தொன்னூல்களுள்ளும் ஆசிரியர் நச்சினார்க்கினியராதி தொல்லாசிரியருரையினுள்ளும் அவர்கட்கு மூவினம்புரத்தலும் பழுதிலுழவுதொழில்புரிதலும் வாணிபம்பேணலுமன்றி இத்தகைய மீன்பிடித்தற்செய்தி யாண்டுங்கூறப்படவில்லையே. இஃதன்றி இவ்வுரையானே இந்நிலமாக்கள் மீனுண்டலும் வழக்கென்பதூஉம் பெறப்படுமன்றோ? அது பொருந்துமாறெங்ஙனம்? பண்டைத்தமிழ்நூல்களை யாராயுங்கால் இந்நிலமாக்கட்கு இவ்வொழுக்கம் உளவெனக்கோடற்கேற்ற ஆதாரமொருசிறிதும் பெறப்படுமாறில்லை. புலலூண்டுறத்தலாகிய பொய்யாவொழுக்கம் பண்டைத்தமிழ்மக்களுள் முல்லைநிலமாக்களாய ஆயருள்ளும் மருதநிலத்து வேளாளருள்ளுமே அங்குரித்திருந்த தென்பது சங்கத்துச்சான்றோர் செய்யுள்களை நுனித்தாய்பவர்கட்கெல்லாமினிது புலனாம். அமிர்தமயமாய ஆன்பயத்தினுஞ்சிறந்த தோருணவு யாது? அத்தகைய உணவையும் எண்வகைக்கூலங்களையும் இயற்கையிற்பெற்ற அவர்கட்கு இழிதகையவுணவுகளெற்றிற்கு. அஃதன்றியும் அவர்களை அங்ஙனம் சாகபக்ஷணிகளாக ஆக்கியது அவர்கள் மேற்கொண்ட மூவினம்புரத்தலாகிய ரக்ஷைத் தொழிலும் உறையுமிடமாகப்பெற்ற முல்லையம்புறவுமுமாம். இவர்களிவ்வுத்தம வொழுக்கினராயிருந்தமையானன்றோ இவர்களை "ஆகாத் தோம்பி ஆப்பய னளிக்குங், கோவலர் வாழ்க்கையோர்



கொடும்பா டில்லை" யெனக் "காணு வுயிர்க்குங் கையற் றேங்கும்" கவுந்தியடிகள் ஆயர்மரபினளாகிய மாதரியை நோக்கிக்கூறியதாக இளங்கோவடிகளும், "தருமகதியாய்ப்பாடி" யெனப் பின்னோரும் கூறுவாராயினர்.

இனிப் பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப்படை மலைபடுகடாம் முதலியவற்றுள் ஆற்றுப்படுப்போன் ஆற்றிடைப்பெறவிருக்கும் நிலமாக்கள் உணவுவகைகளைக்கூறுமிடத்து முல்லைநிலமாக்கள் உணவிற்கும் மற்ற நிலமாக்கள் உணவிற்கும் எத்துணையோ பேதம்பட ஓரிடத்தாயினும் முல்லைநிலமாக்கள் புலவுண்ணும் இயல்புடையோரெனக்கோடற்குச்சிறிதுமிடனில்லாமலே "வடவயின் விளங்கும், சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல், வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட, சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தஞ், சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத், துறப்புறு பசுங்காய்ப் போழொடு கறி கலந்து, கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர், நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த, தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்" என அந்தணராகியஉயர்ந்தோர் தம் உணவுவகைகளைக்கூறியாங்கே தொல்லிசைப்புலவர்கள் கூறிச்செல்லுகின்றார்கள்.

"மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேர்ப்பி
னிருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றி
புகரிணர் வேங்கை வீகண் டன்ன
வவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுவிர்" (பெரும்பாண்)

பாலும் விதவையும் பண்ணாது பெறுகுவிர் (மலைபடுகடாம்) என்ற அடிகளை நோக்கிக்கொள்க. 'பண்ணாது பெறுகுவிர்' என்பதற்கு 'நுமக்கென்று சமையாமல் தமக்குச்சமைத்திருந்தவற்றைப் பெறுகுவிர்' என அதன் உரையாசிரியர் உரை உரைத்து அம்மக்கள் தம் பேருளுடைமையும் விளங்கவைத்துளார். இப்பத்துப்பாட்டாதி பண்டையநூல்களெல்லாம் பண்டைக்காலத்து மக்களது

உண்மையொழுக்கை உள்ளபடி விரித்துரைக்கும் இயல்புடையவன்றோ? மற்றமாக்கள் உணவுவகைகள் இங்குக்குறித்துள்ளபடி கூறப்படாது வேறுவகையாகக்கூறப்பட்டிருப்பது சிந்திக்கத்தக்கதாம். பழைய தமிழ்நூல்களில் முல்லைநிலமாக்கள் தெய்வவழிபாடு செய்ததாகக்கூறுமிடனெல்லாம், பாற்சோறு ஒன்றுமட்டுமே இட்டு வழிபட்டதாகக்கூறுதலும் மற்றையோர்க்குக்கூறியதுபோல் தினைச்சோறு முதலாயின இட்டதாகக்கூறாமையும் ஈங்கு ஆராயத்தக்கது. தற்காலத்து ஆயர்மரபினருள் சிலர் இங்குக்கூறிய வொழுக்கிற்கு வேறுபடக்காணப்படுகின்றார்களேயெனின் அவரெல்லாம் இழிசனர் கூட்டுறவான் வழீஇயினாரென்க. ஆகையால் 'பறி' யென்பது "பறிப்பீறி—நெல்லிற்பருவாரல்பாயுநெடுநாடா" † "குறியிறைக்குரம்பைப் பறியுடைமுன்றில்" என்றவைபோன்ற இடங்களில் பண்டிதாவர்கள் கொண்டுள்ள பொருளில் பயின்றுள்ளதேனும் ஈண்டைக்கது இயைபுடைத்தாம் பொருளன்று. இயைபுடைத்தாம் பொருள் யாதோ வெனிற்கூறுவல்: 'பறி' ஆயர் ஆனினங்காவல்புரியுங்கால் இரவிடைப் படுத்துத்துயில்வதற்குப் பனையோலைகளான் அமைத்துக்கொண்ட சயனமென்க. இச்சொல் இப்பொருளில்,

"கொண்டதாளுறிக்கோலக்கொடுமழுத்
தண்டினர்பறியோலைச்சயனத்தர்
விண்டமுல்லையரும்பன்னபல்லினர்
அண்டர்மிண்டிப்புகுந்துநெய்யாடினர்"
(2-வது வண்ணமாடல்)

என்ற பெரியாழ்வார் திருமொழியினும் பயின்றுள்ளது. அஃதன்றியும் "பறியோலைமேலோடுகீழாவிடையன்" எனத் திணைமாலைநூற்றைம்பதினும் வந்துளது. அதற்கு அதனுரையாசிரியர் "படுத்துத் துயிலும் பறி கீழாக ஓலைப்படல்புதைத்துத் துளியைக்காத்தற்கு மேலாக இடையர்கிடந்து" என்றுரைத்தார். "பறிப்புறத்திட்ட பாலொடையிடையன்" என நற்றிணை இடைக்காடனார் செய்யுளினும் (௧௪௪) "மறித்துருத்தொகுத்தபறிப்புறவிடையன்" என நெடுந்தொகையினும் பயின்றுள்ளது. நற்றிணை உரையாசிரியர் பறி பனையோலையானமைத்துக்கொண்டபாயல், எனவே வரைந்துள்ளார்.

† பெரும்பாண். ௨௬௫.



இனி இக்குறுந்தொகைச்செய்யுளிலேயே 'கூழ்' என்பதற்கு ஷை பண்டிதாவர்கள் 'உணவு', இழிந்தோருண்ணும் உணவுமாம்' எனவும் குறித்துள்ளார்கள். இதில் முன்னையபொருள் பொருந்துமேனும் பின்னையது பொருந்தாது. கூழ் என்பதனைத் தெண்ணீரடு புற்கையெனக்கருதினர்போலும். அங்ஙனம் கருதினும் வறியோர் உண்ணும் உணவுஎன்றன்றோ எழுதல்வேண்டும். இழிந்தோரெனக்கூறல் எங்ஙனம் பொருந்தும்? முல்லைநிலமாக்கள் உணவாகக்கூறுமிடனெல்லாம் கூழ் என்பதற்கு, பாற்'சோறு' எனக்கூறலே பொருந்தும். இதனை, * 'கூழாரிடையன்' என்புழி ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்த உரையாலறியலாம்.

ஆகையால் இவற்றையெல்லாம் நோக்குமிடத்து இங்குக்குறித்துள்ள சொற்களுக்கு யானுரைத்தபொருளே பல்லாற்றானும் பொருந்துமாற்றை அறிஞர் ஆய்ந்துகொள்வாராக.

இச்சொற்களின் உண்மைப்பொருள் காணவேண்டி ஈண்டிதை எழுதினேனேயன்றி, குறைகாணக்கருதி எழுதினேனல்லேன். இற்றொடர்ந்து செற்றின்றுகிடந்த பழம்பிரதிகளைத் தேடிப்பெற்று ஆய்ந்து சுத்தஞ்செய்து உரையெழுதலாய அரியவேலையைக்கைக்கொண்ட பண்டிதாவர்கள் இச்சிறு பதங்கட்கு வேறுபடப் பொருள் கண்டமைபற்றி அவர் சிறிதும் இழிக்கப்படார். இன்னும் அவர்கள் இத்தகைய உதவியைத்தமிழிற்குப்புரிவார்களாயின் அது பெரிதும் பயன்படத்தக்கதாம். இவ்விஷயமாக ஷை பண்டிதாவர்கட்கு எழுதியுள்ளேன். அதனையவர்கள் மறுபதிப்பில் வெளியிடக்கூடுமேனும் மறுபதிப்பு வெளிவரலை ஒருதலையாகக்கொள்ளமுடியாமையின் ஈண்டெழுதநேர்ந்தது. சுபம்!

| | |
|---|---|
| 18—7—18<br>மதுரை. | ஆ. கார்மேகக்கோன்,<br>தமிழ்ப்பண்டிதர்,<br>அமெரிக்கன் காலேஜ். |

* பெரும்பாண். ௧௭௫.

# ஓர் ஐயவினா.

ஐயா,

தங்களுடைய ஆனிமீ சஞ்சிகையில் பிரஹ்மஸ்ரீ R. S. நாராயணஸ்வாமி ஐயர் அவர்கள் B.A., B.L., என்பார் இந்துதேசசரித்திர காலக்குறிப்புகள் என்னும் தலைப்பின்கீழ் "ஸாயன ஆசாரியர் மரணம் 1387. ஜாயனர்—ரிக்வேதம் முதலான பூர்வ ஸம்ஸ்க்ருத நூல்களுக்கு உரையெழுதிய ப்ரசித்தமான வியாக்கியாதா 2-ம் ஹரிஹர ராஜன் மந்திரியான மாதவாசாரியருடைய சகோதரர் ஸாயனர்" (பக்கம் 417) "2-ம் சங்கமர் 2-ம் ஹரிஹரர் இவர்களுடைய மந்திரியாயிருந்தார் (பக்கம் 418 செந்தமிழ்) என்றெழுதியிருக்கிறார். ஆனால் ரிக்வேதத்தின் ஒவ்வொரு அத்தியாயத்தின் அடியிலும் "இதி ஸ்ரீமத் ராஜாதிராஜ ராஜ பரமேச்வர வைதிகமார்க்கப்ரவர்த்தக ஸ்ரீவீரபுக்கபூபால ஸாம்ராஜ்யதுரந்தரேண ஸாயணாமாத்யேன (ஸாயணாசார்யேணவென்றும் சொல்லப்படுகிறது) விரச்சிதேமாதவீயே வேதார்த்தப்ரகாசே ரிக்ஸம்ஹிதாபாஷ்யே—அஷ்டகே—அத்யாய:" என முடிப்பதன் கருத்து எனக்குப் புலப்படவில்லை. மேலும்,

> வ்யாக்யாயாக்யஹதப்ரக்ஞ:ஸப்தமஸ்யத்விதீயகம்,
> அத்யாயம்ஸாயணாமாத்யஸ்த்ருதீயம்வியாகரோத்யத.

என்றும் சொல்லப்படுகிறது.

இவற்றால் ஸாயணர் வீரபுக்கமஹாராஜன் மந்திரியென்று வெளிப்படுவதால் அவ்வீரபுக்கன் I-ம் புக்கனாகவேயிருக்கவேண்டும். ஏனெனில் 2-ம் புக்கர் 1399-ல் பட்டத்துக்கு வந்ததாக செந்-418-ம் பக்கத்திற் சொல்லப்படுகிறது. அற்றேல் 1376-ம்வரு வரையில் அரசுசெய்திருந்த 1-ம் புக்கருடைய காலத்துக்குப்பிறகு II-ம் சங்கமரிடத்து மந்திரியாயிருந்து அதற்குப்பின் 2-ம் ஹரிஹரர்காலத்திலும் மந்திரியாயிருந்திருக்கவேண்டும். அவர் ரிக்வேத பாஷ்யஞ்செய்தகாலம் வீரபுக்கர் காலமாகவே யிருந்திருக்கவேண்டும்.

நமது நண்பரவர்கள் ஸாயணர் வீரபுக்கரது மந்திரியாராக விருந்தாராவென்ற விஷயத்தைப்பற்றியும் அவர் அப்போதுதான் வேத



வியாக்கியானங்கள் செய்தார் என்பதைப்பற்றியும் வேறு ஆதாரங்கள் எடுத்துக்காட்டுவாராயின் அவர்க்குப்பெரிதும் நன்றியறிவுள்ளவனாயிருப்பதுடன் அவ் வுதவியையும் எனது ரிக்வேத மொழிபெயர்ப்பில் பிரசுரிப்பேன். II ஹரிஹரர் யார்? ஸாயணர் மாதவருக்கு மூத்தவரா இளையவரா வென்ற விஷயத்தையும் விளக்கவும்.

The Vedic Bureau
Anandasrama,
Coonori, Nilgires
2nd September 18.

தங்கள் விதேயன்,

SIVADHYANANANDA.

P. S. ஸாயணர் குருவென மதிக்கும்படியுள்ள வித்தியாதீர்த்தர் யார்? இவ்வேதவுரைக்கு மாதவீயம் என்ற பெயர்வரக்காரணமென்ன? இவற்றையும் எனக்குத் தெளிவிப்பாராயின் அவர்க்கு யான் எழுமையும் கடப்பாடுடையேனாவேன்.

ஸ்ரீ:

# சேரமான் பெருஞ்சேரலாதன்.

பண்டைக்காலத்துத் தண்டமிழ்வேந்தர் மூவருட் சேரர்குடியிற்றோன்றிச் செங்கோல் செலுத்திய அரசர்களிற் சேரமான் பெருஞ்சேரலாதன் ஒருவன் என்பது அவன் பெயர் மாத்திரத்தானேயறிந்தது.

இனி, செந்தமிழ்த்தொகுதி 16 பகுதி 2-ல் 76ஆம் பக்கத்தில் இவனைக் குறித்தனவாகச் சிலவரிகள் காணப்படும். * அவை, "மேல் கடலோரத்தில் இத்தொண்டியைப்போலவே மாந்தையும் ராஜதானி நகராய்ப் பெருஞ்சேரலாதனாலாளப்பட்டுவந்தது. இப்பெருஞ்சேரலாதன்காலத்து நெடுஞ்சேரலாதனுங் குடபுலத்து அரசாண்டவன். சேரவரசர்கள் குடபுலத்தைச் சிறிய பகுதிகளாய்ப்பிரித்துப் பலராக ஆண்டுவந்தனரென்றே தெரிகிறது" என்பனவாகும். இவற்றைச் சிறிது முன்னும் பின்னுமாக உள்ளவற்றோடு நோக்குவார்க்குப்

* ஒரு விஞ்ஞாபனம் என்ற தலைப்பின் கீழ்க்காண்க.

பெருஞ்சேரலாதன் ஒருசிற்றரசனென்ற கொள்கையே மேற்குறித்த வாக்கியங்கள் வெளியிடுகின்றன என்பது இனிது விளங்கும்.

இனி, இக்கொள்கை முன்னூல்களுடன் முரணுவதாகத்தோற்றுவதால், சங்கநூலாராய்ச்சியிற் பிரவேசிக்கும் மாணவர்கள் இடர்ப்படாதவாறு ஈண்டுண்மையுரைத்தல் இன்றியமையாததாயிற்று.

இச்சேரன் புறநானூற்றில் 65ஆம் பாடல்பெற்றவன் என்பதைக் கற்றோர்பலருமறிவர். அதனால் இவன் சோழன் கரிகாற்பெருவளத்தானோடுபொருது புறப்புண்ணாணி வடக்கிருந்த செய்தியுணரப்படும். அங்ஙனம் இருவேந்தரும் பொருத போர்க்களம் வெண்ணி என்பது 66ஆம் புறப்பாட்டானறியலாவது. அச்செய்யுள் கரிகாலன் வென்றி கூறியதாகும். அது,—

> "நளியிருமுந்நீர் நாவாயோட்டி
> வளிதொழிலாண்ட உரவோன்மருக
> களியியல்யானைக் கரிகால்வளவ
> சென்றமர்க்கடந்தநின் னாற்றல்தோன்ற
> வென்றோய்நின்னினு நல்லனன்றே
> கலிகொள்யாணர் வெண்ணிப்பறந்தலை
> மிகப்புகழுலகமெய்திப்
> புறப்புண்ணாணி வடக்கிருந்தோனே." - என்றுள்ளது.

இதிற் புறப்புண்ணாணி வடக்கிருந்தோன்—பெருஞ்சேரலாதனென்பது தேற்றம்.

இனி, முடத்தாமக்கண்ணியார்பாடிய பொருநராற்றுப்படைக்கு இக்கரிகாலனே பாட்டுடைத்தலைவனாதல் நன்கறிந்தது. அதில், அவனுடைய வெற்றிப்புகழ்விளங்க,

> "இரும்பனம்போந்தைத்தோடுங்கருஞ்சினை
> யரவாய்வேம்பினங்குழைத்தெரியலு
> மோங்கிருஞ்சென்னிமேம்படமிலைந்த
> விருபெருவேந்தருமொருகளத்தவிய
> வெண்ணிற்றாக்கியவெருவருநோன்றாட்.
> கண்ணார்கண்ணிக்கரிகால்வளவன்" எனவருதல் காணப்



படும். இது 66ஆம் புறப்பாட்டிற்கண்ட வெண்ணி என்னும் ஊர்ப்புறத்தேநிகழ்ந்த அப்போரினையே குறித்ததாதல் நன்கு தெளியப்படும். இதில் இருபெருவேந்தரென்றது, சேரனையும் பாண்டியனையும். அவர்களில் அச்சேரன் பெருஞ்சேரலாதனேயென்பது 65ஆம் புறப்பாட்டாற் பெறப்பட்டது. ஆகவே பெருஞ்சேரலாதன் பெருவேந்தனாத லெளிதிலுணரப்படும். ஆதலால் அவன் ஒரு சிற்றரசனென்ற கொள்கை தவறுதல் சொல்லாமையே அமையும்.

இனிக் குடக்கோநெடுஞ்சேரலாதனும் சேரமான்பெருஞ்சேரலாதனும் ஒரேகாலத்தரசாண்டவரென்ற கொள்கையும் பொருந்துவதின்று. நெடுஞ்சேரலாதன் பெருவேந்தனென்பது முன்னரே செந்தமிழில் வெளிவந்த 'யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை' என்ற வியாசத்தில் நன்கு விளக்கப்பட்டது. அங்ஙனமாகவே இரண்டு பேரரசர்கள் ஒரேகாலத்திற் சேரநாட்டில் வதிந்தனரென்பது வியப்பைத்தருவதேயாகும்!

ஒரு மாணவன்.

---

உ

கடவுள் துணை.

## மக்கட்கின்றியமையாக்கொள்கைகளுட் சில.

இத்தலையங்கத்திற்குப் பொருந்துவனவென்றெண்ணி என்னால் மேலே கூறப்பெறும் விஷயங்கள் மதுரைக்கடைச்சங்கத்தாராலே தொகுக்கப்பெற்றதும், நம்முன்னோருடையவும் நமது நாட்டுடையவுமாகிய பண்டைப்பெருமைகளை விளக்கவல்லதும், எட்டுத்தொகையனுள் எட்டாவதாகியதுமான புறநானூற்றிலிருந்து தொகுப்பவையாகும்.

அப்புறநானூறு, நமதுமுன்னை அரசர்களுடைய சரித்திரங்களையும், பண்டைப்புலவர்களுடைய ஆழ்ந்தகருத்துக்களையும் அக்காலத்திய ஒழுக்கவழக்கங்களையும் நமக்குத்தெரிக்கும் ஒரு உயர்தரநூலாகு

மென்பது அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாதலின், செந்தமிழ்படிக்கும் மாணாக்கர்கட்குதவுமாறு இவ்வியாசம் ஈண்டு எழுதப்படுகிறது. அதனுட்காணப்பெறும் பிழைகளைப்பொறுத்தல் பெரியோரதுகடனாம்.

## கல்வி.

இந்நூல் "கல்லாதவனை அவனைப்பெற்றதாயும் மதியாள். ஒரே தாய்வயிற்றிற் பிறந்திருப்பினும் அவருட் படிக்காதமூத்தோனை அரசன் அழையான்; சிறப்புச்செய்யான்; ஆனால், அவருட்படித்தவயதிற் சிறியவனையே அழைப்பன்; சிறப்புச்செய்வன்; அவனோடாலோசனை செய்து அவன்வழிநடப்பன். கற்காதமேற்குலத்துப்பிறந்தவன் கற்றுவல்ல கீழ்க்குலத்தானை வழிபடுவன். ஆகவே, எவரும் சிறிதுங்குறைபாடின்றி ஆசிரியரைவழிபட்டுக் கற்கவேண்டும். அஃதொன்றே முதன்மையானது" என்று நம்மவருக்குப் போதிய காரணகாரியங்களுடன் வற்புறுத்திக்கூறி அதனைக்கைக்கொளும்வழியையும் 'மக்கட்குவேண்டிய அனைத்தையும் ஈயவல்ல உற்றதுணையாவது கல்வியே' என்று கூறும் பிறநூல்களைப்போலக் கற்பிக்கிறது. அதற்குச் செய்யுள்:—

உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே. (புறம்-௧௮௩)

---

## நல்லிணக்கம்.

"ஒருவரதுயர்ச்சிக்குக் கற்றல் ஒன்றே போதியதாகாது. ஆனால் அவர் நல்லாரோடுகூடவேண்டும்; அன்னாருடைய குணாதிசயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவற்றின்வழி நடத்தல்வேண்டும்" என்று



பொருள்படும்வண்ணம் உலகத்தியற்கைகூறுமுகத்தான் இக்கொள்கை அவசியமானதென்பதை இந்நூல் நமக்குநன்குவிளக்குகிறது. அதற்குச் செய்யுள்:—

நாடா கொன்றோ காடா கொன்றோ
வவலா கொன்றோ மிசையா கொன்றோ
வெவ்வழி நல்லவ ராடவ
ரவ்வழி நல்லை வாழிய நிலனே. (புறம்-௧௮௭)

---

## முயற்சியும் நட்பும்.

"கற்று வல்லவராயினும் முயற்சியின்றிச்சோம்பியிருப்பின் அன்னார் எவ்வித அற்பப்பயனையும் அடையமாட்டார். இஃது அறிவுடையோர் அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாகலின் எவரும் முயற்சியுடையவராயிருக்கவேவிரும்புவர். அதனோடு குறுகியமனமுடையவர்களாயிருக்க விரும்பார். எனவே, எவரும் பெரியமுயற்சியும் தாராளசிந்தையும் உள்ளவராயிருக்கவேண்டு மென்பதும், அத்தகையாளரதுநட்பையே விரும்பவேண்டுமென்பதும் ஏற்படுகின்றன" என்ற இக்கொள்கையை இந்நூல் உதாரணமுகத்தான் நமக்கு நன்கு விரித்துக் கூறுகின்றது. அதற்குச்செய்யுள்:—

விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கு
மெலி முயன் றனைய ராகி யுடையதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
வறைவ னுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையோ
டியைந்த வைக லுளவா கியரோ. (புறம்-௧௯௦)

---

## கடமை.

"எவரும் அமிர்தமாயினுந்தனித்துண்ணல்கூடாது. எவரையும் வெறுத்தல்கூடாது. உடலின் சிரமத்திற்குப்பயந்து வேலைசெய்யாது சோம்பியிருத்தல் கூடாது. உயிரைக்கொடுத்தும் புகழைக்கைக்கொள்ளவேண்டியது. உலகம்வரினும் பழிக்கத்தக்கவற்றைச் செய்யலாகாது. கவலையைநீக்கவேண்டும்" என்ற பல உயர்தரக்கருத்துக்களை உலகம் நிலைபெறுவதற்குக் காரணங்கூறுமுகத்தான் விளக்கி ஒருவரது கடமை இவை இவை என்பதை இந்நூல் நமக்கு நன்கு அறிவிக்கின்றது. அதற்குச் செய்யுள்:—

உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே. (புறம்-கஅஉ)

---

## நிலையாமையும் விதியினுயர்வும்.

"விதியினும் முயற்சி வலியுடைத்தென்றெண்ணுதல் குற்றமுடைத்தாம். எதனிடத்தும் பற்றுவைத்தல் அன்னார்க்குப் பின்னர்த்தீங்கை விளைவிக்கும். எதனிடத்தும் விருப்புவெறுப்பின்றிப் பொதுநோக்காயிருக்கவேண்டும். சரீரம் நிலையற்றதென்பதை யுணர்ந்து அதற்குத்தக ஒழுகவேண்டும்." என்ற பல உறுதியுரைகளைக் கூறுமுகத்தான் இந்நூல் நமக்கு ஊழின் உயர்வையும் யாக்கை நிலையாமையையும் நன்குவிரித்துரைக்கின்றது. அதற்குச்செய்யுள்:—

யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்த
லினிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவி



னின்னா தென்றது மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே. (புறம்-கஙஉ)

---

## செல்வம்.

"செல்வத்தாலாயபயன் பிறருக்கு (தம்மையிரப்போர்க்கு) இல்லையென்னாது கொடுத்தலே. அங்ஙனமின்றித் தாமே அனுபவித்தல் பல குற்றங்களுக்கு ஆதாரமானது. எங்ஙனமெனில், கற்றுவல்ல அரசனுங் கற்றறியாத மறவனும் உண்பதிலும் உடுப்பதிலுஞ் சமமானவரே. ஆதலிற் செல்வர் தம்மை இந்திரனுவெண்ணிச் செருக்கடைந்து சேற்றுளழுந்தாது பெரும்பயன் அடைதல் ஏற்புடைத்து" என்ற உண்மையுரைகளை இந்நூல் நமக்குவலியுறுத்துகின்றது. அதற்குச்செய்யுள்:—

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கு
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கு
முண்பன நாழி யுடுப்பன விரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீத
றுய்ப்பே மெனினே தப்புன பலவே. (புறம்-கஅகூ)

---

## இறைமாட்சி.

"அரசனும் மக்களுள் ஒருவனாயினும் அவனதுகாவலின்றி எவரும் இனிதுவாழ்தல் முடியாது. ஆதலின், அவன் எவ்விதங்குடிகளை நடத்தவேண்டும்; எவ்வாறு வரிமுதலியவற்றை விதிக்கவேண்டும்; எவ்விதம் வசூல்செய்யவேண்டும்." என்றவிஷயங்களை எவர்க்கும் எளிதில்

விளங்கவல்ல உதாரண முகத்தாற்கூறி அரசனது கடமையை இந்நூல் நமக்கு நன்குவிளக்குகிறதுடன் அவ்விதம் நடவாத அரசனுக்குவருந் தீங்குகளையும் நன்கு விரித்திருக்கிறது. அதற்குச் செய்யுட்கள்:—

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகு
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகுவ ததனினுங் கால்பெரிது கெடுக்கு
மறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்து
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
* வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே. (புறம்-௧௮௪)

கால்பார் கோத்து ஞாலத் தியக்குங்
காவற் சாகா டுகைப்போன் மாணி
னூறின் றாகி யாறினிது படுமே
யுய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே. (புறம்-௧௮௫)

## இராஜபக்தி.

"தமக்கு எவ்விதஇடையூறுமுண்டாகாது காத்துவரும் அரசனைத் தங்கள்உயிரினும் உயர்வாகமதித்து அவன்வழிநடக்கவேண்டும். அதுதான் குடிகளது முதற்கடமையாகும்" என்ற கொள்கையைக்காரணத்தோடு இந்நூல் நமக்கு நன்குதெரிக்கின்றது. இதனால் அரசனை நந்நாட்டார் தொன்றுதொட்டு எத்துணைஉயர்வாகமதித்துளார் என்பது ஒருவாறுபுலனாம். அதற்குச்செய்யுள்,

* இவ்வடி மந்திரிமார் எத்தகைய கொள்கையுடையவராயிருக்கவேண்டுமென்பதை விளக்குவதையும் அதனுரைகொண்டு உய்த்துணர்ந்துகொள்க.



நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. (புறம்-௧௮௬.)

## வீடுபேறு.

"மண்ணுலகிற்பிறந்த எவருங் கடைசியாகவிரும்புவது வீடுபேற்றையே. வீடுபேறுவது கூற்றுவற்குத்தப்பிவாழ்வது. கூற்றுவற்குத் தப்புவதென்றால் பிறந்து இறந்துவருவதாகிய சுழலுக்காளாகாது அழியாப்பதத்தையடைவது. அவ்வீடுபேற்றிற்குத்தடையாயிருப்பது இல்வாழ்க்கையே. ஏனெனில், இவ்வுலகமேநிலையற்றது. அங்ஙனமாயின், நிலையில்லா உலகத்திலிருந்து அனுபவிக்கும் இல்வாழ்க்கை எங்ஙனம் நிலையுளதாதல்கூடும். எனவே, இல்வாழ்க்கை நிலையற்றதென்பது உறுதிப்படுகிறது. நிலையற்ற இல்வாழ்க்கை எவ்வாறு நித்தியமான அழியாப்பதத்தையளித்தல்கூடும். ஆகவே, வீடுபேற்றைவிரும்பியோர் இல்வாழ்க்கையினின்றும் விலகவேண்டும். இல்வாழ்க்கையைவிட்டு விலகுந்திடமில்லாதவராயின், அன்னார் அறிவுடையோராலும் நீதிநூற்களாலும் கூறப்படுகிற நல்லனவற்றைச்செய்து வீடுபேற்றையடையலாம். நல்லனவற்றையுஞ்செய்யச்சக்தியற்றவர்கள் தீயனவற்றைச்செய்யாது தம் வாணாட்களைக்கழித்தலால் வீடுபேற்றையடையலாம்" என்று எவரும் அனுஷ்டித்து எளிதில் வீடுபேற்றையடையக்கூடிய பல இலேசானவழிகளால் இத்தகைய மேலானகொள்கையை இந்நூல் நமக்கு நன்குபோதிக்கின்றது. அதற்குச்செய்யுட்கள்:—

அதளெறிந் தன்ன நெடுவெண் களரி
னொருவ னாட்டும் புல்வாய் போல
வோடி யுய்தலுங் கூடுமன்
னொக்கல் வாழ்க்கை தட்குமா காலே. (புறம்-௧௯௩.)

ஓரி னெய்தல் கறங்க வோரி
லீர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
னின்னா தம்மவிவ் வுலக
மினிய காண்கிதன் னியல்புணர்ந் தோரே. (புறம்-௧௯௪)

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினு
மல்லது செய்த லோம்புமி னதுதா
னெல்லாரு முவப்ப தன்றியு
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே. (புறம்-கசுரு)

செந்தமிழ்ச்செல்வர்களே, எனக்குத்தோன்றியவற்றை ஒருவாறு தொகுத்தெழுதினேன். நான்கொண்டபாகுபாடு சரியோ பிழையோ அதனை நிச்சயமாகச் சொல்லுதல் என்னாற்கூடாதது. ஆனால், இதனுட் கூறப்பெற்ற கொள்கைகள் மக்கட்கு இன்றியமையாதனவென்று சொல்லுவது பிழைபட்டதாகாது. நிற்க, இம்மாதிரியான கொள்கைகள் பலவற்றை இப்புறநானூறு நமக்கு நன்குவிளக்கிக்காட்டுகிறதாகையாலும் அவற்றை முற்றுமெழுதல் ஒரேகாலத்தில் முடியாதாகையாலும், ஒருவாறு சிலவற்றை எழுதலானேன். அன்றியுங் கூறப்புகுந்த அனைத்தையும் விரித்தெழுதல் வேண்டாமென்றெண்ணி அவ்வச்செய்யுட்களை ஆண்டாண்டுக்குறித்திருக்கிறேன். அவற்றையும் அவற்றின் உரைகளையுங்கொண்டு விஷயங்களை உய்த்துணர்ந்துகொள்க. சுபம்.

ஊ. சா, வேங்கடராமன்,

தண்டமிழ்த்தொண்டன்.

OFFICE OF THE DIRECTOR OF ... 18 DEC 1918 MADRAS.

உ
கடவுள்துணை.

# செந்தமிழ்

தொகுதி-கசா.] காலயுக்தி-வூ ஐப்பசிமீ [பகுதி - கஉ.
Vol. XVI. October—November, 1918. No. 12.

## சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம்

### (இரண்டாம்பாகம்.)

"செந்தமிழ்" தொகுதி கசா - பகுதி கக-ன், ருகூo-ஆம்பக்கத்தொடர்ச்சி.

ராஜேந்திரதேவனுக்கப்பால் அவன்மகன் ராஜமகேந்திரன் சில மாதங்களேயரசாண்டான். இவனைப்பற்றி விசேஷமாக ஒன்றுந்தெரியவில்லை. ஆனால் கலிங்கத்துப்பரணியில், (23)

பனுவலுக்குமுதலாயவேதநான்கிற்
பண்டுரைத்தநெறிபுதுக்கிப்பழையர்தங்கண்
மனுவினுக்குமும்மடிநான்மடியாற்சோழன்' என்றும்,

விக்கிரமசோழனுலாவில், (24)

'பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியா
லாடரவப்பாய லமைத்தோனும்' என்றும் முறையே சிறப்பித்துக்கூறப்பட்டவன் இவனே.

பிறகு ராஜேந்திரதேவன் தம்பியாகிய வீரராஜேந்திரன் கி. பி. 1062—3-இல் (25) சிங்காதனத்தை ஏற்றான். இவன் கொப்பத்தில்

---

23. (ராஜபாரம்பரியம்) VII. 28. 24. பாடல் 21.
25. 1063-4 முதல்வருஷமென்றுசொல்லவும் இடமுண்டு.
Epi. Rep. 1904. p. 11, Epi. Ind. IX. 207. Note Prof. Keilhorn's astronomical Calculations.

*

ராஜாதிராஜன் கொலையுண்டவிஷயமாய் சளுக்கியரைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற நோக்கமுடையவனாயிருந்தான். இதையறிந்து ஆகவமல்லனும் இதற்குமுன்னமே வீரனான தன்மகன் விக்கிரமாதித்தனைச் சோழநாட்டெல்லையைச்சார்ந்த கங்கபாடி, வனவாசி, சாந்தலிஜ், நொளம்பபாடி என்னும் மாகாணங்களுக்கு அதிகாரியாக நியமித்திருந்தான். (26) வீரராஜேந்திரன் கி. பி. 1063-4-இல் 'இகல்வினை விருதொடுமலைக்கும் விக்கலன் தன்னொடுவரிசிலைத்தடக்கை மாசாமந்தரைக் கங்கபாடிக்களத்திடைநின்று துங்கபத்திரி புகத்துரத்தினான். (27) இதுதான் சோழவீரராஜேந்திரனுக்கும் சளுக்கி ஆகவமல்லனுக்கும்நடந்த முதற்போராகும். இரண்டாம்முறை வீரராஜேந்திரன் 'வேங்கை நன்னாட்டிடை சளுக்கியர்விட்ட தாங்கரும் பெருவலித்தண்டுகெடத்தாக்கி மாதண்டநாயகன் சாமுண்டராயனைச்செற்று அவன் சிரத்தினையறுத்தனன்'. மூன்றாம்விசை வீரராஜேந்திரன் ஆகவமல்லனோடும் அவன் புத்திரர்களோடும் மகாசாமந்தர்களோடும் (கிருஷ்ணா பஞ்சகங்கா இவைகள் கூடுமிடமாகிய Epi. Ind. XII. 298.) கூடல்சங்கமத்தில் கி. பி. 1063—4-இல் போர்செய்து 'வடகடலன்னவகுத்தவத்தானையைக் கடகளிறொன்றால்கலக்கி அநேகசாமந்தரைச்சின்னபின்னஞ்செய்து விக்கலன்சிங்கணன் முதலானவர்களோடு ஆகவமல்லனையும் முதுகிட்டோடச்செய்தான். வீரராஜேந்திரன்தானே நேரில் ஆகவமல்லனோடு சண்டைசெய்து அவனைத்தோல்வியடையச் செய்த முக்கியமான சண்டை இதுவேயாகும். இதனால்தான் இவன் கலிங்கத்துப்பரணியில்(28)'குந்தளரைக்கூடல்சங்கமத்துவென்றகோனபயன்' என்றும், விக்கிரமசோழனுலாவில் (29) 'கூடலார் சங்கமத்துக் கொள்ளும்தனிப்பாணிக்கெண்ணிறந்ததுங்கமதயானை துணித்தோனும்' என்றும் பாராட்டிச்சொல்லப்பட்டிருக்கிறான். கொப்பத்துச்சண்டையில் ராஜாதிராஜன்கொலையுண்ட பரிபவத்தை அதற்குப்பின் 10 வருஷங்களுக்குள்ளாகவே இக்கூடற்சங்கமத்துப்போரில் சோழவீரராஜேந்திரன் ஒருவாறு தீர்த்துக்கொண்டான். மற்றுமொருமுறை துங்க

26. Ind. Ant. IV. 203.
Epi. Car. VII. Sk 11, 83, 152.
27. S. I. I. iii. No. 20. கருவூர்ச் சாஸனம்.
28. ராஜபாரம்பரியம். VII. 29.
29. பாடல் 22.



பத்திரைக்கரையில் வீரராஜேந்திரன் 'நாமவேல் கங்கனைநொளம்பனைக்காடவர்கோனை மங்குமதயானைவைதும்பராயனை'முதலாய் அநேக சளுக்கிய சாமந்தர்களை ஜெயித்தான். இதுகண்ட ஆகவமல்லன் 'பழியொடுவாழ்வதிற்சாவது சாலநன்றென்று ஏவமுற்றின சிந்தையனாகி, முன்னம் புதல்வரும் தானும் முதுகிட்டுடைந்த கூடலங்களமெனக் குறித்தகூடலில் வாராதஞ்சினர்மன்னரல்லர், போர்ப்பெரும்பழிப்புரட்டராவரென்று' தன்கைப்பட ஒரு ஓலையெழுதி வீரராஜேந்திரனுக்கனுப்பினான். (30) வீரராஜேந்திரனும் 'சிந்தையுமுகமும் திருப்புயமிரண்டும் ஏந்தெழிலுவகையோடிருமடங்குபொலியப் போந்தபோர்க்களம்புகுந்து (கூடல்சங்கமத்திற்கடுத்த ஈஞ்சல்காஞ்சியில்) Epi. Ind. XII. 598 காந்தையில் வல்லவர் ( சளுக்கியர் ) கோனை (ஆகவமல்லனை) வரவுகாணாதுசொல்லியநாளின் மேலுமொருதிங்கள்பார்த்திருந்த பின்னைப் பொய்த்தவன்கால்கெட ஓடி மேல்கடலொளித்தலும்...... துங்கபத்திரைக்கரை ஜயபத்திரத்தூண் நானிலம்பரசநாட்டி, மேனாள் வந்த (31) புரட்டனை(32)(ஆகவமல்லனை) வல்லவனுக்கிச்சுந்தரகண்டி

30. S. I. I. 68. No. 3o. மணிமங்கலசாஸனம் கட்டுரை.

31. 'மேனாள்' என்பதற்கு தமிழில் கடந்துசென்ற நாளென்று பொருளேயன்றி டாக்டர் ஹீல்ஷ் கொள்ளுமாறு இனி வருநாளென்ற அர்த்தம் கிடையாது. பின்வரும்பாட்டு இதனை நன்கு வற்புறுத்துகின்றது.

"கெடுக சிந்தை கடிதிவ ளுணிவே
மூதின் மகளி ராத றகுமே
மேனா ளுற்றசெரு விற்கிவ டன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்றசெரு விற்கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

[புறநானூறு 279.]

32. இவ்விடத்தில் 'மேனாள்வந்த' என்பதற்கு 'பின்னிட்டுத்தன்னிடம் வந்த' என்றும் "புரட்டன்" என்பதற்கு வாக்குத்தவறின(பொய்த்

கைகட்டிப் புரசையானைப்புழைக்கையிற்பிழைத்திவ்வுலகமறிய ஓடிய பரிசொருபலகையிற்பழுதறஎழுதியபின்னைச் சாத்தினவுறையும்சளுக்கி பதம்பெற்றபூத்தின மார்போடும்பூட்டி"பலவாறு எளனஞ் (33) செய்தான். குறித்தநாளில் ஆகவமல்லன் போர்க்களத்துக்கு வாராத காரணம் அவனுக்குத் திடீரென்றுஉண்டான கடுஞ்சுரமேயாம். இதற்குப் பலவிதமான வைத்தியம்செய்தும் பயனில்லவாக, வாதைபொறுக்கமாட்டாது அவன் துங்கபத்திரையாற்றுக்குச்சென்று கி. பி. 1068-ஆம் வருஷம் மார்ச்சுமாதம் 29-ஆம் தேதியில் குருவர்த்தியென்னுமிடத்தில் யோகத்தைமேற்கொண்டு ஜலசமாதியடைந்தான். (34) இச்செய்தி வீரராஜேந்திரனுக்குத் தெரியாததனால் அவன் ஆகவமல்லனைப் பொய்யனென்றும் புரட்டனென்றும் தனக்குப்பயந்து மேல்கடலில் ஒளித்தானென்றும் எண்ணி ஒரு போலியுருச்செய்து(35)கழுத்தில் கண்டிகை (பதக்கம்) கட்டி சளுக்கியராஜனைப் போர்தோல்வியடைந்ததற்கு அறிகுறியாக (அம்பினால்) பூத்தின மார்பும் (அம்பற்ற சாத்தினஉறையுமெழுதிப் பலவாறு இகழவும் நேர்ந்தது. அந்தோ! இஃது ஆகவமல்லனுக்கு ஒருக்காலும் அடாத அபவாதமன்றோ?

---

தவனான) ஆகவமல்லனுடைய மகன் என்றும் ஆகவே 'மேனாள் வந்தபுரட்டன்' விக்கிரமாதித்தனேயாவன் என்று டாக்டர் ஹூல்ஷ் (S. I. I. No. 30. மணிமங்கலசாஸனம்) அபிப்பிராயப்படுகிறார். இது சற்றும்பொருந்தாது. ஆனால் மேனாள் முந்தினநாளேயொழியப்பின்வருநாளல்ல. புரட்டனாகிய ஆகவமல்லன்மகனானதனாலேயே விக்கிரமாதித்தனை எவ்வாறு புரட்டனென்று சொல்லிவிடலாம்? ஆகையால் இது 'முன்னம் புதல்வருந்தானும் (கூடல் சங்கமத்து) முதுகிட்டுடைந்த கூடலங்களமெனக்குறித்த கூடலில்' சொல்லியநாளில் வாராத ஆகவமல்லனையே குறித்ததாகும்.

33. இங்கு சொல்லியிருப்பது முழுதும் பரிகாசமேயன்றி, சரித்திரசம்பந்தமான எவ்விஷயத்தையும் குறித்ததல்ல என்பது தெளிதற்பாற்று. மூன்றாம்பாகம் பார்க்க:—
34. Epi. Car. VII. Sk. 136. விக். சரி. IV. 44. 68.
35. சண்டைக்குப்பயந்தொளித்தோரையும் அல்லது சண்டையில் ஈடுபட்டவரையும் இவ்வாறு போலியுருச்செய்து பரிகசிப்பது பண்டைநாளில் வழக்கம்போலும்.



**வேங்கிக்குச்சென்றது.**

இனி, வேங்கிசக்கரக்கோட்டங்களுக்கும் விக்கிரமாதித்தன் சென்றதாகப் பில்ஹணர் கூறியதின் உண்மையென்னவென்றுவிசாரிப்போம். வேங்கி நாட்டுக்கு சளுக்கியர்விடுத்த சேனையை வீரராஜேந்திரன்ஜெயித்துத்தண்டநாயகன் சாமுண்டராயன் தலையையுமறுத்தானென்று ஏற்கனவேசொல்லியிருக்கிறோம். மேலும் கூடல் சங்கமத்தில் ஆகவமல்லனை வரவுகாணாது பரிகசித்தபின்னர் வீரராஜேந்திரன் 'தான்கைக்கொண்ட வேங்கைநன்னாடு மீட்டுக்கொண்டதால் மீள்கிலம் கெட்டி நீவல்லவனாகில்வந்து காக்கென்றுசொல்லி, வேங்கிக்குச்சென்றதாக சாசனத்தில்(36)காணப்படுகிறது. இவ்வாறு விக்கிரமாதித்தனும் வீரராஜேந்திரனும் வேங்கிவிஷயமாகத்தலையிட்டுக்கொண்டதன்காரணம் என்ன? வேங்கியின்வரலாற்றை ஒருவாறு விரித்தாலன்றி அக்காரணம் தெளிவாகப்புலப்படாது. வேங்கிநாடு கி. பி. 10-ம் நூற்றாண்டின் இறுதியில் சீர்குலைந்து சோழவம்சத்துப்புகழ்பெற்ற முதல் ராஜராஜனுக்கும் கீழ்ப்படிந்திருந்ததென்று முன்னமே (37) கூறியிருக்கிறோம். அப்படிக்கீழ்ப்படிந்த கீழைச்சளுக்கியரசர்களில் முதல்வனாகிய விமலாதித்யன் சோழவம்சத்து ராஜராஜன் பெண்ணாகிய குந்தவ்வையைக்கலியாணம்பண்ணிக்கொண்டான். (38) அவனுக்குப்பின்னர் அவன்மகனாகிய சளுக்கி ராஜராஜன் கங்கைகொண்ட சோழனுடையபெண் அம்மங்காதேவியை மணந்து 40 அல்லது 41 வருஷங்கள் ஆண்டு கி. பி. 1061 அல்லது 1062- இல் இறந்தான். (39) அவனுக்கு விஜயாதித்யன் என்கிற ஒரு தம்பியும், ராஜேந்திரனென்ற ஒரு பிள்ளையுமிருந்தனர். இச்சளுக்கிராஜேந்திரனும் சோழராஜேந்திரதேவனுடைய புத்திரியாகிய மதுராந்தகி என்பவளை மணம்

---

36. S. I. I. iii. No. 30. மணிமங்கலசாஸனம்.
37. முதற்பாகம் பார்க்க.
38. Epi. Ind. VI. No. 36.
ரணஸ்திபூண்டி சாஸனம். Epi. Rep. 1900.
39. Epi. Ind. IV. No. 33. V. 21.
(40 வருஷம் பிடாபுர சாஸனம்.)

புரிந்தான். (40) இவ்வாறு வேங்கியரசர்கள் சளுக்கியராயிருந்தும் மூன்று தலைமுறையாக (41) சோழவமிசத்துப்பெண்களையே கலி

40. செல்லூர்ச் சாஸனம். S. I. I. ii. 59. Epi. Ind. Ant. V. 10. Ind. And. XIV. 55. கொரிமல்லிசாசஸனம்.
"இருள்முழுதுமகற்றும்விதுகுலத்தோன்றேவி
பகல்விளங்குதபனகுலத்திராசராச
னருடிருவின்திருவயிற்றில்வந்துதோற்றி" னென்றும்,
"கங்கைகொண்டசோழன்றேவி
குலமகடன்குலமகளை" என்றும்,

கலிங்கத்துப்பரணியில் X (அவதாரம்) 3, 5, செய்யுட்களில் இந்த ராஜேந்திரசோழனே (II) (குலோத்துங்கனே) குறிக்கப்பட்டிருக்கிறான். ஈண்டு விதுகுலத்தோன் சளுக்கிராஜராஜன் என்றும் தபனகுலத்து ராசராசன் கங்கைகொண்டசோழனே ஒழிய புகழ்பெற்ற ராஜராஜன் (I) அல்ல என்றே பொருள்கொள்ளல்வேண்டும். ராசராசன்- மன்னர் மன்னவன் பொதுப்பெயரே ஒழிய ஒருவனது பேரல்ல. இங்கு வெங்கய்யரவர்கள்(Epi Rep. 1901. p. 7.) ராசராசன் என்பவனைக் கீழைச்சளுக்கி ராஜராஜன் என்று நினைத்து 'தபனகுலத்து ராசராஜனருள்திரு' என்னும் வாக்கியத்திற்கு சூரியகுலத்துதித்த சளுக்கி ராசராசனுக்கு வாழ்க்கைப்பட்ட அருள்நிரம்பிய லக்ஷ்மி (மனைவி) என்று வற்புறுத்தி அர்த்தம்செய்கின்றார். ஆனால் அருள்திரு— பெற்றபெண்ணை ஒழிய அருள்நிரம்பிய மனைவி என்று கொள்ளத் தமிழ் இடங்கொடுக்காது. மேலும் 'தபனகுலத்து' என்பது ராசராசனைத்தழுவுமே ஒழிய 'திரு' வைத்தழுவாது. மேலும் அவ்வாறு அர்த்தம்செய்தால் பாட்டின் முதலிரண்டடிகளும் சொன்னதைச் சொல்லும் குற்றமுடைத்தாகும். அது பரணிக்கோர்சயங்கொண்டாருக்குத்தகாதன்றோ.

41. இதனை விளக்க வமிசாவளி.






யாணம்செய்துகொண்டுவந்ததினால் சோழரிடத்தில் பற்று 'அதிகரித்து' வந்தது. இவ்வரசர்கள் தங்களுடைய தாய்வழிப்பாட்டன்மாராகிய ராஜராஜன் ராஜேந்திரன் என்ற பெயர்களையே தாங்களும் பூண்டிருந்ததே இதற்குத் தக்கஆதாரமாகும். ஆகவே மேலைச்சளுக்கியருக்குத்தம்வமிசத்துப்பிரிவினராகிய கீழைச்சளுக்கியர்நாட்டில் யாதொரு பிடிப்பும் இல்லாததாயிற்று. கி. பி. 1062 - இல் சளுக்கி ராஜராஜனிறக்க, வேங்கியில் சளுக்கி ஆட்சியை மீட்டும் நிலைநாட்டவெண்ணி இதுதான் தக்கசமயமென்று விக்கிரமாதித்தன் தண்டநாயகனாகிய சாமுண்டராயனைச் சேனையோடு வேங்கிக்கு அனுப்பியிருத்தல்வேண்டும். வீரராஜேந்திரனும் புகழ்பெற்ற சோழராஜராஜன் (I) காலமுதல் தங்களுக்கடக்கமாயிருந்த வேங்கி தன்கையைவிட்டு நழுவாவண்ணமே படையெடுத்துச்சென்றுசாமுண்டராயனைக்கொன்றிருத்தல்வேண்டும். இதனால்தான் விக்கிரமாதித்தனும் கூடல்சங்கமத்துவிளைந்த போருக்கப்பால், பில்ஹணர்கூறியபடி வேங்கிக்கு (42) நேரிற்போய் ஒருவாறு அதைத் தனக்கு இணங்கும்படியாகவும் செய்திருக்கலாம். இக்காரணத்தினாலேயே வீரராஜேந்திரனும் கூடல்சங்கமத்தில் குறித்த நாளில் ஆகவமல்லன் வாராததுகண்டு 'தான்கைக்கொண்ட வேங்கைநன்னாடு மீட்டுக்கோண்டதால் மீள்கிலம் என்றுசொல்லி வேங்கிக்குச்சென்றான். இடையே விஜயவாடை (பிஜவாடா) க்கடுத்த போற்றில் (கிருஷ்ணாநதியில்), விக்கிரமாதித்தனுக்கும் வீரராஜேந்திரனுக்கும் ஒரு பெரும்போர்நடந்ததாகத்தெரியவருகிறது. வீரராஜேந்திரன் 'சளுக்கியர்சேனையையடவியிற்பாய்ச்சி, கோதாவரியில் தன் போதகம் நீருண்ணக் கலிங்கமும்கடந்து அப்பால் சக்கரக்கோட்டத்தப்புறத்தளவும் மேவருந்தானை தாவடிசெலுத்தி, வேங்கைநன்னாடு மீட்டுக்கொண்டு தன்பூங்கழற்கடைக்கலம்புகுந்த படைக்கலத்தடக்கை விஜயாதித்தற்கருளி விசைகொடுமீண்டுவிட்டருளி இகலிடைப்பூண்ட ஜயத்திருவோடும் கங்காபுரிபுகுந்ததாக அவன்மெய்க்கீர்த்தியிற்காணப்படுகிறது.(43) ஆனால் இவன் விஜயாதித்தனுக்குத்துணையாகச்சென்று

42. சக்கரக்கோட்டம் என்பது பண்டர்நாட்டிலுள்ள ஒரு நகர் என்று பண்டிட் ஹீரலால் நிரூபித்திருக்கிறார்.
Epi. Ind. IX. 178.

43. S. I. I. iii. No. 30. மணிமங்கலம் சாஸனம்.

வேங்கியை ஜெயித்து அவனுக்குத்திரும்பக்கொடுத்தருளினனென்று சொல்லச் சிறிதேனுமிடமில்லை. (44) ஏனெனில் கலிங்கதேசத்தரச

---

44. சளுக்கிராஜனுக்குப்பின் அவன் தம்பி விஜயாதித்யனுக்கும் மகன் ராஜேந்திரசோழனுக்கும் வேங்கிராஜ்யத்தைப்பற்றி விரோதமிருந்ததென்று டாக்டர் ஹுல்ஷும் (S. I. I. iii. 128.) ஸ்ரீமான். சா. கிருஷ்ணசுவாமி ஐயங்காரவர்களும் (J.S.I.A.I.56, ) அபிப்பிராயப்படுகின்றனர். வீரராஜேந்திரன் வேங்கிநாட்டை மீட்டுக்கொண்டு தன்னிடமடைக்கலம்புகுந்த விஜயாதித்யனுக்கு அதை அருளினதாக (S. I. I. iii. No. 30.) சொல்லியிருப்பதைக்கொண்டே வீரராஜேந்திரன் விஜயாதித்யன்பக்கமும் விக்கிரமாதித்யன் முதலியோர் ராஜேந்திரசோழன்பக்கமும் சேர்ந்து சிற்றப்பனுக்கும் தமயன்பிள்ளைக்குமுண்டான சண்டையில் தாம் தலையிட்டுக்கொண்டனரென்று ஊகிக்கிறார்கள். இது சரியல்ல என்பதற்குக்காரணங்கள் கீழ்வருமாறு. தந்தைக்குப்பிறகு ராஜேந்திரசோழனே வேங்கியையரண்டானென்று பல சாசனங்களால் விளங்குகிறது. (Epi. Ind. Ant. IV. 227; S. I. I. iii. No. & I - 59.) மேலும் செல்லூர்ச்சாசனத்தில் (S. I. I. I-59.) ராஜேந்திரசோழன் திக்குவிஜயஞ்செய்யவெண்ணங்கொண்டு வேங்கியில் சிற்றப்பனாகிய விஜயாதித்யனை தனக்குப்பிரதிநிதியாகவைத்ததாக வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சோழராஜ்யம் கிடைத்தபின்னும் ராஜேந்திரசோழனால் (குலோத்துங்கனால்) யாதொருதடையுமின்றி விஜயாதித்யன் தன் வாழ்நாள்முழுதும் (அதாவது கி. பி. 1062 - 77 வரையில் 15 வருஷங்களும்) வேங்கியைப்பாதுகாத்துவந்ததாகத் தெரியவருகிறது. விஜயாதித்யன் இறந்தபின்னும் அவன் சிங்கம் போன்றவனென்று புகழ்ந்தே குலோத்துங்கனால் கூறப்பட்டிருக்கிறான். அவன் இறந்தபின்னரே ராஜேந்திரசோழன் (குலோத்துங்கன்) வேங்கியை ஆளத் தன்மக்களையனுப்பினதாகத்தெரியவருகிறது. கீழைச்சளுக்கி வமிசாவளிகளிலெல்லாம் (பிரதிநிதியாகையால்) விஜயாதித்யன்பெயரே காணப்படாமல் ராஜராஜனுக்குப்பின் ராஜேந்திரதேவன்பேரே காணப்படுகிறது. மே[illegible] விக்கிரமாங்கதேவசரிதத்திலும் சோழநாட்டை அடைவதற்குமுன்னம் ராஜேந்திரசோழன் வேங்கிநாதராஜிகனென்று கூறப்பட்டிருக்கிறான். ஆகையால் ராஜேந்திரசோழனுக்கும் அவன் சிற்றப்பனாகிய விஜயாதித்யனுக்கும் வேங்கிவிஷயமாக விரோதம் இருந்ததென்பது ஒருபொய்க்கதையேயொழியச் சிறிதும் நம்பத்தக்கதாயில்லை.



ராஜராஜன் (45) இவ்விஜயாதித்தனை (46) அவன் தளர்ச்சியடைந்து வேங்கியைவிட்டோடி மேல்கடலொளிக்கும் சூரியனைப்போல் சோழவெள்ளத்தில் (47) மூழ்கிப்போகுமளவில் மூழ்காமல் காப்பாற்றினதாகக் கங்கவமிசத்துச் சாசனத்தால் தெரியவருகிறது. ஆகையால் வீரராஜேந்திரன் ஒருக்காலும் விஜயாதித்யனுக்கு உதவி செய்வதற்குச்சென்றவனல்லன். வேங்கி விஜயாதித்யன் மேலைச்சளுக்கியருக்கு இணங்கினதால் அவனை ஜயித்து வேங்கியைத் தன்னாட்டுடன் சேர்த்துக்கொள்ளும் நோக்கமுடையனாயிருந்திருத்தல் வேண்டும். இதனாலேதான் விஜயவாடையில் வீரராஜேந்திரனைத்தடுக்க விக்கிரமாதித்தன் முயன்றான். அது பயன்படாததால் வேங்கிக்குச் சென்று விஜயாதித்யனைச்சோழவெள்ளத்தில் முழுகவொட்டாமற்றடுப்பதாகத்தெரியம்சொல்லிக் கலிங்க சக்கரக்கோட்டத்தரசரிடம்சென்று வேங்கியானது சோழநாட்டோடு சேர்ந்துவிட்டால் அதனால் அவர்களுக்கு நேரும் ஆபத்தையும் விளக்கி அவர்களையும் விஜயாதித்யனுக்கு உதவிபுரியத்தூண்டினான். இதனாலேதான் வீரராஜேந்திரனும் கலிங்க சக்கரக்கோட்டங்களுக்கும் செல்லவேண்டியதாயிற்று. மேலும், வீரராஜேந்திரன் தான்சொல்லிக்கொள்ளுமாறு வேங்கியை மீட்டுக்கொண்டது உண்மையாயின் ஏன் அதைப்பின்பு குலோத்துங்கன்செய்தவண்ணம் சோணாட்டுடன் சேர்த்துக்கொள்ளாமல் விரோதியாகிய விஜயாதித்யனிடமே திரும்பக்கொடுத்தான்? சாசனத்திற்சொல்லிக்கொள்ளுமாறு வீரராஜேந்திரன்முழுதும் வடக்கேஜெயமடைந்தானென்று நம்புவதற்கில்லை. (48) உண்மையாதெனின், விக்கிரமாதித்தன் 'படைக்

---

45. Ind. Ant. XVIII. No. 179. விசாகபட்டணம் சாசனம்.

46. இச்சாசனத்தில் இவன் வயதுமுதிர்ந்தவனென்று கூறப்பட்டிருப்பதால் பட்டநாதசுவாமிகள் (Ind. Ant. XLI ல்.) அபிப்பிராயப்படுமாறு வேங்கி எல்லையைப்பார்த்துவந்த சளுக்கி விக்கிரமாதித்தன் தம்பியும் பால்யனுமான விஜயாதித்யனாகான்.

47. ஈண்டுசோழவெள்ளமென்பது குலோத்துங்கனால் விஜயாதித்யனுக்கு நேர்ந்த ஆபத்து என்று டாக்டர் ஹுல்ஷ் அபிப்பிராயப்படுகிறார். இது சிறிதும் பொருந்தாது. (Ind. Ant. XLI. 218.)

48. ஈண்டு "விசைகொடுமீண்டு இகலிடைப்பூண்டஜயத்திருவோடும்" என்பதற்கு டாக்டர் ஹுல்ஷ் சோழன் ஒருவாறு தகையப்பட்டானென்று பொருள்கொள்ளுவர். ஆனால் சந்தர்ப்பத்தைநோக்கின் இவ்வர்த்தம் பொருந்தாது. இகல் - வெற்றி, பகைமையல்ல.

கலத்தடக்கை' விஜயாதித்யனையும் கலிங்க சக்கரக்கோட்டத்தரசர்களையும் ஒருங்குசேரச்செய்து வேங்கிநாடு சோணாட்டில் ஐக்கியமாகா வண்ணமும் சளுக்கியநாட்டுக்குப் பலக்குறைவு நேராதபடியும் ஒருவாறு காப்பாற்றினான் என்பதேயாம்.

இவ்வாறு விக்கிரமாதித்தன் சோழனுக்கு விரோதமாக வேங்கியில் சாமர்த்தியமாக ராஜகாரியங்களைச்செய்துமுடித்துத் திரும்புகையில் கிருஷ்ணாநதிக்கரையில் தன்தந்தை ஆகவமல்லன் குருவர்த்தியில் ஜலசமாதியடைந்ததைக்கேள்வியுற்றான். தந்தைக்குத்தான்செய்ய வேண்டிய சடங்குகளைக் கிருஷ்ணாநதியிலேயே செய்துமுடித்தான்.

இங்ஙனம் சற்றேறக்குறைய 25 வருஷங்களாக (1142-67-கி.பி.) விக்கிரமாதித்தன் தனக்கு இளவரசென்ற பட்டமில்லாதிருந்தும் தகப்பனுக்கு இன்றியமையாத பேருதவிபுரிந்துவந்தான். தென்னாட்டில் இருமுறைபிரவேசித்துக் காஞ்சியைத்தாக்கியும், மாளவதேசத்தரசனுக்கு அந்நாட்டை மீட்டுக்கொடுத்தும் சோழர்கள் வேங்கியைக் கைப்பற்றாது ஒருவாறு தடுத்தும், தன்புஜபலபராக்ரமத்தையும்,புத்தி சாதுர்யத்தையும், ராஜதந்திரத்தையும் வெளியிட்டான். ஆகவமல்லனும் இவனைத்தன்னோடு யுத்தங்களுக்கு அழைத்துச்சென்று நன்றாகப்பழக்கித் தன்னிலும் மேம்பட்டவீரனைச்செய்து பிற்காலத்திலும் ஒப்புயர்வில்லாத பெருமையும் அடையச்சாதனமாயிருந்தான்.

அ. வா. வெங்கடராமய்யர்,
இராஜாங்க கலாசாலை, கும்பகோணம்.

## இரண்டாம் பாக அநுபந்தம்.

### பின் சோழவம்சாவளியின் பாகமும் சளுக்கியர் சம்பந்தமும்.

1) ராஜராஜன் I.
(கி. பி. 985 - 1018 - கி. பி.)

2) கங்கைகொண்டசோழன் அ) ராஜேந்திரசோழன் I. கி.பி.1012-1042-கிபி,
3) ராஜாதிராஜன் (கி. பி. 1018-1053கி.பி.)
4) ராஜேந்திரதேவன் (கி. பி. 1052-1063 கி. பி.)
6) வீரராஜேந்திரதேவன் (கி. பி. 1063-1070 கி. பி.)
குந்தவ்வை=விமலாதித்தன் கீழைச்சளுக்கி (கி. பி. 1011-1022- கி. பி.)

5) ராஜமஹேந்திரன் (கி. பி. 1062-1063-கி.பி. + மதுராந்தகி
7) அதிராஜேந்திர தேவன் 1070 கி.பி.
பெண்=விக்ரமாதித்தன் VI மேலைச்சளுக்கி

அம்மங்கதேவி — ராஜராஜன் (கி. பி. 1022—1063 கி. பி.)

8) ராஜேந்திரசோழன் II அ)

# பல்லவசரித்திரம்.

"செந்தமிழ்" தொகுதி-௧௫ பகுதி ௧௧-ன் ௫௱௪-ம் பக்கத்தொடர்ச்சி.

காஞ்சி அவர்களது ராஜதானியாக இருந்திருந்தால் அவர்கள் சாஸனங்களை அவ்விடத்திலிருந்து கொடுத்திருப்பார்கள். ஆனால் இரண்டாவதுஸ்கந்தவர்மன் ஓம்கோடு (No. 1) சாஸனம்கொடுத்த பொழுது தாம்பிராபதத்தில் தங்கியிருந்தான். யுவமகாராஜன் விஷ்ணு கோபன் உருவுபள்ளிச் சாஸனத்தைப் பலக்கதவில் வைத்துக்கொடுத்தான். மாங்களூர்ச் சாஸனத்தைக் கொடுத்தபொழுது தசனபுரத்திலும் பிகிரசாஸனத்தைக்கொடுத்தபொழுது மென்மதுரையிலும் ஸிம்ஹவர்மன் இருந்தான். ஆகையால் இந்தமூன்று அரசர்களும் ஒருபொழுதும் காஞ்சியிலிருந்து ஆளவில்லையென்று ஒருவாறுகொள்ள இடமுண்டு. இந்தச்சாஸனங்கள் கொடுக்கப்பெற்றபட்டணங்கள்இன்ன இடத்தில் இருந்தன என்று குறிப்பிட்டுக் கூறமுடியவில்லை. ஆனால் அவர்கள் ராஜ்யத்தின் ஒரு பகுதியாயிருந்த ஒரு இடத்தைப்பற்றி நமக்குத்திட்டமாய்த் தெரியும். கர்மாராஷ்டிரம் என்னும் தேசம் அவர்களது ராஜ்யத்தின் ஒரு பாகமாயிருந்ததென்று ஓம்கோடு சாஸனங்கள் கூறுகின்றன. கீழச்சாளுக்கியர்கள் அளித்த சாஸனங்களிலும் இந்தஜில்லாவைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. குண்டூர் ஜில்லா ஓம்கோடு தாலூகாவிலுள்ள செந்தலூர் என்ற சந்தலூருக் கிராமம் (Ep. Ind. Vol. VIII P. 223) இந்தமாகாணத்தைச்சேர்ந்ததேயென்று நாம் அறிவோம். ஓம்கோடென்னும் கிராமமும் சாஸனம்கண்டெடுக்கப்பெற்ற ஸந்தராவூருக்கு ஸமீபமாக இருந்திருக்கலாம். ஸந்தராவூர் குண்டூர்ஜில்லா பாப்ட்லா தாலூகாவிலிருக்கிறது.

ஆகையால் குண்டலகம்மநதியால் நீர்பாய்ச்சப்பெற்ற ஓங்கோல் பட்டணத்தைச் சார்ந்த பிரதேசங்கள் புராதன பல்லவர்களின் காலத்தில் கர்ம்மாராஷ்டிரம் என்னும் பெயர் பெற்றிருந்தது என்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. இந்த அரசர்களின் வமிசாவளியைத் தவிர அவர்களைப்பற்றி அறிவுதரக்கூடியவைகள் வேறொன்றுமில்லை.

குலோத்துங்கன் I=* மதுராந்தகு

(கி. பி. 1070. 1118 கி. பி.)

N. B.—The Names of Chola Kings that ruled are numbered. The initial dates are those astronomically verified by Prof. Kielhorn. The terminal dates are approximate, based as they are on the best regnal years available from epigraphical sources.

விஷ்ணுகோபன் என்னும் பெயரோடு யுவமகாராஜன் என்ற அடைமொழி எப்பொழுதும் சேர்ந்து வருவதனால் அவன்ஒருபொழுதும் முடிசூடி அரசாளவில்லையென்று எண்ணலாம். ஆனாலும் ஸிம்ஹவர்மனது அரசாட்சியின் 11-ஆவது வருஷத்தில் உருவுபள்ளிக் கிராமத்துக்கு ஒரு சாஸனம் கொடுத்திருக்கிறான். ஆகையால் விஷ்ணுகோபன்என்பவன் ஸிம்ஹவர்மன்என்ற அரசனுடைய ஸஹோதரனாக இருக்கலாம்.

விஜயவிஷ்ணுகோபவர்மன் என்பவன் ஸிம்ஹவர்மனுக்கு மகனும் யுவமகாராஜன் விஷ்ணுகோபனுக்குப் பெயரனும் (சூரசாஸனங்களில் அவன் மகாராஜன் என்று அழைக்கப்பட்டாலும்) ஆவன் என்று சூரக்கிராம சாஸனத்தினால் (G. O. No. 920. 4th August 1914 Part II No. 1) நாம் அறிகின்றோம்.

ஸ்ரீ வீரகோர்ச்சமன்னனது மகனுடைய பெயரால் தசனபுரத்தில் அளிக்கப்பட்ட சாஸனத்தைப்பற்றிக் கூறும் ஒரு தாமிரசாஸனம் நெல்லூர் ஜில்லாவிலுள்ள தர்சியில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது (Ep. Ind. Vol. I. P. 397).

அது எப்படியிருந்தாலும் இருக்கட்டும். கிறிஸ்தாப்தம் 5-ஆவது நூற்றாண்டில் தெலுங்கராஜ்யத்தில் ஆறு அல்லது ஏழு-பல்லவஅரசர்கள் ராஜ்யபாரணம் செய்தார்கள் என்பது நிச்சயம். ஆனால் அவர்களுக்கும் காஞ்சிபுரத்தரசர்களுக்கும் உள்ள சம்பந்தம் என்னவென்று நமக்கு நிச்சயமாகத் தெரியாது.

5-ஆவது நூற்றாண்டில் பல்லவர்களை விரட்டிவிட்டு அவர்களது ராஜ்யத்தின் வடபாகத்தைச் சோழர்கள் ஆக்கிரமித்தனர் என நாம் நினைக்கலாம்.

தெலுங்கராஜ்யத்தில் சோழ அரசர்களின் வம்சம் நிலைபெற்றிருப்பதனால் நமது ஊகம் பலப்படுகின்றது. (G. O. No. 518. 18th July 1905 Part II No. 5.)

பல்லவர்கள் இரண்டு பிரிவாகப்பிரிந்து, ஒரு கூட்டத்தார் தமிழ் நாட்டையும் மறு கூட்டத்தார் தெலுங்கநாட்டையும் ஆண்டார்கள்



என்று கூறுவது அஸம்பாவிதமல்ல. புராதனக் காஞ்சியரசர்களைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. கர்ம்மாராஷ்டிரத்திலுள்ள செந்தலூர்க்கிராமத்தைப்பற்றிய ஒரு சாஸனம் குண்டூர்ஜில்லா ஓங்கோல் தாலூகாவிலுள்ள செந்தலூரில் அகப்பட்டிருக்கிறது. அதில் கீழே வரும் வம்சாவளி அடங்கியிருக்கிறது.

ஸ்கந்தவர்மன்<br>
|<br>
குமாரவிஷ்ணு (I)<br>
|<br>
புத்தவர்மன்<br>
|<br>
குமாரவிஷ்ணு (II)

இவர்களில் இறுதிப்பெயர்க்காரன் காஞ்சியை ஆண்ட ஒருபல்லவ அரசன். செந்தலூரின் கிடப்பைக்கொண்டு பார்ப்போமாயின் இந்த அரசன் காஞ்சியில் மட்டுமன்றி, நாம் இப்பொழுதுகூறிய தெலுங்க வம்சத்தவருக்கு உரித்தாயிருந்த கர்ம்மாராஷ்டிரம் என்னும் தெலுங்க தேசத்திலும் அரசாட்சி செய்தான் என்று அறியலாகும்.

தெலுங்கவம்சத்து முதல் அரசனும் இரண்டாவது குமாரவிஷ்ணுவும் ஒருவனேயென்று சிலர் எண்ணக்கூடும். ஆனால் செந்தலூர்ச் சாஸன எழுத்துக்கள் மிகப்பழமையானவைகளல்ல. அவை ஓம்கோடு உருவுப்பள்ளி, பிகிர, மாங்களூர் முதலியதாமிரசாஸனங்களைவிடத் திருத்தம் பெற்றவைகளாக இருக்கின்றன. செந்தலூர்ச் சாஸனம் ஸம்பந்தப்பட்ட மட்டிலும் நான் ஒரு புதுக்கொள்கையை வெளியிடுகிறேன். இந்தச்சாஸன எழுத்துக்கள் ஒரு பிரத்தியேகமாதிரியாக இருக்கின்றன; இந்த இனத்தைச் சேர்ந்த சாஸனங்களில் ஒன்றையும் அவை ஒத்திருக்கவில்லை. ஆகையால் செந்தலூர்ச்சாஸனம் ஒரு பழைய சாஸனத்தின் பகர்ப்பாயிருக்கலாமென்று நம்பவேண்டியதாக வருகின்றது. அப்படியானால் செந்தலூர்ச் சாஸனங்களிலுள்ள இரண்டு குமாரவிஷ்ணுக்களில் ஒருவன் ஓம்கோடு 1-ஆவது நம்பர் சாஸனத்தில் கூறப்படும் குமாரவிஷ்ணுவே என்று கூற இடமுண்டு. உதயேந்திரம் சாஸனத்தில் பின்வரும் வம்சாவளி காணப்படுகின்றது. (Ep. Ind. Vol. IV. P. 142)

ஸ்கந்தவர்மன்
|
ஸிம்ஹவர்மன்
|
ஸ்கந்தவர்மன்
|
நந்திவர்மன்

இதில் இறுதிப்பெயர்க்காரன் ஒரு காஞ்சியரசன். ஆனால் மிகப் பழையன அல்லாத அக்ஷரங்களால் இந்தச் சாஸனம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாஸனம் மெய்யான சாஸனத்தின் பகர்ப்பா அல்லது பிற்காலத்தில் நிர்மிக்கப்பட்டதா என்று அறிய இடமில்லாதிருக்கின்றது. மகா-௱-௱-ஸ்ரீ நரஸிம்ஹாசாரியார் அவர்களால் கண்டெடுக்கப்பட்ட கோளவிபாகம் என்ற ஜைநநூலில் ஸிம்ஹவர்மன் என்ற பல்லவ அரசனது அரசாட்சியின் 22-ஆவது வருஷத்தில்—சா. 380-இல் (458 கி. பி.) எழுதப்பெற்றதாகக் கூறப்படுகிறது.

பேணுகோண்டா சாஸனங்களில் (G. O. 920 4th August 1914 Part II No. 4 & J. R. A. S. October 1915) ஸிம்ஹவர்மன் ஸ்கந்தவர்மன் என்ற இரண்டு அரசர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சாஸனங்களின் காலம் இன்னதென்று விளங்கவில்லை.

ஸிம்ஹவிஷ்ணுவமிசத்தின் மூதாதைகள் இன்னின்னார் என்று காட்டப் பல்லவர்களே பிரயத்நம் செய்திருக்கிறார்கள். காசகுடிச் சாஸனங்களில் அந்த ராஜாக்கள் பெயர்களில் சில கூறப்பட்டிருக்கின்றன. (S. I. I. Vol. II. Part III P. 356).

வேலூர்ப்பாளயம் சாஸனங்கள் (S. I. I. Vol. II Part V. P. 510) நமக்கு இன்னும் சிலவிஷயங்களைத் தெரிவிக்கின்றன. ஆனால் அவைகளிலிருந்து பூரணமான வமிசாவளியைப்பெறமுடியவில்லை. ஸிம்ஹவிஷ்ணுவின் மூதாதைகளில் சில அரசர்களின் பெயர்களே இந்தச் சாஸனங்களில் கூறப்படுகின்றன என்று சாஸன ஆசிரியர்களும் எச்சரித்திருக்கிறார்கள். இந்தத்தனிப்பெயர்களைக்கொண்டு ஒரு வமிசாவளி உண்டுபண்ண இயலவே இயலாது.



அன்றியும் 9-ஆவது நூற்றாண்டிலுள்ளதாக மதிக்கப்படும் இந்தச் சாஸனம் அவ்வளவு பழமையானதல்லாததனால் அதை எவ்வளவு தூரம் நமக்கு நம்பலாமென்று விளங்கவில்லை.

வாயலூர்ச்சாஸனம் இந்த இனத்தைச்சேர்ந்த வமிசாவளிகளில் எல்லாம் மிகப்பழமையானதாகையால் அதை உறுதியாகநம்ப இடமுண்டு. காசகுடி வேலூர்ப்பாளயம் சாஸனங்கள் நந்திவர்மன் வமிசத்தைச்சேர்ந்த அரசர்களது காலத்தனவாயிருக்க வாயலூர்ச்சாஸனம் ஸிம்ஹவிஷ்ணுவமிசத்தைச் சேர்ந்த ஒரு அரசன்காலத்ததாயிருக்கின்றது.

அன்றியும் இந்தச்சாஸனத்தில் அநேக அரசர்கள்பெயர்கள் இருப்பதால் அது வரிசைக்கிரமத்திலுள்ள ஒருபூரணமான பட்டிகையென்று எனக்குத்தோன்றுகிறது.

இந்த இரண்டுகாரணங்களினாலேயே வாயலூர்ச்சாஸனம் மிக முக்கியமானதாக இருக்கிறது.

வியாக்கிரபுரீசுவரர் கோயில் தூணில் பொறிக்கப்பட்ட வாயலூர்ச் சாஸனம் (No. 368 of 1908) மிகப்பழுதுபட்டிருக்கிறது. 1908-1909-க்குரிய சிலாசாஸன இலாகா 'ரிப்போர்ட்டு' அதைப்பற்றி மிகச் சுருக்கமாகவே கூறுகின்றது. (G. O. No. 536 26th July 1909 Part II No. 17. P. 77) ஸிம்ஹவிஷ்ணுவின் முன்னோர்களுடைய வரிசைக்கிரமம் இந்த 'ரிப்போர்ட்டில்' கொடுக்கப்படவில்லை. ஆனால் முக்கியமாக அறியவேண்டியது இந்த வரிசைக்கிரமமே.

இந்தச் சாஸனத்தில் கூறப்பட்ட அரசர்கள் ஒருவருக்கொருவர் இன்ன உறவினர் என்று கூறப்படாவிடினும் நமக்குத்தெரிந்த கடைசியரசர்களின் பெயர்களிலிருந்து அவர்கள் ஆண்ட கிரமத்திலேயே கூறப்படுகிறார்கள் எனத் தோன்றுகிறது.

பல்லவர்களின்சரித்திரத்துக்கு வாயலூர்ச்சாஸனம் மிகமுக்கியமானதென்றறிந்து அதை அந்தஇடத்தில்வைத்தே படித்தறியும் பொருட்டு நான் அங்குச்சென்றேன். பிரமன், அங்கிரஸ், பிருஹஸ்பதி, சம்பு, பரத்வாஜன், துரோணன், அச்வத்தாமன், பல்லவன்,

அசோகன், ஹரிகுப்தன், ஆர்யவர்மன் ஆதிய, நமக்கு முன்னதாகவே நன்றாகத்தெரிந்த, பெயர்களுடன் ஆரம்பித்து, அதன்பிறகு விளங்காத இரண்டுமூன்றுபெயர்களையும் கூறிவிட்டு, பின்னர் காளிந்தன், பீமமல்லன், ஏகமல்லன் என்ற பெயர்களைக் குறிப்பிடுகின்றது.

இந்த இறுதிப் பெயர்களுக்குப்பின் 36 பெயர்கள் வந்திருக்கின்றன. அவையாவன,

(1) விமலன்
(2) கொங்கணிகன்
(3) காளபர்த்திரி
(4) சூதபல்லவன்
(5) வீரகூர்ச்சன்
(6) சந்திரவர்மன்
(7) கராளன்
(8) விஷ்ணுகோபன்
(9) ஸ்கந்தமூலன்
(10) காணகோபன்
(11) வீரகூர்ச்சன்
(12) ஸ்கந்தவர்மன்
(13) குமாரவிஷ்ணு
(14) புத்தவர்மன்
(15) ஸ்கந்தவர்மன்
(16) குமாரவிஷ்ணு
(17) புத்தவர்மன்
(18) ஸ்கந்தவர்மன்
(19) விஷ்ணுகோபன்
(20) விஷ்ணுதாஸன்
(21) ஸ்கந்தவர்மன்
(22) ஸிம்ஹவர்மன்
(23) வீரவர்மன்
(24) ஸ்கந்தவர்மன்
(25) ஸிம்ஹவர்மன்
(26) ஸ்கந்தவர்மன்
(27) நந்திவர்மன் (1)
(28) ஸிம்ஹவர்மன்
(29) ஸிம்ஹவர்மன்
(30) விஷ்ணுகோபன்
(31) ஸிம்ஹவர்மன்
(32) ஸிம்ஹவிஷ்ணு
(33) மஹேந்திரவர்மன் (1)
(34) நரஸிம்ஹவர்மன் (1)
(35) மஹேந்திரவர்மன் (2)
(36) பரமேசுரவர்மன் (1)

ஐதீகப்படி ஸிம்ஹவிஷ்ணுவின்வமிசத்தைச் சேர்ந்தவர்களாகக் கூறப்படும் பூர்வீகர்களில் ஆரியவர்மன் கொங்கணிகன் என்னும் இரண்டு பெயர்கள் காணப்படுகின்றன. இது மிகவும் முக்கியமான ஒரு விஷயம். இப்பெயர்கள் மேலைக்கங்கவமிசத்திலிருந்து உற்பத்தியாயினவைகளே.



புராதன மேலைக்கங்கவமிசத்தைப்பற்றிக்கூறும் உண்மையான தனிப்பிரமாணமாக இருக்கிற பெனுகொண்ட சாஸனங்களில் (G. O. No. 920 4th August 1914 Part II. No. 4 Page 83) கூறப்படும் வமிசாவளி பின்வருமாறு.

கொங்கணிவர்மன்
|
மாதவன்
|
ஆரியவர்மன்
|
ஸிம்ஹவர்மன்

பல்லவவமிசத்து ஐதீகவமிசாவளிப் பட்டிகையில் கங்கவமிசத்திலிருந்து உற்பத்தியானபெயர்கள் காணப்படுவதால் கங்க அரசர்களுக்கும், பல்லவ அரசர்களுக்கும், பெனுகொண்ட சாஸனங்களில் கூறுகிறபடி, ராஜாங்கவிஷய ஸம்பந்தமுண்டாயிருந்திருக்க வேண்டுமென்ற வாதம் உறுதிப்படுகின்றது. (ஆரியவர்மனும் ஸிம்ஹவர்மனும் பல்லவ அரசர்களால் முடிசூட்டப்பட்டார்கள்.)

நாம் இப்பொழுது வாயலூர் லிகிதத்தையும் காசகுடிச் சாஸனங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

பெயர் வரிசைகள் பல்லவன் வரை ஒத்திருக்கின்றன.

பல்லவனுக்கும் ஸிம்ஹவிஷ்ணுவுக்கும் இடையில் காசகுடிச்சாஸனங்களில் கூறப்படும் பெயர்கள் மிகவும் சுருக்கமாக இருக்கின்றன.

ஆனாலும் வாயலூர்ச் சாஸனங்களில் உள்ளதுபோல, அசோகன், காணகோபன், ஸ்கந்தவர்மன், விஷ்ணுகோபன், வீரகூர்ச்சன், ஸிம்ஹவர்மன் முதலிய பெயர்கள் கூறப்படுகின்றன.

காசகுடிச் சாஸனத்திலுள்ள கலிந்தவர்மனும் வாயலூர்ச்சாஸனத்திலுள்ள கலிந்தவர்மனாகவே இருக்கவேண்டும். வாயலூர் லிகிதத்தையும் அமராவதிச் சிலாலிகிதத்தையும் (S. I. I. Vol. I P. 25) ஒப்பிட்டுப்பார்த்தால் ஒருஸாமியமும் காணவில்லை. ஆனால் அமராவதிச் சிலாலிகிதம் புராதனமானதல்லவென்று நமக்குத்தெரியும்.

இதற்குமாறாக வாயலூர்ச்சாஸனமும் வேலூர்ப்பாளயம் சாஸனமும் வித்தியாசம்சிறிதுமின்றி ஒத்திருக்கின்றன. ஆனால் வாயலூர்ச் சாஸனப்பட்டிகை பூர்ணமாயிருக்க, வேலூர்ப்பாளய சாஸனத்தில் பெயர்களுக்குப் பதிலாக 'முதலானவர்கள்' என்று பலவிடங்களிலும் காணப்படுகின்றது.

வாயலூர்ப்பட்டிலகயில் காணப்படும் அசோகன், காளபர்த்ரு, சூதபல்லவன், என்ற பெயர்களுக்கப்பால் பூரணமான பொருத்தம் காணப்படுகிறது.

| வேலூர்ப்பாளயம் | | வாயலூர் |
|---|---|---|
| வீரகூர்ச்சன் | (11) | வீரகூர்ச்சன் |
| \| | | |
| ஸ்கந்தசிஷ்யன் | (12) | ஸ்கந்தவர்மன் |
| \| | | |
| குமாரவிஷ்ணு | (13) | குமாரவிஷ்ணு |
| \| | | |
| புத்தவர்மன் | (14) | புத்தவர்மன் |

(II) வீரகூர்ச்சனே முதன்முதல் ராஜசின்னங்கள் அனைத்தையும் பெற்றானென்று வேலூர்ப்பாளயம் சாஸனங்கள் கூறுகின்றன; அதாவது அவனுடைய பூர்வீகர்கள் அரசராக இருக்கவில்லை; வீரகூர்ச்சன்றான் முதற்பல்லவ அரசன்.

வாஸ்தவத்தில் ஐதீகப் பெயர்வரிசைகளைத்தள்ளிவிட்டு, இந்த நான்கு அரசர்களின் பெயரோடு நாம் சரித்திராங்கத்தில் பிரவேசிக்கிறோம்.

வீரகூர்ச்சன் என்று ஒரு அரசன் இருந்ததாக, தர்சியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சாஸனத்தால் தெளிவாகின்றது (Ep. Ind. Vol. I P. 397). திருக்கழுக்குன்றம் சிலாலிகிதத்தினால் (Ep. Ind. Vol. III P. 227) ஸ்கந்தசிஷ்யன் என்று ஒரு அரசன் இருந்ததாகவும் பெறப்படுகின்றது.

இந்த அரசனும் (12) ஸ்கந்தவர்மனும் ஒருவனே என்று வாயலூர் லிகிதம் ஸ்தாபிக்கின்றது. இரண்டு சிலாலிகிதங்களிலும் அவன் வீரகூர்ச்சனுக்கு மகனென்றும் குமாரவிஷ்ணுவுக்குத் தந்தையென்றும் புத்தவர்மனுடைய பாட்டனென்றும் கூறப்படுவதனால் இக்கொள்கை ஸந்தேகமற்றதாகின்றது.



வாயலூர் லிகிதத்தில் இரண்டாவது பல்லவ அரசனுக்குக்கொடுக்கப்பட்ட ஸ்கந்தவர்மன் என்னும் பெயர் சரித்திரமுறையில் மிகவும் புராதனமான பெயர் என்பதும் கவனிக்கத்தக்கது.

மயிதவோலு சாஸனதாதாவான அரசன் யுவமகாராஜ சிவஸ்கந்தவர்மன் என்றும் ஹீரஹடகல்லி சாஸனதாதாவான அரசன் சிவஸ்கந்தவர்மன் என்றும் அழைக்கப்படுகின்றான். குண்டூர் ஜில்லாவில் கண்டெடுக்கப்பட்ட சாருதேவி தானப்பிரமாணத்தில் (Ep. Ind. Vol. III P. 143) ஸ்கந்தவர்மன் புத்தவர்மன் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன.

ஸ்கந்தவர்மன்
|
குமாரவிஷ்ணு
|
புத்தவர்மன்

ஒருபுராதனப் பிரமாணத்தின் பகர்ப்பு என்று நாம்கருதிய செந்தலூர்ச்சாஸனங்களில் (Ep. Ind Vol. VIII No. 23. P. 233) கூறப்படும் வமிசாவளியும் இந்தப்பட்டிகையும் ஒருப்போலவே இருக்கின்றன. ஆகையால் வேலூர்ப்பாளயம் வாயலூர்ப் பிரமாணங்களால் இவர்கள் புராதன அரசர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று நாம் அறிகின்றோம்.

ஆகையால் (II) வீரகூர்ச்சன்முதல் நாம் ஐதீகவமிசாவளியைப் பின்பற்றவில்லையென்றும் சரித்திரமுறைஅரசர்களைப்பற்றியே பேசுகிறோம் என்றும் முடிவு கூறலாம்.

வாயலூர்ப் பிரமாணங்களுக்கும் வேலூர்ப்பாளயம் பிரமாணங்களுக்கும் உள்ள ஸாமியத்தில் முக்கியமானது என்னவென்றால் வேலூர்ப்பாளயம் பிரமாணத்தில் ஒரு முக்கியமான விஷயம் அடங்கியிருக்கிறது.

அதாவது “(V6.) பெயர் பெற்றவனான வீரகூர்ச்சன் நாகத் தலைவன்மகளோடு பூரண ராஜச்சின்னங்களைத்தழுவி, கீர்த்திபெற் றான்” என்பதே.

இதனால் வீரகூர்ச்சனே முதற்பல்லவஅரசனென்று நாம் முன்ன மேயே கூறியுள்ளோம்.

இங்கே ஒருவிஷயத்தை நாம் கவனிக்கவேண்டும், பல்லவவமிசத் தில் பலநூற்றாண்டுகளாகவழங்கிவந்த பின்வரும்ஐதீகம் இருந்ததென்று மேலே கூறிய இரண்டு பிரமாணங்களாலும் ஊகிக்க இடமாகின்றது.

ஆதியில் பல்லவர்கள் அரசராக இருக்கவில்லை. அவர்கள் தென் னிந்தியாவில் உள்ளவர்களும் அல்ல. அவர்களில் ஒருவன் தென்னிந் திய அரசர்களில் ஒருவன்மகளை மணந்து அரசனானான். இந்தவிவா கத்தினால் பிறந்தவன் ஸ்கந்தவர்மன்.

நாம் முதல் அத்தியாயத்தில் ஒப்புக்கொண்ட கொள்கையும் இது வும் ஒத்திருக்கின்றது விசேஷமான தல்லவா?

ஒரு பஹ்லவன் சிவஸ்கந்தன் என்னும் ஒரு ஆந்திர அரசன்மகளை மணந்து பல்லவவமிசத்தின் முதல் அரசன் ஆனான். இந்த விவாகத்தி னாற் பிறந்தவன் சிவஸ்கந்தவர்மன்.

வாயலூர் லிகிதத்தில் (1) வீரகூர்ச்சனுக்கு அப்பாலுள்ள பெயர் முறையை நாம் அமிதமாக நம்பக்கூடாது. எனினும் புராதன அர சர் கூட்டத்தில் (19) விஷ்ணுகோபன் பெயரும் வருகின்றது. இந்த விஷ்ணுகோபனும் கி. பி. 339-இல் ஸமுத்ரகுப்தனுக்குச்சத்துருவாக இருந்த காஞ்சிவிஷ்ணுகோபனும் ஒருவராகவேஇருந்திருக்கவேண்டும்.

வாயலூர் லிகிதத்தில்வரும் பெயர்முறையில் எந்த அரசன் முதல் உள்ள பெயர்முறை நம்பத்தக்கது? வீரவர்மன் (23) முதல் நம்பத்தக்க தென்று நான் எண்ணுகிறேன். உண்மையில் வாயலூர்ப்பிரமாணங் களையும்,

ஓம்கோடு No. 1 (O-1)
உருவுபள்ளி (Ur)
ஓம்கோடு No. 2 (C-2)
பிகிர் (P)
மாங்களூர் (M)
சூர (C)
உதயேந்திரன் (Ud)

முதலிய சாஸனங்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் கீழேவரும் பட்டிகை பெறப்படுகின்றது. இதிலுள்ள எண்கள் வாயலூர்ப்பட்டிகை யிலுள்ள எண்களைக் குறிக்கின்றன.

| | | உத்தேசகாலங்கள் |
|---|---|---|
| (23) வீரவர்மன் (C1. Ur. O2; P. M.) | | 422 கி. பி. |
| (24) ஸ்கந்தவர்மன் (C1; Ud; Ur; C2; P.; M.; C) | | 450 |
| (25) ஸிம்ஹவர்மன் (Ud; Ur) | யுவமகாராஜன் விஷ்ணுகோபன் (Ud; C2; P; M; C) | 478 |
| (26) ஸ்கந்தவர்மன் (Ud) | (29) ஸிம்ஹவர்மன் (C2; P; M; C) | 506 |
| (27) நந்திவர்மன் (Ud) | (30) விஷ்ணுகோபன் (C) | 534 |
| | (31) ஸிம்ஹவர்மன் | 562 |
| (28) ஸிம்ஹவர்மன் | (32) ஸிம்ஹவிஷ்ணு | 590 |

வாயலூர்ப்பிரமாணம் பெயர்வரிசைமுறையில் மிக முக்கியமா னது.

(24) ஸ்கந்தவர்மன்
(25) ஸிம்ஹவர்மன்
(26) ஸ்கந்தவர்மன்
(27) நந்திவர்மன்

என்ற முறை உதயேந்திர சாஸனங்களில் உள்ள வமிசாவளியை ஒத்திருக்கின்றது. (Ep. Ind. Vol. III P. 142). இந்தச்சாஸன

எழுத்துக்கள் புராதனமல்லாதனவாயிருப்பதால் அவைகளை எவ்வளவு தூரம் நமக்கு நம்பலாமென்றுசொல்ல இடமில்லையென முன்னரே கூறியுள்ளோம். வாயலூர்ச் சிலாலிகிதத்தினுல் இந்த வமிசாவளி மிகச் சரியானதென்றும் உதயேந்திர சாஸனங்கள் முற்காலத்தனவான பிரமாணங்களின் பகர்ப்புகளே என்றும் தெளிவாகின்றது.

29 ஸிம்ஹவர்மன்
30 விஷ்ணுகோபன்
31 ஸிம்ஹவர்மன்
32 ஸிம்ஹவிஷ்ணு

என்ற தொடர்முறைப்பட்டிகை ஸிம்ஹவர்மன் வமிசத்தையும் கூரசாஸனங்களிலுள்ள விஷ்ணுகோபன் வமிசத்தையும் ஒன்றுகச் சேர்த்துவிடுகின்றது. (G. O. No. 920 4th August 1914 Part II No. 1).

ஸிம்ஹவர்மன் (25) யுவமகாராஜன் விஷ்ணுகோபனுடையஸகோதரன் எனறும் அவ்விருவரும் 24 ஸ்கந்தவர்மனுடைய புத்திரர்களும் 23 வீரவர்மனுடைய் பௌத்திரர்களுமாயிருந்தார்கள் என்றும் உருவுபள்ளிச் சாஸனங்கள் தெளிவுறுத்துகின்றன.

ஓம்கோடு No. 1 சாஸனங்கள் தாம்பிராபதத்தில்வைத்து எழுதப் பட்டிருப்பதால் 24 ஸ்கந்தவர்மன் காஞ்சியில் அரசாளாதிருந்திருக்கலாம்.

அவன்புத்திரனுன ஸிம்ஹவர்மன் காஞ்சியைத் திரும்பவும் பெற்று, பாலக்கட, தாசனபுரம், மேண்மதுரா, முதலிய பட்டணங்களையுடைய குண்டூர் நெல்லூர் ஜில்லாக்களாகிய வடபாகத்தையும் வெங்கோ ராஷ்டிரம், முண்டோ ராஷ்டிரம்,கர்மாராஷ்டிரம், முதலியதேசங்களையும் தன் ஸகோதரனுகிய யுவமகாராஜன் விஷ்ணுகோபனுக்குக் கொடுத்திருக்கலாம். விஷ்ணுகோபன் ஒருபொழுதும் முடிசூட்டப் பெறவில்லை. அவன் எப்பொழுதும் தன் சகோதரனுக்குக் கீழ்ப்பட்டே இருந்தான். அதனுலேயே அவன் யுவமகாராஜன் என்று அழைக்கப்பட்டான். அவன் மகனுன 29 ஸிம்ஹவர்மன் சுதந்திரனுனன்.



ஆகையால் ஏககாலத்தில் இரண்டு வமிசங்கள் உண்டாயின. உண்மையில் விஷ்ணுகோபன் 30 பாலக்கடத்தில் அரசாட்சிபுரிந்தபொழுது (கூரசாஸனங்கள்) நந்திவர்மன் 27 காஞ்சியை ஆண்டிருந்தான்.

ஸிம்ஹவர்மன் 31 அல்லது ஸிம்ஹவிஷ்ணு 32 காஞ்சியைப்பெற்றிருக்கலாம்.

ஆகையால் ஸிம்ஹவிஷ்ணு பாலக்கடத்தில் அரசாட்சிபுரிந்திருந்த ஒரு வமிசத்தில் தோன்றியவன். வாயலூர் லிகிதத்தில் 27 காஞ்சி நந்திவர்மன்வமிசத்துஅரசர்கள்பெயர் முதலிலும் பாலக்கடவமிசத்து அரசர்கள் பெயர் பிறகும் வரக்காரணம் இதுவே.

யுவமகாராஜன் விஷ்ணுகோபன் ஒருபொழுதும் முடிசூட்டப் பெருததனுல் அவன்பெயர் வாயலூர்ப்பட்டிகையில் வரவில்லை.

முன்னேவரும் பட்டிகையில் ஸிம்ஹவிஷ்ணுவின் முன்வந்த அரசர்கள் காலத்தை ஒருவாறுகக் குறித்திருக்கிறோம். ஆறுவது நூற்றுண்டில் கி. பி. 590-க்கு அணித்தாக வாழ்ந்திருந்த ஸிம்ஹவிஷ்ணு முதல் தொடங்கி ஒவ்வொரு தலைமுறைக்கும் சராசரி 28-வருஷகாலம் வரையறை கொடுத்திருக்கிறோம்.

இந்தக்கணக்குச் சரியென்று தோன்றுகிறது. ஏனென்றல் இதன்படி 25 ஸிம்ஹவர்மன் கி. பி. 470-இல் வாழ்ந்திருக்கவேண்டும். மகா-ள-ள-ஸ்ரீ R. நரஸிம்ஹாசாரியவர்கள் கண்டுபிடித்திருக்கிற லோகவிபாகத்தை நாம் நம்பலாமானுல் அதே பெயருடைய ஒரு அரசன் சாகம் 380—கி. பி. 458-இல் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது. பெனுகொண்ட சாஸனங்கள் கி. பி. 500-இல் தோன்றியவை யென்று டாக்கற்றர் ப்ளீட் எண்ணுகிறுர். ஸிம்ஹவர்மன் என்னும் பெயருடைய இரண்டாவது மாதவனுக்கு முடிசூட்டிய 25—ஸிம்ஹவர்மன் மகனுன 26—ஸ்கந்தவர்மனுக்கு நாம் அதே காலமே வகுக்கின்றேம்.

பல்லவ அரசன் 25-ஸிம்ஹவர்மனுல் முடிசூட்டப்பெற்ற ஆரியவர்மன் அவன் மகளை மணந்தானென்றும், அவன் மகனுன இரண்டாவது மாதவன் தன் பாட்டனுகிய பல்லவ அரசன் ஸிம்ஹவர்மன் பெயரைப் பெற்றுன் என்றும், மேலைக்கங்கவமிசத்து அரசனுக்குக்கொடுக்கப் பட்ட ஸிம்ஹவர்மன் என்ற பெயரால் விளங்குகின்றது. பெனு

கொண்ட சாஸனங்கள் கி. பி. 500-ஆவது வருஷத்தியவை என்று வாயலூர் லிகிதத்தால் பெறப்படுகின்றன. வாயலூர்ப்பட்டிகைப்படி ஸிம்ஹவிஷ்ணுவுக்கு முன்னுள்ளோன் ஸிம்ஹவர்மன்; இந்தப்பெயர் தெளிவாகப் பொறிக்கப்பட்டும் இருக்கிறது. இதுமிக முக்கியமான விஷயம். ஏனென்றால் வேலூர்ப்பாளயம் சாஸனங்களில் 10-ஆவது சுலோகத்தில் கூறப்பட்டிருப்பனவற்றை இது உறுதிப்படுத்துகின்றது.

"பிறகு சத்துருக்களின் சர்வத்தையெல்லாம் அடக்கிய ஸிம்ஹவர்மனுக்கு ஸிம்ஹவிஷ்ணு என்னும் புத்திரன் பிறந்தான். அவன் சக்தி உலகப்பிரசித்தமானது."

19-விஷ்ணுகோபனும் ஸமுத்ரகுப்தன் சத்துருவும் (கி. பி. 338) ஒருவனேயென்றும் 21-ஸ்கந்தவர்மனும் ஓம்கோடு No. 1 சாஸனத்திலுள்ள 1-ஸ்கந்தவர்மனும் ஒருவனே யென்றும் நாம் ஒப்புக்கொண்டால் கீழ்வரும் வமிசாவளி பெறப்படும்.

| | | கி. பி. |
|---|---|---|
| வாயலூர் | விஷ்ணுகோபன் | 338 |
| | விஷ்ணுதாஸன் | 366 |
| | (குமாரவிஷ்ணு) | - |
| ஓம்கோடு | ஸ்கந்தவர்மன் I | 394 |
| | வீரவர்மன் | 422 |
| | ஸ்கந்தவர்மன் II | 450 |
| கூர | யு. ம. விஷ்ணுகோபன் | 478 |
| | ஸிம்ஹவர்மன் | 506 |
| | விஷ்ணுகோபன் | 534 |
| வாயலூர் | ஸிம்ஹவர்மன் | 562 |
| | ஸிம்ஹவிஷ்ணு | 590 |
| | மஹேந்திரவர்மன் I | 618 |
| | நரஸிம்ஹவர்மன் I | 646 |

பல்லவர்களின் ஆதிசரித்திரத்தைப்பற்றிய வாயலூர்ச் சிலாலிகிதம் எவ்வளவு உபகாரமாயிருக்கிறதென்று சொல்லவேண்டியதில்லையே. மிகப் புராதனஅரசர்களின் பூரணமான வமிசாவளிப்பட்டிகை இதிலடங்கியிருப்பதால் இதன் முக்கியத்தன்மை நன்கு விளங்கும்.



## அத்தியாயம் III.

### ஸிம்ஹவிஷ்ணுவின்வமிசம்.

1 வேலூர்ப்பாளயம் சாஸனங்களினாலும் வாயலூர் லிகிதங்களினாலும் ஸிம்ஹவிஷ்ணு (31) ஸிம்ஹவர்மனுடைய மகனென்று நாம் அறிகின்றோம்.

ஸிம்ஹவிஷ்ணுவைப்பற்றி வேலூர்ச்சாஸனம் கூறுவதாவது:—"நெல்வயல் அணிபெற்ற காவேரிநதியால் அழகுபூண்டதும் கமுகந்தோப்புகள் நிறையப்பெற்றதுமான சோழநாட்டை அவன் விரைவில் பற்றினான்."

இதனால் ஸிம்ஹவிஷ்ணுவுக்குமுன் சோழநாடு பல்லவர்வசமாயிருக்கவில்லை யென்றும் அதை ஜெயித்தவன் ஸிம்ஹவிஷ்ணுவே என்றும் அறிகின்றோம்.

இந்தப்போர்ச்செயல் மிகப்பிரயாசமானதாயிருந்தது. ஏனெனில் தென்னாட்டரசர்கள் எல்லாம் அவனுக்கு எதிரிகளாக இருந்ததாகத் தெரிகிறது. காசகுடிச் சாஸனம் சொல்வதாவது:—ஸிம்ஹவிஷ்ணு மலையம், களப்பிரம், மாளவம்முதலிய நாடுகளையும், சோழன், பாண்டியன், தன்கைவலியால் செருக்கடைந்த ஸிம்ஹலா அரசன் முதலியோரையும் கேரளத்தையும் வென்றான்.

**II.** நாம் திட்டமாக அறியக்கூடிய முதல்அரசன் முதல்மஹேந்திரவர்மனே காசகுடிச்சாஸனப்படி மஹேந்திரன் புள்ளலூரத்தில் ஒரு வெற்றிபெற்று மிருக்கலாம். இந்தப்பட்டணம் செங்கற்பட்டு ஜில்லாவில் காஞ்சீபுரத்துக்கு 15-மைல் வடக்கேயுள்ள புல்லலூராயிருக்கலாமென்று எண்ணப்பட்டது. அவனுடைய எதிரி யாரென்று ஒருவருக்கும் திட்டமாய்த்தெரியாது. புலிகேசியென்றும் எண்ணப்பட்டிருக்கிறது.

ஐஹோல் லிகிதத்தில் (Ep. Ind. Vol. VI. No. 1 P. II.) புலிகேசி பின் வருமாறு புகழப்படுகிறான். "V29 அவனது வலி எழாது தடுக்க எதிரிகளாக நின்ற பல்லவர்களின் தலைவன் பெருமையை, தன் சேனைகளால் எழுப்பப்பெற்ற தூளினால் அடக்கி, காஞ்சீபுரக்கோட்

டைக்கு வெளியே மறையும்படி செய்தான். V. 30. அவன் உடன் சோழர்களைப்புறங்காண முயன்றபொழுது, எய்கணைபோன்ற படையையே தனது துடிக்கின்ற கண்களாகவுடைய காவேரிநதி மதநீர்தரை மேல் சொட்ட அவனது களிறுகளாகிய அணையால் தனது பிரவாகம் தடைபட்டுக் கடலுடன் சேர்க்கையை விலக்கி நின்றது.

V. 31. பல்லவசேனையாகிய பனிக்குக் கொதிகதிரவனாய், சோழ, கேரள, பாண்டியர் மூவர்க்கும் நன்மை மிகும்படி செய்தவனவன்.

எல்லூருக்கும் குண்டூருக்கும் இடையிலுள்ள நாடு மஹேந்திரன் நாட்டைச் சேர்ந்ததாயிருக்கலாமென்று முன் அத்தியாயத்தில் கூறியிருக்கிறோம்.

பின்னும் ஏழாவது நூற்றாண்டின் இடைப்பகுதியில் இந்த நாடு சளுக்கர்கள் வசப்பட்டதென்பதும் நிச்சயமே.

ஆகையால் கி. பி. 610-ஆவது வருஷத்துக்கு அணித்தாக முதலாவது மஹேந்திரன் ஆட்சியின் ஆரம்பத்தில் இரண்டாவது புலிகேசி அதைவென்றுமிருக்கலாம்.

தன் நாட்டின் வடபாலுள்ள பிரதேசங்களை இழந்தபின்பு மஹேந்திரன் தன் அரசாட்சியின் பிற்பகுதியில் தமிழ்நாட்டில் தங்கியிருந்தான்.

'பல்லவர் பழமை' என்னும் நூலில் (Vol. I. P. 40) வி. வெங்கய்யா கூறியதுபோலவே (Ep. Ind. Vol. III P. 277) முதலில் ஜைநமதஸ்தனாக இருந்த மஹேந்திரன் அப்பர்சுவாமிகளால் சைவனாக்கப்பட்டதாக (சேக்கிழார் பெரியபுராணம் சென்னை 1870) நாம் கூறியுள்ளோம். அதுபோல ஷைபுஸ்தம் இரண்டாவது அதிகாரத்தில் கல்லாலயங்கள் (Rock Temples) செய்தவன் முதலாவது மஹேந்திரனே என்று போதுமான ஆதாரமில்லாவிட்டாலும் வெறு நம்பிக்கையின்பேரில் சொல்லிவைத்தோம்.

இந்தவருஷத்தில் (1916-17) முதலாவது மஹேந்திரனைப்பற்றி அநேக விஷயங்களை அறியலானோம்.



'பல்லவர் பழமை' முதல் தொகுதியில் (Vol. I.) மாமண்டூர்க் குகையின் வலப்பக்கத்தைப்பற்றிக் கூறியிருக்கிறேன்.(Pages 53, 54, 55). சிற்பமுறைமையைப்பார்த்து அந்தக்குகை மஹேந்திரவர்மனால் செய்யப்பட்டிருக்கலாமென்று எண்ணினேன். அதிலுள்ள லிகிதம் தெளிவாக இல்லையென்று E. ஹுல்ட்ஷ் என்பவர் கூறுகிறார். (No. 38 G. O. 424 20th April 1888) ஆனாலும் ஒருவிஷயம் கவனிக்க வேண்டியதாகவுண்டு. அதன் எழுத்தும் மஹேந்திரவாடியின் எழுத்தும் ஒன்றே. Plate XXVII b. லிகிதத்தின் ஒரு பகுதியின் படம்; அதனால் எழுத்துக்களின் வடிவங்களை நமக்கு அறியலாம். ஆகையால் (1) சிற்பமுறையையும் (2) அந்தலிகிதங்களின் அக்ஷரவடிவங்களின் ஆதாரத்தையும் நம்பி இந்தக்குகை முதல்மஹேந்திரவர்மனால் செய்விக்கப்பட்டிருக்க வேண்டுமென்று முடிவு கூறினேன்.

சிலாலிகிதத்தைப் பரிசோதனை செய்தபொழுது அதுமிகப்பழுதுபட்டிருந்தாலும் அதிலிருந்து ஏதாவது அறிந்துகொள்ளலாமென்று எண்ணினேன்.

அதைப்பகர்த்தி யெழுதியபொழுது ஹுல்ட்ஷ் அவர்களுக்கு அதிலிருந்து ஒன்றுமே அறிந்துகொள்ள முடியவில்லை. அதனால் அதை உபேட்சித்துவிடவேண்டுமென்பது நியாயமாகுமா?

அதைக்கவனமாய்ப் படித்தால் அதிலிருந்து ஏதாவது அறிந்து கொள்ளலாமென்று நம்பினேன்.

ஆகவே 1917 ஜனவரிமாதத்தில் சிலாலிகிதத்தைப் பகர்த்துவதற்காக மாமண்டூருக்குப் போனேன்.

அதற்காகப்பட்டபாடு வீண்போகவில்லை. பொருளறிய முடியாத அநேகதொடர்மொழிகளுள் "மத்த விலாஸாதிபதம் பிரஹஸன" என்ற தொடர்மொழி ஒன்றைக்கண்டேன். (See plate III A.) அதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. ஆனால் 'மத்தவிலாஸ' என்ற பெயர் என் மனதைக் கவர்ந்தது. ஏனென்றால் அது முதல்மஹேந்திரவர்மனுடைய ஒரு பெயரென்று திருச்சியிலும் பல்லாவரத்திலுமுள்ள சிலாலிகிதத்தால் நான் அறிந்துள்ளேன். (Pall. Anti. Vol. I P. 39); மாமண்டூர்க்குஹையை முதலாவது மஹேந்திரவர்மன் செய்தான் என்

பதற்கு ஒரு புது ஆதாரம் கிடைத்ததைப்பற்றி மிகமகிழ்ச்சி யடைந்தேன். மாமந்தூர் லிகிதத்தின் ஒரு பிரதியை மகா-௱-௱-ஸ்ரீ T. A. கோபிநாதராயரவர்களுக்கு அனுப்பி அதிலிருந்து அவர்களுக்கு விளங்குவனவற்றை எனக்குத் தெரிவிக்கும்படி வேண்டிக்கொண்டேன். சில நாட்களுக்கப்பால் சென்னைக் கிறிஸ்தவகலாசாலைப் பத்திரிகையில் 1917-பெப்ருவரி மாதத்தில் அவர்வெளியிட்ட ஒருவிஷயத்தை எனக்கனுப்பினார். அதில் பின்வரும் முக்கியமான விஷயம் அடங்கியிருந்தது.

“திருவிதாங்கோட்டு ஸம்ஸ்கிருத கையெழுத்துக் கிரந்தங்களின் பாதுகாப்பாளரான (Curator) பண்டித I. கணபதி சாஸ்திரியாரவர்கள் “மத்த விலாஸப்ரஹஸனம்” என்ற ஒரு ஏட்டுப்பிரதியைக்கண்டெடுத்திருக்கிறார்”.

அதில் விசேஷமானது என்னவென்றால் இந்த ஸம்ஸ்கிருத கிரந்தத்தின் ஆசிரியர் மஹேந்திரவர்மன் என்னும் ஒருராஜா, இந்தஅரசன் காஞ்சிப்பல்லவ வமிசத்தவன் என்றும் அவன் ஸிம்ஹவிஷ்ணுவின் மகனென்றும், அவனிபாஜனன், மத்தவிலாஸன், குணபரன், சத்ருமல்லன் என்னும் பட்டப்பெயர்கள் உடையவன் என்றும் அதிற்சொல்லப்பட்டிருக்கின்றது.

இதைப்பெற்றவுடன், பொதுஜனங்களின் அறிவுக்கு அவர் கொண்டுவந்த இவ்விஷயம் மிகமுக்கியமானதென்றும் மாமந்தூர்ச்சிலாலிகிதத்தின் ஆறுவது வரியின் முடிவில் நான் வாசித்த பதங்களால், மஹேந்திரவர்மனே மிகவும் புராதனமான கல்லாலயங்களைச் செய்தான் என்ற என்கொள்கை உறுதியடைந்து விட்டதென்றும் ஏப்ரில் 12௨ விடையெழுதினேன். அன்றியும் குடுமியமலையிலுள்ள சங்கீத சிலாலிகித எழுத்துக்கள் (Ep. Ind. Vol. XII P. 226) திருச்சிச் சிலாலிகித எழுத்துக்களை ஒத்திருப்பதால் முதலாவது மஹேந்திரவர்மன் ஒரு ஸங்கீதவித்வான் என்றும் எண்ணலாம்.

கோபிநாதராயரவர்கள் 19௨ அனுப்பிய பதிலில் அவர்சொன்னதாவது—“விநோதகரமான ‘மத்தவிலாஸப்ரஹஸனம்’ கண்டெடுக்கப்பட்டது முக்கியமான விஷயம் என்பதற்குச் சந்தேகமில்லை. அதைவிட முக்கியமானது என்னவென்றால் பழுதுபட்ட மாமந்தூர்ச்சிலா



லிகிதத்தில் இதைப்பற்றித் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதே. என்னால் கண்டெடுக்கப்பட்டதும் சிலாலிகிதபரிசோதகர் ஆபீசுக்காக என்னால் பகர்த்தப்பட்டதுமான குடுமியமலை ஸங்கீதகிரந்தம் மஹேந்திரவர்மன் காலத்ததானாலும் அது அவனால் பாடப்பட்டதல்ல. அது ருத்ராசாரியன் என்ற ஒருவரால் பாடப்பெற்றது.

வருஷாந்த ரிப்போர்ட்டில் மிஸ்டர் வெங்கய்யா கீழ்க்காணப்படுவதுபோல் சொல்லுகிறார் என்பது உண்மையே:—“இந்தச் சிலாலிகிதம் பெயர் அறியமுடியாத ஒரு அரசன் கட்டளையால் பொறிக்கப்பட்டது. அந்த அரசன் ருத்ராசாரியர் என்ற ஒருவருடைய சிஷ்யன். அவர்தான் சிஷ்யர்களின் உபயோகத்திற்காக இந்த ஸ்வரங்களை இயற்றினார். பெயர் அறியமுடியாத அரசன் மஹேந்திரவர்மனாக இருக்கலாகாதா என்று நமக்கு ஸந்தேகப்படமட்டும் செய்யலாம். அதைப்பற்றி நிச்சயமாக ஒன்றும் சொல்லமுடியாது.”

ஏப்ரில் 28௨ எழுதியனுப்பிய ஒருகடிதத்தில் அவர்பின்னும் கூறுவதாவது:—“ஸங்கீதஸ்வரங்களையும் வர்ணங்களையும் மாமந்தூர்ச் சாஸனம் குறிக்கின்றதுபோலத்தோற்றுகின்றது; குடுமியமலைஸங்கீத கிரந்தம் மஹேந்திரனது பிரேரணையால் இயற்றிச் செதுக்கப்பெற்றதென்ற தங்கள் ஊஹம் உண்மையாய் விடுமோ? மேலும் கவிகளையும், வால்மீகியையும், மத்தவிலாஸ ப்ரஹஸனத்தையும்பற்றி மாமந்தூர்ச் சாஸனம் கூறுவதைக் கவனித்தால், தாங்கள் ஸந்தேஹப்படுவதுபோல், இச்சாஸனம் பல்லவ அரசன் மஹேந்திரவர்மனது இலக்கிய ஸங்கீதத் தேர்ச்சிகளைப்பற்றிப் புகழ்ந்து கூறுவதுபோல் தோற்றுகிறது.”

திருப்பருத்திக்குன்றில் வர்த்தமான ஆலயத்தின் உக்கிராண அறையின் வடசுவரில் பொறிக்கப்பட்ட சிலாலிகிதத்தில் கூறப்படும் (No. 41 of 1890 Ep.Ind.Vol. VII No. 15 P. 115) மாவண்டூர்ப் பற்றில் ஸப்டிவிஷனைச் சேர்ந்த மஹேந்திரமங்கலம் கிராமம் முதலாவது மஹேந்திரவர்மன் பெயரால் அழைக்கப்பட்டதே.

மாமண்டூர்த்தடாகத்துக்கு ‘சித்ரமேகம்’ என்றுபெயர். இதுமஹேந்திரனுடைய விருதுப்பெயராய் இருக்கலாகாதா?

மஹேந்திரன் குஹைகளுக்கும் உண்டவல்லிக் குஹைகளுக்கும் சிற்பஸாமியம் இருப்பதனாலும், மாமண்டூர்க்குஹையில் மத்தவிலாஸப்ரஹஸனத்தைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதாலும், தமிழர் நாகரிக வளர்ச்சியைப்பற்றிய சரித்திரத்தில் முதலாவது மஹேந்திரவர்மன் ஒருமுக்கிய புருஷன் என்று முடிபுகூறலாம்.

(1) போர்முறையாகப் பார்க்கும்பொழுது புல்லலூரில் அவன் சளுக்கர் படையேற்றத்தைத் தடுத்தான்.

(2) சமயச்சார்பாகநோக்குமிடத்து சைவசமயவளர்ச்சிக்கு மிக அநுகூலம் செய்தான்.

(3) கலைவளர்ச்சி விஷயமாக அவனே ஒரு கலாவல்லவனாக இருந்ததனால் கவிதையையும் ஸங்கீதத்தையும் பெருமையடையச் செய்தான்.

(4) உருவக்கலை விஷயமாக, பாறையிற் குடைந்த ஆலயங் கட்டுவதற்குள்ளவிருப்பத்தைக் கிருஷ்ணாநதிக்கரையிலிருந்து பாலாறு காவேரி நதிக்கரைகளுக்குக் கொண்டுவந்தான்.

(5) அரசாட்சி விஷயமாக அவன் மஹேந்திரவாதி, மாமண்டூர்த் தடாகங்களையும் அநேகமாய்த் தலைவனூர்த் தடாகத்தையும் வெட்டினான்.

மஹேந்திரவர்மன் ஒருபுதிய காலப்பெரும்பகுதியை (Era) உற்பத்தி செய்தான். அதன் உந்நத நிலையை அவனுடைய மகன் மஹானான நரஸிம்ஹவர்மன் ஆளுகையில் நாம் காண்போம்.

III. 640-இல் சீனதேசத்துத்தீர்த்தயாத்திரிகனாகிய ஹூயன் த்ஸாங் (Hiuen Tsang) என்பவன் காஞ்சீபுரத்தில் தங்கியிருந்தான். இந்தவருஷத்தில் முதலாவது நரஸிம்ஹவர்மன் ஆண்டிருந்தாலும் இருக்கலாம். 642-க்கு அணித்தாக இந்தப்புது அரசன் வாதாபியை (பாதாமி) க்கைக்கொண்டதாக, சளுக்கர்களின் காலகணிதம் கூறுகின்றது.



கூரம் சாஸனங்கள் (S. I. I. Vol. I. P. 152) இந்த ஸம்பவத்தைக்குறித்துக் கூறுகின்றன. முதலாவது நரஸிம்ஹவர்மன் புலிகேசியை, பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங்களில் போரில் தோற்கடித்ததாக அவைகள் முதலில் கூறுகின்றன. மணிமங்கலம் செங்கற்பட்டுஜில்லா, சைதாப்பேட்டைத் தாலூகாவிலுள்ள மணிமங்கலமேயன்றி வேறன்று. அது காஞ்சீபுரத்திலிருந்து 20-மைல் தூரத்தில் இருக்கிறது. அங்ஙனமானால் தமிழ்நாடு சளுக்கர்களால் இரண்டாவது முறையும் தாக்கப்பட்டதாக ஏற்படும். இரண்டாவது முறை, இரண்டாவது புலிகேசி, பல்லவர்களால் தடுக்கப்பட்டான். ஹர்ஷவர்த்தனனைப் புறங்கண்டவனும், பாரசீக அரசனால் உறவாட விரும்பப்பட்டவனுமான கீர்த்திபெற்ற சளுக்கச்சக்கரவர்த்தி, முழுதும் முறியடிக்கப்பட்டதுமன்றி, அவனது தலைநகராகிய வாதாபியும்பாழாக்கப்பட்டது.

இறுதியில் கூறப்பட்ட விஷயம் கூரம், காசகுடி, உதயேந்திரம் முதலான எல்லாச்சாஸனங்களிலும் காணப்படுகின்றது.

முதல் நரஸிம்ஹவர்மன் சத்துருக்களிடமிருந்து வாதாபிப்பட்டணத்தின் நடுவில் நின்ற ஜெயஸ்தம்பத்தைப் பிடித்தான் என்ற விஷயம் வேலூர்ப்பாளயம் சாஸனங்களில் மாத்திரம் கூறப்படுகின்றது. (S. I. I. Vol. II. Part V.P.511) இந்த விஷயம் வாதாபியிலுள்ள லிகிதத்தால் வலியுறுத்தப்படுகின்றது (Ind. Anti. Vol. IX.) இதன் எழுத்துக்கள் பல்லவர்களின் எழுத்துக்களைப்போலவே இருக்கின்றன. இந்த வாதாபிச்சாஸனம் மஹாபல்லவன் என்ற நரஸிம்ஹவிஷ்ணுவையும் ஒரு ஜெயஸ்தம்பத்தையும்பற்றிக் கூறுகின்றது.

முதலாவது நரஸிம்ஹவர்மனைப்பற்றிப் பேசும்போது, காசகுடிச் சாஸனங்கள், அவன் இலங்கையையும் கீழடக்கினதினால் இராமனைவிட மிகப்புகழ்படைத்தவன் என்று கூறுகின்றன.

இலங்கைச் சரித்திரமும் இந்த ஸம்பவத்தைப்பற்றி உறுதியாகக் கூறுகின்றது (விஜேஸின்ஹாவின் மஹாவம்சம் மொழிபெயர்ப்பு). கி. பி. 642-க்குப்பின் அது நிகழ்ந்தது. ஏனென்றால் இந்தச்சரித்திரத்தின்படி சிங்களராஜ குமாரனான மாணவம்மன் வல்லபனை (புலிகேசி)த் தோற்கடிக்க நரஸிம்ஹனுக்கு உதவிபுரிந்தான். இலங்கைமீதுள்ள இரண்டுபடையெடுப்புகளும் அதற்கப்புறமே உண்டாயின.

இந்தப்படையெடுப்புக்களுக்கிடையிற்றான் நரஸிம்ஹன் சோழர்களையும் கேரளர்களையும், களப்ரர்களையும், பாண்டியர்களையும் கூரம் சாஸனங்களில் கூறுகிறபடி தோற்கடித்திருக்க வேண்டும்.

இலங்கையை ஜெயிப்பதற்குக் கப்பற்படையும் சேர்ந்திருக்கக் கூடும்; ஏனென்றால் மாணவம்மன் கப்பல்மார்க்கம் கடலைக்கடந்ததாக மஹாவமிசம் கூறுகின்றது.

பல்லவர்களின் கப்பற்படைக்கு மஹாபலிபுரத்துறைமுகம், கப்பற்படை ஸ்தானமாக இருந்ததென்று நாம் உத்தேசிக்கலாம். இப்பொழுதும் மாமல்லபுரம் எல்லாக் கப்பல்களுக்கும் ஒருதரையெல்லை ஸ்தானமாக வழங்குகிறது. மஹாபலிபுரத்திலுள்ள ஞாபகச்சின்னங்கள் மஹேந்திரவர்மனது மாதிரியாக இருக்கவில்லை யென்றும், முதலாவதுநரஸிம்ஹவர்மன்காலத்துக்குமுன் இந்தப்பட்டினம் இருந்ததில்லையென்றும் இந்த அரசனே அந்தப்பட்டினத்தை ஸ்தாபித்து அதற்குத் தனது மாமல்லன் என்றபெயரால் மாமல்லபுரம் எனப்பெயரிட்டான் என்றும், அவ்விடத்தில் ரதங்களும் குஹைகளும் வெட்டினான் என்றும் 'பல்லவர்பழமை' முதல் புத்தகத்தில் நான் நிரூபித்திருக்கிறேன்.

கி. பி. 650-இல் மஹாபலிபுரத்திலுள்ள பாறைகளின் கொத்து வேலை செய்யப்பட்டுவந்ததென்று நான் பூரணமாய் நம்புகிறேன். இலங்கைமீதுள்ள இரண்டாவது படையெடுப்பு விஜயமாகவே முடிந்தது. பல்லவச்சேனை இலங்கையை வென்றது. மாணவம்மன் இரண்டாவது ஹத்ததத்தன் தலையை வெட்டினான்.

இலங்கை எந்தவருஷத்தில் வெல்லப்பட்டது? பாதாமியைப் பிடித்தபிறகு இந்தத்தீவுக்கு இரண்டுபடையெடுப்புண்டானதாக நமக்குத் தெரியுமாகையால் இந்த வெற்றி அநேகமாய் கி. பி. 642-க்கு மிகவும் பின்னரே உண்டாயிருக்கவேண்டும். கி. பி. 650-க்குப் பின்னர் உண்டானதாகவே நான் கூறுகிறேன்.

ஹத்ததத்தன் மரணமும் மாணவம்மன் பட்டாபிஷேகமும் கி. பி. 691-இல் நிகழ்ந்தனவென்று மஹாவமிசம் கூறுகின்றது. இதை நாம் எவ்வளவுதூரம் மதிக்கலாம்?

மஹாவமிசத்தின் காலவரையறைகள் 24-வருஷங்களைத் தள்ளிப் பார்த்தால் பத்தாவது நூற்றாண்டிற்கு (கி. பி. 900-முதல் 1000-வரை) முற்றிலும் சரியானதென்று கூறலாமென நினைக்கிறேன்.



ஏழாவது நூற்றாண்டுக்கும் இந்தவிதி பொருந்துமா? 691-இல் இருந்து 24 வருஷங்களைக்கழித்துவிட்டால் 667 கிடைக்கின்றது. (அதாவது 650-ஐவிட 17 வருஷம் அதிகம்.)

கீழ்வருகிறபடி ஒருவாறு முடிவுசெய்யலாமென்று எண்ணுகிறேன். (1) முதலாவதுநரஸிம்ஹவர்மன் ஆளுகையின்இறுதியில் கி. பி. 660க்கு அணித்தாக இலங்கைவெல்லப்பட்டது. (2) சுமார் கால்நூற்றாண்டுகளைத்தள்ளிப்பார்த்தால் மஹாவமிசகாலங்கள் சரியாக இருக்கும்.

இதை உபயோகப்படுத்த இனிமேல் சந்தர்ப்பம் உண்டாகும்.

IV. இரண்டாவது மஹேந்திரவர்மன் ஆளுகை சுருக்கமானதாகவும் இருந்திருக்கலாம். அவன்மகன்காலத்துண்டான கூரம் சாஸனங்கள், அவன் ஆளுகை சுபிக்ஷமாயிருந்ததாகவும் வர்ணாச்சிரமதருமமுறையை அவன் சரியாய்ப்பாதுகாத்தானென்றும் கூறுகின்றன.

V. முதலாவதுபரமேசுவரவர்மன் வீரச்செயல்களைப்பற்றிக் கூரம்சாஸனங்கள் விரிவாகக்கூறுவதோடு அவனது சத்துருராஜன் பெயரையும் விளக்குகின்றன. அது பின்வருமாறு:—"அநேகலக்ஷம் படைகளையுடைய விக்கிரமாதித்தனைத்தோற்கடித்து ஒரு கந்தைத் துணியைமட்டும் மூடிக்கொண்டு பிறகிட்டோடும்படிசெய்தான்".

உதயேந்திரன் சாஸனங்களே யுத்தத்தின்பெயரை விளக்குகின்றன. (S. I. I. Vol. II. Part. III. P. 371.) அது பின்வருமாறு:— "பெருவளநல்லூரில் வல்லபன்சேனையைப்புறங்கண்ட பரமேசுவரவர்மன்" என்பது.

எனது அபிப்பிராயத்தில் இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கிற ஒரு முக்கியவிஷயம் என்னவென்றால், காஞ்சீபுரம் கைலாசநாதசுவாமி ஆலயத்திலுள்ள சிலாலிகிதங்களில் உக்கிரதண்டன், லோகாதித்யன் என வழங்கப்படும் (S. I I. Vol. I.) முதலாவது பரமேசுவரவர்மனுக்கும், முதலாவதுவிக்கிரமாதித்தனுக்கும் (ரணரஸிகன்) உண்டான யுத்தத்தின் காலநிர்ணயமே.

இந்தக்காலத்தைச்சரியாகக்கூறும் ஒரு பிரமாணம் 1910 முதல் நமதுகையில் இருக்கிறது. அது காட்வல் சாஸனங்களே. முதலாவது

விக்கிரமாதித்தன் காவேரியின் தென்கரையிலுள்ள சோழநாட்டில் தங்கியிருந்தபொழுது இந்திக்'கிரான்று'கொடுக்கப்பட்டது. (Ep. Ind. Vol. X. No. 2.)

அன்றியும் அரசாட்சியின்காலமும் சகாப்தத்தின்காலமும் அதிலுண்டு. சரியானகாலம் கி. பி. 674 என்பதில் சந்தேகமேயில்லை.

இனி மிகவும் முக்கியமான ஒரு இரண்டாவது விஷயத்தைக்கவனிப்போம்.

அந்தச் சாஸனங்களைப்பதிப்பித்த மிஸ்டர் ஹூல்ட்ஷ் சொல்லியிருப்பதாவது:-"விக்கிரமாதித்தன்இந்தக்'கிரான்று'கொடுத்தபொழுது அவன் சேனை சோழிகவிஷயத்தின்மேல் படையெடுத்துக் காவேரிநதியின் தென்கரையிலுள்ள உரகபுரத்தில் தங்கியிருந்தது. (I 25 f) அந்தச் சாஸனப்பிரதிகளை அனுப்பியபொழுது உரகபுரம் பாண்டியநாட்டின் தலைநகரமென்று காளிதாஸனுடைய இரகுவம்சத்தில் (VI-59.) கூறப்பட்டிருக்கிறதென்றும், அது திருச்சிராப்பள்ளிக்குச் சமீபத்திலுள்ள உறையூராயிருக்கலாமென்றும் வெங்கய்யா அவர்கள் சூசிப்பித்தார்கள். ஆனால் தற்காலத்திய நாகபட்டணமே கவிவழக்கில் உரகபுரமெனக் கூறப்பட்டிருக்கவேண்டுமென்று நான் எண்ணுகிறேன்."

மிஸ்டர் ஹூல்ட்ஷ் முழுதும் தப்பிவிட்டார் என்று நான் நினைக்கிறேன். இது சம்பந்தமாக நான் கண்டுபிடித்த ஒருவிஷயம் தருக்கமற்றதாக இருக்கிறது. முதலாவது பரமேசுவர வர்மனுக்கும் விக்கிரமாதித்தனுக்கும் போர்நிகழ்ந்த பெருவளநல்லூர்க்கிராமத்தை நான் கண்டுபிடித்துவிட்டேன். இது திருச்சிஜில்லா திருச்சிராப்பள்ளித் தாலூகாவில் காவேரியின் இடக்கரையில் திருச்சிராப்பள்ளிக்கு 10-மைலுக்கு வடமேற்கில் இருக்கிறது.

முதலாவது விக்கிரமாதித்தன் பாளயம் அடித்திருந்த உரகபுரம் திருச்சியையடுத்த உறையூர் அல்லவென்று சந்தேகிப்பது சாத்தியமானதல்லவென்று எண்ணுகிறேன்.

காஞ்சிபுரம் கைலாஸநாதசுவாமி ஆலயத்தினடியிலுள்ள ராஜஸிம்ஹனது சிலாலிகிதத்தில் (S. I. I. Vol. I P. 13) பரமேசுவரவர்மன் "ரணரஸிகனது பட்டணத்தைப் பாழாக்கின உக்கரதண்டன்" என்று



பட்டப்பெயர் சூட்டப்படுகிறான். காட்வல் சாஸனங்களிலும், விக்கிரமாதித்தனுக்கு "ரணரஸிகன்" என்று பட்டப்பெயர் கொடுக்கப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. ஆனால் 'ரணரஸிகன்' பட்டணம் என்று புனைந்து கூறப்படுவது எது?

அது பாதாமியாயிருக்க இடமில்லை. அங்ஙனமாயிருந்தால் பரமேசுவரவர்மன் தன்பாட்டனைப்போல் 'வாதாபிகொண்ட' என்னும் பட்டப்பெயரைச் சூட்டிக்கொள்ளத் தவறியிருக்கமாட்டான்.

ஆகையால் 'ரணரஸிக' பட்டணம் உரகபுரமே (உறையூர்) என்று நான் நம்புகிறேன்.

விக்கிரமாதித்தன் திருச்சிராப்பள்ளியில் பாளயமடித்திருந்தபொழுது கொடுக்கப்பட்ட காட்வல் சாஸனத்தில் ஒருவிஸ்தாரமான விவரணம் அடங்கியிருக்கிறது. அது சளுக்கர் தமிழ்நாட்டில் மூன்றாவது முறை படையெடுத்துவந்ததை ஒத்திருக்கிறது.

பல்லவர்கள் மாமல்லன் குடும்பத்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (5-ஆவது சுலோகம்).

முதலாவது பரமேசுவரவர்மன் சளுக்கர்களை எப்படித் தோற்கடித்தான்?

பாண்டியர், சோழர், கேரளர், களப்ரர், காவேர, பாரஸீக ஸிம்ஹள அரசர்கள் முதலியவர்களோடு சளுக்கர்கள் எதிர்த்துப்போர் செய்ததாகக் கேந்தூர் சாஸனங்கள் கூறுகின்றன. (Ep. Ind. Vol. IX No. 29 Page 205) ஆகையால் தென்னாட்டிலுள்ள ஜனங்கள் எல்லாம் படையெடுத்துவந்தவர்களுக்கு எதிரிகளாயிருந்தார்கள் என்று எண்ணுவது அஸம்பாவிதமாகாது. மூன்று அரசர்கள் ஐக்யகட்சிகளாக இருந்தார்கள் என்று மேற்படி சாஸனங்களே கூறுகின்றன. அவர்களில் ஒருவன் காஞ்சியரசனாகவும், இன்னொருவன் ஸிம்ஹளராஜனான மாணவர்மனாகவும் இருக்கலாம். இந்த அரசன் 35-வருஷம் அரசாண்டதாக மஹாவம்சம் கூறுகின்றது. அவன் கி. பி. 660-க்கு அணித்தாக ஸிம்ஹாஸனம் ஏறினானென்று இதற்குமுன் கூறியுள்ளோம். ஆகையால் அவன் கி. பி. 674-இல் திட்டமாக அரசாண்டிருக்கக்கூடும். அவன் முதலாவது நரஸிம்ஹவர்மனுக்கு மந்திரியாக இருந்தான். முதலாவது பரமேசுவரவர்மனுக்கு நண்பனாகவும் இருந்

திருக்கலாம். நாம் நம்புவது சரியாயிருக்குமாயின் கி. பி. 674-ஆவது வருஷத்தில், பல்லவர் உதவியால் அவன் ஸிம்ஹாஸனம் ஏறி 14-வருஷந்தான் கழிந்திருக்கவேண்டும். ஆகையால் பல்லவர்களுக்கு ஆபத்து நேர்ந்தபொழுது அவன் உதவிசெய்து பிரதிநன்றி காட்டவேண்டியது முறைமைதானே?

சளுக்கர்களுக்கு எதிரான ஐக்யகட்சியில் சேர்ந்த மூன்றாவது அரசன் பாண்டியனாயிருக்கலாம். பாண்டியர்கள்சரித்திரத்தைப்பற்றிக் கூறும்போது இந்தவிஷயத்தைக் கவனிப்போம்.

விக்கிரமாதித்தன் தோல்வியடைந்தபின்னும் சிலவருஷம் பரமேசுவரவர்மன் வாழ்ந்திருந்தான் என்பது நிச்சயம்; ஏனென்றால் கூரம் சாஸனங்கள் இந்தஸம்பவத்துக்குப் பிற்பட்டவை. ஆனால் துர்ப்பாக்கியவசமாய் அவைகளில் தேதிவைக்கப்படவில்லை.

கூரத்தில், வித்யாவிநீத பல்லவன் கட்டிய ஆலயத்திலுள்ள வித்யாவிநீத பல்லவ பரமேசுவரக் கடவுளுக்கு ஏற்படுத்திய கட்டளையைப் பற்றிக் கூறுவதே கூரம்சாஸனங்களின் உத்தேசம் (S. I. I. Vol. I. P. 154).

இப்பொழுது கூரத்தில் ஒரு சிவாலயம் இருக்கின்றது. இந்த ஆலயத்திலுள்ள நந்திவர்ம மகாராஜனது ஒரு சிலாலிகிதத்தை 'எபிக்ராபிகல் டிப்பார்ட்டுமென்றார்' பகர்த்தியெடுத்திருக்கிறார்கள் (No. 38 of 1900). எழுத்து 9-ஆவது நூற்றாண்டிலுள்ளதாகத் தோற்றுகின்றது. முதலாவது பரமேசுவரவர்மன் காலத்ததாக ஒரு சிலாலிகிதமும் அவர்களால் கண்டுபிடிக்கப்படவில்லை.

நான் இந்தஸ்தலத்துக்குச் சென்றிருந்தபொழுது இதுவரையிலும் ஒருவராலும் கூறப்படாத ஒரு சிலாலிகிதத்தைக் கண்டுபிடித்தேன். அது செவ்வையாகப் பாதுகாக்கப்பட்டிருந்தும் எழுத்துக்கள் எல்லாம் தெளிவாகவும் ஆழமாகவும் பொறிக்கப்பட்டிருந்தும் அதை இதுவரையிலும் ஒருவராவது கண்டுபிடிக்காதது ஏதனாலென்று விளங்கவில்லை. அந்தச்சிலாலிகிதம் பின்வருமாறு (Plate III).

ஸ்ரீபல்லவ மாராசன்.

இதில் அரசன் பெயர் இல்லை. எழுத்துக்களைப்பார்த்தால் அந்த லிகிதம் மிகப்பழமையானதென்று சொல்லத்தடையேயில்லை. ஸ்ரீ வ.



என்னும் இரண்டு எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருக்கும்மாதிரியைக் கவனித்தால் அந்த லிகிதம் ஏழாவது நூற்றாண்டில் தோன்றியதென்று சொல்ல இடமுண்டு. ஆகையால் சாஸனங்களில் கூறப்படும் வித்யாவிநீதபல்லவ பரமேசுவர ஆலயம் கூரத்திலுள்ள இந்தச் சிவாலயமே. ஆனால் அது மிகவும் ஜீரணப்பட்டிருக்கிறது. பக்கத்திலுள்ள மண்டபம் பழையகற்களைக்கொண்டு கட்டப்பட்டது என்பதற்கு ஸந்தேகமேயில்லை. கர்ப்பகிருஹத்தில் அடித்தட்டுமட்டுமே இப்பொழுது மீதமாக இருக்கிறது. அதிலிருந்து இரண்டு முக்கிய விஷயங்களை அறியலாம்.

(1) ஆலயம் மஹாபலிபுரத்திலுள்ள ஸஹதேவர் ரதத்தைப் போலக் குவிந் (apsidal) திருக்கிறது.

(2) அநேகபல்லவாலயங்களிற்போல மூலஸ்தானவாயில்மேற்கு முகமாகவே இருக்கிறது.

அநேகமாய் மஹாபலிபுரத்திலுள்ள எல்லா ஆலயங்களும், காஞ்சிபுரத்திலுள்ள அநேக பல்லவாலயங்களும் மேற்குமுகமாகவே இருக்கின்றன.

கூரத்திலுள்ள பரமேசுவர ஆலயம் கண்டுபிடிக்கப்பட்டதனால் இரண்டு முக்கிய விஷயங்கள் அறியப்படுகின்றன.

(1) கூரம் சாஸனத்தில் உத்தேசிக்கப்பட்ட ஆலயத்தைக் கண்டுபிடிக்கப்பட்டது.

(2) ஆலயம் ஜீரணப்பட்டிருக்கிறது. ஆனாலும் மீதமாயிருப்பது தென்னிந்தியாவில், ஒன்றின்மேல்ஒன்றாகக் கல்லடுக்கிக்கட்டப்பட்ட ஆலயங்களிலெல்லாம் மிகப்பழமையானது.

VI 'பல்லவர்பழமை' முதல் அத்தியாயத்தில் முதலாவது பரமேசுவர்வர்மன் மகன் ராஜஸிம்ஹன் என்னும் பட்டப்பெயருடைய இரண்டாவது நரஸிம்ஹனைப்பற்றிக் கூறியுள்ளோம்.

நெடுங்காலம் ஸமாதானமாக அரசாண்ட பல்லவ அரசன் அவன் ஒருவனே. காஞ்சீபுரம் கைலாஸநாதசுவாமி ஆலயத்தையும் மஹாபலிபுரம் கடற்கரை ஆலயத்தையும் பனைமலை ஆலயத்தையும் பிரதிஷ்டைசெய்து சிவனடியார்களுக்குப் பலநன்மைகளும் புரிந்தானேயல்லது அவன் வேறொன்றுமே செய்ததாகத் தோன்றவில்லை. இந்தப் பட்டிகையோடு காஞ்சீபுரத்திலுள்ள ஐராவதேசுவரர் ஆலயத்தையும் சேர்க்கலாம். நிமிர்ந்த சிங்கங்களையும் ஸோமாஸ்கந்தவிக்கிரகத்தையும் முக்கோணவடிவலிங்கத்தையும் உடைய இந்த ஆலயத்தில் ராஜஸிம்ஹன்காலத்திய எல்லாச்சிற்பநுட்பங்களும் அடங்கியிருக்கின்றன. இதன்பொதுவான தோற்றத்தைப்பார்த்து இந்த ஆலயம் பல்லவர்களால் கட்டப்பட்டதென்று மிஸ்டர் A. ரே சொல்லுகிறார். ஆனாலும் ராஜஸிம்ஹன்அரசாட்சிக்காலத்திற்கட்டப்பட்ட ஆலயங்களில்

இதையும் உட்படுத்தப் போதுமான ஒரு தெளிவும் சிலாலிகித இலாகா இதுவரை காட்டவில்லை.

பல்லவர்களால் கட்டப்பட்டதா அல்லவா என்று சந்தேகத்தி லிருக்கிற இந்த ஆலயத்தை எபிக்ராபிகல்டிப்பார்ட்டுமென்றிலுள்ள உத்தியோகஸ்தர்கள் இதுவரையிலும் போய்ப்பார்க்கவில்லை. 1917 ஜனவரியில் நான் மாமண்டூருக்குப்போனபொழுது காஞ்சீபுரத்திலிறங்கி நூதனமாய் ஏதாவதுகண்டுபிடிக்கலாம் என்ற நோக்கத்தோடு எல்லா ஆலயங்களையும் போய்ப்பார்த்தேன்.

காகேசுவர ஆலயச்சந்நிதிக்கு எதிரேயுள்ள அநேக வீடுகளுக்கு நடுவே ஐராவதேசுவரர் ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. இதைப்பரிசோதனைசெய்துபார்த்தபொழுது இந்த ஆலயத்தின் அடிப்பாகத்தில் எல்லாம் பழுதுபட்டுப்போன பல லிகிதங்களைப்பார்த்தேன். ஒருபகுதி தமிழிலும் ஒருபகுதி கிரந்தத்திலும் எழுதப்பட்டிருந்தன.

திருநடைக்கு வலப்புறத்தில் ஆலயத்தின் அடிக்கட்டில் ஒரு சிலாலிகிதத்தின்பகுதியைக்கண்டு அதைப்பகர்த்தியெடுத்தேன். அது மிகவும் முக்கியமானது என்று சொல்லத்தடையே யில்லை. நரஸிம்ஹன் என்றபெயர் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. (Vide plate III)

VII. ராஜஸிம்ஹன் மகனுன இரண்டாவதுபரமேசுவரவர்மன் காஞ்சீபுரம் வைகுண்டப்பெருமாள் ஆலயத்தைக்கட்டியிருக்கலாம்.

திருவாதியிலுள்ள வீரட்டானேசுவரர் ஆலயத்தில் பரமேசுவர போத்தரையர்காலத்திலுள்ள ஒரு சிலாலிகிதம் இருக்கிறது. (No. 56 of 1903) திருவாதி ஆலயவிமானத்துக்கும் காஞ்சி கைலாஸநாத சுவாமி ஆலயவிமானத்துக்கும்உள்ள தோற்ற ஒற்றுமையைப்பற்றி 'பல்லவர்பழமை' முதற்புத்தகம் 72-ஆவது பக்கத்தில் சொல்லி யிருக்கிறேன். ஆகையால் திருவாதிச்சிவாலயம் இரண்டாவதுபரமேசுவரவர்மனுல் கட்டப்பட்டதென்று எண்ணவேண்டும். ஆனால் இந்த ஆலயம் பலமுறை பழுதுபார்க்கப்பட்டும் இருக்கிறது. நிருபதுங்கன் காலத்தில் பழுதுபார்க்கப்பட்டதென்று 1903-ல் 35-ஆவது லிகிதத்தினுல் அறியப்படுகின்றது.

பாமேசுவரவர்மனது அரசாட்சியின் மூன்றாவதுவருஷத்தில் திருவாதிலிகிதம் பொறிக்கப்பட்டது. அவரது அரசாட்சி சுருங்கியகாலத்ததாக இருந்திருக்கலாம்.

(தொடரும்.)

பண்டிதர். S. முத்துசுவாமிப்பிள்ளை,
ஸெண்ட் ஜோஸப் ஹைஸ்கூல்,
திருவனந்தபுரம்.

---

600 008

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று

மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

### பதினாறாந்தொகுதி.

மதுரைத்தமிழ்ச்சங்கம் THE MADURA TAMIL SANGAM

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப் பதிப்பு.

1917—1918.

# செந்தமிழின்
# பதினாறாந்தொகுதியுள்ளுறை.


| | | |
|---|---|---|
| அக்கிராசனர் பிரசங்கம்:— | ஸ்ரீமத். கே. ஜி. சேஷையரவர்கள். | ௪௪௨ |
| அச்சிட்டகுறுந்தொகையுரை:— | ,, ஆ. கார்மேகக்கோனாரவர்கள். | ௫௪௭ |
| அநுதாபக்குறிப்பு:— | பத்திராதிபர். | ௨௮௦ |
| அந்தகக்கவி வீரராகவ முதலியார்காலம்:— | ,, வே. ஜோ. தம்பிப்பிள்ளையவர்கள் M. R. A. S. | ௩௪௫ |
| அமைச்சரின்தன்மையும் ஒழுக்கமும்:— | ,, ஒருமாணவன். | ௨௮௬ |
| அரியவினாக்கட்கு உரியவிடை:— | ,, வெ. இராஜகோபாலையங்காரவர்கள். | ௧௮௫ |
| அருங்கலச்செப்பு:— | ,, பெ. மு. மதுரையாரவர்கள். | ௩௮௪ |
| அறியாமைவினா:— | ,, நா. கனகராஜையரவர்கள். | ௩௬௭ |
| இந்திரவிழா:— | ,, சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். | ௪௨௧ |
| இந்துதேசசரித்திர காலக்குறிப்புகள்:- | ,, R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள். B.A., B., L., | ௧௪௪, ௨௧௬, ௨௮௯, ௪௦௯, ௫௩௯ |
| இரங்கற்பாக்கள்:— | ,, வே. முத்துசாமி ஐயரவர்கள், M. A., L. T., | ௨௭௭ |
| இரங்கற்பாக்கள்:— | ,, சு. நல்லசிவன்பிள்ளை. | ௫௧௮ |
| இரணியன்வதைப்பரணி:— | சு. நல்லசிவன்பிள்ளை. | ௧௫௭, ௨௦௯ |
| இலக்கியங்கண்டதற்கிலக்கண்மியம்பல்.— | ,, M. K. M. அப்துல்காதிறுராவுத்தரவர்கள். | ௪௯௨ |
| இல்லறம்:— | ,, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள். | ௨௬௫ |
| இவனியாரென்னும் புறப்பாட்டாராய்ச்சி:- | ஒருமாணவன். | ௨௫௨ |
| உபந்யாஸம்:—ஸ்ரீ. 7. | ,, ஸ்ரீ. இராமையங்காரவர்கள். | ௧௧௨ |
| உரைநுட்பம்:— | ,, மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள். | ௯௮ |
| ஷை | ,, நா. கந்தையப்பிள்ளையவர்கள். | ௩௧௧ |
| ஐயவினா:— | ,, தமிழ்மாணவன். | ௧௦௫ |
| ஐயவினாவுக்குவிடை:— | ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். | ௧௬௯ |
| ஒரு விஞ்ஞாபனம்:— | ,, வெ. இராஜகோபாலையங்காரவர்கள். | ௭௩ |
| ஓர் ஐயவினா:— | ,, சிவத்யானானந்தரவர்கள். | ௫௫௨ |
| ஓர் போலிமேற்கோள்:— | ,, பண்டித S. சுப்பிரமணியசாஸ்திரியவர்கள். | ௩௦௫ |

ஓர் வேண்டுகோள்:— ,, ஆர். வேங்கடாசலம்பிள்ளையவர்கள். ௩௩௩
கபிலர் கவித்திறம்:— ,, வே. முத்துசாமி ஐயரவர்கள், M. A., L. T., ௮௧
கம்பர்திருநட்சத்திரம்:— ,, R. M. இராமசுவாமிசெட்டியாரவர்கள். ௩௮௬
கம்பராமாயணத்தின் விகற்பம்:— ,, M. Julien Vinsum Avergal. ௩௧௩
கரந்தைத்தமிழ்ச்சங்கம் தஞ்சை:— ,, ஆ. ச. ஆறுமுகம்பிள்ளையவர்கள். ௧௮௮
களவழியிற்குறித்த கழுமலம்:— ,, ஆ. கார்மேகக்கோனரவர்கள். ௨௮௨
காந்தமனும் ககந்தனும்:— ,, சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். ௩௯௩
காளிதாஸர் காலநிர்ணயம்:— ,, கே. ஜி. சங்கரையரவர்கள். ௪௭௮
கொங்கதேச அரசர்கள்:— ,, ௩௯௩
சளுக்கியவிக்கிரமாதித்தன் சரித்திரம்:— ,, அ.வா. வெங்கடராமையரவர்கள். ௪௫௩, ௫௨௩, ௫௯௩
சிலாசாஸனவாராய்ச்சி:— ,, து. அ. கோபிநாதராவ் அவர்கள், M. A. ௧௩௪
சிறியார் அறியாச்செந்தமிழ்ச்சிறப்பு:— ,, N. V. சுந்தரராஜையரவர்கள். ௧௭
சிற்பமுதலியவற்றாற் றெரியும் புத்தசரித்திரம்:— ,, து. அ. கோபிநாதராவ் அவர்கள், M. A. ௨௪௩
செந்தமிழபிமானிகளுக்கு ஒரு விஞ்ஞாபனம்:— ,, K. G. சங்கரையரவர்கள். ௫௦௭
செந்தமிழ்நேயர்கட்கு:— ,, J. M. Gnanadikam S. J. ௩௭௪
செய்மங்களக்கொண்டாட்டநாட்பிரசங்கம்:— ,, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள். ௪௬௯
சேக்கிழார்வாக்கு:— ,, சி. குருசாமிமுதலியார். ௫௧௫
சேதுபூசித்தபடலம்:— ,, நா. கனகராஜையரவர்கள். ௪௩௧
சேரமான்பெருஞ்சேரலாதன்:— ஒருமாணவன். ௫௫௩
சேரமான்பெருமான் ஸ்ரீமூலபூபன் திருத்தசாங்கம்:— ,, S. முத்துசுவாமிப்பிள்ளையவர்கள். ௧௯௮
சேரர்தலைநகர்:— ,, வி. வெங்கடராமசர்மா அவர்கள். ௨௬
ஜைனநூல்களின்கவி மேன்மையும் கால நிர்ணயமும்:— ,, K. G. வீரராகவையரவர்கள். ௧௭௦, ௨௨௫



சோதிடப்பொருத்தம்:— ,, பண்டித S. சுப்பிரமணியசாஸ்திரியவர்கள். ௩௦௬
சஷ்டிபூர்த்திச்சரிதம்:— ,, S. முத்துசுவாமிப்பிள்ளையவர்கள். ௩௨௧
தமிழ்நாடுகளும் பண்டித சுப்பிரமணிய சாஸ்திரியாரும்:— ,, வே. ஜோ. தம்பிப்பிள்ளையவர்கள், M. R. A. S. ௩௫௨
தமிழ்மொழிப்பரிபாலனம்:— ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௪௩௬
திசைச்சொல்:— ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௫௩
திருஞானசம்பந்தசுவாமிகள் பிள்ளைத்தமிழ் ,, S. சோமசுந்தரதேசிகரவர்கள். ௩௭௫
திருத்தணிகைப்புராணஓர் அருஞ்செய்யுள் விளக்கம்:— ,, ஜி. சதாசிவம்பிள்ளையவர்கள். ௨௦௬
தொல்காப்பிய ஆராய்ச்சி:— ,, பெயர்விழையான். ௨௦௨
தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்:— ,, நவநீதகிருஷ்ணபாரதியவர்கள். ௩௧௬
நிகண்டுகேற்றல்:— ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௪௭௫
பண்டைத்தமிழரசர்கள்:— ,, R. ரெங்காச்சாரியாரவர்கள், M. A. L. T. ௧௧௩
பதார்த்ததீபிகை:— ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௫௧
பரிபாடல்:— ,, பத்திராதிபர். ௪௩௩
பல்லவசரித்திரம்:— ,, S. முத்துசுவாமிப்பிள்ளையவர்கள். ௫௩௧, ௫௭௫
பிரதிவிஞ்ஞாபனம்:— ,, பத்திராசிரியர். ௭௭
பிழைதிருத்தம்:— ,, நவநீதகிருஷ்ணபாரதியவர்கள். ௪௭௩
பிழைதிருத்தம்:— ,, பத்திராதிபர். ௫௧௭
புதல்வரைப்பெறுதல்:— ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள். ௨௮௧
புத்தகமதிப்புரை:— பத்திராதிபர். ௫௫, ௧௧௧, ௧௯௭, ௩௮௮
புறநானூறுவைப்பு முறை:— ,, S. சோமசுந்தரதேசிகரவர்கள். ௨௦௦
பெண்கல்வி:— ,, ஊ. சா. வேங்கடராமையரவர்கள். ௩௬௯
பெருவல்லம் என்ற ஊர்ப்பெயர் ஆராய்ச்சி ஐயவினா:— ,, பு. சிதம்பர புன்னைவனநாதமுதலியாரவர்கள். ௩௧௫
பெருவல்லம் ஓர் நூற்பெயராமா:— ,, பெயர்விழையான். ௪௦௬
மக்கட்கின்றியமையாக் கொள்கைகளுட் சில:— ,, ஊ.சா. வேங்கடராமையரவர்கள். ௫௫௫

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| மங்களவாழ்த்து:— | சு. நல்லசிவன்பிள்ளை. | ருOகூ |
| ஷை | ,, வி. திருஞானசம்பந்தக்கவிராயரவர்கள். | ருகக |
| ஷை | ,, M. K. M. அப்துல்காதிறுராவுத்தரவர்கள். | ருகங |
| ஷை | ,, பெரியசாமிசேர்வையவர்கள். | ருகச |
| மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகசபைத்தீர்மானங்கள்:- | ,, ஜாயிண்டுசெக்ரிடெரியவர்கள். | ருஉக |
| மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினேழாவதுவருடக்கொண்டாட்டம்:— | பத்திராதிபர். | சஙரு |
| மதுரைத்தமிழ்ச்சங்கப் பரீக்ஷைகளின் தேர்ச்சி விவரம்:— | ,, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியவர்கள். | ஙஙங |
| மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் மகாசபைத்தீர்மானங்கள்:— | ,, ஜாயிண்டுசெக்ரிடெரியவர்கள். | ருககூ |
| மதுரைத்தமிழ்ச்சங்கவாழ்த்து:— | ,, ம. கோபாலகிருஷ்ணையரவர்கள். | கOகூ |
| மனுமுனிவர்காலத்துச் சலப்பிரளயம்: | ,, வே. ஜே. தம்பிப்பிள்ளையவர்கள். M. R. A. S. | ஙச |
| யானைக்கட்டேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை:— | ஒருமாணவன். | ஙஙஎ |
| யோசனையைப்பற்றிய ஒரு குறிப்பு:— | ,, ஊ. சா. வேங்கடராமையரவர்கள். | ஙஅரு |
| வஞ்சிமாநகராராய்ச்சி:— | பத்திராசிரியர். | க, ருஎ |
| வஞ்சிமாநகர்ப்பெயர்க்காரணம்:— | ,, சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள். | கOஉ |
| வணங்குமொழிவிண்ணப்பம்:— | ,, கந்தசாமியாரவர்கள். | கஙO |
| விஞத்தொடர்:— | ,, ஆர். வேங்கடாசலம்பிள்ளையவர்கள். | கOச |


**செந்தமிழ்ப் பதினொருந்தொகுதியில் வெளிவந்த நூல்:-**

(முற்றுப்பெற்றது)

அழகர் பிள்ளைத்தமிழ். } பத்திராதிபர் அ, கூ, கO, கக, கஉ பகுதிகள்.



ஸ்ரீராமஜெயம்.

திருமாலிருஞ்சோலைமலை

# அழகர்பிள்ளைத்தமிழ்.

பாயிரம்.

## துதிகவி.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

வெள்ளைத்தமிழ்கொடுலகினிற்பல்புலவர்விருப்பால்விளம்பேனைப்
பிள்ளைத்தமிழ்பிள்ளைத்தமிழேபெருமானலங்காரன்பொருட்டால்
வள்ளைத்தமிழ்கூர்வேம்பத்தூர்வருமாண்புலவோர்வகுத்ததனைப்
பிள்ளைத்தமிழேயெனுஞ்சிறுமைபெருமைபெரியதமிழெனுமால்.

## காப்பு.

நேரிசைவெண்பா.

செய்யா டிருமார்பன் செங்கமலக் கண்ணினன்
மைய்யா ரழகன் மலர்த்தாளின்—மெய்யாகச்
செப்புபிள் ளைத்தமிழ்க்குச் சிந்துரமுன் வந்தளித்த
துப்பனைய பாதந் துணை.

## அவையடக்கம்.

நீரரு மானதப் பெருவாவி பூத்ததொளை
நெடுநாள முளரியேறி
நீறுபடு பொற்சுண்ண மாடிமது வுண்டு * மகிழ்
நிலவுதெரி தூவியன்னம்

* மதி - பி-ம்.

ஆராரு யுகளவும் புனலறு கருஞ்சேற்றி
னடைவாடு புல்லிதழ்ப்பூ
வாம்பலின் மணந்தது கடுக்குமறை யொருநான்
காற்றுநெடு மாலாயிரம்
பேராரு தோதுகா வீறுபெறு குருகைமுனி
பிரமன் பராசரன்முதற்
பெற்றமுனி முதலாம் வரத்தினர் முகத்தினிற்
பெரு(1)விழவு கொண்டிருக்கும்
வாராரு தண்ணுந் தெழுந்ததனை முலைவாணி
மதிதவழ வமுதுபாயும்
மாலிருஞ் சோலைமலை மாலலங் காரனை
வழுத்துமென் னுவாழ்ந்ததே. (க)

ஆகத் திளந்தென் றறைவாச் செந்தழ
லரும்பிலைச் சூதத்தின்வாழ்
அஞ்சிறைய யாழிசை மிடற்று(2)குயி லோசையென்
னமிர்தமிசை யுண்டசெவிகள்
காகத்தின் வெம்புலாற் பகுவாய் திறந்தலறு
கடியகுர லாயதீய
கடுவூண் மிசைந்தது நிகர்க்குமருண் மாலையிற்
கதிரொளி பரப்பு(3)மங்கண்
மாகத்து மீன்கண நறுந்தண ரொளிப்பவிசை
வண்டுழு படப்பைமுதலின்
வாவியலை கரை(4)தாவி மீனொளிக் கும்புதுவை
வல்லிதமிழ் கேட்டுநாக
போகத்து வெண்டிரைப் பாற்கடலின் விழிதுஞ்சு
பூந்துழாய்க் கொண்டல்சோலைப்
பொருப்புறையு மாயவன் மாலலங் காரனென்
புன்கவிச் சொற்கொண்டதே. (உ)

(1) விழைவு - பி-ம்.
(2) குயில்கூவுமின்னமிர்தமொழி. பி-ம்.
(3) பரப்பியங்கண். பி-ம்.
(4) தாவ. பி-ம்.

## அவையடக்கம்

வழியும் பசுந்தேன் பெருக்கா றெடுத்தோட
மலர்விண்ட முள்ளரைத்தாள்
மரகதத் தண்பா சடைக்கமல வீட்டுறையு
மறைய*வன் சென்னிமுதல்பார்
இழியுங் குலத்தினவர் கழிமுடைத் தலைகடை
யிரந்துமண் கொள்ளமறைநான்
கிருக்குந் துணைத்தாள் பழித்தது நிகர்க்குமட
விளையநில வேறுகண்டற்
கழியும் புனற்சுழியும் வளையுமுஞ் சோலைமலை
காவலன் றுளவநெடுமால்
கண்ணகன் கோநகர்ப் புதுவைகுடி வாழிளங்
கன்னியுந் தாய்முலைக்கண்
பொழியும் பசும்பா லுருமழலை மாறன்†முதல்
புலவர்பதின் மரும்வழுத்திப்
புனையுந் தமிழ்ப்பாடல் கொண்டதோ ளடியென்மொழி
புன்கவித் தொடைகொண்டதே.

விரவுந் திரைப்புனற் கங்கையங் கடவுணதி
வெள்ளம் பரந்திருப்ப
வினைபுரி குறுந்தொழுவர் தருமிழி கலத்துநீர்
விதுரனின் றுள்சொரிந்தெட்
டரவுங் குலக்கிரியு மணையும்வண் கடல்வேலி
யவனிதிரு வயிறிருப்ப
அவன்மனைப் புன்கவைச் சிற்றடிசி லன்றுணக்
கவனளித் ததுநிகர்க்கும்
குரவும் பசுந்துளவு மணநாறு கொந்தளக்
கொடியிடைப் புதுவைவாழும்
கோதையுஞ் சங்கணி துறைக்குருகை மாநகர்க்
குழவிமுத லவர்பதின்மரும்
பரவும் பழம்பாடன் மறைமொழிச் செந்தமிழ்ப்
பாமாலை கொண்டதோளிற்
பழவடியென் வழுவுடைச் சொன்மாலை சூட்டியது
பைந்துழாய் மலையழகனே.

அவையடக்கமுற்றும்.

* மறையவன். பி-ம். † முதல்புலவர் - வினைத்தொகை.

## அழகர்பிள்ளைத்தமிழ்

மடப்பாவை மார்பொய்தல் வண்டலாட் டயரவுகை
மணியூச லாடமேலை
மங்குல்வாய் நெஞ்சம் பிளக்கவுயர் சிமயத்து
மதிவந்து போனவழியே
நடப்பாக வந்துசதி ரிளமாதர் தம்மோடு
நாளும்வினை யாடுமெல்வாழ்
நாரணனை மாலலங் காரனை வழுத்துமென்
னன்கவிதை வாழ்கவென்றே. (௪)

## திருமங்கையாழ்வார்.

பொருமட னெடுஞ்சுடர்ப் போராழி மால்கரப்
பொன்னாழி கொளவந்தமால்
புட்பிடர் வரக்கண்டு மெய்ஞ்ஞான வெள்ளம்
புறம்பொங்க வுட்களித்துத்
திருமட னெடுந்தாண் டகங்குறுந் தாண்டகச்
செய்யுண்முதல் பலவுரைக்கும்
திருமங்கை முனிகலிய னற்கவிக் கொண்டல்பூஞ்
சேவடி துதிப்பென்முந்நீர்
இருமடங் கூறுங் கடாங்கவுட் டுங்கவிழி
யிருகடையும் வடவைதூங்க
இருசெவித் தலைகடைக் காறாங்க மாமன்விடு
மிகல்கரி மருப்புவாங்கி
வருமடங் கற்குருளை மாலிருஞ் சோலைமலை
மாலலங் காரர்பச்சை
வண்டுழாய் மணநாறு மிருதோளு மிருதாளும்
வாழ்த்துமென் கவிதழையவே. (௫)

## திருமழிசையாழ்வார்.

சூட்டுநா கப்பணப் பள்ளிப் பெரும்பாய்
சுருட்டிடத் தமிழ்க்கச்சியிற்
றுளவக் கருங்கட னட்பக் குடந்தையிற்
றுயிலுமுகி றலையணைப்பாய்

## பழிச்சினர்ப்பரவல்

பாட்டுநா வுரைசெயுந் திருமழிசை வேந்தன்
பரந்துலாஞ் சிந்தைபொறியின்
பாலணு குருவகை நிறுத்துமுனி தாமரைப்
பாதந் துதிப்பென்மலர்பூ
வீட்டுநான் முகமுனியு நாட்டமா யிரமுடைய
வேந்தனும் விபுதர்குழுவும்
வெட்சியந் தெரியல்புனை வேளும்வா ரணமுகனும்
வெள்ளிவெண் கோடுகூடாக்
கோட்டுநா ளிளமதிக் கண்ணியங் கடவுளுங்
கூண்டுவலம் வந்திறைஞ்சும்
குலமலைத் தலையுறையு மாலலங் காரனைக்
கூறுமென் கவிதழையவே.

## தொண்டரடிப்பொடியாழ்வார்.

இருமாலை யாகப் பரந்தபூங் காவிரி
யிரண்டிடைச் சூட்டுநெற்றி
யெரிமணிப் பாம்பணைத் துயில்கொள்ளு மொருமாலை
யிசைமுறை பழுத்தசெஞ்சொற்
றிருமாலை சூட்டுபவர் தொண்டர்த மடிப்பொடித்
தெய்வமுனி யறிவின்வடிவாம்
செந்தா மரைத்தா ளுளத்தா மரைத்தலஞ்
சேர்த்துவென் றன்னைமுன்னாட்
டருமாலை யப்புணரி நீத்திளந் தெய்வமான்
றருணமணி யாரமார்பிற்
றூர்பட்ட தண்டுழாய்க் காட்டுள்விளை யாடமகிழ்
சங்கேந்து கொண்டல்கன்னற்
பொருமாலை விண்டசா றோடமத வேழம்
புழைக்கர மெடுத்துநீந்தும்
பொங்கர்மலி யிடபகிரி மாலலங் காரனைப்
புகழுமென் கவிதழையவே.

## திருப்பாணாழ்வார்.

விழித்தா மரைத்துணையின் வேறுநோக் கலமென்று
　　விரிதிரைப் பொன்னிநாப்பண்
விழிதுயில் கருங்கொண் டலைப்பரவி யானந்த
　　வெள்ளத்து மூழ்கியியலின்
மொழித்தாம் மொருபத்து மிருதோ ளணிந்தந்த
　　முகிலின்வடி வுட்கரந்த
முனிவன் றுணைப்பதம் வழுத்துவென் சொல்லையம்
　　முல்லைப் புலத்துலாவித்
தெழித்தா மழக்கன்று தேடிமுலை யமுதந்
　　தெருத்தலை நனைப்பவோடிச்
செல்லமருண் மாலையிற் பின்செலுங் கண்ணனைத்
　　திசைமுக னிருக்குமுந்திச்
சுழித்தா மரைக்கடவுண் மாலலங் காரனைச்
　　சோலைமலை வீற்றிருக்கும்
சுந்தரத் தோளனைத் தொண்டனே னுரைசெயுஞ்
　　சொற்பாடல் வளர்வதற்கே.

## சூடிக்கொடுத்தநாச்சியார்.

பாடற் சுரும்புழு துழாய்வாட வெயினின்று
　　பவளவா யீரமாறுப்
பச்சைப் பசுஞ்சொற் புதுப்பாட லுஞ்சுருள்
　　பனிக்குழன் முடித்துதிர்க்கும்
வாடற் பழஞ்சருகும் வேட்டாங் கேசனும்
　　மலைகுனிய நின்றமுகிலும்
மாலலங் காரனு மிரப்பவருள் புதுவைவரு
　　வல்லியிரு தாடுதிப்பென்
* சேடற் பெரும்பள்ளி விழிதுஞ்சு பாற்கடற்
　　சேர்ப்பற்கு மணிவரன்றிச்
சிலம்பாறு பாயுஞ் சிலம்பற்கு வெள்ளவொளி
　　தேங்கியலை வைகுந்தவா
னுடற்கு முல்லைப் புலத்தா நிரைப்பின்
　　னடந்ததா ளண்ணலுக்கு
நான்மறைப் பொருளாய வழகற் குரைக்குமென்
　　னன்கவிதை வாழவென்றே. (௧)

* சேடற்பெரும்பள்ளி - ஒன்றியற்கிழமைக்கண்வந்த ஆறும்வேற்றுமைத் தொகை. றகரம், வலித்தல் விகாரம்.



## மதுரகவியாழ்வார்.

மட்டோ லிடுந்தொங்கல் வகுளமண நாறுதோண்
　　மாறன்வண் டமிழ்படுத்தி
வனசவீட் டுறையுமுனி தன்னாலு மெழுதொணா
　　மற்றநாலு மெழுதுவிக்கப்
பட்டோலை யெழுதியாங் கவனையீ ரைந்துகவி
　　பாடிநெடு மாறனையும்
பாடாத மதுரகவி யிருதா டுதிக்குவென்
　　பைங்குவளை மென்றுமேதி
நெட்டோடை யுட்புகச் சுரிசங்கு துண்ணென
　　நிலாமணிக் கருமுதிர்ந்து
நெடுவரம் புந்தவழ்ந் தேறிவிளை வயல்புகுத
　　நெற்குலை யரிந்தமள்ளர்
கட்டோடு தலைமீதி லாகியுதிர் நெல்லுடன்
　　கதிர்மணி யுகுக்கும்யாணர்க்
காமலையின் மாலலங் காரனைப் பாடுமென்
　　கவிதழைத் தோங்கவென்றே. (௨)

## எம்பெருமானார்.

மறைமயக் கெவரும் புலப்பட வுணர்ந்தறிய
　　வாய்மைபெறு பொருளுரைத்து
மாறுபடு சமயங்கள் வாக்கினால் வென்றுதிரை
　　வாரிதி வளாகத்தின்வாய்
இறைமயக் கந்தவிர்த் தியாவர்க்கும் பாவைக்கு
　　மேபிரா னுழிசங்கம்
ஏந்துமா லென்றுறுதி யாக்கிரா மானுசன்
　　னிருசரண நெஞ்சுள்வைப்பென்
பிறைமயக் குங்குறு நுதற்கோவி மார்குழிசி
　　பெய்தவளை யெற்றுபந்து
பிறழொளி மணிக்கழங் கிவைகொண்டு நாளும்
　　பெருங்கலக மிட்டுமுடனே

குறைமயக் குங்கண் பிசைந்தழு தசோதைதன்
கோபந் தணிப்பமணிவாய்க்
† குறுநகை விரித்தமுகின் மாலலங் காரனைக்
கூறுமென் கவிதழையவே.

## வேதாந்ததேசிகர்.

திருமாற் பயோததித் திருமந்த்ர வமுதினைத்
திருமகட் குயின்முகந்து
சேனைமுத லிக்கோப் பெயக்காரி சேய்சுனைத்
தேங்கிநா தமுனி யாகும்
அருமாற் கடம்வார்ந் துயக்கொண்ட வள்ளன்மடு
வார்ந்துசீ ராமரென்வா
யால்வழீஇ யாமுனா ரியவுந்தி யூர்ந்துபூர்
ணாரியக் காலினெழுகிக்
கருமாற் றிராமா னுசக்குளங் கழுமியெழு
பானன்கு தூம்புகாலக்
காசினிப் பணையுயிர்க் கூழ்வளர வயன்மதக்
காராக்கண் மேய்ந்தடாது
பெருமாற்கு விளையுள்வீ டடையப் புறந்தரும்
பெருவேலி யாமெம்பிரான்
பேசபய வேதாந்த தேசிகன் றடொழுவல்
பேரழக னூறழையவே.

## மணவாளமாமுனிகள்.

குணவா யுதித்தெற்று வேலைஞா லத்திருட்
கொள்ளைவெயில் சீத்தகற்றும்
கோகனக மணவாள னெனவடியர் தொல்லைநாட்
கொண்டவினை யிருளகற்றும்
மணவாள மாமுனிவன் மகிழ்வுடன் கருணைபொழி
மலர்விழியி னெம்மைநோக்கி
வயிறுபசி யாமனு வறளாம னுளுமறை
வாய்த்தவிரு நாலெழுத்தே

† கோபம் - பி-ம்.



உணவாக நஞ்செவியி லிருபுறமும் வழியவார்த்
துயிர் தளிர்ப் பித்தவெங்கோன்
ஒளியிட்டு திருநாட்டு வழிகாட்டு தாட்கமல
முளமீது வைப்பனெட்டைப்
பணவா ளராவுலக முடைநாறு வெண்ணெய்பேய்ப்
பாவைதன் முலையுளமுதம்
பருகிச் செவந்தவாய் மாலலங் காரனைப்
பாடுமென் கவிதழையவே. (௰௩)

## ஞாஞசாரியர்.

ஓட்டிக் கடிந்துநெடு நாடொட்டு வருதீய
வூழ்வினைக டம்வயத்தில்
ஓடுமைம் புலனையு மனத்தோடு நெறியினின்
றொருவழிப் படநிறுத்திக்
கூட்டித் தடஞ்சோலை மலைநிழன் மலர்க்கரங்
கோத்துவலம் வந்துகண்ணீர்
கொழிப்பமெய்ம் மயிர்பொடித் துளமுருகு தொண்டர்தங்
குழுவுடன் கூட்டிவேதப்
பாட்டிற் றருந்தமிழு மிருநா லெழுத்தும்
பசுந்தேன் பெருக்கெடுக்கும்
பைந்துழாய்ப் பள்ளியந் தாமத் தலங்காரர்
படிவமென் னெஞ்சகத்துள்
நாட்டித் தளிர்ப்பித்த திருவாளர் தோழப்பர்
நற்றமிழ்ச் சீர்பதிப்போன்
நலமருவு மழகன் புரோகிதன் புனிதபத
நாண்மலர் வழுத்துவேனே. (௰௪)

## அடியார்கள்.

அண்டர்க்கு நான்முகக் கடவுட்கும் வானநீ
ராறுபாய் சடிலருக்கும்
ஐரா வதப்பெரும் பாகற்கு மெட்டாத
வாழிமால் பதமிலையுநற்

றொண்டர்க்கு மன்புபுரி தொண்டர்தந் தொண்டர்க
டுணைத்தா டுதிப்பெனலைவாய்ச்
சுரிசங்க மூசலா டுங்கடற் பள்ளநீர்ச்
சூற்கொண்டு திங்கணிறையும்
கொண்டற் குலஞ்சொரியு முத்துங் கழைக்கண்
கொழிக்கின்ற முத்தும்வேழக்
கோடுசொரி முத்தமும் பூகத்தின் முத்தமுங்
குறமகளிர் பொய்தலயரும்
வண்டற் குரற்புகா வரிசியா கச்சந்த
மதுமலர்க் கறிப்பைக்கும்
மாலிருஞ் சோலைமலை மாலலங் காரனை
வழுத்துமென் னுவாழ்வதே.

பாயிரம் முற்றும்.

---

# காப்புப்பருவம்.

---

## திருமால்.

நீர்கொண்ட நெடுந்தாரை குறுங்கலை தோய
நேமிவரைப் பெருவேலி சூழு மேழு
பார்கொண்ட தாளாள னோங்குஞ் சோலைப்
பருப்பதத்த லலங்காரன் றமிழைக் காக்க
கார்கொண்ட காரொன்று கட லிரண்டோர்
காலத்துத் தலைமணந்த தென வசோதை
ஏர்கொண்ட கண்ணினிழல் பாயக் கைம்மீ
தேந்துமலர்ச் செந்துவர்வா யிளைய மாலே.

## திருமகள்.

வேறு.

வளர்க்கும் பசுங்கிளிக் கமுதமும் பூவைக்கு
வரிமிடற் றளியலம்பும்
வளர்தருச் சோலையும் புறவுக்கு நிழலுமிழ்
மணித்தூது மானுக்குவான்



விளக்குங் கலைத்திங்க ளும்பெடை யனத்துக்கு
விரிபொகுட் டருகுகுக்கும்
விளைநறைக் கமலமுங் கொண்டுவெண் டிரையின்வரு
மெல்லிய லளிக்கமேருத்
துளக்குங் கடுங்கான் முகந்திறைக் குஞ்சிறைத்
துகள்பம்பி யுததிசுண்டச்
சுழன்றிமை கரிக்கக் கடைக்கண் டழற்கற்றை
தூண்டச் சினத்தபுள்வாய்
பிளக்கும் பிரானிசை முரன்றிதழ் குடைந்தூது
பிள்ளைவண் டாடுதளபப்
பிரசமெறி சுந்தரத் தோளாளன் மறைமுதற்
பேராள னிசைதழையவே.

## பிரமதேவர்.

ஆட்டுந் திரைக்குண்டு நீரக ழிலங்கைக்கு
ளாறுகால் பாயநறவம்
ஆறுபாய் தாமரைக் குலமாதை யுங்கடவு
ளாழியங் கதிரோனையும்
கூட்டுங் கடுங்கார் முகக்கொண்ட லைத்தழைக்
கொய்துழாய்ச் சாரன்மேருக்
குவடுபடு சுந்தரத் தோளனைத் திருமங்கை
கொண்கனைக் காத்தளிப்பான்
ஈட்டும் பிழம்பனற் குளியா துலைக்கொல்ல
னில்லம் புகாதரத்தால்
எறியுணா தொலிபொங்க வடியுணா துயர்தட்டி
லேறுறு கூர்மழுங்கா
தூட்டுந் துகிற்றலையி னெய்யுணா துறைபுகா
துடல்கறை படாதிருந்தும்
உடற்றும் பெரும்படை தொலைக்கும்வாக் காயுதத்
தொருகமல மறைமுனிவனே.

## சிவபெருமான்.

வேறு.

அருமறைமொழியு நூலிணைநறிய கமலக்கரங்கள் யாப்பவும்
அளியுளர்பதும மாளிகைமுனிவன் வதுவைச்சடங்கு காட்டவும்
அருள்விளையிமய மாதுலனொழுகு புனலைத்தடங்கை வார்க்கவும் [வும்
அடைபொதிதுளவ நாரணன்வெளிய பொரியைக்கொணர்ந்து தூற்ற
இருவருநறுநெய் தூவியவெரியை வலனிற்சுழன்று போற்றவும்
இருகரமுளரி நாண்மலர்சிலையின் மயில்பொற்பதங்க ளேற்றவும்
எழுகதிருலவு வான்வடதிசையி லுடுமுற்றம்வந்து காட்டவும்
இடுதுகின்முகப டாமுலைபுணர வுமையைப்பரிந்து வேட்டவர்
மருமலர்பொதுளி வானுழைவளரு மருதைத்தவழ்ந்து சாய்த்திடை
மடவியரிழுது தோய்முடைவிரவு துகிலைக்குருந்து சேர்த்துளம்
மகிழ்வருகுரவை நாடகமயர விரலைத்தெரிந்து கோத்திலை
மனைநடுவுறியின் வாயளைகளவு கொளவற்றநின்று பார்த்தலை
பெருகமுதுகொள வானிரைவயிறு நிறையப்பசும்புன் மேய்த்தரை
பிணையணைகயிறு நார்முடைபடலு மடையப்பிணைந்து தூக்கிய
பிடவணைபடலை யாயனைவிபுல வெளிதொட்டணிந்த கோட்டயல்
பிறைதவழிடப மால்வரையுறையு முகிலைப்பரிந்து காக்கவே. (௪)

## தேவேந்திரன்.

வேறு.

நறைகமழ் $ காழகில்சுட்டபுனமுழுப்
பதம்வாய்ப்பமதகௌழுசியப்போத்துகள்
நடையடிகாளவரொற்றிநடவையிற்
சுவடேய்ப்பவிடைபறழ்நாலத்தாய்க்கலை
நணிவிளைதாழ்சினைதத்தி * முழைமுடக்
குடில்சாய்ப்பமடமயில்கூடிக்கூத்தெழு
நரையுருமேறுசிலைப்பமுடிவிதிர்த்
தரவாற்றல்கெடவிடர்தேடிப்போய்ப்புக

$ காரகில். பி-ம்.
* யுழைமுடக். பி-ம்.



உறைநுகர்சாதகம்விக்கல்விடவிடைக்
குலமாக்கள்படன்முடையோலைக்கீழ்ப்புக
ஒளியெழுகோபநிரைப்பநிலவுபுட்
சிறையாட்டிமகிழ்பெடைமூடிச்சேக்கையில்
உறைதரவோசனைபட்டமணமுதைப்
புனம்வீக்கமுனிவரர்சாலைப்பாட்டிள
வுழைநூலையோடுதெவிட்டவனசமொட்
டிருள்சீக்குமிளவெயில்காணற்கேக்கற
அறைகடனீர்விளைபிப்பிவிழுமழைத்
துளியேற்றுநிலவுமிழாரச்சூற்கொள
அகன்மடல்கோடல்விரிப்பவெயிறுநட்
டுளைதூற்றிநெடுமயிரேனச்சாத்துழ
அகழ்படுகூவல்கொழிக்குமமுதவெப்
பெழமாத்துவதிகுயில்வாயைத்தாட்கொள
அகமகிழ்கேள்வர்தமக்குமரிவையர்க்
குளமூட்டுமளவறுகாமத்தீச்சுட
மறைமொழியாளர்வழுத்தியனலொழுக்
கவியேற்றுவலம்வருமோதைக்கார்ப்புயல்
மலர்நிலமாதுகுளிப்பமழைகொழித்
தெழநோக்குசுரர்பதிதாளைப்போற்றுதும்
மணிநிரைமேயவெடுத்தகழைமிடற்
றிசையூற்றிமலர்புரைதாளுட்சேப்புற
வனநடுவோடியினைத்தவழகனைப்
பொழில்வாய்த்தகுலமலைமாலைக்காக்கவே.

## ஆதித்தன்.

வேறு.

பரியரை யுரற்பிறை நகப்பிண ரடிக்கைப்
பருப்பகந் தண்டுறைதொறும்
படியமடை படுகரட வாய்திறந் திழிமதம்
பாயமணி யமுனைதோயும்

முரிதிரைப் பகிரதி கடுக்குஞ் சிலம்பாற்று
    முதல்வனைக் கடவுள்வேத
முறையிடுந் தாமரைத் தாளானை வண்டுழாய்
    முகிலைப் புரக்கவெள்ளைப்
புரிமுக வலம்புரி முழங்கச் சகோரவெண்
    புட்கிரை யளிக்கும்வானம்
பூத்தமதி கரமொழிய விளைஞரைக் காமன்
    பொருங்கணை துறப்பவெழுபண்
தெரிவண்டு சிறைவிட் டுவப்பக் குணதுவளர்
    திக்குவெள் ளணியெடுப்பத்
தேமுளரி தளைவிடப் புவியிரவு விடவலைத்
    திருவவ தரித்தசுடரே.

## ஷீநாயகக்கடவுள்.

ஊற்றும் பசுந்தே னகிற்கா டெறிந்தெயின
    ருழுபுனந் தினைவிதைப்ப
ஊட்டமு விடுஞ்சாரன் மலைமுதுகு பொதிவெப்ப
    முடைதிரைத் திவலைதூற்றி
ஆற்றும் புனற்சிலம் பாற்றருகு விளையாடி
    யாயிரம் பொங்கர்தங்கி
யாயிரங் குண்டுநீர் மடுவுட் படிந்துவரு
    மானையைக் காக்ககங்கை
தூற்றுந் தரங்கவொலி யிற்றுஞ்சி யறுகிளந்
    தோட்டிணர் * விழைந்துசெங்கைத்
$ துணைச்சிறு பறைக்குர லெதிர்ந்திதழி நெடுவனஞ்
    சூழ்ந்துடலி னிலவுவெள்ளம்
காற்றும் பொடிப்பூழி கால்சீத் தெறிந்திறைவி
    கழைநெடுந் தோள்வரிக்கும்
கரும்பினிற் கைவைத்து வெள்ளிப் பொருப்பெந்தை
    களிகூரவரும் வேழமே.

---

* வனைந்து. பி-ம்.

$ தொளை. பி-ம்.

## காப்புப்பருவம்

## முருகவேள்.

வள்ளைகா னீக்கிச் செழுங்குவளை மென்றுகய
    வாயெருமை குழவியுள்ளி
மடிவளஞ் சொரியமுது மடுநிறைப் பக்கமல
    மண்டபத் தரசவன்னப்

பிள்ளையா லும்புன றுறந்தமு தருந்திவெண்
    பேட்டிளந் தாயெகினம்வாய்
பெய்யிரை தெவிட்டுமகன் மாலிருஞ் சோலைப்
    பிறங்கன்முகி லைப்புரக்க

கள்ளையூ றுக்கருத் தறியுண மற்றேவ
    கன்னியர் களஞ்சூழுநாண்
கழலாம லைரா வதப்பெரும் பகடுழற்
    கானம் புகாமலமுதம்

கொள்ளைபோ காமற் புரந்தரன் படுசிறைக்
    கூடம் புகாமல்வெந்நீக்
கொளுந்தாய லகனெடும் பொன்னக ரளிக்கின்ற
    கோழிப் பதாகையானே.

## வைரவன்.

வேறு.

புடைவள ராரப் பரியவரை பேரப்
    புதறலை சாயத் துடிபட விருகரை
புகர்மணி வாரிக் குனிதிரைவீசிப்
    புனலுமிழ்வாவிக் குருகெழநடுவுயர்

திடரகழாய்நெட் டகழ்திடராகச்
    சிறைபொரும்யாணர்ப் பரிபுரநதிவரு
சினைவளர்சோலைத் திருமலைவாழ்கைச்
    சிலைமுகில்காவற் புரவலன்வெளிபொதி

கடையிருள்வேர்விட் டெழுமுழுமேனிக்
கடல்விடுசோரிப் புலவெழுவடிபுரி
கவைபடுசூலப் படைதொடுபாணிக்
கனல்பிழிவேணிச் சுடர்மணிநிறைவிரி

படமுடிநாகப் புரியுபவீதப்
பலிகொள்கபாலப் புயலுருமெறிகுரல்
படுசுருடோகைச் சுழல்விழிஞாளிப்
பணைமுதுகேறித் திரிதருமிறைவனே.

### சத்தமாதர்.

வேறு.

வருபுனலவனி புதைப்பக்கோட்டின்
முழுகிநிமிர வலைவறவெடுத்தவள்
மதமழைகரட முடைத்துச்சாய்க்கும்
வெளியகரியின் முதுபிடர்புரப்பவள்
மரகதவளறு திரட்டிக்கோட்டு
நெடியபசிய களமயிலுகைப்பவள்
மலர்பொதுளிதழி தழைப்பப்பூக்கு
மமுதமொழுகு மதிவகிர்முடிப்பவள்

இருகடைவிழியு நெருப்பைக்காற்று
மலகைசூழல வருபிணனுகைப்பவள்
இமையவர்வயிறு நிறைப்பத்தேக்கு
மமுதகருணை கடைவிழிபழுத்தவள்
எறிவளியுதறு சிறைக்கொத்தேற்றை
யெகினநடவு மறைமொழிமிடற்றினள்
எனவிவருலகு துதித்துப்போற்று
மெழுவர்முளரி யடிமுடியிருத்துதும்

அரன்முதலெவரு நினைத்துப்பார்த்து
மறியவரிய விழைபெருமயக்கனை
அகிலமுமுதர மடுக்கடூத்த
கமலநறிய நறைவழிபொகுட்டனை



அழகியகுரவை நடத்துக்கேற்ப
வொருகைநடுவ ணலமருகுடத்தனை
அலைகடலமலை யுதித்துத்தோற்ற
வுருவுவிளையு மளவறுகளிப்பனை

விரியொளியுததி கொழித்துக்கோத்த
வழிவில்பரம பதமுதுபுரத்தனை
விடையுரமுழுத மருப்புக்கீற்றி
விடையர்மகளி ருழுமுலைமுகட்டனை
விரிதலையருவி தெழித்துத்தாக்கு
மெழிலிதவழ நிலவியபொருப்பனை
விளையிளநறவு சுழித்துத்தூற்று
துளவமுகிலை யழகனையளிக்கவே.

### மூப்பத்துமூவர்.

வேறு.

விரிதடமத்தகத் துச்சிதாழ்சுழிக்கடல்
விளைகடம்விட்டொழுக் கெட்டுவாரணத்தினர்
விரியுளைநெற்றியிற் கொட்கும்வாலெழிற்குரம்
விரைபரிபெற்றிரட் டித்தவான்மருத்துவர்

இருகடையுட்குழைத் தொற்றைமேருவிற்றொடும்
இறையவர்பத்தொடொற் றித்தவேறுகைப்பவர்
இருபதிலெட்டொழிப் பித்ததேர்துரப்பவர்
எனவிவர்தொக்களித் தற்கியாம்வழுத்துதும்

சொரிபருமுத்திணர்க் கக்குபூகநெட்டிலை
தொடுசடைநெற்குலைக் குப்பைநாவளைத்துமு
சுரிவளைமட்கரைப் பற்றிமேதியுட்குளி
தொடுகுளமுக்குளித் தெற்றுநீரொலிப்பெழ

மரையுயர்பொற்பறக் கொட்டைபாழ்படச்சிறை
மடவனம்விட்டெழப் பெட்டவாளைசெய்ப்புகும்
மலர்வதிபுட்குலக் கத்தருததொத்தளி
வளர்பொழில்வெற்பினிற் பச்சைமாறழைக்கவே. (௰௧)

காப்புப்பருவம் முற்றும்.

---

# இரண்டாவது
# செங்கீரைப்பருவம்.

சுருள்விரிமுழுமுதல் வாழைக்கூனற்
குலையினின்மிடறுடை பூகப்பாளைத்
தலையினிலுறைநடு விண்டாழுஞ்சீதச்
சுனையினின்முகைநெகிழ் காவிக்காழிப்
புடையினினெடுமணல் வாரிந்தூதைக்
கலனணிமகளிர்க ரங்கோலுஞ்சாலைச்
சுவரினிலலமரு மூசற்காலிற்
படிவினிலொழுகிய சோனைத்தேனிற்
சுழல்படுமளிகள்கு டைந்தாடுங்காவிற்
சொரியுமுளுடல்பொதி யோலைத்தாழைப்
பரியரையினின்மறி நாகைத்தேடிக்
கவரிகண்முலையில்வ ழிந்தூறும்பாலிற்

கரைதவழ்முரிதிரை பாய்நெட்டோடைச்
சுழியினில்வழியினி னீர்குத்தோதைச்
சிறையினின்மளவர லம்பாயுஞ்சாலிற்
கழனியிலரைதிரள் காய்நெற்சோலைத்
தலைவளைகுலையரி தூரிற்றாமக்
குழலிடைமடவியர் வண்டோடுஞ்சூடிக்
கடையினிலுதறிய தாரிற்றூவிப்
புலவெழுமுதுசுற வாளைப்பாய்சுற்
றகழியிலருமழை கண்சூழும்பாலுக்
கதிரெழுபுரிசையி லூரிற்போரிற்
றெளியினினடவினில் யானைக்கானற்
றுறையினின்மதுரம்வி ளைந்தோடும்பாகிற்

பொருபுனலெழுவரி வாளைப்பூசற்
படிவிடுபெருமடை வாயிற்சாதித்
தொடரிணர்நறுவழை சிந்தாரம்போலும்



பொதிமுகையவிழ்மலர் வேரிப்பாயற்
றுணைவிழிதுயில்வதி மேதிப்பாழிச்
சுவவினில்வனச முகங்காலுந்தாதிற்
புழைபடுநெடுநிலை காளப்பானற்
கழியினின்மதனடு சாபக்கானிற்
சரிகயலணிவியெ ழுந்தேறுஞ்சாரிற்
புதல்படுதுகிர்கொடி மூடித்தீகக்
கடவியிலிளவெயி ரேய்பொற்பூழித்
தெருவினிலிளைஞர்க ணின்றூருந்தேரிற்
றிருவளர்கடிமனை மாடத்தேணிப்
பழுவினினிலவுமிழ் தூவிப்பேடைக்
குருகெழுநதியலை சென்றேறுங்கூலத்
தினில்விளைபுனவிதண் மீதிற்கால்பட்
டுடலுளைமணிபொதி சூலைக்காலச்
சுரிமுகவிவளை வந்தூருஞ்சாரற்
றிருமலையழகர்த டாகத்தோடைப்
புகர்முகமதகரி கூவச்சேனப்
பிடர்வருமழைமுகில் செங்கோசெங்கீரை
திருமடமகண்மகிழ் கூரப்பாடக்
குருமணியிடறிய மார்பிற்பீடத்
தினையிடுமழைமுகில் செங்கோசெங்கீரை.

வேறு.

தொளைபடுகரட மூற்றெழுத்தேங்கி
வழிமதம் வண்டோடுஞ்சாயச்
சுழல்வருபெடையெ ளுக்கரத்தூர்ந்த
புயலெருடல் கண்டுடுங்காதற்

களிவருபிடித ழீப்பணைச்சார்ந்த
கறையடி மென்றூர்வங்கூரக்
கவுளுழைசெருகி நாட்பிறைப்போன்ற
நககுதி மண்சீவுந்தூளைக்

குளிர்புனலலைய வாட்டுடற்பாங்கர்
வழியவெ·றிந்தாரந்தூவக்
குளிறியவருவி நீர்க்குரற்கேன்று
கரிநிரை கண்சாயுஞ்சாரற்

றெளிமதுவொழுகு காக்கிரித்தோன்று
மழைமுகில் செங்கோசெங்கீரை
திருமலையழக வாக்கிசைக்காம்ப
மழைமுகில் செங்கோசெங்கீரை.

வேறு.

இருவிழிசெவந்து கயலொடுமயங்க
வெறியுமாநீ ரோடைகுடைந்தாடி
இடைவெளிறுடங்க விருபுறம்விழுந்த
கயிறுகால்பூ ஞூசலுதைந்தாடி

ஒருமுறையகங்கை யொருமுறைபுறங்கை
யறையவோவா நால்வருபந்தாடி
யொருபதமகண்ட நிலவு*புகழ்கொண்ட
முதன்மைபாடா வேழுகழங்காடி

வருகுறவர்தந்த மடமகளிர்வண்டல்
விழவுமாறு நீர்பொதிமஞ்சாடு
மதியுழுவழிந்த வமுதநதிபொங்க
வருடைகாலாழ் வேரலிளஞ்சாரல்

அருவிவரைநின்ற வழகவிதழ்பம்பு
துளவமாலே யாடுகசெங்கீரை
அருமறைவிரிஞ்ச னிமயமயில்கொண்க
னமரர்கோவே யாடுகசெங்கீரை.

முலையமுதலம்பி விழநெடுவரம்பு
குறியகாலாழ் மேதிகயம்பாய
முருகிதழ்பொதிந்த குவளைகண்மயங்க
விடறிவாலால் வாளைவெருண்டோடி

* (வெளி பி - ம்.)

## செங்கீரைப்பருவம்

இலைதலைவிரிந்த கமுகமடல்விண்ட
மிடறுவாய்சூழ் பாளைபிளந்தேகி
இமையவரருந்து மதியமுதகும்ப
முடையநீர்மேய் மேக§விசும்பூறி

மலையுடல்குளிர்ந்து விடவெளியெழுந்து
முழுகுதீயா டாலைநறும்பாகு
வழியும்வயன்மஞ்ச ளிலைமிசைவிழுந்து
களிறுபோலே சாரன்மணந்தோதை

அலையருவிதுஞ்சு மிடபமலைநின்ற
துளவமாலே யாடுகசெங்கீரை
அருமறைவிரிஞ்ச னிமயமயில்கொண்க
னமரர்கோவே யாடுகசெங்கீரை.

வேறு.

இருகுழைமதர்விழிகிழிப்ப வலமருமகிழ்குரவைதொட்ட
பொதுவிய ரோதிபுறந்தாழ
இளநிலவுமிழ்மதிபகுத்த சிறுநுதல்குறுவெயர்முளைப்ப
வமைபொரு தோள்புளகங்கூர

மரகதவரையகலமுற்ற திணிவருசரர்பதிவருத்தம்
இலையென வார்வம்விளைந்தோடி
வரைவெளிகுழுமிநடமிட்ட தெனவொசிகொடியிடையொளிப்ப
இளையப யோதரநின்றாட

விரியுலகமுமுலகொடுக்கு முதரமுமசையவலர்செக்கர்
மலர்புரை தாள்கள்செவந்தேற
விரைகெழுதுளவு நறைகக்க வொருகரமிசைகுடமுருட்டி
இசைவழி யாடுபரந்தாம

அருவினைபுறமிட்டுவெருட்டி யடியவரளவினருள்வைத்த
மழைமுகி லாடுகசெங்கீரை
அளியுழுபொழில்புடையுடுத்த வடுபதிதவழிடபவெற்பின்
மழைமுகி லாடுகசெங்கீரை. (௫)

§ (மேகமசும்பூறி, பி - ம்.)

### வேறு.

முளைக்குந் திருப்பாற் கடற்பெருஞ் சூன்முலை
முகக்கண் கருமல்வட்ட
முகமதி வெளுப்புறு மற்பச்சை மரகதம்
முகடிளகி யொழுகுபாடம்

விளைக்குங் குழம்புதோய்த் தெற்றுபல நூலென்ன
மெய்ப்பசு நரம்பெடாமல்
வேய்நெடுந் தோள்கண்மெலி யாமலா விலைவயிறு
வீங்காமன் மனைமதிற்பால்

வளைக்கும் புகைப்படலை மண்டொடா மற்சால
வயவுநோய் கூராமனுள்
வளர்திங்கள் பத்தும் புகாமற் பெருந்தூணம்
வாய்த்தகோ ளரிகளித்துத்

திளைக்கும் பெடைக்குருகு சூழ்சிலம் பாற்றிறைவ
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
செங்கீரை யாடியருளே.

சாய்க்கும் *கடும்புனல் பரந்தோட வுரகனற்
றருணமணி யணவுசூட்டுத்
தாழ்கடம் பிற்குதித் தாடலுங் கொங்கையந்
தடநெடுங் கிரிசுமந்து

மாய்க்குமெ னுசுப்பிளங் கோவியர் வளைக்கர
மலர்த்துணை பிணைத்தாடலும்
வட்டவாய் முடைபடுங் குழிசியிற் றீயாடி
வழியுமின் பால்பதத்திற்

றோய்க்குந் தயிர்த்தலையின் மத்தெறியு மிழுதுணைத்
துளவோடு கரியமேனி
துவளநின் றாடலும் முன்புள்ள விப்போது
தொண்டர்தம் வினையிரண்டும்

* (பெரும், பி - ம்.)

## செங்கீரைப்பருவம்

தேய்க்குந் திருத்தாள் குனித்தாநின் றழகனே
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
செங்கீரை யாடியருளே.

முருகுண்டு நாகிளம் பெடைவண் டியாழினிசை
முரலவளி தடவவாடும்
முகைமுக முறுக்குடைந் தவிழ்தரும் பூவைகிரி
முதுகுவலம் வந்துவீழ்ந்து

கருகுந் திரைப்பரவை மேய்ந்தகல் விசும்பாடு
கருவிமழை யாடுகொள்ளைக்
கண்ணகன் பொய்கைக் கருங்காவி யாடிளங்
கருவிளந் தொகுதிபிள்ளைக்

குருகுஞ் சலஞ்சலமும் விழிநுஞ்சு துஞ்சாக்
கொழுந்திரை கொழித்ததிவலைக்
குளிர்புனல் பரந்தாடு காளிந்தி யென்வலை
கொதிப்பக் கடுங்கார்முகம்

செருகுங் கணைக்குரிசி றிருமேனி துவளநீ
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
செங்கீரை யாடியருளே.

கறைபாய்ந்த குலிசப் படைப்பாக சாதனக்
கடவுளும் விபுதர்குழுவுங்
கடும்பொடு கடும்பசி கெடுத்தருந் தப்பணக்
கட்செவிப் பாப்பெயிற்றுப்

பிறைவாய்ந்து காந்துங் கடுங்காள கூடவெம்
பேழ்வாய் திறந்து முத்துப்
பிடித்துங் குதட்டியுமிழ் பிச்சிலும் பேரகமலர்
பிரசங் கொழித்திறைக்கும்

அறைபாய்ந்த நீருடற் கழுவிநெடு வெண்ணிலா
வமுதுணு மதியளிக்கும்
ஆடுதலை யருவிபாய் திசைநான்கும் வெளியின்றி
யளிகோடி புடையலைக்கும்

சிறைபாய்ந்த வளிதருஞ் சோலைமலை யழகனே
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
செங்கீரை யாடியருளே.

ஈற்றுவண் டறுகால் குடைந்தாடு பொங்கர்விளை
யிளநறுத் துளிதூங்கியும்
இறுவுடன் முறக்கலை குதிப்பப் பசுந்தே
னிழிந்துமதி தவழநிவு

தூற்றுவெண் டிரையமுது சுழியெறிந் துந்திரைத்
தொடுகடற் புனன்முகந்து
சூற்கொண்ட கருவிமுகி லிடறியுந் நாளத்
தொளைக்கைப் பொருப்புந்தியை

ஊற்றுவெங் கடநீர் கொழித்துமக விதழ்நெரிந்
துடையும்வண் டுளவமாலை
யொழியாது மதுவோட வுனதுசெந் திருவின்முலை
யுழுதலா விளகுகளபச்

சேற்றுறு புயம்போ லசும்பறு மலைவாண
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
செங்கீரை யாடியருளே.

குரைக்குந் திரைத்தரைப் புரவுபூண் டரசிளங்
கோமக னெடுத்த செங்கோல்
கோநக ரிலங்கையிற் பரிதிதேர் பூண்டவேழ்
குரகதந் தூண்டுமுட்கோல்



கரைக்குங் கடாக்களிற் றமரேச னேகநாட்
கடுஞ்சிறை கிடந்தகூடக்
கபாடந் திறக்கின்ற திறவுகோ லறவொழுகு
கமலமகள் விழியினுளவாய்

உரைக்குங் குழம்புபடு மஞ்சனக் கோல்பிலத்
துள்வீழு நான்மறைக்கும்
ஊன்றுகோ லாகமுடி பத்துடைய கள்வன்மே
லொருகோ லெடுத்துமுகிலைத்

திரைக்குந் துணர்ச்சோலை யிடபகிரி நின்றமுகில்
செங்கீரை யாடியருளே
தேவர்க்கு மலர்வருந் தேவிக்கு நாயகன்
செங்கீரை யாடியருளே.

செங்கீரைப்பருவ முற்றும்.

---

மூன்றாவது

## தாற்பருவம்.

---

உடலியலவுண னட்டியநெடிய தூணுவேசாநால்
உகம்வருமளவு தோற்றியவருண நானுரூபாநாள்
முடியிடைமுதலி லாத்தனியுறைபு மூவாமூதாளா
முனிமகமுடிவு காத்திடுசரண சாலாகார்வானு
மடிநிரைபுறவு மேய்த்துழலிளைய கோபாலேசாவான்
மகிதலநிறைவு காட்டியகரிய மாயாமாகாயா
அடியிணைசுருதி யேத்திடுமழக தாலோதாலேலோ
அரவணையுதநி மேற்றுயிலழக தாலோதாலேலோ.

அடியவரளவி றேக்கியகருணை யாசாபாசாபூ
வயனெடுவயிறு சூற்கொளுமுதிய லோகாலோகாதே
மடலவிழ்கமல வீட்டுறைவனிதை லீலாகாராநேர்
வருசகடுடைய நீட்டியசிறிய தாளாதாள்சூடா

முடியுடையவுண ரோட்டெழநடவு சேனூருடாபாண்
முரலளிநறவு வாக்கியதுளவு தோடோயாமோதா
உடுபதியிடறு காக்கிரியழக தாலோதாலேலோ
உடைதிரையமளி மேற்றுயிலழக தாலோதாலேலோ. (உ)

வெருவராநிரய முட்டியகொடிய தீவாய்வீழாதே
விழைவுறுமடியர் வீட்டுறநயமில் கோதாய்வேநாநால்
அருமறைமுதன்மை கீழ்ப்படவமுத மாராவாயாலே
அருள்குடமுனிவ னுத்தமிழ்புனையு நூலாலோவாதே
இருபுயம்வகுள நாற்றியமதலை மாறுபாடாய்நீ
யெமையெனவழுதி நாட்டுளகுருகை மூதூராழ்வார்பால்
உருகெழுசிறுக னீர்த்திடநடவு தாளாதாலேலோ
உடைதிரையமளி மேற்றுயிலழக தாலோதாலேலோ. (ங)

தொடுகடலலையின் மோத்துறமுழிய கோண்மீன்மேயாமே
துகள்வெளிவயிறு போய்ப்புகநிலவு தீயேழ்நாமேயா
அடுபசிதணிய வேற்றெறிவளியி னுவாயோடாமே
அரிதுகிர்பொரிய மோட்டுடலலகை யூர்தேரோடாநீர்
இடுமணல்சுழல வார்த்திரநிவக மேகாவாய்காவாய்
இருநிலம்விடவெ டாச்சிலைவலிய கால்பூணுண்வாயே
விடுமடல்புனைவி ழாப்பொலிசயில நாடாதாலேலோ
விரிதலையருவி தூக்கியசயில நாடாதாலேலோ. (ச)

மழைபடிகடலு லாத்திரிபடவு சூழ்பாய்மீதேபோய்
மடமயிலகவி யாட்டெழுவளைகள் கால்சூறாதாயா
அழகியபுறவு கூட்டுணவரிகொள் போர்மேல்வாமானேர்
அடிவிழவுகள வீற்றுளவிளைய சேதாவாய்பாய்பால்
எழுதினைகவர வேட்டுவர்வலைகள் பீறுவாலாலே
எறிசுறவுறைய நாட்டிதணடுவு சூழ்கால்கீழ்மேலாய்
விழுநிலம்விரவு காப்பயில்சயில நாடாதாலேலோ
விரிதலையருவி தூக்கியசயில நாடாதாலேலோ. (ரு)



வேறு.

முடக்குந் திரைப்பா லாழிநெடு
முகட்டிற்றுயில விருசெவியில்
மூல மென்னுங் குரல்புகுமுன்
முளரிப் பொகுட்டு வீட்டிலொற்றை
வடக்குங் குமச்சேற் றிருகொங்கை
மங்கை விளைந்த தெதுவென்று
மலர்க்கை நெரிப்ப வரவரசு
வணங்க வுதறி விசும்பிமைப்பிற்
அடக்குங் குடகாற் றெறிசிறையக்
கலுழச் சேவற் பருமபிடர்க்
கழுத்தின் மேற்சொண் டப்புள்ளைக்
கால்கொண் டணைத்து விண்பறந்து
நடக்குஞ் சரத்தின் முன்சென்ற
தலைவா தாலோ தாலேலோ
சங்கத் தழகா விடபகிரித்
தலைவா தாலோ தாலேலோ.

எடுக்கு மிழுதோ டழுதோடி
யேகத் தொடரு மசோதைகரத்
தெட்டப் படவு மொருவருக்கு
மெட்டப் படாத புயல்புயலைக்
கடுக்குந் திருமே னியினடிக்குங்
கைம்மா றிருப்பப் பின்னுதவும்
கைம்மா றிலாத கடல்பசிய
கனக வுடுக்கைத் திருமங்கை
உடுக்கும் பாசங் கிடப்பவுளத்
தொன்றின் பாச மிலாதபச்சை
யோங்க லென்று மறைநாலு
முரைப்ப விரவி யுருட்டாழி
தடுக்குந் திருமா லிருஞ்சோலைச்
சயிலப் புயலே தாலேலோ
சங்கத் தழகா விடபகிரித்
தலைவா தாலோ தாலேலோ.

யாழுங் குழலும் பழித்தமொழி
    யிடையர் மகளிர் குழைகிழிய
வெறிந்து செவந்த விழிவாளி
    யிருக்கும் பகுவாய்த் தூணியலை
சூழுங் கடலின் றளித்தமணி
    தூற்றுங் கதிர்வெப் பொழியயிலத்
தோகை முகத்து மகரந்தந்
    துளிக்குஞ் சிவிறி திருமார்பில்
வாழுங் கமலப் பொகுட்டுமயின்
    மலர்த்தாட் டுணையிற் பொதிந்ததுகள்
மாற்றும் பசும்பட் டாடையென
    வரைத்தோள் கிடக்கு மளிப்படலம்
தாழுந் துளபத் திருப்பள்ளித்
    தாமப் புயலே தாலேலோ
சங்கத் தழகா விடபகிரித்
    தலைவா தாலோ தாலேலோ.

நறைக்கட் பொகுட்டு மலர்குவிய
    நளினந் திகைப்ப முகைக்குமுதம்
நாட்பூ வெடிப்பத் திகைப்பவெறி
    நளிநீர்க் கயத்து ளுறைநேமிச்
சிறைப்புட் பேடை யுடல்பிரியத்
    திகைப்பச் சகோர நிலவேட்கத்
திகைப்ப விலக்கு வதிதேடத்
    திகைப்பப் பறவை பார்ப்புள்ளிப்
பறப்பத் திகைப்ப நறைப்பொழில்கள்
    படியத் திகைப்ப வேள்சிலையிற்
பாணங் கொளுவத் திகைப்பவெயில்
    பம்புஞ் சுடரை யெல்லெனவான்
மறைப்பத் திகிரி தொடுஞ்சோலை
    மலையிற் புயலே தாலேலோ
மந்தா கினியும் பரிபுரமும்
    வளரும் பதத்தாய் தாலேலோ.



வேறு.

மகரங் குளிறுங் கனைகடன் மேய்ந்துயர் மலையின் றலைதுஞ்சும்
    மழைமுகி லென்றெக் காலமுமிதழி மலர்ந்தலர் பொன்னூற்றச்
சிகரந் தொறுமட மயினட மாடச் செக்கர்க் கோபமெழச்
    சினைவளர் காயா வகமட லூழ்ப்பச் சிதறுந் தளிபகுவாய்
துகருஞ் சாதக மணவத்தளவந் நனைமுகை விடமின்போல் [யத்
    நுண்ணிடை துவளச் சதிரிள மங்கையர் நுரைவிரி சுனைகுடை
தகரங் கமழுங் குலமலை தங்குந் தலைவா தாலேலோ
    சங்கந் தவழும் பரிபுர நதியின் றலைவா தாலேலோ. (௰)

வேறு.

அளிக்குந் தரைக்கங் காந்தவுண
    னகங்கை நிறைந்த நீர்வார்க்க
ஆழிப் பொருப்பு வேலியுல
    கடிக்கொண் டோங்கி மழைக்கருணை

துளிக்குங் கமல மிரண்டுமறை
    தோயுங் கமல மொன்றுமொளி
தூற்றுஞ் செக்கர்த் துகிருமிரு
    சுடருஞ் சுரும்பி னிரைபரந்து

களிக்குந் தோட்டு நறைத்துளவக்
    கானுஞ் சுமந்து வெளிவளரும்
கரிய பூவை மதிதவழ்ந்து
    கானு மமுதப் பெருக்கிலுட்ல்

குளிக்குஞ் சிமய விடபநெடுங்
    குவட்டுக் குரிசி லுறலேலோ
குன்ற மெடுத்து மழைதடுத்த
    கோவே தாலோ தாலேலோ.

தாற்பருவமுற்றும்.

## நான்காவது

# சப்பாணிப்பருவம்.

---

ஒருமுன்றிற்புன் னுவிற்றுமலர்ச்சு ணுதித்தவனப்பாகன்
உமைமடம்பிலை யிடத்திலிருத்தி யிருக்கும்வலப்பாகன்
உடலியல்வுண ருடற்கறைக்க வழுத்துமுநிர்ச்சேனம்
உததியினடுவு துயிற்சுவைமுற்றிய வட்டவணைச்சேடன்

இருள்புறமிரிய நிரைக்கதிர்விட்ட வலக்கண்வெயிற்பானு
இதழ்பொதிகுமுத மலர்த்துமிடக்க ணெழுக்கமுதப்பானு
எழுதுதலரிய மறைத்தமிழ்முற்ற வடித்தவிசைப்பாணன்
இழுதெழுமுடைகமழ் கொச்சையிடைச்சியர் பெற்றகுலப்பூவை

முருகுடைகமல மலர்த்தவிசுச்சி யிருக்குமனைத்தீபம்
முகின்முதுகிடறு கடற்றலைவட்ட மளிக்கும்வெதிர்க்கோலன்
முகைநெகிழ்தொடையன் முடித்துதறித்தரு சொற்புதுவைக்கோதை
முதுகிடவிபுதர் மிடற்றுமுழக்கு குரற்கடவுட்கோடு

குருகுலநிருப ரமர்க்கணிருட்டை யழைத்தபகட்டாழி
குரைகழலடியை வழுத்தியுளத்தின் மகிழ்ச்சியுறப்பாடு
குனிதிரையெறியரு விக்குலவெற்பிறை கொட்டுகசப்பாணி
குவலயம்வெளியுற வைத்தபதப்புயல் கொட்டுகசப்பாணி. (௧)

விழிதுயில்பெறமணி நெற்றிகுயிற்றிய தொட்டிலலைத்தேமும்
விரைகெழுபுழுகுநெய் பொத்திமுகத்தலை பித்தைமுடித்தேமும்
எழுகதிர்விழுபொழு தப்பிலைசுற்றி யனற்றலையிட்டேமும்
இளநிலவுமிழ்மதி சுட்டுமுனக்கெதிர் முற்றமழைத்தேமும்

அழுகுரறணிய மருட்டியணைத்தொசி யொக்கலைவைத்தேமும்
அடிதொழுமிமையவர் வர்க்கமுமொப்ப வுவப்பமுடத்தாழை
கொழுமடனகவளி புக்குழுவெற்பிறை கொட்டுகசப்பாணி
குவலயம்வெளியுற வைத்தபதப்புயல் கொட்டுகசப்பாணி. (௨)



திருவயிறமைவா வைத்தருள்வைத்த வளப்பிலுயிர்ப்பால
திரைவிரிபுனல்வெளி பொத்துவடத்திலை முற்றுதுயிற்பால

வரிசிலைகடைகுழை யக்கடல்சுட்ட விழிக்கடையுட்கோப
மழைமுகிலெறிதுளி தட்டுமலைக்குடை யிட்டநிரைக்கோப

முருகெழுமிளநறை கக்குபசுத்தபு னத்துளபத்தாம
முடைகமழிடைமகள் கட்டவொடுக்கிய சிற்றுதரத்தாம

குருகுகடலையரு வித்துயில்வெற்பிறை கொட்டுகசப்பாணி
குளிர்மதிதவழ்பொழில் சுற்றியவெற்பிறை கொட்டுகசப்பாணி. (௩)

திருமகடழுவிய பச்சையுடற்புற முத்தவெயர்ப்பேறத்
திரைதருமமுதென வூற்றிகழிற்றுளி சுற்றுதரத்தாரக்

கருகியசுரிகுழ லுச்சிமுடிப்பிணி விட்டுமுகத்தாடக்
கதிரிளவெயிலெழு முச்சிமிலைச்சிய சுட்டிநுதற்றூழப்

பெருகிளநிலவுமிழ் கொத்துவளைக்குல மிட்டபுயத்தாலப்
பிணிநெகிழ்நறைபிழி செக்கமலத்துணை யுட்கைசெவப்பூறக்

குரைமதுவொழுகு தொடைத்துளபப்புயல் கொட்டுகசப்பாணி
குளிர்மதிதவழ்பொழில் சுற்றியவெற்பிறை கொட்டுகசப்பாணி. (௪)

### வேறு.

இடைதடுமாறக் குழல்புறமலைய மெய்ப்பூணொலிப்பவொலியா
இருகுழையூசற் றெழில்வரநிலவு முத்தாரமொப்பமுலைமேல்

முடைகமழ்தாழிப் புறமெறிதிவலை தொத்தாவெளுப்பமதிபோல்
முகம்வியர்வாடக் கயிறுடல்வரியு மத்தாலுழக்கியுறைபால்

கடையுமசோதைக் கருள்வரவிழிகள் பொத்தாமயக்கியுடனே
கரமலர்கோலித் தடவினிலிழுது தொட்டோடுபச்சைமுகிலே

தடமலிசோலைத் திருமலையழகா சப்பாணிகொட்டியருளே
தழையவிழ்தாமத் துளவணியழகா சப்பாணிகொட்டியருளே. (௫)

வேறு.

வாராட்டு கொங்கைக் குறுங்கண் டிறந்தூறி
வழியுமின் பாலருத்த
மலர்விழிக் கஞ்சனங் குவளையெழில் படவெழுத
வரிகுழற் புழுகுபெய்ய

நீராட்ட மஞ்சட் பசும்பொற் பொடித்திமிர
நிரைவளை கரந்தொடுப்ப
நிலவொழுகு* வெண்ணீறு பிறைநுதல் விரிப்பவெயி
னிழன்மணித் தொட்டிலாட்டிப்

பாராட்ட வெவருமற் றண்டகோ ளகைவிண்டு
பாய்பெரும் புனலிலாலம்
பாசிலைப் பள்ளியிற் றுயில்பசுங் குழவியேழ்
பாட்டளி சிறைக்காற்றினுல்

தாராட்ட வண்டுளவு தேனொழுகு மணிமார்ப
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (சு)

பாட்டா யிரஞ்சுரும் பறைபொழிற் புதுவையிற்
பாவைகுழல் சூடியுதறும்
பனிமலர்ச் சருகுதே டிக்குப்பை நாடொறும்
பயிலாம லவள்புனைந்த

தோட்டா ரிதழ்ச்செவ்வி மாலைதரு வேமணிச்
சூட்டரா வணைசுருட்டிச்
சொற்றமிழ்ப் பின்புசெல் லாமல்வண் டமிழ்மாலை
சூட்டுபதின் மரையழைப்பேம்

கோட்டா வெருத்துகட் குடிலில்வெண் ணெய்க்கிளங்
கோவிமார் கன்றுகட்டும்
குறுங்கயிற் றணையுண்டு நில்லாம லாயிரங்
குடவெண்ணெய் கொள்ளையிடுவேம்

---

* வெண்ணீறு - புழுதிக்காப்பு. இது "சீரார்செழும்புழுதிக்காப்பு" என்று தமிழ்மறைநுதலியது.



தாட்டாமரை வேலித் தடஞ்சோலை மலைவாண
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (எ)

பூக்கும் பொலன்று மரைத்தாளின் முன்போத்து
புவியடங் கவுமுந்தியின்
புடைவைத்த தொப்பல வழைக்கைக் கெனப்பழம்
புனிதமறை யாளனுட்டத்

தேக்குந் திரைக்கங்கை நீராடு தண்டையஞ்
சீறடி யெடுத்துமழலைச்
செய்யவா யிதழ்பெரு விரற்றலை சுவைத்துவெண்
டெண்ணிலா மூரல்கான்று

கோக்குந் தழைக்கூரை முடையாடை யிற்றுயிற்
கொண்டமுகி லுழவரோட்டும்
கூனுட லலம்பாய வெளிதாவு பகுவாய்க்
குறுங்கண்ண வாளைவாலால்

தாக்குண்ட சூன்மேகம் விழிதுஞ்சு மலைவாண
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (அ)

திங்கட் புகுந்துபெற் றுவகைமலி தாய்தந்தை
தீஞ்சுவைச் சோறளிப்போர்
செங்கதிர்ப் பொன்கொடுத் துத்தொண்டு கொண்டவர்
செழும்புகைப் படலைவானில்

பொங்கக் கிளைத்தெழு கடுந்தழ னெடுங்குப்பை
புயலுரு முடன்பகைத்துப்
பொருகுரற் பகுவாய ஞமலிகள் விருளுடற்
பொசிகழுது கடையுருட்டு

வெங்கட் குறுங்கா னரிக்கொள்ளை குடவ்வளி
விரைந்தெடுத் தெழவிறைக்கும்
விரிசிறைப் புட்குல மெமக்கெமக் கென்னுமுடன்
மீளவு மெடாமலடியார்

தங்கட்கி னருள்சுரந் தெழுபிறப் படருமுகில்
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (௯)

எட்டுவகை யோகத் தினிற்பிரம ரந்திர
மெழுந்தங்கி யங்கடவுளை
ஈரைந்தொ டைந்துவெண் ணிறவைகல் வடவயன
மீரிரண் டோடிரண்டு

பட்டுவளர் திங்கள்வரு டம்பவனனுதவன்
பனிமதி தடித்துவருணன்
பாகசா தனன்மறைக் கடவுள்வழி கர்ட்டநீர்
பாய்ந்தாடு விரசைபுக்கு

விட்டுமூ துடலமா னன்றீண்ட வர்தனையும்
விட்டழிவின் மெய்படைத்து
வெண்சங்கு மாழியுங் கைக்கொண்டு பரமபத
மேவுநின் றொண்டர்மீளல்

தட்டுமணி மண்டபத் துடனுறைய வைக்குமுகில்
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (௰)

அகையுந் துணர்த்தழைக் குடிலிருந் தந்தணர்க
ளரியகட வுளரைவேள்வி
அவியமுது கொள்ளப் பழம்பாடன் மறைகொண்
டழைக்குங் குரற்கற்றுநாள்



முகையுண்டு வண்டறை பொதும்பரி னிளங்கிள்ளை
முகமலர்ந் தெழவிளிப்ப
மும்மைமூ துலகமும் பாழ்படத் தேவரும்
முனிவரும் வந்துபம்பிப்

புகையுந் தழற்குழியும் யூபமுஞ் சாலையும்
பொரியிடுங் கலனுநெய்வான்
பொங்கிவழி குழிசியுங் காணும லலமரும்
புணரியெழு மிரவிபொற்றேர்

தகையுந் தடங்குடுமி யிடபநெடு மலைவாண
சப்பாணி கொட்டியருளே
தரையேழு மொருபொழுது போனகங் கொண்டமுகில்
சப்பாணி கொட்டியருளே. (௰௧)

சப்பாணிப்பருவ முற்றும்.

---

## ஐந்தாவது
# முத்தப்பருவம்.

---

முருகொழுகிருளி னறவுகுதிபாய மழுவறுத்தகவட்டகில்
முருடுசுடுவாச மெழுபுகைவியோம வுடல்புதைப்பமதுத்துளி
முகிழநெகிழ்சாதி மலர்குளவிமூடு புதலருக்குபுனத்திடை
முகடுபுதைபூழி யெழவெயினர்மூரி யெருதுறப்பிவிடப்புனம்

அரவரசுசூடு குருமணிநிகாய மெனவுடுப்பமுகக்கொழு
அயின்முழுகுகூன னுதியின்மணியேற வலனுழைத்துமுழுத்திடர்
அவல்வயிறுதூர நிரவிமுளைநாறு விதைபிடித்துவிதைத்தினை
அளிவிளரிபாடு மடைபொதுள்படர முதறறித்துவணக்கிய

கரியகுரலேனல் புரவுபெறவேலி புறனிரைத்துநிரைக்கிளி
கடிகவணிலேன மிரியமணியார மெறியமத்தவிபக்கிளை
கதமொழியலாத மெனவெருவியோட விழைபுனிற்றுமடப்பிடி
கயமுனியைநாடி நடவையெதிர்மீள வரவொருத்தல்குழித்தலை

சரிகரையையோடி யுயர்கரையிலேற விடவழுத்துகுறத்தியர்
தமதுகுலம்வாழ வுனதுபுகழ்பாடி மடையளிப்பமதிக்குறை
தவளவளமேவு மிடபமலைவாண தவளமுத்தமளிக்கவே
தபனவெயிலேறு பவளவிதழூறு தவளமுத்தமளிக்கவே. (க)

வேறு.

வருமதபொருப்பு நடுவளைமருப்பு வயிறுதருமுத்த
மொளிகளைத்த பழுப்புறும்
வரைமுளியமுற்று மனலெழுவனத்து வளரும்வெதிர்முத்த
முடல்கொதிப்ப வெதுப்பெழும்
வரியளிபிலைசக்கு மனமுருகிமொட்டு மலர்வனசமுத்த
நிலவுசெக்கர் முகத்தெழும்
மகிணர்காமுற்ற கலவியிலிறுக்கு மகளிர்களமுத்த
முருளுமுச்சி யதுக்குணும்

உருகெழுவெளுத்த பிறைபுரையெயிற்ற வுரகமணிமுத்தம்
விடவழற்பொடி பட்டிடும்
உலகுடலிருட்டு முகிறுளிதுவற்ற வுடனெழுகுமுத்த
மொழுகிருட்டொளி யுட்படும்
உடைதிரையுடைப்ப வுவரிவிளையிப்பி யுமிழும்ணிமுத்த
நெடியவெக்கர் மணற்படும்
ஒழுகமடைபட்ட மதுமடலுடைக்கு முயர்கமுகமுத்த
மரகதத்த பசுப்பெழும்

வெருவிவலைகட்ட வணவியலைதத்தி விழுசுறவமுத்த
மயினுதித்தலை முட்படும்
மிடறொலியெடுப்ப வெழும்வளியுலர்த்த வெளியவளைமுத்த
மறவெறித்தெழு நெய்ப்பறும்
விளைகழனிநெற்கண் விரவுபருமுத்த முலவியவெருத்த
கவையடிப்பட விட்புணும்
விரிகதிர்பரப்ப விலைதழையுமிக்கு விளையுமுழுமுத்த
முரலரைப்ப விழைப்புணும்



இருநிலமடுத்து முகமுழுகளிற்றி னெயிறுசொரிமுத்த
முறுபரற்க ணறுப்புறும்
இவைதவிரமுத்த மணிசிலவிரட்டை படுமொளிமறுக்கு ,
மெனவனைத்து முவக்கிலெம்
எறிபுனலுடுத்த தலையருவிசுற்று மிடபநெடுவெற்ப
விதழின்முத்த மளிக்கவே
இளமதியொழுக்கு மமுதருவிசுற்று மிடபநெடுவெற்ப
விதழின்முத்த மளிக்கவே. (உ)

வேறு.

உலவைகரிவெப்பு வனமடைகுழைப்ப வெதிரிசையழைத்தும்விடவாய்
உரகனைவரித்த கொடிநிருபனுட்க வரிவளைகுறித்துமுரிதோய்
கலனுதரமெத்த விடைமகளிர்வைத்த முடையளைகுடித்துமவர்தாழ்
கயிறரையிறுக்கி யுரலுடனணைப்ப வழுதிதழ்நெளித்துமனையாம்
அலகையுயிரொக்க வமுதொடுகுடிப்ப முலைதலைசுவைத்துமெறிநீர்
அலைசலதிவட்ட மகிதரைமடுத்து மகவிதழ்செவத்ததுவர்வாய்
மலரெமர்பொருட்டு மொருமுறைசெவப்ப மழலைமணிமுத்தமருளே
மதியமுதொழுக்கு மிடபநெடுவெற்ப மழலைமணிமுத்தமருளே.

வேறு.

ஆகத்து ணீங்கியுயிர் யாதனை யுடற்புக்
கனற்புகை யிருண்டகங்குல்
ஆரிருட் பக்கமறு திங்கடெற் கயனநில
வலர்திங்கள் வழிகாட்டமீ
மாகத்து நரகம் புகீஇப்பயன் றுய்த்தொழியும்
வழிநாளி லந்தவுருவம்
மாயமூ தாவியொடு தபனகிர ணத்திமைய
வரையிமத் துடனடைந்து
மேகத் துவந்துகும் பெயலினிற் பாரிடன்
வீழ்ந்துநளி புனலோடுநா
விழையும் பொருட்டொறு மணைந்துபல் லுடறூறும்
மேவியிங் ஙனமளவினுள்

போகத் திரிந்துவர விளையாடல் புரியுமுகில்
பூங்குமுத முத்தமருளே
பொறிவண்டு கண்படுக் குஞ்சோலைசூழும்
பொருப்பமணி முத்தமருளே.

ஈட்டும் பெருந்தவ முனிப்புனித னென்புடல
மிரலையுட லதளுடுப்ப
வெரிவிழிப் பிணருடற் பிலவாய் நெடும்பே
யிபத்தோ லுடுப்பமுனிவன்

மூட்டுந் தழற்குழியி னெய்சொரிய நரியுதர
மூளெரிக் குழியிலுடலம்
முழுகுநிணை நெய்விடத் தவமுனி தருப்பையடி
முறைபடுப் பக்குடற்கோத்

தாட்டுஞ் சிறைப்பருந் தடிபடுப் பத்தவத்
தரியமுனி கடவுள்யாவும்
அழைப்பவெங் காகங் கரைந்தின மழைப்பமுனி
யனன்மகங் காத்தெடுப்பக்

கோட்டுஞ் சிலைக்கணையி னிருதரைக் காய்ந்தமுகில்
குழைபவள முத்தமருளே
கூராழி கைக்கொண்ட வர்யிரம் பேராள
குழைபவள முத்தமருளே.

வரையெடுத் தேழுநா ணின்றநீ கோபால
மகளிர்சிறு சோற்றினுக்கு
மடிமண லெடுத்ததா லுடலிளைத் தும்வானின்
மந்தார மலர்கொய்தநீ

விரையெடுத் தெறிபூங் கறிக்குமல ரெட்டாமல்
விரல்குந்தி யடிகன்றியும்
வேழவெண் கோட்டைப் பிடுங்குநீ வண்டன்மனை
விளையாடு பர்வைக்குவெண்

## முத்தப்பருவம்

திரையெடுத் தெறிபுனற் காய்பிடுங் கிக்கரஞ்
சேந்துமுன் னொந்தவென்று
செய்கின்ற மாயங்க ளறிகிலேங் குறமகளிர்
செங்கணிழல் குருகுநோக்கி

இரையெடுத் தல்லாமை யாலழியு மருவிமலை
யிறைவமணி முத்தமருளே
யெற்றுந் திரைச்சிலம் பாறுசூ ழிடபகிரி
யிறைவமணி முத்தமருளே.

மட்பாவை தோயுந் துழாய்ப்பள்ளி யந்தாம
மார்பின்கண் வாய்த்தவந்த
மதியத்து மார்பினு மிருந்தா னெனப்பருதி
வருபுலத் தொருநான்குதோட்

புட்பாக னும்மறலி யுறைபுலம் வெண்ணிறப்
புனிதனும் வருணராசன்
புலத்தினிற் பச்சுடற் றேவும்வெள் ளிதழ்நறும்
பூங்குமுத பதிபுலத்தில்

கட்பா சடைப்பற் பாரகவொளி கான்றமெய்க்
கடவுளு முடன்விதிக்கில்
காவல்பூண் செயமங்கை பூதம்வெம் புலிகொடுங்
கணைகுரற் சீயம்நிற்ப

விட்பால் வருந்திங்க ளுருவுகொள் விமானத்தின்
மேவுமுகின் முத்தமருளே
வெண்ணிலா மதிதுஞ்சு தண்ணிலா வாராம
வெற்பமணி முத்தமருளே.

வேறு

படைத்துத் திருவைத் தருந்தேவர்
பாக சாலை சுட்டிலங்கைப்
பாடி தொலைத்துக் கரும்பேய்க்குப்
பாக சாலை யளித்தறத்தைப்

புடைத்துத் தருக்கு மரக்கர்குழுப்
    போக நரக வழிதிறந்து
புலவுச் சுடர்வெம் மழுப்படைக்கைப்
    புனிதன் போக நரகவழி

அடைத்து முதன்மை முறைமாற்றி
    யடைவு கெடுக்குந் தனிப்பகழி
ஆடற் சிலையி னுண்கொழிக்கு
    மழுக்குப் போகக் கொடிவிசும்பைத்

துடைத்துத் திவளு மலையின்றவ
    துவர்வாய் முத்த மளித்தருளே
தோளுன் கைந்து படைசுமக்குந்
    தோன்றன் முத்த மளித்தருளே.

வேறு

தாள்பற்றி யேத்தப் புரந்தரன் கரிமுகன்
    சதுமுகப் பதுமயோனி
தண்ணறுஞ் செச்சையந் தார்முருக னிமையவர்
    தடஞ்சுருக் கொடியுயர்க்கும்

வேள்பற்று தீயிற் குளிப்பநுத லுப்பண்
    விழித்தகட் சூலிசெம்பொன்
வெயின்முடிச் சேனைநா தன்பிரம் படிதாக்க
    மீதிலெழு மணிகடொத்திக்

கோள்பற்று வடபுலக் குன்றெனப் பத்துமுன்
    கொண்டவெண் படிமணந்த
கொண்டறுஞ் செழுநிலத் திருவாசல் பொலிநங்கள்
    குன்றின் றழாய்ப்படப்பைத்

தோள்பற்று சுந்தரத் தோகையொடு வாழுமுகி
    றுகிரில்வினை முத்தமருளே
தொடுகடல் வெதுப்பவொரு சிலைகடை குழைத்தவன்
    றுகிரில்வினை முத்தமருளே.



சேடற் கெருத்துளுக் கக்கடற் பள்ளத்
    திரைத்தலை வரைத்தலையினைத்
தெசமுகக் கபடனை வெகுண்டெழும் வானரச்
    சேனு பராகமண்ட

கூடத் தெழுந்துவான் கங்கைக்கு மண்கட்டு
    கூலம் பசுந்தகட்டுக்
கொய்துணர்த் தருவினுக் காலவா லஞ்சங்கு
    கோட்டுமா னதவாவியில்

பாடற் சுரும்பூது முவரிநெடு நாளமுதல்
    பதிகொள்ள வள்ளதெய்வப்
பாவையரை யமரர்புரி வதுவைக்கு முளைநாறு
    பாலிகைப் பூழியாக

ஆடற் கருஞ்சிலையி னிருகடை குனித்தவன்
    னம்பவள முத்தமருளே
அருள்பெருகி யலையெறியு மரவிந்த லோசனன்
    னம்பவள முத்தமருளே.

உடைக்குந் திரைக்கொ ளராவணைத் துயில்கொளு
    முனைக்கடு தொடற்கஞ்சியே
ஒழுகுமலை முடைநாறு மணையாடை பலகாலு
    முதறிப் படுத்துமீளப்

படைக்கும் பெரும்புவன மீரேழு முண்டநின்
    பண்டிக்கு முலைகுடிக்கும்
பால்செறித் தற்குப் பசும்பரைத் தூட்டியும்
    பைம்பொற் பொருப்புமீளுப்

புடைக்குஞ் சிறைப்புட்க டாய்வரு முனக்குமொரு
    புட்டோடம் வந்ததென்று
புனல்சொரிந் தும்பொதுவர் மங்கையர் மயக்குறப்
    பொதுவினின் மயக்கியிழிவைத்

துடைக்குந் துணர்ச்சோலை யிடபகிரி நின்றமுகில்
    துகிரில்வினை முத்தமருளே
தொடுகடல் வெதுப்பவொரு சிலைகடை குழைத்தவன்
    துகிரில்வினை முத்தமருளே.

முத்தப்பருவமுற்றும்.

அணியமலர்மாது கரம்வருடநாணி யுடல்சிறப்பெழுமலர்புரை
அடிகருகவான மழைபருவமாறு மயினுந்திப்பரல்டவியின்

உணர்வுவறிதாய வறம்வழுவும்வாய்மை யுடையசிற்றவைவிடைதர
உவகையொடுபோன வருமயிலைநாளு முலையளித்துணதருள்பெறும்

பணிவிடைசெய்தாய ரெமதுரைமருது பழமறைப்பொருள்வருகவே
பருவமழையாடு குடுமிமலைமேவு பழமன்றப்பொருள்வருகவே. (௯)

வேறு

வினைபுரியுங் கடியவிடப மழல்கடை
விழியுதறுங் கொடியகுருகு வெளியுழு
சினையிணர்பம் புபயமருது புடையுருள்
திகிரிதொடும் பரியசகடு முலைதர
அனையெனவந் தடருமலகை யிவையிவை
யவுணன்விடும் பணியில்வருமுன் விரைவினில்
நனைபொதியுந் துளவனழகன் வருகவே
நமதுபுறந் தழுவவழகன் வருகவே.

தடவமுதம் புகையின்முழுகு மனைமுலை
தறிபயில்கன் றலகு செருகு நிரையுடன்
அடவிபுகும் பொதுவன்வருவ னவனுடன்
அறியவிருந் துவகைபொழியு மழன்முகம்
இடமிழுதின் பதமுமுறுகு மிலைமனை
யிடைதமியன் புகுமுன்முலையி லமுதுண
மடல்பொதுளுந் துளவவழகன் வருகவே
மறைகதறுங் கடவுளழகன் வருகவே.

இணைவிழியும் பொலிவுவரவு மடியர்தம்
எழிலுடலம் புளகம்வரவு முகபடம்
மணிமுலைபொங் கமுதம்வரவு நிறைமதி
வதனமலர்ந் துவகைவரவு முனதரை
அணிமணிபம் பரவம்வரவு மொருமுறை
அடியிணைநொந் தருணம்வரவு முயர்கண
பணவுரகர் யிலுமழகன் வருகவே
பழ யின் கடவுளழகன் வருகவே.



எமதுகருங் குழிசியமுத முறைதயிர்
எமதுபொலன் குயிலெமரிய குழமகன்
எமதிடுமண் புனையுமணிய டிசில்கறி
எமதெறிபந் திழுதுமுறையி னிறைதுகில்
எமதுகழங் குனதுமதலை திருடினன்
எனவெவரும் பொதுவர்மகளிர் குழுமினர்
அலமபுமிடங் கலகமழகன் வருகவே
அமலைபழங் கொழுநனழகன் வருகவே.

வேறு

திருநாட்டு வந்தெவரு மருள்பெறற் கரிதெனத்
தெண்டிரைப் பாற்கடற்கட்
டெய்வநா கணையினிற் றுயில்கொண்டு மீன்முதற்
றிருவுருப் பத்தெடுத்தும்

பெருநாட் டுளங்குநீ ருலகிற் படாதன
பிறந்துபட் டுங்குருதிநீர்
பெய்யும் புலாற்கூட்டை யிழிவென நுணுவொளி
பிறங்கவுட் டாமரைப்பால்

உருநாட்டி யும்நமது பேரூர் மறந்தானு
மொருகா லுரைப்பர்கொலென
உபயகா வேரிநீ ராற்றினும் வேங்கடத்
துச்சியினு மடியர்தங்கள்

கருநாட்ட மறவிடப மலைமீது நின்றருக்
கருணைபொழி முகில்வருகவே
கங்கையுந் தொல்லைப் பழம்பாடன் மறையுங்
கறங்குதாண் முகில்வருகவே.

தொழுக்களி வருந்தொண்டர் பாசவெம் புரசைசுவல்
சூழவைம் புலனடக்கும்
தோட்டிவென் றெழுமதம் பயின்மனக் கரிநிரை
தொடர்ந்துசிற் றடியைமுற்ற

மழக்களிற் றினமும் புனிற்றிளம் பிடிகளும்
வழியருவி யோதைவீங்க
மழைமதந் தூங்குங் கவட்கரி யொருத்தலும்
வந்தரு குலாவவிண்ட

பழக்களித் தீஞ்சுளைப் பலவுசொரி தேனாறு
பாயுஞ் சிலம்பாற்றயற்
பாசடைத் தாமரைப் பள்ளநீ ரள்ளிற்
பாயுமேற் றெருமையேய்ப்ப

உழக்களிப் பூந்துணர்ச் சினையபுத் திரதீப
முறையுமா ளிவருகவே
உபயசா ணம்பரவு மடியருக் கிருவினை
யொழிக்குமழை முகில்வருகவே.

வேறு

தளவு காட்டும் வெண்முறுவ
றவழுந் துவர்வா யசோதைபச்சைத்
தழக்கூ ரையினின் முடைப்பகுவாய்த்
தடவுத் தாழி நெட்டுறியின்

அளவு காட்ட நிமிர்ந்துவெண்ணெ
யருந்து மளவி லவளதுகண்
டடிக்குந் தாம்புக் கஞ்சியழு
தரையி...ர்க்கு மணிபொத்தித்

துளவு காட்டுந் திருமேனி
துவளத் திருத்தாண் முன்செல்லத்
துணைக்கட் கமலம் பின்கிடப்பத்
துண்ணென் றேடுஞ் சிறுவாவுன்

களவு காட்டே மெம்பிரண்டு
கண்ணுங் களிக்க வருகவே
கருணை சுரந்து மடைதிறந்த
கண்ணா வருக வருகவே.



வேறு

கோட்டிற் பருத்தமதி வைத்தனைய குறுநுதற்
கோற்றொடி யசோதைவாழைக்
குறங்கிற் குடங்கையி னெடுத்தணைத் துச்சிறிய
கொடிபட்ட நுண்மருங்குல்

வாட்டிப் பணைத்தமுது சூற்கொண்டு வெச்சென்ற
வணைமுலைக் கண்டிறந்து
வழியுமின் பான்முதற் றரையூற்றி வெண்சங்கு
வார்த்துவா யிதழதுக்கி

ஊட்டித் தலைப்புறஞ் சங்குமும் முறைசுற்றி
யொருமுறை நிலங்கவிழ்த்தி
உடலங் குலுக்கிப் பசும்பொடி திமிர்ந்துதிரை
யூடெற்று தண்டுளிநனீர்

ஆட்டிப் பொலன்றொட்டின் மீதுவைத் தாட்டவள
ராயர்குல முதல்வருகவே
அருள்பெருகி யலையெறியு மரவிந்த லோசனன்
னழகன்மா தவன்வருகவே.

வாரானைப்பருவ முற்றும்.

## ஏழாவது

# அம்புலிப்பருவம்.

விடங்கலு ழெயிற்றரா வரவிலைப் பள்ளியுள்
விழித்துணை முகிழ்த்தடங்கா
வெளிமுடி வெள்ளத்து மலர்மண்ட பத்தயனும்
வேதமுங் கடவுணதியும்

கடங்கலுழ் புழைக்கரக் களிறெட்டு மெட்டுக்
களிற்றுப் பெரும்பாகரும்
காளகூ டக்களத் திறைவர்பதி னொருவருங்
கதிரவர்கள் பன்னிருவரும்

மடங்கலும் வெண்டிரையும் வெண்டிரை வளாகமும்
வானுமெறி வளியுமனலும்
மன்னுயிர்ப் பன்மையும் வகுத்தளித் தப்பின்னர்
மாய்க்கும் மயக்கவிளையாட்

டடங்கலு மொழிந்துன்கண் விளையாடல் கருதினை
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே.

பொங்குவா லுளையேழு பரிமாத் தொடக்குபொற்
றேருகைத் திருளோதுங்கப்
பொழிகதிர்த் தபனமண் டலமூ டறுத்துநீ
போதுதற் குண்மயங்கில்

வெங்கண்மால் கூரலை கருங்கடற் குண்டுநீர்
விரிதிரை யிலங்கைமூதூர்
விட்டுப் பெருங்கிளைக் குழுவொடும் பொருசேனை
வெள்ளத்தி னொடுநிறைந்த

திங்களுண் மாலைவெண் குடையவுணன் வானமீச்
செல்லவத் தபனனுகம்
திறந்தெழும் பெருநடவை யூடிழிந் தின்றுநீ
சேணொடு விசும்புகைவிட்

டங்கண்மா நிலமுந்தி பூத்தவன் றன்னுடன்
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே.

முளைக்குங் கலாநிலா வமுதநிறை மண்டலம்
முழுகுதர மறைகிடக்கும்
முடக்கும் பகட்டுட னிமிர்ந்துவெம் புகையரா
முள்ளெயிறு நட்டழுத்தித்



தொளைக்கும் பெரும்பாழி வாய்கக்கு நஞ்சினித்
துண்டப் படைக்கொடிப்புட்
டேவியஞ் சேவற் கிரிந்துபோ மயிர்பொறித்
துள்ளுமான் பிள்ளைமற்றோள்

வளைக்குங் கருங்கார் முகக்கண் டெழத்தாவும்
வல்லிருட் பொரிவானின்வாய்
வட்டவா ழிப்படை வெயிற்பட வொதுங்குமேழ்
மண்ணுக்கு மத்துழக்கும்

அளைக்குந் திருப்பவள மங்காக்கு மாலுடன்
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே.

வளிநான்ற மணிமுறத் தழைசெவிச் சிறுகவுளில்
வண்டோ டிரண்டுபாடும்
மழைபாய் கடாக்கரிக் கண்கொடுத் தும்பச்சை
மரகதத் துச்சிபூத்த

ஒளிநான்ற நற்படிவ மலயப் பெருந்தவச
னுட்களிப் புறவளித்தும்
ஒருனொன்று போடிசில் வாய்மடுப் பச்செம்பொ
னுடைநெகிழ்த் தும்மலைத்தேன்

துளிநான்ற வாலவாய் வேப்பிணர்த் தென்னர்முன்
றொடைநறுங் குழல்விரித்தும்
தொல்லைநாள் செய்தவையி னரியதன் றேயிருட்
டோய்ந்தநின் மறுவொழித்தல்

அளிநான்ற பூந்துழாய் மணிமார்ப னிவனுடன்
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே.

கறைபட்ட முக்கலைச் சூலவே லெறிபடைக்
கடவுள்சடி லத்திருந்து
கண்டத்தி னூற்றெழு விடத்தா னுணங்கியுங்
கங்கைப் பெருக்கெடுத்துத்

துறைபட்ட வெண்டலைத் திரையினடு வுடலங்
துளங்கியுந் நுதல்கிழித்துத்
தூற்றுங் கடுந்தழற் சூடுண்டும் வளைபிறைத்
தொளையெயிற் றரவுகண்டும்

குறைபட்ட வட்டவுட னிறையா திருந்துங்
கொதிக்கும் வெதுப்புமாறக்
கொய்துழாய்ச் சோலைநிழல் குடிபுக்கு வாழலாங்
கோதிலா வேதநான்கும்

அறைபட்ட தாட்கமல மலையலங் காரனுட
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே.

கோலுந் திரைப்புணரி யுதரத்தி னுடன்வந்த
கொத்தளிப் பத்திலக்கம்
குடைந்தாடு பொற்றருக் கிளைகிளர் படப்பைசெங்
கொள்ளைவெயில் புடைததும்பக்

காலுங் கதிர்க்கடவுண் மணிவண்டல் படுகல்லை
கமழு*மணி மார்பிலாரம்
கள்ளுடைத் தொழுகங்க மடல்விண்ட பைந்துளவு
கடிமலர்த் தாமம்வேலும்

சேலுங் கெடுத்தவிழி மலர்மண்ட பந்தருந்
திருமாது தேவிவெள்ளைத்
தெண்ணிலா வுமிழ்கின்ற நீயுமிவன் மைத்துனன்
சினைவரா னுகளவெகினம்

*வரை (பி-ம்)



ஆலும் புனற்சிலம் பாற்றலங் காரனுட
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
அம்புலீ யாடவாவே.

உடைதிரைக் கடன்முளைத் துலகுவலம் வருமொற்றை
யுருள்பெருந் திகிரியிரவி
யுடனுறையி னென்றவன வொளிமாழ்கு மிளநறவ
முமிழுமடல் விண்டதுளபத்

தொடைகமழ் திருப்புயத் தாயிரந் தேரிரவி
சொரிகதிர்க் குப்பைகக்கித்
தூற்றுஞ் சுடர்ப்பாழி யாழியெதிர் யான்வரத்
துணியுமா றெங்ஙனென்னில்

புடையுமிழு மாயிரம் மணிவெண் ணிலாக்கற்றை
பொங்குவெண் கதிருடுக்கும்
புரிமுகக் கடவுட் டனிச்சங்க முண்டுநீ
போதுதற் கஞ்சறகுவர்

அடையவிரி யச்சங்கம் வாய்வைத்த வாயனுட
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
அம்புலீ யாடவாவே.

மாலைவாய் நறவுபாய் கொந்தளச் சதிரிள
மடந்தையர் முகத்தையொத்து
மலைதல்கொண் டிடபகிரி யருகுவரி லீயீட்டி
வளரிரு லென்றழித்தும்

சூலைவாய் வளைகதறு நூபுர நதிப்புகிற்
றுவளுநுரை யென்றுடைத்தும்
சூழல்வாய் வரிவிளைய வெள்ளையம் புயமென்று
சூழ்ந்துகொய் துங்கிளிக்குப்

பாலைவாய் விடவெள்ளி வெண்கிண்ண மென்றுகைப்
பற்றியுங் கதிர்ததும்பப்
பார்க்கின்ற பேராடி யென்றெடுத் தும்பகை
விளைப்பரென் றஞ்சறுஞ்சா
ஆலைவா யொழுகுபா காறுபாய் மலையனுட
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே.

காயுங் கடுங்கதிர் விரித்தொற்றை யாழியங்
கடவுளலை தலைபிளந்து
கனைகடற் பெருவயி றுதித்தெழக் கனியவிளை
கனியென்று புகவிழுங்கப்

பாயுங் கவிக்குலத் தொண்டர்கா யகனைநின்
பால்வர விடுப்பனன்றேற்
பாழிவா யங்காந்து கவ்வியிரு கவுளூட்
படுத்துக் குதட்டவாலம்

தோயும் பிறைப்பற் சுருட்டெடற் பாயல்வெஞ்
சூட்டரா வினைவிடுப்பன்
துளபத் துணர்க்கண்ணி யெந்தைகீழ் நின்றுநாற்
சுருதிதொழு தாள்செவப்ப

ஆயுந் தமிழ்ச்சங்க மீதிருந் தானுடன்
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
அம்புலீ யாடவாவே.

துள்ளக் குறுந்திவலை வெள்ளிவெண் டிரையாடு
தொடுகடற் றலைதுயின்றும்
தொளைக்குங் கழைக்குழ லெடுத்திசை யெழுப்பியுந்
தொல்லைமா ஞாலமேழும்



கொள்ளப் பரந்துமறை மழலைவாய் நான்முகக்
குழவியைப் பெற்றெடுத்தும்
கொடியா டிலங்கையிற் பேயாட விற்கடை
குழைத்தும் பரந்தூக்கும்

வெள்ளத் தடங்கமலம் யானருகு வரின்முருகு
விரிமுகங் குவியுமென்று
வெருவர லிவன்கரிய கடவுண்மே கத்துடலம்
விளைகமல வனமனஞ்சூழ்

அள்ளற் பெரும்பள்ளம் வந்ததன் றிவனுடன்
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே

விரியுங் கதிர்க்கற்றை யமுதூற நீவந்த
வேலைப் பெரும்பள்ளநீர்
வெஞ்சிலை குழைத்திவன் கணைதொட வறண்டது
விழைந்துநீ யரசுநாளும்

புரியும் பகட்டுவெளி யிவன்மலர்த் தாமரைப்
பொற்றா ளெடுத்துநீட்டப்
பொலனுடல் பிளந்தட லிரவியொடு நீயரும்
புகலென்ன வடையும்வெற்பு

சொரியும் புயற்றலை தடுக்கைக்கி வன்னகந்
தொடவடி பறிந்ததிவனைத்
தொண்டையங் குதலைவாய் மதலையென் றெண்ணலஞ்
சூற்கமுகு வெண்பாளைவாய்

அரியும் பசுந்தே னரும்புமலை வாணனுட
னம்புலீ யாடவாவே
ஆரணந் தொழுகின்ற காரணன் னிவனுடன்
னம்புலீ யாடவாவே.

அம்புலிப்பருவமுற்றும்.

எட்டாவது

# சிற்றிற்பருவம்.

---

எட்டிற் பொறிச்செஞ் சுரும்பறுகால்
ஏறிய நறைபாய் செழுங்கமலத்
திறைவன் முதலா மிமையவர்கள்
இறைஞ்சு மௌலி யேந்துதலை

ஓட்டிற் பொறித்து வலஞுழி
ஒருங்க வடிமை கொண்டதுபோல்
உனது மலர்த்தா ளுட்கிடக்கும்
ஒற்றைக் கடவுட் சங்குவண்டல்

வீட்டிற் பொறித்தின் றெங்களையும்
விழைந்தாட் கொள்ள நடந்ததிரு
விளையாட் டிதுநன் றன்றலைபாய்
வேலை யுதித்த திருவின்முலைக்

கோட்டிற் பொறித்த சுவடெழுதோட்
கொண்டல் சிற்றில் சிதையேலே
கொண்ட லுறங்குஞ் சோலைமலைக்
கோமான் சிற்றில் சிதையேலே.

கொழித்துக் கிரணஞ் சொரிகழற்காற்
கோக னகத்தி லுறைகங்கை
குதித்துத் திரைநீர்ப் பெருக்கெடுத்துக்
கோட்டும் வண்டற் பாவையினை

அழித்துச் சமைத்த மலர்க்கறியை
அரித்துத் தூதைக் கலத்துமணல்
அடுஞ்சோ றெடுத்து மணிப்பந்தும்
ஆடுங் கழங்கு மம்மனையும்



சுழித்துப் பசும்பொற் குழுமகவைச்
சுழியிற் படுத்துச் சிற்றடியேம்
துயர முறவே நடுவுடலம்
சுருட்டுங் கடவுட் பாம்பணையின்

விழித்துத் துயிலு முகின்முன்றின்
மிதித்துச் சிற்றில் சிதையேலே
விதுரன் மனைக்கு மிதிலைக்கும்
விருந்தன் சிற்றில் சிதையேலே.

வாழி யெடுத்து நிற்பரவு
மறைநான் கரற்று நான்குமுகன்
வடிவ மெடுத்துப் படைத்துநிறை
மதியங் கொழிக்கு நிலாவென்னப்

பூழி யெடுத்த திருமேனிப்
புலவுக் கலைவேன் மழுப்படைக்கைப்
புனித னுருக்கொண் டழித்துவலம்
புரியு முகச்சங் குடன்வட்ட

ஆழி யெடுத்த வுருவெடுத்தால்
அளித்துப் பயிலுந் திருவிளையாட்
டன்றி யழித்த லியல்பன்றே
அணக்குங் குடுமித் தலைத்துயில்கான்

கோழி யெழுப்புஞ் சோலைமலைக்
கோமான் சிற்றில் சிதையேலே
கொண்ட லுறங்குஞ் சோலைமலைக்
கோமான் சிற்றில் சிதையேலே.

இளைத்துத் துவளு மிடைமடவார்
எண்ணில் பதினா றாயிரவர்
இழைக்குங் குமத்தோ டமைநெருக்கி
இலவத் துவர்வா யமுதருந்தித்

திளைத்துக் குஞ்சிப் பெரும்புலவி
திருத்தித் தேய்ந்தும் மகளிர்முலை
தீண்டி யறியே னென்றுபொய்யே
தேவர் தெளிய முன்னையுயிர்

முளைத்துத் தழைப்பக் கரிக்கட்டை
முதுகு மிதித்தாய் சிற்றடியேம்
முன்றிற் புறத்தி லெதுதெளிய
முளரித் தாளான் மிதிப்பதுதேன்

வளைத்துச் சுழிக்குந் துழாய்ப்புயல்யாம்
வருக்குஞ் சிற்றில் சிதையேலே
வானம் பிளக்குஞ் சோலைமலை
மன்னன் சிற்றில் சிதையேலே.

அலம்பாய் விளைநெற் பழனத்தில்
அள்ளன் மடுவிற் றுள்ளுகயல்
ஆடுந் தரங்கக் கருங்கழியில்
அறையுஞ் சிறகர்ப் பேட்டெகினக்

குலம்பாய் குவளைக் கோட்டகத்திற்
குண்டு சுனையிற் றொட்டநெடுங்
குளத்திற் குறுந்தாட் கருமேதிக்
குழியி லுனது பேர்யாணர்ச்

சிலம்பாற் றயலி லாயிரநீர்த்
தெய்வத் தடத்தி னன்றிமுன்றிற்
றெள்ளிப் பரப்பு மணற்குவையிற்
செக்கர்க் கமல மலராது

வலம்பாய் திகிரி முகின்மிதித்து
வளைக்குஞ் சிற்றில் சிதையேலே
வாரி மகட்கு நிலமகட்கும்
மன்னன் சிற்றில் சிதையேலே.



கோவை மணிப்பந் தெறிந்தாடும்
கொடிபொற் கழங்கு புனல்வாவி
கொட்குங் கிரணச் செய்குன்று
கொய்பூந் தளவப் பந்தல்வண்டற்

பாவை யுகைக்கும் பொன்னூசல்
"பாரைக் குரவந் தேன்கொழிக்கும்
படப்பை குதிக்கு மான்கன்று
பசும்பொற் கிள்ளைப் பிள்ளையிளம்

பூவை யிவையுன் பதத்துளி
பொதியப் பெருவீ டுறிலடியேம்
பொய்த லொழியு மலர்வசனப்
பொகுட்டி லிருக்கு நான்குமுகத்

தேவைத் திருவுந் தியிலளித்த
சிறுவன் சிற்றில் சிதையேலே
தெள்ளுந் தரங்கப் பாலாழிச்
சேர்ப்பன் சிற்றில் சிதையேலே.

வேறு

கொள்ளைநீர்க் குவளைக் கோட்டக மறந்தும்
குழந்தைவெண் மதிக்கோட்டுக்
குன்றொடுங் குயில்போற் கூவுதன் மறந்தும்
கூருகி ரிளங்கிள்ளைப்

பிள்ளையை மறந்து மயினட மறந்தும்
பேட்டிளம் புறவோடும்
பிணையினை மறந்தும் ஊசலை மறந்தும்
பிள்ளைவண் டிதழுந்தக்

கள்ளைவா யொழுக்கும் வெள்ளிவெண் ணிலவு
காற்றிள முகைமுல்லைக்
கன்றினை மறந்து மிழைத்தயாம் வருந்தக்
கன்னியர் மனைவாயின்

வள்ளையா லனங்கண் டுயின்மலைக் கிறைவன்
மணற்சிற்றில் சிதையேலே
வண்டமர் துளவன் மாலலங்காரன்
மணற்சிற்றில் சிதையேலே.

சுழித்தெறி தரங்கத் திருச்சிலம் பாற்றுத்
தூற்றிய திரை யீட்டும்
சொரிநிலாக் கிளைக்கும் வெண்மணற் குப்பைச்
சுடர்பொலன் முறத்திட்டுக்

கொழித்துவெண் டுகிலிற் றலைமடிக் கொட்டிக்
குவித்ததோ ழியரோடும்
குருமணி முன்றிற் பரப்பிமெய் துவளக்
கோல்வளைக் குரலேங்கக்

கழித்தடங் கமலத் துணைக்கரஞ் சேப்பக்
கலைமதி முகம்வேர்ப்பக்
கண்ணிமைப் புறும விழைத்தயாம் வருந்தக்
கடைவளை யலம்பாயும்

வழித்தலை மலர்த்தேன் சொரிமலைக் கிறைவன்
மணற்சிற்றில் சிதையேலே
மாலிருஞ் சோலை மலையலங் காரன்
மணற்சிற்றில் சிதையேலே.

வேறு

வரியுங் கடுங்கார் முகங்கண்டு
வளர்க்கும் பிணைக்கன் றகலுமது
மடற்பூந் துளபத் திருமேனி
மழைக்கார் காட்டக் குயிற்பிள்ளை

இரியும் வளவாய் நெடுந்திகிரி
எறிக்கும் வெயிலை முதுவேனில்
என்று கலாவ முள்ளொடுக்கி
இளைய மயிற்பே டெம்மைவிட்டுப்



பிரியுந் தவளத் தரளமணி
பிறழு நிலவுப் பெருவெள்ளம்
பெருகு முன்றிற் றலைவந்து
பெய்யும் பசும்பொ னொளிபரந்து

சொரியுங் கழற்காற் றுணைக்கமலம்
துவளச் சிற்றில் சிதையேலே
சோலை மலைக்கு நான்மறைக்கும்
தோன்றல் சிற்றில் சிதையேலே. (௯)

ஓடுங் கலுழி விடப்பாந்தள்
உடலங் கிழியத் தூண்டுசுடு
டுச்சி மிதிப்பப் போரக்கன்
உருவ மெடுத்த தெழுந்துபுகை

ஆடுந் தழன்மெய்க் கரிக்கட்டை
அகல மிதிப்பக் குருகுலத்தில்
அரச ரிளங்கோ வானததர்
அருங்கான் படர்கற் றலைமிதிப்பத்

தோடுஞ் சுரும்புந் ததும்புகுழற்
றோகை யுருவ மெடுத்தொளி
சொரியுந் தவளத் திருமுன்றிற்
றுலைவக்கின் முன்னை வடிவிழக்கும்

பாடு மறைநான் குடுத்தபதம்
பதித்துச் சிற்றில் சிதையேலே
பார்த்தன் றேர்க்கும் புள்ளிற்கும்
பாகன் சிற்றில் சிதையேலே. (௧௦)

முடங்காப் புரண்டு நிமிருரகன்
முடியிற் கிடக்கும் புவியேழும்
முந்நீ ரேழும் வரையேழும்
முழுங்கு மருவிப் பெருக்கெடுப்பக்

கடங்காற் றியமா திரமெட்டும்
　　கனகக் குடுமிப் பொலன்வரையும்
ககன மேழு முட்கிடப்பக்
　　கமலத் திருத்தாள் பொத்தியநாள்

அடங்காப் புலியோ குற்றேவல்
　　அடியே மாரை யயர்முன்றில்
அளக்க விற்றைக் கடிவைப்ப
　　தலைநீ ருடலந் தழல்பரப்பத்

தடங்கார்ச் சிலையிற் பகழிதொடும்
　　தலைவன் சிற்றில் சிதையேலே
சங்கத் தழக னிடபகிரித்
　　தலைவன் சிற்றில் சிதையேலே.

சிற்றிற்பருவமுற்றும்.

---

ஒன்பதாவது

## சிறுபறைப்பருவம்.

மறுதலையரக்க ருயிரயில்குடிப்ப
　　வமரரையளித்த நெடுவேள்
மதனழியவெற்று சிறுவயிறலைத்து
　　மயில்வரைபறப்ப வனல்போய்
மறிதிரைவயிற்றின் முழுகிமுதுவெப்பு
　　முமிழுட்டல்குளிர்ப்ப வரிதா
வடதிசைபுரக்கு மகள்புறமளிப்ப
　　மழைதுளிமறுத்த வனமீ

தெறுழ்வலியிருப்பு நெடுநுதிமருப்பு
　　முதுகலைதெறிப்ப வடல்வாய்
எறிபடைபிடித்த கரம்விடவுடுத்த
　　புலியதணிலத்து விழுவான்



இடிபடவாற்று தமருகம்வெடித்த
　　குரலவியநெட்டை யரவூர்
எரிவிழுதுவிட்ட சடைபிணிநெகிழ்ப்ப
　　மரகதம்விரித்த விலைசூழ்

அறுகிதழிகொக்கி னிறகுதிரவட்ட
　　மதியின்வகிர்பட்ட நுதன்மீ
தலையும்வெயர்நெற்றி விழியழலவிப்ப
　　வமரநதியெற்றி விழுநீர்
அறைதிரைகொழிப்ப வுடல்பொதிவெளுத்த
　　பொடிகழுவவொற்றை ரதமூர்
அருணவெயில்கக்கு பழையவொளிகொட்ப
　　வரன்முதுகளிப்ப முதனாள்

தெறுமுனைமுகத்தி லவுணனெழுவொத்த
　　திரள்புயமதுற்ற கறைநீர்
சிகரவரைவிட்ட வருவியைநிகர்ப்ப
　　வெறிதிகிரிவிட்ட மதிதோய்
திருமலைபுரக்கு மழகருணிலெற்று
　　சிறுபறைமுழக்கி யருளே
திருவரைவணக்கி யழகருணிலெற்று
　　சிறுபறைமுழக்கி யருளே.

வேறு

ஒளிபெருகித்துளும்பு பரமபதத்திறைவா
　　உகளமுதைச்சுரந்த வெளியகடற்றுறைவா

அளியுழுபற்பவுந்தி யெழுதரணிப்புரவா
　　அயனுமைவைத்தபங்கன் விபுதகுலக்குரவா

விளைநகையுட்டதும்பு திகிரிசெலுத்துழவா
　　விழுநகைகக்குபொங்க ரிடபமலைக்கிழவா

குளிரமலர்க்கைகொண்டு சிறுபறைகொட்டுகவே
　　குணிறலையெற்றிநின்று சிறுபறைகொட்டுகவே.

வேறு

செக்கரி லொளிகெழு துப்பினை யெறிகடல்
செற்றிய தழலெனவே
திக்குள சுறவலைக் நெற்குலை சடைபடு
செய்த்தலை விழவருசேல்

மொக்கிய குருகெழ வுட்பொதி சினைசிறை
முத்திட வளைதவழா
முக்கெறி குரல்தனை விட்டுயிர் நிகர்பெடை
முற்பயில் வெளியெனவால்

எக்கரி னிலவிய வுச்சியி விளமல
ரிற்புற மனவிருகால்
எட்டடி யிடவிழை பெட்டையி னொடுதிரை
யெற்றிய முதுபுனல்வாழ்

குக்குட மலமரு வெற்புறை மழைமுகில்
கொட்டுக சிறுபறையே
கொத்தளி நிரையுழு மைத்துள வணிமுகில்
கொட்டுக சிறுபறையே.

வேறு

வெண்டிரைப் பாற்கடல் விடப்பாம் புடற்றும்பு
வெற்புமத் தெரிமுழக்கும்
விண்கிழிக் குங்குடுமி நொச்சிசூழ் மிதிலைவாய்
வின்முடக் கியமுழக்கும்

புண்டிரைக் குருதிநீ ராறுபட வாடகன்
பொன்மார்பி லுகிரழுத்தப்
புடைக்கும் பெருந்தூண் பிளந்தெழு முழக்கமும்
பொங்கர்மது வாய்மடுத்து

வண்டிரைத் திதழ்குதட் டுந்துணர்த் தருவூழ்த்த
மலர்கொணர்ந் தமரரிய
வாய்வைத்த வெள்வளை முழக்கமும் கேட்டுளம்
வாழ்ந்துயா மின்றுமகிழத்



தெண்டிரைப் பரிபுர நதித்தலைவ குணிலெற்று
சிறுபறை முழக்கியருளே
செகமலையு மெனவுதர மணைகயிறு வரியுமுகில்
சிறுபறை முழக்கியருளே.

வேறு

புள்ளுநந் திரையும் பொருபுனல் குடையும்
பூந்தொடி மங்கையர்தேம்
பொதிவண் டலையுங் குமுதத்திளநகை
பொங்கொளி சொரிநிலவும்

கள்ளுண் சிறைவண் டினமும் பரவுங்
கற்றைக் குழல்செருகும்
கடிகமழ் பித்திகை விடுமலர் தூற்றுங்
கலைநில வும்மிடையைத்

தள்ளுங் கொங்கைத் தரளக் குவைசொரி
தண்ணில வும்பருகிச்
சற்றும் படுபசி தணியா திளைய
சகோரக் குலமுலவும்

தெள்ளும் புனனூ புரநதி யிறைவன்
சிறுபறை கொட்டுகவே
செம்பொற் சாரற் குலமலை யிறைவன்
சிறுபறை கொட்டுகவே.

வேறு

கரைகடந் திரைக்கு நீத்தநீர்க் குழியிற்
கால்விழ மருப்பேற்றும்
கழித்தலைக் குமுத வாயிதழ் மடுத்துங்
கட்செவி கிடவாமல்

விரைகமழ் துளவப் பொதும்பரி னீழல்
வெப்பறப் புயம்வைத்தும்
விடுமடற் கமல வுந்தியிற் பூத்தும்
விண்ணுட னெடுமெட்டு

வரையரா விருத்து நூற்றுவர் கூற்றின்
    வாய்புகச் சுமைதீர்த்தும்
மலர்ப்பதந் தாவி யளந்துகைக் கொண்டு
    மற்றொரு பொதுநீங்கக்

குரைகடல் வளாக மெமதெனக் குரிசில்
    கொட்டுக சிறுபறையே
குலமலை வாணன் மாலலங் காரன்
    கொட்டுக சிறுபறையே. (௬)

ஆட்டியுந் தலைநீர் குழம்பவெற் புழல
    வலைத்தகை குணிறுக்க
ஆர்க்கும்வெங் குரலை யெவரிவண் முழக்கு
    மவரெனச் சிறுவர்க்குக்

காட்டியுமுடலந் துண்ணெனப் புரிந்து
    கண்களைத் திசைவைத்தும்
கரத்தினுன் மீளப் புடைத்தெழுங் குரற்குக்
    காந்தளுஞ் செவிதாழ்த்தும்

நீட்டியுந் திரைத்து மெதுவென நகைத்து
    நெஞ்சயர்ந் தலமந்தும்
நின்றுலாங் குரிசில் புறவினிற் பரப்பி
    நிரையினைக் கழையூதிக்

கூட்டியும் யமுனைக் கரைவருங் களிறு
    கொட்டுக சிறுபறையே
குலமலை வாணன் மாலலங் காரன்
    கொட்டுக சிறுபறையே. (௭)

வேறு

விழுத்தலை வடித்தநெட் டேசிநட் டெங்குப்பை
    வெந்தீப் பிழம்பிலிட்டும்
வெண்ணிணத் திந்தடி யரிந்துசெம் புண்ணின்வாய்
    வெள்ளுப்பு நீரிறைத்தும்



சுழித்தலை பரந்தாடு முதிராநீத் தத்தினிற்
    றுயருழப் பத்தள்ளியும்
சுடர்வா ளிலைக்கள்ளி மீதெறிந் துங்காசி
    தூண்டுழைச் சுள்ளடங்கக்

குழித்தலை தலைக்கி ழுறப்புதைத் தும்புலாற்
    குருதியுடல் போட்டுநாயின்
கோள்வாய்ப் புகுத்துமா தண்டமயர் மறலிபதி
    குறுகாம லடியருக்காத்

தெழித்தலை யருவருவி மலைவந்து நின்றமுகில்
    சிறுபறை முழக்கியருளே
செகமலையு மெனவுதர மணைகயிறு வரியுமுகில்
    சிறுபறை முழக்கியருளே. (௮)

பாந்தளிற் பஃறலைச் செம்மணிக் குப்பையிற்
    படர்வெயிற் குடல்வெதும்பிப்
பாண்சுரும் பறுகால் கிளைக்கும் பசுந்துழாய்ப்
    பள்ளியந் தாமநீழற்

சாந்தள றெடுத்துக் கொழிக்கும் பணைப்புயந்
    தவிசுநடு வீற்றிருக்கும்
தரைமகள் விரும்பியெக் காலமுந் நிலவெழுந்
    தவளவொண் சங்குடுக்கும்

காந்தளங் கையேந்து பாவையிப் பறையொலி
    கறங்கமெலி யசுணமல்லள்
கனிவாயின் மொழிகற்று வளர்கிளிப் பிள்ளைசூற்
    கருவிமுகில் கண்படுப்பத்

தேந்தழைப் பாயலரு ணற்சோலை மலைவாண
    சிறுபறை முழக்கியருளே
செகமலையு மெனவுதர மணைகயிறு வரியுமுகில்
    சிறுபறை முழக்கியருளே. (௯)

துளிகொண்ட வெள்ளமிர்த மிடையறு தொழுகிவிளை
துகிர்பழுத் தனையசெய்ய
தூயவா யூறலு முகத்தலை குழற்றலை
துவற்றிவிழு புழுகுநெய்யும்
அளிகொண்ட தண்டுழாய்ப் பள்ளித் திருத்தொங்க
லகவிதழ் வரிந்தோடுதேன்
அலையும் புனற்பட்டத் தட்பமுற் றெழுகுரா
லவிந்ததே னருகுபாயும்
ஒலிகொண்ட கடவுட் கவுத்துவச் செக்கர்மணி
யுச்சியிற் கற்றைவெயில்வாய்
ஒலிபொங்க வென்றதள் வெதுப்புங் கருங்கொண்ட
லுடுபதிக் குழவிதவழும்
தெளிகொண்ட தலையருவி துஞ்சுகுல மலைவாண
சிறுபறை முழக்கியருளே
செகமலையு மெனவுதர மணைகயிறு வரியுமுகில்
சிறுபறை முழக்கியருளே.

சிறுபறைப்பருவ முற்றும்.

---

## பத்தாவது

# சிறுதேர்ப்பருவம்.

இருகரமுஞ்செவப்ப வலனேடிளைத் துவிளைதேன்
எழுதளவம்பதித்த கொடிவேரொ துக்கிமலரால்
மருவெழுபந்தரிட்டு வெயில்வான்மறைத்துமலிதூள்
மடியமுகந்துகொட்டி யிறைநீர்மழைக்கண்மடவார்
நிறையளகங்குலைப்ப விழுதாதொ துக்கியடியேம்
நிலவியமுன்றில்வட்ட நடுவேநிறுத்திமரைவாழ்
திருவுறைபொங்கர்வெற்ப சிறுதேருருட்டியருளே
திகிரியிணைந்தணைத்த சிறுதேருருட்டியருளே.



பொறையுடலம்பிளப்ப வுழுசாறுவைத்தும் வருசேல்
பொருகதவந்திறக்கு மடைவாயடைத்து நுரைபாய்
அறைபுனல்பொங்கியெற்று நிறைகாலுடைத்தும்வயரேர்
அளறுபெறுங்குருத்து முளைநாறழித்துமணியால்
மறையவரம்புமுற்று முதுகூலுகுத்தும்வளையோர்
மௌவருடன்பகைத்த புனலூடுடுத்தவளிசூழ்
சிலை ... ... யொங்கர்வெற்ப சிறுதேருருட்டியருளே
... ...யத்த சிறுதேருருட்டியருளே.

வேறு

...மரில்படு நர...
...படு நிண மு...
...ளறுதிவரி ...லையின்
... ...ணியசைத்தும்
குலந்தி... ...ழிவான ம...
...நழற் கொள்... ...ம்
...ன பொடிபடும் ... ...ழக்கும்
குப்பை... ...யும் வாய்மடுத்... ...ழித்தும்
...கரைபருகின் மண்... ...க்கணைத்தும்
மலம்... ...யைநற் றெண்டர்வி... ...ரத்தும்
...க் கெட்டாத வைகு... ...ர்ப்ப
வான ...ழ்விக்கும் வேதநான் ...
...ம் புலம்புக் ... ...மணியில்
அசோதை பதறி யோடிவர
அழைத்து நகைக்கு மழலைமுகில்
கொழுது மளிதோய் சோலைமலைக்
கோமான் சிறுதே ருருட்டுகவே
குளிறுஞ் சிலம்பா றுடையமறைக்
கோமான் சிறுதே ருருட்டுகவே.
மீன்கோட் டலைக்கும் பெருவாரி
வெள்ளத் தெழுந்த வெற்பும்வட
வெற்பு மழுந்த முன்னாளில்
வெள்ளை வராகப் பெரும்போத்துக்

கூன்கோட் டிரட்டை நுதிமடுத்துக்
குழியில் வீழு நிலமகளைக்
கொண்டு நிமிர நாற்புறமுங்
கொழிக்குந் தரங்கப் புனல்போல

வான்கோட் டிளைய மதியமுது
வழிக்கு மிரத நெடுஞ்சிகர
மருங்கு தொடுக்கு மிருல்பிளக்க
வழியுங் கடவா ரணங்குத்தித்

தேன்கோட் டிழிய வருஞ்சோலைச்
சிலம்பன் சிறுதே ருருட்டுகவண்ட
தெள்ளுந் தரங்கப் பாலாழிச்
சேர்ப்பன் சிறுதே ருருட்டுகவே

அண்ட ருவலைக் குடிற்பட ரியுமுகில்
அனைத்துந் திறந்து தே
அலைந்து தோற்ற வுரன்மிந் (ம)
அடியின் சுவடு தோற்றும்.

வண்ட லளைபா னிறைந்த
வயிறு குறைந்து ே
மகளிர் துவர்வா யலர்தோறு
வதனம் வெருளி தோற்றவிளங்

துண்ட மதிவா ணுதற்பவளத்
துவர்வா யசோதை கைமாறு
தோற்ற வுடனே யருடோற்றத்
துணைக்கண் மைசீர் தோற்றவளை

உண்ட களவு தோற்றுமல்
உலக மேழு முண்டதிரு
உதரங் குழைய வழுதமுகில்
ஒட்டுஞ் சிறுதே ருருட்டுகவே.



## வேறு

களிக்கக் குலப்பொதுவ ரெண்ணிலா யிரவராங்
கன்னியரி லொருவரைமலர்க்
கண்ணருள் புரிந்துமலர் மணிமுடியி லொருவரிரு
கால்வைத்து மொருவர்முலைதோள்

குளித்துக்களிப்பக் கலந்துமலர் கற்பகக்
கொடியொருவர் கொங்கைமுற்றக்
குறும்து ருர ளப வள்ளல்வா யொருவரிடு
...ம்புந் திரைக்குருதி காண்குறுமல்
...ரில்படு நரம்புமெ... யொழித்துமய லொருவருட
...படு நிணமுந் திரட்... றின்வாய்
...று திவரி ...னிலவுபுள்ளி... மிளையமுகி
கு... ...ழிவான கோது... ரைத்துத்
... ...நழற் கொள்ளைமிவ
குப்பை ... பொடிபடும் பகுறைலைவா யழகனே
... ...யும் வாய்மடுத்தால்
மலம் ...ரைபருகின் மண்படும்பு மழகனே
...யைநற் றெண்டர்விட்...
வான ...கெட்டாத வைகுந்த ... பர்ப்
புறம்... ...வேதநாள் ...றந்து
பொன்பாப் புந்துணர்க் கற்பகக் கொம்பர்ப்
புறத்தும் வடந்துவக்கி

மீனறு வொழுகுமணி நூபுர நதிக்குவளை
விண்டபொற் றுகின்வெள்ளி
வெண்டிரைக் கங்கையின் பொற்று மரைத்தாதின்
வேரியங் கால்கொழிப்பக்

கானறு வண்டுமூரல் கொந்தளக் குறமடக்
கன்னியரும் வானநாட்டுக்
கன்னியரு மிருமருங் காட்டிடச் சதிரிளங்
கன்னியர்க ...சலாடும்

தேனூறு விளையிரு ளூறு மலைவாண
சிறுதே ருருட்டியருளே
சிலைவிசயன் விடுபெருந் தேர்கடவு மழகனே
சிறுதே ருருட்டியருளே.

அலையெடுத் திருகரை நெரித்துச் சுறுக்கதற
வறைபுனல் வறண்டுநெட்டை
ஆழியிற் கானலந் தேர்புக விலங்கைக்கு
ளாதவன் றேர்கடாவக்

கொலையெடுக் கும்படை யரக்கருடல் ெ
குலமேற வுயிர்விமானக்
கொடுஞ்சிப் பொலந்தே ருகைப்ப
குங்குமச் சேதகத்து ரு

மலையெடுக் கும்புளகம் விளைய ல
மாறு விழாவெடுப்ப தே (ம)
மாரவே டென்றலந் தேரூர்ந்த
மணித்தேர் நடாத்திதா.

சிலையெடுக் குங்கொண்டல்ந்த
சிறுதே ருருட்டியருளே
சிலைவிசயன் விடுபெருந் தேர்கடவு மழகனே
சிறுதே ருருட்டியருளே.

குருமணி பொதிந்தபொல னுரமுஞ் சுரும்பேறு
கொய்மலர்த் தாரலம்பும்
குவடுபடு மிருபது பணைத்தோளு மேமுடன்
கூறுகொண் டுரிமையாளும்

மருமலி மடற்கமல மங்கையும் மாவீர
மங்கையு மகன் றமகலா
மண்மகளை யகல்விக்க வேண்டுமென வலிகொண்டு
மாறுகொண் டெதிர்சிலைத்துப்



பொருகளத் துயிர்மடி யரக்கன் பொருப்புடற்
பொதிபரா கத்துவந்த
பூவையர்கள் கண்மாரி பொழியவெங் கணைமாரி
பொழியவெஞ் சிலையெடுத்துச்
செருமலைந் தடல்வாகை புனையலங் காரனே
சிறுதே ருருட்டியருளே
சிலைவிசயன் விடுபெருந் தேர்கடவு மழகனே
சிறுதே ருருட்டியருளே.

லம்புந் திரைக்குருதி வெள்ளமுந் தோன்மேயு
ரில்படு நரம்புமென்பும்
படு நிணமுந் திரட்டுமுட விட்டநா
ளறுதிவரி னிலவுபுள்ளின்

குலந்தி ழிவான கோதுபடு மெரியுங்
ெ கழற் கொள்ளிமிசையிற்
குப்பை ன பொடிபடும் பகுவாய ஞமலியுங்
யும் வாய்மடுத்தால்
மலம் கரைபருகின் மண்படும் பிறவியின்
யைகற் றெண்டர்விட்டு
வான த் கெட்டாத வைகுந்த நாடடைய
ழ்விக்கும் வேதநான் றும்
சில ம் புலம்புந் திருத்தா ளலங்கார
றுதே ருருட்டியருளே
சி சயன் விடுபெருந் தேர்கடவு மழகனே
சிறுதே ருருட்டியருளே.

ெ ங்காலை வெம்பா கடுங்கொழுந் தழலெழும்
புகையுடற் றலைபுதைப்பப்
பு தமணங் கமழுவந் தனையென்று பைம்பெடை
புலந்துபோய்ச் சிறைபுடைப்பத்
தங்கா தலம்பிள்ளை வெண்குருகு வாயிலாத்
தாளினைச் சென்றிறைஞ்சித்
தாமரைப் பொற்பரா கம்பொதியு மேனியைத்
தைவந்து தூவல்கொழுதிக்

கொங்காரு நறுமலர் குயிற்றுமென் சேக்கையிற்
குடிபுகுத் திக்கயத்திற்
கோரமுங் கயலுமிரை கொத்திபல கோடலகு
கோத்தணைத் துள்ளருத்திச்

செங்கான் மடக்குருகு புலவிதீர்த் துளமுருகு
திருமணம் புணருமருத
சிலைவிசயன் விடுபெருந் தேர்கடவு மழகனே
சிறுதே ருருட்டியருளே. (கக)

ஆட்டுங் கொடுந்திரை பெருக்கெடுப் பச்சிதறி
யருகுவீழ் புனல்கொழிக்கும்
அவிரொளித் தண்டரள மணிமாலை யப்புறத்
தண்டகோ ளகையுருவமேல்

ஓட்டும் பசும்பொற் குவட்டுப் பாரைநெட்
டொற்றைவட வெற்புவட்ட
உச்சியிற் றைத்ததட மொட்டுநிறை கலைமதியி
னுடலொழுகு நிலவுகக்கிக் (ம)

காட்டுந் தனிக்கோடு வெள்ளிவெண் காம்பிலகு
கவிகையென விளையெடுக்கும்
கடவுட் பகட்டேன மெயினர்புன முழவகிற்
காடெறிய மழுமுகத்தைத்

தீட்டுங் கதிர்ச்செக்கர் மணிவிளையு மலைவாண
சிறுதே ருருட்டியருளே
சிலைவிசயன் விடுபெருந் தேர்கடவு மழகனே
சிறுதே ருருட்டியருளே.

சிறுதேர்ப்பருவமுற்றும்.

16129 திருமாலிருஞ்சோலை அழகர்பிள்ளைத்தமிழ்
முற்றும்.

---